# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## 2026 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 13 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி

(2026.02.19 ஆம் திகதி வெளியிடப்பட்டது)

# மீட்பு, புனர்வாழ்வு மற்றும் கடனிறுக்கவகையின்மை (கூட்டிணைப்பு மற்றும் தனிப்பட்ட)

தனியாட்கள் மற்றும் கம்பெனிகளின் மீட்பு, புனர்வாழ்வு மற்றும் கடனிறுக்க வகையின்மை ஆகியவற்றுடன் தொடர்புடைய சட்டங்களைத் திருத்துவ தற்கும், தொகுப்பதற்கும்; (97 ஆம் அத்தியாயமான)கடனிறுக்கவகையின்மை கட்டளைச் சட்டத்தினை நீக்குவதற்கும்; 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தினைத் திருத்துவதற்கும்; 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தைத் திருத்துவதற்கும்; 1988 ஆம் ஆண்டின் 72 ஆம் இலக்க, மத்தியஸ்த சபைகள் சட்டத்தைத் திருத்துவதற்கும் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான எல்லாக் கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்.

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

விலை: ரூபா 2506.00 — தபாற் செலவு: ரூபா 150.00

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## உள்ளடக்கம்

*பிரிவு* *பக்கம்*


முன்னுரை 1

1. சுருக்கப் பெயரும் நடைமுறைக்குவரும் தேதியும் 2
2. பொருள்கோடல் 3

பாகம் I

**நிறுவன ரீதியான ஒழுங்கேற்பாடுகள்**

அத்தியாயம் 1

**கடனிறுக்கவகையின்மை ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை**

3. கடனிறுக்க வகையின்மை ஒழுங்குபடுத்தும் அதிகார சபையைத் தாபித்தல் 20
4. அதிகாரசபையின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள் 23
5. அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமையதிபதி 27
6. அதிகாரசபையின் நிதியம் 28
7. கணக்குகள் மற்றும் கணக்காய்வு 29

அத்தியாயம் 2

**உத்தியோகபூர்வ பெறுநர்**

8. உத்தியோகபூர்வ பெறுநர் மற்றும் பிரதி உத்தியோகபூர்வ பெறுநர்கள் 30
9. உத்தியோகபூர்வ பெறுநரின் தத்துவங்கள் 31
10. பதவி மற்றும் உத்தியோகபூர்வ பெறுநரது பெயர் 32
11. உத்தியோகபூர்வ வங்கி முறிவு நம்பிக்கைப் பெறுப்பாளராக செயலாற்றாமையின் போதான சந்தர்ப்பங்கள் 32

அத்தியாயம் 3

**கடனிறுக்கவகையின்மை தொழிலர்கள்**

12. பிரதான பதவி வகிப்பவர்களாக நியமிக்கப்படுவதற்கும் தகைமையுடைய ஆட்கள் 33
13. கூட்டிணைக்கப்பட்ட குழு பதவிவகிப்பவராக நியமிக்கப் படுதலாகாது அல்லது செயலாற்றுதலாகாது 34
14. பதிவு செய்தல் 34
15. நிபந்தனைகள் 35
16. பதிவினை மீளப் புதுப்பித்தல் 36
17. பதிவினை இரத்துச் செய்தல் 37
18. பதிவினை இடைநிறுத்தல் 39
19. கடனிறுக்கவகையின்மை தொழிலர்களது பதிவுகள் 40
20. காப்புறுதி 43
21. குறித்துரைக்கப்பட்ட நிகழ்வுகள் பற்றிய அறிவித்தல்கள் 44
22. ஏனைய நிகழ்வுகள் பற்றிய அறிவித்தல் 45
23. நடத்தை மற்றும் செயலாற்றுகை பற்றிய விசாரணை 45
24. ஒழுக்காற்று நடவடிக்கை 47
25. பொருள் கோடல் 50

அத்தியாயம் 4

**நிறுவக ரீதியான ஏற்பாடுகள்: நானாவிதம்**

26. நிருவாகி அல்லது ஒழிப்போனாக நியமிக்கப்படுவதற்காக தூண்டுதல் 50
27. தடைக் கட்டளைகள் 50
28. மேன்முறையீடுகள் 52
29. அவ்வாறு செய்வதற்கு அனுமதிக்காதபோது செயலாற்றுதல் 52
30. ஆர்வ கூற்று 52
31. முன் நிருவாக செலவுக் கூற்று 53

பாகம் II

**தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை கோட்பாடுகள்**


32. தனிப்பட்ட கடனிறுக்கவைகையின்மை நடவடிக்கை முறைகளின் கீழ் கடனாளியொருவரின் பொறுப்பு 54
33. கடனாளியினது நிதிசார் அலுவல்கள் பற்றிய கூற்றுகள் 58
34. பாதுகாக்கப்பட்ட ஆதனம் 59
35. ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதியம், ஓய்வூதியம்,மற்றும் நியதிச்சட்ட பணிக்கொடைகள் என்பவற்றின் கீழான உதவு தொகைகள் மற்றும் உரித்துடைமைகள் 63
36. நியாயமான வருமானத்தை பாதுகாத்தல் 64
37. உள்ளடக்கப்பட்ட மற்றும் புறத்தொதுக்கப்பட்ட தனிசுகள் 66


பாகம் III

**தனிசு பாதுகாப்பு கடன் தீர்ப்புப் பிற்போடல் கட்டளை**


38. கடன் பாதுகாப்பு விண்ணப்பம் 68
39. தனிசு பாதுகாப்பு தனிசு தீர்ப்பு பிற்போடல் கட்டளையை ஆக்குவதற்கான கட்டளைக் கற்கள் 70
40. தனிசுப் பாதுகாப்பு, கடன் தீர்ப்பு பிற்போடல் கட்டளையொன்று பயனுறுதல் 73
41. கடன் பாதுகாப்பு கடன் தீர்ப்புப் பிற்போடல் கட்டளை காலப் பகுதி 78
42. கடன் பாதுகாப்பு கடன் தீர்ப்பு பிற்போடல் காலப்பகுதியில் கடனாளிகளின் கடப்பாடுகள் 79
43. தனிசு பாதுகாப்பு தனிசு பிற்போடலுக்கு கடன் கொடுநரின் ஆட்சேபனை 80


பாகம் IV

**தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கு ஏற்பாடுகள்**


44. தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கு ஏற்பாடுகள் 82
45. தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடுகள் பொதுவான நிபந்தனைகள் 83
46. தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடுகள் தகவுடமை கட்டளைக் கற்கள் 85
47. தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடுகள் பணிப்புறுத்தும் ஏற்பாடுகள் 85
48. தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடுகள் பிணைப் பொறுப்பளிக்கப்பட்ட கடன் கொடுநர்கள் மற்றும் ஆதன உரிமைகள் 88
49. தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடுகள் தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை பிரேரணையாளரின் நியமனம் 90
50. தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடுகள் கடனாளி பிரேரணையை தயாரித்தல் 92
51. தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடு பேச்சுவார்த்தை கூட்டம் 95
52. தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டின் கடன் கொடுநர் அங்கீகாரம் 97
53. அங்கீகரிக்கப்பட்ட தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடுகளை உத்தியோகபூர்வ பெறுநருக்கு சமர்ப்பித்தல் 101
54. தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடு பற்றிய நீதிமன்ற உறுதிப்படுத்தல் 103
55. தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடுகள் பற்றிய நீதிமன்ற உறுதிப்படுத்தலின் விளைவு 105
56. தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டின் கீழான கடனாளியின் கடப்பாடுகள் 111
57. தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடு மீதான சவால்கள் 112
58. தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடுகள் பற்றிய வேறுபாடுகள் 115
59. தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டின் முடிவுறுத்துகை 121
60. தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டை பூரணப்படுத்தப்படல் 125
61. தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டின்கீழான தனிப்பட்ட கடனிறுக்க வகையின்மை நிருவாகியின் கடமைகள் 126
62. தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை பிரேரணையாளர்கள் 129
63. தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நிருவாகிகள் 130
64. தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடுகள் நீதிமன்ற பணிப்புகள் 132

பாகம் V

**தனிசு புனர்வாழ்வு கட்டளைகள்**


65. தனிசு புனர்வாழ்வுக் கட்டளை 133
66. தனிசு புனர்வாழ்வுக் கட்டளையொன்றுக்கான தகைமை 133
67. கடன் புனர்வாழ்வுக் கட்டளையொன்றுக்கான விண்ணப்பம் 134
68. தனிசு புனர்வாழ்வுக் கட்டளையொன்றினை ஆக்குவதற்கான கட்டளைக் கற்கள் 136
69. உத்தியோகபூர்வ பெறுநரின் விதப்புரை தனிசு புனர்வாழ்வு கட்டளை 137
70. தனிசு புனர்வாழ்வுக் கட்டளை விண்ணப்பத்தின் நீதிமன்ற தீர்மானம் 139
71. கடன் புனர்வாழ்வுக் கட்டளையின் பயன் 141
72. தனிசு புனர்வாழ்வுக் கட்டளையின் காலப்பகுதி 146
73. தனிசுகளை விடுவித்தல் 147
74. தனிசு புனர்வாழ்வுக் கட்டளையை மேற்பார்வை செய்வதற்கான உத்தியோகபூர்வ பெறுநர் 148
75. கடன் புனர்வாழ்வுக் கட்டளைக்கான கடன்கொடுநர் ஆட்சேபனை 151
76. தனிசு புனர்வாழ்வுக் கட்டளையை முடிவுறுத்தல் 153
77. வங்கிமுறிவு கட்டளையாக மாற்றுதல் 157
78. பேணல் கட்டளைக்காக உத்தியோகபூர்வ பெறுநர் விண்ணப்பிக்கலாம் 160
79. தனிசு புனர்வாழ்வுக் கட்டளையை கைமீட்டல் 161
80. அதிகாரமளிக்கப்பட்ட இடையேற்பாளர்கள் 162


பாகம் VI

**வங்கிமுறிவு**

அத்தியாயம் 1

**வங்கிமுறிவு விண்ணப்பங்கள் மற்றும் வங்கிமுறிவு கட்டளைகள்**


81. வங்கிமுறிவு கட்டளைக்கான கடனாளியின் விண்ணப்பம் 163
82. கடனாளி இலங்கையில் வதிபவராக இருத்தல் 163
83. கடனாளியின் விண்ணப்பத்தின் மீதான வங்கிமுறிவு கட்டளையொன்றுக்கான கட்டளைக்கற்கள் 164
84. கடனாளி விண்ணப்பம் மீதான வங்கிமுறிவு கட்டளையை ஆக்குதல் 164
85. வங்கிமுறிவு கட்டளைக்கான மனு 166
86. வங்கிமுறிவு மனு கடனாளி நிபந்தனை 167
87. வங்கிமுறிவு மனு மீளப் பெறுதல், இடைக்கால தடை, நீக்குதல் தொடர்பான நீதிமன்ற தத்துவங்கள் 167
88. கடன்கொடுநர் மனுவின் மீதான ஏதுக்கள் 169
89. வங்கிமுறிவு அறிவித்தல் மற்றும் செலுத்துவதற்கான இயலாமை 170
90. வங்கிமுறிவு கட்டளைக்கான மனு மீதான நீதிமன்ற முடிபு 172
91. இடைக்கால பெறுநர் 173


அத்தியாயம் 2

**வங்கிமுறிவுக் கட்டளை யனுறுதல்**


92. வங்கிமுறிவின் தொடக்கம் 175
93. வழக்கு நடவடிக்கை மற்றும் பரிகாரங்களை இடைநிறுத்தி வைத்தல் 175
94. நிதிசார் அலுவல்கள் பற்றிய கடனாளியின் கூற்று 181
95. விதிவிலக்கான விடயங்களில் கடன் கொடுநர்களுடனான கூட்டம் 183
96. விதிவிலக்கான விடயங்களில் வங்கிமுறிவு பற்றிய பொது விசாரணை 184

அத்தியாயம் 3

**உத்தியோகபூர்வ பெறுநர் மற்றும் வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளரின் நியமனம்**


97. உத்தியோகபூர்வ பெறுநர், வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளராக வருதல் 187
98. நம்பிக்கை பொறுப்பாளர்களின் நியமனம் 188
99. நம்பிக்கை பொறுப்பாளரை அகற்றுதல் மற்றும் பதவி வறிதாகுதல் 190
100. நம்பிக்கை பொறுப்பாளரை விடுவித்தல் 191


அத்தியாயம் 4

**வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளரின் பணிகளும் கடமைகளும்**


101. பொதுவான பணிகள் மற்றும் வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாளரின் உத்தியோகபூர்வ பெயர் 193
102. வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாளரின் தத்துவங்கள் 195
103. உத்தியோகபூர்வ பெறுநர் வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாளராகவிராத விடத்தான சந்தர்ப்பங்களில் கடன் கொடுநர்களின் குழு 198
104. வங்கிமுறிவு செயல்கள் பற்றிய நீதிமன்ற மீளாய்வு 199
105. நம்பிக்கைப் பொறுப்பாளரின் ஊதியம், செலவினங்கள் மற்றும் ஆகுசெலவுகள் 200
106. தனிசு புனர்வாழ்வு கட்டளைக்கான விண்ணப்பம் 200
107. வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளர் கணக்குகளை கணக்காய்வு செய்தல் 202
108. பணம் தொடர்பில் வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாளரின் கடமை 203


அத்தியாயம் 5

**வங்கிமுறிவிலுள்ள தனிசுகள்**


109. வங்கிமுறிவில் எண்பிக்கத்தக்கனவான தனிசுகள் 204
110. பரஸ்பர கடன் மற்றும் எதிரீடு 206
111. வங்கிமுறிவில் கடன்களுக்கான முன்னுரிமை 206


அத்தியாயம் 6

**வங்கிமுறிவிலுள்ள கடனாளியினது கடமைகள்**


112. வங்கிமுறிவு கடனாளியினது பொதுவான பொறுப்புகள் 209
113. சொத்துக்களை கண்டறிவதற்கும் உணர்வதற்குமான கடனாளியினது கடப்பாடுகள் 209
114. நிதிசார் தகவல்கள் 210


அத்தியாயம் 7

**வங்கிமுறிவில் கடனாளியின் ஆதனம்**


115. வங்கிமுறிவு மரணச் சொத்தின் விபரணம் 211
116. வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளரின் சொத்தின் உரித்தாக்குகை 213
117. ஆதனம் கொள்ளப்பட்டதன் பின்னர் 214
118. வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளரினால் ஆதனத்தின் உடமை 214
119. வங்கிமுறிவு ஆதனத்தின் கைப்பற்றுகை 217
120. கடும் கடப்பாடுடைய சொத்து பற்றிய பொறுப்புத் துறப்பு 218
121. கடனாளி ஆதனத்தை முகாமைத்துவம் செய்வதற்கு அனுமதிப்பதற்கான தத்துவம் 219
122. வாடகைக் கொள்வனவு மீதான பண்டங்கள் 219
123. குறித்தசில சந்தர்ப்பங்களில் பொறுப்பிலிருந்து உத்தியோகபூர்வ பெறுநர் அல்லது நம்பிக்கைப் பொறுப்பாளரை பாதுகாத்தல் 221

*பிரிவு* *பக்க இல.*

| | | |
|---|---|---|
| 124. | இரண்டாவது வங்கிமுறிவு | 222 |
| 125. | கடன் மீள் செலுத்துகை கட்டளை | 224 |
| 126. | தனிசு மீள் கொடுப்பனவு உடன்படிக்கை | 225 |
| 127. | கடனிறுக்கவகையற்று இறந்த ஆளின் மரணச்சொத்துக்கள் | 226 |

அத்தியாயம் 8

**சில கொடுக்கல் வாங்கல்கள் மீதான வங்கிமுறிவின் விளைவு**

| | | |
|---|---|---|
| 128. | கடன்கொடுநர் ஒருவரை மறைத்து வைத்தல் தாமதப்படுத்தல் அல்லது தோல்வியடையச் செய்தல் ஆகிய உட்கருத்துடன் ஆதனத்தின் வறிதாக்கக்கூடிய முந்துரிமைகள், வறிதாக்கக்கூடிய வில்லங்கத்தின் மற்றும் பாராதீனப்படுத்தல்கள் | 227 |
| 129. | குறை பெறுமதியில் உள்ள கொடுக்கல் வாங்கல்கள் | 227 |
| 130. | அறிவித்தல் இன்றி நல்லெண்ணத்துடனான கொடுக்கல் வாங்கல்களின் பாதுகாப்பு | 227 |
| 131. | வங்கிமுறிவு கடனாளிக்கும் சாட்டுனருக்கும் குறித்த சில கொடுப்பனவுகளின் தன்மை | 229 |
| 132. | தனி புத்தகங்களின் பொதுவான குறித்தழிப்புகள் | 229 |
| 133. | வங்கிமுறிவு கடனாளி மற்றும் சாட்டுணித்து குறித்த சில கொடுப்பனவுகளின் வலிதான தண்மை | 230 |
| 134. | வங்கிமுறிவுக்கு முன்னர் பூரணப்படுத்தினாலொழிய, நிறைவேற்றல் அல்லது ஏனைய செயன்முறைகளினால் நன்மை இல்லை | 232 |
| 135. | வங்கிமுறிவிட பிசுக்காலின் கடமைகள் | 233 |

அத்தியாயம் 9

**ஆதனத்தை பகிர்ந்தளித்தல்**

| | | |
|---|---|---|
| 136. | வங்கிமுறிவில் பகிர்ந்தளிப்புகள் | 235 |

அத்தியாயம் 10

**வங்கிமுறிவின் முடிவு**

| | | |
|---|---|---|
| 137. | வங்கிமுறிவுக் காலப்பகுதி | 235 |
| 138. | விடுவித்தல் | 236 |
| 139. | விடுவித்தல் உயர் பெறுமதி வங்கிமுறிவுகள் | 237 |
| 140. | விடுவித்தலை சவாலுக்குட்படுத்துவதற்கான விண்ணப்பம் | 239 |
| 141. | விடுவித்தலின் இடைக்கால இடைநிறுத்தி வைப்பு | 240 |
| 142. | விடுவித்தலை சவாலுக்குட்படுத்துவதற்கான விண்ணப்பம்: வங்கிமுறிவு அறிக்கை | 241 |
| 143. | விடுவித்தலை சவாலுக்குட்படுத்துவதற்கான விண்ணப்பத்தின் நீதிமன்ற தீர்மானம் | 242 |
| 144. | வங்கிமுறிவு விடுவித்தலை இல்லாதொழித்தல் | 243 |
| 145. | வங்கிமுறிவு கட்டளையை வலுவொழித்தல் | 244 |
| 146. | வங்கிமுறிவின் பொழுது கடன் மீள்கட்டமைப்பு ஏற்பாட்டிற்கான விண்ணப்பம் | 245 |

அத்தியாயம் 11

**உத்தியோகபூர்வ பெறுநர்**

| | | |
|---|---|---|
| 147. | வங்கிமுறிவில் கடனாளியினது நடத்தை தொடர்பில் உத்தியோகபூர்வ பெறுநரது தத்துவங்கள் | 246 |
| 148. | வங்கிமுறிவில் உத்தியோகபூர்வ பெறுநரது பொதுவான கடமைகள் | 248 |

அத்தியாயம் 12

**வங்கிமுறிவில் பங்காண்மை**


149. பங்காண்மையின் சந்தர்ப்பங்களில் வங்கிமுறிவு விண்ணப்பங்கள் மற்றும் வங்கிமுறிவு மனுக்கள் 248

150. நீதிமன்ற மனுவை தள்ளுபடி செய்தல் 249

151. ஒரே நம்பிக்கைப் பொறுப்பில் உரித்தாக்கப்படக்கூடிய பங்காளர்களின் ஆதனம் 249

152. வங்கிமுறிவு நம்பிக்கைப்பொறுப்பாளர் மற்றும் வங்கிமுறிவு கடனாளியினது பங்காளர்கள் ஆகியோரது செயல்கள் 250

153. கூட்டு ஒப்பந்தங்கள் மீதான வழக்குகள் 251

154. பங்காண்மையின் பெயரிலான வழக்கு நடவடிக்கைகள் 251


பாகம் VII

**தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை இடாப்பு**


155. தனிப்பட்ட கடனிறுக்கவகை இடாப்பை பேணுவதற்கான அதிகாரசபை 252

156. தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை பதிவுப் புத்தகத்தின் நோக்கம் 252

157. தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை இடாப்பில் பதிவு செய்யப்படவேண்டிய தகவல்கள் 253

158. தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை இடாப்பிலிருந்து தகவல்களை அகற்றுதல் 254

159. தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை இடாப்புகளை அணுக்கம் 255

160. அதிகாரி மற்றும் உத்தியோகபூர்வ பெறுநர் செயல் அல்லது செய்யாமைக்கு பொறுப்பாக மாட்டார் 257

161. தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை இடாப்பு மற்றும் கடன் தகவல் பணியகம் 258


பாகம் VII

**தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை தவறுகள்**

அத்தியாயம் 1

**தவறுகள் தொடர்பிலான பொதுவான ஏற்பாடுகள்**


162. உட்கருத்து 259

163. இப்பாகத்தின் கீழான தவறுகளிற் கான தண்டனைகள் 259

164. பொறுப்பு விடுவிப்பின் பின்னரான குற்றப்பொறுப்பு 259


அத்தியாயம் 2

**தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை தவறுகள்**


165. தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நடவடிக்கைமுறை விண்ணப்பங்கள் : பொய்யான தகவல்கள் 260

166. தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை : கடனாளிகளின் பொறுப்புக்களுடன் இணங்கி யொழுகாமை 261

167. தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நடவடிக்கைமுறைகள் ஆவணங்கள் மற்றும் பதிவேடுகள் 262

168. தனிப்பட்ட கடனிறுவகையின்மை நடவடிக்கைமுறை : ஆதனத்தை கையுதிர்த்தல் 264

169. தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நடவடிக்கைகள் : முறைசார் கடன் மற்றும் தொழில் 266


அத்தியாயம் 3

**வங்கிமுறிவு தவறுகள்**


170. வங்கிமுறிவு தவறுகள் : வெளிப்படுத்தாமை மற்றும் பிரதிநிதித்துவங்கள் 267

171. வங்கிமுறிவு தவறுகள் : ஆதனம் 268

172. வங்கிமுறிவு தவறுகள் : ஆவணங்கள் 269

*பிரிவு* *பக்க இல.*

173. வங்கிமுறிவு தவறுகள் கடன் மற்றும் கடன் பெறுதல் 270
174. வங்கிமுறிவு தவறுகள் பொய்யான உரிமைக் கோரிக்கைகள் 272
175. வங்கிமுறிவு தவறுகள் இலங்கையைவிட்டு வெளியேறல் 272
176. வங்கிமுறிவு தவறுகள் பொறுப்புடைமைகளுடன் இணங்காமை 272
177. வங்கிமுறிவு தவறுகள் மறைத்து வைக்கும் உட்கருத்துடன் முறையான பதிவுகளை வைத்திருப்பதற்கு தவறுதல் 273

பாகம் IX

**கம்பெனிகளை மீட்புச் செய்தல் : நிருவாகம்**

அத்தியாயம் 1

**நிருவாகியின் வகிபாகம்**

178. நிருவாகியின் வகிபாகம் 273

அத்தியாயம் 2

**நிருவாகத்தின் செயல்முறை**

179. நிருவாகம் தொடங்கும்போது 274
180. நிருவாகத்தின் வழிகள் 274

அத்தியாயம் 3

**நிருவாகியின் நியமனம்**

181. யார் நிருவாகியாக நியமிக்கப்பட்டு செயலாற்றுவார்கள் 278
182. நிருவாகியாக நியமிக்கப்படவும் செயற்படுவதிலிமிருந்தான தகுதியீனங்கள் 279
183. நிருவாகியாக யார் நியமிக்கப்படலாம் 280
184. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நிருவாகிகளின் நியமனம் 281
185. கம்பெனியால் நிருவாகியின் நியமனம் 282
186. கம்பெனியின் சபையால் நிருவாகியின் நியமனம் 282
187. கம்பெனியினால் அல்லது சபையால் நிருவாகியின் நியமனத்தின் மீதான மட்டுப்பாடுகள் 283
188. ஒழிப்போன் அல்லது தற்காலிக ஒழிப்போனினால் நிருவாகியின் நியமனம் 284
189. உத்தரவாதப்படுத்தப்பட்ட கடன்கொடுநரினால் நிருவாகியின் நியமனம் 285
190. நீதிமன்றத் தினால் நிருவாகியின் நியமனம் 286
191. பதிவுசெய்யப்படவேண்டிய நிருவாகத்தின் தொடக்கம் 287
192. நிருவாகியின் நியமனம் ஒழிக்கப்படுதலாகாது 288
193. நிருவாகியின் நியமனம் மற்றும் விபரங்களின் அறிவித்தல் 288
194. நிருவாகத்திற்கு குறிப்பீடு செய்யப்படுகின்ற ஆவணங்கள் 289
195. பெயர் மாற்றமொன்றிற்கு ஆற்றப்படுத்தப்படுகின்ற நிருவாகத்திலுள்ள ஆவணங்கள் 290

அத்தியாயம் 4

**நிருவாகத்தின் பயன்கள்**

196. நிருவாகத்தின்போது வில்லங்கங்களின் வலுவுக்கிடாமை 201
197. நிருவாகத்தின்போது ஆதனத்தினை அறவிடாமை 292
198. நிருவாகத்தின்போது வழக்கு நடவடிக்கைமுறைகளின் அல்லது தொடர்ச்சி இருத்தலாகாது 292
199. நிருவாகத்தின் போதான நிறைவேற்றல் அல்லது ஏனைய மன்றாணைகள் ஆகாமை 293

*பிரிவு* *பக்க இல.*

200. நிருவாகத்தின் முன்னர் பூரணப்படுத்தப்பட்டாலொழிய, நிறைவேற்றுகை அல்லது ஏனைய செயல்முறை பற்றி நன்மையில்லை 294
201. நிருவாகத்தில் பிஸ்காலின் கடமைகள் 295
202. நிருவாகத்தின் தொடக்கத்துக்கு முன்னராக பிரயோகிக்கப்பட்ட தத்துவங்கள் 296
203. நிலையான பிணைப் பொறுப்பை வலுவுக்கிடுவதற்கான அனுமதிக்கான முடிபு காலப்பகுதியிலான விண்ணப்பம் 297
204. அறிவித்தல் கொடுப்பதற்காக சம்மதம் அல்லது அனுமதி எதுவும் தேவைப்படாது 300
205. கம்பெயின் பணிப்பாளர்கள் மற்றும் ஏனைய முகவர்கள் மீதான நிருவாகத்தின் பயன் 300
206. நிருவாகிக்கு தகவல்களை வழங்குவதற்கான தேவைப்பாடுகள் 301
207. ஊழியர்கள் மீதான நிருவாகத்தின் விளைவு 302
208. ஆதனங்களுடனான கையாளுகையின் போது நிருவாகத்தின் விளைவு 302
209. பங்குகளின் கைமாற்றத்தின் மீதான நிருவாகத்தின் விளைவு 304
210. நிருவாகத்திலுள்ள அத்தியாவசிய சேவைகள் 305

அத்தியாயம் 5

**நிருவாக வழிகள்**

***அ – நியம மற்றும் துரிதமாக்கப்பட்ட வழிகளுக்கு ஏற்புடையற்பாலதான ஏற்பாடுகள்***

211. நியம மற்றும் துரிதமாக்கப்பட்ட வழிகளுக்கு ஏற்புடையற்பாலதான ஏற்பாடுகள் 307

***ஆ – நியம வழி***

212. ஆரம்ப கூட்டங்கள் 307
213. பெறுபேற்று கூட்டங்கள் 311
214. பெறுபேற்று கூட்டத்தி லான தொழில் 313

***இ - துரிதப்படுத்தப்பட்ட வழி***

215. இணைந்த ஆரம்பகால மற்றும் பெறுபேற்று கூட்டங்கள் 315
216. உறுதி மீளாய்வு கேட்பு 319

***ஈ - இரண்டு மார்க்கங்களுக்கும் ஏற்புடைமையாகின்ற கருமங்கள்***

217. நிருவாகத்தில் உள்ள கடன்கொடுநர்களின் குழு 323
218. பங்குதாரர்கள், கடன்கொடுநர்கள் மற்றும் குழுக்களின் நிர்வாகக் கூட்டங்கள் 326
219. நிருவாகத்தில் பணிப்பாளர்களின் கூற்று 326
220. நிருவாகம் முடிவடையும் போது 328

அத்தியாயம் 6

**கம்பெனி ஒழுங்கேற்பாட்டின் உறுதிகள் மற்றும் உறுதி நிருவாகிகள்**

***அ - கம்பெனி ஒழுங்கேற்பாட்டின் உறுதிகள்***

221. உறுதியின் உள்ளடக்கம் 329
222. உறுதியொன்றின்கீழ் மூன்றாம் திறத்தவர்களை விடுவிப்பு 330
223. உறுதிக்கான தேவைப்பாடுகள் 331
224. பிணைப்புறும் உறுதியின் நீட்டிப்பு 333

### ஆ - உறுதி நிர்வாகி


225. உறுதி நிருவாகி 335
226. யார் உறுதி நிருவாகியாக நியமிக்கப் பட்டு செயற்படக் கூடியவர் 336
227. ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உறுதி நிருவாகிகளை நியமித்தல் 337
228. உறுதி நிருவாகம் ஆரம்பமாகும்போதும் உறுதி நிருவாகி நியமிக்கப்படும் போதும் 337
229. உறுதி நிருவாகிகளை நியமிப்பதற்கான பிணைப் பொறுப்பு 338
230. உறுதி நிருவாகியின் நியமனத்தை இல்லாதொழித்தல் 338


### இ - கம்பெனி ஒழுங்கேற்பாடுபற்றிய உறுதியின் செல்லுபடியாந்தன்மை, மாறுபாடுகள் மற்றும் முடிவுறுத்தல்கள்


231. உறுதியின் செல்லுபடியாந்தன்மையின் மீது நீதிமன்றம் ஆட்சிபுரியலாம் 338


அத்தியாயம் 7

### நிருவாகியின் தத்துவங்கள்


232. நிருவாகியின் தத்துவங்கள் 340
233. கூட்டிணைப்பிற்காக நிருவாகியின் கோரிக்கை 340
234. பெறுநராண்மை அல்லது நியமத்தரின் நியமனம் முடிவடைதல் பற்றி நிருவாகியின் அறிவித்தல் 343
235. நிருவாகியினால் பங்குகள் மீதான அழைப்பு 344
236. நிருவாகியினால் ஆவணங்களின் நிறைவேற்றம் 344
237. வில்லங்கமொன்றுக்கமைந்த ஆதனத்தை கையாள்வதற்கான நிருவாகியின் தத்துவம் 345


அத்தியாயம் 8

### நிருவாகியினதும் உறுதி நிருவாகியினதும் கடமைகள்

### அ - புலனாய்விற்கான கடமைகள்


238. கம்பெனியின் அலுவல்களை புலனாய்வு செய்வதற்கான நிருவாகியின் கடமை 348


### ஆ – அறிக்கையிடுவதற்கான கடமைகள்


239. பிறழ்வழிப்பிழை பற்றி அறிக்கையிடுவதற்கான நிருவாகியின் கடமை 349
240. புரியப்பட்ட தவறினை அறிக்கையிடுவதற்கான நிருவாகியின் கடமை 349
241. கணக்குகளை தயாரிப்பதற்கான நிருவாகியின் கடமை 351
242. இறுதி அறிக்கையை அனுப்புவதற்கான நிருவாகியின் கடமை 352
243. இறுதி அறிக்கையை அனுப்புவதற்கான உறுதி நிருவாகியின் கடமை 353


### இ - நானாவிதமான கடமைகள்


244. பணத்துடன் தொடர்புடைய நிருவாகியின் கடமை 353
245. கணக்கீட்டு பதிவேடுகள் தொடர்பில் நிருவாகி மற்றும் உறுதி நிருவாகியின் கடமை 354


அத்தியாயம் 9

### நிருவாகி மற்றும் உறுதி நிருவாகியின் ஊதியம் மற்றும் முன்நிருவாக செலவுக்கான அங்கீகாரம்


246. நிருவாகி மற்றும் உறுதி நிருவாகியின் ஊதியம் 355
247. முன்நிருவாக செலவுகளுக்கான அனுமதி 356

அத்தியாயம் 10

**நிருவாகி மற்றும் உறுதி நிருவாகியின் பொறுப்பு**


248. நிருவாகியின் நட்டோத்தர வாதம் 356
249. முன்நிலைத்திருக்கும் தொழில் ஒப்பந்தங் களின் கீழான நிருவாகியின் பொறுப்பு 357
250. ஏனைய உடன்படிக்கைகள் மற்றும் வாடகை மீதான நிருவாகியின் பொறுப்பு 359
251. குறைபாடொன்றின் பட்சத்தில் பொறுப்பிலிருந்தான நிவாரணம் 360


அத்தியாயம் 11

**நிருவாகம் மற்றும் உறுதி நிருவாகம் - நானாவிதம்**


252. நிருவாகியின் செயலை புறத்தொதுக்குதல் 361
253. நிருவாகி அல்லது உறுதி நிருவாகியின் பதவியின் வெற்றிடம் 361
254. கடன் கொடுநர்களினால் நிருவாகியை பதிவியிலிருந்து அகற்றல் 365
255. மாற்றீட்டு நிருவாகி 366
256. உறுதி நிருவாகியின் நீக்கலும் மாற்றீடும் 367
257. ஒழித்துக் கட்டல் அல்லது தற்காலிக ஒழித்துக்காட்டலை மீளத் தொடங்குவதற்கான கட்டளை 367
258. நிருவாகி அல்லது உறுதி நிருவாகியை விடுவித்தல் 368
259. உறுதி நிருவாகத்துக்கு ஆற்றுப்படுத்துவதற்கான ஆவணங்கள் 368
260. உறுதி நிருவாகம் எப்போது முடிவடையும் 369


அத்தியாயம் 12

**நிருவாகம் மற்றும் உறுதி நிருவாகத்தில் நீதிமன்றத்தின் தத்துவங்கள்**


261. நிருவாகியொருவர் அல்லது உறுதி நிருவாகியினாலான பணிப்பிற்கான விண்ணப்பம் 370
262. நிருவாகி அல்லது உறுதி நிருவாகியின் ஊதியம் அல்லது நியமனம் தொடர்பிலான கட்டளை 371
263. நிருவாகம் மற்றும் உறுதி நிருவாகத்தில் நீதிமன்றத்தின் பொதுவான தத்துவங்கள் 372
264. நிருவாகியின் அல்லது உறுதி நிருவாகியின் கடமைகளை வலியுறுத்துவதற்கான கட்டளை 373
265. நிருவாகியை அல்லது உறுதி நிருவாகியை நீக்குதல் 375
266. தொழில் அல்லது ஆதனத்தை பாதுகாக்கும் கட்டளைகள் 376
267. கடன்கொடு நர்கள் மற்றும் பங்குதாரர்களின் அக்கறைகளை பாதுகாத்தல் 377
268. நிருவாகத்தில் கடன்கொடுநர்களை பாதுகாக்கும் கட்டளை 378


பாகம் X

**இணக்கம்**


269. பொருள் கோடல் 379
270. இணக்க முன்மொழிவு 379
271. முன் மொழியப்பட்ட இணக்கம் பற்றிய அறிவித்தல் 381
272. இணக்கத்தின் விளைவு 384
273. இணக்கத்தின் மாறுபாடுகள் 386
274. இணக்கம் தொடர்பில் நீதி மன்றத்தின் தத்துவங்கள் 386
275. இணக்கத்தின் செலவுகள் 388


பாகம் XI

**நுண் சிறிய நடுத்தர தொழில்முயற்சி கம்பெனி**
**தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடுகள் (எம்எஸ்எம்இ)**


276. எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடுகள் : 389

*பிரிவு* *பக்க இல.*

277. எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள் கட்டமைப்பு ஒழுங்கேற்பாடுகள்: பொதுவான நிபந்தனைகள் 390
278. எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள் கட்டமைப்பு ஒழுங்கேற்பாடு: தகவுடமை கட்டளைக் கற்கள் 392
279. எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள் கட்டமைப்பு ஒழுங்கேற்பாடுகள்: பணிப்புறுத்ததும் ஏற்பாடுகள் 392
280. எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள் கட்டமைப்பு ஒழுங்கமைப்பு: பாதுகாக்கப்பட்ட கடன் கொடுத்தோர்கள் மற்றும் ஆதன உரிமைகள் 393
281. எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள் கட்டமைப்பு ஒழுங்கேற்பாடுகள்: தனிப்பட்ட கடனிறுவகையின்மை முன்மொழிபவரின் நியமனம் 395
282. எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடுகள்: எம்எஸ்எம்இ கடனாளி முன் மொழிவின் தயாரிப்பு 397
283. எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடு, பேச்சு வார்த்தை கூட்டம் 400
284. எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டின் கடன்கொடுநர் அங்கீகாரம் 402
285. உத்தியோகப்பூர்வ பெறுநரிற்கு அனுமதிக்கப்பட்ட எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கமைப்பினை சமர்ப்பித்தல் 406
286. எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள் கட்டமைப்பு ஒழுங்கமைப்பின் நீதிமன்ற உறுதிப்படுத்துகை 408
287. மீள்கட்டமைப்பு ஏற்பாடுகள் பற்றிய நீதிமன்ற உறுதிப்படுத்தலின் தாக்கம் 410
288. தனிசு மீள்கட்டமைப்பு ஏற்பாடு மீதான சவால்கள் 415
289. தனிசு மீள்கட்டமைப்பு ஏற்பாடுகள் பற்றிய வேறுபாடுகள் 419
290. தனிசு மீள்கட்டமைப்பு ஏற்பாடுகளை முடிவுறுத்தல் 423
291. தனிசு மீள்கட்டமைப்பு ஏற்பாடுகள் பூரணப்படுத்தப்படல் 426
292. தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டின் கீழ் தனிப்பட்ட கடனிறுக்க வகையின்மை நிருவாகியின் கடமைகள் 428
293. தனிப்பட்ட கடனிறுக்க வகையின்மை பிரேரணையாளர்கள் 430
294. தனிப்பட்ட கடனிறுக்க வகை யின்மை நிருவாகிகள் எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற் பாடுகள் 431
295. எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடுகள் நீதிமன்ற பணிப்புகள் 433


## பாகம் XII
## **ஒழித்துக்கட்டல்**

### அத்தியாயம் 1
### **ஒழிப்போனின் வகிபங்கு**

296. ஒழிப்போனின் பங்கு 434


### அத்தியாயம் 2
### **ஒழித்துக்கட்டல் செயன்முறை**

297. ஒழித்துக்கட்டல் தொடங்கும்போது 434
298. ஒழிப்போனின் நியமனம் 434
299. கம்பெனியால் அல்லது சபையினால் ஒழிப்போனின் நியமனத்தின் மீதான மட்டுப்பாடுகள் 437
300. பதிவுசெய்யப்படுவதற்காக ஒழித்துக்கட்டுதலின் ஆரம்பம் 437
301. பெறுபேற்று கூட்டத்தில் ஒழிப்போனின் நியமனம் 438
302. கடனிறுக்கவகையின் வெளிப்படுத்துகை 438
303. தனிசுகளை செலுத்த இயலாமைக்கான சான்று 441

304. தற்காலிக ஒழிப்போனின் நியமனம் 441
305. ஒழித்துக்கட்டலில் பணிப்பாளர்களின் கூற்று 443
306. ஒழிப்போன் கடன்கொடுநர்களின் கூட்டத்தை கூட்டுதல் 444
307. ஒழிப்போனை மாற்றீடு செய்தல் 448
308. ஒழித்துக்கட்டலில் கடன்கொடுநர்களின் குழு 448
309. ஒழித்துக்கட்டுதலிலுள்ள உதவுதொகை செலுத்துநர்களின் குழு 451
310. ஒழித்துக்கட்டலில் பங்குதாரர்கள், கடன்கொடுநர்கள், உதவித்தொகை செலுத்துநர்கள்மற்றும் குழுக்களின் கூட்டங்கள் 454
311. ஒழித்துக்கட்டலின் முடிவு 455


அத்தியாயம் 3

**ஒழிப்போன் அல்லது தற்காலிக ஒழிப்போனின் நியமனம்**


312. ஒழிப்போனாக நியமிக்கப்பட்டு செயற்படக்கூடியவர் 456
313. ஒழிப்போனாக நியமிக்கப்பட்டு செயற்படுவதிலிருந்து தகுதியீனங்கள் 457
314. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஒழிப்போன்கள் அல்லது தற்காலிக ஒழிப்போன்களின் நியமனம் 458
315. ஒழிப்போனின் நியமனம் மற்றும் விபரங்களின் அறிவித்தல் 459
316. ஒழித்துக் கட்டுதலிற்கு ஆற்றுப்படுத்துவதற்கான 461


அத்தியாயம் 4

**ஒழித்துக்கட்டுதலின் விளைவுகள்**


317. ஒழித்துக் கட்டலின்போது வில்லங்கத்தின் வலுவுறுத்துகை இல்லை 461
318. ஒழித்துக் கட்டலின்போது நடவடிக்கை முறையின் தொடக்கம் அல்லது தொடருதலெதுமில்லை 462
319. ஒழித்துக்கட்டலின் போது நிறைவேற்றமோ அல்லது ஏனைய செயற்பாடுகளெதுவுமில்லை 462
320. ஒழித்துக்கட்டலிற்கு முன்னதாக நிறைவேற்றப்பட்டாலொழிய, நிறை வேற்றலின் அல்லது ஏனைய செயல்முறையில் நன்மை யெதுமில்லை 463
321. ஒழித்துக்கட்டுதலிலுள்ள பிசுக்காலின் கடமைகள் 464
322. ஒழித்துக்கட்டுதல் தொடங்கும் முன்னர் பிரயோகிக்கப்படும் தத்துவம் 465
323. கம்பெனியின் பணிப்பாளர்கள் மீதான வேறு முகவர்கள் பற்றிய ஒழித்துக் கட்டுதலின் விளைவு 466
324. ஒழிப்போனுக்கு தகவலை வழங்குவதற்கான தேவைப்பாடு 467
325. ஆதனத்தைக் கையாளுதல் பற்றிய ஒழித்துக்கட்டுதலின் விளைவு 468
326. பங்குகளின் கைமாற்றுகை பற்றிய ஒழித்துக்கட்டுதலின் விளைவு 470
327. ஒழித்துக்கட்டுதலிலுள்ள அத்தியாவசியமான சேவைகள் 471
328. தற்காலிக ஒழித்துக்கட்டுதலிலுள்ள இவ்வத்தியாயத்தின் ஏற்புடைமை 471


அத்தியாயம் 5

**ஒழிப்போனின் தத்துவங்கள்**


329. ஒழிப்போனின் தத்துவங்கள் 472
330. ஒழிப்போன் ஒத்துழைப்பு வழங்குவதற்கு வேண்டுகோள் விடுத்தல் 473
331. பெருநராண்மை அல்லது நியமிக்கப்பட்டவரது நியமனம் முடிவடைவதல் பற்றிய ஒழிப்போனின் அறிவித்தல் 476
332. ஒழிப்போனால் ஆவணங்களின் நிறைவேற்றுகை 477
333. தடை பிசகுக்கு உட்பட்ட ஆதனத்துடன் தொடர்புறுவதற்காக ஒழிப்போனுக்கு உண்டான தத்துவம் 478
334. பொறுப்புவாய்ந்த ஆதனம் தொடர்பிலான பொறுப்புத்துறப்பு 479

*பிரிவு* *பக்க இல.*

335. பொறுப்புத்துறப்பை செய்யலாமா இல்லையா என்பதனை தெரிவு செய்வதற்கான தேவைப்பாடு 481
336. தற்காலிக ஒழித்துக்கட்டுதலில் (ஒழிப்போனின் தத்துவங்கள்) இவ்வத்தியாயத்தின் ஏற்புடைமை 481

அத்தியாயம் 6
**ஒழிப்போனின் கடமைகள்**
***அ – பொது***

337. குறித்த சில ஒழிப்போன் செயலாற்றுதற்குத் தேவைப்படுத்தப்படமாட்டார் 482
338. கம்பெனியின் அலுவல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஒழிப்போனின் கடமை 482

***ஆ - உதவுதொகை செலுத்துநர்கள்***

339. உதவுதொகை செலுத்துநர்களின் பட்டியலைக் கொடுத்துத் தீர்த்தல் 483
340. உதவுதொகை செலுத்துநர்களின் நிரல் ஒன்றின் வேறுபாடு 484
341. உதவுதொகை செலுத்துநர்களது உரிமைகளை சரிக்கட்டுதல் 484
342. முன்னாள் பங்குதாரர்களுடைய பொறுப்பு 484
343. உதவுதொகை செலுத்துநர்களின் பொறுப்பை வலுவுறுத்துகை 485

***இ - கம்பெனியின் ஆதனத்தின் பிரயோகம்***

344. விருப்புசார் கோரிக்கைகள் 486

***ஈ - அறிக்கையிடுவதற்கான கடமைகள்***

345. பிழையான செயலை அறிக்கையிடுவதற்கான ஒழிப்போனின் கடமை 488
346. தவறு புரியப்பட்டமையை அறிக்கையிடுவதற்கு ஒழிப்போனின் கடமை 489
347. கணக்குகளைத் தயாரிப்பதற்கு ஒழிப்போனின் கடமை 490
348. இறுதி அறிக்கையையும் அதனுடன் தொடர்புடைய ஆவணங்களையும் அனுப்புவதற்கான ஒழிப்போனின் கடமை 492

***உ – கலைத்தல்***

349. கலைத்தல் 492

***ஊ - நானாவிதக் கடமைகள்***

350. பணம் தொடர்பில் ஒழிப்போனின் கடமை 493
351. கணக்கீட்டுப் பதிவேடுகள் தொடர்பில் ஒழிப்போனின் கடமை 494

***எ – தற்காலிக ஒழித்துக்கட்டுதலிலுள்ள கடமைகள்***

352. தற்காலிக ஒழித்துக்கட்டலிலுள்ள இவ்வத்தியாயத்தின் ஏற்புடமை 495

அத்தியாயம் 7
**ஒழிப்போனின் ஊதியம்**

353. உத்தியோகபூர்வ பெறுநர் தவிர்ந்த ஒழிப்போனின் ஊதியம் 495

அத்தியாயம் 8
**ஒழிப்போன், தற்காலிக ஒழிப்போன் மற்றும் விசேட முகாமையாளரின் பொறுப்பு**

354. குறைபாடுள்ள பட்சத்தில் நிவாரணம் 496

அத்தியாயம் 9

**ஒழித்துக்கட்டுதல் - நானாவிதம்**


355. ஒழிப்போனுக்கு நிருவாகியினால் அல்லது பெறுநரினால் தகவல் மற்றும் உதவி வழங்குதல் 496

356. ஒழிப்போன் பதவியிலுள்ள வெற்றிடம் 498

357. ஒழிப்போன் அல்லது தற்காலிக ஒழிப்போனின் விடுவிப்பு 500

358. விசேட முகாமையாளரின் நியமனம் 501

359. முத்திரைத் தீர்வை விலக்களிப்பு 504


அத்தியாயம் 10

**ஒழித்துக்கட்டுதல் மற்றும் தற்காலிக ஒழித்துக்கட்டுதலில் நீதிமன்றத்தின் தத்துவங்கள்**


360. ஒழிப்போன் அல்லது தற்கால ஒழிப்போனினால் செய்யப்படும் பணிப்புகளுக்கான விண்ணப்பம் 505

361. ஒழிப்போன்கள் மற்றும் தற்காலிக ஒழிப்போன்களின் நீதிமன்ற மேற்பார்வையும் ஒழிப்போனின் ஊதியம் அல்லது நியமனம் தொடர்பிலான கட்டளையும் 506

362. ஒழித்துக்கட்டுதல் மட்டும் தற்காலிக ஒழித்துக்கட்டுதலிலுள்ள நீதிமன்றத்தின் பொதுவான தத்துவங்கள் 508

363. ஒழிப்போனுக்கு அல்லது தற்காலிக ஒழிப்போனின் கடமைகளை வலியுறுத்துவதற்கான கட்டளை 509

364. ஒழிப்போனை அல்லது இடையேற்பாட்டு ஒழிப்போனை நீதிமன்றத்தினால் பதவியிலிருந்து நீக்குதல் 511

365. விண்ணப்பம் அல்லது வழக்கு நடவடிக்கையை நிறுத்திவைப்பதற்கான அல்லது தடுத்து வைப்பதற்கான தத்துவம் 512

366. ஒழித்துக்கட்டுதல் அல்லது தற்காலிக ஒழித்துக்கட்டுதலில் கடன்கொடுநர்களைப் பாதுகாப்பதற்கான கட்டளை 512


பாகம் XIII

**பெறுநராண்மை**

அத்தியாயம் 1

**பொருள்கோடல்**


367. பொருள்கோடல் 513


அத்தியாயம் 2

**பெறுநரின் நியமனம்**


368. சாதனம் பெறுநரை நியமிப்பதற்கான தத்தவத்தை அளிக்கலாம் 513

369. பெறுநராண்மை தொடங்கும்போது 513

370. யார் பெறுநராக நியமிக்கப்படலாம் மற்றும் செயல்படலாம் 513

371. பெறுநராக நியமிக்கப்படுவதிலிருந்து அல்லது செயலாற்றுவதிலிருந்தான தகைமையீனங்கள் 514

372. சாதனமொன்றின் கீழ் பெறுநரின் நியமனம் 515

373. நீதிமன்றம் பெறுநரை நியமிக்கலாம் 517

374. பெறுநரின் நியமனம் பற்றிய அறிவித்தலும் விபரங்களும் 518

375. பெறுநரின் நியமனத்தைக் குறிப்பீடு செய்வதற்கான ஆவணங்கள் 519


அத்தியாயம் 3

**பெறுநரின் தத்துவங்கள்**


376. பெறுபவரின் தத்துவங்கள் 520

377. பெறுநர் ஆவணங்களை நிறைவேற்றுதல் 521

378. பெறுநர்களுக் கிடையேயாள முந்துரிமை 521
379. பெறுநருக்கு தகவல் வழங்குவதற்கான தேவைப்பாடு 523
380. ஆதனத்தை விற்பதற்கான அளிப்பவரின் சம்மதம் 524
381. ஒழித்துக்கட்டு தலின் மீது பெறுநரின் தத்துவங்கள் 525

அத்தியாயம் 4

**பெறுநரின் கடமைகள்**

382. பெறுநரின் பொதுக் கடமைகள் 526
383. ஆதனத்தை விற்பனை செய்யும் பெறுநரின் கடமை 527
384. பாதுகாப்பு அல்லது நட்டோத்தரவாதமில்லை 527
385. நிரந்தர பிணைப் பொறுப்பு பெறுநர் நியமிக்கப்படுமிடத்து முன்னுரிமைக் கட்டளை 527
386. மிதக்கும் பொறுப்பு பெறுநர் நியமிக்கப்படுமிடத்து, முன்னுரிமை ஒழுங்கு 530
387. பணம் பெறுநரின் கடமை 532
388. கணக்கீட்டு பதிவேடுகள் தொடர்பில் பெறுநரின் கடமை 532

அத்தியாயம் 5

**பெறுநரின் ஊதியம்**

389. பெறுநரின் ஊதியம் 532

அத்தியாயம் 6

**பெறுநரினால் அறிக்கையிடப்படல்**

390. பெறுநரினால் வழங்கப்படும் முதல் அறிக்கை 533
391. பெறுநரால் மேலதிக அறிக்கைகள் 534
392. அறிக்கைகள் தயாரிப்பதற்கான நேர நீடிப்பு 536
393. அறிக்கைகளை மேற்பார்வை செய்யவும் பெற்றுக் கொள்ளவும் உரித்துடைய ஆட்கள் 536
394. புரிபப்பட்ட குற்றங்களை அறிக்கையிடுவதற்கான பெறுனரின் கடமை 537

அத்தியாயம் 7

**பெறுநரின் பொறுப்பு**

395. பெறுநரின் நட்டோத்தர வாதம் 539
396. முன்னர் ஏலவேயுள்ள தொழிலர் ஒப்பந்தங்களின் கீழான பெறுநரின் பொறுப்பு 539
397. ஏனைய உடன்படிக்கைகள் 541
398. குறைபாடு ஏற்படும் பட்சத்தில் பொறுப்பிலிருந்தான நிவாரணம் 542

அத்தியாயம் 8

**பதவி வெற்றியிடம் மற்றும் பெறுநராண்மையின் முடிவு**

399. பெறுநரின் பதவி வெற்றிடம் 543
400. பெறுநராண்மையின் முடிவு 545
401. பெறுநராண்மையின் முடிவு பற்றி அறிவிப்பதற்கான பெறுநரின் கடமை 546

அத்தியாயம் 9

**பெறுநராண்மையில் நீதிமன்றத்தின் தத்துவங்கள்**

402. அத்தியாயம் 9 பெறுநராண்மையில் நீதிமன்றத்தின் தத்துவங்கள் 546
403. பெறுநரின் ஊதியம் அல்லது நியமனம் தொடர்பிலான கட்டளை 547
404. நீதிமன்றம் பெறுநராண்மையை மட்டுப்படுத்தலாம் அல்லது வரையறுக்கலாம் 548
405. பெறுநரின் கடமைகளை வலுவுறுத்துவதற்கான கடமைகள் 548

*பிரிவு* *பக்க இல.*

406. நீதிமன்றத்தினால் பதவியிலிருந்துபெறுநரை அகற்றுதல் 550
407. பெறுநராண்மையிலுள்ள ஆதனத்தை பாதுகாப்பதற்கான கட்டளைகள் 551

பாகம் XIV

**எல்லை மீறிய கடனிறுக்கவியலாமை**

408. வெளிநாட்டுக் கம்பெனிகள் 552

பாகம் XV

**கடனிறுக்கவகையின்மை**

அத்தியாயம் 1

**தனிசுகளைச் செலுத்த இயலாமை மற்றும் பிழையான வியாபாரஞ் செய்தல்**

409. தனிசுகனை செலுத்துவதற்கான இயலாமை 553
410. நீதிமன்றம் கோரிக்கையை புறத்தொதுக்கலாம் 554
411. பிழையாக வர்த்தகம் செய்தல் 555

அத்தியாயம் 2

**வறிதாக்கப்படற்பாலதான கொடுக்கல்வாங்கல்கள்**

412. வறிதாக்கப்படற்பாலதான கொடுக்கல்வாங்கல்கள் 558
413. வறிதாக்கப்படற்பாலதான வில்லங்கம் 559
414. கடன்கொடுநருக்கு மறைக்கும், தாமதப்படுத்தும் அல்லது தோற்கடிக்கும் உட்கருத்துடன் ஆதனத்தின் பராதீனப்படுத்துதல் 562
415. உட்கருத்துடன்வறிதாக்கப்படற்பாலதானமுந்துரிமை, வறிதாக்கப்படற்பாலதான வில்லங்கம் அல்லது பராதீனப்படுத்துகையொன்றை புறத்தொதுக்குவதற்கான நடவடிக்கை முறை 563
416. உட்கருத்துடன்வறிதாக்கப்படற்பாலதானமுந்துரிமை, வறிதாக்கப்படற்பாலதான வில்லங்கம் அல்லது பராதீனப்படுத்தல் ஒன்றை புறத்தொதுக்குவதன் மீதான நீதிமன்றக் கட்டளைகள் 564
417. உட்கருத்துடன்வறிதாக்கப்படற்பாலதானமுந்துரிமை, வறிதாக்கப்படற்பாலதான வில்லங்கம் அல்லது பராதீனப்படுத்தலொன்றை புறத்தொதுக்குவதன் மீதான மட்டுப்பாடுகள் 566
418. குறைந்த பெறுமதியிலான கொடுக்கல்வாங்கல் 567
419. முறைவழி பிரள்வு 569
420. வரைவிலக்கணங்கள் 570

அத்தியாயம் 3

**பீனிக்ஸ் கம்பெனிகள்**

421. பீனிக்ஸ் கம்பெனிகள் 571
422. தனிப்பட்ட பொறுப்பு 573
423. அடுத்துறுநர் கம்பெனி அறிவித்தலில் பெயரிடப்பட்ட ஆளுக்கான விதிவிலக்கு 575
424. தற்காலிக காலப்பகுதி தொடர்பிலான விதிவிலக்கு 575
425. செயலிழக்கப்படாத கம்பெனி தொடர்பிலான விலக்கு 576

அத்தியாயம் 4

**தனிசுகள், எதிரிகள் மற்றும் ஆவணங்களை அனுப்புவதற்கான எண்பிப்புகள்**

426. தனிசுகள் மற்றும் தனிசுகளை நிரூபிப்பதற்கான சான்றுகள் 576

### *ஆ – எதிரீடு*


427. வங்கிமுறிந்த கடனாளி மற்றும் வேறொரு திறந்தவருக்கு இடையிலான எதிரீடு 580
428. கம்பெனியொன்று மற்றும் வேறொரு திறந்தவருக்கிடையிலான எதிரீடு 582


### *இ - விநியோகித்தல்கள்*


429. விநியோகங்கள் 584


### *ஈ - கடன்கொடுநர்களுக்கு ஆவணங்களை அனுப்புதல் மற்றும் விலக்கல்*


430. கடன்கொடுநர் மற்றும் விலக்கப்பட்ட கடன்கொடுநர்களுக்கு ஆவணங்களை அனுப்புதல் 586


பாகம் XVI

## பொது மற்றும் நானாவிதங்கள்

அத்தியாயம் 1

### பொது


431. கடனிறுக்கவகையின்மையின் வைத்திருப்பு கணக்கு மற்றும் கடனிறுக்கவகை யின்மை மிகைசேர் கணக்கு 588
432. உரிமை கோரப்படாத மற்றும் மிகைசேர் வரும்படிகள் பிரயோகம் 588
433. கடன் கொடுநரின் தீர்மானங்கள் 590
434. உதவுதொகை தீர்மானங்கள் 591
435. ஆதனத்தின் கைப்பற்றுகை அல்லது கையுதிர்ப்பு தொடர்பான பாதுகாப்பு 591
436. செயல்களின் செல்லுபடியாந்தன்மை 591
437. காலப்பகுதியை நீடித்தல் 592
438. குறிப்பிட்ட பதவி வகிப்பவருக்கு தேவையான ஆவணங்கள் 592
439. கோரிக்கைகளும் அறிவித்தல்களும் 593


அத்தியாயம் 2

### தவறுகள்


440. நிருவாகம் அல்லது ஒழித்துக்கட்டல் முன்னர் பணிப்பாளர் ஒருவரின் அல்லது ஏனைய அலுவலரொருவரின் முறைப்பிழை 594
441. மோசடி வர்த்தகம் 596
442. நிருவாகம் அல்லது ஒழித்துக்கட்டுதலுடன் தொடர்புடைய தவறு 597
443. தடைசெய்யப்பட்ட நடவடிக்கை 600
444. முறையான கணக்குகள் வைக்கப்படாத விடத்து எழும் பொறுப்பு 600
445. பொய்யான அல்லது பிறழ்வழி இட்டுச் செல்வதான கூற்று 601
446. நிருவாகிகள் மற்றும் ஒழிப்போன் களுக்கான ஊழியர் சகாய நிதியக் கொடுப்பனவுச்சட்டம், ஊழியர் நம்பிக்கைக் பொறுப்பு நிதியச்சட்டம் மற்றும் பணிக்கொடை கொடுப்பனவு சட்டம் என்பவற்றின் ஏற்புடையாந்தன்மை 602


### அத்தியாயம் 3

### நியாயாதிக்கம் மற்றும் செயன்முறை


447. நியாயாதிக்கம் 602
448. தவறுகளின் விளங்கல்களும் குற்றப்பணம் விதிப்பும் 603
449. நடவடிக்கை முறை 603
450. இடைக்கால நிவாரணம் 604
451. செலவுகள் 606
452. நீதிமன்றக் கட்டளைகளை வலியுறுத்துதல் 606
453. குற்றங்களுக்கு பொதுவான ஏற்பாடுகள் 607

**சட்டமாக்குவதற்கு கையளிக்கப்பட்ட தத்துவங்கள்**


454. கட்டளைகள் 607

455. ஒழுங்குவிதிகள் 608

456. விதிகள், நியமங்கள், செயல்முறைப் பணிப்புகள், நடத்தைக் கோவைகள் மற்றும் வழிகாட்டு நெறிகள் 610


பாகம் XVII

**இறுதியானவை**

**ஏற்புடைமை**


457. ஏற்புடைமை 611


**திருத்தங்கள்**


458. கம்பெனிகள் சட்டத்தின் 46 ஆம் பிரிவு 611

459. கம்பெனிகள் சட்டத்தின் 71 ஆம் பிரிவைத் திருத்துதல் 611

460. கம்பெனிகள் சட்டத்தின் 88 ஆம் பிரிவைத் திருத்துதல் 611

461. கம்பெனிகள் சட்டத்தின் 88 ஆம் பிரிவைத் திருத்துதல் 611

462. கம்பெனிகள் சட்டத்தின் 97 ஆம் பிரிவைத் திருத்துதல் 612

463. கம்பெனிகள் சட்டத்தின் 213 ஆம் பிரிவைத் திருத்துதல் 612

464. கம்பெனிகள் சட்டத்தின் 214 ஆம் பிரிவினைத் திருத்துதல் 614

465. கம்பெனிகள் சட்டத்தின் 220 ஆம் பிரிவினைத் திருத்துதல் 617

466. கம்பெனிகள் சட்டத்தின் 228 ஆம் பிரிவினைத் திருத்துதல் 617

467. கம்பெனிகள் சட்டத்தின் 246 ஆம் பிரிவினைத் திருத்துதல் 617

468. கம்பெனிகள் சட்டத்தின் பாகம் X ஐத் திருத்துதல் 617

469. கம்பெனிகள் சட்டத்தின் பிரிவு 394 620

470. கம்பெனிகள் சட்டத்தின் பிரிவு 431 621

471. கம்பெனிகள் சட்டத்தின் பிரிவு 433 622

472. கம்பெனிகள் சட்டத்தின் பிரிவு 529 623

473. கம்பெனிகள் சட்டத்தின் முதலாம் அட்டவணை 623

474. கம்பெனிகள் சட்டத்தின் ஆறாவது அட்டவணை 624

475. இணக்க சபைகள் சட்டத்தின் மூன்றாவது அட்டவணை 624

476. உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 175 ஆம் பிரிவு 624


**நீக்கங்கள்**


477. சட்ட நீக்கங்கள் 625


அத்தியாயம் 3

**நிலைபெயர்கால ஏற்பாடுகளும் பேணல்களும்**


478. நிலை பெயர்கால ஏற்பாடுகளும் பேணல்களும் 625

479. நிலை பெயர்கால ஏற்பாடுகள் கடனிறுக்க வகையின்மை தொழில்கள் 627

480. ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல் 675

## மீட்பு, புனர்வாழ்வு மற்றும் கடனிறுக்கவகையின்மை (கூட்டிணைப்பு மற்றும் தனிப்பட்ட)

ச.வ.-ஒ.49/2024

**தனியாட்கள் மற்றும் கம்பெனிகளின் மீட்பு, புனர்வாழ்வு, மற்றும் கடனிறுக்கவகையின்மை ஆகியவற்றுடன் தொடர்புடைய சட்டங்களைத் திருத்துவதற்கும், தொகுப்பதற்கும்; (97 ஆம் அத்தியாயமான) கடனிறுக்கவகையின்மை கட்டளைச் சட்டத்தினை நீக்குவதற்கும்; 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தினைத் திருத்துவதற்கும்; 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தைத் திருத்துவதற்கும்; 1988 ஆம் ஆண்டின் 72 ஆம் இலக்க, மத்தியஸ்த சபைகள் சட்டத்தைத் திருத்துவதற்கும் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர் விளைவான எல்லாக் கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.**

முன்னுரை

நிதிசார் இடர்பாட்டிலுள்ள தனியாட்கள் மற்றும் சாத்தியமற்ற தொழில் முயற்சிகளை உரிய நேரத்திலான, வினைத்திறன் மிக்க மற்றும் பாரபட்சமற்றவகையிலான மீட்பு, புனர்வாழ்வு என்பவற்றுக்காகவும் மற்றும் சாத்தியமற்ற தொழில் முயற்சிகளை மூடிவிடுவதற்கானதுமான சட்டக்கோவையொன்றை சட்டமாக்குவது விரும்பத்தக்கது என இலங்கை அரசாங்கம் கருதுவதாலும்:

அத்துடன் முழுமையாக தனிசுகொடுநர்களின் அக்கறைகளுக்கும் பொதுமக்களின் அக்கறைகளுக்கும் நன்மை பயக்கும் விளைவுகளை உருவாக்குவதற்கு ஒத்துழைப்புகளை வழங்குவதற்காக கடன்கொடுநர்களை ஊக்குவிப்பதன் மூலம் கடனிறுக்கவகையின்மை காரணமாக பெறுமதியில் ஏற்படுகின்ற தேவையற்ற இழப்புகளைக் குறைப்பதற்கும் கடனிறுக்கவகையின்மையின் எதிர்வுகூறல்களை மேம்படுத்துவதற்கும் கடன்கொடுக்கல்வாங்கல்களில் துர்நடத்தைக்கெதிரான பாதுகாப்புகளை வழங்குவதற்கும் அவசியமாக வந்துள்ளதாதலாலும்:

அத்துடன் கடனிறுக்கவகையற்ற உயர்தொழிலர்களின் ஒழுங்குபடுத்துகை, மேற்பார்வை மற்றும் ஒழுக்கம் என்பவற்றை ஏற்பாடு செய்தல் முக்கியமானதாக வந்துள்ளது. கடனாளியின் ஆதனத்தின் பெறுமதியையும் கடன் கொடுநர்களினால் தனிசுகளின் வினைத்திறன் மிக்க அறவீட்டினை விருத்திசெய்வதற்கென கடன்கொடுநர்களினால் செய்யப்படும் அறவீடுகளையும் அதிகரிப்பதற்கு விரும்பியுள்ளதாதலாலும்:

அத்துடன் அடக்குமுறை கடன்படுகை பாதிப்புகளிலிருந்து நேர்மையான தனிப்பட்ட கடனாளியை விடுவித்து அத்தகைய கடனாளி புதிதாக நடவடிக்கை எடுப்பதற்கு அனுமதியளிப்பதன் மூலமும் பொருளாதாரச் செயற்பாட்டை மேம்படுத்துவதும் மற்றும் கடனிறுக்கவகையின்மையின் சமூக செலவுகளைக் குறைப்பதும் அவசியமாக வந்துள்ளதாதலாலும்; இதேபோன்று தொழில் முயற்சியாண்மையை ஊக்குவிப்பதற்கும் தனியுரிமையாண்மைகள், பங்காண்மைகள் மற்றும் வேறு கூட்டிணைக்கப்படாத தொழில்கள் உட்பட தொழில் முயற்சியாண்மையை ஊக்குவிப்பதற்கும் அத்தகைய தொழில் நுண், சிறிய, நடு அல்லது நடுத்தர தொழில்முயற்சிகளை தொடர்வதற்கு ஒப்பேறத்தக்க தொழில்களின் புனர்வாழ்வையும் மீட்பையும் ஆதாரப்படுத்துவதும் அவசியமாக வந்துள்ளதாதலாலும்:

ஆகவே இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாக:-

சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்

**1.** (1) இச்சட்டம், 2026 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, மீட்பு, புனர்வாழ்வு மற்றும் கடனிறுக்கவகையின்மை (கூட்டிணைப்பு மற்றும் தனிப்பட்ட) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

(2) இப்பிரிவின் ஏற்பாடுகள் அரசியலமைப்பின் 80ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி இச்சட்டமூலம் தொடர்பிலான சபாநாயகரின் சான்றிதழ் எத்தேதியன்று புறக்குறிப்பிடப்படுகின்றதோ அத்தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) நான்காம் உட்பிரிவுக்கமைய இச் சட்டத்தின் வேறு எல்லா ஏற்பாடுகளும் (2) ஆம் உட்பிரிவின்கீழ் எத்தேதியன்று சபாநாயகர் சான்றிதழை புறக்குறிப்பிட்டாரோ அத்தேதியிலிருந்து ஆறு மாதங்கள் எனும் காலப்பகுதியின் முடிவின் மீது நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(4) அமைச்சர் (3) ஆம் உட்பிரிவின்கீழ் இச்சட்டம் நடைமுறைக்கு வரவிருக்கின்ற திகதிக்கு ஒரு மாத கால முன்னரான எந்தநேரத்திலும் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டணம் மூலம் (3) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியை மேலும் நீடிக்கலாம்:

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய நீடிப்பின் கூட்டப்பட்ட காலப்பகுதி சபாநாயகர் சான்றிதழில் புறக்குறிப்பிடப்பட்ட திகதியிலிருந்து இரண்டு ஆண்டுகளை விஞ்சுதலாகாது.

பொருள் கோடல்

**2.** (1) இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய –

"நிருவாகம்" என்பது பாகம் IX இன் கீழான நிருவாகம் எனப் பொருள்படும் என்பதுடன் "நிருவாகி" என்பது நேரொத்த பொருளைக் கொண்டிருத்தலும் வேண்டும்;

"நிருவாக கடன்கொடுநர்கள் குழு" என்பது 217 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட குழுவொன்று எனப் பொருள்படும்;

"நியமிக்கப்பட்டவர்" என்பது ஏதேனும் ஆதனத்தை விற்பதற்கு அவ்வாளுக்கு தத்துமளிக்கப் பட்படாலுஞ்சரி அல்லது இல்லையாயினுஞ்சரி இச்சட்டத்தின்கீழ்; வேறுவகையிலன்றி நியமிக்கப் பட்ட ஏதேனும் ஆதனத்தின் பெறுநரொருவர் அல்லது முகாமையாளரொருவர் அல்லது பெறுநரொருவர் மற்றும் முகாமையாளரொருவர் எனப் பொருள்படும்;

"சொத்துக்களற்ற கம்பெனி" என்பது,

(அ) ஒழித்துக்கட்டுதல் பற்றிய விதிப்பனவுகள் மற்றும் செலவினங்கள் மற்றும் ஒழிப்போனின் ஊதியம் என்பவற்றை ஈடுசெய்வதற்கான சாத்தியத்துக்கான போதியளவற்ற சொத்துக்கள்; அத்துடன்

(ஆ) கடன்கொடுநர்களுக்கு ஏதேனும் பங்களிப்பை செலுத்துகிள்ற நியாயமற்ற சாத்தியப்பாடு எதனையும் கொண்டுள்ள ஒழித்துக் கட்டலிலுள்ள கம்பெனியொன்று எனப் பொருள்படும்;

"அதிகாரசபை" என்பது கடனிறுக்கவகையின்மை ஒழுங்குபடுத்தற் அதிகாரசபை என பொருள்படும்;

“வங்கி” என்பது 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழில் சட்டத்தின் கருத்தினுள்ளான உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி அல்லது உரிமமளிக்கப்பட்ட விசேடத்துவம்பெற்ற வங்கி எனப் பொருள்படும்;

“வங்கிக் கணக்கு” என்பது வங்கியில் வைத்திருக்கும் கணக்கொன்று எனப் பொருள்படும்;

“வங்கிமுறிவு நடவடிக்கைமுறை தொடர்பிலான “வங்கிமுறிவு கடனாளி” என்பது எக்கடனாளி தொடர்பில் வங்கிமுறிவுக் கட்டளை ஆக்கப் பட்டுள்ளதோ அக்கடனாளி எனப் பொருள்படும்;

“வங்கிமுறிவு நம்பிக்கைப்பொறுப்பாளர்” என்பது 98 ஆம் பிரிவின் கீழ் வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்ட ஆளொருவர் எனப் பொருள்படும்;

“தொடங்குதல்” என்பது –

(அ) கம்பெனியொன்றின் நிருவாகம் தொடர்பில் 179 ஆம் பிரிவின்கீழ் அதற்கு வழங்கப் பட்ட பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

(ஆ) கம்பெனியொன்றின் உறுதி நிருவாகம் தொடர்பில் 228 (2) ஆம் பிரிவில் அதற்கு வழங்கப்பட்ட பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

(இ) வங்கிமுறிவு தொடர்பில் 92 ஆம் பிரிவின் கீழ் அதற்கு வழங்கப்பட்ட பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

(ஈ) கம்பெனியொன்றின் ஒழித்துக்கட்டுதல் தொடர்பில் 297 ஆம் பிரிவின்கீழ் அதற்கு வழங்கப்பட்டுள்ள பொருளைக்கொண் டிருத்தல் வேண்டும்;

(உ) கம்பெனி ஒன்றின் தற்காலிக ஒழித்துக் கட்டுதல் என்பது 304 (3) ஆம் பிரிவின்கீழ் அதற்கு வழங்கப்பட்டுள்ள பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

(ஊ) கம்பெனியொன்றின் ஆதனத்தின் பெறுநராண்மை தொடர்பில், 369 ஆம் பிரிவின்கீழ் அதற்கு வழங்கப்பட்டுள்ள பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"கம்பெனிகள் சட்டம்" என்பது 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டம் எனப் பொருள்படும்;

"கம்பெனி" என்பது கம்பெனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனி அல்லது ஏலவேயுள்ள கம்பெனியொன்று என பொருள்படும்; அத்துடன் :-

(அ) கம்பெனிகள் சட்டத்தின் XI ஆம் பாகத்தின் நோக்கங்களுக்காக கரை கடந்த கம்பெனி களை உள்ளடக்கியுள்ளது; ஆனால்

(ஆ) இரண்டாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள உருவகங்களின் வகைகளை விலக்களித் துள்ளது;

"சம்பந்தப்பட்ட திறத்தவர்" என்பது மூன்றாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள முறையில் வேறொரு ஆளுடன் சம்பந்தப்பட்டவரான ஆள் ஒருவர் எனப் பொருள்படும்;

"அரசியலமைப்பு பேரவை" என்பது அரசிய லமைப்பின் உறுப்புரை 41அ என்பதன்கீழ் தாபிக்கப்பட்ட அரசியலமைப்புப் பேரவை எனப் பொருள்படும்;

"கம்பெனி தொடர்பிலான உதவுத் தொகை" –

(அ) என்பது –

(i) கம்பெனியொன்றின் பங்குதாரர் ஒவ் வொருவரும் மற்றும் சட்டத் தொழிற் பாட்டின் மூலம் பங்கொன்று வழங்கப் பட்ட ஒவ்வொரு ஆள் ஒவ்வொருவரும்; அத்துடன்

(ii) கம்பெனியொன்றின் ஒழித்துக் கட்டலின் பட்சத்தில், அதன் சொத்துக்களுக்கு பங்களிப்பு செய்வதற்கான வேறு ஆள் ஒவ்வொருவரும்; அத்துடன்

(ஆ) உதவுதொகை செலுத்துநர்களாகவுள்ள ஆட்களின் தீர்மானத்துக்கான எல்லா நடவடிக்கைகள் மற்றும் இறுதித் தீர்மானத்துக்கு முன்னரான எல்லா நடவடிக்கைகள் என்பவற்றின் நோக்கங்களுக்காக, (அ) என்னும் பந்தியின் கருத்தெல்லையினுள் உதவு தொகை செலுத்துநரொருவராகக் குற்றஞ் சாட்டப்பட்ட எவரேனும் ஆளை உள்ளடக்கு கின்றது;

“கட்டுப்பாடு” என்பது ஆள் ஒருவரின் மூலதனத்தில் ஐம்பது சதவீதத்திற்கு மேற்பட்ட ஒன்றில் நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமலோ உரிமைத்துவத்தைக் கொண்ட அல்லது தத்துவம், உரிமை அல்லது ஆற்றல் பணிப்பதற்கு அல்லது முகாமைத்துவத்தின் பணிப்புரையை ஏற்படுத்துவதற்கு, ஆள் ஒருவரின் கொள்கைகள் அல்லது நடவடிக்கைகள், இவற்றை, நியதிச் சட்டம் அல்லது ஏதேனும் எழுதப்பட்ட சட்டம் அல்லது ஒப்பந்தம், வாக்கெடுப்பு மூலதனம் உரிமைத்துவம், அல்லது வேறு விதமாக உரிமைத்துவத்தை கொண்டிருத்தல் எனப் பொருள்படும்;

“கடன்கொடுநர்” என்பது, கம்பெனியொன்று அல்லது தனி ஆளொருவர் கடன் கொடுக்க வேண்டியவர் அல்லது பொறுப்புக்குள்ளானவர் நிகழ்காலத்திலோ அல்லது எதிர்காலத்திலோ உறுதியானதாக விருந்தாயினுஞ்சரி அல்லது எதிர்பராததாயிருந்தாலுஞ்சரி மற்றும் பாதிப்புகளுக்காக செலுத்தப்படவேண்டிய கடப்பாடுகளை உள்ளடக்கியதாக காணப்படுகின்றது;

தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நடவடிக்கை முறை தொடர்பில் “கடனாளி” என்பது :–

(அ) தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை கட்டளை ஆக்கப்படுவதற்கு முன்னர், விண்ணப்பமொன்று, மனுவொன்று அல்லது பிரேரணையொன்று செய்யப் படுதல் அல்லது தயாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில் அது தொடர்பிலான தனி ஆள்; அத்துடன்

(ஆ) தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை கட்டளை ஆக்கப்பட்ட பின்னர் எவ்வாள் தொடர்பில் கட்டளையாக்கப்பட்டதோ அவ்வாள் எனப் பொருள்படும்;

“உறுதி நிருவாகம்” என்பது IX ஆம் பாகத்தின் கீழான உறுதி நிருவாகம் எனப் பொருள்படுமென்பதுடன் “உறுதி நிருவாகி” என்பதுடன் நேரொத்த பொருளைக் கொண்டிருத்தலும் வேண்டும்;

“கம்பெனி தொடர்பில் பணிப்பாளர்” என்பது பின்வரு வனவற்றை உள்ளடக்குகின்றது :-

(அ) கம்பெனியொன்றின் பணிப்பாளர் பதவியை வகிக்கின்ற ஆளொருவர், எப்பெயரில் அழைக்கப்பட்ட போதும்; அத்துடன்

(ஆ) “சம்பந்தப்பட்ட திறத்தவர்” என்னும் வரைவிலக்கணத்தின் நோக்கங்களுக்காகவும் 9, 182, 313, 371, 440 மற்றும் 442 ஆம் பிரிவுகளின் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது :-

(i) எந்த ஆளின் பணிப்புரைகள் அல்லது அறிவுறுத்தல்களுக்கிணங்க (அ) எனும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆள் ஒருவர் செயலாற்றுவதற்கு தேவைப் படுத்தப்பட்டிருக்கலாம் அல்லது பழக்கப் படுத்தப்பட்டிருக்கலாம்;

(ii) எந்த ஆளின் பணிப்புகள் அல்லது அறிவுறுத்தல்களுக்கிணங்க கம்பெனியின் சபை செயலாற்றுவதற்கு தேவைப் படுத்தப்பட்டிருக்கலாம் அல்லது பழக்கப் படுத்தப்பட்டிருக்கலாம்;

(iii) கம்பெனியின் அகவிதிகளுக்கு புறம்பாக சபையினால் பிரயோகிப்பதற்கு தேவைப் படுத்தப்பட்ட பிரயோகிக்கின்ற ஆள் அல்லது பிரயோகிப்பதற்கு உரித்துடைய அல்லது கட்டுப்படுத்துகின்ற அல்லது கட்டுப்படுத்துவதற்கு உரித்துடைய தத்துவங்களை பிரயோகிப்பதற்கு கட்டுப் படுவதற்கு உரித்துடையவரான ஆள்;

ஆனால், தொழிலாண்மை ஆற்றலில் மற்றும் அத்தகைய ஆள்; அந்த அளவிற்கு செயற்படு வாராயின் மற்றும் அந்த அளவுக்கு செயற்படு வாராயின், அத்தகைய ஆளுக்கு ஏற்புடையதாத லாகாது;

“வில்லங்கம்” என்பது, ஒவ்வொரு வகையான பிணைப் பொறுப்பு என்று பொருள்படும்;

“கம்பெனி அல்லது தனியாளின் ஆதனம் மீதான வில்லங்கம் தொடர்பிலான வலுவுறுத்தல்” என்பது பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது :-

(அ) மிதவை விதிப்பனவொன்றை நிரந்தர விதிப் பனவாக மாற்றுதல் பற்றிய அறிவித்தலை வழங்குதல்;

(ஆ) வில்லங்கத்தை வலுவுறுத்தல் என்ற வழி மூலம் கம்பெனியின் அல்லது தனியாளின் ஆதனத்தின் உடைமையில் அல்லது கட்டுக் காப்பில் அல்லது கட்டுப்பாட்டினை ஊகிப்பதில் ஈடுபடுதல்;

(இ) வில்லங்கத்தை வலுவுறுத்தல்மூலம் 372ஆம் பிரிவின கீழ், சாதனத்தின் கீழ், கம்பெனி அல்லது தனியாளின் ஆதனத்தின் பெறுநர் ஒருவரை நியமித்தல்;

(ஈ) வில்லங்கத்தை வலுவுறுத்துவதன் மூலம் கம்பெனி அல்லது தனியாளின் ஆதனத்தின் பெறுநரின் நியமனத்துக்காக 373 ஆம் பிரிவின் கீழ் நீதிமன்றத்துக்கு விண்ணப் பித்தல்;

(உ) வில்லங்கத்தினை வலுவுறுத்தல் என்ற வழிமூலம் நியமனம்பெற்றவர் ஒருவரை நியமித்தல் நியமனம் பெற்ற ஒருவரின் நியமனத்துக்காக நீதிமன்றத்துக்கு விண்ணப் பித்தல்;

(ஊ) கம்பெனி அல்லது தனியாள் ஒருவரின் ஆதனத்தின் உடமைக்கு அல்லது கட்டுக் காப்புக்கு அல்லது கட்டுப்பாட்டினை ஊகிப்பதில் ஈடுபடுவதற்காக ஆள் ஒருவரை நியமித்தல், இவர் வில்லங்கத்தின் வலுவுறுத்தல் என்ற வழிமூலம் பின்வருவன வற்றின் முகவராக இருக்கலாம் :-

(i) வில்லங்கத்தின் கொடைபெறுநர்; அல்லது

(ii) கம்பெனி அல்லது தனியாள்;

(எ) வில்லங்கத்தின் கொடைபெறுநராக அல்லது பெறுநராக அல்லது அவ்வாறு நியமிக்கப் பட்ட ஆளொருவராக வில்லங்கத்தின் காரணமாக ஏலவேயுள்ள உரிமை அல்லது பரிகாரம் என்பன சட்டவாக்கத்தின் கீழ் அல்லது வேறுவகையாக சாதனத்தின் கீழ் எழுந்தாலுஞ்சரி அவற்றைப் பிரயோகித்தல்; அத்துடன்

(ஏ) 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கி களினால் கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின்கீழ் தனிசொன்றை அறவிடுவதற்கான நோக்குடன் நடவடிக்கை யொன்றை எடுத்தல்;

“அத்தியவசியமான பண்டம் அல்லது சேவைகள்” என்பது –

(அ) மின்சாரம்;

(ஆ) இயைபான தகவல் தொழில்நுட்பம்;

(இ) தொலைத்தொடர்பாடல் சேவைகள்; அத்துடன்

(ஈ) நீர்;

எனப் பொருள்படும்;

"பிசுக்கால்" என்பது, எழுத்தாணை அல்லது வேறு சட்ட செயன்முறையை நிறைவேற்றுவதற்கு பொறுப்பிக்கப்பட்ட எவரேனும் அலுவலரை உள்ளடக்குகின்றது;

"மிதக்கும் விதிப்பனவு" என்பது கம்பெனிகள் சட்டத்தின் 427 (1) ஆம் பிரிவின் கருத்தினுள் வருகின்ற மிதக்கின்ற விதிப்பனவாக உருவாக்கப் பட்ட போதான விதிப்பனவு எனப் பொருள்படும்;

"பண்டங்கள்" என்பது ஒவ்வொரு வகையினதான தொட்டு உணரக்கூடிய, அசையும் ஆதனம் எனப் பொருள்படும்;

வில்லங்கம் ஒன்றை உருவாக்குகின்ற சாதனம் தொடர்பில் "கொடை பெறுநர்" என்பது, சாதனத்தின் நன்மைக்கு உரித்துடையவரான ஆள் எனப் பொருள்படும்;

"வாடகைக் – கொள்வனவு உடன்படிக்கை" என்பது நிபந்தனையுடனான விற்பனை உடன்படிக்கையொன்று, தட்டுமுட்டு பொருள் குத்தகைக்கு விடுதல் ஒழுங்கேற்பாடு, நிதிக்குத்தகை அல்லது உரித்து உடன்படிக்கையை தக்கவைத்தல் என்பவற்றை உள்ளடக்குகின்றது;

"கடனிறுக்கவகையின்மை வைத்திருப்பு கணக்கு" என்பது 431 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட கணக்கொன்று எனப் பொருள்படும்;

"கடனிறுக்கவகையின்மை தொழிலர்" என்பது பாகம் I இன் 3 ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளின் கீழ் அதிகாரசபையுடன் பதிவு செய்யப்பட்ட ஆளொருவர் எனப் பொருள்படும் ;

"கடனிறுக்கவகையின்மை மிகைசேர் கணக்கு" என்பது 431 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட கணக்கு என பொருள்படும்;

"தனியாள்; ஒருவர் தொடர்பில் "கடனிறுக்க வகை யற்றவர்" என்பது 409 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவில் தரப்பட்ட பொருளைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் கம்பெனியொன்று 409 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் அதற்கு

தரப்பட்டுள்ள பொருளைக் கொண்டிருத்தலும் வேண்டும்;

கம்பெனி தொடர்பில் “ஈடுபட்ட திறத்தவர்”; என்பது பின்வருமாறு பொருள்படும் :–

(அ) கம்பெனியின் உருவாக்கம், மேம்பாடு அல்லது முகாமைத்துவத்தில் பங்குபற்றி யுள்ளவரான ஆள் ஒருவர்;

(ஆ) கம்பெனியின் கடந்த கால அல்லது தற்போதுள்ள பங்குதாரரொருவர்;

(இ) கம்பெனியின் கடந்தகால அல்லது தற்போதுள்ள பணிப்பாளர் அல்லது வேறு அலுவலர்;

(ஈ) கம்பெனியின் ஆதனம் தொடர்பில் கடந்தகால அல்லது தற்போதுள்ள நிருவாகி, உறுதி நிருவாகி, ஒழிப்போன், விசேட முகாமையாளர், ஆதனத்தின் பெறுநர் அல்லது ஆதனம் தொடர்பில் நியமிக்கப் பட்டவர்; அல்லது;

(உ) நிருவாகி, உறுதி நிருவாகி, ஒழிப்போன், விசேட முகாமையாளர், ஆதனத்தின் பெறுநர் அல்லது கம்பெனியின் ஆதனம் தொடர்பில் நியமிக்கப்பட்டவர் என்போராக கருதப்படு கின்ற அல்லது கருதப்பட்ட எவரேனும் ஆள்;

“பிரதான பதவி வகிப்பவர்” என்பது வங்கிமுறிவு நம்பிக்கைபொறுப்பாளர், தனிப்பட்ட கடனிறுக்க வகையின்மை நிருவாகி, தனிப்பட்ட கடனிறுக்க வகையின்மை பிரேரணையாளர், நிருவாகி, ஒழிப்போன், தற்காலிக ஒழிப்போன் அல்லது பெறுநர் எனப் பொருள்படும்;

“சட்ட நடவடிக்கைகள்” என்பது பாகம் II முதல் VIII வரையிலான நோக்கங்களுக்காக இயைபான விடத்து, மத்தியஸ்தம் மற்றும் நடுத் தீர்ப்புகள் என்பவற்றை உள்ளடக்குகின்றது;

“ஒழித்துக்கட்டுதல்” என்பது பாகம் XII இன் கீழ் ஒழித்துக்கட்டுதல் எனப் பொருள்படுமென்பதுடன் “ஒழிப்போன்” என்பது, நேரொத்த பொருளை கொண்டிருத்தலும் வேண்டும்;

“ஒழித்துக்கட்டுதல் உதவிதொகை வழங்குநர்களின் குழு” என்பது 309 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப் பட்ட குழு ஒன்று என பொருள்படும்;

“ஒழித்துக்கட்டுதல் கடன்கொடுநர்கள் குழு” என்பது 308 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட குழு வொன்று எனப் பொருள்படும்;

“அமைச்சர்” என்பது அரசியலமைப்பின் 44 ஆம் அல்லது 45 ஆம் உறுப்புரையின் கீழ் மீட்பு, புனர்வாழ்வு, மற்றும் கடனிறுக்கவகையின்மை (கூட்டிணைப்பு மற்றும் தனிப்பட்ட) ....... ஆம் இலக்க சட்டத்தின்கீழ் என்னும் நிருவாகம் குறித்தளிக்கப்பட்டுள்ள அமைச்சர் எனப் பொருள் படும்;

“பதவி வகிப்பவர்” என்பது வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாளர், தனிப்பட்ட கடனிறுக்கவகை யின்மை நிருவாகி, தனிப்பட்ட கடனிறுக்கவகை யின்மை பிரேரணையாளர், நிருவாகி, உறுதி நிருவாகி, ஒழிப்போன் தற்காலிக ஒழிப்போன் அல்லது பெறுநர் எனப் பொருள்படும்;

கூட்டிணைக்கப்பட்ட குழு தொடர்பிலான, “அலுவலர்” என்பது பணிப்பாளர், செயலாளர், சிரேட்ட முகாமைத்துவக் குழுவின் நிறைவேற்றுநர் அல்லது உறுப்பினர் என்போரை உள்ளடக்கு கின்றது;

“தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நிருவாகி” என்பது IX ஆம் பாகத்தில் 3 ஆம் அத்தியாயத்தில் குறிப்பீடுசெய்யப்பட்ட பதவி எனப் பொருள்படும்;

"தனிப்பட்ட கடனிறுக்க வகையின்மை உத்தியோகத்தர்" என்பது வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாளர் ஒருவர், அதிகாரமளிக்கப்பட்ட இடையீட்டாளர், தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நிருவாகி, தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை பிரேரணையாளர் அல்லது உத்தியோக பூர்வ பெறுநர் என பொருள்படும்;

"தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை கட்டளை" பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது :–

(அ) தனிசுப் பாதுகாப்பு கடன் தீர்ப்பு பிற்போடல் கட்டளை;

(ஆ) தனிப்பட்ட தனிசு மீள் கட்டமைப்பு ஒழுங்கேற்பாடுகள் நடைமுறைக்கு வருவதை உறுதிப்படுத்துகின்ற கட்டளையொன்று;

(இ) தனிசுப் புனர்வாழ்வு கட்டளை; அத்துடன்

(ஈ) வங்கிமுறிவுக் கட்டளையொன்று;

"தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை வழக்குநடவடிக்க" என்பது பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது :-

(அ) III ஆம் பாகத்தின் கீழான தனிப்பட்ட தனிசுப் பாதுகாப்பு கடன் தீர்ப்பு பிற்போடல் நடவடிக்கைமுறை;

(ஆ) IV ஆம் பாகத்தின் கீழான தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடு நடவடிக்கை முறை;

(இ) V ஆம் பாகத்தின் கீழ் தனிசு புனர்வாழ்வுக் கட்டளை நடவடிக்கைமுறை;

(ஈ) VI ஆம் பாகத்தின் கீழான வங்கிமுறிவு நடவடிக்கை முறை;

"தனிப்பட்ட கடனிறுக்கவகையற்ற பிரேரணையாளர்" என்பது, பிரிவு 49 இல் குறிப்பீடு செய்யப்பட்ட பதவி எனப் பொருள்படும்;

கம்பெனியொன்று தொடர்பிலான “முன் நிருவாக செலவுகள்” என்பது கம்பெனி நிருவாகத்தில் ஈடுபடுவதற்கு முன்னர் மற்றும் அத்தகைய நிருவாகத்தில் ஈடுபடுவதற்கான நோக்குடன் மற்றும் 178 ஆம் பிரிவின் (ஈ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட குறிக்கோள்களை எய்து வதனை முன்னெடுப்பதற்காகவும் உறப்பட்ட செலவுகள், விதிப்பனவுகள் மற்றும் செலவினங்கள் மற்றும் நிருவாகியின் ஊதியம் எனப் பொருள் படும்;

“முந்துரிமை உரிமைக்கோரிக்கை” என்பது, நான்காம் அட்டவணையின் பந்திகள் 1, 2 அல்லது 8 இல் குறிப்பீடுசெய்யப்பட்ட உரிமைக் கோரிக்கை எனப் பொருள்படும்;

“விதித்துரைக்கப்பட்டது” என்பது, ஒழுங்கு விதியினால் விதித்துரைக்கப்பட்டவை என பொருள்படும்;

“ஆதனம்” என்பது, எல்லா வகையான ஆதனம், உண்மையான அல்லது தனிப்பட்ட, தொட்டு உணரக்கூடிய அல்லது தொட்டு உணர முடியாத மற்றும் அல்லது எதிர்காலத்திலாயினுஞ்சரி, நிச்சயமானதாயினுஞ்சரி அல்லது எதிர்பாராதா யினுஞ்சரி அல்லது இடைநேர்விளைவானதாக வாயினுஞ்சரியான ஒவ்வொரு வகையான அக்கறைகளையும் உள்ளடக்கு கின்றது;

“பெறுநராண்மையிலுள்ள ஆதனம்” என்பது, பெறுநர் ஒருவர் நியமிக்கப்பட்டமை தொடர்பிலான ஆதனம் எனப் பொருள்படும்;

“தற்காலிக ஒழித்துக்கட்டுதல்” என்பது XII ஆம் பாகத்தின் கீழான தற்காலிக ஒழித்துக்கட்டுதல் எனப் பொருள்படும் என்பதுடன் “தற்காலிக ஒழிப்போன்” என்பது நேரொத்த பொருளைக் கொண்டிருத்தலும் வேண்டும்;

"பெறுநர்" என்பது, (இச்சட்டத்தின்கீழ் பின்வருவன வற்றின் மூலம் நியமிக்கப்பட்ட சொல்லமைப்பு தேவைப்படுத்தப்பட்டவாறானவர்களான அல்லது இருக்கக் கூடியவர்களான ஏதேனும் ஆதனத்தின் பெறுநர் அல்லது முகாமையாளர் ஒருவர் அல்லது பெறுநரும் முகாமையாளரும் விடயத்துக்கேற்ப, ஏதேனும் அத்தகைய ஆதனத்தை விற்பதற்கு அவ்வாள் தத்துவமளிக்கப்பட்டிருத்தலுஞ்சரி அல்லது இல்லையாயினுஞ்சரி எனப் பொருள்படு மென்பதுடன் "பெறுநராண்மை" என்பது நேரொத்த பொருளைக் கொண்டிருத்தலும் வேண்டும்;

(அ) சாதனம் ஒன்றின் கீழ்; அல்லது

(ஆ) நீதிமன்றத்தினால்;

"பதிவாளர்" என்பது, கம்பெனிகள் சட்டத்தில் அதற்கென அளிக்கப்பட்ட பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"தொடர்புபட்ட கம்பெனி" என்பது, ஏதேனும் கம்பெனி தொடர்பில் பின்வருவனவற்றை கொண்டிருத்தல் எனப் பொருள்படும் :-

(அ) நேரடியாக அல்லது நேரடியற்ற முறையில் அத்தகைய முதலாவது கம்பெனியினால் கட்டுப்படுத்துகின்ற, கட்டுப்படுத்தப்பட்ட அல்லது பொதுவான கட்டுப்பாட்டின் கீழான வேறு ஏதேனும் கம்பெனி; அத்துடன்

(ஆ) அப்போதைக்கு வலுவிலுள்ள இலங்கை கணக்கீட்டு நியமங்களின் நியதிகளின் படி முதலாவது கம்பெனியின் இணைந்த கம்பெனி யொன்றாகக் கருதப்படக்கூடியதான வேறு ஏதேனும் கம்பெனி;

“இயைபான தேதி” என்பது,

(அ) நிருவாகத்தினால் உடனடியாக முற்போந்த நிருவாகம் அல்லது ஒழித்துக்கட்டுதல் எனும் சந்தர்ப்பத்தில், நிருவாகத்தின் தொடக்கத் தேதி;

(ஆ) நிருவாகத்தினால் உடனடியாக முற்போந்த ஒழித்துக்கட்டுதல் எனும் சந்தர்ப்பத்தில், ஒழித்துக்காட்டுதல் தொடங்கும் தேதி; அத்துடன்

(இ) பெறுநராண்மை எனும் சந்தர்ப்பத்தில், பெறுநராண்மை தொடங்கும் திகதி;

“இயைபான தகவல் தொழில்நுட்பம்” என்பது :–

(அ) கணினி வன்பொருள் மற்றும் மென் பொருள்;

(ஆ) கிளவுட் சேவைகள் உள்ளடங்கலாக, தரவுக் களஞ்சியம் மற்றும் செயன்முறைப்படுத்தல்;

(இ) தகவல் தொழில்நுட்பத்தை பயன் படுத்துவது தொடர்பிலான தகவல்கள், மதியுரைகள் மற்றும் தொழில்நுட்ப உதவி;

(ஈ) விற்பனை செய்யப்படும் இடங்கள்; அத்துடன்

(உ) வலைத்தளப் பேணல்;

“மாற்றீட்டு நிருவாகி” என்பது, நிருவாகி ஒருவரை மாற்றீடு செய்வதற்காக X ஆம் பாகத்தின் 11 ஆம் அத்தியாயத்தின் கீழ் சந்தர்ப்பம் தேவைப்படுத்து கின்றதான நியமிக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட வுள்ள நிருவாகி ஒருவர் என்று பொருள்படும்;

“மாற்றீட்டு உறுதி நிருவாகி” என்பது, உறுதி நிருவாகி யொருவரை மாற்றீடு செய்வதற்காக IX ஆம் பாகத்தின் கீழ் சந்தர்ப்பம் தேவைப்படுத்தப்படு கின்றதான நியமிக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட விருக்கின்ற உறுதி நிருவாகி என்று பொருள்படும்;

"மாற்றீட்டு ஒழிப்போன்" என்பது, ஒழிப்போனை மாற்றீடு செய்வதற்காக XII ஆம் பாகத்தின் கீழ் சந்தர்ப்பம் தேவைப்படுத்தப்படுகின்றதான நியமிக்கப்பட்ட அல்லது நியமிக்கப்படவேண்டிய தான ஒழிப்போன் என்று பொருள்படும்;

"மாற்றீட்டுப் பெறுநர்" என்பது, பெறுநரொருவரை மாற்றீடுசெய்வதற்கான பாகம் XIII இன்கீழ் நியமிக்கப்பட்ட சொல்லமைப்பு தேவைப்படுத்தப் பட்டவரான அல்லது தேவைப்படுபவரான பெறுநர் ஒருவர் எனப் பொருள்படும்;

"பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கடன்கொடுநர்" என்பது, வில்லங்கத்தின் நன்மையைக் கொண்டிருக்கின்றவரான கடன்கொடுநர் எனப் பொருள்படும்;

கம்பெனி ஒன்று தொடர்பில், "பங்குதாரர்" என்பது, கம்பெனிகள் சட்டத்தின் 86 ஆம் பிரிவின் கருத்தெல்லையினுள் வருகின்ற பங்குதாரர் எனப் பொருள்படும்;

"நியதிச்சட்ட கோரல்" என்பது, நிலுவையிலுள்ள தொகையொன்றை செலுத்துவதற்கு கம்பெனி யொன்றைத் தேவைப்படுத்துகின்ற விதித்துரைக் கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலான எழுத்திலான கோரிக்கை என்று பொருளாகும்;

"தொலைத்தொடர்பாடல்கள் சேவைகள்" என்பது, ஒரு கருவியிலிருந்து மற்றொரு கருவிக்கு கம்பி மூலமாக, வானொலி அலைவரிசை, செய்மதி பரிமாற்றம் அல்லது ஏனைய சமிக்ஞை மூலமாக, குறிப்பலை மூலமாக, கணத்தாக்கம் மூலமாக, கம்பி, உருவம், ஒலி, அறிவுறுத்தல், தகவல் அல்லது ஏதேனும் புலனாய்வு தன்மை கொண்ட, கருவியை பயன்படுத்துகின்ற ஆள் தகவல்களுக்காக அல்லது தகவல் அல்லாத முறையில் பரிமாறுதல் என பொருள்படும்;

"குறை பெறுமதியிலான கொடுக்கல் வாங்கல்கள்" என்பது, 418 ஆம் பிரிவில் அதற்கு வழங்கப்பட்ட பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"கோரப்படாத மூலதனம்" என்பது, பங்குகளை வழங்குதல் தொடர்பில் அல்லது கம்பெனியின் அமைப்பக விதிகளின் கீழ் செலுத்தப்படற்பால தான ஏதேனும் தொகையை உள்ளடக்குகின்றது;

"வறிதாக்கத்தக்க கொடுக்கல்வாங்கல்" என்பது :–

(அ) வறிதாக்கத்தக்க முந்துரிமையொன்று;

(ஆ) வறிதாக்கத்தக்க வில்லங்கமொன்று; அல்லது

(இ) உட்கருதப்பட்டதான பராதீனப்படுத்தலொன்று;

முறையே 412, 413 மற்றும் 414 ஆம் பிரிவுகளின் கீழ் அவற்றுக்கு வழங்கப்பட்ட பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"வேலை நாள்" என்பது, சனிக்கிழமை, ஞாயிற்றுக் கிழமை அல்லது பொது விடுமுறை தவிர்ந்த நாள் எனப் பொருள்படும்.

(2) இச்சட்டத்தில் -

(அ) கம்பெனியின் ஆதனமொன்றின் முழுமையான அல்லது பொருளளவில் முழுமையானதன் மீதான வில்லங்கமொன்றுக்கான குறிப்பீடு மற்றும் கம்பெனியொன்றின் ஆதனம் மற்றும் பொறுப்பு முயற்சி பற்றி முழுமையான அல்லது பொருளளவில் முழுமையானவற்றுடன் சேர்த்து கம்பெனியின் ஆதனம் அவ்வில்லங்கங் களுக்கமையுமிடத்து, கம்பெனியின் ஆதனம் மீதான ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வில்லங்கங்களுக்கான குறிப்பீடுகளை உள்ள டக்கிய பொறுப்பு முயற்சி; அத்துடன்

(ஆ) உத்தியோகபூர்வ பெறுநருக்கான 8 ஆம் பிரிவிலுள்ள குறிப்பீடுகள் தவிர, அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவின் கீழ் உத்தியோகபூர்வ பெறுநரின் சார்பாக செயலாற்றுகின்ற அல்லது

அவரின் இடத்தில் கடமையாற்றுகின்ற பிரதி உத்தியோகபூர்வ பெறுநருக்கான குறிப்பீடு களை உள்ளடக்கியுள்ளது.

(3) (அ) இச்சட்டம் நிகழ்வு அல்லது விடயத்துக்கான குறிப்பீடொன்று அதனது மெய்நிகர் அல்லது எண்ணிமத்திலான சமானத்தை பின்வருமாறு பொருள்கோடல் செய்யப்பட்டு ஏற்புடமை யாக்கப்படுதலும் வேண்டும் :-

(i) புத்தகம், ஆவணம், பதிவேடுகள் அல்லது அதனை ஒத்ததான இலத்திரனியல் வடிவத்தில் உள்ள தரவுகள் மற்றும் தகவல்கள் என்பவற்றுக்கான குறிப்பீடுகள்;

(ii) புத்தகங்கள், ஆவணங்கள், பதிவேடுகள் ஆதனம் அல்லது அதனை ஒத்தவைகள் தொடர்பான “விநியோகம்” அல்லது “கிடைக்கச் செய்தல்” என்பவற்றுக்கான குறிப்பீடுகள் அவற்றின் அணுகுகையை அளித்தல் மற்றும் அனுப்புதல் என்ப வற்றின் குறிப்பீடுகள்;

(iii) “எழுதுதல்” என்பதற்கான குறிப்பீடுகள் ஏதேனும் இலத்திரியல் வழிவகைகள் மூலம் வரைபட தொடர்பாடலை உள்ளடக்கியிருத்தல்;

(iv) “விளம்பரம்” அல்லது “அறிவித்தல்” என்ப வற்றுக்கான குறிப்பீடுகள் எழுத்தில் பயனுறுவதற்கு அவசியமானவிடத்து, அறிவிக்கப்படும் அதிகாரசபையினால் அந்நோக்கத்துக்காக ஏற்பாடு செய்யப் படும் ஒன்று உள்ளடங்கலாக அர்ப்பணிக் கப்பட்ட வலைத்தள மொன்றின் மீதான வெளியீட்டினை உள்ளடக்கியிருத்தல்; அத்துடன்

(ஆ) வேறு எவையேனும் சமமான தன்மைகள் காலத்துக்கு காலம் விதித்துரைக்கப்படலாம்.

# பாகம் I

## நிறுவன ரீதியான ஒழுங்கேற்பாடுகள்

### அத்தியாயம் 1

### கடனிறுக்கவகையின்மை ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை

கடனிறுக்க வகையின்மை ஒழுங்கு படுத்தும் அதிகார சபையைத் தாபித்தல்

**3.** (1) இச் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைப் பிரயோகிப்பதற்கு, புரிவதற்கு மற்றும் நிறைவேற்றுவதற்கு (இச்சட்டத்தில் “அதிகாரசபை” எனக் குறிப்பீடு செய்யப்படும்) “கடனிறுக்க வகையின்மை ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை என அழைக்கப்படும் மற்றும் அறியப்படும் அதிகாரசபையொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) அதிகாரசபையானது அதற்கு குறித்தளிக்கப்பட்ட பெயரினால் கூட்டிணைக்கப்பட்ட குழுவாக இருத்தல் வேண்டும் என்பதுடன் இடையறாவழியுரிமையையும் பொது இலச்சினை ஒன்றையும் கொண்டிருத்தலும் வேண்டும், அத்துடன் கூட்டிணைக்கப்பட்ட பெயரில் அது வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன் அதற்கு எதிராக வழக்கு தொடுக்கவும் படலாம்.

(3) அதிகாரசபையின் உறுப்பினர்கள் பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) பதவிவழி உறுப்பினர்கள் பின்வருமாறு பெயரிடப் பட்டுள்ளது:-

(i) நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது திறைசேரிக்கான பிரதிச் செயலாளர் எனும் பதவி வரிசைக்கு குறையாத அவரது நியமத்தர்;

(ii) நீதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது மேலதிகச் செயலாளர் எனும் பதவி வரிசைக்கு குறையாத அவரது நியமத்தர்;

(iii) வியாபாரம் மற்றும் வர்த்தகம் எனும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின்

அமைச்சுச் செயலாளர் அல்லது மேலதிகாரச் செயலாளர் என்னும் பதவி வரிசைக்கு குறையாத அவரது நியமத்தர்;

(iv) கம்பெனிகளின் பதிவாளர் அல்லது கம்பெனி களின் மேலதிகப் பதிவாளர் என்னும் பதவி வரிசைக்குக் குறையாத அவரது நியமத்தர்;

(v) 2021 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, பிணைப்பொறுப்புக்கள் மற்றும் பரிவர்த் தனை ஆணைக் குழுச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட இலங்கை பிணைப்பொறுப்புக்கள் மற்றும் பரிவர்த் தனையின் பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது பிரதிப் பணிப்பாளர் தலைமை யதிபதி என்னும் பதவிவரிசைக்குக் குறையாத அவரது நியமத்தர்;

(vi) 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 97 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட உண்ணாட்டர சிறை ஆணையாளர் தலைமையதிபதி அல்லது பிரதி ஆணையாளர் தலைமை யதிபதி என்னும் பதவி வரிசைக்குக் குறையாத அவரது நியமத்தர்;

(vii) 2023 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, மத்திய வங்கிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட மத்திய வங்கியின் ஆளுநர் அல்லது உதவி ஆளுநர் என்னும் பதவி வரிசைக்குக் குறையாத அவரது நியமத்தர்; அத்துடன்

(viii) (289 ஆம் அத்தியாயமான) வர்த்தக சம்மேளன கட்டளைச்சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் சபையினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட இரண்டு உறுப்பினர்களில் ஒவ்வொருவரும் மற்றும் முறையே தேசிய வர்த்தக சம்மேளனத்தின் சபை; அத்துடன்.

(ஆ) எழுபது வயதுக்கு குறைந்தவர்களும் (இதனகத் துப்பின்னர் “நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) மற்றும் வரிவிதிப்பனவு, கணக்கீடு, வங்கித்தொழில், தகவல் தொழிநுட்பவியல், சிவில், வர்த்தக அல்லது வர்த்தக சட்டம் என்னும் துறைகளில் எண்பிக்கத்தக்க அறிவு, அனுபவம் மற்றும் தேர்ச்சி என்பவற்றைக் கொண்டுள்ளவர்களும் மற்றும் தகுதி, நேர்மை, உயர் ஒழுக்கம் மற்றும் நன்மதிப்பினை கொண்டுள்ளவர்களான வர்களிடையேயிருந்து (5) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட ஏனைய ஐந்து உறுப்பினர்கள்.

(4) (அ) அரசியலமைப்புப் பேரவை இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதியிலிருந்து ஒரு மாதகாலத் தினுள் பின்வருவனவற்றில் அறிவித்தலொன்றை வெளியிடுவதன் மூலம் நியமிக்கப்பட்ட உறுப்பிர் களின் நியமனத்துக்கான விண்ணப்பங்களைக் கோருதல் வேண்டும்.

(i) வர்த்தமானியில்; அத்துடன்

(ii) பாராளுமன்ற உத்தியோகபூர்வ வலைத்தளம்;

(ஆ) நியமிக்கப்பட்ட உறுப்பினரின் எதிர்கால வெற்றிடம் தொடர்பில் அரசியலமைப்புப் பேரவை பின்வருவனவற்றில் அறிவித்தல் வெளியிடுவதன் மூலம் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களின் நியமனத்துக்கான விண்ணப் பங்களுக்காக எழுத்தில் அத்தகைய வெற்றிடம் அறிவிக்கப்பட்டதிலிருந்து ஒரு மாதத்தினுள் கோருதல் வேண்டும்:-

(i) வர்த்தமானியில்; அத்துடன்

(ii) பாராளுமன்ற உத்தியோகபூர்வ வலைத் தளத்தின்மீது.

(5) நான்காம் உட்பிரிவின் கீழ் விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றதன் மேல், அரசியலமைப்புப் பேரவை சனாதிபதிக்கு அதன் விதப்புரைகளை அனுப்புதல் வேண்டும். சனாதிபதி நியமிக்கப்பட்ட உறுப்பினர்களில் ஒருவரை

அவ்வாறு விதந்துரைக்கப்பட்ட ஆட்களை நியமிப்பதற்கு முன்னெடுத்தல் வேண்டுமென்பதுடன் அதிகாரசரபயின் தவிசாளராகவிருத்தலும் வேண்டும்.

(6) அதிகாரசபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் தொடர்பான ஏற்பாடுகள் மற்றும் அதிகாரசபையின் அலுவல்களின் முறையான நடைமுறைப்படுத்துகைக்கு அவசியமானவாறான அத்தகைய வேறு ஏற்பாடுகள் முதலாம் அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறாகவிருத்தல் வேண்டும்.

(7) அதிகாரசபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் ஒருப்பாட்டுடன் காலத்துக்குக்காலம் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய வீதங்களிலும் ஊதியம் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் அவர்களுடைய பதவிக்காலத்தின் போது குறைக்கப்படுதலுமாகாது.

அதிகாரசபையின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள்

**4.** (1) அதிகாரசபையின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள் என்பன பின்வருமாறு இருத்தல் வேண்டும் :-

(அ) இலங்கையில் தனியாட்கள் மற்றும் கம்பெனிகளின் கடனிறுக்கவகையின்மை தொடர்பிலான சட்டம் மற்றும் செயல்முறையை மீளாய்வின் கீழ் வைத்திருத்தல் மற்றும் அவசியமென கருதப்படும் எவையேனும் மாற்றங்கள் பற்றி அமைச்சருக்கு விதப்புரைகளை செய்தல்;

(ஆ) கடனிறுக்கவகையின்மை தொழிலர்களாக ஆட்களைப் பதிவு செய்தல், பதிவினை புதுப்பித்தல் மற்றும் பதிவினை இரத்துச் செய்தல் அல்லது இடைநிறுத்தல்;

(இ) கடனிறுக்கவகையின்மை, தொழிலர்கள் இடாப்பொன்றை வைத்திருத்தலும் பேணுதலும்;

(ஈ) பின்வருவன தொடர்பில் நிபந்தனைகளை விதித்தல் :-

(i) தனியாள் கடனிறுக்கவகையின்மை தொழிலர்கள்;

(ii) எல்லா கடனிறுக்கவகையின்மை தொழிலர்கள்; அத்துடன்

(iii) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட குறித்துரைக்கப்பட்ட வகுப்பினர்களான கடனிறுக்கவகையின்மை தொழிலர்கள்;

(உ) கடனிறுக்கவகையின்மை தொழிலர்களது திறன்களை மற்றும் நியமங்களை விருத்தி செய்வதற்கு இயைபான சகல தொழில் லாண்மைசார் குழுக்களுடனும் கூட்டிணைந்து பயிற்சிகளை விருத்தி செய்தல்;

(ஊ) கடனிறுக்கவகையின்மை தொழிலர்களாக பதிவு செய்துகொள்வதற்கென ஆளொருவர் இணங்க வேண்டியதான விதித்துரைக்கப்பட்ட முறையில் அத்தேவைப்பாடுகள் பற்றிய பட்டியலொன்றைப் பேணுதல், மற்றும் அத்தகைய தேவைப்பாடுகளுடனான இணக்கத் தன்மையை மதிப்பீடு செய்வதற்காக ஒழுங்கேற்பாடுகளைச் செய்தல்;

(எ) கடனிறுக்கவகையின்மை தொழிலர்கள் பற்றிய நடத்தை மற்றும் செயலாற்றுகை தொடர்பான விதிகள், நியமங்கள், ஒழுக்கக்கோவைகள் மற்றும் வழிகாட்டு நெறிகளை ஆக்குதல்;

(ஏ) இச் சட்டம், மற்றும் அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின் கீழ் செய்யப்படுவதற்கு அல்லது நிறைவேற்றப்படுவதற்கு தேவைப்படுத்தப்படும் ஏதேனும் செயல் அல்லது விடயம் தொடர்பில் நடைமுறை பணிப்புகள் மற்றும் வழிகாட்டு நெறிகளை ஆக்குதல்;

(ஐ) கடனிறுக்கவகையின்மை தொழிலர்களது நடத்தை மற்றும் செயலாற்றுகையைக் கண்காணித்தல்;

(ஒ) முறைப்பாடுகளை நிலைநிறுத்துமிடத்தான சந்தர்ப்பங்களில், பரிகாரங்கள் உட்பட கடனிறுக்கவகையின்மை தொழிலர்களுக்கு எதிராக முறைப்பாடுகளைப் பெற்றுக்கொள்ளுதல், கையாளுதல் மற்றும் தீர்மானித்தல் போன்ற நடவடிக்கை முறைகளை நிலைநாட்டுதல் மற்றும் பேணுதல்;

(ஓ) விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கமைவாக விதித்துரைக்கப்பட வேண்டியவாறான அத்தகைய ஏதுக்கள் மற்றும் அத்தகைய தன்மை என்பவற்றின் மீது கடனிறுக்கவகையின்மை தொழிலர்கள் பற்றிய ஒழுக்காற்று வலுவளிப்புகளை விதித்தல்;

(ஔ) கடனிறுக்கவகையின்மை தொழிலர்களை பதவி யிலிருந்து அகற்றுதல் மற்றும் தடைசெய்தற் கட்டளைகள் தொடர்பில் நீதிமன்றத்துக்கு விண்ணப்பங்களைச் செய்தல்;

(க) கடனிறுக்கவகையின்மை தொழிலரது நடத்தை மற்றும் செயலாற்றுகை தொடர்பில் நீதிமன்ற நடவடிக்கைகளில் பங்குபற்றுவதற்காக அதிகார சபையின் எவரேனும் அலுவலரைப் பணித்தல்;

(ங) உத்தியோகபூர்வ பெறுநரின் நடத்தை மற்றும் செயலாற்றுகையை கண்காணித்தல் மற்றும் இச் சட்டத்தின் கீழ் மற்றும் அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின்கீழ் உத்தியோகபூர்வ பெறுநரின் பணிகளின் செயலாற்றுகையுடன் தொடர்புடைய ஏதேனும் கருமம் மீதான கால ஒழுங்கு அறிக்கையிடலுக்கான விதித்துரைக்கப் பட்ட அட்டவணையுடன் கோரப்பட்ட அல்லது அதற்கிணங்க உத்தியோகபூர்வ அட்டவணையின் உத்தியோகபூர்வ பெறுநரிடமிருந்து அறிக்கை களைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் உத்தியோகபூர்வ பெறுநரது செயற்பாடுகள் வினைத்திறன்மிக்க செயலாற்றுகையுடன் தொடர்புடைய எவையேனும் தேவைகள் மற்றும் எவையேனும் வளங்கள் பற்றி உத்தியோகபூர்வ பெறுநரது நடத்தை மற்றும் செயலாற்றுகை பற்றி பதிவாளருக்கு அறிக்கையிடல்;

(ச) வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாளர், அதிகாரமளிக்கப்பட்ட இடையீட்டாளர், தனிப் பட்ட கடனிறுக்கவகையின்மை நிருவாகி, தனிப் பட்ட கடனிறுக்கவகையின்மை பிரேரணை யாளர், நிருவாகி, உறுதி நிருவாகி, ஒழிப்போன்,

தற்காலிக ஒழிப்போன் அல்லது பெறுநர் ஆகியோர் தமது வகிபாகத்தை நிறைவேற்றுவது தொடர்பான விதிகள், நியமங்கள் மற்றும் வழிகாட்டு நெறிகளை வழங்குதல்;

(ஞ) தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை இடாப்பினை நிலைநாட்டி பேணுதல்;

(ட) தனிப்பட்டவர்கள் மற்றும் கம்பெனிகள் பற்றிய கடனிறுக்கவகையின்மை விடயங்களில் ஆராய்ச்சி மேற்கொள்ளல், கற்கைகளை ஆரம்பித்தல், தகவல்களை பரப்புதல், பொதுக் கல்வியை வழங்குதல்;

(ண) தனது பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமாகவிருக்கக்கூடியவாறான உள்நாட்டு மற்றும் சர்வதேச உருவகங்களுடன் தொடர்பாடல்கள் மற்றும் இணைவுகள் என்பவற்றை நிலைநாட்டி பேணுதல்;

(த) அதிகாரசபையின் தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகள் என்பவற்றை செயலாற்றுவதற்கும் நிறைவேற்றுவதற்கும் அவசியமாகவிருக்கக் கூடியவாறான புள்ளிவிபரங்கள் மற்றும் தரவுகள் ஆகியவற்றை தொகுத்து பேணுதல்;

(ந) அதிகாரசபையின் வினைத்திறன்மிக்க நிருவாகம் மற்றும் பணிகள் என்பவற்றுக்கு தேவைப்படுகின்றவாறான குழுக்களை தாபித்தல் மற்றும் அத்தகைய குழுக்களுக்கு அவசியமானவாறான அத்தகைய தத்துவங்கள் மற்றும் பணிகளை கையளித்தல்; அத்துடன்

(ப) இச்சட்டத்தின்கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்கு விதியின்கீழ் அதிகாரசபையின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை பிரயோகிப்பதற்கும் நிறைவேற்றுவதற்கும் மற்றும் புரிவதற்கும் அவசியமான, இடைநேர்விளைவான மற்றும் துணைநிலையெனக் கருதப்படக்கூடியதான அத்தகைய வேறு எல்லாச் செயல்களையும் செய்தல்.

(2) அதிகாரசபை பின்வருவோருக்கு அதன் எவையேனும் தத்துவங்கள் மற்றும் பணிகள் என்பவற்றை கையளிக்கலாமென்பதுடன் அத்தகைய தத்துவங்கள் மற்றும் பணிகள் என்பன அதிகாரசபையின் பொதுவான பணிப்புகளுக்கமைய பிரயோகிக்கப்படுதலும் நிறைவேற்றப்படுதலும் வேண்டும்.

(அ) அதன் உறுப்பினர்களில் எவரேனும் ஒருவர்;

(ஆ) ஐந்தாம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட அதிகார சபையின் பணிபாளர் தலைமையதிபதி; அல்லது

(இ) அதிகாரசபையின் அலுவலரொருவர்.

அதிகார சபையின் பணிப்பாளர் தலைமை யதிபதி

**5.** (1) அதிகாரியின் அதிகாரசபையின் அலுவல்களின் நிருவாகம் மற்றும் முகாமை என்பன அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு பொறுப்பிக்கப்படுதல் வேண்டும்.

(2) அதிகாரசபையானது பணிப்பாளர் தலைமையதிபதி ஒருவரை நியமித்தல் வேண்டும், அவர் கடனிறுக்கவகையின்மை தொடர்பான கணக்கியல், சட்டம், நிதி ஆகிய துறைகளில் தகைமையும் அனுபவமும் கொண்ட ஆள் ஒருவராக இருப்பதுடன் அல்லது பணிப்பாளர் தலைமையதிபதி அதிகாரசபையின் பிரதான நிறைவேற்று அலுவலராக விருத்தலும் வேண்டும்.

(3) முதலாம் அட்டவணையில் தரப்பட்டுள்ளதான அவசியமாகவிருக்கக்கூடியவாறான அத்தகைய வேறு அலுவலர்கள் மற்றும் சேவையாளர்கள் அதிகாரசபையின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள் என்பவற்றைப் பிரயோகித்தல், நிறைவேற்றுதல் மற்றும் புரிவதில் அதிகாரசபைக்கு உதவுவதற்கு அதனால் நியமிக்கப்படலாம்.

(4) பணிப்பாளர் தலைமையதிபதி அதிகாரசபையின் பொதுவான பணிப்பு மற்றும் கட்டுப்பாட்டுக்கமைய, அதிகாரசபையின் பதவித் தொழிலின் அலுவல்கள் மற்றும் கொடுக்கல்வாங்கல்களை நிருவகித்தல் வேண்டுமென்பதுடன் அதிகாரசபையின் ஊழியர்களின் நிருவாகம் மற்றும் கட்டுப்பாடு என்பவற்றை பொறுப்பு முயற்சியெடுத்தலும் வேண்டும்.

(5) அதிகாரசபையின் அங்கீகாரத்தின்மீது பணிப்பாளர் தலைமையதிபதி இச்சட்டத்தினால் அவருக்கு அளிக்கப்பட்ட

அல்லது அவர்மீது சுமத்தப்பட்ட அல்லது குறித்தளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை அல்லது பணியை எவரேனும் ஊழியருக்கு கையளிக்கலாமென்பதுடன் அத்தகைய ஊழியர் பணிப்பாளர் தலைமையதிபதியின் விசேட பணிப்புகளுக் கமைய அத்தகைய தத்துவம் அல்லது பணியை பிரயோ கித்தல் மற்றும் நிறைவேற்றுதலும் வேண்டும்.

(6) பணிப்பாளர் தலைமையதிபதி நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் ஒருப்பாட்டுடன் காலத்துக்குக் காலம் அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படக்கூடிய வாறான அத்தகைய ஊதியம் செலுத்தப்படுதல் வேண்டு மென்பதுடன் அவரது பதவிக்காலத்தின் போது குறைக்கப் படுதலுமாகாது.

அதிகார சபையின் நிதியம்

**6.** (1) அதிகாரசபைக்கு அதன் சொந்த நிதியம் இருத்தல் வேண்டும்.

(2) நிதியத்திற்கு பின்வருமாறு செலுத்தப்படுதல் வேண்டும் :-

(அ) அதிகாரசபையின் பயன்பாட்டிற்காக காலத்துக் குக்காலம் பாராளுமன்றத்தினால் வாக்களிக்கப் படக்கூடியதான அத்தகைய எல்லாப் பணத் தொகைகளும்;

(ஆ) இச்சட்டத்தினால் அதிகாரசபை அதற்கு குறித்தளிக் கப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதற்காக அதிகாரசபையை இயலச்செய்வதற்கு அரசினால் அத்தகைய நிதிகள் வழங்கப்படலாம்;

(இ) இந்த சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க அதிகார சபையினால் அத்தகைய பணத்தொகை திரட்டப்படலாம்;

(ஈ) அதிகாரசபைக்கு கடனாக கிடைக்கின்ற அத்தகைய எல்லா பணத்தொகைகளும்; அத்துடன்

(உ) வெளி மூலங்கள் திணைக்களத்தின் மூலமாக அத்தகைய நிதி அனுப்பப்படுகின்றது என்பதன் படி திரட்டிய நிதியம், அரசாங்கம் அல்லது வெளிநாட்டு அரசாங்கம் அல்லது அரச

நிறுவனங்கள், பல்புடை மற்றும் இருபுடை நிறுவனங்கள், இலங்கைக்கு உள்ளிருந்தாயினுஞ்சரி அல்லது வெளியிலிருந்தாயினுஞ்சரி கிடைக்கின்ற நிதி ஆகியவற்றிடமிருந்து கிடைக்கப்பெற்ற நன் கொடைகள், பரிசுகள், கொடைகள் ஆகிய வடிவத்தில் அதிகாரசபைக்கு கிடைக்கப் பெறுகின்றவைகள்.

(3) தனது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகள், என்பவற்றை பிரயோகித்தல், புரிதல் மற்றும் நிறைவேற்றல் என்பவற்றில் அதிகாரசபையினால் உறப்பட்ட செலவினத்தைக் கொடுத்துத்தீர்ப்பதற்கு தேவையான சகல பணத்தையும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

(4) அதிகாரசபையின் நிதியத்திற்கு சொந்தமான பணத்தை அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் அதிகாரசபையினால் முதலீடு செய்யப்படலாம்.

கணக்குகள் மற்றும் கணக்காய்வு

**7.** (1) அதிகாரசபையின் வருமானமும், செலவினமும், சொத்துகளும், பொறுப்புகளும் மற்றும் அதன் வேறு எல்லாக் கொடுக்கல் வாங்கல் பற்றிய முறையான கணக்குப் புத்தகங்கள் வைத்திருக்கப்படுவதை அதிகாரசபை செய்வித்தல் வேண்டும்.

(2) அதிகாரசபையின் நிதிசார் நிறைவேற்றுகை மற்றும் நிதிசார் நிலைமை ஆகியவற்றின் மற்றும் உண்மையான நேர்மையான நோக்கினை சமர்ப்பிக்கும் நோக்கத்துக்காக அதிகாரசபை 1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை கணக்குகள் மற்றும் கணக்கீட்டு நியமங்கள் சட்டத்தின் கீழ் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க அல்லது ஏற்புடையற்பாலதான வலுவிலுள்ள வேறு ஏதேனும் சட்டத்தின் கீழ் அதனது கணக்குகளை தயார் செய்தல் வேண்டும்.

(3) பகிரங்க கூட்டுத்தாபனங்களின் கணக்குகளின் கணக்காய்வு தொடர்பில் அரசியலமைப்பில் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் அதிகாரசபையின் கணக்குகளின் கணக்காய்வுக்கு ஏற்புடைமையாதல் வேண்டும்.

## அத்தியாயம் 2

### உத்தியோகபூர்வ பெறுநர்

உத்தியோகபூர்வ பெறுநர் மற்றும் பிரதி உத்தியோகபூர்வ பெறுநர்கள்

**8.** (1) அமைச்சர் பின்வருவோரை நியமித்தல் வேண்டும் :-

(அ) பொருத்தமான ஆளை பெயரிலோ அல்லது பதவியிலோ உத்தியோகபூர்வ பெறுநராக;

(ஆ) அவசியமானவிடத்து அல்லது அவ்வாறு செய்வதற்கு உசிதமானவிடத்து உத்தியோகபூர்வ பெறுநரது சார்பாக செயற்படுவதற்கோ அல்லது அந்நிலையை வகிப்பதற்காகவோ, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பொருத்தமான ஆட்களை பெயரிலோ அல்லது பதவி முறையிலோ பிரதி உத்தியோகபூர்வ பெறுநர்களாக.

(2) உத்தியோகபூர்வ பெறுநர் மற்றும் பிரதி உத்தியோகபூர்வ பெறுநர்கள் ஆகியோர் நீதிமன்றத்தின் அலுவலர்களாக இருத்தல் வேண்டும்.

(3) உத்தியோகபூர்வ பெறுநர் மற்றும் பிரதி உத்தியோகபூர்வ பெறுநர்கள் :-

(அ) அமைச்சரின் பணிக்கக்கூடியதான அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளின்மீது பதவி வகித்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) அமைச்சரின் பணிப்பின்மூலம் பதவியிலிருந்து அகற்றப்படலாம்.

(4) பணிப்பாளர் தலைமையதிபதி உத்தியோகபூர்வ பெறுநர் மற்றும் பிரதி உத்தியோகபூர்வ பெறுநர்களது நடத்தை மற்றும் செயலாற்றுகை என்பவற்றை கண் காணித்தல் வேண்டுமென்பதுடன் உத்தியோகபூர்வ பெறுநர் மற்றும் பிரதி உத்தியோகபூர்வ பெறுநர்கள் ஆகியோரது நடத்தை மற்றும் செயலாற்றுகை ஆகியவற்றுடன் சம்பந்தப் பட்ட ஏதேனும் ஆவணம் அல்லது தகவல்கள் ஆகியவற்றை பணிப்பாளர் தலைமையதிபதிக்கு வழங்குவதற்கு உத்தியோக பூர்வ பெறுநரை தேவைப் படுத்தலாம்.

(5) உத்தியோகபூர்வ பெறுநரின் கட்டுப்பாடு மற்றும் பணிப்பு என்பவற்றுக்கமைய தமது கடமைகளை

நிறைவேற்றல் மற்றும் தமது தத்துவங்களை பிரயோகித்தல் என்பவற்றை பிரதி உத்தியோகபூர்வ பெறுநர்கள் புரிதல் வேண்டும்.

(6) எவரேனும் பிரதி உத்தியோகபூர்வ பெறுநர் உத்தியோகபூர்வ பெறுநர் சார்பாக அவரினிடத்தில் பதிலாக செயலாற்றலாமென்பதுடன் அவ்வாறு செய்யும் வேளையில் :-

(அ) உத்தியோகபூர்வ பெறுநரின் எல்லா அதிகாரம் மற்றும் தத்துவங்கள் என்பவற்றை கொண்டிருத்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) இந்த சட்டத்தினால் அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்கு விதியினால் உத்தியோகபூர்வ பெறுநர் மீது விதிக்கப்படக்கூடியதான அதே மட்டுப்பாடுகள் மற்றும் வரையறைகளுக்கமைந்திருத்தல்.

உத்தியோகபூர்வ பெறுநரின் தத்துவங்கள்

**9.** (1) உத்தியோகபூர்வ பெறுநரின் தத்துவங்கள் பின்வருமாறு இருத்தல் வேண்டும் :-

(அ) ஒழிப்போன் அல்லது தற்காலிக சேவையாற்றுதல்;

(ஆ) வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாளர் அல்லது இடைக்கால பெறுநராக சேவையாற்றுதல்;

(இ) பணிப்பாளர்களது தகைமையீனம் தொடர்பான விண்ணப்பங்களை செய்தல் மற்றும் அதனோடு இணைந்த செயற்பாடுகளை பொறுப்பேற்றல்;

(ஈ) கடனிறுக்கவகையின்மை வைப்புகணக்கு மற்றும் கடனிறுக்கவகையின்மை மிகைசேர் கணக்கு ஆகியன தொடர்பில் கையாளுதல் மற்றும் அதனோடு தொடர்புடைய செயற்பாடுகளை பொறுப்பேற்றல்;

(உ) வங்கிமுறிவில் கடனாளிகளது நடத்தை தொடர்பான நடவடிக்கைகளை எடுத்தல்;

(ஊ) 419 ஆம் பிரிவின் கீழ் விண்ணப்பங்களை செய்தல்; அத்துடன்

(எ) இச்சட்டம் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதியில் ஏதேனும் ஏற்பாடு செய்யப்பட்ட வேறு எவையேனும் தத்துவங்கள்.

பதவி மற்றும் உத்தி யோகபூர்வ பெறுநரது பெயர்

**10.** (1) உத்தியோகபூர்வ பெறுநர் : –

(அ) ஆதனத்தின் உத்தியோகபூர்வ பெறுநருக்கு அப்பெயரில் வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன் அதற்கு எதிராக வழக்கு தொடுக்கவும்படலாம் (வங்கிமுறிவு நிலையிலுள்ள கடனாளி அல்லது ஒழித்துக்கட்டுதலிலுள்ள கம்பெனியின் பெயரை உட்புகுத்தவும்); அத்துடன்

(ஆ) உத்தியோகபூர்வ பெறுநரின் பதவியை நிறை வேற்றுகையில் ஏதேனும் அவசியமான அல்லது உசிதமான ஏதேனும் செயலை அப்பெயரில் செய்தல்.

(2) உத்தியோகபூர்வ பெறுநரின் பதவிப் பெயரின் கீழ் உத்தியோகபூர்வ பெறுநரின் தனிப்பட்ட பெயரில் கையொப்ப மிட்டு உத்தியோகபூர்வ பெறுநர் ஏதேனும் ஆவணத்தை நிறைவேற்றலாம். ஆனால் இவ் உட்பிரிவிலுள்ள இதற்கான உத்தியோகபூர்வ பெறுநரின் பதவி இலச்சினையை ஆவணத்தில் பொறிப்பதிலிருந்தும் இலச்சினையை பொறிப் பதனை அத்தாட்சிப்படுத்துவதிலிருந்தும் தடுத்தலாகாது.

உத்தியோக பூர்வ வங்கி முறிவு நம்பிக்கைப் பெறுப்பாளராக செயலாற்றா மையின் போதான சந்தர்ப்பங்கள்

**11.** (1) பின்வருமாறு இருப்பின் உத்தியோகபூர்வ பெறுநர் பதவியை வகிக்கின்ற ஆள் ஒருவர் வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாளராக நியமிக்கப்படுதல் செயற்படுதல் அல்லது தொடருதல் ஆகாது; அத்துடன்

(அ) உத்தியோகபூர்வ பெறுநர் பதவியை வகிக்கின்ற ஆள் வங்கிமுறிவிலுள்ள கடனாளியின் கடன் கொடுநராக இருப்பின்; அத்துடன்

(ஆ) அத்தகைய ஆள் செயற்படுவதற்கு தாம் விரும்ப வில்லை என தீர்மானம் ஒன்றின் மூலம் கடன்கொடுநர்கள் தீர்மானிப்பின்.

(2) பின்வருமாறு இருப்பின் உத்தியோகபூர்வ பெறுநர் பதவியை வகிக்கின்ற ஆள் ஒருவர் ஒழிப்போனாக அல்லது கம்பெனியின் தற்காலிக ஒழிப்போனாக நியமிக்கப்படல், செயற்படல் அல்லது தொடர்ச்சியாக செயலாற்றுதல் ஆகாது :-

(அ) உத்தியோகபூர்வ பெறுநர் பதவியை வகிக்கின்ற ஆள் அத்தகைய கம்பெனிக்கு கடன்கொடுநராக விருப்பின்; அத்துடன்

(ஆ) அத்தகைய ஆள்; செயலாற்றுவதற்கு தாம் விரும்பவில்லை என தீர்மானம் ஒன்றின் மூலம் கடன்கொடுத்தவர்கள் தீர்மானிப்பின்.

(3) உட்பிரிவு (1) (ஆ) வின் பந்தி (ஆ) அல்லது உட்பிரிவு (2) இன் பந்தி (ஆ) என்பதில் குறிப்பீடு செய்யப்பட்ட வகையின் தீர்மானம் ஒன்றை கடன் கொடுநர்கள் ஏற்றுக் கொள்ளுமிடத்து, பணிப்பாளர் தலைமையதிபதி வங்கிமுறிவு நம்பிக்கைப்பொறுப்பாளர் ஒழிப்போன் அல்லது தற்காலிக ஒழிப்போனாக செயலாற்றுவதற்கு 8 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்டவர்களுக்கிடையேயிருந்து வேறோராளை நியமித்தல் வேண்டும்.

## அத்தியாயம் 3

### கடனிறுக்கவகையின்மை தொழிலர்கள்

பிரதான பதவி வகிப்பவர்களாக நியமிக்கப் படுவதற்கும் தகைமையுடைய ஆட்கள்

**12.** வங்கிமுறிவு, ஒழித்துக்கட்டுதல் அல்லது தற்காலிக ஒழித்துக்கட்டுதல் தொடர்பில் உத்தியோகபூர்வ பெறுநர் தவிர, பின்வருமாறு இருப்பின் மட்டும் செயற்பாடு ஒன்று தொடர்பில் பிரதான பதவி வகிப்பவராக நியமிக்கப்படுவதற்கு அல்லது செயலாற்றுவதற்கு தனியாள் ஒருவர் தகைமையுடையவராதல் வேண்டும் :-

(அ) கடனிறுக்கவகையின்மை தொழிலராக அதிகார சபையினால் ஆள் பதவி செய்யப்பட்டிருப்பின்;

(ஆ) 18 ஆம் பிரிவின் கீழ் அத்தகைய ஆளின் பதிவு இடைநிறுத்தப்படாதிருப்பின்;

(இ) ஆளின் பதிவு அத்தகைய நடவடிக்கை தொடர்பில் பிரதான பதவி வகிப்பவராக சேவையாற்றுவதற்கு அத்தகைய ஆளை தடுக்கின்ற அல்லது மட்டுப்படுத்துகின்ற 15 ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்பட்ட ஏதேனும் நிபந்தனைகளுக்கமையாதிருப்பின்;

(ஈ) விடுவிக்கப்படாத வங்கிமுறிவு கடனாளியாக அத்தகைய ஆள் இல்லாதிருப்பின்;

(உ) (227 ஆம் அத்தியாயமான) உள நோய்கள் கட்டளைச்சட்டத்தின்கீழ் புத்திசுவாதீனமற்ற

ஆளாகவிருப்பதற்கு அத்தகைய ஆள் தீர்ப்பளிக்கப்படாதிருப்பின்;

(ஊ) 27 ஆம் பிரிவின் கீழ் அத்தகைய ஆள் தடைவிதித்தல் கட்டளைக்கு அமைந்தவராகாதிருப்பின்; அத்துடன்

(எ) பதவி வகிப்பவராக நியமிக்கப்படுவதிலிருந்து அல்லது செயலாற்றுவதிலிருந்து ஒன்றில் கம்பெனிகள் சட்டத்தின் 213 ஆம் பிரிவு அல்லது கம்பெனிகள் சட்டத்தின் 214 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளை என்பவற்றின் மூலம் அத்தகைய ஆள் தடை செய்யப்படாதிருப்பின்.

கூட்டிணைக்கப்பட்ட குழு பதவி வகிப்பவராக நியமிக்கப்படுதலாகாது அல்லது செயலாற்றுதலாகாது

**13.** கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்று பதவி வகிப்பவராக நியமிக்கப்படலாகாது அல்லது செயலாற்றலாகாது.

பதிவு செய்தல்

**14.** (1) தனியாளொருவர் கடனிறுக்கவகையின்மை தொழிலராக தம்மை பதிவு செய்து கொள்வதற்காக விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய கட்டணக் கொடுப்பனவின் மேலும் அதிகார சபைக்கு விண்ணப்பிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான விண்ணப்பம் ஒன்றைத் தொடர்ந்து அதிகாரசபையானது :–

(அ) மேன்முறையீடுகள் உள்ளடங்கலாக, விதிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நடவடிக்கையைப் பின்பற்றுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) அத்தகைய நடவடிக்கைமுறைக்கிணங்கவும் (4) ஆம் உட்பிரிவுக் கமையவும், அத்தகைய ஆளை கடனிறுக்கவகையின்மை தொழிலராக பதிவு செய்தல் வேண்டுமென்பதுடன் விதித்துரைக்கப்பட்ட முறையில் பதிவிற்கான சான்றிதழை வழங்குதல் வேண்டும்.

(3) கடனிறுக்கவகையின்மை தொழிலராக பதிவுசெய்வதற்கென ஆள் ஒருவர் இணங்கியொழுக வேண்டிய தேவைப்பாடுகளானது அத்தகைய தேவைப்பாடுகளாக தொழில்சார் தகைமைகள், அனுபவம், இயைபான பரீட்சைகள் மற்றும் ஏனைய இயைபான கட்டளைக்கற்கள் ஆகியவற்றை உள்ளடக்கியிருத்தல் வேண்டும், அவையாவன :–

(அ) விதித்துரைக்கப்பட்டவை; அல்லது

(ஆ) அதிகாரசபையினால் ஆக்கப்பட்ட எவையேனும் விதிகளில் உள்ளடக்கப்பட்டவைகள்.

(4) அதிகாரசபை அத்தகைய ஆள்; பின்வருவனவற்றை திருப்திப்படுத்தினால் ஒழிய, அத்தகைய ஆளை கடனிறுக்க வகையின்மை தொழிலராக பதியலாகாது :-

(அ) பிராதான பதவி வகிப்பவரொருவராக நியமிக்கப்படுவதற்கும் செயலாற்றுவதற்கும் தகுதியானதும் முறையானதுமான ஆளை; அத்துடன்

(ஆ) மூன்றாம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட கடனிறுக்கவகையற்ற தொழிலொருவராக பதிவு செய்வதற்கான தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுதல்.

(5) அதிகாரசபை ஆளொருவரை (இப்பாகத்தின்கீழ் பதிவுகளை மீளப் புதுப்பித்தல், இரத்துச் செய்தல் அல்லது இடைநிறுத்தல் என்பவற்றுக்கமைய) கடனிறுக்கவகையின்மை தொழிலராக அதிகார சபையானது ஒரு வருட நிரந்தர காலப் பகுதிக்கு அல்லது விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஏனைய காலப்பகுதிக்கு பதிவு செய்யலாம்.

**15.** (1) அதிகாரசபை கடனிறுக்க வகையின்மை தொழிலர்கள் பொறுப்பேற்கின்ற செயற்பாட்டின் வகைகளை மட்டுப்படுத்துகின்ற எல்லாப் பதிவுசெய்யப்பட்ட கடனிறுக்க வகையின்மை தொழிலர்கள் அல்லது பதிவு செய்யப்பட்ட கடனிறுக்க வகையின்மை தொழிலர்களின் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட குறித்துரைக்கப்பட்ட வகுதிகள் தொடர்பில் நிபந்தனையொன்றை எந்நேரத்திலும் விதிக்கலாம். நிபந்தனைகள்

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் விதிக்கப்பட்ட நிபந்தனை களானது, அதிகாரசபை தோதானது என கருதுகின்றதான தொடர்ச்சியான தொழில்லாண்மைசார் விருத்தி தேவைப்பாடு களுக்கு இணங்குவதையும் உள்ளடக்கலாம்.

(3) ஓராம் உட்பிரிவிற்கு பங்கமின்றி அதிகாரசபை கடனிறுக்கவகையின்மை தொழிலர்கள் பொறுப்பேற்கின்ற செயற்பாடுகளின் வகைகளை மட்டுப்படுத்துகின்ற கடனிறுக்க வகையின்மை தொழிலர்களை பதிவு செய்தல் தொடர்பான நிபந்தனைகளை எந்த நேரத்திலும் அதிகார சபையினால் விதிக்கலாம்.

(4) விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கமைய, கடனிறுக்க வகையின்மை தொழிலர் ஒருவர் 3 ஆம் உட்பிரிவின்கீழ் அக்கடனிறுக்க வகையின்மை தொழிலர் மீது விதிக்கப்பட்ட நிபந்தனையொன்றை மாற்றுவதற்கு அல்லது அகற்றவதற்கு அதிகாரசபைக்கு விண்ணப்பிக்கலாம்.

(5) நான்காம் உட்பிரிவின்கீழ் விண்ணப்பத்தினை தொடர்ந்து மேன்முறையீடுகள் உள்ளடங்கலாக, அதிகாரசபையானது விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நடவடிக்கை முறையைப் பின்பற்றுதல் வேண்டும்.

பதிவினை மீளப் புதுப்பித்தல்

**16.** (1) தனியாளொருவர் கடனிறுக்கவகையின்மை தொழிலராக தனது பதிவினை மீளப் புதுப்பிப்பதற்காக விதித் துரைக்கக்கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய புதுப்பித்தல் கட்டணக் கொடுப்பனவின்மேலும் அதிகார சபைக்கு விண்ணப்பிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் விண்ணப்பம் ஒன்றை தொடர்ந்து, அதிகாரசபையானது பின்வருவனவற்றை செய்தல் வேண்டும்:-

(அ) மேன்முறையீடுகள் உள்ளடங்கலாக விதிக்கப் படக்கூடியவாறு அத்தகைய நடவடிக்கைமுறை யைப் பின்பற்றுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) நடவடிக்கைமுறைக்கிணங்க மற்றும் (3) ஆம் உட்பிரிவுக்கமைய, கடனிறுக்கவகையின்மை தொழிலராக அத்தகைய ஆளின் பதிவினை மீளப் புதுப்பித்தல் மற்றும் விதித்துரைக்கப்பட்ட முறையில் பதிவுச் சான்றிதழ் ஒன்றை வழங்குதல்.

(3) அதிகாரசபை பின்வருமாறு ஆள் திருப்திப்பட்டாலொழிய, கடனிறுக்கவகையற்ற தொழிலரொருவராக ஆளொருவரின் பதிவினை மீளப் புதுப்பிக்கலாம் : –

(அ) பிரதான பதவி வகிப்பவராக நியமிக்கப்படுவதற்கு மற்றும் செயலாற்றுவதற்கு பொருத்தமான மற்றும் முறையான ஆளாக இருத்தல்; அத்துடன்

(ஆ) 14 ஆம் பிரிவின்கீழ் பேணப்பட்ட கடனிறுக்கவகையற்ற தொழிலரொருவராக பதிவொன்றுக்கான தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுதல்; அத்துடன்

(இ) விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு கட்டளைக்கற்கள்.

(4) ஆளொருவரை கடனிறுக்கவகையின்மை தொழிலராக அதிகாரசபையானது ஒரு ஆண்டு நிரந்தர காலப்பகுதிக்கு அல்லது விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஏனைய காலப்பகுதிக்கு இப்பாகத்தின் கீழான பதிவை புதுப்பித்தல் இரத்துச் செய்தல் அல்லது இடைநிறுத்தல் என்ற நிபந்தனைகள் என்பவற்றுக்கமைய மீளப் புதுப்பிக்கலாம்.

பதிவினை இரத்துச் செய்தல்

**17.** (1) அதிகாரசபையானது பின்வருமாறு ஆளொருவரது கடனிறுக்கவகையின்மை தொழிலர் ஒருவராக ஆளொருவரது பதிவினை இரத்துச் செய்யலாம் :-

(அ) நியாயமான ஏதுக்களின்மீது திருப்தியுறின் அதாவது :–

(i) ஆள் மரணமடைந்தால்;

(ii) ஆள் பொய்யான அல்லது பிழைவழியுய்க்கும் பிரதிநிதித்துவம் அல்லது வெளிப்படுத்துகையைச் செய்வதன் மூலம் பதிவினை பெற்றிருத்தல்;

(iii) பதினான்காம் பிரிவின்கீழ் பேணப்பட்ட கடனிறுக்கவகையின்மை தொழிலராக பதிவுசெய்வதற்கான தேவைப்பாடுகளை அத்தகைய ஆள் தொடர்ச்சியாக ஈடுசெய்யாதிருப்பின் அல்லது ஈடுசெய்யாதிருப்பின்;

(iv) பதினைந்தாம் பிரிவின் கீழ் கடனிறுக்க வகையின்மை தொழிலராக அத்தகைய ஆளினது பதிவு பற்றி விதிக்கப்பட்ட நிபந்தனையை ஈடுசெய்யாத அல்லது ஈடு செய்யாதிருக் கின்றவரான ஆள்;

(v) இருபதாம் பிரிவில் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகாத அல்லது இணங்கி யொழுகாதிருக்கின்ற ஆள்; அல்லது

(vi) பிரதான பதவிவகிப்பராக நியமிக்கப்படுவ தற்கும் செயலாற்றுவதற்கும் வேறுவகை யில் பொருத்தமற்றவராகவும் முறையற்றவ ராகவும் உள்ள ஆள்;

(ஆ) இருபத்திநான்காம் பிரிவின் கீழ் ஒழுக்காற்று நடவடிக்கை வகைக்கு உள்ளாதல்;

(இ) இருபத்தியேழாம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட தடை கட்டளைக்கு அமைந்த ஆளாகாதிருப்பின்;

(ஈ) ஆள் ஒன்றில் கம்பெனிகள் சட்டத்தின் 213 ஆம் பிரிவின்கீழ் அல்லது கம்பெனிகள் சட்டத்தின் 214 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளை யொன்றிற்கு அமைந்தவராகவிருப்பின்; அல்லது

(உ) ஆள் அவ்வாறு கோரியிருப்பின்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் பதிவினை இரத்துச் செய்வது தொடர்பில், பின்வருவனவற்றுக்காக (அ)(ii), (அ)(iii) மற்றும் (அ)(iv) என்னும் பந்திகளின் விடயத்தில் விதித்துரைக்கக்கூடிய வாறான அத்தகைய நடவடிக்கைமுறையை பின்பற்றுதல் வேண்டும்:-

(அ) கடனிறுக்கவகையின்மை தொழிலருக்கு அத்தகைய விடயம் மீது விசாரிப்பதற்கான முன்கூட்டிய சந்தர்ப்பத்தினை வழங்குதல்; அத்துடன்

(ஆ) மேன்முறையீடுகள்.

(3) கடனிறுக்கவகையின்மை தொழிலராக ஆள் ஒருவரது பதிவு (1) ஆம் உட்பிரிவின் கீழ் இரத்துச் செய்யப்படும்வரை, அவ்வாள் பிரதான பதவிவகிப்பவராக நியமிக்கப்படவோ அல்லது செயலாற்றுதலோ ஆகாது.

பதிவினை இடை நிறுத்தல்

**18.** (1) அதிகாரசபையானது ஆளொருவரின் கடனிறுக்க வகையின்மை தொழிலரொருவராக ஆளின் பதிவினை அவசியமான அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகள்மீது விதித்துரைக்கப்படக்கூடியவாறான இடைநிறுத்துகைக் காலப்பகுதி மீதான ஏதேனும் மட்டுப்பாடுகளுக்கமைய பின்வருமாறு இடைநிறுத்தலாம் :-

(அ) பிரிவு 19 (3) இன் கீழ் முதலாவது படிமுறை;

(ஆ) பிரிவு 14 இன் கீழ் பேணப்பட்ட கடனிறுக்க வகையின்மை தொழிலராக பதிவிற்கான தேவைப் பாடுகளை தொடர்ச்சியாக நிறைவேற்றவில்லை அல்லது தொடர்ச்சியாக நிறைவேற்றியிருக்க வில்லை என நியாயமான ஏதுக்களின்மீது திருப்தியுறின்;

(இ) பதினைந்தாம் பிரிவின் கீழ் கடனிறுக்கவகை யின்மை தொழிலராக ஆளை பதிவு செய்வதன்மீது விதிக்கப்பட்ட நிபந்தனைகளை நிறைவேற்றி இருக்கவில்லை என நியாய ஏதுக்களின்மீது திருப்தியுறின்;

(ஈ) இருபதாம் பிரிவிலுள்ள தேவைப்பாட்டுடன் இணங்கியொழுகாத அல்லது இணங்கியொழுகா திருக்கின்ற அல்லது இணங்கத் தவறிவிட்டார் என நியாயபூர்வமான அடிப்படையில் திருப்தி யுறின்;

(உ) இருபத்தி மூன்றாம் பிரிவின் கீழ் கடனிறுக்க வகையின்மை தொழிலர் பற்றி அவரது நடத்தை அல்லது செயலாற்றுகை பற்றிய விசாரணை ஒன்று செய்யப்பட்டிருப்பின்;

(ஊ) இருபத்திநான்காம் பிரிவின் கீழ் ஒழுக்காற்று நடவடிக்கை வகையொன்றாக,

(2) ஓராம் உட்பிரிவின் கீழான பதிவு ஒன்று மீதான இடைநிறுத்தம் தொடர்பில், (அ), (ஆ) மற்றும் (இ) பற்றிய பந்திகள் என்னும் விடயத்தில் உள்ளடங்கலாக, விதிக்கப் படக்கூடியவாறு அத்தகைய நடவடிக்கைமுறையை அதிகார சபை பின்பற்றுதல் வேண்டும் :-

(அ) அத்தகைய விடயம் பற்றி கேட்கப்படுவதற்கான முன்கூட்டிய வாய்ப்பினை கடனிறுக்கவகை யின்மை தொழிலருக்கு வழங்குதல்; அத்துடன்

(ஆ) மேன்முறையீடுகள்.

(3) கடனிறுக்கவகையின்மை தொழிலராக ஆள் ஒருவரை, (1) ஆம் உட்பிரிவின் கீழ் இடைநிறுத்தப்படும்வரை அவர் பிரதான பதவி வகிப்பவராக நியமிக்கப்படுதலோ அல்லது செயலாற்றுதலோ ஆகாது.

(4) அதிகாரசபை விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நேரங்களிலும் அல்லது அத்தகைய சந்தர்ப்பங் களில் மற்றும் இடைநிறுத்துகை முடிவடையும் ஏதேனும் நிகழ்வில் அல்லது அண்மித்த நேரத்திலும் இடைநிறுத்தப் பட்ட பதிவுகளை மீளாய்வு செய்தல் வேண்டும்.

(5) நான்காம் உட்பிரிவின் கீழ் இடைநிறுத்தப்பட்ட பதிவுகளை மீளாய்வு செய்வது தொடர்பில், பின்வருவன உள்ளடங்கலாக விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நடவடிக்கை முறையை அதிகாரசபை பின்பற்றுதல் வேண்டும் :-

(அ) அத்தகைய விடயம் தொடர்பில் முன்கூட்டியே செவிமடுப்பதற்கான வாய்ப்பொன்றினை கடனிறுக்கவகையின்மை தொழிலருக்கு வழங்குதல்; அத்துடன்

(ஆ) மேன்முறையீடுகள்.

(6) நான்காம் உட்பிரிவின் கீழ் மீளாய்வினை பூர்த்தி செய்வதன்மீது, அதிகாரசபை விதித்துரைக்கப்படக்கூடிய வாறான இடைநிறுத்துகைக் காலப்பகுதி மீது ஏதேனும் மட்டுப்பாட்டுக்கமைய இடைநிறுத்தத்தை முடிவுக்கு கொண்டுவரலாம் அல்லது இடைநிறுத்தத்தை நீடிக்கலாம்.

கடனிறுக்கவகையின்மை தொழிலர்களது பதிவுகள்

**19.** (1) அதிகார சபையானது கடனிறுக்கவகையின்மை தொழிலர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு இடாப்பு ஒன்றினை வைத்திருத்தலும் பேணுதலும் வேண்டும். இதில் கடனிறுக்க வகையின்மை தொழிலரது பெயர், முகவரி, தகைமைகள் என்பன பதியப்படுதல் வேண்டும்.

(2) கடனிறுக்கவகையின்மை தொழிலரின் ஒவ்வொரு நியமனத்தின் பின்னரான ஐந்துவேலை நாட்களினுள், கடனிறுக்கவகையின்மை தொழிலர் நிருவாகியாக, செயல் நிருவாகியாக, ஒழிப்போனாக அல்லது பெறுநராக அதிகாரசபைக்கு நியமிக்கப்பட்டமை பற்றி எழுத்து மூலமாக அறிவித்தலை வழங்குதல் வேண்டும்.

(3) கடனிறுக்கவகையின்மை என்னும் தொழிலர் தொடர்பில், 21 ஆம் பிரிவின் (அ), (ஆ), (இ), (ஈ) மற்றும் (உ) பந்திகளில் குறிப்பீடுசெய்யப்பட்ட நிகழ்வுகள் தொடர்பான அறிவித்தல் அதிகார சபைக்கு கிடைக்கப்பெறுமிடத்து அல்லது அதன் நிகழ்வுகளில் ஏதேனும் ஒன்று இடம் பெற்றமைக்கான நியாயமான ஏதுக்கள் உள்ளவிடத்து, அதிகாரசபை (3) ஆம் உட்பிரிவுக்கமைய பின்வருமாறு குறித்துரைக்கப்பட்டுள்ள கட்டளையில், பின்வரும் படிமுறை களை எடுக்கலாம் :-

(அ) முதலாவதாக கடனிறுக்கவகையின்மை தொழிலர் ஒருவராக கடனிறுக்கவகையின்மை தொழிலரது பதிவினை இடைநிறுத்தல், முடிவுறாதுள்ள சந்தர்ப்பங்களில் :-

(i) பந்தி (இ)(i) இல் குறிப்பீடு செய்யப்பட்ட விண்ணப்பத்தை நீதிமன்றத்தினால் அகற்றுதல்; அல்லது

(ii) பந்தி (இ)(ii) இல் குறிப்பீடு செய்யப்பட்ட தீர்மானம்;

(ஆ) இரண்டாவதாக 23 ஆம் பிரிவின் கீழ் விசாரணை யொன்றை பொறுப்பேற்றல்; அத்துடன்

(இ) மூன்றாவது, ஒன்றில் :-

(i) 27 ஆம் பிரிவின் கீழ் நீதிமன்றத்துக்கு விண்ணப்பம் ஒன்றை செய்தல்; அல்லது

(ii) அத்தகைய விண்ணப்பத்தினை செய்தல் தோதானதன்று எனத் தீர்மானித்தல்.

(4) ஏழாம் உட்பிரிவுக்கமைய அதிகாரசபையானது கடனிறுக்கவகையின்மை தொழிலர்களது இடாப்பில்

பெயரிடப்பட்ட ஆளின் பெயருக்கு எதிராக பின்வரும் ஒவ்வொரு சூழ்நிலைகளிலும் பதிதல் வேண்டும் :-

(அ) 18 ஆம் பிரிவின் கீழ் அத்தகைய ஆளினது கடனிறுக்கவகையின்மை தொழிலராக பதிவு இடைநிறுத்தப்பட்டுள்ளமை;

(ஆ) 17 ஆம் பிரிவின் கீழ் கடனிறுக்கவகையின்மை தொழிலராக அத்தகைய ஆளின் பதிவு இரத்துச் செய்யப்பட்டுள்ளது அல்லது மீளப்புதுப் பிக்காமல் வேறுவகையில் முடிவுறுத்தப் பட்டுள்ளமை;

(இ) ஏதேனும் தொழில்லாண்மைசார் சபையினால் தொழிலாண்மைசார் தொழிலிலிருந்து ஆள்; இடைநிறுத்தப்பட்டுள்ளார் அல்லது அகற்றப் பட்டுள்ளார் அல்லது ஏதேனும் தொழிலாண்மை சபையினால் தொழிலாண்மைசார் தொழிலி லிருந்து அத்தகைய ஆள்; இடைநிறுத்தப் பட்டுள்ளார் அல்லது அகற்றப்பட்டுள்ளார் என தொழிலாண்மைசார் சபையினால் அதிகார சபைக்கு மதியுரையளித்திருத்தல்;

(ஈ) ஆள் 27 ஆம் பிரிவின் கீழ் மேற்கொள்ளப்பட்ட தடைக் கட்டளைக்கு உட்பட்டவராக இருத்தல்;

(உ) ஒன்றில் கம்பெனிகள் சட்டத்தின் 213 ஆம் பிரிவின்கீழ் அல்லது கம்பெனிகள் சட்டத்தின் 214 ஆம் பிரிவின் கீழ் கட்டளையொன்றினால் பதவி வகிப்பவராக நியமிக்கப்படுவதிலிருந்து அல்லது செயலாற்றுவதிலிருந்து அவ்வாள் தடைசெய்யப்பட்டிருத்தல்;

(ஊ) கடனிறுக்கவகையின்மை தொழில்புரிவதற்கு அத்தகைய ஆள் இல்லாதொழிக்கப்பட்டிருப்பின்;

(எ) அத்தகைய ஆள் மரணமுற்றிருப்பின்.

(5) உட்பிரிவு (4) (ஊ) இன் நோக்கங்களுக்காக, பதவி வகிப்பவராக நியமிக்கப்பட்ட அல்லது செயலாற்று கின்றவரான ஆள்; ஒருவர் கடனிறுக்கவகையின்மை தொழிலராக தொழில் புரிவதாக கருதப்படல் வேண்டும்.

(6) நான்காம் உட்பிரிவின்கீழ் அத்தகைய ஆளின் பெயருக்கு எதிராக பதிவு செய்யப்பட்டுள்ளவிடத்து மற்றும் அது தொடர்பில் அதிகாரசபை திருப்தியுறுமிடத்தும் :-

(அ) நேரொத்த சூழ்நிலைகள் இப்போது இல்லாதுள்ளதென; அல்லது

(ஆ) அந்த பதிதல் பிழையானது என,

அதற்கிணங்க அதிகாரசபையானது இடாப்பினை திருத்துதல் வேண்டும்.

(7) கடனிறுக்கவகையின்மை தொழிலரொருவராக ஆளொருவர் தொழில் புரிவதற்கு இல்லாதொழிந்துள்ளவிடத்து, (4)(ஊ) எனும் உட்பிரிவின்கீழ் அவ்வாளின் பெயருக்கு நேரொத்த பதிவுசெய்யப்பட்டுள்ளவிடத்து மற்றும் அப்பதிவு தொடர்பில் (6) ஆம் உட்பிரிவு ஏற்புடைமையாகதிருந்தாலொழிய, அதிகாரசபை அவ்வுட்பிரிவின் (அ), (ஆ), (இ), (ஈ), (உ) மற்றும் (எ) என்னும் பந்திகளில் குறிப்பீடு செய்யப்பட்ட எவையேனும் சூழ்நிலைகளில் ஆளினுடைய பெயருக்கெதிராக பதிவுசெய்யத் தேவையில்லை.

(8) கடனிறுக்கவகையின்மை தொழிலர்களின் இடாப்பின் அளவு மற்றும் முறை என்பன விதித்துரைக்கப்படக்கூடியவாறான அணுக்கம், தேடல்கள், புள்ளிவிபர நோக்கங்கள் மற்றும் ஆராய்ச்சி நோக்கங்களுக்காக மூன்றாம் திறத்தவர்களுக்கு கிடைக்கப்பெறச் செய்தல் வேண்டும்.

காப்புறுதி

**20.** (1) கடனிறுக்கவகையற்ற தொழிலர் இச்சட்டத்தின் கீழ் தனது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளை பிரயோகித்தல், நிறைவேற்றுதல் மற்றும் புரிதல் என்பற்றின் போது உறக்கூடிய பொறுப்புக்கெதிராக தோதான காப்புறுதிக் கொள்கையொன்றை கடனிறுக்கவகையற்ற தொழிலர் பேணுதல் வேண்டும்.

(2) அதிகாரசபை ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக காப்புறுதிக் கொள்கையின் தேவைப்பாடுகள் தொடர்பிலான வழிகாட்டு நெறிகளை காலத்துக்குக்காலம் வழங்கலாம்.

(3) ஓராம் உட்பிரிவிற்கு இணங்கியொழுகத் தவறுகின்ற கடனிறுக்கவகையின்மை தொழிலர் தவறொன்றைப் புரிகின்றார்.

குறித்துரைக் கப்பட்ட நிகழ்வுகள் பற்றிய அறிவித்தல்கள்

**21.** (1) இப் பிரிவில், "குறிப்பிடப்பட்ட நிகழ்வு" என்பது விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஒவ்வொரு நிகழ்வு என பொருள்படும்.

(2) கடனிறுக்கவகையின்மை தொழிலர் ஒருவர் பின்வரும் நிகழ்வுகள் பற்றிய அதிகாரசபைக்கு அறிவித்தல் வழங்குதல் வேண்டும் :-

(அ) ஆளொருவருக்கெதிராக கடமையொன்றுடன் இணங்கியொழுகுவதற்கு பதிவு 264(2)(அ), 363 (2)(அ) அல்லது பிரிவு 405(2)(அ) என்பவற்றின்கீழ் நீதிமன்றத்தின் கட்டளையொன்றை ஆக்குதல்;

(ஆ) ஆளொருவருக்கெதிராக பிரிவு 265, பிரிவு 364 அல்லது பிரிவு 406 என்பவற்றின்கீழ் நீதி மன்றத்தின் கட்டளையொன்றை ஆக்குதல்;

(இ) ஆளொருவருக்கெதிராக 27 ஆம் பிரிவின் கீழ் தடைக் கட்டளையொன்றை ஆக்குதல்;

(ஈ) ஆளொருவருக்கெதிராக கம்பெனிகள் சட்டத்தின் 214 ஆம் பிரிவின் கீழ் நீதிமன்றத்தின் கட்டளை யொன்றை ஆக்குதல்;

(உ) ஏதேனும் தொழிலாண்மைசார் குழுவினால் தொழிலாண்மைசார் தொழிலிருந்து ஆளை இடை நிறத்துதல் அல்லது அகற்றுதல்;

(ஊ) பிரிவு 254 ஆம் பிரிவின் கீழ் பதவியிலிருந்து ஆளை அகற்றுதல்;

(எ) பிரிவு 255 அல்லது பிரிவு 307 என்பவற்றின் கீழ் பதவியிலிருந்து ஆளை அகற்றுதல்; அத்துடன்

(ஏ) வேறு ஏதாவது குறித்துரைக்கப்பட்ட நிகழ்வின் இடம்பெறுகை.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழான அறிவித்தல் பின்வரு வனவற்றின் பின்னர் ஐந்து வேலை நாட்களுக்குள் வழங்கப் படுதல் வேண்டும் :-

(அ) அந்த நிகழ்வின் இடம்பெறுகை பற்றி கடனிறுக்க வகையின்மை தொழிலர் அறிந்த திகதியிலிருந்து; அல்லது

(ஆ) முன்னரே அந்நிகழ்வு இடம்பெற்றமை பற்றி கடனிறுக்கவகையின்மை தொழிலர் அறிந்து கொண்டதாக நியாயமாக நம்பும் திகதியி லிருந்து;

(4) இணங்கியொழுகுவதற்கு தவறுகின்ற கடனிறுக்க வகையின்மை தொழிலர் ஒருவர் தவறொன்றைப் புரிந்தவராகின்றார்.

ஏனைய நிகழ்வுகள் பற்றிய அறிவித்தல்

**22.** கடனிறுக்கவகையின்மை தொழிலர் அவரின் அபிப்பிரா யத்தில் அதிகாரசபையின் அறிவித்தலுக்கு கொணரப்படுதல் வேண்டுமெனும் ஏதேனும் கருமத்தை குறித்துரைக்கின்ற அறிக்கையொன்றை அதிகாரசபைக்கு அனுப்பலாம்.

நடத்தை மற்றும் செயலாற்று கை பற்றிய விசாரணை

**23.** (1) அதிகாரசபை 19 ஆம் பிரிவு அல்லது 24 ஆம் பிரிவு என்பவற்றின் கீழ் அவ்வாறு செய்வதற்கு அனுமதிக்கப் படுமிடத்து, கடனிறுக்கவகையின்மை தொழிலர் ஒருவர் அல்லது முன்னாள் கடனிறுக்கவகையின்மை தொழிலர் ஒருவர் பற்றிய நடத்தை செயலாற்றுகை பற்றி விசாரணை செய்யலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழான விசாரணையொன்றின் நோக்கங்களுக்காக, அதிகாரசபை நியாயமாகவிருப்பின் மற்றும் அளவுவரை, (3) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப் பட்ட எவையேனும் செயல்களை செய்வதற்கு, கடனிறுக்க வகையின்மை தொழிலர் அல்லது முன்னாள் கடனிறுக்க வகையின்மை தொழிலரின் நடத்தை அல்லது செயலாற்றுகை பற்றிய அறிவைக் கொண்டுள்ளவரான அல்லது கொண்டிருக்க சாத்தியமுள்ளவரான ஆளொருவரை அதிகார சபை எழுத்துமூல அறிவித்தல் மூலம் கோரலாம்.

(3) பின்வருவனவற்றுக்காக (2) ஆம் உட்பிரிவில் செயல்கள் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளன :-

(அ) அதிகாரசபை கோரக்கூடியதான அத்தகைய நேரத்திலும் இடத்திலும் அதிகார சபைக்கு சமூகமளித்தல்;

(ஆ) அதிகாரசபை கோரக்கூடியதான கடனிறுக்க வகையின்மை தொழிலர் அல்லது முன்னாள் கடனிறுக்கவகையின்மை தொழிலர் ஆகியோரது

நடத்தை மற்றும் செயலாற்றுகை தொடர்பான அத்தகைய தகவல்களை அதிகாரசபைக்கு வழங்குதல்;

(இ) அதிகாரசபை கோரக்கூடியதான கடனாளியின் அலுவல்கள், தொழில், ஆதனம் அல்லது நிதிசார் சூழ்நிலைகள் பற்றிய அத்தகைய தகவல்களை அதிகார சபைக்கு வழங்குதல்;

(ஈ) கடனாளியின் அலுவல்கள், தொழில், ஆதனம் அல்லது நிதிசார் சூழ்நிலைகள் தொடர்பான வேறு ஏதேனும் விடயம் பற்றிய அதிகாரசபை யின் பிரதிநிதி ஒருவர் மூலமான சத்தியத்தை ஆராய்தல் அல்லது கடனிறுக்கவகையின்மை தொழிலர் அல்லது விதித்துரைக்கப்படக் கூடிய வாறான அத்தகைய சான்றுகள் மற்றும் ஏனைய நடவடிக்கைமுறை விதிகளின் கீழ் முன்னைய கடனிறுக்க வகையின்மை தொழிலர் அல்லது கடனிறுக்க வகையின்மை தொழிலரின் நடத்தை மற்றும் செயலாற்றுகை என்பவற்றை ஆராய்தல்;

(உ) சத்தியம் அல்லது உறுதிப்படுத்துகை மீதான வெளிப்படுத்துகை ஒன்றை வழங்குதல்;

(ஊ) அதிகாரசபைக்கு அதனது விசாரணைகளில் ஆளின் மிகச்சிறந்த இயலுமைக்கு உதவுதல்;

(4) அதிகாரசபையினால் தாபிக்கப்பட்டதான அத்தகைய அளவுகளின் மீது (3) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட கோரிக்கையுடன் இணங்கியொழுகுதல் உறப்பட்டதான நியாயமான பிரயாணம் மற்றும் ஏனைய செலவுகளை அதிகாரசபை உட்பிரிவு (3) இன் (ஆ) அல்லது (இ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆளொருவருக்குச் செலுத்துதல் வேண்டும்.

(5) தொழிலாண்மைசார் நடத்தை தொடர்பில் நியாயாதிக் கத்தைக் கொண்டுள்ள ஏதேனும் தொழிலாண்மைசார் குழு அல்லது அதிகாரசபையினால் ஒழுக்காற்று நடவடிக்கை முறை ஒன்று உள்ளடங்கலாக வழக்குத்துடர்ச்சி, குற்றவழக்கு அல்லது வேறு ஏதேனும் சட்ட அல்லது வேறு வழக்கு நடவடிக்கையெதுவும் இப்பிரிவின்கீழ் தகவலை நல்லெண்ணத்தில் வெளிப்படுத்துகை தொடர்பில் எவரேனும் ஆளுக்கு எதிராக இருத்தல் ஆகாது.

(6) அதிகாரசபையின் விண்ணப்பத்தின் மீது, நீதிமன்றம் அத்தகைய இணக்கம் அல்லது சோதனை விடயத்திற்கேற்ப, பிரிவு 4 இல் தரப்பட்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பணிகளின் அதிகாரசபையின் மூலம் செயல்நிறை வேற்றுகைக்கு அவசியமானது எனவும் ஆளுக்கு நியாயமற்ற அடக்குமுறையாகாதெனவும் அது திருப்திப்படுமிடத்து பின்வருவனவற்றுக்காக இப்பிரிவின்கீழ் செய்யப்பட்ட கோரிக்கையுடன் இணங்கியொழுகுவதற்கு தவறுகின்ற ஆளுக்கு நீதிமன்றம் கட்டளையிடலாம் :-

(அ) கோரிக்கையுடன் இணங்கியொழுவதற்கு; அல்லது

(ஆ) நீதிமன்றத்தின் முன்னர் சமுகமளிப்பதற்கும் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய சான்றுரீதியான மற்றும் ஏனைய நடவடிக்கை முறை விதிகளின் கீழான சத்தியப்பிரமாணத்தின் மீது பரிசோதிக்கப்படுவதற்கும்;

ஒழுக்காற்று நடவடிக்கை

**24.** (1) இப்பிரிவில் "ஒழுக்காற்று நடவடிக்கை" என்பது :–

(அ) விதித்துரைக்கப்படக்கூடியவாறான நீதிமன்றத் துக்கான விண்ணப்பமொன்றைச் செய்கின்றதான விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஏதுக்களின் மீது மற்றும் அத்தகைய தன்மையின் மீதான ஒழுக்காற்றின் அத்தகைய நிபந்தனை களுக்கு அமைய விதித்தல்;

(ஆ) பின்வருவனவற்றுக்கு நீதிமன்றத்துக்கு விண்ணப்பமொன்றைச் செய்தல் :-

(i) கடனிறுக்கவகையின்மை தொழிலரொரு வரின் பதவியிலிருந்து அகற்றுதல்;

(ii) இருபத்தேழாம் பிரிவின் கீழான தடை யொன்று.

(2) மூன்றாம் உட்பிரிவுக்கமைய, அதிகாரசபை முடிபு செய்வதற்கு நியாயமான ஏதுக்கள் உள்ளதென முடிபுசெய்யு மிடத்து அல்லது தீர்மானிக்குமிடத்து, கடனிறுக்கவகை யின்மை தொழிலர் :-

(அ) கடனிறுக்கவகையின்மை தொழிலரொருவராக பதிவுசெய்யப்பட்ட வேளையில், 15 ஆம் பிரிவின்

கீழ் கடனிறுக்கவகையின்மை தொழிலரொருவராக ஆளினுடைய பதிவு பற்றி விதிக்கப்பட்ட நிபந்தனையொன்றை ஈடு செய்யவில்லை தொடரவில்லை அல்லது ஈடுசெய்வதற்கு தொடர்ந்திருக்கவில்லை அல்லது ஈடுசெய்திருக்கவில்லை;

(ஆ) பின்வருமாறு தேவைப்பாடொன்றை மீறியுள்ளார் அல்லது மீறியிருந்திருக்கின்றார் :–

(i) இச்சட்டத்தின்கீழ், அதன்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகள், விதிகள், நியமங்கள், நடத்தைக்கோவைகள், வழிகாட்டு நெறிகள் அல்லது பணிப்புகளை செயற்படுத்தல்;

(ii) வேறு ஏதேனும் எழுத்திலான சட்டம்; அல்லது

(iii) நீதிமன்றத்தின் ஏதேனும் கட்டளை அல்லது பணிப்பு;

(இ) கடமையொன்றுடன் இணங்கியொழுகுவதற்கு பிரிவு 264 இன் (2) ஆம் பிரிவின் பந்தி (அ) வின் பிரிவு 363 இன் 2 அம் உட்பிரிவின் பந்தி (அ), அல்லது பிரிவு 405 இன் (2) ஆம் உட்பிரிவில் பந்தி (அ) வின் கீழ் நீதிமன்றக் கட்டளையொன்றை வழங்கியிருத்தல்;

(ஈ) பிரிவு 265, பிரிவு 364 அல்லது பிரிவு 406 என்பவற்றின்கீழ் நீதிமன்றத்தின் கட்டளையொன்றை வழங்கியிருத்தல்;

(உ) பிரிவு 27 இன் கீழ் ஆக்கப்பட்ட தடைக்கட்டளையொன்றுக்கு அமைந்திருத்தல்;

(ஊ) பதவி வகிப்பவரொருவராக நியமிக்கப்படுவதிலிருந்து அல்லது செயலாற்றுகின்றதிலிருந்து ஒன்றில் கம்பெனிகள் சட்டத்தின் பிரிவு 213 இன்கீழ் அல்லது கம்பெனிகள் சட்டத்தின் 214 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றின் மூலம் தடைசெய்யப்பட்டிருத்தல்; அல்லது

(எ) அதிகாரசபையின் பணிப்புடன் இணங்கி யொழுகுதல் தொடர்பில் பிரதானமாக தவறுதல் அல்லது தவறியிருத்தல், அல்லது அதிகாரசபை;

(ஏ) 23 ஆம் பிரிவின் கீழ் விசாரணையொன்றை பொறுப்புமுயற்சியெடுத்தல்; அத்துடன்

(ஐ) அவசியமாகக்கூடியவாறான அத்தகைய ஒழுக்காற்று நடவடிக்கையை எடுத்தல்.

(3) இரண்டாம் உட்பிரிவில் முன்னால் கடனிறுக்கவகை யின்மை தொழிலரொருவர் தொடர்பில் கடனிறுக்கவகை யின்மை தொழிலரொருவராக தொழில் புரிவதற்கு கடனிறுக்கவகையின்மை தொழிலர் இல்லாதொழிவதற்கு முன்னரான ஆறாண்டுகளுக்கு மேற்பட்ட காலப்பகுதிக்கு மட்டும் தொடர்புடையதான ஏதேனும் விடயத்துக்கு ஏற்புடையதாதலாகாது.

(4) மூன்றாம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, ஏதேனும் நேரத்தில் கடனிறுக்கவகையின்மை தொழிலரொருவரின் பணிகளை புரிகின்றதான ஆளொருவர் அத்தகையவாறு பதிவுசெய்யப்பட்டிருந்தாலுஞ்சரி இல்லையாயினுஞ்சரி அந்நேரத்தில் கடனிறுக்கவகையின்மை தொழிலரொருவராக தொழில் புரிபவராக கருதப்படுதல் வேண்டும்.

(5) இரண்டாம் உட்பிரிவின் கீழ் தனியொரு விடயம் தொடர்பில் அதிகாரசபையானது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வகையிலான ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுக்கலாம்.

(6) இரண்டாம் உட்பிரிவின் கீழ் ஒழுக்காற்று நடவடிக் கைகள் எடுப்பது தொடர்பில், பின்வருவன உள்ளடங்கலாக விதிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நடவடிக்கை முறைகளை அதிகார சபை பின்பற்றுதல் வேண்டும் :-

(அ) அவ்விடயம் தொடர்பில் விசாரிக்கப்படுவதற்கு முன்கூட்டிய சந்தர்ப்பமொன்றிற்கான கடனிறுக்க வகையின்மை தொழிலருக்கு வழங்குதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) மேன்முறையீடுகள்.

பொருள் கோடல்

**25.** இவ் அத்தியாயத்தின் நோக்கங்களுக்காக, அதிகார சபைக்கான குறிப்பீடுகள் சந்தர்ப்பம் வேறு வகையாக தேவைப்படுத்தினாலொழிய, அதன் குழுவுக்கான குறிப்பீடு களை உள்ளடக்குதல் வேண்டும்.

அத்தியாயம் 4

**நிறுவக ரீதியான ஏற்பாடுகள்: நானாவிதம்**

நிருவாகி அல்லது ஒழிப்போனாக நியமிக்கப் படுவதற்காக தூண்டுதல்

**26.** (1) இரண்டாம் உட்பிரிவுக்கமைய கம்பெனியின் நிருவாகியாக அல்லது ஒழிப்போனாக ஆளின் சொந்த நியமனத்தை பெற்றுக்கொள்ளும் நோக்குடன் அல்லது வேறு ஆளின் நியமனத்தை தடுக்கும் நோக்குடன் ஏதேனும் அவாநிறைவை கம்பெனியொன்றின் எவரேனும் உதவு தொகை செலுத்துநருக்கு அல்லது கடன்கொடுநருக்கு வழங்கு கின்ற, அல்லது வழங்குவதற்கு உடன்படுகின்ற அல்லது கொடைமுனைகின்ற எவரேனும் ஆள் தவறொன்றைப் புரிகின்றார்.

(2) நிருவாகி ஒருவராக அல்லது ஒழிப்போனாக செயலாற்றுவதற்கான ஊதியம் தொடர்பில் நன்னோக்கில் நடைபெறும் பேச்சுவார்த்தை அல்லது கலந்துரையாடல் (1) உட்பிரிவின் மீறாலாக அமைத்துருவாக்குதலாகாது.

தடைக் கட்டளைகள்

**27.** (1) அதிகாரசபையின் விண்ணப்பத்தின் மீது, நீதிமன்றம் (2) ஆம் உட்பிரிவில் உள்ள நிபந்தனையை ஆளொருவர் ஈடுசெய்துள்ளாரென திருப்தியுறுமிடத்து, நீதிமன்றம் ஆளொருவர் தொடர்பில் ஐந்து ஆண்டுகளுக்கு மேற்படாத காலப் பகுதிக்கு தடைக்கட்டளை ஒன்றினை ஆக்குதல் வேண்டும்.

(2) இருநூற்றி அறுபத்தி நான்காம் பிரிவு, 363 ஆம் பிரிவு மற்றும் 405 ஆம் பிரிவு என்பவற்றில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கடமைகளுடன் :–

(அ) இணங்கியொழுகுவதற்கு தொடர்ச்சியாக தவறு கின்றமை; அல்லது

(ஆ) இணங்கியொழுகுவதற்கு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தவறுகைகளின் கடுமையான தன்மை,

என்ற காரணத்தினால் பிரதான பதவி வகிப்பவராக நியமிக்கப்படுவதற்கு அல்லது செயலாற்றுவதற்கு பொருத்த மற்றவர் என்பது (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப் பட்ட நிபந்தனையாகும்.

(3) தடைக்கட்டளை எவ்வாளுக்கு ஏற்புடமையாகின்றதோ அவ்வாள் ஒருவர் முக்கிய பதவி வகிப்பவராக நியமிக்கப் படுதலோ அல்லது செயற்படுதலோ ஆகாது.

(4) தடைக்கட்டளை ஒன்றை ஆக்குவதில் நீதிமன்ற மானது அவசியமானவாறு :–

(அ) கட்டளையின் பயனுறும் காலப்பகுதி தொடர்பில் ஏதேனும் நியதி அல்லது நிபந்தனையை விதிக்கலாம்; அத்துடன்

(ஆ) வேறு ஏதேனும் துணைக் கட்டளையை ஆக்கலாம்.

(5) ஒவ்வொரு தடை கட்டளையின் பிரதியொன்று, அக்கட்டளை ஆக்கப்பட்ட பின்னரான ஐந்து வேலை நாட்களினுள் நீதிமன்றத்தினால் அதிகாரசபைக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

(6) ஐந்து வருடங்களுக்கு முற்போந்த இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சந்தர்ப்பங்களிலான சான்றுகள் :-

(அ) 264 ஆம் பிரிவு, 364 ஆம் பிரிவு மற்றும் 405 ஆம் பிரிவு என்பவற்றின்கீழ் கடமையுடன் இணங்கி யொழுகுவதற்கு ஆள் ஒருவர் தொடர்பில் நீதிமன்றம் கட்டளையொன்றை ஆக்கியுள்ள விடத்து; அல்லது

(ஆ) (அ) என்னும் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப் பட்ட எவையேனும் அப்பிரிவுகளின்கீழ் ஆளொருவர் தொடர்பில், கடமையுடன் இணங்கி யொழுகுவதற்கான கட்டளையொன்றுக்கான விண்ணப்பமொன்று செய்யப்பட்டிருக்குமிடத்தும் மற்றும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஆனால் விசாரணைக்கு முன்னர் ஏற்புடைய கடமை தொடர்பில் இணங்குதல் இருப்பினும்,

இதற்கு முரணாக விசேட காரணிகள் இன்றி, (2)(அ) என்னும் உட்பிரிவின் நோக்கங்களுக்காக அத்தகைய ஆளினால் இணங்கியொழுகுவதற்கான தொடர்ச்சியாக தவறுகைகள் பற்றிய சான்றுகளாகக் கருதப்படல் வேண்டும்.

(7) தடைக்கட்டளை ஒன்றுடன் இணங்கியொழுகுவதற்கு தவறுகின்ற எவரேனும் ஆள் தவறொன்றை புரிந்தவரா கின்றார்.

மேன்முறையீடுகள்

**28.** இப்பாகத்தின் கீழ் அதிகாரசபையின் ஏதேனும் செயல் அல்லது முடிபு தொடர்பில் மேன்முறையீடொன்று மாவட்ட நீதிமன்றத்துக்கு இடப்படுதல் வேண்டும்.

அவ்வாறு செய்வதற்கு அனுமதிக்காத போது செயலாற்றுதல்

**29.** ஆளொருவர் அவ்வாறு செய்வதற்கு அனுமதிக்கப் படாத நேரத்தில் பதவி வகிப்பவர் ஒருவராக நியமிக்கப் படுகின்ற அல்லது செயலாற்றுகின்றவரான ஆளொருவர் தவறொன்றைப் புரிகின்றார்.

ஆர்வ கூற்று

**30.** (1) ஆள் ஒருவரினால் கையொப்பமிடப்பட்ட ஆர்வக் கூற்றானது, விதிக்கப்படக்கூடியவாறு அத்தகைய விபரங்களை கொண்டிருப்பதோடு, இவற்றை வெளிப்படுத்துதலும் வேண்டும் :-

(அ) ஒவ்வொரு சூழ்நிலையிலும், தொடர்புமுறை அல்லது ஏனைய விடயம் அல்லது அந்த விடயத்தினால் எழுந்தவை அல்லது அவை எழுவதற்கான காரணிகள் என நியாயபூர்வமாக நம்பும் பட்சத்தில், அத்தகைய ஆள்; தொடர்பில் அக்கறை முரண்பாடு ஏற்படல், ஆர்வ கூற்று தேவைப்படுகின்ற வகிபாகத்துடன் தொடர்புடையவைகள்;

(ஆ) அத்தகைய ஒவ்வொரு அக்கறை முரண்பாட்டின் தன்மை; அத்துடன்

(இ) அத்தகைய முரண்பாட்டு அக்கறை ஒவ்வொன்றையும் ஆள் எவ்வாறு முகாமைத்துவம் செய்வதற்கு உட்கருதுகின்றார்.

(2) ஆர்வக் கூற்றொன்றில் ஆள்; ஒருவர் கையொப்பமிடுவதற்கு முன்னர், ஆர்வக் கூற்று பூரணப்படுத்தப் பட்டுள்ளது என்பதனை நியாயபூர்வமாக உறுதிப்படுத்துவதற்கு அவசியமான விசாரணைகளை அத்தகைய ஆள் மேற்கொள்ளுதல் வேண்டும்.

(3) ஆர்வக் கூற்றொன்றில் கையொப்பமிடுகின்ற யாராவது ஆள் :-

(அ) குறிப்பாக பொருள் சார்ந்த விடயத்தில் ஆர்வக் கூற்றானது போலியானது அல்லது பிழையாக இட்டுச் செல்கின்றது; அத்துடன்

(ஆ) ஆள் இரண்டின் ஒன்றைச் செய்தல் :-

(i) குறிப்பாக பொருள் சார்ந்த விடயத்தில் ஆர்வக் கூற்றானது பொய்யானது அல்லது பிழை வழியுய்கின்றது என்பதை அறிந்திருத்தல்; அல்லது

(ii) செய்யாமை குறிப்பாக பொருள்சார்ந்த ஆர்வக் கூற்றை பொய்யானதாக அல்லது பிழைவழியுய்கின்றதாக ஆக்குகின்றது எனத் தெரிந்துகொண்டு ஏதேனும் நிகழ்வு அல்லது கருமத்தினை வெளிப்படுத்துவதனைத் தவிர்த்தல்,

லொன்றைப் புரிகின்றார்.

முன் நிருவாக செலவுக் கூற்று

**31.** முன் நிருவாக செலவுகள் தொடர்பான கூற்றொன்று தயாரிக்கப்படும் பட்சத்தில் பின்வருவன உள்ளடக்கப்படுதல் வேண்டும் :-

(அ) செய்யப்பட்ட உடன்படிக்கைகளின்கீழ் ஆகு செலவுகள், விதிப்பனவுகள் மற்றும் செலவுகள் உறப்பட்டனவோ அவ் எவையேனும் உடன் படிக்கைகள் மற்றும் அறிவிடப்பட்ட ஊதியம் என்பன பற்றிய விபரங்கள்;

(ஆ) ஏன் :-

(i) கம்பெனியின் நிருவாகம் ஆரம்பிக்கப்படுவ தற்கு வேலை செய்யப்பட்டது என்பது பற்றிய விளக்கம் முன்னர் மேற்கொள்ளப் பட்டது; அத்துடன்

(ii) நூற்றி எழுபத்தி எட்டாம் பிரிவில் (ஈ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட

குறிக்கோளை எய்துவதனை முன்னெடுத்துச் செல்லும் நோக்குடன் வேலை செய்யப் பட்டது என்பது பற்றிய விளக்கம்;

(இ) முன் நிருவாக செலவுகள் தொடர்பில் செலுத்தப் படாத தொகைகள், தனிவேறாக குறிப்பிடவும் :-

(i) உறப்பட்ட ஆகு செலவு விதிப்பனவுகள் மற்றும் செலவு; அத்துடன்

(ii) அறவிடப்பட்ட ஊதியம்;

(ஈ) முன் நிருவாக செலவுகளாக ஏற்கனவே செலுத்தப் பட்ட தொகை (ஏதேனும் இருப்யின்) தனிவேறாக குறிப்பிடவும் :–

(i) உறப்பட்ட ஆகு செலவுகள், விதிப்பனவுகள் மற்றும் செலவுகள்; அத்துடன்

(ii) அறவிடப்பட்ட ஊதியம்; அத்துடன்

(உ) விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு தகவல்கள்.

## பாகம் II

## தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை கோட்பாடுகள்

தனிப்பட்ட கடனிறுக்க வகையின்மை நடவடிக்கை முறைகளின் கீழ் கடனாளி யொருவரின் பொறுப்பு

**32.** (1) இந்த சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம், தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை செயன்முறையின் ஒரு தரப்பாக காணப்படுகின்ற கடனாளி; இந்த பிரிவில் குறித்துரைக்கப் பட்ட கடப்பாடுகளுக்கு உட்பட்டவராவார்.

(2) ஏதேனும் தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நடவடிக்கைமுறையில் பங்குபற்றுகின்றவாறான கடனாளி ஒருவர் பின்வரும் கடப்பாடொன்றின் கீழ் வருகின்றார் :-

(அ) 33 ஆம் பிரிவின் பிரகாரம் மற்றும் இந்த சட்டத்தின் வேறு ஏதாவது ஏற்பாடுகளின் பிரகாரம் அவரது வருமானம், சொத்து, பொறுப்புகள் தொடர்பான வெளிப்படுத்தல்கள் உள்ளடங்கலாக கடனாளியினது நிதி விபரங்கள்

தொடர்பான முழுமையான அறிக்கை யொன்றினை தனிப்பட்ட கடனிறுக்கவகை யின்மை அதிகாரி அல்லது நீதிமன்றம் ஆகியவற்றிற்கு வழங்க வேண்டும்;

(ஆ) கடனாளியினது செலவு மற்றும் வருமான மூலங்கள் தொடர்பில் அவ்வாறு அதிகாரியினால் தேவைப்படுத்தப்படுகின்ற ஏதாவது அத்தகைய தகவல்களை சம்பந்தப்பட்ட தனிப்பட்ட கடனிறுக்க வகையின்மை அதிகாரிக்கு வழங்க வேண்டும்; மற்றும்

(இ) தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை உத்தியோ கத்தரினால் பதிவேடுகள் தேவைப்படுத்தப்படும் எவையேனும் பதிவேடுகள், கணக்குகள் மற்றும் ஆவணங்களை நியாயமான அளவில் வழங்குதல்.

(3) ஏதாவது தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நடவடிக்கைமுறையில் பங்குபற்றுகின்ற கடனாளி ஒருவர் நடவடிக்கை முறையில் பூரணமாக ஒத்துழைத்தல் வேண்டு மென்பதுடன் பின்வருவனவற்றுக்கு அவசியமான உதவி, ஆவணங்கள் மற்றும் தகவல்களை வழங்குவதற்கு தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை உத்தியோகத்தரிடமிருந்து ஏதேனும் நியாயமான கோரிக்கையுடன் இணங்கியொழுகுதலும் வேண்டும் :-

(அ) கடனாளியின் விடயத்தில் நடவடிக்கைமுறை விண்ணப்பம்; அல்லது

(ஆ) தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை உத்தியோ கத்தரின் பணிகளை நிறைவேற்றுதல்.

(4) கடனாளியினால் வழமையாக மேற்கொள்ளப்படும் அலுவல்கள் அல்லது கடனாளியின் சாதாரண குடும்ப அலுவல்கள் என்பன தவிர்ந்த, தனிப்பட்ட கடனிறுக்கவகை யின்மை நடவடிக்கைமுறை தொடங்கியதன் பின்னரான என நேரத்திலும் :-

(அ) கடனாளியினால் பெற்றுக் கொள்ளப்பட்ட ஏதேனும் ஆதனம்; அல்லது

(ஆ) கடனாளியின் நிதிசார் சூழ்நிலைகளில் வேறு ஏதேனும் பொருள் ரீதியான மற்றும் எதிர்பார்க் கப்படாத மாற்றம் இருப்பின்,

கடனாளி, நியாயமான முறையில் செயல்முறைக்குகந்த விரைவானளவு ஆதனம் அல்லது விடயத்துக்கேற்ப, கடனாளியின் வருமானத்தில் ஏற்பட்ட அதிகரிப்புகள் பற்றிய இயைபான தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை உத்தியோ கத்தருக்கு எழுத்து மூலமான அறிவித்தலை வழங்குதல் வேண்டும்.

(5) தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நடவடிக்கை முறை ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் எந்நேரத்திலும், கடனாளியின் முகவரி, தொழில், பெயர், அல்லது ஏனைய பொருள் சார்ந்த தனிப்பட்ட தகவல்களில் மாற்றம் உள்ள விடத்து கடனாளி;, செயல்முறைக்குகந்த விரைவானளவு இயைபான சாத்தியமுள்ளதான நியாயமான காலப் பகுதியினுள் உடனடியாக, அத்தகைய மாற்றங்கள் பற்றிய விபரங்களை எழுத்து மூலமாக சம்பந்தப்பட்ட தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை உத்தியோகத்தருக்கு வழங்குதல் வேண்டும்.

(6) தனிப்பட்ட கடனிறுக்க வகையின்மை நடவடிக்கை முறைக்கான திறத்தவரான கடனாளி; ஒருவர் கடனாளியின் நிதிக் கூற்றில் ஏதேனும் பொருள் சார்ந்த துல்லியத்தன்மை யின்மை அல்லது செய்யாமை பற்றி அவற்றை அறிந்ததன் பின்னர், செயல்முறைக்குகந்தளவு விரைவாக நியாய மானதாக இயைபான தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை உத்தியோகத்தருக்கு அறிவித்தல் வேண்டும்.

(7) கடனாளியின் ஆதனம் மற்றும் வருமானம் தொடர்பில் கடனாளி, பின்வரும் சகல படிமுறைகளையும் மேற்கொள்ளுதல் வேண்டும் :-

(அ) இந்த சட்டத்தின் கீழ் தேவைப்படுத்தப்பட்ட வைகள்;

(ஆ) விதித்துரைக்கப்பட்டவை;

(இ) குறிப்பிட்ட கடனிறுக்கவகையின்மை நடவடிக்கை முறை தொடர்பில் நீதிமன்றத்தினால் ஆக்கப் பட்ட கட்டளையினால் செய்யப்படுவதற்கு பணிக்கப்பட்டவை; அல்லது

(ஈ) இயைபான கடனிறுக்கவகையின்மை உத்தி யோகத்தரினால் நியாயமானதாக கோரப் பட்டவைகள்.

(8) தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நடவடிக்கை முறைக்கு திறந்தவராகவுள்ள கடனாளி ஒருவர் :-

(அ) செயன்முறையின் நியதிகளின் கீழ் தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை அதிகாரி ஒருவர் மூலமாக மேற்கொள்ளப்பட்டவைகளை தவிர, உள்ளடக்கப்பட்ட தனிசுகள் தொடர்பில், பணமாக மேலதிக கொடுப்பனவாக யாராவது தனிசு கொடுத்தோருக்கு செலுத்துதல் அல்லது பத்தாயிரம் ரூபாவிற்கு மேற்பட்ட பெறுமதியான தொகையொன்றை செலுத்துதல் கூடாது; மற்றும்

(ஆ) நடவடிக்கைமுறையின் நியதிகளின் கீழ் தனிப் பட்ட கடனிறுக்கவகையின்மையினூடாக தவிர, பத்தாயிரம் ரூபா பெறுமதிக்கு மேலான அல்லது விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய உயர் பெறுமதியிலுள்ள ஆதனத்திலுள்ள ஏதேனும் அக்கறையை கைமாற்றுதல், குத்தகை, அதன் மீது பிணைப்பொறுப்பளித்தல் அல்லது வேறுவகையில் கைமாற்றுதல் ஆகாது.

(9) தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நடவடிக்கை முறைக்கான திறத்தவராகவுள்ள கடனாளியொருவர் ஒன்றில் தனியாக அல்லது வேறு எவரேனும் ஆளுடன் கடனாளி தனிப்பட்ட கடனிறுக்கவகையற்ற நடவடிக்கைமுறையின் திறத்தவர் கடனாளி என அவ்வாளுக்கு அறிவிக்காமல் எவரேனும் ஆளிடமிருந்து ஐம்பதினாயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட அல்லது விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய உயர் பெறுமதியைவிட கூடிய தொகை யொன்றான கடனை பெற்றுக்கொள்ளுதலாகாது.

(10) தனிசு புனர்வாழ்வுக் கட்டளை அல்லது வங்கிமுறிவுக் கட்டளைக்கான திறத்தவரொருவராகவுள்ள கடனாளியொருவர் அவசியமானவாறான அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் மீது அத்தகைய அனுமதியை அளிக்கின்ற தான நீதிமன்றத்தின் அனுமதியை முதலில் பெறாமல் இலங்கையை விட்டு வெளியேறுதலாகாது.

கடனாளியினது நிதிசார் அலுவல்கள் பற்றிய கூற்றுகள்

**33.** (1) மேலதிக விபரங்களுக்கமைய மற்றும் இந்த சட்டத்தின் ஏற்பாட்டினால் வேறுவகையாக தேவைப் படுத்தினாலொழிய அல்லது நீதிமன்ற கட்டளைக்கமைய பாகங்கள் III, IV, V, VI மற்றும் VIII என்பவற்றின் நோக்கங்களுக்காக கடனாளிக்கு நிதிசார் அலுவல்கள் தொடர்பான கூற்றானது பின்வருவனவற்றையும் உள்ளடக் குதல் வேண்டும்:-

(அ) கடன்கொடுநர்களது பட்டியலொன்று;

(ஆ) கடனாளியினது ஆதனம் பற்றிய விபரங்களை உள்ளடக்கிய அட்டவணையொன்று;

(இ) கடனாளியினது தனிசுகள் மற்றும் ஏனைய பொறுப் புகளை உள்ளடக்கிய அட்டவணையொன்று;

(ஈ) தற்போதைய வருமானம் மற்றும் தற்போதைய செலவினம் பற்றிய அட்டவணையொன்று;

(உ) மாதாந்த மிகை வருமானத்தொகை பற்றிய கூற்றொன்று, எவ்வாறு தொகை கணக்கிடப் பட்டது என்பதனைத் தனித்தனியாக காட்டப் படல் வேண்டும்;

(ஊ) இச் சட்டத்தின் கீழான நடவடிக்கைமுறை ஒன்றின் கீழ் விண்ணப்பம் ஒன்றை செய்த திகதியை தொடர்ந்து அல்லது பிரேரணையை தயாரித்ததன் படி 12 மாத காலப் பகுதிக்கு மேற்பட்ட வருமானம் அல்லது செலவினங்களில் நியாயமாக எதிர்பார்க்கப்பட்ட ஏதேனும் அதிகரிப் பினை வெளிப்படுத்துகின்ற கூற்றொன்று;

(எ) வேறொரு ஆளின் தனிசுகள் தொடர்பில் கடனாளியினால் கொடுக்கப்பட்ட ஏதேனும் உத்தரவாதம்; அத்துடன்

(ஏ) அந்த தனிசு தொடர்பில் ஒவ்வொரு கடன் கொடுநரினாலும் வைத்திருக்கப்பட்ட பிணைப் பொறுப்பு ஏதேனும் இருப்பின்.

(2) நிதிசார் அலுவல்கள் தொடர்பான கூற்றானது, சத்தியக் கடதாசியுடன் விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் இருத்தல் வேண்டும்

(3) III, IV, V, VI மற்றும் VII ஆம் பாகங்களின் கீழ், விண்ணப்பம், மனு, பிரேரணை அல்லது நடவடிக்கை முறை தொடர்பில் கடனாளியின் அலுவல்கள் பற்றிய கூற்றொன்றை தயாரிப்பதற்கு இச் சட்டத்தின் ஏற்பாடுகள் தேவைப்படுத்தப்படுகின்றவிடத்து, அத்தகைய கூற்று பின்வருவனவற்றை செய்வதற்கு முன்னர் தொண்ணூறு நாட்களுக்கு முன்னரல்லாது தேதியன்றுள்ளவாறான தேவைப்படுத்தப்பட்ட விபரங்களை காட்டுதல் வேண்டும் :-

(அ) விண்ணப்பம், மனு அல்லது பிரேரணை மேற் கொள்ளல்; அல்லது

(ஆ) நடவடிக்கைமுறையின் தொடக்கம்.

பாதுகாக்கப் பட்ட ஆதனம்

**34.** (1) நான்காம் உட்பிரிவின் கீழ் பட்டியலிடப்பட்ட கடனாளியின் ஆதனம் பற்றிய வகுதிகள் பின்வரும் நோக்கங்களுக்காக பாதுகாக்கப்பட்ட ஆதனமாகும் :-

(அ) 66 ஆம் பிரிவின் கீழ் தனிசு புனர்வாழ்வு கட்டளையொன்றுக்காக கடனாளியின் தகவுடைமையை தீர்மானித்தல்;

(ஆ) 46 ஆம் பிரிவின் கீழ் தனிசு ஒழுங்கேற்பா டொன்றின் நியதிகளை தாபித்தல்;

(இ) 115 ஆம் பிரிவின் கீழ் வங்கிமுறிவு ஆதனத்தின் அமைப்புறுவாக்கத்தைத் தீர்மானித்தல்.

(2) இப் பிரிவின் கீழ் பாதுகாக்கப்பட்ட ஆதனமானது :–

(அ) 115 ஆம் பிரிவின் கீழ் வங்கிமுறிவு ஆதனத்தின் பாகமொன்றாகவிருத்தலாகாது;

(ஆ) 117 ஆம் பிரிவின் கீழ் ஆதன கொள்ளப்பட்ட பின்னர் அமைத்துருவாக்குதலாகாது; அத்துடன்

(இ) 46 ஆம் பிரிவின் கீழ் கிடைக்கப் பெறத்தக்க ஆதனத்தின் கணக்கீட்டிலிருந்து புறத்தொதுக்கப் படுதல் வேண்டும்.

(3) 46 ஆம் பிரிவின் கீழ், தனிசு கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டின் நியதிகள் கடனாளியின் ஏதேனும் பாதுகாக்கப்பட்ட ஆதனத்தை கடன் கொடுநர்கள் அல்லது இடையீட்டாளர்களின் நன்மைக்காக விற்பனைக்கு வழங்குதலாகாது.

(4) 36 ஆம் பிரிவின் கீழ் கடனாளியினது நியாயமான வருமானத்தை பாதுகாப்பிற்கு மேலதிகமாக பாதுகாக்கப் பட்ட ஆதனத்தின் வகுதிகள் பின்வருமாறு இருத்தல் வேண்டும் :-

(அ) கடனாளி மற்றும் கடனாளியினது உறவினர்கள் மற்றும் தங்கி வாழ்பவர்களுக்கான ஆடைகள் உள்ளடங்கலாக கடனாளியினது அவசியமான வீட்டுத் தளபாடங்கள் மற்றும் சொத்துடை மைகள்;

(ஆ) கடனாளியினது அவசியமான வியாபார தொழில் மற்றும் கமத்தொழில்;

(இ) கடனாளி கமத்தொழிலில் ஈடுபட்டுள்ளவிடத்து, கடனாளி மற்றும் அவரின் / அவளின் தங்கி வாழ்பவர்களுக்கு ஆதரவளிப்பதற்கு அவசிய மானவற்றை வழங்குவதில் அவசியமானதாக இருக்கக்கூடியவாறான கமத்தொழில் காணியின் அத்தகைய அளவு;

(ஈ) விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பெறுமதியின் கடனாளியின் உயர்தொழி லாண்மை அல்லது தொழிலை நிறைவேற்றுவ தற்கு அவசியமான உயர் தொழில்சார் சாதனங்கள் மற்றும் நூலகம்;

(உ) கணக்குப் புத்தகங்கள்;

(ஊ) பாதிப்புகளுக்காக வழக்குத் தொடுப்பதற்கான வெறுமனேயான உரிமைகள்;

(எ) தனிப்பட்ட சேவைக்கான ஏதேனும் உரிமை;

(ஏ) உயிர் வழ்வதன் காரணமாக பின்னுரிமை தொடர் பான ஏதேனும் எதிர்பார்ப்புகள் அல்லது வெறுமனே ஏனைய எதிர்பாரா நிகழ்வுகள் அல்லது சாத்தியமுள்ள அக்கறை உரிமை;

(ஐ) எதிர்கால பராமரிப்பு மற்றும் எல்லா பராமரிப்பு திருமண வழக்குகள் அல்லது பராமரிப்பு வழக்கு களில் கட்டளையிடப்பட்ட பிரிமனைப் பணம் மற்றும் ஆகு செலவுகள் என்பவற்றுக்கான உரிமையொன்று;

(ஒ) இது தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நடவடிக்கைமுறையின் படி உரிமைகோரப்பட்ட முழுமையான அல்லது பகுதி பணக்கொடுப்பன விற்கான பிணைப்பொறுப்பொன்றாக ஈடுவைக் கப்படாத ஏதேனும் வீடு அல்லது ஏனைய வாழிடங்கள், துய்ப்பதற்கு அவசியமானது என நீதிமன்றம் கருதக்கூடியதான அதற்கான சேர்ந்த அத்தகைய காணியின் அளவு :–

(i) செயன்முறை நடைபெறுகின்ற நேரத்தில் கடனாளியினது உண்மையான வீடு;

(ii) செயன்முறை ஆரம்பிக்கப்பட்ட நேரத்தில் அத்தகைய வீடாக இருத்தல்;

(ஓ) கீழுள்ள 35 ஆம் பிரிவின் கீழ் குறித்துரைக்கப் பட்டளவில் ஏதேனும் தொழிலில் ஊழியர்களின் நலனுக்காக தாபிக்கப்பட்ட ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதியம், அல்லது ஓய்வூதியம் ஆகியவற்றில் ஊழியரின் தனிப் பட்ட கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ள பணத் தொகைகள்;

(ஔ) குறுகிய கால வதிவிட வாடகை தங்கியிருத்தல் உடன்படிக்கையின் கீழ் கடனாளியின் குத்தகை;

(க) வேறு எவரேனும் ஆளுக்காக நம்பிக்கைப் பொறுப்பின்மீது கடனாளினால் வைத்திருக்கப் படும் ஆதனம்; அத்துடன்

(ங) விதித்துரைக்கப்படக்கூடியவாறான ஆதனத்தின் அத்தகைய வேறு வகுதிகள்.

(5) கடனாளியின் உண்மையான வதிவிடமாகவுள்ள வீடு அல்லது ஏனைய வாழிடம் தனிப்பட்ட கடனிறுக்கவகை யின்மை நடவடிக்கை முறையிலுள்ள பிணைப்பொறுப் பளிக்கப்பட்ட கடன் கொடுநர் ஒருவரினால் உரிமைக் கொடுப்பனவுக்கான பிணைப்பொறுப்பொன்றாக ஈடுவைக் கப்பட்டுள்ளவிடத்து :-

(அ) பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கடன் கொடுநர் ஒருவரின் சார்பாக கடன்படு நிலுவை தொகைக்கு மட்டுப்படுத்தப்பட்ட வீடு அல்லது வாழிடம் தொடர்பான பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கடன்கொடுநரின் அக்கறை உள்ளது; மற்றும்

(ஆ) வீடு அல்லது வாழிடம் தொடர்பில் கடனாளி யின் எஞ்சிய ஏதேனும் வட்டி வீடு அல்லது வாழிடத்தின் பெறுமதியானது பிணைப்பொறுப் பளிக்கப்பட்ட கடன் கொடுநரின் சார்பில் சார்பான நிலுவையாகவுள்ள கடன்படு தொகையை விட விஞ்சியதாக உள்ளவிடத்து ஆதனமாக அமைத்துருவாதல் வேண்டும்.

(6) நான்காம் உட்பிரிவின் (அ) முதல் (ஈ) வரையான பந்திகளினுள் வருகின்ற விடயமொன்றின் உடமையை கடனாளி ஒருவர் வாடகை கொள்வனவு உடன்படிக்கை, குத்தகை உடன்படிக்கை அல்லது ஏனைய வடிவிலான நிதி உடன்படிக்கை, என்பவற்றன் மூலம் கொள்ளப்பட்டிருக்கு மிடத்து, வாடகை கொள்வனவு உடன்படிக்கை, குத்தகை உடன்படிக்கை அல்லது ஏனைய வடிவிலான நிதி உடன் படிக்கை என்பவற்றின் கீழான கடனாளியின் பாதுகாக்கப் பட்ட அக்கறை ஆதனமாக அமைத்துறுவதால் வேண்டு மென்பதுடன் அமைகின்றது, பொதுவான கடன் கொடுநர் களின் நன்மைகளுக்காக கிடைக்கப்பெறுதல் ஆகாது.

(7) இச் சட்டத்தின் கீழ், தனிசு தொகை நிலுவையாக வருகின்ற பொழுது அவற்றினை கடனாளி செலுத்த முடியாததாக இருத்தல் தீர்மானிக்கின்ற நோக்கங்களுக்காக கடனாளியின் ஏதேனும் பாதுகாக்கப்பட்ட ஆதனத்தை விற்பனை செய்வதற்கு தோதான இருத்தல் ஆகாது என திட்டமிடுவதானது பொருத்தமற்றதாக இருத்தல் வேண்டும்.

(8) தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நடவடிக்கை முறையொன்றில், “கடனிறுக்கவகையின்மை – தொடர்புபட்ட பதம்” தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நடவடிக்கை முறையின் தொடக்கத்தின் காரணமாக பண்டங்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கான உடன்படிக்கை ஒன்றில் ஏற்பாடொன்றாகும் :–

(அ) உடன்படிக்கை அல்லது வழங்கள் முடிவு றுத்தப்படும், அல்லது வேறு ஏதாவது விடயம் ஏற்படலாம்; அல்லது

(ஆ) உடன்படிக்கையை முடிவுறுத்துவதற்கு அல்லது வழங்குதலை முடிவுறுத்துவதற்கு வழங்குகை உரித்துடையவர் ஆக்கலாம்.

ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதியம், ஓய்வூதியம், மற்றும் நியதிச் சட்ட பணிக் கொடைகள் என்பவற்றின் கீழான உதவு தொகைகள் மற்றும் உரித் துடைமைகள்

**35.** (1) ஏதாவது தொழில் அல்லது நியதிச்சட்ட பணிக் கொடை என்பவற்றிலுள்ள ஊழியரின் நன்மைக்காக தாபிக்கப்பட்ட ஏதேனும் ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதியம், என்பவற்றின் கீழ் செலுத்தப்படற்பாலதான உரித்துடைமைகள் உரித்துகள் அல்லது தொகைகள் :–

(அ) பாதுகாக்கப்பட்ட ஆதனத்தை அமைத்துருவாக்குதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) இச் சட்டத்தின் கீழ் ஆதனம் கொள்ளப்பட்ட பின்னர் அமைத்துருவாக்குதல் ஆகாது.

(2) இச் சட்டத்தின் நோக்கங்களுக்காக, ஊழியர் அல்லது நியதிச்சட்ட பணிக்கொடை நன்மைகளுக்காக தாபிக்கப்பட்ட ஏதேனும் ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதியம், அல்லது ஓய்வூதியம் என்பவற்றின் கீழ் கடனாளியின் ஊழியர் ஒருவரினால் கடனாளி தொடர்பில் செலுத்தப்பட்ட தொகைகள் :–

(அ) இச் சட்டத்தின் கீழ் கொள்ளப்பட்ட ஆதனத்தின் பின்னர் அமைத்துருவாக்குதல் ஆகாது; அத்துடன்

(ஆ) கடனாளியின் வருமானத்தை அமைத்துருவாக்கல் ஆகாது.

(3) ஊழியர்களின் நலனுக்காக தாபிக்கப்பட்ட ஏதேனும் ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதியம் அல்லது

ஓய்வூதியம் என்பவற்றின்கீழ் கொடுப்பனவுகளை பெற்றுக் கொள்கின்ற பொழுது, இத்தகைய கொடுப்பனவுகள் தனிப் பட்ட கடனிறுக்கவகையின்மை நடவடிக்கைமுறை யொன்றின் திறத்தவராகவுள்ள கடனாளி உள்ளவிடத்து, இக்கொடுப்பனவுகள் ஆதனம் கொள்ளப்பட்ட பின்னர் அமைத்துருவாக்குதலாகாது, ஆனால் பின்வரும் நோக்கங் களுக்காக வருமானத்தை அமைத்துருவாக்குதல் வேண்டும் :-

(அ) 47 ஆம் பிரிவின் கீழ் தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டின் நியதிகளை தாபித்தல்; அத்துடன்

(ஆ) முறையே 125 ஆம் பிரிவு மற்றும் 126 ஆம் பிரிவு என்பவற்றின் கீழ் வங்கிமுறிவு தனிசு மீள் கொடுப்பனவு கட்டளை அல்லது வங்கிமுறிவு மீள்கொடுப்பனவு உடன்படிக்கை ஒன்றை ஆக்குதல்.

(4) இப்பிரிவில் உள்ள எதுவும், கடனாளியினது நிதி அலுவல்கள் பற்றிய கூற்றொன்றில் ஆதனம் பற்றிய முழுமையான வெளிப்படுத்தல்களை செய்வதற்கு தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நடவடிக்கை முறைகளின் கீழ் தனிசுபட்ட கடனாளியொருவரின் கடப்பாட்டினை அகற்றுதல் ஆகாது.

நியாயமான வருமானத்தை பாதுகாத்தல்

**36.** (1) ஏதேனும் தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நடவடிக்கைமுறையின் கீழ், கடனாளி பாதுகாக்கப்பட்ட வருமானத்திலிருந்து உதவுதொகைகளை செலுத்துவதற்கு தேவைப்படுத்தப்படுதலாகாது. அது இச்சட்டத்தின் நோக்கங் களுக்காக கடனாளியின் தங்கியுள்ளோரின் நியாயமான தேவைகளை ஈடுசெய்வதற்கு அவசியமான கடனாளியின் வருமானம் என பொருள்படும்.

(2) இச் சட்டத்தின் நோக்கங்களுக்காக (6) ஆம் உட் பிரிவுக்கமைய பின்வரும்; தொகைகள் பின்வருமாறு கடனாளியின் பாதுகாக்கப்பட்ட வருமானமொன்றை அமைத் துருவாக்குதலாகாது :-

(அ) கடனாளியின் தனிப்பட்ட மாதாந்த படியானது 52 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவு மற்றும் 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உண்ணாட்டர சிறைச் சட்டத்தின் ஐந்தாம் அட்டவணையின்

(2)(அ) பந்தியில் குறித்துரைக்கப்பட்ட தொகைக்கு சமமாக இருத்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) கடனாளிக்கு தங்கி வாழ்பவர்கள் உள்ளவிடத்து கடனாளியின் தங்கி வாழுகின்ற தொடர்பில் (அ) என்னும் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட தொகைக்கு சமமான மேலதிக மாதாந்த படியொன்று ஆகக் கூடியது நான்கு தங்கி வாழ்பவர்கள் வரையாகும்.

(3) இச் சட்டத்தின் நோக்கங்களுக்காகவும், (5) ஆம் உட்பிரிவுக்கமையவும் கடனாளியின் மாதாந்த மிகைசேர் வருமானமானது, விதிவிலக்கான சூழ்நிலைகளின்கீழ் இருந்தாலொழிய, கடனாளியின் பாதுகாக்கப்பட்ட வருமானத்தை கடனாளியின் மாதாந்த வருமானத்தினாலான தொகை விஞ்சுகின்றது.

(4) கடனாளி மற்றும் கடனாளியின் தங்கிவாழ்பவர் களுக்கு விதிவிலக்கான சூழ்நிலைகள் குறிப்பாகவுள்ள விடத்து, என்பது அத்தகைய விதிவிலக்கான சூழ்நிலைகள் இல்லாத சந்தர்ப்பத்தில், அவர்களது நியாயமான தேவை களை விட அதிகமானவை என பொருள்படும் :-

(அ) கடனாளியின் பாதுகாக்கப்பட்ட வருமானம் (2) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தொகைகளை விஞ்சியிருக்கலாம்; ஆனால்

(ஆ) கடனாளியின் பாதுகாக்கப்பட்ட வருமானம் மற்றும் கடனாளியின் தங்கிவாழ்பவர்கள் நியாயமான தேவைகளை நிறைவேற்றுவதற்கு அவசியமான அளவுக்கு (3) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தொகையை மட்டும் விஞ்சியிருக்கலாம்.

(5) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, கடனாளியின் வருமானமானாது வருமானம் என்ற தன்மையுடன் கொடுப் பனவு அவ்வப்பொழுது கடனாளிக்கு கொடுக்கப்படுகின்ற வைகள் அல்லது அவ்வப்பொழுது கடனாளி உரித்தாகின்ற தொகைகள், இவற்றுள் ஏதேனும் வியாபாரங்களை மேற்கொண்டமையின் காரணமாக செலுத்தப்படும் ஏதேனும் கொடுப்பனவு அல்லது ஏதாவது பதவி அல்லது தொழில்

காரணமாக கிடைக்கின்ற வருமானம், மற்றும் 35 ஆம் பிரிவுக்கு அமைய ஊழியர்களின் நலனுக்காக தாபிக்கப்பட்ட ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதியம் அல்லது ஓய்வூதியம் ஆகியவற்றின் கீழான ஏதேனும் கொடுப்பனவு.

(6) அதிகாரசபை (5) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப் பட்ட சூழ்நிலைகளில் கடனாளி மற்றும் கடனாளியின் தங்கிவாழ்பவர்களின் நியாயமான தேவைகளை ஈடுசெய்வ தற்காக அவசியமான வருமானத்தின் கணிக்கீட்டின் மீதான வழிகாட்டுநெறிகளை காலத்துக்குகாலம் வழங்கலாம்.

உள்ளடக்கப் பட்ட மற்றும் புறத்தொதுக் கப்பட்ட தனிசுகள்

**37.** (1) இச்சட்டத்தில் வேறு வகையில் ஏற்பாடு செய்யப் பட்டிருந்தாலொழிய, உள்ளடக்கப்பட்ட தனிசு ஒன்று என்பது (2) ஆம் உட்பிரிவின் நிபந்தனைகளை ஈடுசெய்கின்ற தனிசு என பொருள்படும் என்பதுடன் அது புறத்தொதுக்கப்பட்ட தனிசு ஒன்றாதல் ஆகாது.

(2) உள்ளடக்கப்பட்ட தனிசுகளின் வகுதியினது பின்வரும் திகதியில் கடனாளியாக்கப்படக்கூடிய சகல தனிசுகள் மற்றும் பொறுப்புகள், தற்போதைய அல்லது எதிர்கால, நிச்சயமான அல்லது எதிர்பாரா அல்ல தனிசுகள் மற்றும் பொறுப்புகளை உள்ளடக்குகின்றது :–

(அ) தனிசு பாதுகாப்பு தனிசு தீர்ப்பு பிற்போடல் கட்டளை;

(ஆ) தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடு நடைமுறைக்கு வருவதை உறுதிப்படுத்துகின்ற கட்டளை;

(இ) தனிசு புனர்வாழ்வு கட்டளை; அல்லது

(ஈ) வங்கிமுறிவு கட்டளை.

(3) இரண்டாம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட எவை யேனும் கட்டளைகள் ஆக்கியதன் பின்னர் கடனாளியினால் உறப்பட்ட ஏதேனும் கடப்பாட்டின் காரணத்தினால் (2) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட எவையேனும் கட்டளை களை ஆக்கியதன் முன்னர் அமைந்தவராகவருகின்ற ஏதேனும் தனிசு அல்லது பொறுப்பினை உள்ளடக்குகின்றது.

(4) பின்வரும் தனிசுகள் விலக்களிக்கப்பட்ட தனிசுகளாக விருத்தல் வேண்டும் :-

(அ) கடனாளி திறத்தவராகவுள்ள மோசடி அல்லது மோசடியான நம்பிக்கை மீறல் என்பவற்றினால் உறப்பட்ட ஏதேனும் தனிசு அல்லது பொறுப்பு;

(ஆ) வங்கிமுறிவு திறத்தவராகவுள்ள மோசடியினூடாக கடனாளி பெற்றுக்கொள்ளப்பட்டதான ஏதேனும் தனிசு அல்லது பொறுப்பு;

(இ) பராமரிப்பு அல்லது பிரிமனைப் பணம் மற்றும் திருமண வழக்குத் துடர்ச்சிகள் அல்லது பராமரிப்பு வழக்குகளில் கட்டளையிடப்பட்ட எல்லா பராமரிப்பு, பிரிமனைப்பணம் மற்றும் ஆகுசெலவுகள் என்பவற்றைச் செலுத்துவதற்கான ஏதேனும் கடப்பாடு;

(ஈ) தவறொன்றுக்காக விதிக்கப்பட்ட குற்றப் பணம் தொடர்பிலான ஏதேனும் பொறுப்புகள்;

(உ) கடனாளியினால் புரியப்பட்ட தீங்கியல் தொடர்பில் எவரேனும் ஆளிற்கு இழப்புகளை செலுத்துவதற்கான பொறுப்பொன்று.

(5) புறத்தொதுக்கப்பட்ட தனிசுகள் வங்கிமுறிவில் எண்பிக்கப்படுதல் ஆகாது.

(6) அறுபத்தியாறாம் பிரிவின் கீழ் தனிசு புனர்வாழ்வுக் கட்டளையொன்றுக்காக கடனாளியின் தகவுடமையொன்றைத் தீர்மானிக்கும் நோக்கங்களுக்காக, மொத்த தனிசுகளின் கீழ் கடனாளிகளின் பொறுப்பு பற்றிய தொகையை கணக்குகளின் கணக்கீடானது புறத்தொதுக்கப்பட்ட தனிசுகளை உள்ளடக்குதல் ஆகாது.

(7) நாற்பதாம் பிரிவின் கீழான தனிசுப் பாதுகாப்பு தனிசு தீர்ப்பு பிற்போடல் கட்டளையின் கீழான தனிசு தீர்ப்பு பிற்போடலானது புறத்தொதுக்கப்பட்ட தனிசொன்றுக்கு ஏற்புடையதாதலாகாது.

(8) தனிசு மீள் கட்டமைப்பு ஒழுங்கேற்பாடொன்று இயைபான கடன்கொடுநர் ஒழுங்கேற்பாட்டின் கீழ் அதன் தனிசு பற்றிய உள்ளடக்கத்து சம்மதமளிக்கின்றவிடத்து தவிர, புறந்தொதுக்கப்பட்ட தனிசொன்றுக்கு ஏற்புடையதாதலாகாது.

(9) தனிசு புனர்வாழ்வுக் கட்டளையானது புறத்தொதுக் கப்பட்ட தனிசொன்றுக்கு ஏற்புடையதாதலாகாது.

(10) எழுபத்துமூன்றாம் மற்றும் 138 ஆம் பிரிவுகளின் கீழான பொறுப்புவிடுவித்தலானது புறத்தொதுக்கப்பட்ட தனிசுகள் தொடர்பில் விடுவித்தலிலிருந்து கடனாளியை விடுவித்தலாகாது.

(11) இயைபான கடன்கொடுநர் ஒழுங்கேற்பாட்டின் நியதிகளின் கீழ் அதன் தனிசுகளை விடுவிப்பதற்கு சம்மதம் அளித்துள்ள விடத்து தவிர, 60 ஆம் பிரிவின் கீழ் தனிசு மீள் கட்டமைப்பு ஒழுங்கேற்பாடொன்றின் பூர்த்தியானது புறத் தொதுக்கப்பட்ட தனிசு ஒன்றின் பொறுப்பிலிருந்து கடானாளியை விடுவிக்காது.

## பாகம் III

## தனிசு பாதுகாப்பு கடன் தீர்ப்புப் பிற்போடல் கட்டளை

கடன் பாதுகாப்பு விண்ணப்பம்

**38.** (1) இப் பாகத்துக்கமைய பின்வருமாறு :-

(அ) தனிசு மீள்கட்டமைப்பு ஏற்பாட்டிற்கான பிரேரணையொன்றை தயாரிப்பதற்கு;

(ஆ) தனிசு புனர்வாழ்வு கட்டளைக்காக விண்ணப் பித்தல்; அல்லது

(இ) வங்கிமுறிவு கட்டளையொன்றுக்கு விண்ணப் பிப்பதற்கு,

உட்கருதுகின்ற கடனாளியொருவர் (2) ஆம் மற்றும் (3) ஆம் உட்பிரிவுகளுக்கு இணங்கியொழுகின்ற படிவத்தில் விதித் துரைக்கப்படக்கூடியவாறான எவையேனும் தேவைப்பாடு களுக்கு இணங்குகின்ற படிவத்தில் தனிசு பாதுகாப்பு விண்ணப்பம் ஒன்றை நீதிமன்றத்திற்கு முன்வைக்கலாம்.

(2) கடனாளியின் தனிசுப் பாதுகாப்பு விண்ணப்பமானது பின்வரும் தகவல்களை உள்ளடக்கியிருத்தல் வேண்டும் :-

(அ) கடனாளியின் முழுப் பெயர், பிறந்த திகதி, கடனாளியினது வீட்டு முகவரி;

(ஆ) கொண்டுநடாத்தப்படும் எவையேனும் வியாபாரப் பெயர்கள் அல்லது எவையேனும் பதிவு செய்யப்பட்ட வியாபாரப் பெயர்கள் மற்றும் கடனாளியினால் கடனாளியின் நிறைவேற்றப்படும் ஏதேனும் வியாபாரங்கள்;

(இ) கடனாளியின் எழுத்து மூலமான சம்மதம் :-

(i) உத்தியோகபூர்வ பெறுநரினால் கடனாளி தொடர்பான எவையேனும் விசாரணைகள் மேற்கொள்ளப்படல்; அத்துடன்

(ii) இரண்டாயிரத்து இருபத்திரெண்டாம் ஆண்டின் 09 ஆம் இலக்க, தரவு பாதுகாப்பு சட்டத்தின் அவசியமான அளவுக்கும் நியதி களுடன் இணங்கியொழுகுவதில் உத்தியோக பூர்வ பெறுநரினால் கடனாளியின் தனிப்பட்ட தரவு வெளிப்படுத்தல் மற்றும் செய்முறைப்படுத்தல்.

(3) விண்ணப்பம் கடனாளியினால் தகவல்கள் அறியப் படும் அளவுக்கும் விடயத்துக்கு இயைபானதாகவுமான பின்வரும் தகவல்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) கடனாளியின் கடன்கொடுநர்களின் விபரங்கள் மற்றும் ஒவ்வொரு கடன்கொடுநருக்கும் சேர்மதியான இயைபான தனிசுகள்;

(ஆ) கடன்கொடுநரினால் வைத்திருக்கப்பட்டுள்ள ஏதேனும் பிணைப்பொறுப்புக்கான விபரங்கள்; மற்றும் கடன்கொடுநரினால் வைத்திருக்கப் பட்டுள்ள பிணைப்பொறுப்பின் தன்மை;

(இ) தனிசின் சேகரிப்பு அல்லது வலுவுறுத்துகை நோக்கங்களுக்காக, கடனாளியின் தனிசுகொடு நரினால் அறிவுறுத்தப்பட்ட எவையேனும் தனிசு சேகரிப்பு முகவர் அல்லது வேறு மூன்றாம் திறத்தவர் பற்றிய விபரங்கள்; அத்துடன்

(ஈ) கடனாளி சார்பாக செயலாற்றுவதற்கு கடனாளியினால் அறிவுறுத்தப்பட்ட எவரேனும் ஆலோசகர், முகவர் அல்லது பிரதிநிதி பற்றிய விபரங்கள்.

(4) கடனாளியொருவர் தனிசு பாதுகாப்பு விண்ணப் பத்தினை செய்வதில் வழங்கப்பட்ட எவையேனும் தகவல் களின் துல்லியத்தன்மையை உறுதி செய்வதற்கு நியாயமான கவனத்தினை எடுத்தல் வேண்டுமென்பதுடன் விண்ணப் பத்திலிருந்து இயைபான தகவல்களை வெளிப்படையாக பிடித்து வைத்திருத்தலாகாது.

தனிசு பாதுகாப்பு தனிசு தீர்ப்பு பிற்போடல் கட்டளையை ஆக்குவதற் கான கட்டளைக் கற்கள்

**39.** (1) தனிசு பாதுகாப்பு விண்ணப்பம் கிடைக்கப் பெற்றதன் மீது, நீதிமன்றம் கடனாளியின் விண்ணப்பம் தொடர்பில் தனிசு பாதுகாப்பு தனிசு தீர்ப்பு பிற்போடல் கட்டளை ஒன்றை ஆக்குவதா என்பதனை நீதிமன்றம் கருத்திலெடுத்தல் வேண்டும்.

(2) தனிசு பாதுகாப்பு விண்ணப்பத்தை கருத்திலெடுப் பதில் நீதிமன்றமானது :–

(அ) நான்காம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தகைவுடமை கட்டளைக்கல்லை கடனாளி ஈடுசெய்துள்ளாரா என்பதை கருத்திலெடுப்பதில் நீதிமன்றத்திற்கு உதவுவதற்கு அவசியமென கருதுகின்றதான அத்தகைய விசாரணைகள் செய்யும் படி உத்தியோகபூர்வ பெறுநருக்கு கோரிக்கை விடுக்கலாம்; அத்துடன்

(ஆ) அத்தகைய விசாரணைகளிலிருந்து திருப்திகர மான பதில்களை உத்தியோகபூர்வ பெறுநர் கிடைக்கப்பெறும் வரை விண்ணப்பம் தொடர் பான பரிசீலனைகளை மேற்கொள்ளலாம்.

(3) தனிசுப் பாதுகாப்பு விண்ணப்பம் ஒன்றை கவனத்திலெடுப்பதில் நீதிமன்றம் (4) ஆம் உட்பிரிவிலுள்ள கட்டளைக்கற்கள் விண்ணப்பத் திகதியில் விண்ணப்பத்தில் வழங்கப்பட்டுள்ள தகவல்களிலிருந்து விண்ணப்பத்தேதியில் தோன்றின், மற்றும் வழங்கப்பட்ட தகவல்கள் பூரண மற்றவையோ அல்லது துல்லியமற்றவையோ என நம்புவ தற்கு நீதிமன்றத்திற்கு காரணமெதுவும் இல்லாதுவிடின் நீதிமன்றம் ஊகித்தல் வேண்டும்.

(4) கடனாளி பின்வருவனவற்றை செய்யும் மட்டும் தனிசுப் பாதுகாப்பு தனிசு பிற்போடல் தீர்ப்பு கட்டளை ஒன்றிற்கு கடனாளி; தகவுடையவராவார் :-

(அ) வருமதியாகவுள்ளதான சில தனிசுகள் அல்லது எல்லா தனிசுகளையும் செலுத்துவதற்கு இயலா துள்ளவர் அல்லது இயலாதவராகவிருப்பதற்கு சாத்தியமற்றவர்;

(ஆ) இலங்கையில் வசிப்பவராக இருத்தல்; அல்லது தனிசுப் பாதுகாப்பு விண்ணப்பத் திகதிக்கு முன்னர் மூன்று வருடங்களினுள் எந்த நேரத்தில்;

(i) இலங்கையில் வசித்தவர் அல்லது இலங் கையில் வதிவிடமொன்றைக் கொண்டவர்; அல்லது

(ii) இலங்கையில் வியாபாரம் ஒன்றை கொண்டு செல்பவர்;

(இ) தற்போது வங்கிமுறிவு கடனாளி அல்லர்;

(ஈ) IV ஆம் பாகத்தின்கீழ் தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டுக்கமையாதவர்;

(உ) தனிசு பாதுகாப்பு விண்ணப்பத் திகதிக்கு முன்னரான பன்னிரண்டு மாதங்களினுள் பாகம் V இன் கீழ் தனிசு புனர்வாழ்வு கட்டளைக்கு உட்பட்டிராதிருப்பவர்;

(ஊ) தனிசு பாதுகாப்பு விண்ணப்பத் திகதிக்கு முன்னர் 5 ஆண்டுகளினுள்பாகம் VI இன்கீழ் வங்கிமுறிவு கட்டளைக்கு அமைந்திராதிருப்பவர்;

(எ) தனிசு பாதுகாப்பு விண்ணப்ப திகதிக்கு முன்னர் பன்னிரண்டு மாதங்களினுள் பாகம் III இன் கீழ் தனிசு பாதுகாப்பு தனிசு தீர்ப்பு பிற்போடல் கட்டளைக்கு உட்பட்டிராதிருப்பவர்.

(5) தனிசு பாதுகாப்பு விண்ணப்பத்தினை கவனத்துட் கொண்டுள்ள நீதிமன்றம் பின்வருமாறு தோன்றின், நீதிமன்றத்திற்கு கடனாளி; தொடர்பில் தனிசுப் பாதுகாப்பு தனிசு தீர்ப்பு பிற்போடல் கட்டளையொன்றினை வழங்குதல் வேண்டும் :-

(அ) நான்காம் உட்பிரிவிலுள்ள தகவுடையதான கட்டளைக் கற்களை கடனாளி ஈடுசெய்துள்ளார்;

(ஆ) கடனாளி விண்ணப்பத்தினை செய்வதில் ஏதேனும் பொருள் சார்ந்த பொய்யான பிரதிநிதித்துவம் அல்லது செய்யாமையை செய்துள்ளார் என நம்புவதற்கு நீதிமன்றத்திற்கு எதுவும் இல்லை, அத்துடன்

(இ) தனிசுப் பாதுகாப்பு தனிசு தீர்ப்புப் பிற்போடல் கட்டளையினால் 37 ஆம் பிரிவுக்கிணங்க தனிசுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன;

(6) தனிசுப் பாதுகாப்பு கடன் தீர்ப்பு பிற்போடல் கட்டளை ஆக்குவதன்மீது, நீதிமன்றம் விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய வேறு விபரங்களுக்கு மேலதிகமாக, தனிப்பட்ட கடனுறுக்க வகையின்மை இடாப்பில் பதிவதற்கு உத்தியோகபூர்வ பெறுநருக்கு நீதிமன்றம் பின்வருவனவற்றை பணிக்கலாம் :–

(அ) கடனாளி பற்றிய விபரங்கள்;

(ஆ) கட்டளை வழங்கப்பட்ட திகதி;

(இ) கடன் தீர்ப்பு பிற்போடல் காலப்பகுதி இல்லா தொழிக்கின்ற திகதி,

(ஈ) நீடிக்கப்பட்ட கடன் தீர்ப்பு பிற்போடல் காலப் பகுதி இல்லாதொழிதல் உள்ளடங்கலாக ஏதேனும் கடன் தீர்ப்பு பிற்போடல் காலப்பகுதியின் நீடிப்பு.

(7) தனிசுப் பாதுகாப்பு விண்ணப்பத்தினை கவனத்துட் கொண்டு நீதிமன்றம் பின்வருவன தொடர்பில் கவனத்தி லெடுப்பின், கடனாளி தொடர்பில் தனிசு பாதுகாப்பு கடன் தீர்ப்பு பிற்போடல் கட்டளையொன்றினை ஆக்குவதற்கு மறுத்தல் வேண்டும் :-

(அ) நான்காம் உட்பிரிவில் தகவுடமைக் கட்டளைக் கல்லை கடனாளி ஈடுசெய்யவில்லை;

(ஆ) தனிசுப் பாதுகாப்பு தனிசு தீர்ப்பு பிற்போடல் கட்டளை மூலம் 37 ஆம் பிரிவின் நோக்கங் களுக்கான தனிசுகளை உள்ளடக்கியிருக்க வில்லை; அல்லது

(இ) விண்ணப்பத்தினை ஆக்குதல் அல்லது அதனோடு இணைக்கப்படுகின்ற எவையேனும் தகவல்களை வழங்குவதன் மீது பொருள் சார்ந்த பொய்யான பிரதிநிதித்துவம் அல்லது செய்யாமையை கடனாளி செய்திருத்தல்.

தனிசுப் பாதுகாப்பு, கடன் தீர்ப்பு பிற்போடல் கட்டளையொன்று பயனுறுதல்

**40.** (1) கடனாளியினால் செலுத்தப்பட வேண்டிய தனிசு உள்ளடக்கப்பட்ட ஒவ்வொரு விடயம் தொடர்பிலான தனிசுப் பாதுகாப்பு தனிசு தீர்ப்பு பிற்போடல் கட்டளை தேதியன்று தனிசு தீர்ப்பு பிற்போடல் தொடங்குகின்றது.

(2) மூன்றாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, தனிசு தீர்ப்பு பிற்போடல் காலப் பகுதியின் போது, உள்ளடக்கப் பட்ட தனிசு நிலுவையிலுள்ள கடனாளியின், தனிசுகொடு நருக்கு :–

(அ) தனிசு தொடர்பில் ஏதேனும் பரிகாரத்தினை கொண்டிருக்கவில்லை; அத்துடன்

(ஆ) பின்வருவன தொடர்பில் எவையேனும் நடவடிக்கைகளை எடுக்கவில்லை :–

(i) தனிசு தீர்ப்பு பிற்போடல் காலப் பகுதியின் போது உள்ளடக்கப்பட்ட தனிசின் மீது திரண்ட வட்டியை செலுத்துவதற்கு கடனாளியைத் தேவைப்படுத்துதல்;

(ii) தனிசு தீர்ப்பு பிற்போடல் காலப் பகுதியின் போது திரண்ட உள்ளடக்கப்பட்ட தனிசு தொடர்பிலான கட்டணங்கள், தண்டப் பணங்கள், அல்லது அறவீடுகள் என்பவற்றை செலுத்துவதற்கு கடனாளியொருவரை தேவைப்படுத்தல்;

(iii) கடனாளியினால் கடன்கொடுநருக்கு அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவொன்றை தேவைப்படுத்துதல்;

(iv) தனிசுகொடுநர் மற்றும் கடனாளி என்போருக்கிடையிலான உடன்படிக்கையின் கீழ் வட்டி, கட்டணங்கள், தண்டங்கள், அல்லது மீறியதான அறவீடுகள் ஆகியவற்றை கடனாளியினால் தனிசு தீர்ப்பு

பிற்போடல் காலப்பகுதியின் போது செலுத்தப்படாமையாகப் பரிகரித்தல்;

(v) தனிசு தீர்ப்பு காலப் பகுதியின் போது கடனாளி; தவணை தவறியமையின் காரணமாக நிலுவையிலுள்ள தொகை பற்றி தனிசு தொடர்பான தகவல் பணியகத் திற்கு அறிக்கையிடல், அதேவேளை தனிசு பாதுகாப்பு தனிசு தீர்ப்பு பிற்போடல் கட்டளை காணப்படல்;

(vi) வேறு வகையிலன்றி கடனாளியின்; கோரிக்கை யின்படி, உள்ளடக்கப்பட்ட தனிசு ஒன்றின் கொடுப்பனவு தொடர்பில் கடனாளி ஒருவரை தொடர்பு கொள்ளல்;

(vii) உள்ளடக்கப்பட்ட தனிசு தொடர்பில் கடனாளிக்கு எதிராக எவையேனும் சட்ட நடவடிக்கைகளை ஆரம்பித்தல் அல்லது தொடர்தல்;

(viii) உள்ளடக்கப்பட்ட தனிசு கொடுப்பனவு ஒன்றினை சேகரித்தல், பாதுகாத்தல், அறவிடல், அல்லது கோரல்;

(ix) கடனாளிக்கு எதிராக நீதிமன்றம் ஒன்று அல்லது நியாய சபையொன்றின் தீர்ப்பினை அல்லது கட்டளையை நிறை வேற்றுதல் அல்லது வலுவுறுத்தல்;

(x) பிடியாணையொன்றை பெற்றுக்கொள்ளல்;

(xi) கடனாளியின் உடைமையிலுள்ள பண்டங் களை அறவிடல்;

(xii) உள்ளடக்கப்பட்ட தனிசு தொடர்பில் வைக்கப்பட்டிருக்கின்ற பிணைப் பொறுப்பை வலுவுறுத்து;

(xiii) இயைபான தனிசுகொடுருடன் கடனாளி செய்துகொண்டதான வாடகை உடன் படிக்கையின் கீழ் கடனாளி வசிக்கின்ற வளவுகளின் உடைமையை பெற்றுக் கொள்ளல்;

(xiv) தனிசு தீர்ப்பு பிற்போடலுடன் தொடர்புடைய கடனாளியின் இணைந்த ஆளானவரான வேறொரு ஆளுக்கு எதிராக இவ் உட்பிரிவில் எவையேனும் வழக்குகளை எடுத்தல்;

(xv) தனிசு தீர்ப்பு பிற்போடலுடன் தொடர்புடைய கடனாளியின் தனிசுகளுக்கு உத்தரவாதமளித்த வேறொரு ஆளுக்கு எதிராக இவ் உட்பிரிவிலுள்ள எவையேனும் வழக்குகளை எடுத்தல்;

(xvi) கடன்கொடுநர் பண்டங்களின் சொந்தக்காரராக அல்லது குத்தகைக்காரராக உள்ளவிடத்து கடனாளி பயன்படுத்திய அல்லது அவரது உடமையிலுள்ள 34 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட வகையினதாக எவையேனும் பண்ணடங்களின் உடைமையை எடுத்தல் அல்லது வேறு வகையில் அறவிடுதல்; அல்லது

(xvii) (i), (ii), (iii), (iv), (v), (vi), (vii), (viii), (ix), (x), (xi), (xii), (xiii), (xiv), (xv) அல்லது (xvi) எனும் உட்பந்தியில் குறிப்பிடப்பட்ட எவையேனும் நடவடிக்கைகளை எடுப்பதற்கு முகவரை அறிவுறுத்தல்.

(3) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எதுஎவ்வாறிருப்பினும், நீதிமன்றம், தனிசு பாதுகாப்பு கடன் தீர்ப்பு கட்டளை வலுவிலிருக்கின்ற வேளையில், கடன் கொடுநரினால் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் மேல், (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (v), (vi), (vii), (viii), (ix), (x), (xi), (xii), (xiii), (xiv), (xv), (xvi) அல்லது (xvii) என்னும் உட்பந்திகளில் குறிப்பீடு செய்யப்பட்ட நடவடிக்கையொன்றினை எடுப்பதற்கு கடன்கொடுநரை நீதிமன்றம் பின்வருமாறு கருதின், அனுமதிக்கலாம் அதாவது :–

(அ) விதிவிலக்காண சூழ்நிலைகளின் காரணமாக தனிசுகொடுநரை நடவடிக்கைகளை எடுப்பதற்கு அனுமதித்தல் நியாயமானது ஆகும்; அத்துடன்

(ஆ) நடவடிக்கையானது :–

(i) தனிசு தீர்ப்பு பிற்போடலுடன் தொடர்புடைய கடனாளிக்கு முறையற்ற பாதிப்பை ஏற்படுத்தலாகாது;

(ii) வேறு எவரேனும் கடன்கொடுநருக்கு நியாயமற்ற முறையில் பங்கமேற்படுத்துதலாகாது; அல்லது

(iii) தனிசு தீர்ப்பு பிற்போடல் பாதுகாப்புகளை கணிசமானளவு குறை மதிப்பிட்டுக்கு உட்படுத்தலாகாது.

(4) இப்பிரிவிலுள்ள எதுவும் கடனாளிக்கு எதிரான எவையேனும் குற்றவியல் செயன்முறைகளின் ஆரம்பம் அல்லது தொடர்ச்சியை தடுப்பதாகப் பொருள் கொள்ளப் படுதலாகாது.

(5) இப்பிரிவிற்கு முரணாக எடுக்கப்பட்ட ஏதேனும் வழக்கு வெற்றானதும் வெறிதானதுமாக்கப்படுதல் வேண்டும்.

(6) இப்பிரிவிலுள்ள எதுவும், தனிசு பாதுகாப்பு கடன் தீர்ப்பு பிற்போடல் கட்டளை ஆக்குவதற்கு முன்னர் நிறை வேற்றல் அல்லது ஏனைய சட்ட செயன்முறைகள் அல்லது இடர் என்பன பூரணப்படுத்தப்பட்டுள்ளவிடத்து அல்லது கடனாளியின் ஆதனத்துக்கு எதிராக ஏதேனும் நிறை வேற்றுகை அல்லது ஏனைய சட்ட செயன்முறைகள் அல்லது இடர் என்பவற்றை தனிசுகொடுநருக்கான உரித்துடை மையை பாதித்தலாகாது :-

(அ) அசையும் அல்லது அசையாத ஆதனங்களுக்கு எதிரான கைப்பற்றல் மூலமாக பூரணப் படுத்தப்பட்டிருக்குமிடத்து அல்லது பெறுநர் அல்லது நியமத்தர் அல்லது நிறைவேற்றலுடன் மற்றும் பூரணப்படுத்தப்பட்ட விற்பனையுடன் சாட்டப்பட்ட ஆள் உடைமைக்காக உட்பிரவே சித்தல் மற்றும் பூரணப்படுத்தப்பட்ட விற்பனை மற்றும்

(ஆ) தனிசு திருப்திப்படுத்தல் படி தனிசு தொடர்பான இணைப்புகள் பூரணப்படுத்தப்பட்டிருத்தல்.

(7) தனிசு தீர்ப்பு பிற்போடல் காலப் பகுதியின் முடிவின் பின்னர், தனிசு கொடுநரோ அல்லது தனிசு கொடுநரின் முகவரோ பின்வருவனவற்றுக்கு உரித்துடையவரல்லர் :–

(அ) தனிசுகொடுநர் மற்றும் கடனாளிக்கு இடை யிலான உடன்படிக்கையின் கீழ் கடனிறுக்க வகையற்ற தனியாளினால் தனிசு தீர்ப்பு பிற்போடல் காலப் பகுதியின்போது செலுத்தப் படாத வட்டி, கட்டணங்கள், தண்டப்பணம் அல்லது அறவீடுகள் என்பவற்றினால் தவறிய தாகவோ அல்லது மீறியதாகவோ பரிகரிப் பதற்கு;

(ஆ) வட்டி, கட்டணங்கள், தண்டப்பணங்கள் அல்லது அறவீடுகளின் கடனாளியினால் தனிசு தீர்ப்பு பிற்போடல் காலப்பகுதியின் போது ஏதேனும் செலுத்தப்படாத கொடுப்பனவை தனிசு குறிப்பீடு தகவல் பணியகத்தில் பதிவதற்கும் அல்லது

(இ) தனிசு தீர்ப்பு பிற்போடல் காலப் பகுதியின் போது (2) ஆம் உட் பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (ii) - (iii) என்னும் உட் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட கட்டணங்கள், தண்டப் பணங்கள், அறவீடுகள் அல்லது அதிகரிக்கப் பட்ட கொடுப்பனவுகள் என்பவற்றைச் செலுத்துவதற்கு கடனாளியொருவரை தேவைப் படுத்துவதற்கும்.

(8) ஏழாம் உட் பிரிவுக்கமைய, மற்றும் கடனாளி தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை கடன் தீர்ப்பு பிற்போடல் காலப் பகுதியின் முடிவின் பின்னர், கடன் தீர்ப்பு பிற்போடல் காலப் பகுதியின் கட்டளையின் நிலைத் திருப்புக்காக பிறபோடல் தீர்ப்புக் காலப்பகுதியின் போது நிலுவையாக வந்துள்ள எல்லாக் கொடுப்பனவுகளையும் செலுத்துவதற்கு தனிசுகொடுநர் தேவைப்படுத்துவதற்கு தனிசுகொடுத்தவர் அல்லது அவரது முகவர் உரித்துடை யவராவார்.

கடன் பாதுகாப்பு கடன் தீர்ப்புப் பிற்போடல் கட்டளை காலப் பகுதி

**41.** (1) நீதிமன்றம் ஒன்று தனிசு பாதுகாப்பு கடன் பிற்போடல் தீர்ப்பு கட்டளையை ஆக்கும் போது தனிசு பாதுகாப்பு கடன் தீர்ப்பு பிற்போடல் ஒன்று ஆரம்பமாகின்றது.

(2) மூன்றாம் உட்பிரிவுக்கமைய பின்வருவனவாக விருந்தாலொழிய (1) ஆம் உட்பிரிவின் கீழ் அது ஆரம்பிக்கப் பட்ட திகதியிலிருந்து அறுபது நாட்களுக்கு தனிசு பாதுகாப்பு கடன் தீர்ப்பு பிற்போடல் தொடர்கிறது :–

(அ) 77 ஆம் பிரிவுக்கிணங்க தனிசு தீர்ப்பு பிற்போடல் இரத்துச் செய்யப்பட்டிருத்தல்;

(ஆ) தனிசு தீர்ப்பு பிற்போடல் (5) ஆம் உட்பிரிவின் கீழ் கடனாளி மரணமடைவதுடன் முடிவடைகின்றது; அல்லது

(இ) தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை கட்டளையை ஆக்குவதுடன் 6 ஆம் உட்பிரிவின் கீழ் கடன் தீர்ப்பு பிற்போடல் முடிவடைந் திருத்தல்.

(3) கடனாளியினால் செய்யப்பட்ட விண்ணப்பத்தின்மீது பின்வருமாறுள்ளவிடத்து, நீதிமன்றம் தொண்ணூறு நாட்களுக்கு விஞ்சாத மேலதிக காலப் பகுதியொன்றின் மூலம் தனிசு தீர்ப்பு பிற்போடல் காலப்பகுதியை நீடிக்கலாம் :-

(அ) கடனாளி நன்நோக்கத்துடனும் நியாயமான விரைவுபடுத்தலுடன் செயலாற்றியுள்ளார் என நீதிமன்றம் திருப்தியுறுமிடத்து; அத்துடன்

(ஆ) IV ஆம் பாகத்தின் கீழ் தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டிற்கான விண்ணப்பத்தை தயாரிப்பதற்கு கடனாளிக்கு நேரம் வழங்குவது உள்ளடங்கலாக தனிசு தீர்ப்பு பிற்போடல் காலப்பகுதியை நீடிப்பதானது இச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றும் என நீதிமன்றம் திருப்திப்படுமிடத்து.

(4) நீதிமன்றம் (3) ஆம் உட்பிரிவின் கீழ் தனிசு தீர்ப்பு பிற்போடல் காலப் பகுதியை நான்கு தடவைகளுக்கு மேற்படாமல் மற்றும் முந்நூற்று அறுபது நாட்களை விஞ்சாத மொத்த காலப்பகுதிக்காகவும் நீடிக்கலாம்.

(5) தனிசு தீர்ப்பு பிற்போடல் காலப்பகுதியின் போது கடனாளி இறக்குமிடத்து, தனிசு பிற்போறடலானது கடனாளி இறந்த திகதிக்கு அடுத்த நாளன்று தனிசு முடிவடைகின்றது.

(6) கடனாளி; தொடர்பில் தனிப்பட்ட கடனிறுக்கவகை யின்மை கட்டளையொன்று ஆக்கப்படுமிடத்து, தனிசுதீர்ப்பு பிற்போடல் தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை கட்டளைத் திகதியன்று முடிவடைகின்றது.

(7) இரண்டாம், (5) ஆம், அல்லது (6) ஆம் உட்பிரிவுகளுக் கிணங்க, தனிசு தீர்ப்பு பிற்போடல் காலப்பகுதியானது முடிவுறுகின்றவிடத்து, உத்தியோக பூர்வ பெறுநர், இடாப்பிலிருந்து தனிசு பிற்போடல் தொடர்பிலான எல்லாத் தகவல்களையும் அகற்றப்படுவதற்கு செய்வித்தல் வேண்டும்.

கடன் பாது காப்பு கடன் தீர்ப்பு பிற்போடல் காலப் பகுதியில் கடனாளிகளின் கடப்பாடுகள்

**42.** (1) தனிசு பாதுகாப்பு தனிசு பிற்போடல் காலப் பகுதியின் போது, பின்வருமாறு செய்தல் வேண்டும் :-

(அ) கடனாளியினது சூழ்நிலைகளில் அல்லது நிதி நிலைமைகளில் ஏதேனும் பொருள் ரீதியான மாற்றம் இருப்பின், உத்தியோகபூர்வ பெறுநருக்கு அறிவித்தல்,

(ஆ) தனிசு தீர்ப்பு பிற்போடல் காலப்பகுதியின் போது செலுத்தப்பட வேண்டிய தற்போதைய பொறுப்பு தொடர்பான ஏதேனும் நிலுவை கொடுப்பனவுகளை செலுத்துதல்,

(இ) தனியாகவோ, அல்லது வேறு ஆட்களுடன் கூட்டாகவோ மேலதிக கடன்களை பெறக் கூடாது, எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கூட்டாக இணைந்து பெறுகின்ற தொகையானது ஒரு இலட்சம் ரூபாவை விட அதிகமாகவோ அல்லது விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய அதிக தொகையை விட இருத்தல் கூடாது,

(ஈ) கடனாளியினால் வழமையாகக் கொண்டு நடத்தப்படுகின்ற வியாபாரம் அல்லது கடனாளி யினது வழமையான குடும்ப அலுவல்கள் என்ப வற்றைத் தவிர எவையேனும் சொத்துக்களை கையுதிர்த்தலாகாது; அத்துடன்

(உ) நியாயமான முறையில் உத்தியோகபூர்வ பெறுநருடன் ஒத்துழைத்தல்.

(2) ஓராம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட கடப்பாடுகளுக்கு மேலதிகமாக, தனிசு பாதுகாப்பு தனிசு பிற்போடல் காலப் பகுதியின் போது, தனிசு பாதுகாப்பு தனிசு பிற்போடல் சூழ்நிலைகளில் நியாயமாக ஏற்புடயதான 32 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட கடனாளிகளின் எவையேனும் இயைபான கடப்பாடுகளுக்கு கடனாளி அமைந்தவராவார்.

(3) ஓராம் உட்பிரிவிற்கு முரணாக ஏதேனும் வழக்கு வெற்றானதும் வெறிதானதாக்கப்படுதலும் வேண்டும்.

தனிசு பாதுகாப்பு தனிசு பிற்போடலுக்கு கடன் கொடுநரின் ஆட்சேபனை

**43.** (1) இப்பாகத்தின் கீழ் தனிசு பாதுகாப்பு தனிசு பிற்போடல் தொடர்பான அறிவித்தல் கிடைக்கப் பெறுகின்ற கடன்கொடுநர் ஒருவர் தனிசு தீர்ப்பு பிற்போடலுக்கு ஆட்சேபனை செய்வதற்குநீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் தனிசு பாதுகாப்பு தனிசு பிற்போடலுக்கான ஆட்சேபனைக்கான கடன்கொடுநரின் விண்ணப்பமொன்று பின்வருவனவற்றில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவைகளை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும். அவையாவன :–

(அ) 39 ஆம் பிரிவில் தகவுடமை கட்டளைக்கற்களை கடனாளி ஈடுசெய்யவில்லை;

(ஆ) தனிசு பிற்போடலினால் மேவப்பட வேண்டிய தனிசுகள் 37 ஆம் பிரிவின் நோக்கங்களுக்காக உள்ளடக்கப்படவில்லை;

(இ) விண்ணப்பத்தை செய்வதில் அல்லது அதனோடு இணைவதன்மீது எவையேனும் தகவல்களை வழங்குவதில் கடனாளி பிழையான பொருள் ரீதியான பிரதிநிதித்துவங்களை அல்லது செய்யாமையை செய்திருத்தல்;

(ஈ) 32 பிரிவில் குறித்துரைக்கப்பட்ட கடப்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதற்கு பொருள் சார்ந்த முறையில், கடனாளி தவறியிருத்தல்; அல்லது

(உ) தனிசு பாதுகாப்பு தனிசு பிற்போடல் கட்டளையானது கடன்கொடுநரின் அக்கறைகளுக்கு சீர் செய்ய முடியாத தீங்கினை ஏற்படுத்துதல்.

(3) தனிசு பாதுகாப்பு தனிசு தீர்ப்பு பிற்போடல் தொடங்குகின்றதான தேதியன்று தொடங்குகின்ற தொண்ணூறு நாட்கள் எனும் காலப்பகுதியினுள் தனிசு பாதுகாப்பு தீர்ப்புப் பிற்போடலுக்கான ஆட்சேபனைக்கு நீதிமன்றத்துக்கு கடன் கொடுநரின் விண்ணப்பமொன்று செய்யப்படுதல் வேண்டும்.

(4) விண்ணப்பம் எவ்ஏதுக்கள் அடிப்படையில் செய்யப் பட்டுள்ளதோ அவ் ஏதுக்கள் உள்ளடங்கலாக தனிசு பாதுகாப்பு கடன் தீர்ப்பு ஆட்சேபனை செய்வதற்கான விண்ணப்ப மொன்றை கடனாளிக்கு கடன்கொடுநர் வழங்குதல் வேண்டும்.

(5) இப்பிரிவின் கீழான விண்ணப்பமொன்றின் மீது, (2) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட எவையேனும் ஏதுக்கள் பற்றி திருப்திப்படுவிடத்து நீதிமன்றம் பின்வருவனவற்றுள் ஒன்றை அல்லது இரண்டை அதாவது :–

(அ) தனிசு பாதுகாப்பு பிந்போடல் தீர்ப்பு கட்டளை வேறு எவரேனும் கடன் கொடுநருக்க நியாய மற்ற முறையில் பங்கம் ஏற்படுத்தக் கூடியதான அவ்வாறு செய்கின்ற விடத்து நீதிமன்றத்துக்கு விண்ணப்பம் ஒன்றைச் செய்கின்ற கடன்கொடு நருக்கு முழுமையாக அல்லது பகுதியளவில் ஏற்புடைமையாதலாகாது என பிணிக்கின்ற கட்டளையொன்றை ஆக்கலாம்;

(ஆ) பிற்போடல் தீர்ப்புக் கட்டளை ஏற்புடைமையாகின்ற வேறு எவரேனும் கடனாளி அல்லது கடன்கொடுநர் தொடர்பில் தனிசு பிற்போடல் தீர்ப்புக் கட்டளையை இரத்துச் செய்கின்ற கட்டளையொன்றை ஆக்கலாம்.

(6) ஐந்தாம் உட்பிரிவின் கீழான கட்டளையொன்றை ஆக்குகின்ற விடத்து, நீதிமன்றம் தனிசு பிற்போடல் தீர்ப்புக் கட்டளை ஏற்புடைமையாகின்ற தனிசு தொடர்பிலான தனிசு பிற்போடல் தீர்ப்புக் காலப்பகுதியின் போது திரண்டதான ஏதேனும் வட்டி, கட்டணக் அல்லது விதிப்பனவுகளைச் செலுத்துவதற்கு கடனாளியை தேவைப்படுத்தலாம்.

(7) ஏதேனும் சந்தர்ப்பத்தில், (5) ஆம் உட்பிரிவு அல்லது (6) ஆம் உட்பிரிவின் கீழான கட்டணமொன்றை நீதிமன்றம் ஆக்குகின்றவிடத்து, நீதிமன்றம் (5) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளையொன்று (2) ஏற்புடைமையாகின்ற கடனாளிக்கு,

உத்தியோகபூர்வ பெறுகைக்கு மற்றும் ஏனைய கடன்கொடுநர்களுக்கு எழுத்துமூல அறிவித்தலை வழங்குதல் வேண்டும்.

(8) ஏழாம் உட்பிரிவின் கீழான உத்தியயோகபூர்வ பெறுநருக்கு நீதிமன்றம் எழுத்துமூல அறிவித்தலை வழங்குகின்ற விடத்து, உத்தியோகபூர்வ பெறுநர் பின்வருமாறு பதினான்கு நாட்கள் என்னும் காலப்பகுதியினுள் :–

(அ) தனிப்பட்ட கடனிறுக்க வகையின்மை இடாப்பில் பதிவொன்றை மேற்கொள்வதற்கு செய்வித்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) ஐந்தாம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட நீதிமன்றக் கட்டளையின் அறிவிப்பையும் (6) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் தேவைபாடுகளையும் பற்றிய அறிவிப்பு ஒன்றை பாதிக்கப்பட்ட கடன்கொடுநருக்க அனுப்புதல் வேண்டும்.

## பாகம் IV

### தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கு ஏற்பாடுகள்

தனிசு மீள் கட்டமைப்பு ஒழுங்கு ஏற்பாடுகள்

**44.** (1) இப் பாகம் தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கு ஏற்பாட்டு நடவடிக்கைமுறையொன்றை கடனாளியின் நிலுவையாகவுள்ள பொறுப்புக்கள் பற்றிய திருப்திப்படுமிடத்து அல்லது அவற்றை நோக்கி கடனாளியின் கடன்கொடுநர்கள் நெகிழ்ச்சியான மீள்கொடுப்பனவை ஒழுங்கேற்பாட்டின் மூலம் தீர்வு காணப்படக்கூடிய தனிப்பட்ட கடனிறுக்க வகையின்மை, பிரேரணையால் அல்லது தனிப்பட்ட கடனிறுக்க வகையின்மை நிர்வாகி ஒருவரின் உதவியுடன் கடனாளியொருவரின்கீழ் தனிசு மீள் கட்டமைப்பு ஒழுங்கேற்பாடுகள் ஒன்றைத் தாபிக்கின்றது. இதன் கீழ் கடனாளி தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை பிரேரணையாளர் அல்லது தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நிருவாகி ஆகியோரின் உதவியுடன் கடனாளிக்கு தனிசுகொடுத்தவருடன் நெகிழ்ச்சியான மீள் கொடுப்பனவு ஏற்பாடுகள் பற்றி பேச்சுவார்த்தையில் ஈடுபடலாம், அல்லது தனிசுகொடுத்தவரின் நிலுவை பொறுப்புகள் தொடர்பில் திருப்திகரமான பேச்சுவார்த்தையில் ஈடுபடலாம்.

(2) அத்தகைய கடனாளிகள் அவர்களின் தனிசுகளை மீள் கொடுப்பனவு செய்வதற்கான நியாயபூர்வமான உதவு தொகைகள் செய்கின்றதான உறுதிப்படுத்துகின்ற வேளையில் வங்கிமுறிவுக்காக மாற்றீடொன்றாக தனிசு விடுவிப்பு மற்றும் பொருளாதார புனர்வாழ்வொன்றை கொள்வதற்காக தேறிப்படற்பாலதான சொத்துக்கள் மற்றும் வருமானத்தை கடனாளிகளை இயலச்செய்வதனை முறையானது நோக்காகத் தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டு நடவடிக்கையை கொண்டிருத்தல் வேண்டும்.

(3) தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பட்டு நடவடிக்கை முறையானது கடனாளிகள் மற்றும் கடன் கொடுநர்களுக்கிடையிலான பேச்சு வார்த்தைமூலம் தனிசுகளை மீள் கட்டமைப்புச் செய்வதினூடாக தனியான உரிமையாண்மை, பங்காண்மை மற்றும் ஏனைய கூட்டிணைக்கப்படாத தொழில்கள் என்பவற்றை புனர்வாழ்வளித்து மீட்புச் செய்வதனை இயலச் செய்வதற்கான நோக்கைக் கொண்டிருத்தல் வேண்டும்.

தனிசு மீள் கட்டமைப்பு ஒழுங்கேற் பாடுகள் பொதுவான நிபந்தனைகள்

**45.** (1) இச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 46 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தகவுடமை கட்டளைக்கற்களை திருப்தி செய்கின்றவரான கடனாளியொருவர், கடனாளியின் தனிசுகளை திருப்திப்படுவதற்கான அல்லது மீள்கட்டமைப்பதற்கான தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடு ஒன்றுக்காக எல்லாக் கடன்கொடுநர்களுக்கும் பிரேரணையொன்றை ஆக்கலாம்.

(2) தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடுகளுக்கான பிரேரணையொன்று இப்பாகத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க மற்றும் கடனாளியினால் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப் படலாம் அல்லது கடனாளி சார்பாக தனிப்பட்ட கடனிறுக்க வகையின்மை பிரேரணையாளரினால் இந்த பகுதியின் விதித்துரைக்கப்படக்கூடியவாறான எவையேனும் ஏற்பாடுகளுக்கிணங்க கடனாளியினால் அல்லது தனிப்பட்ட கடன்கள் பிரேரணையாளரினால் கடனாளியின் அல்லது செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்படலாம் அல்லது விதிக்கப்படக் கூடிய வேறு ஏதாவது ஏற்பாடுகளின் பிரகாரம் மேற்கொள்ளலாம்.

(3) தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நிருவாகியாக தனிசு மீள்கட்டமைப்பு ஏற்பாடுகள் நடைமுறைக்கு வந்ததன் பின்னர், தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை பிரேரணையாளர் ஒருவரும் செயற்படலாம்.

(4) பிரிவு 62 மற்றும் பிரிவு 63 என்பவற்றுக்கிணங்க இப்பாகத்தின் கீழ் 62 ஆம் பிரிவின் கீழ் ஒழுங்கு விதிகளுக்கான விதிகள் தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை பிரேரணையாளர்கள் மற்றும் தனிப்பட்ட கடனிறுக்க வகையின்மை நிர்வாகிகளின் பணிகளை நிறைவேற்றுவதற்கு ஒழுங்குவிதிகளை ஆக்குவதற்காகவும் விதிகளை ஆக்கலாம்.

(5) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கடனாளிகள் தொடர்பான தனிசு மீள்கட்டமைப்பு ஏற்பாடு ஒன்றிற்கான இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பிரேரணைகள், ஒரு பிரேரணையில் இத்தகைய சந்தர்ப்பங்களில் கையாளலாம் :-

(அ) சம்பந்தப்பட்ட கடனாளிகளது நிதி சார் தொடர்புகள் காரணமாக நியாயபூர்வமான அளவில் ஒன்றாக அவை கையாளப்படலாம் என தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை பிரேரணையாளர் கருதுகின்றவிடத்து; அத்துடன்

(ஆ) ஒவ்வொரு பிரேரணைகள் தொடர்பான நியதிகளானது பின்வருவன உள்ளடங்கலாக எவ்வாறு ஒழுங்கேற்பாடுகள் நிருவகிக்கப்படவிருக்கின்றன என்பது பற்றிய விபரங்களை குறித்துரைக்கின்றவிடத்து :-

(i) கூட்டான மற்றும் தனிப்பட்ட ஆதனங்களை பரிகரிப்பு செய்தல் மற்றும் கூட்டான மற்றும் தனிப்பட்ட தனிசுகளை பரிகரிப்புச் செய்தல்;

(ii) ஒவ்வொரு ஒழுங்கேற்பாட்டிற்குமான அங்கீகாரம் வேறு ஒழுங்கேற்பாட்டின் அங்கீகாரத்தின் மீது எதிர்பாராதாக உள்ளதா என்கின்றவிடத்து;

(iii) வேறு ஏதேனும் ஒழுங்கேற்பாட்டின் மீது ஒரு ஒழுங்கேற்பாட்டின் தவறுகை அல்லது முன்கூட்டிய முடிவுறுத்தலின் விளைவு;

(iv) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கடனாளிகளினால் எவையேனும் கூட்டுக் கொடுப்பனவுகள் எவ்வாறு செய்யப்படுகின்றவிடத்து தனிசுகொடுநர்களுக்கு இடையில் எவ்வாறு பங்கீடு செய்யப்பட்டுள்ளது.

தனிசு மீள் கட்டமைப்பு ஒழுங்கேற் பாடுகள் தகவுடமை கட்டளைக் கற்கள்

**46.** அத்தகைய கடனாளி பின்வரும் எல்லா கட்டளைக் கற்களையும் ஈடுசெய்துள்ள போது தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடு ஒன்றுக்கு தகைமையுடையவராதல் வேண்டும் :-

(அ) கடனாளி வருமதியாகவுள்ள தமது தனிசுகளை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ கடனாளி செலுத்தவியலாதவரான அல்லது செலுத்தவியலாத சாத்தியமுள்ளவராக இருத்தல்;

(ஆ) கடனாளி இலங்கையில் வதிபவராக அல்லது தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடொன்றுக்கு பிரேரணையொன்றை தேதிக்கு முன்னரான மூன்று ஆண்டுகளினுள்ளான ஏதேனும் தேதியில் :-

(i) வழமையாக வதிபவராக அல்லது இலங்கையில் வதிவதற்கான இடம் ஒன்றை கொண்டிருப்பவராக; அல்லது

(ii) இலங்கையில் தொழிலை கொண்டு நடத்துபவராக;

(இ) கடனாளி தற்போது வங்கிமுறிவு கடனாளி அல்லர்;

(ஈ) பாகம் V இன் கீழ் தனிசு புனர்வாழ்வு கட்டளைக்கு அமையாதவர்.

தனிசு மீள் கட்டமைப்பு ஒழுங்கேற் பாடுகள் பணிப் புறுத்தும் ஏற்பாடுகள்

**47.** (1) தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடானது ஒழுங்கேற்பாடு தொடர்பில் தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நிருவாகியொருவராக செயலாற்றுவதற்கு ஆளொருவரை, குழுமத்தை அல்லது குழுவை அதிகாரமளித்தல் வேண்டும்.

(2) தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடு ஒன்றானது தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நிருவாகியொருவரை பின்வருவனவற்றுக்காக அதிகாரமளிக்கலாம் அல்லது தேவைப்படுத்தலாம் :-

(அ) கடனாளியின் சார்பில் கடனாளியின் பெயரில் கடனாளியின் தொழில் அல்லது வியாபாரத்தை நடாத்துவதற்கு;

(ஆ) கடனாளியின் சொத்துக்களை தேறிப்பெறுவதற்கு; அல்லது

(இ) கடனாளியின் எவையேனும் நிதிகளை சேகரிப்பதற்கு, நிருவகிப்பதற்கு அல்லது விநியோகிப்பதற்கு.

(3) தனிசு மீள் கட்டமைப்பு ஒழுங்கேற்பாடொன்று பின்வருவன தவிர நீண்ட காலப் பகுதியொன்றின் காலப் பகுதிக்காக உள்ளடக்கப்பட்ட தனிசுகள் தொடர்பில், ஒழுங்கேற்பாட்டின் கீழ் கொடுப்பனவுகளை செய்வதற்கு கடனாளிக்கு தனிசு வழங்கலாகாது :–

(அ) மூன்று ஆண்டுகள்; அல்லது

(ஆ) கடனாளியின் உள்ளடக்கப்பட்ட தனிசுகளின் தொகையானது ஏழு ஆண்டுகளுக்கு ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சியிருப்பின் ஏழு வருடங்களில்;

(4) தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடு ஒன்று ஒழுங்கேற்பாடு தொடர்பில் முறையாக உறப்பட்டவையான தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை பிரேரணையாளர் மற்றும் தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நிருவாகி என்போரின் கட்டணங்கள் மற்றும் செலவுகள் வேறு எவையேனும் தனிசுகள் செலுத்தப்படுவதற்கு முன்னர் கொடுப்பனவொன்றுக்கு ஏற்பாடு செய்தல் வேண்டும்.

(5) நான்காம் உட்பிரிவின் நோக்கங்களுக்காகவும் மற்றும் அத்தியாவசிய பொருட்கள் மற்றும் சேவைகளை விநியோகிப்பதற்காக தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை பிரேரணையாளர் மற்றும் / அல்லது தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நிருவாகி ஆகியோரினால் உறப்பட்ட நான்காம் அட்டவணைப்படியான கட்டணங்கள் ஆகியன ஏற்பாட்டின் செலவொன்றாக இருத்தல்.

(6) தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடொன்று 34 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டதான கடனாளி தனது ஏதேனும் பாதுகாக்கப்பட்ட ஆதனத்தினை விற்பதற்கு அல்லது கையுதிர்ப்பதற்கு கடனாளியை தேவைப்படுத்துதலாகாது.

(7) 36 ஆம் பிரிவிற்கிணங்க தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடொன்று :–

(அ) கடனாளி மற்றும் கடனாளியில் தங்கியுள்ளோரின் நியாய தேவைகளை ஈடுசெய்வதற்கு அவசியமான போதியளவிலான வருமானத்தை தக்கவைப்பதற்கு கடனாளிக்கு ஏற்பாடு செய்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) கடனாளியினது பாதுகாக்கப்பட்ட வருமானத்திலிருந்து கொடுப்பனவுகளை செய்வதற்கு கடனாளியை தேவைப்படுத்தலாகாது.

(8) பன்னிரண்டு மாத கால இடைவெளிகளை விஞ்சாது கிரமமான இடைவேளைகளில் தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நிருவாகியினால் கடனாளி தொடர்பிலான சூழ்நிலைகளை மீளாய்வு செய்வதற்காக ஏற்பாட்டினை தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடானது செய்தல் வேண்டும்.

(9) மூன்றாம் உட்பிரிவு எதுஎவ்வாறிருப்பினும் தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடு ஒன்று 60 ஆம் பிரிவின்கீழ் ஒழுங்கேற்பாடொன்றை பூர்த்தி செய்ததன் பின்னரான நேரத்தில் தனிசின் மூல நியதிகளின் கீழ் வருமதியாகவுள்ள இறுதிக் கொடுப்பனவின் மீதான ஏதேனும் தனிசின் மீது 60 ஆம் பிரிவின் கீழ் ஒழுங்கேற்பாடொன்று பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர், கொடுப்பனவுகளின் தொடர்ச்சியை ஏற்பாடு செய்தல் வேண்டும்.

முந்துரிமை உரிமை கோரிக்கையை வைத்திருப்பவர் அத்தகைய உரிமை கோரிக்கையின் வேறுபட்ட பரிகாரிப்பிற்காக எழுத்து மூல சம்மதத்தை அளித்திருந்தால் ஒழிய,

(10) தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடொன்று பின்வருவனவற்றுக்கான முன்னுரிமை தவிர வேறு வகையில் செலுத்தப்பட வேண்டிய முந்துரிமை கோரிக்கைகளுக்காக ஏற்பாடு செய்தலாகாது :–

(அ) முந்துரிமை உரிமை கோரிக்கை விருப்புத்தெரிவு கேட்புத் தொகை தரப்படுத்தலானது முந்துரிமை உரிமை கோரிக்கையை விட பின்னால் இருத்தல்; அல்லது

(ஆ) முந்துரிமை உரிமை கோரிக்கையொன்று உரிமைக்கோரிக்கையொன்று அல்ல.

தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடுகள் பிணைப் பொறுப்பளிக்கப்பட்ட கடன் கொடுநர்கள் மற்றும் ஆதன உரிமைகள்

**48.** (1) தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டின் நியதிகளுக்கு திறத்தவர்கள் இணங்குவதற்கான இயலுமைமையை மட்டுப்படுத்தாமல், இப்பாகத்தின் ஏற்பாடுகளின் கீழ் வழங்கப்படும்போது தவிர, ஒழுங்கேற்பாடொன்று மற்றும் பிணைப்பொறுப்பளிக்கப்படாத மற்றும் பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட தனிசுகள் இரண்டினதும் திருப்திக்காக மீள்கட்டமைப்பிற்காக ஏற்பாடு செய்கின்ற நியதிகளை உள்ளடக்கலாம்.

(2) ஐம்பத்தியிரண்டாம் பிரிவின் கீழ் கடனாளியின் கடன்கொடுநர்களின் அங்கீகாரத்தின் மீதான விதிகளுக்கமைய, மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடொன்று பின்வருவனவற்றை உள்ளடக்கியதான பிணைப்பொறுப்பொன்றுக்கமைய ஏதேனும் ஆதனத்தின் பரிகரிப்பிற்காக ஏற்பாடு செய்யலாம் :-

(அ) பிணைப்பொறுப்பிற்கு அமைந்ததான ஆதனத்தின் விற்பனை அல்லது கையுதிர்ப்பு;

(ஆ) கடனாளிக்கு ஆதனத்தை ஒப்படைத்தல்; அல்லது

(இ) பிணைப்பொறுப்பின் பிணைப்பொறுப்பளித்த கடன் கொடுநரினால் தக்க வைத்திருத்தல்.

(3) ஐம்பத்திரெண்டாம் பிரிவின் கீழ் கடனாளியினது பிரேரணை ஒன்றின் மீதான கடன்கொடுநர்களின் அங்கீகாரத்தின் மீதான விதிகளுக்கமைய, தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடொன்றை பின்வருவனவற்றுக்கான நியதிகளை உள்ளடக்கலாம் :-

(அ) பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கடன் கொடுநர்களின் உரிமைகளை மாற்றியமைத்தல்; அத்துடன்

(ஆ) ஒழுங்கேற்பாடுகள் வலுவிலிருக்கின்ற வேளையில் பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கடன் கொடுநர் அதன் பிணைப்பொறுப்பை விடுவிக்கமாட்டார் என்பதனை ஏற்பாடு செய்தல்;

(4) ஐம்பத்தியிரண்டாம் பிரிவின் கீழ் கடனாளியின் பிரேரணை ஒன்றின் கடன்கொடுநர்களின் அங்கீகாரத்தின் விதிகளுக்கமைய 60 ஆம் பிரிவின்கீழ் ஒழுங்கேற்பாட்டினை

பூர்த்தி செய்த நேரத்தின் பின்னர் இறுதிக் கொடுப்பனவு வருமதியாகவுள்ளதான ஏதேனும் பிணைப்பொறுப்பளிக்கப் பட்ட தனிசின் மீது தனிசு மீள் கட்டமைக்கப்பட்ட ஒழுங் கேற்பாடு ஒன்று பிணைப்பொறுப்பின் பெறுமதியை விட தொகையானது குறைத்துரைக்கும் விடயத்தில் மட்டும் பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட தனிசு தொடர்பில் வருமதி யாகவுள்ள ஆரம்ப பணத்தொகையின் குறைப்புக்காக ஏற்பாடு செய்கின்ற நியதிகளை தனிசு மீள் கட்டமைப்பு ஒழுங்கேற்பாடு உள்ளடக்கலாம்.

(5) ஐம்பத்தியிரண்டாம் பிரிவின் கீழ் கடனாளியினது பிரேரணையின் கடன்கொடுநர்களின் அங்கீகாரத்தின் மீதான விதிகளுக்கமைய, 60 ஆம் பிரிவின் கீழ் ஒழுங்கேற்பா டொன்றின் நிறைவின் நேரத்தின் பின்னர் எவ்விறுதி கொடுப்பனவு வருமதியாகவிருக்கின்றதோ அவ்விறுதிக் கொடுப்பனவின் மீது ஏதேனும் பிணைப்பொறுப்பளிக்கப் பட்ட தனிசின் மேல் தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பா டொன்று பின்வருவனவற்றுக்காக செய்யலாம் :-

(அ) நியாயபூர்வமான நேரத்தில் ஏதாவது தவணை தவறியமையை சீர்செய்தல்; அத்துடன்

(ஆ) ஒழுங்கேற்பாடு பயனுள்ள வேளையில் கொடுப்பனவுகளைப் பேணுதல்.

(6) ஐம்பத்திரெண்டாம் பிரிவின் கீழ் கடனாளியின் பிரேரணையொன்றின் கடன் கொடுநர்களின் அங்கீகாரத்தின் மீதான விதிகளுக்கமைய தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங் கேற்பாடு பின்வருவனவற்றிக்காக ஏற்பாடு செய்யலாம் :-

(அ) ஏதாவது தவணை தவறியமையை நியாயமான நேரத்தினுள் சீர் செய்தல்; அத்துடன்

(ஆ) இயைபான கடன்கொடுநருடன் கடனாளி செய்து கொள்ளப்பட்டிருந்த வாடகை உடன்படிக்கை யொன்றின் கீழ் பயனிலுள்ள ஒழுங் கேற்பாடு எழுகின்ற வேளையில் வாடகை கொடுப்பனவு களை பேணுதல்.

(7) ஐம்பத்தியிரண்டாம் பிரிவின் கீழ் கடனாளியினது பிரேரணையொன்றின் கடன்கொடுநர்களின் அங்கீகாரத்தின் மீதான விதிகளுக்கமைய தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பா டொன்று பின்வருவனவற்றிக்காக ஏற்பாடு செய்யலாம் :-

(அ) நியாயமான நேரத்தினுள் ஏதேனும் தவறு தவறியமையை சீர் செய்தல்; அத்துடன்

(ஆ) கடனாளி பயன்படுத்துகின்ற அல்லது உடைமை யாக வைத்திருக்கின்ற பண்டங்களின் எனும் வழிமூலம் வாடகை கொள்வனவு உடன்படிக்கை உள்ளடங்கலாக, உடன்படிக்கையொன்றின் கீழ் பயனிலிருக்க ஒழுங்கேற்பாடு எழுகின்ற வேளை யில், தவணை கொடுப்பனவுகளைச் பேணுதல்.

தனிசு மீள் கட்டமைப்பு ஒழுங்கேற்பாடுகள் தனிப்பட்ட கடனிறுக்க வகையின்மை பிரேரணை யாளரின் நியமனம்

**49.** (1) தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடு ஒன்றிற்கு பிரேரணை ஒன்றை மேற்கொள்வதற்கு கடனாளி விரும்பு கின்றவிடத்து, அத்தகைய கடனாளி தனிப்பட்ட கடனிறுக்க வகையின்மை பிரேரணையாளரொருவராக ஆளொருவரை, அல்லது குழுவை நியமித்தல் வேண்டும்.

(2) கடனாளி மற்றும் தனிப்பட்ட கடனிறுக்கவகை யின்மை பிரேரணையாளர்; அவ்வாறு உடன்படின் தனிப் பட்ட கடனிறுக்கவகையின்மை பிரேரணையாளராக செயலாற்றுவதற்கு நியமிக்கப்பட்ட ஆள், குழுமம் அல்லது குழு 47 ஆம் பிரிவின் கீழ் பிரேரிக்கப்பட்ட தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடு தொடர்பில் தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நிருவாகியாகவும் செயலாற்றலாம்.

(3) ஓராம் மற்றும் (2) ஆம் உட்பிரிவுகளின் கீழ் நியமிக்கப்படுகின்றதன் மீது தனிப்பட்ட கடனிறுக்கவகை யின்மை பிரேரணையாளர் :-

(அ) கடனாளியினது தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டு பிரேரணை தொடர்பில் தனிப் பட்ட கடனிறுக்கவகையின்மை பிரேரணை யாளரின் வகிபாகத்தில் செயலாற்றுவதற்கு தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை பிரேரணை யாளர் சம்மதம் அளித்துள்ளாரென கடனாளிக்கு எழுத்தில் உறுதிப்படுத்துதல் வேண்டும்;

(ஆ) அத்தகைய பிரேரணையாளர் தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நிருவாகியாக தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடுகள் பயனுக்கு வருகின்றதன் மீது தனிப்பட்ட கடனிறுக்கவகை யின்மை நிருவாகியாக செயலாற்றுவதற்கு

சம்மதத்தினை தெரிவித்திருப்பின், அத்தகைய சம்மதத்தினை கடனாளிக்கு எழுத்தில் உறுதிப் படுத்துதல் வேண்டும்; அத்துடன்

(இ) தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை பிரேரணை யாளராகவும் இயைபானவிடத்து தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நிருவாகியாக செயலாற்றுவதற்கு அத்தகைய நியமனம் பற்றி உத்தியோகபூர்வ அறிவித்தல் வழங்குதல் வேண்டும்.

(4) தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடொன்றை தயாரிப்பதில் கடனாளிக்கு உதவுவதற்கு இணங்கு கின்றவரான தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை பிரேரணையாளர் :-

(அ) கடனாளியின் நிதி நிலைமையை நியாயமான அளவிலான துல்லியத்துடன் மதிப்பிடுவதை இயலச்செய்வதற்கான கடனாளியின் ஆதனம் மற்றும் நிதிசார் நிலமைகள் பற்றி நியாயமான அளவிலான அத்தகைய விசாரணைகளை செய்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) இப்பாகத்தினால் குறித்துரைக்கப்பட்ட முறையிலும் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலும் தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடொன்றை தயாரித்தல் வேண்டும்.

(5) தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டிற்காக பிரேரணையொன்றை தயாரிப்பதற்கு உதவுவதற்கு தனிப் பட்ட கடனிறுக்கவகையின்மை பிரேரணையாளரை இயலுமையாக்கும் நோக்கத்திற்காக, தனிப்பட்ட கடனிறுக்க வகையின்மை பிரேரணையாளருக்கு கடனாளி தனது அறிவுக்கு எட்டிய வகையில் 33 ஆம் பிரிவிற்கிணங்க கடனாளியின் எல்லா நிதி அலுவல்கள் முழுமையாக வெளிப்படுத்துகின்ற கூற்றொன்றினை சமர்ப்பித்தல் வேண்டும்.

(6) தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை பிரேரணையாளர் ஒருவர் விதிக்கப்படக்கூடியவாறு அல்லது அதிகார சபையினால் ஆக்கப்பட்ட விதிகளில் உள்ளடக்கியவாறு

தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டின் தோதான தன்மை தொடர்பில் கடனாளிக்கு குறித்த சில தகவல்களை அல்லது மதியுரையை வழங்குவதற்கு பிரேரிணாயளரின் நியமனத்தின் மீது தேவைப்படுத்தப்படலாம்.

(7) தனிப்பட்ட கடனிறுக்கவகைன்மை பிரேரணையாளர் ஒருவர் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அல்லது அதிகார சபையினால் ஆக்கப்பட்ட விதிகளில் உள்ளடக்கப்படக் கூடியதான தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடு ஒன்றிற்கான பிரேரணை ஒன்றை தயாரித்து சமர்ப்பிப்பதில் கடனாளிக்கு உதவுவதற்கு குறித்த சில நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கு தேவைப்படுத்தப்படலாம்.

தனிசு மீள் கட்டமைப்பு ஒழுங்கேற் பாடுகள் கடனாளி பிரேரணை யை தயாரித்தல்

**50.** (1) நாற்பத்தாறாம் பிரிவிலுள்ள கட்டளைக்கற்களை ஈடுசெய்கின்றவரான கடனாளியொருவர் தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை பிரேரணையாளரின் உதவியுடன், தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடொன்றிக்கான பிரேரணையொன்றை தயாரிக்கலாம்.

(2) தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டிற்கான பிரேரணை ஒன்றின் படிவம் விதித்துரைக்கப்படலாம்.

(3) தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டிற்கான பிரேரணையொன்று :–

(அ) கடனாளியினால் கையொப்பமிட் டிருத்தல்;

(ஆ) (i) தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை பிரேரணையாளர் ஒருவராக செயலாற்று கின்ற ஆள், குழுமம் அல்லது குழு; அத்துடன்

(ii) தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடு பயனுக்கு வருகின்றதன் மீது தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நிருவாகியொரு வராக செயலாற்றுவதற்கு விரும்புகின்ற ஆள், குழுமம் அல்லது குழு:

என்பவற்றின் பெயரில் புறக்குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

(4) தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டிற்கான பிரேரணையொன்று தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை பிரேரணையாளர் பின்வரும் அபிப்பிராயங்களைக்

கொண்டுள்ளார் என்பதை உறுதிப்படுத்துக்கின்ற தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை பிரேரணையாளரின் கூற்றொன்று உள்ளடக்கப்படல் வேண்டும் :-

(அ) நாற்பத்தாறாம் பிரிவின் தகைமைவுடமை தேவைப்பாடுகளை கடனாளி திருப்திகின்றார் என;

(ஆ) தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை பிரேரணை யாளரின் அறிவின்படி நிதி அலுவல்கள் தொடர்பான கடனாளியின் கூற்றில் உள்ளடக்கப் பட்டிருக்கின்ற தகவல்கள் முழுமையானவை மற்றும் துல்லியமானவை;

(இ) பிரேரணையானது அங்கீகரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்துவதற்கான நியாயமான உத்தேசமொன்றை கொண்டிருக்கின்றது என; அத்துடன்

(ஈ) கடனாளியின் பொருளாதார ரீதியான புனர் வாழ்வை வசதிப்படுத்துவதற்கான நியாயமான வழிமுறைகளை, கடனாளியின் கிடைக்கப் பெறப்படற்பாலதான வளங்களில் இருந்து கடன்கொடுநர்களுக்கு நியாயமான உதவு தொகைகளை அனுமதிக்கும் வேளையில் பிரேரணையானது முளைகின்றதென.

(5) தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டுக்கான பிரேரணை கடனாளியின் நிதிசார் அலுவல்கள் பற்றிய கூற்று மற்றும் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஏனைய தேவைப்பாடுகள் ஆகியவற்றை உள்ளடக்குதல் வேண்டும்.

(6) ஐந்தாம் உட்பிரிவினால் தேவைப்படுத்தப்பட்டதான கடனாளியின் நிதிசார் அலுவல்கள் பற்றிய கூற்று 94 ஆம் பிரிவுக்கிணங்கவும் மற்றும் அவற்றின் கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்கவும் இருத்தல் வேண்டும்.

(7) தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடு பிரேரணை பின்வருவனவற்றுக்காக கடனாளியின் சம்மதம் பற்றிய கூற்றொன்றை உள்ளடக்குதல் வேண்டும் :–

(அ) நாற்பத்தியாறாம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தகவுடை கட்டளைக்கற்களை கடனாளி ஈடுசெய்துள்ளாரா என்பதை தீர்மானிப்பதற்கு அது அவசியமென கருதுகின்றதான அத்தகைய விசாரணைகளை செய்தல்;

(ஆ) அத்கைய விசாரணைகளுக்கான திருப்திகரமான விடைகள் உத்தியோகபூர்வ பெறுநருக்கு கிடைக்கும் வரை உத்தியோகபூர்வ பெறுநரினால் தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டு பிரேரணைகள் பற்றிய கவனத்தினை பிற்போடப்படல்;

(இ) தனிசு புனர்வாழ்வுக் கட்டளை விண்ணப் பத்தினை செய்தல் மற்றும் கவனத்திற்கொள்ளல் என்பவற்றுக்கு அவசியமான அளவுவரை கடன்கொடுநர் மற்றும் ஏனைய மூன்றாம் திறத்தவர்களுக்கும் கடனாளியின் தனிப்பட்ட தரவு பற்றி உத்தியோகபூர்வ பெறுநரினால் வெளிப்படுத்துதல்; அத்துடன்

(ஈ) தனிசு புனர்வாழ்வு கட்டளை விண்ணப்பத்தினை செய்தல் மற்றும் கவனத்திற் கொள்ளுதல் என்பவற்றுக்கு அவசியமான அளவு வரை கடனாளியின் தனிப்பட்ட தரவை கடன்கொடு நரால் அரசாங்க முகவராண்மைகள் வேறு எவரேனும் இயைபான மூன்றாம் திறத்தவரின் என்போரினால் உத்தியோகபூர்வ பெறுநருக்கு வெளிப்படுத்துதல்.

(8) தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டிற்கான பிரேரணை தொடர்பான சூழ்நிலைகளுக்கு நியாயமான அளவு முறையில் ஏற்புடைமையாக்கக்கூடியதான, 32 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட கடனாளிகள் பற்றிய எவையேனும் இயைபான கடப்பாடுகளுக்கு அமைய கடனாளி வருகின்ற ஒழுங்கேற்பாட்டிற்கான பிரேரணை யொன்றை செய்வதன் மீதான கடனாளியினால் ஒப்புறுதிப் படுத்துகை பற்றிய கூற்றொன்று தனிசு மீள் கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டிற்கா பிரேரணையானது உள்ளடக்குதல் வேண்டும்.

(9) இப்பிரிவின் தேவைப்பாடுகளை பூர்த்திசெய்கின்றதான பிரேரணை ஒன்றின் தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை பிரேரணையாளரின் உதவியுடன் கடனாளினால் தயாரிக்கப் படுகின்றதன் மீது, தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை பிரேரணையாளர் உத்தியோகபூர்வ பெறுநருக்கு பிரேரணையை சமர்ப்பித்தல் வேண்டும்.

தனிசு மீள் கட்டமைப்பு ஒழுங்கேற் பாடு பேச்சு வார்த்தை கூட்டம்

**51.** (1) தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டிற்கான பிரேரணையொன்றுக்கு அவர்கள் அங்கீகாரம் அளிக்கின் றார்களா என்பதனை அறிந்து கொள்வதற்கு கடனாளியின் கடன்கொடுநர்களிடமிருந்து முடிபை தனிப்பட்ட கடனிறுக்க வகையின்மை பிரேரணையாளரை நாடுதல் வேண்டும்.

(2) பிரேரணையை அங்கீகரிப்பதற்கு அல்லது மறுப்ப தற்கு கடனாளியின் கடன்கொடுநர்களாலான முடிபு தீர்மான மானது தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டு பேச்சு வார்த்தை கூட்டமொன்றினால் செய்யப்படல் வேண்டும்.

(3) நேரடியாக அல்லது எண்ணிம தொடர்பாடல் வழிவகைகள் மூலம் இடம்பெறக் கூடியதான பேச்சுவார்த்தை கூட்டமொன்றுக்கு திகதி மற்றும் இடம் என்பவற்றை நிர்ணயிப்பதில் கடன்கொடுநர்கள் மற்றும் கடனாளியின் வசதியை தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை பிரேரணை யாளர் கவனத்திற்கொள்ளுதல் வேண்டும்.

(4) உள்ளடக்கப்பட்ட தனிசு தொடர்பில் அறியப்பட்ட ஒவ்வொரு கடன் கொடுநருக்கும் தனிப்பட்ட கடனிறுக்க வகையின்மை பிரேரணையாளர் பின்வருவனவற்றை அனுப்புதல் வேண்டும் :-

(அ) பேச்சுவார்த்தை கூட்டம் பற்றிய எழுத்து மூல அறிவித்தல்;

(ஆ) ஐம்பதாம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட எல்லா தேவைப்பாடுகளையும் உள்ளடக்கின்ற தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டிற்கான பிரேரணையொன்றின் பிரதியொன்று;

(இ) கடன் கொடுநரின் உரிமை கோரிக்கை படிவ மொன்று;

(ஈ) தபால் மூல வாக்குப் படிவம் மற்றும் இலத்திரனியல் மின்னஞ்சல் வாக்கு மாதிரி;

(உ) பிரேரிக்கப்பட்ட தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங் கேற்பாட்டை அது அங்கீகரிக்கின்றதா அல்லது மறுக்கின்றதா என்பதை முடிவுசெய்வதற்கு ஒவ்வொரு கடன் கொடுநரையும் கேட்கின்ற கூற்றொன்று;

(ஊ) பேச்சுவார்த்தை கூட்டம் நடைபெறுகின்றதான திகதி பற்றிய கூற்றொன்று அக்கூற்று அனுப்பியதன் பின்னரான இருபத்தொரு நாட்களாக இருக்கின்ற தேதி; அத்துடன்

(எ) பேச்சுவார்த்தை கூட்டங்களில் சமூமளிக்காத அல்லது தபால் மூல வாக்களிக்காத அல்லது இலத்திரனியல் மின்னஞ்சல் வாக்களிக்காத கடன் கொடுநரை பயனுறும் வகையிலான கூற்றொன்று தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற் பாட்டிற்கான பிரேரணையொன்றாக ஏற்றுக் கொள்ளப்பட்டது என கருதப்படுதல் வேண்டும்.

(5) விதித்துரைக்கப்படக் கூடியவாறான எவையேனும் தேவைப்பாடுகளை திருப்தி செய்கின்ற முறையில் கடன்கொடுநரின் உரிமை கோரிக்கை படிவமொன்றை சமர்ப்பித்ததுள்ளவரான கடன் கொடுநர் பின்வருவனவற்றின் மூலம் பிரேரணை ஒன்றுக்கு வாக்களிக்கலாம் :-

(அ) பேச்சுவார்த்தை கூட்டத்திற்கு முன்னர் அல்லது கூட்டத்தில் தனிப்பட்ட கடனிறுக்கவகை யின்மை பிரேரணையாளரை அடையக் கூடிய தபால் மூல வாக்கை அனுப்புதல்; அல்லது

(ஆ) பேச்சுவார்த்தை கூட்டத்தின் முன்னர் அல்லது கூட்டத்தில் தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை பிரேரணையாளரை அடையக் கூடியதான இலத்திரனியல் மின்னஞ்சல் வாக்கொன்றை அனுப்புதல்.

(6) சட்டத்தின் முன்னர் அல்லது கூட்டத்தில் விதித்துரைக் கப்பட்டவாறு சம்மதத்தை தெரிவிக்கின்ற அல்லது மறுக் கின்ற தபால் மூல வாக்கு அல்லது ஏனைய தொடர்பாட லொன்றை தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை பிரேரணை யாளர் பெற்றிருப்பின், இவ்வாறு அல்லது தொடர்பால் கடன்கொடுநர் கூட்டத்தில் சமூகமளித்து வாக்களித்து இருப்பின், பயனைக் கொண்டுள்ளது.

தனிசு மீள் கட்டமைப்பு ஒழுங்கேற் பாட்டின் கடன் கொடுநர் அங்கீகாரம்

**52.** (1) தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டு பேச்சு வார்த்தை கூட்டத்திற்கு தனிப்பட்ட கடனிறுக்க வகை பிரேர ணையாளர் உறுதிப்படுத்தி தலைமை தாங்குதல் வேண்டும்.

(2) இப்பாகத்தின் ஏற்பாடுகள் விதித்துரைக்கப்படக் கூடியவாறானவற்றுக்கமையவும் ஐந்தாம் அட்டவணையின் பின்வரும் பந்திகள் இப்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட கூட்டமொன்றை நடாத்துவது தொடர்பில் பின்வரும் கருமங்களுக்கு ஏற்புடையதாதல் வேண்டும் :-

(அ) பதிலிப்பத்திரங்கள்;

(ஆ) தவிசாளர்;

(இ) கூட்ட நடப்பெண்;

(ஈ) ஒத்திவைக்கப்பட்ட கூட்டங்கள்;

(உ) நானாவித கருமங்கள்.

(3) பேச்சுவார்த்தை கூட்டத்தில் கடன்கொடுநர்கள் :–

(அ) கடனாளியின் நிதிசார் சூழ்நிலைகளை தெளிவு படுத்துவதற்கு நியாயமான முறையில் கடனாளி பற்றிய அத்தகைய சோதனையை நடாத்தலாம்;

(ஆ) முக்கியமான பெரும்பான்மை கடன் கொடுநர் களின் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றுவதன் மூலம் கடனாளியின் அலுவல்கள் பற்றி மேலதிக புலனாய்வொன்றை அனுமதிப்பதற்கு ஆகக் கூடியது ஏழு நாள் எனும் காலப் பகுதிக்கு கூட்டத்தை ஒத்திவைக்கலாம்;

(இ) தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டின் இறுதி நியதிகளை எடுத்துக்காட்டுகின்ற (3) ஆம் அல்லது (4) ஆம் உட் பிரிவுக்கிணங்க தீர்மானம் ஒன்றை நிறைவேற்றுவதன் மூலம் பிரேரணையை ஏற்கலாம்;

(ஈ) தனிசு மீள்கட்டமைத்தல் ஒழுங்கேற்பாட்டின் இறுதி நியதிகளை எடுத்துக்காட்டுகின்றதான (3) ஆம் அல்லது (4) ஆம் உட் பிரிவிற்கிணங்க தீர்மானம் ஒன்றை நிறைவேற்றுவதன் மூலம் கடனாளியின் சம்மதத்துடன் பிரேரணை யொன்றை மாற்றியமைக்கலாம் அல்லது திருத்தலாம்;

(உ) தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டின் தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நிருவாகி யாக தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை பிரேரணையாளரை நியமிக்கலாம் அல்லது பின்வருமாறுள்ள வேறொரு ஆளை, குழுமத்தை அல்லது குழுவை நியமிக்கலாம் :–

(i) தனிப்பட்ட கடனிறுக்க வகையின்மை நிருவாகியாக விரும்புபவர்; அத்துடன்

(ii) நியமனத்திற்கு எழுத்து மூலம் சம்மதம் அளிக்கின்ற மற்றும் நியமனத்தின் போது சம்மதத்தினை மீளப்பெறாத;

(ஊ) கடனாளியின் மதியுரையாளர் என கருதுகின்ற வையான அலுவல்களின் மேற்பார்வை தொடர்பில் தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங் கேற்பாடு பற்றிய அத்தகைய நியதிகளை உள்ளடக்கி கடனாளியின் சம்மதத்துடன்.

(4) வாக்களிப்பதற்கு உரிமையானவரான எல்லா கடன் கொடுநர்களின் உரிமை கோரிக்கைகள் பிரேரணை சார்பில் அக்கடன் கொடுநர்களின் வாக்களிப்பு பற்றிய உரிமை கோரிக்கைகள் எண்ணிக்கையில் பெரும்பான்மையாக உள்ள விடத்து, பிரேரணையொன்று அங்கீகரிக்கப்படுகின்றது.

(5) நாற்பத்தெட்டாம் பிரிவில் அல்லது வேறு வகையில் குறித்துரைக்கப்பட்ட முறையில் பிணைப்பொறுப்பளிக்கப் பட்ட கடன்கொடுநர்களின் உரிமைகளை மாற்றியமைக்கின்ற அல்லது மட்டுப்படுத்துகின்ற நியதிகளை பிரேரணை உள்ளடக்கியிருக்கின்றவிடத்து பிரேரணை சார்பில் வாக்களிக்கும் அப்பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கடன் கொடுநர்களின் உரிமைக்கோரிக்கைகள் வாக்களிப்பதற்கு உரித்துடையவர்களான பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கடன் கொடுநர்களின் உரிமைக்கோரிக்கைகள் பற்றிய பெறுமதியின் மூன்றில் இரண்டை விட பிரதிநிதித்துவப் படுத்துகின்றவிடத்தும் பிரேரணையானது அங்கீகரிக்கப்படு கின்றது.

(6) நாற்பத்தெட்டாம் பிரிவில் அல்லது வேறுவகையில் குறித்துரைக்கப்பட்ட முறையில் பண்டங்களை கடனாளி

பயன்படுத்துகின்ற அல்லது உடமையில் வைத்திருக் கின்றதான வழிவகைகள்மூலம் வாடகை கொள்வனவு உடன்படிக்கை உள்ளடங்கலாக உடன்படிக்கையொன்றின் கீழ் குத்தகைக்காரர்களின் அல்லது பண்டங்களின் சொந்தக் காரர்களின் உரிமைகளை மாற்றியமைக்கின்ற அல்லது மட்டுப்படுத்ததுகின்ற நியதிகளை பிரேரணை உள்ளடக்கு கின்றவிடத்து, பிரேரணை சார்பில் வாக்களிக்கும் அத்தகைய குத்தகைக்காரர்கள் மற்றும் சொந்தக்காரர்களின் உரிமை கோரிக்கைகள் வாக்களிப்பதற்கு உரித்துடையவர்களான அத்தகைய கடன்கொடுநர்களின் உரிமை கோரிக்கைகளின் எண்ணிக்கையில் மூன்றில் இரண்டுக்கு மேற்பட்டு பிரதிநிதித் துவமாக உள்ளவிடத்து, பிரேரணையானது அங்கீகரிக்கப்படு கின்றது.

(7) பிரேரணையானது :–

(அ) பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கடன்கொடு நரின் மாற்றியமைக்கின்ற மட்டுப்படுத்துகின்ற நியதிகளை உள்ளடக்காதவிடத்து; அல்லது

(ஆ) பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கடன்கொடுநரின் நன்மைக்காக பிணைப்பொறுப்புக்கமைந்த சொத்தொன்றை விற்பனை செய்வதற்கு அல்லது கையுதிர்ப்பதற்கு, செய்கின்றவிடத்து, பிரேரணையின் மீது இயைபான பிணைப் பொறுப்பளிக்கப்பட்ட கடன் கொடுநரொருவர் வாக்களித்தல் ஆகாது;

ஆயின், எவ்வாறாயினும், கடனாளி (89ம் அத்தியாயமான) ஈட்டுச் சட்டத்தின் 47அ என்னும் பிரிவின்கீழ் வெளிப்படுத்துகையொன்றை செய்திருப்பின், அத்தகைய பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கடன் கொடுநர் தனிசின் பிணைப்பொறுப்பளிக்கப்படாத பாகத்தின் அளவு வரைக்கும் பிணைப்பொறுப்பளிக்கப்படாத கடன்கொடுநர் ஒருவராக பங்குபற்றலாம்.

(8) பிரேரணையானது :–

(அ) வாடகை கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் கடன்கொடுநரின் உரிமைகளை மாற்றியமை கின்ற அல்லது மட்டுப்படுத்துகின்ற நியதிகளை உள்ளடக்காதவிடத்து; அல்லது

(ஆ) கடன் கொடுரின் நன்மைக்காக வாடகை கொள்வனவு உடன்படிக்கைக்கமைய விற்பனை செய்வதற்கு அல்லது கையுதிர்ப்பதற்கு ஏற்பாடு செய்கின்றவிடத்து,

இயைபான தனிசு கொடுநர் பிரேரணை ஒன்றின் மீது வாக்களித்தலாகாது.

(9) உரிய முறையில் அறிவிக்கப்பட்ட கடன் கொடுநர் ஒருவர் :-

(அ) பேச்சுவார்த்தைக் கூட்டங்களில் சமூகமளித்தலாகாது;

(ஆ) தபால் மூல வாக்களிப்பை அளித்தலாகாது; அல்லது

(இ) இலத்திரனியல் மின்னஞ்சல் வாக்களிப்பை அளித்தலாகாது,

என்பதுடன் தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டிற்கான பிரேரணை ஒன்றில் சார்பில் வாக்களித்துள்ளவராக கருதப்பட வேண்டும்.

(10) கடன்கொடுநர் எவரும் வாக்களிக்காதவிடத்து, பிரேரிக்கப்பட்ட தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடு இப்பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்பட்டுள்ளதாக கருதப்படல் வேண்டும்.

(11) ஐயத்தைத் தவிர்ப்தற்காக இப்பாகத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளவாறான கடன்கொடுநர் ஒருவர் :-

(அ) ஐம்பத்தெழாம் பிரிவின் கீழ் கடன்கொடுநரின் உரிமைக் கோரிக்கை படிவமொன்றை சமர்ப்பித்தலாகாது;

(ஆ) இப்பிரிவின் கீழ் பேச்சுவார்த்தை கூட்டங்களில் சமூகமளித்தலாகாது; அல்லது

(இ) இப் பிரிவின் கீழ் பிரேரணையை ஒன்றை எதிர்த்து வாக்களித்தலாகாது,

என்பதுடன் 57 ஆம் பிரிவின் கீழ் ஒழுங்கேற்பாடொன்று பயனுக்குவருகின்றதை உறுதிப்படுத்துகின்ற நீதிமன்ற

கட்டளைக்கு ஆட்சேபித்து விண்ணப்பம் ஒன்றை கொண்டு வருவதற்கு உரித்துடையவராதலாகாது.

(12) பேச்சுவார்த்தை கூட்டத்தில் கடன்கொடுநர்கள் பிரேரணையை ஏற்றுக் கொள்ளாத விடத்து :–

(அ) தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை பிரேரணையாளர் "கடன்கொடுநர்களினால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை" என பிரேரணையில் புறப்குறிப்பிடுதல் வேண்டும் என்பதுடன் அதனை உத்தியோகபூர்வ பெறுநருக்கு திருப்பியனுப்புதலும் வேண்டும்; அத்துடன்

(ஆ) தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டு நடவடிக்கைமுறை முடிவுறுத்தப்படுதல் வேண்டும்.

அங்கீகரிக்கப்பட்ட தனிசு மீள் கட்டமைப்பு ஒழுங்கேற்பாடுகளை உத்தியோக பூர்வ பெறுநருக்கு சமர்ப்பித்தல்

**53.** (1) கடன்கொடுநர்களினால் பிரேரணை ஒன்று ஏற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர் தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை பிரேரணையாளர், செயல்முறைக்கு உகந்தளவு விரைவானதாக, அதனை பின்வருவனவற்றுக்கு உத்தியோகபூர்வ பெறுநருக்கு சமர்ப்பித்தல் வேண்டும் :-

(அ) தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டு பேச்சுவார்த்தை கூட்டத்தில் கடன்கொடுநரின் வாக்குப் பெறுபேறு பற்றிய எழுத்து மூலமான அறிவித்தல்; அத்துடன்

(ஆ) தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடுகள் பற்றிய இறுதி நியதிகள்.

(2) ஓராம் உட்பிரிவில் தரப்பட்ட ஆவணங்கள் கிடைக்கப்பெற்றதன் மீது உத்தியோகபூர்வ பெறுநர் தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டு நியதிகள் இப்பாகத்தின் ஏற்பாடுகளை திருப்தி செய்கின்றது என்பதனை உறுதிப் படுத்துதல் வேண்டும்.

(3) தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டின் நியதிகள் இப்பாகத்தின் ஏற்பாடுகளை பூர்த்திசெய்கின்றதனை உறுதிப்படுத்துவதின் மீது உத்தியோகபூர்வ பெறுநர் தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டை விதந்துரைக்கின்ற சான்றிதழ் ஒன்றை வழங்குதல் வேண்டும்.

(4) உத்தியோகபூர்வ பெறுநர் அப்போது :-

(அ) பேச்சுவார்த்தை கூட்டத்தில் கடன்கொடுநர் வாக்கு பெறுபேறு பற்றிய எழுத்துமூல அறிவித்தலுடன் சேர்த்து இச் சான்றிதழை வழங்குதல் வேண்டும் என்பதுடன் தனிசு மீள் கட்டமைப்பு ஒழுங்கமைப்பு ஒழுங்கமைப்பின் இறுதி நியதிகளை தோதான நீதிமன்றத்திற்கு முன்வைத்தலும் வேண்டும்; அத்துடன்

(ஆ) சான்றிதழ் வழங்கப்பட்மை பற்றி ஒழுங்கேற் பாட்டில் தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை பிரேரணையாளர் மற்றும் எல்லாக் கடன்கொடு நர்களும் பட்டியிலிடப்பட்டுள்ளனர் என்பதனை கடனாளிக்கு அறிவித்தல் வேண்டும்.

(5) பின்வருமாறு இருப்பின், உத்தியோகபூர்வ பெறுநர் தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடு ஒன்றை விதந்துரைக் கின்ற சான்றிதழ் ஒன்றை வழங்குவதற்கு மட்டும் மறுக்கலாம் :-

(அ) ஒழுங்கேற்பாடு இப்பாகத்தின் ஏற்பாடுகளை திருப்தி செய்யாது இருப்பின்; அல்லது

(ஆ) நிதிசார் அலுவல்கள் பற்றிய கூற்று அல்லது அதனோடு இணைந்த ஆவணங்களில் பொருள் சார்ந்த துல்லியத்தன்மை உண்மை உள்ளதான உத்தியோகபூர்வ பெறுநர் அறியவரின்;

(இ) உத்தியோகபூர்வபெறுநர் நிதிசார் அலுவல்கள் தொடர்பான கடனாளியினது கூற்று அல்லது அதனோடு இணைந்த ஆவணங்களில் நியாய மான முறையில் எதிர்பார்க்கமுடியாததான கடனாளியின் சூழல்களில் பொருள் ரீதியான மாற்றம் உள்ளதென அறியவரின்;

(ஈ) தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடுகளின் நியதிகளானது நியாயமற்றதாக கடனாளிக்கும் கடன்கொடுநர்களுக்கும் முழுமையானதாக அல்லது நீதியற்றதாக உள்ளதென உத்தியோக பூர்வ பெறுநர் அபிப்பிராயப்படின்.

(6) உத்தியோகபூர்வ பெறுநர் தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடொன்றை விதந்துரைக்கின்ற சான்றிதழ் ஒன்றை வழங்குவதற்கு மறுப்பாராயின், உத்தியோகபூர்வ பெறுநர் :-

(அ) கடனாளிக்கு, தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை பிரேரணையாளருக்கு மற்றும் கடன் கொடுநர்களுக்கு அத்தகைய மறுப்புக்கான காரணங்கள் வழங்குதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) நீதிமன்றம் தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடு நடைமுறைக்கு வருவதை உறுதிப்படுத்தலாகாது பற்றிய அந்த விதப்புரைகள் தோதான நீதிமன்றத்திற்கு அறிவித்தல் வேண்டும்.

**54.** (1) 53 ஆம் பிரிவின் கீழ் தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடுகள் தொடர்பில் உத்தியோகபூர்வ பெறுநரிடமிருந்து விதப்புரை ஒன்று நீதிமன்றம் பெறுகின்றவிடத்து, நீதிமன்றமானது எவையேனும் அதனோடு இணைத்த ஆவணப்படுத்தலுடன் சேர்த்து விதப்புரையை கவனத்திற் கொள்ளல் வேண்டும்.

*தனிசு மீள் கட்டமைப்பு ஒழுங்கேற்பாடு பற்றிய நீதி மன்ற உறுதிப் படுத்தல்*

(2) இப் பிரிவின் கீழ் விதப்புரையொன்றை கவனத்தில் கொள்ளும் போது, நீதிமன்றம் 53(6) ஆம் பிரிவின் கீழ் உத்தியோகபூர்வ பெறுநரினால் வழங்கப்பட்ட சான்றிதழை அதன்கண் சான்றுப்படுத்தப்பட்ட விடயங்களின் சான்றாக பரிகரிப்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(3) இவ் பிரிவின் கீழான விதப்புரையொன்றை கவனத்திற் கொள்ளும்போது கடன்கொடுநர், கடனாளி அல்லது தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை பிரேரணையாளரினால் செய்யப்பட்டதான விதப்புரைக்கு ஏதேனும் ஆட்சேபனை பற்றி விசாரித்தல் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவின் கீழ் ஆட்சேபனையொன்று செய்யப்படுமிடத்து மற்றும் எட்டுவதற்கு மேலதிக தகவல் அல்லது சான்றுகள் தேவைப்படுமிடத்தும் நீதிமன்றம் விசாரணைகளை நடாத்தலாம், விசாரணையானது எழுத்து மூல அறிவித்தல், உத்தியோகபூர்வ பெறுநர், தனிப்பட்ட கடனிறுக்க வகையின்மை பிரேரணையாளர், கடனாளி மற்றும் கடன்கொடுநர் என்போருக்கு அறிவிக்கப்படல் வேண்டும்.

(5) விதப்புரையை கவனத்திற்கொண்டு, நீதிமன்றம் பின்வருமாறு அது கருதினால் தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடு நடைமுறைக்கு வருகின்றமையை உறுதிப் படுத்தி கட்டளையொன்றின்றை ஆக்குதல் வேண்டும் :-

(அ) தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கமைப்பு ஏற்பாடு இப்பாகத்தில் உள்ள கட்டளை கற்களை திருப்திப்படுத்தின்; அத்துடன்

(ஆ) இப்பாகத்தின் நடவடிக்கைமுறையிலான தேவைப்பாடுகளுடன் தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடு ஆக்குதலானது இணங்கி யொழுகி இருப்பின்.

(6) தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கு ஏற்பாடு பயனுக்கு வருவதனை உறுதிப்படுத்துகின்றதன் மீது நீதிமன்றம் கடனாளியின் பெயர், முகவரி மற்றும் விவரணம் மற்றும் பின்வருவனவற்றின் கட்டளை ஆக்கப்பட்ட தேதி என்பன உள்ளடங்கலான விதித்துரைக்கப்படக்கூடியவாறான ஒழுங் கேற்பாட்டின் அத்தகைய விபரங்களை வெளியிடச் செய்வ தற்கு உத்தியோகபூர்வ பெறுநரை பணி;த்தல் வேண்டும் :-

(அ) தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை இடாப்பில் பொது அறிவித்தல் வெளியிடல்; அத்துடன்

(ஆ) பொது அறிவித்தல்மூலம்.

(7) தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டினை உறுதிப் படுத்தி கட்டளையொன்றினை ஆக்குகின்ற போது, பின்வரு வோருக்கு எழுத்து மூலமான அறிவித்தலை வழங்குவதற்கு நீதிமன்றமானது உத்தியோகபூர்வ பெறுநரை பணித்தல் வேண்டும் :-

(அ) தனிசு மீள்கட்டமைப்பு ஏற்பாடுகள் கட்டளை வழங்குதல் பற்றி கடனாளி, தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை பிரேரணையாளருக்கு மற்றும் தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நிருவாகிக்கு;

(ஆ) இக்கடப்பாடுகள் தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங் கேற்பாட்டின் காலப்பகுதிக்கு ஏற்புடையாகின்ற அளவுக்கு 32 ஆம் பிரிவின் கீழ் கடனாளியின் கடப்பாடுகள் பற்றி கடனாளிக்கு;

(இ) தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டின் கட்டளை வழங்குதல் மற்றும் பயனுக்கு வருதல் பற்றி கடனாளியின் ஒவ்வொரு கடன் கொடுநருக்கும்; அத்துடன்

(ஈ) 57 ஆம் பிரிவின் கீழ் தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடுகளுக்கு ஆட்சேபனை கடன் கொடுநர்களின் உரிமை பற்றி கடன் கொடுநர் ஒவ்வொருவருக்கும்.

தனிசு மீள் கட்டமைப்பு ஒழுங்கேற் பாடுகள் பற்றிய நீதிமன்ற உறுதிப்படுத்த லின் விளைவு

**55.** (1) நீதிமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தனிசு மீள் கட்டமைப்பு ஒழுங்கு ஏற்பாடொன்று உள்ளடக்கப்பட்ட தனிசுகளை வைத்திருக்கும் மற்றும் ஒழுங்கேற்பாட்டின் நியதிகளினால் பாதிக்கப்பட்டவர்கான எவ்வகை கடன் கொடுநர்கள் மீது பிணிக்கின்றது.

(2) தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடு பயனுக்கு வருகின்றதனை உறுதிப்படுத்துகின்ற நீதிமன்றக் கட்டளை ஒழுங்கேற்பாட்டின் வலிந்தன்மைக்கு முற்றானதாகவிருத்தல் வேண்டும்.

(3) தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடு வலுவுக்கு வருவதனை உறுதிப்படுத்துகின்ற நீதிமன்ற கட்டளையை தொடர்ந்து, அதன் நியதிகளுக்கிணங்க பின்வருவன வரையில் ஒழுங்கேற்பாடானது பயனில் இருக்கும் :–

(அ) அத்தகைய மற்றும் 60 ஆம் பிரிவு ஆகியவற்றின் அது பூர்த்திசெய்யப்புடும்வரை; அல்லது

(ஆ) 59 ஆம் பிரிவின் கீழ் அது முடிவுறுத்தப்படும் வரை.

(4) தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடொன்று பயனில் உள்ள வேளையில் உள்ளடக்கப்பட்ட தனிசொன்றின் கொடுமதியாகவுள்ள கடனாளி ஒருவருக்கு கடன்கொடுநர் ஒருவர் :-

(அ) தனிசை அறவிடுவதற்கு அல்லத வலியுறுத்துவ தற்கு எவையேனும் வழக்கு துடர்ச்சிகளை எடுத்தலாகாது; அத்துடன்

(ஆ) குறிப்பாக பின்வருவனவற்றிற்காக எவையேனும் வழக்குத் துடர்ச்சிகளை எடுத்திலாகாது :-

(i) கடனாளியின் கோரிக்கைத் தவிர்ந்த வேறு வகையில் அல்லது ஒழுங்கேற்பாட்டின் நியதிகளுக்கு இங்கு உள்ளடக்கப்பட்ட தனிசொன்றின் கொடுப்பனவு தொடர்பில் கடனாளியொருவரை தொடர்பு கொள்வதற்கு;

(ii) உள்ளடக்கப்பட்ட கடன் தொடர்பில் கடனாளிக்கு எதிராக எவையேனும் சட்ட வழக்கு நடவடிக்கைகளை தொடங்குவதற்கு அல்லது தொடர்வதற்கு;

(iii) உள்ளடக்கப்பட்ட கடன் பற்றிய கொடுப்பனவை சேகரித்தல், பெறுவதற்கு, அறவிடுவதற்கு அல்லது கோருவதற்கு, அறவிடல், கேட்டல்;

(iv) கடனாளிக்கு எதிராக (8) ஆம் உட்பிரிவின்படி நீதிமன்ற அல்லது தீர்ப்பொன்றினை அல்லது கட்டளையொன்றினை நிறைவேற்றுதல் அல்லது வலுவுறுத்துவதற்கு;

(v) பிடியாணையொன்றை பெற்றுக் கொள்ளுவதற்கு;

(vi) ஒழுங்கேற்பாட்டின் நியதிகளுக்கு இணங்குதல் தவிர்ந்த வேறு வகையில் கடனாளியின் உடைமையிலுள்ள பண்டங்களை அறவிடுதல்;

(vii) ஆறாம் உட்பிரிவின் தேவைப்பாடுகள் ஈடுசெய்யப்பட்டிருந்தாலொழிய, இயைபான கடன்கொடுநருடன் செய்து கொள்ளப்பட்ட வாடகை உடன்படிக்கையொன்றின் கீழ் கடனாளி வதிகின்ற வளவுகளின் உடமைகளைப் பெற்றுக் கொள்ளல்;

(viii) ஒழுங்கேற்பாட்டின் நியதிகள் வேறுவகையில் ஏற்பாடு செய்யப்படுமிடத்திருந்தாலொழிய இவ்வுட்பிரிவிலுள்ள எவையேனும் வழக்குக் துடர்ச்சிகளை தனிசு மீள் கட்டமைப்பு ஒழுங்கேற்பாடு யாருக்கு

தொடர்புறுகின்றோ அவருக்கு கடனாளி யுடன் கூட்டாக பொறுப்பாகவுள்ளவராக வேறு ஆளுக்கெதிராக எடுப்பதற்கு;

(ix) ஒழுங்கேற்பாட்டின் நியதிகள் வேறுவகை யில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாலொழிய, இவ்வுட்பிரிவின் எவையேனும் வழக்குத் துடர்ச்சிகளை தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடு யாருக்கு தொடர்கின்றதோ அவருக்கு கடனாளியின் தனிசுகளை உத்தர வாதப்படுத்தியுள்ளவரான வேறொரு ஆளுக்கெதிராக எடுப்பதற்கு;

(x) (i), (ii), (iii), (iv), (v), (vi), (vii), (viii) அல்லது (ix) எனும் பந்தியில் குறிப்பிடப் பட்ட எவையேனும் வழக்குத் துடர்ச்சி களை எடுப்பதற்கு முகவர் ஒருரை அறிவுறுத்துவதற்கு.

(5) தனிசு மீள் கட்டமைப்பு ஒழுங்கேற்பாடு வலுவிலி ருக்கும் வேளையில், நீதிமன்றம் பின்வருமாறு கருதுகின்ற விடத்து, (4) ஆம் உட்பிரிவில் பட்டியலிடப்பட்டவற்றிக்கு நீதிமன்றம் நடவடிக்கை எடுப்பதற்கு கடன்கொடுநர் ஒருவருக்கு விதிவிலக்கான முறையில் அனுமதி அளிக்கலாம் :-

(அ) விதிவிலக்கான சூழ்நிலைகள் என்பது நடவடிக்கை எடுப்பதற்கு கடன்கொடுநரை நியாயமான அளவில் அனுமதிப்பதாகும்; அத்துடன்

(ஆ) நடவடிக்கையானது :–

(i) ஒழுங்கேற்பாடு எவருக்கு தொடர்புறு கின்றதோ அவ்வர் கடனாளிக்கு முறையற்ற பாதகமொன்றை செயய்விக்காது;

(ii) வேறு எவரேனும் கடன்கொடுநரை நியாய மற்ற முறையில் பங்கப்படுத்தாது; அல்லது

(iii) ஒழுங்கேற்பாட்டின் குறிக்கோள்களை குறிப்பாக குறைத்துமதிப்பிடாது;

(6) தனிசு மீள் கட்டமைப்பு ஒழுங்கேற்பாடொன்று கடனாளி தொடர்பில் வலுவிலிருக்கின்ற வேளையில், நீதிமன்றம் பின்வருமாறு இருப்பின் மட்டும், கடனாளி வளவுகளின் உடமையை பெற்றுக்கொள்வதற்கு வாடகை உடன்படிக்கை ஒன்றின் கீழ் வதிகின்றதான வளவுகளின் சொந்தக்காரர்களுக்கு விதிவிலக்கான முறையில் அனுமதி அளிக்கலாம் :-

(அ) தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டின் காலத்தின் போது வாடகை ஒப்பந்தமொன்றின் காலப்பகுதியானது முடிவடைந்திருப்பின்;

(ஆ) வாடகையின் மூன்று மாதங்களுக்கு மேற்பட்ட தொகையொன்றை கடனாளி இயைபான கடன் கொடுநருக்கு வாடகை நிலுவையாக செலுத்த வேண்டியிருப்பின் மட்டும் நீதிமன்றம் ஒழுங்கேற் பாடு காலத்தின் மீது தொடர்ந்து கொண்டிருக் கும் வாடகை கொடுப்பனவுகளை பேணுவதற்கு இயலாதவராக உள்ளரெனும் சாத்தியம் அதிகமாக உள்ளதென கருதின்; அல்லது

(இ) கடனாளியின் வாடகைக் கொடுப்பனவல்லாதவை தவிர்ந்த ஏதுக்களின் அடிப்படையின் மீது வளவுகளின் உடமையைப் பெற்றுக்கொள்வ தற்கு சொந்தக்காரர்களின் விண்ணப்பமொன்று.

(7) பின்வருமாறு உள்ளவிடத்து இப்பிரிவில் உள்ள எதுவும் நிறைவேற்றுகை அல்லது வேறு சட்டச்செயல்முறை அல்லது இடர் தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடு பயனுக்கு வருகின்றதை உறுதிப்படுத்துகின்ற நீதிமன்றக் கட்டளைக்கு முன்னரான ஆகக்குறைந்தது 180 நாட்களில் பூர்த்தி செய்யப்பட்டிருக்குமிடத்து கடனாளிக்கு அல்லது கடனாளியின் ஆதனத்திற்கு எதிரான ஏதேனும் நிறை வேற்றுகை அல்லது வேறு சட்டச் செயல்முறை அல்லது இடர் என்பவற்றின் நன்மைக்கான கடன்கொடுநரின் உரித்துடைமையை பாதித்தலாகாது :-

(அ) அசையும் அல்லது அசையாத ஆதனத்திற்கு எதிராக பெறுநரின் நியமத்தரின் அல்லது நிறைவேற்றுகையுடன் பொறுப்பிக்கப்பட்ட

ஆளொருவரின் உடமையினுள் நுழைவதன் மூலம் பூரணப்படுத்தப்பட்டுள்ளவிடத்து மற்றும் விற்பனை பூரணப்படுத்தப்பட்டுள்ள விடத்தும்; அத்துடன்

(ஆ) தனிசொன்றின் இணைப்பொன்று தனிசின் திருப்தியின் மூலம் பூரணப்படுத்தப்பட்டுள்ள விடத்து.

(8) தனிசு மீள்கட்டடைப்பு ஒழுங்கேற்பாடு நடைமுறையில் உள்ள வேளையில், அத்தியாவசியமான பண்டங்கள் அல்லது சேவைகளின் வழங்குநர் ஒருவர் :–

(அ) ஒழுங்கேற்பாடு நடைமுறைக்கு வருகின்றதன் முன்னரான காலப் பகுதியொன்று தொடர்பில் பண்டங்கள் அல்லது சேவைகளுக்காக வருமதியாகவுள்ள அறவீடுகளை செலுத்துவதில் கடனாளியின் தவணை தவறுகை என்ற காரணத்தின் மூலம் கடனாளிக்கு பண்டங்கள் அல்லது சேவைகளை வழங்குவதற்கு மறுத்தலாகாது;

(ஆ) ஒழுங்கேற்பாடு நடைமுறைக்கு வருவதற்கு முன்னரான காலப் பகுதி தொடர்பில் பண்டங்கள் அல்லது சேவைகளுக்காக வருமதியாகவுள்ள நிலுவையில் உள்ள அறவீடுகளின் கொடுப்பனவுகளை செய்கின்றவரான கடனாளிக்கு பண்டங்கள் மற்றும் சேவைகளை பற்றிய வழங்குகையின் நிபந்தனன் ஒன்றை செய்தலாகாது; அல்லது

(இ) தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நிருவாகியின் எழுத்திலான முன்சம்மதம் தவிர, பண்டங்களின் அல்லது சேவைகளின் வழங்குகைக்காக உடன்படிக்கையின் கடனிறுக்கவகையின்மை தொடர்புபட்ட நியதியொன்றின் மீது தங்கியிருத்தலாகாது.

(9) கடனிறுக்கவகையின்மை தொடர்புபட்ட நியதியின் மீதான தங்கியிருப்பு தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டின் பயனை கொண்டுவருவதற்கும் மற்றும் 44 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டதான மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டின் குறித்துக்கொள்கின்ற சேவையாற்றுவதற்கும் அவசியமானதென திருப்திப்படுமிடத்து தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நிருவாகி (8) ஆம் உட்பிரிவின் (இ) எனும் பந்தியின்கீழ் சமம்மதத்தினை அளிக்கலாம்.

(10) தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நிருவாகி (8) ஆம் உட்பிரிவின் (இ) எனும் பந்தியின் கீழ் சம்மதம் அளிப்பதற்கு மறுப்பதற்கான இழப்புகளுக்கு ஆளாக மாட்டார்.

(11) தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடு கடனாளிக்கு எதிராக ஏதாவது குற்றவியல் ஒருவருக்கான எவையேனும் குற்றவியல் நடவடிக்கை முறைகளின் தொடருவதை அல்லது தொடர்ச்சியை தடுக்காது.

(12) இப் பிரிவிற்கு முரணாக எடுக்கப்பட்ட ஏதேனும் வழக்குதொடர்ச்சி வெற்றானதும் வெறிதானதும் ஆக்கப்படல் வேண்டும்.

(13) இப் பிரிவிற்கு முரணாக உள்ள கடன்கொடுநர் அல்லது கடன்கொடுநரின் முகவரொருவரினால் எடுக்கப்படும் வழக்கு தொடர்ச்சியிலிருந்து எழுகின்ற உரிமை கடன்கொடுநருடனான கொடுக்கல் வாங்கலின் கீழ் ஆதனத்தில் அல்லது வேறு ஏதேனும் அக்கறையில் ஆள் ஒருவர் அக்கறை கொண்டிருக்குவிடத்து, அவ்வழக்கு தொடர்ச்சியின் வெற்றான தன்மை அவ்வாள் நல்லலெண்ணத்துடன் மற்றும் பெறுமதிக்காக கடன்கொடுநருடன் கையாளுகின்றவிடத்து அவ் ஆளின் உரிமைகளை பங்கப்படுத்தலாகாது.

(14) தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடொன்று பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கடன்கொடுநர் ஒருவரின் உரிமைகளை மாற்றியமைக்கின்ற நியதிகளை உள்ளடக்காதவிடத்து இப்பிரிவில் உள்ள எதுவும் அதன் பிணைப்பொறுப்பை வலுவுறுத்துவதற்கு பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கடன்கொடுநர் ஒருவரின் உரிமையை பாதித்தலாகாது.

(15) தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடொன்று 48 ஆம் பிரிவில் அல்லது வேறு வகையில் குறித்துரைக்கப்பட்ட முறைகளில் பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கடன் கொடுநரின் உரிமைகள் மாற்றியமைக்கின்ற அல்லது மட்டுப்படுகின்ற நியதிகளவு உள்ளடக்குகின்றவிடத்து, பிணைப் பொறுப்பளிக்கப்பட்ட கடன்கொடுநர் ஒருவர் உடன்படிக் கையின் நியதிகளுக்கிணங்க அதன் பிணைப்பொறுப்பை மட்டும் வலுவுறுத்தலாம்.

(16) தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடொன்று வாடகை கொள்வளவு உடன்படிக்கை ஒன்றின் கீழ் கடன்கொடுநரின் உரிமைகள் மாற்றியமைக்கின்ற அல்லது மட்டுப்படுத்துகின்ற நியதிகளை உள்ளடக்காதவிடத்து, இப்பிரிவில் உள்ள எதுவும் அத்தகைய உடன்படிக்கையின் கீழ் உரிமைகளை தாக்காது.

அதன் ஆதன வலுவுறுத்துவதற்கு வாடகை கொள்வனவு உடன்படிக்கை ஒன்றின் கீழ் கடன்கொடுநரின் உடமைகளை பாதித்தலாகாது.

(17) நாற்பத்தெட்டாம் பிரிவில் அல்லது வேறு வகையில் குறித்துரைக்கப்பட்ட முறைகளில் கடனாளி பண்டங்கள் பயன்படுகின்ற அல்லது உடமையில் வைத்திருக்கின்ற வழிவகைகள் மூலம் வாடகைக் கொள்வனவு உடன்படிக்கை யொன்று உள்ளடங்கலாக, உடன்படிக்கை ஒன்றின் கீழ் குத்தகைக்காரர்களின் அல்லது பண்டங்களின் சொந்தக்காரர் களின் உரிமைகளை மாற்றியமைக்கின்ற அல்லது மட்டுப் படுத்துகின்ற நியதிகளை ஒழுங்கேற்பாடு உள்ளடக்குகின்ற விடத்து குத்தகைக்காரர் அல்லது சொந்தக்காரர் ஒழுங்கேற் பாட்டின் நியதிகளுக்கிணங்க அத்தகைய உடன்படிக்கையின் கீழ் அதன் ஆதன உரிமைகளை வலுவுறுத்தலாம்.

தனிசு மீள் கட்டமைப்பு ஒழுங்கேற் பாட்டின் கீழான கடனாளியின் கடப்பாடுகள்

**56.** (1) தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடு ஒன்று நடைமுறையில் உள்ள வேளையில் கடனாளி ஒழுங்கேற் பாட்டு காலப்பகுதி முழுவதும் நியாயமான அளவில் 32 ஆம் பிரிவின் கீழ் கடனாளின் எவையேனும் கடப்பாடுகளை கடனாளி திருப்திசெய்து இருத்தல் வேண்டும்.

(2) முப்பத்திரெண்டாம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட எவையேனும் கடப்பாடுகளுக்கு மேலதிகமாக, கடனாளி தனிசு கடன் மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடுகளை பயனுறச் செய்வதற்கும் அவசியமான ஒவ்வொன்றையும் செய்தல் வேண்டும்.

தனிசு மீள் கட்டமைப்பு ஒழுங்கேற்பாடு மீதான சவால்கள்

**57.** (1) தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டினால் பிணிக்கப்பட்டுள்ளவரான கடன்கொடுநர் ஒருவர் ஒழுங் கேற்பாடு பயனுக்கு வருகின்றதை உறுதிப்படுத்துகின்ற நீதிமன்றக் கட்டளையொன்றுக்கான ஆட்சேபித்து நீதி மன்றத்திற்கு விண்ணப்பிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டை ஆட்சேபிப்பதற்கான கடன்கொடுநரது விண்ணப்பமொன்று பின்வரும் ஏதுக்களின் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட விடயத்தை அடிப்படையில் இருத்தல் வேண்டும் அதாவது :–

(அ) கடனாளி 46 ஆம் பிரிவின் தகவுடமை கட்டளைக்கற்களை ஈடுசெய்யவில்லை;

(ஆ) தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கு ஏற்பாடுகள் 47 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட பணிப் புறுத்தும் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுக வில்லை;

(இ) தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டினை ஆக்குதல் மற்றும் உறுதிப்படுத்தல் என்பன இப்பாகத்தின் நடவடிக்கை முறையிலான தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகி இருக்கவில்லை;

(ஈ) தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டினால் மேவப்பட்ட தனிசொன்று 37 ஆம் பிரிவின் நோக்கத்துக்காக உட்பட்ட தனிசொன்றாக இருக்கவில்லை;

(உ) கடனாளி நிதி அலுவல்கள் பற்றிய கூற்றினை தயாரித்தல் அல்லது எவையேனும் அதனோடு இணைந்த தகவல்களை வழங்குவதில் ஏதேனும் பொருள் சார்ந்த ரீதியிலான பொய்யான பிரதிநிதித்துவம் அல்லது விட்டுவிடுகை ஒன்றை செய்திருந்தவர் அல்லது

(ஊ) தனிசு மீள்கட்டமைப்பு ஏற்பாடானது கடன் கொடுநரது நலன்களுக்கு நேர்மையற்ற பங்கத்தினை ஏற்படுத்துகின்றது.

(3) தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டை ஆட்சேபிப்பதற்கு நீதிமன்றத்திற்கான கடன் கொடுநரின் விண்ணப்பமொன்று தனிசு மீள் கட்டமைப்பு ஒழுங்கு ஏற்பாடு வலுவுக்கு வருகின்றதான நாளிலிருந்து 28 நாட்கள் எனும் காலப்பகுதியினுள் செய்யப்படுதல் வேண்டும்.

(4) கடன்கொடுநர் ஒருவர் விண்ணப்பம் அடிப்படையாகக் கொண்டுள்ளதான ஏதுக்களை உள்ளடக்கி தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டினை ஆட்சேபிப்பதற்கான விண்ணப்பமொன்றை கடனாளிக்கும் தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நிர்வாகிக்கும் எழுத்து மூல அறிவித்தல் ஒன்றை வழங்குதல் வேண்டும்.

(5) இப்பிரிவின் கீழான விண்ணப்பம் தொடர்பில், மேற்படி (2) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்க்பபட்ட ஏதாவது விடயங்கள் தொடர்பில் நீதிமன்றம் திருப்தியுறும் பட்சத்தில், பின்வருவனவற்றில் ஏதாவதை நீதிமன்றம் மேற்கொள்ளலாம். அவையாவன :–

(அ) வேறு எவரேனும் கடன் கொடுநர் அவ்வாறு செய்தல் நியாயமற்ற முறையில் பங்கப்படுத்தாதவிடத்து நீதிமன்றத்திற்கு விண்ணப்பமொன்றை செய்கின்றவரான கடன்கொடுநருக்கு முழுமையாகவோ அல்லது பகுதியோ தனிசு மீள்கட்டமைப்பு ஏற்பாடானது ஏற்புடையலாகாச் என பணிக்கின்ற கட்டளையொன்றை ஆக்கலாம்;

(ஆ) கடன் கொடுநர்கள் மீளாய்வு செய்யப்பட்ட பிரேரணையொன்றை அங்கீகரித்துள்ளார்களா என கடன்கொடுநர்களிலிருந்து முடிபு ஒன்றை நாடுவதற்கு தனிப்பட்ட கடனிறுக்கவகை யின்மை நிர்வாகியை 58 ஆம் பிரிவின் கீழ் வேறுபடுத்தல் நடவடிக்கை முறையை பயன் படுத்துவதற்கு பணிக்கலாம்; அல்லது

(இ) வேறு ஏதேனும் உள்ளடக்கப்பட்ட தனிசு அல்லது கடன்கொடுநர் தொடர்பில் தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டை இரத்துச் செய்யும் கட்டளை ஒன்றை ஆக்கலாம்.

(6) ஐந்தாம் உட்பிரிவின் கீழ் நீதிமன்றமானது கட்டளை யொன்றினை மேற்கொள்கின்ற பொழுது, நீதிமன்றம் மீள்கட்டமைப்பு ஒழுங்கு ஏற்பாடுகள் தனிசு காலப் பகுதியின் உள்ளடக்கப்பட்ட தனிசு தொடர்பில் திரண்டதான ஏதேனும் வட்டி, கட்டணங்கள் அல்லது விதிப்பனங்கள் ஆகியவற்றை செலுத்துவதற்கு கடனாளியைத் தேவைப்படுத்தலாம்.

(7) நீதிமன்றம் உள்ளடக்கப்பட்ட தனிசுகள் மற்றும் எல்லாக் கடன்கொடுநர்கள் தொடர்பில் தனிசு மீள்கட்ட மைப்பு ஒழுங்கேற்பாடு ஒன்றினை இரத்துச் செய்கின்ற பயனுடன் (5)(இ) உட்பிரிவின் கீழ் கட்டளையொன்றினை ஆக்குகின்றவிடத்து நீதிமன்றம் 21 நாட்கள் என்று காலப்பகுதிக்கு நிலைத்துள்ளதான கடன்கொடுநர் பரிகாரங்களின் மீது தற்காலிக கடன் தீர்ப்பு பிற்போடல் ஒன்றை நிலைநாட்டுகின்ற கட்டளையொன்றை ஆக்குதல் வேண்டும் என்பதுடன் 40 ஆம் பிரிவின் கீழான தனிசு பாதுகாப்பு பிற்போடல் கட்டளையென்றை அதே பயனைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

(8) ஐந்தாம் அல்லது (6) ஆம் உட்பிரிவுகளின் கீழ் நீதிமன்ற கட்டளையொன்றினை ஆக்குகின்றதான ஏதேனும்

சந்தர்ப்பத்தில் நீதிமன்றம் பின்வருவோருக்கு எழுத்திலான அறிவித்தலை வழங்குதல் வேண்டும் :-

(அ) கடனாளி;

(ஆ) தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நிருவாகி;

(இ) உத்தியோகபூர்வ பெறுநர்; அத்துடன்

(ஈ) (5) ஆம் அல்லது (6) உட் பிரிவின் கீழான கட்டளை ஏற்புடையவர்களாகின்வரான எவரேனும் கடன்கொடுநர்கள்.

(9) நீதிமன்றம் (8) ஆம் உட் பிரிவின் கீழ் உத்தியோக பூர்வ பெறுநருக்கு அறிவித்தல் ஒன்றை வழங்குகின்ற விடத்து, உத்யோகபூர்வ பெறுநர் பின்வருமாறு பதினான்கு நாட்கள் காலப் பகுதியினுள் :-

(அ) விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில், தனிப்பட்ட கடனிறுக்கவகை யின்மை இடாப்பில் பதியப்படுவதற்குச் செய்வித்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) எவரேனும் பாதிக்கப்பட்ட கடன்பெறுநருக்கு 5 ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட நீதிமன்றக் கட்டளை மற்றும் 6 ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் தேவைப்பாடுகள் பற்றி எழுத்திலான அறிவித்தலை செய்தல் வேண்டும்.

தனிசு மீள் கட்டமைப்பு ஒழுங்கேற் பாடுகள் பற்றிய வேறுபாடுகள்

**58.** (1) நீதிமன்றம் 54 ஆம் பிரிவின் கீழ் கடன் மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடுகள் பயனுக்கு வருகின்றதை உறுதிப்படுத்துகின்ற கட்டளை ஒன்றை ஆக்குகின்றவிடத்து ஒழுங்கேற்பாடு அதன் நியதிகளுக்கு இணங்கவும் இப் பிரிவுக்கு அமையவும் வேறுபடலாம்.

(2) தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நிர்வாகியின் சொந்த முன்னெடுப்பிலுஞ்சரி அல்லது கடனாளி அல்லது கடன்கொடுநரின் வேண்டுகோளாயினுஞ்சரி தனிப்பட்ட

கடனிறுக்கவகையின்மை நிர்வாகி பின்வருமாறு உள்ள விடத்து தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடுகள் வேறுபடுத்துகையொன்றை பிரேரித்தல் வேண்டும் :-

(அ) தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நிர்வாகிக்கு கடனாளியின் சூழ்நிலைகளில் பொருள் சார்ந்த மாற்றம் ஒன்று உள்ளதெனதோன்றுகின்ற விடத்து, அத்துடன்

(ஆ) அத்தகைய சூழ்நிலைகள் கடனாளியின் கடன் கொடுநரின் ஒப்பதல் அங்கீகரிக்கப்பட்டு நடை முறைப்படுத்தப்பட வேண்டுமென என்பதனை விழித்துரைக்கின்ற வேறுபடுத்துகை ஒன்று உள்ளதென நியாயமான உத்தேசம் ஒன்று உள்ளதென திருப்திப்படுகின்றவிடத்து.

(3) இரண்டாம் உட்பிரிவின் நிபந்தனைகள் ஏற்புடைமை யாகுமிடத்து, தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நிருவாகி நியாயமான செயல்முறைக்கு உகந்தளவு விரைவானதாக :–

(அ) 33 ஆம் பிரிவுக்கு இணங்க கடனாளியின் நிதிசார் அலுவல்கள் தொடர்பான இற்றைப்படுத் தப்பட்ட கூற்றொன்றினை பூரணப்படுத்தும் படி கடனாளியை தேவைப்படுத்துதல் வேண்டும்;

(ஆ) தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடுகள் வேறுபடுத்துகைக்காக பிரேரணையொன்றை தயார் செய்வதற்காக கடனாளிக்கு உதவுதல் வேண்டும்;

(இ) பிரேரணைக்கான கடனாளியின் கடனாளி யினது சம்மதத்தினைக் கோருதல்; வேண்டும் என்பதுடன் பிரேரணைக்கான கடன்கொடுநர் அங்கீகாரத்தை நாடுதலும் வேண்டும்; அத்துடன்

(ஈ) பிரேரணையை ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதா என்பதை சுட்டிக்காட்டுவதற்கு பாதிக்கப்பட்ட கடன்கொடுநர் ஒவ்வொருவரையும் கோருவ தற்கு அவர்களுக்கு எழுதுதல் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவின் கீழ் பாதிக்கப்பட்ட கடன் கொடுநர் ஒவ்வொருவருக்கும் எழுதுகின்ற பொழுது, தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடொன்று வேறுபடுத்துவதற்கான பிரேரணையொன்று தொடர்பில் எழுதும் போது பிரேரணையொன்று தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நிர்வாகியானவர் :-

(அ) (i) பிரேரணை; அத்துடன்

(ii) கடனாளியினது சூழ்நிலைகள் பற்றிய பொருள் சார்ந்த மாற்றங்கள் பற்றிய விபரங்கள் உள்ளடங்கலாகக் கடனாளியின் நிதிசார் அலுவல்கள் பற்றிய இற்றைப்படுத்தப்பட்ட கூற்று :-

எழுத்து மூல அறிவித்தலை கடனாளிக்கு வழங்குதல் மூல அறிவித்தலை கடன் கொடுநருக்கு வழங்குதல் வேண்டும்;

(ஆ) (i) 46 ஆம் பிரிவின் தகவுடைய தேவைப்பாடுகள் கடனாளி திருப்தியுறுகின்றார் என;

(ii) தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை பிரேரணையாளரின் மிகச் சிறந்த அறிவுக்கு நிதிசார் அலுவல்கள் பற்றிய கடனாளியினது இற்றைப்படுத்தப்பட்ட கூற்றில் அடங்கியுள்ள தகவல்கள் பூரணமானதும் மற்றும் துல்லியமானதும் என;

(iii) கடனாளியின் சூழ்நிலைகளில் ஏற்படும் இயைபான மாற்றத்தை பிரேரணையானது நியாயபூர்வமான வழிமுறையில் விழித்துரைக்கின்றது என; அத்துடன்

(iv) ஒப்புதல் அளிக்கப்பட்டு நடைமுறைப்படுத்துவதற்கான நியாயபூர்வமான வாய்ப்புகள் பிரேரணைக்கு காணப்படுகின்றன.

(இ) பிரேரணையை ஏற்றுக் கொள்ளப்பட்டதா இல்லையா என்பதை எடுத்துக்கூறுகின்ற

பௌதீக அல்லது மின்னியல் கடிதம் மூலமாக எழுத்து மூலமான பதில் ஒன்றை வழங்கும் படி கடன்கொடுநரைக் கோருதல்; மற்றும்

(ஈ) பிரேரணை ஒவ்வொரு கடன்கொடுநருக்கும் ஏற்பாடு செய்யப்பட்டதன் பின்னரான ஆகக் குறைந்தது 14 நாட்களாக இருக்கவேண்டியதான கூறப்பட்ட முன் கூட்டிய கால எல்லையில் தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை தொழி நருக்கு இப்பதிலிருப்பை வழங்குவதற்கான அவசியம் பற்றி எழுத்துமூல அறிவித்த லொன்றை கடன்கொடுநருக்கு வழங்குதல் வேண்டும்.

(5) பின்வரும் நிலைகளில் கடன் மீள்கட்டமைப்பு ஏற்பாடுகள் பற்றிய மாறுபாடுகள் பிரேரணையானது ஏற்றுக் கொள்ளப்படும் :-

(அ) ஏற்பாடுகள் மாற்றம் பற்றி கடனாளி ஒழுங் கேற்பாட்டை வேறுபடுத்துவதற்காக எழுத்து மூலமான சம்மதத்தினை வழங்குதல்;

(ஆ) இப் பிரிவின் கீழ் தனிப்பட்ட கடனிறுக்கவகை யின்மை நிருவாகி கடனாளி பாதிக்கப்பட்ட கடன்கொடுநருக்கு எழுதுக்கொடுப்பின்;

(இ) பந்தியின் படி ஏற்பாட்டின் படி கடப்பட்ட சகல தனிசுகொடுத்தவர்களதும் கேட்புத் தொகை பெறுமதியில் பெரும்பான்மையான கேட்புத் தொகையை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற தனிசு கொடுத்தவர்கள் (4) ஆம் மற்றும் (5) ஆம் உட் பிரிவுகளில் குறிப்பிடப்பட்ட முடிவுத் திகதிக்கு முன்னர் பிரேரணைகளை ஏற்றுக் கொள்வ தற்கான பதில்கள் வழங்கப்படல்;

(ஈ) பாதுகாக்கப்பட்ட தனிசுகொடுத்தவர்களது உரிமைகளை மாற்றுகின்ற அல்லது மட்டுப் படுத்துகின்ற நியதிகளை பிரேரணை உள்ளடக்கியிருக்கும் பட்சத்தில், ஏற்பாட்டின் படி பாதுகாக்கப்பட்ட தனிசுகளுக்கான கேட்புத்

தொகைகளுக்கான பெறுமதியில் மூன்றில் இரண்டை விட அதிகமாக பாதுகாக்கப்பட்ட தனிசுகொடுத்தவர்களது கேட்புத் தொகை பிரதி நிதித்துவப்படுத்தும் பொழுது, (4) ஆம் மற்றும் (5) ஆம் உட் பிரிவுகளில் குறிப்பிடப்பட்ட முடிவுத் திகதிக்கு முன்னர், பிரேரணையை ஏற்றுக் கொள்வதற்கான பதில்கள் வழங்கப் படல்; மற்றும்

(உ) வாடகை கொள்வனவு உடன்படிக்கை உள்ளடங்கலாக, உடன்படிக்கையின் கீழ் குத்தகைக்கு விடுநர் அல்லது பொருட்களின் உரிமையாளர் உரிமைகளை மாற்றுகின்ற அல்லது மட்டுப்படுத்துகின்ற நியதிகளை பிரேரணை உள்ளடக்கியிருக்கும் பட்சத்தில், கடனாளி பயன்படுத்துகின்ற அல்லது பொருட் களை உடைமையாக பெற்ற வழிமுறைகள், (4) ஆம் மற்றும் (5) ஆம் உட் பிரிவுகளில் குறிப்பிடப்பட்ட முடிவுத் திகதிக்கு முன்னர் பிரேரணையை ஏற்றுக் கொள்கின்ற பதில்கள் வழங்கப்படும் பட்சத்தில், ஏற்பாட்டின் படி பாதுகாக்கப்பட்ட தனிசுகள் தொடர்பான கோரிக்கைகளின் பெறுமதி மூன்றில் இரண்டை விட அதிகமான கேட்புத் தொகைகளை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற குத்தகைக்கு விடுநர்கள் அல்லது உரிமையாளர்கள்.

(6) ஐந்தாம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, (4) ஆம் உட் பிரிவின் கீழ் ஒவ்வொரு கடன்கொடுநருக்கும் பிரேரணை பற்றிய எழுத்துமூல அறிவித்தலின் பின்னர் பதினான்கு நாட்கள் எனும் காலப்பகுதிக்கு முன்னர் தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நிருவாகிக்கு பதில் ஒன்றை வழங்காதவரான கடன்கொடுநர் ஒருவர் தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடுகள் பிரேரணையை ஏற்றுக் கொள்ளப்படுதல் வேண்டுமென கருதப்படல் வேண்டும்.

(7) தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடு ஒன்றை வேறுபடுத்துவதற்கான பிரேரணையொன்று ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கும் போது, தனிப்பட்ட கடனிறுக்கவகை யின்மை நிர்வாகி பின்வருமாறு உத்தியோகபூர்வ

பெறுநருக்கு செயல்முறைக்குகந்தளவு விரைவானதாக சமர்ப்பித்தல் வேண்டும் :-

(அ) தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டுக்கான வேறுபடுத்துகையை அங்கீகரிக்கின்ற கடன் கொடுநர் பதிலிறுப்புகள் பற்றி எழுத்துமூல அறிவித்தல்; அத்துடன்

(ஆ) வேறுபடுத்தப்பட்ட தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டின் பற்றிய இறுதி நியதிகள்.

(8) ஏழாம் உட் பிரிவில் தரப்பட்டுள்ள ஆவணங்கள் கிடைக்கப் பெற்றதன்மீது உத்தியோக பெறுநர் வேறுபடுத்தப்பட்ட மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டின் உறுதிப்படுத்துகையை விதந்துரைக்கின்ற சான்றிதழ் ஒன்றினை வழங்குதல் வேண்டும்.

(9) வேறுபடுத்தப்பட்ட தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டின் உறுதிப்படுதுகையை விதந்துரைக்கின்ற சான்றிதழ் ஒன்றை வழங்குவதன் மீது, உத்தியோகபூர்வ பெறுநர் :-

(அ) நீதிமன்றத்திற்கு தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டை வேறுபடுத்துவதற்கான பிரேரணையின் கடன்கொடுநர் அங்கீகாரம் பற்றிய எழுத்துமூல அறிவித்தலுடன் சேர்த்து இச்சான்றிதழை மற்றும் வேறுபடுத்தப்பட்ட ஒழுங்கேற்பாட்டின் இறுதி நியதிகளை முன்வைத்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) (i) கடனாளிக்கு;

(ii) தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நிருவாகிக்கு;

(iii) ஒழுங்கேற்பாட்டில் பட்டியலிடப்பட்ட எல்லா கடன்கொடுநர்களுக்கும்.

சான்றிதழின் வழங்குகை பற்றிய எழுத்துமூலமான அறிவித்தலை வழங்குதல் வேண்டும்.

(10) ஒன்பதாம் உட் பிரிவின் கீழ் தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டின் தொடர்பில் உத்தியோகபூர்வ பெறுநரிடமிருந்து, விதப்புரை ஒன்றை தோதான நீதிமன்றம் பெற்றுக் கொள்ளுமிடத்து, நீதிமன்றம் விதப்புரையை கவனத்தில்

கொள்ளுதல் வேண்டுமென்பதுடன் வேறுபட்ட ஒழுங்கேற் பாட்டின் பயனுக்கு வருகின்றதன் பற்றி உறுதிப்படுத்துகின்ற கட்டளையொன்றினை ஆக்குதல் வேண்டும்.

(11) பத்தாம் உட் பிரிவின் கீழ் வேறுபட்ட ஒழுங்கேற் பாட்டின் பயனுக்கு வருகின்றமையை உறுதிப்படுத்துகின்ற கட்டளையொன்றை ஆக்குகின்றவிடத்து, இப்பாகத்தின் ஏற்பாடுகள் வேறுபட்ட ஒழுங்கேற்பாடு 54 ஆம் பிரிவின் கீழ் உறுதிப்படுத்தப்பட்ட ஒழுங்கேற்பாடொன்றாக இருப்பின் வேறுபடுத்தப்பட்ட ஒழுங்கேற்பாட்டிற்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

தனிசு மீள் கட்டமைப்பு ஒழுங்கேற் பாட்டின் முடி வுறுத்துகை

**59.** (1) பின்வருமாறு உள்ளவிடத்து, விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய ஏதேனும் முறையில் தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடொன்றை எந்த நேரத்திலும் தனிப்பட்ட கடனிறுக்க வகையின்மை நிருவாகியுடன் அல்லது கடன்கொடுநருடன் செயலாற்றுகின்ற கடனாளி யினால் பிரேரணையொன்று முடிவுறுத்தலாம் :-

(அ) பிரேரணையொன்றில் சார்பில் வாக்களிக்கும் அத்துடன் கொடுநர்களின் உரிமைக்கோரிக்கை கள் வாக்களிப்பதற்கு உரித்துடையவர்களான எல்லா கடன்கொடுநர்களின் உரிமைக்கோரிக் கைகள் பற்றி பெறுமதியில் பெரும்பான்மை யொன்றை பிரதிநிதித்துவப்படுத்துகின்றவிடத்து;

(ஆ) பிரேரணை பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கடன் கொடுநர்களின் உரிமைகளை மாற்றியமைக் கின்ற அல்லது மட்டுப்படுத்துகின்ற நியதிகளை உள்ளடக்குகின்ற விடத்தும் மற்றும் பிரேரணை யின் சார்பில் வாக்களிக்கும் அப்பிணைப் பொறுப்பளிக்கப்பட்ட கடன்கொடுநர்களின் உரிமைக்கோரிக்கைகள் வாக்களிப்பதற்கு உரித் துடையவர்களான பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கடன்கொடுநர்களின் உரிமைக்கோரிக்கைகளின் பெறுமதியின் மூன்றில் இரண்டிற்கு பிரதிநிதித் துவப்படுத்தப்படுகின்றவிடத்து;

(இ) கடனாளி பண்டங்களைப் பயன்படுத்துகின்ற அல்லது உடமையில் வைத்திருக்கின்றதான வழிவகைகள் மூலம் வாடகைக் கொள்வளவு

உடன்படிக்கையொன்றின் கீழ் பண்டங்களின் குத்தகைக்காரர்களின் அல்லது சொந்தக்காரர் களின் உரிமைகளை மாற்றியமைக்கின்ற அல்லது மட்டுப்படுத்துகின்ற நியதிகளை பிரேரணை உள்ளடக்கியுள்ளவிடத்தும் மற்றும் பிரேரணை ஒன்றின் சார்பில் வாக்களிக்கும் அத்தகைய குத்தகைக்காரர்களின் மற்றும் சொந்தக்காரர்களின் உரிமைக் கோரிக்கைகள் வாக்களிளிப்பதற்கு உரித்துடையவர்களான அத்தகைய கடன்கொடுநர்களின் உரிமைக் கோரிக்கைகளின் பெறுமதியில் மூன்றில் இரண்டுக்கு மேற்பட்டவைக்கு பிரதிநிதித்துவம் செய்கின்றவிடத்து.

(2) தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடொன்றினை முடிவுறுத்துகின்ற கட்டளையொன்றுக்காக பின்வரும் ஆட்களில் எவரேனும் ஒருவர் நீதிமன்றத்திற்கு விண்ணப் பிக்கலாம் :-

(அ) கடனாளி;

(ஆ) கடன்கொடுநர்;

(இ) தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நிருவாகி; அல்லது

(ஈ) உத்தியோகபூர்வ பெறுநர்.

(3) தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடொன்றை முடிவுறுத்துகின்ற கட்டளையொன்றிற்கான விண்ணப்ப மொன்று விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் பின்வருவனவற்றை உள்ளடக்கலாம் :-

(அ) கடனாளினால் செய்யப்படுமிடத்து, வங்கிமுறிவு கட்டளைக்கான விண்ணப்பமொன்று; அல்லது

(ஆ) கடன்கொடுநரினால் செய்யப்படுமிடத்து, கடனாளிக்கு எதிரான வங்கிமுறிவு கட்டளை யொன்றுக்கான.

(4) உட் பிரிவு 3(அ) கீழ் விண்ணப்பமொன்று பின்வரும் ஏதுக்களின் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அடிப்படை மீதிருத்தல் வேண்டும் :-

(அ) கடன்கொடுநர் ஒருவருக்கு பொருள்சார் ரீதியான தீங்கினை ஏற்படுத்கின்றதான கடனாளியினது நிதி அலுவல்கள் பற்றிய கூற்றில் பொருள் சார்ந்த போலியான பிரதிநிதித்துவம் அல்லது விட்டுவிடுகையொன்று கண்டுபிடிக்கப் பட்டுள்ளமை;

(ஆ) இப் பாகத்தின் நடவடிக்கை முறையிலான சார்ந்த தேவைப்பாடுகள் இணங்கியொழுகாத விடத்து, தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற் பாட்டை ஆக்கியுள்ளமை மற்றும் ஒழுங்கு படுத்தியுள்ளமை;

(இ) தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடு பிரேரிக் கப்படும்போது கடனாளி, 46 ஆம் பிரிவின் கீழான தகவுடை கட்டளைக்கற்களை திருப்தி செய்யாதவிடத்து;

(ஈ) கடனாளி 32 ஆம் மற்றும் 56 ஆம் பிரிவுகளின் கீழ் தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டின் கீழ் கடனாளியின் மீது விதிக்கப்படும் கடப்பாடு களுடன் இணங்கியொழுகாதவிடத்து;

(உ) கடனாளி இச்சட்டத்தின் கீழான தவறொன் றுக்கு குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டவிடத்து, தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடு பயனுக்கு வருகின்றதிலிருந்து;

(ஊ) கடனாளி மூன்று மாதங்களுக்கு குறையாத காலப்பகுதிக்கு நேரொத்த தொகையொன்றை தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டின் கீழான கொடுப்பனவுகள் தொடர்பில் நிலுவை யாக உள்ளவிடத்து;

(எ) கடனாளி தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற் பாட்டை பயனுறச்செய்வதற்கு நியாயமான அளவு அவசியமான ஏதேனும் நடவடிக்கையை கொண்டு செல்வதற்கு தவறியிருக்குமிடத்து; அல்லது

(ஏ) கடனாளி தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற் பாட்டின் வேறுவகை ஒன்றுக்கு சம்மதம் அளிப்ப தற்கு நியாயமற்ற முறையில் மறுக்கின்றவிடத்து.

(5) இரண்டாம் உட்பிரிவின் கீழான விண்ணப்பம் ஒன்றின் கேட்பின் மீது, நீதிமன்றம் –

(அ) விண்ணப்பத்தை தள்ளுபடி செய்யலாம்;

(ஆ) தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டை முடிவுறுத்தலாம்; அல்லது

(இ) தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நிருவாகியை 58 ஆம் பிரிவின் கீழ் தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டின் வேறுபடுத்துகைக்காக பிரேரணை ஒன்று தயாரிப்பதற்கு கட்டளையிடலாம்.

(6) நீதிமன்றம் (5) ஆம் உட்பிரிவின் கீழ் கட்டளையொன்றினை ஆக்குகின்றவிடத்து, நீதிமன்றம் மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடு காலப்பகுதியின் தனிசு பயனில் உள்ளதான திரண்டதான ஏதேனும் வட்டி, கட்டணங்கள், அல்லது விதிப்பனவுகளை செலுத்துவதற்கு கடனாளியை தேவைப்படுத்தலாம்.

(7) ஏதேனும் சந்தர்ப்பத்தில் (5) ஆம் மற்றும் (6) ஆம் உட்பிரிவின் கீழான கடனாளியொன்றை ஆக்குமிடத்து, நீதிமன்றம் பின்வருவோருக்கு எழுத்து மூலமான அறிவித்தல் ஒன்றை வழங்குதல் வேண்டும் :-

(அ) கடனாளி;

(ஆ) தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நிருவாகி;

(இ) உத்தியோகபூர்வ பெறுநர்; அத்துடன்

(ஈ) ஐந்தாம் அல்லது (6) ஆம் உட் பிரிவுகளின் கீழான கட்டளை ஏற்புடைமையாகின்றவர்களான எவரேனும் கடன்கொடுநர்கள்.

(8) நீதிமன்றம் (7) ஆம் உட் பிரிவின் கீழ் உத்தியோகபூர்வ பெறுநருக்கு எழுத்து மூலமான அறிவித்தல்களை வழங்குகின்றவிடத்து, உத்தியோகபூர்வ பெறுநர் அத்தகைய அறிவிதல் கிடைக்கப்பெற்ற தேதியிலிருந்து பதினான்கு நாட்கள் காலப்பகுதியினுள் அத்தகைய முடிவுறுத்துகை பற்றிய தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை இடாப்பில் பதிவொன்றினை ஆக்குவதற்கு செய்வித்தல் வேண்டும்.

**60.** (1) ஒழுங்கேற்பாடு 59 ஆம் பிரிவின் கீழ் முன்னரே முடிவுறுத்தப்பட்டிருந்தால் ஒழிய, அது உருவாக்கிய எல்லா கடப்பாடுகளும் நிறைவேற்றப்பட்டிருக்கும் போது, தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடொன்று பூரணப்படுத்தப்படுகின்றது.

தனிசு மீள் கட்டமைப்பு ஒழுங்கேற் பாட்டை பூரணப்படுத் தப்படல்

(2) ஓராம் உட் பிரிவின் கீழ் ஒழுங்கேற்பாடொன்று பூரணப்படுத்தப்படும் போது தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நிருவாகி பின்வருவனவற்றை பூர்த்திசெய்ததன் பின்னரான பதினான்கு நாட்களினுள் :-

(அ) பூரணப்படுத்திய சான்றிதழ் ஒன்றை கடனாளிக்கு வழங்குதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) பூரணப்படுத்திய சான்றிதழ் பற்றிய உத்தியோக பூர்வ பெறுநருக்கு எழுத்துமூல அறிவித்தலை வழங்குதல் வேண்டும்.

(3) பூரணப்படுத்திய சான்றிதழ் அதில் கூறப்பட்ட நிகழ்வுகள் பற்றி முதல் தோற்ற சான்றாக இருக்கின்றது.

(4) தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடொன்று (1) ஆம் உட்பிரிவின்கீழ் பூரணப்படுத்தப்படும் போது, கடனாளியின் உள்ளடக்கப்பட்ட தனிசுகள் இரத்துச் செய்யப்பட வேண்டும் என்பதுடன் கடனாளி எவையேனும் அத் தனிசுகள் தொடர்பில் செலுத்தப்படற்பாலதான வரக்கூடியதான வட்டி, கட்டணங்கள் அல்லது விதிப்பனவுகள் உள்ளடங்கலாக தனிசுகளின் ஏதேனும் பாகத்தை செலுத்துவதற்கு ஆளாக்கப்படுதலாகாது.

(5) தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டின் பூரணப் படுத்துகை எவையேனும் விலக்களிக்கப்பட்ட தனிசுகளிலிருந்து கடனாளியை விடுவித்தலாகாது.

(6) தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டின் பூரணப் படுத்துகையானது பின்வருமாறு ஒழுங்கேற்பாட்டு நியதிகளில் ஏற்பாடு செய்யப்பட்ட அளவுவரை தவிர்ந்த :–

(அ) ஆள் கடனாளியுடன் கூட்டாக கொடுமதியாகவுள்ள தனிசொன்றிலிருந்து வேறு எவரேனும் ஆளை விடுவித்தலாகாது;

(ஆ) உத்தரவாதமளிப்பவர் கடனாளியின் தனிசுகளுக் காக வழங்கியதான உத்தரவாதத்திலிருந்து உத்தர வாதம் அளிப்பவரொருவரை விடுவித்தலாகாது.

(7) தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டின் பூரணப் படுத்துகையானது ஒழுங்கேற்பாட்டின் நியதிகளில் ஏற்பாடு செய்யப்பட்ட அளவு தவிர எவையேனும் பிணைப்பொறுப் பளிக்கப்பட்ட தனிசுகளின்கீழ் அல்லது பிணைப்பொறுப் பளிக்கப்பட்ட தனிசின் எவையேனும் பாகத்திலிருந்தான பொறுப்பிலிருந்து கடனாளியை விடுவித்தலாகாது.

(8) உத்தியோகபூர்வ பெறுநர் (2) ஆம் உட்பிரிவில் குறித் துரைக்கப்பட்ட பூரணப்படுத்துகை சான்றிதழை பெற்றுக் கொள்கின்ற பொழுது, உத்தியோகபூர்வ பெறுநர் :-

(அ) தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை இடாப்பில் தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டின் வெற்றிகரமாக பூரணப்படுத்துகையை பதிவு செய்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) பூரணப்படுத்தப்பட்ட ஒழுங்கேற்பாடு தொடர்பில் அதில் பதிவுசெய்யப்பட்ட எல்லா தகவல்களை யும் அத்தகைய கிடைப்பனவின் பின்னரான பதினான்கு நாட்களில் தனிப்பட்ட கடனிறுக்க வகையின்மை இடாப்பிலிருந்து அகற்றுதல் வேண்டும்.

(9) ஐயத்தை தவிர்ப்பதற்காக தனிசு மீள்கட்டமைப்பு ஏற்பாடொன்று (1) ஆம் உட்பிரிவின் கீழ் பூரணத்துவம் செய்யப்படும் போது, தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற் பாடனது தொடர்ந்தும் பயனிலிருக்காது, என்பதுடன் 55 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின்கீழான கடன்கொடுநர் பரிகாரங்கள் மீதான கடன் தீர்ப்புப் பிற்போடலானது ஏற்புடமையாவதற்கு இல்லாதொழிதல் வேண்டும்.

**61.** (1) தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடொன்றின் கீழான தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நிருவாகியின் கடமைகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது :- தனிசு மீள் கட்டமைப்பு ஒழுங்கேற்பாட் டின்கீழான தனிப்பட்ட கடனிறுக்க வகையின்மை நிருவாகியின் கடமைகள்

(அ) ஒழுங்கேற்பாட்டிற்கு பொதுவாக பயனளித்தல்;

(ஆ) ஒழுங்கேற்பாட்டில் குறித்துரைக்கப்பட்ட முறையில் கடனாளியின் ஆதனத்துடன் கையாளுதல்;

(இ) கடனாளி தகவலுக்காக நியாயமான கோரிக்கை யொன்றை செய்கின்ற போது, கடனாளி ஒழுங்கேற்பாட்டு நிருவாகம் பற்றி தகவல்களை அளித்தல்;

(ஈ) பின்வருமாறுள்ள கடன்கொடுநருக்கு ஒழுங் கேற்பாட்டு நிருவாகம் பற்றி தகவல்களை அளித்தல் :-

(i) ஒழுங்கேற்பாட்டினால் பிணிக்கப்பட்டுள்ளார்;

(ii) தகவல்களுக்காக நியாயமான கோரிக்கையை செய்கின்றவர்;

(உ) உத்தியோகபூர்வ பெறுநருக்கு ஒழுங்கேற்பாட்டு நிருவாகம் பற்றி தகவல்களை அளித்தல்;

(ஊ) கடனாளி இந்த சட்டத்தின் கீழான தவறொன்றை புரிந்துள்ளாரா என்பதை கவனத்திற்கொள்ளுதல்;

(எ) இச் சட்டத்தின் கீழ், ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின்கீழ் அல்லது வேறு ஏதேனும் ஏற்புடையற்பாலதான சட்டவாக்கத்தின் கீழ் கடனாளியினால் ஏதேனும் தவறு ஒன்று பற்றிய ஏதேனும் சான்றை உத்தியோகபூர்வ பெறுநர் அல்லது இயைபான சட்ட வலுவுறுத்தல் அதிகாரிகளுக்கு ஆற்றுப்படுத்தல்.

(2) தனிப்பட்ட கடனிறுக்க வகையின்மை நிருவாகி அச்செலவுகள் தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டிற் கான இயைபான பிரேரணையில் குறித்துரைக்கப்பட்ட வகையாக இருந்தாலொழிய, ஒழுங்கேற்பாட்டை நிருவகிப் பதில் உறப்பட்ட செலவுகளிற்காக மீளளிக்கப்படுதலாகாது.

(3) தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நிருவாகி :-

(அ) தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நிருவாகி யின் தனிப்பட்ட வங்கிக் கணக்கில் பெறப்பட்ட

ஏதேனும் பணத்தினை செலுத்துதலாகாது; அத்துடன்

(ஆ) தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டின் கீழ் கடனாளிகளினால் செலுத்தப்பட்ட எல்லா பணங்களையும் பெற்றுக்கொள்வதற்காக தனி வேறான வங்கிக் கணக்கொன்றை பேணுதல் வேண்டும் என்பதுடன் பின்வருவன தவிர்ந்த வேறுவகையில், கணக்கிலிருந்து ஏதேனும் பணத்தை செலுத்துதலாகாது :–

(i) தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டின் நிருவாகத்துடன் தொடர்புபட்ட நோக்கங்களுக்காக;

(ii) இச் சட்டத்திற்கிணங்க மற்றும் இச் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளுக்கிணங்க; அல்லது

(iii) நீதிமன்றத்தின் பணிப்புக்கிணங்க;

(4) தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நிருவாகி நேர அடிப்படையின் மீது உடன்பட்டுக் கொள்ளப்பட்ட விகிதாசாரத்தில் கடன் கொடுநர்களான தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடுகளின் கீழ் கடனாளிகளினால் செலுத்தப்பட்ட பணங்களை அனுப்பதல் வேண்டும்.

(5) தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நிருவாகி தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடொன்றின்கீழ் கடனாளியிடமிருந்து கிடைக்கப்பெற்ற பணங்கள் மற்றும் கடன்கொடுநர்களுக்கு அளிக்கப்பட்ட பணங்கள் பற்றிய கணக்குகளின் பூரணமான மற்றும் துல்லியமான பதிவேடுகளை பேணுதல் வேண்டும்.

(6) தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நிருவாகி கடனாளியுடன் கிரமமான தொடர்பொன்றை பேணுதல் வேண்டும் என்பதுடன் பின்வருமாறு தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டின் மீளாய்வுகளையும் நடாத்துதல் வேண்டும் :-

(அ) ஆறு மாத காலப் பகுதிக்கு ஒரு தடவை; அத்துடன்

(ஆ) ஒழுங்கேற்பாடுகளின் தொழிற்பாட்டு சூழ்நிலைகளினால் தேவைப்படுகின்றவாறான அத்தகைய வேறு நேரங்கள்.

(7) கடனாளியினது சூழ்நிலைகள் பொருள் சார்ந்த நிலையில் மாற்றமடைந்துள்ளவிடத்து கடனாளியுடன் கலந்தாலோசனையின் பெயரில் தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நிருவாகி 58 ஆம் பிரிவின் கீழ் தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடுகள் வேறுபடுத்துவதற்கான நடவடிக்கைமுறை தொடங்கப்படுதல் வேண்டும் என்பது பற்றி உரிய கவனத்தை அளித்தல் வேண்டும்.

தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை பிரேரணையாளர்கள்

**62.** (1) இப் பாகத்தின் கீழ் தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை பிரேரணையாளரின் பணிகளை நிறைவேற்றும் போது, தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை பிரேரணையாளர் :-

(அ) கடனாளியின் முகவர் ஒருவர் அல்லர்;

(ஆ) எவரேனும் கடன்கொடுநர் அல்லது கொடுநர்களின் முகவர் அல்லர்;

(இ) கடனாளி மற்றும் கடன்கொடுர்கள் இருவருக்கும் திருப்திகரமான தீர்வொன்றை அடைவதற்கு சாத்தியமானதாக இருப்பின், அதனை நாடுவதற்கு கடனாளி மற்றும் கடன் கொடுநர்களுடன் தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை பிரேரணையாளரின் தொழிலாண்மைசார் தகவுடைமையில் ஈடுபடல் வேண்டும்; அத்துடன்

(ஈ) இச் சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் 4 ஆம் உட்பிரிவின் கீழ் அதிகார சபையினால் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகள், விதிகள், நியமங்கள், நடத்தை கோவைகள், செயன்முறை பணிப்பு அல்லது வழிகாட்டு நெறிகள் என்பவற்றை கருத்திற் கொண்டு தொழிலாண்மைசார் சுயாதீன தீர்ப்பை பிரயோகித்தல் வேண்டும்.

(2) ஆள் ஒருவர் பின்வருமாறு இருப்பின் மட்டும், தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை பிரேரரணையாளராக ஆள் ஒருவர் சேவையாற்றலாம் :-

(அ) தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடொன்று தொடர்பில் பிரதான பதவி வகிப்பவர் ஒருவராக நியமிக்கப்பட்டு செயலாற்றுவதற்கு 12 ஆம் பிரிவின் கீழ் தகைமையுற்றிருப்பின்;

(ஆ) தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடு தொடர்பில் பிரதான பதவி வகிப்பவர் ஒருவராக நியமிக்கப்பட்டு செயலாற்றுவதற்கு 12 ஆம் பிரிவின் கீழ் அவ் ஆள் தகைமை பெற்றுள்ளார் என எழுத்தில் சான்றுப்படின்; அத்துடன்

(இ) தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை பிரேரணையாளர் ஒருவராக நியமிப்பதற்கு எழுத்தில் சம்மதம் அளிக்கப்பட்டிருப்பின் மற்றும் நியமன நேரத்தில் சம்மதம் மீளப்பெறப்படாது இருப்பின்.

(3) இரண்டாம் உட்பிரிவின் (அ) மற்றும் (ஆ) எனும் பந்திகளில் தேவைப்பாடுகள் எவற்றையும் ஈடுசெய்யவில்லை என அறிந்துகொண்டு தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை பிரேரணையாளர் ஒருவராக நியமிக்கப்படுவதற்கு அல்லது செயலாற்றுவதற்கு சம்மதம் வழங்குகின்றவரான ஆள் ஒருவர் தவறொன்றை புரிகின்றார் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிப்பின் மேல் ஐந்தாயிரம் ரூபாவை விட குறையாததும் மற்றும் இரண்டு மில்லியன் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணத் துக்கு அல்லது மூன்றாண்டுகளை விஞ்சாத கடூழிய மறியற் றண்டனை காலப்பகுதிக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் அல்லது மறியற்றண்டனை இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

தனிப்பட்ட கடனிறுக்க வகையின்மை நிருவாகிகள்

**63.** (1) இப்பணிகள் நிறைவேற்றப்படும் போது, தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நிருவாகியொருவர், பாகத்தின் கீழ் தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நிருவாகி யொருவர் :-

(அ) கடனாளியின் முகவர் ஒருவர் அல்லர்;

(ஆ) எவரேனும் கடன்கொடுநர் அல்லது கொடுநர் களின் முகவர் அல்லர்;

(இ) தனிசு மீள் கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டை பயனிடுவதற்கு கடனாளி மற்றும் கடன் கொடு நர்களுடன் தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நிருவாகியின் தொழில்சார் தகைமையில் ஈடுபடுதல் வேண்டும்; அத்துடன்

(ஈ) இச் சட்டத்தின் மற்றும் 4 ஆம் பிரிவின் கீழ் அதிகாரசபையினால் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகள், விதிகள், நியமங்கள், ஒழுக்க நெறிக் கோவைகள், நடைமுறை பணிப்பு அல்லது வழிகாட்டு நெறி என்பவற்றின் ஏற்பாடுகளை கருத்திற்கொண்டு ஆகியவற்றை கருத்திற் கொண்டு தொழில்லாண்மைசார் சுயாதீன தீர்ப்பை பிரயோகித்தல் வேண்டும்.

(2) ஆள் ஒருவர் பின்வருமாறு இருப்பின் மட்டும் தனிப் பட்ட கடனிறுக்கவகையின்மை நிருவாகி ஒருவராக ஆள் ஒருவர் சேவையாற்றலாம் :-

(அ) தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடு தொடர்பில் பிரதான பதவி வகிப்பவராக நியமிக்கப்பட்டு செயலாற்றுவதற்கு 12 ஆம் பிரிவின் கீழ் தகைமை பெற்றவர்;

(ஆ) தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடு தொடர்பில் பிரதான பதவி வகிப்பவராக நியமிக்கப்பட்டு செயலாற்றுவதற்கு 12 ஆம் பிரிவின் கீழ் தகைமை பெற்ற ஆளாக என எழுத்தில் சான்றுப்படுத்தப்பட்டிருப்பின்;

(இ) தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நிருவாகி யொருவராக நியமனம் பெறுவதற்கு எழுத்தில் சம்மதம் அளிக்கப்பட்டிருப்பின் மற்றும் நியமன நேரத்தில் சம்மதம் மீளப்பெறப்படாதிருப்பின்.

(3) இரண்டாம் உட்பிரிவின் (அ) மற்றும் (ஆ) எனும் பந்திகளில் தேவைப்பாடுகள் எவற்றையும் ஈடுசெய்யவில்லை என அறிந்து கொண்டு தனிப்பட்ட கடனிறுக்க வகையின்மை நிருவாகி ஒருவராக நியமிக்கப்படுவதற்கு அல்லது

செயலாற்றுவதற்கு சம்மதம் வழங்குகின்றவரான ஆள் ஒருவர் தவறொன்றை புரிகின்றார் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிப்பின் மேல் ஐந்நூறாயிரம் ரூபாவை விட குறையாமல் மற்றும் இரண்டு மில்லியன் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணத் துக்கு அல்லது மூன்றாண்டுகளை விஞ்சாத கடூழிய மறியற் றண்டனை காலப்பகுதிக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் அல்லது மறியற்றண்டனை இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

தனிசு மீள் கட்டமைப்பு ஒழுங்கேற் பாடுகள் நீதிமன்ற பணிப்புகள்

**64.** (1) உத்தியோகபூர்வ பெறுநர் அல்லது தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நிருவாகி தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டு தொடர்பில் எழுகின்ற ஏதேனும் விடயம் பற்றிய பணிப்புகளுக்கு அல்லது கட்டளையொன்றுக்கு நீதிமன்றத்துக்கு விண்ணப்பமொன்றைச் செய்யலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழான விண்ணப்பத்தின் மீது நீதிமன்றம் :–

(அ) நீதிமன்றம் தோதானது என கருதக்கூடிய வாறான பணிப்புகளை உத்தியோகபூர்வ பெறுநருக்கு அல்லது தனிப்பட்ட கடனிறுக்க வகையின்மை நிருவாகிக்கு அளிக்கலாம்;

(ஆ) 32 ஆம் பிரிவு மற்றும் 56 ஆம் பிரிவு என்பவற்றின் கீழ் எழுகின்ற கடனாளியின் ஏதேனும் கடப்பாட்டின் வலுவுறுத்துகைக்கான கட்டளையொன்றினை ஆக்கலாம்;

(இ) 59 ஆம் பிரிவின் கீழ் தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டின் முடிவுறுத்துவதற்கான விண்ணப்பம் ஒன்றாக விண்ணப்பத்தினைப் பரிகரிக்கலாம்; அல்லது

(ஈ) 58 ஆம் பிரிவின் கீழ் தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டின் வேறுபடுத்துகைக்கான நடவடிக்கைமுறையை ஆரம்பிப்பதற்கு தனிப் பட்ட கடனிறுக்கவகையின்மை நிருவாகிக்கு கட்டளையிடலாம்.

## பாகம் V

### தனிசு புனர்வாழ்வு கட்டளைகள்

தனிசு புனர்வாழ்வுக் கட்டளை

**65.** (1) இப்பாகம் வங்கிமுறிவிற்கான மாற்றீட்டு செயன்முறையொன்றினை தாபிக்கின்றது. இந்த செயன்முறையின் இலக்குகளாவன பின்வருவனவற்றையும் உள்ளடக்கியிருக்கும் :-

(அ) கடன்கொடுநர்களுக்கு மீள் கொடுப்பனவுகளை செய்கின்ற ஏதேனும் நியாயமான உத்தேசத்தை கொண்டுள்ள போதியதற்ற சொத்துக்கள் மற்றும் வருமானத்தினை வைத்திருக்கின்றவரான கடனாளிக்கு மேலதிக கடன்படு நிலையிலிருந்து அவசர பொருளாதார புனர்வாழ்வு மற்றும் நிவாரணத்தை வழங்குதல்; அத்துடன்

(ஆ) உரிய நேரத்தில் தீர்த்தல், வினைத்திறன்மிக்க மற்றும் பக்கச்சார்பற்ற முறையில், குறைவான செயன்முறை சிக்கல்கள் மற்றும் செலவுகள், நிலுவையிலுள்ள தனிசு மட்டங்கள் மற்றும் கடனாளியின் வழக்குகள் மற்றும் கடனாளியின் வளங்கள் என்பவற்றின் கடனிறுக்கவகையற்றமை என்பன முறையான வங்கி முறிவு செயல்முறையானது நியாயப்படுத்தாது.

(2) தனிசு புனர்வாழ்வுக் கட்டளை நடவடிக்கை பிணைப் பொறுப்பளிக்கப்பட்ட கடன்கொடுநர்களின் உரிமைகளை பாதிக்காது.

தனிசு புனர் வாழ்வுக் கட்டளை யொன்றுக் கான தகைமை

**66.** (1) கடனாளி பின்வரும் எல்லா கட்டளைக் கற்களையும் ஈடுசெய்திருப்பின், கடனாளி தனிசு புனர்வாழ்வு கட்டளையொன்றுக்கு தகைமையுடையவராக இருத்தல் வேண்டும் :-

(அ) கடனாளி ஏதேனும் புறத்தொதுக்கப்பட்ட தனிசிலிருந்து அப்பால், இரண்டு மில்லியனை விட குறைவானதாக அத்தொகைக்கு மொத்த தனிசுகளைக் கொண்டிருத்தல்;

(ஆ) கடனாளி 36 ஆம் பிரிவில் குறித்துரைக்கப் பட்டதான ஒரு இலட்சம் ரூபா அல்லது குறைவாக மாதாந்த சேர்பெறுமதி வருமானத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்;

(இ) கடனாளி இருநூறாயிரம் ரூபாவுக்கு அல்லது குறைவான பெறுமதியை கொண்ட 34 ஆம் பிரிவினால் வரையறுக்கப்பட்டதான பாதுகாக்கப் பட்ட ஆதனம் நீங்கலாக கிடைக்கப்பெறப்படற் பாலதான ஆதனத்தைக் கொண்டிருத்தல்;

(ஈ) கடனாளியின் வருமதியாக வருகின்றதான கடனாளியின் தனிசுகளை செலுத்துவதற்கு கடனாளி இயலாதவராகவிருத்தல்;

(உ) கடனாளி இலங்கையில் வதிவுள்ளார் அல்லது பின்வருமாறு தனிசுப் புனர்வாழ்வுக் கட்டளை விண்ணப்பத்தின் தேதியின் முன்னர் மூன்று ஆண்டுகளினுள் ஏதேனும் நேரத்தில் :-

(i) இலங்கையில் வதிவுள்ளவராக அல்லது விதிவிடம் ஒன்றைக் கொண்டிருப்பவராக; அல்லது

(ii) இலங்கையில் தொழில் ஒன்றை கொண்டு நடத்தியுள்ளார்;

(ஊ) கடனாளி தற்போது வங்கிமுறிவு கடனாளி யொருவர் அல்லர்;

(எ) கடனாளி தனிசு புனர்வாழ்வுக் கட்டளை விண் ணப்பத்தின் தேதிக்கு முன்னர் ஓராண்டினுள் தனிசு புனர்வாழ்வுக் கட்டளையொன்றுக்கு அமைந்தாகவிராதிருத்தல்; அல்லது

(ஏ) கடனாளி தனிசு புனர்வாழ்வுக் கட்டளை விண்ணப்பத் தேதிக்கு முன்னரான ஐந்து ஆண்டுகளினுள் வங்கிமுறிவுக் கட்டளை யொன்றுக்கமைந்தவராகாதிருப்பின்.

கடன் புனர் வாழ்வுக் கட்டளை யொன்றுக் கான விண்ணப்பம்

**67.** (1) அறுபத்தியாறாம் பிரிவிலுள்ள கட்டளைக்கற்களை ஈடுசெய்கின்றவரான கடனாளி ஒருவர், தனிசு புனர்வாழ்வு கட்டளையொன்றுக்காக உத்தியோகபூர்வ பெறுநருக்கு அத்தகை கடனாளியின் சொந்த சுய முன்னெடுப்பின்மீது அல்லது அதிகாரமளிக்கப்பட்ட இடையீட்டாளர் ஊடாக விண்ணப்பிக்கலாம்.

(2) தனிசு புனர்வாழ்வு கட்டளையொன்றுக்கான விண்ணப்பமொன்றின் படிவம் 65 ஆம் பிரிவில் குறித்துரைக் கப்பட்டதான நடவடிக்கைமுறையின் இலக்குகளுடன் ஒத்திருக்கின்ற முறையில், விதித்துரைக்கப்படக்கூடியவாறாக இருத்தல் வேண்டும்.

(3) தனிசு புனர்வாழ்வு கட்டளையொன்றுக்கான விண்ணப்பம் (8) ஆம் உட் பிரிவிற்கிணங்க விதித்துரைக் கப்படக்கூடியவாறான அத்தகைய கட்டணத்தின் மூலம் (எவையேனும் இருப்பின்) சேர்த்து அனுப்பப்படல் வேண்டும்.

(4) தனிசு புனர்வாழ்வு கட்டளையொன்றுக்கான விண்ணப்பமொன்று 33 ஆம் பிரிவிற்கிணங்க கடனாளியின் நிதிசார் அலுவல்கள் பற்றிய கூற்றொன்றை விதித்துரைக்கப் படக்கூடியவாறான கூற்றொன்றை தேவைப்பாடுகளுக்கு மேலதிகமாக, உள்ளடக்குதல் வேண்டும்.

(5) தனிசு புனர்வாழ்வு கட்டளையொன்றுக்கான விண்ணப்பமொன்றை செய்வதில், கடனாளி பின்வருமாறு சம்மதம் அளிக்கின்றார் :-

(அ) கடனாளி 66 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தகவுடமை கட்டளைக்கற்களை ஈடு செய்கின் றாரா என்பதை தீர்மானிப்பதற்கு அவசியமென கருதுகின்றவாரான அத்தகைய விசாரணை களை உத்தியோகபூர்வ பெறுநர் செய்வதற்கு;

(ஆ) உத்தியோகபூர்வ பெறுநர் அத்தகைய விசாரணை களுக்கு திருப்திகரமான பதில்களை பெற்றுக் கொள்ளும்வரை, உத்தியோகபூர்வ பெறுநரினால் தனிசு புனர்வாழ்வுக் கட்டளை விண்ணப்பம் பற்றிய கவனத்தை பிற்போடுவதற்கு;

(இ) தனிசு புனர்வாழ்வுக் கட்டளை விண்ணப்பம் ஒன்றினை ஆக்கி கவனத்திற் கொள்வதற்கான அவசியமான அளவுவரைக்கும் கடன்கொடுநர் கள் மற்றும் ஏனைய மூன்றாம் திறத்தவர்கள் என்பவர்களுக்கான தனிப்பட்ட தரவை உத்தியோகபூர்வ பெறுநரினால் வெளிப்படுத் துவதற்கு; அத்துடன்

(ஈ) தனிசு புனர்வாழ்வுக் கட்டளை விண்ணப்பம் ஒன்றினை ஆக்கி கவனத்திற் கொள்வதற்கான அவசியமான அளவுவரை கடனாளியின் தனிப் பட்ட தரவுபற்றி கடன்கொடுர்கள், அரசாங்க முகவராண்மைகள் அல்லது வேறு எவரேனும் இயைபான மூன்றாம் திறத்தவர்களினால் உத்தி யோகபூர்வ பெறுநருக்கு வெளிப்படுத்துவதற்கு;

(6) தனிசு புனர்வாழ்வுக் கட்டளை ஒன்றிற்கான விண்ணப்பமொன்றை சமர்ப்பிப்பதன் மீது கடனாளி தனிசு புனர்வாழ்வு கட்டளை விண்ணப்பத்தின் சூழ்நிலைகளுக்கு நியாயமாக ஏற்புடமையாக்கக்கூடியதான 32 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட எவையேனும் இயைபான கடப்பாடு களுக்கு அமைந்தவராக வருகின்றார்.

(7) தனிசு புனர்வாழ்வு கட்டளையொன்றுக்கான விண்ணப் பத்தை தயாரிப்பதில் மற்றும் சமர்ப்பிப்பதில் கடனாளிக்கு உதவுகின்ற அதிகாரமளிக்கப்பட்ட இடையீட்டார்கள் செயல்கள் தொடர்பிலான விபரங்கள் விதித்துரைக்கப்படல் வேண்டும்.

(8) மூன்றாம் உட்பிரிவிற்கிணங்க கட்டணமொன்று விதித்துரைக்கப்படுகின்றவிடத்து, கட்டணமானது 65 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டதான நடவடிக்கை முறையின் இலக்குகளுடன் ஒத்திசைகின்ற மட்டமொன்றை உருவாக் குதல் வேண்டும்.

தனிசு புனர்வாழ்வுக் கட்டளை யொன்றினை ஆக்குவதற் கான கட்டளைக் கற்கள்

**68.** (1) தனிசு புனர்வாழ்வுக் கட்டளை விண்ணப்பமொன் றினை தீர்மானிக்கும் நோக்கங்களுக்காக, பின்வரும் ஊகங் களை உத்தியோகபூர்வ பெறுநர் பிரயோகித்தல் வேண்டும்.

(2) பின்வருமாறிருப்பின், விண்ணப்பத்தை தீர்மானிக் கின்ற நேரத்தில் தனிசுகளை செலுத்துவதற்கு கடனாளி உள்ளாரென உத்தியோகபூர்வ பெறுநர் ஊகிப்பதற்கு இயலுமானவராக இருத்தல் வேண்டும் :–

(அ) உத்தியோகபூர்வ பெறுநருக்கு விண்ணப்பத்தில் வழங்கப்பட்டுள்ள தகவல்களில் உள்ள விண்ணப் பத் திகதி பிரச்சினைக்குரியதாக தோன்றின் மற்றும் உத்தியோகபூர்வமற்ற பெறுநர் வழங்கப் பட்ட தகவல்கள் பூரணமற்றவை அல்லது துல்லியமற்றவை என நம்புவதற்கு காரணம் எதனையும் கொண்டிருக்காதுவிடின்; அத்துடன்

(ஆ) விண்ணப்பத் திகதியிலிருந்து கடனாளியின் நிதிசார் சூழ்நிலைகளில் எழுகின்ற மாற்றங்களின் பயனைக் கொண்டு கடனாளி தனது தனிசுகளை செலுத்துவதற்கு இயலுமாக உள்ளார் என நம்புவதற்கு உத்தியோகபூர்வ பெறுநர் காரணம் எதனையும் கொண்டிருக்காதுவிடின்.

(3) உத்தியோகபூர்வ பெறுநர் பின்வருமாறு இருப்பின் 66 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஏனைய எல்லா நிபந்தனைகளும் திருப்தியாக உள்ளதென ஊகிப்பதற்கு இயலுமானவறாக இருத்தல் வேண்டும் :-

(அ) உத்தியோகபூர்வ பெறுநருக்கு விண்ணப்பத்தில் வழங்கப்பட்டுள்ள தகவல்களிலிருந்து வழங்கப் பட்ட தகவல்கள் பூரணமற்றவை அல்லது துல்லியமற்றவையென தோன்றின்;

(ஆ) விதித்துரைக்கப்படக்கூடியவாறான எவையேனும் சோதனைகள் செய்யப்பட்டிருப்பின் எவையேனும் சரிபார்த்தல் சோதனை விதித்துரைக்கப்பட்டிருக் கலாம், மேற்கொள்ளப்பட்டிருக்கலாம்; அத்துடன்

(இ) விண்ணப்பத் திகதியிலிருந்து கடனாளியின் சூழ்நிலைகளில் மாற்றத்தின் மாற்றத்தின் பயனைக்கொண்டு ஏதேனும் நிபந்தனை தொடர்ந்தும் திருப்திப்படுத்தவில்லை என நம்புவதற்கு உத்தியோகபூர்வ பெறுநர் காரணம் எதனையும் கொண்டிருக்காது விடின்.

(4) விண்ணப்பத்தில் வழங்கப்பட்ட தகவல்களுக்கான இப்பிரிவில் உள்ள குறிப்பீடுகள் விண்ணப்பத்தை ஆதரிப்பதில் உத்தியோகபூர்வ பெறுநருக்கு வழங்கப்பட்ட தகவல்கள் அல்லது உத்தியோகபூர்வ பெறுநரின் எவை யேனும் விசாரணைகளுக்கான பதிலிறுப்புகள் என்பவற்றை ஆகியவற்றை உள்ளடக்குகின்றது.

உத்தியோகபூர்வ பெறுநரின் விதப்புரை தனிசு புனர்வாழ்வு கட்டளை

**69.** (1) தனிசு புனர்வாழ்வுக் கட்டளைக்கான விண்ணப்ப மொன்று செய்யப்பட்ட பொழுது இப் பிரிவு ஏற்புடமை யாகின்றது.

(2) கடனாளியின் விண்ணப்பம் தொடர்பில் உத்தியோக பூர்வ பெறுநரினால் மேற்கொள்ளப்பட்ட எவையேனும்

விசாரணைகளுக்கான திருப்திகரமான பதிலிறுப்புகளை கடனாளி வழங்கப்பட்டிருப்பதான அத்தகைய காலம் வரை தனிசு புனர்வாழ்வு கட்டளையொன்றின்கான கவனம் மற்றும் தீர்மானம் என்பவற்றை உத்தியோகபூர்வ பெறுநர் பிற்போடலாம்.

(3) தனிசு புனர்வாழ்வுக் கட்டளை விண்ணப்பம் பற்றி பின்வருமாறு உத்தியோகபூர்வ பெறுநர் தீர்மானிக்கலாம் :-

(அ) விண்ணப்பத்தினை மறுப்பதா என தீர்மானித்தல்; அல்லது

(ஆ) உத்தியோகபூர்வ பெறுநர் அதனை மறுக்காது விடின் தனிசு புனர்வாழ்வு கட்டளையொன்றை விதந்துரைக்கின்ற சான்றிதழ் ஒன்றை வழங்கு வதன் மூலம்.

(4) தனிசு புனர்வாழ்வு கட்டளையொன்றை விதந்துரைக் கின்ற சான்றிதழ் ஒன்றை வழங்குவதன் மீது உத்தியோகபூர்வ பெறுநர் :-

(அ) தனிசு புனர்வாழ்வுக் கட்டளை விண்ணப்பம் மற்றும் ஏதேனும் ஆதாரப்படுத்துகின்ற ஆவணம் என்பவற்றுடன் சேர்த்து இச் சான்றிதழை நீதிமன்றத்திற்கு முன்வைத்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) சான்றிதழ் வழங்கப்பட்டமை தொடர்பாக கடனாளி மற்றும் கடனாளிக்கு உதவுகின்ற எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட இடையீட்டாளர் என்போருக்கு எழுத்து மூலமான அறிவித்தலை வழங்குதல் வேண்டும்.

(5) இப் பிரிவின் பின்வரும் ஏற்பாடுகளில் எவையேனும் ஒன்றினால் அவ்வாறு செய்வதற்கு அதிகாரமளிக்கப் பட்டிருப்பின் மட்டும் உத்தியோகபூர்வ பெறுநர் விண்ணப் பத்தை மறுக்கலாம்.

(6) உத்தியோகபூர்வ பெறுநர் பின்வருமாறு கவனத்திற் கொண்டிருப்பின், உத்தியோகபூர்வ பெறுநர் விண்ணப் பத்தினை மறுக்கலாம் :-

(அ) அறுபத்தெட்டாம் பிரிவின் கீழ் விதிக்கப்பட்ட சகல விதமான தேவைப்பாடுகளையும் விண்ணப்பம் ஈடுசெய்திருக்கவில்லை;

(ஆ) அறுபத்தியாறாம் பிரிவின் கீழ் குறித்துரைக்கப் பட்ட நிபந்தனைகளை திருப்பதிப்படுத்த வில்லை என;

(இ) விசாரணைகளை செய்வதற்காக உத்தியோக பூர்வ பெறுநரினால் தாபிக்கப்பட்ட காலபகுதி யினுள் உத்தியோகபூர்வ பெறுநரின் எவை யேனும் விசாரணைளுக்கு திருப்திகரமான முறையில் கடனாளி பதிலளித்துதிருக்கவில்லை யென; அல்லது

(ஈ) விண்ணப்பத்தை செய்வதில் அல்லது விண்ணப் பத்தை ஆதரப்படுத்தவதற்கு எவையேனும் மேலதிக தகவல்களை வழங்குவதில் கடனாளி ஏதேனும் பொருள் சார்ந்த ரீதியான பொய்யான பிரதிநிதித்துவத்தை அல்லது விட்டு விடுகையை செய்திருக்கின்றார் என.

(7) உத்தியோகபூர்வ பெறுநர் விண்ணப்பமொன்றை மறுப்பின், உத்தியோகபூர்வ பெறுநர் மறுப்புக்கான காரணங்கள் உள்ளடங்கியதான கடனாளிக்கு உதவும் வகையில் கடனாளிக்கு அல்லது எவரேனும் அதிகாரமளிக்கப் பட்ட இடையீட்டாளருக்கு அத்தகைய மறுப்பு பற்றி எழுத்துமூல அறிவித்தலை வழங்குதல் வேண்டும்.

தனிசு புனர்வாழ்வுக் கட்டளை விண்ணப்பத்தின் நீதிமன்ற தீர்மானம்

**70.** (1) அறுத்தியொன்பாதாம் பிரிவின் கீழ் தனிசு புனர்வாழ்வு கட்டளையொன்றுக்கான விதப்புரையை நீதிமன்றம் பெற்றுக்கொள்ளுமிடத்து, நீதிமன்றம் ஏதேனும் அதனோடு இணைந்த ஆவணப்படுத்துகையுடன் சேர்த்து விதப்புரையை கவனத்திற் கொள்ளுதல் வேண்டும்.

(2) இப் பிரிவின் கீழ் விண்ணப்பம் ஒன்றை கவனத்துட் கொள்ளும் போது, நீதிமன்றம் அதன் கண் சான்றுப் படுத்தப்பட்ட விடயங்களின் சான்றாக 69 ஆம் பிரிவின்கீழ் உத்தியோகபூர்வ பெறுநரினால் வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்றை பரிகரிப்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(3) தனிசு புனர்வாழ்வுக் கட்டளையொன்றுக்கான விதப்புரையை கவனத்துட்கொண்டு, நீதிமன்றம் பின்வருமாறு கருதின், கடனிறுக்க வகையற்ற தனியாள் தொடர்பில் தனிசு புனர்வாழ்வு கட்டளையொன்றை நீதிமன்றம் செய்தல் வேண்டும் :-

(அ) கடனாளி 66 ஆம் பிரிவில் உள்ள தகவுடை கட்டளைக்கற்களை ஈடுசெய்கின்றார் என; அத்துடன்

(ஆ) கடனாளி விண்ணப்பத்தை செய்கையில் பொருள் சார் சரியான பொய்யான பிரதிநிதித்துவத்தை அல்லது விட்டு விடுகையொன்றை செய்கின்றார் என நம்புவதற்கு காரணமெதனையும் நீதிமன்றம் கொண்டிருக்கவில்லை என.

(4) தனிசு புனர்வாழ்வு கட்டளையொன்றுக்கான விதப்புரையொன்றை கவனத்துட்கொண்டு, நீதிமன்றம் பின்வருமாறு கருதின் கடனாளி தொடர்பில் புனர்வாழ்வு கட்டளையொன்றை கட்டளையொன்றை ஆக்குவதற்கான விண்ணப்பமொன்றை மறுத்தல் வேண்டும் :-

(அ) கடனாளி 66 ஆம் பிரிவில் உள்ள தகவுடை கட்டளைக்கற்களை ஈடுசெய்திருக்கவில்லை என; அத்துடன்

(ஆ) கடனாளி விண்ணபத்தினை செய்கையில் அல்லது அதனோடு இணைந்த எவையேனும் தகவல் களை வழங்குவதில் ஏதேனும் பொருள்சார் ரீதியான பொய்யான பிரதிநிதித்துவத்தை அல்லது விட்டு விடுகையை செய்திருக்கின்றார் என.

(5) தனிசு புனர்வாழ்வு கட்டளையொன்றை ஆக்கவதன் மீது நீதிமன்றம் கடனாளியின் பெயர், முகவரி, மற்றும் விபரணம் மற்றும் கட்டளையின் உள்ளடங்கலாக என்பவரை விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய விவரங்களை பின்வருவனவற்றில் வெளியிடப்படுவதற்கு உத்தியோகபூர்வ பெறுநருக்கு செய்விப்பதற்கு நீதிமன்றம் பணித்தல் வேண்டும் :–

(அ) தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை இடாப்பில்; அத்துடன்

(ஆ) பொது அறிவித்தல் மூலம்.

(6) தனிசு புனர்வாழ்வு கட்டளையொன்றினை ஆக்குவதன் மீது நீதிமன்றம் பின்வருவோருக்கு எழுத்து மூல அறிவித்தல்களை வழங்குவதற்கு படி உத்தியோகபூர்வ பெறுநரை பணித்தல் வேண்டும் :-

(அ) தனிசு புனர்வாழ்வுக் கட்டளையின் வழங்குகை பற்றி கடனாளிக்கு;

(ஆ) தனிசு புனர்வாழ்வுக் கட்டளை காலப் பகுதிக்காக ஏற்புடைய இக் கடமைகளின் அளவு வரை 32 ஆம் பிரிவின் கீழ் கடனாளியின் கடப்பாடுகளின்;

(இ) தனிசு புனர்வாழ்வுக் கட்டளையின் ஒன்று அறிந்த கடன் கொடுநரின் தனிசு பற்றிய உள்ளடக்கமும் பற்றிய கடனாளியின் அந்த கொடுநர் ஒவ்வொருவருக்கும்;

(ஈ) எழுபத்தைந்தாம் பிரிவின் கீழ் தனிசு புனர்வாழ்வு கட்டளைக்கு ஆட்சேபிக்கும் கடன்கொடுநர் களின் உரிமைகள் பற்றி கடனாளியின் அறிந்த கடன் கொடுநர் ஒவ்வொருவருக்கும்.

கடன் புனர் வாழ்வுக் கட்டளையின் பயன்

**71.** (1) கடனாளி தொடர்பில் தனிசு புனர்வாழ்வு கட்டளையொன்று வலுவில் இருக்கின்ற வேளையில், உள்ளடக்கப்பட்ட தனிசை கொடுமதியாக கொண்டுள்ள கடனாளியின் கடன்கொடுநர் ஒருவர் :-

(அ) கடன் தொடர்பில் பரிகாரம் எதனையும் கொண்டிருக்கவில்லை;

(ஆ) தனிசை அறவிடுவதற்கு அல்லது வலுவுறுத்துவ தற்கு எவையேனும் நடவடிக்கைகளை எடுத்தலாகாது; அத்துடன்

(இ) குறிப்பாக, பின்வருவனவற்றுக்கு எவையேனும் நடவடிக்கைகளை எடுத்தலாகாது :–

(i) கடனாளி அல்லது கடனாளியின் பிரதிநிதியின் வேண்டுகோள் தவிர்ந்த வேறுவகையில் உள்ளடக்கப்பட்ட கடன் கொடுப்பனவு தொடர்பில் கடனாளியை தொடர்பு கொள்ளல்,

(ii) உள்ளடக்கப்பட்ட கடன் தொடர்பில் கடனாளிக்கு எதிராக எவையேனும் சட்ட நடவடிக்கை முறைகளை தொடங்குதல் அல்லது தொடர்தல்,

(iii) உள்ளடக்கப்பட்ட தனிசு தொடர்பான கொடுப்பனவை சேகரித்தல், பெறுதல், அறவிடல் அல்லது கோருதல்,

(iv) கடனாளிக்கு எதிரான நீதிமன்றத்தின் அல்லது கட்டளை ஒன்றை நிறைவேற்றல் அல்லது வலுவுறுத்தல்,

(v) பிடியாணை ஒன்றினை பெற்றுக் கொள்ளல்,

(vi) இரண்டாம் உட் பிரிவின் தேவைப்பாடுகள் ஈடுசெய்யப்பட்டிருந்தாலொழிய, கடனாளி கடன் கொடுநருடனான வாடகை உடன் படிக்கையின் கீழ் வதிகின்ற வளவுகளின் உடைமையைப் பெற்றுக் கொள்ளல்,

(vii) நான்காம் உட்பிரிவுக்கமைய கடன் கொடுநர் பண்டங்களின் சொந்தக்காரராக அல்லது குத்தகைக்கு விடுபவராக உள்ள விடத்து கடனாளியினால் பயன்படுத்தப் படுகின்ற அல்லது உடைமையில் உள்ளவையான 34 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவுக்கான (அ), (ஆ) (இ) மற்றும் (ஈ) எனும் பந்திகளில் குறித்துரைக்கப்பட்ட வகையினதான எவையேனும் பண்டங் களை உடைமையில் எடுத்தல் அல்லது வேறு வகையில் அறவிடுதல்,

(viii) (i), (ii), (iii), (iv) (v), (vi), (vii) அல்லது (viii) எனும் பந்திகளில் குறிப்பிடப்பட்ட எவை யேனும் நடவடிக்கைகளை எடுப்பதற்கு முகவர் ஒருவரை அறிவுறுத்துதல்.

(2) கடனாளி தொடர்பில் தனிசு புனர்வாழ்வு கட்டளை யானது நடைமுறையில் இருக்கின்ற வேளையில், இயைபான கடன்கொடுநருடன் வாடகை உடன்படிக்கையொன்றை கடனாளி செய்திருக்கின்றவிடத்து, பின்வருமாறு இருப்பின் மட்டும் அத்தகைய உடன்படிக்கையின் கீழ் கடனாளி

வதிகின்ற வளவுகளின் உடமையை பெற்றுக் கொள்வதற்கு அத்தகைய கடன் கொடுநருக்கான அனுமதியை நீதிமன்றம் விதிவிலக்காக அனுமதிக்கலாம் :-

(அ) வாடகை ஒப்பந்தத்தின் காலப் பகுதி தனிசு புனர்வாழ்வுக் கட்டளை காலப் பகுதியின் போது காலாவதியாகியிருப்பின்;

(ஆ) வாடகையின் மூன்று மாதங்களுக்கு மேற்பட்ட தொகை ஒன்றை இயைபான கடன்கொடுநருக்கு கடனாளி; வாடகை நிலுவையாக கொண்டிருப் பின் மற்றும் நீதிமன்றம் கட்டளையின் காலப் பகுதியின் மீது தொடர்ந்து கொண்டிருக்கும் வாடகை கொடுப்பனவுகளை பெறுவதற்கு கடனாளி இயலாதவராக உள்ளார் எனும் சாத்தியம் உள்ளதென கருதின், அல்லது

(இ) வாடகையின் கடனாளியின் கொடுப்பனவு தவிர்ந்த ஏதுக்களின் அடிப்படையின் மீது வளவுகளின் உடைமைக்கு இயைபான கடன் கொடுநரின் விண்ணப்பமொன்று பெற்றுக் கொள்வதற்கு இருப்பின்.

(3) தனிசு புனர்வாழ்வு கட்டளை நடைமுறையில் இருக்கின்ற வேளையில், நீதிமன்றம் பின்வருமாறு கருது கின்றவிடத்து (1) ஆம் உட் பிரிவின், (இ) எனும் பந்தியில் பட்டியலிடப்பட்ட நடவடிக்கையை எடுப்பதற்கு கடன் கொடுநர் ஒருவருக்கு நீதிமன்றம் அனுமதி வழங்கலாம் :-

(அ) விதிவிலக்கான சூழ்நிலைகள் என்பது நடவடிக்கை எடுப்பதற்கு கடன்கொடுநரை அனுமதித்தல் நியாயமானது என்பதாகும், அத்துடன்

(ஆ) நடவடிக்கையானது

(i) கட்டளை தொடர்புடையதான கடனாளிக்கு பாதகத்தை செய்விக்காது;

(ii) வேறு எவரேனும் கடன்கொடுநரை நியாய மற்ற முறையில் பங்கப்படுத்தாது; அல்லது

(iii) கட்டளையின் பாதுகாப்புகளை குறிப்பாக குறை மதிப்பிடாது;

(4) கடனாளி தொடர்பில் தனிசு புனர்வாழ்வு கட்டளை யொன்று நடைமுறையில் இருக்கின்ற வேளையில், பின்வரு மாறு உள்ளவிடத்து 34 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட வகையினதான பண்டங்களை கடனாளி பயன்படுத்து கின்றதான அல்லது உடைமையில் வைத்திருக்கின்றதான வழிவகைகள் மூலம் வாடகைக் கொள்வனவு உடன்படிக்கை யொன்று உள்ளடங்கலாக உடன்படிக்கையொன்றை முடிவுறுத்துவதற்கு பண்டங்களின் குத்தகைக்கு விடுநர் அல்லது சொந்தக்காரருக்கு அனுமதியை விதிவிலக்கான முறையில் நீதிமன்றம் வழங்கலாம் :–

(அ) மூன்று மாதாந்த மீள் கொடுப்பனவுகளை விட அதிகமான தொகையொன்றை உடன்படிக்கை யின் கீழ் கடனாளி அத்தகைய நிலுவைகளை கொடுமதியாகவுள்ளவிடத்து மற்றும் தனிசு புனர் வாழ்வுக் கட்டளை வலுவிலுள்ள வேளையில் நீதிமன்றம் தொடர்ந்து கொண்டிருந்தமை மீள் கொடுப்பனவை பேணுவதற்கு இயலாதவராக கடனாளி இல்லை என சாத்தியமுள்ளதென கருதுகின்றவிடத்து; அல்லது

(ஆ) குத்தகைக்காரரின் அல்லது சொந்தக்காரரின் விண்ணப்பமொன்று அத்தகைய உடன்படிக்கை யின் கீழ் முடிவுறுத்துவதற்கு மற்றும் உடன் படிக்கையின் கீழ் மீள் கொடுப்பனவை செய்வதில் கடனாளியின் தவணைத்தவறுகை தவிர்ந்த ஏதுக்களின் அடிப்படையின் மீதான உடன்படிக்கைக்கு அமைய பண்டங்களின் உடைமையை பெற்றுக் கொள்வதற்கு அல்லது வேறு வகையில் அறவிடுவதற்கு.

(5) கடனாளி தொடர்பில் அத்தியவசிய பண்டங்கள் அல்லது சேவைகளின் வழங்குநர் ஒருவர் :–

(அ) கட்டளையொன்றை ஆக்குவதற்கு முன்னரான காலப் பகுதி தொடர்பில் பண்டங்களின் அல்லது சேவைகளுக்கான வருமதியாகியுள்ள அறவீடு களை செலுத்துவதில் கடனாளியின் தவணை தவறுகைக்கான காரணத்தின் மூலம் கடனாளிக்கு பண்டங்கள் அல்லது சேவைகளை வழங்குவதற்கு மறுத்தலாகாது;

(ஆ) கட்டளை ஆக்குவதற்கு முன்னரான காலப் பகுதி தொடர்பில் பண்டங்கள் அல்லது சேவைகளுக் கான நிலுவையாக உள்ள அறவீடுகளின் கொடுப்பனவை செய்கின்றவரான கடனாளிக்கு வழங்குகைக்கான பண்டங்கள் அல்லது சேவை களின் நிபந்தனையொன்றை செய்தலாகாது; அல்லது

(இ) பண்டங்கள் அல்லது சேவைகளின் வழங்குகைக் கான உடன்படிக்கையின் கடனிறுக்கவகை யின்மையுடன் தொடர்புபட்ட நியதியொன்றின் மீது தங்கியிருத்தலாகாது.

(6) தனிசு புனர்வாழ்வு கட்டளையொன்று கடனாளிக்கு எதிராக எவையேனும் குற்றவியல் நடவடிக்கை முறைகளின் தொடக்கத்தை அல்லது தொடர்ச்சியை தடுத்தலாகாது.

(7) இப் பிரிவிற்கு முரணாக எடுக்கப்பட்ட எவையேனும் வழக்கு வெற்றானதும் வெறிதானதுமாதல் வேண்டும்.

(8) இப்பிரிவிலுள்ள எதுவும் பிணைப்பொறுப்பளிக்கப் பட்ட கடன் நடைமுறைப்படுத்துவதற்கான பாதுகாக்கப்பட்ட கடன்கொடுநரின் பிணைப்பொறுப்பை வலுவுறுத்துவதற்கு பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கடன்கொடுநரின் உரிமையை பாதித்தலாகாது.

(9) (அ) கைப்பற்றுகை அல்லது நிறைவேற்றுகைக்கு பொறுப்பிக்கப்பட்ட பெறுநரின் அல்லது நியமத்தரின் அல்லது ஆளின் உடைமையினுள் நுழைவின் மூலம் அல்லது விற்பனையொன்றின் மூலம் அசையும் அல்லது அசையா ஆதனத்திற்கு எதிரான நிறைவேற்றுகையொன்று பூரணப் படுத்தப்பட்டுள்ள விடத்து அத்துடன்

(ஆ) தனிசொன்றின் கொடுத்துத்தீர்த்தலானது தனிசின் திருப்தியின் மூலம் பூரணப்படுத்தப்பட்டுள்ள விடத்து.

(10) தனிசு புனர்வாழ்வுக் கட்டளை நடைமுறையில் இருக்கின்ற வேளையில்;, கடனாளி நியாயமாக ஏற்புடை மையாகக் கூடிய 32 ஆம் பிரிவின் கீழான பொறுப்புகளை பின்பற்றி ஒழுகி முயற்சி எடுத்தல் வேண்டும்.

(11) ஐந்தாம் ஆம் உட்பிரிவின் கீழ், கடன்கொடுநர் ஒருவர் அத்தியவசியப் பண்டங்கள் அல்லது சேவைகளை கடனாளிக்கு வழங்குவதற்கு தொடர்ந்திருக்குமிடத்து உத்தியோகபூர்வ பெறுநர் கடனாளியின் வருமானத்திலிருந்து அத்தகைய தொடர்ச்சியான விநியோகம் தொடர்பில் இயைபான கடன்கொடுநர் ஏற்பாடு ஒன்றை செய்தல் வேண்டும்.

(12) இப் பிரிவிற்கு முரணாக உள்ள கடன்கொடுநர் ஒருவரினால் கடன்கொடுநரின் முகவரினால் எடுக்கப்படும் நடவடிக்கையில் இருந்து எழுகின்ற கடன்கொடுநருடனான கொடுக்கல் வாங்கலொன்றின் கீழ் ஆதனத்தில் அல்லது வேறு ஏதேனும் உரிமையிலுள்ள அக்கறையொன்றை ஆளொருவர் கொள்ளுமிடத்து அச் செயலின் வெற்றான தன்மை நல்லெண்ணத்துடன் மற்றும் பெறுமதிக்காக கடன் கொடுநர் ஒருவருடன் கையாள்கின்ற அவ்ஆளின் உரிமைகளை பங்கப்படுத்தலாகாது.

கடன் புனர் வாழ்வுக் கட்டளை காலப்பகுதி

**72.** (1) எழுபத்தி மூன்றாம் பிரிவின் கீழ் விடுவித்தலுக்கான கட்டளை ஆக்கப்படும்வரை கடன் புனர்வாழ்வுக் கட்டளை தொடர்ந்தும் வலுவிலிருக்கும், இது கடன் புனர்வாழ்வுக் கட்டளை திகதியிலிருந்து ஒரு வருட காலப் பகுதி முடிவுற்றதன் பின்னர் செயல்முறைக்குகந்தளவு விரைவானதாக ஆக்கப்படுத்தலும் வேண்டும்.

(2) தனிசு புனர்வாழ்வுக் கட்டளை முடிவுறுத்தப்பட வேண்டுமா அல்லது மாற்றப்பட வேண்டுமா என முறையாக கவனத்திற் கொள்ளும் நோக்கங்களுக்காக, 75 ஆம் பிரிவு, 76 ஆம் பிரிவு அல்லது 77 ஆம் பிரிவுகளின் கீழ் நீதிமன்றம் கட்டளையொன்றை நீடித்திருப்பின் (1) ஆம் உட் பிரிவில் குறித்துரைக்கப்பட்டதை விட நீண்ட காலப் பகுதி யொன்றுக்கு தனிசு புனர்வாழ்வுக் கட்டளை தொடர முடியும்.

(3) இரண்டாம் உட்பிரிவின் கீழ் நீதிமன்றமானது கட்டளையொன்றை நீடிக்கும் போது, விடுவித்தலுக்கான மாற்றுத் திகதியொன்றினை நீதிமன்றம் குறித்துரைத்தல் வேண்டும். இது தனிசு புனர்வாழ்வுக் கட்டளை திகதியிலிருந்து ஆரம்ப காலப் பகுதியான ஒரு வருடம் முடிவுற்ற பின்னரான தொண்ணூறு நாட்களை விட விஞ்சுதலாகாது.

தனிசுகளை விடுவித்தல்

**73.** (1) தனிசு புனர்வாழ்வுக் கட்டளை திகதியிலிருந்து ஒரு வருட காலப் பகுதி முடிவுறுவதற்கு முன்னர், உத்தியோக பூர்வ பெறுநர் பின்வருமாறு :-

(அ) கடனாளிக்கு விடுவித்தலுக்கான சான்றிதழை வழங்குதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) கடனாளியை விடுவித்தமையை உறுதிப்படுத்துவதற்கான கட்டளையொன்றுக்காக நீதி மன்றத்திற்கு விண்ணப்பமொன்றினை செய்தல் வேண்டும்.

(2) தனிசு புனர்வாழ்வுக் கட்டளைத் திகதியிலிருந்து ஓராண்டு காலப்பகுதி முடிந்த பின்னர் முப்பது நாட்கள் காலப் பகுதியினுள் (1) ஆம் உட்பிரிவின் கீழ் விண்ணப்பம் ஒன்றினை உத்தியோகபூர்வ பெறுநர் இன்னும் செய்திருக்காதிருப்பின், கடனாளியின் விடுவிப்பை உறுதிப்படுத்துகின்ற கட்டளையொன்றுக்கான விண்ணப்பம் ஒன்றை நீதிமன்றத்திற்கு கொண்டுவரலாம்.

(3) ஓராம் உட்பிரிவின் கீழ் விண்ணப்பம் ஒன்று கிடைக்கப் பெற்றதன்மீது, 76 ஆம் பிரிவு அல்லது 77 ஆம் பிரிவின் கீழ் தனிசு புனர்வாழ்வு கட்டளையொன்றை முடிவுறுத்துவதற்கு அல்லது மாற்றுவதற்கான விண்ணப்பமொன்று செய்யப்பட்டிருந்தாலொழிய, நீதிமன்றம் தொண்ணூறு நாட்களினுள் விடுவிப்புக்கான கட்டளையொன்றினை ஆக்குதல் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நீதிமன்ற கட்டளை, தனிசு புனர்வாழ்வுக் கட்டளை திகதியிலிருந்து ஒரு வருட காலப் பகுதி முடிவுற்றதன் மீது தனிசு புனர்வாழ்வு கட்டளையிலிருந்து கடனாளி;யை விடுவிப்பதற்காக ஏற்பாடு செய்தல் வேண்டும்.

(5) தனிசு புனர்வாழ்வு கட்டளையிலிருந்து விடுவிக்கப்படும்போது, கடனாளியின் உள்ளடக்கப்பட்ட தனிசுகளானவை இல்லாதொழிக்கப்படுமென்பதுடன் கடனாளி, அக்கடன்கள் தொடர்பில்; செலுத்தப்படற்பாலதாகவரக் கூடிய எவையேனும் வட்டி, கட்டனங்கள் அல்லது விதிப்பனவுகள் உள்ளடங்கலாக தனிசுகளின் ஏதேனும் பாகத்தைச் செலுத்துவதற்கு ஆளாதலாகாது.

(6) இப்பிரிவின் கீழான தனிசுகளின் விடுவிப்பு 37 ஆம் பிரிவின் 4 ஆம் உட்பிரிவின் விளக்கப்பட்ட தனிசொன்றாக குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் தனிசிலிருந்து அல்லது பொறுப்பிலிருந்து கடனாளியை விடுவித்தலாகாது.

(7) இப்பிரிவின் கீழான விடுவிப்பொன்று, பின்வருவோருக்கு விடுவிப்பு திகதியிலுள்ள எவரேனும் ஆளின் ஏதேனும் பொறுப்பிலிருந்து கடனாளியை விடுவித்தலாகாது :–

(அ) விடுவிக்கப்பட்ட கடனாளியின் வியாபார பங்காளாராக இருந்தால்;

(ஆ) விடுவிக்கப்பட்ட கடனாளியின் கட்டு நம்பிக்கைப் பொறுப்பாளராக இருந்தால்;

(இ) விடுவிக்கப்பட்ட கடனாளியுடன் கூட்டாக பிணைக்கப்பட்டிருந்தால் அல்லது ஒப்பந்தக்காரராக இருந்தால்; அல்லது

(ஈ) விடுவிக்கப்பட்ட கடனாளியுடன் உத்தரவாதமளிப்பவராக அல்லது உத்தரவாதமளிக்கும் தன்மையில் இருந்தால்.

தனிசு புனர்வாழ்வு கட்டளையை மேற்பார்வை செய்வதற்கான உத்தியோகபூர்வ பெறுநர்

**74.** (1) தனிசு புனர்வாழ்வு கட்டளையொன்று நடைமுறையிலிருக்கின்ற வேளையில் உத்தியோகபூர்வ பெறுநர் 65 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டவைகள் உள்ளடங்கலாக தனிசு புனர்வாழ்வுக் கட்டளை நடவடிக்கை முறையின் முன்னெடுத்துச் செல்வதில் கடனாளியின் நிதிசார் அலுவல்களை முகாமைத்துவம் செய்து இலக்குகளை முன்னேற்றும் முகமாக, கடனாளியினது நிதிசார் அலுவல்களை முகாமைத்துவம் செய்து மேற்பார்வை செய்யக் கூடியரவாக இருத்தல் வேண்டும்.

(2) முப்பத்திரெண்டாம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட கடனாளிகளின் கடப்பாடுகளுக்கு அமைய எஞ்சியுள்ளவற்றுக்கு மேலதிகமாக, தனிசு புனர்வாழ்வு கட்டளையொன்றுக்கான விண்ணப்பமொன்றையடுத்து எந்த நேரத்திலும் மற்றும் தனிசு புனர்வாழ்வு கட்டளை நடைமுறைப்படுத்துவதற்கு இல்லாதொழியும் வரை, கடனாளி :-

(அ) கடனாளியின் அலுவல்களான அத்தகைய தகவல்களை உத்தியோகபூர்வ பெறுநருக்கு வெளிப்படுத்தல் வேண்டும்;

(ஆ) உத்தியோகபூர்வ பெறுநருடன் கூட்டங்களுக்கு சமூகமளித்தல் வேண்டும்;

(இ) அத்தகைய கடனாளியின் விண்ணபத்தில் ஏதாவது பொருள் சார்ந்த பிழைகள் அல்லது அத்தகைய கடனாளியின் சூழ்நிலைகளில் ஏதேனும் பொருள் சார்ந்த மாற்றங்கள், ஆகியவற்றை அத்தகைய கடனாளி அறிபவரின் நியாயமான அளவில் செயல்முறைக்குகந்தளவு விரைவானதாக உத்தியோகபூர்வ பெறுநருக்கு அறிவித்தல் வேண்டும்; அத்துடன்

(ஈ) இப்பிரிவின் கீழ் உத்தியோகபூர்வ பெறுநரின் பணிகளை நிறைவேற்றும் நோக்கத்திற்கான நியாயமான அளவு தேவைப்படக்கூடிய உத்தியோகபூர்வ பெறுநராக அத்தகைய வேறு எல்லா விடயங்களையும் செய்தல் வேண்டும்.

(3) உத்தியோகபூர்வ பெறுநர் இப்பிரிவின் கீழ் உத்தியோகபூர்வ பெறுநரின் பணிகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக இயைபாகவிருப்பதற்கு உத்தியோகபூர்வ பெறுநருக்கு தோன்றுகின்ற ஏதேனும் கருமம் பற்றி விசாரணையொன்றை நிறைவேற்றலாம்.

(4) உத்தியோகபூர்வ பெறுநர் இப்பிரிவின் கீழ் உத்தியோகபூர்வ பெறுநரின் பணிகளை நிறைவேற்றுவதில் அவசியமாகவிருக்கக் கூடியவாறான அத்தகைய தகவலையும் உதவியையும் வழங்குவதற்கு எவரேனும் ஆளை தேவைப் படுத்தலாம்.

(5) இப்பிரிவின் கீழ் தத்துவங்களை பிரயோகிப்பதில் உத்தியோகபூர்வ பெறுநரினால் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைமுறைகளுக்கான எவையேனும் மேலதிக விபரங்கள் விதித்துரைக்கப்படலாம்.

(6) உத்தியோகபூர்வ பெறுநர் தனிசு புனர்வாழ்வு கட்டளையுடன் சம்பந்தப்பட்டதிலிருந்து எழுகின்ற ஏதேனும் கருமம் தொடர்பிலான பணிகள் அல்லது கட்டளையொன் றுக்கு நீதிமன்றத்துக்கு விண்ணப்பமொன்றை செய்யலாம்.

(7) ஆறாம் உட்பிரிவின் கீழான விண்ணப்பமொன்றின் மீது நீதிமன்றம் :-

(அ) நீதிமன்றம் தோதானது எனக் கருதப்படக் கூடியவாறான பணிப்புகளை உத்தியோகபூர்வ பெறுநருக்கு வழங்கலாம்;

(ஆ) இச்சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் எழுகின்ற கடனாளியின் ஏதேனும் கடப்பாட்டின் வலுவுறுத் துகைக்காக கட்டளையொன்றை ஆக்கலாம்;

(இ) எழுபத்தாறாம் பிரிவின் கீழ் தனிசு புனர்வாழ்வு கட்டளையின் முடிவுறுத்துகைக்கான விண்ணப்ப மொன்றாக விண்ணப்பத்தினை பரிகரிக்கலாம்;

(ஈ) எழுபத்தேழாம் பிரிவின் கீழ் தனிசு புனர்வாழ்வு கட்டளையை மாற்றுவதற்கான விண்ணப்ப மொன்றாக விண்ணபத்தினை பரிகரிக்கலாம்; அல்லது

(உ) உத்தியோகபூர்வ பெறுநர் விசாரணையொன்றை பூரணப்படுத்துவதற்கு அனுமதிக்கின்ற வகையில் மட்டுப்படுத்தப்பட்ட நோக்கங்களுக்காக தனிசு புனர்வாழ்வுக் கட்டளை காலப் பகுதியை நீடிப் பதற்கான கட்டளையொன்றினை வழங்கலாம் ஆயின் :-

(i) விடுவித்தலுக்கான மாற்றீட்டு திகதி யொன்றினை நீதிமன்றம் குறிப்பிடல் வேண்டும், இது கட்டளை திகதியிலிருந்து ஒரு வருடத்திற்கு குறையாத ஆரம்ப காலப் பகுதி முடிவுற்றதன் பின்னர் தொன்னூறு நாட்களுக்கு பிந்தாத வகையில் இருத்தல் வேண்டும்; அத்துடன்

(ii) நீதிமன்றம் கட்டளை காலப் பகுதியை நீடிப்பதன் காரணமாக கடனாளிக்கு ஏதாவது நியாயமற்ற தன்மைக்கு உரிய கவனத்தை கொண்டிருக்கின்றது. அத்துடன் 65 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டவைகள் உள்ளடங்கலாக தனிசு புனர்வாழ்வுக் கட்டளை நடவடிக்கை முறையின் இலக்கு களை நீடித்தலுக்கான அளவு வரைக்கும் முன்னெடுக்கின்றது.

கடன் புனர் வாழ்வுக் கட்டளைக் கான கடன்கொடுநர் ஆட்சேபனை

**75.** (1) உள்ளடக்கப்பட்ட கடன் நிலுவையிலுள்ள கடன் கொடுநர் ஒருவர் ஆட்சேபனை தெரிவிப்பதற்காக நீதிமன்றத் திற்கு விண்ணப்பிக்கலாம் :-

(அ) தனிசு புனர்வாழ்வு கட்டளையொன்றினை மேற்கொள்வதற்காக; அல்லது

(ஆ) கடன்கொடுநரின் கடனில் கடன் புனர்வாழ்வு கட்டளையொன்றின் கீழ் உள்ளடக்குவதற்கு.

(2) ஓராம் உட்பிரிவின் கீழான ஆட்சேபனையானது :–

(அ) பிரிவு 70(6) இன் கீழ் கட்டளைக்கு ஆட்சேபனை தெரிவிப்பதற்கான கடன்கொடுநர்களது உரிமை கள் பற்றி உத்தியோகபூர்வ பெறுநர் கடன் கொடுநர்களுக்கு அறிவித்த திகதியிலிருந்து இருபத்தொரு நாட்களுக்கு பிந்தாமல் இருத்தல் வேண்டும்;

(ஆ) கடன்கொடுநர் எழுத்து மூல ஆட்சேபனை அறிவித்தலை நீதிமன்றத்தில் மேற்கொள்ளுதல், வேண்டுமென்பதுடன் கடனாளி மற்றும் உத்தி யோகபூர்வ பெறுநர்; ஆகியோருக்கு எழுத்து மூல அறிவித்தலை கடனாளி மற்றும் உத்தி யோகபூர்வ பெறுநர் ஆகியோருக்கு வழங்குதல் வேண்டும்; அத்துடன்

(இ) மூன்றாம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஏதுக்களின் அடிப்படையின் மீது இருத்தல் வேண்டும்.

(3) கட்டளையொன்றுக்கு ஆட்சேபனைக்கான ஏதுக்களை பின்வருவனவற்றிற்கு மட்டுப்படுத்தப்படுதல் வேண்டும் :-

(அ) தனிசு புனர்வாழ்வு கட்டளையொன்றுக்கான விண்ணபத்தினை செய்கின்ற நேரத்தில் 66 ஆம் பிரிவின்கீழ் தகவுடைய கட்டளைக்கல்லை கடனாளி திருப்திப்படுத்தவில்லை;

(ஆ) தனிசு புனர்வாழ்வுக் கட்டளை விண்ணப்பத்தில் ஏதாவது பொருள் சார்ந்த துல்லியத் தன்மை ஒன்று இருத்தல், அல்லது விண்ணப்பதாரருக்கு

பொருள்சார்ந்த பாதகத்தினை செய்விக்கக் கூடியதான விண்ணப்பத்தினை ஆதரவில் கடனாளியினால் வழங்கப்பட்ட ஏதேனும் பொருள் சார்ந்தவை.

(4) கட்டளையொன்றுக்கு ஆட்சேபிப்பதற்கான விண்ணப்பம் கிடைக்கப் பெற்றதன் மீது பின்னர், விண்ணப்பத்திற்கான விசாரணை திகதியொன்றினை விண்ணப்பம் கிடைக்கப் பெற்றதன் பின்னர் தொண்ணூறு நாட்களுக்குள் எடுப்பதற்கு நிர்ணயித்தல் வேண்டும்.

(5) நீதிமன்றம் விதிக்கப்படக் கூடியவாறு அத்தகைய முறையில் கட்டளைக்கு ஆட்சேபிப்பதற்கான விண்ணப் பத்தின் கேட்பு பற்றி கடனாளிக்கு கடன்கொடுநர்களுக்கு மற்றும் உத்தியோகபூர்வ பெறுநருக்கு எழுத்து மூல அறிவித்தலை வழங்குதல் வேண்டும்.

(6) கட்டளைக்கு ஆட்சேபனை தெரிவிப்பதற்கான விண்ணப்பம் கிடைக்கப் பெற்றதன் உத்தியோகபூர்வ பெறுநரை நீதிமன்றமானது பின்வருமாறு தேவைப் படுத்தலாம் :-

(அ) நீதிமன்றத்தின் தீர்ப்பை அடைவதற்கு உதவக் கூடிய தகவல்களை நீதிமன்றத்திற்கு வழங்குதல்; அல்லது

(ஆ) தீர்மானத்தை ஆக்குவதற்கு இயைபாகவிருக்கக் கூடிய நீதிமன்றத்;திற்கு தோற்றுகின்றதான ஏதேனும் விடயம் பற்றி புலனாய்வொன்றை நடாத்துதல்.

(7) கட்டளையை ஆட்சேபிப்பதற்கான விண்ணப்பம் கிடைக்கப் பெற்றதும், இவ்விடயத்தை முறையாக பரிசீலனை செய்கின்ற நோக்கங்களுக்காக கட்டளை காலப் பகுதியை நீதிமன்றமானது நீடிக்கலாம், ஆயின் :-

(அ) அத்தகைய நீடிப்பானது கட்டளையின் ஆரம்ப காலப்பகுதிக்கு அப்பால் தொண்ணூறு நாட்கள் எனும் காலப்பகுதியொன்றை விஞ்சுதலாகாது; அத்துடன்

(ஆ) நீதிமன்றமானது பின்வருவனவற்றுக்கு உரிய கவனத்தை கொண்டிருக்கின்றது :-

(i) கட்டளை காலப் பகுதியை நீடிப்பதன் விளைவாக கடனாளிக்கு ஏதேனும் நியாய மற்ற தன்மை ஏற்படக் கூடியவற்றுக்கு, அத்துடன்

(ii) அறுபத்தைந்தாம் பிரிவில் குறித்துரைக்கப் பட்டவைகள் உள்ளடங்கலாக தனிசு புனர்வாழ்வுக் கட்டளை நடவடிக்கைமுறை இலக்குகளை முன்னெடுக்கின்றமையை அளவுக்கு நீடித்தல் இருத்தல்.

(8) கட்டளைக்கு ஆட்சேபனைக்கான விண்ணப்பத்தினை விசாரணை செய்கையில், மேற்படி (3) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட காரணிகள் தாபிக்கப்படவில்லை என நீதிமன்றம் கண்டறிந்தால், நீதிமன்றமானது,

(அ) ஆட்சேபனையை தள்ளுபடி செய்யலாம்; மற்றும்

(ஆ) கடனாளிக்கு உறப்பட்ட ஆகுசெலவுகளை அல்லது அவசியமென கண்டறிந்ததான வேறு அத்தகைய தொகையை செலுத்துவதற்கு ஆட்சேபிக்கும் கடனாளியைத் தேவைப்படுத்தல் வேண்டும்.

(9) கட்டளைக்கு ஆட்சேபிப்பதற்கான விண்ணப்பத்தின் கேட்பின் மீது, (3) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட எவையேனும் ஏதுக்கள் நிலைநாட்டப்பட்டிருக்கவில்லை என நீதிமன்றம் கண்டறிந்தால், நீதிமன்றமானது :–

(அ) தனிசு புனர்வாழ்வு கட்டளையை முடிவுறுத் தலாம்; அல்லது

(ஆ) இப் பிரிவின் கீழ் ஆட்சேபிப்பதற்கான விடய மான தனிசை அகற்றுதல் உள்ளடங்கலாக, தனிசு புனர்வாழ்வு கட்டளையை திருத்துகின்ற கட்டளையொன்றினை ஆக்கலாம்.

தனிசு புனர்வாழ்வுக் கட்டளையை முடிவுறுத்தல்;

**76.** (1) தனிசு புனர்வாழ்வுக் கட்டளை நடைமுறைக்கு வருகின்ற வேளையில் உத்தியோகபூர்வ பெறுநர், தனிசு புனர்வாழ்வு கட்டளையை முடிவுறுத்துவதற்கான கோரிக்கையை நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் கட்டளையொன்றை முடிவுறுத்துவதற்கான விண்ணப்பமொன்று :–

(அ) எழுபத்தியிரண்டாம் பிரிவின்கீழ் வேறு வகையில் இடம்பெறுகின்றதான விடுவிப்பு திகதிக்கு முன்னர் ஆகக்குறைந்த 45 நாட்களினுள் செய்யப் படுதல் வேண்டும், ஆனால் இவ்விண்ணப்பத் திற்காக அல்ல;

(ஆ) கடனாளிக்கும் மற்றும் அறியப்பட்ட எல்லாகடன் கொடுநர்களுக்கும் எழுத்து மூலமான அறிவித் தலின் மீது நீதிமன்றத்திற்கு முடிவுறுத்துகைக் கான கோரிக்கையொன்றினை உத்தியோகபூர்வ பெறுநரினால் செய்யப்படுதல் வேண்டும்; அத்துடன்

(இ) மூன்றாம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதுக்களின் அடிப்படையின் மீது இருக்கப்படுதல் வேண்டும்.

(3) கட்டளையொன்றை முடிவுறுத்துவதற்கான விண்ணப்ப மொன்றின் ஏதுக்கள் பின்வருவனவற்றுக்கு மட்டுப்படுத்தப் படுகின்றவையான அடிப்படையில் இருத்தல் வேண்டும் :-

(அ) தனிசு புனர்வாழ்வுக் கட்டளை விண்ணப் பத்தினை ஆக்குகின்ற நேரத்தில், 66 இன்கீழான தகவுடை கட்டளைக்கற்களை கடனாளி திருப்தி செய்யவில்லை;

(ஆ) விண்ணப்பத்தினை ஆதரிக்கின்ற கடனாளி யினால் வழங்கப்பட்ட தனிசு புனர்வாழ்வுக் கட்டளை விண்ணப்பத்தில் அல்லது ஏதேனும் பொருள் சார்ந்த விடயத்தில் பொருள் சார்ந்த துல்லியமற்ற தன்மை ஒன்று உள்ளது; அல்லது

(இ) உத்தியோகபூர்வ பெறுநரின் திருப்திக்கு முப்பத்திரெண்டாம் மற்றும் 71 ஆம் பிரிவுகளில் தரப்பட்டுள்ள கடனாளிகளின் கடமைகளுடன் கடனாளி இணங்கியொழுகியிருக்கவில்லை.

(4) கட்டளையை முடிவுறுத்துவதற்கான விண்ணப்ப மொன்று கிடைக்கப் பெற்றதன் மீது, நீதிமன்றம் விண்ணப் பம் கிடைக்கப்பெற்றதன் பின்னரான பதினான்கு நாட்களி னுள் அல்லது விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு காலப்பகுதியினுள் எடுப்பதற்கு விண்ணப்பத்தின் கேட்பிற்கான தேதியொன்றை நிர்ணயித்தல் வேண்டும்.

(5) நீதிமன்றம் கட்டளையை முடிவுறுத்துவதற்கான விண்ணப்பத்தின் கேட்பு பற்றி எழுத்து மூல அறிவித்தலை கடனாளி, கடன்கொடுநர்கள் மற்றும் உத்தியோகபூர்வ பெறுநர் ஆகியோருக்கு வழங்குதல் வேண்டும்.

(6) கட்டளையை முடிவுறுத்துவதற்கான விண்ணப்பம் கிடைக்கப் பெற்றதன் மீது உத்தியோகபூர்வ பெறுநரை பின்வருமாறு நீதிமன்றம் தேவைப்படுத்தலாம்.

(அ) தீர்மானம் ஒன்றை நீதிமன்றம் அடைவதற்கு உதவக் கூடிய விதத்தில் தகவல்களை நீதிமன்றத் திற்கு வழங்குதல்; அல்லது

(ஆ) தீர்மானத்தை மேற்கொள்வதற்கு இயைபானதாக விருக்குமென நீதிமன்றத்திற்கு தோன்றுகின்ற தான ஏதேனும் விடயம் தொடர்பில் புலனாய் வொன்றை நடாத்துதல்.

(7) கட்டளையை முடிவுறுத்துவதற்கான விண்ணப்பம் கிடைக்கப் பெற்றதன் மீது, நீதிமன்றம் முறையாக கவனத்துட் கொள்ளும் மட்டுப்படுத்தப்பட்ட நோக்களுக்காக கட்டளை காலப்பகுதியை நீடிக்கலாம், ஆயின் :-

(அ) அத்தகைய நீடிப்பானது கட்டளையின் ஆரம்ப காலப் பகுதிக்கு அப்பால் தொண்ணூறு நாட்கள் காலப் பகுதியை விஞ்சுதலாகாது; அத்துடன்

(ஆ) நீதிமன்றமானது உரிய கவனத்தை பின்வருவன வற்றுக்கு கொண்டிருத்தல் வேண்டும் :-

(i) கடன்கொடுநர் அல்லது கடன் கொடுநர்கள் நியாயமற்ற பங்கமான முறையில் வேறுவகையில் பாதிக்ககூடியவிடத்து, ஆட்சேபனை யொன்றின் தோதான புலனாய்வுக்கான தேவை;

(ii) கட்டளை காலப் பகுதியை நீடிப்பதி லிருந்து விளையக்கூடிய கடனாளிக்கு ஏற்படும் நியாயமற்ற தன்மை; அத்துடன்

(iii) அறுபத்தைந்தாம் பிரிவில் குறித்துரைக்கப் பட்டவைகள் உள்ளடங்கலாக தனிசு

புனர்வாழ்வுக் கட்டளை நடவடிக்கை முறையின் இலக்குகளை முன்னெடுக்கின்ற கால நீடிப்பிற்கான நீடித்தல்.

(8) கட்டளையை முடிவுறுத்துவதற்கான விண்ணப்பம் ஒன்றின் கேட்பின் மீது, நீதிமன்றம் (3) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட ஏதுக்கள் நிலைநாட்டப்பட்டிருக்க வில்லை என கண்டறியின் கட்டளைகளை முடிவுறுத்துவ தற்கான விண்ணப்பத்தை தள்ளுபடிசெய்தல் வேண்டும்.

(9) கட்டளையை முடிவுறுத்துவதற்கான விண்ணப்ப மொன்றின் கேட்பின்மீது (3) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட எவையேனும் ஏதுக்கள் நிலைநாட்டப் பட்டுள்ளது என நீதிமன்றம் கண்டறியின், நீதிமன்றம் :-

(அ) தனிசு புனர்வாழ்வு கட்டளையை முடிவுறுத்தலாம்;

(ஆ) நீதிமன்றம் குறித்துரைக்கக்கூடிய அத்தகைய நியதிகள் மற்றும் அத்தகைய நேரத்தில் பயனுக்கு வரும் வரையில் தனிசு புனர்வாழ்வுக் கட்டளை முடிவுறுத்துவதற்காக ஏற்பாடுசெய்யலாம்;

(இ) எழுபத்தியேழாம் பிரிவின் கீழ் தனிசு புனர்வாழ்வு கட்டளையை வங்கிமுறிவு கட்டளையாக மாற்றலாம்; அல்லது

(ஈ) முப்பத்திரெண்டாம் மற்றும் 71 ஆம் பிரிவுகளில் குறித்துரைக்கப்பட்டதான கடனாளியின் கடப் பாடு ஒன்றின் வலுவுறுத்துகைக்கான கட்டளை ஒன்றை ஆக்கலாம்.

(10) ஒன்பதாம் உட்பிரிவின் கீழ் தனிசு புனர்வாழ்வு கட்டளையை முடிவுறுத்துகையின் மீது :-

(அ) எழுபத்தோராம் பிரிவின் கீழ் வலுவுறுத்துகைக் குட்படுத்தப்படாதவையாக வருகின்ற தனிசுகள் கட்டளையின் ஆக்குகையின்மீது வலுவுறுத்தப் படற்பாலதாக வருகின்றது; அத்துடன்

(ஆ) கடனாளி திரண்டுள்ளதான எவையேனும் வட்டி, கட்டணங்கள் அல்லது விதிப்பனவுகள் என்பவற்றை செலுத்துவதற்கு ஆளாகின்றவராக வருகின்றார்.

வங்கிமுறிவு கட்டளையாக மாற்றுதல்

**77.** (1) தனிசு புனர்வாழ்வுக் கட்டளை நடைமுறையில் இருக்கின்ற வேளையில் உத்தியோகபூர்வ பெறுநர் தனிசு புனர்வாழ்வு கட்டளையை வங்கிமுறிவு கட்டளையாக மாற்றுவதற்கான கோரிக்கைக்காக நீதிமன்றத்திலிருந்து விண்ணப்பிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழான கட்டளையொன்றாக மாற்றுவதற்கான விண்ணப்பமொன்று :–

(அ) எழுபத்திரெண்டாம் பிரிவின்கீழ் வேறுவகையில் விடுவிப்பு இடம்பெறக்கூடிய தேதிக்கு முன்னரான ஆகக் குறைந்தது நாற்பத்தைந்து நாட்களில் செய்யப்படுதல் வேண்டும் ஆனால்;

(ஆ) கடனாளி மற்றும் சகல அறியப்பட்ட கடன் கொடுநர்களுக்கான எழுத்து மூல அறிவித்தல் மீது நீதிமன்றத்துடன் மாற்றத்திற்கான கோரிக்கையை உத்தியோகபூர்வ பெறுநர் மேற்கொள்ளுதல் வேண்டும்; அத்துடன்

(இ) மூன்றாம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட எதுக்களின்மீது அடிப்படையாக கொண்டிருத்தல்.

(3) பின்வரும் ஏதுக்களின்மீது கட்டளையொன்றினை மாற்றுவதற்காக உத்தியோகபூர்வ பெறுநர் நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்கலாம் :-

(அ) கடனாளி நிதிசார் சூழ்நிலைகளின் மாற்றத்தின் காரணமாக அறுபத்தாறாம் பிரிவின் கீழான தகவுடை கட்டளைக்கற்களை பூர்த்தி செய்யாத வரை;

(ஆ) தனிசு புனர்வாழ்வுக் கட்டளை விண்ணப்பத்தில் பொருள்சார்ந்த துல்லியத் தன்மை இன்மை அல்லது விண்ணப்பத்திற்கு உதவும் முகமாக கடனாளியினால் வழங்கப்பட்ட ஏதாவது பொருட் களில் துல்லியத்தன்மை இல்லை; அல்லது

(இ) முப்பத்திரெண்டாம் மற்றும் 71 ஆம் பிரிவுகளில் தரப்பட்டுள்ள கடனாளிகளுக்கான கடமைகளை உத்தியோகபூர்வ பெறுநரின் திருப்திக்கு கடனாளி இணங்கியொழுகியிருக்கவில்லை.

(4) கட்டளையை மாற்றுவதற்கான விண்ணப்பம் கிடைக்கப் பெற்றதன்மீது நீதிமன்றம் இவ் விண்ணப்பம் கிடைக்கப் பெற்ற பின்னரான பதினான்கு நாட்களின் இவ்விண்ணப்பத்தின் கேட்பிற்கான தேதியொன்றை நிர்ணயித்தல் வேண்டும்.

(5) நீதிமன்றம் கட்டளையை மாற்றுவதற்கான விண்ணப்பத்தின் கேட்புபற்றி கடனாளி, கடன்கொடுநர்கள் மற்றும் உத்தியோகபூர்வ பெறுநர் என்போருக்கு எழுத்துமூல அறிவித்தலை வழங்குதல் வேண்டும்.

(6) கட்டளையை மாற்றுவதற்கான விண்ணப்பம் கிடைக்கப் பெற்றதன் மீது உத்தியோகபூர்வ பெறுநரை நீதிமன்றமானது பின்வருமாறு தேவைப்படுத்தலாம் :-

(அ) தீர்மானம் ஒன்றை நீதிமன்றம் அடைவதற்கு உதவக் கூடிய விதத்தில் தகவல்களை நீதிமன்றத்திற்கு வழங்குதல்; அல்லது

(ஆ) தீர்மானத்தை ஆக்குவதற்கு இயைபானதாக விருக்கும் என நீதிமன்றத்துக்கு தோன்றுகின்ற தான ஏதேனும் ஏதாவது விடயம் பற்றி புலனாய்வை நடாத்துதல்.

(7) கட்டளையொன்றை மாற்றுவதற்கான விண்ணப்பம் கிடைக்கப் பெற்றதன்மீது, நீதிமன்றம் விடயத்தினை முறையாக கருத்துக்கொள்ளும் மட்டுப்படுத்தப்பட்ட நோக்கங் களுக்காக கட்டளையொன்றின் காலப் பகுதியை நீடிக்கலாம், ஆயின் :-

(அ) அத்தகைய நீடிப்பு கட்டளையின் ஆரம்ப காலப் பகுதிக்கு அப்பால் தொண்ணூறு நாட்கள் எனும் காலப் பகுதியினை விஞ்சுதலாகாது; அத்துடன்

(ஆ) நீதிமன்றம் பின்வருவனவற்றுக்கு உரிய கவனத்தை எடுத்திருக்கிறது :–

(i) கடன்கொடுநர் அல்லது கடன் கொடுநர்கள் வேறுவகையில்; நியாயமற்ற பங்கமான முறையில் துன்புறலாம் எனுமிடத்து, ஆட்சேபனை ஒன்றின் தோதான விசாரனையை செய்வதற்கு;

(ii) கட்டளை காலப் பகுதியை நீடிப்பிலிருந்து கடனாளிக்கு ஏதேனும் நியாயமற்ற தன்மை ஏற்படுத்தக் கூடும் என; அத்துடன்

(iii) அறுபத்தைந்தாம் பிரிவில் குறித்துரைக்கப் பட்டவைகள் உள்ளடங்கலாக தனிசு புனர் வாழ்வுக் கட்டளை நடவடிக்கைமுறையின் இலக்குகளை முன்னெடுத்து நீடிப்பு செய்வதற்கான அளவு.

(8) கட்டளையை மாற்றுவதற்கான விண்ணப்பம் ஒன்றின் கேட்பின் மீது, நீதிமன்றம் (3) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதுக்கள் நிலை நாட்டப்பட்டிருக்கவில்லை யென கண்டறியின், கட்டளையை மாற்றுவதற்கான விண்ணப்பத்தை நீதிமன்றம் தள்ளுபடி செய்தல் வேண்டும்.

(9) கட்டளையை மாற்றுவதற்கான விண்ணப்பத்தின் கேட்பின் மீது (3) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதுக்கள் நிலைநாட்டப்பட்டுள்ளதென, நீதிமன்றம் கண்டறியின், நீதிமன்றம் :-

(அ) தனிசு புனர்வாழ்வு கட்டளையை வங்கிமுறிவு கட்டளையாக மாற்றுதல்; அல்லது

(ஆ) தனது தனிசுகளுக்கான கொடுப்பனவுகளை செய்வதற்கான ஒழுங்கேற்பாடுகளைச் செய்வதற் கான சந்தர்ப்பத்தினை கடனாளிக்கு வழங்க வேண்டும் என நீதிமன்றம் கவனத்துட் கொண்டிருப்பின் கட்டளை III பாகத்தின்கீழ் தனிசு பாதுகாப்பு தனிசு தீர்ப்புப் பிற்போடல் கட்டளையொன்றாக மாற்றலாம்;

(10) ஒன்பதாம் உட்பிரிவின் கீழ் தனிசு புனர்வாழ்வு கட்டளையொன்று வங்கிமுறிவு கட்டளையாக மாற்றப்படும் போது, 137 ஆம் பிரிவின் கீழ் வங்கிமுறிவிலிருந்து விடுவித் தலுக்கான காத்திருக்கும் காலப் பகுதியானது 70 ஆம் பிரிவின் கீழ் தனிசு புனர்வாழ்வுக் கட்டளை ஆக்கும் தேதியன்றி ஆரம்பிக்கப்பட்டதாக கருதப்படுதல் வேண்டும்.

(11) ஒன்பதாம் உட்பிரிவின் (ஆ) எனும் பந்தியின் கீழ் நீதிமன்றமானது கட்டளையொன்றை ஆக்குமிடத்து, 40, 41, 42 மற்றும் 43 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள் ஏற்புடமையாதல் வேண்டும்.

பேணல் கட்டளைக்காக உத்தியோக பூர்வ பெறுநர் விண்ணப் பிக்கலாம்

**78.** (1) இப் பிரிவு உத்தியோபூர்வ பெறுநர் பின்வருமாறு இருப்பின் ஏற்புடையதாதல் வேண்டும் :-

(அ) எழுபத்தாறாம் பிரிவின் கீழ் தனிசு புனர்வாழ்வு கட்டளையை முடிவுறுத்துகைக்காக விண்ணப் பிப்பதற்கு உட்கருதுதல்;

(ஆ) எழுபத்தேழாம் பிரிவின் கீழ் மாற்றுவதற்கு விண்ணப்பிப்பதற்கு உட்கருதுதல் அல்லது

(இ) எழுபத்தொன்பதாம் பிரிவின் கீழ் விடுவித்தலை கைமீட்பதற்காக விண்ணப்பிப்பதற்கு உட்கரு துதல்; அத்துடன்

(ஈ) கடனாளி சொத்துகளை மறைத்துள்ளார் அல்லது உத்தியோகபூர்வ பெறுநரை பிழையாக வழிநடத் தியுள்ளார் என்ற நோக்கை உருவாக்கியிருத்தல்.

(2) உத்தியோகபூர்வ பெறுநரின் விண்ணப்பத்தின் மீது, 76, 77 அல்லது 79 ஆம் பிரிவுகளின் கீழ் நீதிமன்ற கட்டளை யொன்றை ஆக்குகின்ற கடனாளியின் முடிவுறாதுள்ள சொத்துக்களின் பேணுகைக்காக கட்டளையொன்றினை நீதிமன்றம் ஆக்கலாம்.

(3) கடனாளியின் சொத்துக்களை பேணிக்காப்பதற்கான கட்டளையொன்று :–

(அ) அவசியமான அத்தகைய நியதிகள் மற்றும் நிபந் தனைகளின் மீது இருக்கவும்படலாம்; அத்துடன்

(ஆ) நீதிமன்றம் வேறு வகையாக தீர்மானித்தா லொழிய, கட்டளை ஆக்கப்பட்ட நேரத்திலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தனிசு புனர்வாழ்வுக் கட்டளையை கைமீட்டல்

**79.** (1) நீதிமன்றம் உத்தியோகபூர்வ பெறுநர் அல்லது கடன்கொடுநரின் விண்ணப்பத்தின் மீது, கடனாளிக்கு எழுத்து மூல அறிவித்தலை வழங்கியதன் பின்னர், 73 ஆம் பிரிவின் கீழ் அளிக்கப்பட்டுள்ளதான விடுவித்தலொன்றை கைமீட்கலாம்.

(2) இப் பிரிவின் கீழ் விடுவித்தலை கைமீட்பதற்கான விண்ணப்பமொன்று 73 ஆம் பிரிவின் கீழான விடுவிப்பு தேதியின் பின்னரான பன்னிரண்டு மாதங்களுக்கு முன்னரான நேரத்தில் மட்டுமே செய்யப்படலாம்.

(3) நீதிமன்றம் பின்வருமாறு திருப்தியுறின், இப் பிரிவின் கீழ் விடுவிடுப்பொன்றை மட்டும் மேற்கொள்ளலாம் :-

(அ) கடனாளின் மோசடியினூடாக விடுவிப்பு பெறப் பட்டுள்ளது என் அல்லது

(ஆ) உத்தியோகபூர்வ பெறுநருக்கு வருமானம் அல்லது ஆதனம் பற்றிய வெளிப்படுத்தலை மோசடி உட்கருத்துடன் தவறியுள்ளார். என,

(i) அத்தகைய வருமானம் முப்பத்தாறாம் பிரிவின் கீழ் பாதுகாக்கப்பட்ட வருமானமாக விராதவிடத்த; அல்லது

(ii) முப்பத்திநான்காம் பிரிவின் கீழ் அத்தகைய ஆதனமானது பாதுகாக்கப்பட்ட ஆதனமல்ல,

என்பதுடன் விடுவித்தலுக்கு பின்னர் வரை, அத்தகைய மோசடி, அல்லது வெளிப்படுத்துகைக்கான அத்தகைய தவறுகை பற்றி விண்ணப்பகாரர் அறிந்திருக்க வில்லை.

(4) விடுவித்தல் மீளப் பெறப்பட்டிருக்காத பட்சத்தில் தனிசுபட்டவரை தவிர எந்த ஆளினது உரிமைகள் அல்லது பரிகாரங்கள் ஆகியவற்றுக்கு பங்கமாகவோ அல்லது பாதிக்கக்கூடியதாகவோ விடுவித்தலை மீளப் பெற்றமை இருந்திருக்காது.

(5) இப் பிரிவின் கீழ் விடுவித்தலொன்றை கைமீட்ட லானது :-

(அ) எழுபத்திமூன்றாம் பிரிவின்கீழ் இல்லாதாக்கப் பட்டதான தனிசுகள் வலுவுறுத்தற்படற்பால தானதாகவருதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) கடனாளி தனிசு புனர்வாழ்வுக் கட்டளை வலுவுக் கிருக்கின்ற வேளையில் அல்லது கடனாளி விடுவிக்கப்பட்டதன் பின்னர் கடனாளி திரண்டதாக இருக்கக்கூடியதான எவையேனும் கட்டணங்கள் அல்லது அறவீடுகள் என்பவற்றை செலுத்துவதற்கு ஆளாதல் வேண்டும்.

அதிகார மளிக்கப்பட்ட இடையேற் பாளர்கள்

**80.** (1) தனிசு புனர்வாழ்வுக் கட்டளை நடவடிக்கை முறையை தொழிற்படுத்துவதில் அதிகாரமளிக்கப்பட்ட இடையீட்டாளர்களின் வகிபாகங்களை முன்னெடுத்துச் செல்வது தொடர்பான விதிகள், நியமங்கள் மற்றும் வழிகாட்டுநெறிகள் ஆகியவற்றை இச் சட்டத்தின் 4 ஆம் பிரிவுக்கிணங்க, அதிகாரசபை வழங்கலாம்.

(2) அமைச்சர் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில், இச்சட்டத்தின் கீழ் அதிகாரமளிக்கப் பட்ட இடையீட்டாளர் ஒருவராக செயலாற்றுவதற்கு எவரேனும் ஆளை, நிறுவகத்தை அல்லது குழுவை அதிகார மளிக்கலாம்.

(3) ஓராம் உட்பிரிவின் கீழான அதன் தத்துவங்களை பிரயோகிப்பதில் அதிகாரசபை 65 ஆம் பிரிவில் குறித்துரைக் கப்பட்டதான நடவடிக்கை முறையின் இலக்குகள் பற்றி கவனதுட் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் மற்றும் குறைவான வருமான மட்டங்கள் மற்றும் சொத்துக்களை யுடைய கடனாளிகளுக்கான நடவடிக்கைமுறையை அணுகுவதை வசதிப்படுத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட இடையீட்டாளர்கள் தொடர்பில் எவையேனும் விதிகள், நியமங்கள் மற்றும் வழிகாட்டு நெறிகள் என்பவற்றை உறுதி செய்தல் வேண்டும்.

## பாகம் VI

## வங்கிமுறிவு

### அத்தியாயம் 1

### வங்கிமுறிவு விண்ணப்பங்கள் மற்றும் வங்கிமுறிவு கட்டளைகள்

வங்கிமுறிவு கட்டளைக் கான கடனாளியின் விண்ணப்பம்

**81.** (1) கடனாளி தொடர்பில் வங்கிமுறிவு கட்டளை யொன்றுக்கான இவ் அத்தியாயத்துக்கிணங்க கடனாளி நீதிமன்றத்திற்கு விண்ணப்பம் ஒன்றினை செய்யலாம்.

(2) கடனாளி அத்தகைய கடனாளியின் தனிசுகளை செலுத்துவதற்கு இயலாதவராக உள்ளதான ஏதுவின்மீது மட்டுமே வங்கிமுறிவு கட்டளையொன்றுக்கான விண்ணப்ப மொன்றை கடனாளி செய்யலாம்.

(3) அடுத்துறும் விண்ணப்பத் திகதிக்கு முன்னரான ஆறு மாத காலப் பகுதியினுள் முன்னையதான வங்கிமுறிவு கட்டளைக்கான விண்ணப்பத்தினை கடனாளி முன்னேர செய்துள்ளவிடத்து, கடனாளி வங்கிமுறிவுக் கட்டளை யொன்றுக்கான விண்ணப்பத்தினை செய்தலாகாது.

கடனாளி இலங்கையில் வதிபவராக இருத்தல்

**82.** கடனாளி இலங்கையில் வதிபவராக உள்ளவிடத்து அல்லது, வங்கிமுறிவு கட்டளையொன்றுக்கான விண்ணப்ப மொன்றை செய்கின்ற தேதிக்கு முன்னரான மூன்றாண்டு களினுள் ஏதேனும் நேரத்தில் பின்வருமாறு உள்ளவிடத்து மட்டும் கடனாளி வங்கிமுறிவுக் கட்டளையொன்றுக்கு தகுதியுடையவராவார் :-

(அ) இலங்கையில் வதிபவராக இருக்குமிடத்து அல்லது இலங்கையில் வதிவிடம் ஒன்றை கொண்டிருக்குமிடத்து; அல்லது

(ஆ) பங்காண்மை அல்லது குழுமம் ஒன்றின் உறுப்பாண்மையினூடாக உள்ளடங்கலான இலங்கையில் தொழிலை கொண்டு நடாத்து கின்றவிடத்து.

கடனாளியின் விண்ணப்பத்தின் மீதான வங்கிமுறிவு கட்டளையொன்றுக்கான கட்டளைக் கற்கள்

**83.** (1) வங்கிமுறிவு கட்டளையொன்றுக்கான கடனாளியின் விண்ணப்பம் ஒன்று பின்வருவனவற்றை உள்ளடக்குதல் வேண்டும் :-

(அ) விதித்துரைக்கப்படக்கூடியவாறான படிவமான முப்பத்திமூன்றாம் பிரிவுக்கணங்க கடனாளியின் நிதிசார் அலுவல்கள் பற்றிய கூற்றொன்று; அத்துடன்

(ஆ) நீதிமன்றத்தினால் கோரப்படக்கூடியதான அத்தகைய வேறு தகவல்கள்.

(2) வங்கிமுறிவு கட்டளையொன்றுக்கான விண்ணப்பத்தினை சமர்ப்பித்த மற்றும் வங்கிமுறிவு கட்டளையை ஆக்குவது தொடர்பில் நீதிமன்றத்தின் முடிவு என்பவற்றுக்கு இடையிலான ஏதேனும் நேரத்தினுள் கடனாளி ஒருவர் அத்தகைய கடனாளியின் செலுத்துவதற்கு தனிசுகளை இயலுமானவராக வருகின்றவிடத்து, நீதிமன்றத்திற்கு அறிவித்தல் வேண்டும்.

கடனாளி விண்ணப்பம் மீதான வங்கிமுறிவு கட்டளையை ஆக்குதல்

**84.** (1) வங்கிமுறிவு கட்டளையொன்றுக்கான விண்ணப்பம் கிடைக்கப் பெற்றதன் பின்னர், 180 நாட்களுக்குள் அல்லது விதிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறுகாலப் பகுதியினுள் நீதிமன்றமானது பின்வருவன உள்ளனவா என்பது பற்றி முடிவு செய்தல் வேண்டும் :–

(அ) எண்பத்தோராம் மற்றும் 82 ஆம் பிரிவுகளின் தகவுடைய கட்டளைக் கற்கள் ஈடுசெய்துள்ளனரா;

(ஆ) கடனாளி தனது அத்தகைய தனிசுகளை செலுத்துவதற்கு இயலாதவராக உள்ளாரா; அத்துடன்

(இ) நீதிமன்ற முடிபுத் தேதியில் விண்ணப்பத்தின் விடயமாகவுள்ள எவையேனும் தனிசுகள் தொடர்பில் வங்கிமுறிவு கட்டளை எதுவும் ஆக்கப்பட்டிருக்கின்றதா.

(2) வங்கிமுறிவு கட்டளையொன்றுக்கான விண்ணப்பம் கிடைக்கப் பெற்றதன் பின்னர், வங்கிமுறிவு கட்டளை வழங்கப்பட வேண்டுமா என்பதை முடிபுசெய்யும்

நோக்கத்துக்காக அவசியமென நீதிமன்றம் கருதுகின்றதான எவையேனும் தகவல்களை கடனாளியிடமிருந்து எந்த நேரத்திலும் நீதிமன்றம் கோரலாம்.

(3) ஓராம் உட்பிரிவின் தேவைப்பாடுகள் ஈடுசெய்யப் பட்டமை என நீதிமன்றம் திருப்தியுறின் கடனாளி தொடர்பிலான வங்கிமுறிவு கட்டளையொன்றினை நீதிமன்றம் ஆக்குதல் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின் தேவைப்பாடுகள் ஈடுசெய்யப் பட்டமை தொடர்பில் நீதிமன்றம் திருப்தியுறாவிடின் கடனாளி தொடர்பில் வங்கிமுறிவு கட்டளையொன்றினை ஆக்குவதற்கு நீதிமன்றம் மறுத்தல் வேண்டுமென்பதுடன் கடனாளிக்கு பின்வருவன உள்ளடங்கலாக எழுத்து மூல அறிவித்தலை வழங்குதலும் வேண்டும் :-

(அ) மறுத்தமைக்கான காரணங்கள்; அத்துடன்

(ஆ) ஐந்தாம் உட்பிரிவின் கீழ் முடிபை மீளாய்வு செய்வதற்கான சாத்தியம்.

(5) வங்கிமுறிவு கட்டளையொன்றினை வழங்குவதற்கு ஆக்குவதற்கு நீதிமன்றம் மறுக்குமிடத்து, கிடைக்கப் பெறத்தக் கனவான தகவல்களை மீளாய்வு செய்வதற்கு கடனாளி நீதிமன்றத்திற்கு கோரிக்கையொன்றை விடுக்கலாம்; அத்துடன் இம் மீளாய்வின் மீது நீதிமன்றமானது பின்வருமாறு :–

(அ) வங்கிமுறிவு கட்டளையொன்றை ஆக்குவதற்கு மறுத்தமையை உறுதிப்படுத்தல் வேண்டும்; அல்லது

(ஆ) கடனாளி தொடர்பில் வங்கிமுறிவு கட்டளை யொன்றை ஆக்குதல்.

(6) வங்கிமுறிவு கட்டளையொன்றினை நீதிமன்றம் ஆக்கு கின்றவிடத்து, அது நியாயமானளவு செயல் முறைக் குகந்தளவு :–

(அ) கட்டளையின் பிரதியொன்றினை கடனாளிக்கு வழங்குதல் வேண்டும்;

(ஆ) கட்டளையின் பிரதியொன்றினை உத்தியோக பூர்வ பெறுநருக்கு வழங்குதல் வேண்டும்;

(இ) கடனாளியின் நன்கு அறிந்த ஒவ்வொரு கடன் கொடுநருக்கும் கட்டளையின் எழுத்து மூல அறிவித்தலை வழங்குதல் வேண்டும்.

(7) வங்கிமுறிவு கட்டளையொன்றினை நீதிமன்றம் விதித் துரைக்கப்படக்கூடியவாறான வங்கிமுறிவு கட்டளையின் அத்தகைய விபரங்களை உத்தியோகபூர்வ பெறுநர் செய்வித்தல் வேண்டும். இவற்றுள் பெயர், முகவரி, கடனாளி தொடர்பான விவரணம் கட்டளை திகதி உள்ளடங்கலாக பின்வருவனவற்றில் வெளியிடப்படுதல் வேண்டும் :-

(அ) தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை இடாப்பு; அத்துடன்

(ஆ) பொது அறிவித்தல்.

(8) ஆறாம் உட்பிரிவின் கீழ் உத்தியோகபூர்வ பெறுநரினால் வழங்கக் கூடிய அறிவித்தல் படிவம் விதித்துரைக்கப்படலாம்.

(9) இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக வங்கிமுறிவு கட்டளையின் திகதியானது, வங்கிமுறிவு தொடங்கிய தேதியாகவிருத்தல் வேண்டும்.

வங்கிமுறிவு கட்டளைக் கான மனு

**85.** (1) இவ் அத்தியாயத்தின் பின்வரும் ஏற்பாடுகளுக் கிணங்க கடனாளிக்கு எதிராக வங்கிமுறிவு கட்டளை யொன்றுக்கு திறத்தவரொருவர் விண்ணப்பிக்கலாம்.

(2) இந்த அத்தியாயத்தின் கீழ் கடனாளிக்கு எதிரான வங்கிமுறிவு கட்டளைக்கான மனுவை பின்வருவோரால் சமர்ப்பிக்கப்படலாம் :-

(அ) கடன்கொடுநர் ஒருவர்;

(ஆ) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கடன் கொடுநர்கள் உள்ளவிடத்து, கூட்டாக கடன் கொடுநர்கள்; அல்லது

(இ) உத்தியோகபூர்வ பெறுநர்.

(3) உத்தியோகபூர்வ பெறுநர் கடனாளிக்கு எதிரான வங்கிமுறிவு கட்டளையொன்றுக்காக பின்வருமாறு உள்ள விடத்து மனுச் செய்யலாம் :-

(அ) ஐம்பத்தொன்பதாம் பிரிவின் கீழ் தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டு ஒன்றினை முடிவுறுத்துவதற்கான கட்டளையொன்றினை நீதிமன்றம் ஆக்குகின்றவிடத்து; அல்லது

(ஆ) எழுபத்தேழாம் பிரிவின் கீழ் தனிசு புனர்வாழ்வு கட்டளையொன்றினை வங்கிமுறிவு கட்டளை யாக மாற்றுவதற்கான கோரிக்கையின் ஊடாக.

வங்கிமுறிவு மனு கடனாளி நிபந்தனை

**86.** (1) அறுபத்தாறாம் பிரிவின் கீழ் தனிசு புனர்வாழ்வுக் கட்டளை விண்ணப்பம் ஒன்றிற்கு கடனாளி; தகுதியற்றவராக உள்ளபோது மட்டுமே கடனாளிக்கு எதிரான வங்கிமுறிவு கட்டளையொன்றுக்கான மனுவொன்று கொண்டு வரப் படலாம்.

(2) கடனாளிக்கு எதிரான வங்கிமுறிவு கட்டளையொன் றுக்கான மனுவை கடனாளி இலங்கையில் வதிகின்றவிடத்து அல்லது வங்கிமுறிவு கட்டளையொன்றுக்கான விண்ணப் பத்தை செய்கின்ற திகதிக்கு முன்னரான மூன்று ஆண்டு களினுள் நேரத்தினுல் பின்வருமாறு உள்ள போது கொணரப் படலாம் :-

(அ) இலங்கையில் வதிபவராக இருத்தல் அல்லது இலங்கையில் வதிவிடம் ஒன்றை கொண்டிருத் தல்; அல்லது

(ஆ) பங்காண்மை குழுமத்தின் அல்லது ஒன்றினூடாக உறுப்பாண்மையூடாக உள்ளடங்குகின்றதான இலங்கையில் தொழிலை வன்மை கொண்டு நடாத்துதல்.

வங்கிமுறிவு மனு: மீளப் பெறுதல், இடைக்கால தடை, நீக்குதல் தொடர்பான நீதிமன்ற தத்துவங்கள்

**87.** (1) நீதிமன்றத்தின் அனுமதியின்றி வங்கிமுறிவு மனு மீளப்பெறப்படுதலாகாது.

(2) வங்கிமுறிவு மனுவொன்று நீதிமன்றத்திற்கு முன்வைக் கப்படும் போது, நீதிமன்றம் நடவடிக்கை முறையிலான ஒழுங்கின்மை அல்லது வேறு ஏதேனும் காரணமொன்று உள்ளதென அவ் ஏதுக்களின் மீது அவ்வாறு செய்வதற்கு நீதிமன்றத்திற்கு தோதனது என தோன்றின், நீதிமன்றம் பின்வரும் தத்துவங்களை கொண்டிருத்தல் வேண்டும் :–

(அ) வங்கிமுறிவு மனுவொன்றை தள்ளுபடி செய்ய லாம்; அல்லது

(ஆ) அவசியமான அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் மீது வங்கிமுறிவு மனு மீதான நடவடிக்கைமுறைகளை இடைநிறுத்தலாம்.

(3) வங்கிமுறிவு மனுவொன்று நீதிமன்றத்தில் முன்வைக் கப்படும்போது, தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடு ஒன்றுக்கான பிரேரணையொன்றை செய்வதற்காக கடனாளிக்கு அனுமதிப்பது தோதானதென நீதிமன்றம் பரிசீலிக்கும் பட்சத்தில், நீதிமன்றமானது பின்வருமாறு :–

(அ) வங்கிமுறிவு மனு மீதான நடவடிக்கைமுறை களை இடைநிறுத்தி வைத்தல்;

(ஆ) III ஆம் பாகத்தின் கீழ் அத்துடன் பகுதியின் கீழ் தனிசு பாதுகாப்பு தனிசு பிற்போடல் கட்டளை யொன்றுக்கான விண்ணப்பத்தை முன்வைப்ப தற்கு கடனாளியை அழைப்பு விடுவிக்கலாம்.

(4) மனு முன்வைக்கப்பட்டதன் பின்னர் மற்றும் வங்கி முறிவு கட்டளையொன்றினை ஆக்குவதற்கு முன்னர் எந்த நேரத்திலும் :–

(அ) ஆதனத்துக்கு எதிராக அல்லது கடனாளியின் ஆளுக்கு எதிராக ஏதேனும் வழக்கு, நிறை வேற்றுகை அல்லது வேறு வழக்கு நடவடிக்கை என்பவற்றை இடைநிறுத்தி வைக்கலாம்;

(ஆ) கடனாளிக்கு எதிரான நடவடிக்கைமுறைகள் கடனாளிக்கு எதிராக மனுவொன்று சமர்ப்பிக்கப் பட்டுள்ளது என எண்பிப்பதன்மீது நீதிமன்றம் அவசியம் என கருதுகின்றதான அத்தகைய நியதி களின் மீது செயன்முறைகளை இடைநிறுத்தி ஒன்றில் நடவடிக்கைமுறைகளை வைத்தல் அல்லது அவற்றை தொடர்வதற்கு அனுமதி யளிக்கலாம்.

(5) வங்கிமுறிவு கட்டளையொன்றுக்காக ஒன்றிற்கு மேற்பட்ட மனுக்கள் காணப்படுமிடத்து, மற்றும் ஒரு மனுவானது நீதிமன்றத்தினால் இடைநிறுத்திவைக்கப்பட்டு

அல்லது ஒத்திவைக்கப்பட்டிருக்குமிடத்து நீதிமன்றம் சிறந்த காரணம் ஏதேனும் இருப்பின் :–

(அ) இடைநிறுத்தப்பட்டிராத அல்லது ஒத்திவைக்கப் பட்டிராத மனு மீதான வங்கிமுறிவு கட்டளையை ஆக்கலாம்; அத்துடன்

(ஆ) நீதிமன்றம் அவசியமானது என கருதுகின்ற என நியதிகளின் மீது இடைநிறுத்தப்பட்ட அல்லது ஒத்திவைக்கப்பட்ட மனுவை தள்ளுபடி செய்யலாம்.

(6) வங்கிமுறிவு கட்டளையொன்றுக்கான கடன்கொடு நரின் மனுவானது ஒன்றுக்கு மேற்பட்ட கடனாளியுடன் தொடர்புபட்டிருக்குமிடத்து, நீதிமன்றம் எஞ்சியுள்ள கடனாளி அல்லது கடனாளிகளுடன் தொடர்புடைய ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கடனாளிகள் மனுவை பாதிக்காது கட்டளையொன்றினை ஆக்குவதற்கு நீதிமன்றம் மறுக்கலாம்.

கடன் கொடுநர் மனுவின் மீதான ஏதுக்கள்

**88.** (1) மனு முன்வைக்கப்பட்ட நேரத்தில், தனிசு அல்லது தனிசுகள் தொடர்பில் பின்வருமாறு மாத்திரம் கடன்கொடு நரது மனு நீதிமன்றத்திற்கு முன்வைக்கப்படலாம் :-

(அ) தனிசு தொகை, அல்லது தனிசுகளின் அதிகரித்த தொகையானது இரண்டு மில்லியன் ரூபாய்களுக்கு சமனாக அல்லது விஞ்சியதாக இருத்தல்;

(ஆ) ஒழித்துக்கட்டப்பட்ட தொகைக்கான தனிசு;

(இ) ஒன்றில் உடனடியாக அல்லது எதிர்காலத்தில், மனு கொடுத்த தனிசுகொடுநருக்கு, அல்லது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மனு கொடுத்த கடன்கொடுநர்களுக்கு தனிசு செலுத்தப்படற் பாலதாகவிருத்தல்;

(ஈ) தனிசு அல்லது தனிசுகள் ஒவ்வொன்றும் மற்றும்முன் வங்கிமுறிவு தவணை தவறியமை இடம்பெற்றுள்ளமை தொடர்பில் தனிசொன்றாக இருத்தல்; அத்துடன்

(உ) தனிசு அல்லது எவையேனும் தனிசுகள் தொடர்பில் வங்கிமுறிவு அறிவித்தலொன்றை புறத்தொதுக்குவதற்கு நிலுவையாகவுள்ள விண்ணப்பமெதுவும் இல்லை.

வங்கிமுறிவு அறிவித்தல் மற்றும் செலுத் துவதற்கான இயலாமை

**89.** (1) வங்கிமுறிவு அறிவித்தலானது விதித்துரைக்கப் படக் கூடியவாறான அத்தகைய படிவத்தில் இருத்தலும் வேண்டுமென்பதுடன் :-

(அ) மனுச் செய்த கடன்கொடுநருக்கு கொடுமதியாக வுள்ள தனிசொன்று தொடர்பில் கடனாளியை பின்வருவனவற்றுக்காக தேவைப்படுத்துதல் வேண்டும் :-

(i) எவையேனும் செலுத்தப்படற்பாலதான வட்டி மற்றும் ஆகுசெலவுகள் உள்ளடங் கலாக தனிசை செலுத்துவதற்கு;

(ii) மனு தாக்கல் செய்த கடன் கொடுநரின் திருப்திக்கு வருமதியாகவுள்ள தொகை யொன்றுக்கான பிணைப்பொறுப்பிணை வழங்குவதற்கு; அல்லது

(iii) மனு தாக்கல் செய்த தனிசுகொடுத்தவரது திருப்திக்கு தனிசை ஒன்று கூட்டுவதற்கு;

(ஆ) வங்கிமுறிவு அறிவித்தலுடன் இணங்கியொழுகா மையின் விளைவுகளை குறிப்பிடுதல் வேண்டும்; அத்துடன்

(இ) இலங்கையில் கடனாளியின் மீது அல்லது இலங்கைக்கு வெளியே நீதிமன்றத்தின் அனுமதி யுடன் சேவையாற்றப்படுதல் வேண்டும்.

(2) பின்வருமாறு இருந்தாலொழிய வங்கி முறிவு அறிவித் தலில் குறித்துரைக்கப்பட்ட பணத்தொகை பெறுமதியுடன் கடனாளி உண்மையில் வருமதியாகவுள்ள பணத்தொகையை விட விஞ்சியதான தொகையொன்றாக இருக்கின்றதான காரணத்தினால் மட்டும் வலிதாக்கப்படுதலாகாது :-

(அ) வங்கிமுறிவு அறிவித்தலின் பெறுமதியுடன் கடனாளி முரண்படுவதாக எழுத்து மூலமாக தனிசுகொடுத்தவருக்கு அறிவித்தல். ஏனெனில், உண்மையில் நிலுவையிலுள்ள தொகையை விட இங்கு மிகைப்படுத்தி காட்டப்பட்டுள்ளது; அத்துடன்

(ஆ) வங்கிமுறிவு அறிவித்தலுடன் கடனாளி; இணங்க வேண்டிய வங்கிமுறிவு அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட காலப் பகுதியினுள் அறிவித்தல்களை கடனாளி மேற்கொள்ளுதல்.

(3) எண்பத்தெட்டாம் பிரிவின் 10 உபபிரிவின் (ஈ) எனும் பந்தியின் நோக்கங்களுக்காக (4) ஆம் அல்லது (5) ஆம் உட்பிரிவுகளின் நிபந்தனைகள் திருப்திப்படுத்தப்படின் மட்டுமே முன் வங்கிமுறிவு தவணை தவறியமை இடம் பெற்றுள்ளது.

(4) கடனாளி பின்வருமாறு மனுச்செய்யும் கடன் கொடுநருக்கு இரண்டு மில்லியன் அல்லது அதற்கு மேற்பட்ட தொகையொன்றான உள்ளடக்கப்பட்ட தனிசொன்றை கொடுமதியாக உள்ளவிடத்து, வங்கி முறிவு கட்டளையானது வலிதற்றதாக்கப்படுதல் வேண்டும் :-

(அ) தனிசு செலுத்தப்பட வேண்டிய மனுச்செய்கின்ற கடன்கொடுநர் வங்கிமுறிவு அறிவித்தல் ஒன்றை கடனாளிக்கு சேர்ப்பிக்கப்படுதல் வேண்டும்;

(ஆ) வங்கிமுறிவு அறிவித்தல் சேர்ப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து ஆகக் குறைந்தது இருபத்தொரு நாட்களை விஞ்சிய காலப்பகுதியின் பின்னர் முடிவடைந்திருத்தல்; அத்துடன்

(இ) வங்கிமுறிவு அறிவித்தலானது பின்வருமாறு ஒன்றில் :-

(i) இணங்கியொழுகப்பட்டிருத்தல்; அல்லது

(ii) விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் புறத்தொதுக்கப்படுதல்.

(5) இவ் உட்பிரிவின் தேவைப்பாடுகள் பின்வருமாறான தாக இருத்தல் வேண்டும் :–

(அ) கடன் கொடுநர் இரண்டு மில்லியன் ரூபாய் அல்லது அதற்கு மேற்பட்ட தொகையொன்றுக் காக கடனாளிக்கு எதிராக இறுதி தீர்ப்பொன் றினை அல்லது இறுதிக் கட்டளையொன்றினை பெற்றுக்கொண்டுள்ளாரென; அத்துடன்

(ஆ) தனிசு தொடர்பில் நிறைவேற்றுகை அல்லது வழங்கப்பட்ட ஏனைய செயன்முறைகள் முழுமை யாகவோ அல்லது பகுதியாகவோ திருப்தி யற்றவை என திருப்பியனுப்பப்பட்டிருக் கின்றதென.

வங்கிமுறிவு கட்டளைக் கான மனு மீதான நீதிமன்ற முடிவு

**90.** (1) வங்கிமுறிவு கட்டளைக்கான மனு கிடைக்கப் பெற்றதன்மீது 86, 88 மற்றும் 89 ஆம் பிரிவுகளின் நிபந்தனைகள் ஈடுசெய்யப்பட்டுள்ளன என திருப்திப்படின், நீதிமன்றமானது வங்கிமுறிவு கட்டளையொன்றினை ஆக்கலாம்.

(2) நீதிமன்றம் கடனாளியின் எல்லா தனிசுகளையும் செலுத்தவதற்கு கடனாளி இயலுமாக உள்ளாரென திருப்திப் படின் மனுவை தள்ளுபடி செய்யலாம் :-

(அ) மனு சமர்ப்பிக்கப்பட்டது தொடர்பில் தனிசொன் றுக்கான பாதுகாப்பு அல்லது கூட்டு சேர்வை கடனாளி ஆக்கியுள்ளார் என;

(ஆ) மனுவை தள்ளுபடி செய்வதற்கு முனைவு தேவைப்படுத்தக்கூடியவற்றை ஏற்புறுதி செய்கின்றதென; அத்துடன்

(இ) முனைவானது நியாயமற்ற முறையில் மறுக்கப்பட்டிருக்கின்றது என;

(3) கடனாளி, கடனாளயின் எல்லா தனிசுகளையும் செலுத்துவதற்கு இயலுமானவராகி உள்ளாரா என (2) ஆம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக தீர்மானிப்பதில், கடனாளி மனுவின் தேவைக்கமைய, தற்போதுள்ள அல்லது எதிர்கால அல்லது குறித்த சில அல்லது எதிர்பாராத எல்லா தனிசுகள் மற்றும் பொறுப்புகளையும் கவனத்திற் கெடுத்தல் வேண்டும்.

(4) வங்கிமுறிவு கட்டளையொன்றினை நீதிமன்றம் ஆக்குகின்றவிடத்து, அது செயல்முறைக்குகந்தளவு நியாய மானதளவில் பின்வருவனவற்றை வழங்குதல் வேண்டும் :-

(அ) கடனாளிக்கு கட்டளையின் பிரதியொன்று;

(ஆ) உத்தியோகபூர்வ பெறுநருக்கு கட்டளையின் பிரதியொன்றினை; அத்துடன்

(இ) கடனாளியின் அறியப்பட்ட ஒவ்வொரு கடன் கொடுநருக்கும் கட்டளை பற்றிய எழுத்து மூலமான அறிவித்தலொன்று.

(5) வங்கிமுறிவு கட்டளையொன்றினை நீதிமன்றம் ஆக்கு கின்றவிடத்து கடனாளியின் பெயர், முகவரி, விபரணம் மற்றும் கட்டளை திகதி ஆகியன உள்ளடங்கலாக விதித் துரைக்கப்படக்கூடியவாறான வங்கிமுறிவுக் கட்டளையின் அத்தகைய விபரங்களை உத்தியோகபூர்வ பெறுநர் பின்வருவனவற்றில் வெளியிடச் செய்வித்தல் வேண்டும் :-

(அ) தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை இடாப்பில்; அத்துடன்

(ஆ) பொது அறிவித்தல்.

(6) நான்காம் உட் பிரிவின் கீழ் நீதிமன்றங்களினால் வழங்கப்படவேண்டிய அறிவித்தலின் படிவம் விதித்துரைக்கப் படலாம்.

இடைக்கால பெறுநர்

**91.** (1) நீதிமன்றம் மனுவை முன்வைத்;ததன் பின்னரான மற்றும் வங்கிமுறிவு கட்டளையொன்றினை ஆக்குவதற்கு முன்னரான ஏதேனும் நேரத்தில், கடனாளியின் ஆதனத்தின் பாதுகாப்பு அவசியமென காட்டப்படின் கடனாளியின் ஆதனத்தின் இடைக்காலப் பெறுநராக விருப்பதற்கு உத்தியோகபூர்வ பெறுநர் ஒருவரை நியமிக்கலாம்.

(2) நீதிமன்றமானது வங்கிமுறிவு கட்டளையொன்றினை ஆக்குவதற்கு முன்னரான எதேனும் நேரத்தில் (1) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளையொன்றினை ஆக்கலாம்.

(3) கட்டளையின் பாகமொன்றாக அடுத்துறும் அல்லது கடன்கொடுநரின் அல்லது உத்தியோகபூர்வ பெறுநரின் விண்ணப்பத்தின் மீது நீதிமன்றமானது உத்தியோகபூர்வ பெறுநருக்கு பின்வருமாறு அதிகாரமளிக்கலாம் :-

(அ) ஏதேனும் ஆதனத்தை உடைமையாக எடுப்பதற்கு;

(ஆ) ஏதேனும் அழியக்கூடிய ஆதனத்தை அல்லது பெறுமதி குறிப்பாக குறையக்கூடியதான

சாத்தியமுள்ளதான ஆதனத்தை அது உடனடியாக கையுதிர்காதுவிடின் விற்பதற்கு;

(இ) நீதிமன்றத்தினால் பணிக்கப்பட்டதான கடனாளியின் தொழில் அல்லது ஆதனத்தை கட்டுப்படுத்துவதற்கு; அல்லது

(ஈ) எக் கடனாளி தொடர்பில் வங்கிமுறிவு கட்டளையொன்று அக்கப்பட்டதோ அக் கடனாளி தொடர்பில், 102 ஆம் பிரிவின்கீழ் வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாளரிடம் உரித்தாக்கப்பட்டுள்ள எவையேனும் தத்துவங்களை கடனாளி தொடர்பில் பிரயோகித்தல்.

(4) கடனாளியின் ஆதனத்தைப் பேணிக்காப்பதற்காக நீதிமன்றத்தின் அபிப்பிரயாத்தில் கடனாளியின் ஆதனத்தின் அல்லது தொழிலின் உத்தியோகபூர்வ பெறுநரின் கட்டுப்பாட்டிற்கு எது அவசியமானதோ அதற்கான கட்டளையின் விளைவை நீதிமன்றம் நிறுத்திவைத்தல் வேண்டும்.

(5) கடனாளியின் ஆதனத்தின் இடைக்கால பெறுநராக உத்தியோகபூர்வ பெறுநரின் நியமனம் விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய முறையில் அவரால் விளம்பரப்படுத்தப்படுதல் வேண்டும்.

(6) இடைக்கால பெறுநர் நியமிக்கப்படுமிடத்து, 93 ஆம் பிரிவு நியமனமானது அத்தகைய கட்டளை ஆக்கியதன் பின்னர் இருப்பின் மனு மீதான வங்கி முறிவு கட்டளையொன்றின் நியமனம் அல்லது ஆக்குகை அல்லது மனுவின் தள்ளுபடி என்பவற்றுக்கிடையிலான காலப்பகுதிக்கு ஏற்புடையதாதல் வேண்டும்.

(7) இடைக்கால பெறுநர் ஒருவர் 122 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்படுமிடத்து வங்கிமுறிவு கட்டளையொன்று கடனாளிக்கு எதிராக செய்யப்பட்டிருப்பின் ஏற்புடையதாதல் வேண்டும்.

## அத்தியாயம் 2

### வங்கிமுறிவுக் கட்டளை பயனுறுதல்

வங்கிமுறிவின் தொடக்கம்

**92.** (1) எக்கடனாளி தொடர்பில் வங்கிமுறிவுக் கட்டளை ஆக்கப்பட்டிருந்தாதோ அக்கடனாளி தொடர்பில் கடனாளியின் வங்கிமுறிவு :–

(அ) கட்டளை ஆக்கப்பட்டதான தேதியன்று தொடங்கப்பட்டிருக்கின்றது; அத்துடன்

(ஆ) இப் பாகத்தின் கீழ் தனிப்பட்ட ஆள் விடுவிக்கப்படும் வரை தொடர்ந்திருக்கின்றது.

(2) தொடங்கப்பட்ட தேதியின் பின்னர் செயல் ஒன்று மேற்கொள்ளப்பட்டது, அல்லது கொடுக்கல்வாங்கல் பதிவு செய்யப்பட்டதென ஊகிக்கப்படல் வேண்டும், ஆனால் ஊகம் முரணானது எண்பிக்கப்படின் ஏற்புடமையாதலாகாது.

(3) வங்கிமுறிவு கட்டளையொன்று மேன்முறையீட்டிற்கமைய இருந்தாலொழிய :–

(அ) வங்கிமுறிவுக் கட்டளையை ஆக்குவது செல்லுபடியற்றதென அல்லது ஆரம்பிப்பதற்கான முன் தேவைப்பாடு காணப்படவில்லை என பின்னர் யாரும் உறுதிப்படுத்த முடியாது; மற்றும்

(ஆ) வங்கிமுறிவு கட்டளை ஒவ்வொரு ஆள் மீதும் பிணிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

வழக்கு நடவடிக்கை மற்றும் பரிகாரங்களை இடைநிறுத்தி வைத்தல்

**93.** (1) இப்பிரிவுக்கமைய வங்கிமுறிவு கட்டளை ஆக்கியதன் பின்னர் வங்கிமுறிவில் எண்பிக்கப்படற்பாலதான தனிசொன்று கொடுமதியாக உள்ளவரான வங்கிமுறிவின் உள்ளவரான கடனாளியின் கடன்கொடுநர் ஒருவர் :-

(அ) தனிசு தொடர்பில் பரிகாரம் எதனையும் கொண்டவராதலாகாது,

(ஆ) தனிசை அறவிடுவதற்கு அல்லது வலுவுறுத்துவதற்கு எவையேனும் நடவடிக்கைகளை எடுத்தலாகாது; அத்துடன்

(இ) குறிப்பாக பின்வருவனவற்றின் எவையேனும் நடவடிக்கைகளை எடுத்தலாகாது :-

(i) கடனாளியின் வேண்டுகோள் தவிர்ந்த வேறு வகையில் எண்பிக்கப்படற்பாலதான தனிசின் கொடுப்பனவு தொடர்பில் வங்கி முறிவு கடனாளியை தொடர்புகொள்வதற்கு;

(ii) எண்பிக்கப்படற்பாலதான தனிசு தொடர்பில் வங்கிமுறிவு கடனாளிக்கு எதிராக எவையேனும் சட்ட நடவடிக்கை முறைகளை கொடுப்பதற்கு அல்லது தொடர்வதற்கு;

(iii) எண்பிக்கப்படற்பாலதான தனிசின் கொடுப்பனவை சேகரிப்பதற்கு பெறுவதற்கு அறவிடுவதற்கு அல்லது கோருவதற்கு;

(iv) வங்கிமுறிவு கடனாளிக்கு எதிராக நீதிமன்றம் அல்லது நியாய சபையொன்றின் தீர்ப்பை அல்லது கட்டளையை நிறைவேற்றுவதற்கு அல்லது வலுவுறுத்துவதற்கு;

(v) பிடியாணையொன்றை பெற்றுக் கொள்ளல்:

(vi) வங்கிமுறிவு கடனாளி இயைபான கடன் கொடுநருடன் செய்து கொள்ளப்பட்ட வாடகை உடன்படிக்கையின் கீழ் வங்கிமுறிவு கடனாளி வதிகின்ற வளவுகளின் உடைமையை பெற்றுக் கொள்வதற்கு;

(vii) கடன் கொடுநர் பண்டங்களின் சொந்தக்காரராக அல்லது குத்தகையாளராக உள்ளவிடத்து கடனாளியின் உடைமையினால் பயன்படுத்தப்பட்டவையான அல்லது உடமையில் உள்ளவையான 434 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) எனும் பந்திகளில் குறித்துரைக்கப்பட்ட வகையினதான எவையேனும் பண்டங்களை (10) ஆம் உட்பிரிவிற்கமைய எடுப்பதற்கு அல்லது அறவிடவதற்கு; அல்லது

(viii) பந்திகள் (i), (ii), (iii), (iv), (v), (vi), (vii) அல்லது (viii) எனும் பந்திகளில் குறிப்பிடப்பட்ட எவையேனும் நடவடிக்கைகளை

எடுப்பதற்கு முகவர் ஒருவரை அறவிடுவதற்கு.

(2) வங்கிமுறிவு கடனாளி தொடர்பில் வங்கிமுறிவு கட்டளையொன்று நடைமுறையில் இருக்கின்ற வேளையில் நீதிமன்றமானது பின்வருவனவற்றை கவனத்திற்கொள்ளுமிடத்து நீதிமன்றம் முதலாம் உட்பிரிவின் பந்தி (இ) யில் பட்டியலிடப்பட்ட நடவடிக்கையொன்றை விதிவிலக்கான முறையில் அனுமதியை அளிக்கலாம் :-

(அ) விதிவிலக்கான சூழ்நிலைகள் என்பது நடவடிக்கைகளை எடுப்பதற்கு கடன்கொடுநரை அனுமதித்தல் நியாயமானதும் எனப் பொருள்படும்; அத்துடன்

(ஆ) நடவடிக்கையானது :–

(i) வங்கிமுறிவு கடனாளிக்கு முறையற்ற பாதிப்பினை ஏற்படுத்தலாகாது;

(ii) வேறு எவரேனும் கடன் கொடுநருக்கு நியாயமற்ற பங்கத்தை ஏற்படுத்தாது; அல்லது

(iii) வங்கிமுறிவு செயன்முறையின் குறிக்கோள்களை குறிப்பிடக்கூடியளவு குறைத்து மதிப்பிடாது.

(3) பின்வருமாறு இருப்பின் மட்டும் வங்கிமுறிவு கடனாளி தொடர்பில் வங்கிமுறிவு கட்டளையொன்று வலுவிலிருக்கின்ற வேளையில், நீதிமன்றம் கடன்கொடுநருடன் கடனாளி செய்துகொண்டுள்ளதான வாடகை உடன்படிக்கையின் கீழ் வங்கிமுறிவு கடனாளி வதிகின்ற வளவுகளின் உடைமையாக பெற்றுக் கொள்வதற்கு இயைபான கடன்கொடுநருக்கு நீதிமன்றம் விதிவிலக்கான முறையில் நீதிமன்றம் அனுமதியளிக்கலாம் :-

(அ) வங்கிமுறிவு காலப் பகுதியின் பொழுது வாடகை ஒப்பந்த காலப் பகுதி காலாவதியாயின்;

(ஆ) மூன்று மாதங்களுக்கு மேற்பட்ட வாடகை தொகையை இயைபான கடன்கொடுநருக்கு

கடனாளி வாடகையின் நிலுவையாக கடனாளி கொடுமதியாக கொண்டிருப்பின்; அத்தடுன் நீதிமன்றம் வங்கிமுறிவு காலப் பகுதிக்கு மேற்பட்ட தொடர்ந்து கொண்டிருக்கும் வாடகை கொடுப்பனவுகளை பேணுவதற்கு இயலாதவராக கடனாளி வருகின்றார் எனும் கூடியளவான சாத்தியம் உள்ளதென நீதிமன்றம் கருதின்; அல்லது

(இ) கடனாளியின் வாடகை கொடுப்பனவு தவிர்ந்த ஏதுக்களின் அடிப்படையில் இயைபான கன் கொடுநரின் விண்ணப்பமொன்று வளவுகளின் உடமையை பெற்றக்கொள்வதற்கு.

(4) ஆறாம் உட்பிரிவிற்கமைய, வங்கிமுறிவு கடனாளி யின் வங்கிமுறிவின் போது, ஆள் எவரும் பின்வருமாறு தவிர கடனாளியின் ஆதனத்தின் வில்லங்கம் சொத்து மீதான ஒன்றினை வலுவுறுத்துதலாகாது :–

(அ) வங்கிமுறிவு நம்பிக்கை பொறுபப்hளரின் முன்னரான எழுத்திலான சம்மதத்துடன்; அல்லது

(ஆ) அவசியமான அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் மீது நீதிமன்றத்தின் அனுமதி யுடன்.

(5) வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளர் 4 ஆம் உட்பிரிவின் (அ) எனும் பந்தியின்கீழ் சம்மதம் வழங்க மறுப்பதற்கு ஆளதலாகாது.

(6) வங்கிமுறிவு தொடங்கப்படுவதற்கு முன்னர், பின்வருவனவற்றின் வலுவுறுத்துகை என்ற வழி மூலம் :-

(அ) சொத்து மீதான பாரபந்தம் ஒன்று; அல்லது

(ஆ) ஆதனத்தினை உடைமையில் எடுப்பதற்கு அல்லது வேறு வகையில் அறவிடுவதற்கு வாடகை கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் உள்ளடங்கலாக, ஆதனச் சொந்தக்காரர் அல்லது குத்தகையாளர் ஒருரின் உரிமையொன்று,

பெறுநர், நியமத்தர் அல்லது வேறு ஆள் கம்பனியின் ஆதனம் தொடர்பில் உடமையினுள் அல்லது கட்டுப்பாட்டில்

அல்லது ஊகிக்கப்பட்ட கட்டுப்பாட்டில் அல்லது ஏதேனும் தத்துவரை பிரயோகிப்பதில் ஈடுபடலாம்.

ஆயின் (4) ஆம் உட்பிரிவில் உள்ள 7 ஆம் அத்தியாயத்தில் உள்ள எதுவும் ஆதனம் தொடர்பில் இப்பிரிவின் கீழான பணியொன்றை அல்லது தத்துவத்தை பிரயோகிப்பதிலிருந்து அல்லது நிறைவேற்றுவதிலிருந்து பெறுநரை அல்லது நியமத்தை அல்லது வேறு ஆளை நியமித்தலை தடுத்தலாகாது.

(7) பத்து (11) மற்றும் (12) ஆம் உட் பிரிவுகளின் கீழ், கடனாளிக்கு கடன்கொடுநர் தொடர்ச்சியாக அத்தியவசிய பண்டங்கள் அல்லது சேவைகளை வழங்கியிருக்குமிடத்து அவ்வாறு தொடர்ச்சியாக விநியோகித்தமை தொடர்பில் இயைபான கடன் கொடுநருக்கு வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாளர் வங்கிமுறிவு கடனாளியின் வங்கிமுறிவு ஆதனத்திலிருந்து வருமானத்திலிருந்து தொடர்ச்சியாக வழங்குதல் தொடர்பில் கொடுப்பனவு செய்ய அல்லது ஏற்பாடு செய்தல் வேண்டும்.

(8) வங்கிமுறிவு கடனாளியின் எவையேனும் பண்டங்கள் அடமானம் வைத்தல், அடகுவைத்தல் அல்லது ஏனைய பிணைப் பொறுப்பு என்ற வழிமு5லம் வைத்திருக்குமிடத்து :–

(அ) உத்தியோகபூர்வ பெறுநர் அவ்வாறு செய்வதற்கான உத்தியோகபூர்வ பெறுநரின் உட்கருத்து பற்றி எழுத்து மூல அறிவித்தலை வழங்கியதன் பின்னர் பண்டங்களை சோதனையிடலாம்; அத்துடன்

(ஆ) அத்தகைய ஆள் பண்டங்களை சோதனை இடுவதற்கு மற்றும் மீட்பு பற்றி வங்கிமுறிவு கடனாளியின் உரிமையை பிரயோகிப்பதற்கு வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளருக்கு நியாயமான சந்தர்ப்பம் ஒன்றினை வழங்கியிருந்தால் ஒழிய மற்றும் எவரேனும் ஆளுக்கு அத்தகைய எழுத்து மூல அறிவித்தலை வழங்கப்பட்டுள்ளவிடத்து அவ் ஆள் நீதிமன்றத்தின் அனுமதியின்றி அடமானத்தை தேறிப்பெறுவதற்கு, ஈடுவைப்பதற்கு அல்லது பிணைப்பொறுப்பளிப்பதற்கு உரித்துடை யவராதலாகாது.

(9) இப் பிரிவிற்கு முரணாக எடுக்கப்பட்ட ஏதேனும் நடவடிக்கைகள் வெற்றானதும் வெறிதானதுமாக்கப்படுதல் வேண்டும்.

(10) கடனாளி தொடர்பில் வங்கிமுறிவு கட்டளையொன்று நடைமுறை்யில் இருக்கின்ற வேறையில், நீதிமன்றம் பின்வருமாறு உள்ளவிடத்து 34 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் (அ), (ஆ), (இ/0 அல்லது (ஈ) எனும் பந்திகள் குறித்துரைக்கப்பட்ட வகையினதான பண்டங்களை உடைமையில் வைத்திருக்கின்றார் என்ற வழிவகை மூலம் வாடகைக் கொள்வனவு உடன்படிக்கையொன்று உள்ளடங்கலாக முடிவுறுத்துவதற்கு குத்தகையாளர் அல்லது சொந்தக்காரருக்கு விதிவிலக்கான முறையில் நீதிமன்றம் அனுமதியளிக்கலாம் :–

(அ) கடனாளி மூன்று மாதங்களுக்கு மேற்பட்ட மீள் கொடுப்பனவு தொகை ஒன்றின் அத்தகைய உடன்படிக்கையின் கீழான நிலுவைகள் கொடுமதியாக உள்ளவிடத்து, மற்றும் கடனாளி வங்கிமுறிவின் மீதான தொடர்ந்து கொண்டிருக்கும் மீள் கொடுப்பனவுகளை பேணுவதற்கு இயலாதவராக இருக்கின்றார் என்பதற்கான கூடுதலான சாத்தியம் உள்ளதென நீதிமன்றம் கருதுகின்றவிடத்து.

(ஆ) அத்தகைய உடன்படிக்கையை முடிவுறுத்துவதற்கு அத்தகைய குத்தகையாளர் அல்லது சொந்தக்காரரின் விண்ணப்பமொன்று மற்றும் உடன்படிக்கையின் கீழ் மீள் கொடுப்பனவுகளை செலுத்துவதற்கு கடனாளி தவணை தவறுகை தவிர்ந்த ஏதுக்களின் அடிப்படையின் மீதான உடன்படிக்கைக்கு அமைந்த பண்டங்களின் உடைமையை பெற்றுக்கொள்வதற்கு அல்லது வேறுவகையில் அறவிடுவதற்கு.

(11) கடனாளி தொடர்பில் வங்கிமுறிவுக் கட்டளையொன்று நடைமுறையில் இருக்கின்ற வேளையில் எவையேனும் அத்தியாவசியமான பண்டங்களின் அல்லது சேவைகளின் வழங்குநர் :–

(அ) வங்கிமுறிவு தொடங்குவதற்கு முன்னரான காலப் பகுதி தொடர்பில் பண்டங்கள் மற்றும் சேவைகளுக்கு வருமதியாகவுள்ள விதிப்பனவு களை செலுத்துவதில் கடனாளியின் தவணை தவறுகை என்ற காரணத்தினால், கடனாளிக்கு பண்டங்களை அல்லது சேவைகளை வழங்குவ தற்கு மறுத்தலாகாது;

(ஆ) வங்கிமுறிவு தொடருவதற்கு முன்னரான காலப் பகுதி தொடர்பில் பண்டங்கள் அல்லது சேவைகளுக்காக வருமதியாகவுள்ள நிலுவை கொடுப்பனவு செய்யப்பட வேண்டியவரான கடனாளிக்கு பண்டங்கள் அல்லது சேவைகளை வழங்குவதற்கான நிபந்தனையொன்றை ஆக்குதலாகாது; அல்லது

(இ) வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளரின் முன்கூட்டிய எழுத்து மூலமான சம்மதத்தை பெற்றிருப்பதை தவிர, பண்டங்கள் அல்லது சேவைகளின் வழங்குவதற்காக உடன்படிக்கை யின் கடனிறுக்கவகையின்மையுடன் தொடர் புடைய நியதிகளில் தங்கியிருத்தலாகாது.

(12) வங்கிமுறிவு கடனாளி மற்றும் கடன்கொடுநர்கள் முழுமையாக கடனிறுக்கவகையின்மையுடன் தொடர்புபட்ட நியதியின் மீது தங்கியிருப்புக்கு சேவையாற்றுகின்றது திருப்தியடுமிடத்து 11 ஆம் உட் பிரிவின் கீழ் (இ) எனும் பந்தியின் வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளர் சம்மதம் அளிக்கலம்.

(13) வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாளர், 11 ஆம் உட்பிரிவின் (இ) எனும் பந்தியின் கீழ் சம்மதம் அளிப்பதற்கு மறுப்பதற்கான இழப்புகளுக்கு ஆளதலாகாது.

நிதிசார் அலுவல்கள் பற்றிய கடனாளியின் கூற்று

**94.** (1) வங்கிமுறிவு தொடங்கியதன் பின்னர், வங்கி முறிவு கடனாளி 83 ஆம் பிரிவின் கீழ் அத்தகைய கடனாளி ஏலவே கூற்றொன்றினை கோப்பிடப்பட்டிருந்தாலொழிய 33 ஆம் பிரிவிற்கிணங்க கடனாளியின் நிதிசார் அலுவல்கள் பற்றிய கூற்றொன்றினை உத்தியோகபூர்வ பெறுநருடன் கோப்பிடுதல் வேண்டும்.

(2) கடனாளியின் நிதிசார் அலுவலுக்கான கூற்றெதுவும் கோப்பிடப்படாதவிடத்து அல்லது உத்தியோகபூர்வ பெறு நரின் இப்பிரிவின் கீழ் அல்லது 83 ஆம் பிரிவின்கீழ் வங்கி முறிவு ஆரம்பிக்கப்பட்டதன் அத்தகைய நிதிசார் அலுவல் களின் போதுமானளவு கூற்று எதுவும் கோப்பிட்டிருக்கப் படாத உத்தியோகபூர்வ பெறுநர், செயல்முறைக்குகந்தான விரைவான அளவு பின்வருவனவற்றை குறிப்பிட்டு எழுத்து மூலமான அறிவித்தலை வங்கிமுறிவு கடனாளிக்கு அனுப்புதல் வேண்டும் :-

(அ) விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் கடனாளியின் நிதிசார் அலுவல்கள் பற்றிய கூற்றொன்றினை (வங்கிமுறிவு கடனாளி) கோப்பிடுதல் வேண்டும்;; அத்துடன்

(ஆ) கூற்று கோப்பிடப்பட்ட நேரம்.

(3) உத்தியோகபூர்வ பெறுநர் வங்கிமுறிவு கட்டளைக் கான மனுவில் வழங்கப்பட்டுள்ள வங்கிமுறிவு கடனாளியின் முகவரிக்கு எழுத்து மூலமான அறிவித்தலை அனுப்புதல் வேண்டும் அல்லது வங்கிமுறிவு கடனாளியின் கடைசியாக அறியப்பட்ட முகவரி மற்றும் கடனாளியின் கடைசியாக அறியப்பட்ட இலத்திரனியல் மின்னஞ்சல் முகவரி ஏதேனும் இருப்பின் அனுப்புதல் வேண்டும்.

(4) வங்கிமுறிவு கடனாளி பின்வருவனவற்றின் பின்னர் இருபத்தொருநாட்களினுள் உத்தியோகபூர்வ பெறுநருக்கு கடனாளியின் நிதிசார் அலுவல்கள் பற்றிய கூற்றொன்றினை கோப்பிடுதல் வேண்டும் :-

(அ) வங்கிமுறிவின் ஆரம்பிப்பின்; அல்லது

(ஆ) இரண்டாம் உட்பிரிவின் கீழ் உத்தியோகபூர்வ பெறுநரின் எழுத்துமூல அறிவித்தல் கிடைக்கப் பெற்றதன்.

(5) உத்தியோகபூர்வ பெறுநருடன் நிதிசார் அலுவல்கள் பற்றிய கூற்றொன்றை கோப்பிட்டதன் பின்னரான ஏதேனும் நேரத்தில் வங்கிமுறிவு கடனாளி மேலதிக அல்லது திருத்தப் பட்ட கூற்றுகளை அல்லது மறுமொழிகளை கோப்பிடலாம்.

**95.** (1) உத்தியோகபூர்வ பெறுநர் பின்வருவனவற்றுக்கு அது அவசியமென கருதுகின்றவிடத்து, உத்தியோகபூர்வ பெறுநர் வங்கிமுறிவு ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் வங்கி முறிவு கடனாளி தனிசுகொடுநர்கள் கூட்டம் ஒன்றுக்கு அழைக்கலாம் :-

விதிவிலக்கான விடயங்களில் கடன் கொடுநர் களுடனான கூட்டம்

(அ) விடயம் தொடர்பில் கடன்கொடுநர்களுக்கு விநியோகிப்பதற்கு சாத்தியமான அளவு கிடைக்கக்கூடியதாகவுள்ள சொத்துக்களின் விதிவிலக்கான வருமதி; அல்லது

(ஆ) விடயத்துக்கான விகிதாசார மற்றும் தீர்வினை வழங்கும் வேறேதேனும் விதிவிலக்கான சூழ்நிலைகள் இருக்கின்றதன் காரணமாக.

(2) உத்தியோகபூர்வ பெறுநர் கடன்கொடுநர்களின் கூட்டமொன்றுக்கு அழைப்புவிடுப்பின், பின்வருவோருக்கு கூட்டம் பற்றிய நேரம் மற்றும் இடம் என்பன பற்றி எழுத்து மூல அறிவித்தலை அனுப்பியதன் பின்னரான முப்பத்தைந்து நாட்களை விட குறையாத விசேட சூழ்நிலைகளை விட இருந்தால் ஒழிய, கூட்டம் தொடங்கியதன் பின்னர் செயல்முறைக்குகந்தளவு விரைவானதாக இடப்படுதல் வேண்டும் :-

(அ) கடனாளியின் இறுதியாக அறியப்பட்ட பௌதீக மற்றும் இலத்திரனியல் மின்னஞ்சல் முகவரியில் உள்ள கடனாளிக்கு;

(ஆ) நிதிசார் அலுவல்கள் கூற்றில் வழங்கப்பட்டுள்ள பௌதீக மற்றும் இலத்திரனியல் மின்னஞ்சல் முகவரி அல்லது உத்தியோகபூர்வ பெறுநர் கடன்கொடுநரின் முகவரி என நம்புகின்றதான வேறேதேனும் முகவரியில் கடனாளியின் நிதிசார் அலுவல்கள் பற்றிய கூற்று பெயரிடப்பட்ட ஒவ்வொரு கடன் கொடுநருக்கும்; அத்துடன்

(இ) உத்தியோகபூர்வ பெறுநரினால் அறியப்பட்ட வேறெவரேனும் கடன்கொடுநருக்கு.

(3) ஐந்தாம் அட்டவணை வேறெவரேனும் கடன்கொடுநர் களுடனான ஏதேனும் கூட்டத்தை கூட்டுதல், நடாத்துதல், மற்றும் பயன்வலுவுக்கு ஏற்புடையதாதல் வேண்டும்.

(4) கடன்கொடுநர்களுடனான முதலாவது கூட்டத்தின் பின்னர் கடன்கொடுநர்களின் அடுத்துறும் கூட்டங்களுக்கு அழைப்பு விடுக்கலாம்.

(5) உத்தியோகபூர்வ பெறுநர் தங்களது தனிசுகளை எண்பித்திருக்கின்ற கடன்கொடுநர்களின் எண்ணிக்கையிலும் பெறுமதியிலும் நான்கில் ஒரு பங்கினர்களினால் அவ்வாறு தேவைப்படுத்தப்படின், அடுத்துறும் கூட்டமொன்றுக்கு அழைப்பு விடுத்தல் வேண்டும்.

(6) கடன்கொடுநர்களுக்கான கூட்டம் மற்றும் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் என்பன நீதிமன்றம் வேறு வகையில் கட்டளையிட்டிருந்தால் ஒழிய, கூட்டம் தொடர்பான எழுத்து மூல அறிவித்தல் சில கடன்கொடுநர் கிடைக்கப் பெறாதிருப்பினும் கூட வலிதானதாகின்றது.

விதிவிலக்கான விடயங்களில் வங்கிமுறிவு பற்றிய பொது விசாரணை

**96.** (1) வங்கிமுறிவு கட்டளை ஆக்கப்பட்டிருக்கின்ற விடத்து, உத்தியோகபூர்வ பெறுநர் அல்லது வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாளரானவர் வங்கிமுறிவு கடனாளி; விடுவிக்கப்படுவதற்கு முன்னர் எதேனும் நேரத்திலும் உத்தியோகபூர்வ பெறுநர் அல்லது வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாளர் இவ்விடயத்தில் கடன்கொடுநர்களுக்கு விநியோகப்பதற்கு சாத்தியமாகக் கிடைக்கக்கூடியதான விதிவிலக்கானதான சொத்துக்களின் உயர் பெறுமதியான ஆதனங்களின் காரணமாக அது அவசியமானதென கருதுகின்றவிடத்து, வங்கிமுறிவு கடனாளி பகிரங்க பரிசோதனைக்காக நீதிமன்றத்துக்கு விண்ணப்பிக்கலாம். அத்துடன் :-

(அ) பகிரங்கமாக கேள்வியெழுப்ப வேண்டிய கடனாளியின் நிதிசார் அலுவல்கள் பற்றிய கூற்றில் பொருள் சார்ந்த துல்லியத் தன்மை யின்மையொன்று காணப்படல்; அல்லது

(ஆ) இச் சட்டத்தின் 32 ஆம், 94 ஆம், 112 ஆம் 113 ஆம் அல்லது 114 ஆம் பிரிவுகளின்கீழ், அல்லது வேறு ஏதேனும் இயைபான ஏற்பாட்டின்கீழ் கடனாளின் பொறுப்புகளுடன் இணங்கியொழு குவதற்கு வங்கிமுறிவு கடனாளி தவறியுள்ளமை.

(2) ஒராம் உட்பிரிவின் கீழான விண்ணப்பமொன்றின்மீது நீதிமன்றம் வங்கிமுறிவு கடனாளியின் பகிரங்க பரிசோதனை நீதிமன்றத்தினால் நியமிக்கப்பட்ட வங்கிமுறிவு நாளன்று நடாத்தப்படல் வேண்டுமென பணித்தல் வேண்டும் வங்கி முறிவு கடனாளி அந்நாளன்று நீதிமன்றத்திற்கு சமுகமளித்தல் வேண்டும். என்பதுடன் அவரது அலுவலர்கள் கையாளுகைகள் மற்றும் ஆதனம் என்பன பற்றி பரிசோதிக்கப்படுதலும்.

(3) வங்கிமுறிவு கடனாளி பற்றிய பகிரங்க பரிசோதனையில் பின்வருவனவற்றை பங்கெடுக்கலாம் எவையேனும் அலுவல்கள் மற்றும் ஆதனம் சம்பந்தப்பட்ட வினாக்களையும் கேட்கலாம் :–

(அ) உத்தியோகபூர்வ பெறுநர்;

(ஆ) நம்பிக்கை பொறுப்பாளரின் நியமனம் பயன் வலு பெற்றிருப்பின், அத்தகைய (வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளர்); அத்துடன்

(இ) வங்கிமுறிவு பற்றிய எண்பிப்பினை சமர்ப்பித்திருந்த வங்கிமுறிவின் எவரேனும் கடன் கொடுநர்.

(4) இப் பிரிவின் கீழ் பகிரங்க விசாரணையொன்றுக்கு சமுகமளிப்பதற்கு ஏதேனும் நேரத்தில் நியாயமான காரணங்கள் இன்றி வங்கிமுறிவு கடனாளியொருவர் தவறியிருப்பின் நீதிமன்றமானது, அவ் ஆளை கொண்டுவரும் நோக்கத்துக்காக மற்றும் அவ் ஆளின் உடைமையிலிருந்து ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னிலையில் கொண்டு வரும் நோக்கத்திற்காக பிடியாணை ஒன்று வழங்கப்படுவதற்கு செய்விக்கலாம் :-

(அ) வங்கிமுறிவு கடனாளியை கைது செய்வதற்காக் அத்துடன்

(ஆ) வங்கிமுறிவு கடனாளியின் உடைமையிலிருக்கும் எவையேனும் புத்தகங்கள், ஆவணங்கள், பதிவேடுகள், பணங்கள் அல்லது பண்டங்கள் என்பவற்றின் கைப்பற்றுவதற்காக.

(5) நீதிமன்றம்; நான்காம் உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட பிடியாணையொன்றின் கீழ் கைது செய்யப்பட்ட வங்கிமுறிவு

கடனாளியொருவரை கட்டுக்காப்பில் வைக்கும் படியும், கொணரும் வகையில் அத்தகைய பிடியாணையின் கீழ் கைப்பற்றப்பட்ட வேறெதனையும் நிறுத்தி வைக்கும் படியும், வங்கிமுறிவு கடனாளி கொணரும் வரையில் நிகழ வேண்டிய பிடியாணையின் கீழ் நீதிமன்றத்தில் முன்னிலை செயல் முறைக்குகந்தளவு விரைவானதாக அதிகாரமளிக்கலாம்.

(6) இப் பிரிவின் கீழ், நீதிமன்றமானது உத்தியோகபூர்வ பெறுநர் அல்லது வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாளர் ஆகியோரின் விண்ணப்பத்தின் மீது, அதன் முன் தோன்றுமாறு பின்வருவோருக்கு அமைப்புக் கட்டளைவிடுக்கலாம் :-

(அ) வங்கிமுறிவு கடனாளியின் வாழ்க்கை துணை அல்லது முன்னாள் வாழ்க்கைத் துணை;

(ஆ) எவரேனும் அறியப்பட்ட அல்லது ஒருவரின் உடைமையிலுள்ள வங்கிமுறிவு மரணச் சொத்தில் உள்ளடங்கலாக இருப்பதாக நம்பப்படுகின்ற ஏதேனும் ஆதனத்தினைக் கொண்டுள்ள எவரேனும் ஆள்;

(இ) எவரேனும் அறியப்பட்ட அல்லது வங்கிமுறிவு கடனாளிக்கு கடனாளியாக நம்பப்படுகின்ற ஆள்; அத்துடன்

(ஈ) வங்கிமுறிவு கடனாளி தொடர்பிலான தகவல்களை வழங்க இயலுமான ஆதனம் அல்லது வங்கிமுறிவு கடனாளியின் கொடுக்கல் வாங்கல், அலுவல்கள் வழக்காடல் சிறப்புரிமைக்கு அமைய நீதிமன்றத்தின் முன் தோன்றுகின்ற எவரேனும் ஆள்.

(7) நீதிமன்றம் ஆறாம் உட்பிரிவின் கீழ் அதன் முன் தோன்றும்படி ஆளொருவருக்கு அழைப்புக் கட்டளை விடுவிக்குமிடத்து, இப்பிரிவின் ஏற்பாடுகள் அவ்வாள் வங்கிமுறிவு கடனாளியொருவராகவிருப்பின் அத்தகைய ஆளுக்கு ஏற்புடையதாதல் வேண்டும்.

(8) எவரேனுமாள் வங்கி முறிவு சொத்தில் உள்ளடங் கலாகவிருந்த ஏதேனும் ஆதனத்தை உடமையாக அவர் வைத்திருக்கின்றார் என, ஏதேனும் சான்று பற்றி கவனத்திற் கொண்டதன் மீது இப்பிரிவின் கீழ் பெற்றுக்கொள்ளப் பட்டுள்ளதென நீதிமன்றத்தின் தோன்றுகின்றவிடத்து,

நீதிமன்றம் உத்தியோகபூர்வ பெறுநர் அல்லது வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளர் ஆகியோரின் விண்ணப்பத்தின் மீது நீதிமன்றம் பொருத்தமானது என கருதுகின்றதான அத்தகைய நேரத்திலும் அத்தகைய முறையிலும் மற்றும் அத்தகைய நிபந்தனைகளின் மீதும் உத்தியோகபூர்வ பெறு நருக்கு அல்லது வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளருக்கு அத்தகைய ஆதனத்தை வழங்குமாறு ஒப்படைப்பதற்கு அவ்வாளுக்கு கட்டளையிடலாம்.

(9) எவரேனுமாள் வங்கி முறிவு கடனாளிக்கு கடன் பட்டிருக்கின்றாரென ஏதேனும் சான்று பற்றி கவனத்திற் கொண்டதன் மீது இப்பிரிவின்கீழ் பெற்றுக்கொண்டுள்ள தென நீதிமன்றத்திற்கு தோன்றுகின்றவிடத்து, நீதிமன்ற மானது உத்தியோகபூர்வ பெறுநர் அல்லது வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளர் ஆகியோரின் விண்ணப்பத்தின் மீது வருமதியாகவுள்ள தொகையின் முழுமையான அல்லது பகுதியளவான, நீதிமன்றம் பொருத்தமானதென கருதுகின்ற வாறான அத்தகைய நேரத்திலும் அத்தகைய முறையிலும் மற்றும் அத்தகைய நிபந்தனைகளின் மீது, உத்தியோக பூர்வ பெறுநர் அல்லது வங்கி முறிவு பொறுப்பாளருக்கு அவ்வாள் செலுத்துமாறு கட்டளையிடலாம்.

## அத்தியாயம் 3

### உத்தியோகபூர்வ பெறுநர் மற்றும் வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளரின் நியமனம்

உத்தியோக பூர்வ பெறுநர், வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாள ராக வருதல்

**97.** (1) வங்கிமுறிவுக் கட்டளையொன்றை ஆக்குவதன் மீது உத்தியோகபூர்வ பெறுநர் (2) ஆம் உட்பிரிவின் கீழ் வேறொரு ஆளை நீதிமன்றம் நியமித்தாலொழிய (இதனகத்துப் பின்னர் வங்கி முறிவு நம்பிக்கை பொறுப்பாளர் என குறிப்பீடு செய்யப்படும்) வங்கிமுறிவுக் கடனாளியின் ஆதனத்தின் நம்பிக்கை பொறுப்பாளராக வருகின்றார்.

(2) வங்கிமுறிவுக் கட்டளை ஆக்கப்படும் போது, பாகம் IV இன் கீழ் கடனாளி தொடர்பில் தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடொன்றின் தனிப்பட்ட கடனிறுக்கவகை யின்மை நிருவாகியொருவர் இருப்பின், நீதிமன்றம் வங்கி முறிவு கட்டளையை ஆக்குவதன் மீது வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளராக ஒழுங்கேற்பாட்டின் தனிப்பட்ட கடனிறுக்க வகையின்மை நிருவாகியை நியமிக்கலாம்.

(3) ஆளொருவர் இப்பிரிவின் கீழ்; வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளராக வருமிடத்து, அவ்வாள் வங்கிமுறிவு கடனாளியின் கடன்கொடுநருக்கு அந்நிகழ்வு பற்றி எழுத்திலான அறிவித்தலை வழங்குதல் வேண்டும்; அல்லது நீதிமன்றம் அவ்வாறு அனுமதிப்பின், அதனை நீதிமன்றத்தின் பணிப்புகளுக்கிணங்க விளம்பரப்படுத்துதல்; வேண்டும்.

நம்பிக்கை பொறுப்பாளர்களின் நியமனம்

**98.** (1) வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாளராக உத்தியோகபூர்வ பெறுநர் தவிர்ந்த சில பொருத்தமான ஆளை கடன்கொடுநரின் பெறுமதியில் பெரும்பான்மையோரின் தீர்மானமொன்றின் மூலம் நியமிப்பதற்கு கடன்கொடுத்தோருக்கு இயலுமானதாதல் வேண்டும்.

(2) ஆளொருவர் அத்தகைய ஆள் பின்வருமாறு உள்ள விடத்து, வங்கிமுறிவு நம்பிக்கைப்பொறுப்பாளராக செயலாற்றுவதற்கு தகுதியானவராகக் கருதப்படுதல் வேண்டும் :-

(அ) துர்நடத்தை அல்லது அசட்டைக்காக என்பவற்றுக்காக வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாளரின் பதவியிலிருந்து முன்னரே அகற்றப் பட்டுள்ளவிடத்து;

(ஆ) கடனாளியின் தனிசுகொடுநராக வங்கிமுறிவின் தொடக்க தேதிக்கு நேர் முற்போந்த இரண்டு ஆண்டு காலப் பகுதியினுள் இராதிருக்குமிடத்து அல்லது இராதிருந்துள்ளவிடத்து;

(இ) வங்கிமுறிவு தொடர்பில்; பிரதான பதவி வகிப்பவராக நியமிக்கப்படுவதற்கும் செயலாற்றுவதற்கும் பிரிவு 12 இன் கீழ் தகைமை பெற்றுள்ள விடத்து;

(ஈ) வங்கிமுறிவு தொடர்பில்; பிரதான பதவி வகிப்பவரொருவராக நியமிக்கப்படுவதற்கும் செயலாற்றுவதற்கும் 12 ஆம் பிரிவின் கீழ ஆள் தகைமை பெற்றவர் என எழுத்தில் மூலம் சான்றுப்படுத்தப்பட்டுள்ளவிடத்து; அத்துடன்

(உ) வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாளராக நியமனம் பெறுவதற்கு எழுத்தில் சம்மத மளித்துள்ளவிடத்து மற்றும் நியமனத்தின்

போதான நேரத்தில் சம்மதத்தை மீளப்பெறா துள்ளவிடத்து.

(3) வங்கிமுறிவு கடனாளியின் கடன்கொடுநரொருவரினால் நீதிமன்றத்திற்கு செய்யப்படும் விண்ணப்பத்தின் மீது நீதிமன்றம் பின்வருவனவற்றை கருத்திலெடுத்தாலொழிய, நீதிமன்றம் வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளரின் நியமனத்தினை உறுதி செய்தல் வேண்டும் :-

(அ) நியமனமானது கடன்கொடுநரின் வாக்களிப்பின் பெறுமதியில் பெரும்பான்மையோரால் செய்யப் படாதிருப்பின்;

(ஆ) நியமிக்கப்பட்ட ஆள் இரண்டாம் உட்பிரிவுக் கிணங்க நம்பிக்கை பொறுப்பாளராக செயலாற் றுவதற்கு பொருத்தமற்றவராவிருப்பின்; அல்லது

(இ) ஆள் மற்றும் வங்கிமுறிவு கடனாளி என்போருக் கிடையிலான உறவு முறை, வங்கிமுறிவு கடனாளியின் ஆதனம், அல்லது தனிசுகொடுநர் வங்கிமுறிவு செயல்முறையில் பாராபட்ச முறையில் செயலாற்றுவதற்கும் இலக்குகளை முன்னெடுப்பதலிலும் ஆளுக்கு கடினமாக்குதல்.

(4) மூன்றாம் உட்பிரிவின் கீழ் வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளரொருவராக ஆளொருவரின் நியமனத்துக்கான விண்ணப்பமொன்றை அங்கீகரிப்பதன் மேல் நீதிமன்றம் இவ்வாளின் நியமனத்தை உறுதிப்படுத்துகின்ற சான்றிதழொன்றை வழங்குதல் வேண்டும்.

(5) வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளரொருவரின் நியமனம் சான்றிதழின் தேதியிலிருந்து பயனுக்கு வருதல் வேண்டும்.

(6) இரண்டாம் உட்பிரிவின் (அ), (ஆ) அல்லது (இ) எனும் பந்திகளின் எவையேனும் தேவைப்பாடுகளில் எவற்றையும் ஈடுசெய்திருக்கவில்லை என்பதனை அறிந்துக்கொண்டு வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளராக ஆளொருவரின் சம்மதத்துடன் நியமிக்கப்படுகின்றவரான அல்லது செயலாற்றுகின்றவரான ஆளொருவர் தவறொன்றைப் புரிகின்றார்.

நம்பிக்கை பொறுப் பாளரை அகற்றுதல் மற்றும் பதவி வறிதாகுதல்

**99.** (1) இப் பிரிவின் கீழ் வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளராக நியமிக்கப்படுகின்றவரான உத்தியோக பூர்வ பெறுநர் தவிர்ந்த ஆளொருவர் பதவியிலிருந்து அகற்றப்படலாம்.

(2) வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளர் ஒருவர் பின்வருமாறு மட்டும் அகற்றப்படலாம் :-

(அ) நீதிமன்றத்தின் கட்டளையொன்று; அல்லது

(ஆ) நம்பிக்கை பொறுப்பாளர் ஒருவரை அகற்றும் நோக்கத்துக்காக விசேடமாக கூட்டப்பட்ட கூட்டமொன்றில் கடன்கொடுநர்களின் பெறுமதி யின் பெரும்பான்மையின் தீர்மானமொன்று.

(3) வங்கிமுறிவு கடனாளியின் கடன்கொடுநர்கள் வங்கி முறிவு நம்பிக்கை பொறுப்பாளர் ஒருவரை அகற்றுவதற்கு முடிபுசெய்திருக்குமிடத்து அவர்கள் 98 ஆம் பிரிவுக்கிணங்க அவரினிடத்தில செயலாற்றுவதற்கு நம்பிக்கை பொறுப் பாளராக வேறொரு ஆளை நியமிக்கலாம்.

(4) மூன்றாம் உட்பிரிவின் கீழ் வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளர் ஒருவரை அகற்றுவதற்கான முடிபுசெய்யப்படு மிடத்து, அவரிடனித்தில் நம்பிக்கை பொறுப்பாளராக வேறொரு ஆளை வங்கிமுறிவு கடனாளியின் கடன்கொடு நர்கள் நியமிக்கும் வரை, முடிபானது பயனுக்கு வருதலாகாது.

(5) வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாளர் (உத்தியோக பூர்வ பெறுநர் அல்லாதவர்) வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப் பாளர் பின்வருமாறு இருப்பின் பதவியை வறிதாக்குதல் வேண்டும் :–

(அ) தொண்ணூற்று எட்டாம் பிரிவுக்கிணங்க பொருத்தமான ஆளொருவராக இல்லாதொழியின்; அல்லது

(ஆ) விதித்துரைக்கப்படக்கூடியவாறான எவையேனும் தகைமைகளை செய்வதற்கு திருப்தி செய்வதற்கு இல்லாதொழியின்.

(6) வங்கிமுறிவு கடனாளி கடன்கொடுநர் அல்லது உத்தியோகபூர்வ பெறுநரினால் விண்ணப்பமொன்றின் மேல்,

நீதிமன்றம் கடமையில் துர்நடத்தை அசட்டைக்கான ஏதுக்களின் மீது நம்பிக்கை பொறுப்பாளர் ஒருவரை அகற்ற முடியும்.

(7) வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாளர் நீதிமன்றத் திற்கும் உத்தியோக பெறுநருக்கும் அத்தகைய பதவி விலகுகையை பற்றிய எழுத்திலான அறிவித்தலை வழங்கு வதன் மூலம் பதவியிலிருந்து விலகலாம்.

(8) வங்கிமுறிவு கட்டளை வறிதானதாக்கப்படின் வங்கி முறிவு நம்பிக்கைப் பொறுப்பாளர் பதவியை வறிதாக்குதல் வேண்டும்.

(9) வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாளர் பதவியில் ஏதேனும் வெற்றிடம் ஏற்படுகின்ற போது, உத்தியோகபூர்வ பெறுநர வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாளராக செயலாற்றுதல் வேண்டும்.

நம்பிக்கை பொறுப் பாளரை விடுவித்தல்

**100.** (1) உத்தியோகபூர்வ பெறுநர் வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளராகவிருப்பதற்கு இல்லாதவிடத்தும் அதற்கு பதிலாக ஆளொருவர் நியமிக்கப்படுகின்றவிடத்தும் உத்தி யோகபூர்வ பெறுநர் 98 ஆம் பிரிவின் கீழ் வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளரின் நியமனத்தின் சான்றிதழ் ஒன்றை நீதிமன்றம் வழங்குகின்றதான காலத்திலிருந்து பயனுக்கு வரும் வகையில் அத்தகைய விடுவிப்பைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) உத்தியோகபூர்வ பெறுநர் மரணச்சொத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளராக இருக்கின்ற போது, வங்கி முறிவு ஆதனத்தின் நிருவாகமானது பூரணமாக நடைமுறை சார் நோக்கங்களுக்கானது என நீதிமன்றத்துக்கு எழுத்திலான அறிவித்தலை வழங்குகின்றது, உத்தியோகபூர்வ பெறுநர் நீதிமன்றம் தீர்மானிக்கக்கூடியவாறாக அத்தகைய நேரத்திலி ருந்து பயனுக்கு வரும் வகையில் விடுவிக்கப்படுதலும் வேண்டும்.

(3) வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளராக இல்லா தொழிகின்றவரான உத்தியோகபூர்வ பெறுநர் தவிர்ந்த, ஆள் ஒருவர் பின்வரும் நேரத்திலிருந்து பயனுக்கு வரும் வகையில் அத்தகைய விடுகையை கொண்டிருத்தலும் வேண்டும் :–

(அ) அவ் ஆள் மரணித்திருக்கின்றவிடத்து, நீதிமன்றத்திற்கும் உத்தியோகபூர்வ பெறுநருக்கும் எழுத்து மூல அறிவித்தல் வழங்கப்பட்ட நேரத்தில் அவ்வாள் பதவியை வகிக்காதொழிதல் வேண்டும்.

(ஆ) பின்வரும் விடயங்களில் நீதிமன்றத்திற்கும் எழுத்து மூலமான அறிவித்தல் வழங்கப்பட்ட நேரத்தின் பின்னர் இருபத்தெட்டு நாட்களில் உத்தியோகபூர்வ பெறுநருக்கும், அவ்வாள் பதவியினை வகிக்காதொழிதல் வேண்டும் :-

(i) அவ்வாள் 99 ஆம் பிரிவின் கீழ் வங்கிமுறிவு கடன்கொடுநர்களது முடிபொன்றினால் பதவியிலிருந்து அகற்றப்பட்டிருத்தல் மற்றும் கடன்கொடுநர்கள் அவரது விடுவித்தலுக்கு எதிராக முடிபெடுத்திருக்கவில்லை; அல்லது

(ii) அவ்வாள் 99 ஆம் பிரிவின் 7 ஆம் உட் என்னும் பிரிவின் கீழ் பதவி விலகியிருத்தல்.

(இ) பின்வரும் சந்தர்ப்பங்களில், அத்தகைய நேரத்தில் நீதிமன்றமானது, அவ் ஆளின் விண்ணப்பத்தின் மேல் பின்வருமாறு தீர்மானிக்கலாம் :-

(i) அவ்வாள் வங்கிமுறிவு கடன்கொடுநர்களின் முடிபொன்றினால் பதவியிலிருந்து அகற்றப் பட்டிருத்தல் மற்றும் கடன்கொடுநர்கள் அத்தகைய விடுவித்தலுக்கு எதிராக முடிபு செய்திருத்தல்;

(ii) அவ்வாள் 99 ஆம் பிரிவின் 5 ஆம் உட்பிரி வின்கீழ்; பதவி வறிதாகியிருத்தல்; அல்லது

(iii) அவ்வாள் நீதிமன்றத்தினால் பதவியிலிருந்து அகற்றப்பட்டிருத்தல்,

(4) ஆள் வங்கிமுறிவு கடனாளிகளின் கடன்கொடுநர் களின் முடிபினால் பதவியிலிருந்து அகற்றப்படுகின்றார் ஆள் விடுவிக்கப்படுதல் வேண்டுமா என வங்கி முறிவு கடனாளி யின் கடன்கொடுநர்களின் பெரும்பான்மை ஏதேனும் முடிபு கடன்கொடுநர்களின் எண்ணிக்கையில் பெரும்பர்மையான முடிபினால் செய்யப்படுதல் வேண்டும்.

(5) வங்கிமுறிவு கட்டளையொன்று வெற்றானதாக்கப்படுமிடத்து, நீதிமன்றம் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய நேரத்திலிருந்து பயனுறும் வகையில் வெறிதாக்கப்பட்ட நேரத்தில் வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாளர் விடுவிக்கப்படுதல் வேண்டும்.

(6) இப் பிரிவின் கீழ் உத்தியோகபூர்வ பெறுநர் அல்லது வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாளர் விடுவிக்கப்படுமிடத்து, உத்தியோகபூர்வ பெறுநர் அல்லது வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாளர் ஆகியோர் இப் பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளில் குறித்துரைக்கப்பட்ட நேரத்திலிருந்து பயனுறும் வகையில் எல்லா பொறுப்புகளிலிருந்தும் விடுவிக்கப்படுதல் வேண்டும்.

## அத்தியாயம் 4

### வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளரின் பணிகளும் கடமைகளும்

பொதுவான பணிகள் மற்றும் வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாளரின் உத்தியோகபூர்வ பெயர்

**101.** (1) “வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளர்” என்பது வங்கிமுறிவு மரணச்சொத்தின் வங்கிமுறிவிலுள்ள நம்பிக்கை பொறுப்பாளர் என்பதுடன் இப்பிரிவின் மற்றும் இச்சட்டத்தின் வேறு எவையேனும் ஏற்பாடுகளில் குறித்துரைக்கப்பட்ட விவரணம், பணிகள், கடமைகள் மற்றும் தத்துவங்களைக் கொண்டுள்ளார்.

(2) இவ்வத்தியாயமானது ஏதேனும் பின்வருமாறான வங்கிமுறிவுடன் தொடர்புடையவற்றுக்கு ஏற்புடையதாகும் ஒன்றில் :–

(அ) வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளராக ஆளொருவரின் நியமனம் பயனுறுதல், அல்லது

(ஆ) உத்தியோகபூர்வ பெறுநர் வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளராக வருதல்.

(3) வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளரின் பணிகளானது இப் பாகத்தின் பின்வரும் ஏற்பாடுகளுக்கிணங்க, வங்கிமுறிவு மரணச்சொத்தில் உட்பிரவேசித்தல் தேறிப்பெறுதல் மற்றும் விநியோகித்தல் என்பவனவாகும் அப்பணியை நிறைவேற்றுவதில் மற்றும் வங்கிமுறிவு மரணச்சொத்தின்

முகாமைத்துவத்தில் பயன்படுத்துவதற்கு அவ்ஏற்பாடுகளிற்கு அமைய வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளர் உரித்துடையவராவார்.

(4) வங்கிமுறிவுடன் தொடர்புடைய பணிகளையும் கடமைகளையும் நம்பிக்கைப் பொறுப்பாளர் நிறைவேற்றுவதற்கு இயலச்செய்யும் நோக்கத்திற்காக உத்தியோகபூர்வ பெறுநரானவர் நியாயமாக தேவைப்படுத்தக்கூடியதான நம்பிக்கைப் பொறுப்பாளர் உத்தியோகபூர்வ பெறுநராக அல்லாதிருப்பின் பின்வருவன வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளரின் கடமையாதல் வேண்டும்:-

(அ) அத்தகைய தகவல்களை உத்தியோகபூர்வ பெறுநருக்கு கொடுத்துதவுதல்,

(ஆ) அத்தகைய புத்தகங்கள், ஆவணங்கள் மற்றும் ஏனைய பதிவுவேடுகளை உத்தியோகபூர்வ பெறுநருக்கு சமர்ப்பித்தல் மற்றும் உத்தியோக பூர்வ பெறுநர் சோதிப்பதற்கு அனுமதியளித்தல்; அத்துடன்

(இ) அத்தகைய வேறு உதவிகளை உத்தியோகபூர்வ பெறுநருக்கு வழங்குதல்.

(5) வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளரின் உத்தியோக பூர்வ பெயரானது (வங்கிமுறிவு கடனாளியின் பெயரை உட்புகுத்துதல்) ஆதனத்தின் வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளாராக இருத்தல் வேண்டுமென்பதுடன், இப் பெயரில் வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளர் இலங்கையின் ஏதேனும் பாகத்திலும் அல்லது வேறெல்லா இடங்களிலும் :–

(அ) ஒவ்வொரு விபரணத்தின் ஆதனத்தை வைத்திருக்கலாம்;

(ஆ) ஒப்பந்தங்களை செய்யலாம்;

(இ) வழக்கு தொடுக்கவும் வழக்கு தொடுக்கப்படவும் முடியும்;

(ஈ) ஒருவரில் மற்றும் பதவியிலுள்ள எவரேனும் அடுத்துறுநரில் பிணிக்கின்ற எவையேனும் ஈடுபாடுகளைச் செய்து கொள்ளலாம்; அத்துடன்

(உ) தனது பதவியை நிறைவேற்றுவதற்கு அவசியமான அல்லது உசிதமான அத்தகைய வேறு எல்லா செயல்களையும் செய்யலாம்.

வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப் பாளரின் தத்துவங்கள்

**102.** (1) வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளர் பின்வரும் எவையேனும் தத்துவங்களைப் பிரயோகிக்கலாம் :-

(அ) நன்மையுறும் வகையில் முடிவுறுத்துவதற்கு அவசியமானவாறாகும் வரையில் ஏதேனும் சட்டவாக்கத்தினால் அல்லது அதன்கீழ் விதிக்கப் பட்ட ஏதேனும் தேவைப்பாடுகளுக்கு முரணாகாத வகையில் வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப் பாளரினால் அவ்வாறு செய்வதற்கு இயலுமான தாகும் வரையில் மற்றும் நன்மைக்காக ஒடுக்குவ தற்கு அவசியமாகவிருக்க கூடியவாறான அளவு வரை வங்கிமுறிவு கடனாளியின் ஏதேனும் தொழிலை கொண்டு நடத்துவதற்கான தத்துவங்கள்;

(ஆ) வங்கிமுறிவு மரணச்சொத்தில் உள்ளடக்கப்பட்ட ஆதனம் தொடர்பிலான ஏதேனும் குற்றவழக்கு அல்லது சட்ட வழக்கு நடவடிக்கை முறைகளை கொண்டு வருவதற்கு தொடுப்பதற்கு அல்லது வாதிடுவதற்கான தத்துவம்;

(இ) கடன்கொடுநர்களின் குழு அல்லது நீதிமன்றம் பொருத்தமானதென கருதுகின்றதான பிணைப் பொறுப்பிற்கு அல்லது வேறு அத்தகைய வகையிலான அத்தகைய விதிப்புக்களுக்கமைய) எதிர்காலத்தில் செலுத்தப்படற்பாலதான பணத் தொகையொன்று வங்கிமுறிவிலுள்ள மரண சொத்தில் உள்ளடக்கப்பட்ட ஏதேனும் ஆதனத்தின் விற்பனைக்கான பிரதி பயனாக ஏற்றுக்கொள்வதற்கான அத்தகைய தத்துவம்;

(ஈ) வங்கிமுறிவு கடனாளியின் தனிசுகளின் கொடுப் பனவுக்கான பணத்தை திரட்டும் நோக்கத்துக் காக வங்கிமுறிவு மரணச்சொத்தில் உள்ளடக்கப் பட்ட ஆதனத்தின் ஏதேனும் பாகத்தை ஈடுவைப் பதற்கான அல்லது அடைமானம் வைப்பதற்கான தத்துவம்;

(உ) உரிமை, தெரிவு அல்லது தத்துவம் என்பவற்றின் விடயமாகவுள்ள ஏதேனும் ஆதனம் கடன் கொடுநர்களின் நலனுக்காக பெற்றுக் கொள்ளும் நோக்குடன், கொடுப்பனவுகளை செய்வதற்கும் அல்லது பொறுப்புக்களை அடைவதற்கும் வங்கிமுறிவு மரணச்சொத்தின் பாகமாக ஏதேனும் உரிமை, தெரிவு அல்லது ஏனைய தத்துவம் உருவாகின்றவிடத்தான தத்துவம்;

(ஊ) வங்கிமுறிவில் எண்பிக்கப்படற்பாலதான தனிசுகள் தொடர்பில் கடன்கொடுநர்களாவிருப்பதற்கு உரிமைகோருகின்ற கடன்கொடுநர்கள் அல்லது ஆட்களுடன் உசிதமானதென எண்ணக்கூடியவாறான அத்தகைய இணக்கம் அல்லது வேறு ஒழுங்கேற்பாட்டினை செய்வதற்கான தத்துவம்;

(எ) எவரேனும் ஆளினால் வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாளர்களின் மீது செய்யப்பட்ட அல்லது செய்யப்படுவதற்கு இயலுமானதாகவிருக்கின்ற வங்கிமுறிவு மரணச் சொத்திலிருந்து எழுகின்ற அல்லது இடைநேர்விளைவான ஏதேனும் உரிமைக்கோரிக்கை தொடர்பில் உசிதமானதென எண்ணக்கூடியவாறான அத்தகைய இணக்கம் அல்லது வேறு ஒழுங்கேற்பாட்டினை செய்வதற்கான தத்துவம்;

(ஏ) ஏதேனும் தொழில் பற்றிய நற்பெயர் மற்றும் தனிசுப் புத்தகள் என்பவற்றை உள்ளடக்குகின்ற வங்கிமுறிவு மரணச்சொத்தில் அப்போதைக்குள் நேரத்தில் ஆதனத்தின் ஏதேனும் பாகத்தினை விற்பதற்கான தத்துவம்;

(ஐ) வங்கிமுறிவு கடனாளிக்கு ஏதேனும் பொறுப்பை உறப்படக்கூடிய வங்கிமுறிவு கடனாளிக்கும் எவரேனும் ஆளுக்குமிடையில் உளதான அல்லது உளதாயிருப்பதற்கு கருதப்படும் எவையேனும் தனிசுகள், உரிமைகோரிக்கைகள் அல்லது பொறுப்புகள் பற்றி இணங்கிக்கொள்ளப்படக் கூடியதான அத்தகைய நியதிகள் மீது நடுத் தீர்ப்புக்கு அல்லது இணக்கத்துக்கு ஆற்றுப் படுத்துவதற்கான தத்துவம்;

(ஒ) எவரேனும் ஆளின் மீது வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளர்களினால் செய்யப்பட்ட அல்லது செய்யப்படுவதற்கு இயலுமானதாகவிருக்கின்ற வங்கிமுறிவு மரணச்சொத்திலிருந்து எழுகின்ற அல்லது இடைநேர்விளைவான ஏதேனும் உரிமைக்கோரிக்கை தொடர்பில் உசிதமானதென எண்ணக்கூடியவாறான அத்தகைய இணக்கம் அல்லது வேறு ஒழுங்கேற்பாட்டினை ஆக்குவ தற்கான தத்துவம்;

(ஓ) அதன் விண்ணப்பம் தொடர்பில் எல்லாப் பொறுப்புடமைகளிலிருந்தான பணத்தைச் செலுத்துகின்ற ஆளை பயனுறும் வகையில் விடுவிப்பதற்கான பற்றுச்சீட்டுக்களை வங்கி முறிவு நம்பிக்கைப் பொறுப்பாளினால் பெறப் பட்ட எவையேனும் பணத்துக்காகப் பற்றுச் சீட்டுக்களை வழங்குவதற்கான தத்துவம்;

(ஔ) அவரது மரணச் சொத்தில் உள்ளடக்கப் பட்டுள்ளன. வங்கிமுறிவு கடனாளிக்கு வருமதி யாகவுள்ள தனிசுகள் தொடர்பில் பங்கிலாப மொன்றை எண்பித்தல், தரவரிசைப்படுத்துதல், உரிமைக்கோரல் மற்றும் பெற்றுக் கொள்ளுதல் என்பவற்றுக்கான தத்துவம்; அத்துடன்

(க) இச்சட்டத்தின் இப்பாகத்தின் கீழ் வங்கிமுறிவு நம்பிக்கைப்பொறுப்பாளர் உரித்தாக்கப்பட்டதான எவையேனும் தத்துவங்களைப் பிரயோகிப்பதற் கான இயலுமை, வங்கிமுறிவு மரணச்சொத்தில் உள்ளடக்கப்பட்ட ஏதேனும் ஆதனம் தொடர்பில் பிரயோகிப்பதற்கான தத்துவம்.

(2) இப்பாகத்தின் கீழ் அவரது எவையேனும் தத்துவங் களை பிரயோகிக்கும், நோக்கங்களுக்காக அல்லது அதனுடன் சம்பந்தப்பட்ட வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளர் அவரது உத்தியோகபூர்வ பெயரில் பின்வருமாறு :-

(அ) ஒவ்வொரு விவரணம் பற்றிய ஆதனத்தை வைத்திருக்கலாம்;

(ஆ) ஒப்பந்தங்களை செய்யலாம்;

(இ) வழக்கு தொடுக்கலாம் மற்றும் வழக்கு தொடுக்கவும்படலாம்;

(ஈ) ஒருவர் மீது பதவியிலுள்ள எவரேனும் அடுத்துறுபவர்கள் மீது வங்கிமுறிவு மரணச்சொத்து தொடர்பில் பிணிக்கின்ற ஈடுபாடுகளைச் செய்துகொள்ளலாம்;

(உ) முகவர் ஒருவரை தொழிலிற்கு அமர்த்தலாம்; அத்துடன்

(ஊ) ஏதேனும் அற்றோணித் தத்துவம், உறுதி அல்லது ஏனைய சாதனத்தை நிறைவேற்றலாம்.

மற்றும் அத்தகைய நம்பிக்கைப்பொறுப்பாளர் அத்தகைய தத்துவங்களை பிரயோகிக்கும் நோக்கங்களுக்காக அல்லது அவற்றோடு சம்பந்தப்பட்ட அவசியமான அல்லது உசிதமானதான வேறேதேனும் செயலைச் செய்யலாம்.

உத்தியோக பூர்வ பெறுநர் வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாள ராகவிராத விடத்தான சந்தர்ப்பங் களில் கடன் கொடுநர் களின் குழு

**103.** (1) இரண்டாம் மற்றும் (3) ஆம் உட்பிரிவுகளுக்கமைய வங்கிமுறிவு கடனாளிகளின் கடன்கொடுநர்கள் இச்சட்டத்தினால் அல்லது அதன்கீழ் அளிக்கப்பட்ட பணிகளைப் பிரயோகிப்பதற்கு (“கடன்கொடுநர்களின் குழு” என அறியப்படும்) குழுவொன்றை விதித்துரைக்கப்படக்கூடியவாறான ஏதேனும் நடவடிக்கைமுறைக்கிணங்க குழுவொன்றை தாபிக்கலாம்.

(2) உத்தியோகபூர்வ பெறுநர் வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாளராக இருக்கின்றபோதான எந்நேரத்திலும்;, வங்கிமுறிவு கடனாளியின் கடன்கொடுநர்கள் அத்தகைய குழுவொன்றை தாபித்தலோ அல்லது அத்தகைய குழு ஒன்றின் மீது எவையேனும் பணிகளையளித்தலோ ஆகாது.

(3) கடன்கொடுநர்கள் குழு தொடர்பில், பின்வரும் விடயங்கள் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேவைப்பாடுகள், மட்டுப்பாடுகள் மற்றும் வரையறைகள் என்பவற்றுக்கமைந்ததாதல் வேண்டும் :-

(அ) குழுவின் உறுப்பாண்மை மற்றும் உறுப்பாண்மையை முடிவுறுத்தல்;

(ஆ) குழுவின் தாபனம் மற்றும் குழுவுடன் தொடர்புடைய விடயங்கள் பற்றி அறிவித்தல்;

(இ) குழுவின் கூட்டங்களை கூட்டுவதற்கான நடவடிக்கை முறை;

(ஈ) குழுவின் உறுப்பினர்களினால் செய்யப்பட்ட அல்லது ஆக்கப்பட்ட செயல்களை, செய்யாமைகளை அல்லது முடிவுகளைப் பாதுகாத்தல்;

(உ) குழுவின் உறுப்பினர்களின் செலவீனங்களை மீளளிப்பு செய்தல்; அத்துடன்

(ஊ) குழுவின் உறுப்பினர்கள் மற்றும் அவர்களுடன் தொடர்புபட்ட திறத்தவர்கள் என்போர்களது கொடுக்கல் வாங்கல்கள்.

வங்கிமுறிவு செயல்கள் பற்றிய நீதிமன்ற மீளாய்வு

**104.** (1) வங்கிமுறிவு கடனாளி மற்றும் கடனாளியின் கடன்கொடுநர்கள் உள்ளடங்கலாக எவரேனும் ஆள் வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாளரின் ஏதேனும் செயல், செய்யாமை அல்லது முடிபு என்பவற்றினால் அதிர்ப்தியுறின், அத்தகைய ஆள் நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் விண்ணப்பம் ஒன்றின் மீது நீதிமன்றமானது :–

(அ) வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாளரின் ஏதேனும் செயல் அல்லது முடிபை உறுதிப்படுத்தலாம், எதிர்மாறாக்கலாம் அல்லது திரிபுபடுத்தலாம்;

(ஆ) வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாளர்களுக்கு பணிப்புகளை வழங்கலாம்; அல்லது

(இ) அவசியமான அத்தகைய வேறு கட்டளையை ஆக்கலாம்.

(3) வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாளர் வங்கிமுறிவின்கீழ் எழுகின்ற ஏதேனும் விடயம் தொடர்பில் பணிப்புகளுக்காக நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்கலாம்.

நம்பிக்கைப் பொறுப் பாளரின் ஊதியம், செலவினங்கள் மற்றும் ஆகுசெலவுகள்

**105.** (1) வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாளராக கடமைகளை நிறைவேற்றுவதற்காகவும் மற்றும் தத்துவங் களை பிரயோகிப்பதற்காகவும் வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாளர் தெகுதியில் அல்லது வீதத்தில் ஊதியத்தை பின்வருமாறு அறவிடலாம் :-

(அ) நீதிமன்றத்தினால் நிர்ணயிக்கப்பட்டவை; அல்லது

(ஆ) விதித்துரைக்கப்படக்கூடியவாறான விதங்களுக் கிணங்க விதிப்பணவு செய்யப்பட்டவை.

(2) நம்பிக்கை பொறுப்பாளர்கள் அல்லாத சட்டத்தரணி, முகாமையாளர்கள், கணக்காளர்கள், ஏலவிற்பனையாளர்கள், தரகர்கள், வேறு அட்கள் என்போரின் எல்லா சிட்டைகளும், விதிப்பனவுகளும் விதித்துரைக்கப்பட்ட அலுவலரினால் வரி விதிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அது தொடர்பிலான கொடுப்பனவுகள் எவையும் செய்யப்பட்டுள்ள அத்தகைய வரிவிதிப்பனவு பற்றி எண்பிப்பு இன்றி நம்பிக்கை பொறுப்பாளரின் கணக்குகளில் அனுமதிக்கப்படுதலாகாது. வரிவிதிப்பு அலுவலர் அத்தகைய விதிப்பனவுகளில் இருந்து எழுகின்ற குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பில் அத்தகைய சட்டத்தரணி மற்றும் ஏனைய ஆட்கள் முறையாக வலுவுளிக்கப்பட்டுள்ளனர் என அத்தகைய சிட்டைகள் மற்றும் விதிப்பனவுகளை நிறைவேற்றுவதற்கு முன்னர் தம்மை திருப்திசெய்து கொள்ளுதல் வேண்டும். வலுவுளிப் பானது அவசரமான சந்தர்ப்பம் தவிர, தொழிலுக்கு முன்னர் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய சந்தர்ப்பங்களில் வலுவளிப்பை பெற்றுக்கொள்வதில் முறை யற்ற தாமதம் எதுவும் இடம்பெறவில்லை என காட்டுதல் வேண்டும்.

தனிசு புனர்வாழ்வு கட்டளைக் கான விண்ணப்பம்

**106.** (1) எவரேனும் கடன்கொடுநர் அவ்வாறு செய்வதற்கு தேவைப்படுத்தப்படுகின்ற பொழுதெல்லாம், வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாளர் :-

(அ) ஒவ்வொரு கடன்கொடுநருக்கும் வருமதியாகவுள்ள தனிசுத் தொகையை காட்டுகின்ற வங்கிமுறிவி லுள்ள கடன்கொடுநர்களின் பட்டியலொன்றுடன்

கடன்கொடுநருக்கு வழங்குதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய தொகையை அத்தகைய பட்டியலுக்கு அறவிடுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(2) கடன் கொடுநர்களின் பெரும்பான்மை பெறுமதியுடையவர்களின் தீர்மானத்தினால் கோரப்படும்போதெல்லாம், வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாளரானவர் :-

(அ) அத்தகைய கோரிக்கை தேதிவரை கணக்குகள் பற்றிய கூற்றொன்றுடன் எவரேனும் கோருகின்ற கடன்கொடுநருக்கு வழங்குதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) நீதிமன்றம் அவ்வாறு பணிப்பின் வங்கிமுறிவு மரணச்சொத்திலிருந்து எவரேனும் கோருகின்ற கடன்கொடுநருக்கு மீளச்செலுத்தப்படக்கூடியதான விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய தொகைப் பற்றிய அத்தகைய கணக்குகளின் ஏற்பாடுகளை அறவிடுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(3) வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாளர் விதித்; துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் முறையான புத்தகங்களை பேணுதல் வேண்டும்.

(4) நீதிமன்றத்தின் கட்டுப்பாட்டுக்கமைய, வங்கிமுறிவு கடனாளியின் எவரேனும் கடன்கொடுநர் (3) ஆம் உட்பிரிவின் கீழ் பேணப்பட்ட எவையேனும் புத்தகங்களை சோதனையிடலாம்.

(5) வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாளர் உத்தியோக பூர்வ பெறுநர் தவிர்ந்த ஆளாகவுள்ளவிடத்து, வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாளர் விதித்துரைக்கப்படக்கூடியவாறான காலத்துக்குக்காலம் மற்றும் வங்கிமுறிவு தொடர்ச்சியின் போதான ஒவ்வொரு ஆண்டிலும்

ஒருதடவைக்கு குறையாமலும் கூற்றின் தேதி குறையாமலும் அவற்றின் தேதிவரை வங்கிமுறிவிலுள்ள நடவடிக்கைகளைக் காட்டுகின்ற கூற்றொன்றை உத்தியோகபூர்வ பெறுநருக்கு அனுப்புதல் வேண்டும்.

(6) ஐந்தாம் உட்பிரிவின் கீழ் உத்தியோகபூர்வ பெறுநரின் கூற்றில் உள்ளடக்கப்பட வேண்டிய விபரங்கள் மற்றும் அத்தகைய கூற்றின் படிவம் என்பன விதித்துரைக்கப் படலாம்.

(7) உத்தியோகபூர்வ பெறுநரானவர் :-

(அ) ஐந்தாம் உட்பிரிவின் கீழ் அனுப்பப்பட்ட கூற்றுக்களைப் பரிசோதித்தல் வேண்டும்;

(ஆ) சொல்லப்பட்ட கூற்றில் அல்லது அவரது கணக்குகளில் அல்லது வேறு வகையில் காணப் படக்கூடியதான முறைப்பிழைகள், அசட்டை அல்லது செய்யாமைப் பற்றி பொறுப்புக் கூறுவ தற்கு வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாளரை அழைத்தல் வேண்டும்; அத்துடன்

(இ) முறைப்பிழை, அசட்டையீனம் அல்லது செய்யாமை என்பவற்றினால் வங்கிமுறிவு மரணச்சொத்து ஏற்படக்கூடிய ஏதேனும் இழப்புகள் பற்றிய விளக்கத்தை வழங்குவதற்கு வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாளரை தேவைப்படுத்தலாம்.

வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளர் கணக்குகளை கணக்காய்வு செய்தல்

**107.** (1) ஒவ்வொரு வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப் பாளரும், நீதிமன்றத்தினால் விதித்துரைக்கப்படக்கூடிய வாறான அல்லது கட்டளையிடப்படக்கூடியவாறான அத்தகைய நேரங்களில் ஆனால், அவரது பதவியின் காலத்தின் போதான ஒவ்வொரு ஆண்டிலும் இரு தடவை களுக்குக் குறையாமல் அத்தகைய நம்பிக்கைப் பொறுப் பாளராக அவரது பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் பற்றிய கணக்கொன்றை உத்தியோகபூர்வ பெறுநருக்கு அனுப்புதல் வேண்டும்.

(2) கணக்கானது :–

(அ) விதிக்கப்பட்ட படிவத்தில் அல்லது நீதிமன்ற கட்டளையில் இருத்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் நியதிச்சட்ட வெளிப்படுத்துகை மூலம் சரிபார்க்கப்படுதல் வேண்டும்.

(3) உத்தியோகபூர்வ பெறுநர் விடயத்தின் விகிதாசாரம் மற்றும் நியாயமான தீர்மானம் என்பவற்றுக்கு அது அவசியமெனக் கருதின், அது அவ்வாறு அனுப்பப்பட்ட கணக்குகளை கணக்காய்வு செய்யப்படுவதற்கு அனுப்பச் செய்வித்தல் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவின் கீழ் கணக்காய்வொன்றின் நோக்கங்களுக்காக, வங்கிமுறிவு நம்பிக்கைப்பொறுப்பாளர், கணக்காய்வாளர் தேவைப்படுத்தக்கூடியதான அத்தகைய தகவல்களை கணக்காய்வாளருக்கு கொடுத்துதவுதல் வேண்டுமென்பதுடன் கணக்காய்வாளர் நம்பிக்கைப் பொறுப்பாளரினால் வைத்திருக்கப்படும் எவையேனும் புத்தகங்கள் அல்லது கணக்குகளை காண்பிப்பதற்கும் சோதனையிடுவதற்கும் எந்நேரத்திலும் தேவைப்படுத்தலாம்.

(5) ஏதேனும் அத்தகைய கணக்கு கணக்காய்வு செய்யப்படும் போது, பிரதியொன்று உத்தியோகபூர்வ பெறுநரினால் கோப்பிடப்பட்டு வைத்திருக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் வேறொரு பிரதி நீதிமன்றத்தில் கோப்பிடப்படுதலும் வேண்டும். ஒவ்வொரு பிரதியும் கடன்கொடுநரால் வங்கிமுறிவு கடனாளியினால் அல்லது எவரேனும் அக்கறைக் கொண்ட ஆளினால் சோதனையிடுவதற்கு திறக்கப்படுதலும் வேண்டும்.

பணம் தொடர்பில் வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாளரின் கடமை

**108.** (1) வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாளர் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வங்கிகளின் நோக்கத்துக்காக தாபிக்கப்பட்ட கணக்கு அல்லது கணக்குகளில் நம்பிக்கை பொறுப்பாளரினால் பெறப்பட்ட எல்லாப் பணங்களையும் செலுத்துதல் வேண்டும்.

(2) வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாளரினால் வங்கிக் கணக்குகளுக்கான நிதிக் கொடுப்பனவுகள் தொடர்பிலான விதிகள் விதித்துரைக்கப்படலாம்.

(3) வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாளர் (ஏதேனு மிருப்பின்) அத்தகைய அளவுக்கு விதித்துரைக்கப்படக்கூய வாறான அத்தகைய நியதி நிபந்தனைகளுக்கமையவும் நிதிசார் பொருட்களின் மரணச்சொத்தின் நிருவாகத்தில் செலுத்தப்படுவதற்கு உடனடியாக தேவைப்படாத பணத்தினை முதலீடு செய்யலாம்.

(4) வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாளர் வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாளரின் தனிப்பட்ட வங்கிக் கணக்கில் பெறப்பட்ட ஏதேனும் பணத்தை செலுத்தலாகாது.

## அத்தியாயம் 5

### வங்கிமுறிவிலுள்ள தனிசுகள்

வங்கிமுறிவில் எண்பிக்கத் தக்கனவான தனிசுகள்

**109.** (1) முப்பத்தியேழாம் பிரிவின் கீழான தனிசுகள் உள்ளடங்கலாக வரையறுக்கப்பட்ட தனிசுகள் வங்கிமுறிவில் எண்பிக்கப்படற்பாலதாதல் வேண்டும்.

(2) முப்பத்தியேழாம் பிரிவின் கீழ் விலக்களிக்கப்பட்ட தனிசொன்றாக வரையறுக்கப்பட்ட தனிசொன்று வங்கி முறிவில் எண்பிக்கப்படற்பாலதானதாதலாகாது.

(3) இப்பிரிவுக்கமைய வங்கிமுறிவு கடனாளியின் பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட அல்லது பிணைப்பொறுப் பளிக்கப்படாத கடன்கொடுநரினால் எண்பிக்கப்படற்பால தான ஏதேனும் தனிசு பற்றிய எண்பிப்பு மற்றும் ஏதேனும் எண்பிப்பின் அனுமதி அல்லது நிராகரிப்பு என்பன 426 ஆம் பிரிவிற்கிணங்க இடம்பெறுதல் வேண்டும்.

(4) வங்கிமுறிவு மரணச் சொத்தின் ஆதனத்தின் மீதான நிரந்தர பிணைப்பொறுப்பை வைத்திருக்கின்ற பிணைப் பொறுப்பளிக்கப்பட்ட கடன்கொடுநரொருவர் :-

(அ) வங்கிமுறிவு நம்பிக்கைப்பொறுப்பாளரின் உடைமை அல்லது கட்டுப்பாட்டிலுள்ள ஆதனத்தை விட்டுச் செல்லும் வேலையில் பிணைப் பொறுப்பின் மீது தங்கியிருக்கலாம்;

(ஆ) பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கடன்கொடுநர் அவ்வாறு செய்வதற்கு உரித்துடையவராகவுள்ள விடத்து பிணைப்பொறுப்பை வலுவுறுத்தலாம்; அல்லது

(இ) முழுமையாக கடன்கொடுநர்களின் நன்மைக்காக வங்கிமுறிவு நம்பிக்கைப்பொறுப்பினருக்கு பிணைப்பொறுப்புக்கமைய ஆதனத்தை ஒப்படைக்கலாம் என்பதுடன் முழுமையான தனிசுக்காக பிணைப்பொறுப்பளிக்கப்படாத கடன்கொடுநரொருவராகவும் உரிமைகோரலாம்.

(5) பிரிவு 34 இன் (5) ஆம் உட்பிரிவிற்கமைய (4) ஆம் உட்பிரிவின் (ஆ) எனும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட தெரிவைப் பிரயோகிக்கின்றவரான பிணை பொறுப்பளிக்கப் பட்ட கடன்கொடுநர் ஒருவர் பின்வருவனவற்றை திருப்தி செய்யததன் பின்னர் தேறிப் பெறப்பட்ட மொத்த தொகையிலிருந்த எஞ்சியிருக்கின்ற ஏதேனும் மிகை சேர் கணக்குபற்றிய பின்னர் வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப் பாளருக்கு பொறுப்புக் கூறல் வேண்டும், பின்னர் :-

(அ) வங்கிமுறிவு தொடக்கத்தில் தீர்மானிக்கப்பட்ட தான பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கடன் கொடுநரின் நிரந்தர பிணைப்பொறுப்புக்கு முன்னரான தரவரிசையானது ஆதனத்தின் ஏதேனும் பாகத்தின் மீதான ஏதேனும் நிரந்தரப் பிணைப்பொறுப்பின் உத்திரவாதிக்கு வருமதி யாகவுள்ள ஏதேனும் தனிசு; அத்துடன்

(ஆ) வங்கிமுறிவு தொடங்கப்பட்ட தீர்மானிக்கப் பட்டதான தனிசின் முழு மொத்த தொகை.

(6) வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாளர் அவசியம் என கருதுகின்றவிடத்து, வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாளர் பின்வருவனவற்றிற்கு எழுத்துமூல அறிவித்தலை பெற்றுக்

கொண்டதான 20 வேலைநாட்களினுள் பிணைப்பொறுப் பளிக்கப்பட்ட கடன்கொடுநரை எழுத்து மூல அறிவித்தல் மூலம் தேவைப்படுத்தலாம் :-

(அ) (4) ஆம் ஆ என்னும் பந்தியில் குறித்துரைக்கப் பட்ட; அல்லது

(ஆ) கடன்கொடுநர் அக்காலப்பகுதியினுள் அவ்வாறு செய்வதற்கு (6) ஆம் உட்பிரிவின் (ஆ) எனும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட தெரிவைப் பிரயோகிப்பதற்கு.

(7) (6) ஆம் உட் பிரிவின் கீழ் அறிவித்தல் செய்யப்பட்ட மற்றும் கடன்கொடுநர் அறிவித்தலுடன் இணங்கியொழுக தவறுகின்றவரான பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கடன் கொடுநர் ஒருவர் :-

(அ) கடன்கொடுநர்களின் முழுமையான நன்மைக் காக வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளர் களுக்கு பிணைப்பொறுப்புக்கமைந்த ஆதனத்தை ஒப்படைத்ததாக கருத்தில் கொள்ள வேண்டும்; அத்துடன்

(ஆ) முழுமையான தனிசுக்காகப் பொறுப்பளிக்கப் படாத கடன்கொடுநரொருவராக கோரிக்கை செய்யலாம்.

பரஸ்பர கடன் மற்றும் எதிரீடு

**110.** வங்கிமுறிவு கடனாளி; மற்றும் அதனை நாடுகின்ற ஆள் ஒருவர் ஆகியோருக்கிடையில் பரஸ்பர கடன்கள், பரஸ்பர அல்லது ஏனைய பரஸ்பர கையாளுகைகள் காணப்படும் பொழுது அத்தகைய சூழ்நிலைகளில் 427 ஆம் பிரிவு ஏற்புடைமையாகின்றது, ஆனால் அப் பிரிவு தொழிற் பாட்டிற்காக வங்கிமுறிவில் அனுமதிக்கப்பட்ட கோரிக்கை யொன்றை நாடலாம்.

வங்கிமுறிவில் கடன்களுக் கான முன்னுரிமை

**111.** (1) நான்காவது அட்டவணையில் தரப்பட்டுள்ள அளவு வரை மற்றும் அவ் அட்டவணையில் குறித்துரைக்கப் பட்ட முன்னுரிமை ஒழுங்கின் படி வங்கிமுறிவின் தொடக்கத்தில் உள்ளவாறு தீர்மானிக்கப்பட்டதான

கோரிக்கைகளின் திருப்தி வங்கிமுறிவு மரணச்சொத்தின் தேறிப் பெறுகையின் வரும்படிகளை அல்லது அதனை நோக்கி ஏற்புடமையாதல் வேண்டும்.

(2) நான்காவது அட்டவணையிலுள்ள 8 ஆம் பந்திக்கு பங்கமின்றி வேறு விதமாக இருந்தால் அன்றி பாரபந்தத்தின் படி (1) ஆம் பிரிவிலுள்ள (1அ) ஆம் உட்பிரிவில் "வங்கிமுறிவு மரணச் சொத்து" பிணைப்பொறுப்பளிக்கப் பட்ட கடன் கொடுநர் பின்வருமாறு இருந்தாலொழிய, வில்லங்கத்துக்கு அமைந்த ஆதனத்தை உள்ளடக்குதல் ஆகாது :–

(அ) 109 ஆம் பிரிவின் (04) ஆம் உட்பிரிவின் பிணைப்பொறுப்புக்கமைந்த ஆதனத்தை ஒப்படைத்திருத்தல்; அல்லது கடன்கொடுத்தவர் சொத்துக்களை கையளித்துள்ளார்; அல்லது

(ஆ) 109 ஆம் பிரிவின் (04), (05) ஆம் உட்பிரிவின் பிணைப்பொறுப்புக்கமைந்த ஆதனத்தை ஒப்படைக்காதிருத்தல் கடன்கொடுத்தவர் சொத்தை ஆகால் அது பிணைப்பொறுப்பை வலுவுறுத்துவதற்கு உட் கருதவில்லை என வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளருக்கு உறுதிப்படுத்தியிருத்தல்.

(3) ஓராம் உட்பிரிவுக்கிணங்க உரிமை கோரிக்கை களுக்கு செலுத்தியதன் பின்னர் வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளர் வங்கிமுறிவு ஆரம்பிக்கப்பட்ட தீர்மானித்தன் படி, பொதுவான உரிமைக் கோரிக்கைகளுக்கான திருப்தியின் வங்கிமுறிவுஅல்லது திருப்தியை நோக்கி தோட்டத்தின் உணர்ந்த வங்கிமுறிவு மரணச்சொத்தின் தேறிப்பெறுகை வரும்படிகள் ஏற்புடமை செய்தல் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின் குறிப்பீடு செய்யப்பட்ட உரிமைக்கோரிக்கைகள் அவர்களுக்கிடையில் சமமாக தரவரிசைப்படுத்துகின்றத என்பதுடன் வருமபடிகள் அத்தகைய உரிமை கோரிக்கைகளுக்கிடையில் வீதப்படி

அவர்களைத் திருப்திப்படுத்துவதற்கு வங்கி முறிவு மரணச் சொத்தின் தேறிப் பெறுகையின் வரும்படிகள் போதிய தற்றதாக இருந்தாலொழிய, முழுமையாகத் திருப்திப் படுத்தப்படுதல் வேண்டும்.

(5) ஓராம் உட்பிரிவுக்கிணங்க உர்மை கோரிக்கைகளைச் செலுத்தியதன் பின்னர் விதித்துரைக்கப்படக் கூடியதான அத்தகைய முறையில் கணக்கீடு செய்யப்பட்ட வங்கி முறிவின் தொடக்கத்திலிருந்தான வட்டி (1) ஆம் மற்றும் (3) ஆம் உட்பிரிவுகளில் குறிப்பீடு செய்யப்பட்ட உரிமை கோரிக்கைகளின் மீது செலுத்தப்படுதல் வேண்டும்.

(6) ஐந்தாம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட உரிமை கோரிக்கைகள் அப்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட வட்டி தொடர்பில் அவர்களுக்கிடையில் சமமாக தரவரிசைப் படுத்துகின்றதென்பதுடன், அவ்வட்டி தொடர்பில் அவ் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட உரிமைகோரிக்கைகள் எல்லாவற்றிக்கும் இடையிலும் வீதப்படி வரும்படிகள் எனும் சந்தர்ப்பத்தில் அத்தகைய வட்டி வங்கிமுறிவு மரணச் சொத்தின் தேறிப் பெறுகையின் வரும்படிகள் அதனைச் செலுத்துவதற்கு போதியதற்றதாக இருந்தாலொழிய முழுமையானதாகச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(7) ஐந்தாம் உட்பிரிவுக்கிணங்க உரிமை கோரிக்கைகள் செலுத்தப்பட்டதன் பின்னர், வங்கிமுறிவு கடனாளிது வங்கிமுறிவு தோட்டத்தின் உணர்மிகை இலாபங்களுக்காக வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளர் விண்ணப்பிக்க முடியும்.

(8) வங்கிமுறிவு தொடக்கத்திற்கு முன்னர் கடன் கொடுநர் ஒருவர் இப்பிரிவின்கீழ் வேறுவகையில் அது கொண்டுள்ளதனை விட தனிசு ஒன்று தொடர்பில்குறைந்த முன்னுரிமையொன்றை ஏற்றுக்கொள்வதற்கு உடன்பட்டிருக் கின்றவிடத்து, இப்பிரிவிலுள்ள எதுவும் அதன் நியதிகளுக்கு இணங்க பயனுறுவதிலிருந்து உடன்படிக்கையைத் தடுத்தலாகாது.

## அத்தியாயம் 6

### வங்கிமுறிவிலுள்ள கடனாளியினது கடமைகள்

வங்கிமுறிவு கடனாளி யினது பொதுவான பொறுப்புகள்

**112.** வங்கிமுறிவு கட்டளையொன்று ஆக்கப்பட் டுள்ள தொடர்பில் வங்கிமுறிவு கடனாளியொரு 32 ஆம் பிரிவின் கீழ் தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நடவடிக்கை முறைகளின் கீழ் கடனாளிகளுக்கான கடப்பாடுகளுக்கு அமைந்தவராதல்.

சொத்துக் களை கண்டறிவதற் கும் உணர்வ தற்குமான கடனாளி யினது கடப்பாடுகள்

**113.** (1) முப்பத்திரண்டாம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட கடமைகளுக்கு மேலதிகமாக வங்கிமுறிவுக் கட்டளை யொன்று ஆக்கப்பட்டது தொடர்பில் வங்கிமுறிவு கடனாளி ஒருவர் வங்கிமுறிவுக் கடனாளியின் ஆதனத்தைத் தேறிப் பெறுகையில் மற்றும் கடன் கொடுநர்களுக்கிடையிலான வரும்படிகளின் விநியோகிப் அத்தகைய கடனாளியின் தத்துவத்தின் உச்சளவுக்கு உதவிசெய்தல் வெண்டும் என்பதுடன் பின்வருமாறு இருத்தலும் வேண்டும் :-

(அ) அவ்வாறு அழைக்கப்படுகின்ற போதெல்லாம் வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளர் முன் சமூகமளித்தல் மற்றும் வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளரினால் அவ்வாறு செய்வதில் தேவைப் படுத்தப்படின் ஏதேனும் கூற்றை சத்தியக்கடதாசி மூலம் உறுதிப்படுத்தல்;

(ஆ) அத்தகைய ஆதனம் தொடர்பில் அற்றோணித் தத்துவத்தை நிறைவேற்றுதல், கைமாற்றுதல் மற்றும் வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளரி னால் தேவைப்பட்டவாறான கடன்கொடுநர்களுக் கிடையேயான வரும்படிகளை பகிர்தல் மற்றும் தனது சொத்துக்கள் தொடர்பான அத்தகைய அற்றோணித் தத்துவம், மாற்றல் அல்லது கருவி களை நடைமுறைப்படுத்தல்;

(இ) கடன்கொடுநர்களுக்கு இடையில் பிரித்து வழங்கக் கூடிய மற்றும் வங்கிமுறிவு கடனாளியின் உடை மையின் கீழ் அல்லது வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளரின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளதான பாதுகாக்கப்பட்ட ஆதனம் தவிர்க்க வங்கிமுறிவு கடனாளியின் ஆதனத்தினை, கோரிக்கையின் மீது விநியோகித்தல்;

(ஈ) விடுவித்தலுக்கு முன்னர் வங்கிமுறிவு கடனாளியினால் கொள்ளப்பட்டதான பாதுகாக்கப்பட்ட ஆதனம் தவிர்ந்த ஏதேனும் ஆதனத்தினை வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளருக்கு கோரிக்கையின் மீது ஒப்படைத்தல்; அத்துடன்

(உ) வங்கிமுறிவு மீள் கொடுப்பனவு கட்டளையொன்றின் கீழ் அல்லது வங்கிமுறிவு மீள் கொடுப்பனவு உடன்படிக்கையின் படி செலுத்த வேண்டிய ஏதாவது வருமதியாகவுள்ள மற்றும் கொடுமதியாகவுள்ள ஏதேனும் வருமானத்தை நிலுவைகளை வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளருக்கு கோரிக்கையின் மீது ஒப்படைத்தல்.

(2) இந்தச் சட்டத்தின் கீழ் அவசியமான பணிகளை நிறைவேற்றும் நோக்கங்களுக்காக வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளர்கள் நியாயமான முறையில் தேவைப்படுத்தக் கூடியதான ஏதேனும் கோரிக்கையுடன் வங்கிமுறிவிலிருந்தான விடுவிப்பின் பின்னரான பட்சத்திலும் ஒத்துழைப்பதற்கு தொடருதல் வேண்டும்.

நிதிசார் தகவல்கள்

**114.** (1) வங்கி முறிவு கடனாளி கடனாளியின் மரணச் சொத்து பற்றி நிதிசார் நிலைமை பற்றிய கூற்றொன்றை தயாரிப்பதற்கு நியாயமானளவு அவசியமானவையான தகவல்கள் மற்றும் விபரங்கள் வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாளரக்கு வழங்குதல் வேண்டும்.

(2) வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாளர் வளங்களின் விகிதாசார முறையிலான பயன்பாட்டை அவசியம் என கருதுகின்றவிடத்து, நம்பிக்கைப்பொறுப்பாளர் பின்வரும் விபரங்களை காட்டுகின்ற வங்கிமுறிக் கடனாளியின் நிதிசார் நிலைமை பற்றி முழுமையான, உண்மையான மற்றும் விபரமான கணக்குகள் மற்றும் கூற்றுக்களை தயாரிப்பதில் உதவுவதற்கு வங்கிமுறிவு கடனாளியை தேவைப்படுத்தலாம்: -

(அ) வங்கிமுறிவு கடனாளியின் வியாபாரம் மற்றும் இருப்பெடுத்தல்கள்; அத்துடன்

(ஆ) தொடங்குவதற்கு முன்னரான மூன்று ஆண்டுகளினுள் ஏதேனும் காலப் பகுதியின் போது

வங்கிமுறிவு கடனாளியின் இலாபம் மற்றும் நட்டங்கள்.

(3) வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளரினால் தேவைப்படுத்தப்படுமிடத்து வங்கிமுறிவு கடனாளியானவர் வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளரிடமிருந்தான கோரிக்கை ஒன்றினை அடுத்து நியாயமான காலத்தினுள் வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளருக்கு சாத்தியமான கணக்குகள் மற்றும் (2) ஆம் உட்பிரிவில் குறித்துரைக் கப்பட்ட கூற்றுக்களை தயாரிப்பதற்கு அவசியமான விபரங்களை தயாரித்து வழங்குதல் வேண்டும்.

(4) இரண்டாம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட கணக்கீடுகள் மற்றும் கூற்றுக்களை தயாரிப்பதற்கு வங்கி முறிவு கடனாளிக்கு –

(அ) வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளரின் உடைமையில் இருக்கின்ற வங்கிமுறிவு கடனாளியின் புத்தகங்கள் மற்றும் ஆவணங்கள் ஆகியவற்றுக்கு முழுமையாக கடனாளி அணுகி பெற்றுக் கொள்வதற்கு வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளர் வழங்குதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளர் அவசிய மென எண்ணுகின்றவிடத்து, வங்கிமுறிவு கடனாளி வங்கிமுறிவு கடனாளியின் ஆதனத்தின் செலவில் கணக்காளரினால் உதவி செய்யப் படுதல் வேண்டும்.

## அத்தியாயம் 7

### வங்கிமுறிவில் கடனாளியின் ஆதனம்

வங்கிமுறிவு மரணச் சொத்தின் விபரணம்

**115.** (1) வங்கிமுறிவு கடனாளியின் ஆதனம் கடன்கொடு நர்களிற்கிடையில் பிரிக்கப்படற்பாலதாதல் வேண்டும் என்ப துடன் இச் சட்டத்தில் என குறிப்பீடுசெய்யப்படும் வங்கி முறிவு மரணச்சொத்து 34 ஆம் மற்றும் 35 ஆம் பிரிவுகளில் குறித்துரைக்கப்பட்ட பாதுகாக்கப்பட்ட ஆதனத்தின் எவற்றையும் உள்ளடக்குதலாகாது.

(2) (1) ஓராம் உட்பிரிவிற்கமைய வங்கிமுறிவு பின்வருவனவற்றை உள்ளடக்குதல் வேண்டும் :-

(அ) வங்கிமுறிவின் தொடக்கத்தில் வங்கிமுறிவு கடனாளிக்கு சொந்தமான அல்லது உரித்தாக்கப்பட்ட எல்லா தேவைகளும்; அத்துடன்

(ஆ) இவ் அத்தியாயத்தின் ஏதேனும் பின்வரும் ஏற்பாடுகளின் பயனை கொண்டதான ஏதேனும் ஆதனம் அம் மரணசசொத்தொன்றை உருவாக்குகின்றது அல்லது அம் மரணச்சொத்தின் உருவாகின்ற பாகமாக பரிகரிக்கப்படுகின்றது.

(3) இவ்வத்தியாயத்தில், வங்கிமுறிவு கடனாளியுடன் தொடர்புடைய ஆதனம் என்பது வங்கிமுறிவு கடனாளியின் சொந்த நன்மைக்காக இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியில் உள்ள ஆதனத்தின் மேல் அல்லது ஆதனம் தொடர்பில் வங்கிமுறிவு கடனாளியினால் பிரயோகிக்கப் படற்பாலதான தத்துவத்திற்கான குறிப்பீடொன்றை உள்ளடக்குகின்றது.

(4) இவ் அத்தியாயத்தின் நோக்கங்களுக்காக வங்கிமுறிவுமரணச்சொத்தின் பாகமொன்றை உருவாக்குகின்றதான ஆதனம் –

(அ) வங்கிமுறிவு கடனாளி தவிர எவையேனும் ஆளின் உரிமைகளும் அமையாது; அத்துடன்

(ஆ) நூற்றியொன்பதாம் பிரிவின்கீழ் பினைப்பொறுப் பளிக்கப்பட்ட கடன் கொடுநர் ஒப்படைக்கப்பட்ட கடன்கொடுநர் ஒப்படைக்கப்பட்ட எவையேனும் உரிமைகளை கருத்திற் கொள்ளாமலும் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையிலும் பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கடன் கொடுநர் ஒருவர் பிணைப்பொறுப்பொன்றை கொண்டிருக்கின்ற ஆதத்தை உடைமையில் எடுக்கலாம் மற்றும் தேறிப் பெறலாம் என்பதுடன் வேறுவகையில் கையாளவும்படலாம்.

(5) இப் பிரிவு வங்கிமுறிவு கடனாளியின் மரணச் சொத்திலிருந்து ஏதேனும் ஆதனம் விலக்களிக்கப்பட்டதன் கீழான வேறு ஏதேனும் சட்டவாக்கத்திற்கு ஏற்புடையதாதல் வேண்டும்.

வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளரின் சொத்தின் உரித்தாக்குகை

**116.** (1) வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளர் பின்வருமாறு நியமிக்கப்படும் வரை –

(அ) உத்தியோகபூர்வ பெறுநரானவர் 97 ஆம் பிரிவின் படி இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக வங்கி முறிவு நம்பிக்கை பொறுப்பாளராக இருத்தல் வேண்டும், மற்றும்

(ஆ) வங்கிமுறிவு கட்டளையொன்று ஆக்கப்பட்டதன் மீது உடனடியாக வங்கிமுறிவு மரணச் சொத்து உத்தியோகபூர்வ பெறுநருக்கு உரித்தாக்குதல் வேண்டும்.

(2) வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளராக உத்தி யோகபூர்வ பெறுநரை தவிர்ந்த ஆள் ஒருவரின் நியமனத் தின்மீது வங்கிமுறிவு நம்பிக்கைச் சொத்து நியமிக்கப்பட்ட வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளருக்கு உடனடியாக உரித்தாக்குதல் வேண்டும்.

(3) உத்தியோகபூர்வ பெறுநருக்கு உரித்தான வங்கி முறிவு மரணச்சொத்து உள்ளடக்கப்பட்ட அல்லது உள்ளடக்கப்படவிருக்கின்றவிடத்தான ஏதேனும் ஆதனம், இந்தப் பிரிவின் கீழாயினுஞ்சரி அல்லது இப்பாகத்தின் வேறு ஏதாவது ஏற்பாட்டின் கீழாயினுஞ்சரி அது ஏதேனும் உறுதிமாற்றுகை குறித்தழிப்பு அல்லது கைமாற்றுகை இன்றி அவ்வாறு உரித்தாதல் வேண்டும்.

(4) வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளர் நியமனம் பற்றிய சான்றிதழானது இலங்கையின் உறுதிமாற்றுகையின் பதிவு அல்லது பதிவேடுகளை அல்லுத ஆதனத்தின் குறித் தழிப்புகள் என்பவற்றை இலங்கையின் ஏதேனும் பாகத்தில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின் எல்லா நோக்கங்களுக் காகவும் ஆதனத்தின் உறுதிக்கைமாற்றுகையொன்றாக அல்லது குறித்தழிப்பு ஒன்றாக கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அதற்கிணங்க பதிவுசெய்யப்படலாம் என்பதுடன் பதிவேடு செய்யப்படலாம்.

ஆதனம் கொள்ளப் பட்டதன் பின்னர்

**117.** (1) முப்பத்திநான்காம் 35 ஆம் மற்றும் 115 ஆம் பிரிவுகளுக்கமைய, பாதுகாக்கப்பட்ட ஆதனம் நீங்கலாக வங்கிமுறிவு தொடக்கத்திற்கும் கடனாளியின் விடுவிப்பிற் கும் இடையில் வங்கி முறிவு கடனாளி கொள்கின்ற அல்லது கைமாற்றுகின்ற எல்லா ஆதனங்களும் ஆதனம் கொள்ளப்பட்டதன் பின்னர் அமைத்து உருவாதல் வேண்டும்.

(2) கொள்ளப்பட்ட பின்னரான எல்லா ஆதனமும் வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளருக்கு உரித்தாதல் வேண்டும்.

(3) வங்கிமுறிவு கடனாளியின் சொந்த நலனுக்காக ஆதனத்தில் அதன் மீது அல்லது அது தொடர்பில் வங்கி முறிவு கடனாளி பிரயோகிக்கக்கூடியதான தத்துவங்கள் வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளருக்கு உரித்தாதல் வேண்டும்.

(4) ஐயத்தை தவிர்ப்பதற்காக –

(அ) வங்கிமுறிவு கடனாளியின் வருமானமானது ஆதனம் கொள்ளப்பட்ட பின்னர் அமைத்துரு வாதலாகாது; அத்துடன்

(ஆ) வங்கிமுறிவு கடனாளியின் வருமானமானது 125 மற்றும் 126 ஆம் பிரிவுகளில் குறித்துரைக்கப்பட்ட வழிமுறைகள் மூலம் மாத்திரம் வங்கிமுறிவு மரணச்சொத்துக்காக உரிமை கோரப்படல் வேண்டும்.

வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளரினால் ஆதனத்தின் உடமை

**118.** (1) வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளர் பின்வருமாறு இருக்கின்றதான வங்கிமுறிவு கடனாளியின் ஆதனம் அல்லது அலுவல்களுடன் தொடர்புடைய புத்தகங்கள், ஆவணங்கள் மற்றும் வேறு பதிவேடுகள் என்பவற்றை விரைவான அளவு உடைமையில் எடுக்கலாம்-

(அ) வங்கிமுறிவு கடனாளிக்கு சொந்தமாக இருத்தல்; அல்லது

(ஆ) வங்கிமுறிவு கடனாளியின் அல்லது உடைமை யில் கட்டுப்பாட்டின்கீழ் இருத்தல்.

(2) வங்கிமுறிவு மரணச்சொத்தினை உடைமையை கொள்கின்ற அல்லது தக்கவைத்திருக்கின்ற நோக்கத்திற்காக மற்றும் அது தொடர்பில் வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப் பாளரானவர் நீதிமன்றத்தினால் நியமிக்கப்பட்டதன் படி வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளரானவர் ஆதனத்தின் பெறுநராக இருந்த அதே நிலைமையில், நீதிமன்றமானது விண்ணப்பமொன்றின் மீது அதற்கிணங்க அத்தகைய கொள்ளுதல் அல்லது தக்க வைத்திருத்தலை வலுவுறுத் தலாம்.

(3) வங்கிமுறிவு மரணச்சொத்தின் ஏதேனும் பாகம் கம்பெனியொன்றின் இருப்பு அல்லது பங்குகள் கப்பலில் பங்குகளை கொண்டிருத்தல், அல்லது ஏதேனும் கம்பெனி அலுவலகம் அல்லது ஆளன் புத்தங்களில் கைமாற்றத்தக்க தான வேறு ஏதேனும் ஆதனம் என்பவற்றை உள்ளடக்கி யிருக்கின்றவிடத்து வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளர் அத்தகைய வங்கிமுறிவு கடனாளி பிரயோகிக்ககூடியதான அதே அளவுவரை ஆதனத்தை கைமாற்றுவதற்கான உரிமையை பிரயோகிக்கலாம்.

(4) வங்கிமுறிவு மரணச்சொத்தின்; ஏதேனும் பாகம் செயலில் உள்ள விடயங்களை உள்ளடக்கியிருக்கும் விடத்து,

(அ) அத்தகைய விடயங்கள் வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளருக்கு முறையாக குறித்துரைக்கப்பட் டுள்ளதாக கருதப்படல் வேண்டும்; அத்துடன்

(ஆ) வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளரின் முன்னுரிமையை பாதுகாப்பதற்காக கருதப்பட்ட குறித்தழிப்பு வங்கிமுறிவு கடனாளியிடமிருந்திருக் கின்றவிடத்து அவசியமானதென்ற அளவு வரை தவிர கருதப்பட்ட குறித்தழிப்பின் அறிவித்த லானது வழங்க தேவையில்லை.

(5) நூற்றிப்பன்னிரெண்டாம் பிரிவின் கீழ் வங்கிமுறிவு கடனாளியின் பொதுக் கடமைகளுக்கு மேலதிகமாக, வங்கிமுறிவு கடனாளி உடைமையில் கொண்டிருக்கின்ற அல்லது கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்ற மற்றும் வங்கி முறிவு நம்பிக்கை பொறுப்பாளரை உடைமையில் எடுப்பதற்கு தேவைப்படுத்துகின்றதான ஏதேனும் ஆதனம்

புத்தகங்கள் ஆவணங்கள் அல்லது ஏனைய பதிவேடுகள் என்பவற்றின் உடைமையை வங்கிமுறிவு கடனாளி வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாளருக்கு ஒப்படைத்தல் வேண்டும்.

(6) வங்கியாளர் ஒருவராக அல்லது வங்கிமுறிவு கடனாளியின் முகவராக இருக்கின்ற எவரேனும் ஆள் அல்லது வங்கிமுறிவு கடனாளியின் பொறுப்பில் அல்லது வங்கிமுறிவு கடனாளிக்கு ஆதனத்தை வைத்திருக்கின்ற வரான வேறு எவரேனும் ஆள், பின்வருவனவற்றை நம்பிக்கைப் பொறுப்பாளருக்கு செலுத்துதல் அல்லது ஒப்படைத்தல் லேண்டும் -

(அ) வங்கிமுறிவு மரணச்சொத்தில் பாகமாக உருவாகின்ற உடைமையில் அல்லது அவனின் அல்லது அவளின் கட்டுப்பாட்டில் உள்ள எல்லா ஆதனங்களும்; அத்துடன்

(ஆ) வங்கிமுறிவு கடனாளி அல்லது வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளருக்கு எதிராக சட்டத் தினால் அத்தகைய ஆள் தக்கவைத்திருப்பதற்கு உரித்துடையவரல்லர்.

(7) வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளருக்கு உடைமையை எடுப்பதற்கு தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் ஆதனம் புத்தகங்கள், ஆவணங்கள் அல்லது வேறு பதிவேடுகள் என்பன பின்வருவோரின் உடைமையில் இருப்பின், உடைமையை எடுப்பதற்கு தேவைப்படுத்தப் படுவார்கள் : –

(அ) உத்தியோகபூர்வ பெறுநர்;

(ஆ) வங்கிமுறிவு மரணச்சொத்தின் இருப்பிற்கு நம்பிக்கை பொறுப்பாளராக இல்லாதொழிந்துள்ள வரான ஆள் ஒருவர்; அல்லது

(இ) (iv) ஆம் பாகத்தின் கீழ் வங்கிமுறிவு கடனாளி தொடர்பில் அங்கீகரிக்கப்பட்ட தனிசு மீள் கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டின் ஒன்றில் தனிப் பட்ட கடனிறுக்கவகையின்மை நிருவாகியாக விருக்கின்றவரான் ஆள் ஒருவர்,

அவ் ஆள் வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளருக்கு ஆதனம் புத்தகங்கள், ஆவணங்கள் அல்லது பதிவேடுகள் ஆகியவற்றை உடைமையை வழங்குதல் வேண்டும்.

(8) இப் பிரிவினால் விதிக்கப்பட்ட ஏதேனும் கடப் பாட்டிற்கு இணங்கியொழுகுவதற்கு நியாயமான காரண மின்றி எவரேனும் ஆள் தவறின் அத்தகைய ஆள் நீதிமன்ற அவமதிப்பிற்கு குற்றவாளியாகின்றார் என்பதுடன் அத்தகைய ஆள் உட்பட கூடியதான வேறு ஏதேனும் தண்டனைக்கு மேலதிகமாக அதற்கிணங்க தண்டிக்கப்படுவதற்கு ஆளாதலும் வேண்டும்.

வங்கிமுறிந்த ஆதனத்தின் கைப் பற்றுகை

**119.** (1) வங்கிமுறிவு கட்டளையொன்று ஆக்கப்பட்டதன் பின்னரான எதேனும் நேரத்தில் நீதிமன்றமானது உத்தியோக பூர்வ பெறுநுர் அல்லது வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப் பாளர் ஆகியோரின் விண்ணப்பத்தின் மீது உத்தியோகபூர்வ பெறுநர், வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளர், அல்லது நீதிமன்றத்தினால் அதிகாரமளிக்கப்பட்டவர்களான அத்தகைய வங்கிமுறிவு கடனாளியின் உடைமையில் அல்லது கட்டுப்பாட்டின் கீழுள்ள அல்லது வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளருக்கு ஆதனம், புத்தகங்கள், ஆவணங்கள் அல்லது பதிவேடுகளை ஒப்படைப்பதற்கு தேவைப்பட்ட தான வேறு எவரேனும் ஆள் முகவர் ஒருவரை அதிகாரமளிக் கின்ற பிடியாணையொன்றினை வங்கிமுறிவு மரணச் சொத்தில் அடங்கியுள்ள ஏதேனும் ஆதனத்தின வங்கி முறிவு மரணச் சொத்துடன் தொடர்புடைய எவையேனும் புத்தகங்கள், ஆவணங்கள் அல்லது பதிவேடுகள் என்பவற்றை கைப்பற்று வதற்கு வழங்கலாம்.

(2) வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளரின் பணிகள் வங்கிமுறிவு மரணச்சொத்தின் நிர்வாகம் என்பவற்றுக்கான செயலாற்றுகைக்காக தேவைப்படுமிடத்து, ஓராம் உட் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட பிடியாணை ஒன்று வங்கிமுறிவு கடனாளியின் பௌதீக மற்றும் இலத்திரனயில் மின்னஞ் சலை நியாயமான அளவு அணுகக் கூடியவகையில் ஏற்பாடு செய்யப்படுதல் வேண்டும்.

(3) இப் பிரிவின் கீழ் பிடியாணையொன்றினை நிறைவேற்றுகின்ற எவரேனும் ஆள், வங்கிமுறிவு மரணச்சொத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏதேனும் ஆதனம் அல்லது வங்கி முறிவு மரணச்சொத்து தொடர்பிலான பதிவுகள் என்பவற்றை கைப்பற்றும் நோக்கத்திற்காக பின்வருவனவற்றை உடைத்து திறக்கலாம் :-

(அ) வங்கிமுறிவு கடனாளி அல்லது பிடியாணையின் கீழ் கைப்பற்றப்பட்ட ஏதேனும் அல்லது நம்பப்படுகின்ற எவையேனும் வளாகத்தினுள்; அத்துடன்

(ஆ) அவ்வாறு கைப்பற்றப்படக்கூடியதான எவற்றையும் உள்ளடக்கியுள்ள அல்லது உள்ளடக்குவதற்கு நம்பப்படுகின்றதான வங்கிமுறிவின் ஏதேனும் சேர்ப்பிடங்கள்.

(4) வங்கிமுறிவு கட்டளையொன்று மேற்கொள்ளப் பட்டதன் பின்னர், வங்கிமுறிவு மரணச்சொத்தில் உள்ளடக் கப்பட்ட ஏதேனும் அல்லது வங்கிமுறிவு மரணச்சொத்து தொடர்பிலான எவையேனும் புத்தகங்கள், ஆவணங்கள் அல்லத பதிவேடுகள் என்பன வங்கிமுறிவு கடனாளிக்கு சொந்தமில்லாத எவையேனும் வளவுகளினுள் மறைத்து வைக்கப்பட்டுள்ளதென நீதிமன்றம் திருப்திப்படின், நீதி மன்றம் புத்தகங்கள், ஆவணங்கள் அல்லது கொடுப்பனவு ஆதனம் அவ் வளவுகளினுள் தேடுவதற்கு நீதிமன்றத்தின் எவரேனும் பொலிசு அலுவலரை அல்லது நீதிமன்றத்தின் அதிகாரம் அளிக்கின்ற பிடியாணையொன்றை வழங்கலாம்.

(5) நான்காம் உட்பிரிவின் கீழான பிடியாணையொன்று, அதன் நியதிகளிற்கிணங்க நான்காம் தவிர நிறைவேற்றப்படு தலாகாது.

(6) நான்காம் உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட பிடியாணை ஒன்றின் நிறைவேற்றுகைக்கான நடவடிக்கை முறைகள் விதித்துரைக்கப்படலாம்.

கடும் கடப் பாடுடைய சொத்து பற்றிய பொறுப்புத் துறப்பு

**120.** நூற்றுமுப்பத்தி நான்காம் மற்றும் 335 ஆம் பிரிவுகளின் வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளர் கடும் கடப்பாடுகளுடைய ஆதனத்தை பொறுப்பு துறக்கலாம்.

கடனாளி ஆதனத்தை முகாமைத் துவம் செய்வதற்கு அனுமதிப்பதற் கான தத்துவம்

**121.** (1) வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளர், நீதிமன்றத்தின் அனுமதியுடனோ அல்லது கடன்கொடுநர் களின் பெரும்பான்மை பெறுமதியுடனான தீர்மானத்தினால் அவ்வாறு அதிகாரமளிக்கும் பொழுது, வங்கிமுறிவு கடனாளியை பின்வருவனவற்றுக்காக நியமிக்கலாம்.

(அ) வங்கிமுறிவு மரணச்சொத்து அல்லது அதனது ஏதேனும் பாகத்தின் முகாமைத்துவத்தை கண்காணிப்பதற்கு, அல்லது

(ஆ) கடன்கொடுநர்களது நன்மைக்காக வங்கிமுறிவு கடனாளியின் (ஏதேனுமிருப்பின்) வியாபாரத்தை கொண்டுசெல்லுதல் மற்றும், வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளர் பணிக்ககூடியதான அத்தகைய முறையிலும் மற்றும் அத்தகைய நியதிகளின் மீதும், ஆதனத்தை நிருவகிப்பதில் செய்வது தொடர்பில் உதவுதல்,

(இ) அவ்வாறு செய்வதானது கடன்கொடுநர்களது நலனை மொத்தமாக பாதிக்கவில்லை என வங்கி முறிவு நம்பிக்கை பொறுப்பாளர் கருதுகின்ற விடத்து.

(2) ஓராம் ஆம் உட்பிரிவின் கீழ் வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளர் ஒருவர் நீதிமன்றத்தின் அனுமதியை நாடி யிருக்கின்றவிடத்து, நீதிமன்றமானது அவ்வாறு செய்வ தானது கடன்கொடுநர்களின் அக்கறைகளை முழுமையான தாக பாதிக்காது என திருப்திப்படுகின்றவிடத்து மட்டும் மாத்திரம் அத்தகைய அனுமதியை அளித்தல் வேண்டும்.

வாடகை கொள்வனவு மீதான பண்டங்கள்

**122.** (1) (அ) வங்கிமுறிவு ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் வாடகை கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் வங்கிமுறிவு கடனாளி பண்டங்களின் உடைமையாக பெற்றுக்கொள்ளுகின்ற விடத்து; அத்துடன்

(ஆ) (i) வங்கிமுறிவு தொடக்கத்தின் முன்னரான இருபத்தொரு நாட்களினுள் பண்டங்களின் உடைமையை எடுத்திருக்கும் மற்றும் வங்கிமுறிவு தொடக்கத்தின் பின்னர் இன்னும் அவற்றின் உடைமையை கொண்டிருந்தல்; அல்லது

(ii) தொடக்கத்தின் பின்னர் பண்டங்களின் உடை மையாக எடுகின்ற,

கடன்கொடுநர் ஒருவர் வங்கிமுறிவின் தொடக்கத்தேதியின் பின்னரான இருபத்தெட்டு நாட்கள்வரை, வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாளர் அக்காலப்பகுதி முடிவடைவதற்கு முன்னர் பண்டங்களின் உடைமையை விற்கின்ற அல்லது கையுதிர்க்கின்ற அல்லது பிரிக்கின்ற கடன்கொடுநருக்கு எழுத்தில் வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாளர் சம்மதம் அளித்திருந்தால் ஒழிய (களஞ்சியப்படுத்ததல், திருத்துதல் என்பன தவிர்ந்த) பண்டங்களை விற்பனை செய்தல் அல்லது கையுதிர்த்தல் அல்லது அவற்றின் உடைமையை பிரித்தல் ஆகாது.

(2) வாடகை கொள்வனவு உடன்படிக்கையின் ஏதேனும் ஏற்பாடுகள் எவ்வாறு இருப்பினும் வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளர் இருப்பினும் -

(அ) வங்கிமுறிவு ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து இருபத்தெட்டு நாட்கள் காலப் பகுதியினுள் பண்டங்கள் மற்றும் வங்கிமுறிவு கடனாளியின் கடன்பட்ட நிலைக்காக கடன்கொடுநருக்கு கொள் வனவாளர் ஒருவரை அறிமுகம் செய்தலானது பண்டங்களுக்காக கொள்வனவு செய்தவரினால் கடன்கொடுநருக்கு செலுத்தப்பட்ட தொகையின் அளவுவரைக்கும் குறைக்கப்படல் வேண்டும்; அல்லது

(ஆ) கடன்கொடுநர் அக்காலப் பகுதி காலாவதியானதை தொடர்ந்து பண்;டங்களை விற்பனை செய்வதற்கு அல்லது கடன்படுவதற்கு முன்னர் ஏதேனும் நேரத்தில் வங்கிமுறிவு கடனாயின் கடப்பாடு களை கொடுத்து தீர்க்கலாம் என்பதுடன் கடனாளியின் மரணச்சொத்தின் ஒரு பாகமாக பண்டங்களை தக்கவைத்திருக்கலாம்.

(3) (அ) வங்கிமுறிவுக் கடனாளியின் வங்கிமுறிவின் தொடங்குவதற்கு முன்னரிலிருந்து அல்லது தொடங் கியதன் பின்னரிலிருந்து வாடகை கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப் பட்ட பண்டங்களின் கடன்கொடுநர் உடை மையை எடுக்கின்றவிடத்து; அத்துடன்

(ஆ) வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளர் இரண்டாம் உட்பிரிவின் கீழ் ஏதேனும் நடவடிக்கையை எடுத்திருக்காதவிடத்து,

கடன்கொடுநர் வங்கிமுறிவு கடனாளியிடமிருந்து அறவிடுவதற்கு உரித்துடையவரான தொகைக்கு வங்கிமுறிவில் கடன்கொடுநர் எண்பிக்கலாம்.

(4) (அ) வங்கிமுறிவு ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் வாடகை கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் வங்கிமுறிவு கடனாளி பண்டங்களை கொள்வனவு செய்த ஆளின்; அத்துடன்

(ஆ) வங்கிமுறிவு ஆரம்பிக்கப்பட்ட திகதியில் கடன்கொடுநர் –

(i) பண்டங்களின் உடைமையை எடுத்திருக்காத விடத்து; அல்லது

(ii) அவற்றின் உடைமையை எடுத்திருக்கின்ற விடத்து அவற்றின் உடைமையை விற்காமலிருக்கின்றவிடத்து அல்லது கையுதிர்க்காமலிருத்தல் அல்லது பிரிக்காமலிருக்கின்றவிடத்தும்,

கடன்கொடுநர் வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளருக்கு பண்டங்களைக் குறித்தளிக்கலாம் என்பதுடன் அல்லது செய்யின், உடன்படிக்கையின்கீழ் கடன்கொடுநருக்கு வருமதியாகவுள்ள தேறிய மீதிக்கு வங்கிமுறிவில் எண்பிக்கலாம்.

குறித்த சில சந்தர்ப்பங் களில் பொறுப்பிலிருந்து உத்தியோகபூர்வ பெறுநர் அல்லது நம்பிக்கைப் பொறுப் பாளரை பாதுகாத்தல்

**123.** (1) பின்வருமாறு உள்ளவிடத்து இப் பிரிவு ஏற்புடையதாகின்றது : –

(அ) வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளர், வங்கிமுறிவு கடனாளி ஒருவரின் உடைமையிலுள்ள அல்லது வளவுகளில் உள்ள ஏதேனும் ஆதனத்தை கைப்பற்றி இருக்குமிடத்து அல்லது கையுதிர்த்தி இருக்குமிடத்து; அத்துடன்

(ஆ) வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளர், ஆதனம் தொடர்பில் எவரேனும் ஆளினால் ஏதேனும் உரிமை கோரிக்கை பற்றி அறிவித்தல் எதனையும் கொண்டிருக்கவில்லை.

(2) வழக்குத்துடர்ச்சி, குற்றவழக்கு, வேறு சட்ட நடவடிக்கை முறைகள் எவையும் அத்தகைய ஆதனத்தை உரிமைகோருகின்ற எவரேனும் ஆளினாலான அத்தகைய கைப்பற்றுகை அல்லது தக்கவைப்பிலிருந்து கையுதிர்த்தல் என்பவற்றில் இருந்து எழுகின்ற ஏதேனும் இழப்பு அல்லது நட்டம் என்பவற்றுக்காக வங்கிமுறிவு நம்ப்பிக்கை பொறுப்பாளருக்க எதிராக இடுதலாகாது என்பதுடன்,

(அ) வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளர், அத்தகைய ஆதனம் தொடர்பில் உரிமை கோரிக்கை யொன்றை நிலைநாட்டுவதற்கு எடுக்கப்பட்ட எவையேனும் நடவடிக்கைகளின் ஆகு செலவுக் காக ஆளாதல் அல்லது;

(ஆ) வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாளர் (1) ஆம் குறித்துரைக்கப்பட்ட சூழ்நிலைகளில் நல்லெண்ணத்துடன் ஆதனத்தை கைப்பற்றி இருக்குமிடத்து அல்லது கையுதிர்த்திருக்குமிடத்து மற்றும் வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளர் வங்கிமுறிவு காடனாளியின் ஆதனத்தை வங்கி முறிவு தொடங்கும் தேதியில் சொல்லப்பட்ட ஆதனம் இல்லையென அறிவித்தலை வழங்கு கின்றார்.

**124.** (1) விடுவிக்கப்படுவதற்கு முன்னர், இரண்டாவது முறையாக வங்கிமுறிவு கடனாளி தொடர்பில் வங்கிமுறிவு கட்டளை ஆக்கப்பட்டிருக்குமிடத்து - இரண்டாவது வங்கிமுறிவு

(அ) இரண்டாம் உட்பிரிவுக்கமைய, இரண்டாவது வங்கிமுறிவிலிருந்து கொள்ளப்பட்ட அல்லது கைமாற்றப்பட்ட ஆதனம் உள்ளடங்கலாக முதலாவது வங்கிமுறிவிலிருந்து வங்கிமுறிவு கடனாளியினால் கொள்ளப்பட்ட அல்லது வங்கி முறிவுக் கடனாளிக்கு கைமாற்றப்பட்ட ஏதேனும் ஆதனம், இரண்டாவது வங்கிமுறியில் வங்கி முறிவு நம்பிக்கைப் பொறுப்பாளருக்கு உரித்தாதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) இரண்டாவது வங்கிமுறிவின் ஏதேனும் மிகைசேர் முதலாவது வங்கிமுறிவின் மரணச்சொத்தில்

சொத்தொன்றாக இருப்பதுடன், முதலாவது வங்கி முறிவின் வங்கிமுறிவு நம்பிக்கைப்பொறுப் பாளருக்கு செலுத்தப்படுதலும் வேண்டும்.

(2) நீதிமன்றம், அது தோதானதெனக் கருதின் முதலாவது வங்கிமுறிவின் வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாளருக்கு பின்வரும் சொத்துக்கள் அல்லது அவர்களின் வரும்படிகள் உரித்தல் வேண்டுமென கட்டளையிடலாம்.

(அ) நீதிமன்றத்தின் அபிப்பிரயத்தில், இரண்டாவது வங்கிமுறிவில் கடன்கொடுநர் சுயாதீனமாக கொள்ளப்பட்ட இரண்டாவது வங்கிமுறிலுள்ள சொத்துக்கள்; அத்துடன்

(ஆ) வங்கிமுறிவு கடனாளிக்கு கைமாற்றப்பட்ட இரண்டாவது வங்கிமுறிவிலுள்ள சொத்துகள்.

(3) வங்கிமுறிவு நம்பிக்கைப்பொறுப்பாளர், கடன் கொடுநர் ஒருவர் இரண்டாவது வங்கிமுறிவுக்காக மனுவொன்றை கோப்பிட்டாரென எழுத்திலான அறிவித்தல் பெறப்படுமிடத்து, அவர்-

(அ) இரண்டாவது வங்கிமுறிவுக்கான விண்ணப்பம் கையாளப்பட்டிருக்கும் வரை முதலாவது வங்கி முறிவிலிருந்து வங்கிமுறிவு கடனாளியினால் கொள்ளப்பட்ட அல்லது வழங்கப்பட்டிருக்கின்ற தான உடைமையில் உள்ள ஆதனத்தை வைத்திருத்தல்; அத்துடன்

(ஆ) கடன்கொடுநரின் மனு இரண்டாவது வங்கி முறிவிற்கு இட்டுச்செல்கின்றவிடத்து அல்லது அவருடைய செந்த விண்ணப்பத்தின் மீது கடனாளி தொடர்பில் வங்கிமுறிவு கட்டளை யொன்று ஆக்கப்பட்டிருப்பின் இரண்டாவது வங்கிமுறிவில் உள்ள வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாளருக்கு ஆதனம் மற்றும் அதன் உரும்படிகளை கைமாற்றுதல், வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளரின் கட்டணங்கள், ஆகு செலவுகள், விதிப்பனவுகள் மற்றும் செலவுகளுக் கான ஏதேனும் கழிப்பனவினை குறைத்தல் வேண்டும்.

கடன் மீள் செலுத்துகை கட்டளை

**125.** (1) முப்பத்தியாறாம் பிரிவின் கீழ் கடனாளியினது பாதுகாக்கப்பட்ட வருமானத்தை விஞ்சியதாக கட்டளை வலுவிலிருக்கின்ற காலப் பகுதியில் வங்கிமுறிவு கடனாளியினது வருமானம் அதிகமாக இருக்கின்ற பொழுது வங்கிமுறிவு மரணச்சொத்துக்களை உரிமை கோருகின்ற தனிசு மீள் கொடுப்பனவு கட்டளையொன்றை நீதிமன்றம் ஆக்கலாம்.

(2) முப்பத்தியாறாம் பிரிவிற்கிணங்க கடனாளியினது பாதுகாக்கப்பட்ட வருமானத்தை விட குறைவாக வங்கிமுறிவு கடனாளியினது வருமானத்தை குறைக்கக் கூடிய வகையில் நீதிமன்றமானது தனிசு மீள் கொடுப்பனவு கட்டளையொன்றினை ஆக்குதல் ஆகாது.

(3) தனிசு மீள் கொடுப்பனவு கட்டளையொன்றானது அது ஏற்புடைய ஏதேனும் வருமான கொடுப்பனவு தொடர்பில், பின்வருமாறு, ஒன்றில்:-

(அ) கட்டளையினால் உரிமை கோரப்பட்ட கொடுப்பனவு தொகைக்கு சமமான தொகையொன்றை வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளருக்கு செலுத்துவதற்கு தேவைப்படுத்துதல் வேண்டும்; அல்லது

(ஆ) வங்கிமுறிவு கடனாளிக்கு பதிலாக, கொடுப்பனவை மேற்கொள்கின்ற ஆளிடம் வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளரினால் உரிமை கோரப்பட்ட தொகையை செலுத்துவதற்கு தேவைப் படுத்துல் வேண்டும்.

(4) தனிசு மீள் கொடுப்பனவு கட்டளையின் கீழ் வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளரினால் பெற்றுக் கொள்ளப்பட்ட தொகைகள் மரணச்சொத்தின் பாகத்தை ஆக்குகின்றது.

(5) தனிசு மீள் கொடுப்பனவு கட்டளையானது அது பயனுறும் காலப் பகுதியினை குறித்துரைத்தல் வேண்டும், என்பதுடன் அக் காலப் பகுதி வங்கிமுறிவு கடனாளியை விடுவித்ததன் பின்னர் முடிவுறுதல் ஆகாது.

(6) இப்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளர் அல்லது வங்கிமுறிவு கடனாளி ஆகியோரது விண்ணப்பத்தின் படி தனிசு மீள் கொடுப்பனவு கட்டளையானது வேறுபடலாம்.

தனிசு மீள் கொடுப் பனவு உடன்ப டிக்கை

**126.** (1) இப் பிரிவில் "தனிசு மீள் கொடுப்பனவு உடன்படிக்கை" என்பது வங்கிமுறிவு கடனாளி மற்றும் வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாளர் என்போருக்கிடை யிலான எழுத்து மூல உடன்படிக்கை என பொருள்படும். இது பின்வருமாறு ஏற்பாடு செய்கின்றது:-

(அ) குறித்துரைக்கப்பட்ட காலப் பகுதியொன்றுக்கு வங்கிமுறிவு கடனாளியின் வருமானத்திலிருந்து குறித்துரைக்கப்பட்ட பாகம் அல்லது விகிதத்திற்கு சமமான தொகையொன்றினை வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாளருக்கு வங்கிமுறிவு கடனாளி செலுத்துதல் வேண்டும்; அல்லது

(ஆ) வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாளர் மற்றும் வங்கிமுறிவு கடனாளி; என்போரினால் மூன்றாம் திறத்தவருக்கு முறையாக அறிவிக்கப்படுமிடத்து மூன்றாம் திறத்தவர் குறித்துரைக்கப்பட்ட காலப் பகுதியொன்றுக்கான வருமானம் என்ற வழிவகை யாக வங்கிமுறிவுக் கடனாளி செலுத்த வேண்டிய குறித்துரைக்கப்பட்ட பணத்தின் விகிதமானது வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாளருக்கு செலுத்துதல் வேண்டும்.

(2) உட்பிரிவு (1) (அ) அல்லது (ஆ) இல் குறித்துரைக் கப்பட்ட வகையொன்றாக தனிசு மீள் கொடுப்பனவு உடன்படிக்கையின் ஏற்பாடொன்று தனிசு மீள் கொடுப் பனவு கட்டளையொன்றின் ஏற்பாடாகவிருப்பின், வலுவுக் கிடப்படலாம்.

(3) தனிசு மீள் கொடுப்பனவு உடன்படிக்கை யொன்றின் கீழ் வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளரால் பெற்றுக்கொள்ளப்பட்ட தொகையானது வங்கிமுறிவு மரணச்சொத்தின் பகுதியை ஆக்குகின்றது.

(4) தனிசு மீள் கொடுப்பனவு உடன்படிக்கையொன்று அது பயனுறவேண்டிய காலப் பகுதியை பரிந்துரைத்தல் வேண்டும் என்பதுடன் வங்கிமுறிவு கடனாளி விடுவிக்கப் பட்டதன் பின்னர் அக்காலப் பகுதியானது முடிவுறாமல் இருக்கலாம்.

(5) தனிசு மீள் கொடுப்பனவு ஒழுங்கேற்பாட்டின் நியதிகளின் முப்பத்தியாறா ஆம் பிரிவிற்கிணங்க பாதுகாக்

கப்பட்ட வருமானத்திற்கு குறைவாக வங்கிமுறிவு கடனாளியின் வருமானத்தை குறைப்பதில் பயனை கொண்டிருத்தல் ஆகாது.

(6) தனிசு மீள் கொடுப்பனவு உடன்படிக்கையானது இப்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய -

(அ) திறத்தவர்களுக்கிடையிலான எழுத்து மூல உடன்படிக்கை மூலம், வேறுபடுத்தப்படலாம்; அல்லது

(ஆ) வங்கிமுறிவு கடனாளி; அல்லது வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளரினால் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றின் படி நீதிமன்றத்தினால் வேறுபடுத்தப்படலாம்.

(7) நீதிமன்றமானது –

(அ) வங்கிமுறிவு கடனாளி மற்றும் அவரில் தங்கியுள்ளோர் ஆகியோரது நியாயமான வீட்டு தேவைகளை ஈடுபடுவதற்கு அவசியமான அளவின் கீழ் வங்கிமுறிவு கடனாளியினது வருமானத்தை குறைக்கின்ற விதத்தில் தாக்கம் ஏற்படுத்துகின்ற வகையிலான ஏற்பாடுகளை உள்ளடக்கக்கூடிய விதத்தில் தனிசு மீள் கொடுப்பனவு உடன்படிக்கையொன்று வேறுபடுத்தலாகாது; அத்துடன்;

(ஆ) வங்கிமுறிவு கடனாளி; மற்றும் அவரில் தங்கியுள்ளோரது நியாயமான வீட்டுத் தேவைகளை ஈடுசெய்வதற்கு அவசியமான அளவின் கீழ் வங்கிமுறிவு கடனாளியினது வருமானத்தை குறைப்பதற்கான தாக்கத்தினை தவிர்ப்பதற்கு வேறுபாடு எந்தளவிற்கு அவசியம் என நீதிமன்றம் கருதுகின்றதாயின் தனிசு மற்றும் அளவு வரைக்கும் மீள் கொடுப்பனவு உடன்படிக்கையொன்று வேறுபடுத்துவதற்கான விண்ணப்பம் ஒன்றிற்கு அனுமதி அளித்தல் வேண்டும்.

கடனிறுக்க வகையற்று இறந்த ஆளின் மரணச்சொத் துக்கள்

**127.** கடனிறுக்கவகையற்று இறந்த ஆளொருவரின் மரணச்சொத்தொன்றின் வங்கிமுறிவின் முகாமைத்துவமானது, ஆறாம் அட்டவணைக்கிணங்கவும் விதித்துரைக்கப் படக்கூடியவாறும் இடம்பெறுதல் வேண்டும்.

## அத்தியாயம் 8

### சில கொடுக்கல் வாங்கல்கள் மீதான வங்கிமுறிவின் விளைவு

*கடன்கொடுநர் ஒருவரை மறைத்து வைத்தல் தாமதப்படுத்தல் அல்லது தோல்வியடையச் செய்தல் ஆகிய உட்கருத்துடன் ஆதனத்தின் வறிதாக்கக்கூடிய முந்துரிமைகள், வறிதாக்கக்கூடிய வில்லங்கத்தின் மற்றும், பாராதீனப் படுத்தல்கள்*

**128.** (1) கடனாளியொருவரினாலான கொடுக்கல்வாங்கல் ஒன்று 412, 415, 416 மற்றும் 417 என்னும் பிரிவுகளுக்கிணங்க, வறிதாக்கத்தக்களவான முந்துரிமையொன்றாக நீதிமன்றத்தினால் புறத்தொதுக்கப்படலாம்.

(2) கடனாளியொருவரினாலான கொடுக்கல்வாங்கல் ஒன்று 413, 415, 416 மற்றும் 417 என்னும் பிரிவுகளுக்கிணங்க, வறிதாக்கத்தக்கனவான வில்லங்கமொன்றாக நீதிமன்றத்தினால் புறத்தொதுக்கப்படலாம்.

(3) கடனாளியொருவரினாலான கொடுக்கல்வாங்கல் ஒன்று 414, 415, 416 மற்றும் 417 என்னும், பிரிவுகளுக்கிணங்க, கடன்கொடுநரொருவரை மறைத்து வைக்கும், தாமதப்படுத்தும் அல்லது தோற்கடிக்கும் உட்கருத்துடன் ஆதனத்தின் பாராதீனப்படுத்தலொன்றாக நீதிமன்றத்தினால் புறத்தொதுக்கப்படலாம்.

*குறை பெறுமதியில் உள்ள கொடுக்கல் வாங்கல்கள்*

**129.** வங்கிமுறிவு நம்பிக்கைப்பொறுப்பாளர் 418 ஆம் பிரிவுக்கிணங்க, குறைபெறுமதியான கொடுக்கல்வாங்கலொன்றின் கீழான பெறுமதியின் விஞ்சியதை பெறுநரிடமிருந்து அறவிடலாம்.

*அறிவித்தல் இன்றி நல்லெண்ணத்துடனான கொடுக்கல் வாங்கல்களின் பாதுகாப்பு*

**130.** (1) நூற்றிமுப்பதிநான்காம் பிரிவின் கீழ் நிறைவேற்றுகை அல்லது இணைப்பின் மீதான வங்கிமுறிவின் பயன் தொடர்பில் மற்றும்; 412, 413, 414 மற்றும் 418 என்னும், பிரிவுகளின் கீழான முந்துரிமைகள் மற்றும் குறைமதிப்பீட்ட செய்யப்பட்ட கொடுக்கல்வாங்கல் இன் மீதான ஏற்பாடுகள் தொடர்பில் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இப்பிரிவு அமைந்ததாகின்றது.

(2) வங்கிமுறிவு கடனாளி மற்றும் வேறு எவரேனும் ஆள் என்போருக்கிடையிலான கொடுக்கல்வாங்கல்கள் ஒன்று மற்றும் அதன் கீழ், வங்கிமுறிவு ஆரம்பிக்கப்பட்டதன்

பின்னர், வங்கிமுறிவு கடனாளி ஆதனத்தைக் கொள்ளுதல் வங்கிமுறிவு கடனாளிக்கு ஆதனத்தை மாற்றுதல் பின்வரு மாறுள்ளவிடத்து வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளருக்கு எதிராக வலுப்படுத்தல் வேண்டும்:-

(அ) நல்லெண்ணத்தில் மற்றும் பெறுமதியில் வங்கி முறிவு கடனாளியுடன் வேறொரு ஆள் கையாளுதல்; அத்துடன்

(ஆ) கொடுக்கல் வாங்கல் ஒன்றானது வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாளரின் தலையீடு இன்றி பூரணப்படுத்தப்பட்டிருத்தல்.

(3) வேறொரு ஆள் வங்கிமுறிவு கடனாளியின் வங்கி யாகவுள்ளவிடத்து, பெறுமதிக்காக வங்கிமுறிவு கடனாளி யுடன் கையாளப்படுகின்ற கொடுக்கல்வாங்கலொன்று பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது -

(அ) வங்கிமுறிவு கடனாளியிடமிருந்து அல்லது வங்கிமுறிவு கடனாளியின் கட்டளை அல்லது பணிப்பிலிருந்து ஏதேனும் பணம், பிணைப் பொறுப்பு அல்லது உரிபெயர் சாதனத்தின் வங்கி பற்றுச்சீட்டு;

(ஆ) வங்கிமுறிவு கடனாளிக்கு அல்லது கடனாளி யின் கட்டளை அல்லது பணிப்பினால் வங்கி யினால் செய்யப்படும் கொடுப்பனவொன்று; அத்துடன்

(இ) வங்கிமுறிவு கடனாளிக்கு அல்லது வங்கிமுறிவு கடனாளியின் கட்டளை அல்லது பணிப்பினால் பிணைப் பொறுப்பு அல்லது உரிபெயர் சாதனம் என்பவற்றின் வங்கியினால் செய்யப்படும் ஒப்படைப்பு.

(4) வங்கிமுறிவு கடனாளிக்கு அல்லது அவரின் பணிப்பில் சட்ட ஆள் பிரதிநிதித்துவமொன்றினால் ஆதனத்தின் பணம் அல்லது ஒப்படைப்பு பற்றிய கொடுப்பனவொன்று பெறுமதிக்கான கொடுக்கல்வாங்கலொன்றாகும்.

**131.** (1) இப்பிரிவு எவ்வாள் தொடர்பில் வங்கிமுறிவு கட்டளையொன்று அடுத்துறும் வகையில் செய்யப்படுகின்றதோ அவ்வாளுக்கு அத்தகைய ஆளிடம் இருந்து குறித்தளிப்பின் மூலம் உரிமைகோரிகின்ற ஆளொருவருக்கு ஆளொருவர் பணத்தை செலுத்துகின்றவிடத்து அல்லது ஆதனத்தை ஒப்படைக்கின்றவிடத்து இப்பிரிவு ஏற்புடைமையாகின்றது.

வங்கிமுறிவு கடனாளிக்கும் சாட்டுனருக்கும் குறித்த சில கொடுப்பனவுகளின் தன்மை

(2) வங்கிமுறிவு கட்டளை பின்வருமாறு உண்மையான தேதிக்கு முன்னர் கொடுப்பனவு அல்லது ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளவிடத்து, பணக்கொடுப்பனவு அல்லது ஆதன ஒப்படைப்பு பணத்தை செலுத்துகின்ற ஆதனத்தை ஒப்படைகின்ற ஆளுக்கு விடுவிப்பொன்றை அமைத்துருவாக்குகின்றது–

(அ) வங்கிமுறிவு மனு அல்லது விண்ணப்ப முன்வைப்பு அறிவித்தலின்றி செய்யப்பட்டுள்ளமை; அத்துடன்

(ஆ) வழமையான வியாபாரத்தை பின்பற்றி செய்யப்பட்டுள்ளமை அல்லது அல்லாத நல்லெண்ணத்தில் வேறுவகையில் செய்யப்பட்டுள்ளமை.

**132.** (1) ஏதேனும் தொழிலில் ஈடுபட்டுள்ள ஆளொருவர் வேறொரு ஆளின் ஏலவேயுள்ள அல்லது எதிர்கால தனிசு புத்தகங்களின் அல்லது அவற்றின் ஏதேனும் வகுப்புக்கு பொதுவான குறித்தழிப்பொன்றை செய்கின்றவிடத்து மற்றும் அடுத்துறுகின்றதான வங்கிமுறிவு கட்டளையொன்று ஆள் தொடர்பில் ஆக்கப்படுகின்றது.

தனி புத்தகங்களின் பொதுவான குறித்தழிப்புகள்

(2) (நூற்றிபதினேழாம் அத்தியாயமான) ஆவணப் பதிவுகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் அல்லது கம்பெனிகள் சட்டத்தின் கீழ் குறித்தழிப்பொன்று பதிவு செய்யப்பட்டித்தாலொழிய, வங்கிமுறிவின் தொடக்கத்தில் செலுத்தப்படாதவையான ஏதேனும் தனிசு புத்தகம் தொடர்பிலான வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளருக்கு எதிராக வங்கிமுறிவு கடனாளினால் செய்யப்படும் தனிசு புத்தகங்களின் குறித்தழிப்பானது வெற்றானதாகும்.

(3) இப் பிரிவின் நோக்கங்களுக்காக, “குறித்தழிப்பு என்பது” பிணைப்பொறுப்பு மூலமாகவும் தனிசுப் புத்தகங்கள் மீதான ஏனைய விதிப்பனவுகள் என்பவற்றின் மூலமான குறித்தளிப்பை உள்ளடக்குகின்றது.

(4) இப் பிரிவின் நோக்கங்களுக்காக “பொது குறித்தளிப்பு” பின்வருவனவற்றை உள்ளடக்காது: –

(அ) குறித்துரைக்கப்பட்ட கடனாளிகளிடமிருந்தான குறித்தளிப்பு அல்லது குறித்துரைக்கப்பட்ட ஒப்பந் தங்களின் கீழ் வருமதியாகவுள்ள வளர்ச்சியடை யும் தனிசுகளின் தேதியில் வருமதியாகவுள்ள தனிசுப்புத்தகங்களின் ஏதேனும் குறித்தளிப்பு; அல்லது

(ஆ) நல்லெண்ணத்திலும், பெறுமதியிலும் செய்யப் பட்ட தொழில் கைமாற்றத்தில் உள்ளடக்கப்பட்ட தனிசு புத்தகங்களின் ஏதேனும் குறித்தளிப்பு அல்லது பொதுவாக கடன்கொடுநர்களின் நன்மைக்காக சொத்துகள் ஏதேனும் குறித்தளிப்பு.

வங்கிமுறிவு கடனாளி மற்றும் சாட்டுணித்து குறித்த சில கொடுப்பன வுகளின் வலிதான தண்மை

**133.** (1) கடன் ஏற்பாடுடன் ஈடுபாடுடைய அல்லது கொடுக்கல் வாங்கல் ஒன்றுடன் திறத்தவராக உள்ள அல்லது இருந்திருக்கின்ற கடனாளி ஒருவருக்கு எதிராக வங்கிமுறிவு கட்டளையொன்று ஆக்கப்பட்டிருக்கின்றவிடத்து இந்தப் பிரிவு ஏற்புடைமையாகின்றது.

(2) நீதிமன்றமானது, வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப் பாளரின் விண்ணப்பத்தின் மீது கொடுக்கல் வாங்கலானது மட்டுமீறியதாக இருப்பின் அல்லது இருந்திருப்பின் மற்றும் வங்கிமுறிவு தொடங்குவதற்கு முன்னர் இரண்டு ஆண்டு களுக்கு மேற்பட்ட காலப் பகுதியில் பதிவு செய்யாதிருப்பின், கொடுக்கல் வாங்கல் தொடர்பில் கட்டளையொன்றை ஆக்கலாம்.

(3) இந்தப் பிரிவின் நோக்கங்களுக்காக மட்டுமீறிய கொடுக்கல் வாங்கல் என்பது கடனை வழங்குகின்ற ஆள் அது தொடர்பான இடர்களை ஏற்றுக் கொள்வதாகும் -

(அ) கடன் வழங்குகை தொடர்பில் நிபந்தனையற்ற முறையில் அல்லது குறித்த சில எதிர்பாரா நிலைமைகளில் மொத்தமாக பாரியளவிலான கொடுப்பனவுகளை தேவைப்படுத்துகின்ற அத்த கைய நியதிகள் இருக்கின்றன அல்லது இருந்தன் அல்லது

(ஆ) வேறு விதமாக இது நியாயமான கையாள்கையின் வழமையான கோட்பாட்டு நெறிகளை மொத்தமாக மீறியுள்ளது;

முரணானது என எண்பிக்கப்பட்டாலொழிய பிரிவின் கீழ் விண்ணப்பம் ஒன்று செய்யப்பட்டமை தொடர்பில் அல்லது விடயத்திற்கு ஏற்ற வகையில் இது மட்டுமீறியதாக ஊகிக்கப்படுதல் வேண்டும்.

(4) ஏதேனும் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் பிரிவின் கீழான கட்டளையொன்று அவசியமானவாறாக, பின்வருவனவற்றுள் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவைகளை கொண்டிருக்கலாம் :-

(அ) கொடுக்கல் வாங்கலினால் உருவாக்கப்பட்ட ஏதேனும் கடப்பாட்டின் முழுமையாக அல்லது பகுதியாக புறத்தொதுக்கின்ற ஏற்பாடு;

(ஆ) கொடுக்கல் வாங்கல் நியதிகள் வேறு விதமாக வேறுபடுகின்ற அல்லது கொடுக்கல் வாங்கல் நோக்கங்களுக்காக ஏதாவது பிணைபொறுப்பு மீதான வேறுபடுகின்ற நியதிகள் காணப்பட்ட ஏற்பாடு;

(இ) கொடுக்கல் வாங்களின் பயனைக்கொண்டு, வங்கிமுறிவு கடனாளியினால், கொடுக்கல் வாங்களில் திறத்தவராக இருக்கின்ற அல்லது திறத்தவராக இருக்கின்ற எவரேனும் ஆளொருவரை, அவ் ஆளுக்கு செலுத்தப்பட்ட எவையேனும் பணத் தொகைகளை வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப் பாளருக்கு செலுத்துவதற்கு தேவைப்படுத்துகின்ற ஏற்பாடு;

(ஈ) கொடுக்கல் வாங்கல் நோக்கங்களுக்காக பிணை பொறுப்பாக எவரேனும் ஆளினால் வைத்திருக்கப் பட்டுள்ள ஏதேனும் ஆதனத்தை வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளருக்கு ஒப்படைப்பதற்கு எவரேனும் ஆளை தேவைப்படுத்துகின்ற ஏற்பாடு;

(உ) எவரேனும் ஆட்களுக்கிடையில் எடுக்கப்பட வேண்டிய கணக்குகளை பணிக்கின்ற ஏற்பாடு.

(5) இந்தப் பிரிவின் கீழான கட்டளையொன்றுக்கிணங்க வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளருக்கு செலுத்தப்படுவதற்கு அல்லது ஒப்படைக்கப்படுவதற்கு தேவைப்படும் எவையேனும் பணத்தொகை அல்லது ஆதனங்கள் வங்கிமுறிவு மரணச்சொத்தில் உள்ளடக்கப்படல் வேண்டும்.

(6) குறை மதிப்பிடப்பட்ட கொடுக்கல் வாங்கல் ஒன்றாக கொடுக்கல் வாங்கல் தொடர்பில் இச் சட்டத்தின் கீழ் எவையேனும் தத்துவங்களை ஒருமைபாட்டுடன் ஏதேனும் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் இப்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்கள் பிரயோகிக்கப்படற்பாலதாதல் வேண்டும்.

வங்கிமுறிவுக்கு முன்னர் பூரணப்படுத்தினாலொழிய, நிறைவேற்றல், அல்லது ஏனைய செயன்முறைகளினால் நன்மை இல்லை

**134.** (1) அவசியமானவாறான அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் மீது நீதிமன்றத்தின் அனுமதி தவிர்ந்த வங்கிமுறிவு ஆரம்பிக்கப்படுவதற்கு ஆகக் குறைந்தது நூற்று எண்பது நாட்களுக்கு முன்னர் நிறைவேற்றல் அல்லது ஏனைய சட்ட ரீதியான செயன்முறைகள் அல்லது இடர் பூரணப்படுத்தப்பட்டிருந்தாலொழிய வங்கிமுறிவு கடனாளி; அல்லது வங்கிமுறிவு கடனாளின் ஆதனம் ஆகியவற்றுக்கு எதிராக (2) ஆம் உட்பிரிவிற்கமைய கடன்கொடுநர் ஒருவர் ஏதேனும் நிறைவேற்றுகை அல்லது ஏனைய சட்ட செயன்முறை அல்லது இடர் என்பவற்றின் நன்மைகளுக்கு உரித்துடையவராகமாட்டார்.

(2) (1) ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக –

(அ) அசையும் அல்லது அசையாத ஆதனம் ஒன்றுக்கு எதிரான நிறைவேற்றுகையொன்று கைப்பற்றுகை மூலம் அல்லது பெறுநரின் அல்லது நியமித்தரின் அல்லது நிறைவேற்றுகை பொறுக்கப்பட்ட ஆளின் உடைமையில் நுழைதல் மூலம் மற்றும் பூரணப்படுத்தப்பட்ட விற்பனைமூலம் பூரணப் படுத்தப்பட்டுள்ளது; மற்றும்; அத்துடன்

(ஆ) தனிசின் இணைப்பொன்று தனிசின் திருப்தியினால் பூரணப்படுத்தப்பட்டுள்ளது.

(3) நன்னோக்குடன் வங்கிமுறிவு கடனாளியின் ஆதனத்தை கொள்ளல் செய்தவரான ஆள் ஒருவர் -

(அ) நிறைவேற்றல் செயன்முறையுடன் பொறுப்பிக்கப் பட்ட பிசுக்காலிடமிருந்து, அல்லது

(ஆ) அறவீடு செய்யப்பட்ட இடரின் மீது.

வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளர் மற்றும் வங்கிமுறிவு கடனாளி; என்போருக்கு எதிராக நல் உரித்தொன்றை கொள்கின்றார்.

(4) இப்பிரிவிலுள்ள எதுவும் 412, 413, 414, 415, 416, 417, 418 அல்லது 419 எனும்; பிரிவின் ஏற்புடமையை பாதித்தலாகாது அல்லது மட்டுப்படுத்தலாகாது.

வங்கி முறிவிட பிசுக்காலின் கடமைகள்

**135.** (1) நூற்றி முப்பத்து நான்காம் பிரிவின் கருத்தினுள் வங்கிமுறிவு ஆரம்பிக்கப்படுவதற்கு ஆகக் குறைந்தது நூற்று எண்பது நாட்களுக்கு முன்னர் விதிக்கப்பட்ட ஆனால் பூரணப்படுத்தப்படாத வங்கிமுறிவு கடனாளியின் ஆதனத் திற்கு எதிராக நிறைவேற்று செயல்முறைக்கு பிரிவு ஏற்புடைமையாகின்றது.

(2) வேறு ஏதேனும் சட்டவாக்கம் எது எவ்வாறிருப்பினும், (3) ஆம் உட்பிரிவிற்கு அமைய, மற்றும் நிறைவேற்றுகை கடன்கொடுநரின் விண்ணப்பத்தின் மீது நீதிமன்றம் வேறு வகையில் கட்டளையிட்டாலொழிய, பிசுக்கால்; செயல்முறை குகந்தளவு விரைவாக வங்கிமுறிவு தொடங்கியதன் பின்னர்:-

(அ) நிறைவேற்றல் செயன்முறையின் விளைவாக பிசுக்காலின் உடைமையில் அல்லது கட்டுக் காப்பில் பிசுக்காலின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள வருகின்ற அல்லது இருக்கின்றதான வங்கிமுறிவு கடனாளியின் ஏதேனும் ஆதனத்தை வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளருக்கு ஒப்படைத்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளரை பின்வருவன செலுத்தப்படுவதற்கு செய்வித்தல் வேண்டும்.

(i) நிறைவேற்றுகை செயன்முறையின் கீழ் வங்கி முறிவு கடனாளியின் ஆதனத்தின் தேறியப் பெறுகையின் எவையேனும் வரும்படிகள்;

(ii) நிறைவேற்றுகை செயன்முறையின் கீழ் பெற்றுகொள்ளப்பட்ட அல்லது கைப்பற்றப் பட்ட வங்கிமுறிவு கடனாளின் எவையேனும் பணம்; அத்துடன்

(iii) நிறைவேற்றுகை செயன்முறையின் கீழ் வங்கி முறிவு கடனாளியினது ஆதனத்தின் கைப்பற்றுகை அல்லது விற்பனை என்பவற்றை தடுப்பதற்கு செலுத்தப்பட்ட எவையேனும் பணம்.

அத்தகைய வரும்படிகள்; அல்லது பணங்கள் –

(அ) பிசுக்காலின் உடைமையாக அல்லது கட்டுக்காப்பில் அல்லது பிசுக்காலின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்குமிடத்து அல்லது வருமிடத்து; அல்லது

(ஆ) நீதிமன்றத்திற்கு செலுத்தப்பட்டிருக்கின்ற (ஏற்கனவே செலுத்தப்படாமல் இருத்தல்).

(3) பிசுக்கால் -

(அ) ஓராம் (ஆ) எனும் பந்தியின் உட்பிரிவின் கீழ் ஒப்படைக்கப்பட்ட ஆதனத்திலிருந்து, பிசுக்காலினால் பெறப்பட்ட விடயத்திற்கேற்ப நிறைவேற்றுச் செயன்முறை அல்லது இணைப்பின் ஆகு செலவுகளை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு நியாயமான அளவு பிசுக்கால் தீர்மானிக்கின்றதான ஆதனத்தின் பெறுமதியை தக்கவைக்கலாம் அல்லது தக்கவைக்கப்படுவதற்கு செய்விக்கலாம்; அல்லது

(ஆ) ஓராம் (ஆ) எனும் பந்தியின் உட்பிரிவின் கீழ் செலுத்தப்பட்ட வரும்படிகள் அல்லது பணங்களிலிருந்து விடயத்திற்கேற்ப, பிசுக்காலினால் உறப்பட்ட நிறைவேற்றுச் செயன்முறை அல்லது இணைப்பின் ஆகு செலவுகளை தக்கவைக்கலாம் அல்லது தக்கவைக்கச் செய்விக்கலாம்.

## அத்தியாயம் 9

### ஆதனத்தை பகிர்ந்தளித்தல்

வங்கி முறிவில் பகிர்ந்தளிப் புகள்

**136.** வங்கிமுறிவின் செலவுகளுக்காக அவசியமான வாறான அத்தகைய தொகைகளின் வைத்திருப்புக்கமைய 111 ஆம் பிரிவு மற்றும் நான்காம் அட்டவணை என்ப வற்றுக்கிணங்க, உரிமைக்கோரிக்கைகளை செலுத்தும் நோக்கத்துக்காக கையிருப்பில் போதியளவு நிதியை வங்கி முறிவு நம்பிக்கைப்பொறுப்பாளர் கொண்டிருக்கும்போதெல் லாம், 429 ஆம் பிரிவுக்கிணங்க வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாளர் பகிர்ந்தளிப்பொன்றை செய்தல் வேண்டும்.

## அத்தியாயம் 10

### வங்கிமுறிவின் முடிவு

வங்கிமுறிவுக் காலப் பகுதி

**137.** (1) வங்கிமுறிவு கட்டளை திகதியிலிருந்து மூன்று ஆண்டுகள் எனும் காலப்பகுதியின் பின்னர் செயல்முறைக்கு கந்தனவு விரைவானதாக ஒதுக்கப்பட வேண்டுடியதான (1) நூற்றிமுப்பதி எட்டாம் பிரிவின் கீழ், விடுவித்தலுக்கான கட்டளையொன்று ஆக்கப்படும் வரை வங்கிமுறிவு தொடர்ந்தும் வலுவிலிருக்கும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டதை விட நீண்டகாலப்பகுதிக்கு வங்கிமுறிவு தொடரலாம், மொத்த காலப்பகுதி கடனாளியின் உள்ளடக்கப்பட்ட தனுசுகள் பத்து மில்லியன் ரூபாய்களை விட விஞ்சாது விடத்து ஏழு ஆண்டுகளை விஞ்சுதலாகாது.

(3) நீதிமன்றம் 141 அல்லது 143 ஆம் பிரிவின் கீழ் விடுவிப்பொன்றை இடைநிறுத்துகின்ற விடத்து வங்கிமுறிவு (1) ஆம் மற்றும் (2) ஆம் உட்பிரிவுகளில் குறித்துரைக்கப் பட்ட காலப் பகுதியை விட நீண்ட காலப்புதிக்கு தொடர முடியும்.

(4) மூன்றாம் உட்பிரிவின் கீழ் விடுவித்தலொன்றை நீதிமன்றமானது இடைநிறுத்தும் போது, வங்கிமுறிவு கட்டளை திகதியிலிருந்து நீதிமன்றமானது பின்வருவன வற்றின் முடிவின் பின்னரான ஓர் ஆண்டுக்கு தக்கதாக இருக்ககூடிய விடுவித்தலுக்கான மாற்றீட்டுத் திகதியை குறித்துரைத்தல் வேண்டும் -

(அ) ஓராம் உட்பிரிவு ஏற்புடையாகின்றவிடத்து, மூன்று ஆண்டு காலப்பகுதி; அல்லது

(ஆ) இரண்டாம் உட்பிரிவு ஏற்புடைமையாகின்ற விடத்து, ஏழு ஆண்டுகள் எனும் காலப் பகுதி,

**138.** (1) கடனாளியின் உள்ளடக்கப்பட்ட தனிசுகளின் தொகை பத்து மில்லியன் ரூபாவை விஞ்சாது இருக்கின்ற சந்தர்ப்பத்தில் வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாளர் வங்கிமுறிவு கட்டளை தேதியிலிருந்து மூன்றாண்டு எனும் காலப்பகுதியின் முடிவின் மீது வங்கிமுறிவு கடனாளியின் விடுவிப்பை உறுதிப்படுத்துகின்ற கட்டளையொன்றுக்காக நீதிமன்றத்துக்கு விண்ணப்பமொன்றைச் செய்தல் வேண்டும். விடுவித்தல்

(2) வங்கிமுறிவு கட்டளை தேதியிலிருந்து மூன்று ஆண்டுகள் எனும் காலப் பகுதி காலாவதியானதன் முடிவின் பின்னரான முப்பது நாட்கள் எனும் காலப் பகுதியினுள் வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளர் (1) ஆம் உட்பிரிவின் கீழ் விண்ணப்பம் ஒன்றினை வங்கிமுறிவு கடனாளியின் விடுவிப்பை இன்மை செய்திருக்காவிடின் உறுதிப்படுத்து கின்ற கட்டளையொன்றுக்காக நீதிமன்றத்திற்கு விண்ணப்பம் ஒன்றினை கொண்டு வரலாம் என்பதுடன் சான்றிதழையும் வழங்கலாம்.

(3) ஓராம் அல்லது (2) ஆம் உட்பிரிவின் கீழ் விண்ணப்பம் ஒன்று கிடைக்கப்பெற்றதின் மீது, கீழுள்ள 140 ஆம் பிரிவின் கீழ் விடுவித்தலுக்கு சவால் விடுக்கின்ற விண்ணப்பம் ஒன்று செய்யப்பட்டிருந்தாலொழிய நீதிமன்றமானது தொண்ணூறு நாட்கள் காலப் பகுதியினுள் விடுவித்தல் கட்டளை யொன்றினை ஆக்கலாம்.

(4) மூன்றாம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட நீதிமன்ற கட்டளையான வங்கிமுறிவு கட்டளைத் திகதியிலிருந்து மூன்று ஆண்டுகள் எனும் காலப் பகுதியின் முடிவின் மீது வங்கிமுறிவு கட்டளையிலிருந்து வங்கிமுறிவு கடனாளி விடுவித்தலுக்கான ஏற்பாடு செய்தல் வேண்டும்.

(5) வங்கிமுறிவு கட்டளையிலிருந்தான விடுவிப்பின் மீது, வங்கிமுறிவு கடனாளியினது உள்ளடக்கப்பட்ட தனிசுகள் இரத்துச் செய்யப்படலாம் என்பதுடன், அத்தனிசுகள்

தொடர்பில் செலுத்தப்படற்பாலதான தவிர்க்ககூடியதான எவையேனும் தண்டங்கள் வட்டிகள் மற்றும் ஏனைய தொகைகள் உள்ளடங்கலாக தனிசுகளின் ஏதேனும் பாகத்தை செலுத்துவதற்கு வங்கிமுறிவு கடனாளி ஆளாக மாட்டார்.

(6) இப்பிரிவுகளின் கீழான தனிசுகளின் விடுவிப்பு 37 ஆம் பிரிவின் கீழான விலக்கப்பட்ட தனிசொன்றாக குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் தனிசு அல்லது பொறுப்பிலிருந்து வங்கிமுறிவு கடனாளியை விடுவித்தலாகாது.

(7) இப்பிரிவின் கீழான விடுவிப்பொன்று விடுப்புத் தேதியில் உள்ள பின்வருவோரை ஏதேனும் பொறுப்பிலிருந்து எவரேனும் ஆளை விடுவித்தலாகாது,

(அ) விடுவிக்கப்பட்ட கடனாளியின் வியாபார பங்குதாரர்;

(ஆ) விடுவிக்கப்பட்ட கடனாளியுடனான கூட்டு நம்பிக்கை பொறுப்பாளர்;

(இ) விடுவிக்கப்பட்ட கடனாளியுடன் கூட்டாக பிணிக்கப்பட்ட அல்லது ஒப்பந்தம்; செய்தவர்; அல்லது

(ஈ) விடுவிக்கப்பட்ட கடனாளியின் உத்தரவாத மளிப்பவர் அல்லது உத்தரவாதமளிக்கும் தன்மையில் உள்ளவர்.

விடுவித்தல் உயர் பெறுமதி வங்கிமுறிவுகள்

**139.** (1) கடனாளியின் உள்ளடக்கப்பட்ட தனிசுகளின் தொகை பத்து மில்லியன் ரூபாவை விஞ்சியுள்ள சந்தர்ப் பத்தில், வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாளர் வங்கிமுறிவு கட்டளை தேதியிலிருந்து ஏழு ஆண்டுகள் எனும் காலப் பகுதியின் முடிவின் மீது வங்கிமுறிவு கடனாளியின் விடுவிப்பை உறுதிப்படுத்துகின்ற கட்டளை ஒன்றுக்காக நீதிமன்றத்திற்கு விண்ணப்பித்தல் வேண்டும்.

(2) வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளர் வங்கிமுறிவு கட்டளைத் திகதியிலிருந்து ஏழு ஆண்டுகள் எனும் காலப்பகுதியின் பின்னரான முப்பது நாட்கள் எனும் காலப் பகுதியினுள் (1) ஆம் உட்பிரிவின் கீழ்; விண்ணப்பம் ஒன்றினை இன்னும் செய்திருக்கவில்லை வங்கிமுறிவு

கடனாளி வங்கிமுறிவு கடனாளியின் விடுவிப்பை உறுதிப் படுத்துகின்ற கட்டளையொன்றுக்காக நீதிமன்றத்திற்கு விண்ணப்பம் ஒன்றினை கொண்டு வரலாம்.

(3) ஓராம் அல்லது இரண்டாம் உட்பிரிவின் கீழான விண்ணப்பம் ஒன்று கிடைக்கப் பெற்றதன் மீது நீதிமன்றம் 140 ஆம் பிரிவின் கீழ் விடுவித்தல் செய்யப்பட்ட சவால் படுத்தினாலொழிய நீதிமன்றமானது தொண்ணூறு நாட் களினுள் விடுவித்தல் கட்டளையொன்றினை ஆக்குதல் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட நீதிமன்ற கட்டளையானது வங்கிமுறிவு கட்டளை தேதியிலிருந்து ஏழு ஆண்டுகள் எனும் காலப் பகுதியின் முடிவின் மீது வங்கிமுறிவு கட்டளையிலிருந்து வங்கிமுறிவு கடனாளி விடுவிக்கப்பட்டுள்ளரென ஏற்பாடு செய்தல் வேண்டும்.

(5) வங்கிமுறிவு கட்டளையிலிருந்து விடுவிக்கப்பட்டதன் மீது, வங்கிமுறிவு கடனாளியின் உள்ளடக்கப்பட்ட தனிசுகள் இரத்துச் செய்யப்பட வேண்டும் என்பதுடன், வங்கிமுறிவு கடனாளி அத்தனிசு தொடர்பில் செலுத்தற்படற்பாலதாக வரக்கூடியதான எவையேனும் பண்டங்களின், வட்டி மற்றும் ஏனைய தொகைகள் உள்ளடங்கலாக தனிசுகளின் ஏதேனும் பாகத்தை செலுத்துவதற்கு ஆளாகமாட்டார்.

(6) இப்பிரிவுகளின் கீழ் தனிசுகளின் விடுவிப்பு 37 ஆம் பிரிவின் கீழான விலக்கப்பட்ட தனிசொன்றாக குறித்துரைக் கப்பட்ட ஏதேனும் தனிசிலிருந்து அல்லது பொறுப்பிலிருந்து வங்கிமுறிவு கடனாளியை விடுவித்தலாகாது.

(7) இப்பிரிவின் கீழான விடுவிப்பொன்று விடுவிப்பு தேதியில் உள்ள பின்வருவோரை ஏதேனும் பொறுப்பிலி ருந்து எவரேனும் ஆளை விடுவித்தலாகாது,

(அ) விடுவிக்கப்பட்ட கடனாளியினை வியாபார பங்கு தாரர் ஒருவர்;

(ஆ) விடுவிக்கப்பட்ட கடனாயுடனான கூட்டு நம்பிக்கை பொறுப்பாளர் ஒருவர்;

(இ) விடுவிக்கப்பட்ட கடனாளியுடன் கூட்டாக பணிக்கப்பட்ட அல்லது ஒப்பந்தம் செய்பவர்; அல்லது

(ஈ) விடுவிக்கப்பட்ட கடனாளியின் உத்தரவாதமளிப் பவர் அல்லது உத்தரவாதமளிப்பவரின் தன்மையில் உள்ளவர்.

விடுவித்தலை சவாலுக்குட் படுத்துவதற் கான விண்ணப்பம்

**140.** (1) நம்பிக்கை பொறுப்பாளர் அல்லது கடன்கொடு ஒருவர் வங்கிமுறிவு கடனாளியின் விடுவிப்பை சவாலுக்குட் படுத்துவதற்கு நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்கலாம்.

(2) வங்கிமுறிவு கடனாளியின் விடுவிப்பை சவாலுக்குட் படுத்துவதற்கான நீதிமன்றத்திற்கு செய்யும் விண்ணப்பம் ஒன்று வேறு வகையில் இடம்பெறுகின்றதான ஆனால் இவ்விண்ணப்பத்திற்கான தேதியின் முன்னரான ஆகக் குறைந்தது நூற்றி எண்பது நாட்களினுள் செய்யப்படுத்தல் வேண்டும்.

(3) எவ் ஏதுக்களை விண்ணப்பம் அடிப்படையாக கொண்டுள்ளதோ அவ் ஏதுக்களை உள்ளடக்கி விடுவிப்பை சவாலுக்குட்படுத்துவதற்கான விண்ணப்பம் ஒன்று பற்றி விண்ணப்பதாரர் வங்கிமுறிவு கடனாளிக்கு எழுத்துமூல அறிவித்தலை வழங்குதல் வேண்டும்.

(4) விண்ணப்காரர் வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப் பாளராக இருக்கின்றவிடத்து விண்ணப்பகாரர் விண்ணப்பம் பற்றிய எழுத்து மூலமான அறிவித்தலை கடன்கொடுநருக்கு வழங்குதல் வேண்டும்.

(5) விண்ணப்பகாரர் கடன்கொடுநராக உள்ளவிடத்து, விண்ணப்பம் பற்றிய எழுத்து மூலமான அறிவித்தலை வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளருக்கு விண்ணப்பகாரர் வழங்குதல் வேண்டும்.

(6) விடுவித்தலை சவாலுக்குட்படுத்துவதற்கு நீதிமன் றத்திற்கு செய்யும் விண்ணப்பம் ஒன்று 32, 112, 113 மற்றும் 114 ஆம் பிரிவுகளில் குறித்துரைக்கப்பட்டதான, கொடுமதி யாகியுள்ள கடப்பாடுகளுடன் இணக்கியொழுகுவதற்கு கடனாளிகளுக்கான ஏதுக்களின் மீதான அடிப்படையாகி இருத்தல்.

(7) வங்கிமுறிவு கடனாளியின் விடுவிப்பை எதிர்ப்ப தற்கான விண்ணப்பம் ஒன்று கிடைக்கப் பெற்றதன் மீது நீதிமன்றம் அவ் விண்ணப்பம் கிடைக்கப் பெற்றதன் பின்னரான நாற்பத்து ஐந்து நாட்களில் சொல்லப்பட்ட விண்ணப்பத்தின் கேட்பிற்காக திகதி ஒன்றை நிர்ணயித்தல் வேண்டும்.

(8) நீதிமன்றம் விடுவிப்பை எதிர்வாதிடுவதற்கான விண்ணப்பத்தின் கேட்புபற்றி வங்கிமுறிவு கடனாளி மற்றும் கடன்கொடுநர்களுக்கு எழுத்துமூல அறிவித்தலை வழங்குதல் வேண்டும்.

விடுவித்தலின் இடைக்கால இடைநிறுத்தி வைப்பு

**141.** (1) வங்கிமுறிவு கடனாளியின் விடுவிப்பை சவாலுக் குட்படுத்துவதற்கான விண்ணப்பமொன்று கிடைக்கப் பெற்றதன் மீது நீதிமன்றம் விடுவிப்பை இடைநிறுத்துகின்ற கட்டளையொன்று கணிசமான அளவிலான கேட்பின் பின்னர் ஆக்கப்பட்ட முடியுமென முடிவு செய்வதற்கான நியாயமான ஒதுக்கள் உள்ளதென திருப்திப்படின், கேட்பு இடம்பெறும் வரையும், நீதிமன்றம் வங்கிமுறிவு கடனாளியின் விடுவிப்பை தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கான இடைக்கால கட்டளையொன்றை ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் இடைக்கால கட்டளை யொன்றினை ஆக்குகின்ற போது, 32, 112, 113 மற்றும் 114 ஆம் பிரிவுகளில் குறித்துரைக்கப்பட்ட தனிப்பட்ட கடனி றுக்கவகையின்மை கடமைகள் வங்கிமுறிவு கடனாளி இணங்கியொழுகாதிருக்கும் அளவுக்கு புலனாய்வு செய்வ தற்கு வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளருக்கு நீதிமன்றம் கட்டளையை ஆக்கலாம்.

(3) நூற்றி நாப்பதாம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்கு வெளியே நம்பிக்கைப் பொறுப்பாளர் அல்லது கடன்கொடுநர் ஆகியோரினால் வங்கிமுறிவு கடனாளியின் விடுவித்தலை சவாலுக்குட் படுத்துவதற்கான விண்ணப்பம் ஒன்று முன்வைக்கப்பட்டிருக் கின்றவிடத்து, நீதிமன்றம் பின்வருமாறு திருப்தியுறுமிடத்து, தாமதமான விண்ணப்பம் ஒன்றினை சமர்ப்பிப்பதற்கு நீதிமன்றம் அனுமதிக்கலாம் -

(அ) விண்ணப்பதாரியின் கட்டுப்பாடுகளுக்கு அப்பால் தவிர்க்கமுடியாத சூழ்நிலைகளினால் விண்ணப்பத்

தினை சமர்ப்பிப்பதில் தாமதம் ஏற்பட்டிருக்கு மிடத்து; அல்லது

(ஆ) நூற்றிநாற்பதாம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட காலப் பகுதியின்போது விண்ணப்பதாரி அறிந்திருக்கவில்லை என்ற நிகழ்வுகளை நிலைநாட்டியுள்ளவிடத்து.

(4) வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாளரினால் வங்கிமுறிவு கடனாளியினது அலுவல்கள் பற்றிய மேலதிக புலனாய்வுகளை விடுவித்தலை சவாலுக்குட்படுத்துவதற்கான முன்னர் என நீதிமன்றம் கருதுகின்றவிடத்து, மேலதிக இடைக்கால கட்டளையொன்றினை நீதிமன்றம் வழங்கலாம்-

(அ) வங்கிமுறிவு கடனாளியினது விடுவித்தலை தற்காலிகமாக இடைநிறுத்துதல்; அத்துடன்

(ஆ) அத்தகைய புலனாய்வு இடம்பெறுவதற்கு நியாய மான அளவு அவசியமான காலப்பகுதிக்கு ஒன்றிற்காக கேட்பினை பிற்போடுதல். (5) ஓராம் மற்றும் (4) ஆம் உட்பிரிவுகளின் கீழ் இடைக்கால கட்டளையொன்றை ஆக்கவேண்டுமா வழங்கு வதா அல்லது (3) ஆம் உட்பிரிவின் கீழ் பிந்திய விண்ணப்பம் ஒன்றினை அனுமதிக்க வேண்டுமா என்பதனை தீர்மானிக்கும் போது, நீதிமன்றம் வங்கிமுறிவு காலப் பகுதியின் நீடிப்பில் இருந்து விளையக்கூடிய வங்கிமுறிவு கடனாளிக்கான ஏதேனும் நியாயமற்ற தன்மையை உரிய முறையில் கருத்தில் கொண்டிருத்தல் வேண்டும்.

விடுவித்தலை சவாலுக்குட் படுத்துவதற் கான விண்ணப்பம்: வங்கிமுறிவு அறிக்கை

**142.** (1) நூற்றுநாற்பதாம் பிரிவின் கீழ் விடுவித்தலை சவாலுக்குட்படுத்துவதற்கான விண்ணப்பம் ஒன்று செய்யப் பட்டிருக்கும் போது வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாளர் வங்கிமுறிவு அறிக்கையொன்றை தயாரித்தல் வேண்டும் என்பதுடன் நீதிமன்றத்தில் அதனை கோப்பிடுதல் வேண்டும்.

(2) வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளர் பின்வருவன தொடர்பில் அறிக்கையிடல் வேண்டும் -

(அ) வங்கிமுறிவு கடனாளியினது அலுவல்கள்,

(ஆ) இந்தச் சட்டத்தின் கீழ் கடனாளிகளின் மீது விதிக்கப்பட்ட கடப்பாடுகளை வங்கிமுறிவு கடனாளி; நிறைவேற்றியுள்ளார் அல்லது நீதிமன்ற கட்டளைகளுக்கு கீழ்படிந்துள் ளாளர் எனும் முறையில்,

(இ) விடுவித்தலை மறுப்பதற்கான ஏதுக்களிள் உள்ளனவா எனும் நம்பிக்கை நோக்கு; அத்துடன்

(ஈ) வங்கிமுறிவு கடனாளியினது விடுவித்தலுக் கான முடிபொன்றை செய்வதில் நம்பிக்கைப் பொறுப்பாளர் நீதிமன்றத்திற்கு உதவக் கூடியதென கருதுவதற்கான காரணத்தை கொண்டிருக்கின்றார் என வங்கிமுறிவு தொடர்பிலான வேறு ஏதேனும் கருமம்.

(3) விடுவித்தலை சவாலுக்குட்படுத்துவதற்கான விண்ணபத்தின் கேப்பிற்கு முற்கூட்டி வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாளர் ஆகக் குறைந்தது இருபத்தொரு நாட்களில் வங்கிமுறிவு அறிக்கை பற்றிய எழுத்திலான அறிவித்தலை கடனாளிக்கும் மற்றும் கடன்கொடுநர்களுக்கும் வழங்குதல் வேண்டும்.

(4) வங்கிமுறிவு அறிக்கையில் குறித்துரைக்கப் பட்டவை தவிர்ந்த ஏதுக்களின் மீதான விடுவிப்பை கடன்கொடுநர் ஒருவர் சவாலுக்குட்படுபவரின், கடன் கொடுநர் அத்தகைய ஏதுக்களை சவாலுக்குட்படுத்து வதற்கான விண்ணபத்தின் கேப்பிற்கு முற்கூட்டி பத்து நாட்களை விட குறையாது வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாளரின் வங்கிமுறிவு கடனாளிக்கும் எழுத்தி லான அறிவித்தலை வழங்குதல் வேண்டும்.

விடுவித்தலை சவாலுக்குட் படுத்துவதற் கான விண் ணப்பத்தின் நீதிமன்ற தீர்மானம்

**143.** (1) விடுவித்தலை சவாலுக்குட்படுத்துவதற்கான விண்ணப்பம் ஒன்றின் கேப்பின் மீது நீதிமன்றம் பின்வருமாறான சூழ்நிலைகளை கருத்திற் கொள்ளலாம்,

(அ) உடனடியாக மற்றும் எவ்வித நிபந்தனை களும் இன்றி வங்கிமுறிவு கடனாளியை விடுவித்தல்; அல்லது

(ஆ) வங்கிமுறிவு கடனாளியை விடுவித்தல் ஆனால் நிர்ணயிக்கப்பட்ட காலப் பகுதிக்கு கட்டளையை இடைநிறுத்தல்.

(2) விடுவிப்புக் கட்டளை ஒன்றை நீதிமன்றம் இடைநிறுத்துகின்றவிடத்து, கட்டளையின் பயனானது பின்வரும் காலப்பகுதியின் முடிவின் பின்னரான ஒருவருடகாலத்திற்கு பிந்தாமல் வங்கி முறிவுக் கடனாளி விடுவிக்கப்படுதல் வேண்டும்-

வங்கிமுறிவு கட்டளை திகதியிலிருந்து.

(அ) நூற்றிமுப்பத்தியேழாம் மற்றும் 138 ஆம் பிரிவு களின் (1) ஆம் உட்பிரிவு ஏற்புடையதாக இருக்கின்றவிடத்து, மூன்று ஆண்டுகள் எனும் காலப் பகுதி; அல்லது

(ஆ) நூற்றிமுப்பத்தியேழாம் மற்றும் 138 ஆம் பிரிவு களின் (2) ஆம் உட்பிரிவு ஏற்புடையதாகின்ற விடத்து, ஏழு ஆண்டுகள் எனும் காலப் பகுதி,

வங்கிமுறிவு விடுவித்தலை இல்லா தொழித்தல்

**144.** (1) நீதிமன்றம், வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளர் அல்லது கடன்தருநர் ஒருவரின் விண்ணப்பத்தின் மீது மற்றும் வங்கிமுறிவு கடனாளிக்கு அறிவித்தலை வழங்கியதன் பின்னர் மற்றும் மின் பின்னர், 138 அல்லது 139 ஆம் பிரிவின் கீழ் அளிக்கப்பட்ட விடுவித்தலை இல்லா தொழிக்கலாம்.

(2) பிரிவின் கீழ் விடுவித்தலொன்றை இல்லாதொழிப்ப தற்கான விண்ணப்பம் ஒன்று விடுவித்தலின் பின்னரான ஓர் ஆண்டுக்கு முன்னரான காலத்திற்கு மட்டும் செய்யப்படலாம்.

(3) நீதிமன்றம் பின்வருமாறு திருப்திப்படின் மாத்திரம் இப் பிரிவின் கீழான விடுவித்தலொன்றை நீதிமன்றம் இல்லாதொழிக்கலாம்:-

(அ) வங்கிமுறிவு கடனாளியின் மோசடியின் மூலமாகவே விடுவித்தல் பெறப்பட்டது; மற்றும் அத்தகைய விடுவித்தலுக்கு பின்னர் வரை

அத்தகைய மோசடி பற்றி விண்ணப்பதாரி அறிந்திருக்கவில்லை என அல்லது;

(ஆ) முப்பத்திநான்கு 35 மற்றும் 36 ஆம் பிரிவுகளின் விதிகளின் கீழ் அத்தகைய வருமானமும் ஆதனமும் கடன்கொடுநர்களுக்கான பகிர்ந்தளிப்பதிலிருந்து விதிவிலக்களிக்கப்படாதவிடத்து, வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாளருக்கு வருமானம் மற்றும் ஆதனம் பற்றி அறிக்கை இடுவதற்கு மோசடியான உட்கருத்துடன் வங்கிமுறிவு கடனாளி; தவறியுள்ளார்,என

(4) இப்பிரிவின் கீழ் விடுவித்தலை இல்லாதொழித்த லானது வங்கிமுறிவு கடனாளியை தவிர வேறு எவரேனும் ஆளும் அந்த விடுவித்தலை இல்லாதொழித்திருக்காவிடின் உரிமைகளை அல்லது பரிகாரங்களை பங்கம் விளைவிக்காது அல்லது பாதிக்காது.

(5) விடுவித்தலின் பின்னர் வங்கிமுறிவு கடனாளியினால் கொள்ளப்பட்டிருக்கின்றதான மற்றும் இல்லாதொழித்தல் தேதியன்று வங்கிமுறிவு கடனாளிக்கு உரித்தாக்கப்பட்ட ஆதனம் –

(அ) எவையேனும் வில்லங்கங்களுக்கு அமைய, வங்கி முறிவு நம்பிக்கைப் பொறுப்பாளருக்கு உரித் தாகின்றது; அத்துடன்

(ஆ) விடுவித்தல் தேதியிலிருந்து வங்கிமுறிவு கடனாளி உறப்பட்டிருக்கின்றதான தனிசுகளை செலுத்து வதற்கு வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாளரி னால் பிரயோகிக்கப்படல் வேண்டும்.

வங்கிமுறிவு கட்டளையை வலுவொழித் தல்

**145.** (1) எந்த நேரத்திலும் நீதிமன்றத்திற்கு பின்வருமாறு தோன்றின் நீதிமன்றம் வங்கிமுறிவு கட்டளையொன்றை வலுவொழிக்கலாம் :-

(அ) கட்டளை ஆக்கப்பட்ட நேரத்தில் காணப்பட்ட ஏலவே எவையேனும் மீது, கட்டளை ஆக்கப் படுதல் ஆகாது; அல்லது

(ஆ) வங்கிமுறிவின் எண்பிக்கப்படற்பாலதான தனிசுகள் மற்றும் செலவுகள் என்பன செலுத்தப்பட்டிருத்தல் அல்லது நீதிமன்றத்தின் திருப்திக்கு பிணைப்பொறுப்பளிக்கப்பட்டிருத்தல்.

(2) வங்கிமுறிவு கடனாளி; வங்கிமுறிவிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்தாலோ அல்லது விடுவிக்கப்படாமல் இருந்தாலோ வங்கிமுறிவு கட்டளையொன்றினை நீதிமன்றம் வலுவொழிக்கலாம்.

(3) வங்கிமுறிவு கட்டளையொன்றினை நீதிமன்றம் வலுவொழிக்கின்றவிடத்து –

(அ) ஆதனத்தின் ஏதேனும் விற்பனை வேறு கையுதிர்ப்பு கொடுப்பனவுகள் அல்லது உரிய முறையில் மேற்கொள்ளப்பட்ட ஏனையவைகள், இப்பாகத்தில் உள்ள ஏதேனும் ஏற்பாடுகளின் கீழ், அல்லது உத்தியோகபூர்வ பெறுநரின், வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாளரின் அல்லது நீதிமன்றத்தின் அதிகாரத்தின் கீழ் முறையாக செய்யப்பட்ட கொடுப்பனவு அல்லது வேறு விடயம் என்பன வலிதாக்கப்படுதல் வேண்டும்; ஆனால்

(ஆ) அத்தகைய ஏதேனும் ஏற்பாடுகளின் கீழ், வங்கிமுறிவு மரணச்சொத்து அப்போது ஏதேனும் நீதிமன்றம் பணிக்கக்கூடிய ஆளிடம் அத்தகைய நியதிகளின் மீது வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாளர் வங்கிமுறிவு கடனாளிக்கு நீதிமன்றம் அல்லது ஏதேனும் அத்தகைய நியமனத்திலுள்ள தவறுகை என்பவற்றை திருப்பலாம் என அத்தகைய ஆளுக்கு உரித்தாக்குதல் வேண்டும்.

வங்கிமுறிவின் பொழுது கடன் மீள்கட்டமைப்பு ஏற்பாட்டிற்கான விண்ணப்பம்

**146.** (1) பாகம் IV இன் கீழ் தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடொன்றுக்கான பிரேரணையொன்றை தயாரிக்கும் நோக்கத்துக்காக, தொண்ணூறு நாட்கள் எனும் மட்டுப்படுத்தப்பட்ட காலப் பகுதியொன்றுக்கு வங்கிமுறிவின் நிருவாகத்தை இடைநிறுத்துவதற்கான கட்டளையொன்றிற்காக வங்கிமுறிவு கடனாளி; நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் நீதிமன்றம் கட்டளை யொன்றை ஆக்கியிருக்கின்றவிடத்து, IV ஆம் பாகத்தில் குறித்துரைக்கப்பட்ட நடவடிக்கைமுறையின் கீழ் தனிசு ஒழுங்கேற்பாடு மீள்கட்டமைப்பு ஒன்றுக்கான பிரேரணை யொன்றை கடனாளி தயாரித்தல் வேண்டும்.

(3) வங்கிமுறிவு கடனாளி; தொடர்பிலான தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டுக்கான பிரேரணையானது 52 ஆம் பிரிவின் கீழ் கடன்கொடுநர்களினால் 54 ஆம் பிரிவின் கீழ் நீதிமன்றத்தினால் உறுதிப்படுத்தப்பட்டிருக்கும் அங்கீகரிக்கப்பட்டு,

(அ) IV ஆம் பாகத்தின் நியதிகளிள் மற்றும் ஏற்பாடுகளுக்கிணங்க, தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடு பயனுறுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடுகளை உறுதிப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை செய்கின்ற நீதிமன்றக் கட்டளையானது 145 ஆம் பிரிவுக் கிணங்க வங்கிமுறிவுக் கட்டளையை வலு வொழிப்பதற்கான ஏற்பாடுகளையும் செய்தல் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவின் கீழ் நீதிமன்றமானது வங்கிமுறிவு கட்டளையொன்றை வலுவொழித்திருக்கின்ற விடத்து, 145 ஆம்; பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் குறித்துரைக்கப்பட்ட பயனுறுதல்களை வலுவொழிப்பு கொண்டிருத்தல் வேண்டும்.

## அத்தியாயம் 11

### உத்தியோகபூர்வ பெறுநர்

வங்கிமுறிவில் கடனாளியினது நடத்தை தொடர்பில் உத்தியோகபூர்வ பெறுநரது தத்துவங்கள்

**147.** (1) உத்தியோகபூர்வ பெறுநர் வங்கிமுறிவு கடனாளி யினது நடத்தை பற்றி புலனாய்வுகளைச் செய்தல் வேண்டு மென்பதுடன் வங்கிமுறிவு கடனாளி; பின்வரும் ஏதேனும் செயலை புரிந்துள்ளார் என நம்புவதற்கான காரணிகளை குறிப்பிட்டு நீதிமன்றத்திற்கு அறிக்கையிடுதலும் வேண்டும்.

(அ) இச் சட்டத்தின் கீழ் அல்லது இச் சட்டத்தினால் நீக்கப்பட்ட ஏதேனும் சட்டவாக்கத்தின் கீழ் அமைத்துருவிக்குபவைகள்; அல்லது

(ஆ) வங்கிமுறிவு கடனாளியினது விடுவித்தலை மறுப்பதில் அல்லது இடைநிறுத்துவதற்கும் நீதிமன்றதை நியாயப்படுத்துபவைகள்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் புலனாய்வு அவசியமற்றது என உத்தியோகபூர்வ பெறுநர் கருகின்றதான சந்தர்ப்பத்தில் அவ்வுட்பிரிவு ஏற்புடைமையாகாது.

(3) நீதிமன்றம் பணிக்கின்றான வங்கிமுறிவு கடனாளியின் நடத்தை தொடர்பான அத்தகைய ஏனைய அறிக்கைகளை உத்தியோகபூர்வ பெறுநர் தயாரித்தல் வேண்டும்.

(4) இப்பிரிவின் கீழ் உத்தியோகபூர்வ பெறுநரின் அறிக்கையொன்றானது அதில் குறிப்பிடப்பட்ட நிகழ்வுகள் எவையேனும் வழக்கு நடவடிக்கைகளில் முதற் தோற்ற சான்றாக இருத்தல் வேண்டும்.

(5) உத்தியோகபூர்வ பெறுநர் வங்கிமுறிவு கடனாளி; பற்றிய பொது விசாரணைகளுக்காக நீதிமன்றத்திற்கு விண்ணப்பிப்பதற்கான உத்தியோகபூர்வ பெறுநரின் தத்துவம் தொடர்பில் 96 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க செயலாற்றுதல் வேண்டும்.

(6) உத்தியோகபூர்வ பெறுநர் 96 ஆம் பிரிவின் கீழ் வங்கிமுறிவு கடனாளியின் பொது விசாரணையில் உத்தியோகபூர்வ பெறுநர் அவசியமானது என கருதுகின்றதான அத்தகைய பாகத்தில் பங்கெடுத்தல் வேண்டும்.

(7) இச் சட்டத்தின் கீழான ஏதேனும் தவறுபற்றி குற்றவழக்கு தொடர்பில் சட்டத்துறை தலைமை அதிபதி பணிக்கின்றதான அத்தகைய உதவிகளை உத்தியோகபூர்வ பெறுநர் வழங்குதல் வேண்டும்.

வங்கிமுறிவில் உத்தியோக பூர்வ பெறுநரது பொதுவான கடமைகள்

**148.** (1) உத்தியோகபூர்வ பெறுநர், 97 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட சூழ்நிலைகளில் வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாளராக செயலாற்றுதல் வேண்டும்.

(2) உத்தியோகபூர்வ பெறுநர், 91 ஆம் பிரிவில் குறித் துரைக்கப்பட்ட சூழ்நிலைகளில் இடைக்கால பெறுநராக செயலாற்றுதல் வேண்டும்.

(3) உத்தியோகபூர்வ பெறுநர், இச்சட்டத்தின் கீழ் விளம்பரம் செய்வதற்கு அல்லது அறிவித்தல் வழங்குவதற்கு அவசியமானதாகவிருக்கக்கூடியதான அத்தகைய எல்லா விடயங்கள் பற்றிய விளம்பரம் செய்து அறிவித்தலை வழங்குதல் வேண்டும்.

## அத்தியாயம் 12

### வங்கிமுறிவில் பங்காண்மை

பங்காண்மையின் சந்தர்ப்பங்களில் வங்கிமுறிவு விண்ணப்பங்கள் மற்றும் வங்கிமுறிவு மனுக்கள்

**149.** (1) குழுமமொன்றின் எல்லாப் பங்காளர்களுக்கும் எதிராக வங்கிமுறிவு மனுவொன்றை முன்வைப்பதற்கு கடன்கொடுநரை உரித்துடையவராக்குவதற்கு போதியளவு தனிசு காணப்படுகின்ற எவரேனும் கடன்கொடுநரை ஏனையவர்களை, உள்ளடக்காத, அக்குழுமத்தின் எவரேனும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பங்களார்களுக்கு எதிராக 85ஆம் பரிவின்கீழ் வங்கிமுறிவு மனுவொன்றினை சமர்ப்பிக்கலாம்.

(2) எண்பத்தோராம் மற்றும் 82 ஆம் பிரிவுகளின் கீழ் வங்கிமுறிவு கட்டளையொன்றுக்கு எல்லாக் கடனாளிகளும் தகுதியுள்ளவர்களாக இருக்கின்றவிடத்து, தொழிலில் பங்காண்மையில் பங்காளர்களாக இருக்கின்ற இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கடனாளிகள் 81 ஆம் பிரிவின் கீழ் கூட்டு வங்கிமுறிவு விண்ணப்பம் ஒன்றினைக் கோப்பிடலாம்.

(3) கூட்டு வங்கிமுறிவு விண்ணப்பமொன்று தொடர்பில் 84 ஆம் பிரிவின் கீழ் வங்கிமுறிவு கட்டளையொன்று ஆக்கப்படும்போது, இக்கட்டளையானது கடனாளிகளுக்கு தனிவேறாகவும் கூட்டாகவும் என இரண்டுக்கும் ஏற்புடமையாகின்றது.

நீதிமன்ற மனுவை தள்ளுபடி செய்தல்

**150.** வங்கிமுறிவு மனுவொன்றுக்கு, ஒன்றுக்கு மேற்பட்ட எதிர்வாதிகள் இருக்கின்றவிடத்து, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவர்களுக்கு, நீதிமன்றமானது மனுவை ஏனைய பிரதிவாதிகளுக்கு எதிராக மனுவின் பயனுக்கு பங்கமின்றி ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவர்களுக்கான மனுவை தள்ளுபடி செய்யலாம்.

ஒரே நம்பிக்கைப் பொறுப்பில் உரித்தாக்கப் படக்கூடிய பங்காளர் களின் ஆதனம்

**151.** (1) பங்காண்மையில் உறுப்பினருக்கு எதிராக வங்கி முறிவு மனு தொடர்பில் 90 ஆம் பிரிவின் கீழ் வங்கிமுறிவு கட்டளையொன்று ஆக்கப்பட்டிருக்கின்றவிடத்து –

(அ) பங்காண்மையின் உறுப்பினருக்கு எதிரான அல்லது உறுப்பினராக வங்கிமுறிவு மனு அல்லது விண்ணப்பமானது முதலாவது குறிப்பிடப்பட்ட மனுவுடன் சேர்த்து கோப்பிடப்படுதல் வேண்டும்;

(ஆ) நீதிமன்றம் வேறு வகையில் பணித்தாலொழிய, பங்காண்மையில் முதலாவது குறிப்பிடப்பட்ட உறுப்பினரின் வங்கிமுறிவு மரணச்சொத்து தொடர்பில் நியமிக்கப்பட்டுள்ளவாறாக அதே வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளர் நியமிக்கப்படுதல் வேண்டும்; அத்துடன்

(இ) நீதிமன்றம் பொருத்தமான என கருதுகின்றதான வழக்கு நடைமுறைகளை கொடுப்பதற்காக அத்தகைய பணிப்புகளை அளிக்கலாம்.

(2) பங்காண்மையில் ஒரு உறுப்பினரினால் செய்யப்பட்ட வங்கிமுறிவு விண்ணப்பம் தொடர்பில் 84 ஆம் பிரிவின் கீழ் வங்கிமுறிவு கட்டளையொன்று ஆக்கப்பட்டிருக்குமிடத்து,

(அ) அதே பங்காண்மையின் உறுப்பினருக்கு எதிரான அல்லது உறுப்பினரால் வேறு ஏதேனும் வங்கிமுறிவு மனு அல்லது விண்ணப்பமானது முதலாவதாக குறிப்பிடப்பட்ட விண்ணப்பத்துடன் சேர்த்து கோப்பிடப்படுதல் வேண்டும்;

(ஆ) நீதிமன்றம் வேறு வகையில் பணித்தால் ஒழிய அதே வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாளர்

பங்காண்மையில்; முதலாவதாக குறிப்பிடப்பட்ட உறுப்பினரின் வங்கிமுறிவு மரணச்சொத்து தொடர்பில் நியமிக்கப்பட்டிருக்கக்கூடிய வகை யில் நியமிக்கப்படுதல் வேண்டும்; அத்துடன்

(இ) நீதிமன்றம் உகந்தது என கருதும் பட்சத்தில் வழக்கு நடவடிக்கைமுறைகளை ஒன்றுதிரட்டு வதற்கான அத்தகைய பணிப்புகளை வழங்கலாம்.

வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாளர் மற்றும் வங்கிமுறிவு கடனாளியினது பங்காளர்கள் ஆகியோரது செயல்கள்

**152.** (1) பங்காண்மை உறுப்பினர் ஒருவர் தொடர்பான வங்கிமுறிவு கட்டளையொன்று ஆக்கப்பட்டிருக்கின்ற விடத்து, நீதிமன்றம் வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாளர் மற்றும் வங்கிமுறிவு கடனாளியானது பங்காளர் ஆகியோரது பெயர்களில் எவையேனும் குற்றவழக்கில் ஆரம்பிக்கப்பட்டு தொடுக்கப்படுவதற்கு வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாளருக்கு அதிகாரமளிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் நீதிமன்றமானது செயல் ஒன்றை ஆரம்பித்து வழக்கு தொடுப்பதற்கு வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாளருக்கு அதிகாரமளித்திருக்குமிடத்து, அத்தகைய வங்கிமுறிவு கடனாளியின் பங்காளரது தனிசை அல்லது அத்தகைய தொடர்புடைய கோரலின் ஏதேனும் விடுவிப்பு வெறிதாக்கப்படுதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் கீழ் குற்றவழக்கு ஆரம்பிக்கப்பட்டு தொடுப்பதற்கான அதிகாரத்திற்காக வங்கிமுறிவு நம்பிக் கைப் பொறுப்பாளர் நீதிமன்றத்திற்கு விண்ணப்பம் ஒன்றை செய்கின்றவிடத்து, வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாளர் வங்கிமுறிவு கடனாளியின் பங்காளருக்கு அத்தகைய விண்ணப்பம் பற்றி எழுத்துமூல அறிவித்தலை வழங்குதல் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின் கீழ் குற்றவழக்கு ஆரம்பிக் கப்பட்டு தொடுப்பதற்கான அதிகாரத்திற்காக வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாளர் நீதிமன்றத்திற்கு விண்ணப்பம் ஒன்றை செய்கின்றவிடத்து, வங்கிமுறிவு கடனாளியின் பங்காளர் நல்லேது ஒன்றை காட்டுவதன் மீது விண்ணப் பத்தை சவாலுக்குட்படுத்தலாம்.

(5) நான்காம் உட்பிரிவின் கீழ் வங்கிமுறிவு கடனாளியின் பங்காளர் விண்ணப்பத்தை–

(அ) நீதிமன்றம் அவசியமானவாறு அக்குற்றவழக்கின் வரும்படிகளின் முறையான பங்கை பெற்றுக் கொள்வதற்கென பணிக்கலாம்; அத்துடன்

(ஆ) அத்தகைய பங்காளர் அவற்றிலிருந்து ஏதேனும் நன்மைகளை கோராதவிடின், அத்தகைய பங்காளர் நீதிமன்றம் பணிக்கின்றதானவை தொடரவில்லை ஆகு செலவுகளுக்கு எதிராக நட்டோந்தரவாதம் அளிக்கப்படல் வேண்டும்.

கூட்டு ஒப்பந்தங்கள் மீதான வழக்குகள்

**153.** எவரேனும் ஆள் அல்லது ஆட்களுடன் கூட்டாக ஏதேனும் ஒப்பந்தம் ஒன்று தொடர்பில் வங்கிமுறிவு கடனாளி ஒப்பந்தக்காரர் ஒருவராக இருக்கின்றவிடத்து, அத்தகைய ஆள் அல்லது ஆட்கள் வங்கிமுறிவு கடனாளியின் கூட்டாளராகவன்றி ஒப்பந்தம் தொடர்பில் வழக்குத் தொடுக்கலாம் அல்லது வழக்குத் தொடுக்கவும்படலாம்.

பங்காண்மையின் பெயரிலான வழக்கு நடவடிக்கைகள்

**154.** (1) பங்காளர்களாக இருக்கின்ற இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட எவரேனும் ஆட்கள், பங்காண்மையின் பெயரின் கீழ் தொழிலை கொண்டு நடாத்துகின்ற எவரேனும் ஆள் பங்காண்மையின் பெயரில் இச் சட்டத்தின் கீழான வழக்கு நடவடிக்கை முறைகளை தொடுக்கலாம் அல்லது வழக்கு நடவடிக்கை முறைகளை எதிர்வாதிடலாம்.

(2) ஓராம் உட்பிரிவிற்கு ஏற்புடையற்பாலதான சூழ்நிலைகளில், நீதிமன்றமானது, அக்கறைகொண்டுள்ள எவரேனும் ஆளினால் செய்யப்படும் விண்ணப்பதாரரின் மீது அத்தகைய குழுமத்தின் பங்காளர்களாக உள்ள ஆட்களின் பெயர்களை அல்லது அத்தகைய பங்காளரின் பெயரை அத்தகைய முறையிலும் வெளிப்படுத்துவதற்கும் மற்றும் நீதிமன்றம் பணிக்கக்கூடியதான சத்தியப்பிரமாணம் அல்லது வேறுவகையில் சரிபார்க்கப்படுவதற்கும் கட்டளையிடலாம்.

## பகுதி VII

## தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை இடாப்பு

தனிப்பட்ட கடனிறுக்க வகை இடாப்பை பேணுவதற்கான அதிகார சபை

**155.** (1) அதிகாரசபை தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை இடாப்பினை தயாரித்து பேணுதல் வேண்டும்.

(2) தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை இடாப்பு அதிகாரசபை ஏதேனும் ஒன்றை முடிவுசெயதிருப்பின், இயந்திரவியல் படிவத்திலும் அல்லது அத்தகைய வேறு படிவத்திலும் இருக்க வேண்டும்.

தனிப்பட்ட கடனிறுக்க வகையின்மை பதிவுப் புத்தகத்தின் நோக்கம்

**156.** (1) தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை இடாப்பு தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை கட்டளை பயனுறுகின்ற கடனாளிகளின் பதிவேடுகளையும் தகவல்களையும் பேணுவதற்கான நோக்காக இருத்தல் வேண்டும்.

(2) தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை இடாப்பின் மேலதிக நோக்கங்களுக்காக இருத்தல் வேண்டும் –

(அ) உத்தியோகபூர்வ பெறுநர் அதிகார சபை, நீதிமன்றங்கள், தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை உத்தியோகத்தர்கள்; அல்லது இச்சட்டத்தின் கீழான வேறு எவரேனும் ஆளின் இணக்கம், கணக்காய்வு மற்றும் ஆதரவளிக்கின்ற மற்றும் நிர்வாகி பணிகளுக்கு வசதியளித்தல்;

(ஆ) உத்தியோகபூர்வ பெறுநர், அதிகாரசபை, நீதிமன்றங்கள், தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை உத்தியோகத்தர்கள், அல்லது இச்சட்டத்தின் கீழான வேறு எவரேனும் ஆள், என்போரின் பணிகளை வலுவுறுத்துவதற்கும் தத்துவங்களை பிரயோகிப்பதற்கும் வசதியளித்தல்; அத்துடன்

(இ) தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நடவடிக்கை முறைகள் தொடர்பிலான ஆராய்ச்சி நோக்கங்களுக்காக புள்ளிவிபரம் சார் தகவல்களை மற்றும் தகவல்கள் வழங்குதல்.

தனிப்பட்ட கடனிறுக்க வகையின்மை இடாப்பில் பதிவு செய்யப்பட வேண்டிய தகவல்கள்

**157.** (1) தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நடவடிக்கை முறைக்கமைந்தவாரான கடனாளி தொடர்பிலான பின்வரும் தகவல்கள் மற்றும் அதேபோன்று விரித்துரைக்கப்படக்கூடிய வாறான ஏனைய வேறு தகவல்களை தனிப்பட்ட கடனிறுக் கவகையின்மை இடாப்பு கொண்டிருத்தல் வேண்டும்-

(அ) கடனாளியினது முழுப்பெயர்;

(ஆ) கடனாளியினால் பயன்படுத்தப்படும் மற்றும் உத்தியோகபூர்வ பெறுநர் அல்லது அதிகார சபைக்கு அறிந்த (அழைக்கப்படும் பெயர் அல்லது வியாபாரப் பெயர் உள்ளடங்கலாக), வேறு ஏதேனும் பெயர்;

(இ) கடனாளியினது முகவரி;

(ஈ) கடனாளி; தொடர்பில் தனிப்பட்ட கடனிறுக்க வகையின்மை கட்டளை நிலைத்திருப்பதற்கான நிகழ்வு;

(உ) கடனாளி தொடர்பில் ஆக்கப்படட்ட தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை கட்டளை வகை;

(ஊ) கடனாளி தொடர்பில் தனிப்பட்ட கடனிறுக்க வகையின்மை கட்டளை ஆக்கப்பட்ட திகதி;

(எ) தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை கட்டளையை விடுவிப்பதற்கு அட்டவணைப்படுத்தப்பட்ட திகதி;

(ஏ) கடனாளி தொடர்பில் தனிப்பட்ட கடனிறுக்க வகையின்மை கட்டளையை வழங்கிய நீதி மன்றம்;

(ஐ) தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை கட்டளை யுடன் தொடர்புடைய வேறு ஏதேனும் இருப்பின்; வழக்கு இலக்கம்

(ஒ) கடனாளியினது விடயத்தில் செயல்படுகின்ற வாறான விடயத்துகேற்ப, எவரேனும் அதிகார மளிக்கப்பட்ட இடையீட்டாளர், தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை பிரேரணையாளர், தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நிருவாகி,

மற்றும் நம்பிக்கைப் பொறுப்பாளரின் பெயர், முகவரி, தொடர்பு விபரங்கள்;

(ஓ) கடனாளியினது விடயத்தை கையாளுகின்ற உத்தியோகபூர்வ பெறுநரது அலுவலகத்தின் முகவரி மற்றும் தொடர்பு கொள்ளக்கூடிய விபரங்கள்; அத்துடன்

(ஔ) இச் சட்டத்தின் கீழ் அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகளின் கீழ் தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை இடாப்பில் பதியப் படுவதற்கு தேவைப்படுத்தப்படும் வேறு பதியப் படுவதற்கு தகவல்கள்; எவையேனும்

தனிப்பட்ட கடனிறுக்க வகையின்மை இடாப்பி லிருந்து தகவல்களை அகற்றுதல்

**158.** (1) தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நடவடிக்கை முறையிலிருந்து கடனாளி விடுவிக்கப்படுவதன் மீது, அதிகாரசபை தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை கடனாளி தொடர்பான எல்லா தகவல்களையும் அகற்றுதல் வேண்டும்.

(2) தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை இடாப்பிலி ருந்து கடனாளி தொடர்பிலான தகவல்களின் அகற்றுகை யின் மீது அதிகாரசபை ஆறு ஆண்டுகள் எனும் காலப் பகுதிக்கு கடனாளியின் விடயக் கோவையுடன் தொடர்புடைய எல்லா இயைபான பதிவேடுகளையும் தக்கவைத்தல் வேண்டும்.

(3) எழுபத்தியொன்பதாம் அல்லது 144 ஆம் பிரிவு களின் கீழ் விடுவித்தலை இல்லாதொழிப்பதன் மீது அதிகாரசபையானது –

(அ) நூற்றி ஐம்பத்தேழாம் பிரிவில் குறித்துரைக்கப் பட்ட கடன்பட்ட ஒருவரது விடயம் தொடர்பான தகவல்களை தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை இடாப்பில் மீள் பிரசுரித்தல் வேண்டும்; மற்றும்

(ஆ) இல்லாதொழிதல் கட்டளை ஆக்கப்பட்டமை மற்றும் அத்தகைய இல்லாதொழிதல் கட்டளை ஆக்கப்பட்ட தேதி என்பன தனிப்பட்ட கடனிறுக் கவகையின்மை இடாப்பில் பதிவு செய்தல் வேண்டும்.

(4) தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை கட்டளை இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சந்தர்ப்பங்களில் கடனாளி தொடர்பில் செய்யப்பட்டிருக்கின்றவிடத்து அதிகாரசபை,

(அ) இரண்டாவது அல்லது அடுத்துறும் தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நடவடிக்கை முறையிலிருந்தான கடனாளியின் பொறுப்பு விடுவிப்பின் பின்னரான இரண்டு ஆண்டுகள் எனும் காலப் பகுதிக்கு அல்லது விதந்துரைக்கப்படக் கூடிய வாறான அத்தகைய காலப்பகுதிக்கு தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை இடாப்பின் மீது கடனாளி தொடர்பிலான தகவல்களை பேணுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) கடனாளி மற்றும் ஒவ்வொரு கடனிறுக்கவகை யின்மை நிகழ்வு தொடர்பில் இச் சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட எல்லா தகவல்களையும் தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை இடாப்பு கொண்டிருத்தலை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

தனிப்பட்ட கடனிறுக்க வகையின்மை இடாப்புகளை அணுக்கம்

**159.** (1) ஆள் ஒருவர் இச்சட்டத்திற்கிணங்க விதித்துரைக் கப்படக் கூடியவாறான நடவடிக்கைகளுக்கிணங்க அல்லது அதிகார சபையினால் ஆக்கப்படும் விதிகளுக்கிணங்க தனிப்பட்ட கடனிறுக்க வகையின்மை இடாப்பை மட்டும் தேடலாம்.

(2) தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை இடாப்பினை பொதுமக்களிள் அங்கத்தவர்கள் நியாயமான எல்லா நேரங்களில் சோதனை இடலாம்.

(3) தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை இடாப்பினை சோதனை இடுவதற்காக அதிகாரசபை பொதுமக்களின் உறுப்பினர்களிடமிருந்து கட்டணமொன்றை அறவிடலாம்.

(4) அவ் ஆள் பற்றிய தகவல்களை ஆராயும் நோக்கத் திற்காக அவ் ஆளின் சம்மதத்துடன் செயலாற்றுகின்ற எவரேனும் ஆளினால் அல்லது எவரேனும் திறத்தவர்களி னால் தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை இடாப்பானது தேடுகை செய்யப்படலாம்.-

(5) தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை இடாப்பினை எவரேனும் ஆளினால் பின்வருவனவற்றிக்காக தேவைப் படலாம் -

(அ) வேறொரு ஆள் தொடர்பில் தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை கட்டளையானது பயனுறுதியுடன் காணப்படுகின்றதா என்பதை உறுதி செய்து கொள்ளும் நோக்கத்திற்காக, ஆள் ஒருவரது வியாபார நடவடிக்கைகளின் பொழுது மற்றொரு ஆளினது கடன்கொடு தகுதி நிலை அல்லது கடனை திருப்பிக் கொடுக்கல் ஆகிய வற்றை மதிப்பீடு செய்வதற்கு அல்லது கொள் வதற்கு அல்லது அத்தகைய உறுதிப்படுத்தல்கள் அவசியமானவிடத்து அல்லது ஏதேனும் தன்மை யிலான ஆதனத்திற்கான உரித்தை புலனாய்வு செய்வது தொடர்பில்;

(ஆ) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சந்தர்ப்பங் களில் கடனாளி தொடர்பில் தனிப்பட்ட கடனி றுக்கவகையின்மை கட்டளையொன்று ஆக்கப் பட்டிருக்கின்றதா என்பதை நிச்சயப் படுத்திக் கொள்ளும் நோக்கத்திற்காக;

(இ) தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நடவடிக்கை முறையில் கடனாளியின் பங்குபற்றுகையுடன் தொடர்புடைய ஏதேனும் நோக்கத்திற்காக;

(ஈ) இச் சட்டத்தின் கீழ் உத்தியோகபூர்வ பெறுநர், அதிகாரசபை, நீதிமன்றங்கள், தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை உத்தியோகத்தர்கள் வேறு எவரேனும் ஆள் என்பவரின் இணக்கம் கணக்காய்வு மற்றும் ஏனைய ஆதாரப்படுத்தும் மற்றும் நிருவாக பணிகள் என்பவற்றின் நோக்கத் திற்காக;

(உ) இந்தச் சட்டத்தின் கீழ் உத்தியோகபூர்வ பெறுநர், அதிகாரசபை, நீதிமன்றங்கள் அல்லது வேறு எவரேனும் ஆளின் பணிகளின் வலுவுறுத்து கையை மற்றும் தத்துவங்களை பிரயோகித்தல் என்பவற்றை வசதிப்படுத்தும் நோக்கத்திற்காக; அத்துடன்

(ஊ) தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை செயன் முறைகளுடன் தொடர்புடைய புள்ளவிபரம் சார்ந்த தகவல்கள் மற்றும் ஆராய்ச்சி நோக்கத் திற்கான தகவல்கள் ஆகியவற்றை வழங்கும் நோக்கத்திற்காக;

(6) பின்வரும் கட்டளைக்கற்கள் தொடர்பில் மாத்திரமே தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை இடாப்பு ஆராயப் படலாம் :-

(அ) கடனாளியினது பெயர்;

(ஆ) தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை கட்டளை யுடன் இணைந்தவை ஏதேனும் இருப்பின் வழக்கு இலக்கம்;

(இ) நீதிமன்றத்தின் பெயர்;

(ஈ) தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை கட்டளை திகதி;

(உ) (அ) முதல் (ஈ) வரையிலான பந்திகளின் கட்டளைக் கற்களின் ஏதேனும் களப்புகள்; அல்லது

(ஊ) விதித்துரைக்கப்படக்கூடியவாறான வேறு ஏதே னும் கட்டளைக்கற்கள்.

அதிகாரி மற்றும் உத்தியோக பூர்வபெறுநர் செயல் அல்லது செய்யாமை க்கு பொறுப்பாக மாட்டார்.

**160.** (1) வழக்கு துடர்ச்சி அல்லது குற்றவழக்கு எதுவும் இப்பாகத்தின்கீழ் பொது இடாப்பொன்றின் பேணுகை தொடர்பில் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்படுவதற்கு உட்கருதப்பட்ட அல்லது செய்யாது விடப்பட்ட எவையேனும் செயல்கள் அல்லது ஆக்கப்பட்ட முடிபுகள் அல்லது செய்வதற்கு உட்கருதப்பட்ட முடிபுகள் என்பவற்றுக்கு உத்தியோகபூர்வ பெறுநருக்கு எதிராக தொடுக்கப்படுதலாகாது.

(2) வழக்கு துடர்ச்சி அல்லது குற்றவழக்கு எதுவும் இப்பாகத்தின்கீழ் பொது இடாப்பொன்றைப் பேணுதல் தொடர்பில் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்வதற்கு உட்கருதப்பட்ட அல்லதுசெய்யாது விடப்பட்ட

எவையேனும் செயல்கள் அல்லது ஆக்கப்பட்ட அல்லது முடிபுகள் என்பவற்றுக்காக அதிகாரசபைக்கு எதிராக தொடுக்கப்படுதலாகாது.

தனிப்பட்ட கடனிறுக்க வகையின்மை இடாப்பு மற்றும் கடன் தகவல் பணியகம்

**161.** (1) ஆயிரத்து தொளாயிரத்து தொண்ணூறாம் ஆண்டின் 18 ஆம் இலக்க கடன் தகவல் பணியக சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய மற்றும் வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்துக்கமைய, தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை இடாப்பில் கடனாளியுடன் தொடர்பான தகவல்கள் கடன் தகவல்கள் பணியக பதிவேடுகளில் பதிவு செய்யப்படலாம்.

(2) கடன் தகவல் பணியகத்தின் பதிவேடுகளில் பதிய வேண்டியதான தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை இடாப்பிலுள்ள தகவல்கள் பற்றிய படிவம் மற்றும் முறை என்பன விதந்துரைக்கப்படுதல் வேண்டும்.

(3) நூற்றி ஐம்பத்தெட்டாம் பிரிவின்கீழ் தனிப்பட்ட கடனிறுக்க வகையின்மை நடவடிக்கை முறையிலிருந்து கடனாளியின் விடுவிப்பு பற்றிய இடாப்பிலிருந்து கடனாளி தொடர்பிலான எல்லாத் தகவல்களையும் அகற்றுவதன் மீது அகற்றுதலின் மீது, கடன் தகவல் பணியககத்தின் பதிவேடுகளில் பதியப்பட்ட கடனாளியின் தனிப்பட்ட கடனிறுக்க வகையின்மை தொடர்பிலான எவையேனும் தகவல்கள் பின்வருமாறு பணியகத்திலிருந்து அகற்றப்படுதல் வேண்டும் -

(அ) கடனாளி பொறுப்பு விடுவிக்கப்பட்ட திகதியின் பின்னரான ஆறு மாதங்கள் எனும் காலப் பகுதியினுள்; அல்லது

(ஆ) விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு காலப் பகுதி.

## பகுதி VIII

## தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை தவறுகள்

### அத்தியாயம் 1

### தவறுகள் தொடர்பிலான பொதுவான ஏற்பாடுகள்

உட் கருத்து

**162.** ஆளெவருவர் -

(அ) மோசடி செய்வதற்கான;

(ஆ) ஏமாற்றுவதற்கான;

(இ) ஏதேனும் அத்தகைய நடத்தை பற்றிய நிலைமையை மறைப்பதற்கான; அல்லது

(ஈ) சட்டத்தை தோற்கடிப்பதற்கான

உட்கருத்தைக் கொண்டிருந்த ஆள் நடந்த நேரத்தில் தவறொன்றை அமைத்துருவாக்குகின்றார் எண்பித்தாலொழிய, இப்பாகத்தின்கீழான தவறொன்றுக்கு ஆளொருவர் குற்றவாளியாகமாட்டார்.

இப்பாகத்தின் கீழான தவறுகளிற்கான தண்டனைகள்

**163.** இப்பாகத்தின் கீழான தவறொன்றைப் புரிகின்ற ஆளொருவர் குற்றத்தீர்ப்பளிப்பதன் மேல் ஏழு ஆண்டுகள் விஞ்சாத காலத்திற்கான கடூழியச் மறியற்றண்டனைக்கு அல்லது பத்துமில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணம் ஒன்றுக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் அல்லது மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதல் வேண்டும்.

பொறுப்பு விடுவிப்பின் பின்னரான குற்றப் பொறுப்பு

**164.** (1) தனிப்பட்ட கடனிறுவகையின்மைக்கு அடுத்துறுபவர் தொடர்பிலான ஏதேனும் பொறுப்புக்கு பங்கமின்றி, கடனாளி தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நடவடிக்கைமுறையிலிருந்தான கடனாளியின் பொறுப்பு விடுவிப்பின் பின்னர் செய்யப்பட்ட எவை தொடர்பிலும் பாகத்தின் கீழான தவறொன்றை கடனாளி புரிந்திருக்கவில்லை.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எது எவ்வாறிருப்பினும், தனிப்பட்ட இப்பாகத்தில் உள்ள எதுவும் கடனிறுக்கவகையின்மை நடவடிக்கைமுறையிலிருந்து விடுவிப்பதற்கு முன்னர் புரியப்பட்ட தவறொன்றுக்காக பொறுப்பு விடுவிக்கப்பட்ட கடனாளிக்கு எதிரான வழக்கு நடவடிக்கைகளை தொடுத்தலைதடுத்தலாகாது.

(3) வங்கிமுறிவுகட்டளை வெற்றானதாக்கப்பட்டாலாயினுஞ் சரி அல்லது அல்லாவிடினுஞ்சரி இப்பாகத்தின் அத்தியாயம் 3 ஆனது ஏற்புடையதாதல் வேண்டும். ஆனால் அத்தியாம் 2 இன் கீழான தவறொன்று தொடர்பில் அத்தகைய வெற்றன தன்மையின் பின்னர் தொடுக்கப்படுதலாகாது.

## அத்தியாயம் 2

### தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை தவறுகள்

தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நடவடிக்கைமுறை விண்ணப்பங்கள்: பொய்யான தகவல்கள்

**165.** (1) எவ்வாளின் சார்பில் இப்பிரிவிற்கான விண்ணப்பம் அல்லது பிரேரணை ஏற்புடைமையாகின்தோ அவ்ஆளின் சார்பிலான ஆளொருவர் பின்வருமாறு இருப்பின் தவறொன்றைப் புரிகின்றார் ,

(அ) பொருள்சார் ரீதியில் பொய்யான அல்லது பிழைவழியுக்கின்ற தகவலை அறிந்துகொண்டு அல்லது கவனயீனமாக வழங்குதல்; அல்லது

(ஆ) ஆளின் நிதிசார் அலுவல்கள் தொடர்பில் இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கூற்றில் பொருள்சார் ரீதியான செய்யாமைகளை அறிந்துகொண்டு அல்லது கவனயீனமாக செய்தல்.

(2) இப்பிரிவானது பின்வருவனவற்றின்கீழான விண்ணப்பமொன்றுக்கு அல்லது பிரேரணைக்கு ஏற்புடமையாகின்றது -

(அ) 50 ஆம் பிரிவின்கீழ் தனிசுப் பாதுகாப்பு தனிசுபிற்போடல் கட்டளை;

(ஆ) 44 ஆம் பிரிவின்கீழ் தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடு;

(இ) 67 ஆம் பிரிவின்கீழ் தனிசு புனர்வாழ்வு கட்டளை;

(ஈ) 81 ஆம் பிரிவின்கீழ் வங்கிமுறிவுக் கட்டளை.

தனிப்பட்ட கடனிறுக்க வகை யின்மை: கடனாளி களின் பொறுப்புக் களுடன் இணங்கி யொழுகாமை

**166.** (1) (அ) கடன் பாதுகாப்பு பிற்போடல் தீர்ப்புக் கட்டளைக்கான, கடனாளியாகவுள்ள திறத்தவரொருவரான ஆளொருவர் கடனாளி பின்வருமாறிருப்பின் தவறொன்றைப் புரிகின்றார்;-

(அ) இணங்கியயொழுகுவதற்கு உட்கருத்துடன் தவறு கின்ற;

(ஆ) பொருள்சார் தொடர்பில் தகவலானது பொய் யானது அல்லது பிழைவழியுய்க்கின்ற தகவல் என அறிந்துக்கொண்டு அத்தகைய கடப்பாட்டுடன் சம்பந்தப்பட்ட நீதிமன்றிற்கு அல்லது உத்தியோ கபூர்வ பெறுநருக்கு தகவல்களை வழங்குகின்ற.

(2) பாகம் IV இன் கீழான தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டுக்கான திறத்தவராகவுள்ள ஆளொருவர் கடனாளி பின்வருமாறிருப்பின் தவறொன்றைப் புரிகின்றார் ;

(அ) 32 ஆம் மற்றும் 56 ஆம் பிரிவுகளின் கீழ் கடப்பாடொன்றுடன் உட்கருத்துடன் இணங்கி யொழுகுவதற்கு;

(ஆ) பொருள்சார் தொடர்பில் பொய்யான அல்லது வழிநடத்துதற்கு இருக்கும் பிழைவழியுய்க்கின்ற தகவல்களை அறிந்துகொண்டு அத்தகைய கடப் பாட்டுடன் சம்மந்தப்பட்ட நீதிமன்றிற்குஇ தனிப் பட்ட கடனிறுவகையின்மை பிரேரணையாளருக்கு தனிப்பட்ட கடனிறுவகையிற்ற நிருவாகிக்கு அல்லது உத்தியோகப்பூர்வ பெறுநருக்கு தகவல் களை வழங்கியிருப்பின்

(3) ஐந்தாம் பாகத்தின் கீழான தனிசு புனர்வாழ்வுக் கட்டளைக்கு கடனாளியொருவர் என்றவாறாக திறத்த வராகவுள்ள ஆளொருவர் -

(அ) 32 ஆம் மற்றும் 71 ஆம் பிரிவுகளின் கீழான கடப்பாடொன்றுடன் உட்கருத்;துடன் இணங்கி யொழுகத் தவறியிருப்பின்; அல்லது

(ஆ) பொருள்சார் தொடர்பில் பொய்யானதாக அல்லது பிழைவழியுய்கின்ற அல்லது இருக்கும் தகவலை அறிந்துகொண்டு அத்தகைய கடப்பாட்டுடன் சம்மந்தப்பட்ட நீதிமன்றத்துக்கு அல்லது உத்தி யோகபூர்வ பெறுநருக்கு தகவல்களை வழங்கி யிருப்பின்இ தவறொன்றைப் புரிகின்றார்.

தனிப்பட்ட கடனிறுக்க வகையின்மை நடவடிக்கை முறைகள் ஆவணங்கள் மற்றும் பதிவேடுகள்

**167.** (1) இப்பிரிவு ஏற்புடைமையாகின்ற ஆளொருவர், பின்வரும் நோக்கத்துக்காக (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள செயலொன்றை அத்தகைய ஆள் புரியுமிடத்து, தவறொன்றுக்கு குற்றவாளியாகின்றார்-

(அ) தனிசு பாதுகாப்பு பிற்போடல் தீர்ப்பு கட்டளையை பெற்றுக்கொள்ளும்;

(ஆ) முப்பத்திரண்டாம் மற்றும் 42 ஆம் பிரிவுகளின் கீழான கடப்பாடுகளை தவிர்க்கும்;

(இ) 4 ஆம் பிரிவின் கீழ் தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டின் பயனுக்கு வருவதனை உறுதிப் படுத்தும் கட்டளையை பெற்றுக்கொள்ளும்;

(ஈ) 32 ஆம் மற்றும் 56 ஆம் பிரிவுகளின் கீழான கடப்பாட்டைத் தவிர்க்கும்;

(உ) தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடொன்றினது முடிவுறுத்துகையை தவிர்த்தல்;

(ஊ) தனிசு புனர்வாழ்வுக் கட்டளையை பெற்றுக் கொள்ளும்;

(எ) 32 ஆம் மற்றும் 71 ஆம் பிரிவுகளின் கீழான கடப்பாடுகளை தவிர்க்கும்;

(ஏ) தனிசு புனர்வாழ்வுக் கட்டளையின் முடிவுறுத்தல் அல்லது மாற்றத்தினை தவிர்க்கும்; அல்லது

(ஐ) இச்சட்டத்தின் கீழான வேறேதேனும் கடப்பாட்டினை தவிர்க்கும்.

(2) (அ) அத்தகைய ஆள் உடமையில் அல்லது கட்டுப்பாட்டில் கொண்டுள்ள எல்லா நிதிசார் பதிவேடுகளை நீதிமன்றத்தின் அல்லது உத்தியோகபூர்வ பெறுநரின் கோரிக்கையின் பேரில் வழங்குவதற்கு தவறுகின்ற;

(ஆ) நிதிசார் பதிவேடுகளை நீதிமன்றுக்கு அல்லது உத்தியோகபூர்வ பெறுநரிற்கு காண்பிப்பதனை தடுக்கின்ற;

(இ) ஏதேனும் நிதிசார் பதிவேடுகளில் மோசடியான முறையில் பங்குபெற்றிருத்தல், அவற்றிலான ஏதேனும் அழித்தல், மாற்றியிருத்தல் அல்லது செய்யாமைகளை அல்லது ஏதேனும் செய்திருத்தல்; என்பன மேசாடியான முறையில பங்குபெறலிற்கு உடந்தையாகவிருந்தமைக்காக கருத்திற் கொள்ளப்படுகின்றவிடத்து, இப் பிரிவில் குறிப்பீடு செய்யப்படும் செயலொன்றை புரிகின்ற ஆளொருவர் தவறொன்றை புரிகின்றார்.

(3) இப்பிரிவானது பின்வரும் ஆளொருவருக்கு ஏற்புடைமையாகின்றது :-

(அ) 38 ஆம், 50 ஆம் அல்லது 67 ஆம் பிரிவுகளின் கீழ் விண்ணப்பமொன்றை அல்லது பிரேரணையினை செய்கின்ற;

(ஆ) தனிசு பாதுகாப்பு பிற்போடல் தீர்ப்புக் கட்டளை, தனிசு புனர்வாழ்வு கட்டளை அல்லது தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டை உறுதிப் படுத்தும் கட்டளை என்பவற்றைச் செய்கின்றவர் தொடர்பில்.

(4) இப்பிரிவு ஏற்புடையற்பாலதானதாகும் ஆளொருவர் தொடர்பில் இப்பிரிவில் "நிதிசார் பதிவேடு" என்பது அவ்வாளின்; நிதிசார் அலுவல்களுடன் தொடர்புடைய புத்தகமொன்று, ஆவணம் ஒன்று அல்லது பதிவேடொன்று எனப் பொருள்படும்.

தனிப்பட்ட கடனிறு வகை யின்மை நடவடிக்கை முறை: ஆதனத்தை கையுதிர்த்தல்

**168.** (1) கடனாளியொருவர்; பின்வரும் நோக்கத்துக்காக (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டும் செயலொன்றை புரிகின்றவிடத்து இப்பிரிவு எக்கடனாளிக்கு ஏற்புடைய தாகின்றதோ தவறொன்;றுக்கு குற்றவாளியாகின்றார்-

(அ) தனிசு பாதுகாப்பு பிற்போடல் கட்டளையை பெற்றுப்கொள்ளுதல்;

(ஆ) 32 ஆம் மற்றும் 42 ஆம் பிரிவுகளின் கீழான கடப்பாடுகளை தவிர்த்தல்;

(இ) தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடொன் றினை பெறுதல்;

(ஈ) 32 ஆம் மற்றும் 56 ஆம் பிரிவுகளின் கீழான கடப்பாடை தவிர்த்தல்;

(உ) தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடொன் றினது முடிவுறுத்துகையை தவிர்த்தல்;

(ஊ) தனிசு புனர்வாழ்வு கட்டளையை பெறுதல்;

(எ) 2 ஆம் மற்றும் 71 ஆம் பிரிவுகளின் கீழான கடப்பாடுகளை தவிர்த்தல்;

(ஏ) தனிசு புனர்வாழ்வு கட்டளையின் முடிவுறுத்தல் அல்லது மாற்றத்தினை தவிர்த்தல்; அல்லது

(ஐ) இச்சட்டத்தின் கீழான வேறேதேனும் கடப்பாட்டி னையும் தவிர்த்தல்.

(2) மூன்றாம் உட்பிரிவிற்கமைய, கடனாளியினால் கொண்டு நடாத்தப்படும் வழைமயான தொழில் அல்லது கடனாளியின் வழமையான குடும்ப அலுவல்கள் தவிர்ந்து கடனாளி உள்ளவிடத்து, இவ்வுட்பிரிவில் குறிப்பீடு செய்யப்படும் புரிகின்ற கடனாளியொருவர்-

(அ) இன்னோராளுக்கு கடனாளின் ஏதேனும் ஆதனத்தை நன்கொடையளித்தல் அல்லது நன் கொடை அளிப்பதற்கு செய்வித்தல்,

(ஆ) வேறுவகையில் இன்னொராளுக்கு பிரதிபயன் எதனையும் பெறாது கடனாளிக்கு வழங்குவதற் கான நியதிகளின் மீது கடனாளயின் ஏதேனும் ஆதனத்தை கைமாற்றல் கைமாற்றவுதற்கு செய் வித்தல், அல்லது

(இ) மூன்றாம் ஆள் கொடுக்கல்வாங்கலிற்கான திறத்த வராக இருந்தாலுஞ்சரி, இல்லாவிடினுஞ்சரி சம்பந்தப்பட்ட ஆதனத்தின் பெறுமதி வேறொரு ஆளினால் பணத்தில் அல்லது பணம் பெறுமதி யில் வழங்கப்பட்ட பிரதிபயன் பணம் அல்லது பணம் பெறுமதியிலான பெறுமதியை விட கிசமான அளவு கூடுதலாக உள்ளவிடத்து வேறொரு ஆளுக்கு அல்லது மூன்றாம் ஆளுக்கு கடனாளியின் ஏதேனும் ஆதனத்தை கைமாற்று வதில் ஈடுபடுகின்ற வேறொரு ஆளுடன் கொடுக்கல் வாங்கலைச் செய்தல்.

(3) இரண்டாம் உட்பிரிவு ரூபா. 50,000 விட குறைந்த பெறுவமதியிலான ஆதனத்திற்கு அல்லது விதந்துரைக்கப் படக்கூடியவாறான அத்தகைய வேறு தொகைக்கு ஏற்புடையற்பாலதாதல் வேண்டும்.

(4) இப்பிரிவானது பின்வரும் கடனாளியொருவருக்கு ஏற்புடையாகின்றது -

(அ) 38 ஆம், 50 ஆம், அல்லது 67 ஆம் பிரிவுகளின் கீழான விண்ணப்பமொன்றை அல்லது பிரேர ணையை செய்கின்றவர்;

(ஆ) தனிசு பாதுகாப்பு பிற்போடல் தீர்ப்புக்கட்டளை, தனிசு புனர்வாழ்வு கட்டளை, அல்லது தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடொன்றை உறுதிப் படுத்தும் கட்டளை செய்யப்பட்டிருப்பவர் தொடர்பில்.

தனிப்பட்ட கடனிறு வகையின்மை நடவடிக்கைகள்: முறைசார் கடன் மற்றும் தொழில்

**169.** (1) கடனாளியொருவர் ஒன்றில் தனியாகவோ அல்லது எவரேனும் இன்னொரு ஆளுடனோ, கடன் பெற்றுக்கொள்ளப்பட்ட ஆளுக்கு அறிவிக்காது, பின்வருமாறு ஒரு இலட்சம் ரூபாவிற்கு மேற்பட்ட தொகையை அல்லது விதித்துரைக்கப் படக்கூடியவாறான அத்தகைய தொகையை கடனாக பெற்றுக்கொண்டிருப்பின் கடனாளி தவறொன்றை புரிகின்றார்-

(அ) தனிசு பாதுகாப்பு பிற்போடல் தீர்ப்பு கட்டளை, தனிசு மீள்;கட்டமைப்பு ஒழுங்கேற்பாடு, அல்லது சம்பந்தப்பட்ட தனிசு புனர்வாழ்வு கட்டளையில் குறித்துரைக்கப்பட்டவாரான, கடனாளியின் பெயர், அத்துடன்

(ஆ) தனிசு பாதுகாப்பு பிற்போடல் தீர்ப்புக் கட்டளை, தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடு, அல்லது தனிசு புனர்வாழ்வு கட்டளை என்பவற்றிற்கு கடனாளி; அமைந்தவராகின்றார் எனும் நிகழ்வு.

(2) இப்பிரிவில், “கடனாளி” என்பது, கடனாளியொருவர் -

(அ) தனிசு பாதுகாப்பு பிற்போடல் தீர்ப்பு பயனிருக்கின்ற காலம் வரை கட்டளை தனிசு பாதுகாப்பு பிற்போடல் தீர்ப்புக் கட்டளை ஆக்கப்பட்டிருப்பவர்

(ஆ) தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடு பயனில் இருக்கும் வரையான காலத்திற்கு தனிசு மீள் கட்டமைப்பு ஒழுங்கேற்பாடு பயனுக்கு வருகின்றமையை உறுதிப்படுத்தி ஆக்கப்பட்ட கட்டளையொன்று; அல்லது

(இ) தனிசு புனர்வாழ்வு கட்டளை பயனில் உள்ள வரை தனிசு புனர்வாழ்வு கட்டளவு ஆக்கப்பட்டுள்ளமை.

(3) கடனை பெறுகின்ற கடனாளிக்கான முதலாம் உட்பிரிவில் உள்ள குறிப்பிடப்பீடானது பின்வரும் விடயங்களை உள்ளடக்குகின்றது-

(அ) பண்டங்கள் வாடகை - கொள்வனவு உடன்படிக்கையொன்றின் கீழ் கடனாளிக்கு வாடகைக்கு

விடப்பட்டுள்ளவிடத்து அல்லது நிபந்தனை யுடனான விற்பனை உடன்படிக்கையின் கீழ் கடனாளிக்கு விற்பதற்கு உடன்பட்டுள்ளவிடத்து; அத்துடன்

(ஆ) கடனாளி பண்டங்கள் மற்றும் சேவைகளின் வழங்குவதற்காக பணமாக அல்லது வேறுவகை யில் முற்பணமாக செலுத்தப்பட்டுள்ளவிடத்து.

## அத்தியாயம் 3

### வங்கிமுறிவு தவறுகள்

வங்கிமுறிவு தவறுகள்: வெளிப்படுத் தாமை மற்றும் பிரதிநிதித்து வங்கள்

**170.** (1) வங்கிமுறிவு கடனாளி பின்வருமாறிருப்பின் தவறொன்றைப் புரிகின்றார்-

(அ) வங்கிமுறிவு கடனாளி தமது அறிவுக்கும் நம்பிக் கைக்கும் எட்டியவரையில் உத்தியோகபூர்வ பெறுநர் அல்லது வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாளருக்கு வங்கிமுறிவு மரணச்சொத்தில் உள்ளடங்கியிருக்கும் எல்லா ஆதனங்களையும் வெளிப்படுத்தாதிருப்பின்; அல்லது

(ஆ) எவ்வாறு, எப்போது, யாருக்கு மற்றும் எந்தப் பிரதிப்பயனுக்காக ஆதனமானது கையுதிர்க்கப் பட்டது என்பதனை குறிப்பிட்டு கையுதிர்ப் பானது இணக்கப்பட்டிருக்கக்கூடியவாறினை வங்கிமுறிவு கடனாளி ஏதேனும் ஆதனத்தினது ஏதேனும் கையுதிர்ப்பினைக் குறித்தும் உத்தியோ கபூர்வ பெறுநர் அல்லது வங்கிமுறிவு நம்பிக் கைப்பொறுப்பாளருக்கு அறிவிக்காதிருப்பின்.

(2) ஓராம் உட்பிரிவு (ஆ) என்னும் பந்தி வங்கிமுறிவு கடனாளியினால் வழமையாக கொண்டு நடாத்தப்படும் தொழில் உள்ள ஏதேனும் கையுதிர்ப்பதற்கு அல்லது வங்கி முறிவு கடனாளியின் அல்லது கடனாளியின் குடும்பத்தின் வழமையான செலவுகள் பற்றிய ஏதேனும் கொடுப்பனவுக்கு ஏற்புடையதாதல் ஆகாது.

(3) வங்கிமுறிவு கடனாளியின் ஆதனம் அல்லது நிதி சார் அலுவலர்கள் தொடர்பில் ஏதேனும் உடன்படிக்கைக்கு

கடன்கொடுநர்களின் சம்மதத்தைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்துக்காக பொய்யான பிரதிநிதித்துவத்தை அல்லத மோசடியினைச் செய்திருப்பின் வங்கி முறிவுக் கடனாளி தவறொன்றை புரிகின்றார்.

வங்கிமுறிவு தவறுகள்: ஆதனம்

**171.** (1) வங்கிமுறிவு கடனாளி பின்வருமாறிருப்பின் தவறொன்றைப் புரிகின்றார்-

(அ) வங்கிமுறிவு கடனாளி உத்தியோகபூர்வ பெறுநர் அல்லது வங்கிமுறிவு நம்பிக்கைபொறுப்பாள ருக்கு உடைமையை ஒப்படைக்காது இருப்பின், அல்லது அத்தகைய கடனாளியின் உடைமை அல்லது கட்டுப்பாட்டிலிருக்கும் ஆதனத்தின் அத்தகைய பகுதியின் மற்றும் அத்தகைய கடனாளியின் உடைமையானது சட்டத்தினால் தேவைப்படுத்தப்படும்போது அவ்வாறு ஒப்படைக்கு மாறு உத்தியோகபூர்வ பெறுநர் அல்லது நம்பிக்கைப்பொறுப்பாளர் பணிக்கலாம்; அல்லது

(ஆ) வங்கிமுறிவு கடனாளி அத்தகைய கடனாளிக்கு வருமதியாகவுள்ள ஏதேனும் தனிசை மறைத்து வைத்திருப்பின் அல்லது ஒரு இலச்சத்திற்கு குறையாத பெறுமதியுடைய ஏதேனும் ஆதனத்தை அல்லது விதித்தரைக்கப்படல் கூடியவாறான அத்தகைய தொகையை மறைந்திருப்பின் அத் துடன் உத்தியோகபூர்வ பெறுநருக்கு அல்லது வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளருக்கு வங்கி முறிவு கடனாளி ஒப்படைப்பதற்கு தேவைப் படுத்தப்பட்டதான உடமை.

(2) வங்கிமுறிவு கடனாளியினால் கொண்டு நடாத்தப் படும் வழமையான தொழில் அல்லது ஒரு இலட்சம் ரூபாவுக்கு குறையாதான பெறுமதியுடைய விரிந்துரைக்கப் படக்கூடியவாறான அத்தகைய தொகையிலான வங்கி முறிவுக் கடனாளியின் வழமையான குடும்ப அலுவல்கள் தவிர்ந்த மற்றும் வங்கிமுறிவு கடனாளி கொண்டிருக்கின்ற அல்லது கொண்டிருக்க கூடியதான உடைமையை உத்தியோ கபூர்வ பெறுநருக்கு அல்லது வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளருக்கு ஒப்படைப்பதற்கு தேவைப்படுத்தப்படு

கின்றதான ஏதேனும் ஆதனத்தை அத்தகைய கடனாளி கையுதிர்ப்பின் வங்கிமுறிவு கடனாளி தவறொன்றை புரிகின்றார்.

(3) வங்கிமுறிவுகடனாளி - பின்வரும் இருப்பின் தவறொன்றை புரிந்தவராகின்றார்;-

(அ) உட்கருத்துடன் கடன்கொடுநர்களுக்கு முட்டுக் கட்டையிடுதல், தாமதித்தல் அல்லது தோற்கடித்தல்; அத்துடன்

(ஆ) வங்கிமுறிவுகடனாளியினால் கொண்டு நடாத்தப்படும் வழமையான தொழில், வழமையான குடும்ப அலுவல்கள் தவிர்ந்த வங்கிமுறிவுகடனாளியின் ஆதனத்தின் மீது ஏதேனும் நன்கொடையை அல்லது கைமாற்றத்தை, அல்லது ஏதேனும் அறவீட்டை வங்கிமுறிவுகடனாளி விதிப்பு செய்திருப்பின்.

வங்கிமுறிவு தவறுகள்: ஆவணங்கள்

**172.** (1) உத்தியோகப்பூ பெறுநர் அல்லது வங்கிமுறிவு நம்பிக்கைப்பொறுப்பாளர் பணிக்கக்கூடியதான அல்லது வங்கிமுறிவுகடனாளி; உடைமை கொண்டுள்ள அல்லது கட்டுப்பாட்டை கொண்டுள்ள ஏதேனும் நிதிசார் பதிவேடு உத்தியோகபூர்வ பெறுநருக்கு அல்லது வங்கிமுறிவு நம்பிக்கைப்பொறுப்பாளருக்கு வங்கிமுறிவுகடனாளி உடைமையை ஒப்படைக்காரரிருப்பின்.

(2) வங்கிமுறிவு கடனாளியானவர், அத்தகைய கடனாளி பின்வருமாறு இருப்பின் தவறொன்றை புரிகின்றார்;-

(அ) ஏதேனும் நிதிசார் பதிவேட்டின் காண்பிப்பை தடுப்பின்;

(ஆ) ஏதேனும் நிதிசார் பதிவேடுகளில் அல்லது அவை சம்பந்தப்பட்டவற்றில் மோசடியான முறையில் பங்குபற்றிருத்தல், மாற்றியிருத்தல், அல்லது ஏதேனும் விடுகைகளை செய்திருத்தல் அல்லது அவற்றில் மோசடியான முறையில் பங்குபற்றுதல், அளித்தல், மாற்றுதல் அல்லது ஏதேனும் விடுகையை செய்தல் என்பவற்றை தூண்டி இருத்தல்; அல்லது

(இ) ஆளொருவரின் ஆதனத்தின் ஏதேனும் பாகத்திற்கு புனைந்த நட்டங்களினால் அல்லது செலவுகளினால் கணக்குகூற முயற்சிப்பின்

(3) வங்கிமுறிவுகடனாளி; ஏதேனும் நிதிசார் பதிவேட்டில் கையுதிர்ப்பின் அல்லது மாற்றிருப்பின் அல்லது ஏதேனும் பொருள்சார் நீதியான விடுகையை செய்திருப்பின் அல்லது கையுதிர்ப்பு மாற்றம் அல்லது ஏதேனும் பொருள்சார் ரீதியான விடுகையை செய்வித்திருப்பின் அல்லது அனுமதித்திருப்பின் கடனாளி; தவறொன்றைப் புரிகின்றார்.

(4) இப்பிரிவு ஏற்புடைமையாகின்றார். ஆளொருவருடன் தொடர்புடைய இப்பிரிவில் உள்ள "நிதிசார் பதிவேடு" என்பது, பின்வருவனவற்றுடன் நேரடியாகத் தொடர்புறுகின்ற ஆவணமொன்று, ஆவணம் அல்லது பதிவேடு எனப் பொருள்படும்-

(அ) எண்பிக்கப்படற்பாலதான தனிசுகள், அல்லது வங்கிமுறிவு மரணச்சொத்தின் பாகமொன்றாக நிருவாகின்ற ஆதனம், அத்துடன்

(ஆ) ஒன்றில் வங்கிமுறிவு தொடங்கியதிலிருந்தான காலப்பகுதிக்கு அல்லது வங்கிமுறிவின் தொடக்கத்துடன் முடிவடைகின்ற பன்னிரெண்டு மாத காலப் பகுதகிக்கு.

*வங்கிமுறிவு தவறுகள் கடன் மற்றும் கடன் பெறுதல்*

**173.** (1) வங்கிமுறிவு கடனாளி தவறொன்றைப் புரிகின்றார்-

(அ) வங்கிமுறிவு கட்டளை வங்கிமுறிவு கடனாளி தொடர்பில் நடைமுறையில் உள்ளதென கடன் கொடுநருக்கு முன்னரே அறிவிக்கப்படாமல் ஐம்பதினாயிரம் ரூபா எனும் அளவு வரைக்கு அல்லது விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பெறுமதிக்கு வங்கிமுறிவு கடனாளி கடனை தனியாக அல்லது வேறு எவரேனும் ஆளடன் கூட்டாக பெற்றிருப்பின்; அல்லது

(ஆ) வங்கிமுறிவுகட்டளையில் குறித்துரைக்கப்பட்ட பெயரில் அத்தகைய கடனாளி; ஏதேனும் வியாபார கொடுக்கல்வாங்களில் ஈடுபடும் எல்லா

ஆட்களிற்கும் முன்னர் வெளிப்படுத்தாமல் வங்கி முறிவுகட்டளையில் குறித்துரைக்கப்பட்டதல்லாத பெயரின் கீழ் ஏதேனும் தொழிலில் நேரடியாக அல்லது நேரடியாகவில்லாமல் ஈடுபடுகின்ற வங்கிமுறிவுகடனாளி

(2) வங்கிமுறிவுகடனாளியானவர், வங்கிமுறிவின் தொடக்கத்தின் பின்னர் பின்வருமாறு இருப்பின் தவறொன்றைப் புரிகின்றார் -

(அ) வங்கிமுறிவுகடனாளி; கடனில் ஆதனமொன்றைப் பெற்று அவ்வாதனத்திற்கு பணம் வழங்கா திருப்பின்; அத்துடன்

(ஆ) வங்கிமுறிவுகடனாளியானவர் பின்வரும் முறையில் கடனில் ஆதனத்தை பெற்றிருப்பின் -

(i) பொய்யான பிரதிநிதித்துவம் அல்லது ஏனைய மோசடி மூலம்;

(ii) நிதி நிலைமையின் பொய்யான கூற்று அல்லது வங்கிமுறிவுகடனாளியின் அலுவல்கள் பற்றிய ஏனைய பொய்யான கூற்று; அல்லது

(iii) தொழிலை கொண்டு நடாத்துகின்ற மற்றும் வழமையான தொழிலுடன் கையாள்கின்ற பொய்யான பாவனையின் கீழ்.

(3) கடனைப் பெற்றுக்கொள்கின்ற வங்கிமுறிவுகட னாளிக்கான குறிப்பீடு ஒன்று பின்வரும் சந்தர்ப்பங்களை உள்ளடக்குகின்றது –

(அ) வாடகைக் கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் வங்கிமுறிவுக்கு கடனாளிக்கு பண்டங்கள் வாட கைக்கு அமர்த்தப்படுமிடத்து, அல்லது நிபந்தனை யுடனான விற்பனை ஒன்றின் கீழ் வங்கிமுறிவு கடனாளிக்கு விற்பனை செய்யப்படுவதற்கு கடன்பட்டு கொண்டிருக்குமிடத்து; அத்துடன்

(ஆ) பண்டங்கள் மற்றும் சேவைகளை வழங்குவ தற்காக (பணமாகயிருந்தாயினுஞ்சரி அல்லது வேறு வகையிலிருந்தாயினுஞ்சரி) வங்கிமுறிவு கடனாளி முற்பணம் ஒன்றை செலுத்தியிருக் கின்றவிடத்து

வங்கிமுறிவு தவறுகள் பொய்யான உரிமைக் கோரிக்கைகள்

**174.** வங்கிமுறிவின் கீழ் அறிந்து கொண்டு அல்லது நம்பிட பொய்யான தனிசொன்று எவரேனும் ஆளினால் என்பிக்கப்பட்டிருப்பின் மட்டும் அத்தகைய ஆள் வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளருக்கு ஒரு மாத காலப்பகுதிக்கு அறிவிப்பதற்கு தவறின் வங்கிமுறிவு கடனாளி தவறொன்றை புரிகின்றார்.

வங்கிமுறிவு தவறுகள் இலங்கையை விட்டு வெளியேறல்

**175.** வங்கிமுறிவு கடனாளி; பின்வருமாறு வெளியேறி இருப்பின் அல்லது ஐம்பதினாயிரம் ரூபாவிற்கு குறையாத பெறுமதியுடைய ஏதேனும் ஆதனத்துடன் அல்லது விதித் துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய தொகையுடன் மற்றும் உத்தியோகபூர்வ பெறுநருக்கு அல்லது வங்கிமுறிவு நம்பிக்கை பொறுப்பாளருக்கு ஒப்படைப்பதற்கு தேனையான உடமையுடன இலங்கையை விட்டு வெயியேறின் அல்லது இலங்கையை விட்டு வெளியேறுவதற்கு எத்தனிப்பின் அல்லது தயாராயின் அவ்வங்கிமுறிவு கடனாளி தவறொன்றை புரிகின்றார்;-

(அ) நூற்றியறுபத்திரெண்டாம் பிரிவில் குறித்துரைக் கப்பட்ட உட்கருத்தை கொண்டிருக்கின்ற வேளையில், அத்துடன்

(ஆ) வங்கிமுறிவுகடனாளியினால் கொண்டு நடாத்தப் படும் வழமையான தொழில்; அல்லது வங்கி முறிவுகடனாளியின் வழமையான குடும்ப அலுவல்கள் தவிர்ந்த ஏனையவை,

வங்கிமுறிவு தவறுகள் பொறுப்புடைமைகளுடன் இணங்காமை

**176.** (1) வங்கிமுறிவு கடனாளி பின்வருமாறு இருப்பின் அவ்வங்கிமுறிவு கடனாளி தவறொன்றைப் புரிகின்றார் -

(அ) முப்பத்திரெண்டாம், 112 ஆம் 113ஆம், மற்றும் 114 ஆம் பிரிவுகளின் கீழான கடப்பாட்டுடன் உட்கருத்துடன் மற்றும் நியாயமற்ற வகையில் தயவின்றி இணங்கியொழுகுவதற்கு தவறியிருப்பின்;

(ஆ) பொருள்சார் தொடர்பில் தகவலானது பொய் யானது அல்லது பிழைவழியுயிக்கின்றது என அறிந்து கொண்டு 32, 112,113 மற்றும் 114 ஆம் பிரிவுகளின் கீழான கடப்பாடு ஒன்றுடன் தொடர் பில் நீதிமன்றத்திற்கு வங்கிமுறிவு நம்பிக்கைப்

பொறுப்பாளருக்கு அல்லது உத்தியோகபூர்வ பெறுநருக்கு தகவல்களை வழங்கி இருப்பின்; அல்லது

(இ) இச்சட்டத்தின் கீழ் இடம்பெறும் ஏதேனும் சோதனையில் வங்கிமுறிவு கடனாளிக்கு கேட்கப் படும் எல்லா முறையான வினாக்களிற்கும் முழுமையாகவும் உண்மையாகவும் மறுமொழி அளிப்பதற்கு கருத்துடன் மற்றும் நியாயமற்ற தயவுடன் மறுப்பாராயின்.

வங்கிமுறிவுத் தவறுகள் மறைத்து வைக்கும் உட்கருத் துடன் முறையான பதிவுகளை வைத்திருப் பதற்கு தவறுதல்

**177.** வங்கிமுறிவு கடனாளி ஒருவருடைய நிதிசார் அலுவல்கள் பற்றிய உண்மையான நிலைமையை மறைக் கின்ற உட்கருத்ததுடன் வங்கிமுறிவு விண்ணப்பத்தை செய்வதற்கு முன்னர் அல்லது வங்கிமுறிவு மனுவை முன்வைப்பதற்கு முன்னரான பன்னிரண்டு மாத காலப்பகுதினுள் மறைத்திருப்பின் மற்றும் வங்கிமுறிவு கடனாளியின் கொடுக்கல்வாங்கல்கள் பற்றி முறையான பதிவேட்டை வைத்திருந்து பேணிக்காப்பதற்கு தவறி யிருப்பின் வங்கிமுறிவு கடனாளி தவறொன்றை புரிகின்றார்.

## பாகம் IX

## கம்பெனிகளை மீட்புச் செய்தல் : நிருவாகம்

### அத்தியாயம் 1

#### நிருவாகியின் வகிபாகம்

நிருவாகியின் வகிபாகம்

**178.** நிருவாகத்திலுள்ள கம்பெனியின் நிருவாகி-

(அ) கம்பெனியின் அலுவல்கள், தொழில் மற்றும் ஆதனத்தின் மீது கட்டுப்பாட்டினைக் கொண்டிருக் கின்றார்;

(ஆ) கம்பெனியின் அலுவல்கள், தொழில் மற்றும் ஆதனம் என்பவற்றை நிருவகிக்கலாம்;

(இ) கம்பெனியின் அலுவல்களை புலானய்வு செய்வதற்கு தேவைப்படுத்தப்படுகின்றார்;

(ஈ) பின்வரும் குறிக்கோள்களை கொண்டுள்ளார்: -

(i) அதனது இருப்பை தொடர்ந்தவாறு கம்பெனியின் வாய்ப்புக்களை அல்லது அதனது தொழிலின் சாத்தியங்களையேனும் பெருக்ககக் கூடிய வழியில், கம்பெனியின் அலுவல்கள், தொழில் மற்றும் ஆதனங்களை நிருவகித்தல் ; அத்துடன்

(ii) கம்பெனிக்கு அல்லது அதன் தொழிலுக்கு தொடரந்தும் நிலைத்திருப்பது சாத்தியமில்லையெனில், கம்பெனியின் உடனடி ஒழித்துக் கட்டுதலைக் காட்டிலும் கடன்கொடுநர்களுக்கும் பங்குதாரர்களுக்கும் சிறப்பான திரும்பலை விளைவிக்கும் வகையில் கம்பெனியின் அலுவல்களையும், தொழில்களையும் மற்றும் ஆதனங்களையும் நிருவகித்தல்;.

(உ) இச்சட்டத்தின் ஏற்புடையற்பாலதான ஏற்பாடுகளிற்கமைய, கம்பெனியின் தொழில் அனைத்தையும் அல்லது பகுதிகளை முடிவுறுத்தலாம் அல்லது கையுதிர்க்கலாம் மற்றும் கம்பெனியின் சொத்துக்களில் அனைத்தையும் அல்லது பகுதிகளை கையுதிர்க்கலாம்; அத்துடன்

(ஊ) கம்பெனி நிருவாகத்திலில்லாதிருப்பினும், கம்பெனி அல்லது அதன் எவரேனும் பணிப்பாளர்கள் அல்லது வேறு அலுவலர்கள் புரியக்கூடியதான ஏதேனும் பணி அல்லது தத்துவத்தைப் புரியலாம் அல்லது பிரயோகிக்கலாம்.

## அத்தியாயம் 2

### நிருவாகத்தின் செயல்முறை

நிருவாகம் தொடங்கும் போது

**179.** கம்பெனியின் நிருவாகமானது ஒரு மாற்றீடு செய்யப்பட்ட நிருவாகி அல்லாத நிருவாகியொருவர் இப்பாகத்தின் கீழ் நியமிக்கப்பட்ட நாளிள் மற்றும் நியமிக்கப்பட்ட நேரத்திலிருந்து தொடங்குகின்றது.

நிருவாகத்தின் வழிகள்

**180.** (1) நிருவாகத்தின் தொடக்கத்தினைத் தொடர்ந்தும், நான்காம் உட்பிரிவுக்கமையும் மற்றும் இச்சட்டத்தின்

ஏற்புடயற்பாலதான ஏற்பாடுகள் மற்றும் அதன் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிக்கமையவும் –

(அ) (i) ஆரம்ப கூட்டமொன்றினை; அத்துடன்

(ii) அடுத்துறும் பெறுபேற்று கூட்டத்தினை கூட்டலாம்; அல்லது

(ஆ) முன்மொழியப்பட்ட கம்பெனி ஒழுங்கேற்பாட்டு உறுதி தொடர்பில் -

(i) இணைந்த ஆரம்ப மற்றும் பெறுபேற்று கூட்டமொன்றை கூட்டுதல் வேண்டும்;

(ii) உறுதி மீளாய்வு கேட்புக்கு, நீதிமன்றிற்கு விண்ணப்பித்தல் வேண்டும்; அத்துடன்

(iii) இணைந்த ஆரம்ப மற்றும் பெறுபேற்று கூட்டத்தில் இவ்விடயத்தின்மீது, வெளிப்படுத்தப்பட்டவாறு கடன்கொடுநர்களின் அத்தகைய நோக்குகளை கேட்ட பின்னர் -

(அ) உறுதி மீளாய்வு கேட்டலினை முன்னெடுத்தல் வேண்டும்; அல்லது

(ஆ) பெறுபேற்று கூட்டத்தினை கூட்டுதல் வேண்டும்.

(2) இப்பிரிவில்-

“நியம வழி” என்பது, (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்காரணி எனப் பொருள்படும்; அத்துடன்

“துரிதமாக்கப்பட்ட வழி” என்பது, (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் விபரிக்கப்பட்ட செயற்காரணி எனப் பொருள்படும்.

(3) நியம வழியில் -

(அ) இச்சட்டத்தின் ஏற்புடையற்பாலதான ஏற்பாடுகளுக்கமைய, பின்வருவனவற்றை முடிபு செய்வதற்கான கடன்கொடுநர்களுக்கான சந்தர்ப்ப

மொன்றின் ஏற்பாடு உள்ளடங்கலான ஆரம்ப கூட்டமொன்றின் குறிக்கோள்கள்-

(i) நிருவாகியை மாற்றீடு செய்வதாயினுஞ்சரி அல்லாவாயினுஞ்சரி; அத்துடன்

(ii) நிருவாக கடனாளிகள் குழுவினை நியமிக்கப் படவேண்டுமாயினுஞ்சரி அல்லவாயினுஞ்சரி மற்றும், நியமிக்கப்படின், அக்குழுவின் உறுப் பினராக யார் நியமிக்கப்படவேண்டும்; அத்துடன்

(ஆ) இச்சட்டத்தின் ஏற்புடையற்பாலதான ஏற்பாடுக ளுக்கமைய, கடனாளிகளினால் பின்வரும் தீர்மானமொன்றை செய்தல் உள்ளடங்கலான பெறுபேற்று கூட்டமொன்றின் நோக்கங்கள்:-

(i) முன்மொழியப்பட்ட கம்பெனி ஒழுங்கேற் பாட்டு உறுதியொன்று அங்கீகரிக்கப்பட வேண்டுமாயினுஞ்சரி அல்லவாயினுஞ்சரி;

(ii) கம்பெனி ஏலவே ஒழித்துக்கட்டலில் இருந் தாலொழிய, ஒழிப்போன் நியமிக்கப்பட வேண்டுமாயினுஞ்சரி அல்லவாயினுஞ்சரி; அல்லது

(iii) வேறுவகையில் நிருவாகம் நிறுத்தப்பட வேண்டுமாயினுஞ்சரி அல்லவாயினுஞ்சரி.

(4) துரிதமாக்கப்பட்ட வழியில்-

(அ) இணைந்த ஆரம்ப மற்றும் பெறுபேற்று கூட்டத்தின் நோக்கங்களானவை பின்வருவன வற்றை உள்ளடக்குகின்றது:-

(i) மூன்றாம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள ஆரம்ப கூட்டத்தின் குறிக்கோள்கள்; அத்துடன்

(ii) முன்மொழியப்பட்ட கம்பெனி ஒழுங்கேற் பாட்டு உறுதி அங்கீகரிக்கப்பட வேண்டுமா அல்லவா என்பது பற்றி இச்சட்டத்தின்

ஏற்புடயற்பாலதான ஏற்பாடுகளுக்கமைய கடன்கொடுநர்களில் செய்யப்படும் தீர்மான மொன்று; அத்துடன்

(ஆ) கடன்கொடுநர்களினால் அங்கீகர்க்கப்பட்ட கம்பெனி ஒழுங்கேற்பாட்டு உறுதி பிணிக்கப்பட வேண்டுமா அல்லது இல்லையாயென இச்சட்டத்தின் ஏற்புடயற்பாலதான ஏற்பாடுகளுக்கமைய நீதிமன்றத்தினால் தீர்மானமொன்றான உறுதி மீளாய்வு கேட்பொன்றின் குறிக்கோள்.

(5) நிர்வாகத்தின் தொடக்கத்தின் பின்னர் உடனடியாகவும் (6) ஆம் உட்பிரிவிற்கமையவும், நிருவாகியானவர்-

(அ) நியம வழியை பின்தொடர வேண்டுமா என்பது பற்றி முடிபு எடுத்தல் வேண்டும்;

(ஆ) துரிதமாக்கப்பட்ட வழியை பின்தொடர வேண்டுமா என்பது பற்றி முடிபு செய்தல் வேண்டும்.

(6) நிருவாகியானவர் பின்வருமாறு இருந்தாலொழிய, துரிதமாக்கப்பட்ட வழியை பின்தொடரலாகாது-

(அ) 219 ஆம் பிரிவின் கீழ் நிருவாகிக்கு வழங்கப்பட்டிருக்கின்ற பணிப்பாளரொருவரின் கூற்று; அத்துடன்

(ஆ) நிருவாகியானவர் பின்வருவனவற்றில் திருப்தியுற்றிருத்தல் :-

(i) இணைந்த ஆரம்ப மற்றும் பெறுபேற்று கூட்டத்தின் முன்மொழியப்பட்ட கம்பெனி ஒழுங்கேற்பாட்டு உறுதியின் அங்கீகாரத்துக்காக கடன்கொடுத்தோரிடமிருந்து போதுமான ஆதரவு காணப்படுகிறது என; அத்துடன்

(ii) பந்தி (i) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட முன்மொழியப்பட்ட கம்பெனி ஒழுங்கேற்பாட்டு உறுதி பயனுறுமாயின், அது 223 ஆம் பிரிவிலுள்ள தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகும்.

(7) இப்பகுதியில்-

"இணைந்த ஆரம்ப மற்றும் பெறுபேற்று கூட்டம்" என்பது, 215 ஆம் பிரிவில் விபரிக்கப்பட்டுள்ள வையான கடன் கொடுநர்களின் கூட்டம் எனப் பொருள்படும்;

"கூட்டப்படும் காலப்பகுதி" என்பது, நிருவாகத்தின் தொடக்கத்தின் பின்னரான இருபது வேலைநாட் களைக் கொண்ட காலப்பகுதி எனப் பொருள்படும் என்பதுடன் 213 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவு அல்லது (4) ஆம் உட்பிரிவின் கீழ் நீட்டிக்கப்பட்ட தான ஏதேனும் காலப்பகுதியையும் உள்ளடக்கு கின்றது.

"உறுதி மீளாய்வு கேட்பு" என்பது, 216 ஆம் பிரிவில் விபரிக் கப்பட்டுள்ளதான் நீதிமன்ற கேட்பு எனப் பொருள்படும்;

"ஆரம்ப கூட்டம்" என்பது, 212 ஆம் பிரிவில் விபரிக் கப்பட்டுள்ளதான கடன்கொடுநர்களின் கூட்டம் எனப் பொருள்படும்;

"பெறுபேற்று கூட்டம்" என்பது, 213 ஆம் பிரிவில் விபரிக் கப்பட்டுள்ளதான கடன்கொடுத்தோர்களின் கூட்டம் எனப் பொருள்படும்.

## அத்தியாயம் 3

### நிருவாகியின் நியமனம்

யார் நிருவாகியாக நியமிக்கப் பட்டு செயலாற்று வார்கள்

**181.** (1) ஆளொருவர் பின்வருமாறு இருப்பின் மட்டும், அவ்வாள் கம்பெனியொன்றின் நிருவாகியொருவராக நியமிக்கப்படலாம் அல்லது செயலாற்றலாம் -

(அ) நிருவாகம் தொடர்பில் பிரதான பதவி வகிப்ப வராக நியமிக்கப்பட்டு செயலாற்றுவதற்கு 12 ஆம் பிரிவின் கீழ் தகுதியுடையவராகவிருப்பின்;

(ஆ) நிருவாகியொருவராக நியமிக்கப்படுதல் அல்லது செயலாற்றுவதிலிருந்து 182 ஆம் பிரிவின் கீழ் தகுதியற்றவராக இல்லாதிருப்பின்;

(இ) அவ்வாள்-

(i) நிருவாகம் தொடர்பில் பிரதான பதவி வகிப்பவராக நியமிக்கப்படவும் செயலாற்றப்படுவதற்கும் 12 ஆம் பிரிவின் கீழ் தகுதியுடையவராகவிருப்பின்; அத்துடன்

(ii) நிருவாகியொருவராக நியமிக்கப்படுதல் அல்லது செயலாற்றுவதிலிருந்து 182 ஆம் பிரிவின் கீழ் தகுதியற்றவராகவிருப்பின்; அத்துடன்

(ஈ) நியமனத்திற்கு எழுத்தில் சம்மதம் அளிக்கப்பட்டவராகவும் நியமனத்தின் போது அத்தகைய சம்மதத்தை மீளப்பெறாதவராகவும் இருப்பின்.

(2) ஓராம் உட்பிரிவின் (அ), (ஆ), மற்றும் (இ) என்னும் பந்திகளின் எவையேனும் தேவைப்பாடுகள் ஈடுசெய்திருக்கவில்லை என அறிந்துகொண்டு ஆளொருவரின் சம்மதத்துடன் கம்பெனியின் நிருவாகியாக நியமிக்கப்படுகின்ற அல்லது செயலாற்றுகின்ற ஆளொருவர் தவறொன்றை புரிந்தவராகின்றார்.

நிருவாகியாக நியமிக்கப் படவும் செயற்படு வதிலிமிருந் தான தகுதியீனங் கள்

**182.** (1) கம்பெனியொன்றின் நிருவாகியாக நியமிக்கப்படுவதிலிருந்து அல்லது செயற்படுவதிலிருந்து பின்வரும் ஆட்கள் மற்றும் அவர்களுடன் தொடர்புபட்ட திறத்தவர்கள் தகுதிநீக்கம் செய்யப்படுகிறார்கள் -

(அ) கம்பெனியொன்றின் ஒழிப்போன் ஒருவராகவன்றி, நிருவாகம் தொடங்கிய தேதிக்கு நேர் முற்போந்த இரண்டு ஆண்டுகள் எனும் காலப் பகுதியினுள் கம்பெனியின் கடன்கொடுத்தவராக இருக்கின்ற அல்லது இருந்த ஆளொருவர்;

(ஆ) நிருவாகம் தொடங்கிய தேதிக்கு நேர் முற்போந்த இரண்டு ஆண்டுகள் எனும் காலப்பகுதியினுள் கம்பெனியின் அல்லது தொடர்புபட்ட கம்பெனியின் பணிப்பாளராக அல்லது ஏனைய அலுவலராக அல்லது கணக்காய்வாளராக அல்லது ஊழியராக இருக்கின்ற அல்லது இருந்த ஆளொருவர்.

(இ) நிருவாகம் தொடங்குவதற்கு முற்போந்த தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகள் எனும் காலப் பகுதியினுள்-

(i) கம்பெனியினியினால் அல்லது தொடர்பு பட்ட கம்பெனியொன்றினால் வழங்கப்பட்ட பங்குகளின் நேரடி அக்கறையைக் கொண்டிருக்கின்ற அல்லது கொண்டிருந்த ஆளொருவர்; அல்லது

(ii) கம்பெனியினியினால் அல்லது தொடர்பு பட்ட கம்பெனியொன்றினால் வழங்கப்பட்ட பங்குகளின் ஐந்து சதவீதத்துக்கு அல்லது ஏதேனும் வகுப்புக்கு மேற்பட்ட நேரடி அக்கறையைக் கொண்டிருக்கின்ற அல்லது கொண்டிருந்த ஆளொருவர்;

(ஈ) நிருவாகம் தொடங்கிய தேதிக்கு நேர் முற் போந்த மூன்று ஆண்டுகள் எனும் காலப்பகுதி யினுள் ஆதனமொன்றின் பெறுநராக அல்லது கம்பெனியின் ஆதனமொன்று தொடர்பில் நியமிக்கப்பட்டவராக இருக்கின்ற அல்லது இருந்த ஆளொருவர்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் தகுதியற்றவராகவிருக்கும் போது, நிர்வாகியொருவராக நியமிக்கப்பட்டிருக்கின்ற அல்லது செயலாற்றுகின்ற ஆளொருவர் தவறொன்றைப் புரிந்தவராகின்றார்.

நிருவாகியாக யார் நியமிக் கப்படலாம்

**183.** (1) இரண்டாம் உட்பிரிவுக்கமைய, பின்வருவன வற்றினால் நிர்வாகியொருவர் நியமிக்கப்படலாம் :-

(அ) 185 ஆம் பிரிவின் கீழான கம்பெனியினால்;

(ஆ) 186 ஆம் பிரிவின் கீழான கம்பெனியின் சபையினால்;

(இ) 188 ஆம் பிரிவின் கீழான ஒழிப்போனொருவரால் அல்லது தற்காலிக ஒழிப்போனொருவரால்;

(ஈ) 189 ஆம் பிரிவின் கீழ் பிணைப்பொறுப்பளிக்கப் பட்ட கடன்கொடுத்தவர் அல்லது பெறுநரொருவரால்; அல்லது

(உ) 190 ஆம் பிரிவின் கீழான நீதிமன்றம்.

(2) கம்பெனியானது ஏற்கனவே நிருவாகத்தி லிருப்பின், நிருவாகியொருவர் பின்வருவோரால் தவிர, நியமிக் கப்படலாகாது-

(அ) 254 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழ் கடன்கொடுத்தவர்கள் அகற்றியுள்ளவரான நிருவாகியொருவருக்கான மாற்றீட்டு நிருவாகியொருவராக கடனாளிகளி னால்;

(ஆ) 253 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழ் முதலாவது நிருவாகியின் நியமிப்பாளரினால்;

(இ) நீதிமன்றத்தினால்; அல்லது

(ஈ) 253 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் (ii) ஆம் உட்பந்தியின் கீழ் நீதிமன்றத்தினால் குறித்துரைக்கப்பட்ட செயல் முறையை பின்தொடர்வதினால்.

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நிருவாகி களின் நியமனம்

**184.** (1) நிருவாகியொருவரின் நியமனத்திற்காக இப்பாகம் ஏற்பாடு செய்கின்றவிடத்தான சந்தர்ப்பத்தில் இரண்டு அதற்கு மேற்பட்ட ஆட்கள் நிருவாகிகளாக நியமிக்கப்படலாம்.

(2) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஆட்கள் நிருவாகிகளாக நியமிக்கப்படுமிடத்து –

(அ) இதுவரையில் அவர்களை நியமிக்கும் தீர்மானம், சாதனம் அல்லது கட்டளையினால் வேறுவகை யில் ஏற்பாடு செய்தாலொழிய, நிருவாகியொரு வரின் பணிகள் மற்றும் தத்துவங்கள் அவர்களில் எவரேனும் ஒருவரினால் அல்லது அவர்களில் எவரேனும் இருவர் அல்லது அதற்கு மேற்பட்ட வர்களினால் கூட்டாக பிரயோகிக்கப்படலாம் அல்லது நிறைவேற்றப்படலாம்;

(ஆ) நிருவாகிகளான ஆட்களின் ஏதேனும் பொறுப்பு கூட்டாகவும் பலவாகவும் இருக்கப்படுதல் வேண்டும்; அத்துடன்

(இ) நிருவாகியொருவருக்கான இச்சட்டத்திலுள்ள குறிப்பீடானது சந்தர்ப்பத்தின் தேவையானதாக ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டதான எதுவாக வுள்ளதோ அந்த நிருவாகிகளைக் குறிப்பீடு செய்கின்றது.

கம்பெனி யால் நிருவாகியின் நியமனம்

**185.** (1) நூற்றி எண்பத்தேழாம் பிரிவிற்கமைய, கம்பெனி தீர்மானமொன்றினால் பின்வருவனவற்றை முடிபுசெய்தி ருக்குமிடத்து, கம்பெனியானது சாதாரண தீர்மானமொன் றினால் நிர்வாகியொருவரை நியமிக்கலாம்-

(அ) கம்பெனியானது கடனிறுக்க வகையற்றதாகவுள்ள அல்லது அவ்வாறு வரும் சாத்தியம் காணப்படின், தீர்மானத்திற்கான பங்குதாரர்களின் வாக்களிப் பின் அபிப்பிராயத்தை; அத்துடன்

(ஆ) கம்பெனியின் நிருவாகியொருவர் நியமிக்கப் படுதல் வேண்டும் என.

(2) ஓராம் உட்பிரிவின் கீழான நியமனமொன்று எழுத்திலிருத்தல் வேண்டும்.

கம்பெனியின் சபையால் நிருவாகியின் நியமனம்

**186.** (1) நூற்றியெண்பத்தேழாம் பிரிவிற்கமைய, தீர்மான மொன்றினால் பின்வருவனவற்றை கம்பெனியின் சபை யானது, முடிபுசெய்திருக்கின்றவிடத்து, கம்பெனியின் சபை யானது தீர்மானமொன்றினால் நிர்வாகியொரு வரை நியமிக்கலாம் -

(அ) கம்பெனியானது கடனிறுக்க வகையற்றதாக வுள்ள அல்லது அவ்வாறு வருவதற்கான சாத்தியம் உள்ள தீர்மானத்திற்கான பணிப்பாளர்களின் வாக்குகளின் அபிப்பிராயத்தினை; அத்துடன்

(ஆ) கம்பெனியின் நிருவாகியொருவர் நியமிக்கப் படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழான நியமனமொன்று எழுத்திலிருத்தல் வேண்டும்.

(3) கம்பெனியின் அமைப்பகவிதிகள் கம்பெனியின் சபையில் கம்பெனியின் முகாமைத்துவத்தில் உரித்தாக்கப்பட்

டுள்ளவிடத்து, (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட கருமத்தின் மீதான அல்லது நிருவாகியாக யார் நியமிக்கப்பட வேண்டும் என்பது பற்றி பங்குதாரர்களின் மற்றம் அச்சபைகளின் நோக்குகள் என்பவற்றுக்கிடையில் முரண்பாடு ஏற்படும் சந்தர்ப்பத்தில், சபையின் நோக்குகள் மேலோங்கியிருத்தல் வேண்டும்.

கம்பெனியால் அல்லது சபையால் நிருவாகியின் நியமனத்தின் மீதான மட்டுப்பாடு கள்

**187.** (1) ஒழித்துக்கட்டுதலானது தொடக்கப்பட்டதன் பின்னர் 185 ஆம் பிரிவு அல்லது 186 ஆம் பிரிவின் கீழ் நிருவாகியொருவர் நியமிக்கப்படலாகாது.

(2) நூற்றித் தொண்ணூறாம் அல்லது 298 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின் கீழ் விண்ணப்பமொன்று செய்யப்பட்டு கம்பெனிக்கு சேர்ப்பிக் கப்பட்டு அத்தடன் முடிவுறாதுள்ளவிடத்து, நிருவாகி யொருவர் பின்வருமாறு இருந்தாலொழிய, 185 ஆம் பிரிவு அல்லது 186 ஆம் பிரிவு என்பவற்றின் கீழ் நியமிக்கப் படலாகாது -

(அ) கம்பெனிக்கு விண்ணப்பம் சேர்ப்பிக்கப்பட்ட பின்னர் ஏழு வேலை நாட்களினுள் நியமனம் மேற்கொள்ளப்பட்டிருப்பின்;

(ஆ) அக்கடனாளியின் முற்கூட்டிய, எழுத்துமூல சம்மதத்துடன், 190 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவு (இ) என்னும் உட்பிரிவின் கீழ் அல்லது 298(2)(இ) பிரிவின் கீழ் கடன்கொடுத்தோரால் விண்ணப்பம் செய்யப்பட்டிருப்பின்;

(இ) நீதிமன்றத்தின் அனுமதியுடன்; அல்லது

(ஈ) பின்வருவனவற்றுக்கிணங்க, முந்தைய நிருவாகி நியமிக்கப்பட்டிருக்கின்றவிடத்து, நிருவாகியின் பதிவியிலான வெற்றிடத்தினை நிரப்புவதற்கு மாற்றீட்டு நிருவாகியொருவர் ;

(i) இவ்வுட்பிரிவின் முற்போந்த பந்திகளுள் ஒன்று; அல்லது

(ii) இப்பந்தி.

(3) கம்பெனியின் ஆதனங்களில் முழுமையான அல்லது முழுமைக்கு கணிசமான பெறுநராண்மையின்போது, மற்றும் பொறுப்பு முயற்சியின்போது, பின்வருவன தவிர்ந்த, நிர்வாகியொருவர் 185 ஆம் அல்லது 186 ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்படலாம்-

(அ) எவரது அல்லது எவருடைய அக்கறைகளினால் ஆளின் முன்னரான எழுத்துமூல சமமதத்துடன் பெறுநர் நியமிக்கப்பட்டிருத்தல்;

(ஆ) நீதிமன்றத்தின் அனுமதியுடன்; அல்லது

(இ) பின்வருவனவற்றுக்கிணங்க, முந்தைய நிருவாகி நியமிக்கப்பட்டிருக்கின்றவிடத்து, நிருவாகியின் பதிவியிலான வெற்றிடத்தினை நிரப்புவதற்கான மாற்றீடு நிருவாகியொருவர்;

(i) இவ்வுட்பிரிவின் முற்போந்த பந்திகளுள் ஒன்று; அல்லது

(ii) இப்பந்தி.

ஒழிப்போன் அல்லது தற்காலிக ஒழிப்போனினால் நிருவாகியின் நியமனம்

**188.** (1) மூன்றாம் மற்றும் (4) ஆம் உட்பிரிவுகளுக் கமைய, கம்பெனியின் ஒழிப்போன் அல்லது தற்காலிக ஒழிப்போன், அவ்வொழிப்போன் அல்லது தற்காலிக ஒழிப் போன் பின்வருமாறு எண்ணுகின்றவிடத்து, நிருவாகியொரு வரை நியமிக்கலாம்-

(அ) கம்பெனியானது கடனிறுக்க வகையற்றதாக உள்ளது அல்லது வருவதற்கான சாத்தியமுள்ளது; அத்துடன்

(ஆ) நிருவாகியொருவர் நியமிக்கப்பட்டிருப்பின், ஒன்றில் -

(i) கம்பெனியின் நிலைப்பு அல்லது முழுத ளாவிய அல்லது பகுதியளவான அதன் தொழில் அடைந்துக்கொள்ளப்படக்கூடிய நியாயமான இயலுமையுடையதாகவுள்ள தாகவோ; அல்லது

(ii) அடையக்கூடிய கடன்கொடுநர்களுக்கும் மற்றும் பங்குதாரர்களுக்குமான சந்தித் திரும்பல்,.

(2) ஓராம் உட்பிரிவின் கீழான நியமனமொன்று எழுத்திலிருத்தல் வேண்டும்.

(3) பின்வருவனவற்றில் ஒன்று முதலாவதாக பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தாலொழிய, ஒழிப்போன் அல்லது ஒழிப் போனுடன் சம்மதப்பட்ட திறத்தவர் நிருவாகியாக நியமிக்கப் படுதலாகாது-

(அ) தீர்மானத்தின் மூலமான கடன்கொடுத்தவர்களின் அங்கீகாரம்; அல்லது

(ஆ) நீதிமன்றத்தின் அனுமதி.

(4) ஓராம் உட்பிரிவின் கீழான நிருவாகியொருவரின் நியமனமானது விடயத்திற்கேற்ப, கம்பெனி சார்பாக செயற் படுவதற்கும் ஒழிப்போனின் அல்லது தற்காலிக ஒழிப் போனின் தத்துவங்கள் உள்ளிட்ட ஒழித்துக்கட்டுதலை அல்லது தற்காலிக ஒழித்துக்கட்டுதலை இடைநிறுத்துதல் வேண்டும். ஆயின், எவ்வாறினும், இப்பிரிவிலுள்ள எதுவும் (1) ஆம் உட்பிரிவின் கீழான நிருவாகியொருவரின் நியமனத் துடன் பதவியிலிருந்து அகற்றப்படுதல் வேண்டுமென்பது துடன் விடயத்துக்கேற்ற, ஒழிப்போன் அல்லது தற்காலிக ஒழிப்போன் எனப் பொருள் கொள்ளுதலாகாது.

உத்தரவாதப் படுத்தப்பட்ட கடன்கொடுநரினால் நிருவாகியின் நியமனம்

**189.** (1) மூன்றாம் உட்பிரிவிற்கமைய, கம்பெனியின் ஆதனங்கள் மற்றும் பெறுப்புமுயற்சிகளின் முழுதான அல்லது கணிசமாக முழுதான வில்லங்கத்தினை பிணைப்பொறுப் பளிக்கப்பட்ட கடன்கொடுநர்ஒருவர், அல்லது அவ்வாளினால் நியமிக்கப்பட்ட பெறுநர் ஒருவர், வில்லங்கம் வலியுறுத்து வதாக வந்திருக்குமிடத்து, மற்றும் இன்னும் வலுவில் உள்ளவிடத்து, நிருவாகியை நியமிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழான நியமனமொன்று எழுத்திலிருத்தல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் கீழ் நிருவாகியொருவரை நியமிக்கும் பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கடன்கொடுநர் ஒருவர் செயல்முறைக்குகந்தவரை விரைவாக நியமனத்திற்கு பின்னரான அடுத்த வேலைநாளின் முடிவுக்கு முன்னதான ஏதேனும் நிகழ்விலுமாக, அத்தகைய நியமனத்தின் எழுத்து மூல அறிவித்தலை கம்பெனிக்கு வழங்குதல் வேண்டும்.

(4) கம்பெனியானது ஏற்கனவே ஒழித்துக்கட்டுதலில் காணப்படுமாயின் பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கடன் கொடுநர் அல்லது பெறுநர் நிருவாகியொருவரை நியமித்த லாகாது.

**190.** (1) இரண்டாம் உட்பிரிவுக்கமைய, பின்வருவன வற்றின் ஒரு விண்ணப்பத்தின் மீது நீதிமன்றம் நிருவாகி யொருவரை நியமிக்கலாம்:-

நீதிமன்றத் தினால் நிருவாகியின் நியமனம்

(அ) கம்பெனி;

(ஆ) கம்பெனியின் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பணிப்பாளர்கள்;

(இ) கம்பெனியின் உதவுதொகை செலுத்துநர்;

(ஈ) கம்பெனியின் கடன்கொடுநர்(எதிர்பாரா அல்லது உத்தேச கடன்கொடுநர் உள்ளடங்கலாக);

(உ) கம்பெனியானது ஒழித்துக்கட்டுதலில் காணப்படு மாயின், ஒழிப்போன்;

(ஊ) தற்காலிக ஒழிப்போன் நியமிக்கப்பட்டிருக்கு மிடத்து, தற்காலிக ஒழிப்போனொருவர்;

(எ) பதிவாளர்; அல்லது

(ஏ) அதிகாரசபை

(2) நீதிமன்றமானது, பின்வருவனவற்றில் திருப்தியுறு மிடத்து, நீதிமன்றம் நிருவாகியொருவரை நியமிக்கலாம்:-

(அ) கம்பெனியானது கடனிறுவகையற்று காணப்படு கிறது அல்லது கடனிறுக்க வகையற்றதாக வரும் சாத்தியமுள்ளது ஆனால்;, நிருவாகியொருவர் நியமிக்கப்பட்டிருப்பின், ஒன்றில் -

(i) கம்பெனியின் நிலைப்பு அல்லது முழுமை யான அல்லது பகுதியளவான அதன் தொழில் அடைந்துக்கொள்ளப்படக்கூடிய

நியாயமானளவிலான இயலுமையுடைய தாகவுள்ளதாகவோ; அல்லது

(ii) கம்பெனியின் ஒழித்துக்கட்டுதலை உடனடியாக தொடங்கக்கூடியதாகவுள்ளதை காட்டிலும் சிறப்பான வருமானத்தை கடன் கொடுத்தோர்களிற்கும் பங்குதாரர்களிற்குமாக அடைந்துக்கொள்ளலாம்;

(ஆ) அவ்வாறு செய்வது நியாயமானதும் ஒப்புரவானதும் ஆகும்.

பதிவுசெய்யப் பட வேண்டிய நிருவாகத்தின் தொடக்கம்

**191.** (1) நூற்றியெண்பத்தைந்தாம் பிரிவின் கீழ் நிருவாகியொருவர் நியமிக்கப்படுமிடத்து, கம்பெனியானது தீர்மானம் நிறைவேற்றப்பட்ட அந்நாளின் மற்றும் அந்நேரத்தில் நிருவாகியை நியமிக்கும் தீர்மானத்தில் பதிவுசெய்தல் வேண்டும்.

(2) நூற்றியெண்பதாறாம் பிரிவின் கீழ் நிருவாகியொருவர் நியமிக்கப்படுமிடத்து, கம்பெனியின் சபையானது தீர்மானம் நிறைவேற்றப்பட்ட அத்தேதியில் அந்நேரத்தில் நிருவாகியை நியமிக்கும் தீர்மானத்தில் பதிவுசெய்தல் வேண்டும்.

(3) நூற்றியெண்பத்தெட்டாம் பிரிவின் கீழ் நிருவாகியொருவர் நியமிக்கப்படுமிடத்து, விடயத்துக்கேற்ப, ஒழிப்போன் அல்லது தற்காலிக ஒழிப்போன் சாதனம் ஆக்கப்பட்டதான அத்தேதியன்று மற்றும் அந்நேரத்தில் நிருவாகியை நியமிக்கின்ற சாதனத்தில் பதிவுசெய்தல் வேண்டும்.

(4) நூற்றியெண்பத்தொண்பதாம் பிரிவின் கீழ் நிருவாகியொருவர் நியமிக்கப்படுமிடத்து, பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கடன்கொடுநர் அல்லது பெறுநர் சாதனம் ஆக்கப்பட்ட அத்தேதியன்று மற்றும் அந்நேரத்தில் நிருவாகியை நியமிக்கின்ற சாதனத்தில் பதிவுசெய்தல் வேண்டும்.

(5) நூற்றித்தொண்ணூறாம் பிரிவின் கீழ் நிருவாகியொருவர் நீதிமன்றத்தினால் நியமிக்கப்படுமிடத்து, நீதிமன்றமானது அத்தகைய கட்டளை ஆக்கப்பட்ட தேதியன்று மற்றும் அந்நேரத்தில் ஒழிப்போனை நியமிக்கின்ற சாதனத்தில் பதிவுசெய்தல் வேண்டும்.

நிருவாகியின் நியமனம் ஒழிக்கப்படுதலாகாது

**192.** நிருவாகியொருவரின் நியமனமானது பின்வருவனவற்றின் மூலம் நிருவாகி அகற்றப்படுமிடத்து, தவிர, இல்லாதொழிக்கப்படலாகாது-

(அ) நீதிமன்றத்தினால்; அல்லது

(ஆ) இப்பாகத்தின் கீழான கடன்கொடுநர்கள்.

நிருவாகியின் நியமனம் மற்றும் விபரங்களின் அறிவித்தல்

**193.** (1) நிருவாகியொருவர்-

(அ) நியமனத்திற்கு பின்னரான அடுத்த வேலை நாளின் முடிவிற்கு முன்னதாக, நியமனத்தின் எழுத்துமூல அறிவித்தலை பதிவாளர் மற்றும் அதிகாரசபைக்கு வழங்குதல் வேண்டும்;

(ஆ) செயல்முறைக்குகந்தவரை விரைவாக, நியமனத்திற்குப் பின்னரான அடுத்த வேலைநாளின் முடிவிற்கு முன்னதான ஏதேனும் நிகழ்விலும், கம்பெனியின் ஆதனங்கள் மற்றும் பொறுப்பு முயற்சிகளின் முழுமையான அல்லது பகுதியளவில் முழுமையான வில்லங்கத்தினை வைத்திருக்கின்றவரான ஆள் ஒவ்வொருவருக்கும் நியமனம் பற்றிய எழுத்துமூல அறிவித்தலை வழங்குதல் வேண்டும்; அத்துடன்

(இ) நியமனத்திற்கு பின்னரான இரு வேலை நாட்களினுள்-

(i) நிருவாகியின் நியமனம் பற்றி பொது அறிவித்தலை வழங்குதல் -

(ii) புதிவாளர் மற்றும் அதிகாரசபைக்கு பொது அறிவித்தலின் பிரதியை அனுப்புதல் வேண்டும். பொது அறிவித்தலின் உள்ளீடுகள் பின்வருவனவற்றை உள்ளடக்குதல் வேண்டும்

(2) பகிரங்க அறிவித்தலின் உள்ளடக்கங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

(அ) நிருவாகியின் முழுப்பெயர்;

(ஆ) நியமனத் திகதி;

(இ) நிருவாகியின் நியமிப்பாளரின் அடையாளம் மற்றும் நீதிமன்றமே நியமிப்பாளராயின், நியமனம் மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பதாரியின் அடையாளம்; அத்துடன்

(ஈ) நிருவாகியின் அலுவலக முகவரி மற்றும் வழமையான வேலைநாட்களின் போது விசாரணைகள் பணிக்கப்படக்கூடியதான தொடர்பு இலக்கம்.

(3) நிருவாகியொருவரின் நியமனமானது ஏற்கனவே பதவியை வகிக்கும் நிருவாகிக்கு மேலதிகமானது அல்லது நிருவாகியொருவராக அலுவலகத்தை வறிதாக்ககூடியவரான ஒரு ஆளினது இடத்திற்கானதாகவிருக்குமிடத்து, (1) ஆம் உட்பிரிவின் கீழான ஒவ்வொரு அறிவித்தலும் நிகழ்வைக் குறிப்பிடுதல் வேண்டும்-

(4) நிருவாகியின் அலுவலக முகவரி அல்லது தொடர்பு இலக்கத்தில் ஏதேனும் மாற்றம் ஏற்படும் பட்சத்தில், நிருவாகியானவர், இரு வேலைநாட்களினுள்.

(அ) விடயத்திற்கேற்ப, நிருவாகியின் புதிய முகவரி அல்லது தொடர்பு இலக்கத்தின் பொது அறிவித்தலை வழங்குதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) பொது அறிவித்தலின் பிரதியொன்றினை பதிவாளர் மற்றும் அதிகாரசபைக்கு அனுப்புதல் வேண்டும்.

(5) இப்பிரிவுடன் இணங்கியொழுகுவதற்கான தவறுகையினது நிருவாகியொருவராக ஆளொருவரின் நியமனத்தின் வலிதானத்தன்மையை பாதித்தலாகாது.

(6) இப்பிரிவு இணங்கியொழுகுவதற்கு தவறுகின்ற நிருவாகியொருவர் தவறொன்றைப் புரிந்தவராகின்றார்

நிருவாகத்திற்கு குறிப்பீடு செய்யப்படுகின்ற ஆவணங்கள்

**194.** (1) கம்பெனியில் நீண்டகாலத்திற்கு நிருவாகம் காணப்படுமிடத்து, நிருவாகியானவர் பின்வருவனவற்றை உறுதிப்படுத்துதல் வேண்டும் :-

(அ) கம்பெனி அல்லது நிருவாகியினால் அல்லது சார்பாக வழங்கப்பட்ட அல்லது கையொப்பமிடப் பட்ட ஒவ்வொரு ஆவணமும் கம்பெனியின் பெயர் முதலில் தோன்றுமிடத்திற்கு பின்னர் “நிருவாகத் தினால்” எனும் சொற்களைக் கொண்டிருத்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) கம்பெனியானது ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்ட வலைத்தளங்களை கொண்டிருப்பின், ஒவ்வொரு வலைத்தளத்தினதும் ஒவ்வொரு பக்கமும் கம்பெனியானது நிருவாகத்தினை கொண்டுள்ளது என்பதனை முதன்மையாக குறிப்பிடுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவுடன் இணங்கியொழுகத் தவறுதலானது, பின்வருவனவற்றின் செல்லுபடியாந்தன்மை யினை பாதித்தலாகாது .

(அ) நிருவாகியாக ஆளொருவரின் நியமனம்; அல்லது

(ஆ) ஏதேனும் ஆவணம்.

(3) ஓராம் உட்பிரிவுடன் இணங்கியொழுகத் தவறும் ஒவ்வொரு ஆளும் தவறொன்றைப் புரிந்தவராவார்.

பெயர் மாற்றமொன்றிற்கு ஆற்றப்படுத்தப்படுகின்ற நிருவாகத்திலுள்ள ஆவணங்கள்

**195.** (1) நிருவாகத்தின் தொடக்கத்துக்கு முன்னரான ஆறு மாதங்களிற்கு குறையாது அதன் பெயரினை கம்பெனியானது மாற்றியிருக்குமிடத்து, நிருவாகியானவர் பின்வருவனவற்றை உறுதிப்படுத்துதல் வேண்டும்-

(அ) கம்பெனி அல்லது நிருவாகியினால் அல்லது சார்பாக வழங்கப்பட்ட அல்லது கையொப்பமிடப் பட்ட ஒவ்வொரு ஆவணமும் அதன் முந்தைய பெயரை உள்ளடக்குதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) கம்பெனியானது ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்ட வலைத்தளங்களை கொண்டிருப்பின், ஒவ்வொரு வலைத்தளத்தினதும் ஒவ்வொரு பக்கமும் அதன் முந்தைய பெயரினை உள்ளடக் கியிருத்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவுடன் இணங்கியொழுகத் தவறுதலானது, பின்வருவனவற்றின் செல்லுபடியாந்தன்மையினை பாதித்தலாகாது.

(அ) நிருவாகியாக ஆளொருவரின் நியமனம்; அல்லது

(ஆ) ஏதேனும் ஆவணம்.

(3) ஓராம் உட்பிரிவுடன் இணங்கியொழுகத் தவறும் ஒவ்வொரு ஆளும் தவறொன்றைப் புரிந்தவராவார்.

## அத்தியாயம் 4

### நிருவாகத்தின் பயன்கள்

நிருவாகத்தின்போது வில்லலங்கங்களின் வலுவுக்கிடாமை

**196.** (1) கம்பெனியின் நிருவாகத்தின் போது, 202 ஆம் மற்றும் 203 ஆம் பிரிவுகளுக்கமைய, ஆளெவரும் பின்வருவன தவிர்ந்த வலுவுக்கிடுதலாகாது:-

(அ) கம்பெனியின் ஆதனத்தின் மீதான வில்லங்கமொன்று; அல்லது

(ஆ) கம்பெனியின் தனிசொன்றாக, பொறுப்பாக அல்லது ஏனைய கடப்பாடு தொடர்பில் மூன்றாம் திறத்தவறொருவருக்கு வழங்கப்பட்ட ஆதனத்தின் மீதான வில்லங்கமொன்று,

(இ) நிருவாகியின் முன்னரான, எழுத்துமூல சம்மதம்; அல்லது

(ஈ) அவசியமானதான அத்தகைய நியதி நிபந்தனைகள் மீதான நீதிமன்றத்தின் அனுமதி.

(2) முழுமையாக கடன்கொடுநர்களின் அக்கறைகளுக்கு வில்லங்கமொன்றின் வலுவுறுத்துகையானது தீங்கிழைக்காது என திருப்தியுறுமிடத்து, (1) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின் கீழ் நிருவாகியானவர் சம்மதம் அளிக்கலாம்.

(3) நிருவாகியானவர் (1) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின் கீழான சம்மதத்தை மறுப்பதற்கான இழப்புகளுக்கு ஆளாகின்றார்.

(4) நீதிமன்றம் கணிசமானளவு நியாயமற்றது என வேறுவகையில் விளைதலானது திருப்திபடுமிடத்து (1) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியின் கீழ் அனுமதியை வழங்கலாம்.

நிருவாகத்தின்போது ஆதனத்தினை அறவிடாமை

**197.** (1) கம்பெனியின் நிருவாகத்தின் போது 202 மற்றும் 203 ஆம் பிரிவிற்கமைய, வாடகை கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் உள்ளடங்கலாக கம்பெனியினால் பயன்படுத்தப்படுகின்ற அல்லது இருப்பாட்சியிலுள்ள அல்லது உடமையினால் அல்லது உடமையிலுள்ளதான ஆதனத்தின் சொந்தக்காரர் அல்லது குத்தகையாளர் பின்வருவன தவிர, ஆதனத்தின் உடமையை அல்லது வேறுவகையில் அறவிடுதலாகாது-

(அ) நிருவாகியின் முன்னரான, எழுத்துமூல சம்மதம்; அல்லது

(ஆ) அவசியமானதான அத்தகைய நியதி நிபந்தனைகள் மற்றும் நிபந்தனைகளின் மீதான நீதிமன்றத்தின் அனுமதி.

(2) ஆதனத்தை உடமையில் எடுத்தல் அல்லது வேறு அறவிடுகை முழுமையாக கடனகொடுநர்களின் அக்கறைகளுக்கு ஊறு ஏற்படுத்தாது என திரப்திபடுமிடத்து, (1) ஆம் உட்பிரிவின் கீழ் நிருவாகி சம்மதம் அளிக்கலாம்.

(3) ஓராம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழ் சம்மதம் அளிப்பதற்கு மறுப்பதற்கான சேதங்களிற்கு நிருவாகி ஆளாகமாட்டார்.

(4) நீதிமன்றம் கணிசமானளவு நியாயமற்ற தன்மை வேறு வகையில் ஏற்படும் என திருப்திபடுமிடத்து, (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் கீழ் நீதிமன்றம் அனுமதி அளிக்கலாம்.

நிருவாகத்தின்போது வழக்கு நடவடிக்கை முறைகளின் அல்லது தொடர்ச்சி இருத்தலாகாது

**198.** (1) கம்பெனியின் நிருவாகத்தின் போது, கம்பெனிக்கு அல்லது அதன் ஏதேனும் ஆதனத்திற்கு எதிராக முறையான நடவடிக்கைமுறைகள் எவையும் பின்வருவன தவிர, தொடங்கப்படுதல் அல்லது தொடரப்படுதல் ஆகாது-

(அ) நிருவாகியின் முன்னரான, எழுத்துமூல அனுமதி; அல்லது

(ஆ) அவசியமாகவிருக்கக்கூடியதான அத்தகைய நியதி மற்றும் நிபந்தனைகள் மீதான நீதிமன்றத்தின் அனுமதி.

(2) முதலாம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, "முறையான வழக்கு நடவடிக்கை முறைகள்" என்பது பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது:-

(அ) ஏதேனும் சட்ட வழக்கு நடவடிக்கைமுறை; அத்துடன்

(ஆ) ஏதேனும் மத்தியஸ்த அல்லது நடுத்தீர்ப்பு செயல் முறை அல்லது ஏனைய முறையான எதிரிடை யான செயல்முறை.

(3) நிருவாகி வழக்கு நடவடிக்கை முறைகளின் தொடக்கம் அல்லது தொடர்ச்சி முழுமையாக கடனகொடுநர் களின் அக்கறைகளில் பாதிக்காது என திருப்திபடுமிடத்து, உட்பிரிவு (1) இன் (அ) என்னும் பந்தியின் கீழ் சம்மதம் அளிக்கலாம்.

(4) நிருவாகி (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழ் சம்மதம் அளிப்பதற்கு மறுப்பதற்கான இழப்புகளுக்கு பொறுப்பாகமாட்டார்.

(5) ஓராம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் கீழ் நீதிமன்றம் அனுமதி அளிக்கலாம். (கணிசமானளவு நியாய மற்ற தன்மை வேறு வகையில் விளைவை ஏந்படுத்தும் என திருப்திபடுமிடத்து, (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் கீழ் அனுமதியை நீதிமன்றம் அளிக்கலாம்.

நிருவாகத்தின் போதான நிறைவேற்றல் அல்லது ஏனைய மன்றாணைகள் ஆகாமை

**199.** கம்பெனியின் நிருவாகத்தின் போது, 202 ஆம் 203 ஆம் பிரிவுகளுக்கமைய, கம்பெனிக்கு எதிராக அல்லது அதன் ஏதேனும் ஆதனத்துக்கு எதிராக நிறைவேற்றுகை, அல்லது ஏனைய கூட்டசெயல்முறை அல்லது இடர் அறவீடு என்பன அவசியமாககூடியவாறான அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் மீது நீதிமன்றத்தின் அனுமதி தவிர தொடங்கப்படுதலாகாது அல்லது தொடரப்படுதலாகாது.

நிருவாகத்தின் முன்னர் பூரணப்படுத் தப்பட்டா லொழிய, நிறைவேற் றுகை அல்லது ஏனைய செயல்முறை பற்றி நன்மை யில்லை

**200.** (1) இரண்டாம் உட்பிரிவுக்கமைய, அவசியமாக கூடியவாறான அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனை களின் மீது நீதிமன்றத்தின் அனுமதி தவிர, நிருவாகத்தின் தொடக்கத்துக்கு முன்னர் நிறைவேற்றுகை அல்லத எனைய கூட்ட செயல்முறை அல்லது இடர் பூர்த்திசெய்யப்பட்டி ருந்தாலொழிய, நிருவாகத்தில் உள்ள அல்லது அதன் ஏதேனும் ஆதனத்தில் உள்ள கம்மபெனிக்கெதிரான ஏதேனும் செயல் நிறைவேற்றுகை அல்லது ஏனைய கூட்ட செயல் முறையின் அல்லது இடரின் நன்மைக்கு கடன்கொடுநர் ஒருவர் உரித்துடையவராதலாகாது.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கங்களிற்காக-

(அ) ஆளொருவரின் உடமையிலுள்ளதைக் கைப்பற் றுகை அல்லது பதிவு செய்தலின் பூரணப்படுத்தப் பட்ட அசையும் அல்லது அசையாத ஆதனத்துக் கெதிரான நிறைவேற்றுகை மற்றும் பூரணப்படுத் தப்பட்ட விற்பனை; அத்துடன்

(ஆ) தனிசொன்றின் இணைப்பொன்றானது தனி சொன்றின் திருப்தியினால் பூரணப்படுத்தப் படுகின்றது.

(3) கம்பெனியொன்றின் ஆதனத்தை பின்வருவனவற்றி லிருந்து நல்லெண்ணத்துடன் கொள்ளளவு செய்கின்ற ஆளொருவர்-

(அ) நிறைவேற்றுகை செயல்முறையுடன் பொதுப்பிக் கப்பட்ட பிஸ்காலிடமிருந்து; அல்லது

(ஆ) இடர் அறவிடப்பட்டதன் மீது.

(இ) கம்பெனி மற்றும் நிருவாகிக்கு எதிரான நல் உரித்தைக் கொள்ளுதல்

(4) இப்பிரிவிலுள்ள எதுவும் 412, 413, 414, 415, 416, 417, 418 மற்றும் 419 வரையிலான பிரிவுகளின் பிரயோகத்தினை பாதித்தலோ அல்லது மட்டுப்படுத்துதலோ ஆகாது.

நிருவாகத்தில் பிஸ்காலின் கடமைகள்

**201.** (1) இப்பிரிவானது நிருவாகத்தின் தொடக்கத்திற்கு முன்னதாக, அறவிடப்பட்ட, ஆனால், 200 ஆம் பிரிவின் பொருளினுள் பூர்த்திசெய்யப்படாதவையான நிருவாகத்தி லுள்ள கம்பெனியின் ஆதனத்திற்கு எதிராக நிறைவேற்று கைச் செயல்முறையொன்றுக்கு ஏற்புடைமையாகின்றது.

(2) வேறேதேனும் சட்டவாக்கங்கள் எது எவ்வாறிருப் பினும், (3) உட்பிரிவிற்கமைய மற்றும் நிறைவேற்றுகை கடன்கொடுநரின் விண்ணப்பத்தின் மீது நீதிமன்றம் கட்டளையிட்டிருந்தாலொழிய, பிசுகால் செயல்முறைக் குகந்தவரை விரைவானளவு, நிருவாகத்தின் தொடக்கத்திற்கு பின்னர்-

(அ) நிறைவேற்றுகை செயல்முறையின்; விளைவொன் றாக பிஸ்காலின் உடைமையில் அல்லது கட்டுக் காப்பில் அல்லது பிஸ்காலின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கின்ற அல்லது வருகின்றதான, கம்பெனியின் ஏதேனும் ஆதனத்தை நிருவாகிக்கு ஒப்படைத்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) நிருவாகியை-

(i) கம்பெனியின் ஆதனத்தின் தேறிப்பெறுகை யின் எவையேனும் வரும்படிகள்;

(ii) பெறப்பட்ட அல்லது கைப்பற்றப்பட்ட கம்பெனியின் ஏதேனும் பணம்; அத்துடன்

(iii) கம்பெனியின் ஆதனத்தின் கைப்பற்றுகை அல்லது விற்பனையை தவிர்ப்பதற்கு செலுத்தப்பட்ட ஏதேனும் பணத்தினை

செலுத்துவதற்கு அத்தகைய வரும்படிகள் அல்லது பணம் பிசுக்காலின் உடமையில் அல்லது பிசுக்காலின் கட்டுப்பாட்டில் அல்லது பிசுக்காலின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள அல்லது வருகின்ற அல்லது நீதிமன்றத்தினால் செலுத்தப்பட்ட மற்றும் ஏற்கனவே அதிலிருந்து செலுத்தப் படாதவையாக உள்ளவிடத்து, நிறைவேற்றுகை செயல் முறையின் கீழ் செலுத்தப்படுவதற்கு செய்வித்தல் வேண்டும்.

(3) பிசுகால் பின்வருவனவற்றிலிந்து தடுத்துவைத்திருக்கலாம் அல்லது தடுத்துவைத்திருப்பதற்கு செய்விக்கலாம்-

(அ) பிசுகாலினால் கூறப்பட்ட நிறைவேற்றுகை செயல்முறையின் செலவுகளை பிரதிநிதித்துவப் படுத்துவதற்கு பிசுகால் நியாயமானதென தீர்மானிக்கக்கூடியதான, ஆதனத்தின் பெறுமதியை (2) உட்பிரிவின் கீழ் (அ) என்னும் பந்தியின் கீழ் ஒப்படைக்கப்பட்ட ஆதனத்திலிருந்து; அல்லது

(ஆ) பிசுகாலினால் கூறப்பட்ட நிறைவேற்றுகை செயல்முறையின் செலவுகளுக்காக, (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்ததியின் கீழ் செலுத்தப்பட்ட வரும்படிகள் அல்லது பணத்திலிருந்து.

நிருவாகத்தின் தொடக்கத்துக்கு முன்னராக பிரயோகிக்கப்பட்ட தத்துவங்கள்

**202.** (1) நிருவாகத்தின் தொடக்கத்திற்கு முன்னதாகவும், அத்துடன், பெறுநர், நியமத்தவர் அல்லது வேறு ஆளொருவரினை கம்பெனியின் ஆதனத்துடன் அல்லது மூன்றாம் திறத்தவர் தொடர்பிலான ஆதனத்தை உடமையில் எடுத்தல் அல்லது கட்டுக்காப்பில் எடுத்தல் அல்லது ஊகிக்கப்பட்ட கட்டுப்பாடு அல்லது வேறு ஏதேனும் தத்துவத்தைப் பிரயோகித்தல் என்பவற்றில் ஈடுபடலாம். பிரிவுகள் 196, 197, 199 மற்றும் 208 என்னும் பிரிவுகளில் குறித்துரைக்கப்பட்ட எவையும் ஆதனம் தொடர்பிலான பணியொன்றை அல்லது தத்துவத்தைப் புரிவதிலிருந்து அல்லது பிரயோகிப்பதிலிருந்து பெறுநரை, நியமத்தரை அல்லது வேறு ஆளை தடுத்தலாகாது -

(அ) ஆதனத்திற்கு மேலான பாரிப்பொன்றின்; அல்லது

(ஆ) ஆதனத்தின் உடைமையை எடுக்க அல்லது வேறுவகையில் அதனை மீளப்பெற வாடகை கொள்வனவு உடன்படிக்கை உள்ளடங்கலாக, உரிமையாளர் அல்லது குத்தகைக்குவிடுபவரின் உரித்தின்

(2) பிரிவு 208 உட்பிரிவு (1) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆதனத்தைப் பாதிக்கின்றதான உடன்படிக்கை, கொடுக்கல்வாங்கல் அல்லது கையாளுகை என்பவற்றுக்கு ஏற்புடைமையாதலாகாது என்பதுடன் (1) ஆம் உட்பிரிவில்

குறிப்பீடுசெய்யப்பட்ட பெறுநரின், நியமத்தவரின் அல்லது வேறு ஆளின் பணி அல்லது தத்துவத்தினை புரிவதில் அல்லது பிரயோகிப்பதில் ஈடுபடுதல் வேண்டும்.

நிலையான பிணைப் பொறுப்பை வலுவுக்கிடு வதற்கான அனுமதிக் கான முடிபு காலப் பகுதியிலான விண்ணப்பம்

**203.** (1) இப்பிரிவில், நிருவாகத்திலிருக்கின்ற கம்பெனியின் ஆதனத்தின் மீதான நிலையான பிணைப்பொறுப்பின் கொடைபெறுநர் தொடர்பிலான "முடிபு காலம்" என்பது-

(அ) (i) 193 ஆம் பிரிவின் கீழ் நிருவாகியின் நியமன அறிவித்தலானது கொடைபெறுநரிற்கு வழங்கப்படவேண்டியதாக தேவைப்படுத்தப் படின், அத்தகைய அறிவித்தல் பெறப்பட்ட நாளன்று; அல்லது

(ii) வேறு ஏதேனும் சந்தர்ப்பத்தில், நிருவாகத்தின் தொடக்க நாளன்று;

ஆரம்பமாகி-

(ஆ) நிருவாகம் தொடங்கியதன் பின்னரான பத்தாவது வேலை நாளின் முடிவில்

நிறைவடைகின்றது எனப் பொருள்படுகின்றது

(2) நிருவாகத்திலுள்ள கம்பெனியின் ஆதனத்தின் மீதான நிலையான பிணைப்பொறுப்பின் கொடைபெறுநரொருவர், முடிபு காலப்பகுதியினுள் நிலையான பிணைப்பொறுப்பை வலுவுக்கிடுவதற்கு கொடைபெறுநரிற்கு அனுமதியளிக்கும் கட்டளைக்காக நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்கலாம்.

(3) இரண்டாம் உட்பிரிவின் கீழ் நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்கும் கொடைபெறுநரொருவர், நீதிமன்றத்தில் விண்ணப்பம் கோப்பிடப்பட்ட நாளன்று நிருவாகிக்கு விண்ணப்பம் பற்றிய எழுத்துமூல அறிவித்தலை வழங்குதல் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவின் கீழ் அறிவித்தலைப் பெற்றதன் பின்னரான ஐந்து வேலை நாட்களிற்குள், நிருவாகியானவர் பின்வருவனவற்றை நீதிமன்ற பதிவாளருக்கு கோப்பிடுதல் வேண்டும்.

(அ) விண்ணப்பத்தினை நிருவாகி ஆதரிக்கின்றாரா அல்லது எதிர்க்கின்றாரா என்பதனை நீதிமன்றத்திற்கு அறிவிக்கும் அறிவித்தலொன்று;

(ஆ) நிருவாகியின் அறிவுக்கு அத்தகைய அறிக்கை பூரணமில்லாததாகவிருக்கலாம் என்பது தொடர்பில் எடுத்துக்கூறும் கூற்றுடன் சேர்த்து நிருவாகிக்கு அதுவரை அறியக்கூடியதான கம்பெனியின் ஆதனம், தனிசுகள் மற்றும் ஏனைய பொறுப்புகள் மீதான அறிக்கை; அத்துடன்

(இ) விண்ணப்பத்தினை ஆதரிக்கும் அல்லது எதிர்க்கும் காரணங்களின் கூற்றொன்று,

(5) நான்காம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஆவணங்களை பெற்றதன் பின்னர், நீதிமன்றமானது விசாரணையை நடாத்தி -

(அ) விண்ணப்பத்தின் மீதான தீர்மானத்தினை முன்னெடுத்துச் செல்லுதல் வேண்டும்; அல்லது

(ஆ) விண்ணப்பத்தின் மீது தீர்மானமொன்றை அடுத்துறுவதாக ஆக்குதல் வேண்டும்.

(i) அந்நோக்கத்திற்காக விசாரணையை ஒத்திவைத்தல்; மற்றும்

(ii) சமாந்திரமாக விண்ணப்பத்தின் மீது தீர்மானமொன்றை மேற்கொள்ளலாம்.

(6) ஐந்தாம் உட்பிரிவின் கீழ் தீர்மானமொன்றினை மேற்கொள்வதில், நீதிமன்றம் பின்வருமாறு திருப்திபடுகின்றவிடத்து, கொடைபெறுநர் நிரந்தர பிணைப்பொறுப்பை வலுவுக்கிடுவதற்கு கொடைபெறுநருக்கு அனுமதியளிக்கின்ற கட்டளை ஒன்றினை நீதிமன்றம் ஆக்கலாம் -

(அ) 178 ஆம் பிரிவின் (ஈ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட குறிக்கோளை எய்துவதற்கான நடவடிக்கை முறைகள் விண்ணப்பமம் அனுமதிக்கப்படின், பொருள்சார் ரீதியாகவும் அல்லது எதிரிடையாகவும் பாதிக்கப்படுதவாகாது என; அத்துடன்

(ஆ) வழக்கின் எல்லா சூழ்நிலைகளிலும், விண்ணப்பத் தினை அனுமதிப்பதன் மூலம் கம்பெனியில் அக்கறை கொண்டுள்ள ஏனைய ஆட்களுக்கு செய்விக்ககூடியதான பங்கத்தினைவிஞ்சுகின்ற தென விண்ணப்பம் மறுக்கப்படின், கொடை பெறுநருக்கு பங்கம் ஏற்படுத்தப்படும் என.

(7) நீதிமன்றமானது பின்வருவனவுட்பட அவசியமாக கூடியவாறான அத்தகைய நியதி நியபந்தனைகளின் மேல், (6) ஆம் உட்பிரிவின் கீழ் கட்டளையொன்றை ஆக்கலாம் -

(அ) நீதிமன்றத்தின் மேலதிக கட்டளையினால் அனும திக்கப்பட்டாலன்றி, வலுவுறுத்துகையில் ஈடுபட் டிருந்த பெறுநர் அல்லது ஏனைய ஆள் நீதி மன்றத்தின் மேலதிக கட்டளையினால் அனுமதிக் கப்பட்டாலன்றி, குறித்துரைக்கப்பட்ட பணிகள் அல்லது தத்துவங்களை புரிதல் அல்லது பிரயோகித்தல் ஆகாது;

(ஆ) குறித்துரைக்கப்பட்ட ஆதனத்திற்கான வலுவுறுத் துகையை மட்டுப்படுத்தப்படும்;

(இ) விற்பனையிலான வலுவுறுத்துகையானது நீதிமன் றத்தினால் செய்விக்கப்படும் முறையொன்றில் அல்லது நீதிமன்றத்திலிருந்தான மேலதிக அனும திக்கமைய அல்லது பணிப்புகளுக்கமைய நடாத் தப்படுதல் வேண்டும்.

(8) ஆறாம் உட்பிரிவின் கீழ் அனுமதியளிக்கப்பட்ட கொடைபெறுநரொருவர், மூன்று மாதத்தினை விஞ்சாத இடைவேளைகளில் காலத்திற்கு காலம், நிலையான பிணைப்பொறுப்பின் வலுவுறுத்தலின் மீதாக, விதித்துரைக் கப்படக்கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய விபரங்களின் மட்டத்திலும் நிருவாகிக்கு அறிக்கையிடுதல் வேண்டும்.

(9) அழியக்கூடிய ஆதனங்களின் விடயத்தில், (2) ஆம் உட்பிரிவின் கீழ் நீதிமன்றமானது அழியக்கூடிய ஆதனத்தின் மீதான நிலையான பிணைப்பொறுப்பொன்றாக இது வரையில் இருந்தவாறு நிலையான பிணைப்பொறுப்பை வலுவுறுத்துவதற்கு கொடைபெறுநரிற்கு அனுமதியளித்தும்

மற்றும் (5) ஆம் உட்பிரிவின் கீழான கேட்பு மற்றும் (6) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளை ஒன்றை ஆக்குதல் எனும் நடத்தை முடிவுறிதுள்ள நிருவாகிக்கான நம்பிக்கைப் பொறுப்பின் மீதான கொடைபெறுநரின் அறவிடப்பட்ட எவையேனும் வரும்படிகளுக்கும் கட்டளை ஒன்றை ஆக்கலாம்.

அறிவித்தல் கொடுப்பதற் காக சம்மதம் அல்லது அனுமதி எதுவும் தேவைப் படாது.

**204.** இப்பாகத்திலுள்ள எதுவும் பின்வருவனவற்றின் கீழ் கம்பெனியொன்றுக்கு அறிவித்தல் வழங்குவதற்காக நிருவாகியின் சம்மதத்தையோ அல்லது நீதிமன்றத்தின் அனுமதியையோ தேவைப்படுத்துதலாகாது-

(அ) கம்பெனியினால் பயன்படுத்தப்படுகின்ற அல்லது இருப்பாட்சியிலுள்ள அல்லது கம்பெனியின் உடமையிலுள்ள ஆதனம் தொடர்பிலான உடன்படிக்கையொன்று; அல்லது

(ஆ) பிணைப்பொறுப்பு உடன்படிக்கையொன்று.

கம்பெயின் பணிப்பாளர் கள் மற்றும் ஏனைய முகவர்கள் மீதான நிருவாகத் தின் பயன்

**205.** (1) நிருவாகியின் நியமனமானது கம்பெனியின் பணிப்பாளர்களை அலுவலகத்திலிருந்து நீக்காது.

(2) மூன்றாம் மற்றும் (4) ஆம் உட்பிரிவுகளிற்கு அமைவாக, நிருவாகத்திலுள்ள கம்பெனியின் பணிப்பாள ரொருவர் பின்வருவன தவிர்ந்த, கம்பெனியின் அலுவல ரொருவராக பணிகள் அல்லது தத்துவங்களை புரியவோ அல்லது நிறைவேற்றவோ அல்லது புரிவதாகவோ அல்லது நிறைவேற்றுவதாகவோ கொள்ளப்படலாகாது-

(அ) விதந்துரைக்கப்படக்கூடியவாறாக மேன்முறை யீட்டுக்கான உட்கருத்துப் பற்றிய அறிவித்த லுக்கான அத்தகைய தேவைப்பாடுகளுடன் அத்தகைய முறையில், அத்தகைய காலப்பகுதி யினுள் நிருவாகியொருவரை நியமிப்பதற்காக 190 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளை யொன்றுக்கு எதிராக மேன்முறையீடு செய்வ தற்கு, ஆனால், பணிப்பாளர் மேன்முறையீட்டின் முடிவில் நீதிமன்றம் ஆக்கக்கூடிய ஏதேனும் கட்டளைக்கு அமைய அத்தகைய ஏதேனும்

மேன்முறையீட்டுடன் சம்பந்தப்பட்டுள்ள கம்பெனியின் ஆதனத்தில் ஏதேனும் சேர்மானத்தினையும் கொண்டிருத்தலாகாது;

(ஆ) நிருவாகியின் முன்னரான எழுத்துமூலமான சம்மதத்துடன்; அல்லது

(இ) இப்பாகத்தினால் வெளிப்படையாக அனுமதிக்கப்பட்டவாறு.

(3) பணிப்பாளரினாலான பணி அல்லது தத்துவம் என்பனவற்றின் நிறைவேற்றுகை அல்லது பிரயோகிக்கின்றமை என்பன முழுமையாக கடன்கொடுநர்களின் அக்கறைகளில் உள்ளன என திருப்திபடுமிடத்து, நிருவாகி (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் கீழ் சம்மதத்தினை அளிக்கலாம்.

(4) நிருவாகி உட்பிரிவு (2) (ஆ) என்னும் பந்தியின் கீழ் சம்மதம் வழங்குவதற்கு மறுப்பதற்கான சேதங்களுக்கு பொறுப்பாதலாகாது.

(5) நிருவாகியின் விண்ணப்பமானது கம்பெனியின் சபையினால் அல்லது சார்பில் நியமிக்கப்பட்ட கம்பெனியின் எவரேனும் முகவரினதும் அதிகாரத்தினை இல்லாதொழிக்கின்றது.

நிருவாகிக்கு தகவல்களை வழங்குவதற்கான தேவைப்பாடுகள்

**206.** (1) நிருவாகி நியமிக்கப்பட்டிருக்கின்றவிடத்து, கம்பெனியின் ஒவ்வொரு பணிப்பாளரும் வேறு அலுவலரும் -

(அ) செயல்முறைக்குகந்தவரை விரைவாகவும் எச்சந்தர்ப்பத்திலும், நியமனத்திற்கு பின்னரான ஐந்து வேலைநாட்களினுள் ஆளொருவரின் உடமையில் அல்லது கட்டுக்காப்பில் அல்லது ஆளொருவரின் கட்டுபாட்டின் கீழுள்ள கம்பெனியின் அலுவல்கள், தொழில், ஆதனம் மற்றும் நிதிசார் சூழ்நிலைகளுடன் தொடர்புடைய அனைத்து புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஆவணங்களை நிருவாகிக்கு கிடைக்கச்செய்தல் வேண்டும்;

(ஆ) நிருவாகியினால் அவ்வாறு செய்யுமாறு தேவைப்படுத்தப்படின்;, புத்தகங்கள், பதவேடுகள் மற்றும் ஆவணங்கள் முழுமையாகவும் சரியாகவும் காணப்

படுகின்றன என நியாயமான காலப்பகுதியினுள் சத்தியகடதாசியினால் சரிபார்க்கப்படுதல் வேண்டும்;

(இ) கம்பெனி பொதுவான இலச்சினையொன்றை வைத்திருப்பின், நிருவாகியின் பாவனைக்கு பொதுவான இலச்சினையை முறையாக கிடைக் கப்படக்கூடியதாக்குதல் வேண்டும்; அத்துடன்

(ஈ) நிருவாகி நியாயமானதாக கோரக்கூடிய அத்த கைய உதவிகளை அத்தகைய நிருவாகிகளுக்கு வழங்குதல் வேண்டும்.

(2) நிருவாகியின் விண்ணப்பத்தின் மீது, (1) ஆம் உட்பிரிவுடன் இணங்கியொழுகுவதற்கு கம்பெனியின் பணிப்பாளரொருவரை அல்லது ஏனைய அலுவலரை தேவைப்படுத்தும் கட்டளையொன்றை நீதிமன்றம் ஆக்கலாம்.

(3) ஓராம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் கீழான சரிபார்த்தலானது, சரிபார்க்கின்ற ஆள் பின்வருமாறில்லாத விடத்து, புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஆவணங்களுடன் கையயாள்கின்ற குறித்த கருமங்கள் தொடர்பில் தகவுடைய தாகலாம்.

(அ) புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஆவணங் களானவை முழுமையானதாகவும் சரியான தாகவும் காணப்படும் என கருதாத; அல்லது

(ஆ) சரிபார்த்தலை வழங்குவதற்கு அவசியமான அறிவினை கொண்டிராத.

ஊழியர்கள் மீதான நிருவாகத்தின் விளைவு

**207.** நிருவாகியொருவரின் நியமனமானது கம்பெனி திறத்தவராகவுள்ள ஊழியர் ஒப்பந்தமொன்றை தானாகவே முடிவுறுத்தலாகாது.

ஆதனங்களுடனான கையாளுகையின் போது நிருவாகத்தின் விளைவு

**208.** (1) இருநூற்றிரெண்டாம் பிரிவிற்கமைவாக, கம்பெனியின் ஆதனத்தை பாதிக்கின்ற, கம்பெனியின் நிருவாகத்தினால் அல்லது கம்பெனி சார்பிலான ஆளொருவரினாலான உடன்படிக்கை, கொடுக்கல்வாங்கல் அல்லது கையாளுகையானது பின்வருவோரால் உடன்படிக்கை, கொடுக்கல் வாங்கல் அல்லது கையாளுகை என்பன செய்யப்பட்டாலொழிய, வெற்றானதாகும்.

(அ) கம்பெனி சார்பாக, நிருவாகியினால்;

(ஆ) நிருவாகியின் முன்னரான எழுத்துமூலமான சம்மதத்துடன்; அல்லது

(இ) நீதிமன்றத்தின் கட்டளையின் கீழ்

(2) நிருவாகியானவர் உடன்படிக்கை, கொடுக்கல் வாங்கல் அல்லது கையாளுகையானது, ஒட்டுமொத்தமாக கடன்கொடுநர்களின் அக்கறைகளில் காணப்படுகின்றது என திருப்தியுறுமிடத்து, (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் கீழ் சம்மதத்தை வழங்கலாம்.

(3) நிருவாகி (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் கீழ் சம்மதம் வழங்குவதற்கு மறுப்பதற்கான சேதங்களிற்கு பொறுப்பாகமாட்டார்.

(4) நீதிமன்றமானது (1) ஆம் உட்பிரிவின் கீழ் செல்லுபடியற்றதான உடன்படிக்கை, கொடுக்கல்வாங்கல் அல்லது கையாளுகைக்கு கட்டளையின் மூலம் பயன்கொடுக்கலாம்.

(5) ஒராம் உட்பிரிவு பின்வருமாறுள்ளதானவற்றுக்கு அன்றோ அல்லது முன்னரோ வங்கியொன்றினால் செய்யப்பட்ட கொடுப்பனவொன்றுக்கு எற்புடையதாதலானது-

(அ) வங்கியுடன் கம்பெனியால் வைத்திருக்கப்படும் கணக்கிலிருந்து வெளியேயானதாக;

(ஆ) நல்லெண்ணத்தடனும் வங்கியின் வங்கித்தொழிலின் வழமையானவையும்; அத்துடன்

(இ) (i) நிருவாகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என நிருவாகியினால் வழங்கப்பட்ட எழுத்துமூல அறிவித்தல் வங்கி பெற்றுக்கொண்ட தேதி; அத்துடன்

(ii) கம்பெனியானது நிருவாகத்தில் காணப்பட்டது என நம்புவதற்கான காரணங்களை வங்கி கொண்டிருந்த நாள்;

(6) அலுவலர் ஒருவர் -

(அ) கம்பெனி சார்பில் (1) ஆம் உட்பிரிவின் கீழ் வறிதானதான உடன்படிக்கை, கொடுக்கல் வாங்கல் அல்லது கையாளுகையை செய்வதற்கு உட்கருதுகின்றவரான; அல்லது

(ஆ) ஓராம் உட்பிரிவின் கீழ் வறிதாக காணப்படும் உடன்படிக்கை, கொடுக்கல்வாங்கல் அல்லது கையாளுகையொன்றுடன் சம்மந்தப்பட்ட ஏதேனும் வழிகளில், அல்லது திறத்தவரொருவராக காணப்படுகின்ற;

கம்பெனியின் பணிப்பாளரொருவர் அல்லது வேறு அலுவலர் தவறொன்றைப் புரிந்தவராகின்றார்.

(7) நீதிமன்றம் (6) ஆம் உட்பிரிவின் கீழ் தவறொன்றுக்காக குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட பணிப்பாளர் அல்லது ஏனைய அலுவலலொருவரை தவறொன்றை அமைத்துருவாக்குகின்ற செயல் அல்லது விட்டுவிடுகையின் விளைவொன்றாக பாதிப்புற்ற இழப்புக்கு கம்பெனி உள்ளடங்கலான எவரேனும் ஆளுக்கு நட்டஈட்டினை செலுத்தவதற்கு கட்டளையிடலாம்.

(8) நிருவாகி நியமிக்கப்பட்டிருந்த நேரத்திற்கு முன்னரா அல்லது பின்னரா கம்பெனியின் ஆதனத்தை பாதிக்கின்ற உடன்படிக்கை, கொடுக்கல்வாங்கல் அல்லது கையாளுகையொன்று செய்துகொள்ளப்பட்டது என்பதற்காக நிருவாகியொருவர் நியமிக்கபட்ட தேதியன்று ஏதேனும் கேள்விகள் எழுமாயின் முரணானது எண்பிக்கப்பட்டாலொழிய அவ்வுடன்படிக்கை, கொடுக்கல்வாங்கல் அல்லது கையாளுகையானது அந்நேரத்திற்கு பின்னராக செய்துகொள்ளப்பட்டதாக ஊகிக்கப்படுதல் வேண்டும்.

(9) வேறு ஏதேனும் சட்டவாக்கங்கள் எதுஎவ்வாறிருப்பினும், ஆளெவரும், நிருவாகிக்கு எதிராக கம்பெனியின் புத்தகம், பதிவேடு அல்லது ஆவணத்தின் மீதான சோந்தையை உரிமை கோருதல் ஆகாது.

பங்குகளின் கைமாற்றத்தின் மீதான நிருவாகத்தின் விளைவு

**209**. (1) இப்பிரிவிற்கமைவாக-

(அ) நிருவாகத்திலுள்ள கம்பெனியின் பங்கானது கைமாற்றப்படுதலாகாது; அத்துடன்

(ஆ) நிருவாகத்திலுள்ள கம்பெனியின் பங்குதாரர்களின் அந்தஸ்தானது அதனது பொறுப்புக்களாக, மாற்றப்படுதலாகாது.

(2) நிருவாகியானவர் கைமாற்றலானது ஒட்டுமொத்தமாக கடன்கொடுநர்களின் அக்கறைகளில் இருக்கின்றதென திருப்தியுறுமிடத்து, நிருவாகத்திலுள்ள கம்பெனியில் பங்கொன்றின் கைமாற்றத்துக்கு நிருவாகி சம்மதமளிக்கலாம்.

(3) நிருவாகி (2) ஆம் உட்பிரிவின் கீழ் சம்மதம் அளிக்க மறுப்பதற்கான சேதங்களிற்கு ஆளாகமாட்டார்.

(4) நீதிமன்றமானது, வேறு வகையில் பொருளளவிலான நியாயமின்மையை ஏற்படுத்தும் என திருப்தியுறுமிடத்து, பின்வருவனவற்றுக்காக கட்டளையொன்றினை ஆக்கலாம்:-

(அ) நிருவாகத்திலுள்ள கம்பெனியின் பங்கொன்றினை கைமாற்றுவதற்கு; அல்லது

(ஆ) நிருவாகத்திலிருக்கும் கம்பெனியின் பங்குதாரர்களின் அந்தஸ்தினை அதனது பொறுப்புக்களாக, மாற்றுவதற்கு.

(5) இப்பிரிவிலுள்ள எதுவும் கம்பெனிகள் சட்டத்தின் 46 ஆம் பிரிவின் ஏற்புடைமையை பாதித்தல் ஆகாது அல்லது மட்டுப்படுத்துதல் ஆகாது.

நிருவாகத்திலுள்ள அத்தியாவசிய சேவைகள்

**210.** (1) இப்பிரிவில், "கடனிறுக்கவகையின்மை தொடர்புபட்ட நியதி" என்பது பின்வருவனவற்றின் கீழிருக்கும் கம்பெனிக்கான அத்தியாவசிய பண்டங்கள் அல்லது சேவையொன்றின் வழங்கலிற்கான உடன்படிக்கையொன்றின் ஏற்பாடொன்றாகவிருக்கும் -

(அ) கம்பெனியின் நிருவாகம் தொடங்கியுள்ளமையினால், உடன்படிக்கை அல்லது வழங்கல் முடிவுறுத்தப்படலாம், அல்லது வேறேதேனும் விடயங்கள் இடம்பெறலாம்; அல்லது

(ஆ) கம்பெனியின் நிருவாகம் தொடங்கியுள்ளமையினால், வழங்குநர் உடன்படிக்கை அல்லது வழங்கலை முடிவுறுத்துவதற்கு அல்லது வேறேதேனும் விடயத்தினைச் செய்வதற்கு உரித்துடையவராவார்.

(2) வேறு ஏதேனும் ஏனைய சட்டவாக்கம் எது எவ்வாறிருப்பினும், அத்தியாவசிய பண்டம் அல்லது சேவை வழங்குநரொருவர்-

(அ) நிருவாகத்தின் தொடக்கத்திற்கு முன்னதான காலப் பகுதியுடன்; தொடர்புடைய பண்டம் அல்லது சேவைக்கான சேர்மதியான விதிப்பனவுகளைச் செலுத்துவதில் கம்பெனியின் தவறுகையின் காரணமாக, நிருவாகியொருவருக்கு அல்லது நிருவாகத்திலிருக்கும் கம்பெனிக்கு பண்டம் அல்லது சேவைகளை வழங்க மறுத்தலாகாது;

(ஆ) நிருவாகத்தின் தொடக்கத்துக்கு முன்னதான காலப்பகுதியுடன் தொடர்புடைய பண்டம் அல்லது சேவைக்கான சேர்மதியான நிலுவை யிலுள்ள விதிப்பனவுகள் செலுத்தப்பட வேண்டும் என நிருவாகியொருவருக்கு அல்லது நிருவாகத் திலிருக்கும் கம்பெனிக்கு பண்டம் அல்லது சேவையின் வழங்கலுக்கான நிபந்தனையொன்றை ஆக்குதலாகாது; அல்லது

(இ) நிருவாகியின் முற்கூட்டிய எழுத்துமூல சம்மத மின்றி, பண்டம் அல்லது சேவை வழங்கலுக்கான உடன்படிக்கையின் கடனிறுக்கவகையின்மையுடன் தொடர்புபட்ட நியதியொன்றின் மீது தங்கியிருத்த லாகாது.

(3) கடனிறுக்கவகையின்மையுடன் தொடர்புபட்ட நியதி யொன்றின் மீது தங்கியிருத்தலானது முழுமையாக கடன் கொடுநர்களின் அக்கறைகளில் தங்கியுள்ளதென திருப்திபடு மிடத்து, நிருவாகி (2) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின் கீழ் சம்மதம் அளிக்கலாம்.

(4) இரண்டாம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின் கீழ் சம்மதம் அளிப்பதற்கு மறுப்பதற்கான சேதங்களிற்கு நிருவாகி பொறுப்பாகமாட்டார்.

(5) நான்காம் அட்டவணையின் நோக்கங்களிற்காக, அத்தியாவசிய பண்டம் அல்லது சேவை வழங்கலிற்காக நிருவாகியினால் உறப்பட்ட விதிப்பனவுகளானவை நிருவா கத்தின் செலவுகளாகும்.

## அத்தியாயம் 5

### நிருவாக வழிகள்

*அ – நியம மற்றும் துரிதமாக்கப்பட்ட வழிகளுக்கு ஏற்புடையற்பாலதான ஏற்பாடுகள்*

நியம மற்றும் துரிதமாக்கப் பட்ட வழிகளுக்கு ஏற்புடையற் பாலதான ஏற்பாடுகள்

**211.** (1) நிருவாகி நியம வழியை பின்தொடர்வதற்கு 180 ஆம் பிரிவில் (5) ஆம் உட்பிரிவின் கீழ் முடிபுசெய்யப்பட் டிருப்பின், 212 ஆம், 213 ஆம், மற்றும் 214 ஆம் பிரிவுகள் என்பன ஏற்புடையதாதல் வேண்டும்.

(2) நிருவாகியானவர் 180 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பந்தியின் கீழ் துரிதமாக்கப்பட்ட வழியை பின் தொடர முடிபுசெய்திருப்பின், 215 ஆம் மற்றும் 216 ஆம் பிரிவுகள் ஏற்புடையதாதல் வேண்டும்.

*ஆ - நியம வழி*

ஆரம்ப கூட்டங்கள்

**212.** (1) இப்பிரிவானது 211 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள சூழ்நிலைகளிற்கு ஏற்புடையதாகின்றது.

(2) நிருவாகியானவர் நிருவாகம் தொடங்கியதன் பின்ன ரான பத்து வேலைநாட்களிற்குள் ஆரம்ப கூட்டத்தினை நடாத்துதல் வேண்டும்.

(3) ஆரம்ப கூட்டத்தில் பின்வரும் தொழில் நடாத்தப் படுதல் வேண்டும் -

(அ) கூட்டத்தில் பட்டியலிடப்பட்டுள்ள ஆவணங்களின் கடன்கொடுநர்களினாலான பிரதிபயன்;

(ஆ) 254 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழ் நிருவாகியொருவரை மாற்றீடு செய்வதா இல்லையா என்பது பற்றி கடன்கொடுநர்களின் தீர்மானம்; அத்துடன்

(இ) நிருவாகியானவர் நிருவாக கடன்கொடுநர்களின் குழுவொன்றை தாபிப்பதற்கு நாடின், பின்வருவன மீது ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்டதுமான தீர்மானம் பின்வருமாறு கடன்கொடுநர்களினால் செய்யப்படுதல் வேண்டும் -

(i) 217 ஆம் பிரிவின் கீழ் நிருவாகத்தின் கடன் கொடுநர்களின் குழுவொன்றை தாபிப்பதா அல்லது இல்லையா என; அத்துடன்

(ii) அத்தகைய குழுவொன்று தாபிக்கப்பட வேண்டுமாயின் அக்குழுவில் உறுப்பினர் களாக யார் நியமிக்கப்படவுள்ளவர்கள் என.

(4) ஆரம்ப கூட்டத்தில் நிருவாகியானவர் பின்வருவன வற்றை பட்டியல்படுத்தல் வேண்டும்:-

(அ) கடனிறுவகையற்ற தொழிலர்களின் நடத்தை மற்றும் செயலாற்றுகை என்பன அதிகாரியினால் கண்காணிக்கப்படுகின்றது எனவும் அதிகாரி பற்றிய தொடர்பு விபரங்களை வழங்குகிறதுமான அப்பொருள்பட்ட கூற்றொன்று;

(ஆ) 181 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட எழுத்து மூல சான்றுப்படுத்துகை;

(இ) 181 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட எழுத்து மூல சம்மதம்

(ஈ) 30 ஆம் பிரிவுடன் இணங்குவதான நிருவாகி யினால் கையொப்பமிடப்பட்ட வட்டிக் கூற்று;

(உ) 31 ஆம் பிரிவுடன் இணங்கியொழுகும் ஏதேனும் செலுத்தப்படாத முன்னதான நிருவாகச் செலவு களின் கொடுப்பனவை நிருவாகி நாடின, நிருவாகியினால் கையொப்பமிடப்பட்ட நிருவா கத்திற்கு முன்னதான செலவுக் கூற்று;

(ஊ) நிருவாகியின் முன்மொழியப்பட்ட ஊதியத்தின் அடிப்படை அல்லது அடிப்படைகள் மற்றும், ஏற்புடையற்பாலதான, மணித்தியாலத்திற்கான மற்றும் சதவீத விகிதம் அல்லது வீதங்கள் மற்றும் நிலையான மட்டம் அல்லது மட்டங்கள்; அத்துடன்

(எ) பணிப்பாளர்களின் கூற்றானது 219 ஆம் பிரிவின் கீழ் நிருவாகிக்கு வழங்கப்பட்டிருக்குமிடத்து.

(5) இரண்டாம் உட்பிரிவின் கீழ், தேவைப்பட்ட கூட்டத்திற்கு முன்னதாக ஆகக் குறைந்தது ஏழு வேலை நாட்களில் நடாத்தப்படுவதற்கு நிருவாகி பின்வருவன வற்றின் மூலம் ஆரம்ப கூட்டத்தைக் கூட்டுதல் வேண்டும் -

(அ) கம்பெனியின் கடன்கொடுநர்களின் பலருக்கு நியாயமானளவு செயல்முறைக்குகந்தாகவுள்ள ஆரம்பகால கூட்டம் பற்றி எழுத்துமூல அறிவித் தலை வழங்குதல்; அத்துடன்

(ஆ) கூட்டத்தின் பொது அறிவித்தலை வழங்குதல்.

(6) ஐந்தாம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழான அறிவித்தலொன்றானது-

(அ) நிருவாகியொருவர் நியமிக்கப்பட்டுள்ளார் என குறிப்பிடுதல் வேண்டும்;

(ஆ) பின்வருவனவற்றை குறிபிடுதல் வேண்டும் :-

(i) நிருவாகியின் முழுப்பெயர்;

(ii) நியமனத் திகதி;

(iii) நிருவாகியின் நியமிப்பாளரின் அடையாளம் மற்றும் நீதிமன்றமே நியமிப்பாளராயின், எவர் தொடர்பில் விண்ணப்பம் செய்யப் பட்டதொ அவ்வாளின் அடையாளம்; அத் துடன்

(iv) நிருவாகியின் அலுவலக முகவரி மற்றும் வழமையான வேலை நேரங்களில் விசாரணைகள் பணிக்கப்படும் தொடர்பு இலக்கம்

(இ) (i) கூட்டத்தில் பட்டியலிடப்பட்டுள்ள ஆவணங்கள்; அத்துடன்

(ii) கூட்டத்தில் நடாத்தப்படவுள்ள விவகாரங்களைக் குறித்துரைத்தல் வேண்டும்.

(ஈ) நிருவாகியானவர் நிருவாக தனிசுகொடுத்தோர்களது குழுவொன்றை தாபிக்க நாடினால்,

(i) 217 ஆம் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள விடயங்களை சாராம்சப்படுத்துதல் வேண்டும்; அத்துடன்

(ii) அத்தகைய குழுவுக்கு உறுப்புரிமைக்காக பெயர்நியமனங்களை அழைத்தல் வேண்டும்.

(7) ஐந்தாம் அட்டவணையானது ஆரம்பகால கூட்டமொன்றிற்கு ஏற்புடையதாதல் வேண்டும்.

(8) கூட்டத்தை நடாத்திய இரு வேலைநாட்களிற்குள், நிருவாகியானவர்-

(அ) (4)(அ) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள கூற்றின் பிரதியொன்று;

(ஆ) (4)(ஈ) உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள அக்கறை கூற்றின் பிரதியொன்று; அத்துடன்

(இ) பதிவாளர் மற்றும் அதிகாரசபைக்;கு, (5)(அ) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள அறிவித்தலின் பிரதியொன்று.

(9) இரண்டாம், ஐந்தாம் மற்றும் எட்டாம் உட்பிரிவுகளுடன் இணங்கியொழுகத் தவறும் நிருவாகி தவறொன்றைப் புரிந்தவராகின்றார்.

பெறுபேற்று கூட்டங்கள்

**213.** (1) இப்பிரிவானது 211 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவு மற்றும் 216 இன் (3) ஆம் உட்பிரிவுகளில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள சூழ்நிலைகளிற்கு ஏற்புடைய தாதல் வேண்டும்.

(2) நிருவாகியானவர், கூட்டக்கூடிய காலப்பகுதியினுள், பெறுபேற்று கூட்டமொன்றைக் கூட்டுதல் வேண்டும்.

(3) நிருவாகியின் விண்ணப்பத்தின் மீது, நீதிமன்றமானது கூட்டக்கூடிய காலப்பகுதியை நீட்டிக்கலாம், ஆனால், அவ்விண்ணப்பமானது கூட்டும் காலப்பகுதியானது காலா வதியானதன் பின்னர் விண்ணப்பம் செய்யப்பட்டிருப்பின், அவ்வாறு செய்தலாகாது.

(4) கடன்கொடுநர்கள் தீர்மானத்தின் மூலம் கூட்டும் காலத்தை நீட்டிக்கலாம், ஆனால், கூட்டும் காலப்பகுதி காலாவதியானதன் பின்னர் அவ்வாறு செய்தலாகாது.

(5) கூட்டும் காலப்பகுதி (3) ஆம், (4) ஆம் ஆகிய பிரிவுகளில் ஒன்றின் கீழ் அல்லது அவ் இரண்டு உட்பிரிவுகளின் கீழ் ஏற்கனவே நீட்டிக்கப்பட்டிருக்குமிடத்து, (3) ஆம் அல்லது (4) ஆம் உட்பிரிவின் கீழ் நீடிக்கப்படலாம்.

(6) எட்டாம் உட்பிரிவின் கீழ் கூட்டம் நடாத்தப்படு வதற்கு முன்னர் ஆகக்குறைந்தது ஏழு வேலை நாட்கள் தேவைப்படுகின்றது. நிருவாகியானவர் பொறுப்பேற்று கூட்டுதல் வேண்டும்-

(அ) கம்பெனியின் கடன்கொடுநர்கள் பலருக்கு நியாய மானளவில் செயல்முறைக்குகந்ததாக பொறுப் பேற்று கூட்டம் பற்றி எழுத்துமூல அறிவித்தலை வழங்குதல்; அத்துடன்

(ஆ) கூட்டம் பற்றி பொது அறிவித்தலை வழங்குதல்.

(7) நிருவாகியானவர் (6)(அ) ஆம் உட்பிரிவின் கீழான அறிவித்தலுடன் பின்வரும் ஆவணங்களை இணைத்தல் வேண்டும் -

(அ) ஆரம்பகால கூட்டத்தில் முன்வைக்கப்படாதிருப் பின், 219 ஆம் பிரிவின் கீழ் நிருவாகிக்கு வழங்கப்பட்ட பணிப்பாளர்களின் கூற்று,

(ஆ) நிருவாகியினால் பின்வருவன பற்றிய அறிக்கை யொன்று

(i) கம்பெனியின் அலுவல்கள், தொழில், ஆதனம் மற்றும் நிதிசார் சூழ்நிலைகள் பற்றியதும்;

(ii) கம்பெனியின் ஆதனத்தை பாதிக்கின்ற கொடுக்கல்வாங்கல்கள் நிருவாகத்தின் தொடக்கத்தின் பின்னர் செய்துகொள்ளப் பட்ட எல்லா உடன்படிக்கைகள், மற்றும் கையாளுகைகள்; அத்துடன்

(iii) கூட்டத்தில் கருத்திற்கொள்ளப்படவேண்டிய கடன்கொடுநர்களின் முடிபுக்கு முக்கியத் துவம் வாய்ந்ததான வேறு ஏதேனும் விடயங்கள்;

(இ) நிருவாகியின் அபிப்பிராயத்தினை அல்லது அபிப் பிராயத்துக்கான காரணங்களுடன் எடுத்துக்கூறும் கூற்று பின்வருமாறானதாகும் -

(i) கம்பெனி ஒழுங்கேற்பாட்டு உறுதியினை ஆக்குவதற்கு கம்பெனிக்கான கடன்கொடு நர்களின் அக்கறைகளில் உள்ளனவா;

(ii) ஒழிப்போனொருவர் நியமிக்கப்பட வேண்டு மென கடன்கொடுநர்களின் அக்கறைக ளில் உள்ளனவா; அல்லது

(iii) வேறுவகையில் நிருவாகத்தினை முடிவு றுத்துவதற்கு கடன்கொடுநர்களின் அக்கறை களில் உள்ளனவா; அத்துடன்

(ஈ) கம்பெனி ஒழுங்கேற்பாடொன்றின் உறுதியானது பிரேரிக்கப்படுமிடத்து, நிருவாகியினால் செய்யப் படும் கூற்றொன்று ,

(i) பிரேரிக்கப்பட்டஉறுதியின் நியதிகளை எடுத்துக்கூறுதல்;

(ii) பிரேரிக்கப்பட்ட உறுதியின் அங்கீகாரத்தின் விளைவு மற்றும் குறிப்பாக அதன் வர்த்தக தாக்கம் என்பவற்றை விளக்குதல்; அத்துடன்

(iii) விதித்துரைக்கப்படக்கூடியதான அத்தகைய வேறு தகவல்களை உள்ளடக்குதல்

(8) நிருவாகியானவர் கூட்டும் காலப்பகுதியின் முடிவின் பின்னரான ஐந்து வேலைநாட்களினுள் பெறுபேற்று கூட்டத்தினை நடாத்துதல் வேண்டும்.

(9) பெறுபேற்று கூட்டமொன்றானது நீதிமன்றமானது நிருவாகியின் விண்ணப்பத்தின் மீது இதற்குப் பின்னரான தேதியொன்றுக்கு கூட்டமானது ஒத்திவைக்கப்படுகின்றது என கட்டளையிட்டாலொழிய, கூட்டம் நடைபெற்ற முதலாவது நாளுக்குப் பின்னரான முப்பது வேலை நாட்களுக்கு மேற்படாத நாளொன்றுக்கு ஒத்திவைக்கப்படலாம்.

(10) எவையேனும் (2), (6) ஆம் மற்றும் (8) ஆம் உட்பிரிவுகளுடன் இணங்கியொழுகத் தவறும் நிருவாகி தவறொன்றைப் புரிந்தவராகின்றார்.

பெறுபேற்று கூட்டத்திலான தொழில்

**214.** (1) இப்பிரிவானது 211 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவு மற்றும் 216 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கிழ் குறிப்பீடுசெய்யப்படும் சூழ்நிலைகளிற்கு ஏற்புடையதாதல் வேண்டும்.

(2) பெறுபேற்று கூட்டமொன்றில், கடன் கொடுநர்கள்-

(அ) தீர்மானத்தின் மூலம், 213 ஆம் பிரிவின் (7) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்படும் நிருவாகியின் கூற்றில் தரப்பட்டுள்ளவற்றிலிருந்து அதனது நியதிகள் வேறுபடும் பட்சத்தில், தீர்மானத்தில் குறித்துரைக்கப்பட்ட கம்பெனி ஒழுங்கேற்பாட்டின் பிரேரிக்கப்பட்ட உறுதியொன்றை தீர்மானத்தின் மூலம் அனுமதிக்கலாம்;

(ஆ) கம்பெனியானது ஏற்கனவே ஒழித்துக்கட்டலில் இருந்தாலொழிய, தீர்மானத்தின் மூலம் ஒழிப் போன் ஒருவரை நியமிக்கலாம்; அல்லது

(இ) தீர்மானத்தின் மூலம், நிருவாகத்தை வேறு வகையில் முடிவுறுத்தலாம்.

(3) ஐந்தாம் அட்டவணையானது பெறுபேற்று கூட்டத் திற்கு ஏற்புடையதாதல் வேண்டும்.

(4) கம்பெனியின் நிருவாகிகளும் பணிப்பாளர்களும், ஏதேனும் தீர்மானத்தின் மீது வாக்களிக்கும் கூட்டத்திற்கு முன்னதாக, கூட்டத்தில் வாக்களிப்பதான அல்லது வாக்களிக் கப்படக்கூடியதான ஏதேனும் தீர்மானத்தின்மீது குறிப்பிட்ட வழியில் வாக்களிப்பதற்கு எவரேனும் கடன்கொடுநரை தேவைப்படுத்துகின்றது என விடயத்திற்கேற்றவாறு, அறிந்திருக்கும் நிருவாகி அல்லது பணிப்பாளர் ஏதேனும் வாக்களிக்கும் ஒழுங்கேற்பாட்டின் கூட்டம் பற்றி அறிவித்தல் வேண்டும்.

(5) (அ) என்னும் பந்தியின் கீழ் கடன்கொடுநர்களினால் அங்கீகரிக்கப்பட்ட கம்பெனி ஒழுங்கேற்பாட்டின் உறுதி யொன்று, உறுதி நிறைவேற்றப்பட்டதனை அங்கீகரிக்கும் தீர்மானத்தின் நாளில் மற்றும் நேரத்தில் கம்பெனியினால் செய்யப்படின் பயனுறுகின்றது.

(6) ஏழாம் உட்பிரிவிற்கமைவாக, கம்பெனியின் பணிப் பாளர்கள், கூட்டமானது ஒத்திவைக்கப்பட்டுள்ளது, ஆனால், கூட்டத்திலான கேள்விகளிற்கு பதிலளிப்பதற்கு தேவைப் படுத்தப்படவில்லை எனும் ஏதேனும் நிகழ்வு உள்ளடங்கலாக, பெறுபேற்றுக்கூட்டத்திற்கு சமூகளித்திருத்தல் வேண்டும்.

(7) பணிப்பாளர் ஒருவர் பின்வருமாறுள்ளவிடத்து, பெறுபேற்று கூட்டத்தில் சமுகமளிக்கத் தேவையில்லை -

(அ) பணிப்பாளர் சமுகமளிக்காத அக்கறை வலிதான காரணமொன்றைக் கொண்டிருக்கின்றார்; அல்லது

(ஆ) நிருவாகி, அல்லது கடன்கொடுநர்கள் தீர்மானத்தின் மூலம் பங்குபற்றுவதிலிருந்து பணிப்பாளரை விடுவித்திருக்கிறார் அல்லது விடுவிக்கின்றனர் எனுமிடத்து.

(8) பெறுபேற்றுக் கூட்டத்தினில் சமூகமளித்துள்ள கம்பெனியின் பணிப்பாளரொருவர், கடன்கொடுநர்கள், தீர்மானத்தின் மூலம் பணிப்பாளர் அவ்வாறு செய்ய வேண்டும்; என முடிவு செய்யின் கூட்டத்தின் எஞ்சியிருப்ப வற்றின் முழுமையிலுமோ அல்லது பகுதியளவிலிருந்தோ விலகிச்செல்லுதல் வேண்டும்.

(9) நிருவாகியானவர் (2) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப் பட்டுள்ள கடன்கொடுநர்களின் தீர்மானத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட நாள் மற்றும் நேரத்தை பதிவுசெய்தல் வேண்டும்.

(10) பெறுபேற்று கூட்டத்தின் பின்னரான ஐந்து வேலை நாட்களினுள், நிருவாகியானவர் -

(அ) இரண்டாம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கடன் கொடுநர்களின் தீர்மானத்தின் பெறுபேற்றை பற்றி எழுத்துமூல அறிவித்தலை கம்பெனியின் பல கடன்கொடுநர்களுக்கு செயல்முறைக்கு கந்ததான நியாயமான அளவில் செயற்படுத்தக் கூடியதாகவிருக்குமாறு, வழங்குதல் வேண்டும்;

(ஆ) பெறுபேறு பற்றி பொது அறிவித்தலை வழங்குதல் வேண்டும்; அத்துடன்

(இ) பந்தி (அ) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட அறிவித் தலின் பிரதியை பதிவாளருக்கும் அதிகார சபைக்கும் அனுப்புதல் வேண்டும்.

## *இ - துரிதமாக்கப்பட்ட வழி*

இணைந்த ஆரம்பகால மற்றும் பெறுபேற்று கூட்டங்கள்

**215.** (1) இப்பிரிவானது 211 ஆம் பிரிவின் (2) ஆம் உட் பிரிவில் குறிப்பீடுசெய்யப்படும் சூழ்நிலைகளிற்கு ஏற்புடை யதாதல் வேண்டும்.

(2) நிர்வாகி நிருவாகம் தொடங்கியதன் பின்னரான பத்து வேலைநாட்களினுள் இணைந்த ஆரம்ப மற்றும் பெறுபேற்று கூட்டத்தினை நடாத்துதல் வேண்டும்.

(3) இணைந்த ஆரம்ப மற்றும் பெறுபேற்று கூட்டத்தில் பின்வரும் விடயங்கள் நடாத்தப்படுதல் வேண்டும் -

(அ) 212 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்படும் விடயங்கள்; அத்துடன்

(ஆ) தீர்மானத்தில் குறித்துரைக்கப்பட்ட கம்பெனி ஒழுங்கேற்பாட்டின் பிரேரிக்கப்பட்ட உறுதியின் அங்கீகாரத்தின் மீதான கடன்கொடுநர்களின் தீர்மானம் ஒன்று.

(4) இணைந்த ஆரம்ப மற்றும் பெறுபேற்று கூட்டத்தில் நிருவாகியானவர் 212 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் (அ), (ஆ), (இ), (ஈ), (உ), மற்றும் (ஊ) என்னும் பந்திகளில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆவணங்களை அட்டவணைப்படுத் துதல் வேண்டும்.

(5) நிருவாகி (2) ஆம் உட்பிரிவின் கீழ், பின்வருவன வற்றினால் இணைந்த ஆரம்ப மற்றும் பெறுபேற்று கூட்டத்தை கூட்டுவதற்கு, கூட்டத்திற்கு முன்னரான ஆகக் குறைந்தது ஏழு வேலைநாட்கள் தேவைப்படுத்தப்படுகின்றது-

(அ) கம்பெனியின் கடன்கொடுநர்களின் பலருக்கு நியாயமானளவில் செயல்முறைக்குகந்தாக இணைந்த ஆரம்ப மற்றும் பெறுபேற்று கூட்டம் பற்றி எழுத்திலான அறிவித்தலை வழங்குதல்; அத்துடன்

(ஆ) கூட்டத்தின் பொது அறிவித்தலை வழங்குதல்.

(6) ஐந்தாம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழான அறிவித்தலொன்றானது -

(அ) நிருவாகியொருவர் நியமிக்கப்பட்டுள்ளார் என குறிப்பிடுதல்;

(ஆ) பின்வருவனவற்றை குறிப்பிடுதல் வேண்டும் :-

(i) நிருவாகியின் முழுப்பெயர்;

(ii) நியமனத் திகதி;

(iii) நிருவாகியின் நியமிப்பாளரின் அடையாளம் மற்றும், நீதிமன்றமே நியமிப்பாளராக இருக்குமிடத்து, நியமனம் மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பத்தின் மீதான ஆளின் அடையாளம்; அத்துடன்

(iv) நிருவாகியின் அலுவலக முகவரி மற்றும் வழமையாக வேலை நேரங்களில் விசாரணைகள் பணிக்கப்படும் தொடர்பு இலக்கம்

(இ) பின்வருவனவற்றைக் குறித்துரைத்தல் வேண்டும் -

(i) கூட்டத்தில் நிரலிடப்படவுள்ள ஆவணங்கள்; அத்துடன்

(ii) கூட்டத்தில் நடாத்தப்படவுள்ள விடயங்கள்.

(ஈ) நிருவாகியானவர் நிருவாக கடன்கொடுநர்களின் குழுவொன்றை தாபிப்பதற்கு நாடின் ,

(i) 217 ஆம் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள விடயங்களை சாராம்சப்படுத்துதல் வேண்டும்; அத்துடன்

(ii) நிருவாகி கடன்கொடுநர்களின் குழுவொன்றின் உறுப்பாண்மைக்கான பெயர் நியமனப் பத்திரங்களுக்கு அழைப்பு விடுத்தல்.

(7) நிருவாகியானவர் (5) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழான அறிவித்தலுடன் பின்வரும் ஆவணங்களை இணைத்தல் வேண்டும் -

(அ) இருநூற்றிபத்தொன்பதாம் பிரிவின் கீழ் நிருவாகிக்கு வழங்கப்பட்ட பணிப்பாளர்களின் கூற்று,

(ஆ) பின்வருவன பற்றி நிருவாகியினால் செய்யப்படும் அறிக்கை -

(i) கம்பெனியின் அலுவல்கள், தொழில், ஆதனம் மற்றும் நிதிசார் சூழ்நிலைகள்;

(ii) கம்பெனியின் ஆதனத்தை பாதிக்கின்ற நிருவாகம் தொடங்கப்பட்டதன் பின்னர் செய்துகொள்ளப்பட்ட எல்லா உடன்படிக் கைகள், கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் கையாளுகைகள்; அத்துடன்

(iii) கூட்டத்தில் கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய கடன்கொடுநர்களின் முடிவு களுக்கான பொருள்சார் ரீதியான ஏதே னும் கருமம்,

(இ) கம்பெனி ஒழுங்கேற்பாட்டின் உறுதியொன்றை கம்பெனி கடன்கொடுநர்களின் அக்கறையில் உள்ளதென அவ் அபிப்பிராயத்திற்கான காரணங் ளுடன் நிருவாகியின் அபிப்பிராயத்தை எடுத்துக் கூறும் கூற்றொன்று;

(ஈ) பின்வருவன பற்றி நிரவாகியினாலான கூற் றொன்று,

(i) கம்பெனி ஒழுங்கேற்பாட்டின் பிரேரிக்கப் பட்ட நியதிகளை எடுத்துக்கூறும்;

(ii) பிரேரிக்கப்பட்ட உறுதியின் அங்கீகாரத் தின் விளைவு மற்றும் குறிப்பாக அதன் வர்த்தக ரீதியான தாக்கத்தை விளக்கும்; அத்துடன்

(iii) விதித்துரைக்கப்படக்கூடியதான அத்தகைய வேறு தகவல்களை உள்ளடக்கும் வேறு; அத்துடன்

(உ) விதித்துரைக்கப்படக்கூடியவாறான துரிதப்படுத்தப் பட்ட நடவடிக்கைமுறை பற்றி அத்தகைய தகவல்களை கொண்டிருக்கும் கூற்றொன்று.

(8) ஐந்தாம் அட்டவணை இணைந்த ஆரம்ப மற்றும் பெறுபேற்று கூட்டத்திற்கு ஏற்புடையதாதல் வேண்டும்.

(9) பத்தாம் உட்பிரிவிற்கமைவாக, கம்பெனியின் பணிப்பாளர்கள், கூட்டம் ஒத்திவைக்கப்பட்டதான ஏதேனும் நிகழ்வு உள்ளடங்கலாக, இணைந்த ஆரம்ப மற்றும் பெறு பேற்று கூட்டத்திற்கு சமுகமளித்தல் வேண்டும். ஆனால் கூட்டத்தில் வினாக்களுக்கு விடையளிப்பதற்கு தேவைப் படுத்த முடியாது.

(10) பணிப்பாளர் பின்வருமாறு உள்ளவிடத்து இணைந்த ஆரம்ப மற்றும் பெறுபேற்றுக் கூட்டத்திற்கு சமுகமளிக்க தேவையில்லை -

(அ) பணிப்பாளர் சமுகமளிக்காமைக்கான வலிதான காரணத்தை கொண்டிருக்கின்றவிடத்து; அல்லது

(ஆ) நிருவாகி, பணிப்பாளரை சமுகமளிப்பதிலிருந்து விடுவித்திருக்கின்றார் அல்லது கடன் கொடுநர் கள் தீர்மானத்தின் மூலம் விடுவித்துள்ளனர்.

(11) இணைந்த ஆரம்ப மற்றும் பெறுபேற்றுக் கூட்டத் திற்கு சமுகமளிக்கின்ற கம்பெனியின் பணிப்பாளர் ஒருவர் கடன்கொடுநர்கள் தீர்மானத்தின் மூலம் பணிப்பாளர் அவ்வாறு செய்தல் வேண்டும் என முடிபு செய்யின், கூட்டத்தின் எல்லா அல்லது எஞ்சியுள்ள பாகத்திற்காக கூட்டத்திலிருந்து விலகுதல் வேண்டும்.

(12) இரண்டாம், (5) ஆம் (6) ஆம் உட்பிரிவுடன் இணங்கியொழுகுவதற்கு தவறுகின்ற அல்லது நிருவாகி யொருவர் தவறொன்றைப் புரிகின்றார்.

உறுதி மீளாய்வு கேட்பு

**216.** (1) இப்பிரிவு 211 ஆம் பிரிவின் (2) ஆம் உட் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட சூழ்நிலைகளிற்கு ஏற்புடை மையாகின்றது.

(2) இணைந்த ஆரம்ப மற்றும் பெறுபேற்று கூட்டத்தில் இக்கருமத்தின் மீது வெளிப்படுத்தப்பட்டவையான கடன் கொடுநர்களின் அத்தகைய நோக்குகளை கேட்பச் செய்ததன் பின்னர், நிருவாகி -

(அ) 215 ஆம் பிரவின் (7) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட நிருவாகியின் கூற்றில் எடுத்துக்கூறப் பட்டவற்றிலிருந்து அதன் நியதிகள் வேறுபடின் கடன்கொடுநர்கள் தேவைப்படும் பெரும்பான்மை மூலம் தீர்மானத்தின் மூலமான கம்பெனி ஒழுங் கேற்பாட்டின் பிரேரிக்கப்பட்ட உறுதியொன்று அங்கீகரிக்கப்படின் -

(i) உறுதி மீளாய்வு கேட்புக்காக நீதிமன்றத் திற்கு உடனடியாக விண்ணப்பித்தல் வேண்டும்; அல்லது

(ii) அங்கீகாரம் எவ்வாறிருப்பினும், நிருவாகி, 178 ஆம் பிரிவின் (ஈ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட நிருவாகியின் குறிக்கோளை எய்துவதனை முன்னெடுத்துச் செல்வதுடன் பிரேரிக்கப்பட்ட உறுதி யானது அடிப்படையில முரணானது என கருதின், உடனடியாக துரிதமாக்கப்பட்ட வழக்கு பதிலாக நியமமான வழியை பின்தொடர்ந்து பெறுபேற்று கூட்ட மொன்றை கூட்டுதல் - அல்லது

(ஆ) கடன்கொடுநர்கள் தேவைப்படும் பெரும்பான்மை மூலம் பின்வருமாறு தீர்மானத்தின் மூலம் கம்பெனி ஒழுங்கேற்பாட்டின் பிரேரிக்கப்பட்ட உறதி யொன்றை அங்கீகரிக்காதுவிடின் -

(i) துரிதமாக்கப்பட்ட வழிக்குப் பதிலாக நியம வழியை உடனடியாக பின்தொடர்தல்; அத்துடன்

(ii) பெறுபேற்று கூட்டமொன்றை கூட்டுதல்.

(3) இரண்டாம் உட்பிரிவின் (அ) அல்லது (ஆ) என்னும் பந்தியின் கீழ் பெறுபேற்று கூட்டமொன்றை கூட்டுவதற்கு நிருவாகி தேவைப்படுத்தப்படின், அப்போது (213) ஆம் மற்றும் (214) ஆம் பிரிவுகள் ஏற்புடையதாதல் வேண்டும்.

(4) இரண்டாம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் (i) ஆம் உட்பந்தியின் கீழ் விண்ணப்பமொன்று செய்யப் பட்டதன் பின்னரும் மற்றும் விண்ணப்பமொன்று நீதிமன் றத்தினால் கையுதிர்க்கபபட்டிருத்தல் வரையும் நிருவாகம் தொடருதல் வேண்டும்.

(5) இரண்டாம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் (i) உட்பந்தியின் கீழ் விண்ணப்பம் ஒன்றுடன் பின்வருவன சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்:-

(அ) இணைந்த ஆரம்ப மற்றும் பெறுபேற்று கூட்டத்தில் நிருவாகியினால் இடப்பட்டமை தொடர்பிலான வட்டிக் கூற்றுக்களின் பிரதிகள்;

(ஆ) பிரேரிக்கப்பட்ட உறுதி நிருவாகி, நிருவாகியாக இல்லாதுவிடின், இணைந்த ஆரம்ப மற்றும் பெறுபேற்று கூட்டத்தில் அல்லது ஏனைய கடன்கொடுநர்களின் கூட்டத்தில் இடப்பட்ட உறுதி நிருவாகி தொடர்பிலான வட்டிக்கூற்றின் பிரதிகள்;

(இ) முன்னரான நிருவாகத்தில் எவையேனும் செலுத்தப்படாத முன் நிருவாக செலவுகளின் கொடுப்பனவை நிருவாகி நாட்டின், இணைந்த ஆரம்ப மற்றும் பெறுபேற்று கூட்டத்தில் இடம்பெற்ற முன் நிருவாக செலவுகள் பற்றிய கூற்றின் பிரதிகள்;

(ஈ) இருநூற்றி பதினைந்தாம் பிரிவின் 97 ஆம் உட்பிரிவின் கீழ் இணைந்த ஆரம்ப மற்றும் பெறுபேற்று கூட்டம் பற்றிய அறிவித்தலுடன் இணைக்கப்படும் ஆவணங்களின் பிரதிகள்;

(உ) இணைந்த ஆரம்ப மற்றும் பெறுபேற்று கூட்டத் தின் கூட்ட குறிப்புக்கள் பற்றிய பிரதிகள்; அத்துடன்

(ஊ) விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு தகவல்களின் பிரதிகள்.

(6) பின்வருமாறு உள்ளவிடத்து உறுதி மீளாய்வு கேட்பில் -

(அ) கம்பெனி ஒழுங்கேற்பாட்டின் பிரேரிக்கப்பட்ட உறுதியானது அது பயனுக்கு வருமாயின் 223 ஆம் பிரிவில் உள்ள தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுகின்றது என நீதிமன்றம் திருப்தி படுமிடத்து, நீதிமன்றமானது பிரேரிக்கப்பட்ட உறுதியானது பிணைக்குமென கட்டளையிடுதல் வேண்டும்;

(ஆ) கம்பெனி ஒழுங்கேற்பாட்டின் பிரேரிக்கப்பட்ட உறுதியானது அது பயனுக்கு வருமாயின் 223 ஆம் பிரிவில் உள்ள தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுகின்றது என நீதிமன்றம் திருப் திபடுமிடத்து, நீதிமன்றம் அவசியமானவாறு தேவையான பெரும்பான்மை பிரதிநிதித்துவப் படுத்துகின்ற கடன்கொடுநர்களின் நோக்குகளை கருத்திற் கொண்டு அத்தகைய கட்டளையை ஆக்குதல் வேண்டும்.

(7) ஆறாம் உட்பிரிவின்கீழ் கட்டளையொன்றை ஆக்குவதில், நிதிமன்றமானது, அவசியமானவிடத்து -

(அ) ஏதேனும் நியதி அல்லது நிபந்தனையை விதிக்கலாம்; அத்துடன்

(ஆ) வேறு ஏதேனும் துணை நிலைக்கட்டளையை ஆக்கலாம்.

(8) ஆறாம் உட்பிரிவின்கீழ் கட்டளையொன்றை ஆக்கியதன் பின்னரான ஐந்து வேளை நாட்களினுள், நிருவாகி-

(அ) நியாயமான அளவு செயல்முறைக்குகந்ததான கம்பெனியின் கடன்கொடுநர்களின் பலருக்கு கட்டளை பற்றிய எழுத்துமூல அறிவித்தலை வழங்குதல் வேண்டும்.

(ஆ) பதிவாளருக்கும் அதிகாரசபைக்கும் கட்டளை பற்றிய பகிரங்க அறிவித்தலை வழங்குதல்;

வேண்டும் என்பதுடன் (அ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட அறிவித்தல் பற்றிய பிரதியை அனுப்புதலும் வேண்டும்.

(9) ஆறாம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒவ்வொரு கட்டளையினதும் பிரதியொன்று, கட்டளையாக்கபட்டதன் பின்னரான ஐந்து வேலைநாட்களுக்குள் நீதிமன்றினால் பதிவாளருக்கும்; அதிகாரசபைக்கும் அனுப்பப்படல் வேண்டும்.

(10) கம்பெனி ஒழுங்கேற்பாட்டின் உறுதியொன்று, ஆறாம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றின் பயனைக்கொண்டு பிணைகின்றவிடத்து, உறுதியானது, பின்வருமாறு கம்பெனியினால் செய்யப்பட்டுள்ளதாக கருதப்படுதல் வேண்டும்-

(அ) கட்டளை ஆக்கப்பட்ட நாளன்று, நேரத்தில்; அல்லது

(ஆ) நீதிமன்றம் கட்டளையிடக்கூடியதான அத்தகைய வேறு நாளன்று மற்றும் அத்தகைய வேறு நேரத்தில்.

### *இ - இரண்டு வழிகளுக்கும் ஏற்புடைமையாகின்ற கருமங்கள்*

நிருவாகத்தில் உள்ள கடன்கொடுநர்களின் குழு

**217.** (1) நிருவாகத்தின்போதான எந்நேரத்திலும், மற்றும் நிருவாகத்தின் கடன்கொடுநர்களின் குழு ஏற்கனவே தாபிக்கப்பட்டிருக்காதுவிடின், நிருவாகி இரண்டாம் உட்பிரிவிற்கமைவாக, அத்தகைய குழுவின் தாபனத்தை நாடலாம்.

(2) நிருவாக கடன்கொடுநரின் குழுவின் தாபனம் மற்றும் அத்தகைய குழுவிற்கான நியமனங்கள் என்பன பின்வருவனவற்றில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கடன்கொடுநர்களின் தீர்மானத்தை தேவைப்படுத்தல் வேண்டும்-

(அ) ஆரம்பகால கூட்டமொன்று;

(ஆ) இணைந்த ஆரம்பகால மற்றும் பெறுபேற்று கூட்டமொன்றில்; அல்லது

(இ) கடன்கொடுநர்களின் மற்றொரு கூட்டத்தில்,

(i) இப்பிரிவில் குறிப்பீட்டுசெய்யப்படும் கருமங்களை சாராம்சப்படுத்துகின்ற அறிவித்தல்; அத்துடன்

(ii) நிருவாக கடன்கொடுநர்களின் உறுப்பான்மைக்கான பெயரகுறித்த நியமனங்களை அழைப்பு விடுக்கின்றதான அறிவித்தல்.

(3) ஐந்தாம் அட்டவணையானது (2) ஆம் உட்பிரிவில் (இ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட கூட்டமொன்றுக்கு ஏற்புடைமையாதல் வேண்டும்.

(4) நிருவாக கடன்கொடுநர்கள் குழு தாபிக்கப்படின்,

(அ) பின்வரும் பணிகளை கொண்டிருத்தல் வேண்டும்:-

(i) நிருவாகத்துடன் தொடர்புடைய விடயங்களை நிருவாகியுடன் ஆலோசிப்பதற்கு.; அத்துடன்

(ii) ஐந்தாம் உட்பிரிவின்கீழ் அனுப்பப்பட்ட நிருவாகியிடமிருந்தான அறிக்கைகளை கருத்திற்கொள்ளுவதற்கு;

(ஆ) அத்தகைய குழுவொன்று நிருவாகிக்கு பணிப்புகளை வழங்கியிருக்கலாகாது.

(5) நிருவாக கடன்கொடுநர்களின் குழு தாபிக்கப்படின், நிருவாகி அத்தகைய முறையிலும் அத்தகைய காலப்பகுதியினுள்ளும் அத்தகைய தகவல்களை கொண்டிருக்கும் அறிக்கைகளை குழுவுக்கு அனுப்புதல் வேண்டும்;

(6) அவ்வாள் நிருவாகி பின்வருமாறு ஆள் உள்ளாரென திருப்திப்பட்டாலொழிய, நிருவாகத்தின் கடன்கொடுநர்களின் குழுவின் உறுப்பினராகவிருப்பதற்கு ஆளொருவர் தகவுடையதராதலாகாது.

(அ) கடன்கொடுநர் ஒருவர்;

(ஆ) பொது அற்றோணித் தத்துவத்தின் கீழ் கடன் கொடுநரின் முகவர்; அல்லது

(இ) உறுப்பினராகவிருப்பதற்கு கடன்கொடுநரின்; எழுத்துமூலம் அதிகாரமளிக்கப்பட்டவர்.

(7) நிருவாக கடன்கொடுநர்களின் குழு தொடர்பில், பின்வரும் விடயங்கள் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேவைப்பாடுகள், மட்டுப்பாடுகள் மற்றும் வரையறைகளுக்கு அமைவாதல் வேண்டும் -

(அ) குழுவின் உறுப்பாண்மை மற்றும் உறுப்பாண்மை யின் முடிவுறுத்தல்;

(ஆ) குழுவின் தாபனம் பற்றிய அறிவித்தல் மற்றும் குழுவுடன் தொடர்புடைய விடயங்கள்;

(இ) குழுவின் கூட்டங்களை கூட்டுவதற்கான நடவடிக்கைமுறைகள்;

(ஈ) குழுவின் உறுப்பினர்களினால் செய்யப்பட்ட அல்லது மேற்கொள்ளப்பட்ட செயல்கள், நீக்கங்கள் அல்லது முடிபுகளுக்கான பாதுகாப்பு;

(உ) குழுவின் உறுப்பினர்களின் செலவினங்களை மீளளிப்புச் செய்தல்; மற்றும்

(ஊ) குழுவின் உறுப்பினர்களின் கொடுக்கல் வாங் கல்கள் மற்றும் அவர்களுடன் தொடர்புபட்ட திறத்தவர்கள்

(8) நிருவாக கடன்கொடுநர்குழுவின் உறுப்பினர்களின் தகுதிகள், பெயர்நியமனங்கள் அல்லது தேர்தல்களின் குறை பாடுகளின் விளைவுகள் விதித்துரைக்கப்படப்கூடியவாறாதல் வேண்டும்.

(9) நிருவாக கடன்கொடுநர்குழுவிலான வெற்றிடத்தின் காரணமாக, செயலாற்ற முடியாதுள்ளவிடத்து, நிருவாகி செயல்முறைக்குகந்தளவு விரைவாக நன்கறிந்து கடன் கொடுநர் ஒவ்வொருவருக்கும் அந்நிகழ்வு பற்றி எழுத்துமூல அறிவித்தலை வழங்குதல் வேண்டும்.

பங்குதாரர்கள், கடன்கொடுநர்கள் மற்றும் குழுக்களின் நிர்வாகக் கூட்டங்கள்

**218.** (1) நிருவாகியொருவர் நிருவாகத்தின் முடிபு வரையான எல்லா நேரங்களிலும் பின்வருவனவற்றுக்கு அத்தகைய கூட்டங்களை கூட்டுதல் வேண்டும்

(அ) நிருவாகி தகுதியானவர்கள் என எண்ணும் பங்கு தாரர்களின்;

(ஆ) நிருவாகி தகுதியானதென எண்ணும் கடன் கொடுநர்கள்; அத்துடன்

(இ) நிருவாகி கடன்கொடுநர்களின் குழு (ஏதேனு மிருப்பின்) பின்வருமாறு

(i) நிருவாகி தகுதியானதென காண்கின்றதால்

(ii) குழு அதன் கோரிக்கை பெற்றதான ஐந்து வேலை நாட்களிற்குள் நியாயமான கோரிக்கையைச் செய்யலாம்.

(2) ஐந்தாம் அட்டவணையானது (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட கருமங் களுக்கு ஏற்புடைமையாதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின் கீழ் கூட்டப்பட்ட கூட்டங்கள் பற்றிய அறிவித்தல் மற்றும் நடத்தை என்பவற்றுக்கான தேவைப்பாடுகள் விதித்துரைக் கப்படக்கூடியவாறாக இருத்தல் வேண்டும்.

நிருவாகத்தில் பணிப்பாளர்களின் கூற்று

**219.** (1) கம்பெனியின் நிருவாகத்தின் தொடக்கத்தின் பின்னரான ஐந்து வேலை நாட்களினுள் அல்லது மூன்றாம் உட்பிரிவின் கீழ் நீட்டிக்கப்பட்ட காலப்பகுதியினுள் கம்பெனியின் பணிப்பாளர்கள் பின்வருவன பற்றிய கூற்றின் ஏற்பாடுகள் முன்னரான பிந்தியதான செயல் முறைக்குகந்த தேதியில் உள்ளதைக் காட்டுகின்ற கம்பெனியின் அலுவல் கள், தொழில், ஆதனம் மற்றும் நிதிசார் சூழ்நிலைகள் பற்றிய முழுக் கூற்றொன்றை நிருவகித்து வழங்குதல் வேண்டும்.

(அ) இருப்பின் ஏதேனும் குறிப்பேடு மற்றும் அவற் றிலிருந்து தேறிப் பெறுவதற்கு எதிர்பார்க்கப் படும் முழு மொத்த தொகை உள்ளடங்கலாக அதன் ஆதனங்களின் விபரங்கள்;

(ஆ) கம்பெனியின் தனிசுகள் மற்றும் ஏனைய பொறுப்புக்கள்;

(இ) அதன் ஒவ்வொரு கடன்கொடுநரினதும் பெயர் மற்றும் முகவரி;

(ஈ) ஒவ்வொரு கடன்கொடுநரினாலும் வைத்திருக்கப் பட்டவை எவையேனும் இருப்பின் வில்லங்கம் அல்லது வில்லங்கங்கள்; அத்துடன்

(உ) ஒவ்வொரு வில்லங்கமும் உருவாக்கப்பட்ட திகதி,

(2) ஓராம்; உட்பிரிவில் உள்ள கூற்று பின்வருமாறு கம்பெனியின் பணிப்பாளரினால் அல்லது நிருவாகி நியாயமாக தேவைப்படுத்தக்கூடியதான பின்வரும் ஆட்களி னால் சத்தியக்கடதாசி மூலம் ஆதாரப்படுத்தப்படல் வேண்டும்:-

(அ) கம்பெனியின் அலுவலராக இருக்கின்ற அலுவல ராக இருந்த ஆளொருவர்;

(ஆ) நிருவாக தொடக்கத்தின் நேர்முற்போந்த தேதி யின் பன்னிரண்டு மாத காலப்பகுதியினுள் உள்ளதான ஏதேனும் நேரத்தில்கம்பெனியின் உருவாக்கம், மேம்பாடு, அல்லது முகாமைத்து வத்தில் பங்கெடுக்கின்ற ஆளொருவர்; அல்லது

(இ) தொடர்புடைய கூற்றின், கம்பெனியின் பணிப் பாளரொருவராக அல்லது ஏனைய அலுலராக இருந்த அல்லது அக்காலப்பகுதியினுள் இருந்த, கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிப்பாளரொரு வராக அல்லது வேறு அலுவலராக அல்லது தொழிலில் இருக்கின்ற அல்லது இருந்த ஆளொருவர்.

(3) நிருவாகி அல்லது நீதிமன்றம் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கூற்றொன்றின் வழங்குகைக்கான நேர எல்லையை நீட்டிக்கலாம்;

(4) ஓராம் அல்லது (2) ஆம் உட்பிரிவிற்கு இணங்கி யொழுகுவதற்கு ஆளொருவர் தவறின், அவ்வாள் தவறொன்றை புரிந்தவராகின்றார்.

நிருவாகம் முடிவடையும் போது

**220.** (1) நிருவாகமானது பின்வரும் நாளன்றும் காலத்திலும் முடிவடைகின்றது : –

(அ) (i) இருநூற்றி பதிமூன்றாம் (3) ஆம் உட்பிரி வின் கீழ்; அல்லது

(ii) இருநூற்றி பதினாறாம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் (i) ஆம் உட்பந்தியின் கீழ்

விண்ணப்பமொன்று செய்யப்பட்டிருந்தாலொழிய பெறுபேற்றுக் கூட்டமொன்று கூட்டப்பட்ட காலப் பகுதியினுள் கூட்டப்படாதபோது;

(ஆ) இருநூற்றி பதிமூன்றாம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் விண்ணப்பமொன்று ஆக்கப்பட் டிருக்கின்ற போது, கூட்டப்படும் காலப்பகுதி யானது விண்ணப்பம் செய்யப்பட்டதன் பின்னர் அல்லது விண்ணப்பம் மறுக்கப்பட்ட பின்னர் காலாவதியாகின்றது;

(இ) பெறுபேற்று கூட்டமானது கூட்டப்பட்டது ஆனால், 213(8) ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட காலப்பகுதியினுள் இடம்பெறவில்லை;

(ஈ) கடன்கொடுநர்கள் பெறுபேற்றுக் கூட்டத்தில் தீர்மானத்தின் மூலம், 214 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் (அ) என்னும் பந்தியின் கீழ் கம்பெனி ஒழுங்கேற்பாட்டின் பிரேரிக்கப்பட்ட உறுதி யொன்றை அங்கீகரித்தல்;

(உ) கடன்கொடுநர்கள் பெறுபேற்றுக் கூட்டத்தில் தீர்மானத்தின் மூலம், 214 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் கீழ் ஒழிப்போன் ஒருவரை நியமித்தல் அல்லது வேறு வகையில் ஒழிப்போன் நியமிக்கப்பட்டிருத்தல்;

(ஊ) கடன்கொடுநர்கள் பெறுபேற்றுக் கூட்டத்தில் தீர்மானத்தின் மூலம், 214 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின் கீழ் நிருவாகத்தை முடிவுறுத்தல்;

(எ) கம்பெனி ஒழுங்கேற்பாட்டு உறுதியானது கம்பெனியினால் செய்யப்படவேண்டுமென 216 ஆம் பிரிவின் (10) ஆம் உட்பிரிவின் கீழ் கருதப்படுதல்; அல்லது

(ஏ) நீதிமன்றமானது 263 ஆம் பிரிவின்கீழ் அல்லது நீதிமன்றம் பிரயோகிக்கக்கூடிய வேறு ஏதேனும் தத்துவத்தை பிரயோகிக்கையில் நிருவாகத்தை முடிவுறுத்தல்.

(2) நிருவாகம் (1) ஆம் உட்பிரிவின் (அ), (ஆ), (இ), (உ) மற்றும் (ஏ) என்னும் பந்திகளின்கீழ் முடிவுறுத்தப்படுமிடத்து, கம்பெனியின் நிலையானது நிருவாகத்திற்கு நேர்முன்னரான ஒழித்துக்கட்டலில் இருக்கும் அல்லது ஒழித்துக்கட்டலில் இல்லாதிருக்கும் நிலை மீளக்கொணரப்படல்.

## அத்தியாயம் 6

## கம்பெனி ஒழுங்கேற்பாட்டின் உறுதிகள் மற்றும் உறுதி நிருவாகிகள்

### *அ-கம்பெனி ஒழுங்கேற்பாட்டின் உறுதிகள்*

**221.** (1) கம்பெனி ஒழுங்கேற்பாட்டின் உறுதியின் நியதிகளானது, 217 ஆம் பிரிவின் (7) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியின் (i) என்னும் உட்பந்தியின் கீழ் அல்லது 215 ஆம் பிரிவின் (7) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியின் (i) என்னும் உட்பந்தியின் கீழ் நிருவாகியினால் கூற்றொன்றில் உள்ளடக்கப்படுவதற்கு தேவைப்படுத்துகின்றவை உள்ளடங்கலாக, பின்வருவனவற்றை உள்ளடக்குதல் வேண்டும்- உறுதியின் உள்ளடக்கம்

(அ) உறுதி நிருவாகியின் அடையாளம்;

(ஆ) உறுதி நடைமுறைக்கு வருவதற்கான நிபந்தனைகள், எவையேனுமிருப்பின்;

(இ) உறுதி நிருவாகியின் பணிகள், தத்துவங்கள் மற்றும் கடமைகள்;

(ஈ) பணிப்பாளர்களின் பணிகளும் தத்துவங்களும்;

(உ) கம்பெனியானது அதன் தனிசுகள் மற்றும் பொறுப்புக்களிலிருந்து விடுவிக்கப்பட்டிருப்பின் அத்துடன் விடுவிக்கப்படுமளவு வரை;

(ஊ) கம்பெனியின் தனிசுகள் மற்றும் ஏனைய பொறுப்புக்களின் நியதிகளுக்கான எல்லாத் திருத்தங்கள்;

(எ) உறுதி நிருவாகியினால் கடன்கொடுநர்களுக்கு அறிக்கையிடல்;

(ஏ) உறுதியின் கீழ் வேறுபடக்கூடியதான நியதிகள்; அத்துடன்

(ஐ) உறுதி முடிவுறுகின்றதான சூழ்நிலைகள்;

(2) கம்பெனி ஒழுங்கேற்பாட்டின் உறுதியொன்று, உறுதி வெளிப்படையாக புறநீக்கம் செய்கின்றதான விதித்துரைக்கப்பட்ட அத்தகைய நியதிகள் தவிர்ந்த, விதித்துரைக்கப்படக்கூடியதான அத்தகைய நியதிகளை உள்ளடக்குவதற்கு கருதப்படுதல் வேண்டும்.

உறுதியொன்றின்கீழ் மூன்றாம் திறத்தவர்களை விடுவிப்பு

**222.** (1) நிருவாகியினால் நீதிமன்றிற்கான விண்ணப்பத்தின் மீது, நீதிமன்றமானது, அங்கீகரிக்கப்பட்டிருப்பின், கம்பெனி ஒழுங்கேற்பாட்டின் அவ்வுறுதியுடன்; போதியளவு சம்பந்தப்பட்டுள்ளதாக, தொடர்புடைய கம்பெனிகள் மற்றும்; பணிப்பாளர்கள் உள்ளடங்கலாக, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஆட்களை பொறுப்பிலிருந்து விடுவித்தல் வேண்டுமென கட்டளையிடலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக கம்பெனி ஒழுங்கேற்பாட்டு உறுதியுடன்; ஆளொருவர் போதியளவு சம்பந்தப்பட்டுள்ளதா அல்லது இல்லையா என்பதை தீர்மானிப்பதில் நீதிமன்றம் பின்வருவனவற்றை கருத்தில் கொண்டிருத்தல் வேண்டும் –

(அ) பிரேரிக்கப்பட்ட விடுவிப்பானது உறுதியின் உள்ளர்ந்த பகுதியா அல்லது இல்லையா என;

(ஆ) உறுதியின் கீழ் ஆள் உதவுதொகை செலுத்தியுள்ளாரா அல்லது இல்லையா; அத்துடன்

(இ) விடுவிப்பு அற்ற நிலையில், அழைக்கப்பட்டால் கம்பெனிக்கு எதிராக நட்டோத்தரவாத உரிமைக் கோரலொன்றினை கொண்டிருப்பாரா அல்லது இல்லையா

உறுதிக்கான தேவைப் பாடுகள்

**223.** (1) மூன்றாம் உட்பிரிவிற்கமைய, கம்பெனி ஒழுங் கேற்பாட்டு உறுதியின் கீழ் ஒவ்வொரு தனிசுகொடுநரும் உறுதியின் பயனை எடுப்பதற்கு உடன் முன்னதாக தொடக்கப்பட்ட கம்பெனியின் ஒழித்துக்கட்டுதலை கொண்டிருப்பின், சாதகமான ஆகக்குறைந்த பரிகாரத்தை கடன்கொடுநர் ஒவ்வொருவரும் கம்பெனி ஒழுங்கேற்பாட்டு உறுதியின் கீழ் பெற்றுள்ளார்.

(2) மூன்றாம் மற்றும் நான்காம் உட்பிரிவுகளுக்கமைய, கம்பெனி ஒழுங்கேற்பாட்டின் உறுதியொன்றானது-

(அ) பின்வருவனவற்றுக்கான முன்னுரிமையை விட வேறுவகையில் முந்துரிமை உரிமைக் கோரிக்கை யொன்று செய்யப்படுவதற்கு ஏற்பாடு செய்த லாகாது -

(i) முந்துரிமை உரிமைக் கோரிக்கைக்கு பின்னால் தரவரிசையில் உள்ள முந்து ரிமை உரிமைக் கோரிக்கைக்கு; அல்லது

(ii) முந்துரிமை உரிமைக் கோரிக்கை அல்லாத உரிமைக் கோரிக்கையொன்று;

(ஆ) மற்றொரு சமமாக தரப்படுத்தப்பட்ட கோரலின் தொகையை விட ஒரு கோரலின் தொகையின் முக்கியமாக சிறியதான சதவீதத்தின் திருப்தி யுற்று வழங்குதலாகாது; அல்லது

(இ) கம்பினியில் உள்ள பங்குகளை கையாளுதல்;, கம்பெனியில் உள்ள பங்குகளுக்கான இணைக் கின்ற உரிமையொன்றை வேறுபடுத்துதல் அல்லது கம்பெனியின் பங்குதாரர்களின் பொறுப் புகளை வேறுபடுத்துதல்; என்பவற்றுக்கான ஏதேனும் நியதியை கொண்டிருக்கலாகாது.

(3) ஓராம் உட்பிரிவு மற்றும் இரண்டாம் உட்பிரிவின் (அ) மற்றும் (ஆ) பந்திகள் பின்வருவனவற்றுக்கு ஏற்புடையதாதலாகாது –

(அ) இயைபான கடன்கொடுநர் சம்மதம் அளிக்கின்ற கம்பெனி ஒழுங்கேற்பாட்டின் உறுதியின் கீழான பரிகரிப்பிற்கு;

(ஆ) பாகம் (ஓ) கீழான இணக்கமொன்றுக்கான பிரேரணையொன்றுக்கு.

(4) இந்நோக்கத்திற்கான கூட்டப்பட்ட கூட்டமொன்றில் அங்கீகரிக்கப்பட்ட விசேட பங்குதாரர்கள் கொண்டுள்ள அல்லது கம்பெனியின் பங்குதாரர்களின் இயைபான உறுப்பினர் கொண்டிருந்ததான ஏதேனும் கைமாற்றம், வேறுபடுத்துகை அல்லது களப்பிற்கு (2) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தி ஏற்புடையதாதலாகாது.

(5) ஓராம் உட்பிரிவு மற்றும் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியிலுள்ள தேவைப்பாடுகளுடனான இணக்கமானது பின்வருவனவற்றின் அடிப்படையின் மீது மதிப்பீடு செய்யலாம்-

(அ) நியாயமான அனுமானம்; அத்துடன்

(ஆ) இயைபான தேதியன்றுள்ளவாறான உரிமைக் கோரிக்கைகளின் தீர்மானமொன்று

(6) (அ) ஓராம் உட்பிரிவின் நோக்கங்களிற்காக, கடன்கொடுநர் பெற்றிருக்கவேண்டியதான பரிகரிப்பானது நடத்துகையானது உறுதியின் பயனுறுதலுக்கு உடன் முன்னர் தொடங்கப்பட்ட கம்பெனியின் ஒழித்துக் கட்டளை கொண்டிருக்கின்றது; அத்துடன்

(ஆ) (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் நோக்கங்களிற்காக, உரிமைக்கோரிக்கைகள் சமமாக தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளவா

வேறுவகைகளில் கொண்டிருக்கக்கூடியதை விட தனிசு தொடர்பில் குறைந்தளவிலான முன்னுரிமை ஒன்றை ஏற்றுக் கொள்வதற்கு கடன்கொடுநர் உட்பட்டுள்ளார் என்பதன் கீழ் உடன்படிக்கையொன்றை கணக்கிலெடுத்தலை தீர்மானிப்பதில்

(7) கம்பெனி ஒழுங்கேற்பாட்டின்; உறுதியொன்று –

(அ) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கடன்கொடுநர்களிற்கு எதிராக நியாயமற்ற முறையில் பங்கப்படுத்தலாகாது அல்லது நியாயமற்ற முறையில் பாரபட்சப்படுத்தலாகாது; அத்துடன்

(ஆ) முழுமையாக கடன்கொடுநர்களின் அக்கறைகளுக்கு முரணாகவிருத்தலாகாது.

பிணைப்புறும் உறுதியின் நீட்டிப்பு

**224.** (1) கம்பெனி ஒழுங்கின் உறுதியானது கம்பெனி, கம்பெனியின் ஒவ்வொரு பங்குதாரர் மற்றும் பணிப்பாளர், உறுதி நிருவாகி மற்றும்; உறுதியினை அனுமதிக்கும் தனிசு கொடுத்தோர்களின் தீர்மானத்தின் மீது வாக்களிப்பதற்கு உரித்துடையவர்களான ஒவ்வொருவரையும் பிணிக்கிறது.

(2) இப்பிரிவானது இதுவரையில் பின்வருவோரை தவிர்ந்த வில்லங்கத்தை வில்லங்கமொன்றின் அளிப்பு பெறுநரை தடுத்தலாகாது -

(அ) உறுதியானது அளிப்பு வழங்குநர் வில்லங்கத்தை வலியுறுத்தமாட்டார் மற்றும் அளிப்பு பெறுநர் உறுதியை அங்கீகரித்து தீர்மானத்தின் சார்பில் வாக்களித்துள்ளார் என ஏற்பாடு செய்கின்றவரை; அல்லது

(ஆ) நான்காம் உட்பிரிவின் கீழ் வேறு வகையில் நீதிமன்றக் கட்டளைகள்.

(3) இப்பிரிவானது வாடகைக் கொள்வனவு உடன்படிக்கையின் கீழானவை உள்ளடங்கலாக, ஆதனத்தின் சொந்தக்காரர் அல்லது குத்தகைக்குவிடுபவரை ஆதனத்தினை உடைமைக்கு எடுப்பதில் அல்லது வேறுவகையில் அதனை மீட்பதிலிருந்து பின்வருமாறான அளவு தவிர தடுத்தலாகாது –

(அ) உறுதியானாது எவ்வாறிருப்பினும், விடயத்திற்கேற்ப, சொந்தக்காரர் அல்லது குத்தகைக்குவிடுபவர், ஆதனத்தினை உடைமைக்கு எடுப்பதில் அல்லது வேறுவகையில் அதனை அறவிடுவதில்; மற்றும் விடயத்திற்கேற்றவாறு, சொந்தக்காரர் அல்லது குத்தகைக்குவிடுபவர், உறுதியை அங்கீகரிக்கும் தீர்மானத்தின் சார்பாக வாக்களித்துள்ளமை; அல்லது

(ஆ) நான்காம் உட்பிரிவின்கீழ் நீதிமன்றம் வேறு வகையில் கட்டளையிட்டிருக்கின்றதான.

(4) ஐந்தாம் உட்பிரிவிற்கமைவாக, நிருவாகி அல்லது உறுதி நிருவாகியில், எவர் பதவி வகிக்கின்றாரோ அவரின் பதவியின் மீது நீதிமன்றம் நிலையான காலப்பகுதிக்கு அல்லது விதித்துரைக்கப்பட்ட நிகழ்வின் இடம் பெறுகை வரை கம்பெனியின் கம்பெனி ஒழுங்கேற்பாட்டு உறுதி யானது செய்யப்பட்ட நாளிலிருந்து மற்றும் நேரத்திலிருந்து கட்டளையில் குறித்துரைக்கப்படக்கூடியதான அத்தகைய நேரத்திற்கு கட்டளையிடலாம்-

(அ) வில்லங்கமொன்றின் உத்தரவாதம்; வில்லங்க மொன்றை வலியுறுத்தலாகாது; அத்துடன்

(ஆ) வாடகைக் கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் உள்ளடங்கலாக, ஆதனத்தின் சொந்தக்காரர் அல்லது குத்தகைக்குவிடுபவர், ஆதனத்தின் உடைமையை எடுத்தலாகாது அல்லது வேறு வகையில் அதனை மீட்டலாகாது.

(5) நீதிமன்றமானது (4) ஆம் உட்பிரிவின் கீழ் பின்வருமாறு அது திருப்தியுறுமிடத்து, கட்டளையொன்றை ஆக்கலாம் -

(அ) விண்ணப்பம் அளிக்கப்படின், உறுதியின் நோக் கங்களை முன்னெடுத்தலானது பொருள்ரீதியாக அல்லது எதிரிடையாக இருத்தலாகாது; அத்துடன்

(ஆ) வழக்கின் எல்லாச் சூழ்நிலைகளிலும், விண்ணப்பம் அனுமதிப்பதிலிருந்து விடயத்திற்கேற்ப, அளிப்ப வருக்கு சொந்தக்காரருக்கு அல்லது குத்தகை யாளருக்கு ஏற்படுத்தக்கூடிய பங்கத்தினை ஏற்படுத்துகின்றதான விண்ணப்பம் அனுமதிக்கப் படாதுவிடின், விடயத்திற்கேற்ப அளிப்பவர், சொந்தக்காரர் அல்லது குத்தகையாளர் தவிர்ந்த கம்பெனியில் அக்கறை கொண்டுள்ளோருக்கு பங்கத்தை ஏற்படுத்தாது.

(6) நான்காம் உட்பிரிவின்கீழான கட்டளையொன் றானது அவசியமாகக் கூடியதான அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கமைய ஆக்கப்படலாம்.

### *ஆ - உறுதி நிர்வாகி*

உறுதி நிருவாகி

**225.** (1) நிருவாகியானவர் உறுதி நிருவாகியெனும் அதே ஆளொருவராக இல்லாதவிடத்து -

(அ) நிருவாகியானவர் கம்பெனி ஒழுங்கேற்பாட்டின் உறுதியானது மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் உடனடியாக, உறுதிக்கமைய கம்பெனியின் அலுவல்கள், தொழில் மற்றும் ஆதனத்தின் கட்டுப் பாட்டிலுள்ள உறுதி நிருவாகியை இடுவதற்கு அவசியமான அனைத்தையும் செய்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) கம்பெனியின் அலுவல்கள், தொழில் மற்றும் ஆதனத்தின் கட்டுப்பாட்டினை எடுத்துக்கொண் டதன் பின்னர், செயல்முறைக்குகந்தவரை விரை வாக, உறுதி நிருவாகி பின்வருவன தொடர்பில் நிருவாகிக்கு வருமதியாகவுள்ள ஏதேனும் மீதியை பொறுப்பு விடுவித்தல் வேண்டும்-

(i) இச்சட்டத்தின் கீழ் நிருவாகியினால் முறை யாக உறப்பட்ட ஆகுசெலவு, விதிப்பன வுகள்; மற்றும்; ஊதியம்; அத்துடன்

(ii) பிரிவு 248 இன் (1) ஆம் உட்பிரிவின் (அ) மற்றும் (ஆ) என்னும் பந்திகளின் கீழ் நட்டோத்தரவதமான பொறுப்பு.

(2) நிருவாகி (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட மீதியை உள்ளடக்கும் எவையேனும் தொகைகள் தொடர்பில் கம்பெனி ஒழுங்கேற் பாட்டின் உறுதிக்கமைவாக கம்பெனியின் ஆதனத்தின் மீதான சோந்தையை கொண்டிருத்தல் வேண்டும்.

(3) பிரிவு 248 இன் (3) ஆம் உட்பிரிவின் கீழான சோந்தையொன்றுக்கு இணைக்கப்பட்ட முன்னுரித்தான வில்லங்கமொன்றின் மீது அதே முன்னுரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

யார் உறுதி நிருவாகியாக நியமிக்கப் பட்டு செயற்படக் கூடியவர்

**226.** (1) ஆளொருவர், பின்வருவோராக விருந்தா லொழிய கம்பெனியொன்றின் உறுதி நிருவாகியொருவராக நியமிக்கப்பட அல்லது செயற்படலாகாது-

(அ) நியமனத்திற்கு எழுத்தில் சம்மதமளித்தவரும் நியமன நேரத்தில் சம்மதத்தை மீளப்பெறாத வருமான ஆள் சம்மதமளித்திருந்தாலொழிய;

(ஆ) பதவி வகிப்பவரொருவராக நியமிக்கப்படுதலி லிருந்து அல்லது செயலாற்றுவதிலிருந்து ஒன்றில் கம்பெனிகள் சட்டத்தின் 213 ஆம் பிரிவு அல்லது கம்பெனிகள் சட்டத்தின் 214 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றினால் தடுக்கப்பட் டிராத ஆளொருவர்;

(இ) விதித்துரைக்கப்படக்கூடியவாறான வேறு அத்த கைய தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகு கின்ற ஆள்; அத்துடன்

(ஈ) ஆள் தொடர்பில்-

(i) (அ) என்னும் பந்தியில் குறித்துரைக்கப் பட்ட எழுத்திலான சம்மதம்;

(ii) முப்பதாம் பிரிவுடன் இணங்கியொழுகும் ஆளொருவரினால் கையொப்பமிடப்பட்ட வட்டி பற்றிய கூற்று;

(iii) விதித்துரைக்கப்படக்கூடியவாறாக அத்த கைய வேறு ஆவணங்கள்;

(iv) ஆரம்பகால கூட்டம், பெறுபேற்று கூட்டம், இணைந்த ஆரம்பகால மற்றும் பெறு பேற்று கூட்டம் வேறு ஏனைய தனிசு கொடுநர்கள் கூட்டத்தில் முன்வைக்கப் பட்டவை.

(2) முதலாம் உட்பிரிவின் (ஆ), (இ) மற்றும் (ஈ) என்னும் பந்திகளின் எவையேனும் தேவைப்பாடுகள் ஈடுசெய்யப்பட வில்லை என அறிந்து தவறொன்றைப் புரிகின்றார்.

**227.** (1) உறுதி நிருவாகியின் நியமனத்திற்காக இப்பாகம் ஏற்பாடு செய்கின்றவிடத்து ஆளொருவரின் சம்மதத்துடன் உறுதி நிருவாகியாக நியமிக்கப்பட்ட அல்லது செயலாற்றுகின்ற ஆளொருவர், ஏதேனும் சந்தர்ப்பத்தில், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஆட்கள் உறுதி நிருவாகிகளாக நியமிக்கப்படலாம்.

ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உறுதி நிருவாகிகளை நியமித்தல்

(2) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஆட்கள் உறுதி நிருவாகிகளாக நியமிக்கப்படுமிடத்து –

(அ) கம்பெனி ஒழுங்கி உறுதியினால் ஏற்பாடு செய்தாலொழிய, நிருவாகியொருவரின் செயற் பாடுகள் மற்றும் தத்துவங்கள் அவர்களில் யாரேனும் ஒருவரினால் அல்லது அவர்களில் யாரேனும் இருவர் அல்லது அதற்கு மேற்பட்ட வர்களினால் கூட்டாக செயற்படுத்தப்படலாம் அல்லது நிறைவேற்றப்படலாம்;

(ஆ) உறுதி நிருவாகிகளாக ஆட்களின் எந்தவொரு பொறுப்பும் கூட்டாகவும் பலவாகவும் காணப் படலாம்; அத்துடன்

(இ) உறுதி நிருவாகியொருவருக்கான இச்சட்டத்தின் குறிப்பீடானது காரணிகளின் தேவைப்பாட்டின் பிரகாரமான ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்ட தோவான நிருவாகிகளைக் குறிப்பீடுசெய்கின்றது.

**228.** (1) கம்பெனியின் உறுதி நிருவாகமானது (2) ஆம் உட்பிரிவின் கீழ் உறுதி நிருவாகியொருவர் நியமிக்கப்பட்ட நாளின் மற்றும் நியமிக்கப்பட்ட நேரத்திலிருந்து தொடங்கு கின்றது.

உறுதி நிருவாகம் ஆரம்பமாகும் போதும் உறுதி நிருவாகி நியமிக்கப் படும் போதும்

(2) உறுதி நிருவாகியின் நியமனமானது கம்பெனி ஒழுங்கேற்பாட்டின் உறுதியில் குறித்துரைக்கப்பட்டுள்ள-

(அ) 214 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழ் கடன்கொடுநர்களினால் அங்கீகரிக்கப்பட்டதாக; அல்லது

(ஆ) இருநூற்றி பதினாறாம் பிரிவின் (6) ஆம் உட்பிரிவின் கீழ்; ஆக்கப்பட்ட கட்டளையின் பயனைக்கொண்டு பிணிக்கப்பட்டதாக,

கம்பெனி ஒழுங்கேற்பாட்டு உறுதி ஆக்கப்பட்ட நாளின் மற்றும் நேரத்திலிருந்து பயனுறுதலைப் பெறுகின்றது.

உறுதி நிருவாகிகளை நியமிப்பதற் கான பிணைப் பொறுப்பு

**229.** கம்பெனி ஒழுங்கேற்பாட்டு உறுதியொன்று உறுதி நிருவாகியின் நியமனத்திற்கு பிணைப்பொறுப்பொன்றை வழங்குவதற்கு உறுதி நிருவாகியை தேவைப்படுத்தலாம்.

உறுதி நிருவாகியின் நியமனத்தை இல்லா தொழித்தல்

**230.** இருநூற்றி ஐம்பத்தாறாம் பிரிவிற்கு பங்கமின்றி, உறுதி நிருவாகியின் நியமனமானது நீதிமன்றத்தினால் உறுதி நிருவாகி அகற்றப்பட்டிருக்குமிடத்து தவிர, இல்லா தொழிக்கப்படலாகாது.

## இ - கம்பெனி ஒழுங்கேற்பாடுபற்றிய உறுதியின் செல்லுபடியாந்தன்மை, மாறுபாடுகள் மற்றும் முடிவுறுத்தல்கள்

உறுதியின் செல்லுபடி யாந்தன்மை யின் மீது நீதிமன்றம் ஆட்சிபுரிய லாம்

**231.** (1) இரண்டாம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆளின்; விண்ணப்பத்தின் மீது, நீதிமன்றமானது –

(அ) வலுவிலிருக்கும் கம்பெனி ஒழுங்கேற்பாட்டு உறுதியொன்றின் விடயத்தில், உறுதியானது வறிதானது என கட்டளையொன்றை ஆக்கலாம்; அல்லது

(ஆ) பிரேரிக்கப்பட்ட கம்பெனி ஒழுங்கேற்பாட்டு உறுதியொன்றின் விடயத்தில், குறித்த சில நிபந்தனைகளிற்கமைய, பிரேரிக்கப்பட்ட உறுதிக்கு பயன் கொடுப்பதற்கான அனுமதி வழங்கல் உள்ளிட்ட, அவசியமானதான அத்தகைய கட்டளையை ஆக்கலாம்.

2. நீதிமன்றம் -

(அ) உறுதியின் விடயத்தில் -

(i) கம்பெனி ஒழுங்குகேற்பாட்டு உறுதியின் அங்கீகாரத்தினைப்; பெறுவதில் பொருள் சார் ரீதியிலான ஒழுங்கீனம் காணப்படு கின்றது என;

(ii) உறுதியானது 223 ஆம் பிரிவின் தேவைப் பாடுகளுடன் இணங்கியொழுகவில்லை;

(iii) உறுதியில் அதனால் பிணிக்கப்பட்ட ஆளின் பொருள்சார் ரீதியிலான முரண் காணப்படு கின்றது; அல்லது

(iv) கூட்டத்துக்கிணங்க உறுதியானது வெளிப் படுத்தப்பட்டுள்ளது; அல்லது

(ஆ) பிரேரிக்கப்பட்ட உறுதியின் விடயத்தில், அது பயனுற எடுக்கப்பட்டால், 223 ஆம் பிரிவின் கீழான தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகாது-

எனத் திருப்பதியுறுமிடத்து, கட்டளைகளை ஆக்கலாம்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் பின்வரும் ஆட்களில் எவரும் நீதிமன்றத்துக்கு விண்ணப்பத்தினை செய்யலாம்

(அ) நிருவாகி;

(ஆ) உறுதி நிருவாகி அல்லது உறுதி நிருவாகியாக நியமிக்கப்படவுள்ள ஆள்;

(இ) கடன்கொடுநர்;

(ஈ) கம்பெனியில் அக்கறையுள்ள வேறு எவரேனும் ஆள்; அல்லது

(உ) அதிகாரசபை

(4) ஓராம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழான விண்ணப்பமொன்றானது விதித்துரைக்கப்படக்கூடியவாறான முறையில் அத்தகைய காலப்பகுதியினுள் செய்யப்படுதல் வேண்டும்.

(5) கம்பெனி ஒழுங்கேற்பாட்டு உறுதியொன்று வறிதானது என (1) ஆம் (அ) என்னும் பந்தியின் கீழ் கட்டளையொன்றை ஆக்குவதில், நீதிமன்றமானது அவ்வெளிப்படுத்துகையின் விளைவுகளை அக்கட்டளையில் குறித்துரைத்தல் வேண்டும்.

## அத்தியாயம் 7

### நிருவாகியின் தத்துவங்கள்

நிருவாகியின் தத்துவங்கள்

**232.** (1) நிருவாகியொருவர் கம்பெனியின் அலுவல்களை, தொழிலை அத்துடன் ஆதனத்தை நிருவாகம் செய்வதற்கு அவசிமாகக்கூடியவாறு அல்லது விரும்பத் தக்கவாறு அத்தகைய அனைத்து விடயங்களையும் செய்யலாம்.

(2) நிருவாகியொருவர் ஏழாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தத்துவங்களை கொண்டிருத்தலும் பிரயோகித்தலும் வேண்டும்.

(3) தத்துவம் அல்லது பணியின் புரிகையில் அல்லது பிரயோகத்தில் நிருவாகி கம்பெனியின் முகவராதல் வேண்டுமென்பதுடன,; நிருவாகியுடன் நல்லெண்ணத்துடனும் பணப் பெறுமதிக்காவும் தொடர்புகொள்ளும் ஆளளொருவர், நிருவாகியின் தத்துவங்களுக்குள் செயலாற்றுகின்றாரா என்பதனை விசாரணை செய்வதற்கு தேவைப்படுத்த படுதலாகாது.

கூட்டிணைப்பிற்காக நிருவாகியின் கோரிக்கை

**233.** (1) நிருவாகி எழுத்துமூல அறிவிப்பின் மூலம் -

(அ) 438 ஆம் பிரிவிற்கமைவாக, கம்பெனியின் பணிப்பாளர் அல்லது பங்குதாரரொருவரை அல்லது வேறு எவரேனும் ஆளை அவ்வாளின் உடமையில் அல்லது கட்டுக்காப்பில் அல்லது ஆளொருவரின் கட்டுபாட்டின் கீழுள்ள இருந்த

நிருவாகத்துடன் தொடர்புடையதாக நிருவாகி தீர்மானிக்கக்கூடியதான அத்தகைய கம்பெனியின் புத்தகங்கள், பதிவேடுகள் அல்லது ஆவணங்களை நிருவாகிக்கு ஒப்படைப்பதற்கு கோரலாம்; அத்துடன்

(ஆ) இரண்டாம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட விடயங்களை நியாமான அளவுவரைவிருப்பின் மற்றும் அளவுவரைக்கும் புரிவதற்கு பின்வருவோரைக் கோரலாம் -

(i) கம்பெனியின் உருவாக்கம், ஊக்கப்படுத்தல் அல்லது முகாமைத்துவத்தில் பங்குபெற்றிருக்கும் ஆளொருவர்;

(ii) கம்பெனியின் கடந்தகால அல்லது நிகழ்கால பங்குதாரரொருவர்;

(iii) கம்பெனியின் கடந்தகால அல்லது நிகழ்கால பணிப்பாளர் அல்லது வேறு அலுவலர்;

(iv) கம்பெனியின் கடந்தகால அல்லது நிகழ்கால ஆதன பெறுநர் அல்லது கம்பெனியின் ஆதனம் தொடர்பிலான நியமத்தர்;

(v) கம்பெனியின் ஊழியரொருவராக இருந்த அல்லது இருக்கின்ற ஆளொருவர்;

(vi) கம்பெனியின் சட்ட மதியுரைத்தல் சிறப்புரிமை அல்லது வழக்கிடல் சிறப்புரிமை என்பவற்றுக்கமைவாக, கம்பெனியின் சட்டத் தரணியாக செயலாற்றுகின்ற அல்லது எந்நேரத்திலும் செயலாற்றியிருந்த ஆளொருவர்;

(vii) கம்பெனியின் கணக்காளர் அல்லது கணக்காய்வாளரொருவர்; அல்லது

(viii) கம்பெனியின் அலுவல்கள் பற்றிய அறிவைக்கொண்டுள்ள வேறு ஆள்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்படும் ஆள் ஒவ்வொருவரும் பின்வருவனவற்றுக்கு தேவைப்படுத்தப் படல் வேண்டும் –

(அ) நிருவாகி கோரக்கூடியதான அத்தகைய நேரத்தில் மற்றும் அத்தகைய இடத்தில் நிருவாகியை சந்தித்தல்;

(ஆ) நிருவாகி கோரக்கூடியதான கம்பெனியின் அலுவல்கள், தொழில், ஆதனம் அல்லது நிதிசார் சூழ்நிலைகள் பற்றிய அத்தகைய தகவல்களை நிருவாகிக்கு வழங்குதல்;

(இ) கம்பெனியின் அலுவல்கள், தொழில், ஆதனம் அல்லது நிதிசார் சூழ்நிலைகள் என்பவற்றுடன் தொடர்புடைய ஏதேனும் விடயத்தில், விதித் துரைக்கப்படக்கூடியதான அத்தகைய சான்று ரீதியான மற்றும் ஏனைய நடவடிக்கைமுறை நிருவாகியின் சத்தியப்பிரமாணத்தின் மீது பரிசோதிக்கப்படுவதற்கு; அத்துடன்

(ஈ) ஆளின் சிறந்த இயலுமையில் நிருவாகத்தில் நிருவாகிக்கு உதவுதல்.

(3) நிருவாகி ((1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் கீழ் செய்யப்படும் கோரிக்கையுடன் இணங்கி யொழுகுகின்றதில் உறப்பட்ட நியாயமான பயண மற்றும் ஏனைய செலவினங்களை கம்பெனியின் ஊழியராகவிருக் கின்ற, (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆளுக்கு செலுத்துதல் வேண்டும்.

(4) (தொழில்சார்; நடத்தை தொடர்பில் நியாயாதிக் கத்தைக் கொண்டுள்ள ஏதேனும் உயர்தொழில்சார் குழு அல்லது அதிகாரசபையினாலான ஒழுக்காற்று நடவடிக்கை முறையொன்று உள்ளடங்கலாக) துடர்ச்சி, குற்றவழக்கு அல்லது வேறு ஏதேனும் சட்ட அல்லது ஏனைய வழக்கு நடவடிக்கையெதுவும் இப்பிரிவின் கீழான நல்லெண்ணத் திலான வெளிப்படுத்துகை தொடர்பில் எவரேனும் ஆளுக்கு எதிராக இடப்படுதல் ஆகாது.

(5) நிருவாகியின் விண்ணப்பத்தின் மீது, நீதிமன்ற மானது பின்வருவனவற்றுக்கு இப்பிரிவின்கீழ் செய்யப்பட்ட கோரிக்கையொன்றுடன் இணங்கியொழுகுவதற்குத் தவறு கின்ற ஆளொருவருக்கு கட்டளையிடலாம் -

(அ) கோரிக்கையுடன் இணங்கியொழுகுதல்; அல்லது

(ஆ) நீதிமன்றமானது, விடயத்திற்கேற்ப, அத்தகைய இணங்கியொழுகுதல் அல்லது பரிசோதனை என்பன பின்வருவனவற்றுக்காக இருக்கப்பட லாம் என திருப்தியுறுகின்றவிடத்து, விதித்துரைக் கப்படக்கூடியவாறான அத்தகைய சாட்சி ரீதியான மற்றும் ஏனைய நடவடிக்கைமுறை விதிகளின் கீழ் நீதிமன்றத்தின் முன்தோன்றி சத்தியத்தின்மீது விசாரிக்கப்படுதல்,

(i) 178 ஆம் பிரிவின் (ஈ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட குறிக்கோளின் மேலதிக எய்துகைக்கு அத்தியாவசியமானது; அத்துடன்

(ii) ஆளுக்கு நியாயமற்ற அடக்குமுறையாக காணப்படமாட்டாது.

பெறுநராண்மை அல்லது நியமத்தரின் நியமனம் முடிவடைதல் பற்றி நிருவாகியின் அறிவித்தல்

**234.** (1) நிருவாகியொருவர் பெறுநருக்கு விதித்துரைக்கப் படக் கூடியவாறான அத்தகைய படிவத்தில், முடிவில் எழுத்து மூலமான அறிவிப்பை வழங்குவதனால், பெறுநராண்மை அல்லது நியமித்தரொருவரின் நியமனத்தை கோரலாம்.

(2) பெறுநராண்மை அல்லது நியமித்தரின் நியமன மொன்று, விடயத்திற்கமைவாக, (1) ஆம் உட்பிரிவின்கீழ் அறிவிப்பொன்றை வழங்கியதன் பின்னரான அடுத்த வேலைநாளின் முடிவுடன் நிறைவடையலாம்.

(3) செயல்முறைக்குகந்தவாறு விரைவாக (1) ஆம் உட்பிரிவின்கீழ் அறிவிப்பை பெற்றதன்பின்னரும் மற்றும் பெறுநராண்மை அல்லது நியமித்தரின் நியமனத்தின் முடிவினால் ஏதேனும் நிகழ்வில், ஏற்படும் பெறுநர் அல்லது நியமித்தர். சந்தர்ப்பத்துக்கேற்றவாறு பெறுநராண்மையின்

அல்லது நியமித்தர் எது தொடர்பில் நியமிக்கப்பட்டாரோ அது தொடர்பிலான ஆதனத்தின் கையாளுதலை இல்லா தொழித்தல் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின் கீழ் பெறுநர் அறிவித்தலைப் பெற்றதன்பின்னர்-

(அ) பெறுநரானவர் 148(2) ஆம் பிரிவின்கீழ் ஏதேனும் மேலதிக நடவடிக்கைகளை தேவைப்படுத்தப்பட மாட்டார்;

(ஆ) சந்தர்ப்பத்துக்கேற்ப பிரிவு 385(4)(ஆ) அல்லது 386(4)(ஆ) எனினும் அதன்கீழ் ஏற்கனவே செய்யப்பட்ட எவையெனும் வழங்கல்கள் அவ் ஏதுகளின் மீது வழங்கப்படுதலானாது;

(இ) நான்காம் அட்டவணையின் நோக்கங்களுக்காக, இச்சட்டத்தின்கீழ் எடுப்பதற்கு பெறுநரினால் உறப்பட்ட ஆகுசெலவுகள், விதிப்பனவுகள் மற்றும் செலவுகள் மற்றும் பெறுநரின் ஊதியம் மற்றும் 395 ஆம் பிரிவின் கீழான பெறுநரின் நட்டோத்தரவாதம் என்பன நிருவாகத்தின் செயலொன்றாக பரிகரிக்கப்படுதல் வேண்டும்.

நிருவாகியினால் பங்குகள் மீதான அழைப்பு

**235.** நிருவாகியொருவர், கம்பெனி நிருவாகமொன்று இல்லாதிருப்பவர், அழைக்கப்படாத மூலதனம் மற்றும் ஏனைய பொறுப்புக்கள் மற்றும் வட்டியை விதிப்பதற்கு அழைப்புக்களின் கொடுப்பனவுகளின் மீதும் கோரவும் உதவிதொகைவழங்குநர்களுக்கு அழைப்புவிடுப்பதற்கு பணிப் பாளர்கள் கொண்டிருந்ததிருந்ததைப்போன்ற, அதே தத்துவங் களாக கொண்டுள்ளனர்.

நிருவாகியினால் ஆவணங் களின் நிறைவேற் றம்

**236.** (1) நிருவாகியொருவர்; நிருவாகியின் தத்துவங் களை பிரயோகிகப்பதற்கு அவசியமான அல்லது இடை நேர்விளைவான எல்லா ஆவணங்களையும் கம்பெனியின் பெயராலும் அதன்சார்பிலும் நிறைவேற்றலாம்.

(2) கம்பெனியின் சார்பாக நிருவாகியொருவரினால் கையொப்பமிடப்பட்ட ஆவணமொன்றானது கம்பெனிகள் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் நோக்கங்களுக்காக கம்பெனி யின் சார்பில் முறையாக ஈடுபட்டுள்ளதாக கருதப்படுதல் வேண்டும்.

(3) வேறு ஏதேனும் சட்டம் அல்லது கம்பெனியின் அமைப்பாக்கவிதிகளுக்கு ஏதேனும் முரணாக எவ்வாறிருப் பினும், நிருவாகியொருவர் ஆவணங்களில் கம்பெனியின் பொது முத்திரையை இணைத்தும் பொது முத்திரையை இணைத்ததனை உறுதிப்படுத்தியும் கம்பெனியின் பெயரி லும் சார்பிலுமாக ஆவணங்களை நிறைவேற்றலாம்.

(4) மூன்றாம் உட்பிரிவில் விபரிக்கப்பட்ட முறையில் நிறைவேற்றப்பட்ட ஆவணமொன்று 19 ஆம் பிரிவின் நோக்கங்களுக்காக கம்பெனியினால் முறையாக செய்து கொள்ளப்பட்டதாக கருதப்படுதல் வேண்டும்.

**237.** (1) நிருவாகியொருவர் ஆதனம் அவ்வில்லங்கத்துக் கமைந்ததாக விராதுவிடின், பின்வருவனவற்றுக்கமைய கம்பெனியின் ஏதேனும் ஆதனம் தொடர்பில் நிருவாகியின் தத்துவங்களை கையுதிர்க்கலாம் அல்லது வேறுவகையில் பிரயோகிக்கலாம்-

வில்லங்க மொன்றுக் கமைந்த ஆதனத்தை கையாள்வ தற்கான நிருவாகியின் தத்துவம்

(அ) மிதக்கும் தாக்கீடு; அல்லது

(ஆ) கம்பெனிகள் சட்டத்தின் 431 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் மிதக்கும் தாக்கீடொன்றுக்கு பின்னால் தரவரிசைப்படுத்தப்பட்டுள்ள நிரந்தர பிணைப்பொறுப்பு.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆதனமொன்று கையுதிர்க் கப்படுமிடத்து, வில்லங்கத்துக்கமைய, ஆதனம் தொடர்பில் கொடைவழங்குநராக பணிப்பாளர்களாக கையுதிர்க்கப்பட்ட ஆதனத்தினை நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமல் பிரதிநிதித்துவப்படுத்தும் கம்பெனியின் ஏதேனும் ஆதனம் தொடர்பில் அதே முன்னுரிமையை வில்லங்கத்தின் கொடைவழங்குநர் கொண்டிருக்கின்றார்.

(3) நிருவாகியானவர் பின்வரும் ஏனைய ஆதனத்துடன் அல்லது ஆதனங்களின்றி கையுதிர்த்தலை அனுமதிக்கின்ற கட்டளையொன்றிற்காக நீதிமன்றிற்கு விண்ணப்பிக்கலாம்-

(அ) ஓராம் உட்பிரிவு ஏற்புடையதாகாத வில்லங்கத்துக்கமைந்த கம்பெனியின் ஏதேனும் ஆதனம்; அல்லது

(ஆ) வாடகைக் கொள்வனவு உடன்படிக்கையின்கீழ் கம்பெனியின் உடைமையிலுள்ள எவையேனும் பண்டங்கள்.

(4) மூன்றாம் உட்பிரிவின்கீழான விண்ணப்பமொன்றின், மேல் நீதிமன்றமானது, விடயத்துக்கேற்ப, நிருவாகிக்கு, கட்டளைமூலம் பின்வருவனவற்றுக்கு அதிகாரமளிக்கலாம்-

(அ) ஆதனம் வில்லங்கத்துக்கமைந்ததாகவிராதுவிடின், ஆதனத்தை கையுதிர்த்தல்;

(ஆ) வாடகைக்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் சொந்தக்காரர் அல்லது குத்தகை கொடுநரின் எல்லா உரிமைகளும் கம்பெனியில் உரித்தாக்கப் பட்டிருக்கும் பண்டங்களின் கையுதிர்ப்பு;

(இ) நீதிமன்றமானது –

(i) கையுதிர்த்தலானது 178 ஆம் பிரிவின் (ஈ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட குறிக்கோளின் எய்துகையை முன்னெடுப்பதற்கான சாத்தியத்தன்மையை கையுதிர்த்தல்; அத்துடன்

(ii) விடயத்தின் எல்லா சூழ்நிலைகளிலுமாக, விண்ணப்பம் அனுமதிக்கப்படாவிடின், விண்ணப்பத்திற்கு அனுமதிப்பதிலிருந்து, விடயத்திற்கேற்றவாறு, அது கொடைபெறுநர் அல்லது சொந்தக்காரருக்கு ஏற்படுத்தும் பங்கத்தினை தணிக்கின்றதான விலங்கத்தின் கொடைபெறுநர்; அல்லது வாடகை கொள்வனவு உடன்படிக்கையின் கீழான சொந்தக்காரர் அல்லது குத்தகைக்கு வழங்குநரை காட்டிலும், கம்பெனியில் அக்கறை கொண்டவர்களுக்கே அதிக பங்கத்தினை ஏற்படுத்தும் என கட்டளையை ஆக்கலாம்,

(5) எட்டாம் பிரிவுக்குப் பங்கமின்றி, பின்வருவன தொடர்பில்

(4) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளையொன்றின் நிபந்தனையாக அது இருத்தல் வேண்டும்.

(அ) கையுதிர்ப்பதன் நிகர வரும்படிகள்; அத்துடன்

(ஆ) நிருவாகத்திலுள்ள ஆதனத்தின் அல்லது பண்டங்களின் விற்பனை நியாயமானதாகவிருக்கக்கூடிய தேறிப்பெறுவதற்கு தேறிய வரும்படிகளாக நீதிமன்றத்தினால் தீர்மானிக்ககூடியதான அத்தகைய தொகையை விட குறைவானகாக இருக்குமிடத்து, அத்தகைய பணம் குறைப்பாட்டிலான பண்டமொன்றை ஆக்குவதற்கு தேவைப்படுத்தப் படலாம்,

(6) ஐந்தாம் உட்பிரிவின்கீழ் விதிக்கப்பட்ட நிபந்தனையொன்றானது, இரண்டோ அல்லது அதற்கு மேற்பட்ட வில்லங்கங்களுக்கமைவாக ஆதனத்தின் கையுதிர்த்தல் தொடர்பில், நிபந்தனையயானது கொடை பெறுநர்களின் முறையேயான முன்னுரிமைகளைப் பேணிக்காத்தல் வேண்டும்.

(7) நான்காம் உட்பிரிவின்கீழ் கட்டளையொன்றை ஆக்குவதில், நீதிமன்றமானது, அவசியமாககூடியவாறான-

(அ) ஏதேனும் நியதி அல்லது நிபந்தனையை விதிக்கலாம்; அத்துடன்

(ஆ) வேறு ஏதேனும் துணைநிலைக் கட்டளையை ஆக்கலாம்.

(8) நான்காம்; உட்பிரிவின்கீழ் ஆக்கபட்ட ஒவ்வொரு கட்டளையின் பிரதியொன்று, கட்டளை ஆக்கப்பட்டதன் பின்னர் ஐந்து வேலைநாட்களினுள் நீதிமன்றத்தினால் பதிவாளருக்கும் அதிகாரசபைக்கும் அனுப்பப்படுதல் வேண்டும்.

## அத்தியாயம் 8

### நிருவாகியினதும் உறுதி நிருவாகியினதும் கடமைகள்

### *அ - புலனாய்விற்கான கடமைகள்*

கம்பெனியின் அலுவல்களை புலனாய்வு செய்வதற் கான நிருவாகியின் கடமை

**238.** (1) ஒரு கம்பெனியின் நிருவாகம் தொடங்கப் பட்டதன்; பின்னர் செயல்முறைக்குகந்தவாறு விரைவாக, நிருவாகியானவர் -

(அ) கம்பெனியின் அலுவல்களைப் புலானய்வு செய்தல் வேண்டும்

(ஆ) கம்பெனியானது வறிதாகக்கூடிய கொடுக்கல் வாங்கல்களில் அல்லது குறைமதிப்பிலான கொடுக்கல்வாங்கல்களுக்கு திறத்தவராக காணப் படுகின்றதா என்பதனை கருத்திற்கொண்டு, அது கடன்கொடுநரின் அக்கறைகளில் காணப்படு கின்றதா அல்லது இல்லையா என சாத்தியமான வறிதாகக்கூடிய கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் குறைமதிப்பிற்குள்ளான கொடுக்கல்வாங்கல்கள் என்பன தொடர்பில் பின்வருமாறு கவனத் துட்கொள்ளுதல் வேண்டும்-

(i) அது தொடர்பான புலானய்வுகளை நிறைவேற்றுதல்; அத்துடன்

(ii) நானூற்றிப் பதினைந்தாம் பிரிவின்கீழ் நீதிமன்றத்துக்கு விண்ணப்பிக்கவும் 129 ஆம் பிரிவின்கீழ் அறவீட்டினை நாடுதல்.

(இ) அது கடன்கொடுநர்களின் அக்கறைகளில் பின்வருமாறு உள்ளனவா எனும் அபிப்பிராயம் ஒன்றை உருவாக்குதல் -

(i) கம்பெனியானது ஒழுங்கேற்பாட்டு உறு தியை ஆக்க வேண்டுமா;

(ii) ஒழிப்போன் நியமிக்கப்பட வேண்டுமா;

(iii) வேறுவகையில் நிருவாகம் முடிவுறலாமா.

### *ஆ - அறிக்கையிடுவதற்கான கடமைகள்*

பிறழ்வழிப் பிழை பற்றி அறிக்கையிடுவதற்கான நிருவாகியின் கடமை

**239.** (1) ஈடுபட்டுள்ள திறத்தவரொருவர் கம்பெனியின் பணம் அல்லது ஏனைய ஆதனத்துக்கு தவறாக விண்ணப் பித்தோ அல்லது தக்கவைத்தோ அல்லது பொறுப்புக்கூற வேண்டியவராகவோ உள்ளார் அல்லது கணக்குகூற வேண்டியவராக உள்ளார் என நம்புமிடத்து அல்லது நம்புவதற்கான நியாயமான ஏதுக்கள் உள்ளவிடத்து, அல்லது கம்பெனி தொடர்பில் அசட்டையீனம், தவணை தவறுகை, அல்லது கடமை அல்லது நம்பிக்கை மீறுகை என்பவற்றுக்கு குற்றவாளியாகக் காணப்படின் நிருவாகி செயல்முறைக் குகந்தளவு விரைவாக பதிவாளருக்கும் அதிகாரசபைக்கும் விடயத்தை அறிக்கையிடுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் அறிக்கையொன்றை நிருவாகி ஆக்குகின்றவிடத்திலான சந்தர்ப்பத்தில், நிருவாகி பின்வருமாறு: -

(அ) தகவல்கள் வழங்குகை;

(ஆ) ஆவணங்களின் அணுக்கம்; அத்துடன்

(இ) ஆவணங்களை சோதனையிடுதல் மற்றும் பிரதி யெடுப்பதற்குமான வசதிகள்,

எனும் வழிகளின் மூலம், விடயத்திற்கேற்ப, பதிவாளர் அல்லது அதிகாரி நியாயமானளவில் கோரக்கூடியதான அத்தகைய உதவியை பதிவாளர் மற்றும் அதிகாரசபைக்கு வழங்குதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவு அல்லது (2) ஆம் உட்பிரிவுடன் இணங்கியொழுகுவதற்கு தவறுகின்ற நிருவாகியொருவர் தவறொன்றைப் புரிகின்றார்.

புரியப்பட்ட தவறினை அறிக்கையிடுவதற்கான நிருவாகியின் கடமை

**240.** (1) நிருவாகியொருவர், கம்பெனி அல்லது எவரேனும் ஈடுபட்டுள்ள திறத்தவர் -

(அ) இச்சட்டத்தின்கீழ்;

(ஆ) கம்பெனிகள் சட்டத்தின்கீழ்; அல்லது

(இ) 2021 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலங்கை பிணைப்பொறுப்புக்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின்கீழ்,

தவறொன்றைப் புரிந்துள்ளார் என நம்புமிடத்து, அல்லது நம்புவதற்கு நியாயமான ஏதுக்களைக் கொண்டுள்ளவிடத்து, நிருவாகி செயல்முறைக்குகந்த வரைவானளவு வரையில் அவ்விடயத்தை அதிகாரசபைக்கு அறிக்கையிடுதல் வேண்டும்.

(2) பதிவாளர் மற்றும் அதிகாரசபை (1) ஆம் உட்பிரிவின்கீழ் அறிக்கையிடப்பட்ட விடயத்தை தோதான சட்ட வலுவுறுத்தல் அதிகாரசபைக்கு குறிப்பீடுசெய்தல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் சட்ட வலுவுறுத்துகை அதிகாரசபைக்கு அறிக்கையிடப்பட்டிருக்கின்றதான நிருவாகி (1) ஆம் உட்பிரிவின்கீழான விடயமொன்றின் மீது அறிக்கையினை செய்கின்றவிடத்தான சந்தர்ப்பத்தில், நிருவாகி-

(அ) தகவல் வழங்குகை;

(ஆ) ஆவணங்களிற்கான அணுக்கம்; அத்துடன்

(இ) ஆவணங்களை சோதிப்பதற்கும் பிரதியெடுப்பதற்குமான வசதிகள்,

எனும் வழிகளின் மூலம் அதிகாரசபை தேவைப்படுத்தக் கூடியதான அத்தகைய உதவிகளை அதிகாரசபைக்கு வழங்குதல் வேண்டும்.

(4) இப்பிரிவிலுள்ள எதுவும் -

(அ) (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்படும் வகையொன்றான ஏதேனும் தவறானது புரியப்பட்டுள்ள அல்லது புரியப்படவில்லையா எனும் புலனாய்வுக்கு நிருவாகியின்மீது ஏதேனும் கடமையொன்றை விதித்தலாகாது; அல்லது

(ஆ) ஏதேனும் வேறு சட்டவாக்கங்களின்கீழ் நிருவாகியின் மீது விதிக்கப்பட்ட ஏதேனும் கடமையை பாதித்தலோ அல்லது மட்டுப்படுத்தலோ ஆகாது.

(5) ஓராம் உட்பிரிவு அல்லது (3) ஆம் உட்பிரிவுக்கு இணங்கியொழுகுவதற்கு தவறும் நிருவாகியொருவர் தவறொன்றைப் புரிகின்றார்.

கணக்குகளை தயாரிப்பதற்கான நிருவாகியின் கடமை

**241.** (1) நிருவாகம் முடிவுறுகையில் நிருவாகியொருவராக வுள்ளவரான நிருவாகி அல்லது ஆளொருவர் விடயத்துக்கேற்ப, பின்வரும் காலப்பகுதி ஒவ்வொன்றுக்குமான கணக்கொண்றினைத் தயாரித்தல் வேண்டும்-

(அ) நிருவாகியின் நியமனத்தின் பின்னர் உடனடியாக நிருவாகி தீர்மானிக்கக்கூடியதான ஆறு மாத காலப்பகுதி அல்லது அதற்குக் குறைவான காலப் பகுதிக்கு;

(ஆ) நிருவாகி பதவி வகிக்கும் காலப்பகுதியின் போதான அடுத்துறும் ஒவ்வொரு ஆறு மாதங் களுக்கும்; அத்துடன்

(இ) ஊராம் உட்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) உன்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட விடயத்தின் இறுதிக் காலப்பகுதிக்கும் நிருவாகி பதவியை வறிதாக்குகின்ற நாளுக்கும் இடையிலான காலப்பகுதி.

(2) உட்பிரிவு (1) இல் குறிப்பீடு செய்யப்பட்ட பிரச்சினைக்குரிய காலப்பகுதி முடிவடைந்த பின்னரான இருபது வேலை நாட்களுக்குள், அவ்வாள்-

(அ) உட்பிரிவு (1) இல் குறிப்பீசெய்யப்பட்ட கணக்கினை விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் ஒருவரையொருவர் அறிந்து கொண்டுள்ள கடன்கொடுநர் மற்றும் பங்குதாரர் என்போருக்கு அனுப்புதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) கணக்கின் பிரதி ஒன்றை பதிவாளருக்கும் அதிகார சபைக்கும் அனுப்புதல் வேண்டும்.

(3) உட்பிரிவு (1) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட கணக்கானது விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலிருத்தல் வேண்டுமென்பதுடன்:-

(அ) ஒவ்வொரு காலப்பகுதிக்கும் நிருவாகியினுடைய பற்றுச்சீட்டுக்களையும் கொடுப்பனவுகளையும் காட்டுதல் வேண்டும்;

(ஆ) நிருவாகி நியமிக்கப்பட்ட நாளிலிருந்து முதலாவது காலப்பகுதி தவிர்ந்த ஒவ்வொரு காலப்பகுதிக்குமான நிருவாகியினது பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் என்பவற்றின் அதிகரிப்பானது காட்டுதல் வேண்டும்; அத்துடன்

(இ) ஓராம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின் குறிப்பீடுசெய்யப்பட்ட கணக்கின் விடயத்தில் தவிர, 30 ஆம் பிரிவுடன் இணங்கியொழுகுகின்றவரான நிருவாகியொருவரினால் கையொப்பமிடப்பட்ட இற்றைப்படுத்தப்பட்ட வட்டி பற்றிய கூற்று ஒன்று உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவிற்கு இணங்கியொழுகத் தவறுகின்ற ஒவ்வொரு ஆளும் தவறொன்றைப் புரிந்தவராகின்றார்.

(5) இப்பிரிவானது, விதித்துரைக்கப்படின், அவசியமான திரிபுபடுத்தல்களுடன் உறுதி நிருவாகிகளுக்கு ஏற்புடையதாதல் வேண்டும்.

இறுதி அறிக்கையை அனுப்புவதற்கான நிருவாகியின் கடமை

**242.** (1) இப்பிரிவானது நிருவாகம் முடிவடைகின்றபோது நிருவாகியாகவிருந்த ஆளுளொருவருக்கு ஏற்புடையதாகின்றது.

(2) நிருவாகம் தொடர்பில் ஏனைய ஆளின் எல்லாக்; கடமைகளையும் நிறைவேற்றிய பின்னர், செயன்முறைக்குகந்தளவு விரைவாக மற்றும் நிருவாகம் முடிவடைந்த பின்னரான இருபது வேலை நாட்களுக்குள்ளான ஏதேனும் பட்சத்தில், அவ்வாள் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில், விதித்துரைக்கப்படக்கூடியவாறான

தகவல்கள் அடங்கிய இறுதி அறிக்கையை பதிவாளர் மற்றும் அதிகாரசபைக்கு அனுப்புதல் வேண்டும்.

(3) இப்பிரிவுடன் இணங்கியொழுகத் தவறுகின்ற ஒவ்வொரு ஆளும் தவறொன்றைப் புரிந்தவராதல் வேண்டும்.

இறுதி அறிக்கையை அனுப்புவதற்கான உறுதி நிருவாகியின் கடமை

**243.** (1) இப்பிரிவானது உறுதி நிருவாகம் முடிவடைகையில், உறுதி நிருவாகியாகவிருந்த ஆளுக்கு ஏற்புடையதாகும்.

(2) உறுதி நிருவாகம் தொடர்பில் ஆளினுடைய ஏனைய எல்லாக் கடமைகளையும் நிறைவேற்றிய பின்னர், செயல்முறைக்குகந்த விரைவானளவு மற்றும் உறுதி நிருவாகம் முடிவடைந்த பின்னரான இருபது வேலை நாட்களுக்குள்ளான ஏதேனும் நிகழ்வில், அவ்வாள் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில், அத்தகைய தகவல்கள் அடங்கிய இறுதி அறிக்கையை பதிவாளர் மற்றும் அதிகாரசபைக்கு அனுப்புதல் வேண்டும்.

(3) இப்பிரிவுடன் இணங்கியொழுகத் தவறுகின்ற ஒவ்வொரு ஆளும் தவறொன்றைப் புரிந்தவராதல் வேண்டும்.

## *இ - நானாவித கடமைகள்*

பணத்துடன் தொடர்புடைய நிருவாகியின் கடமை

**244.** (1) இரண்டாம் மற்றும் (3) ஆம் உட்பிரிவுகளுக்கமையவும், நீதிமன்றம் ஆக்கக்கூடிய ஏதேனும் கட்டளைக்கு அமையவும், நிருவாகியொருவர் நிருவாகியினால் பெறப்பட்ட அனைத்து பணங்களையும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வங்கிகளில் அந்நோக்கத்துக்காக தாபிக்கப்பட்ட கணக்கு அல்லது கணக்குகளிற்கு நிருவாகியினால் பெறப்பட்ட எல்லாப் பணங்களையும் உடனடியாகச் செலுத்துதல் வேண்டும்.

(2) நிருவாகியொருவர் தமது தனிப்பட்ட வங்கிக் கணக்கிற்குப் பெறப்பட்ட ஏதேனும் பணத்தினை செலுத்துதலாகாது.

(3) நிருவாகியொருவர்; நிருவாகத்தின் நிதிசார் உற்பத்திப் பொருட்களின் போதும் ஏதேனுமிருப்பின் அத்தகைய அளவு வரைக்கும் மற்றும் விதித்துரைக்கப்படக்கூடிய

வாறான அத்தகைய நியதிகள்; மற்றும் நிபந்தனைகளுக் கமையவும் பெறப்பட்ட பணத்தை முதலீடு செய்யலாம்.

(4) இப்பிரிவுடன் இணங்கியொழுகத் தவறுகின்ற வரான நிருவாகியொருவர் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிப்பதன்மேல் ஒரு மில்லியன் ரூபாவிற்கு குறையாததும் இரண்டு மில்லியன் ஐந்நூறாயிரம் ரூபாவிற்கு மேற்படாததுமான தண்டப்பணத்திற்கும் அல்லது ஐந்து ஆண்டுகளை விஞ்சாத கடூழிய மறியற்றண்டனைக்கும் அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றம் மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதல் வேண்டும்.

(5) இரண்டாம் உட்பிரிவு தொடர்பிலான தவறொன்றை விதிக்கப்படக்கூடியவாறான ஏதேனும் குற்றப்பணம் அல்லது மறியற்றண்டனைக்கு மேலதிகமாக நிருவாகியொருவர் புரியுமிடத்து, நீதிமன்றம் பின்வருவனவாறாக அதன்மீது ஈட்டப்பட்ட ஏதேனும் வட்டி அல்லது இலாபங்களுடன் சேர்த்து (2) ஆம் உட்பிரிவினை மீறுகின்ற வகையில் அறவிடுதல் வேண்டும் -

(அ) குற்றப்பணமொன்றாக அதேமுறையில் அறவிடும்; அத்துடன்

(ஆ) நீதிமன்றம் வேறுவகையில் கட்டளையிட்டா லொழிய, (1) ஆம் உட்பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட கணக்கொன்றுக்கு செலுத்தும்.

கணக்கீட்டு பதிவேடுகள் தொடர்பில் நிருவாகி மற்றும் உறுதி நிருவாகியின் கடமை

**245.** (1) நிருவாகியொருவர் அல்லது உறுதி நிருவாகி யொருவர் நிருவாகக் காலப்பகுதியுடன் தொடர்புடைய அல்லது உறுதி நிருவாகத்தின் காலப்பகுதியுடன் தொடர்பு டையதாக விடயத்திற்கேற்ப, ஆதனம் மற்றும் கம்பெனியின் பெறுப்புமுயற்சியுடன் தொடர்புடைய எல்லாக் கொடுப்பனவு களின் பற்றுச்சீட்டுக்கள், மற்றும் ஏனைய கொடுக்கல் வாங்களை சரியாகப் பதிவுசெய்து விளக்கும் கணக்கீட்டுப் பதிவேடுகளை ஆக்குதல் வேண்டும்.

(2) அக்கறைகொண்டுள்ள ஆளொருவரினால் நீதிமன் றத்திற்கு செய்யப்படும் விண்ணப்பத்தின்மீது, நீதிமன்றம்

அத்தகைய நியதி நிபந்தனைகளின் மீது அவசியமானதான (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீசெய்யப்பட்ட கணக்கீட்டுப் பதிவேடுகளை சோதிக்கலாமென கட்டளையிடலாம்.

(3) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்படும் கணக் கீட்டுப் பதிவேடுகளானவை, விடயத்திற்கேற்ப, நிருவாகம் அல்லது உறுதி நிருவாகம் முடிவடைந்ததன் பின்னர் ஆகக் குறைந்தது ஆறு ஆண்டுகளுக்கு விடயத்திற்கேற்ப, நிருவாகி அல்லது உறுதி நிருவாகியினால் தக்கவைத்திருக்கப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவுடன் இணங்கியொழுகத் தவறுகின்ற வரான நிருவாகி அல்லது உறுதி நிருவாகி தவறொன்றைப் புரிந்தவராகின்றார்.

## அத்தியாயம் 9

### நிருவாகி மற்றும் உறுதி நிருவாகியின் ஊதியம் மற்றும் முன்நிருவாக செலவுக்கான அங்கீகாரம்

நிருவாகி மற்றும் உறுதி நிருவாகியின் ஊதியம்

**246.** (1) இருநூற்றி நாற்பத்தேழாம் பிரிவுக்கமைய, நிருவாகியொருவர்–

(அ) விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில், கடன்கொடுநர்களினால் உடன்பட்டுக் கொள்ளப்பட்டவாறு; அல்லது

(ஆ) (அ) பந்தி (அ) வின் கீழ் கடன்கொடுநர்களினால் உடன்பாடின்மையின் போது, நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறு,

ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அடிப்படைகளில் மற்றும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மணித்தியால மற்றும் சதவீத விகிதங்கள் மற்றும் நிலையான மட்டங்களின் மீது ஊதியமொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு உரித்துடைய வராவார்.

(2) உறுதி நிருவாகியொருவர் 246ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்திக்கமைய –

(அ) விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில், கடன்கொடுநர்களினால் உடன்பட்டுக் கொள்ளக்கூடியவாறான; அல்லது

(ஆ) பந்தி (அ) இன் கீழ் கடன்கொடுநர்களினால் உடன்பாடின்மையின் போது, நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான,

ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அடிப்படைகளில் மற்றும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மணித்தியால மற்றும் சதவீத விகிதங்கள் மற்றும் நிலையான மட்டங்களின் மீது ஊதியமொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு உரித்துடைய வராவார்.

(3) நிருவாகியொருவர் அல்லது உறுதி நிருவாகியொருவர், விடயத்திற்கேற்ப, ஊதியத்திற்கு மேலதிகமாக, தக்கவைக்கப்படவேண்டுமென, 245 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழ் தேவைப்படுத்தப்படுகின்ற அத்தகைய பதிவேடுகளின் களஞ்சியப்படுத்தலுக்கான நியாயமான ஆகுசெலவுகளுக்கு உரித்துடையவராதல் வேண்டும்.

முன்நிருவாக செலவுகளுக் கான அனுமதி

**247.** நிருவாகியொருவர் -

(அ) விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில், கடன்கொடுநர்களினால் உடன்பட்டுக் கொள்ளப்பட்டவாறு; அல்லது

(ஆ) பந்தி (அ) வின் கீழ் நீதிமன்றத்தினால் தீர்மானிக் கப்படக்கூடியவாறு

முன்நிருவாக செலவுகளுக்கான கொடுப்பனவைப் பெற்றுக் கொள்வதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

## அத்தியாயம் 10

### நிருவாகி மற்றும் உறுதி நிருவாகியின் பொறுப்பு

நிருவாகியின் நட்டோத்தர வாதம்

**248.** (1) நிருவாகியொருவர் கம்பெனியின் ஆதனத்திற்கு வெளியில் -

(அ) 249 மற்றும் 250 ஆம் பிரிவுகளின்கீழான நிருவாகியின் பொறுப்பு;

(ஆ) நிருவாகியின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை பிரயோகித்தல், புரிதல் மற்றும் நிறைவேற்றுவதில் வேறுவகையில் முறையாக உறப் பட்ட நிருவாகியின் பொறுப்புக்கள்; அத்துடன்

(இ) 246 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழான நிருவாகியின் ஊதியம்,

என்பன தொடர்பில் நட்டோத்தரவாதமொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) கம்பெனியின் ஒழித்துக்கட்டலின்போது, (1) ஆம் உட்பிரிவின்கீழான நிருவாகியின் நட்டோத்தரவாதமானது முறையாக உறப்பட்ட ஆகுசெலவுகள், விதிப்பனவுகள் மற்றும் செலவுகளுக்கு மற்றும் அவ்வுட்பந்திகளின் நேரொத்த கூறுகள் தொடர்பில் நான்காம் அட்டவணையின் (1) ஆம்; பந்தியின் (ஆ) மற்றும் (இ) என்னும் உட்பந்திகளின் கீழ் நிருவாகியின் ஊதியத்தினாலும் ஏற்பட்டவைகளுக்கு முன்னுரிமையை கொண்டிருக்கும்.

(3) நிருவாகியொருவர் (1) ஆம் உட்பிரிவின்கீழ் நட்டோத்தரவாதத்தை பாதுகாக்க கம்பெனியின் ஆதனத்தின் மீதான சோந்தையை கொண்டிருத்தல் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவின் கீழான சோந்தையொன்று (1) ஆம் உட்பிரிவின் கீழான நட்டோத்தரவாதமானது வில்லங்கத்தினால் பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட தனிசுகள், பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளின் மேல் முன்னுரிமையைக் கொண்டுள்ளதான அளவுக்கு வில்லங்கத்தின் மீது முன்னுரிமையை கொண்டுள்ளது.

முன்நிலைத்திருக்கும் தொழில் ஒப்பந்தங்களின் கீழான நிருவாகியின் பொறுப்பு

**249.** (1) பின்வருமாறு இருந்தாலொழிய, நிருவாகியொருவரின் நியமனத்திற்கு முன்னர் செய்யப்பட்ட தொழில் ஒப்பந்தத்துடன் தொடர்புடைய கொடுப்பனவுகளுக்கு நிருவாகியொருவர் பொறுப்பாதலாகாது-

(அ) நிருவாகி ஒப்பந்தத்தை எழுத்துமூலமாக வெளிப் படையாக ஏற்றுக்கொண்டார்; அல்லது

(ஆ) இரண்டாம் உட்பிரிவு ஏற்புடையதாகின்றமை,

(2) நிருவாகியொருவர் நிருவாகியொருவரின் நியமனத் திற்கு முன்னர் செயய்யப்பட்ட தொழில் ஒப்பந்தத்துடன் தொடர்புடைய பின்வரும் கொடுப்பனவுகளுக்கு ஆளாக மாட்டார்-

(அ) வேதனம் அல்லது சம்பளம்;

(ஆ) முற்பண தனிநபர் வருமான வரி;

(இ) சேமலாப நிதி சேர்மதிகள்;

(ஈ) நியதிச்சட்ட பணிக்கொடை; அத்துடன்

(உ) ஊழியர் நம்பிக்கை நிதிய சேர்மதிகள்.

(3) நிருவாகியொருவர் பின்வருவனவற்றில் எது முன்ன தானதோ அதுவரை நிருவாகியொருவரின் நியமனத் தேதி யிலிருந்து திரண்ட கொடுப்பனவுகளைச் செய்தல் வேண்டும் -

(i) நிருவாகத்தின் முடிவு;

(ii) நிருவாகியொருவர் நிருவாகியாக இருப்ப திலிருந்து இல்லாதொழிக்கப்பட்ட திகதி; அத்துடன்

(iii) ஒப்பந்தத்தின் முடிவுறும் திகதி

ஏற்புடையற்பாலதான கூட்டத்துக்கிணங்க, நிருவாகி ஒப்பந்தம் முடிவுறுத்தல் பற்றிய அறிவித்தலை அல்லது நியமனத்தின் பின்னரான பத்து வேலைநாட்களிற்குள், தொழிலை முடிவுறுத்தின், நிருவாகத்தின் முடிவு அல்லது நிருவாகியொருவர் நிருவாகியாக இருப்பதிலிருந்து இல்லா தொழிந்துள்ளதான திகதி.

(4) இவற்றுள் எது முந்துகின்றதோ அது, நிருவாகி யொருவர் ஒப்பந்தத்தை முடிவுறுத்தும் அறிவித்தலை, நியமனத்தின் பின்னரான பத்து வேலைநாட்களிற்குள், தொழிலை முடிவுறுத்தலிற்கு ஏற்புடையற்பாலதான சட்டத் துக்கிணங்க வழங்கியிருக்குமிடத்து,

(5) நீதிமன்றமானது, (2) ஆம் உட்பிரிவின் (ஊ)) மற்றும் (எ) என்னும் பந்திகளில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள பத்து வேலைநாட்கள் எனும் காலப்பகுதியின் முடிவின் முன்னர்

செய்யப்பட்ட, நிருவாகியின் விண்ணப்பத்தின் மீது, அவசியமாகவிருக்ககூடியதான அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகள் மீதான காலப்பகுதியை நீடிக்கலாம்.

ஏனைய உடன்படிக் கைகள் மற்றும் வாடகை மீதான நிருவாகியின் பொறுப்பு

**250.** (1) நிருவாகியொருவர் எவையேனும் நிருவாகியின் பணிகள் மற்றும் தத்துவங்களை புரிவதல் மற்றும் பிரயோகிப்பதில்; நிருவாகியினால் செய்யப்பட்ட உடன் படிக்கையொன்றின் மீது பொறுப்பாகின்றார்.

(2) ஓராம் உட்பிரிவானது முரணான ஏதேனும் உடன்படிக்கையை எது எவ்வாறிருப்பினும் கம்பெனி அல்லது வேறு எவரேனும் ஆளுக்கு எதிராக நிருவாகியின் உரிமைகளுக்கு பங்கமின்றி பயனைக் கொண்டுள்ளது.

(3) நான்காம் மற்றும் (5) உட்பிரிவுகளுக்கமைவாக, கம்பெனியிலான ஆதனத்தின் பாவனை, இருப்பாட்சி அல்லது உடைமை தொடர்பில் நிருவாகியின் நியமனத் திகதியில் உளதாயிருக்கும் உடன்படிக்கையொன்றின்கீழ் சேர்மதியாகவுள்ள வாடகை மற்றும் வேறு எவையேனும் கொடுப்பனவுகளுக்கு நிருவாகி பொறுப்புடையவராவார்.

(4) மூன்றாம் உட்பிரிவின்கீழான நிருவாகியொருவரின் பொறுப்பானது நிருவாகியின் நியமனத்திற்கு பின்னரான பத்து வேலைநாட்களில் தொடங்குவதும் -

(அ) நிருவாகத்தின் முடிவு;

(ஆ) நிருவாகியொருவர் நிருவாகியாக இருப்பதி லிருந்து இல்லாதொழிக்கப்பட்டதான நாள்; அத்துடன்

(இ) ஆதனத்தை பயன்படுத்த, இருப்பாட்சி கொள்ள அல்லது உடைமை கொள்வதற்கு கம்பெனி இல்லாதொழிக்கப்பட்ட நாள்,

என்பவற்றில் முந்தியதுடன் முடிவடையும் காலப்பகுதிக்கு ஏற்றுக்கூறப்படற்பாலதான வாடகை அல்லது ஏனைய கொடுப்பனவுகளின் அப்பகுதிக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

(5) நிருவாகியின் விண்ணப்பத்தின்மீது நீதிமன்ற மானது –

(அ) (4) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டவற்றை விட பாரிய நீட்டிப்புக்கு நிருவாகியின் பொறுப்பை மட்டுப்படுத்தலாம்; அல்லது

(ஆ) எல்லாமாக, (3) ஆம் உட்பிரிவின்கீழான பொறுப்பிலிருந்து நிருவாகியை விலக்கலாம்.

(6) மூன்றாம் உட்பிரிவு அல்லது (4) ஆம்; உட்பிரிவிலுள்ள எதுவும் -

(அ) மூன்றாம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட உடன்படிக்கையொன்றின் நிருவாகியொருவரினாலான ஏற்பொன்றிற்கு எழுச்சியை கொடுப்பதாக எடுக்கபடலாகாது; அல்லது

(ஆ) அத்தகைய உடன்படிக்கையொன்றின்கீழ் வேறு ஏதேனும் கடப்பாட்டின் செயல்நிறைவேற்றாமை தொடர்பில் நிருவாகிக்கு பொறுப்பினை வழங்குதலாகாது.

குறைபாடொன்றின் பட்சத்தில் பொறுப்பிலிருந்தான நிவாரணம்;

**251.** (1) நீதிமன்றமானது –

(அ) விடயத்துக்கேற்ப, நிருவாகியை அல்லது உறுதி நிருவாகியை நியமிக்கின்ற கட்டளை அல்லது தீர்மானத்தில் உள்ள குறைபாடு ஒன்றின் காரணத்தினால் மட்டும் பொறுப்பு உறப்பட்டுள்ளதென; அத்துடன்

(ஆ) விடயத்துக்கேற்ப, நிருவாகி அல்லது உறுதி நிருவாகி நேர்மையாகவும், நியாயமான முறையிலும் செயற்பட்டிருக்கிறார் என்பதுடன் இச்சூழ்நிலைகளில் பொறுப்பிலிருந்து அவருக்கு விலக்கு அளிக்கப்படவேண்டுமென,

திருப்திப்படுமிடத்து, விடயத்துக்கேற்ப, நிருவாகியாக உள்ளபோது அல்லது உறுதி நிருவாகியாக, உறப்பட்ட எல்லா பொறுப்பிலிருந்து நிருவாகியொருவராக அல்லது உறுதி நிருவாகியொருவராக செயலாற்றியுள்ளவரான ஆளொருவரை நீதிமன்றம் விடுவிக்கலாம்.

(2) நீதிமன்றம் அவசியமானவாறான அத்தகைய நியதி நிபந்தனைகளுக்கமைய, (1) ஆம்; உட்பிரிவின்கீழ் அதன் தத்துவங்களைப் பிரயோகிக்கலாம்.

## அத்தியாயம் 11

### நிருவாகம் மற்றும் உறுதி நிருவாகம் - நானாவிதம்

**252.** (1) நிருவாகத்திலுள்ள கம்பெனியின் நிருவாகியினால் அல்லது சம்மதத்துடன் நல்லெண்ணத்தில், செய்யப்பட்ட அல்லது வேறுவகையில் செய்யப்பட்ட கொடுக்கல் வாங்கலுக்கு செய்யப்பட்ட கொடுப்பனவு, கம்பெனியின் ஒழித்துக்கட்டுதலில் புறத்தொதுக்கப்படுதலாகாது.

நிருவாகியின் செயலை புறத்தொதுக் குதல்

(2) பிரிவுகள் 412, 413, 414, 415, 416, 417 மற்றும் 418 என்பன பின்வருமாறு கொடுக்கல்வாங்கல் இடம்பெற்றிருப்பின், நிருவாகம் அல்லது உறுதி நிருவாகத்திலுள்ள கம்பெனியொன்றினால் கொடுக்கல் வாங்கலொன்றுக்கு ஏற்புடைமையாதலாகாது-

(அ) நிருவாகியின் அல்லது உறுதி நிருவாகியின் அதிகாரத்தினால் அல்லது அதிகாரத்துடன் கொண்டுசெல்லப்படுமாயின்; அல்லது

(ஆ) கம்பெனி ஒழுங்கேற்பாட்டின் உறுதியினால் அதிகாரமளிக்கப்பட்ட அல்லது அனுமதியளிக்கப் பட்ட மற்றும் உறுதி நிருவாகியினால் கொண்டு செல்லப்படுமாயின்,

**253.** (1) நிருவாகியின் அல்லது உறுதி நிருவாகியின் பதவியானது, அப்பதவியை வகிக்கின்ற ஆள்-

நிருவாகி அல்லது உறுதி நிருவாகியின் பதவியின் வெற்றிடம்

(அ) இரண்டாம் அல்லது (3) ஆம் உட்பிரிவின்கீழ் பதவி விலகியிருப்பின்;

(ஆ) இறப்பின்;

(இ) நீதிமன்றத்தினால் பதவியிலிருந்து அகற்றப்பட்டிருப்பின்;

(ஈ) கடனிறுக்கவகையின்மை தொழிலரொருவரின் சந்தர்ப்பத்தில், கடனிறுவகையின்மை தொழிலராக அதன் பதிவானது இடைநிறுத்தப்பட்டிருப்பின் அல்லது இரத்துச் செய்யப்பட்டிருப்பின்;

(உ) நிருவாகியொருவரின் சந்தர்ப்பத்தில், 242 ஆம் பிரிவின்கீழான இறுதி அறிக்கையொன்றை அனுப்பியிருப்பின்;

(ஊ) நிருவாகியொருவரின் சந்தர்ப்பத்தில், 254 ஆம் பிரிவின்கீழ் கடன்கொடுநர்களினால் பதவியிலிருந்து அகற்றப்பட்டிருப்பின்;

(எ) உறுதி நிருவாகியொருவரின் சந்தர்ப்பத்தில், 243 ஆம் பிரிவின்கீழ் இறுதி அறிக்கை அனுப்பப்பட்டிருப்பின்; அல்லது

(ஏ) உறுதி நிருவாகியொருவரின் சந்தர்ப்பத்தில், கம்பெனி ஒழுங்கேற்பாட்டின் உறுதியின் நியதிகளின்கீழ் கடன்கொடுநர்களினால் அல்லது கம்பெனியினால் பதிவியிலிருந்து அகற்றப்பட்டிருந்தாள்,

வெறிதானதாதல் வேண்டும்.

(2) நிருவாகியொருவர் -

(அ) நிருவாகியின் நியமிப்பாளருக்கு, அத்துடன், நியமிப்பாளர் நீதிமன்றமாகவிருக்குமிடத்து, யாருடைய விண்ணப்பத்தின்மீது நியமனம் மேற்கொள்ளப்பட்டதோ அவ்வாளுக்கு; அத்துடன்

(ஆ) கடன்கொடுநர்களுக்கு,

உறுதி நிருவாகியின் பதவிவிலகுவதற்கான உட்கருத்துடன், விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் ஐந்து வேலைநாட்களின் எழுத்துமூல அறிவித்தலை வழங்குவதன்மூலம் பதிவியிலிருந்து விலகலாம் -

(3) உறுதி நிருவாகியொருவர் -

(அ) கம்பெனிக்கு; அத்துடன்

(ஆ) கடன்கொடுநர்களிற்கு,

நிருவாகியின் பதவிவிலகுவதற்கான உட்கருத்துடன், விதந்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் ஐந்து வேலைநாட்களின் எழுத்துமூல அறிவித்தலை வழங்குவதன் மூலம் பதிவியிலிருந்து விலகலாம்.

(4) நிருவாகியின் நியமிப்பாளர் -

(அ) நீதிமன்றத்தின் ஏதேனும் கட்டளை; அத்துடன்

(ஆ) நிருவாகியின் நியமனத்திற்கு ஏற்புடையற்பாலதான இப்பாகத்தின் கீழான தேவைப்பாடுகளிற்கமைவாக,

நிருவாகியின் பதிவியிலான வெற்றிடத்தை நிரப்புவதற்கு மாற்றீட்டு நிருவாகியொருவரை நியமிக்கலாம்.

(5) ஆறாம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்படும் ஆளொருவரின் விண்ணப்பத்தின் மீது, நீதிமன்றமானது –

(அ) நிருவாகியின் பதவியானது ஏதேனும் காரணத்துக்காக வெறிதாகுமிடத்து–

(i) பொருத்தமான மாற்றீட்டு நிருவாகியை நியமிக்குமாறு; அல்லது

(ii) பொருத்தமான மாற்றீட்டு நிருவாகியின் நியமனத்திற்காக செயன்முறையை குறித்துரைக்குமாறும்;

(ஆ) கம்பெனி ஒழுங்கேற்பாட்டின், உறுதியானது நடைமுறையிலிருக்குமிடத்து-

(i) ஒன்றில் பொருத்தமான மாற்றீட்டு உறுதி நிருவாகியொருவரை நியமிக்குமாறு அல்லது பொருத்தமான மாற்றீட்டு உறுதி நிருவாகியின் நியமனத்திற்காக செயன்முறையை குறித்துரைக்குமாறும்; அத்துடன்

(ii) மாற்றீட்டு உறுதி நிருவாகியின் நியமனத்தின் மீது உறுதி நிருவாகியை அகற்றுமாறும்,

கட்டளையொன்றை ஆக்கலாம்.

(6) பின்வரும் ஆட்களில் எவரும் (5) ஆம் உட்பிரிவின் கீழ் நீதிமன்றிற்கு விண்ணப்பத்தினை செய்யலாம் -

(அ) கடன்கொடுநர்;

(ஆ) கம்பெனியில் அக்கறையுடவரான எவரேனும் வேறு ஆள்;

(இ) பதிவாளர்; அல்லது

(ஈ) அதிகாரி.

(7) ஓராம் உட்பிரிவின் (உ) அல்லது (எ) என்னும் பந்திகளின்கீழ் தவிர, நிருவாகியின் அல்லது உறுதி நிருவாகி யின் பதவியில் வெற்றிடமொன்று ஏற்படுகின்றவிடத்து, பதவியை வறிதாக்குகின்ற ஆளினால் அல்லது அவ்வாளின் சட்டப்பிரதிநிதியினால் செயலாற்றுவதற்கு இயலாதவரான அவ்வாளினால் பதிவாளருக்கும் அதிகாரசபைக்கும் வெற் றிடம் பற்றிய எழுத்திலான அறிவித்தல் செயல்முறைக் குகந்தவாறு விரைவாக அளிக்கப்படுதல் வேண்டும்.

(8) ஓராம் உட்பிரிவின் (உ) அல்லது (எ) என்னும் பந்திகளின்கீழ் தவிர்ந்து, நிருவாகியின் அல்லது உறுதி நிருவாகியின் பதவியை வறிதாக்கும் ஆளொருவர், செயல் முறைக்குகந்தவிடத்து, அடுத்துறுபவரான தம்மையடுத்துறுப வருக்கு அவ்வாள் நியாயமான முறையில் கோரக்கூடியதான அத்தகைய தகவல்களை வழங்குதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய உதவிகளை அளித்தலும் வேண்டும்.

(9) நிருவாகியின் அல்லது உறுதி நிருவாகியின் பதவியில் உள்ள வெற்றிடமொன்றை நிரப்புவதற்கு நியமிக் கப்பட்ட ஆளொருவரின் விண்ணப்பத்தின் மீது விடயத்துக் கேற்ப, நீதிமன்றமானது, நிருவாகியின் அல்லது உறுதி நிருவாகியின் பணிகள், தத்துவங்கள் மற்றும் கடமைகள் புரியப்படுவதற்கு, நிறைவேற்றுவதற்கு மற்றும் நிறைவேற்று வதற்கு வசதியளிப்பதற்கு அவசியமானதென அது கருது கின்ற ஏதேனும் கட்டளையை ஆக்கலாம்.

(10) ஒன்றில் (7) ஆம் அல்லது (8) ஆம் உட்பிரிவுகளுடன் இணங்கியொழுகத் தவறுகின்ற ஆளொவ்வொருவரும் இவ் வுட்பிரிவின்கீழ் தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டு

மென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப் பணத்துக்கு ஆளாதலும் வேண்டும்.

(11) ஒன்பதாம் உட்பிரிவின் நியதிகளின்படி ஏதேனும் நீதிமன்றத்தினால் ஆக்கப்பட்ட கட்டளையுடன் இணங்கியொழுகத் தவறுகின்ற ஒவ்வொரு ஆளும் இவ்வுட்பிரிவின் கீழ் தவறொன்றைப் புரிந்தவராகின்றார் என்பதுடன் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணத்துக்கு குற்றத்தீப்பளிக்கப்படுவதன் மேல் ஆளாதலும்; வேண்டும்.

கடன் கொடுநர் களினால் நிருவாகியை பதிவியி லிருந்து அகற்றல்

**254.** (1) இரண்டாம் உட்பிரிவிற்கும் மற்றும் இச்சட்டத்தின் ஏற்புடையற்பாலதான ஏற்பாடுகளிற்கும் அமைவாக, நிருவாகியொருவர்-

(அ) ஆரம்பகால கூட்டமொன்றில் அல்லது இணைந்த ஆரம்பகால மற்றும் பெறுபேற்று கூட்டத்தில்; அல்லது

(ஆ) 255 ஆம் பிரிவின் கீழ் கூட்டப்பட்ட கடன்கொடுநர்களின் கூட்டமொன்றில்,

ஏற்கப்பட்ட கடன்கொடுநர்களின் தீர்மானத்தினால் பதவியிலிருந்து அகற்றப்படலாம்.

(2) (அ) பின்வருமாறு இருந்தாலொழிய, கடன்கொடுநர்களின், தீர்மானத்தினால், நிருவாகியொருவர் பதவியிலிருந்து அகற்றப்படுதலாகாது, அவ்வாளின் நியமனம் பின்வருமாறு உள்ளவிடத்து, கடன்கொடுநர்கள் வேறோராளை மாற்றீட்டு நிருவாகியாக தீர்மானித்தின் மூலம் நியமித்தல் -

(i) பதவி அகற்றலின் மீதான பயன்; அத்துடன்

(ii) நூற்றியெண்பத்தோராம் பிரிவுடன் முரண்படவில்லை; அத்துடன்

(ஆ) அம்மற்றைய ஆள் (1) ஆம் உட்பிரிவின் (அ) அல்லது (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட கூட்டத்தில் பட்டியல்படுத்தப்பட்டுள்ளது-

(i) நூற்றியெண்பத்தோராம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட எழுத்துமூல சான்றுபடுத்துகை;

(ii) நூற்றியெண்பத்தோராம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட எழுத்துமூல சம்மதம்; அத்துடன்

(iii) முப்பதாம் பிரிவுடன் இணங்கியொழுகுகின்றதான ஆளினால் கையொப்பமிடப்பட்ட, அக்கறை பற்றிய கூற்றொன்று,

மாற்றீட்டு நிருவாகி

**255.** (1) இருநூற்றி ஐம்பத்திநான்காம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்; கீழ் கடன் கொடுநர்களினால் அல்லது நீதிமன்றத்தினால் நியமிக்கப்பட்டாலொழிய, மாற்றீட்டு நிருவாகியொருவர், நியமனத்தின் பத்து வேலைநாட்களினுள், கடன்கொடுநர்கள் பின்வருவனவற்றுக்காக கடன்கொடுநர்களின் கூட்டமொன்றை நடாத்துதல் வேண்டும்,

(அ) மாற்றீட்டு நிருவாகியை அகற்றுவதற்கு வாக்களிக்கலாம்; அத்துடன்

(ஆ) மாற்றீட்டு நிருவாகியின் இடத்தில் வேறொரு ஆளை நியமிக்கலாம்,

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட கூட்டத்திற்கு முன்னரான ஆகக்குறைந்தது ஏழு வேலைநாட்களினுள் மாற்றீட்டு நிருவாகியொருவர், -

(அ) (i) கம்பெனியின் கடன்கொடுநர்கள் பலருக்கு நியாயமானளவு செயல்முறைக்குகந்தாக வுள்ளதாக கூட்டம் பற்றிய எழுத்துமூல அறிவித்தலை வழங்குதல்; அத்துடன்

(ii) கூட்டம் பற்றி பொது அறிவித்தலை வழங்குதல்; அத்துடன்

(ஆ) 2 ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் (1) ஆம் உட்பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட அறிவித்தலின் பிரதியை பதிவாளருக்கும் அதிகாரசபைக்கும் அனுப்புதல் மூலம்

கூட்டத்தை கூட்டுதல் வேண்டும்.

(3) மாற்றீட்டு நிருவாகி 30 ஆம் பிரிவுடன் இணங்கியொழுகுகின்றதான மாற்றீட்டு நிருவாகியினால் கையொப்பமிடப்பட்ட அக்கறைகள் கூற்றொன்றை (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட கூட்டத்தில் பட்டியல்படுத்துதல் வேண்டும்.

(4) ஐந்தாம் அட்டவணையானது (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட கூட்டமொன்றுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

(5) இப்பிரிவுடன் இணங்கியொழுகத் தவறும் ஆளொவ்வருவரும் தவறொன்றைப் புரிந்தவராகின்றார்.

உறுதி நிருவாகியின் நீக்கலும் மாற்றீடும்

**256.** (1) உறுதி நிருவாகியொருவர் அவர்கள் அவ்வாறு வழங்குமிடத்து, கம்பெனி ஒழுங்கேற்பாட்டின் உறுதியின் நியதிகளின் கீழ், கடன்கொடுநர்கள் அல்லது கம்பெனியினால் பதவியிலிருந்து அகற்றப்படலாம்.

(2) மாற்றீட்டு உறுதி நிருவாகியொருவர் அவர்கள் அவ்வாறு வழங்குமிடத்து, கம்பெனி ஒழுங்கேற்பாட்டு உறுதியின் நியதிகளின் கீழ், நியமிக்கப்படலாம்.

ஒழித்துக் கட்டல் அல்லது தற்காலிக ஒழித்துக்காட்டலை மீளத் தொடங்குவதற்கான கட்டளை

**257.** ஒழித்துக்கட்டலில் அல்லது தற்காலிக ஒழித்துக் கட்டலில் உள்ள கம்பெனிக்கு 188 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட நிருவாகியொருவர் விடயத்திற்கேற்ப, தொடங்குவதற்கு ஒழித்துக்கட்டல் அல்லது தற்காலிக ஒழித்துக்கட்டலிற்கான கட்டளையொன்றுக்காக, நீதிமன்றத்துக்கு விண்ணப்பிக்கலாம்.

நிருவாகி அல்லது உறுதி நிருவாகியை விடுவித்தல்

**258.** (1) நிருவாகியாக அல்லது உறுதி நிருவாகியாக இருப்பதற்கு ஆளொருவர் இல்லாதொழிக்கப்படுமிடத்து, அவ்வாள், பின்வருமாறுள்ளவிடத்து, விடுவிக்கப்படுதல் வேண்டும்-

(அ) (i) அத்தகைய முறையில் ஒவ்வொருவரும் அறிந்த கடன்கொடுநருக்கு மற்றும் விடுவிப்பு நாடப் பட்ட விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஆவணங்களை இணைத்தும் மற்றும் அதனை அவர்கள் எவ்வாறு ஆட் சேபிக்கலாம் என விளக்கியும் அறிவித்தல் வழங்கப்படுமிடத்து; அத்துடன்

(ii) விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய காலப்பகுதியினுள் ளும் கடன்கொடுநர்கள் ஆட்சேபிக்காத விடத்து; அல்லது

(ஆ) விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நடவடிக்கைமுறையின்; பின்னர் பின்பற்றப்பட் டுள்ளவிடத்து, நீதிமன்றம் அனுமதியளிக்கின்றது.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான விடுப்பொன்றானது கம்பெனியின் விடயத்திற்கேற்ப, நிருவாகம் அல்லது உறுதி நிருவாகத்தின் ஏதேனும் செயல், விட்டுவிடுகை அல்லது முடிபு தொடர்பில், 419 ஆம் பிரிவின் கீழான பொறுப்பு தவிர்ந்த, எல்லா பொறுப்பிலிருந்தும் ஆளை விடுவித்தல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் கீழ் விடுப்பை ஆளொருவர் பெற்றுக்கொள்ளுமிடத்து, அவ்வாள் பத்து வேலைநாட் களினுள் விடுவிப்பு பற்றி எழுத்துமூல அறிவித்தலை அதிகாரசபைக்கு வழங்குதல்வேண்டும்.

உறுதி நிருவாகத் துக்கு ஆற்றுப்படுத் துவதற்கான ஆவணங்கள்

**259.** (1) கம்பெனி உறுதி நிருவாகத்தில் உள்ளவரை, உறுதி நிருவாகி பின்வருவனவற்றை உறுதிசெய்தல் வேண்டும்-

(அ) கம்பெனியினால் அல்லது அதன் சார்பாக வழங்கப்பட்ட அல்லது கையொப்பமிடப்பட்ட

ஒவ்வொரு ஆவணமும் கம்பெனியின் பெயர் முதலில் தோன்றுமிடத்திற்கு பின்னர் "கம்பெனி ஒழுங்கேற்பாட்டின் உறுதிக்கமைய" எனும் சொற்களைக் கொண்டிருத்தலை; அத்துடன்

(ஆ) கம்பெனியானது ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்ட வலைத்தளங்களை கொண்டிருப்பின், ஒவ்வொரு வலைத்தளத்தினதும் ஒவ்வொரு பக்கமும் கம்பெனி ஒழுங்கேற்பாட்டின் உறுதியானது வலுவிலுள்ளதென முதன்மையாக குறிப்பிடுதலை;

(2) கம்பெனியினால் அல்லது உறுதி நிருவாகியினால் செய்யப்படும் விண்ணப்பத்தின்மீது, நீதிமன்றம் விண்ணப்பம் மறுக்கப்படின், அது உறுதியின் நோக்கங்களை முன்னெடுத்தலானது பொருள் ரீதியாக அல்லது எதிரிடையாக பாதிக்கப்பட்டுள்ளது என கருதுகின்றவிடத்து, (1) ஆம் உட்பிரிவிலுள்ள தேவைப்பாடுகளிலிருந்து உறுதி நிருவாகியை விலக்களிக்கலாம்.

(3) ஓராம் உட்பிரிவுடன் இணங்கியொழுகுவதற்கான தவறுகையானது பின்வருவனவற்றின் செல்லுபடியான தன்மையைப் பாதித்தலாகாது-

(அ) உறுதி நிருவாகியாக ஆளொருவரின் நியமனம்; அல்லது

(ஆ) ஏதேனும் ஆவணம்.

(4) ஓராம் உட்பிரிவுக்கு இணங்கியொழுகுவதற்கு தவறுகின்ற ஆள் ஒவ்வொருவரும் தவறொன்றைப் புரிந்தவராவார்.

உறுதி நிருவாகம் எப்போது முடிவடையும்

**260.** உறுதி நிருவாகமானது கம்பெனி ஒழுங்கேற்பாட்டு உறுதி முடிவுறுகின்றதான நாள் மற்றும் நேரத்தில் முடிவுறுகின்றது.

## அத்தியாயம் 12

### நிருவாகம் மற்றும் உறுதி நிருவாகத்தில் நீதிமன்றத்தின் தத்துவங்கள்

நிருவாகியொருவர் அல்லது உறுதி நிருவாகியினாலான பணிப்பிற்கான விண்ணப்பம்

**261.** (1) நிருவாகி அல்லது உறுதி நிருவாகியொருவர் அல்லது அதிகாரசபையொருவரின் விண்ணப்பத்தின்மேல், நீதிமன்றம் -

(அ) விடயத்துக்கேற்ப, நிருவாகி அல்லது உறுதி நிருவாகியின்; பணிகள், தத்துவங்கள் மற்றும் கடமைகள் புரியப்படுவது, பிரயோகிக்கப்படுவது மற்றும் நிறைவேற்றப்படுவது தொடர்பில் எழுகின்ற ஏதேனும் விடயம் தொடர்பில் பணிப்புகள் வழங்கலாம்; அல்லது

(ஆ) அத்தகைய எவையேனும் பணிப்புகளை இல்லாதொழிக்கலாம் அல்லது வேறுபடுத்தலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் அளிக்கப்பட்டுள்ள தத்துவங்கள் -

(அ) நீதிமன்றம் பிரயோகிக்கக்கூடிய வேறு எவையேனும் தத்துவங்களுக்கு மேலதிகமாக உள்ளன; அத்துடன்

(ஆ) விண்ணப்பம் செய்யப்படும்போது, நிருவாகி அல்லது உறுதி நிருவாகி, விடயத்திற்கேற்ப, அவ்வாறு செயலாற்றுவதிலிருந்து இல்லாதொழிந்து விட்டாலென்ன, அல்லது இல்லாதொழியாவிட்டாலென்ன, என பிரயோகிக்கப்படலாம்.

(3) (1) ஆம் உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட பணிப்புடன் இணங்கியொழுகுவதில் செயலாற்றுகின்றதான விடயத்துக்கேற்ப, நிருவாகி அல்லது உறுதி நிருவாகியின் ஏதேனும் செயல், செய்யாமை அல்லது முடிபு தொடர்பில் நிருவாகிக்கு அல்லது உறுதி நிருவாகிக்கு எதிராக உரிமைக் கோரிக்கை செய்தல் பாதுகாப்பானதாகும்.

நிருவாகி அல்லது உறுதி நிருவாகியின் ஊதியம் அல்லது நியமனம் தொடர்பிலான கட்டளை

**262.** (1) நீதிமன்றம், (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஆளொருவரின் விண்ணப்பத்தின் மீது நீதிமன்றம் -

(அ) விடயத்துக்கேற்ப, 246 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவு அல்லது (2) ஆம் உட்பிரிவின்; கீழ் தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லையான நிருவாகியின் அல்லது உறுதி நிருவாகியின் ஊதியத்துக்கான ஏதேனும் காலப்பகுதி அல்லது செயற்பாடு தொடர்பில் சூழ்நிலைகளில் நியாயமானதான மட்டத்தில் அத்தகைய ஊதியத்தை நிர்ணயிக்கலாம்;

(ஆ) நிருவாகி அல்லது உறுதி நிருவாகியொருவர் செல்லுபடியான முறையில் நியமிக்கப்பட்டாரா அல்லது இல்லையா என்பது பற்றி வெளிப்படுத்தலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் நீதிமன்றத்துக்கு பின்வரும் ஆட்களில் எவரும் விண்ணப்பமொன்றைச் செய்யலாம் -

(அ) நிருவாகியாக நியமிக்கப்படவுள்ள நிருவாகி அல்லது ஆளொருவர்;

(ஆ) உறுதி நிருவாகியொருவராக நியமிக்கப்படவுள்ள உறுதி நிருவாகி அல்லது ஆளொருவர்;

(இ) ஒழிப்போன் அல்லது தற்காலிக ஒழிப்போனொருவர்;

(ஈ) பெறுநரொருவர்;

(உ) கடன்தருநரொருவர்;

(ஊ) கம்பெனியில் அக்கறையுடனான எவரேனும் ஆள்;

(எ) ஓராம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தி தொடர்பில், பதிவாளர்; அல்லது

(ஏ) அதிகாரசபை.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் அளிக்கப்பட்டுள்ள தத்துவங்கள் விண்ணப்பம் செய்யப்படும்போது, நிருவாகி அல்லது உறுதி நிருவாகி, விடயத்திற்கேற்றவாறு, அவ்வாறு செயலாற்றுவதிலிருந்து இல்லாதொழிந்துவிட்டாலென்ன, அல்லது இல்லாதொழியாவிட்டாலென்ன, என பிரயோகிக்கப்படலாம்.

நிருவாகம் மற்றும் உறுதி நிருவாகத்தில் நீதிமன்றத்தின் பொதுவான தத்துவங்கள்

**263.** (1) இரண்டாம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆளொருவரின் விண்ணப்பத்தின் மீது, குறிப்பிட்ட கம்பெனி தொடர்பில் ஏற்புடமையாககூடியதான இப்பாகத்தின் ஏற்பாடுகளிலுள்ளதான முறைகள்; தொடர்பில் அது அவசியமானதெனக் கருதுகின்றதான ஏதேனும் கட்டளையை நீதிமன்றம் ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் நீதிமன்றத்துக்கு பின்வரும் ஆட்களில் எவரும் விண்ணப்பமொன்றைச் செய்யலாம் :-

(அ) நிருவாகியாக நியமிக்கப்படவுள்ள நிருவாகி அல்லது ஆளொருவர்;

(ஆ) உறுதி நிருவாகி அல்லது உறுதி நிருவாகியொருவராக நியமிக்கப்படவுள்ள ஆளொருவர்;

(இ) ஒழிப்போன் அல்லது தற்காலிக ஒழிப்போனொருவர்;

(ஈ) பெறுநரொருவர்;

(உ) கடன்கொடுநர் ஒருவர்;

(ஊ) நீதிமன்றத்தின் அனுமதியுடன், கம்பெனியில் அக்கறையுடனான வேறு எவரேனுமாள்;

(எ) பதிவாளர்;

(ஏ) அதிகாரசபை; அல்லது

(ஐ) நீதிமன்றத்தின் அனுமதியுடன், அக்கறையுள்ள வேறு எவரேனுமாள்;

(3) ஓராம் உட்பிரிவின் கீழான கட்டளையொன்றில் நிருவாகம் பின்வருமாறு முடிவடைவதற்கு தேவைப்படுத்தப் படுதல் வேண்டுமென திருப்திபடுகின்றவிடத்து, நீதிமன்றம் நிருவாகத்தினை முடிவுறுத்தலாம் -

(அ) இப்பாகத்தின் ஏற்பாடுகள் பொருள்சார் ரீதியாக அல்லது எதிரிடையாக கையாளப்பட்டுள்ளன; அல்லது

(ஆ) வேறு சில காரணத்துக்காக, நிருவாகத்தை முடிறுத்துவது நீதியானதும் நியாயமானதும் என,

(4) மூன்றாம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒவ்வொரு கட்டளையினதும் பிரதியொன்று, கட்டளையாக்கப்பட்ட பின்னரான ஐந்து வேலைநாட்களுக்குள் நீதிமன்றினால் பதிவாளர் மற்றும் அதிகாரசபைக்கு அனுப்பப்படல் வேண்டும்.

(5) ஓராம் உட்பிரிவின்கீழ் கட்டளையொன்றை ஆக்கு தலில் நீதிமன்றம், அவசியமானதென அது கருதினால் -

(அ) ஏதேனும் நியதியை அல்லது நிபந்தனையை விதிக்கலாம்; அத்துடன்

(ஆ) ஏதேனும் துணைநிலைக் கட்டளையை ஆக்கலாம்.

நிருவாகியின் அல்லது உறுதி நிருவாகியின் கடமைகளை வலியுறுத்து வதற்கான கட்டளை

**264.** (1) இப்பிரிவில், நிருவாகி அல்லது உறுதி நிருவாகி யொருவர் தொடர்பில் “இணங்கியொழுகுவதற்கும் தவறுதல்” என்பது –

(அ) இச்சட்டத்தில் அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ்; அல்லது

(ஆ) இப்பிரிவின்கீழ் இணங்கியொழுகுவதற்குச் செய் யப்பட்ட கட்டளையொன்று தவிர்ந்த, நீதிமன் றத்தின் ஏதேனும் கட்டளையின் அல்லது பணிப்பின்கீழ்

எழுகின்ற கடமையொன்றுடன் இணங்கியொழுகுவதற்கு விடயத்துக்கேற்ப, நிருவாகி அல்லது உறுதி நிருவாகி யொருவரினால் (செயல் அல்லது செய்யாமை மூலம்) தவறுகை ஒன்று என பொருள்படும்.

அத்துடன் "இணங்கியொழுகுதல்" என்பதற்கு நேரொத்த பொருளையும் கொண்டுள்ளது.

(2) மூன்றாம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆளொருவரினாலான விண்ணப்பத்தின்மேல், இணங்கி யொழுகுவதற்குத் தவறுகை புரியப்பட்டுள்ளது அல்லது புரியப்பட்டிருந்திருக்கிறது என நீதிமன்றம் திருப்திபடு கின்றவிடத்து, நீதிமன்றம் -

(அ) நிருவாகியினால் அல்லது உறுதி நிருவாகியொரு வரினால் கடமை மீறப்பட்டது தொடர்பில் கிடைக்கக்கூடியதாக இருக்கக்கூடிய வேறு ஏதேனும் உரிமைக்கு அல்லது பரிகாரத்துக்குப் பங்கமின்றி, கட்டளையில் குறித்துரைக்கப்பட் டிருக்கக்கூடியவாறான அளவுவரை, ஏற்புடையற் பாலதான கடமையுடன் அளவுக்கு இணங்கி யொழுகுவதற்கு விடயத்துக்கேற்ப, நிருவாகிக்கு அல்லது உறுதி நிருவாகிக்கு கட்டளையிடலாம்; அல்லது

(ஆ) முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ ஏற்புடையற்பாலதான கடமையுடன் இணங்கி யொழுகுவதற்கு விடயத்துக்கேற்ப, நிருவாகி அல்லது உறுதி நிருவாகியை விடுவிக்கலாம்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் நீதிமன்றத்துக்கு பின்வரும் ஆட்களில் எவரும் விண்ணப்பமொன்றைச் செய்யலாம் :-

(அ) பெறுநரொருவர்;

(ஆ) கடன்கொடுநரொருவர்;

(இ) கம்பெனியில் அக்கறையுடைய வேறு ஏதேனும் ஆள்;

(ஈ) ஒழிப்போன் அல்லது தற்காலிக ஒழிப்போன்;

(உ) பதிவாளர்; அல்லது

(ஊ) அதிகாரசபை

(4) இணங்கியொழுகுவதற்குத் தவறுகை புரியப்பட்டது பற்றிய அறிவித்தல், விண்ணப்பத்தேதிக்கு முன்னர் பத்து வேலைநாட்களுக்குக் குறையாத காலப்பகுதியினுள் விடயத்துக்கேற்ப, நிருவாகி அல்லது உறுதி நிருவாகியிடம் சேர்ப்பிக்கப்பட்டிருந்தாலொழியவும் அத்துடன் விண்ணப்பத்தேதியன்று உள்ளவாறாக இணங்கியொழுகுவதற்குத் தொடர்ந்தும் தவறுகை புரியப்பட்டாலொழியவும், (2) ஆம் உட்பிரிவின்கீழ் விண்ணப்பம் எதுவும் செய்யப்படுதலாகாது.

(5) இரண்டாம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழ் ஆக்கப்பட்ட ஒவ்வொரு கட்டளையினதும் பிரதியொன்று, கட்டளையாக்கப்பட்ட பின்னரான ஐந்து வேலை நாட்களுக்குள் நீதிமன்றினால் அதிகாரசபைக்கு அனுப்பப்படல்வேண்டும்.

நிருவாகியை அல்லது உறுதி நிருவாகியை நீக்குதல்

**265.** (1) உட்பிரிவு 264 இன் (3) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆளொருவரின் விண்ணப்பத்தின் மீதும் நீதிமன்றம் பின்வருமாறு திருப்திபடுகின்றவிடத்து:-

(அ) நிருவாகியொருவர் அல்லது உறுதி நிருவாகியொருவர் 264 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றுடன் இணங்கியொழுகுவதற்குத் தவறியிருக்கின்றாரென;

(ஆ) நிருவாகியொருவர், நிருவாகியொருவராக நியமிக்கப்படுவதற்கு அல்லது செயலாற்றுவதற்கு 181 ஆம் பிரிவின்கீழ் அனுமதிக்கப்படுவதற்கு இல்லாதொழிந்திருக்கின்றாரென; அல்லது

(இ) உறுதி நிருவாகியொருவர், நிருவாகியொருவராக நியமிக்கப்படுவதற்கு அல்லது செயலாற்றுவதற்கு 226 ஆம் பிரிவின்கீழ் இல்லாதொழிந்திருக்கின்றாரென,

நீதிமன்றம் -

(i) பதவியிலிருந்து விடயத்துக்கேற்ப, நிருவாகி அல்லது உறுதி நிருவாகியை அகற்றுவதற்கான கட்டளையொன்றை ஆக்கலாம்; அத்துடன்

(ii) அத்தகைய கட்டளையை ஆக்குகையில், அவசியமானதான வேறு ஏதேனும் துணைக் கட்டளையை ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட ஒவ்வொரு கட்டளையின் பிரதியொன்று கட்டளையாக்கப்பட்டதன் பின்னரான ஐந்து வேலை நாட்களினுள் நீதிமன்றத்தினால் பதிவாளருக்கும் அதிகாரசபைக்கும் அனுப்பப்படுதல் வேண்டும்.

தொழில் அல்லது ஆதனத்தை பாதுகாக்கும் கட்டளைகள்

**266.** நிருவாகி அல்லது உறுதி நிருவாகியொருவரை பதிவியிலிருந்து அகற்றுகின்ற அல்லது அகற்றுகின்ற பயனைக்கொண்டதான கட்டளையொன்றை நீதிமன்றம் -

(அ) கம்பெனியின் தொழிலை அல்லது ஆதனத்தைப் பேணிக்காப்பதற்கு: அத்துடன்

(ஆ) அந்நோக்கத்திற்காக பதவியிலிருந்து அகற்றப்பட்ட ஆளை –

(i) விடயத்திற்கேற்றவாறு, அத்தகைய நிருவாகியின் அல்லது உறுதி நிருவாகியின் உடைமையில் அல்லது கட்டுக்காவலில் அல்லது கட்டுப்பாட்டின்கீழ் உள்ள அத்தகைய ஆவணங்களை, கட்டளையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான, எவரேனும் ஆளுக்

குக் வழங்கச் செய்யும் அந்நோக்கத்துக்காக, கட்டளையில் குறித்துரைக்கப்பட்டவாறு, அவ்வாளை தேவைப்படுத்ததுகின்றது எனவும்; அத்துடன்

(ii) அவசியமாககூடியவாறு அத்தகைய வேறு நடவடிக்கைகளை எடுக்கவும்,

கடன்கொடுநர்கள் மற்றும் பங்குதாரர்களின் அக்கறைகளை பாதுகாத்தல்

**267.** (1) நிருவாகத்தின் அல்லது உறுதி நிருவாகத்தின் போது எந்நேரத்திலும் ஆனால் (3) ஆம் உட்பிரிவிற்கமைவாக, கம்பெனியின் கடன்கொடுநர் அல்லது பங்குதாரர் அல்லது அதிகாரசபை பின்வருவனவான ஏதுவின் மீது இப்பிரிவின் கீழான கட்டளையொன்றுக்கு நீதிமன்றத்துக்கு விண்ணப்பிக்கலாம் -

(அ) கம்பெனியின் அலுவல்கள், தொழில் அல்லது ஆதனம், நியாயமற்ற பங்கமான முறையில் அல்லது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கடன்கொடுநர்கள் மற்றும் பங்குதாரர்களுக்கெதிரான நியாயமற்ற பாரபட்சமின்மையான முறையொன்றில் நிருவாகியினால் அல்லது உறுதி நிருவாகியினால் முகாமைசெய்யப்பட்டுக்கொண்டிருக்கின்றது அல்லது முகாமைசெய்யப்பட்டிருக்கின்றது; அல்லது

(ஆ) நிருவாகியின் அல்லது உறுதி நிருவாகியின் ஏதேனும் அல்லது உத்தேசிக்கப்பட்ட செயல் அல்லது செய்யாமை ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கடன்கொடுநர்கள் மற்றும் பங்குதாரர்களுக்கெதிராக நியாயமற்ற முறையில் பங்கமாக இருக்கின்றது அல்லது இருக்கும் அல்லது நியாயமற்ற முறையில் பாரபட்சமாக இருக்கின்றது அல்லது இருக்கும்

(2) இப்பிரிவின்கீழான விண்ணப்பத்தின் மீது, நீதிமன்றமானது, அவ்வாறு செய்வது நீதியானதும் ஒப்புரவானதும் என கருதுமிடத்தும், (3) ஆம் உட்பிரிவிற்கு அமையவும்,

(அ) நிருவாகியினால் அல்லது உறுதி நிருவாகியினால் கம்பெனியின் அலுவல்கள், தொழில் மற்றும் ஆதனம் என்பனவற்றின் எதிர்கால நிருவாகத்தினை ஒழுங்குபடுத்துகின்ற; அத்துடன்

(ஆ) விண்ணப்பக்காரரால் முறைப்பாடு செய்யப்பட்ட செயலொன்றை ஒன்றில் செய்வதை அல்லது தொடர்ந்து செய்வதை விட்டுவிடுமாறு நிருவாகியை அல்லது உறுதி நிருவாகியைத் தேவைப் படுத்துகின்ற அல்லது அவர் செய்யாது விட்டு விட்டார் என விண்ணப்பகாரர் முறைப்பாடு செய்கின்றதான செயலொன்றைச் செய்யுமாறு நிருவாகியைத் தேவைப்படுத்துகின்ற,

கட்டளையொன்று உட்பட, அவசியமாககூடியவாறான அத்தகைய கட்டளையை நீதிமன்றம் ஆக்கலாம்.

(3)

(அ) பாகம் IX இன் அத்தியாயம் 6 இன் கீழான (உண்மை அல்லது பிரேரிக்கப்பட்டவை) கம்பெனி ஒழுங்கேற்பாட்டு உறுதியொன்று அல்லது

(ஆ) பாகம் X இன் கீழான இணக்கமொன்று (உண்மை அல்லது பிரேரிக்கப்பட்டவை),

எனும் நியதிகளுக்கான ஏதேனும் முறைப்பாடு இப்பிரிவின்கீழ் செய்யப்படுதல் ஆகாது. ஆனால், அவ்வேற்பாடுகளினால் அனுமதிக்கப்பட்டுள்ளவிடத்து, இச்சட்டத்தின் ஏனைய ஏற்பாடுகளின் கீழ் ஆக்கப்படலாம்.

நிருவாகத்தில் கடன்கொடுநர்களை பாதுகாக்கும் கட்டளை

**268.** கம்பெனியான்று நிருவாகத்திலிருக்கும் வேளையில், பதிவாளர் அல்லது அதிகாரசபையின் விண்ணப்பத்தின் மேல், நீதிமன்றமானது, முழுமையாக கடன்கொடுநர்களின் அக்கறைகளை பாதுகாக்க அவசியமானவாறான ஏதேனும் கட்டளையை ஆக்கலாம்.

## பகுதி X

## இணக்கம்

**269.** இப்பாகத்தில் சொல்லமைப்பு வேறுவகையில் தேவைப்படுத்தினாலொழிய – பொருள் கோடல்

"இணக்கம்" என்பது, பின்வருவனவற்றை உள்ளடக்கிய ஒரு கம்பெனியொன்றிற்கும் அதனது கடன்கொடுநர்களுக்கும், அல்லது அவர்களின் ஏதேனும் வகுப்பினருக்கும் இடையிலான இணக்கம் எனப் பொருள்படும்.

(அ) கம்பெனியின் எல்லா அல்லது பகுதியளவான எவையேனும் தனிசுகள் அல்லது வேறு பொறுப்புக்களை இல்லாதாக்குதல்;

(ஆ) கடன்கொடுநர்களின் உரிமைகளை அல்லது கம்பெனியின் எவையேனும் தனிசுகள் அல்லது வேறு பொறுப்புக்களின் நியதிகளை வேறுபடுத்துதல்; அல்லது

(இ) கம்பெனியின் தனிசுகளை செலுத்துவதற்கு கம்பெனியின் இயலுமையைப் பாதிக்கும் சாத்தியமுள்ளதான கம்பெனியொன்றின் அக விதிகளின்; மாற்றங்களுடன் தொடர்பிலானவை; அத்துடன்

"முன்மொழிபவர்" என்பது, இப்பாகத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க இணக்கமொன்றை முன்மொழிபவரான 270 ஆம் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆளொருவர் எனப் பொருள்படும்.

**270.** (1) கம்பெனியின் அல்லது கம்பெனி வறிதாகவரக் கூடிய சாத்தியமுள்ளதென நம்புவதற்கு அவ்வாள் காரணம் கொண்டுள்ளாரெனின், பின்வரும் ஆட்களுள் எவரேனும் இப்பாகத்தின்கீழ் இணக்கமொன்றை முன்மொழியலாம்- இணக்க முன்மொழிவு

(அ) தீர்மானத்தின்மூலம் கம்பெனியின் சபை;

(ஆ) முழுமையாக அல்லது கணிசமானளவு முழுமையாக கம்பெனியின் ஆதனமும் பொறுப்பு முயற்சிகளும் தொடர்பில் நியமிக்கப்பட்ட பெறுநரொருவர்;

(இ) கம்பெனியின் நிருவாகியொருவர்;

(ஈ) கம்பெனியின் ஒழிப்போனொருவர்; அல்லது

(உ) நீதிமன்றத்தின் அனுமதியுடன் கம்பெனியின் கடன்கொடுநர், கம்பெனியின் கடன்கொடுநரால் நியமிக்கப்பட்ட பெறுநரொருவர் அல்லது கம்பெனியின் பங்குதாரரொருவர்.

(2) ஓராம் உட்பிரிவின் (உ) என்னும் பந்தியின் கீழ் நீதிமன்றம் கடன்கொடுநர், பெறுநர் அல்லது பங்கு தாரருக்கு அனுமதியளிக்குமிடத்து, நீதிமன்றமானது கடன் கொடுநர், பெறுநர் அல்லது பங்குதாரர் என்போருக்கு இணக்கமொன்றை முன்மொழிவதினை இயலச்செய்வதற்கு, கம்பெனியின் கடன்கொடுநர்களின் பெயர்களையும் முகவரி களையும், ஒவ்வொரு கடன்கொடுநருக்கும் கம்பெனியின் தனிசு அல்லது பொறுப்பு பற்றிய தொகை அல்லது மதிப் பிடப்பட்ட தொகையை எடுத்துக்கூறும் பட்டியலொன்றை மற்றும் கட்டளையில் குறித்துரைக்கப்படக்கூடியதான அத்தகைய வேறு தகவல்களையும் குறித்துரைக்கப்படக் கூடியதான அத்தகைய காலப்பகுதியினுள் அனுப்புவதற்கு கம்பெனியைப் பணிக்கின்ற கட்டளையொன்றை ஆக்கலாம்.

(3) முன்மொழிபவரினால் கூட்டப்படும் தனிவேறான கூட்டமொன்றில் கடன்கொடுநர்களின் ஒவ்வொரு வகுப் பினருக்கும் இணக்கமொன்றானது முன்மொழியப்படுதல் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக –

(அ) முன்மொழிபவரானவர் தங்களுடைய பொதுவான அக்கறைகள் வெவ்வேறு வகுப்புக்களில் காணப் படுகின்றன எனும் நோக்குடன் ஒன்றாக இணைந்து அறிவுபூர்வமாக ஆலோசிக்க முடியாதவர்களான அக்கறைகள் மிகவும் வேறு பட்டுள்ள கடன்கொடுநர்கள் வழிமூலம் கடன் கொடுநர்கள் வகுப்புகளை அமைத்துருவாக்குதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) கடன்கொடுநர்களின் வகுப்பின் உறுப்பினர்கள் கம்பெனியில் கண்ணியமான பொருளாதார அக்கறைகள் கொண்டிராவிட்டால், அவ்வகுப் பின் கூட்டமானது கூட்டப்படவேண்டியதில்லை.

(5) முன்மொழிபவரின் அல்லது கம்பெனியின் விண்ணப் பத்தின் மீது, மற்றும் (3) ஆம் உட்பிரிவின் கீழ் கூட்டப்பட்ட கூட்டமொன்றிற்கு முன்னதான எந்நேரத்திலும், (4) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட் விடயங்கள் எவற்றுக்கும் தொடர்பில் நீதிமன்றமானது பணிப்புக்களை வழங்கலாம்.

(6) முன்மொழிபவரின் அல்லது கம்பெனியின் விண்ணப் பத்தின் மீது, கடன்கொடுநர்களினால், அல்லது கடன்கொடு நர் வகுப்பொன்றினால் அங்கீகரிக்கப்பட்ட இணக்கமொன் றிற்கு முன்னதான எந்நேரத்திலும் 272 ஆம் பிரிவின் கீழ் நீதிமன்றமானது 274 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் விண்ணப்பம் செய்யப்படின், விண்ணப்பத்துடன் தொடர் புற்றிருக்கக்கூடிய அல்லது தொடர்புறக்கூடியதான ஏதேனும் விடயம் தொடர்பிலும் பணிப்புகளை வழங்கலாம்.

(7) ஐந்தாம் உட்பிரிவுக்கு பங்கமுமின்றி, (4) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்படும் விடயங்களுக்கு (6) ஆம் உட்பிரிவு ஏற்புடமையாதலாகாது.

(8) ஐந்தாம் மற்றும் (6) ஆம் உட்பிரிவுகளின் விடயங் களிற்கு அமைவான கம்பெனியின் நிலைமையின் முக்கியத் துவம் பற்றிய நோக்கில், அவ்வுட்பிரிவுகளின் எவையேனு மொன்றின் கீழான விண்ணப்பத்தின் மீதான தீர்மானமொன் றானது சாத்தியமானவகையில் விரைவாக மேற்கொள்ளப் படலாம்.

முன் மொழி யப்பட்ட இணக்கம் பற்றிய அறிவித்தல்

**271.** (1) முன்மொழிபவர் 270 ஆம் பிரிவின் (3) ஆம் உட் பிரிவின் கீழ் கூட்டப்படவிருப்பதான ஒவ்வொரு கூட்டத் திலும் பங்குபெறுவதற்கு உரித்துடையவர்களும் முன் மொழிவர் அறிந்துள்ளோர்களுமான கடன்கொடுநர்களின் பட்டியலொன்றை தொகுத்து, ஒவ்வொரு கடன்கொடுநர் களுக்குமான கம்பெனியின் தனிசு அல்லது பொறுப்பின் தொகை அல்லது மதிப்பிடப்பட்ட தொகையை எடுத்துக் கூறுதலும் வேண்டும்.

(2) முன்மொழிபவர், விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில்-

(அ) கம்பெனியின் ஒவ்வொருவரும் அறிந்த கடன் கொடுநர்;

(ஆ) கம்பெனி;

(இ) எவரேனும் பெறுநர்;

(ஈ) எவரேனும் நிருவாகி;

(உ) எவரேனும் ஒழிப்போன்; அத்துடன்

(எ) பதிவாளருக்கு,

தீர்மானத்தின் மீது வாக்களிக்கும் நோக்கத்திற்காக, கடன் கொடுநர்கள்; அல்லது; கடன்கொடுநர் ஏதேனும் வகுப்பின் கூட்டம், அல்லது கடன்கொடுநர்களின் வகுப்புக்களின் கூட்டங்களை நடாத்தும் உட்கருத்துடன் (5) ஆம் அட்ட வணைக்கு இணங்க, விடயத்திற்கேற்ப, கூட்டம் அல்லது கூட்டங்களிற்கு ஆகக்குறைந்தது இருபது வேலைநாட் களிற்கு முன்னர், எழுத்துமூல அறிவித்தலைக் கொடுத்தல் வேண்டும்.

(3) முன்மொழிபவர் (2) ஆம் உட்பிரிவின் கீழான அறிவித்தலொன்றுடன் பின்வரும் ஆவணங்களை இணைத்தல் வேண்டும்:-

(அ) முன்மொழிபவரினாலான –

(i) முன்மொழிபவரின் பெயரையும் முகவரியையும் அவர் எந்தத் தன்மையில் செயலாற்றுகின்றாரோ அந்தத் தன்மையைக் கொண்டுள்ளதும்;

(ii) வழமையான வேலை மணித்தியாலங்களின் போது எந்த முகவரிக்கும் தொலைபேசி இலக்கத்துக்கும் விசாரணைகள் நெறிப்படுத் தப்படலாமோ அந்த முகவரியையும் தொலைபேசி இலக்கத்தையும் கொண்டுள் ளதும்;

(iii) முன்மொழியப்பட்ட இணக்கத்தின் நியதி களையும் அதற்கான காரணங்களையும் தருகின்றதும்;

(iv) பிரேரிக்கப்பட்ட இணக்கத்தின் அங்கீகாரத் தின் விளைவுகளையும் குறிப்பாக அதன் வர்த்தக தாக்கத்தினையும் விளக்குவதும்;

(v) முன்மொழியப்பட்ட இணக்கத்தில் (பணிப் பாளராகவோ அல்லது ஏனைய அலுவல ராகவோ அல்லது வேறுவகையிலோ) கம்பெனியின் பணிப்பாளர் அல்லது ஏனைய அலுவலருக்குள்ள எவையேனும் முக்கிய அக்கறைகளையும் மற்றும் முன்மொழியப் பட்ட இணக்கத்தின் அவர்களது அக்கறை கள் ஏனைய ஆட்களது விருப்பு அக்கறை களது விளைவுகளிலிருந்து இதுவரையில் அது வேறுபட்டிருப்பதனையும் குறிப்பிடு வதும்;

(vi) இருநூற்றி எழுபத்திரெண்டாம் பிரிவுக் கமைய அங்கீகரிக்கப்படின், எல்லாக் கடன் கொடுநர்கள் அல்லது அவ்வகுப்பின் எல்லாக் கடன்கொடுநர்கள் மீது பிணிக் கின்ற பிரேரிக்கப்பட்ட இணக்கத்தினை விளக்குவதும்;

(vii) முன்மொழியப்பட்ட இணக்கமானது அங்கீ கரிக்கப்படாதுவிடின், கம்பெனியின் மாற் றீடுகளின் விபரங்களை உள்ளடக்கியதும்;

(viii) அங்கீகாரத்தின் அனுமதியைத் தொடர்ந்து இணக்கத்தினை மாறுபடுத்துவதற்கான முன் மொழியப்பட்ட இணக்கத்தின் பாகமொன் றாக முன்மொழியப்பட்ட ஏதேனும் நட வடிக்கை முறையின் விபரங்களை உள்ளடக் கியதும்; அத்துடன்

(ix) விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்த கைய ஏனைய தகவல்களை உள்ளடக்கியது மானதுமான

கூற்று; அத்துடன்

(ஆ) இருநூற்றி எழுபதாம் பிரிவின் (ஆ) என்னும் (4) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட தான அவ்வகுப்பின் உறுப்பினர்கள் கம்பெனி யில் உண்மையான பொருளாதார அக்கறை களை கொண்டிருக்கவில்லை எனும் ஏதுவின் மீது, கடன்கொடுநர்கள் வகுப்பின் கூட்ட மொன்று கூட்டப்படாதவிடத்து, முன்மொழி பவரினாலான-

(i) கடன்கொடுநர்களின் ஒவ்வொரு ஏனைய வகுப்பின் உறுப்பினர்களுக்குமான கம்பெனியின் தனிசுகள் அல்லது ஏனைய பொறுப்புகள் தொடர்பில், கடன்கொடுநர்களின் அவ்வகுப்பு உறுப்பினர்களுக்கு கம்பெனியின் தனிசுகள் அல்லது ஏனைய பொறுப்புக்களுடன் தொடர்புடைய தரப்படுத்தலை விளக்குவதும்; அத்துடன்

(ii) அவ்வகுப்பின் உறுப்பினர்கள் கம்பெனியில் உண்மையான பொருளாதார அக்கறைகளை கொண்டிருக்கவில்லை மற்றும் அவ்வகுப்பின் கூட்டம் கூட்டப்படவில்லையென்பதை கூறுவதுமான,

கூற்று; அத்துடன்

(இ) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட கடன்கொடுநர்களின் பட்டியல் அல்லது பட்டியல்களின் பிரதியொன்று.

இணக்கத்தின் விளைவு

**272.** (1) கடன்கொடுநர்களின் கூட்டமொன்றில் அல்லது அக்கடன்கொடுநர்களின் கூட்டமொன்றில் ஐந்தாம் அட்டவணைக்கு இணங்க கூட்டப்பட்டு நடாத்தப்படுமிடத்து, இணக்கமானது அவ்வட்டவணைக்கிணங்க எற்கப்பட்ட தீர்மானத்தின் மூலம் அங்கீகரிக்கப்படுகின்றதுடன் கடன்கொடுநர்கள் அல்லது கடன்கொடுநர்களின் வகுப்பினால் இணக்கமொன்று அங்கீகரிக்கப்படுகின்றது.

(2) இப்பாகத்துக்கு இணங்க, கம்பெனியின் கடன்கொடுநர்களினால், அல்லது கடன்கொடுநர்களின் வகுப்பினால், மற்றும் ஒன்றில் கம்பெனியாலோ, ஒழிப்போனாலோ (கம்பெனியானது ஒழித்துக்கட்டுதலில் காணப்பட்டால்), அல்லது நிருவாகியொருவராலோ (கம்பெனியானது நிருவாகத்தில் காணப்பட்டால்) அங்கீகரிக்கப்பட்ட இணக்கமொன்றானது பின்வருவனவற்றின் மீது பிணிக்கப்பட்டதாக காணப்படும்:-

(அ) கம்பெனி; அத்துடன்

(ஆ) விடயத்திற்கேற்ப, எல்லா கடன்கொடுத்தோர்கள் அல்லது அவ்வகுப்பின் எல்லா கடன்கொடுத்தோர்கள்.

(3) இருநூற்றி எழுபதாம் பிரிவில் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆளொருவரினாலான நீதிமன்றிற்கான விண்ணப்பத்தின்மீது நீதிமன்றமானது, அங்கீகரிக்கப்படின், அவ்விணக்கமானது போதுமானளவில் தொடர்புடையவர்களான, தொடர்புபட்ட கம்பெனிகள் மற்றும் கம்பெனியின் பணிப்பாளர்கள் உள்ளிட்ட, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஆட்களை பொறுப்புக்களிலிருந்து விடுவித்தல் வேண்டுமென நீதிமன்றம் கட்டளையிடலாம்.

(4) மூன்றாம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக இணக்கமொன்றுடன் ஆளொருவர் போதுமானவில் சம்பந்தப்பட்டுள்ளாரா அல்லது இல்லையா என தீர்மானிப்பதில் பின்வருவனவற்றை நீதிமன்றமானது கருத்தில் கொள்ளுதல் வேண்டும்-

(அ) முன்மொழியப்பட்ட விடுப்பானது இணக்கத்தின் உள்ளார்ந்த பகுதியாக காணப்படுகின்றதா அல்லது இல்லையா என;

(ஆ) இணக்கத்தின் கீழ் ஆளானவர் பங்களிக்களிக்கின்றாரா அல்லது இல்லையா என; அத்துடன்

(இ) விடுவிப்பு அற்ற நிலையில் அழைக்கப்பட்டின் கம்பெனிக்கு எதிராக நட்டோத்தரவாத உரிமைக் கோரிக்கையொன்றை கொண்டிருப்பாரா அல்லது இல்லையாயா என;

(5) இணக்கமொன்றை முன்மொழிகின்ற தீர்மானம் கடன் கொடுநர்களின் ஒன்றுக்கு அல்லது அதற்கு மேற்பட்ட வகுப்பினருக்கு முன்வைக்கப்படுமிடத்து, முரணானது தீர்மானத்தில் வெளிப்படையாக கூறப்பட்டாலொழிய, தீர்மானத்தின் மீது வாக்களிக்கின்ற ஏனைய ஒவ்வொரு வகுப்பினராலும் இணக்கத்தின் அங்கீகரிப்பின்மீது, இணக்கத்தை அங்கீகரித்தலை நிபந்தனையாகக் கொண்டுள்ளதென ஊகிக்கப்படுதல் வேண்டும்.

(6) முன்மொழிபவர், வாக்களித்தலின் எண்சார் பெறுபேறு பற்றிய எழுத்துமூல அறிவித்தலை, விதித்துரைக்கப்படக் கூடியவாறான, அத்தகைய முறையிலும் அத்தகைய காலப் பகுதியினுள்ளும் பின்வருவோருக்குக் கொடுத்தல் வேண்டும்-

(அ) தெரிந்த ஒவ்வொரு கடன்கொடுநர்கள்;

(ஆ) கம்பெனி;

(இ) எவரேனும் பெறுநர்;

(ஈ) எவரேனும் நிருவாகி;

(உ) எவரேனும் ஒழிப்போன்; அத்துடன்

(ஊ) பதிவாளர்.

(7) ஆறாம் உட்பிரிவிற்கிணங்க, பதிவாளருக்கு அறிவித்தலை வழங்குதலின் மேல் அங்கீகரிக்கப்பட்ட இணக்கமொன்று பயனுறதலாக வரும்.

இணக்கத்தின் மாறுபாடுகள்

**273.** (1) இருநூற்றி எழுத்திரொண்டாம் பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட இணக்கமொன்று பின்வருவனவாறு வேறுபடுத்தப்படலாம்-

(அ) அங்கீகரிக்கப்பட்டவாறான இணக்கத்தின் கூட்டிணைக்கப்பட்ட வேறுபாட்டுக்கான ஏதேனும் நடவடிக்கை முறைக்கிணங்க; அல்லது

(ஆ) முன்மொழியப்பட்ட ஏதேனும் வேறுபாடு முன்மொழியப்பட்டவோர் இணக்கம் என்றாற்போன்று, அவசியமானவாறான அத்தகைய திரிபுகளுடன் அந்நோக்கத்துக்காக ஏற்புடையதாக வேண்டியதான இப்பாகத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட தேவைப்பாடுகளுக்கிணங்க இணக்கத்தின் வேறுபாட்டை அங்கீகரிப்பதன் மூலம்.

(2) இப்பாகமானது இப்பிரிவிற்கிணங்க வேறுபடுத்தப்பட்ட ஏதேனும் இணக்கத்துக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

இணக்கம் தொடர்பில் நீதி மன்றத்தின் தத்துவங்கள்

**274.** (1) முன்மொழிபவரின் அல்லது கம்பெனியின் விண்ணப்பத்தின் மேல், நீதிமன்றம்-

(அ) அவ்வாறு செய்தல் நீதியானதாக இருக்குமென நீதிமன்றம் திருப்தியுறுமிடத்து, இப்பாகத்தின் கீழ் அல்லது சுமத்தப்பட்ட நடவடிக்கை முறைசார் தேவைப்பாடு தொடர்பான பணிப்புகளை

வழங்கலாம் அல்லது அத்தகைய ஏதேனும் தேவைப்பாட்டை விட்டழிப்புச் செய்யலாம் அல்லது வேறுபடுத்தலாம்; அல்லது

(ஆ) இணக்கத்தின் அங்கீகாரத்துக்கு கடன்கொடுநர் களிடமிருந்து போதுமான ஆதரவு உள்ளதென நீதிமன்றம் திருப்திபடுகின்றவிடத்து, எத்தேதி யன்று முன்மொழியப்பட்ட இணக்கம் பற்றிய அறிவித்தல் கொடுக்கப்பட்டதோ அத்தேதிக்கு முந்தாமல் தொடருகின்றதும், அதன்மீதான வாக்களிப்பின் பெறுபேறு பற்றிய அறிவித்தல் எத்தேதியன்று கொடுக்கப்பட்டதோ அத்தேதி யிலிருந்து இருபது வேலைநாட்களுக்குப் பிந்தாமல் முடிவுகின்றதுமான கட்டளையிற் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதியின்போது, நீதிமன்றத்தின் அனுமதி தவிர-

(i) கம்பெனியொன்றிடமிருந்து வருமதியாக வுள்ள தனிசொன்று தொடர்பான வழக்கு நடவடிக்கைகள் நிறுத்தப்படல் அல்லது தடுக்கப்படல் வேண்டுமென் றும்; அத்துடன்

(ii) ஆதனத்தின் வில்லங்கத்தினை வலுவுறு த்தவதில் அல்லது உடைமை கொள்ளு வதலில் அல்லது வேறு வகையில் மீளப் பெறுவது உள்ளிட்ட கம்பெனியிட மிருந்து வருமதியான தனி சொன்றின் திருப்தியுறலை வலுவுறுத்துவதற்குக் கடன்கொடுநர் வேறேதேனும் வழி முறையை எடுப்பதனைத் தவிர்த்தல் வேண்டுமென்றும்,

கட்டளையிடலாம்.

(2) இணக்கமொன்றின் மேல் வாக்களிப்பதற்கு உரித் துடையவராகவிருந்த கம்பெனியின் கடன்கொடுநர் ஒருவரின் விண்ணப்பத்தின் மீது –

(அ) கடன்கொடுநருக்கு கூட்டம் பற்றி போதி யதற்றதான அறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ள தென அல்லது அக்கடன்; கொடுநர் தொடர்

பில், 271 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்திக்கு அல்லது 271 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழான கூற்றொன்றில் உள்ளடக்கப்படுவதற்கு தேவைப்பட்ட கருமங்களுடன் இணங்கியொழுகுவதற்கு தவறுகின்றதென;

(ஆ) இணக்கம் பற்றிய அங்கீகாரத்தைப் பெறுவதில் வேறு சில முக்கிய ஒழுங்கீனம் உள்ளதெனவும்; அல்லது

(இ) இணக்கத்துக்கெதிராக வாக்களித்த ஒரு கடன்கொடுநரின் விடயத்தில், இணக்கமானது அந்தக் கடன்கொடுநருக்கு அல்லது அக்கடன்கொடுநர் எந்தக்கடன் வகுப்பைச் சேர்ந்தவராகவுள்ளாரோ அந்தக் கடன்கொடுநர் வகுப்புக்கு நியாயமற்ற முறையில் பங்கம் விளைவிப்பதாகவுள்ளதென்றும்,

நீதிமன்றம் திருப்திப்படுமிடத்து, அத்தகைய கடன்கொடுநர் இணக்கத்தினால் பிணிக்கப்பட்டவரல்லவென நீதிமன்றம் கட்டளையொன்றை ஆக்கலாம் அல்லது அவசியமானதான அத்தகைய வேறு கட்டளையை ஆக்கலாம்.

(3) இரண்டாம் உட்பிரிவின் கீழான விண்ணப்பமொன்று விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதியினுள் செய்யப்படுதல் வேண்டும்.

இணக்கத்தின் செலவுகள்

**275.** நீதிமன்றம் வேறுவகையாக கட்டளையிட்டாலொழிய, முன்மொழியப்பட்ட இணக்கத்தின்மீது வாக்களிக்கும் நோக்கத்துக்காக் கடன்கொடுநர்களின் கூட்டமொன்றை ஒழுங்குபடுத்தி நடாத்துவதில் உறப்பட்ட ஆகுசெலவு -

(அ) கம்பெனியினால் கொடுத்துத் தீர்க்கப்படுதல் வேண்டும்;

(ஆ) ஒரு ஒழிப்போனினால் உறப்படின், ஒழித்தக் கட்டலின் செலவாகவிலப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்;

(இ) நிருவாகியொருவரினால் உறப்படின், நிருவாகத்தின் செலவாகவிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்; அல்லது

(ஈ) வேறெவரேனுமாளினால் உறப்படின், அவ் வாளுக்குக் கம்பெனியிடமிருந்து வருமதியாக வுள்ள தனிசொன்றாக இருப்பதாகக் கருதப் படுதல் வேண்டுமென்பதுடன், ஒழித்துக்கட்டு தலில் நான்காம் அட்டவணையிற் குறித் துரைக்கப்பட்ட முன்னுரிமை ஒழுங்குவரிசை யின்படி செலுத்தப்படற்பாலதானதாகும்.

## பாகம் XI

### நுண் சிறிய நடுத்தர தொழில்முயற்சி கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடுகள் (எம்எஸ்எம்இ)

எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள் கட்டமைப்பு ஒழுங்கேற் பாடுகள்.

**276.** (1) இப்பாகம் சிறிய கம்பெனியொன்று தனிப்பட்ட கடன்வகையிறுவகையின்மை முன்மொழிபவர் அல்லது தனிப்பட்ட கடனிறுவகையின்மை நிருவாகியொருவரின் உதவியுடன், கம்பெனியின் வெளிநிற்கும் பொறுப்புக்களது திருப்தியுறலில், அதன் கடன்கொடுநர்களுடனான நெகிழ் வான மீள்கொடுப்பனவு ஒழுங்கேற்பாடொன்றை பேசித் தீர்க்க முடியுமான எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள் கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டு நடவடிக்கை முறையை தாபிக்கின்றது.

(2) எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங் கேட்பாட்டு நடவடிக்கை முறையானது ஒழித்துக்கட்டல் மற்றும் தேவையற்ற செலவுகள் மற்றும் நிருவாகத்தின் சிக்கல் தன்மையை தவிர்த்து, பொருளாதார புனர்வாழ்வினை எய்துவதற்கு சிறிய கம்பெனிகளை இயலச்செய்வதற்கான நோக்கைக் கொண்டுள்ளது.

(3) எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங் கேற்பாட்டு நடவடிக்கைமுறையானது கம்பெனிகள் மற்றும் கடன்கொடுநர்களுக்கிடையில் பேச்சுவார்த்தையின் மூல மான தனிசுகளின் மீள்கட்டமைப்பின் ஊடாக எம்எஸ்எம்இ கம்பெனிகளின் புனர்வாழ்வு மற்றும் மீட்பை இயலுமாக்கு வதனை நோக்காகக் கொண்டுள்ளது.

எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள் கட்டமைப்பு ஒழுங்கேற்பாடுகள்: பொதுவான நிபந்தனைகள்

**277.** (1) இப்பாகத்தின் நோக்கங்களுக்காக, "எம்எஸ்எம்இ கடனாளி" என்பது 282 ஆம் பிரிவின் கீழ் உத்தியோக பூர்வமான பெறுநரிற்கு முன்மொழிவினை சமர்ப்பிக்கும் நேரத்தில் ஐம்பது மில்லியன் ரூபாவுக்கு மேற்படாத தொகையை மொத்த நிலுவையிலுள்ள பிணைப்பொறுப் பளிக்கப்பட்ட மற்றும் பிணைப்பொறுப்பளிக்கப்படாத தனிசுகள் என்பவற்றைக் கொண்டுள்ளதான கம்பெனி எனப் பொருள்படும்.

(2) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, 278 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தகவுடைய கட்டளைக்கற்களை திருப் திப்படுத்தும் எம்எஸ்எம்இ கடனாளி எம்எஸ்எம்இ கடனாளி யின் தனிசுகளின் கொடுப்பனவு, திருப்திப்படுத்தல் அல்லது மீள்கட்மைப்பு என்பன தொடர்பில் எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டுக்காக கடன்கொடு நர்களிற்கு முன்மொழிவொன்றை சமர்ப்பிக்கலாம்.

(3) எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங் கேற்பாட்டுக்கான பிரேரணையொன்று, இப்பாகத்தின் ஏற்பாடுகள் மற்றும் விதித்துரைக்கப்படக்கூடியவாறான ஏதேனும் நடவடிக்கைமுறைக்கு இணங்க, எம்எஸ்எம்இ கடனாளினால், அல்லது எம்எஸ்எம்இ கடனாளி சார்பில் தனிப்பட்ட கடனிறுவகையின்மை பிரேரணையாளரினால் மேற்கொள்ளப்பட்டு சமர்ப்பிக்கப்படலாம்.

(4) தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை முன்மொழிபவர்; ஒருவர் தனிப்பட்ட கடனிக்கறுவகையின்மை நிருவாகியாக எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற் பாடு பயனுறலிற்கு வந்ததன் பின்னர் செயலாற்றலாம்.

(5) இப்பாகத்தின் கீழ் தனிப்பட்ட கடனிறுக்கவகை யின்மை முன்மொழிபவர்கள் மற்றும் தனிப்பட்ட கடனிறுக்க வகையின்மை நிருவாகிகளின் பணிகளின் நிறைவேற்று கையை ஒழுங்குபடுத்தும் அதிகாரசபையினால் எவையேனும் விதிகள் ஆக்கப்படலாம்.

(6) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட எம்எஸ்எம்இ கம்பெனி தொடர்பிலான, எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடுகளுக்கான ஒன்று அல்லது இரண்டு முன்மொழிவுகள் பின்வருமாறுள்ளவிடத்து, ஒரு முன்மொழிவாக கையாளப்படலாம்-

(அ) எம்எஸ்எம்இ கடனாளிகளது நிதிசார் உறவு முறை ஈடுபட்டுள்ளமையினால் அவற்றுடன் சேர்த்து அவாகள் நியாயமாக கையாளக்கூடிய தானவற்றை தனிப்பட்ட கடனிறுக்கவகை யின்மை முன்மொழிபவர் கவனத்துட்கொள்ளு மிடத்து; அத்துடன்

(ஆ) முன்மொழிவுகள் ஒவ்வொன்றினதும் நியதிகள் பின்வருவன உள்ளடங்கலாக எவ்வாறு ஒழுங் கேற்பாடுகள் ஒன்று சேர்த்து நிருவகிக்கப் படுதல் வேண்டும் என்பது பற்றிய விபரங் களைக் குறித்துரைக்கின்றது–

(i) கூட்டு மற்றும் தனிப்பட்ட சொத்துக்கள் பற்றிய கூட்டு மற்றும் தனிப்பட்ட தனிசுகளின் பரிகரிப்பு;

(ii) ஒழுங்கேற்பாடுகள் ஒவ்வொன்றினதும் அங்கீகாரம் வேறொரு ஒழுங்கேற்பாட் டின் அங்கீகாரத்தின் மீது எதிர்பாராத தாகவிருக்கின்றதா;

(iii) வேறு ஏதேனும் ஒழுங்கேற்பாட்டின் அங்கீகாரத்தின் மீதான ஒரு ஒழுங்கேற் பாட்டின் தவறுகையின் விளைவு அல்லது முன்னதான முடிவுறுத்துகை; அத்துடன்

(iv) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட எம்எஸ்எம்இ கடனாளிகளினால் செய் யப்பட்ட எவையேனும் கூட்டு கொடுப் பனவுகள் கடன்கொடுநர்களுக்கிடையில் விகிதமிடப்படுதல் வேண்டும்.

(7) எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங் கேற்பாடொன்று தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மைக்கு நிருவாகியொருவருக்கு பின்வருவனவற்றுக்காக அதிகார மளிக்கலாம் அல்லது தேவைப்படுத்தலாம்-

(அ) எம்எஸ்எம்இ கடனாளியின் சார்பில் அல்லது கடனாளியின் பெயரில் எம்எஸ்எம்இ கடனா ளியின் தொழிலை அல்லது வியாபாரத்தை, அல்லது வர்த்தகத்தை கொண்டு நடாத்து வதற்கு;

(ஆ) எம்எஸ்எம்இ கடனாளியின்; சொத்துக்களை தேறிப்பெறுவதற்கு; அல்லது

(இ) எம்எஸ்எம்இ கடனாளியின் எவையேனும் நிதியங்களை சேகரிப்பதற்கு, நிருவகிப்பதற்கு அல்லது கையுதிர்ப்பதற்கு.

எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள் கட்ட மைப்பு ஒழுங்கேற் பாடு: தகவுடமை கட்டளைக் கற்கள்

**278.** எம்எஸ்எம்இ கடனாளி பின்வரும் எல்லா கட்டளைக்கற்களை ஈடுசெய்யும் போது, எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டைச் செய்வதற்கு தகவுடையவராதல் வேண்டும்:-

(அ) எம்எஸ்எம்இ கடனாளி 409 ஆம் பிரிவிற் கிணங்க, வழமையான தொழிலின்போது வருமதியாகவிருந்த, அதனது தனிசுகளைகளின் சிலவற்றை அல்லது எல்லாவற்றையும் செலுத்துவதற்கு இயலாதிருக்கும் அல்லது செலுத்துவதற்கு இயலாதவரான சாத்தியமுள்ளது என; அத்துடன்

(ஆ) எம்எஸ்எம்இ கடனாளி; தற்போது ஒழித்துக் கட்டல் நடவடிக்கைமுறைகளில் தற்போது இல்லாதிருத்தல்.

எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள் கட்டமைப்பு ஒழுங்கேற் பாடுகள்: பணிப் புறுத்ததும் ஏற்பாடுகள்;

**279.** (1) இருநூற்றி தொண்ணூற்றி நான்காம் பிரிவின் நிபந்தனைகளின்படி, ஒருங்கேற்பாடு தொடர்பில் தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நிருவாகியொருவராக செயலாற்றுவதற்கு எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடொன்றானது ஆள், குழுமம் அல்லது குழுவொன்றுக்கு அதிகாரமளித்தல் வேண்டும்.

(2) எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடொன்றானது ஒழுங்கேற்பாடு தொடர்பில் முறையாக உறப்பட்டவையான தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை முன்மொழிபவர் மற்றும் தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நிருவாகியின் கட்டணங்கள் மற்றும் செலவினங்களுக்கான கொடுப்பனவை ஏதேனும் தனிசுகள் செலுத்தப்படுவதற்கு முன்னதாக வழங்குதல் வேண்டும்.

(3) எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடொன்று –

(அ) முந்துரிமையுள்ள உரிமைக்கோரிக்கைகளுக்கு பின்னாலுள்ள முந்துரிமைக்கோரிக்கையொன்று; அல்லது

(ஆ) முந்துரிமைக் கோரிக்கையல்லாத உரிமைக் கோரிக்கையொன்றின்,

முன்னுரிமையைவிட வேறுவகையில் செலுத்தப்படக்கூடிய முந்துரிமை உரிமைக் கோரிக்கையொன்றுக்காக முந்துரிமை உரிமைக்கோரிக்கையின் வகிப்பவர் அத்தகைய உரிமைக் கோரிக்கைக்கான வேறுபட்ட பரிகரிப்பு பற்றி எழுத்து மூலம் சம்மதம் அளிக்கப்பட்டாலொழிய, வழங்குதலாகாது.

(4) எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங் கேற்பாடொன்றானது ஆறு மாதங்களிற்கு மேற்படாத கிரம மான இடைவேளைகளில், தனிப்பட்ட கடனிறுக்கவகை யின்மை நிருவாகியொருவரினால் எம்எஸ்எம்இ கிரமமான இடைவேளைகளில், மீளாயப்படுகின்ற சந்தர்ப்பங்களை வழங்கலாம்.

எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள் கட்டமைப்பு ஒழுங்கமைப்பு: பாதுகாக்கப் பட்ட கடன் கொடுத்தோர் கள் மற்றும் ஆதன உரிமைகள்

**280.** (1) இப்பகுதியின் ஏற்பாடுகளின் கீழானவற்றை விட எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங் கமைப்பொன்றின் நிபந்தனைகள் மீது ஒப்புக்கொண்ட திறத்தவர்களது இயலமையை மட்டுப்படுத்தாது, ஒழுங் கமைப்பொன்றானது கொடுப்பனவு, தீர்ப்பனவு, அல்லது உத்தரவாதப்படுத்தப்படாத மற்றும் உத்தராவாதப்படுத்தப் பட்ட தனிசுகள் மற்றும் வாடகைக் கொள்வனவு உடன் படிக்கையின் எதிர்திறத்தவர்களது உரிமைகள் என்பவற்றை வழங்கும் நியதிகளை உள்ளடக்கலாம்.

(2) இருநூற்றி எண்பத்தி நான்காம் ஆம் பிரிவின் கீழான எம்எஸ்எம்இ கடனாளியின் பிரேரணையின் கடன்கொடுநர் களின் அங்கீகாரத்தின் மீதான விதிகளுக்கமைய, எம்எஸ் எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடு பின்வருவனவற்றை உள்ளடக்கியதான பிணைப்பொறுப்பு அல்லது வாடகைக்கொள்வனவு உடன்படிக்கைக்கு அமைந்த தான ஏதேனும் ஆதனத்தின் பரிகரிப்புக்காக ஏற்பாடு செய்கின்ற நியதிகளை உள்ளடக்கலாம்-

(அ) ஆதனத்தின் விற்பனை கையுதிர்ப்பு; அல்லது

(ஆ) எம்எஸ்எம்இ கடனாளிக்கான ஆதனத்தின் ஒப்படைப்பு; அல்லது

(இ) ஆதனத்தின் பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கடன்கொடுநர் அல்லது வாடகைக் கொள் வனவு உடன்படிக்கை எதிர்திறத்தவராலான தக்கவைத்திருத்தல்

(3) 284 ஆம் பிரிவின் கீழான எம்எஸ்எம்இ கடனாளி; முன்மொழிவினது கடன்கொடுநர்களின் அங்கீகாரத்தின் மீதான விதிமுறைகளுக்கமைவாக, எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடு பின்வரும் நியதிகளை உள்ளடக்கலாம்-

(அ) பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கடன்கொடுநர் அல்லது வாடகைக் கொள்வனவு உடன் படிக்கை எதிர்திறத்தவரது உரிமைகளை மாற்றியமைத்தல்; அல்லது

(ஆ) எவ்வாறாயினும், பிணைப்பொறுப்பளிக்கப் பட்ட கடன்கொடுநர் அல்லது வாடகைக் கொள்வனவு உடன்படிக்கை எதிர்திறத்தவர் ஒழுங்கேற்பாடானது நடைமுறையிலிருக்கும் வேளையில், அதன் பிணைப்பொறுப்பு அல்லது ஆதனத்தை கைப்பற்றுதலோ அல்லது தேறிப்பெறுதலோ ஆகாது.

(4) இருநூற்றி எண்பத்தி நான்காம் பிரிவின் கீழான எம்எஸ்எம்இ கடனாளியின் முன்மொழிவானது கடன்கொடு நர்களின் அங்கீகாரத்தின் மீதான விதிகளுக்கமைய, எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பா டொன்று பிணைப்பொறுப்பின் பெறுமதியைவிட குறைக் கப்பட்ட மூல பணத்தொகையானது குறைவானதல்ல என ஒழுங்கேற்பாடு குறித்துரைக்கின்றவிடத்து மாத்திரம், பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட தனிசு அல்லது வாடகை கொள்வனவு உடன்படிக்கை தொடர்பில் சேர்மதியாகவுள்ள மூலப்பணத்தொகையின் குறைப்பை எற்பாடு செய்கின்ற நியதிகளை உள்ளடக்கலாம்.

(5) இருநூற்றி எண்பத்தி நான்காம் பிரிவின் கீழான எம்எஸ்எம்இ கடனாளியின் முன்மொழிவினது கடன்கொடு நர்களின் அங்கீகாரத்தின் மீதான விதிகளுக்கமைவாக, எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்

பாடொன்று பின்வருவனவற்றுக்காக ஏற்பாடுசெய்கின்ற நியதிகளை உள்ளடக்கலாம்-

(அ) ஏதேனும் தவறுகையின், நியாயமான காலத்திற்குள் தேற்றுதல்; அத்துடன்

(ஆ) ஒழுங்கேற்பாட்டின் பூர்த்திக்குப் பின்னர் கடைசி கொடுப்பனவானது வருமதியாகவுள்ள ஏதேனும் பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட தனிசின் மீது ஒழுங்கேற்பாடு பயனுறுகின்ற வேளையிலான கொடுப்பனவுகளின் பராமரிப்பு.

(6) இருநூற்றி எண்பத்தி நான்காம் பிரிவின் கீழான எம்எஸ்எம்இ கடனாளியின்; முன்மொழிவினது கடன்கொடுநர்களின் அங்கீகாரத்தின் மீதான விதிமுறைகளுக்கமைவாக, எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடு பின்வருவனவற்றுக்கு ஏற்பாடு செய்கின்ற நியதிகளை உள்ளடக்குதல் வேண்டும்-

(அ) ஏதேனும் தவணை தவறுகையின் நியாயமான காலப்பகுதியிற்குள் தேற்றுதல்; அத்துடன்

(ஆ) எம்எஸ்எம்இ கடனாளி; இயைபான கடன் கொடுநருடன் செய்துள்ள வாடகை உடன்படிக்கையின் கீழ் எழுகின்ற ஒழுங்கேற்பாடு பயனுள்ளதாகவிருக்கின்ற வேளையில் வாடகை கொடுப்பனவுகளின் பேணுகை.

எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள் கட்டமைப்பு ஒழுங்கேற்பாடுகள்: தனிப்பட்ட கடனிறு வகையின்மை முன்மொழிபவரின் நியமனம்

**281.** (1) எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடு ஒன்றுக்கு எம்எஸ்எம்இ கடனாளி முன்மொழிவொன்றை செய்வதற்கு விரும்புகின்றவிடத்து, 293 ஆம் பிரிவின் நியதிகளுக்கமைய, தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை முன்மொழிபவராக செயலாற்றுவதற்கு ஆளொருவர், குழுமம்; அல்லது குழுவினை நியமித்தல் வேண்டும்.

(2) எம்எஸ்எம்இ கடனாளி மற்றும் தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை முன்மொழிபவர் ஆகியோர் உடன்படின், முன்மொழியப்பட்ட எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடொன்று தொடர்பில், தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை முன்மொழிபவராக நியமிக்

கப்பட்ட ஆள், குழுமம் அல்லது குழு தனிப்பட்ட கடனிறுக்க வகையின்மை நிருவாகியாகவும் செயலாற்றலாம்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்படுகின்றதன்மீது தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை முன்மொழிபவர் -

(அ) தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை முன் மொழிபவரானவர் எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடு முன் மொழிவு தொடர்பில், தனிப்பட்ட கடனிறுக்க வகையின்மை முன்மொழிபவரின் வகிபாகத்தில் செயலாற்றுவதற்கு எம்எஸ்எம்இ கம்பெனி சம்மதம் அளித்துள்ளார்; என எழுத்துமூலம் உறுதிப்படுத்துதல்; வேண்டும்;

(ஆ) எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடொன்றின் பயனுறுதலிலிருந்து தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நிருவாகியாக செயலாற்றுவதற்கு பிரேரணையாளர் சம்மதமளிப்பின், எம்எஸ்எம்இ கடனாளிக்கு எழுத்துமூலம் சம்மதத்தினை உறுதிப்படுத்துதல் வேண்டும்; அத்துடன்

(இ) தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை முன்மொழிபவராகவும், இயைபானவிடத்து, தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நிருவாகி செயலாற்றுவதற்குமான அதன் நியமனத்தை உத்தியோகப்பூர்வ பெறுநரிற்கு அறிவித்தல் வேண்டும்.

(4) எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடொன்றை தயாரிப்பதில் எம்எஸ்எம்இ கடனாளிக்கு உதவுவதற்கு உடன்பட்டுக்கொண்ட தனிப்பட்ட கடனிறுக்க வகையின்மை முன்மொழிபவரொருவர் -

(அ) எம்எஸ்எம்இ கடனாளியின் நிதிசார் நிலையை நியாயமான துல்லியத்துடன் மதிப்பிட இயலுமானவகையில் எம்எஸ்எம்இ கடனாளியின் ஆதனம் மற்றும்; நிதி அலுவல்களிற்குள் அத்தகைய நியாயமான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும்; அத்துடன்

(ஆ) இப்பாகத்தினாலும் மற்றும் விதித்துரைக்கப் படக்கூடியவாறான படிவத்தினாலும் குறித் துரைக்கப்பட்ட முறையில் எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற் பாட்டினைத் தயாரித்தல் வேண்டும்.

(5) எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங் கேற்பாட்டுகான பிரேரணையொன்றின் தயாரிப்பில் உதவி செய்வதற்கு தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை பிரே ரணையாளரை இயலச் செய்யும் நோக்கத்துக்காக, எம்எஸ்எம்இ கடனாளி 33 ஆம் பிரிவுக்கிணங்க, எம்எஸ்எம்இ கடனாளியின் எல்லா நிதிசார் அலவல்களின் எம்எஸ்எம்இ இன் பணிப்பாளர்களின் மிகச்சிறந்த அறிவுக்கு முழுமையாக வெளிப்படுத்துகின்ற கூற்றை தனிப்பட்ட கடனிறுக்கவகை யின்மை பிரேரணையாளருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

(6) விதிகள், நியமங்கள், செயல்முறைப் பணிப்புகள், நடத்தைக்கோவைகள், அல்லது வழிகாட்டுநெறிகள் என்பன எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு புனர்வாழ்வு கட்டளை யொன்றின் முன்மொழிவைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்த லில் எம்எஸ்எம்இ கடனாளிக்கு உதவுவதில் தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை முன்மொழிபவர்களின் பணிகள் தொடர்பில் அதிகாரசபையினால் ஆக்கப்படலாம்.

எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள் கட்டமைப்பு ஒழுங்கேற்பா டுகள்: எம்எஸ்எம்இ கடனாளி முன் மொழிவின் தயாரிப்பு

**282.** (1) 278 ஆம் பிரிவின் கீழான கட்டளைக்கற்களை ஈடுசெய்யும்; எம்எஸ்எம்இ கடனாளி; எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஒழுகேற்பாட்டுக்கான முன் மொழிவினை தனிப்பட்ட கடனிறுவகையின்மை முன்மொழி பவரின் உதவியுடன் தயாரிக்கலாம்.

(2) எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங் கேற்பாடொன்றுக்கான முன்மொழிவின் படிவமானது விதித் துரைக்கப்படலாம்.

(3) எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங் கேற்பாடொன்றுக்கான முன்மொழிவானது-

(அ) எம்எஸ்எம்இ கடனாளியின் அதிகாரமளிக்கப் பட்ட பிரதிநிதியினால் கையொப்பமிடப்பட்டி ருத்தல் வேண்டும்;

(ஆ) பின்வருவோரின் பெயரின் மீது புறக்குறிப் பிட்டிருத்தல் வேண்டும்-

(i) தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை முன்மொழிபவராக செயலாற்றும்; ஆள், குழுமம்; அல்லது குழு; அத்துடன்

(ii) எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டின்; பயனுறுதலுடன் தனிப்பட்ட கடனிறுக்க வகையின்மை நிருவாகியாக செயலாற்றுவதற்கு விரும்பும் ஆள், குழுமம்; அல்லது குழு.

(4) எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடொன்றுக்கான முன்மொழிவானது பின்வரும் அபிப்பிராயத்தினை கொண்டிருக்கின்றது என்பதனை உறுதிப்படுத்தும் தனிப்பட்ட கடனிறுவகையின்மை முன்மொழிபவரது கூற்றினை உள்ளடக்குதல் வேண்டும்-

(அ) எம்எஸ்எம்இ கடனாளி; 278 ஆம் பிரிவின் தகுதிகாண் தேவைப்பாடுகளை திருப்தியுறுத்துகின்றார்;

(ஆ) தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை முன்மொழிபவரின் சிறந்த அறிவிற்கு, எம்எஸ்எம்இ கடனாளியின் நிதி அலுவல்கள் கூற்றினில் உள்ளடக்கப்பட்டிருக்கும் தகவல்களானது முழுமையானதும் துல்லியமானதுமாகும்;

(இ) முன்மொழிவானது அங்கீகரிக்கப்படுகின்றதும் நடைமுறைப்படுத்தப்படுகின்றதுமான நியாயமான உத்தேசத்தைக் கொண்டுள்ளது; அத்துடன்

(ஈ) எம்எஸ்எம்இ கடனாளியின் கிடைக்கக்கூடிய ஆதனம் மற்றும் வருமானத்திலிருந்து கடன் கொடுநர்களிற்கு பங்களிப்புக்களை அனுமதிக்கும் அதேவேளை, எம்எஸ்எம்இ கடனாளிகளின் பொருளாதார புனர்வாழ்வுக்கு வசதியளிக்கும் நியாயமான வழிமுறைகளை முன்மொழிவானது முனைகின்றது.

(5) எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடு ஒன்றுக்கான முன்மொழிவானது, விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேவைப்பாடுகளிற்கு

மேலதிகமாக, எம்எஸ்எம்இ கடனாளியின் நிதி அலவல்களது கூற்றினையும் கட்டாயமாக உள்ளடக்குகின்றது.

(6) ஐந்தாம் உட்பிரிவினால் தேவைப்படுத்தக்கூடியதான எம்எஸ்எம்இ கடனாளியின் நிதிசார் அலுவல்கள் பற்றிய கூற்று 33 ஆம் பிரிவுக்கிணங்கவிருத்தல் வேண்டும்.

(7) எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடொன்றுக்கான முன்மொழிவானது பின்வருவனவற்றிற்கான எம்எஸ்எம்இ கடனாளியின் சம்மதத்திற்கான கூற்றினை உள்ளடக்குதல் வேண்டும்-

(அ) எம்எஸ்எம்இ கடனாளி 278 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தகுதிகாண் கட்டளைக் கற்களை பூர்த்திசெய்கின்றாரா என்பதனை தீர்மானிப்பதற்கு அவசியமானதாக கருதப்படும் அத்தகைய விசாரணைகளை உத்தியோகபூர்வ பெறுநர் மேற்கொள்ளல்;

(ஆ) அத்தகைய விசாரணைகளிற்கு திருப்திகரமான பதில்களை உத்தியோகபூர் பெறுநர் பெறும் வரையில், உத்தியோகபூர்வ பெறுநரினாலான எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டு முன்மொழிவின் பிரதிபலன்களை பிற்போடுதல்;

(இ) எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு புனர்வாழ்வு ஒழுங்கேற்பாடொன்றின்; உருவாக்கம் மற்றும் பிரதிபலன்களிற்காக அவசியமானதென்னும் வரையில் கடன்கொடுநர்கள் மற்றும் ஏனைய மூன்றாம் திறத்தவர்களிற்கு எம்எஸ்எம்இ கடனாளியின் தரவுகளை உத்தியோகப்பூர்வ பெறுநர் வெளிப்படுத்தல்; அத்துடன்

(ஈ) எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு புனர்வாழ்வு ஒழுங்கேற்பாட்டின் உருவாக்கம் மற்றும் பிரதிபலன்களிற்காக அவசியமானதென்னும் வரையில் கடன்கொடுநர்கள், அரசாங்க முகவராண்மைகள் அல்லது ஏனைய வேறு மூன்றாம் திறத்தவர்களினாலான எம்எஸ்எம்இ கடனாளி

யின் தரவுகளை உத்தியோகப்பூர்வ பெறுநருக்கு வெளிப்படுத்துதல்.

(8) தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை முன்மொழிபவரின் உதவியுடன் எம்எஸ்எம்இ கடனாளியினால், இப்பிரிவின் தேவைப்பாடுகளை பூர்த்திசெய்வதான முன்மொழிவின் தயாரிப்பின் மீது தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை முன்மொழிபவர் உத்தியோகப்பூர்வ பெறுநரிற்கு முன்மொழிவினை சமர்ப்பித்தல் வேண்டும்.

எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள் கட்டமைப்பு ஒழுங்கேற்பாடு, பேச்சுவார்த்தை கூட்டம்

**283.** (1) இருநூற்றி எண்பத்திரெண்டாம் பிரிவின்கீழ் உத்தியோகப்பூர்வ பெறுநரிற்கு முன்மொழிவினை சமர்ப்பித்தன் பின்னர், தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை முன்மொழிபவர் எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டுக்கான முன்மொழிவை அங்கீகரிக்கின்றார்களா அல்லவா எனும் முடிவை எம்எஸ்எம்இ கடனாளிற்கான கடன்வழங்குநர்களிடமிருந்து நாடுதல் வேண்டும்.

(2) முன்மொழிவினை எம்எஸ்எம்இ கடனாளியின் கடன்கொடுநர்கள் அனுமதிக்கின்றார்களா அல்லது நிராகரிக்கின்றார்களா எனும் முடிவானது எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டு பேச்சுவார்த்தை கூட்டத்தினால் செய்யப்படுதல் வேண்டும்.

(3) தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை முன்மொழிபவர் தனிப்பட்ட ரீதியில் அல்லது எண்ணிய தொலைத்தொடர்பு வழிகளில் இடம்பெறக்கூடிய பேச்சுவார்த்தை கூட்டத்தின் திகதி மற்றும் இடத்தினை நிருணயிப்பதில் கடன்கொடுநர்கள் மற்றும் எம்எஸ்எம்இ கடனாளியின் வசதியை கருத்திற்கொள்ளுதல் வேண்டும்.

(4) தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை முன்மொழிபவர் அறிந்த ஒவ்வொரு கடன்கொடுநருக்கும் பின்வருவனவற்றை வழங்குதல் வேண்டும்-

(அ) பேச்சுவார்த்தை கூட்டத்தின் அறிவித்தல்;

(ஆ) எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டுக்கான முன்மொழிவின் பிரதியொன்று;

(இ) கடன்கொடுநரின் உரிமைக்கோரிக்கை படிவம்;

(ஈ) தபால் வாக்கு படிவம் மற்றும் இலத்திரனியல் மின்னஞ்சல் வாக்கு பதாகை;

(உ) முன்மொழியப்பட்ட எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டினை அனுமதிக்கின்றார்களா அல்லது நிராகரிக்கின் றார்களா எனத் முடிபு செய்வதற்கு ஒவ்வொரு கடன்கொடுநரையும் கேட்கும் கூற்றொன்று;

(ஊ) கூற்றினை அனுப்பியதன் பின்னர் ஆகக் குறைந்தது இருபத்தியொரு நாட்களாக இருக்கக்கூடிய, பேச்சுவார்த்தை கூட்டம் நடைபெறவிருக்கும் திகதியின் கூற்று; அத்துடன்

(எ) பேச்சுவார்த்தை கூட்டத்தில் பங்குபெற்றாதும் தபால்மூல அல்லது இலத்திரனியல் மின்னஞ்சல் வாக்கினை அளிக்காதவருமான கடன்கொடுநர் எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டுக்கான முன்மொழிவினை அனுமதித்துள்ளார் எனக் கருதப்படக்கூடிய கூற்றொன்று.

(5) விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேவைப்பாடுகளினை திருப்தி செய்யும் முறையில் கடன்கொடுநரின் உரிமைக்கோரிக்கை படிவமொன்றினை சமர்ப்பித்த கடன்கொடுநர் ஒருவர், முன்மொழிவின் மீது பின்வருவனவற்யின் மூலம் வாக்களிக்கலாம்:–

(அ) பேச்சுவார்த்தை கூட்டத்தின்முன் அல்லது போது தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை முன்மொழிபவரினை அடையுமாறு தபால் வாக்கொன்றை அனுப்புதல்; அல்லது

(ஆ) பேச்சுவார்த்தை கூட்டத்தின்போது அல்லது அதற்கு முன்னதாக தனிப்பட்ட கடனிறுக்க வகையின்மை முன்மொழிபவரை அடையு மாறு இலத்தரனியல் மின்னஞ்சல் வாக் கொன்றை அனுப்புதல்.

(6) தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை முன்மொழிபவர் கூட்டத்தின்போதோ அல்லது அதற்கு முன்னரோ தபால் வாக்கு, அல்லது ஏனைய ஏற்பு மற்றும் மறுப்பிற்கான தொடர்பாடலை பெறுவாராயின், அவ்வாக்கு அல்லது தொடர்பாடலானது கடன்கொடுநர் சமுகமாயிருந்த கூட்டத்தில் வாக்களித்தார் எனும் பயனுறலை கொண்டிருக்கும்.

எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள் கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டின் கடன்கொடுநர் அங்கீகாரம்

**284.** (1) தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை முன்மொழிபவர் எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடு பேச்சுவார்த்தை கூட்டத்தை வசப்படுத்தி தலைமைத்தாங்குதல்; வேண்டும்

(2) இப்பாகத்தின் ஏற்பாடுகள் மற்றும் விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய விதிகளிற்கமைவாக, ஐந்தாம் அட்டவணையானது, இப்பிரிவின் குறிப்பீடு செய்யப்படும் கூட்டமொன்றை நடாத்துவது தொடர்பிலான பின்வரும் விடயங்களிற்கு ஏற்புடையதாதல் வேண்டும் -

(அ) பதிலி;

(ஆ) தலைமைதாங்குபவர்;

(இ) கோருநர்

(ஈ) ஒத்திவைக்கப்பட்ட கூட்டங்கள்; அத்துடன்

(உ) நானாவிதமானவை.

(3) பேச்சுவார்தை கூட்டத்தில், கடன்கொடுநர்களான -

(அ) எம்எஸ்எம்இ கடனாளியின் நிதிசார் சூழ்நிலைகளை தெளிவுபடுத்திக்கொள்வதற்கு நியாயமானதாக காணப்படுகின்ற எம்எஸ்எம்இ கடனாளிகளின் அலுவலகர்களின் அத்தகைய பரிசோதனையை நடாத்தலாம்;

(ஆ) பெறுமதியில் பெரும்பான்மையான கடன் கொடுத்தோர்களினால் தீர்மானமொன்றை நிறைவேற்றுவதனால், எம்எஸ்எம்இ கடனாளி; அலுவல்களது மேலதிக விசாரணைக்கு அனுமதிக்க கூடியபட்சம் பத்து வேலைநாட்கள் கொண்ட காலப்பகுதிக்கு கூட்டத்தை ஒத்திவைக்கலாம்;

(இ) எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கின் இறுதி நியதிகளை குறித்துரைக்கும், மூன்றாம் மற்றும் நான்காம் உட்பிரிவுகளிற்கிணங்க, தீர்மானமொன்றை நிறைவேற்றுவதனால் முன்மொழிவை ஏற்றகலாம்;

(ஈ) எம்எஸ்எம்இ கடனாளின் ஒப்புதலுடன், எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கின் இறுதி நியதிகளை குறித்துரைக்கும், மூன்றாம் மற்றும் நான்காம் உட்பிரிவுகளிற்கிணங்க, தீர்மானமொன்றை நிறைவேற்றுவதனால் முன்மொழிவை மாற்றலாம் அல்லது திருத்தலாம்;

(உ) எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கின் தனிப்பட்ட கடனிறுவகையின்மை முன்மொழிபரை அல்லது தனிப்பட்ட கடனிறுவகையின்மை நிருவாகியை நியமித்தல், அல்லது தனிப்பட்ட கடனிறுவகையின்மை முன்மொழிபவராக செயலாற்ற விருப்பம் கொண்டுள்ள ஏனைய ஆளொருவரை, நிறுவனத்தை அல்லது அங்கத்தை நியமிக்கலாம்;

(ஊ) எம்எஸ்எம்இ கடனாளியின் ஒப்புதலின் பேரில், எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கில், ஆலோசிக்கத்தக்கது என கருதப்படுகையில், கடனாளியின் அலுவல்களை மேற்பார்வையிடுவது தொடர்பிலான அத்தகைய நியதிகளை உள்ளக்கலாம்.

(4) ஐந்தாம் மற்றும் ஆறாம் உட்பிரிவின்கீழ், வாக்களிக்க உரித்துடைய அனைத்து கடன்கொடுத்தோர்களினதும் கோரலில் மூன்றில் இருபங்கு பெறுமானத்தில் பெரும்பான்மையொன்றை பிரதிநிதித்துவப்படுத்தும் முன்மொழிவொன்றின் சார்பாக அக்கடன்கொடுத்தோர்களின் கோரலானது வாக்களிக்கப்படின் முன்மொழிவொன்றானது; அனுமதிக்கப்பட்டதாகின்றது.

(5) 280 ஆம் பிரிவின் அல்லது ஏனைய வகையில் விதந்துரைக்கப்பட்ட முறைமையில், அத்தகைய கடன்கொடுத்

தோரின் உரிமைகளை சீர்ப்படுத்தும் அல்லது மட்டுப்படுத்தும் நிபந்தனைகளை முன்மொழிவொன்று உள்ளடக்குகையில், வாக்களிக்க உரித்துடைய அனைத்து உத்தரவாதப் படுத்தப்பட்ட கடன்கொடுத்தோர்களினதும் கோரலில் மூன்றில் இருபங்கு பெறுமானத்தில் பெரும்பான்மை யொன்றை பிரதிநிதித்துவப்படுத்தும் முன்மொழிவொன்றின் சார்பாக அவ்வுத்தரவாதப்படுத்தப்பட்ட கடன்கொடுத்தோர் களின் கோரலானது வாக்களிக்கப்படின் முன்மொழிவொன் றானது அனுமதிக்கப்பட்டதாகின்றது.

(6) 280 ஆம் பிரிவின் அல்லது ஏனையவகையில் விதந் துரைக்கப்பட்ட முறைமையில், வாடகை கொள்வனவு உடன் படிக்கை, நிதி குத்தகை, அல்லது ஒத்த ஏதேனும் உடன் படிக்கையின் கீழ், அத்தகைய கடன்தருநரன் உரிமைகளை சீர்ப்படுத்தும் அல்லது மட்டுப்படுத்தும் நிபந்தனைகளை முன்மொழிவொன்று உள்ளடக்குகையில், வாக்களிக்க உரித்துடைய அனைத்து கடன்கொடுத்தோர்களினதும் கோரலில் மூன்றில் இருபங்கு பெறுமானத்தில் பெரும் பான்மையொன்றை பிரதிநிதித்துவப்படுத்தும் முன்மொழி வொன்றின் சார்பாக அக்கடன்கொடுத்தோர்களின் கோர லானது வாக்களிக்கப்படின் முன்மொழிவொன்றானது அனுமதிக்கப்பட்டதாகின்றது.

(7) உத்தரவாதப்படுத்தப்பட்ட கடன்கொடுநர்அல்லது வாடகை கொள்வனவு உடன்படிக்கை எதிர்திறத்தவரது உரிமைகளை சீர்ப்படுத்தும் அல்லது மட்டுப்படுத்தும் நிபந்தனைகளை முன்மொழிவொன்று உள்ளடக்காவிடில், அத்தகைய கடன்கொடுநர்அல்லது வாடகை கொள்வனவு உடன்படிக்கை எதிர்திறத்தவர் முன்;மொழிவின்மீது வாக்களிக்க கூடாது, எதுஎவ்வாறிருப்பினும், தனிசொன்றின் உத்தரவாதப்படுத்தப்படாத பாகத்தின் நீட்சிக்கு உத்தர வாதப்படுத்தப்படாத கடன்தருநராக அத்தகைய உத்தரவாதப் படுத்தப்படாத கடன்கொடுநர்பங்குபெறலாமென ஈட்டுச் சட்டத்தின் (அத்தியாயம் 89) 47அ ஆம் பிரிவின்கீழ் பிரகடன மொன்றை மேற்கொண்டால், தொடர்புடைய கடன்கொடுநர் முன்மொழிவின்மீது வாக்களித்தலாகாது.

(8) கடன்தருநரொருவர்-

(அ) பேச்சுவார்த்தை கூட்டத்தில் பங்குபெறாதிருக் கின்ற;

(ஆ) தபால்மூல வாக்கினை வழங்காத; அல்லது

(இ) மின்னுஞ்சல் வாக்கொன்றை அளிக்காக,

எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கிற்கான முன்மொழிவுக்கு ஆதரவாக வாக்களித்தவராக கருதப்படுதல் வேண்டும்.

(9) எந்தவொரு கடன்தருநரும் வாக்களிக்காவிடில், எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கிற்கான முன்மொழிவானது இப்பிரிவின்கீழ் ஏற்றுக்கொள்ளப் பட்டதாக கருதப்படவேண்டும்.

(10) ஐயப்பாட்டை தவிர்ப்பதற்காக, கடன்கொடுத்தோர்:-

(அ) 283 ஆம் பிரிவின்கீழ் கடன்கொடுநர்கோரல் படிவமொன்றினை சமர்ப்பிக்காத;

(ஆ) இப்பிரிவின்கீழ் பேச்சுவார்த்தை கூட்டத்தில் பங்கேற்காத;

(இ) இப்பிரிவின்கீழ் தபால்மூல வாக்களிக்காத; அல்லது

(ஈ) இப்பிரிவின்கீழ் மின்னஞ்சல் வாக்களிக்காத,

இப்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக, எழுத்துமூலமான அறிவிப்பொன்று வழங்கப்பட்டிருந்த, கடன்தருநரொருவர், 288 ஆம் பிரிவின் கீழான ஒழுங்குடன் பயனுறவருவதனை உறுதிப்படுத்தும் நீதிமன்ற கட்டளையொன்றினை ஆட்சேபித்து விண்ணப்பமொன்றினை கொணர உரித்துடையவராகமாட்டார்.

(11) பேச்சுவார்த்தை கூட்டத்தில் முன்மொழிவினை கடன் கொடுத்தோர்கள் ஏற்றுக்கொள்ளாதவிடத்து-

(அ) தனிப்பட்ட கடனிறுவகையின்மை முன்மொழிபவர் முன்மொழிவானது “கடன்கொடுத்தோர்களினால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை” எனப் புறக்குறிப்பிட்டு ஒத்தியோகப்பூர்வமான பெறுநரிற்கு திருப்பியனுப்புதல் வேண்டும்; மற்றும்

(ஆ) எம்எஸ்எம்இ தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கமைப்பு நடவடிக்கை முறையை நீக்கலாம்.

உத்தியோகப்பூர்வ பெறுநரிற்கு அனுமதிக்கப்பட்ட எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள் கட்டமைப்பு ஒழுங்கமைப்பினை சமர்ப்பித்தல்

**285.** (1) எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கிற்கான முன்மொழிவானது கடன்கொடுத்தோர்களினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர், தனிப்பட்ட கடனிறுவகையின்மை முன்மொழிபவர் செயற்படுத்தகுந்த விரைவில், உத்தியோகப்பூர்வமான பெறுநரிற்கு-

(அ) எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கு பேச்சுவார்த்தை கூட்டத்திலான கடன் கொடுநர்வாக்களிப்பின் பெறுபேற்றின் எழுத்து மூல அறிவித்தல்; அத்துடன்;

(ஆ) எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கிற்கான இறுதி நியதிகள்

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்ட ஆவணங்களை பெற்றுக்கொண்டதன்பேரில், உத்தியோகப்பூர்வ பெறுநரானவர் எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கின் நியதிகள் இப்பகுதியின் ஏற்பாடுகளைப் திருப்தியுறுத்துகின்றது என்பதனை உறுதிப்படுத்தவேண்டும்.

(3) எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கின் நியதிகளானது இப்பகுதியின் ஏற்பாடுகளை திருப்தியுறுத்துகின்றது எனும் உறுதிப்படுத்தலின்பேரில், எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கின் மீதான சான்றிதழ் பரிந்துரைகளை உத்தியோகப்பூர்வ பெறுநர் வழங்கலாம்.

(4) எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கின் மீதான சான்றிதழ் பரிந்துரைகளை வழங்குவதன் மீது, உத்தியோகப்பூர்வ பெறுநர்-

(அ) பேச்சுவார்த்தை கூட்டத்தில் கடன்கொடுத்தோர்களின் வாக்குகளின் பெறுபேறு மற்றும் எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கின் இறுதி நியதிகள் என்பவற்றுடனான இச்சான்றிதழை முன்வைக்கலாம்; அத்துடன்

(ஆ) சான்றிதழ் வழங்குதல் குறித்து எம்எஸ்எம்இ கடனாளி; தனிப்பட்ட கடனிறுவகையின்மை முன்மொழிபவர் மற்றும் ஒழுங்கில் பட்டிய

லிடப்பட்ட அனைத்து கடன்கொடுத்தோர் களிற்கும் அறிவிக்கலாம்.

(5) உத்தியோகப்பூர்வ பெறுநரானவர் பின்வருவன வற்றுக்காக மாத்திரம் எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள் கட்டமைப்பு ஒழுங்கினை பரிந்துரைக்கும் சான்றிதழினை வழங்க மறுக்கலாம்-

(அ) ஒழுங்கு இப்பகுதியின் ஏற்பாடுகளைப் திருப் திப்படுத்தாவிடின்;

(ஆ) எம்எஸ்எம்இ கடனாளின் நிதி அலுவல்களின் கூற்று அல்லது ஒருங்கிணையும் ஆவணத்தில் முக்கியமான சரியின்மைகள் குறித்து உத்தியோகப்பூர்வ பெறுநர் அறிந்துக்கொண்டால்;

(இ) எம்எஸ்எம்இ கடனாளின் நிதி அலுவல்களின் கூற்று அல்லது ஒருங்கிணையும் ஆவணத்தில் நியாயமாக முற்கூட்டியறியமுடியாததான எம்எஸ்எம்இ கடனாளியின் சூழ்நிலைகளின் முக்கியமான மாற்றங்கள் குறித்து உத்தியோகப்பூர்வ பெறுநர் அறிந்துக்கொண்டால்;

(ஈ) எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கின் நியதிகளானவை எம்எஸ்எம்இ கடனாளியிற்கும் மற்றும் கடன்வழங்குநரிற்கும் நியாயமாக அல்லது நீதியாக காணப்படவில்லை என உத்தியோகப்பூர்வ பெறுநர் அபிப்பிராயத்தை கொண்டிருப்பின்.

(6) உத்தியோகப்பூர்வ பெறுநர் எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கினை பரிந்துரைக்கும் சான்றிதழினை வழங்க மறுப்பின், உத்தியோகப்பூர்வ பெறுநர் -

(அ) இம்மறுப்பிற்குரிய எம்எஸ்எம்இ கடனாளி, தனிப்பட்ட கடனிறுவகையின்மை முன்மொழிபவர் மற்றும் கடன்கொடுத்தோர்களிற்கு இம் மறுப்பின்றான காரணத்தை வழங்கவேண்டும்; அத்துடன்

(ஆ) எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கு வினைப்பயனிற்கு வருதலை உறுதிப்

படுத்தாத நீதிமன்றமான பொருத்தமான நீதி மன்றிற்கு இதனது பரிந்துரைகளை அறிவித் தல் வேண்டும்.

எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள் கட்டமைப்பு ஒழுங்கமைப் பின் நீதிமன்ற உறுதிப் படுத்துகை

**286.** (1) எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடு தொடர்பில் உத்தியோகப்பூர்வ பெறுநரொரு வரிடமிருந்து விதப்புரையயொன்றை நீதிமன்றம் பெற்றுக் கொள்ளுமிடத்து, நீதிமன்றம் சேர்த்தனுப்பபடும் ஆவணங் களுடன் சேர்த்து விதப்புரையை கருத்திற்கொள்ளுதல் வேண்டும்.

(2) இப்பிரிவின் கீழ் விதப்புரையொன்றைக் கவனத்துடன் கொள்ளும்போது, நீதிமன்றம் அதன்கண் சான்றுப்படுத்தப் பட்ட கருமங்கள் பற்றிய சான்றிகள் 285 ஆம் பிரிவின் கீழ் உத்தியோகபூர்வ பெறுகையில் வழங்கப்பட்ட சான்றித ழொன்றை பாவிப்பதற்கு உரித்துடையலாதல் வேண்டும்.

(3) நீதிமன்றமானது, இப்பிரிவின்கீழ் விதப்புரையொன்றை கவனத்துடன் கொள்ளும்போது கடன்கொடுநரின், எம்எஸ் எம்இ கடனாளி; அல்லது தனிப்பட்ட கடனிறுவகையின்மை பிரேரணையாளரினால் செய்யப்பட்ட விதப்புரைக்கான ஏதேனும் ஆட்சேபனையை விசாரித்தல் வேண்டும்.

(4) நீதிமன்றம் உட்பிரிவின் கீழ் (3) ஆம் ஆட்சேபனை ஓய்திருக்கும்மிடத்து அல்லது முடிபொன்றை அடைவதின் நோக்கத்துக்காக மேலதிக தகவல் அல்லது சான்றை அது தேவைப்படுகின்றவிடத்து விசாரணையொன்றை நடாத்த லாம் அது அவ்விசாரணை உத்தியோகபூர்வ பெறுமதி, தனிப் பட்ட கடனிறுக்க வகையின்மை பிரேரணையின், எம்எஸ்எம் கடனாளி, மற்றும் கடன்கொடுநர்களுக்கு அறவித்தல் வழங் கப்படும் வேண்டும்.

(5) விதப்புரைகளை கவனத்துடன் கொண்டு, நீதிமன்ற மானது பின்வருமாறு அது கருதுகின்றவிடத்து எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்வேற்பாடு வருகின் றமையை உறுதிப்படுத்தும் கட்டளையொன்றை ஆக்கலாம்.-

(அ) எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்வேற்பாடு இப்பாகத்தில் கட்டளைக்கற் களை திருப்திப்படுத்துகின்றது என; அத்துடன்

(ஆ) எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்வேற்பாடு செய்தல் இப்பாகத்தில் நடவடிக்கைமுறைத் தேவைப்பாடுகளுடன் இணங்குகின்றது என

(6) எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்வேற்பாடு பயனுக்கு வருகின்றமையை உறுதிப்படுத்தலில், நீதிமன்றமானது, விதத்துரைக்கப்படக் கூடியவாறான ஏதேனும் முறைகளுக்கு இணங்க, உத்தியோகப்பூர்வ பெறுநரை பின்வருமாறு பணித்தல் வேண்டும்-

(அ) நீதிமன்ற கட்டளையின் பொது அறிவிப்பை வழங்கும்படி; அத்துடன்

(ஆ) அத்தகைய அறிவிப்பின் பிரதியொன்றினை பதிவாளருக்கும் அதிகாரபைக்கும் அனுப்பும் படி.

(7) எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடு பினை உறுதிப்படுத்துகின்ற கட்டளை ஒன்றை ஆக்குவதன் மீது நீதிமன்றம் பின்வருவனவற்றுக்கு எழுத்திலான அறிவித்தலை வழங்குவதும் உத்தியோகபூர்வ பெறுகை பணித்தல் வேண்டும்-

(அ) கட்டளை வழங்கும் எம்எஸ்எம்இ கடனாளி; தனிப்பட்ட கடனிறுவகையின்மை எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடு பயனுக்கு வருகின்றமையும்;

(ஆ) கட்டளை வழங்கும் ஒவ்வொரு எம்எஸ்எம்இ கடனாளிலின் ஒவ்வொரு கடன்கொடுநர் மற்றும் எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள் கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டின் பயனுக்கு வருதல்; அத்துடன்

(இ) 288 ஆம் பிரிவின் கீழான எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டுக்கான ஆட்சேபனைகான கடன்கொடுநர்களின் உரிமைகள் மற்றும் ஒவ்வொரு கடன் கொடுநரும்.

மீள் கட்டமைப்பு ஏற்பாடுகள் பற்றிய நீதிமன்ற உறுதிப் படுத்தலின் தாக்கம்

**287.** (1) உள்ளடக்கிய தனிசை கொண்ட சகல கடன் கொடுநர்கள் மற்றும் ஏற்பாடுகளின் நியதிகளினால் பாதிக்கப் பட்டவர்கள் தொடர்பில் நீதிமன்றத்தினால் ஒப்புதல் அளிக் கபபட்ட எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஏற்பாடொன்றானது கட்டுப்படுத்துகின்றது.

(2) எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஏற்பாடு நடைமுறைக்கு வருதல் பற்றிய நீதிமன்ற உறுதிப் படுத்தலானது ஏற்பாடு பெறுமதியில் இருக்கும் வரை முடிவானதாகும்.

(3) எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஏற்பாடு நடைமுறைக்கு வருதல் உறுதிப்படுத்திய நீதிமன்ற கட்டளையை தொடர்ந்து, நியதிகளின் பிரகாரம் ஏற்பா டானது பின்வருவன வரையில் தாக்கமுள்ளதாக காணப்படு கின்றது –

(அ) 291 ஆம் பிரிவு மற்றும் இந்த நியதிகள் ஆகிய வற்றின் பிரகாரம் அது பூரணப்படுத்தப் பட்டது; அல்லது

(ஆ) 290 ஆம் பிரிவின் கீழ் அது முடிவுறுத்தப் பட்டது.

(4) எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஏற்பா டொன்று நடைமுறையில் இருக்கும் வரை, உள்ளடக்கப்பட்ட தனிசு நிலுவையில் உள்ள கடனாளிக்கு கடன்கொடுத்த ஒருவர் -

(அ) கடனை அறவிடுவதற்கு அல்லது செயற்படுத் துவதற்கு எத்தகைய நடவடிக்கைகளையும் எடுத்தல் கூடாது; மற்றும்:

(ஆ) குறிப்பாக எத்தகைய நடவடிக்கைகளையும் எடுத்தல் கூடாது –

(i) ஏற்பாடுகளின் நியதிகளின் பிரகாரம் அல்லது கடனாளியின் கோரிக்கையின் பிரகாரம் அல்லது கடனிறுக்கவகை யின்மை நிருவாகியின் கோரிக்கையின் பிரகாரம் அல்லாமல் உள்ளடக்கப்பட்ட கடன் கொடுப்பனவு தொடர்பில் கடன் பட்டவரை தொடர்பு கொள்ளல்;

(ii) உள்ளடக்கப்பட்ட கடன் தொடர்பில் கடனாளிக்கு எதிராக ஏதாவது சட்ட நடவடிக்கைகளை ஆரம்பித்தல் அல்லது தொடர்தல்;

(iii) உள்ளடக்கப்பட்ட கடன் பற்றிய கொடுப்பனவை சேகரித்தல், பெறல், அறவிடல், கேட்டல்;

(iv) (6) ஆம் உட்பிரிவின் படி கடனாளிக்கு எதிராக நீதிமன்ற அல்லது நியதிச் சபை தீர்ப்பொன்றினை அல்லது கட்டளை யொன்றினை நிறைவேற்றுதல் அல்லது நடைமுறைப்படுத்தல்;

(v) பிடியாணையொன்றை பெற்றுக் கொள்ளல்;

(vi) எம்எஸ்எம்இ கடனாளிது உடைமையி லுள்ள பொருட்களை அறவிடல்;

(vii) ஒழுங்கின் தேவைப்பாடுகள் நிறைவேற் றப்படாதவரை சம்பந்தப்பட்ட எம்எஸ் எம்இ கடன்கொடுநருடன் கடனாளி; மேற்கொண்ட வாடகை உடன்படிக் கையின் கீழ் எம்எஸ்எம்இ கடனாளி; வசிக்கின்ற வளவின் உடைமையை பெற்றுக் கொள்ளல்;

(viii) ஏற்பாட்டின் நியதிகள் எவ்வாறிருப்பி னும், எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள் கட்டமைப்பு ஏற்பாடுகளுடன் தொடர் புடைய எம்எஸ்எம்இ கடனாளிடன் கூட் டிணைந்து பொறுப்பாக உள்ள வேறொரு ஆளுக்கு எதிராக இந்த உட் பிரிவின் கீழ் ஏதாவது நடவடிக்கைகளை எடுத்தல்;

(ix) ஏற்பாட்டின் நியதிகள் வேறு விதமாக தெரிவித்தால் அன்றி, எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஏற் பாடுகளுடன் தொடர்புடைய கடனாளிது கடன்களுக்கு உத்தரவாதமளித்த வேறு

ஆளுக்கு எதிராக இந்த உட்பிரிவின் கீழ் ஏதாவது நடவடிக்கைகளை எடுத்தல்;

(x) (i)-(vii) வரையான பந்திகளில் குறிப் பிடப்பட்ட ஏதாவது நடவடிக்கைகளை மேற்கொள்ளும் படி முகவர் ஒருவரை அறிவுறுத்தல்.

(5) எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஏற்பாடு ஒன்று நடைமுறையில் இருக்கின்ற பொழுது, (4) ஆம் உட்பிரிவில் பட்டியலிடப்பட்ட படிமுறைகளை எடுப் பதற்கு கடன்கொடுத்த ஒருவருக்கு அனுமதியினை நீதி மன்றம் வழங்கலாம், இதன் பொழுது நீதிமன்றமானது பின்வருவனவற்றை பரிசீலனை செய்தல் வேண்டும் -

(அ) கடன்கொடுநரை படிமுறைகளை எடுப்பதற் கான அனுமதியை வழங்குவது நியாயபூர்வ மானது; மற்றும்

(ஆ) இந்த படிமுறைகளானது –

(i) ஏற்பாடுகளுடன் தொடர்புடைய எம்எஸ் எம்இ கடனாளிக்கு அளவுக்கு மீறிய பாதகத்தை ஏற்படுத்தக் கூடாது;

(ii) வேறு யாராவது கடன்கொடுநருக்கு பங்கத்தை ஏற்படுத்தக்கூடாது;

(iii) ஏற்பாட்டின் குறிக்கோள்களை குறிப் பிடக்கூடியளவு குறை மதிப்பீடு செய்த லாகாது.

(6) எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஏற்பாடு நடைமுறைக்கு வருகின்றதை உறுதிப்படுத்துகின்ற நீதிமன்ற கட்டளைக்கு குறைந்தது நூற்று எண்பது நாட்களுக்கு முன்னர் எம்எஸ்எம்இ கடனாளிக்கு அல்லது எம்எஸ்எம்இ கடனாளின் ஆதனத்திற்கு ஏதிராக நிறை வுறுத்தப்பட்ட ஏதேனும் நிறைவேற்றல் அல்லது ஏனைய சட்ட ரீதியான செயன்முறைகள் அல்லது கைப்பற்றா ணைகள் பூரணப்படுத்தப்பட்டிருக்க, அந்த ஏதேனும் நிறை வேற்றல் அல்லது ஏனைய சட்ட ரீதியான செயன்முறைகள் அல்லது கைப்பற்றாணைகளிலிருந்தான கடன்கொடுநரது நன்மைக்காக உரித்தினை இந்த பிரிவில் உள்ள எதுவும் பாதிக்கக்கூடாது, இச்சந்தர்ப்பத்தில் -

(அ) கைப்பற்றுதல் மூலம் அசைகின்ற அல்லது அசையாத சொத்துகளுக்கு எதிராக நிறை வேற்றல் ஒன்று பூரணப்படுத்தப்பட்டிருத்தல்; அல்லது நிறைவேற்றலுடன் குற்றம் சுமத்தப் பட்ட பெறுநர் அல்லது நியமிக்கப்பட்டவர் அல்லது ஆள் உடைமையாக்குவதற்காக பிரவேசித்தல், மற்றும் விற்பனையை பூரணப் படுத்தியிருத்தல்; மற்றும்

(ஆ) கடன் திருப்திக்கு ஏற்ற வகையில் கடன் பற்றிய இணைப்பொன்று பூரணப்படுத்தப் பட்டிருத்தல்.

(7) எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஏற்பாடு ஒன்று நடைமுறையில் இருக்கின்ற பொழுது, அத்தி யவசியப் பொருட்கள் மற்றும் சேவைகளை விநியோகிப்பவர் ஒருவர் பின்வருவனவற்றை மேற்கொள்ளுதலாகாது–

(அ) ஏற்பாடு நடைமுறைக்கு வருவதற்கு முன்ன ரான காலப் பகுதியுடன் தொடர்புடைய பண்டங்கள் மற்றும் சேவைகளுக்கான கட்டணங்களை செலுத்துவதில் எம்எஸ்எம்இ கடனாளி தவணை தவறியமையின் காரண மாக, எம்எஸ்எம்இ கடனாளிக்கு பண்டங் களையும் சேவைகளையும் வழங்குவதற்கு மறுத்தல்;

(ஆ) ஏற்பாடு நடைமுறைக்கு வருவதற்கு முன்ன ரான காலப் பகுதியுடன் தொடர்புடைய பண்டங்கள் மற்றும் சேவைகளுக்கான நிலுவை கட்டணங்களுடன் சேர்த்து கொடுப் பனவானது எம்எஸ்எம்இ கடனாளியினால் செலுத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனையை பண்டங்கள் மற்றும் சேவைகளை வழங்கு வதற்காக மேற்கொள்ளுதல்; அல்லது

(இ) தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நிரு வாகியின் எழுத்து மூலமான முன்கூட்டிய சம்மதத்தை தவிர, பண்டங்கள் மற்றும் சேவை களை விநியோகிப்பதற்காக உடன்படிக்கை யின் கடனிறுக்கவகையின்மை தொடர்புடைய நியதிகளில் தங்கியிருத்தல்.

(8) எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஏற்பாடுகளின் நோக்கங்களை வழங்குவதற்கு மற்றும் எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஏற்பாட்டினை செயல்திறனுடையதாக மாற்றுவதற்கு கடனிறுக்க வகையின்மையுடன் தொடர்புடைய நியதிகளில் தங்கியிருத்தல் அவசியமானது என திருப்தியுற்றால் (7)(இ) ஆம் உட் பந்தியின் கீழ் சம்மதத்தினை தனிப்பட்ட கடனிறுக்க வகையின்மை நிருவாகி வழங்கலாம்.

(9) (7)(இ) ஆம் உட்பிரிவின் கீழ் சம்மதத்தை வழங்க மறுப்பதன் காரணமாக ஏற்படுகின்ற பாதிப்புகளுக்கு தனிப் பட்ட கடனிறுக்கவகையின்மை நிருவாகி பொறுப்பல்ல.

(10) எம்எஸ்எம்இ கடனாளிக்கு எதிராக ஏதாவது குற்ற வியல் செயன்முறைகளை மேற்கொள்ளல் அல்லது தொடர்தல், ஆரம்பித்தல் ஆகியவற்றை தனிசு மீள்கட்டமைப்பு ஏற்பா டொன்று தடுக்கவில்லை.

(11) இந்தப் பிரிவிற்கு முரணாக எடுக்கப்பட்ட ஏதாவது நடவடிக்கைகள் வெற்றானதும் வறிதானதுமாகும்.

(12) இந்தப் பிரிவிற்கு முரணாக கடன்கொடுநர் அல்லது கடன்கொடுநரின் முகவரினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக் கையின் காரணமாக எழுகின்ற கடன்கொடுநருடனான கொடுக்கல் வாங்கலின் கீழ் ஆதனமொன்றில் அல்லது வேறு ஏதாவது உரிமையின் நலன்களை ஆள் ஒருவர் பெற்றிருக்கும் பட்சத்தில், அத்தகைய ஆள் நன்னோக்கில் மற்றும் முழு பெறுமதியுடன் கடன்கொடுநருடன் நடந்து கொண்டிருக்கும் பட்சத்தில், அத்தகைய செயலை வெற்றாதலாக்கலானது அந்த ஆளின் உரிமைகளுக்கு பங்கம் ஏற்படுத்தலாகாது.

(13) எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஏற்பா டானது உத்தரவாதப்படுத்தப்பட்ட கடன்கொடுநர் அல்லது எதிர்திறத்தவரது உரிமைகளை மாற்றுதல் அல்லது மட்டுப் படுத்தல் தொடர்பான நியதிகளை வாடகை கொள்வனவு உடன்படிக்கையொன்றில் உள்ளடக்கியிருக்காத பொழுது, பிணை அல்லது வாடகை கொள்வனவு உடன்படிக்கைக்கு அமைவான ஆதனத்தின் மீதான அதனது உரிமைகளை வலுப்படுத்துவதற்கு வாடகைக் கொள்வனவு உடன்படிக்கை யொன்றுக்கான கடனாளி; அல்லது எதிர்த்திறத்தவரின் உரிமைகளைப் பாதித்தலாகாது.

(14) எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஏற்பாடானது உத்தரவாதப்படுத்தப்பட்ட கடன்கொடுநர் அல்லது எதிர்திறத்தவரது உரிமைகளை மாற்றுதல் அல்லது மட்டுப்படுத்தல் தொடர்பான நியதிகளை வாடகை கொள்வனவு உடன்படிக்கையொன்றில் உள்ளடக்கியிருக் கின்ற பொழுது, 280 ஆம் பிரிவு அல்லது ஏனையவற்றில் விதந்துரைக்கப்பட்ட முறையில், உடன்படிக்கையின் நியதி களுக்கமைய, பிணை அல்லது வாடகை கொள்வனவு உடன்படிக்கைக்கு அமைவான ஆதனத்தின் மீதான அதனது உரிமைகளை மாத்திரம் வலுப்படுத்த முடியும்.

(15) எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கு தொடர்பில், "கடனிறுவகையின்மை தொடர்புடைய பதம்" என்பது

(அ) எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கு நடவடிக்கைகள் தொடங்கியுள்ளன என்பதனால், உடன்படிக்கை அல்லது வழங்க லானது முடிவுறுத்தப்படலாம், அல்லது ஏதேனும் விடயம் நடக்கலாம்;

(ஆ) எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கு நடவடிக்கைகள் தொடங்கியுள்ளன என்பதனால், உடன்படிக்கை அல்லது வழங்க லானது முடிவுறுத்த அல்லது ஏதேனும் விடயம் நடத்த வழங்குநருக்கு உரித்துபெறலினை குறிக்கும்,

எம்எஸ்எம்இ கடனாளியிற்கு அத்தியாவசிய பண்டங்களையும் சேவைகளையும் வழங்கும் ஒப்பந்தமொன்றின் ஏற்பாடாகும்.

தனிசு மீள் கட்டமைப்பு ஏற்பாடு மீதான சவால்கள்

**288.** (1) எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஏற்பாடுகளுக்கு கடப்பாடுடையவராக காணப்படுகின்ற கடன்பெறுநரொருவர் ஏற்பாடுகள் நடைமுறைக்கு வருவதை உறுதிப்படுத்துகின்ற நீதிமன்ற கட்டளைக்கு ஆட்சேபனை தெரிவித்து நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்கலாம்.

(2) மேலுள்ள ஓராம் உட்பிரிவின் கீழ் எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஏற்பாடுகளுக்கு ஆட் சேபனை தெரிவிக்கின்ற கடன்கொடுநரது விண்ணப்ப மானது பின்வரும் அடிப்படைகளில் ஒன்று அல்லது அதற்கு

மேற்பட்ட விடயத்தை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும். அவையாவன –

(அ) கம்பெனியானது எம்எஸ்எம்இ கடன்பெறுநரொருவர் அல்ல, அல்லது கம்பெனியானது எம்எஸ்எம்இ கடன்பெறுநரொருவர் எனில், 278 ஆம் பிரிவின் தகைமை நெறிமுறைகளை கடனாளி; நிறைவேற்றவில்லை;

(ஆ) 279 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட கட்டாய ஏற்பாடுகளுக்கு இணங்க வேண்டும் என்பதை எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஏற்பாடுகள் கொண்டிருக்கவில்லை;

(இ) இந்தப் பகுதியின் செயன்முறை ரீதியான தேவைப்பாடுகளுக்கு எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஏற்பாடுகளை உருவாக்குதல் மற்றும் உறுதிப்படுத்தல் ஆகியன இணங்கவில்லை;

(ஈ) நிதி அலுவல்கள் தொடர்பான கூற்றினை தயாரித்தல் அல்லது அதனோடு இணைந்த தகவல்களை வழங்குதல் ஆகியவற்றின் பொழுது ஏதாவது பொருள் சார்ந்த பிழையான பிரதிநிதித்துவம் அல்லது விடுபாடுகளை எம்எஸ்எம்இ கடனாளி; மேற்கொண்டிருத்தல்; அல்லது

(உ) எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஏற்பாடானது கடன்கொடுநரது நலன்களுக்கு நேர்மையற்ற பங்கத்தினை ஏற்படுத்துகின்றது.

(3) எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஏற்பாடுகள் நடைமுறைக்கு வருகின்ற திகதியிலிருந்து இருபத்தெட்டு நாள் காலப் பகுதியினுள் எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஏற்பாட்டினை ஆட்சேபிக்கின்ற கடன்கொடுநரின் நீதிமன்றத்திற்கான விண்ணப்பத்தினால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(4) விண்ணப்பம் அடிப்படையாகக் கொண்டுள்ள காரணிகள் உள்ளடங்கலாக எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு

மீள்கட்டமைப்பு ஏற்பாடுகளுக்கு ஆட்சேபனை தெரிவிப்பதற்கான விண்ணப்பம் ஒன்று பற்றி எழுத்து மூலமான அறிவித்தலை எம்எஸ்எம்இ கடனாளி; மற்றும் தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நிருவாகி ஆகியோருக்கு கடன் கொடுநர் வழங்குதல் வேண்டும்.

(5) இந்தப் பிரிவின் கீழான விண்ணப்பம் தொடர்பில், மேற்படி (2) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஏதாவது விடயங்கள் தொடர்பில் நீதிமன்றம் திருப்தியுறும் பட்சத்தில், பின்வருவனவற்றில் ஏதாவதை நீதிமன்றம் மேற்கொள்ளலாம். அவையாவன –

(அ) எம்எஸ்எம்இ கடன்கொடுநர் எவரேனும் நியாயமற்ற முறையில் பங்கமற்றதாக இருப்பதற்கு என்ன செய்ய வேண்டும், நீதிமன்றத்திற்கு இந்த விண்ணப்த்தை மேற்கொண்ட கடன்கொடுநருக்கு எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஏற்பாடானது முழுமையாகவோ அல்லது ஏதாவது பகுதியோ ஏற்புடையதல்ல என பணிப்புரை விடுக்கின்ற கட்டளையை மேற்கொள்ளல்;

(ஆ) கடன்கொடுநர்கள் மறுசீரமைக்கப்பட்ட பிரேரணையை ஒப்புக் கொள்கின்றார்களா என்ற தீர்மானத்தை தெரிந்து கொள்வதற்காக 58 ஆம் பிரிவின் கீழான மாறுதல் செயன்முறையை பயன்படுத்தும் படி தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நிருவாகிக்கு பணித்தல்; அல்லது

(இ) வேறு ஏதாவது உள்ளடக்கப்பட்ட தனிசு அல்லது எம்எஸ்எம்இ கடன்கொடுநர் தொடர்பான எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள் கட்டமைப்பு ஏற்பாட்டினை இரத்துச் செய்வதற்கான கட்டளையை வழங்குதல்.

(6) ஐந்தாம் உட்பிரிவின் கீழ் நீதிமன்றமானது கட்டளையொன்றினை மேற்கொள்கின்ற பொழுது, எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஏற்பாடுகள் நடைமுறையில் இருக்கின்ற உள்ளடக்கப்பட்ட தனிசு; காலப் பகுதி தொடர்பில் சேர்ந்த வட்டி, கட்டணங்கள், விதிப்பனங்கள் ஆகியவற்றை செலுத்துவதற்கு எம்எஸ்எம்இ கடன்பெறுநரை நீதிமன்றம் தேவைப்படுத்தலாம்.

(7) சகல உள்ளடக்கப்பட்ட தனிசுகள் மற்றும் கடன் கொடுத்தோர் தொடர்பில் எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஏற்பாடு ஒன்றினை இரத்துச் செய்யும் படி (5)(இ) உட்பிரிவின் கீழ் கட்டளையொன்றினை நீதிமன்றம் வழங்கும் பொழுது, கடன்கொடுநருக்கான பரிகாரங்கள் பற்றிய தற்காலிக கடன் தீர்ப்பு பிற்போடல் கட்டளை யொன்றினையும் தாபிப்பதற்கான கட்டளையை நீதிமன்றம் வழங்கலாம், இது இருபத்தொரு நாட்கள் காலப் பகுதிக்கு உரியதாக இருப்பதுடன் 40 ஆம் பிரிவின் கீழ் கடன் பாதுகாப்பு கடன் பிற்போடலுக்கான அதே தாக்கத்தை கொண்டிருத்தல் வேண்டும்.

(8) ஐந்தாம் அல்லது (6) ஆம் உட்பிரிவின் கீழ் நீதிமன்ற மானது எந்த விடயம் தொடர்பில் கட்டளையொன்றினை வழங்குகின்ற பொழுது நீதிமன்றமானது எம்எஸ்எம்இ கடனாளி; தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நிருவாகி, உத்தியோகபூர்வ பெறுநர், மற்றும் ஐந்தாம் அல்லது ஆறாம் உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட கட்டளைகள் ஏற்புடைய யாராவது கடன்கொடுநர்கள்; ஆகியோருக்கு எழுதப்பட்ட அறிவித்தலை வழங்குதல் வேண்டும்.

(9) ஆறாம் உட்பிரிவின் கீழ் உத்தியோகபூர்வ பெறு நருக்கு நீதிமன்றம் அறிவித்தல் ஒன்றை வழங்குகின்ற பொழுது, விதிக்கப்பட்டவாறு அத்தகைய முறையில், பதினான்கு நாட்கள் காலப் பகுதியில் பின்வருவன மேற் கொள்ளப்படல் வேண்டும்–

(அ) நீதிமன்ற கட்டளையின் பொது அறிவித்தலை வழங்குதல்;

(ஆ) அத்தகைய அறிவித்தலின் பிரதியை பதிவாள ருக்கும் அதிகாரசபைக்கும் அனுப்புதல்; மற்றும்

(இ) ஐந்தாம்; உட்பிரிவின் கீழ் மேற்கொள்ளப் பட்ட நீதிமன்ற கட்டளை தொடர்பாக பாதிக்கப்பட்ட எவரேனும் கடன்கொடுநருக்கு எழுத்து மூல அறிவித்தலை வழங்குதல் மற்றும் (6) ஆம் உட்பிரிவின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஏதாவது தேவைப்பாடுகள் பற்றிய எழுத்து மூல அறிவித்தலை வழங்குதல்.

தனிசு மீள் கட்டமைப்பு ஏற்பாடுகள் பற்றிய வேறு பாடுகள்

**289.** (1) 54 ஆம் பிரிவின் கீழ் எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஏற்பாடுகள் நடைமுறைக்கு வருவதை உறுதிப்படுத்தி நீதிமன்றம் ஒன்று கட்டளையொன்றை மேற்கொள்கின்ற பொழுது இந்தப் பிரிவின் பிரகாரம் மற்றும் அதன் நியதிகளின் பிரகாரம் ஏற்பாடுகள் வேறுபடலாம்.

(2) தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நிருவாகியான வர், தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நிருவாகியின் சொந்த முன்னெடுப்பில் எம்எஸ்எம்இ கடனாளி; அல்லது கடன்கொடுநரின் கோரிக்கையின் படி, பின்வருவனவற்றை கருத்திற் கொண்டு எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஏற்பாடுகள் பற்றிய வேறுபாடுகளை பிரேரிக்கலாம் -

(அ) எம்எஸ்எம்இ கடனாளிது சூழ்நிலைகளில் பொருள் சார்ந்த மாற்றங்கள் காணப்படுவதாக தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நிருவாகிக்கு தோன்றுகின்ற பொழுது, மற்றும்

(ஆ) அத்தகைய சூழ்நிலைகள் பற்றிய வேறுபாடுகளானது எம்எஸ்எம்இ கடனாளிக்கு கடன் கொடுநர்களினால் ஒப்புதல் அளிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என நியாய பூர்வமான வாய்ப்புகள் காணப்படுகின்றன என தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நிருவாகி திருப்தியுறும் பட்சத்தில்.

(3) (2) ஆம் உட்பிரிவின் நிபந்தனைகள் ஏற்புடைய பொழுது, தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நிருவாகி நியாயபூர்வமான நடைமுறை சாத்தியமுள்ள காலப் பகுதியில் விரைவாக –

(அ) எம்எஸ்எம்இ கடனாளிது நிதி அலுவல்கள் தொடர்பான இற்றைப்படுத்தப்பட்ட கூற்றொன்றினை பூரணப்படுத்தும் படி கடன்பட்டவரை தேவைப்படுத்தலாம்;

(ஆ) எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஏற்பாடுகள் வேறுபாடுகள் பற்றிய பிரேரணையொன்றை தயார் செய்வதற்காக எம்எஸ்எம்இ கடனாளிக்கு உதவுதல்;

(இ) பிரேரணை தொடர்பில் எம்எஸ்எம்இ கடனாளிது சம்மதத்தினைக் கோருதல்; மற்றும் பிரேர

ணைக்கான ஒப்புதலை கடன்கொடுநரிடமிருந்து நாடல்; மற்றும்

(ஈ) பிரேரணையை ஏற்றுக் கொள்ள முடியுமா என்பதை குறிப்பிடும் படி கோரிக்கைவிடுத்து பாதிக்கப்பட்ட ஒவ்வொரு கடன்கொடுநருக்கும் எழுதுதல்.

(4) மூன்றாம் உட்பிரிவின் கீழ் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு கடன்கொடுநருக்கும் எழுதுகின்ற பொழுது, எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஏற்பாடொன்று வேறுபடுகின்ற பிரேரணையொன்று தொடர்பில், தனிப்பிட்ட கடனிறுக்கவகையின்மை அதிகாரியானவர் -

(அ) (i) பிரேரணை; மற்றும்

(ii) எம்எஸ்எம்இ கடனாளிது சூழ்நிலைகளில் ஏற்பட்ட பொருள் சார்ந்த மாற்றங்கள் பற்றிய விபரங்கள் உள்ளடங்கலாகக் கடனாளிது நிதி அலுவல்கள் பற்றிய இற்றைப் படுத்திய கடனாளிது கூற்று;

(ஆ) எழுத்து மூல அறிவித்தலை கடனாளிக்கு வழங்குதல்.

(i) 278 ஆம் பிரிவின் தகைமை தேவைப் பாடுகள் தொடர்பில் எம்எஸ்எம்இ கடனாளி; திருப்தியுறுகின்றார்;

(ii) தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை பிரேரணையாளரின் அறிவின் படி, நிதி அலுவல்கள் பற்றிய எம்எஸ்எம்இ கடனாளிது இற்றைப்படுத்தப்பட்ட கூற்றில் காணப்படுகின்ற தகவல்கள் முழுமையானவை மற்றும் துல்லியமானவை;

(iii) எம்எஸ்எம்இ கடனாளிது சூழ்நிலையில் சம்பந்தப்பட்ட மாற்றங்கள் தொடர்பில் பிரேரணை நியாயபூர்வமான முறையில் செயற்படுகின்றது; மற்றும்

(iv) ஒப்புதல் அளிக்கப்பட்டு நடைமுறைப்

படுத்துவதற்கான நியாயபூர்வமான வாய்ப்புகள் பிரேரணைக்கு காணப்படுகின்றன

(இ) பிரேரணையை ஏற்றுக் கொள்ள முடியுமா? முடியாதா? என்பதைக் குறிப்பிட்டு பௌதீக அல்லது மின்னியல் கடிதம் மூலமாக எழுத்து மூலமான பதில் ஒன்றை வழங்கும் படி கடன்கொடுநரை கோருதல்; மற்றும்

(ஈ) குறிப்பிடப்பட்ட முடிவுத் திகதிக்கு முன்னர் கடனிறுக்கவகையின்மை செயற்படுத்துநருக்கு இந்த பதிலை வழங்குவதற்கான தேவையை குறிப்பிட்டு எழுத்து மூலமான அறிவித்தலை கடன்கொடுநருக்கு வழங்குதல்.

(5) பின்வரும் நிலைகளில் எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஏற்பாடுகள் பற்றிய மாறுபாடுகள் பிரேரணையானது ஏற்றுக் கொள்ளப்படும் ஏற்றுக் கொள்ளப்படும் -

(அ) ஏற்பாடுகள் மாற்றம் பற்றி எழுத்து மூலமான சம்மதத்தினை கடனாளி; வழங்குதல்;

(ஆ) இந்தப் பிரிவின் கீழ் எம்எஸ்எம்இ கடனாளிக்கு கடன்கொடுத்த பாதிக்கப்பட்டவர்களுக்கு தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நிருவாகி எழுதுதல்;

(இ) கடன்பட்ட சகல கடன்கொடுநர்களதும் கேட்புத் தொகை பெறுமதியில் பெரும்பான்மையான கேட்புத் தொகையை பிரதிநிதித்துவப் படுத்துகின்ற கடன்கொடுநர்கள் (4) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட முடிவுத் திகதிக்கு முன்னர் பிரேரணைகளை ஏற்றுக் கொள்வதற்கான பதில்கள் வழங்கப்படல்; அத்துடன்

(ஈ) வாடகை கொள்வனவு உடன்படிக்கை உள்ளடங்கலாக, உடன்படிக்கையின் கீழ் குத்தகைக்கு விடுநர் அல்லது பொருட்களின் உரிமையாளர் உரிமைகளை மாற்றுகின்ற அல்லது மட்டுப்படுத்துகின்ற நியதிகளை பிரேரணை உள்ளடக்கியிருக்கும் பட்சத்தில், (4) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட முடிவுத்

திகதிக்கு முன்னர் பிரேரணையை ஏற்றுக் கொள்கின்ற பதில்கள் வழங்கப்படும் பட்சத்தில், பிரேரணையை ஏற்றுக் கொள்வதற்கான பதில்கள் வழங்கப்படல்;

(6) ஐந்தாம் உட்பிரிவின் நோக்கங்களுக்காகஇ (4) ஆம் உட்பிரிவின் கீழ் ஒவ்வொரு எம்எஸ்எம்இ கடன்கொடுநருக்கும் பிரேரணை பற்றிய அறிவித்தல் வழங்கப்பட்டு பதினான்கு நாட்களின் பின்னர் முடிவுத் திகதிக்கு முன்னர் தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நிருவாகிக்கு பதில் ஒன்றை வழங்காத கடன்கொடுத்த ஒருவர் எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஏற்பாடுகள் தொடர்பான மாறுபட்ட பிரேரணையை ஏற்றுக் கொண்டதாக கருதப்படுவர்.

(7) எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஏற்பாடு ஒன்றுக்கான மாறுபாட்டு பிரேரணையொன்று ஏற்றுக் கொள்ளப்பட்டதும், தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நிருவாகி நியாயமான நடைமுறைக்குச் சாத்தியமான வகையில் வெகு விரைவாக உத்தியோகபூர்வ பெறுநருக்கு பின்வருவனவற்றை சமர்ப்பித்தல் வேண்டும்–

(அ) எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஏற்பாட்டிற்கு கடன்கொடுநர் பதிலளிப்பு ஒப்புதல் பற்றிய எழுத்து மூலமான அறிவித்தலொன்று; மற்றும்

(ஆ) மாறுபட்ட எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள் கட்டமைப்பு ஏற்பாடு பற்றிய இறுதி நியதிகள்.

(8) ஏழாம்; உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஆவணங்கள் கிடைக்கப் பெற்றதும் மாறுபட்ட எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஏற்பாடுகளை உறுதிப்படுத்தி விதந்துரைக்கின்ற சான்றிதழ் ஒன்றினை உத்தியோகபூர்வ பெறுநர் வழங்குதல் வேண்டும்.

(9) மாறுபட்ட எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள் கட்டமைப்பு ஏற்பாடுகளை உறுதிப்படுத்தி விதந்துரைக்கின்ற சான்றிதழ் ஒன்றை விநியோகித்ததன் பின்னர் உத்தியோகபூர்வ பெறுநர் பின்வருவனவற்றை செய்தல் வேண்டும் -

(அ) இந்த சான்றிதழை மாறுபட்ட எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஏற்பாட்டு

பிரேரணைக்கான கடன்கொடுநர் ஒப்புதல் பற்றிய எழுத்து மூலமான அறிவித்தலுடன் சேர்த்து மற்றும் மாறுபட்ட ஏற்பாட்டின் இறுதி நியதிகள் ஆகியவற்றுடன் நீதி மன்றத்தில் சமர்ப்பித்தல் வேண்டும்; மற்றும்

(ஆ) சான்றிதழ்கள் விநியோகிக்கப்பட்டமை பற்றிய எழுத்து மூலமான அறிவித்தலை பின்வரும் கடனாளி; தனிப்பட்ட கடனிறுக்கவகை யின்மை நிருவாகி; மற்றும் ஏற்பாட்டில் பட்டியலிடப்பட்ட அனைத்து கடன்கொடுநர் களுக்கும் வழங்குதல் வேண்டும்.

(10) ஒன்பதாம் உட்பிரிவின் கீழ் எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஏற்பாடு ஒன்றின் மாறுபாடுகள் தொடர்பிலான உத்தியோகபூர்வ பெறுநரிடமிருந்தான விதப் புரைகள் பொருத்தமான நீதிமன்றத்திற்கு கிடைக்கப் பெற்ற தும் நீதிமன்றமானது விதப்புரைகளை பரிசீலனை செய்து வேறுபட்ட ஏற்பாடுகள் நடைமுறைக்கு வருவதை உறுதிப் படுத்துவது பற்றிய கட்டளையொன்றினை வழங்கலாம்.

(11) பத்தாம் உட்பிரிவின் கீழ் மாறுபட்ட ஏற்பாடுகள் நடைமுறைக்கு வருவதனை உறுதிப்படுத்தி நீதிமன்றமானது கட்டளையொன்றை மேற்கொள்கின்ற பொழுதுஇ மாறு பட்ட ஏற்பாடுகளானது 54 ஆம் பிரிவின் கீழ் உறுதிப்படுத் தப்பட்ட ஏற்பாடுகளாக காணப்படும் பட்சத்தில் இந்தப் பகுதியின் ஏற்பாடுகள் மாறுபட்ட ஏற்பாடுகளுக்கு ஏற்புடை யனவாக காணப்படுகின்றன.

தனிசு மீள் கட்டமைப்பு ஏற்பாடுகளை முடிவுறுத்தல்

**290.** (1) தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நிருவாகி, அல்லது எம்எஸ்எம்இ கடன்கொடுநரினால் செயற்படுத்தப் படுகின்ற பொழுது விதிக்கப்பட்ட ஏதாவது அத்தகைய முறையில், எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஏற்பாடொன்றினை உடன்படிக்கையை முடிவறுத்துவதற்கு எம்எஸ்எம்இ கட்னபெறுநர்களினால் கிரேரணையொன்றின் கடன்கொடுநர்களின் மொத்த பெறுதியில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையினரால் ஏற்றுக்கொள்ளப்படும்போது எந்த நேரத்திலும் முடிவுறுத்தலாம்,

(2) எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஏற்பா

டொன்றினை முடிவுறுத்தும் படி கட்டளையொன்றினை நீதிமன்றத்திடமிருந்து பெற்றுக் கொள்வதற்காக யாராவது பின்வரும் ஆட்கள் விண்ணப்பிக்கலாம்:

(அ) எம்எஸ்எம்ஈ கடனாளி;

(ஆ) கடன்கொடுத்தோர்;

(இ) தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நிருவாகி; அல்லது

(ஈ) உத்தியோகபூர்வ பெறுநர்.

(3) எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஏற்பாடொன்றினை முடிவுறுத்துவதற்கான கட்டளையொன்றிற்கான விண்ணப்பமானது எம்எஸ்எம்இ கடனாளிக்கு எதிரான வங்கிமுறிவுகட்டளைக்கான விண்ணப்பத்தினையும் உள்ளடக்கலாம்.

(4) இரண்டாம் உட்பிரிவின் கீழ் விண்ணப்பமொன்றானது பின்வரும் காரணிகளுள் ஒன்றை அடிப்படையாக கொண்டிருத்தல் வேண்டும்:

(அ) கடனாளிது நிதி அலுவல்கள் பற்றிய கூற்றில் பொருள் சார்ந்த பிழையான பிரதிநிதித்துவம் அல்லது விடுபாடுகள் கண்டறியப்படல், இது எம்எஸ்எம்இ கடன்கொடுநருக்கு பொருள் சார்ந்த பாதகத்தினை ஏற்படுத்துகின்றது;

(ஆ) எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஏற்பாட்டினை ஆக்குதல் மற்றும் உறுதிப்படுத்தலானது இந்தப் பாகத்தின் நடைமுறை சார்ந்த தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகவில்லை;

(இ) கம்பெனியானது, 282 ஆம் பிரிவின் கீழ் உத்தியோகபூர்வ பெறுநருக்கு முன்மொழிவொன்றினை சமர்ப்பிக்கின்ற நேரத்தில் எம்எஸ்எம்இ கடன்பெறுநரொருவராகவிருக்கவில்லை;

(ஈ) எம்எஸ்எம்இ கடன்பெறுநர், 282 ஆம் பிரிவின் கீழ் உத்தியோகபூர்வ பெறுநருக்கு முன்மொழிவொன்றினை சமர்ப்பிக்கின்ற நேரத்தில், 282

ஆம் பிரிவின் தகுதி கட்டளைக்கறகளில் திருப்தியுறவில்லை;

(உ) எம்எஸ்எம்இ கடன்பெறுநர், எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஏற்பாடுகளின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்ற கட்டளைகளுடன் இணங்கியொழுகவில்லை;

(ஊ) எம்எஸ்எம்இ கடன்பெறுநர், மூன்று மாதங்களுக்கு குறையாத காலப் பகுதியுடன் தொடர்புடைய தொகையொன்றுக்கு எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஏற்பாட்டின் கீழ் கொடுப்பனவுகள் தொடர்பில் நிலுவையாக இருத்தல்;

(எ) எம்எஸ்எம்இ கடன்பெறுநர், எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஏற்பாடுகள் நடைமுறையில் உள்ளதை அவசியமாக்குவதற்கான நியாயபூர்வமான ஏதேனும் செயலினை மேற்கொள்வதற்கு தவறியுள்ளமை; அல்லது

(ஏ) எம்எஸ்எம்இ கடன்பெறுநர், எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஏற்பாடுகள் மாறுபாடு ஒன்றுக்கு சம்மதத்தினை தெரிவிப்பதற்கு நியாயமற்ற முறையில் மறுத்தல்.

(5) இரண்டாம் உட்பிரிவின் கீழ் விண்ணப்பம் ஒன்றினை விசாரணை செய்கையில், நீதிமன்றமானது –

(அ) விண்ணப்பத்தினை நீக்கலாம்;

(ஆ) எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஏற்பாட்டினை முடிவுறுத்தலாம்; அல்லது

(இ) 289 ஆம் பிரிவின் கீழ் எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஏற்பாடுகளுக்கான வேறுபாடு ஒன்றுக்கான பிரேரணையை தயார் செய்யும் படி தனிப்பட்ட கடனிறுக்க வகையின்மை நிருவாகிக்கு கட்டளையிடலாம்.

(6) மேற்படி ஐந்தாம் உட்பிரிவின் கீழ் கட்டளையொன்றினை நீதிமன்றம் வழங்கிய பொழுது எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஏற்பாடுகள் நடைமுறை

யிலுள்ள காலப் பகுதியினுள் உள்ளடக்கப்பட்ட கடனொன்று தொடர்பில் சேர்ந்த ஏதாவது வட்டி, கட்டணங்கள், அல்லது விதிப் பனவுகள் ஆகியவற்றை செலுத்தும் படி கடன்பட்ட வரை நீதிமன்றம் தேவைப்படுத்தலாம்.

(7) ஐந்தாம் மற்றும் ஆறாம் உட்பிரிவுகளின் கீழ் அல்லது எழுத்து மூலமான அறிவித்தலை நீதிமன்றம் கடனாளி; தனிப் பட்ட கடனிறுக்கவகையின்மை நிருவாகி, உத்தியோகபூர்வ பெறுநர், (5) ஆம் அல்லது (6) ஆம் உட்பிரிவுகளின் கீழ் கட்டளை ஏற்புடைய யாராவது கடன்கொடுநர்களுக்கு வழங்குதல் வேண்டும் -

(8) ஏழாம் உட்பிரிவின் கீழ் உத்தியோகபூர்வ பெறுநருக்கு எழுத்து மூலமான அறிவித்தல்களை நீதிமன்றம் வழங்கும் பட்சத்தில், உத்தியோகபூர்வ பெறுநரானவர் பதினான்கு நாட்கள் காலப் பகுதியினுள், குறிப்பீட்டுரைக்கப்படக்கூடிய வாறு –

(அ) நீதிமன்ற கட்டளையின் பொது அறிவித்தலை வழங்கவேண்டும்;

(ஆ) அத்தகைய அறிவித்தலின் பிரதியை பதிவாள ருக்கும் அதிகாரசபைக்கும் அனுப்ப வேண்டும்.

தனிசு மீள் கட்டமைப்பு ஏற்பாடுகள் பூரணப்படுத் தப்படல்

**291.** (1) ஏற்பாடுகள் 290 ஆம் பிரிவின் கீழ் முன்கூட்டியே முடிவுறுத்தப்பட்டால் அன்றி, உருவாக்கப்பட்ட சகல கடப் பாடுகளும் பூரணப்படுத்தப்படும் பொழுது எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஏற்பாடு பூரணப்படுத்தப் படுகின்றது.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் ஏற்பாடொன்று பூரணப்படுத் தப்படும் பொழுது பூரணப்படுத்தப்பட்டதன் பின்னர் பதினான்கு நாட்களுக்குள் தனிப்பட்ட கடனிறுக்கவகை யின்மை நிருவாகி பின்வருவனவற்றை மேற்கொள்ளல் வேண்டும் –

(அ) பூரணப்படுத்திய சான்றிதழ் ஒன்றை கடனா ளிக்கு வழங்குதல்; மற்றும்

(ஆ) பூரணப்படுத்தல் சான்றிதழ் தொடர்பான அறிவித்தலை உத்தியோகபூர்வ பெறுநருக்கு வழங்குதல்.

(3) பூரணப்படுத்திய சான்றிதழானது குறிப்பிடப்பட்ட விடயங்களுக்கான முதல் தோட்ட சான்றுகளாகும்.

(4) ஓராம் உட்பிரிவின் கீழ் எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஏற்பாடுகள் பூரணப்படுத்தப்படுகின்ற பொழுது கடனாளிது உள்ளடக்கப்பட்ட கடன்கள் இரத்துச் செய்யப்படுகின்றன, மற்றும் ஏதாவது வட்டி, கட்டணங்கள் அல்லது விதிப்பனவுகள் அத்தகைய கடன்கள் தொடர்பில் செலுத்த வேண்டியவைகளாக காணப்படுகின்றவற்றை உள்ளடங்கலாக கடன்களின் ஏதாவது பகுதியை செலுத்த வேண்டிய கடப்பாடு கடனாளிக்கு இல்லை.

(5) எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஏற்பாடுகளை பூரணப்படுத்துவதானது ஒழுங்கின் நியதிகளினால் வழங்கப்பட்ட நீட்டிப்புவரையில் தவிர-

(அ) கடனாளிடன் இணைந்து கடனை செலுத்த வேண்டிய யாராவது ஆளை கடனிலிருந்து விடுவித்தல்; அல்லது

(ஆ) கடனாளிது கடனுக்கான உத்தரவாதங்களிலிருந்து கடன்பட்டவரை விடுவித்தல்.

(6) ஏற்பாட்டு நியதிகளில் வழங்கப்பட்ட அளவை தவிர, எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஏற்பாடொன்றினை பூரணப்படுத்துவதானது வாடகைக் கொள்வனவு உடன்படிக்கை அல்லது உத்தரவாதப்படுத்தப்பட தனிசிலிருந்து எம்எஸ்எம்இ கடன்பெறுநரை விடுவிக்கவில்லை.

(7) மேற்படி இரண்டாம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட பூரணப்படுத்திய சான்றிதழை உத்தியோகபூர்வ பெறுநர் பெற்றுக் கொள்கின்ற பொழுது, உத்தியோகபூர்வ பெறுநர் பின்வருவனவற்றை செய்தல் வேண்டும்-

(அ) நீதிமன்ற கட்டளையின் பொது அறிவித்தலை வழங்கவேண்டும்;

(ஆ) அத்தகைய அறிவித்தலின் பிரதியை பதிவாளருக்கும் அதிகாரசபைக்கும் அனுப்ப வேண்டும்.

(8) சந்தேகத்தை தவிர்க்கும் முகமாக, (1) ஆம் உட்பிரிவின் கீழ் எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஏற்பாடொன்று பூரணப்படுத்தப்பட்டதும், எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஏற்பாடானது தொடர்ந்தும் வலுவிலிருக்காது, மற்றும் 287 ஆம் பிரிவின் கீழ் கடன்கொடுநருக்கான பரிகாரங்கள் தொடர்பான கடன் தீர்ப்புப் பிற்போடல் தொடர்ந்தும் வலுவிலிருக்காது.

தனிசு மீள் கட்டமைப்பு ஒழுங்கேற் பாட்டின் கீழ் தனிப்பட்ட கடனிறுக்க வகை யின்மை நிருவாகியின் கடமைகள்

**292.** (1) எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஏற்பாடொன்றின் கீழ் தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நிருவாகியின் கடமைகள் பின்வருவனவற்றையும் உள்ளடக்கி யிருக்கும் –

(அ) பொதுவாக ஏற்பாட்டிற்கு விளைவை வழங் குதல்;

(ஆ) ஏற்பாட்டில் குறித்துரைக்கப்பட்ட முறையின் படி கடனாளிது ஆதனத்தை கையாளுதல்;

(இ) தகவல்கள் பற்றி நியாயபூர்வமான கோரிக்கை யொன்றை எம்எஸ்எம்இ கடனாளி; மேற் கொள்ளும் பொழுது ஏற்பாட்டு நிருவாகம் பற்றிய தகவல்களை வழங்குதல்;

(ஈ) பின்வருமாறு கடன்பட்ட ஒருவருக்கு ஒழுங்கு நிருவாகம் பற்றிய தகவல்களை வழங்குதல் -

(i) ஏற்பாட்டிற்கு கடப்பட்டவர்;

(ii) எம்எஸ்எம்இ கட்னபெறுநர் தகவல்களுக் காக நியாயபூர்வமான கோரிக்கை யொன்றை மேற்கொள்ளுதல்; அத்துடன்

(உ) உத்தியோகபூர்வ பெறுநருக்கு ஒழுங்கு நிரு வாகம் பற்றிய தகவல்களை வழங்குதல்;

(2) எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஏற்பாடொன்றுக்கான சம்பந்தப்பட்ட பிரேரணையில் குறித் துரைக்கப்பட்ட செலவு வகைகளை தவிர ஏற்பாட்டினை நிருவாகம் செய்வது தொடர்பில் ஏற்பட்ட செலவுகளை தனிப் பட்ட கடனிறுக்கவகையின்மை நிருவாகி மீளச் செலுத்தக் கூடாது.

(3) தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நிருவாகியானவர் எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஏற்பாடுகளின் கீழ் கடனாளினால் செலுத்தப்படுகின்ற பணத்திற்காக தனியான வங்கிக் கணக்கொன்றை பேணுதல் வேண்டும், மற்றும் வேறுவகையாக குறிப்பிட்டாலன்றி கணக்கிலிருந்து எத்தகைய பணத்தையும் செலுத்தக் கூடாது –

(அ) எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஏற்பாடுகளை நிருவாகம் செய்தலுடன் தொடர்புடைய நோக்கங்கள்;

(ஆ) இந்த சட்டத்தின் பிரகாரம் மற்றும் இந்த சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட வேறு ஒழுங்குவிதிகள்; அல்லது

(இ) நீதிமன்றத்தின் பணிப்புரையின் பிரகாரம்;

(4) கடனாளியினால் செலுத்தப்பட்ட பணத்தை எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஏற்பாடுகளின் படி இணங்கப்பட்ட அளவை உரிய நேரத்தில் கடன் கொடுநர்களுக்கு தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நிருவாகி வழங்கலாம்;

(5) கடனாளியிடமிருந்து கிடைக்கப்பெற்ற பணம் மற்றும் எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஏற்பாடொன்றின் கீழ் கடன்கொடுநர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட பணம் தொடர்பான முழுமையான மற்றும் துல்லியமான பதிவுகளை தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நிருவாகி பேணுதல் வேண்டும்.

(6) தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நிருவாகியானவர் கடனாளிடன் முறையான தொடர்புகளையும் மற்றும் எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஏற்பாடுகள் பற்றிய மீளாய்வுகளையும் மேற்கொள்ளல் வேண்டும் -

(அ) ஆறு மாத காலப் பகுதிக்கு ஒரு முறை ஆகக் குறைந்தது ஒரு முறையாவது; மற்றும்

(ஆ) உடன்பாட்டை தொழிற்படுத்தி வருகின்ற சூழ்நிலைகளினால் தேவைப்படுத்தப்பட்டதன் படி அத்தகைய ஏனைய நேரங்களில்.

(7) பொருள் சார்ந்த நிலையில் கடனாளிது சூழ்நிலைகள் மாறுகின்ற பொழுது, தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நிருவாகியானவர், கடனாளிடன் கலந்தாலோசனைகளை மேற்கொண்டு 58 ஆம் பிரிவின் கீழ் எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஏற்பாடுகள் மாறுபடுகின்ற செயன் முறை ஆரம்பித்துள்ளதா என்பது தொடர்பில் உரிய பரிசீல னைகளை செய்தல் வேண்டும்.

தனிப்பட்ட கடனிறுக்க வகை யின்மை பிரேரணை யாளர்கள்

**293.** (1) தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை பிரேரணை யாளர் ஒருவர் இந்தப் பகுதியின் கீழ் தனிப்பட்ட கடனிறுக்க வகையின்மை பிரேரணையாளர் ஒருவரது பணிகளை புரிகை யில்,

(அ) கடனாளிது முகவர் அல்ல;

(ஆ) யாராவது கடன்கொடுநர் அல்லது கொடுத்த வர்களது முகவர் அல்ல;

(இ) கடனாளி, கடன்கொடுநர்கள் ஆகிய இருவரை யும் திருப்திப்படுத்தக்கூடிய தீர்வுகளை வாய்ப் புள்ளதாயின் அடைவதற்கு கடனாளி; மற்றும் கடன்கொடுநருடன் தனிப்பட்ட கடனிறுக்க வகையின்மை பிரேரணையாளர் என்ற முறை யில் தொழில்வாண்மை ஆற்றல்களுடன் ஈடு படல் வேண்டும்; மற்றும்

(ஈ) நான்காம் பிரிவின் கீழ் அதிகாரசபையினால் உருவாக்கப்பட்ட இந்த சட்டத்தின் ஏற்பாடு கள் மற்றும் ஏதாவது ஒழுங்குவிதிகள், விதிகள், தராதரங்கள், ஒழுக்கநெறிக் கோவைகள், நடைமுறை பணிப்புரைகள் அல்லது வழி காட்டிகள் ஆகியவற்றை கருத்திற் கொண்டு தொழில்வாண்மை சுயாதீன தீர்மானங்களை பிரயோகித்தல்.

(2) பின்வரும் நிலைகளில் மாத்திரமே ஆள் ஒருவர் தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை பிரேரரணையாளராக சேவையாற்றலாம் -

(அ) பிரேரிக்கப்பட்ட எம்எஸ்எம்இ கம்பெனி எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஏற்பாடுகள் தொடர்பில் 12 ஆம் பிரிவின் கீழ்

பிரதான பதவி வகிப்பவராக நியமிக்கப்படுவதற்கும் பணியாற்றுவதற்கும் தகைமை பெற்றவர்;

(ஆ) பிரேரிக்கப்பட்ட எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஏற்பாடுகள் தொடர்பில் பிரதான பதவி வகிப்பவராக நியமிக்கப்படுவதற்கும் பணியாற்றுவதற்கும் 12 ஆம் பிரிவின் கீழ் அத்தகைய ஆள் தகைமை பெற்றவர் என எழுத்து மூலம் சான்றுப்படுத்துதல்; மற்றும்

(இ) தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை பிரேரணையாளராக நியமிக்கப்படுவதற்கு எழுத்து மூலம் சம்மதத்தை தெரிவித்தல் மற்றும் நியமிக்கப்படுகின்ற நேரத்தில் சம்மதத்தினை வாபஸ் பெறாமல் இருத்தல்.

(2) ஆள் ஒருவர் அவரது சம்மதத்துடன் தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை பிரேரணையாளராக நியமிக்கப்பட்டு செயற்படுகின்ற பொழுது, (2) ஆம் உட்பிரிவில் (அ) மற்றும் (ஆ) பந்திகளில் குறிப்பிடப்பட்ட ஏதாவது தேவைப்பாடுகளை தெரிந்திருந்தும் நிறைவேற்றாத பொழுது இந்த உட்பிரிவின் கீழ் குற்றம் ஒன்றை இழைத்தவராவார். குற்றத் தீர்ப்பளிக்கப்படும் பொழுது ஐந்து இலட்சம் ரூபாவிற்கு குறையாத தொகையொன்றினை மற்றும் இரண்டு மில்லியன் ரூபாவிற்கு அதிகப்படாத தொகையொன்றினை தண்டமாகவோ அல்லது மூன்று வருடத்திற்கு மேற்படாத காலப் பகுதியை கடுழியச் சிறைத் தண்டனையாகவோ அல்லது அத்தகைய தண்டப் பணம் மற்றும் சிறைத்தண்டனை ஆகிய இரண்டையும் நிறைவேற்றல் வேண்டும்.

தனிப்பட்ட கடனிறுக்க வகை யின்மை நிருவாகிகள் எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள் கட்டமைப்பு ஒழுங்கேற்பாடுகள்

**294.** (1) தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நிருவாகியொருவர், இந்தப் பகுதியின் கீழ் தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நிருவாகி பணிகளைப் புரிகையில்,

(அ) கடனாளியினது முகவர் அல்ல;

(ஆ) யாராவது கடன்கொடுநர் அல்லது கொடுத்தவர்களது முகவர் அல்ல;

(இ) கடனாளி கடன்கொடுநர்கள் ஆகிய இருவரையும் திருப்திப்படுத்தக்கூடிய தீர்வுகளை வாய்ப்

புள்ளதாயின் அடைவதற்கு கடனாளி; மற்றும் கடன்கொடுநருடன் தனிப்பட்ட கடனிறுக்க வகையின்மை பிரேரணையாளர் என்ற முறையில் தொழில்வாண்மை ஆற்றல்களுடன் ஈடுபடல் வேண்டும்; அத்துடன்

(ஈ) நான்காம் பிரிவின் கீழ் அதிகாரசபையினால் உருவாக்கப்பட்ட இந்த சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் ஏதாவது ஒழுங்குவிதிகள், விதிகள், தராதரங்கள், ஒழுக்கநெறிக் கோவைகள், நடைமுறை பணிப்புரைகள் அல்லது வழிகாட்டிகள் ஆகியவற்றை கருத்திற் கொண்டு தொழில்வாண்மை சுயாதீன தீர்மானங்களை பிரயோகித்தல்.

(2) ஆள் ஒருவர் தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நிருவாகியாக பின்வரும் நிலைகளில் மாத்திரம் சேவையாற்றலாம் -

(அ) பிரேரிக்கப்பட்ட எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஏற்பாடுகள் தொடர்பில் 12 ஆம் பிரிவின் கீழ் பிரதான பதவி வகிப்பவராக நியமிக்கப்படுவதற்கும் பணியாற்றுவதற்கும் தகைமை பெற்றவர்;

(ஆ) பிரேரிக்கப்பட்ட எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஏற்பாடுகள் தொடர்பில் பிரதான பதவி வகிப்பவராக நியமிக்கப்படுவதற்கும் பணியாற்றுவதற்கும் 12 ஆம் பிரிவின் கீழ் அத்தகைய ஆள் தகைமை பெற்றவர் என எழுத்து மூலம் சான்றுப்படுத்துதல்;

(இ) தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை பிரேரணையாளராக நியமிக்கப்படுவதற்கு எழுத்து மூலம் சம்மதத்தை தெரிவித்தல் மற்றும் நியமிக்கப்படுகின்ற நேரத்தில் சம்மதத்தினை வாபஸ் பெறாமல் இருத்தல்.

(3) ஆள் ஒருவர் அவரது சம்மதத்துடன் தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை பிரேரணையாளராக நியமிக்கப்பட்டு செயற்படுகின்ற பொழுது, (2) ஆம் உட்பிரிவில் (அ)

மற்றும் (ஆ) பந்திகளில் குறிப்பிடப்பட்ட ஏதாவது தேவைப் பாடுகளை தெரிந்திருந்தும் நிறைவேற்றாத பொழுது இந்த உட்பிரிவின் கீழ் குற்றம் ஒன்றை இழைத்தவராவார். குற்றத் தீர்ப்பளிக்கப்படும் பொழுது ஐந்து இலட்சம் ரூபாவிற்கு குறையாத தொகையொன்றினை மற்றும் இரண்டு மில்லியன் ரூபாவிற்கு அதிகப்படாத தொகையொன்றினை தண்ட மாகவோ அல்லது மூன்று வருடத்திற்கு மேற்படாத காலப் பகுதியை கடுழியச் சிறைத் தண்டனையாகவோ அல்லது அத்தகைய தண்டப் பணம் மற்றும் சிறைத்தண்டனை ஆகிய இரண்டையும் நிறைவேற்றல் வேண்டும்.

எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள் கட்டமைப்பு ஒழுங்கேற் பாடுகள் நீதிமன்ற பணிப்புகள்

**295.** (1) பெறுநர் அல்லது தனிப்பட்ட கடனிறுக்கவகை யின்மை நிருவாகி எம்எஸ்எம்இ கம்பெனி தனிசு மீள் கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டுடன் சம்மந்தப்பட்ட எழுகின்ற ஏதேனும் விடயம் தொடர்பான பணிப்புகளுக்கு அல்லது கட்டளையொன்றுக்காக நீதிமன்றத்துக்கு உத்தியோகபூர்வ விண்ணப்பத்தினைச் செய்யலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழான விண்ணப்பமொன்றின் மேல்; நீதிமன்றமானது –

(அ) நீதிமன்றம் தோதானதெனக் கருதுகின்றவா றான பணிப்புகளை உத்தியோகபூர்வ பெறுநர் அல்லது தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நிருவாகி என்போருக்கு வழங்கலாம்;

(ஆ) 290 ஆம் பிரிவின்கீழ் எம்எஸ்எம்ஈ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடுகளின் முடிவுறுத்துகைக்கான விண்ணப்பமொன்றாக விண்ணப்பத்தைக் கருதலாம்; அல்லது

(இ) 289 ஆம் பிரிவின் கீழ் எம்எஸ்எம்ஈ கம்பெனி தனிசு மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடுகளின வேறுபாட்டுக்கான நடைமுறைகளை தொடங் குவதற்கு தனிப்பட்ட கடனிறுக்கவகை யின்மை நிருவாகிக்கு கட்டளையிடலாம்.

## பாகம் XII

## ஒழித்துக்கட்டுதல்

### அத்தியாயம் 1

### ஒழிப்போனின் வகிபங்கு

ஒழிப்போனின் பங்கு

**296.** முந்நூற்றி முப்பத்தேழாம் பிரிவிற்கமைய, கம்பெனியின் ஒழிப்போனொருவர் இச்சட்டத்தின் ஏற்புடையற்பாலதான ஏற்பாடுகளிற்கமைய பின்வரும் நோக்கங்களை கொண்டுள்ளார் -

(அ) கம்பெனியின் ஆதனத்தின் மீதான கட்டுப்பாட்டினைப் பிரயோகித்தல்;

(ஆ) கம்பெனியின் ஆதனத்தை பாதுகாத்தல்;

(இ) கம்பெனியின் ஆதனத்தை காசாகப் பெறுவதற்கு; அத்துடன்

(ஈ) (i) கம்பெனியின் ஆதனத்தின் காசாகப் பெறுதலின் முன்னெடுத்தல்; அத்துடன்

(ii) ஏற்புடையதாகுமிடத்து, கம்பெனியின் ஆதனத்தை

என்பவற்றை விநியோகித்தல்.

### அத்தியாயம் 2

### ஒழித்துக்கட்டல் செயன்முறை

ஒழித்துக் கட்டல் தொடங்கும் போது

**297.** கம்பெனியொன்றின் ஒழித்துக்கட்டலானது இப்பன்னிரண்டாம் இப்பாகத்தின் கீழ் மாற்றீட்டு ஒழிப்போனொருவர் தவிர்ந்த ஒழிப்போனொருவர் நியமிக்கப்பட்ட அந்நாளின், மற்றும் அந்நேரத்திலிருந்து தொடங்குகின்றது.

ஒழிப் போனின் நியமனம்

**298.** (1) கம்பெனியொன்றானது-

(அ) பெயரிடப்பட்ட குறித்த ஆள்; அல்லது

(ஆ) உத்தியோகப்பூர்வ பெறுநரின்

ஒழிப்போனொருவரான நியமனத்தினால் ஒழித்துக்கட்டுதலில் இடப்படுகின்றது.

(2) ஒழிப்போனொருவர் -

(அ) விசேடத் தீர்மானத்தினால், கம்பெனியால்;

(ஆ) கம்பெனியின் அமைப்பகவிதியில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் நிகழ்வின் நிகழுகையின் மீது, தீர்மானத்தினால், கம்பெனியின் சபையினால்;

(இ) நீதிமன்றினால் -

(i) கம்பெனியின்;

(ii) கம்பெனியின் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பணிப்பாளர்களின்;

(iii) கம்பெனியின் உதவுதொகை செலுத்துநரொருவரின்;

(iv) கம்பெனியின் (எதிர்பாரா மற்றும் உத்தேச கடன்கொடுநர் உள்ளடங்கலாக) கடன்கொடுநரின்;

(v) கம்பெனியானது நிருவாகத்திலிருப்பின், நிருவாகியொருவரின்;

(vi) பெறுநரொருவரின்;

(vii) பதிவாளரொருவரின்; அல்லது

(viii) அதிகாரசபையின்;

விண்ணப்பத்தின் மீது; அல்லது

(ஈ) 214 ஆம் பிரிவின்கீழ் பெறுபேற்று கூட்டமொன்றில் நிறைவேற்றப்பட்ட கடன்கொடுநர்களின் தீர்மானமொன்றினால்

நியமிக்கப்படலாம்.

(3) உத்தியோகப்பூர்வ பெறுநர் ஒழிப்போனொருவராக –

(அ) இரண்டாம் (அ) என்னும் உட்பிரிவின் என்னும் இன் கீழ்,

(i) வங்கிமுறிவுக் கட்டளைசெய்யப்பட்டுள்ளவரான தொடர்புடைய ஆளொருவரின்; அல்லது

(ii) உத்தியோகப்பூர்வ பெறுநர் ஒழிப்போனாகவிருக்கும் வேறொரு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றின்

கம்பெனியின் பங்குகளுடன் இணைந்த வாக்களிக்கும் உரிமைகளை பிரயோகிக்கின்ற உத்தியோகப்பூர்வ பெறு நரின் காரணத்தினால் விசேட தீர்மானமொன்று நிறை வேற்றப்படுமிடத்து; அல்லது

(ஆ) நீதிமன்றினால் தவிர நியமிக்கப்படுதலாகாது.

(4) நீதிமன்றமானது (2) (இ) என்னும் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்படலாகாது.

(அ) 303 ஆம் பிரிவினை கணக்கிலெடுக்கையில் கம்பெனியானது கடனிறுக்கவகையின்மை யாக காணப்படுகின்றது; அல்லது

(ஆ) ஒழித்துக்கட்டுதலினுள் கம்பெனி இடப்படுத லானது நியாயமானதும் ஒப்புரவானதும் என,

நீதிமன்றம் திருப்திப்படுமிடத்து ஒழிப்போனொருவரை நியமிக்கலாம்.

(5) நீதிமன்றமானது எதிர்பாரா மற்றும் உத்தேச கடன் கொடுநரினால் செய்யப்பட்ட (2)(இ) என்னும் உட்பிரிவின் கீழான விண்ணப்பத்தினை –

(அ) செலவுக்கான அத்தகைய பிணைப்பொறுப் புக்கள் அவசியமானதென வழங்கப்பட்டிருந் தொலொழிய; அத்துடன்

(ஆ) ஒழித்துக்கட்டலுக்கான முதற்றோட்டளவிலான வழக்கானது தாபிக்கப்பட்டுள்ளதென நீதி மன்றம் திருப்தியுற்றாலொழிய,

ஏற்றுக்கவனத்திலாகாது.

(6) இரண்டாம் உட்பிரிவின் (அ) அல்லது (ஆ) என்னும் பந்தியின் கீழான நியமனமொன்றானது எழுத்துமூலமான தாக விருத்தல் வேண்டும்.

(7) கம்பெனிகள் சட்டத்தின் 97(2)(ஈ) மற்றும் 177(3) ஆம் பிரிவுகளின் கீழானவை உள்ளிட்ட, (2)(இ) ஆம் உட்பிரிவில் அடங்கியிருக்கக்கூடியன தவிர்ந்த தத்துவமொன்றின் கீழான ஒழித்துக்கட்டுதலில் இடப்பட கம்பெனியொன்று கட்டளை யிடப்பட்டிருக்கின்றவிடத்து, ஒழிப்போனொருவரின் நியமன மானது அனைத்து நோக்கங்களுக்காகவும் அவ்வுட்பிரிவின்

VII ஆம் பந்தியின் கீழ் பதிவாளரினாலான விண்ணப்பத்தின் மீது (2)(இ) என்னும் உட்பிரிவின் கீழ் மேற்கொள்ளப் பட்டவொன்றாக பரிகரிக்கப்படுதல் வேண்டும்.

கம்பெனியால் அல்லது சபை யினால் ஒழிப் போனின் நியமனத்தின் மீதான மட்டுப் பாடுகள்

**299.** (2)(இ) என்னும் பிரிவின் கீழ் விண்ணப்பமொன்று செய்யப்பட்டு கம்பெனிக்கு அனுப்பப்பட்டுள்ளவிடத்து, மற்றும் நிலுவையிலிருக்கின்றவிடத்து -

(அ) கம்பெனிக்கு விண்ணப்பம் சேர்ப்பிக்கப்பட் டதன் பின்னரான ஏழு வேலைநாட்களிற்குள் நியமனம் செய்யப்பட்டிருப்பின்;

(ஆ) கடன்கொடுநரின் முன்னரான, எழுத்துமூல சம்மதத்துடன் 298 (2)(இ) என்னும் பிரிவின் கீழ் விண்ணப்பமொன்று கடன்கொடுநரினால் செய்யப்பட்டிருப்பின்;

(இ) நீதிமன்றத்தின் அனுமதியுடன்; அல்லது

(ஈ) முந்தைய ஒழிப்போன் -

(i) இப்பிரிவின் முற்போந்த பந்திகளில் ஒன்றினை; அல்லது

(ii) இப்பந்திக்கு-

இணங்க நியமிக்கப்பட்டிருக்கின்றவிடத்து, ஒழிப்போனின் பதவியிலான வெற்றிடத்தை நிரம்புவதற்கு மாற்றீட்டு ஒழிப் போனொருவராக-

அன்றி 298(2) ஆம் பிரிவின் (அ) அல்லது (ஆ) என்னும் பந்தியின் கீழ் ஒழிப்போனொருவர் நியமிக்கப்படலாகாது.

பதிவுசெய்யப் படுவதற்காக ஒழித்துக் கட்டுதலின் ஆரம்பம்

**300.** (1) ஒழிப்போனொருவர் 298 (2)(அ) என்னும் பிரிவின் கீழ் நியமிக்கப்படுகின்றவிடத்து, கம்பெனியானது விசேடத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட தேதி மற்றும் நேரம் என்பனவற்றை ஒழிப்போனை நியமிக்கும் விசேடத் தீர்மானத்தில் பதிவுசெய்தல் வேண்டும்.

(2) ஒழிப்போனொருவர் 298 (2)(ஆ) பிரிவின் கீழ் நியமிக் கப்படுகின்றவிடத்து, கம்பெனியின் சபையானது தீர்மானம் நிறைவேற்றப்பட்ட தேதி மற்றும் நேரத்தினை ஒழிப்போனை நியமிக்கும் தீர்மானத்தில் பதிவுசெய்தல் வேண்டும்.

(3) ஒழிப்போனொருவர் 298 (2)(இ) என்னும் பிரிவின் கீழ் நியமிக்கப்படுகின்றவிடத்து, நீதிமன்றமானது கட்டளை ஆக்கப்பட்ட தேதி மற்றும் நேரத்தினை ஒழிப்போனை நியமிக்கும் கட்டளையில் பதிவுசெய்தல் வேண்டும்.

பெறுபேற்று கூட்டத்தில் ஒழிப் போனின் நியமனம்

**301.** (1) பிரிவு 214(2)(ஆ) என்பதன் கீழ் ஒழிப்போனின் பெறுபேற்று கூட்டத்தினாலான தீர்மானமொன்றினால் கடன்கொடுநர்களினாலான நியமனங்கள் எனும் சந்தர்ப் பத்தில்-

(அ) தீர்மானமானது நியமனத்திற்காக ஆளொருவரை குறித்துரைக்காதவிடத்து; அல்லது

(ஆ) தீர்மானத்தில் நியமனத்திற்காக குறித்துரைக் கப்பட்ட ஆளின் நியமனமானது 312 ஆம் பிரிவிற்கு முரணாக அமைமிடத்து உத்தியோ பூர்வ பெறுநர் பின்வருமாறுள்ளாவிடத்து, ஒழிப்போனாக விருத்தல் வேண்டும்-

உத்தியோகப்பூர்வ பெறுநர் ஒழிப்போனாகவிருத்தல் வேண்டும்.

(2) பெறுபேற்று கூட்டமொன்றின் தீர்மானத்தினால் கடன்கொடுநர்கள் 214 (2)(ஆ) என்னும் பிரிவின் கீழ் ஒழிப்போனொருவரை நியமிக்கப்படுகின்றவிடத்து, நிருவாகத் தின் முடிவில் நிருவாகியாகவிருந்தள் -

(அ) கூட்டத்தில் (1) ஆம் உட்பிரிவு ஏற்புடையதா அல்லது இல்லையா என்பதனை உறுதிப் படுத்துதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) ஓராம் உட்பிரிவு ஏற்புடையதாகவிருப்பின், உத்தியோகபூர்வ பெறுநருக்கு அந்நிகழ்வு பற்றிய அறிவித்தலை உடனடியாக விதித் துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய முறையில் வழங்குதல் வேண்டும்.

கடனிறு வகையின் வெளிப் படுத்துகை

**302.** (1) (4)(அ) ஆம் உட்பிரிவிற்கமைவாக-

(அ) 298(2) ஆம் பிரிவின் (அ) அல்லது (ஆ) என்னும் பந்தியின் கீழ் ஒழிப்போனொருவர் நியமிக்கப்படுமிடத்து; அத்துடன்

(ஆ) நியமனத்திற்கு முன்னதாக-

(i) கம்பெனியின் எல்லாம் பணிப்பாளர்களினாலும்; அல்லது

(ii) கம்பெனியானது இரண்டிற்கு மேற்பட்ட பணிப்பாளர்களை கொண்டிருக்கையில், கம்பெனியின் பெரும்பான்மையான பணிப்பாளர்களினால் செய்யப்பட்ட; அத்துடன்

2 ஆம் உட்பிரிவிலுள்ள நிபந்தனைகளை எழுத்தமூல வெளிப்படுத்துகை ஈடுசெய்யுமிடத்து, கம்பெனிக்கு,

இப்பிரிவு ஏற்புடையதாகின்றது.

(2) (1) (ஆ) என்னும் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட நிபந்தனைகள் பின்வருமாறு குறிப்பிடுகின்றது –

(அ) (i) வெளிப்படுத்துகையைச் செய்கின்ற பணிப்பாளர்கள் கம்பெனியின் அலுவல்கள் பற்றி முழுமையான விசாரணைகளை மேற்கொண்டுள்ள;

(ii) அவ்வாறு செய்துள்ளவாறு, கம்பெனியின் ஒழித்துக்கட்டுதல் தொடங்கியதன் பின்னர் பன்னிரெண்டு மாதங்களை விஞ்சாத காலப்பகுதியினுள்; அதன் தனிசுகளை செலுத்துவதற்கு கம்பெனி இயலுமானதாகவுள்ளதெனும் அபிப்பிராயத்தினை உருவாக்கியுள்ளனர் என;

(ஆ) அத்தகைய வெளிப்படுத்துகை செய்யப்படுவதற்கு முன்னனரான ஆகப் பிந்திய செயல் மறைக்குகந்ததான தேதியைக் காட்டுகின்ற கம்பெனி அலுவல்கள் -

(i) இருப்பின் ஏதேனும் கையிருப்பின் குறிப்பேடு மற்றும் அவற்றிலிருந்து காசாகப் பெறுவதற்கு எதிர்பார்க்கப்படும் மொத்த தொகை உள்ளிட்ட, அதன் ஆதனங்களின் விபரங்கள்;

(ii) கம்பெனியின் தனிசுகள் மற்றும் ஏனைய பொறுப்புக்கள்;

(iii) அதன் ஒவ்வொரு கடன்கொடுநரின் பெயர் மற்றும் முகவரி;

(iv) ஒவ்வொரு கடன்கொடுநரினாலும் வைத் திருக்கப்படும் வில்லங்கம் அல்லது வில்லங்கள்; (ஏதேனும் இருப்பின்)

(v) தொழில், ஆதனம் மற்றும் நிதிசார் சூழ் நிலைகள் என்பன பற்றிய முழுக் அக் கறையும் பின்வருமாறு உள்ளடக்குகின் றது-

(vi) ஒழித்துக்கட்டுதலின் மதிப்பீடு செய்யப் பட்ட செலவுகள், கட்டணங்கள் மற்றும் செலவுகள் மற்றும் ஒழிப்போனின் மதிப்பிடு செய்யப்பட்ட ஊதியம்;

(vii) கூற்றுத் திகதியன்றுள்ளவாறுள்ள கம் பெனியின் பணிப்பாளர்களாகவிருக் கின்ற, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஆட்களின் சத்தியக்கடதாசியினால் ஆதரிக்கப்படுதல்;

(இ) கம்பெனியின் பணிப்பாளர்களின் கூட்டத்தில் செய்யப்பட்டது; அத்துடன்

(ஈ) ஒழிப்போனின் நியமனத் தேதிக்கு தொடரும் நேர் முற்போந்த இருபது வேலை நாட்களி னுள் செய்துகொள்ளப்பட்டது.

(3) வெளிப்படுத்துகையில் குறித்துரைக்கப்பட்ட முழுக் காலப்பகுதியினுள்ள தனிசுகளை செலுத்துவதற்கு இயலு மானதாக உள்ளது எனும் அபிப்பிராயத்துக்கான நியாயமான ஏதுக்களைக் கொண்டிருக்காமலல் உட்பிரிவு (1)(ஆ)(i) என்பதன் கீழ் செய்யப்படுகின்ற வெளிப்படுத்துகையைச் செய்கின்ற பணிப்பாளர் ஒருவர் தவறொன்றைப் புரிகின்றார்.

(4) கம்பெனி உட்பிரிவு (1)(ஆ) என்பதன் கீழ் ஆக்கப்பட்டு கோப்பிடப்பட்ட வெளிப்படுத்துகையொன்றில் குறித்துரைக் கப்பட்ட காலப்பகுதியினுள் முழுமையாக அதன் தனிசுகளை

செலுத்தவதற்கு இயலாதாகவுள்ளதென ஒழிப்போன் நம்பு கின்றவிடத்து அல்லது நியாயமான ஏதுக்களைக் கொண் டிருக்குமிடத்து-

(அ) இப்பிரிவானது கம்பெனிக்கு ஏற்புடையதாக இல்லாதொழிகின்றது ஆனால் (3) ஆம் உட் பிரிவினை பாதிக்காது அல்லது மட்டுப்படுத் தாது; அத்துடன்

(ஆ) ஒழிப்போனொருவர் செயல்முறைக்கு உகந் ததை விரைவாக, இப்பிரிவானது கம்பெனிக்கு இனியும் ஏற்புடையதாகாது என பதிவாள ருக்கும் மற்றும் அதிகாரசபைக்கும் எழுத்துமூல அறிவித்தல் வழங்கவேண்டும்.

(5) நான்காம் பிரிவின் (ஆ) என்னும் உட்பிரிவுக்கிணங்க ஒழிப்போனொருவர் தவறொன்றைப் புரிந்தவராகின்றார்.

(6) இப்பிரிவின் ஏற்புடைமையானது, (1) ஆம் உட் பிரிவின் பயனைக்கொண்டு, 306, 308, 310, 317, 319, 326, 330, 338, 353, 357, 358, 421 மற்றும் 426 ஆம் பிரிவுகளின் கீழ் பயனுறலைப் பெறும்.

தனிசுகளை செலுத்த இயலாமைக் கான சான்று

**303.** பிரிவு 298(2)(இ) இன் கீழான விண்ணப்பமொன் றின் நோக்கங்களுக்காக விண்ணப்பம் கோரிக்கைக்கு இணங்குவதற்கான இறுதித் தேதியின் பின்னரான முப்பது வேலை நாட்களினுள் விண்ணப்பம் செய்யப்பட்டாலொழிய, 409(4) ஆம் பிரிவுலுள்ள ஊகம் அத்தகைய தவறுகையின் காரணத்தினால் ஏற்புடமையாதலாகாது) கம்பெனி வகை யற்றதாகவுள்ளதான சான்றாக கோரிக்கையுடன் இணங்கி யொழுகுவதற்கான நியதிச்சட்டக் கோரிக்கையிற்கு சேவைத் தேதியிலிருந்து இருபத்தியொரு நாட்களுக்கான தவறுகை யின் சான்றானது ஏல்தகவுடையதல்ல.

தற்காலிக ஒழிப் போனின் நியமனம்

**304.** (1) 298(2)(இ) என்னும் பிரிவின்கீழ் விண்ணப்ப மொன்று செய்யப்படுமிடத்து, நீதிமன்றமானது –

(அ) விண்ணப்பமானது கேட்கப்படும் போது, ஒழிப்போனின் நியமனத்திற்கான கட்டளை யாக்கப்படும் எனும் சாத்திய முன்னதெனக் கவனத்துக் கொள்ளுமிடத்து; அத்துடன்

(ஆ) கம்பெனியின் ஆதனம் அல்லது கம்பெனியின் அலுவல்கள் விண்ணப்ப தீர்மானத்தின் தீவிர ஆபத்தான நிலுவையில் காணப்படுகின்றது அல்லது உள்ளன எனும் நம்பகதகும் சான்று களின் மீது திருப்திபடுமிடத்து -

நீதிமன்றம் உத்தியோகப்பூர்வ பெறுநரை தற்காலிக ஒழிப்போனாக நியமிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழான கட்டளையொன்றில், நீதிமன்றமானது கட்டளையாக்கப்பட்ட தேதி மற்றும் நேரம் என்பவற்றைப் பதிவுசெய்தல் வேண்டும்

(3) தற்காலிக ஒழிப்போனின் நியமானமானது (4) ஆம் உட்பிரிவின் கீழ் பயனுறுகின்றதான அத்தேதியின் மற்றும் அந்நேரத்தில் கம்பெனியின் தற்காலிக ஒழித்துக்கட்டலானது தொடங்குகின்றது.

(4) தற்காலிக ஒழிப்போனின் நியமனமானது (1) ஆம் உட் பிரிவின்கீழ் கட்டளையொன்று ஆக்கப்படும் அத்தேதியின் மற்றும் அந்நேரத்தில் பயனுறும்.

(5) தற்காலிக ஒழிப்போனொருவர் செயன்முறைகுகந் தனவு விரைவாகவும் நியமிக்கப்பட்டதன் பின்னரான ஐந்து வேலைநாட்களினுள் அத்தகைய ஆட்களுக்கு மற்றும் அத்தகைய முறையில் நியமனம் பற்றிய அறிவித்தலை வழங்குதல் வேண்டும்.

(6) தற்காலிக ஒழிப்போனொருவரின் நியமனமானது –

(அ) நீதிமன்றத்தினால் 298(2)(இ) என்னும் பிரிவின் கீழ் பின்வருவோரின் விண்ணப்பத்தின் மீது முடிவுறுத்தப்படலாம் -

(i) தற்காலிக ஒழிப்போனின்; அல்லது

(ii) 298(2)(இ) ஆம் பிரிவில் குறித்துரைக்கப் படும் விதந்துரைக்கப்படும்; ஆளொருவரின்

(ஆ) (i) ஒழிப்போனின் நியமனத்திற்கான கட்ட ளையொன்றை ஆக்குவதன் மீது; அல்லது

(ii) விண்ணப்பமொன்றை நீதிமன்றத்தினால் மறுப்பதன் மீது முடிவுறுத்தப்படுதலும் வேண்டும்,

(7) ஆறாம் உட்பிரிவின்கீழ் கட்டளையொன்றை ஆக்குவதில், நீதிமன்றமானது, அவசியமானதான வேறு ஏதேனும் துணைநிலைக்கட்டளையொன்றை ஆக்கலாம்.

(8) தற்காலிக ஒழிப்போனின் நியமனம் முடிவுறுத்தப்பட்டதன் பின்னரான ஐந்து வேலைநாட்களிற்குள், தற்காலிக ஒழிப்போன் விதித்துரைக்கபடக்கூடியதான அத்தகைய ஆட்களிற்கு அத்தகைய முறையில் முடிவுறுத்தலுக்குறிய அறிவித்தலை வழங்வேண்டும்.

(9) (6)(ஆ)(I) உட்பிரிவின் கீழ் தற்காலிக ஒழிப்போனொருவரின் நியமனமானது முடிவுறுத்தப்படுமிடத்து, கம்பெனியின் அலுவல்கள், தொழில் மற்றும் ஆதனத்தின் கட்டுப்பாட்டில் ஒழிப்போனை இடுவதற்கு அவசியமான எல்லவற்றையும் உடனடியாக செய்தல் வேண்டும்.

ஒழித்துக் கட்டலில் பணிப்பாளர் களின் கூற்று

**305.** (1) விதித்துரைக்கப்படக்கூடியதான அத்தகைய சூழ்நிலைகளில், இப்பிரிவு ஏற்புடையதாதலாகாது.

(2) கம்பெனியின் ஒழித்துக்கட்டல் தொடங்கியதன் பின்னர், ஐந்து வேலை நாட்களினுள், அல்லது (4) ஆம் உட்பிரிவின் கீழான ஏதேனும் காலப்பகுதியின் நீட்டிப்பினுள், கம்பெனியின் பணிப்பாளர்கள் பின்வருமாறு உள்ளடங்கியதான ஏற்பாட்டின் முன்னரான ஆகப்பிரதிய செயல்முறைக்குகந்ததான தேதியன்றுள்ளவாறு காட்டுகின்ற, கம்பெனியின் அலுவல்கள், தொழில் ஆதனம் மற்றும் நிதிசார் சூழ்நிலைகள் பற்றிய பூரண கூற்றை ஒழிப்போறுக்கு வழங்குதல் வேண்டும்.

(அ) அவற்றிலிருந்து காசாகப் பெறக்கூடியதாக எதிர்பார்க்கப்படும் கையிருப்பு பதிவு மற்றும் மொத்த தொகை உள்ளடங்கலான, அதன் ஆதனங்களின் விபரங்கள்;

(ஆ) கம்பெனியின் தனிசுகள் மற்றும் ஏனைய பொறுப்புக்கள்;

(இ) அதன் ஒவ்வொரு கடன்கொடுநரினதும் பெயர் மற்றும் முகவரி;

(ஈ) ஒவ்வொரு கடன்கொடுநரினாலும் வைத்திருக்கப்பட்ட வில்லங்கம் அல்லது வில்லங்கள் (எவையேனுமிருப்பின்);

(உ) ஒவ்வொரு அக்கறையும் உருவாக்கப்பட்ட திகதி;

(3) இரண்டாம் உட்பிரிவின் கூற்றானது கம்பெனியின் பணிப்பாளர்களாகல் ஒழிப்போன் பின்வருவோறை நியாய மாக கோரக்கூடியதான அத்தகைய பின்வரும் ஆட்களின் சத்தியக்கடதாசியினால் ஆதரிக்கப்படுதல் வேண்டும் -

(அ) கம்பெனியின் அலுவலரான அல்லது அலுவல ராகவிருந்த பணிப்பாளர் தவிர்ந்த ஆளொருவர்;

(ஆ) ஒழித்துக்கட்டுதல் தெடங்கிய தேதிக்கு நேர் முந்போந்த பன்னிரொண்டு மாதகாலப்பகுதி யினுள்ளான ஏதேனும் நேரத்தில் கம்பெனி யின் உருவாக்கம்; மேம்பாடு அல்லது முகா மைத்துவத்தில் பங்கிருகின்றரான ஆள்; அல்லது

(இ) தொடர்புடைய கூற்றின், கம்பெனியின் பணிப் பாளரொருவராக அல்லது ஏனைய அலுவல ராக இருக்கின்ற, அல்லது அக்காலப்பகுதியில் இருந்த, கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிப் பாளரொருவராக அல்லது ஏனைய அலுவல ராக அல்லது தொழிலில் இருக்கின்ற அல்லது இருந்த ஆளொருவர்.

(4) இரண்டாம் உட்பிரிவின் கீழ் ஒழிப்போன் அல்லது நீதிமன்றம் கூற்றின் ஏற்பாட்டுக்காக காலஎல்லையை நீட்டிக்கலாம்.

(5) ஆளொருவர் (2) ஆம் உட்பிரிவுடன் (3) ஆம் உட்பிரிவுடன் இணங்க தவறொன்றைப் புரிந்தவராகின்றார்.

ஒழிப்போன் கடன்கொடுநர்களின் கூட்டத்தை கூட்டுதல்

**306.** (1) ஒழிப்போனொருவர் -

(அ) ஒழித்துக்கட்டல் தொடங்கியதன் பின்னரான பத்து வேலைநாட்களிற்குள் கம்பெனிக்கு 302 ஆம் பிரிவு ஏற்புடையதாகாதவிடத்து; அல்லது

(ஆ) அவ்வில்லாதெழிப்பின் பத்து வேலைநாட்களி னுள் கம்பெனிக்கு 302 ஆம் பிரிவு ஏற்புடை மையாக்க இல்லாதொழிக்கப்படுமிடத்து;

கடன்கொடுநர்களின் கூட்டத்தைக் கூட்டுதல் வேண்டும்.

(2) கூட்டத்தில் பின்வரும் விடயங்கள் நடாத்தப்பட வேண்டும்-

(அ) கூட்டத்தில் அட்டவணையிடப்பட்டுள்ள ஆவணங்கள் பற்றி கடன்கொடுநர்களின் கவனம்;

(ஆ) ஒழிப்போனொருவரை மாற்றீடு செய்யப்பட வேண்டுமா அல்லது இல்லையா என்பது பற்றி கடன்கொடுநர்களின் தீர்மானம்; அத்துடன்

(இ) ஒழிப்போர் பின்வருவன மீதான கடன்கொடுநர்களின் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தீர்மானங்கள்இ ஒழித்துக்கட்டுதல் கடன் கொடுநர்களின் குழுவைத் தாபிப்பதற்கு நாடின்-

(i) 308 ஆம் பிரிவின் கீழ் அத்தகைய குழுவை தாபிக்கவேண்டுமா அல்லது இல்லையா என்பதன்; அத்துடன்

(ii) அத்தகைய குழுவொன்று தாபிக்கப்பட வேண்டின் யார் அக்குழுவில் உறுப்பினர்களாக நியமிக்கப்பட வேண்டும் என்பது பற்றி

(3) கூட்டத்தில் ஒழிப்போன் -

(அ) கடனிறுவகையற்ற தொழிலர்களின் நடத்தை மற்றும் செயலாற்றுகை என்பன அதிகார சபையினால் கண்காணிக்கப்படுகின்றது எனவும் மற்றும் அதிகாரசபையின் தொடர்பு விபரங்களை வழங்குகிறதென்றும் பொருள் பட்ட கூற்றொன்று;

(ஆ) 312 (1) ஆம் பிரிவின் என்னும் (இ) பந்தியில் குறித்துரைக்கப்பட்ட எழுத்துமூல சான்றுப் படுத்துகை;

(இ) 312 (1) ஆம் பிரிவின் (ஈ) என்னும் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட எழுத்துமூல சம்மதம்;

(ஈ) 30 ஆம் பிரிவுடன் இணங்குவதான நிருவாகியினால் ஒப்பமிடப்பட்ட அக்கறைகளின் கூற்று;

(உ) வழிப்போனின் பிரேரிக்கப்பட்ட ஊதியத்தின் அடிப்படை அல்லது அடிப்படைகள் மற்றும் ஏற்புடையற்பாலதான மணித்தியாலத்திற்கான மற்றும் சதவீத விகிதம் அல்லது விகிதங்கள் மற்றும் நிலையான மட்டம் அல்லது மட்டங்கள்,

என்பவற்றை அட்டவணையிடல் வேண்டும்.

(4) ஒழிப்போன் -

(அ) கம்பெனியின் கடன்கொடுநர்கள் பலருக்கு நியாயமானளவு செயல்முறைக்குகந்தாக கட்டம் பற்றி எழுத்துமூல அறிவித்தலை வழங்குதல் மூலம்; அத்துடன்

(ஆ) கூட்டம் பற்றி பொது அறிவித்தலை வழங்குதல் மூலம்.

(2) ஆம் உட்பிரிவின் கீழ் நடாத்தப்படுவதற்கு தேவைப்படும் கூட்டத்துக்கு முன்னரான ஆகக்குறைந்தது ஏழுவேலை நாட்களுனுள் கூட்டத்தைக் கூட்டுதல் வேண்டும்.

(5) (4) (அ) என்பதன் கீழான அறிவித்தலொன்றானது –

(அ) ஒழிப்போனொருவர் நியமிக்கப்பட்டுள்ளார் என கூறுதல்வேண்டும்;

(ஆ) பின்வருவனவற்றை கூறுதல் வேண்டும் -

(i) ஒழிப்போனின் முழுப்பெயர்;

(ii) நியமனத் தேதி;

(iii) ஒழிப்போனின் நியமிப்பாளரின் அடையாளம் மற்றும் நீதிமன்றமே நியமிப்பாளராகவிருக்குமிடத்து, நியமனம் செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளின் அடையாளம்; அத்துடன்

(iv) ஒழிப்போனின் அலுவலக முகவரி மற்றும் வழமையான வேலைநேரங்களில் விசார ணைகள் பணிக்கப்படக் கூடியதான தொடர்பு இலக்கம்

(இ) (i) கூட்டத்தில் நிரலிடப்படவுள்ள ஆவணங் கள்; அத்துடன்

(ii) கூட்டத்தில் நடாத்தப்படவுள்ள தொழில் களைக் அத்துடன்

குறித்துரைத்தல் வேண்டும்.

(ஈ) 308 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட கருமங்களை சுருக்கம் செய்தல் மற்றும் ஒழிப் போன் கடன்கொடுநர்களின் குழுவை தாபிப் பதற்கு ஒழிப்போன் நாடின், அத்தகைய ஒரு குழுபற்றிய உறுப்பாண்மைக்கான பெயர் குறித்த நியமனங்களுக்கு அழைப்புவிடுத்தல்.

(6) ஐந்தாம் அட்டவணையானது (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீட்டு செய்யப்பட்ட கூட்டமொன்றுக்கு ஏற்புடையன வாதல் வேண்டும்.

(7) கூட்டத்தை நடாத்திய பின்னரான இரண்டு வேலை நாட்களினுள் ஒழிப்போனானவர்-

(அ) (3)(அ) என்னும்; உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட கூற்றின் பிரதியொன்று;

(ஆ) (3)(ஈ) உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட கூற்றின் பிரதியொன்று; அத்துடன்

இ) (4)(அ) என்னும் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட அறிவித்தலின் பிரதியொன் றினை,

பதிவாளரிற்கும் அதிகாரசபைக்கும் அனுப்புதல் வேண்டும்.

(8) எவையேனும் (1), (3), (4), (5) மற்றும் (7) ஆம் உட்பிரிவுகளுடன் இணங்கியொழுகுவதற்கு தவறுகின்ற ஒழிப்போனொருவர் தவறொன்றைப் புரிந்தவராகின்றார்.

**307.** (1) பிரிவு 306 (2)(ஆ) என்பதன் கீழ் ஒழிப்போனொருவர் மாற்றீடு செய்யப்பட வேண்டமென தீர்மானமொன்று நிறைவேற்றப்படுமிடத்து ஒழிப்போனானவர் உடனடியாக மாற்றீட்டு ஒழிப்போனொருவரின் நியமனத்திற்காக நீதிமன்றத்துக்கு விண்ணப்பமொன்றை செய்தல் வேண்டும். ஒழிப்போனை மாற்றீடு செய்தல்

(2) இப்பிரிவின் கீழான விண்ணப்பத்தின் மீது, நீதிமன்ற ஒன்றில் –

(அ) (i) பொருத்தமான மாற்றீட்டு ஒழிப்போனை நியமிக்கும்; அல்லது

(ii) பொருத்தமான மாற்றீட்டு ஒழிப்போனது நியமனத்திற்கான செயன்முறையை குறித்துரைக்கும்; அத்துடன்

(ஆ) மாற்றீட்டு ஒழிப்போனது நியமனத்தின் மேல் ஒழிப்போனை அகற்றுதல்,

கட்டளையை ஆக்கலாம்.

(3) மாற்றீட்டு ஒழிப்போனொருவர், நியமனத்தின் பின்னரான ஐந்து வேலைநாட்களினுள், ஒவ்வொரு அறிந்த கடன் கொடுநருக்கும், 30 ஆம் பிரிவுடன் இணங்கியதான, ஒழிப்போனால் கையொப்பமிடப்பட்ட, வட்டிக் கூற்றினை அனுப்புதல் வேண்டும்.

**308.** (1) இப்பிரிவானது 302 ஆம் பிரிவு ஏற்புடையதாகும் வரை கம்பெனியொன்றுக்கு ஏற்புடையதலாகாது . ஒழித்துக் கட்டலில் கடன் கொடுநர் களின் குழு

(2) ஒழித்துக்கட்டலின்போதும், மற்றும் ஒழித்துக்கட்டல் கடன்கொடுநர்களின் குழுவானது ஏலவே தாபிக்கப்பட்டிராததிருப்பின், ஒழிப்போனொருவர் -

(அ) விதித்துரைக்கப்படக்கூடியதான அத்தகைய முறையில் கடன்கொடுநரினால் அவ்வாறு கோரப்படின், ஒழிதுக்கட்டுதல் கடன்கொடுநர்களின் குழுவின் நிலைநாட்டுதலை நாடியிருத்தல் வேண்டும்;

(ஆ) ஒழிப்போனின் சொந்த மனுவின் மீது, ஒழித்துக்கட்டல் கடன்கொடுநர்களின் குழுவொன்றின்.

(3) ஒழித்துக்கட்டல் கடன்கொடுநர்களின் குழுவின் தாபனம் மற்றும் அத்தகைய குழுவிற்கான நியமனங்களானவை கடன்கொடுத்தோர்களின் கூட்டத்தில் ஏற்கப்பட்ட ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தீர்மானங்களை தேவைப்படுத்துகின்றது -

(அ) (2)(அ) என்னும் உட்பிரிவின் கீழ் கோரிக்கை, ஒழிப்போன் கோரிக்கையை பெற்றதன் பின் ஏழு வேலைநாட்களினுள் ஒழிப்போன் கூட்டத்தை கூட்டுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) அறிவித்தலானது –

(i) இப்பிரிவில் குறிப்பீடு செய்யப்படும் விடயங்களை சுருக்கப்படுத்துதல் வேண்டும்; அத்துடன்

(ii) ஒழித்துக்கட்டல் கடன்கொடுநர்குழுவின் உறுப்பாண்மைக்கான குறித்த நியமனங்களை அழைத்தல்.

(4) ஐந்தாம் அட்டவணையானது (3) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்படும் கூட்டமொன்றிற்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

(5) ஒழித்துக்கட்டல் கடன்கொடுநர்களின் குழுவொன்று தாபிக்கப்பட்டால் -

(அ) பின்வரும் பணிகளை கொண்டிருத்தல் வேண்டும்-

(i) ஒழித்துக்கட்டலுடன் தொடர்புடைய விடயங்களை ஒழிப்போனுடன் ஆலோசித்தல் வேண்டும். அத்துடன்

(ii) ஆறாம் உட்பிரிவின்கீழ் அனுப்பப்பட்ட ஒழிப்போனிடமிருந்தான அறிக்கைகளை கருத்திற்கொள்ளுதல் வேண்டும்;

(ஆ) ஒழிப்போனுக்கு பணிப்புகளை வழங்கக் கூடாது.

(6) ஒழித்துக்கட்டல் கடன்கொடுநர்களின் குழு தாபிக்கப் பட்டால், ஒழிப்போன் விதித்துரைக்கப்படக் கூடியதான அத்தகைய முறையிலும் அத்தகைய காலப்பகுதியினுள்ளும் அத்தகைய தகவல்களை கொண்டிருக்கும் அறிக்கைகளை குழுவுக்கு அனுப்புதல் வேண்டும்;

(7) அவ்வாள்-

(அ) கடன்கொடுநர் ஒருவர்;

(ஆ) பொது அற்றோணித் தத்துவத்தின் கீழ் கடன் கொடுநரின் முகவர்; அல்லது

(இ) உறுப்பினராகுவதற்கு கடன்கொடுநரினால் எழுத்துமூலம் அதிகாரமளிக்கப்பட்டவர்,

என ஒழிப்போன் திருப்திபட்டாலொழிய, ஒழித்துக்கட்டல் கடன்கொடுநாகளின் குழுவிற்கு உறுப்பினராகவிருப்பதற்கு ஆளொருவர் தகுதியடையமாட்டார்.

(8) ஒழித்துக்கட்டல் கடன்கொடுநர்களின் குழு தொடர் பில், பின்வரும் விடயங்கள் விதித்துரைக்கப்படக்கூடியவா றான அத்தகைய தேவைப்பாடுகள், மட்டுப்பாடுகள் மற்றும் வரையறைகளுக்கு அமைந்ததாதல் வேண்டும் -

(அ) குழுவின் உறுப்பாண்மை மற்றும் உறுப்பாண் மையின் முடிவுறுத்துகை;

(ஆ) குழுவினை தாபித்தலின் அறிவித்தல் மற்றும் குழுவுடன் தொடர்புடைய விடயங்கள்;

(இ) குழுவின் கூட்டங்களை கூட்டுவதற்கான நடவடிக்கை முறைகள்;

(ஈ) குழுவின் உறுப்பினர்களினால் செய்யப்பட்ட அல்லது மேற்கொள்ளப்பட்ட செயல்கள், விட்டுவிடுகை அல்லது முடிபுகள் என்பன வற்றின் பாதுகாப்பு;

(உ) குழுவின் உறுப்பினர்களின் செலவினங்களை; அத்துடன்

(ஊ) குழுவின் உறுப்பினர்களின் மற்றும் அவர்கள் தொடர்புபட்ட திறத்தவர்களின் உறுப்பினர் களினாலான கொடுக்கல் வாங்கல்கள் -

(9) ஒழித்துக்கட்டடல் கடன்கொடுநர்களின் குழுவிலான வெற்றிடத்தின் காரணமாக, செயலாற்ற முடியாதுள்ள விடத்து, ஒழிப்போன் செயல்முறைக்குகந்தளவு விரைவாக ஒவ்வொரு அறியப்பட்ட கடன்கொடுநருக்கும் அந்நிகழ்வு பற்றி எழுத்திலான அறிவித்தலை செயல்முறைக்குகந்தளவு விரைவாக வழங்குதல் வேண்டும்.

(10) ஒழித்துக்கட்டடல் தனிசுதருநர் குழுவிலான வெற்றிடத்தின் காரணமாக, குழுவினால் செயற்படமுடியாது காணப் படுகையில், செயற்பாட்டுக்குகந்த விரைவில், ஒவ்வொரு அறிந்த தனிசுதருநரிற்கும் அவ்வுண்மையை எழுத்துமூல அறிவிப்பின் மூலம் வழங்கவேண்டும்.

ஒழித்துக்கட்டுதலிலுள்ள உதவுதொகை செலுத்துநர்களின் குழு

**309.** (1) ஒழித்துக்கட்டடலின் போதான எந்நேரத்திலும் மற்றும் ஒழித்துக்கட்டல் உதவுதொகை செலுத்தநர்களின் குழு ஏற்கனவே தாபிக்கப்பட்டாதிருப்பின், ஒழிப்போன் -

(அ) விதந்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் உதவிதொகைவழங்குநரினால் அவ் வாறு கோரப்படின் ஒழித்துக்கட்டுதல் உதவு தொகைவழங்குநர் குழுவொன்றை தாபிக்க நாடுதல் வேண்டும்; அல்லது

(ஆ) ஒழிப்போனின் சொந்த மனுவின் மீது, ஒழித் துக்கட்டடல் உதவுத்தொகை செலுத்துநர்களின் குழுவொன்றை தாபிப்பதற்கு நாடலாம்.

(2) ஒழித்துக்கட்டல் உதவிதொகை செலுத்துநர்களின் குழுவின் தாபனம் மற்றும் அத்தகைய குழுவிற்கான நியமனங் களானவை பின்வரும் உதவுதொகை செலுத்துநர்களின் கூட்டத்தில் ஏற்கப்பட்ட ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தீர்மானங்களை தேவைப்படுத்துகின்றது -

(அ) உட்பிரிவு (1)(அ) என்பதன் கீழ் கோரிக்கை செய்யும் சந்தர்ப்பத்தில் ஒழிப்போன் கோரிக் கையை பெற்றதன் பின்னரான ஏழு வேலை நாட்களினுள் ஒழிப்போன் கூட்டத்தை நடாத் துதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) அறிவித்தலானது –

(i) இப்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள விடயங்களை சுருக்கப்படுத்தல் வேண்டும்; அத்துடன்

(ii) ஒழித்துக்கட்டல் உதவிதொகைவழங்குநர்களின் குழுவின் உறுப்பாண்மைக்கான பெயர்நியமனங்களை அழைப்பு விடுத்தல் வேண்டும்.

(3) ஐந்தாம் அட்டவணையானது (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்படும் கூட்டமொன்றிற்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) ஒழித்துக்கட்டல் உதவுதொகை செலுத்துநர்களின் குழுவொன்று தாபிக்கப்படின் -

(அ) பின்வரும் பணிகளை கொண்டிருத்தல் வேண்டும்-

(i) ஒழித்துக்கட்டலுடன் தொடர்புடைய விடயங்களை ஒழிப்போனுடன் ஆலோசித்தல்; அத்துடன்

(ii) ஐந்தாம் உட்பிரிவின்கீழ் அனுப்பப்பட்ட ஒழிப்போனிடமிருந்தான அறிக்கைகளை கவனத்துக் கொள்ளுதல்;

(ஆ) ஒழிப்போனுக்கு பணிப்புகள் வழங்கப்படுதலாகாது.

(5) ஒழித்துக்கட்டல் உதவுதொகை செலுத்துநரின் குழு தாபிக்கப்படின், ஒழிப்போன் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய காலப்பகுதியினுள்ளும் அத்தகைய தகவல்களை கொண்டிருக்கும் அறிக்கைகளை குழுவுக்கு அனுப்புதல் வேண்டும்;

(6) அவ்வாள்-

(அ) உதவிதொகைவழங்குநரொருவர்;

(ஆ) பொது அற்றோணித் தத்துவத்தின் கீழ் உதவுதொகை முகவர்; அல்லது

(இ) உறுப்பினராகுவதற்கு உதவுதொகை செலுத்துநரினால் எழுத்துமூலம் அதிகாரமளிக்கப் பட்டவர்,

என ஒழிப்போன் திருப்தியுற்றயொழிய ஒழித்துக்கட்டல் உதவுதொகைவழங்குநர்களின் குழுவுக்கு உறுப்பினராக விருப்பதற்கு ஆளொருவர் தகவுடைராக மாட்டார்.

(7) ஒழித்துக்கட்டல் உதவிதொகைவழங்குநர்களின் குழு தொடர்பில், பின்வரும் விடயங்கள் விதித்தரைக்கப்படக் கூடியவாறாக அத்தகைய தேவைப்பாடுகள், மட்டுப்பாடுகள் மற்றும் வரையறைகளுக்கு அமைவாதல்வேண்டும் -

(அ) குழுவின் உறுப்பாண்மை மற்றும் உறுப் பாண்மையின் முடிவுறுத்துகை;

(ஆ) குழுவினை தாபித்தலின் அறிவித்தல் மற்றும் குழுவுடன் தொடர்புடைய விடயங்கள்;

(இ) குழுவின் கூட்டங்களை கூட்டுவதற்கான நடவடிக்கைமுறைகள்;

(ஈ) குழுவின் உறுப்பினர்களினால் செய்யப்பட்ட அல்லது மேற்கொள்ளப்பட்ட செயல்கள், செய்யமைகள் அல்லது முடிபுகளுக்கான பாதுகாப்பு;

(உ) குழுவின் உறுப்பினர்களின் செலவினங்களை மீளளிப்புச் செய்தல்; அத்துடன்

(ஊ) குழுவின் உறுப்பினர்களினால் மற்றும் அவர் களது தொடர்புபட்ட திறத்தவர்களின் உறுப் பினர்களினாலான கொடுக்கல்வாங்கல்கள்.

(8) ஒழித்துக்கட்டல் உதவுதொகை வழங்குநர்களின் குழுவின் உறுப்பினர்களின் தகுதிகள், பெயர்நியமங்கள் அல்லது தேர்தல்களின் குறைபாடுகளின் விளைவுகள் விதித் துரைக்கப்படக் கூடியவாறான விருத்தல் வேண்டும்.

(9) ஒழித்துக்கட்டுதல் உதவுதொகை செலுத்துநர்களின் குழுவில் ஏற்படும் வெற்றிடத்தின் காரணமாக குழு செய லாற்றுவதற்கு இல்லாதவாராகவுள்ளவிடத்து, ஒழிப்போன்

செயல்முறைக்குகந்தளவு விரைவாக, அறியப்பட்ட உதவு தொகை செலுத்துநர் ஒவ்வொருவருக்கும் அந்நிகழ்வு பற்றி எழுத்திலான அறிவித்தலை வழங்குதல் வேண்டும்.

ஒழித்துக் கட்டலில் பங்குதாரர் கள், கடன் கொடுநர்கள், உதவித்தொ கை செலுத்து நர்கள்மற்றும் குழுக்களின் கூட்டங்கள்

**310.** (1) ஒழிப்போனொருவர் ஒழித்துக்கட்டலின் இறுதி வரையில் எல்லா நேரங்களிலும்-

(அ) கம்பெனிக்கு 302 ஆம் பிரிவு ஏற்புடையதாகு மிடத்து –

(i) ஐந்திற்கு குறையாத பங்குதாரர்கள்; அல்லது

(ii) பங்குதாரர் அல்லது அனைத்து பங்கு தாரர்களின் மொத்த வாக்களிக்கும் உரிமைகளில் பத்து சதவீதத்திற்கு குறையாது பிரதிநிதித்துவப்படுத்தும் பங்குதாரர்களினால்,

கோரப்பட்டதன்படி, பங்குதாரர் அல்லது பங்குதாரர்களிட மிருந்து கோரிக்கையை பெற்றுக்கொண்டதன் பின்னரான ஐந்து வேலைநாட்களினுள், பங்குதாரர்களின் அத்தகைய கூட்டங்களை கூட்டுதல் வேண்டும்.

(ஆ) தகுதியானதென ஒழிப்போன் காண்கின்றதான கடன்கொடுநர்களின் அத்தகைய கூட்டங் களை கூட்டுதல் வேண்டும்;

(இ) தகுதியானதென ஒழிப்போன் காண்கின்றதான அத்தகைய பங்குதாரர்களின் கூட்டங்களை கூட்டலாம்;

(ஈ) தகுதியானதென ஒழிப்போன் காண்கையில் உதவித்தொகை வழங்குநர்களின் அத்தகைய கூட்டங்களை கூட்டுதல் வேண்டும்;

(உ) ஒழித்துக்கட்டுதல் கடன்கொடுநர்களின் குழு (ஏதேனுமிருப்பின்) அத்தகைய கூட்டங்களை கூட்டுதல் வேண்டும் -

(i) தகுதியானதென ஒழிப்போன் காண் கின்றதான;

(ii) குழுவானது நியாயமாக கோரக்கூடிய தான குழுவின் கோரிக்கையை பெற்ற பின்னரான ஐந்து வேலைநாட்களினுள்; அத்துடன்

(ஊ) ஒழித்துக்கட்டுதல் உதவுதொகை வழங்குநர்களின் குழுவொன்றின் (ஏதேனுமிருப்பின், அத்தகைய கூட்டங்களை கூட்டுதல் வேண்டும்-

(i) தகுதியானதென ஒழிப்போன் காண்கின்றதான;

(ii) குழுவானது நியாயமாக கோரக்கூடியதான குழுவின் கோரிக்கையை பெற்ற பின்னரான ஐந்து வேலைநாட்களினுள்.

(2) ஐந்தாம் அட்டவணையானது ஓராம் உட்பிரிவின் (ஆ) மற்றும் (ஈ) என்னும் பந்திகளில் குறிப்பீடு செய்யப்பட்ட கூட்டங்களுக்கு ஏற்புடையதாதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் (உ) மற்றும் (ஊ) என்னும் பந்திகளின் கீழ் கூட்டப்பட்ட கூட்டங்களின் அறிவித்தல் மற்றும் தொழில் நடத்தைகளுக்கான தேவைப்பாடுகளானவை விதித்துரைக்கப்படக்கூடியவறாகவிருத்தல் வேண்டும்.

(4) ஒழிப்போரின் இப்பிரிவின்கீழ் கூட்டப்பட்ட கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் தரப்பட்டவொன்றாக நோக்குகளைக் கருத்தில் கொண்டிருத்தல் வேண்டும்.

(5) கம்பெனியின் தனிப் பங்குதாரர் அல்லது தனி உதவு தொகைவழங்குநர் விடயத்திற்கேற்ப, பங்குதாரர்கள் அல்லது உதவித்தொகைவழங்குநர்களின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருக்கவேண்டியதான ஏதேனும் விடயம் குறித்த நோக்கினை ஒழிப்போனிற்கு முன்னிறுத்தலாம், மற்றும் அந்நோக்கானது பங்குதாரர்கள் அல்லது உதவுத்தொகைவழங்குநர்களின் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் தரப்பட்டவொன்றாக நோக்கங்களிற்காகவும் பரிகரிக்கப்படுதல் வேண்டும்.

**311.** ஒழித்துக்கட்டலானது – ஒழித்துக் கட்டலின் முடிவு

(அ) ஒழித்தக்கட்டலின் தொடக்கத்திலுள்ளவாறாக கம்பெனியின் எல்லா ஆதனங்களும் தேறிப்பெற்ற விநியோகிக்கப்பட்ட அல்லது உரிமை துறக்கப்பட்ட, மற்றும் ஆதனத் தேறிப்பெறுகையின் வரும் படிகள் செயல்முறைக்குகந்த அளவுவரை விநியோகிக்கப்பட்டுள்ளன் அல்லது

(ஆ) முன்னூற்றி அறுபத்திரண்டாம் பிரிவின்கீழ் அல்லது நீதிமன்றம் பிரயோகிக்கக்கூடிய ஏதேனும் தத்துவத்தை பிரயோகிக்கையில் நீதி மன்றம் ஒழித்துக்கட்டலை முடிவுறுதுகின்ற நாளன்றும் அந்தேத்திலும் முடிவுறுகின்றது.

அத்தியாயம் 3

**ஒழிப்போன் அல்லது தற்காலிக ஒழிப்போனின் நியமனம்**

ஒழிப் போனாக நியமிக்கப் பட்டு செயற் படக் கூடியவர்

**312.** (1) உத்தியோகப்பூர்வ பெறுநரொருவர் அல்லாத விடத்து-

(அ) ஒழித்துக்கட்டுதல் தொடர்பில் முக்கிய பதவி வகிப்பாளராக நியமிக்கப்பட்டு செயற்படு வதற்கு 12 ஆம் பிரிவின்கீழ் தகுதியடைந்த;

(ஆ) ஒழிப்போனாக நியமிக்கப்பட்டதிலிருந்து அல்லது செயற்படுவதிலிருந்து 313 ஆம் பிரிவின்கீழ் தகுதிற்றவராக்கப்படாத;

(இ) அவ்வாள் -

(i) ஒழித்துக்கட்டுதல் தொடர்பில் முக்கிய பதவி வகிப்பவராக நியமிக்கப்பட்டு செயற்படுவதற்கு 12 ஆம் பிரிவின்கீழ் தகுதியடைந்துள்ளார்; அத்துடன்

(ii) ஒழிப்போனாக நியமிக்கப்பட்டு அல்லது செயற்படுவதிலிருந்து 313 ஆம் பிரிவின் கீழ் தகுதியற்றவராக்கப்படாத;

ஆள் என எழுத்துமூம் உறுதிப்படுத்தப்பட்ட,

(ஈ) நியமனத்திற்காக எழுத்துமூலம் சம்மதமளித் துள்ளவரும் நியமனத்தின்போது சம்மதத்தை மீளப்பெறாதவருமான,

ஆளாக காணப்படும்போது மாத்திரமே ஆளொருவர் கம்பெனியின் ஒழிப்போனாக நியமிக்கப்படலாம் அல்லது செயலாற்றலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் (அ)(ஆ) மற்றும் (இ) என்னும்

பந்திகளின் எவையேனும் தேவைப்பாடுகளை ஈடுசெய்யப் படவில்லை என அறிந்துகொண்டு கம்பெனியொன்றின் ஒழிப்போனாக நியமிக்கப்பட்ட அல்லது செயலாற்றுகின்ற ஆளின் சம்மதுடனான உத்தியோகபூர்வ பெறுநர் தவிர்ந்த ஆளொருவர் தவறிறொன்றைப் புரிகின்றார்.

ஒழிப்போனாக நியமிக்கப்பட்டு செயற்படுவதிலிருந்து தகுதியீனங்கள்

**313.** (1) உத்தியோகப்பூர்வ பெறுநர் தவிர்ந்த, கம்பெனியின் ஒழிப்போனொருவராக நியமிக்கப்படுவதிலிருந்து அல்லது பின்வரும் ஆட்கள் மற்றும் அவர்களுடன் தொடர்புபட்ட திறத்தவர்கள்; தகுதியற்றவர்களாவர்கள் -

(அ) கம்பெனியொன்றின் நிருவாகி ஒருவராக அன்றி, ஒழித்துக்கட்டல் தொடங்கிய தினத் தேதிக்கு நேர்முகபேரந்த இரண்டு ஆண்டு காலப்பகுதியினுள் கம்பெனியின் கடனாளி; ஒருவராக இருக்கின்ற அல்லது இருந்த ஆளொருவர்;

(ஆ) ஒழித்துக்கட்டல் தொடங்கிய தேதிக்கு நேர்முற்போந்த தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகள் என்னும் காலப்பகுதியினுள் கம்பெனியின் பணிப்பாளராக அல்லது ஏனைய அலுவலராக அல்லது கணக்காய்வாளராக அல்லது ஊழியராக இருக்கின்ற அல்லது இருந்த ஆளொருவர்;

(இ) ஒழித்துக்கட்டல் தொடங்கிய தேதிக்கு நேர்முந்போந்த இரண்டு ஆண்டுகள் என்னும் காலப்பகுதியினுள் -

(i) கம்பெனியினியினால் அல்லது தொடர்புபட்ட வழங்கப்பட்ட பங்கொன்றில் நேரடி அக்கறையினை கொண்டிருக்கின்ற அல்லது கொண்டிருந்த ஆளொருவர்; அல்லது;

(ii) கம்பெனியினியினால் அல்லது தொடர்புபட்ட கம்பெனியினால் வழங்கப்பட்ட பங்குகளின் வகுப்பின் ஐந்து சதவீதத்தில் அல்லது அதற்கு மேற்பட்டவற்றில் நேரடி அக்கறையைக் கொண்டிருக்கின்ற கொண்டிருந்த; அல்லது

(ஈ) ஒழித்துக்கட்டல் தொடங்கிய தேதிக்கு நேர்முற் போந்த மூன்றாண்டு காலப்பகுதியினுள் கம்பெனியின் ஆதனத்ததின் பெறுநர் அல்லது ஆதனம் தொடரில் நியமிக்கப்பாளராகவுள்ள அல்லது இருந்துள்ள ஆளொருவர்.

(2) ஒழிப்போனொருவராக நியமிக்கப்பட்ட அல்லது செயற்படுகின்ற ஆளொருவர் (1) ஆம் பிரிவுகளின் கீழ் தகைமையற்றவராக்கப்படும் போது, தவறொன்றைப் புரிந்த வராகின்றார்.

இரண்டு அல்லது அதற்கு மேற் பட்ட ஒழிப் போன்கள் அல்லது தற்காலிக ஒழிப்போன் களின் நியமனம்

**314.** (1) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஆட்கள் இப் பாகம் ஒழிப்போனின் நியமனத்துக்காக ஏற்பாடு செய்கின்ற விடத்தான ஏதேனும் சந்தர்ப்பத்தில் ஒழிப்போனாக நியமிக் கப்படலாம்.

(2) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஆட்கள் ஒழிப் போராக நியமிக்கப்படுமிடத்து –

(அ) ஓர் ஒழிப்போனின் பணிகளும் தத்துவங்களும் அவர்களுள் எவரேனும் ஒருவரினால் அல்லது அவர்களுள் எவரேனும் இருவரினால் அல்லது அதற்கு மேற்பட்டோரினால் ஒன்றாக, அவர் களை நியமிக்கின்ற தீர்மானம் அல்லது கட்டளை குறை ஏற்பாடு செய்கின்ற அளவு வரை தவிர புரியலாம் அல்லது பிரயோகிக்கப் படலாம்;

(ஆ) ஒழிப்போராக ஆட்களின் ஏதேனும் பொறுப்பு கூட்டாகவும் தனிறொருவராகவும் இருக்கப் படுதல் வேண்டும்; அத்துடன்

(இ) இக்கூட்டத்தில் ஓர் ஒழிபோனுக்காக குறிப் பொன்று, விடயம் தேவைப்படுத்துகின்ற வாறாக, இத்தகைய வருமான ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஒழிப்போர்களுக்கான குறிப் பீடாகும்.

**315.** (1) ஒழிப்போனொருவர் -

ஒழிப் போனின் நியமனம் மற்றும் விபரங்களின் அறிவித்தல்

(அ) நியமனத்திற்கு பின்னரான அடுத்த வேலை நாளின் முடிவிற்கு முன்னதாக, நியமனத்தின் எழுத்துமூல அறிவிப்பை பதிவாளர் மற்றும் அதிகாரசபைக்கு வழங்குதல் வேண்டும்;

(ஆ) நியமனத்திற்கு பின்னரான இரு வேலைநாட்களினுள் பின்வருவன உள்ளடங்கலாக ஒழிப்போனின் நியமனம் பற்றிய பொது அறிவித்தலை வழங்குதல் வேண்டும்:-

(i) ஒழிப்போனின் முழுப்பெயர்;

(ii) நியமனத் திகதி;

(iii) ஒழிப்போனின் நியமிப்பாளரின் அடையாளம் மற்றும் நீதிமன்றமே நியமிப்பாளராகவிருக்குமிடத்து, நியமனம் செய்யப்பட்ட விண்ணப்பதாரியின் அடையாளம்; அத்துடன்

(iv) ஒழிப்போனின் அலுவலக முகவரி மற்றும் தொடர்புகொள்ள வேண்டிய இலக்கம் விசாரணை பணிக்க கூடியதான வழமையான வேலை நேரங்கள்; அத்துடன்;

(v) செலுத்துநர்களின் குழுக்களின் தாபனத்துக்காக வித்துரைக்கப்பட்ட முறையில் செய்யப்படக்கூடிய கோரிக்கைகளுக்கு பயன்கொடுப்பதற்கான கூற்று; அத்துடன்

(இ) பொது அறிவித்தலின் பிரதியொன்றை -

(i) ஒவ்வொரு அறிந்த கடன்கொடுநர் மற்றும் உதவுதொகை செலுத்துநருக்கும்; அத்துடன்

(ii) பதிவாளர் மற்றும் அதிகாரசபைக்கும்

அனுப்புதல் வேண்டும்.

(ஈ) நியமனத்தின் பின்னரான இருபது வேலைநாட்களினுள் -

(i) கம்பெனியின் அலுவல்கள், வியாபாரம், ஆதனம் மற்றும் நிதிநிலைமைகள் பற்றிய அறிக்கையொன்றை தயாரித்தல் வேண்டும்;

(ii) விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகை முறையில் (1) ஆம் பந்தியில் செய்யப்பட்ட அறிக்கையை அறிந்த கடன்தருநருக்கும் உதவுதொகை செலுத்துவதற்கும் அனுப்புதல் வேண்டும்; அத்துடன்

(iii) பதிவாளர் மற்றும் அதிகாரசபைக்கும் அறிக்கையின் பிரதியை அனுப்புதல் வேண்டும்.

(2) ஒழிப்போனொருவரின் நியமனமானது ஏலவே பதிவியை வகிக்கும் ஒழிப்போனொருவருக்கு மேலதிகமாக அல்லது ஒழிப்போனொருவராக பதவியை வெறிதாக்கியவான ஆளொருவரின் இடத்தில் உள்ளவிடத்துஇ (1) ஆம் உட்பிரிவின் கீழான ஒவ்வொரு அறிவித்தலும் அந்நிகழ்வினை குறிப்பிடுதல் வேண்டும்.

(3) ஒழிப்போனின் அலுவலகம் முகவரி அல்லது தொடரபு; இலக்கத்தில் ஏதேனும் மாற்றங்கள் ஏற்படும் பட்சத்தில்இ ஒழிப்போன் இரண்டு வேலைநாட்களினுள் -

(அ) விடயத்திற்கேற்பஇ புதிய முகவரி அல்லது தொடர்பு இலக்கம் பற்றிய பொது அறிவித்தலை வழங்குதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) பொது அறிவித்தலின் பிரதியொன்றை பதிவாளருக்கும் அதிகாரசபைக்கும் அனுப்புதல் வேண்டும்.

(4) இப்பிரிவுடன் இணங்குவதற்கான தவறுகையொன்றானது ஒழிப்போனொருவரக ஆளொருவரின் நியமனத்தின் செல்லுபடித்தன்மையை பாதித்தலாகாது.

(5) இப்பிரிவுடன் இணங்குவதற்கு தவறுகின்ற ஒழிப்போனொருவர் தவறொன்றைப் புரிந்தவராகின்றார்.

ஒழித்துக் கட்டுதலிற்கு ஆற்றுப் படுத்து வதற்கான

**316.** (1) நீண்டகாலத்திற்கு ஒழித்துக்கட்டுதலில் கம்பெனி யொன்று காணப்படுகையில், ஒழிப்போனனொருவர் -

(அ) கம்பெனி அல்லது ஒழிப்போனால் அல்லது சார்பாக வழங்கப்பட்ட அல்லது கையொப்ப மிடப்பட்ட கம்பெனியின் பெயர் முதலில் தோன்றுமிடத்திற்கு பின்னர் “ஒழித்துக்கட்டு தலில்” எனும் சொற்களைக் கொண்டிருப் பதை; அத்துடன்

(ஆ) கம்பெனியானது ஒன்றோ அல்லது பல வலைத்தளங்களை கொண்டிருந்தால்இ ஒவ் வொரு வலைத்தளத்தினதும் ஒவ்வொரு பக்க மும் கம்பெனியானது ஒழித்துக்கட்டுதலில் காணப்படுகின்றது என்பதனை முதன்மையாக குறிப்பிடுவதனையும்

உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(2) ஓராம் பிரிவுடன் இணங்கியொழுகுவதற்கான தவகை யொன்று பினவருவனவற்றின் செல்லுபடியாந்தன்மை யினை பாதித்தலாகாது -

(அ) ஒழிப்போனொருவராக ஆளொருவரின் நிய மனம்; அல்லது

(ஆ) ஏதேனும் ஆவணம்;

(இ) ஓராம் பிரிவுடன் இணங்கியொழுகத் தவறு கின்ற ஒவ்வொரு ஆளும் தவறொன்றைப் புரிகின்றார்.

## அத்தியாயம் 4

### ஒழித்துக்கட்டுதலின் விளைவுகள்

ஒழித்துக் கட்டலின் போது வில்லங் கத்தின் வலு வுறுத்துகை இல்லை

**317.** (1) இப்பிரிவானது, 302 ஆம் பிரிவுவானது கம்பெனி யொன்றுக்கு ஏற்புடையதாகின்ற வரையில், அக்கம்பெனி யொன்றுக்கு ஏற்புடையதாதலாகாது.

(2) முந்நூற்று இருபத்திரெண்டாம் பிரிவிற்கமைய, கம்பெனியின் ஒழித்துக்கட்டுதலின் போது ஆளொருவரும் பின்வருவன தவிர, கம்பெனியின் ஆதனத்தின் மீது வில்லங்க மொன்றினை வலுவுறுத்தலாகாது -

(அ) ஒழிப்போனின் முன்னான, எழுத்துமூல சம்மதம்; அல்லது

(ஆ) அவசியமான அத்தகைய நியதி நிபந்தனைகளின் மீது நீதிமன்றத்தின் அனுமதி

(3) ஒழிப்போன் (2) (அ) என்னும் உட்பிரிவின்கீழ் சம்மதம் வழங்குவதற்கு மறுப்பதற்கான சேதங்களுக்கு பொறுப்பாக மாட்டார்.

ஒழித்துக் கட்டலின் போது நடவடிக்கை முறையின் தொடக்கம் அல்லது தொடருத லெதுமில்லை

**318.** (1) கம்பெனியின் ஒழித்துக்கட்டலின் போது, கம்பெனிக்கு அல்லது அதன் ஏதேனும் ஆதனத்திற்கு எதிராக முறையான வழக்கு நடவடிக்கைகள் பின்வருவன தவிர தொடங்கி விடுதல் அல்லது தொடங்குதல் ஆகாது -

(அ) ஒழிப்போனின் முன்னான எழுத்துமூல சம்மதம்; அல்லது

(ஆ) அவசியமானவாறு, அத்தகைய நியதி நிபந்தனைகளின் மீதான நீதிமன்றத்தின் அனுமதி

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, "முறையான வழக்கு நடவடிக்கை" என்பது -

(அ) ஏதேனும் சட்டவழக்கு நடவடிக்கை; அத்துடன்

(ஆ) ஏதேனும் மத்தியஸ்த அல்லது நடுத்தீர்ப்பு செயல்முறை அல்லது ஏனைய முறையான எதிரிடையான செயல்முறை என்பவற்றை உள்ளடக்கும்.

(3) ஒழிப்பேன் (1)(அ) என்னும் உட்பிரிவின் கீழ் சம்மதம் அளிப்பதற்கு மறுபதற்காக சேதங்களுக்கு பொறுப்பாக மாட்டார்.

ஒழித்துக் கட்டலின் போது நிறைவேற்றமோ அல்லது ஏனைய செயற்பாடுகளெதுவு மில்லை

**319.** (1) இப்பிரிவானது, 302 ஆம் பிரிவுவானது கம்பெனியொன்றுக்கு ஏற்புடையதாகின்ற வரையில் அக்கம்பெனியொன்றுக்கு ஏற்புடையதாதலாகாது.

(2) 322 ஆம் பிரிவிற்கமைய, கம்பெனியின் ஒழித்துக் கட்டலின் போது கம்பெனி அல்லது அதன் ஏதேனுமொரு ஆதனத்திற்கு எதிராக நிறைவேற்றுகை அல்லது ஏனைய

சட்ட செயன்முறைகள் அல்லது கைப்பற்றல்களை விதிப்பன விடல்களை பின்வருவன தவிர, தொடங்கப்படுதல் அல்லது தொடரப்படுதல் ஆகாது -

(அ) ஒழிப்போனின் முன்னரான, எழுத்துமூல சம்மதம் அல்லது

(ஆ) அவசியமான அத்தகைய நியதி நிபந்தனை களின் மீது நீதிமன்றத்தின் அனுமதி

(3) ஒழிப்போன் உட்பிரிவு (2)(அ) இன் கீழ் சம்மதம் வழங்குவதற்கு மறுப்பதற்கான சேதங்களிற்கு ஆளா வர மாட்டார்.

ஒழித்துக் கட்டலிற்கு முன்னதாக நிறைவேற்ற ப்பட்டா லொழிய, நிறைவேற்ற லின் அல்லது ஏனைய செயல்முறை யில் நன்மை யெதுமில்லை

**320.** (1) இரண்டாம் உட்பிரிவிற்கமைவாக, ஒழித்துக்கட்டு தலிலுள்ள கம்பெனிக்கு எதிராக அல்லது அதன் ஏதேனும் ஆதனத்திற்கு எதிரா நிறைவேற்றுகை அல்லது சட்ட செயல் முறை அல்லது இடம் என்பன, அவசியமான அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் மீது, நீதிமன்றத்தின் அனுமதி தவிர்ந்த, ஒழித்துக் கட்டுதல் தொடங்க முன்னர் பூர்த்தி செய்யப்பட்டாலொழிய, கடன்கொடுநர் ஒருவர் ஏதேனும் செயல்முறை அல்லது வேறு சட்டசெயல்முறை அல்லது இடர் பற்றிய நன்மைக்கு உரித்துடைவராதலாகாது.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக –

(அ) அசையும் அல்லது அசையாத ஆதனத்துக்கு எதிரான நிறைவேற்றுகை என்பது பெறுநர் அல்லது நியமனத்தவர் அல்லது நிறைவேற்று கையுடன் பொறுப்பேற்கப்பட்ட ஆளொரு வரின் உடைமையிலுள்ள பதிவின் மூலம் அல்லது கைப்பற்றுகைமூலம் மற்றும் விற் பனை மூலம் நிறைவேற்றுகின்றது; அத்துடன்

(ஆ) தனிசொன்றின் இணைப்பொன்றானது தனி சொன்றின் திருப்தியுறலினால் பூர்த்தியாகு கின்றது.

(3) நல்லெண்ணத்தில் கம்பெனியின் ஆதனத்தைக் கொள் கின்ற ஆளொருவர் -

(அ) நிறைவேற்றுகை செயல்முறையுடன் பொறுப் பாக்கப்பட்ட பிசுக்காலிடமிருந்து; அல்லது

(ஆ) இடம் அறவிடப்பட்டதன் மீது, கம்பெனி மற்றும் ஒழிப்போனுக்கெதிரான நல்லுரித்தை கொள்கின்றார்

நன்னம்பிக்கையுடன் பெற்றுக்கொள்ளும் ஆளொருவர் கம்பெனி மற்றும் நிருவாகத்திற்கு எதிராக பண்ட உரித்தினைப் பெற்றுக்கொள்கிறார்.

(4) 412 தொடக்கம் 419 வரையிலான பிரிவுகளின் ஏற்புடமையை பாதித்தலோ அல்லது மட்டுப்படுத்துதலோ ஆகாது.

ஒழித்துக் கட்டு தலிலுள்ள பிசுக்காலின் கடமைகள்

**321.** (1) இப்பிரிவு அறவிடப்பட்டதான ஒழித்துக்கட்டுதலிலுள்ள கம்பெனியின் ஆதனத்துக்கு எதிரான செயல்முறையை நிறைவேற்றுவதற்கு ஏற்புடமையாகின்றது ஆனால், ஒழித்துக்கட்டுதல் தொடகியதன் முன்னர், 320(2) ஆம் பிரிவின் கருத்தினுள் பூர்த்திசெய்யப்படவில்லை.

(2) வேறு ஏதேனும் சட்டவாக்கம் எதுஎவ்வாறிருப்பினும், (3) ஆம் உட்பிரிவிற்கமைவாக மற்றும் நிறைவேற்றுகை கடன்கொடுநரின் விண்ணப்பத்தின் மீது நீதிமன்றம் கட்டளையிட்டாலொழிய, பிஸ்கால் ஒழித்துக்கட்டலின் பின்னரான செயல்முறைக்குகந்தனவு விரைவானதாக பின்வருவனவற்றுக்காக தொடங்குதல் வேண்டும்.

(அ) நிறைவேற்றுகை வரும்படியின் விளைவாக பிஸ்காலின் உடைமைக்கு அல்லது பிஸ்காலின் கட்டுக்காப்பில் அல்லது கட்டுப்பாட்டின் கீழ் உள்ள அல்லது வருகின்றதான கம்பெனியின் ஏதேனும் ஆதனத்தை ஒழிப்போனுக்கு வழங்குவதற்கு; அத்துடன்

(ஆ) ஒழிப்போனை-

(i) நிறைவேற்றுகை செயல்முறையின் கீழ் கம்பெனியின் ஆதனத்தின் ஏதேனும் தேறியபெறுமதியின் வரும்படிகள்;

(ii) நிறைவேற்றுகை செயல்முறையின் கீழ் பெறப்பட்ட அல்லது கைப்பெற்றப்பட்ட கம்பெனியின் ஏதேனும் பணம்; அத்துடன்

(iii) நிறைவேற்றுகை செயல்முறையின்; கீழ் கம்பெனியின் ஆதனத்தின் கைப்பற்றுகை அல்லது விற்பனையை தவிர்ப்பதற்கு செலுத்தப்படும் ஏதேனும் பணத்தினை,

(3) பிஸ்கால் பின்வருவனவற்றிலிருந்து தக்கவைக்கலாம் அல்லது தக்கவைக்கப்படுவதற்கு செய்விக்கலாம் -

(அ) பிஸ்காலினால் பெறப்பட்ட விடயத்துக்கேற்ப நிறைவேற்றுகை செயல்முறையின் அல்லது இணைப்பு பற்றிய ஆகு செலவுகளைப் பிரதி நிதித்துவப்படுத்துவதற்கு, பிசுக்கால் நியாய மானவையில் தீர்மானிக்கூடியதான பெறுமதி யான ஆதனத்தை பிரதிநிதித்துவம் செய்ய லாம்; அல்லது

(ஆ) பிஸ்காலினால் கூறப்பட்ட விடயத்துக்கேற்ப நிறைவேற்றுகை செயல்முறையின் அல்லது இணைப்பு ஆகுசெலவுகளை (1)(ஆ) என்னும் உட்பிரிவின் கீழ் செலுத்தப்பட்ட வரும்படி களிலிருந்து அல்லது பணங்களிலிருந்து,

ஒழித்துக் கட்டுதல் தொடங்கும் முன்னர் பிரயோகிக் கப்படும் தத்துவம்

**322.** (1) ஒழிப்போனின் தொடக்கத்துக்கு முன்னரும் வலு வுறுத்துகை என்னும் வழிமூலமாகவுள்ளவிடத்து-

(அ) ஆதனத்தின்மீதான வில்லங்கமொன்று; அல்லது

(ஆ) ஆதனத்தின் உடைமையினை எடுப்பதற்கு அல்லது வேறுவகையில் அதனை அறவிடு வதற்கான வாடகை கொள்வனவு உடன்படிக் கையின்கீழ் உள்ளடங்கலாக, ஆதனத்தின் சொந்தக்காரரின் அல்லது குத்தகை பெறுநரின் உரிமையொன்று

(இ) பிரிவுகள் 317, 319 மற்றும் 325 என்பவற்றில் உள்ள எதுவும் ஆதனம் தொடர்பில் பணியை அல்லது தத்துவத்தினை நிறைவேற்றுவதி லிருந்து அல்லது பிரயோகிப்பதிலிருந்து பெறு நரை, நியமித்தவரை அல்லது வேறு ஆளை தடுத்தலாகாது

(i) கம்பெனியின் ஆதனம் தொடர்பில், உடமையில் அல்லது கட்டுக்காப்பில்

அல்லது ஊகிக்கப்பட்ட கட்டுப்பாட்டில் உள்ள; அல்லது

(ii) கம்பெனியின் ஆதனம் தொடர்பிலான வேறு ஏதேனும் தத்துவத்தைப் பிரயோகித்தல்

(2) முந்நூற்றி இருபத்தைந்தாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவு குறிப்பீடுசெய்யப்பட்ட மற்றும் ஆதனத்தைப் பாதிக்கின்ற உடன்படிக்கை, கொடுக்கல்வாங்கல் அல்லது கையாள்கையொன்றுக்கு (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட பெறுநர், நியமித்தர் அல்லது வேறு ஆளின் பணியை அல்லது தத்துவத்தினை நிறைவேற்றுவதில் அல்லது பிரயோகிப்பதில் செய்துள்ள ஏற்புடைமையாதலாகாது.

கம்பெனியின் பணிப்பாளர்கள் மீதான வேறு முகவர்கள் பற்றிய ஒழித்துக் கட்டுதலின் விளைவு

**323.** (1) ஒழிப்போனின் நியமனம் பதவியிலிருந்து கம்பெனியின் பணிப்பாளர்களை அகற்றாது.

(2) ஒழித்துக்கட்டுதலிலுள்ள கம்பெனியின் பணிப்பாளரொருவர் பின்வருவனதவிர, கம்பெனியின் அலுவலரின் பணியை அல்லது தத்துவத்தினை நிறைவேற்றுதலாகாது அல்லது பிரயோகித்தலாகாது அல்லது நிறைவேற்றுவதற்கு அல்லது பிரயோகிப்பதற்கு உட்கருதலாகாது -

(அ) விதித்துரைக்கப்படக்கூடியவாறான மேன்முறையீட்டுக்கான முன்னம் பற்றிய அறிவித்தல் அத்தகைய முறையிலும் அத்தகைய காலப்பகுதியினுள்ளும் அத்தகைய தேவைப்பாடுகளினுள்ளும் 298 (2) (இ) என்னும் பிரிவின்கீழ் நீதிமன்றத்தின் கட்டளைக்கு எதிரான முறையீடுக்கு, ஆனால் பணிப்பாளர் (ஏதேனும் கட்டளைக்கமைய நீதிமன்ற மேன்முறையீட்டின் முடிபில் செய்யலாம்) ஏதேனும் அத்தகைய மேன்முறையீட்டுடன் சம்பந்தப்பட்ட கம்பெனியின் ஆதனத்துக்கு ஏதேனும் புகலிடத்தினைக் கொண்டிருத்தலாகாது; அல்லது

(ஆ) இப்பாகத்தினால் வெளிப்படையாக அனுமதிக்கப்பட்டதான.

(3) ஒழிப்போனின் நியமனம் கம்பெனியின் சபையினால் அல்லது அதன் சார்பில் நியமிக்கப்பட்ட கம்பெனியின் எவரேனும் முகவரின் அதிகாரத்தினை இல்லாதொழித்தல் வேண்டும்.

ஒழிப் போனுக்கு தகவலை வழங்கு வதற்கான தேவைப்பாடு

**324.** (1) ஒழிப்போன் நியமிக்கப்படுமிடத்து கம்பெனியின் ஒவ்வொரு பணிப்பாளரும் வேறு அலுவலரும்-

(அ) விரைவானளவு செயல்முறைக்குகந்தவரையில் மற்றும் நியமனத்தின் பின்னரான ஐந்து வேலை நாட்களினுள் ஏதேனும் பட்சத்தில், ஆளின் உடைமையிலுள்ள அல்லது ஆளின் கட்டுக்காப்பிலுள்ள அல்லது கட்டுப்பாட்டின் கீழுள்ள கம்பெனியின் அலுவல்கள், தொழில், ஆதனம் மற்றும் நிதிசார் சூழ்நிலைகள் தொடர் பிலான எல்லாப் புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஆவணங்களை ஒழிப்போனுக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும்;

(ஆ) ஒழிப்போனால் அவ்வாறு செய்வதற்கு தேவைப்படின், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஆவணங்கள் என்பன பூரணமாகவும் சரியாகவும் உள்ளன என்பதனை நியாயமான காலப்பகுதியினுள் சத்தியக்கடுதாசிமூலம் உறுதிப்படுத்துதல் வேண்டும்;

(இ) கம்பெனி பொது இலச்சினையொன்றைக் கொண்டிருப்பின், ஒழிப்போனால் பயன் பாட்டுக்கு கிடைக்கச்செய்யும் பொது இலச் சினையொன்றை உடனடியாகச் செய்தல் வேண்டும்; அத்துடன்

(ஈ) ஒழிப்போன் நியாயமானமுறையில் கோரக் கூடியதான அத்தகைய உதவியினை ஒழிப் போனுக்கு அளித்தல் வேண்டும்.

(2) ஒழிப்போனின் விண்ணப்பத்தின்மீது, நீதிமன்றம் (1) ஆம் உட்பிரிவுடன் இணங்கியொழுகுவதற்கு கம்பெனியின் பணிப்பாளரொருவர் அல்லது வேறு அலுவலரொருவரை தேவைப்படுத்துகின்ற கட்டளையொன்றை ஆக்கலாம்.

(3) உட்பிரிவு (1) (ஆ) என்பதன் கீழான சரிபார்த்தல் -

(அ) பூரணப்படுத்தப்பட்டு சரிபார்க்கப்படவேண்டிய புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஆவணங் களைக் கருத்திலெடுக்காது; அல்லது

(ஆ) சரிபார்த்தலினை வழங்குவதற்கு அவசியமான அறிவைக் கொண்டிராத,

சரிபார்த்தலை ஆள் செய்கின்றவிடத்து, புத்தகங்கள், பதி வேடுகள் மற்றும் ஆவணங்களுடன் கையாள்கின்ற குறித்த சில கருமங்கள் தொடர்பில் தகைமைபெறப்படலாம்.

ஆதனத்தைக் கையாளுதல் பற்றிய ஒழித்துக் கட்டுதலின் விளைவு

**325.** (1) முந்நூற்றி இருபத்திரெண்டாம் பிரிவுக்கமைய, கம்பெனியின் ஆதனத்தைப் பாதிக்கின்ற ஒழித்துக்கட்ட லிலுள்ள கம்பெனியினால் அல்லது கம்பெனியின் சார்பான ஆளொருவரினாலான உடன்படிக்கையொன்று, கொடுக்கல் வாங்கலொன்று அல்லது கையாள்கையொன்று, பின்வரு மாறு உடன்படிக்கையொன்று, கொடுக்கல் வாங்கலொன்று அல்லது கையாள்கையொன்று செய்யப்பட்டாலொழிய வறிதானது ஆகும்-

(அ) கம்பெனியின் சார்பில் ஒழிப்போனால்;

(ஆ) ஒழிப்போனின் முன்னரான எழுத்திலான சம்மதத்துடன்;

(இ) பிரிவு 381 (1) இற்கிணங்க; அல்லது

(ஈ) நீதிமன்றத்தின் கட்டளையொன்றின் கீழ்.

(2) ஒழிப்போன் உட்பிரிவு (1) (ஆ) வின்கீழ் சம்மதம் வழங்குவதற்கு மறுப்பதற்காக சேதங்களுக்கு ஆளாதலாகாது.

(3) நீதிமன்றம் (1) ஆம் உட்பிரிவின்கீழ் வறிதான உடன் படிக்கையொன்று, கொடுக்கல்வாங்கலொன்று அல்லது கையாள்கையொன்றுக்கு கட்டளை மூலம் பயன்கொடுக் கலாம்.

(4) ஓராம் உட்பிரிவு பின்வருமாதிருப்பின் வங்கியினால் செய்யப்பட்ட கொடுப்பனவொன்றுக்கு ஏற்புடைமையாதலா காது–

(அ) வங்கியுடன் கம்பெனியினால் வைத்திருக்கப் படும் கணக்கிலிருந்தன்றி;

(ஆ) வங்கியின் வங்கித் தொழில் வியாபாரத்தின் நன்நம்பிக்கையுடனும் வழமையான முறையாலும்; அத்துடன்

(இ) (i) ஒழித்துக்கட்டுதல் தொடங்கியதான ஒழிப்போனால் எழுத்தில் வங்கிக்கு அறிவிக்கப்பட்ட தேதியன்று அல்லது அதற்கு முன்னரான நாள்; அத்துடன்

(ii) வங்கி கம்பெனியானது ஒழித்துக்கட்டுதலிலுள்ளது என்பதனை நம்புவதற்கான காரணத்தைக் கொண்டுள்ள தேதியன்று அல்லது முன்னரான நாள்,

(5) (அ) ஓராம் உட்பிரிவின்கீழ் வறிதான உடன்படிக்கையொன்று, கொடுக்கல்வாங்கல் அல்லது கையளித்தல் தொடர்பில் கம்பெனியின் சார்பில் செய்துகொள்வதற்கு உத்தேசிக்கின்றவரான; அல்லது

(ஆ) வேறு ஏதேனும் வழியில் சம்பந்தப்பட்ட அல்லது (1) ஆம் உட்பிரிவின்கீழ் வறிதான உடன்படிக்கை, கொடுக்கல்வாங்கல் அல்லது கையாளல் என்பவற்றுக்கான திறத்தவரொருவராகவுள்ள,

கம்பெனியின் பணிப்பாளரொருவர் அல்லது வேறு அலுவலரொருவர் தவறொன்றைப் புரிகின்றார்.

(6) நீதிமன்றம் தவறொன்றை அமைத்துருவாக்குகின்ற செயல் அல்லது செய்யாமை என்பவற்றின் விளைவாக பாதிப்புற்றிருக்கின்றதான நட்டம் அடைந்திருக்கின்றன கம்பெனி உள்ளடங்கலாக எவரேனும் ஆளுக்கு இழப்பீட்டைச் செலுத்துவதற்கு (5) ஆம் உட்பிரிவின்கீழான தவறொன்றுக்கு குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டவரான பணிப்பாளரொருவரை அல்லது வேறு அலுவலரொருவரைக் கட்டளையிடலாம்.

(7) ஒழிப்போன் நியமிக்கப்பட்ட திகதியன்று ஒழிப்போன் நியமிக்கப்பட்ட நேரத்துக்கு முன்னர் அல்லது பின்னர் செய்துகொள்ளப்பட்ட கம்பெனியின் ஆதனத்தைப் பாதிக்கின்ற உடன்படிக்கையொன்று, கொடுக்கல்வாங்கலொன்று

அல்லது கையாள்கையொன்று, செய்துகொள்ளப்பட்டதா எனும் ஏதேனும் கேள்வி எழுமாயின், உடன்படிக்கை, கொடுக்கல்வாங்கல் அல்லது கையாளுகை என்பன முரணானது எண்பிக்கப்பட்டாலொழிய அந்நேரத்தின்பின்னர்.

(8) வேறு ஏதேனும் சட்டவாக்கம் எவ்வாறிருப்பினும், ஆளெவரும் ஒழிப்போனுக்கெதிராக கம்பெனியின் புத்தகம், பதிவேடு அல்லது ஆவணத்தின்மீது சோந்தையொன்றை உரிமைகோருதலாகாது.

பங்குகளின் கைமாற்றுகை பற்றிய ஒழித்துக் கட்டுதலின் விளைவு

**326.** (1) இப்பிரிவுக்கமைய-

(அ) ஒழித்துக்கட்டுதலிலுள்ள கம்பெனியிலுள்ள பங்கொன்று கைமாற்றப்படுதலாகாது; அத்துடன்

(ஆ) அதன் பொறுப்புகளுக்கானவையானது ஒழித்துக்கட்டலிலுள்ள கம்பெனியொன்றின் பங்குதாரரொருவரின் அந்தஸ்து மாற்றப்படலாகாது.

(2) (அ) பிரிவு 302 கம்பெனிக்கு ஏற்புடைமையாகாத விடத்து; அத்துடன்

(ஆ) ஒழிப்போன் ஒழித்துக்கட்டுதலிலுள்ள கம்பெனியிலுள்ள பங்கொன்றின் கைமாற்றமானது முழுமையாக கடன்கொடுநர்களின் அக்கறையிலுள்ளதென திருப்திப்படுமிடத்து,

ஒழிப்போன் கைமாற்றுவதற்கு சம்மதமளிக்கலாம்.

(3) ஒழிப்போன் (2) ஆம் உட்பிரிவின்கீழ் சம்மதம் வழங்குவதற்கு மறுப்பதற்கான இழப்புகளுக்கு ஆளாதலானது.

(4) நீதிமன்றம் வேறுவகையில் கணிசமானளவு அநீதி ஏற்படும் என திருப்திப்படுமிடத்து பின்வருவனவற்றுக்காக கட்டளையொன்றை ஆக்கலாம்-

(அ) ஒழித்துக்கட்டுதலிலுள்ள கம்பெனியொன்றின் பங்கொன்றின் கைமாற்றத்துக்காக; அல்லது

(ஆ) அதன் பொறுப்புகளுக்கான ஒழித்துக்கட்டுதலிலுள்ள கம்பெனியொன்றின் பங்குதாரரின் அந்தஸ்தை மாற்றுவதற்காக.

(5) இப்பிரிவிலுள்ள எதுவும் கம்பெனிகள் சட்டத்தின் 46 ஆம் பிரிவின் ஏற்புடைமையை பாதித்தலாகாது அல்லது மட்டுப்படுத்தலாகாது.

ஒழித்துக் கட்டுதலிலுள்ள அத்தியாவசியமான சேவைகள்

**327.** (1) வேறு ஏதேனும் சட்டவாக்கத்திற்கு முரணாக எது எவ்வாறிருப்பினும், அத்தியாவசியமான பண்டம் அல்லது சேவையொன்றின் வழங்குநரொருவர்-

(அ) ஒழித்துக்கட்டல் தொடங்குவதற்கு முன்னரான காலப்பகுதி தொடர்பில் வருமதியாகவுள்ள பண்டம் அல்லது சேவைக்கான விதிப்பனவுகளைச் செலுத்துவதில் கம்பெனியின் தவறுகையின் காரணத்தினால் ஒழிப்போனுக்கு அல்லது ஒழித்துக்கட்டுதலிலுள்ள கம்பெனியொன்றுக்கு பண்டத்தை அல்லது சேவையை வழங்குவதற்கு மறுத்தலாகாது; அல்லது

(ஆ) ஒழித்துக்கட்டுதல் தொடங்குவதற்கு முன்னரான காலப்பகுதியொன்று தொடர்பிலுள்ள பண்டம் அல்லது சேவைக்கு வருமதியாகவுள்ள நிலுவையிலுள்ள விதிப்பனவுகளின் கொடுப்பனவைச் செய்வதற்கென ஒழிப்போனுக்கு அல்லது ஒழித்துக்கட்டுதலிலுள்ள கம்பெனியொன்று பண்டங்களை அல்லது சேவையை வழங்குகை பற்றி நிபந்தனையொன்றை ஆக்குதல் ஆகாது.

(2) அத்தியாவசிய பண்டம் அல்லது சேவையின் வழங்குகைக்காக ஒழிப்போனொருவரினால் உறப்படும் விதிப்பனவுகள் நான்காம் அட்டவணையின் நோக்கங்களுக்காக ஒழித்துக்கட்டுதலிலுள்ள செலவினமொன்றாதல் வேண்டும்.

தற்காலிக ஒழித்துக் கட்டுதலிலுள்ள இவ்வத்தியாயத்தின் ஏற்புடைமை

**328.** நீதிமன்றக் கட்டளையொன்று வேறுவகையில் ஏற்பாடு செய்தலொழிய, முந்நூற்றி நான்காம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றினால் தற்காலிக ஒழிப்போனொருவர் நியமிக்கப்படுமிடத்தும், பின்வரும் பிரிவுகளிலுள்ள ஒழிப்போனுக்கு அல்லது ஒழித்துக்கட்டுதலுக்குச் செய்யப்பட்ட ஏதேனும் குறிப்பீடு விடயத்திற்கேற்ப, முறையே தற்காலிக ஒழிப்போனுக்கு அல்லது தற்காலிக ஒழித்துக்கட்டுவதற்கு ஏற்புடைபாலதான குறிப்பீடொன்றாக வாசித்து பொருளமைத்துக்கொள்ளப்படுதலும் வேண்டும்-

(அ) பிரிவு 317;

(ஆ) பிரிவு 318;

(இ) பிரிவு 319;

(ஈ) பிரிவு 322;

(உ) “பிரிவு 223, 298 ஆம் பிரிவின் 2 ஆம் உட்பிரிவின் (இ) எனும் பந்திக்கு 325 ஆம் பிரிவிலுள்ள குறிப்பீடு “பிரிவு 304 (1) ஆம் உட்பிரிவாக வாசிக்கப்படும் நோக்கங்களுக் காக நீதிமன்றத்தின் கட்டளையொன்று”

(ஊ) பிரிவு 325;

(எ) பிரிவு 326; அத்துடன்

(ஏ) பிரிவு 327(2) ஆம் உட்பிரிவிலுள்ள குறிப்பீடு நீங்கலாக)

## அத்தியாயம் 5

### ஒழிப்போனின் தத்துவங்கள்

**329.** (1) ஒழிப்போனொருவர் பிரிவு 296 இல் குறிப் பிடப்பட்ட விடயங்கள் தொடர்பில் அவசியப்படுகின்றவாறு அல்லது விருப்பத்துக்குத் தக்கவாறு அத்தகைய அனைத்து விடயங்களையும் ஒழிப்போன் ஒருவர் செய்யலாம்.

ஒழிப் போனின் தத்துவங்கள்

(2) ஒழிப்போனொருவர் ஒன்பதாவது அட்டவணையில் வரையறுக்கப்பட்ட தத்துவங்களை கொண்டிருத்தல் வேண்டும்.

(3) பின்வருவனவற்றிற்காக விதித்துரைக்கப்படக்கூடிய வரான ஏதேனும் தேவைப்பாட்டுக்கு உட்பட்டு –

(அ)

i. கடன்கொடுநர்கள்;
ii. பங்குதாரர்கள்;
iii. உதவுதொகை செலுத்துநர்கள்;
iv. ஒழித்துக்கட்டல் கடன்கொடுநர்களின்குழு; அல்லது

v. ஒழித்துக்கட்டுதல் உதவுதொகை செலுத்துநர் என்போரின் அங்கீகாரத்துக்காக.

(ஆ) நீதிமன்றின் அனுமதிக்காக, உட்பிரிவு (2) இல் குறிப்பிடப்பட்ட தத்துவங்களை ஒழிப்போ னொருவர்; பிரயோகிக்கலாம்.

(4) கம்பெனியின் முகவர் என்ற வகையில் ஒழிப்போன் கருமம் ஆற்றுகின்ற சந்தர்ப்பத்தில் அல்லது தத்துவத்தைப் பிரயோகிக்கின்ற வேளையில் ஒழிப்போன் தனக்குரிய தத்து வங்களுக்குட்பட்டுக் கருமமாற்றுகின்றாரா என்று விசாரிப் பதற்கு ஒழிப்போனுடன் நன்னம்பிக்கையுடனும் பெறுமானத் துடனும் கொடுக்கல்வாங்கல் மேற்கொள்ளும் ஒருவருக்கு அவசியமில்லை.

ஒழிப்போன் ஒத்துழைப்பு வழங்கு வதற்கு வேண்டு கோள் விடுத்தல்

**330.** (1) பிரிவு 302 கம்பெனிக்கு ஏற்புடையதாகும் அளவுக்கு உட்பிரிவு (2)(ஆ) கம்பெனிக்கு ஏற்புடையதாகாது.

(2) ஒழிப்போன் எழுத்து மூலமான அறிவித்தல் ஊடாக,

(அ) பிரிவு 438 இற்கு அமைய, ஒழிப்போன் தீர்மானிக்க வேண்டியதான ஒழித்துக்கட்டல் தொடர்பான அவ்வாளின் உடைமையிலுள்ள அல்லது கட்டுக்காப்பிலுள்ள அல்லது ஆளின் கட்டுக்காப்பின் கீழான கம்பெனியின் அத்தகைய புத்தகங்களை, பதிவேடுகள் அல்லது ஆவணங்களைத் தன்னிடம் என்ப வற்றை ஒழிப்போனுக்கு ஒப்படைப்பதற்கு கம்பனியின் பணிப்பாளரிடம் அல்லது வேறு எவரேனும் ஆணைக் கோரலாம்; அத்துடன்

(ஆ) (i) கம்பெனி அல்லது முகாமை செய்வதில் என்பவற்றில் பங்கெடுப்பவரான ஆள் ஒருவரைப் வேண்டுகோள்விடுக்கலாம்,

(ii) கம்பெனியின் கடந்தகால அல்லது தற் போதைய பங்குதாரர் ஒருவரை;

(iii) கடந்தகால அல்லது தற்போதைய பணிப் பாளரிடமோ அல்லது வேறு அலுவலரை;

(iv) கம்பெனியின் சொத்து தொடர்பில் அதனைக் கம்பெனியின் ஆதனம் தொடர்பில் ஆதனத்தின் கடந்த கால தற்போதுள்ள பெறுநரை அல்லது நியமித்தனர்;

(v) கம்பெனியின் அல்லது ஊழியராக இருக்கின்ற ஆளொருவரை;

(vi) கம்பனிக்கான சட்டத்தரணியாக செயலாற்றுகின்றவரான அல்லது ஏதேனும் நேரத்தில் செயலாற்றியுள்ளவரான ஆளொருவரை ஆனால் சட்டமதியுரை சிறப்புரிமை அல்லது வழக்குத்தொடுத்தல் சிறப்புகள் என்பவற்றிக்கு அமைய;

(vii) கம்பெனியின் கணக்காளர் அல்லது கணக்காய்வாளர் ஒருவரை,

(viii) கம்பெனியின் விவகாரங்கள் தொடர்பான அறிவைக் கொண்டுள்ள வேறொரு ஆளிடம் வேண்டுகோள்விடுக்கலாம்.

உட்பிரிவு (3) இல் வரையறை செய்யப்பட்டுள்ள எவ்விடயங்களையும் நியாயமான அளவு ஏற்படின் மற்றும் நியாயமான அளவுக்கு மேற்கொள்ளலாம்.

(3) இரண்டாம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட விடயங்களாவன, பின்வருவனவற்றுல் இருத்தல் வேண்டும்.

(அ) ஒழிப்போன் கோருகின்ற பட்சத்தில் அவர் கோருகின்ற நேரத்தில் கோருகின்ற இடத்தில் சமுகமளித்தல்;

(ஆ) ஒழிப்போன் கோருகின்ற பட்சத்தில் கம்பெனியின் விவகாரங்கள், வணிகங்கள், சொத்து அல்லது நிதிசார் சூழ்நிலைகள் பற்றிய அத்தகைய தகவல்களை அவருக்கு வழங்குதல்;

(இ) கம்பெனியின் விவகாரங்கள், வணிகங்கள், சொத்து அல்லது நிதிசார் சூழ்நிலைகள் பற்றிய விடயங்கள் தொடர்பில் விதித்துரைக்கப்படுகின்றவாறு அத்தகைய சான்று மற்றும்

ஏனைய செயன்முறை விதிகளுக்குட்பட்ட வாறு ஒழிப்போன் சத்தியப்பிரமாணம்;

(ஈ) விற்றுத்தீர்ப்பதற்கான செயற்பாட்டில் தனது ஆற்றலுக்குட்பட்ட வகையில் சிறப்பாக ஒழிப் போனுக்குத் துணைபுரிதல்;

(4) உட்பிரிவு (2)(ஆ) இல் குறிப்பிடப்பட்ட ஆளுக்கு அவர் கம்பெனியின் பணியாளராக இல்லாத பட்சத்திலும் அவரிடம் உட்பிரிவு (2)(ஆ) இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட வேண்டு கோளுக்கு அமைவாக நியாயமான பிரயாணம் மற்றும் ஏனையவற்றுக்கு ஏற்பட்ட செலவுகளுக்கான கட்டணத் தினை ஒழிப்போன் செலுத்துதல் வேண்டும்.

(5) இப்பிரிவின் கீழ் தகவல்களை நன்னம்பிக்கையின் அடிப்படையில் வெளிப்படுத்துகின்ற எவரேனும் ஆளுக்கு எதிராக (தொழில்சார் நடத்தை தொடர்பில் நியாயாதிக்கம் கொண்ட தொழில்முறை நிறுவனம் எவற்றின் மூலமாகவோ அல்லது அதிகாரி மூலமாகவோ மேற்கொள்ளப்படுகின்ற ஒழுக்காற்று விசாரணை உட்பட) வேறு எவ்வகையான வழக்காடலோ வழக்குத் தொடரலோ அல்லது வேறுவிதமான சட்டரீதியான நடவடிக்கையோ மேற்கொள்ளப்படலாகாது.

(6) இப்பிரிவின் கீழ் மேற்கொள்ளப்பட்ட வேண்டு கோளுக்கு அமைந்து ஒழுகத் தவறியுள்ள ஆள் ஒருவருக்கு ஒழிப்போனின் விண்ணப்பத்தின் பேரில் பின்வருமாறு நீதி மன்றம் கட்டளையிடும்.

(அ) வேண்டுகோளுக்கு அமைந்து ஒழுகுமாறும்; அல்லது

(ஆ) நீதிமன்றில் சமுகமளிக்குமாறும் விதித்துரைக் கப்படுகின்றவாறு அத்தகைய சான்று மற்றும் ஏனைய செயன்முறை விதிகளின் கீழ் சத்தியப் பிரமாணம் பரீட்சிக்கப்பட வேண்டும் எனவும்,

காரியத்துக்குத் தக்கபடி அவ்வாறு அமைந்து ஒழுகு தலையும் அல்லது பரீட்சித்தலையும் வைத்து நீதி மன்றம் திருப்தியுறுகின்ற பட்சத்தில்,

(இ) பிரிவு 296 இல் குறிப்பிடப்பட்ட நோக்கத்தை மேலும் ஈட்டிக்கொள்வது அவசியமாகும் என்பதுடன்

(ஈ) நியாமற்ற வகையில் அந்த ஆளை ஒடுக்குதல் ஆகாது.

பெருநராண்மை அல்லது நியமிக்கப் பட்டவரது நியமனம் முடிவடை வதல் பற்றிய ஒழிப் போனின் அறிவித்தல்

**331.** (1) ஒழிப்போன் ஒருவர் விதித்துரைக்கப்படக்கூடிய வாறான அத்தகைய படிவத்தில் பெறுநருக்கு எழுத்து மூலமான அறிவித்தல் வழங்குவதன் மூலம் நியமிக்கப்பட்ட பெருநராண்மையை அல்லது நியமனத்தினை முடிவுறுத்து மாறு தேவைப்படுத்தலாம்.

(2) உட்பிரிவு (1) இன் கீழ் அறிவுறுத்தல் வழங்கப்பட்ட பெறுநர் அல்லது நியமனம் பெற்றவரின் நியமன விடயத்துக் கேற்ப பின்னரான அடுத்த வேலைநாள் முடிவடையும் போது முடிவுறுத்தப்படும்.

(3) உட்பிரிவு (1) இன் கீழ் அறிவித்தல் ஒன்றைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் செயல்முறைக்குகந்தளவு விரைவாக மற்றும் பெறுநரின் அல்லது நியமித்தவரின் முடிவின் பெறுநர் அல்லது நியமத்தர் விடயத்துக்கேற்ப பெறுநரின் ஆதனத்துடன் அல்லது எவ்வாதனம் பெறுநரின் ஆதனத்துடன் அல்லது எது தொடர்பில் நியமத்தர் நியமிக் கப்பட்டாரோ அவ்வாதனம் தொடர்பில் கையாள்வதற்கு இல்லாதொழிதல் வேண்டும்.

(4) உட்பிரிவு (1) இன்கீழ் அறிவித்தல் ஒன்றினை பெறுநர் பெற்றுக்கொண்ட பின்னர்-

(அ) பெறுநர் 382(2) ஆம் பிரிவின்கீழ் இன்கீழ் மேலதிக நடவடிக்கைகளை எடுப்பதற்கு தேவைப்படுத்தப்பமாட்டார்;

(ஆ) பிரிவு 385(4)(ஆ) அல்லது பிரிவு 386(4)(ஆ) என்பன ஏற்புடமையாதல் இல்லாதொழி கின்றன ஆனால், அதன்கீழ் ஏற்கனசெய்யப் பட்ட எவையேனும் வழங்கல்கள் ஏதுவின்மீது வழங்கப்படுதலாகாது;

(இ) நான்காம் அட்டவணையின் நோக்கங்களுக் காக, இச்சட்டத்தின் கீழ் பெறுநரினால் முறை யாகச் உறப்பப்பட்ட ஆகுசெலவுகள், கட்டணங்கள், செலவினங்கள் மற்றும் பெறுகையாளரின் ஊதியம் மற்றும் பிரிவு 395 இன்கீழான பெறுநரின் நட்டோத்தரவாதம் என்பன ஒழித்ததுக்கட்டல் செலவினமாக பரிகரிக்கப்படுதல் வேண்டும்.

ஒழிப் போனால் ஆவணங் களின் நிறை வேற்றுகை

**332.** (1) ஒழிப்போனின் விடயத்துக்கேற்ப, ஒழிப்போனின் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கு அவசியமான அல்லது இடைநேர்விளைவான எல்லா ஆவணங்களையும் கம்பெனி யின் பெயரில் மற்றும் அதன் சார்பில் நிறைவேற்றலாம்.

(2) ஒழிப்போனொருவரினால் கம்பெனியின் சார்பில் கையொப்பமிடப்பட்ட ஆவணமொன்று கம்பெனிகள் சட்டத் தின் 19 ஆம் பிரிவின் நோக்கங்களுக்காக கம்பெனியின் சார்பில் முறையாகப் பதிவு செய்யப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) வேறு ஏதேனும் சட்டத்தின் அல்லது கம்பெனியின் அமைப்புகள் எவற்றுக்கும் முரணாக எது எவ்வாறிருப்பினும், ஆவணங்களை நிறைவேற்றுவதற்கும் அந்நோக்கத்துக்காக கம்பெனியின் பொது இலச்சினையொன்றைப் பயன்படுத்து வதற்கும் ஒழிப்போனுக்கு அதிகாரமளிக்கும் வகையில் தீர்மானம் அல்லது கட்டளை ஒழிப்போனை நியமிக்கு மிடத்து, ஒழிப்போனொருவர் கம்பெனியின் பொது இலச் சினையை ஆவணங்களைபொறிப்பதன் மூலமும் பொது இலச்சினை பொறிப்பதனை அத்தாட்சிப்படுத்துவதன் மூலமும் கம்பெனியின் பெயரில் மற்றும் கம்பெனியின் சார்பில் ஆவணங்களை நிறைவேற்றலாம்.

(4) மூன்றாம் உட்பிரிவில் விபரிக்கப்பட்ட முறையில் நிறைவேற்றப்பட்ட ஆவணமொன்று கம்பெனிகள் சட்டத்தின் 19 ஆம் பரிவின் நோக்கங்களுக்காக கம்பெனியினால் முறை யாக செய்து கொள்ளப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

தடை பிசகுக்கு உட்பட்ட ஆதனத்துடன் தொடர்புறுவதற்காக ஒழிப் போனுக்கு உண்டான தத்துவம்

**333.** (1) தடை பிசகுக்கு உட்பட்ட ஆதனம் தொடர்பில் ஒழிப்போன் ஒருவர் கருமம் ஒன்றை ஆற்றலாம் அல்லது தத்துவத்தைப் பிரயோகிக்கலாம். அத்தகைய சந்தர்ப்பங்களாக

(அ) தடை பிசகானது நிலையான பிணையத்துக் குட்பட்டிருத்தல் மற்றும் ஆதனமானது எட்டாம் அட்டவணையின் பந்தி 1(ஆ) இன்கீழ் ஒப்படைக்கப்பட்டதாக இருத்தல் அல்லது அவ்வட்டவணையின் பந்தி 2(ஈ)(அ) இன்கீழ் ஒப்படைப்பதற்கென்று எடுத்துச் செல்லப்பட்டிருத்தல்;

(ஆ) தடை பிசகானது நிலையான பிணையத்துக் குட்பட்டிருத்தல் மற்றும் பந்தி (அ) இற்கு ஏற்புடையதாகாதிருத்தல் ஆயினும் அத்தடை பிசகு நடைமுறையிலிருப்பதை நாடவில்லை என்ற உத்தரவாதம் ஒழிப்போனிடம் உறுதிப் படுத்தப்பட்டிருத்தல்;

(இ) தடை பிசகானது தளம்பல் நிலையிலுள்ள பிணைப் பாத்தியமாக அமைந்திருத்தல்

(ஈ) கம்பெனிகள் சட்டத்தின் பிரிவு 431(2) இன்கீழ் தளம்பல் பிணைப் பாத்தியத்துக்குட்பட்ட மட்டத்தில் தடை பிசகானது நிலையான பிணையத்துக்குட்பட்டிருத்தல்; அல்லது

(உ) தடை பிசகானது நயமுரித்துச் சோந்தை ஒன்றாக அமைந்திருத்தல்

(2) உட்பிரிவு (1) இன்கீழ் ஆதனம் கையுதிர்க்கப்படுகின்ற பட்சத்தில் உத்தரவாதமானது ஆதனம் தொடர்பிலான தடைபிசகினைக் கொண்டிருந்தபடியால் கையுதிர்க்கப்பட்ட ஆதனத்தினைச் சார்ந்து மேற்கொள்ளப்படும் தடைபிசகிற்கான உத்தரவாதம் நேரடியாகவோ மறைமுகமாகவோ கம்பெனியின் எவ்வாதனம் தொடர்பிலான தடைபிசகிற்கான உத்தரவாதம் போன்ற சம அளவிலான முன்னுரிமையையே கொண்டிருக்கும்.

பொறுப்பு வாய்ந்த ஆதனம் தொடர்பிலான பொறுப் புத்துறப்பு

**334.** (1) இப்பிரிவில் “மிகப்பொறுப்பான ஆதனம்” என்பது -

(அ) இலாபமற்ற ஒப்பந்தம் ஒன்று; அல்லது

(ஆ) விற்பனை செய்யத்தகாத ஆதனம் அல்லது உடனடியாக விற்பனை செய்யப்படத்தகாத நிலையில் உள்ள அல்லது பணம் செலுத்து வதற்குக் கோரப்படாத அல்லது பொறுப்பு வாய்ந்த கருமம் ஒன்றை ஆற்றுவதற்கு ஏதுப்படுத்தும் ஆதனம்.

(2) உட்பிரிவு (3) இற்கமைய (வங்கி முறிவிலுள்ள) (வங்கி முறிவு நிலையின்போதான) வங்குரோத்துக்கான நம்பிக்கைப் பொறுப்பாளர் ஒருவர் அல்லது (ஒழிப்போன் ஒழித்துக் கட்டுதல்) பொறுப்புவாய்ந்த ஆதனம் பற்றிய பொறுப்புத் துறப்பை வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாளர் ஒருவர் செய்யலாம்.

(3) பொறுப்புவாய்ந்த ஆதனமானது பொதுமக்களின் சுகாதாரத்துக்கு அல்லது பொதுமக்களின் பாதுகாப்புக்குக் உடனடியான அல்லது கடுமையான அச்சுறுத்தல் மிக்கதாக அமையுமிடத்து அல்லது சூழல் பொறுப்புடைமையுடன் தொடர்புறுமிடத்து, வங்கிமுறிவு நம்பிக்கைப்பொறுப்பாளர் அல்லது ஒழிப்போன் பொறுப்புவாய்ந்த ஆதனத்தை பொறுப் புத்துறத்தலாகாது.

(4) வங்கிமுறிவு நம்பிக்கைப்பொறுப்பாளர் அல்லது ஒழிப் போன் ஒப்பந்தமொன்றைக் குறித்தொதுக்குவதற்கு முயன் றிருப்பினும் அல்லது அது தொடர்பிலான உரிமைகளைப் பிரயோகித்திருப்பினும் அல்லது அது தொடர்பிலான ஏதேனும் ஆதனத்திற்கான உரிமைகளைப் பிரயோகித்திருப் பினும் உட்பிரிவு (2) இன்கீழ் அவ்வொப்பந்தம் பொறுப்புத் துறப்பு செய்யப்படலாம்.

(5) வங்கிமுறிவு நம்பிக்கைப்பொறுப்பாளர் அல்லது ஒழிப் போன் ஆதனம் ஒன்றை உடைமை கொண்டிருப்பினும் விற்பனை செய்ய முயன்றிருப்பினும் அல்லது அது தொடர் பிலான உரித்துடைமை உரிமைகளைப் பிரயோகித்திருப்பின் உட்பிரிவு (2) இன்கீழ் அவ்வாதனம் பொறுப்புத்துறப்பு செய்யப்படலாம்.

(6) உட்பிரிவு (2) இன்கீழான பொறுப்புத் துறப்பானது-

(அ) பொறுப்புத்துறப்புச் செய்யப்பட்ட ஆதனம் தொடர்பில் கடனாளியின் உரிமைகள் அக்கறைகள் மற்றும் பொறுப்புகள் என்பவற்றை பொறுப்புத்துறப்பு செய்யப்பட்ட நேரத்திலிருந்து முடிவுக்குக் கொண்டுவருகின்றது ஆனால்

(ஆ) கடனாளியைப் பொறுப்பிலிருந்து விடுவிப்பதற்கு அவசியமானளவு தவிர, வேறு எவரேனும் ஆளினதும் உரிமைகளை அல்லது பொறுப்புகளைப் பாதிக்காது அல்லது மட்டுப்படுத்தாது.

(7) பொறுப்புவாய்ந்த ஆதனத்தினைப் பொறுப்புத்துறப்பு செய்கின்ற வங்கிமுறிவுக்கான நம்பிக்கைப்பொறுப்பாளர் அல்லது பொறுப்பின் பின்னரான ஏதேனும் சந்தர்ப்பத்தில் ஒழிப்போன் ஐந்து நாட்களுக்கு துரிதமாக செயற்பட்டு பொறுப்புத் துறப்பதன் மூலம் வங்கிமுறிவுக்கான நம்பிக்கைப் பொறுப்பாளரது அல்லது ஒழிப்போனுது அறிவுக்குட்பட்ட வகையில் பாதிப்புக்குள்ளாகும் ஒவ்வொரு ஆளுக்கும் அத்தகை பொறுப்புத்துறப்புத் தகவல்களை விதித்துரைக்கப்படுகின்றவாறு குறிப்பிட்டு எழுத்துமூலமான அறிவித்தலை வழங்குதல் வேண்டும்.

(8) இரண்டாம் உட்பிரிவின்கீழ் பொறுப்புத்துறப்பின் விளைவொன்றாக இழப்பினால் துன்புறுகின்ற ஆளொருவர்-

(அ) உட்பிரிவு (8)(ஆ) இன்கீழ் ஆக்கப்பட்ட கட்டளை ஒன்றின் பயனுதலைக் கணக்கிலெடுத்து இழப்புத்தொகையினை கடன் கொடுநராக கோரலாம்; அத்துடன்

(ஆ) பொறுப்புத்துறப்பு செய்யப்பட்ட ஆதனம் அவ்வாளுக்கு ஒப்படைக்கப்பட வேண்டும் அல்லது உரித்தாக்கப்படுதல் வேண்டும் என்ற கட்டளைக்காக நீதிமன்றத்துக்கு விண்ணப்பிக்கலாம்;

(9) ஆதனம் விண்ணப்பக்காரரிடம் ஒப்படைக்கப்படுதல் வேண்டும் அல்லது உரித்தாக்கப்படுதல் வேண்டுமென்பது நியாயமானது என நீதிமன்றம் திருப்திப்படுமிடத்து நீதிமன்றம் இப்பிரிவின் கீழ் கட்டளையொன்றை ஆக்கலாம்.

(10) இப்பிரிவின் கீழ் கட்டளை ஆக்குவதில் நீதிமன்றம் அவசியமானவாறு-

(அ) ஏதேனும் நியதி அல்லது நிபந்தனையை விதிக்கலாம்;

(ஆ) வேறு ஏதேனும் துணைநிலைக் கட்டளையை ஆக்கலாம்.

பொறுப்புத் துறப்பை செய்யலாமா இல்லையா என்பதனை தெரிவு செய்வதற்கான தேவைப்பாடு

**335.** பொறுப்புவாய்ந்த சொத்து பொறுப்புத்துறக்கப்படுவதனால் உரிமைகள் பாதிப்புறுகின்ற ஆள் ஒருவர் வங்கிமுறிவிலுள்ள வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாளர் அல்லது ஒழித்துக்கட்டுதலிலுள்ள ஒழிப்போன் அப்பொறுப்பு வாய்ந்த சொத்தினைப் பொறுப்புத்துறப்பு செய்வதா இல்லையா என்பதைத் தேர்வு செய்யுமாறு தேவைப்படுத்தி எழுத்து மூலமான அறிவித்தலை வழங்கி அவ்வறிவித்தலில் வரையறை செய்யப்பட்டுள்ள திகதி முடிவடைவதற்குள் அதாவது வங்கிமுறிவுக்கான நம்பிக்கைப்பொறுப்பாளர் அல்லது ஒழிப்போன் அவ்வறிவித்தலைப் பெற்று இருபது வேலை நாட்களுக்குக் குறையாத திகதியல்லாத காலப் பகுதிக்குள் வேண்டுவாராயின், வங்கிமுறிக்கான நம்பிக்கைப் பொறுப்பாளர் அல்லது ஒழிப்போன் அத்தகைய திகதி அவ்விதம் நிறைவடைவதற்கு முன்பே பொறுப்புத்துறப்பு மேற்கொண்டிருந்தாலே ஒழிய அப்பொறுப்பு வாய்ந்த ஆதனத்தை வங்கிமுறிவுக்கான நம்பிக்கைப்பொறுப்பாளர் அல்லது ஒழிப்போன் பொறுப்புத்துறப்பு செய்யாது விடலாம்.

தற்காலிக ஒழித்துக் கட்டுதலில் (ஒழிப் போனின் தத்துவங்கள்) இவ்வத்தியா யத்தின் ஏற்புடைமை

**336.** பிரிவு 304 இன்கீழ் ஆக்கப்படும் கட்டளையொன்றினால் தற்காலிக ஒழிப்போன் நியமிக்கப்படுமிடத்து ஒழிப்போனுக்கான குறிப்பீடுகள் தற்காலிக ஒழிப்போனுக்காக விருப்பின் மற்றும் ஒழித்துக்கட்டுதலுக்கான குறிப்பீடுகள் தற்காலிக ஒழித்துக்கட்டுதலுக்காகவிருப்பின் தற்காலிக ஒழிப்போனுக்கும் தற்காலிக ஒழித்துக் கட்டுதலுக்கும் ஏற்புடைமையாகும் இவ்வத்தியாயத்தின் அளவு பிரிவு 330(6)(இ) என்னும் பிரிவுக்கான அவசியமான திரிபுபடுத்தல்களுடன் கட்டளையில் குறித்துரைக்கப்பட்டவாறாகவிருத்தல் வேண்டும்.

## அத்தியாயம் 6

### ஒழிப்போனின் கடமைகள்

### *அ - பொது*

குறித்த சில ஒழிப்போன் செயலாற்றுதற்குத் தேவைப் படுத்தப் படமாட்டார்

**337.** (1) இப்பிரிவு இப்பாகத்தின் வேறு எவையேனும் ஏற்பாடுகள் எது எவ்வாறிருப்பினும் ஏற்புடையதாகும்.

(2) பிரிவு 333(1) இன் பந்தி (அ), (ஆ) அல்லது (ஈ) என்பன ஏற்புடையதாகுமிடத்து தவிர, ஒழிப்போனொருவர், நிலையான பிணைப்பொறுப்புக்கமைந்த ஆதனம் தொடர்பில் ஏதேனும் பணியை அல்லது தத்துவத்தைப் பிரயோகிப்பதற்கு அல்லது நிறைவேற்றுவதற்கு தேவைப்படுத்தப்பட மாட்டார்.

(3) பின்வருபவை எல்லாம் ஏற்புடையதாகுமிடத்து-

(அ) பிரிவு 298(2)(இ) இன்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையினால் ஒழிப்போன் ஒருவர் நியமிக் கப்படுதல்;

(ஆ) உத்தியோகபூர்வ பெறுநர் ஒழிப்போனுல்லர்; அத்துடன்

(இ) கம்பெனியானது சொத்தற்ற கம்பெனியாக இருத்தல்;

என்பன ஒழித்துக்கட்டமுதல் ஏதேனும் செலவினத்துடன் தொடர்புபடுவதற்கு விருப்புடையதாக இருப்பின் அல்லது தொடர்புபடுவதற்கான சாத்தியமிருப்பின் ஒழித்துக்கட்டுதலுடன் சம்மந்தப்பட்ட ஏதேனும் கடமையை நிறைவேற்றுவதற்கு அல்லது ஏதேனும் பணியை பிரயோகிப்பதற்கு தேவைப்படுத்தப்படமாட்டார்.

கம்பெனியின் அலுவல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஒழிப் போனின் கடமை

**338.** (1) கம்பெனியின் ஒழித்துக்கட்டுதல் தொடங்கியதன் பின்னர் செயல்முறைக்குகந்தவரையில் விரைவானளவு ஒழிப்போன் -

(அ) கம்பெனியின் அலுவல்களைப் புலானய்வு செய்தல் வேண்டும்;

(ஆ) பிரிவு 302(1)(ஆ) இன்கீழ் வெளிப்படுத்தல் ஒன்று செய்யப்பட்டு கோப்பிடப்படுமிடத்து, வெளிப்படுத்தலில் குறித்துரைக்கப்பட்ட காலப் பகுதியினுள் அக்கம்பெனி அதன் தனிசுகளைச்

முழுமையாக செலுத்த முடியுமா அல்லது இல்லையா என்பதைக் கவனத்திற்கொள்ளுதல் வேண்டும்.

(இ) உட்பிரிவு (2) இற்குட்பட்டு, கம்பெனியானது மீள்அறவிடப்பட முடியாத பரிவர்த்தனைகள் அல்லது குறைமதிப்புத் தொகை கொண்ட பரிவர்த்தனைகளுடன் தொடர்புபட்டுள்ள திறத்தவராக இருந்து வருகின்றதா என்பதைக் கவனத்திற்கொள்வதுடன் மீள்அறவிடப்பட முடியாத சாத்தியமுள்ள மற்றும் குறைமதிப்புத் தொகை கொண்ட சாத்தியமுள்ள பரிவர்த்தனைகள் தொடர்பில் கடன் வழங்குநர்களின் நலன்கள் சார்ந்து அவை உள்ளனவா இல்லையா என்பது குறித்துத் தீர்மானம் மேற்கொள்ளல் வேண்டும். கடன் வழங்குநர்களின அத்தகை நலன்களாக-

(i) அவை தொடர்பில் புலனாய்வுகளை நிறைவேற்றுவதற்கு; அத்துடன்

(ii) பிரிவு 415 இன் கீழ் நீதிமன்றத்தில் விண்ணப்பித்து பிரிவு 418 இன்கீழ் அறவீட்டை நாடுதல்.

(2) பிரிவு 302 ஆனது ஒரு கம்பெனிக்கு ஏற்புடையதாக இருக்கும் வரை ஒரு உதவுதொகை செலுத்துநர்கள் விண்ணப்பத்தின் மீது களிப்பாளரின் வேறுவகையில் நீதிமன்றம் கட்டளையிடப்பட்டாழொலிய கம்பெனிக்கு உட்பிரிவு (1)(இ) ஏற்புடையதாகாது.

### *ஆ - உதவுதொகை செலுத்துநர்கள்*

உதவுதொகை செலுத்துநர்களின் பட்டியலைக் கொடுத்துத் தீர்த்தல்;

**339.** (1) உட்பிரிவு (2) இற்கமைய ஒழித்துக்கட்டுதல் ஒன்று தொடங்கியதன் பின்னர் செயல்முறைக்குகந்தளவு விரைவாக ஒழிப்போன் உதவுதொகை செலுத்துநர்களின் பட்டியலொன்றைக் கொடுத்துத்தீர்த்தல் வேண்டும்.

(2) ஒழிப்போன் உதவுதொகை செலுத்துநர்களுக்கு அழைப்புக்களைச் செய்வதற்கு அவசியமில்லையென கருதுமிடத்து, உதவுதொகை செலுத்துநர்களது பட்டியலை ஒழிப்போன் கொடுத்துத்தீர்க்கத் தேவையில்லை.

(3) உதவுதொகை செலுத்துநர்களின் பட்டியலை கொடுத்துத் தீர்ப்பதில் ஒழிப்போன் விதித்துரைக்கப்படக்கூடிய வாறான அத்தகையை நடவடிக்கைமுறையை பின்பற்றுதல் வேண்டும்.

(4) உதவுதொகை செலுத்துநர்களின் பட்டியலொன்று விதித்துரைக்கப்படுகின்றவாறான தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுதல் வேண்டும்.

உதவுதொகை செலுத்துநர்களின் நிரல் ஒன்றின் வேறுபாடு

**340.** (1) ஒழிப்போன் ஒருவர் உதவுதொகை செலுத்துநர்களின் உதவு நிரலொன்றை வேறுபடுத்தலாம்.

(2) உதவுதொகை செலுத்துநர்கள் நிரல் ஒன்றினை வேறுபடுத்துவதில் ஒழிப்போன் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நடவடிக்கைமுறையை பின்பற்றுதல் வேண்டும்.

உதவு தொகை செலுத்துநர்களது உரிமைகளை சரிக்கட்டுதல்

**341.** (1) உதவுதொகை செலுத்துநர்களின் நிரலொன்றை கொடுத்துத்தீர்த்தபின்னர் செயல்முறைக்குகந்த விரைவான வளவு ஒழிப்போன் உதவுதொகை செலுத்துநர்களின் பொறுப்புகள் தரப்படுத்துவதற்கு அவசியமானளவுவரை அவர்களுக்கிடையில் உதவுதொகை செலுத்துநர்களின் உரிமைகளைச் சரிக்கட்டுதல் வேண்டும்.

(2) உதவுதொகை செலுத்துநர்களின் உரிமைகளை அவர்களே அவர்களுக்கிடையில் சரிக்கட்டுகையில் ஒழிப்போன் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நடவடிக்கை முறையை பின்பற்றுதல் வேண்டும்.

முன்னாள் பங்குதாரர் களுடைய பொறுப்பு

**342.** (1) இப்பிரிவில், ஒரு கம்பெனி தொடர்பில் “முன்னாள் பங்குதாரர்” என்பது அதன் ஒழித்துக்கட்டல் தொடங்கும் தேதிக்கு உடன் நேர்முற்போந்த பன்னிரெண்டு மாதகாலப் பகுதியினுள் எந்த நேரத்திலும் பங்குதாரராகவுள்ள ஆளொருவர் எனப் பொருள்படும்.

(2) மூன்றாம் மற்றும் (4) ஆம் உட்பிரிவுகளுக்கமைய, பங்குதாரர் ஒருவர் பங்குகொன்று தொடர்பில் சேர்மதியாக வுள்ள ஏதேனும் தொகையைச் செலுத்துவதற்கு தவறுகின்ற விடத்து, அத்தொகை எவரேனும் முன்னாள் பங்குதாரரினால் செலுத்தப்படற்பாலதாதல் வேண்டுமென்பதுடன் எவரேனும்

முன்னாள் பங்குதாரரிடமிருந்து ஒழிப்போனொருவரினால் அறவீடு செய்யப்படலாம்.

(3) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட காலப் பகுதியின் போது எல்லா நேரங்களிலும் பங்குதாரராகவுள்ள முன்னாள் பங்குதாரர் ஒருவர் கம்பெனி வழமையான நட வடிக்கைகளின் வருமதியாக வருகின்ற அதன் தனிசுகளைச் செலுத்துவற்கு இயலுமாகவுள்ளவிடத்து (2) ஆம் உட்பிரி வின் கீழ் ஆளாதலாகாது.

(4) பங்குடன் இணைந்த பொறுப்பு முன்னாள் பங்குதார ரினால் வைத்திருக்கப்படுகின்ற நேரத்தின் பின்னர் அதிகரிக் கப்படுமிடத்து, அப்பங்கு தொடர்பில் (2) ஆம் உட்பிரிவின் கீழான முன்னாள் பங்குதாரரின் பொறுப்பு முன்னாள் பங்குதாரரினால் வைத்திருக்கப்பட்டதான நேரத்தின் பின்னர் பங்குடன் இணைந்த ஏதேனும் பொறுப்பு தொகையினை விஞ்சுதலாகாது.

உதவு தொகை செலுத்துநர் களின் பொறுப்பை வலுவுறுத் துகை

**343.** (1) ஒழிப்போனொருவர்-

(அ) பங்குதாரர் ஒருவர் கோரப்படாத மூலதனம் தொடர்பில் கோருவதற்கு ஆளாகவுள்ள விடத்து, கோரப்படாத மூலதனம் தொடர்பில் அப்பங்குதாரருக்கு கோரலொன்றை கோரலாம்; அத்துடன்

(ஆ) உதவுதொகை செலுத்துநர் ஒருவர் கம்பெனிக் குப் பொறுப்பாகவுள்ளவிடத்து, அப்பொறுப்பு தொடர்பில் உதவுதொகை செலுத்துநருக்கு கோரலொன்றைச் செய்யலாம்.

(2) உட்பிரிவு (1) இன்கீழ் ஒழிப்போன் அழைப்புச் செய்யு மிடத்து, அக்கோரல் பற்றிய எழுத்துமூல அறிவித்தல் உதவு செலுத்துநருக்கு வழங்கப்படுதல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின் கீழான அறிவித்தல் ஒன்று விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேவைப் பாடுகளுடன் இணங்கியொழுகுதல் வேண்டும்.

(4) வட்டி விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வீதத்தில் அல்லது வீதங்களில் கோரலின்மீது செலுத்தப்படற் பாலதாதல் வேண்டும்.

(5) ஒழிப்போனின் விண்ணப்பத்தின்மீது, (4) ஆம் உட்பிரிவின் கீழ் செலுத்தப்படற்பாலதானவை எனையேனுமிருப்பின்; நீதிமன்றம்-

(அ) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட தனியாளின் கோரலுக்கான கொடுப்பனவை கட்டளையிடலாம்; அல்லது

(ஆ) ஒராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட பலவித கோரல்களின் கொடுப்பனவுக்கு கட்டளையிடலாம்;

நான்காம் உட்பிரிவின்கீழ் செலுத்தப்படற்பாலதாகவுள்ளமை எவையேனுமிருப்பின்; வட்டியுடன் சேர்த்து கொடுப்பனவுக்கு கட்டளையிடலாம்.

### *இ - கம்பெனியின் ஆதனத்தின் பிரயோகம்*

விருப்புசார் கோரிக்கைகள்

**344.** (1) ஒழிப்போனொருவர் அளவுவரை நான்காம் அட்டவணையில் தரப்பட்டுள்ள இயைபான தேதியன்றுள்ளவாறு தீர்மானிக்கப்பட்ட மற்றும் அவ்வட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட முன்னுரிமையின் கட்டளையில் உரிமைக் கோரிக்கைகளின் திருப்தியில் அல்லது திருப்தியை நோக்கி கம்பெனியின் ஆதனத்தின் தேறிப் பெறுகையின் வரும்படிகளுக்கு ஏற்புடமையாதல் வேண்டும்.

(2) நான்காம் அட்டவணையின் 9 ஆம் பந்திக்குப் பங்கமின்றி, (1) ஆம் உட்பிரிவில் “கம்பெனியின் ஆதனம்” என்பது பிரிவு 333 (1) இன் (அ), (ஆ), (இ), (ஈ) மற்றும் (உ) எனும் பந்திகளில் ஒன்று ஏற்புடைமையானதாயிருந்தாலொழிய, வில்லங்கத்துக்கமைந்த ஆதனத்தை உள்ளடக்குதலாகாது.

(3) ஓராம் உட்பிரிவுக்கிணங்க உரிமைக் கோரிக்கைகளைச் செலுத்தியதன் பின்னர், ஒழிப்போன் ஒரே நேரத்தில் எல்லாப் பொது உரிமைக் கோரிக்கைகளையும் செலுத்தி இயைபான தேதியன்றுள்ளவாறு தீர்மானிக்கப்பட்ட பொது உரிமைக் கோரிக்கைகளின் திருப்தியில் அல்லது திருப்தியை நோக்கி கம்பெனியின் ஆதனத்தின் தேறிப்பெறுகையின் வரும்படிகளை பிரயோகித்தல் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட உரிமைக்கோரிக்கைகள் அவர்களுக்கிடையில் சமமாக தரப்படுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் வரும்படிகள்

அத்தகைய எல்லா உரிமைக்கோரிக்கைகளுக்கிடையே வீதப் படி தணித்தல் எனும் சந்தர்ப்பத்தில்; கம்பெனியின் ஆதனத் தின் தேறிப்பெறுகையின் வரும்படிகள் அவர்களை திருப்திப் படுத்தினாலொழிய முழுமையாக திருப்திப்படுத்தப்படுதல் வேண்டும்.

(5) மூன்றாம் உட்பிரிவுக்கிணங்க உரிமைக்கோரிக்கை களைச் செலுத்தியதன் பின்னர், விதித்துரைக்கப்படக்கூடிய வாறான அத்தகைய முறையில் கணக்கீடுசெய்யப்பட்ட இயைபான தேதியிலிருந்தான வட்டி பந்திகள் (1) மற்றும் (3) என்பவற்றில் குறிப்பீடுசெய்யப்பட்ட உரிமைக்கோரிக் கைகள் மீது செலுத்தப்படுதல் வேண்டும்.

(6) ஐந்தாம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட உரிமைக்கோரிக்கைகள், அவ்வுட்பிரிவில் குறிப்பீடுசெய்யப் பட்ட வட்டி தொடர்பில் அவர்களுக்கிடையில் சமமாக தரப் படுத்தப்படுவதுடன் அத்தகைய வட்டியானது வரும்படிகள் வட்டி தொடர்பில் அவ்வுட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட எல்லா உரிமைக்கோரிக்கைகளுக்குமிடையில் வீதப்படி தணித்தல் வேண்டும் எனும் சந்தர்ப்பத்தில்; கம்பெனியின் ஆதனத்தின் தேறிப்பெறுகையின் வரும்படிகள் அதனைச் செலுத்துவதற்கு போதியதற்றதானவாகவிருந்தாலொழிய, முழுமையாக செலுத்தப்படுதல் வேண்டும்.

(7) ஐந்தாம் உட்பிரிவிற்கிணங்க உரிமைக்கேரிக்கை களைச் செலுத்தியதன் பின்னர், ஒழிப்போன் -

(அ) பந்தி (ஆ) விற்கமைய, உட்பிரிவு (8) இற் கிணங்க ஆதனத்தின் தேறிப்பெறுகையின் மிகைசேர் வரும்படிகளுக்கு ஏற்புடமையாதல் வேண்டும்;

(ஆ) பின்வருமாறுள்ளவிடத்து, அவ்வாதனத்தை தேறிப்பெறுவதற்குப் பதிலாக பந்தி (8) இற் கிணங்க கம்பெனியின் மிகைசேர் தேறிப் பெறாத ஆதனத்தை வழங்கலாம் என்பதுடன் பந்தி (அ) இன்கீழான வரும்படிகளை பிரயோ கித்தலும்; வேண்டும்-

(i) கம்பனியின் அமைப்பகவிதி அதன் விநி யோகிப்பை அனுமதிக்கின்றவிடத்து; அல்லது

(ii) பின்வரும் இரண்டும் முதலாவதாகப் பெறப்படுகின்றவிடத்து -

(அ) அவ்வாதனம் விநியோகிக்கப்படல் வேண்டும் என்று விசேட தீர்மானத்தின் பங்குதாரர்களின் முடிபு; அத்துடன்

(ஆ) ஆதனத்தின் விநியோகத்துக்காக ஒழிப் போனின் விண்ணபத்தின் மீது நீதிமன்றத் தின் அனுமதி.

(8) மிகைசேர்வரும்படிகளின் ஏதேனும் விண்ணப்பம் அல்லது (7) ஆம் உட்பிரிவின் கீழான மிகைசேர் ஆதனத்திள் விநியோகம் என்பன -

(அ) கம்பெனியின் அமைப்பகவிதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டு முன்னுரிமை ஒழுங்கில் இருத் தல் வேண்டும்; அல்லது

(ஆ) அத்தகைய ஏற்பாடு இல்லாத பட்சத்தில் பங்கு தார்களுக்கு விகித அளவில் அமைந்திருத்தல் வேண்டும்.

### *ஈ - அறிக்கையிடுவதற்கான கடமைகள்*

பிழையான செயலை அறிக்கை யிடுவதற் கான ஒழிப் போனின் கடமை

**345.** (1) சம்பந்தப்பட்ட திறத்தவர் ஒருவர் பிழையாக விண்ணப்பித்துள்ளதாகவோ அல்லது பிழையாகத் தடுத்து வைத்துள்ளதாகவோ அல்லது கம்பெனியின் பணத்துக்கு அல்லது ஏனைய ஆதனத்துக்கு பொறுப்புடையவராகவோ அல்லது பொறுப்புக்கூற வேண்டியவராகவோ அல்லது கவனயீனத்துக்கு குற்றவாளியாக்கப்பட்டவராகவோ கட மையைச் செய்யாதவராகவோ அல்லது கம்பெனி தொடர் பிலான நம்பிக்கையை மீறியவராகவோ உள்ளார் என்று ஒழிப்போன் உள்ளவிடத்து நம்பினால் அல்லது நம்புவதற்கு நியாயமான ஏதுக்கள் உள்ளவிடத்து விடயத்தினை மிகவிரைவானளவு செயல்முறைக்குகந்தவகையி;ல் ஒழிப் போன் பதிவாளருக்கும் அதிகாரசபைக்கும் அறிக்கையிடுதல் வேண்டும்.

(2) ஒழிப்போன் உட்பிரிவு (1) இன்கீழ் அறிக்கை ஒன்றை செய்கின்ற சந்தர்ப்பத்தில் அவர் பதிவாளருக்கும் அதிகாரிக்கும் துணைவழங்குதல் வேண்டும் என்பதுடன்

பதிவாளரோ அதிகாரியோ காரியத்துக்குத் தக்கபடி பின் வரும் முறைகளில் நியாயமாக வேண்டுகோள் விடுக்கலாம்.

(அ) தகவல்களை வழங்குதல்;

(ஆ) ஆவணங்களுக்கான அணுக்கம்; அத்துடன்

(இ) ஆவணங்களைப் சோதனையிடுவதற்கும் பிரதி செய்வதற்குமான வசதிகள்.

(3) உட்பிரிவு (1) அல்லது உட்பிரிவு (2) என்பவற்றுக்கு இணங்கியொழுகவதற்குத் தவறுகின்றவரான ஒழிப்போ னொருவர் தவறொன்றைப் புரிகின்றார் -

தவறு புரியப் பட்டமையை அறிக்கை யிடுவதற்கு ஒழிப் போனின் கடமை

**346.** (1) பின்வருவனவற்றின் கீழ் கம்பெனி அல்லது எவரேனும் சம்பந்தப்பட்ட திறத்தவர் தவறொன்றைப் புரிந் துள்ளார் என ஒழிப்போன் நம்புமிடத்து அல்லது நம்புவதற்கு நியாயமான ஏதுக்கள் உள்ளவிடத்து, ஒழிப்போன் பதிவாளருக்கும் அதிகாரசபைக்கும் விடயத்தை செயல் முறைக்குகந்தளவு விரைவாக அறிக்கையிடுதல் வேண்டும்:-

(அ) இச்சட்டத்தின் கீழ்;

(ஆ) கம்பெனிகள் சட்டத்தின் கீழ் அல்லது

(இ) 2021 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலங்கைப் பிணைப்பொறுப்புக்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டம்.
இச்சட்டத்தின் கீழ்;

(2) பதிவாளர் மற்றும் அதிகாரசபை உட்பிரிவு (1) இன்கீழ் அறிக்கையிடப்பட்ட விடயத்தினை தோதான சட்ட வலு வுறுத்துகை அதிகாரசபைக்கு ஆற்றுப்படுத்துதல் வேண்டும்.

(3) ஒழிப்போன் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கரும மொன்றின் மீது அறிக்கையொன்றை ஆக்குகின்றவிடத் தானதும் அது (2) ஆம் உட்பிரிவின் கீழ் சட்டவலுவுறுத்துகை அதிகாரசபைக்கு அறிக்கையிடப்பட்டதுமான ஏதேனும் சந்தர்ப்பத்தில், ஒழிப்போன் பின்வரும் வகைமூலம் அதிகார சபை தேவைப்படுத்தக்கூடியதான அத்தகைய உதவியை அதிகார சபைக்கு வழங்குதல் வேண்டும்:-

(அ) தகவல்களை வழங்குதல்;

(ஆ) ஆவணங்களுக்கான அணுக்கம்; அத்துடன்

(இ) ஆவணங்களை சோதனையிடுதல் மற்றும் பிரதி எடுப்பதற்கான வசதிகள்.

(4) இப்பிரிவிலுள்ள எதுவும் வேறு ஏதேனும் சட்டவாக்கத்தின்கீழ் ஒழிப்போனொருவரின் மீது விதிக்கப்பட்ட ஏதேனும் கடமையை பாதித்தலோ அல்லது மட்டுப்படுத்துதலோ ஆகாது.

(5) ஓராம் உட்பிரிவுடன் அல்லது (3) ஆம் உட்பிரிவுடன் இணங்கியொழுகுவதற்கு தவறுகின்ற ஒழிப்போனொருவர் தவறொன்றைப் புரிகின்றார்.

கணக்குகளைத் தயாரிப்பதற்கு ஒழிப்போனின் கடமை

**347.** (1) விடயத்துக்கேற்ப, ஒழித்துக்கட்டுதலின் முடிவில் ஒழுப்போனொருவராகவுள்ள ஒழிப்போனொருவர் அல்லது ஆளொருவர் பின்வரும் காலப்பகுதிகள் ஒவ்வொன்றுக்கும் கணக்கொன்றைத் தயாரித்தல் வேண்டும்-

(அ) ஒழிப்போனின் நியமனத்தின் உடன் பின்னரான ஆறு மாதங்கள் எனும் காலப்பகுதி அல்லது ஒழிப்போன் தீர்மானிக்கக்கூடிய வாறான குறைந்த காலப்பகுதி;

(ஆ) ஒழிப்போன் பதவி வகிக்கின்றதான ஆறு மாதங்கள் எனும் காலப்பகுதியின் போதான ஒவ்வொரு அடுத்துறும் காலப்பகுதி; அத்துடன்

(இ) உட்பிரிவு (1)(ஆ) இல் குறிப்பீடு செய்யப்பட்ட வகையின் கடைசிக் காலப்பகுதி மற்றும் ஒழிப்போன் பதவியை வறிதாக்குகின்ற நாள் என்பவற்றுக்குமிடையிலான காலப்பகுதி.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட கேள்வியில் காலப்பகுதியின் முடிவின் பின்னரான இருபது வேலை நாட்களினுள் ஆள் -

(அ) விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில், (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு

செய்யப்பட்ட கணக்கை நன்கு ஒருவரை யொருவர் அறிந்த கடன் கொடுநர் மற்றும் உதவுதொகை செலுத்துநருக்கு அனுப்புதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) பதிவாளர் மற்றும் அதிகாரசபைக்கும் கணக்கின் பிரதி அனுப்புதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட கணக்கு விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலிருத்தல் வேண்டும் என்பதுடன்-

(அ) ஒழிப்போனின் பெறுகைகள் மற்றும் கொடுப்பனவுகளை ஒவ்வொரு காலப்பகுதிக்கும் காட்டுதல் வேண்டும்;

(ஆ) முதலாவது தவிர்ந்த ஒவ்வொரு காலப்பகுதிக்கும் ஒழிப்போன் நியமிக்கப்பட்டதான நாளிலிருந்து ஒழிப்போனின் பெறுகைகள் மற்றும் கொடுப்பனவுகளின் அதிகரிப்பு; அத்துடன்

(இ) உத்தியோகபூர்வ பெறுநர் ஒழிப்போனொருவராகவில்லாத விடத்தும் உட்பிரிவு (1) (இ) வில் குறிப்பீடு செய்யப்பட்ட கணக்கின் சந்தர்ப்பத்தில் தவிர, 30 ஆம் பிரிவுடன் இணங்கியொழுகுகின்ற ஒழிப்போனால் கையொப்பமிடப்பட்ட நாளதுவரையாக்கப்பட்ட வட்டி கூற்றிணைக் கொண்டிருத்தல்.

(4) பிரிவு 358(1) இன்கீழ் விசேட முகாமையாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளவிடத்து, ஆள் உட்பிரிவு (1) இல் குறிப்பீடு செய்யப்பட்ட நேரொத்த கணக்கு அல்லது கணக்குகளில் விசேட முகாமையாளரின் கணக்கு அல்லது கணக்குகளை உள்ளடக்குதல் வேண்டும்.

(5) இப்பிரிவுக்கிணங்க இணங்கியொழுகத் தவறுகின்ற ஆள் ஒவ்வொருவரும் தவறொன்றைப் புரிகின்றார்.

**348.** (1) இப்பிரிவானது ஒழித்துக்கட்டுதலின் முடிவில் ஒழிப்போனொருவரான ஆளொருவருக்கு ஏற்புடைமையாகின்றது.

இறுதி அறிக்கையையும் அதனுடன் தொடர்புடைய ஆவணங்களையும் அனுப்புவதற்கான ஒழிப்போனின் கடமை

(2) ஒழித்துக்கட்டுதல் தொடர்பில் ஆளொருவரின் ஏனைய எல்லாக் கடமைகளையும் நிறைவேற்றிய பின்னர் செயல்முறைக்குகந்ததான விரைவானளவும் ஒழித்துக் கட்டுதலின் முடிவின் பின்னரான இருபது வேலை நாட்களினுள் ஏதேனும் பட்சத்தில், ஆள் -

(அ) விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய தகவலைக் கொண்டுள்ள இறுதி அறிக்கையொன்றைத் தயாரித்தல் வேண்டும் என்பதுடன் -

(i) ஒழித்துக்கட்டுதலின் தொடக்கத்திலுள்ளவாறான கம்பெனியின் எல்லா ஆதனமும் விடுவிக்கப்பட்டு, விநியோகிக்கப்பட்டு அல்லது பொறுப்பு துறக்கப்பட்டு இருத்தல் பற்றிய கூற்று;

(ii) விடுவிப்பின் வரும்படிகள் செயல்முறைக்குகந்தளவுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது பற்றிய கூற்று; அத்துடன்

(iii) கம்பெனியொன்று கலைக்கப்படவுள்ளது பற்றிய கூற்று;

(ஆ) விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் பந்தி (அ) வில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆவணங்களை ஒருவரையொருவர் அறிந்த கடன்கொடுநர் மற்றும் உதவுதொகை செலுத்துநருக்கு அனுப்புதல் வேண்டும்; அத்துடன்

(இ) பதிவாளருக்கும் அதிகாரசபைக்கும் ஆவணங்களின் பிரதியொன்றை அனுப்புதல் வேண்டும்.

(3) இப்பிரிவுடன் இணங்கியொழுகத் தவறுகின்றவரான ஆள் ஒவ்வொருவரும் தவறொன்றைப் புரிகின்றார்.

### *உ - கலைத்தல்*

கலைத்தல்

**349.** (1) இரண்டாம் உட்பிரிவுக்கமைய, கம்பெனியொன்று உட்பிரிவு 348(2)(இ) என்பதுடன் இணங்கியொழுகியதன்

பின்னர் மூன்று மாதங்களின் முடிவில் கலைக்கப்படுதல் வேண்டும்.

(2) அக்கறைகொண்டுள்ள ஆளொருவரின் விண்ணப்பத் தின்மீது, நீதிமன்றம் கம்பெனியின் கலைப்புத் தேதியானது அவசியமானதான அத்தகைய நேரத்துக்கு பிற்போடப்படுதல் வேண்டுமென பணிக்கலாம்.

(3) இரண்டாம் உட்பிரிவின் கீழான கட்டளையொன்றை ஆக்குவதில், நீதிமன்றம் வேறு ஏதேனும் துணைநிலைக் கட்டளையை அவசியமானபோது ஆக்கலாம்.

(4) இரண்டாம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒவ்வொரு கட்டளையின் பிரதியொன்று கட்டளையை ஆக்கியதன் பின்னர் ஐந்து வேலைநாட்களினுள் நீதிமன்றத்தினால் பதிவாளருக்கும் அதிகாரசபைக்கும் அனுப்பப்படுதல் வேண்டும்.

### *ஊ - நானாவிதக் கடமைகள்*

பணம் தொடர்பில் ஒழிப்போனின் கடமை

**350.** (1) இரண்டாம் மற்றும் (3) ஆம் உட்பிரிகளுக்கமையவும் நீதிமன்றம் ஆக்கக்கூடிய ஏதேனும் கட்டளைக் கமையவும் ஒழிப்போனொருவர் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வங்கிகளில் அந்நோக்கத்துக்காக தாபிக்கப்பட்ட கணக்கில் அல்லது கணக்குகளில் ஒழிப்போனால் பெறப் பட்ட எல்லாப் பணங்களையும் உடனடியாக செலுத்துதல் வேண்டும்.

(2) ஒழிப்போனனொருவர் ஒழிப்போனின் தனிப்பட்ட வங்கிக் கணக்கில் பெறப்பட்ட ஏதேனும் பணத்தைச் செலுத்துதலாகாது.

(3) ஒழிபோனொருவர் அத்தகைய அளவுக்கும் ஏதேனுமிருப்பின் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதி நிபந்தனைகளுக்கமையவும் நிதிசார் உற்பத்திப் பொருட்களில் ஒழித்துக்கட்டுதலின் போது பெறப்பட்ட பணத்தை முதலீடு செய்யலாம்.

(4) இப்பிரிவுடன் இணங்கியொழுகுவதற்கு தவறுகின்ற ஒழிப்போனொருவர் தவறொன்றை புரிகின்றார்.

கணக்கீட்டுப் பதிவேடுகள் தொடர்பில் ஒழிப் போனின் கடமை

**351.** (1) ஒழிப்போனொருவர் ஒழித்துக்கட்டுதல் எனும் காலப்பகுதி தொடர்பில் சரியாக பதிவுசெய்யப்பட்டு விளக்கும் கணக்கீட்டுப் பதிவேடுகள், கம்பெனியின் ஆதனம் மற்றும் பொறுப்புமுயற்சி தொடர்பிலான எல்லாப் பற்றுச் சீட்டுகள், கொடுப்பனவுகள் மற்றும் எனைய கொடுக்கல் வாங்கல்கள் என்பவற்றைச் செய்தல் வேண்டும்.

(2) அக்கறைகொண்டுள்ள ஆளொருவரினால் நீதிமன்றத் துக்கான விண்ணப்பத்தின் மேல், நீதிமன்றம் விண்ணப்பக் காரர் அவசியமானதான அத்தகைய நியதி நிபந்தனைகளின் மீது (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட கணக் கீட்டுப்; பதிவேடுகளை சோதனை செய்யலாம் என கட்டளை யிடலாம்.

(3) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட கணக் கீட்டுப் பதிவேடுகள் ஒழித்துக்கட்டுதல் முடிவடைந்த பின்னர் ஆகக்குறைந்தது ஆறு ஆண்டுகளுக்காக ஒழிபோனொரு வரினால் தக்கவைக்கப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவுடன் இணங்கியொழுகுவதற்கு தவறுகின்ற ஒழிப்போனொருவர் இப்பிரிவின் கீழ் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிப்பதன் மீது ஒரு மில்லியன் மேல் ரூபாவுக்கு குறையாததும் இரண்டு மில்லியன் ஐநூறாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப் பணமொன்றுக்கும் ஐந்தாண்டுகளை விஞ்சாத காலத்துக் கான கடூழிய மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்.

(5) ஒழிப்போனொருவர் விதிக்கப்படக்கூடிய ஏதேனும் குற்றப்பணம் அல்லது மறியற்றண்டனைக்கு மேலதிகமாக (2) ஆம் உட்பிரிவு தொடர்பில் தவறொன்றைப் புரிகின்ற விடத்து, நீதிமன்றம் பின்வருவனவாகவிருக்ககூடியதான அதன்மீது ஈட்டப்படும் எவையேனும் நலன்கள் அல்லது இலாபங்களுடன் சேர்த்து (2) ஆம் உட்பிரிவினை மீறுகின்ற வகையில் செலுத்தப்பட்ட பணத்தை அறவிடுதல் வேண்டும் -

(அ) குற்றப்பணமொன்றாக அதே முறையில் அற விடப்படக்கூடிய; அத்துடன்

(ஆ) நீதிமன்றம் வேறு வகையில் கட்டளையிட்டா லொழிய, (1) ஆம் உட்பிரிவின் கீழ் தாபிக்கப் பட்ட கணக்கிற்கு செலுத்தப்படுதல் வேண்டும்.

### *ஏ – தற்காலிக ஒழித்துக்கட்டப்படலிலுள்ள கடமைகள்*

**352.** தற்காலிக ஒழிப்போன் ஒருவர் பிரிவு 304 இன்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றினால் நியமிக்கப்படுமிடத்து, ஒழிப்போனுக்கான குறிப்பீடுகள் தற்காலிக ஒழிப்போனுக் காகவிருப்பின்; இவ்வத்தியாயம் தற்காலிக ஒழிப்போ னுக்கும் தற்காலிக ஒழித்துக்கட்டுதலுக்கும் ஏற்புடையதா கின்றதான அளவு ஒழுங்குவரிசையில் குறித்துரைக்கப்படக் கூடியவாறாகவிருத்தல் வேண்டும்.

தற்காலிக ஒழித்துக் கட்ட லிலுள்ள இவ்வத்தி யாயத்தின் ஏற்புடமை

அத்தியாயம் 7

**ஒழிப்போனின் ஊதியம்**

**353.** (1) பிரிவு 361(1)(ஆ) விற்கமைய, உத்தியோபூர்வ பெறுநர் தவிர்ந்த ஒழிப்போனொருவர் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அடிப்படையில் மற்றும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மணித்தியாலங்களில் மற்றும் வீதசார வீதங்கள் மற்றும் நிலையான மட்டங்கள் மீது ஊதியத்தை பெறுவதற்கு பின்வருமாறு உரித்துடையவராதல் வேண்டும் -

உத்தியோக பூர்வ பெறுநர் தவிர்ந்த ஒழிப் போனின் ஊதியம்

(அ) பங்குதாரர்களினால் உடன்படக்கூடியவாறா னதும் விதித்துரைக்கப்படக்கூடியவாறானது மான அத்தகைய முறையில் பிரிவு 302 கம்பெனிக்கு ஏற்புடையதாகுமிடத்து;

(ஆ) கடன்கொடுநர்களினால் உடன்படக்கூடியவா றான மற்றும் விதித்துரைக்கப்படக்கூடிய வாறான அத்தகைய முறையில் கம்பெனிக்கு பிரிவு 302 ஏற்புடமையாகாதவிடத்து; அல்லது

(இ) இவ்வுட்பிரிவின் முற்போந்த பந்திகளின் கீழ் பங்குதாரர்களினால் அல்லது கடன்கொடுநர் களினால் உடன்படிக்கை இல்லாதபோது நீதி மன்றத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவா றான –

(2) உத்தியோகபூர்வ பெறுநர் தவிர்ந்த ஒழிப்போனொரு வர், ஊதியத்துக்கு மேலதிகமாக, தக்கவைக்கப்படுவதற்கு பிரிவு 351 (3) இன்கீழ் தேவைப்பட்டவாறான அத்தகைய பதிவேடுகளின் களஞ்சியப்படுத்துகைக்கான நியாயமான செலவுகளுக்கு உரித்துடையவராக்கப்படுதல் வேண்டும்.

## அத்தியாயம் 8

### ஒழிப்போன், தற்காலிக ஒழிப்போன் மற்றும் விசேட முகாமையாளரின் பொறுப்பு

குறைபாடுள்ள பட்சத்தில் நிவாரணம்

**354.** (1) நீதிமன்றம் பின்வருமாறு நீதிமன்றம் திருப்திப் படுமிடத்து, விடயத்துக்கேற்ப ஒழித்துக்கட்டுதல் அல்லது தற்காலிக ஒழித்துக்கட்டுதலின் போது உறப்பட்ட பொறுப் பிலிருந்து ஒழிப்போனொருவராக தற்காலிக ஒழிப்போ னொருவராக அல்லது விசேட முகாமையாளரொருவராக செயலாற்றுகின்றவரான ஆளொருவரை விடுவிக்கலாம் -

(அ) விடயத்துக்கேற்ப, ஒழிப்போனை, தற்காலிக ஒழிப்போனை அல்லுத விசேட முகாமை யாளரை நியமித்தல் பற்றிய தீர்மானத்தில் அல்லது கட்டளையில் குறைபாடொன்றின் காரணமாக மட்டும் உறப்பட்ட பொறுப்பு என; அத்துடன்

(ஆ) விடயத்துக்கேற்ப, ஒழிப்போன், தற்காலிக ஒழிப்போன் அல்லது விசேட முகாமையாளர் நேர்மையாகவும் நியாயமாகவும் செயலாற்றி யுள்ளார் எனவும் சூழ்நிலைகளில்; பொறுப் பிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளார் எனவும்.

(2) நீதிமன்றம் அவசியமானவாறான அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கமைய (1) ஆம் உட் பிரிவின்கீழ் அதன் தத்துவங்களைப் பிரயோகிக்கலாம்.

## அத்தியாயம் 9

### ஒழித்துக்கட்டுதல் – நானாவிதம்

ஒழிப் போனுக்கு நிருவாகி யினால் அல்லது பெறுநரினால் தகவல் மற்றும் உதவி வழங்குதல்

**355.** (1) பெறுபேற்றுக் கூட்டமொன்றில் தீர்மானத்தின் மூலம் கடன்கொடுர்கள் பிரிவு 214(2) (ஆ) வின்கீழ் ஒழிப் போனொருவரை நியமிக்குமிடத்து, அல்லது நிருவாகத் திலுள்ள கம்பெனியொன்றின் ஒழிப்போனொருவர் வேறு வகையில் நியமிக்குமிடத்து, மற்றும் பிரிவு 438 இற்கமைய, (நியமிக்கப்பட்ட ஆள் ஒழிப்போனாகவிராதுவிடின்) நிருவாகத்தின் முடிவில் நிருவாகியுள்ளவராக ஆள் -

(அ) உடனடியாக கம்பெனியின் அலுவல்கள், தொழில் மற்றும் ஆதனத்தின் கட்டுப் பாட்டில், ஒழிப்போனை இட்டுச்செல்வதற்கு எல்லா அவசியமானவைகளைச் செய்தல் வேண்டும்;

(ஆ) செயல்முறைக்குகந்த விரைவானவளவு –

(i) பிரிவு 245 இன்கீழ் நிருவாகியினால் செய்யப்பட்ட எல்லாக் கணக்கீட்டு பதிவேடுகள் பற்றிய பிரதியை ஒழிப் போனுக்கு வழங்குல் வேண்டும்; அத்துடன்;

(ii) நிருவாகம் தொடர்பில் நிருவாகியின் உடமையில் அல்லது கட்டுக்காப்பில் அல்லது கட்டுப்பாட்டின் கீழுள்ள வேறு எவையேனும் ஆவுணங்களை ஒழிப் போனுக்கு ஒப்படைத்தல்;

(2) பிரிவுகள் 322 மற்றும் 438 என்பவற்றுக்கமைய, பெறுநராண்மையிலுள்ள கம்பெனியொன்றின் ஒழித்துக் கட்டுதல் தொடங்கியுள்ளவிடத்து, பெறுநர் -

(அ) உடனடியாக கம்பெனியின் அலுவலகங்கள், தொழில் மற்றும் ஆதனத்தின் கட்டுப் பாட்டில் ஒழிப்போனை இடுவதற்கு எல்லா அவசியமானவற்றையும் செய்தல் வேண்டும்;

(ஆ) செயல் முறைக்குகந்த விரைவானளவு –

(i) பிரிவு 388 இன்கீழ் பெறுநரினால் செய்யப்பட்ட எல்லாக் கணக்கீட்டு பதி வேடுகளின் பிரதியொன்றுடன் ஒழிப் போனுக்கு வழங்குதல் வேண்டும்; அத்துடன்;

(ii) பெறுநராண்மை தொடர்பில் பெறு நரின் உடமையில் அல்லது கட்டுக் காப்பில் அல்லது கட்டுப்பாட்டின்கீழ் வேறு எவையேனும் ஆவணங்களை

ஒழிப்போனுக்கு ஒப்படைத்தல் வேண்டும்.

ஒழிப்போன் பதவியிலுள்ள வெற்றிடம்

**356.** (1) ஒழிப்போன் வெற்றிடம் ஆள் பின்வருமாறு செய்யின், வெற்றிடமாக வருதல் வேண்டும் -

(அ) இரண்டாம் உட்பிரிவின்கீழ் பதவியை இராஜினாமாச் செய்தல்;

(ஆ) இறந்திருப்பின்;

(இ) நீதிமன்றினால் அலுவலகத்திலிருந்து அகற்றப்பட்டிருப்பின்;

(ஈ) கடனிறுக்க வகையற்றவரான தொழிலரொருவராக அவரின் பதிவு இடைநிறுத்தப்பட்டு அல்லது இரத்துச் செய்யப்பட்டடிருப்பின்; அல்லது

(உ) பிரிவு 348 இன்கீழ் இறுதி அறிக்கையொன்றை அனுப்பியிருப்பின்

(2) ஒழிப்போனொருவர் அவரின் உட்கருத்து பின்வருமாறுள்ளபோது, விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் ஐந்து வேலை நாட்களினுள் எழுத்திலான அறிவித்தலை வழங்குவதன்மூலம் பதவியிலிருந்து இராஜினாமாச் செய்யலாம் -

(அ) ஒழிப்பொன் நியமிப்பாளர் மற்றும் நியமிப்பாளர் நீதிமன்றமாகவுள்ளவிடத்து, நியமனம் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் மீதான ஆள்; அத்துடன்

(ஆ) கடன்கொடுநர்கள்.

(3) ஒழிப்போனொருவரின் நியமிப்பாளர் பின்வருவனவற்றுக்கமைய, ஒழிப்போனின் பதவியிலுள்ள வெற்றிடத்தை நிரப்புவதற்கு ஒழிப்போனொருவரை மாற்றீட்டு ஒழிப்போனொருவரை நியமிக்கலாம் -

(அ) நீதிமன்றத்தின் ஏதேனும் கட்டளை; அத்துடன்

(ஆ) ஒழிப்போனின் நியமனத்துக்கு ஏற்புடையற்பாலதான இப்பாகத்தின் கீழான தேவைப்

பாடுகள்.

(4) ஐந்தாம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆளொருவரின் விண்ணப்பத்தின் மீது, நீதிமன்றம் ஒழிப் போனின் பதவி வெற்றிடமாகவுள்ளது என்ற ஏதேனும் காரணமாகவுள்ளவிடத்து கட்டளையொன்றை ஆக்கலாம் -

(அ) பொருத்தமான மாற்றீட்டு ஒழிப்போனொருவரை நியமித்தல்; அல்லது

(ஆ) பொருத்தமான மாற்றீடு ஒழிப்போனொருவரின் நியமனத்துக்கான செயல்முறையொன்றை குறித்துரைத்தல்.

(5) பின்வரும் ஆட்களில் எவரேனுமாள் (4) ஆம் உட்பிரிவின்கீழ் நீதிமன்றத்துக்கு விண்ணப்பமொன்றைச் செய்யலாம் -

(அ) கடன் கொடுநர்;

(ஆ) உதவுதொகை செலுத்துநர்;

(இ) கம்பெனியில் அக்கறையுடனான வேறு எவரேனும் ஆள்;

(ஈ) பதிவாளர், அல்லது

(உ) அதிகாரசபை.

(6) உட்பிரிவு (1)(உ) வின் கீழுள்ளவை தவிர்ந்த ஒழிப்போனின் பதவியில் வெற்றிடமொன்று ஏற்படுமிடத்து, வெற்றிடமொன்றின் எழுத்திலான அறிவித்தல் செயல்முறைக்குகந்த விரைவானளவு பதவி வறிதாக்கின் ஆளினால் அல்லது அவ்வாள் அவரது சட்ட பிரதி நிதித்துவத்தினால் செயலாற்றுவதற்கு இயலாதாகவிருப்பின், பதிவாளருக்கும் அதிகாரசபைக்கும் அளிக்கப்படுதல் வேண்டும்.

(7) உட்பிரிவு (1)(உ) வின் கீழ் தவிர்ந்த ஒழிப்போனின் பதவியை வறிதாக்கும் ஆளொருவர், நடைமுறைக்குகந்தாகவுள்ளவிடத்து, அத்தகைய தகவலை வழங்குதல் வேண்டுமென்பதுடன் அடுத்துறுபவர் நியாயமாக கோரக்கூடியதான ஆளின் வழியுரிமையாளருக்கு அத்தகைய உதவியை வழங்குதலும் வேண்டும்.

(8) ஒழிப்போனின் பதவியிலுள்ள வெற்றிட மொன்றை நிரப்புவதற்கு நியமிக்கப்பட்ட ஆளொருவரின் விண்ணப்பத்தின் மீது, நீதிமன்றம் ஒழிப்போனின் பணிகள், தத்துவங்கள் மற்றும் கடமைகளை நிறைவேற்றுதல் பிரயோகித்தல் மற்றும் புரிதல் என்பவற்றை வசதிபடுத்தி அதற்கு அவசியமென கருதப்படும் ஏதேனும் கட்டளையை ஆக்கலாம்.

(9) ஒன்றில் உட்பிரிவுகள் (6) மற்றும் (7) என்பன வற்றுடன் இணங்கியொழுகுவதற்கு தவறுகின்றவரான ஆள் ஒவ்வொருவரும் இவ்வுட்பிரிவின் கீழ் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு குற்றத்தீர்ப்பளிப்பதன் மீது ஆளாதலும் வேண்டும்.

(10) எட்டாம் உட்பிரிவின் நியதிகளின்படி ஆக்கப் பட்ட ஏதேனும் நீதிமன்றக் கட்டளையுடன் இணங்கி யொழுகுவதற்கு தவறுகின்றவரான ஆள் ஒவ்வொருவரும் இவ்வுட்பிரிவின் கீழ் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிப்புடன் இருநூற்றி ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

ஒழிப்போன் அல்லது தற்காலிக ஒழிப் போனின் விடுவிப்பு

**357.** (1) ஆளொருவர் ஒழிப்போனாக அல்லது தற்காலிக ஒழிப்போனாகவிருப்பதற்கு இல்லாதொழியுமிடத்து, பின் வருமாறு உள்ளவிடத்து ஆள் விடுவிப்புச் செய்யப்படுதல் வேண்டும் -

(அ) பிரிவு 302 கம்பெனிக்கு ஏற்புடைமையாகு மிடத்தான சந்தர்ப்பத்தில் -

(i) நாடப்பட்ட விடுவிப்பு மற்றும் அதனை பங்குதாரர்கள் எவ்வாறு ஆட்சேபித் தனர்; என்பது பற்றி விதித்துரைக்கப் படக்கூடியவாறான அத்தகைய முறை யிலும் அத்தகைய ஆவணங்களை இணைத்தல் பற்றி ஒவ்வொரு பங்கு தாரருக்கும் அறிவித்தல் வழங்கப்பட் டிருத்தல்; அத்துடன்

(ii) பங்குதாரர்கள் அத்தகைய முறையிலும்

விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதியினுள்ளும் ஆட்சேபிக்கக்கூடாது; அல்லது

(ஆ) கம்பெனிக்கு பிரிவு 302 ஏற்புடைமையாகாத விடத்தான சந்தர்ப்பத்தில்-

(i) ஒவ்வொரு அறிந்த கடன்கொடுநருக்கும் அத்தகைய முறையிலும் விடுவிப்பு நாடப்பட்ட மற்றும் அதற்கு கடன் கொடுநர்கள் எவ்வாறு ஆட்சேபிக்க முடியும் என்பதனை விளக்குகின்றமையை விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஆவணங்களை இணைத்தல் பற்றிய அறிவித்தலை வழங்குதல்; அத்துடன்

(ii) கடன்கொடுநர்கள் அத்தகைய முறையிலும் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதியினுள்ளும் ஆட்சேபித்தலாகாது; அல்லது

(இ) விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நடவடிக்கைமுறை பின்பற்றப்பட்ட பின் நீதிமன்றம் அனுமதி வழங்கும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான விடுவிப்பொன்று விடயத்துக்கேற்ப, கம்பெனியின் ஒழித்துக்கட்டுதலில் அல்லது தற்காலிக ஒழித்துக்கட்டுதலின் ஆளின் ஏதேனும் செயல், செய்யாமை அல்லது முடிபு தொடர்பில் பிரிவு 419 இன்கீழ் பொறுப்பு தவிர, எல்லா பொறுப்பிலிருந்தும் ஆனைவிடுவித்தல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆளொருவர் விடுவிப்பொன்றை பெற்றுக்கொண்டுள்ளவிடத்து, ஆள் பத்து வேலை நாட்களினுள் அதிகாரசபைக்கு விடுவிப்பு பற்றிய எழுத்திலான அறிவத்தலைக் கொடுத்தல் வேண்டும்.

விசேட முகாமையாளரின் நியமனம்

**358.** (1) ஒழிப்போன் அல்லது தற்காலிக ஒழிப்போனின் விண்ணப்பத்தின் மேல், நீதிமன்றம் (2) ஆம் உட்பிரிவிலுள்ள நிபந்தனையை ஈடுசெய்துள்ளது என திருப்திப்படுமிடத்து, நீதிமன்றம் விசேட முகாமையாளர் ஒருவரை

நியமிக்கின்ற கட்டளையொன்றை ஆக்குதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட நிபந்தனை கம்பெனியின் அலுவல்கள், தொழில் அல்லது ஆதனம் அல்லது பொதுவான கடன் கொடுநர்களின் நலன்கள் என்பவற்றின் தன்மையானது விசேட முகாமை யாளரொருவரின் நியமனத்தை தேவைப்படுத்துதல் என்பதாகும்.

(3) இரண்டாம் உட்பிரிவிலுள்ள நிபந்தனை எய்தப் பட்டதா இல்லையா என்பதனை தீர்மானிப்பதில், நீதி மன்றம் கம்பெனியின் அலுவல்கள், தொழில் அல்லது ஆதனத்தின் தனிப்பட்ட முழுமையான கட்டுப்பாட்டின் மீது நியாயமான மட்டமொன்றை விண்ணப்பக்காரர் பிரயோ கிக்கமுடியுமா அல்லது இல்லையா என்பது பற்றி கருத்தில் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின் கீழான கட்டளையொன்றை ஆக்குதல், நீதிமன்றம் அவசியமான வேறு ஏதேனும் துணைநிலைக் கட்டளையை ஆக்கலாம்.

(5) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளை யொன்றினால் நியமிக்கப்பட்ட விசேட முகாமையாளர் ஒருவர் -

(அ) பின்வருமாறு இருக்கக்கூடியதான கட்டளை யில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத் தகைய நேரத்தின் போது செயலாற்றுதல் வேண்டும்-

(i) நிரந்தர காலப்பகுதியொன்றுக்கு;

(ii) குறித்துரைக்கப்பட்ட நிகழ்வு இடம் பெறும் வரை; அல்லது

(iii) நீதிமன்றம் மேலதிகக் கட்டளை யொன்றை ஆக்கும்வரை.

(ஆ) கட்டளையில் குறித்துரைக்கப்படக்கூடியவா றான அத்தகைய தத்துவுங்கள் மற்றும் கடமைகளைக் கொண்டிருத்தல்;

(இ) விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய

கணக்குகளைத் தயாரித்தல்;

(ஈ) அத்தகைய முறையிலும் விதித்துரைக்கப் படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதி யினுள்ளும் அத்தகைய ஆட்களுக்கு பந்தி (இ) வில் குறிப்பீடு செய்யப்பட்ட கணக்கு களை அனுப்புதல்; அத்துடன்

(உ) நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்படக்கூடிய வாறான அத்தகைய ஊதியத்தை பெற்றுக் கொள்வதற்கு உரித்துடையவராதல்.

(6) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளை யொன்றினால் நியமிக்கப்படும் விசேட முகாமையாள ரொருவருக்கு நீதிமன்றத்தின் அலுவலரொருவராகவிருத் தல் வேண்டும்.

(7) விசேட முகாமையாளரொருவரின் நியமனம் நிய மிக்கப்பட வேண்டிய ஆள் விதித்துரைக்கப்பட வேண்டிய வாறான அத்தகைய தேவைப்பாடுகளுடன் இணங்கி யொழுகுகின்றதான நியமனத்துக்கான விண்ணப்பக்காரர் பிணைப்பொறுப்பை வழங்கும்வரை பயனுறுதலாகாது.

(8) விசேட முகாமையாளர் ஒருவர் செயல்முறைக் குகந்தளவு விரைவாகவும் மற்றும் நியமிக்கப்பட்டதன் பின்னரான ஐந்து வேலைநாட்கள் எனும் பட்சத்திலும், அத்தகைய ஆட்களுக்கும் விதித்துரைக்கப்படக்கூடிய வாறான அத்தகைய முறையிலும் நியமனம் பற்றிய அறிவித் தலை வழங்குதல் வேண்டும்.

(9) விசேட முகாமையாளரொருவரின் நியமனம் பின்வருவோருக்கு விண்ணப்பத்தின் மீது நீதிமக்றத்தினால் முடிவுறுத்தப்படலாம்.

(அ) விசேட முகாமையாளர்;

(ஆ) தற்காலிக ஒழிப்போனொருவர்; அல்லது

(இ) ஒழிப்போனொருவர்.

(10) ஒழிப்போனொருவர் அல்லது தற்காலிக ஒழிப் போனொருவர்; பதவிவகிக்கின்றாரோ இவர்களுள் எவர் ஃஅவர், பின்வருமாறுள்ளவிடத்து, விசேட முகாமையாள ரொருவரின் நியமனத்தை முடிவுறுத்துகின்ற கட்டளை யொன்றுக்காக நீதிமன்றத்துக்கு விண்ணப்பித்தல் வேண்டும் -

(அ) பிரிவு 302 கம்பெனிக்கு ஏற்புடமையாகு மிடத்து மற்றும் பங்குதாரர்கள் விசேட தீர்மானம் மூலம் நியமனமானது முடிவுறுத் தப்படுதல் வேண்டும் என முடிபுசெய்யு மிடத்து; அல்லது

(ஆ) பிரிவு 302 கம்பெனிக்கு ஏற்புடையமை யாகின்றவிடத்து மற்றும் கடன்கொடுநர்கள் தீர்மானம் மூலம் நியமனமானது முடிவுறுத் தப்படுதல் வேண்டுமென முடிபுசெய்யு மிடத்து

(11) ஒன்பதாம் உட்பிரிவின் கீழான விண்ணப்ப மொன்றின் மீது நீதிமன்றம் -

(அ) விசேட முகாமையாளரின் நியமனத்தை முடி வுறுத்துகின்ற கட்டளை ஒன்றை ஆக்கலாம்; அத்துடன்

(ஆ) அவசியமானவாறான அத்தகைய கட்டளை யொன்றை ஆக்குவதில் வேறு ஏதேனும் துணைநிலைக் கட்டளையை ஆக்கலாம்.

(12) விசேட முகாமையாளரொருவரின் நியமனத் தின் பின்னரான ஐந்து வேலைநாட்களினுள் விசேட முகாமையாளர் விதந்துரைக்கப்படக்கூடியவாறான அத்த கைய ஆட்களுக்கும் அத்தகைய முறைமையுடன் முடி வுறுத்தல்; பற்றி அறிவித்தல் வழங்குதல் வேண்டும்.

**359.** (1) கம்பெனியொன்றின் ஒழித்துக்கட்டுதலின் போது - முத்திரைத் தீர்வை விலக்களிப்பு

(அ) தனியே அசையாத ஆதனம் தொடர்பிலான அல்லது ஏதேனும் அசையும் அல்லது அசையாத ஆதனம் என்பவற்றிலுள்ள ஏதேனும் மரணாதனம், உரிமை அல்லது நலன் என்பவற்றுக்கான உறுதி ஒவ்வொன்றும் உறுதி நிறைவேற்றிய முன்னர் மற்றும் பின்னர் ஆகிய இரண்டிலும் கம்பெனியின் ஆதனத்தின் பாகத்தை உருவாக்குகின்றது; அத்துடன்

(ஆ) அற்றோணித் தத்துவம் பதிலிப்பத்திரம், எழுத்தாணை, கட்டளை, சான்றிதழ், சத்தியக் கடுதாசி, முறி அல்லது வேறு எழுத்திலான சாதனம் ஒவ்வொன்றுக்கும் -

(i) கம்பெனியின் ஆதனத்துக்கு;

(ii) ஒழித்துக்கட்டுதலின் பாகமானது ஏதேனும் சட்ட செயல்முறை அல்லது வேறு சட்ட வழக்கு நடவடிக்கைக்கு,

மட்டுமே தனியே தொடர்புடையதாகும் என்பதுடன் முத்திரைத்தீர்வையிலிருந்து விலக்களிப்புச் செய்தல் வேண்டும்.

(2) அவை அனைத்தும் முத்திரை வரியிலிருந்து விலக்களிப்புச் செய்யப்படல் வேண்டும்.

## அத்தியாயம் 10

### ஒழித்துக்கட்டுதல் மற்றும் தற்காலிக ஒழித்துக்கட்டுதலில் நீதிமன்றத்தின் தத்துவங்கள்

ஒழிப்போன் அல்லது தற்கால ஒழிப் போனினால் செய்யப் படும் பணிப் புகளுக்கான விண்ணப்பம்

**360.** (1) ஒழிப்போன் ஒருவர் அல்லது தற்காலிக ஒழிப் போன் ஒருவர் அல்லது அதிகாரி ஒருவரின் விண்ணப் பத்தின் மீது, நீதிமன்றமானது -

(அ) விடயத்துக்கேற்ப, ஒழிப்போன் அல்லது, தற்காலிக ஒழிப்போனின் எவையேனும் பணிகள், தத்துவங்கள் மற்றும் கடமைகளை நிறைவேற்றுதல், பிரயோகித்தல் அல்லது புரிதல் என்பவற்றுடன் தொடர்பில் எழும் ஏதேனும் விடயம் தொடர்பிலான பணிப்புகளை வழங்கலாம்;

(ஆ) அத்தகைய எவையேனும் பணிப்புகளை இல்லாதொழிக்கலாம் அல்லது வேறுபடுத் தலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் அளிக்கப்பட்ட தத்துவங்கள்

(அ) வேறு எவையேனும் தத்துவங்களுக்கு மேலதிகமானதாக உள்ள போது, நீதிமன்றம் பிரயோகிக்கலாம்; அத்துடன்

(ஆ) ஒழிப்போன் அல்லது தற்காலிக ஒழிப்போன் விடயத்துக்கேற்ப, விண்ணப்பம் செய்யப்பட்ட போது அத்தகையதாக செயலாற்றுவதற்கு ஒழிக்கப்பட்டிருப்பின், பிரயோகிக்கப்படலாம்.

(3) விடயத்துக்கேற்ப ஒழிப்போன் அல்லது தற்காலிக ஒழிப்போன் (1) ஆம் உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட பணிப்புடன் இணங்கியொழுகுமாறு செயலாற்றியுள்ளார் என விடயத்துக்கேற்ப, ஒழிப்போன் அல்லது தற்காலிக ஒழிப்போனின் ஏதேனும் செயல், செய்யாமை அல்லது முடிபு தொடர்பில் ஒழிப்போன் அல்லது தற்காலிக ஒழிப்போனுக்கு எதிரான உரிமைகோரிக்கைக்கான பாதுகாப்பொன்றாகும்.

ஒழிப்போன்கள் மற்றும் தற்காலிக ஒழிப்போன்களின் நீதிமன்ற மேற்பார்வையும் ஒழிப்போனின் ஊதியம் அல்லது நியமனம் தொடர்பிலான கட்டளையும்

**361.** (1) இரண்டாம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆளொருவரின் விண்ணப்பத்தின் மீது, நீதிமன்றம் -

(அ) ஒழிப்போன் ஒருவரது அல்லது தற்காலிக ஒழிப்போன் ஒருவரது செயல் ஒன்றை அல்லது முடிபு ஒன்றை உறுதிப்படுத்தலாம், மீள்திருப்பலாம், அல்லது மாற்றியமைக்கலாம்.

(ஆ) பிரிவு 353 இன்கீழ்; உத்தியோகபூர்வ பெறுநரின் ஊதியம் தீர்மானிக்கப்பட்டிருந்தால் தவிர, ஒழிப்போனின் ஊதியத்துக்கான ஏதேனும் காலப்பகுதிக்கு அல்லது செயற்

பாடு தொடர்பில் அத்தகைய ஊதியத்தை சூழ்நிலைகளில் நியாயமான மட்டத்தில் நிர்ணயிக்கலாம்.

(இ) ஒழிப்போன் ஒருவர் செல்லுபடியான முறையில் நியமிக்கப்பட்டுள்ளாரா அல்லது இல்லையா என்பதை வெளிப்படுத்தலாம்.

(2) பின்வரும் ஆட்களுள் எவரும் உட்பிரிவு (1) இன்கீழ் நீதிமன்றத்துக்கு விண்ணப்பம் ஒன்றை செய்யலாம்.

(அ) ஒழிப்போன் அல்லது ஒழிப்போனாக நியமிக்கப்படவுள்ள ஆள் ஒருவர்;

(ஆ) தற்காலிக ஒழிப்போன் ஒருவர்;

(இ) நிறைவேற்றுநர் ஒருவர் அல்லது உறுதி நிறைவேற்றுநர் ஒருவர்;

(ஈ) பெறுநர் ஒருவர்;

(உ) கடன்கொடுநர் ஒருவர்;

(ஊ) உதவுதொகை செலுத்துநர் ஒருவர்;

(எ) கம்பெனியில்; அக்கறை கொண்டுள்ள வேறு எவரேனும் ஆள்;

(ஏ) உட்பிரிவு (1)(இ) இற்கு தொடர்பில, பதிவாளர்; அல்லது

(ஐ) அதிகாரி.

(3) ஓராம் உட்பிரிவின் கீழ் அளிக்கப்பட்ட தத்துவங்கள் விண்ணப்பம் செய்யப்படும் போது, விடயத்துக் கேற்ப, ஒழிப்போனாக அல்லது தற்காலிக ஒழிப்போனாக செயலாற்றுவதற்கு அவர் இல்லாதொழிந்திருப்பினுஞ்சரி அல்லவாயினுஞ்சரி பிரயோகிக்கப்படலாம்.

ஒழித்துக் கட்டுதல் மட்டும் தற்காலிக ஒழித்துக் கட்டுதலிலுள்ள நீதிமன்றத்தின் பொதுவான தத்துவங்கள்

**362.** (1) இரண்டாம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆளொருவரின் விண்ணப்பத்தின் மீது நீதிமன்றம் குறிப்பிட்ட கம்பெனியொன்று தொடர்பில் ஏற்புடமைதாக்கப்படுகின்ற இப்பாகத்தின் ஏற்பாடுகள் பற்றிய முறை தொடர்பில் அது அவசியமென கருதக்கூடிய ஏதேனும் கட்டளையை ஆக்கலாம்.

(2) பின்வரும் ஆட்களுள் எவரும் உட்பிரிவு (1) இன்கீழ் நீதிமன்றில் விண்ணப்பம் ஒன்றை செய்யலாம்.

(அ) ஒழிப்போன் அல்லது ஒழிப்போனுக்கான நியமிக்கப்படவுள்ள ஆள் ஒருவர்;

(ஆ) தற்காலிக ஒழிப்போன் ஒருவர்;

(இ) விசேட முகாமையாளர் ஒருவர்;

(ஈ) நிருவாகி ஒருவர் அல்லது உறுதி நிருவாகி; ஒருவர்;

(உ) பெறுகையாளர் ஒருவர்;

(ஊ) கடன்கொடுநர் ஒருவர்;

(எ) உதவுதொகை செலுத்துநர் ஒருவர்;

(ஏ) கம்பெனியில்; அக்கறை கொண்டுள்ள வேறு எவரேனும் ஆள்;

(ஐ) பதிவாளர்;

(ஒ) அதிகாரி; அல்லது

(ஓ) வேறு எவரேனும் அக்கறை கொண்டுள்ள ஆள் நீதிமன்றத்தின் அனுமதியுடன்.

(3) (அ) இப்பாகத்தின் ஏற்பாடுகள் துர்ப்பிரயோகம் செய்யப்படுகின்ற போது;

(ஆ) நிருவாகி ஒருவரை நியமனம் செய்வதன் காரணமாக பிரிவு 188(4) இன்கீழ்; ஒழித்துக் கட்டுதல் இடைநிறுத்தப்படின் (கம்பெனி

யின் உறுதி ஒழுங்கேற்பாடுகள் செய்யப் பட்டு அல்லது செய்யப்படாது) நிருவாகம் நிறைவடைந்து அல்லது நிறைவடைய ஏதுவாகுவதுடன் கம்பெனியும் கடனிறுக்க முடியாத நிலைக்குள்ளாகாது அல்லது கடனிறுக்க முடியாத நிலைக்குத் தள்ளப் படாது, அல்லது

(இ) வேறு சில காரணத்துக்காக ஒழித்துக்கட்டு தல் முடிவடைவது நியாயமானதும் ஒப்புரவு மிக்கதுமாகும்.

(4) உட்பிரிவு (3) இன்கீழ் ஆக்கப்படும் ஒவ்வொரு கட்டளையின் பிரதியும் அத்தகைய கட்டளை ஆக்கப்பட்ட பின்னரான ஐந்து வேலை நாட்களுக்குள் நீதிமன்றத்தினால் பதிவாளருக்கும் அதிகாரசபைக்கும் அனுப்பப்படுதல் வேண்டும்.

(5) உட்பிரிவு (1) இன்கீழ் கட்டளை ஒன்றை ஆக்குகையில், நீதிமன்றம் அவசியம் எனின் -

(அ) ஏதேனும் நியதியையோ அல்லது நிபந்த னையையோ விதிக்கலாம்; அத்துடன்

(ஆ) வேறு ஏதேனும் துணைக் கட்டளையை ஆக்கலாம்.

ஒழிப்போனுக்கு அல்லது தற்காலிக ஒழிப் போனின் கடமைகளை வலியுறுத்து வதற்கான கட்டளை

**363.** (1) இப்பிரிவில் ஒழிப்போன் அல்லது தற்காலிக ஒழிப்போன் தொடர்பிலான "அமைந்தொழுகுவதற்கு தவறுதல்" என்பது ஒழிப்போனினால் அல்லது தற்காலிக ஒழிப்போனினால் காரியத்துக்குத் தக்கபடி மேற்கொள்ளப் படும் (செயல் மூலம் அல்லது செய்யாமை) ஒரு தவறுகை எனப் பொருள்படும்.

(அ) இச்சட்டத்தின் கீழ் எழுகின்ற கடமை ஒன்றின் காரணமாக அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ்;

(ஆ) இப்பிரிவின் கீழ் அமைந்தொழுகுவதற்கு ஆக்கப்பட்ட ஒரு கட்டளை தவிர, நீதி

மன்றத்தின் ஏதேனும் கட்டளை அல்லது பணிப்பு என்பவற்றின் கீழ்,

“அமைந்தொழுகுதல்” என்பது நேரொத்த பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) உட்பிரிவு (3) இன்கீழ் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆள் ஒருவரின் விண்ணப்பத்தின் மேல், மற்றும் நீதிமன்றம் அமைந்தொழுகுவதற்கு தவறியுள்ளார் அல்லது தவறியதாக இருந்துள்ளதென நீதிமன்றம் திருப்தியுறுமிடத்து நீதிமன்ற மானது -

(அ) கடமையின் மீறுகை தொடர்பில் கிடைக்கப் பெறக்கூடியதான ஏதேனும் வேறு உரிமை அல்லது பரிகாரம் என்வற்றுக்கு பங்கமின்றி, விடயத்துக்கேற்ப கட்டளையில் குறித்துரைக் கப்படக்கூடியவாறான அளவுகளுக்கும் ஏற் புடையற்பாலதான கடமையுடன் அமைந் தொழுகுவதற்கு ஒழிப்போனுக்கு அல்லது தற்காலிக ஒழிப்போனுக்கு கட்டளை யிடலாம்; அல்லது

(ஆ) ஒழிப்போனை அல்லது தற்காலிக ஒழிப் போனை விடயத்துக்கேற்ப, ஏற்புடைய தாகும் கடமையினை முழுவதுமாகவோ அல்லது பகுதியளவிலோ அமைந்தொழுகும் கடமையிலிருந்து விடுவிக்கலாம்.

(3) பின்வரும் ஆட்களுள் எவரேனும் உட்பிரிவு (2) இன்கீழ் நீதிமன்றத்தில் விண்ணப்பம் ஒன்றை மேற்கொள்ள லாம் -

(அ) பெறுகையாளர் ஒருவர்;

(ஆ) கடன்கொடுநர் ஒருவர்;

(இ) உதவுதொகை செலுத்துநர் ஒருவர்;

(ஈ) கம்பெனியில் நலனில் அக்கறைகொண் டுள்ள வேறு எவரேனும் ஆள்;

(உ) நிருவாகி ஒருவர் அல்லது உறுதி நிருவாகி ஒருவர்;

(ஊ) பதிவாளர்; அல்லது

(எ) அதிகாரி.

(4) விண்ணப்பத்தின் முன்னர் ஆகக் குறைந்தது பத்து நாட்களில் மற்றும் விண்ணப்பத் தேதியன்றுள்ளவாறு அமைந்தொழுகுவதற்கான தொடர்ச்சியான தவறாக உள்ள போது, விடயத்துக்கேற்ப அமைந்தொழுகுவதற்கான தவறுகை பற்றிய அறிவித்தல் சேர்க்கப்பட்டாலொழிய, (2) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்படக்கூடியவாறான விண்ணப்பம் செய்யப்படலாகாது.

(5) உட்பிரிவு (2) இன்கீழ் ஆக்கப்பட்ட ஒவ்வொரு கட்டளையின் பிரதியும் அத்தகைய கட்டளை ஆக்கப்பட்ட தன் பின்னரான ஐந்து வேலை நாட்களினுள் நீதிமன்றத் தினால் அதிகாரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

ஒழிப் போனை அல்லது இடையேற் பாட்டு ஒழிப் போனை நீதிமன்றத் தினால் பதவி யிலிருந்து நீக்குதல்

**364.** (1) உட்பிரிவு 363(3) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆள் ஒருவரது விண்ணப்பத்தின் மேல் மற்றும் நீதிமன்றம் பின்வருமாறு திருப்தியுறுமிடத்தும் -

(அ) ஒழிப்போன் அல்லது தற்காலிக ஒழிப்போன் உட்பிரிவு 363(2)(அ) இன்கீழ் ஆக்கப்பட்ட கட்டளை ஒன்றுக்கு இணங்கியொழுகத் தவறியுள்ளார் எனில்; அல்லது

(ஆ) பிரிவு 312 இன்கீழ் ஒழிப்போனாக நியமிக் கப்படுவதற்கு அல்லது செயலாற்றுவதற்கு ஒழிப்போன் ஒருவர் அனுமதிக்கப்படா தொழிந்துள்ளார் எனில்;

(இ) நீதிமன்றமானது - ஒழிப்போனை அல்லது தற்காலிக ஒழிப்போனை விடயத்துக்கேற்ப, பதவியிலிருந்து நீக்குவதற்கான கட்டளை ஒன்றை ஆக்கலாம், அத்துடன்

(ஈ) அத்தகைய கட்டளையை ஆக்குகையில், அவசியமானவாறான வேறு ஏதேனும் துணைக்கட்டளையை ஆக்கலாம்.

(2) உட்பிரிவு (1) இன்கீழ் ஆக்கப்படும் ஒவ்வொரு கட்டளையின் பிரதியும் அத்தகைய கட்டளை ஆக்கப்பட்ட பின்னரான ஐந்து வேலை நாட்களினுள் நீதிமன்றத்தினால் பதிவாளருக்கும் அதிகாரிக்கும் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

விண்ணப்பம் அல்லது வழக்கு நடவடிக்கையை நிறுத்தி வைப்பதற்கான அல்லது தடுத்து வைப்பதற்கான தத்துவம்

**365.** (1) பிரிவு 298(2)(இ) வின் கீழான விண்ணப்பமொன்றை செய்ததன் பின்னரான ஏதேனும் நேரத்திலும் மற்றும் விண்ணப்பத்தின் முடிவுறாதுள்ள தீர்மானத்திலும் கம்பெனி அல்லது எவரேனும் கடன்கொடுநர் அல்லது உதவுதொகை செலுத்துநர் என்போர் கம்பெனிக்கு அல்லது அதன் ஏதேனும் ஆதனத்தக்கு எதிராக விண்ணப்பம் ஒன்று அல்லது வழக்கு நடவடிக்கையொன்று நீதிமன்றத்தில் முடிவுறாதுள்ளவிடத்து, அவ்விண்ணப்பத்தை நிறுத்திவைப்பதற்கு அல்லது தக்கவைக்வைப்பதற்கு அந்நீதிமன்றத்துக்கு விண்ணப்பிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழான விண்ணப்ப மொன்றின் மீது, நீதிமன்றம் அவசியமானவாறான அத்தகைய நியதி நிபந்தனைகளின் மீது விண்ணப்பத்தை அல்லது வழக்கு நடவடிக்கையை நிறுத்திவைக்கலாம் அல்லது தடுத்துவைக்கலாம்.

ஒழித்துக் கட்டுதல் அல்லது தற்காலிக ஒழித்துக் கட்டுதலில் கடன்கொடுநர்களைப் பாதுகாப்பதற்கான கட்டளை

**366.** கம்பெனியொன்று ஒழித்துக்கட்டுதலில் அல்லது தற்காலிக ஒழித்துக்கட்டுதலில் இருக்கின்ற வேளையில், பதிவாளர் அல்லது அதிகாரசபையின் விண்ணப்பத்தின் மீது, நீதிமன்றம் முழுவதுமாக கடன்கொடுநர்களின் அக்கறைகளை பாதுகாப்பதற்கு அவசியமானதான ஏதேனும் கட்டளையை ஆக்கலாம்.

## பகுதி XIII

### பெறுகை

#### அத்தியாயம் 1

#### பொருள்கோடல்

பொருள் கோடல்

**367.** இப்பாகத்திலும் பத்தாம் அட்டவணையிலும் சொல்லமைப்பு வேறு வகையில் தேவைப்படுத்தினாலொழிய, “அளிப்பர் தேவைப்படுத்தினாலொழிய” என்பது பெறுநர் நியமிக்கப்பட்டிருக்கின்ற அல்லது நியமிக்கப்படக் கூடியவறான ஆதனம் தொடர்பிலான கம்பெனியொன்று எனப் பொருள்படும்.

#### அத்தியாயம் 2

#### பெறுநரின் நியமனம்

சாதனம் பெறுநரை நியமிப்பதற்கான தத்தவத்தை அளிக்கலாம்

**368.** ஆதனமொன்றின் முழுமையான அல்லது பொருளளவில் முழுமையான அல்லது பொருளளவில் முழுமை தொடர்பில் மிதக்கும் விதிப்பனவு ஒன்றை உருவாக்குகின்றான சாதனமொன்று மற்றும் கம்பெனியின் பொறுப்பு முயற்சி ஆதனத்தின் பெறுநரை நியமிப்பதற்கும் கம்பெனியின் பொறுப்புமுயற்சிக்குமான தத்துவத்தை அளிப்பவர் மீது அளிக்கலாம்.

பெறுநராண்மை தொடங்கும் போது

**369.** கம்பெனியொன்றின் பெறுநராண்மை மாற்றீட்டு பெறுநரொருவர் தவிர்ந்த, பெறுநர் ஒருவர் இப்பாகத்தின் கீழ் நியமிக்கப்படுகின்றதான நாளிலும் நேரத்திலும் தொடங்குகின்றது.

யார் பெறுநராக நியமிக்கப்படலாம் மற்றும் செயல்படலாம்

**370.** (1) பின்வரும் ஆளாக இருப்பின் மட்டும், ஒரு ஆள் ஒரு கம்பெனியின் ஆதனத்தைப் பெறுபவராக நியமிக்கப்படலாம் அல்லது செயல்படலாம் :–

(அ) 12 ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்படுவதற்கு தகுதி பெற்றவர் மற்றும் பெறுநராண்மை தொடர்பில் முக்கிய பதவி வகிப்பவரொருவராகச் செயலாற்றுதல்;

(ஆ) 371 ஆம் பிரிவின் கீழ் ஒரு பெறுநராக நியமிக்கப்படுவதிலிருந்தோ அல்லது செயலாற்றுவதிலிருந்தோ தகைமையற்றவராக்கப்படாதுவிடின்; அல்லது

(இ) எழுத்துமூலம் சான்றளிக்கப்பட்ட ஆள் :-

(i) 12 ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்படுவதற்கு மற்றும் பெறுநராண்மை தொடர்பில் முக்கிய பதவி வகிப்பவரொருவராக செயலாற்றுவ தற்கு தகுதி பெற்றிருத்தல்; அத்துடன்

(ii) ஒரு பெறுநராக நியமிக்கப்படுவதிலிருந்தோ அல்லது செயல்படுவதிலிருந்தோ பிரிவு 371 இன் கீழ் தகுதியற்றவர் என சான்றுப் படுத்தப்பட்டிருப்பின்; அத்துடன்

(ஈ) நியமனத்திற்கு எழுத்துமூலம் சம்மதம் அளித் துள்ளார் மற்றும் நியமனத்தின் போது சம்மதத்தை மீளப் பெறப்பட்டிருக்கவில்லை.

(2) ஓராம் உட்பிரிவின் (அ), (ஆ) மற்றும் (இ) என்னும் பந்திகளின் எவையேனும் தேவைப்பாடுகளை அறிந்துக் கொண்டு ஈடுசெய்வதற்காக கம்பெனியொன்றின் ஆதனத்தின் பெறுநராக நியமிக்கப்பட்ட அல்லது செயலாற்றுகின்ற ஆளின் சம்மதத்துடனான ஆளொருவர் தவறொன்றைப் புரிகின்றார்.

பெறுநராக நியமிக்கப்படு வதிலிருந்து அல்லது செயலாற்று வதிலிருந்தான தகைமை யீனங்கள்

**371.** (1) பின்வரும் ஆட்கள் மற்றும் அவர்களுடன் தொடர்புடைய திறத்தவர்கள் ஒரு கம்பெனியின் ஆதனத்தின் பெறுநராக நியமிக்கப்படுவதிலிருந்தோ அல்லது செயலாற்று வதிலிருந்தோ தகுதியற்றவர்கள் :–

(அ) கம்பெனியின் தனிசு கொடுநர்;

(ஆ) பெறுநராண்மை தொடங்கும் திகதிக்கு நேர்முற் போந்த இரண்டு ஆண்டு காலப்பகுதியினுள் இருக்கும் அல்லது பெற்றவரான ஆள் :-

(i) கம்பெனி அல்லது தொடர்புடைய கம்பெனி யின் பணிப்பாளர் அல்லது வேறு அலுவலர் அல்லது கணக்காய்வாளர் அல்லது ஊழிய ரொருவர்; அல்லது

(ii) பெறுநராண்மையில் ஆதனத்தின் அளிப்பவரின் பணிப்பாளர் அல்லது வேறு அலுவலர் அல்லது ஊழியர் ஒருவர்;

(இ) பெறுநராண்மையின் தொடக்கத் தேதியிலிருந்து நேர்முற்போந்த இரண்டு ஆண்டு காலப்பகுதி யினுள் பின்வருவதனை வைத்திருக்கின்ற அல்லது வைத்திருந்தவரான ஆளொருவர் :-

(i) கம்பெனி அல்லது தொடர்புபட்ட கம்பெனி யொன்றினால் வழங்கப்பட்ட பங்கில் நேரடி அக்கறை; அல்லது

(ii) கம்பெனி அல்லது தொடர்புபட்ட கம்பெனி யினால் வழங்கப்பட்ட பங்குகளின் ஏதேனும் வகுதியின் ஐந்து சதவீத்தில் அல்லது அதற்கு மேற்பட்ட நேரடியற்ற அக்கறை; அல்லது

(ஈ) பிரிவு 372 (1) இன் கீழ் ஒரு சாதனத்தின் கீழ் ஒரு பெறுநர் நியமிக்கப்படுமிடத்து, ஆளொருவர் பெறுநராக நியமிக்கப்படுவதற்கு அல்லது செயலாற்றுவதற்கு சாதனத்தின் கீழ் அனுமதிக்கப் படாதவரான ஆள்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் தகுதியிழக்கப்படும் போது பெறுநராக நியமிக்கப்படும் அல்லது செயல்படும் ஆள் தவறொன்றைப் புரிகின்றார்.

சாதன மொன்றின் கீழ் பெறுநரின் நியமனம்

**372.** (1) கம்பெனியின் ஆதனத்தின் பெறுநரொருவரை நியமிப்பதற்கான தத்துவத்தை அளிப்பவர்மீது சாதன மொன்று அளிக்கின்றவிடத்து, அளிப்பவர் அளிக்கப்படு பவரினால் அல்லது அவர் சார்பில் எழுத்துமூலம் கையொப்ப மிடப்பட்ட சாதனமொன்றினால் பெறுநரொருவரை நியமிக்கலாம்.

(2) சாதனமொன்றின் கீழ் நியமிக்கப்பட்ட பெறுநரொரு வர், சாதனம் வேறுவகையில் வெளிப்படையாக வழங்கினா லொழிய, முகவராக இருத்தல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் கீழ் ஒரு பெறுநர் பின்வருமாறு நியமிக்கப்படலாம் :-

(அ) வேறு ஏதேனும் சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும்; மற்றும்

(ஆ) பெறுநராண்மையில் உள்ள ஆதனம் அசையா ஆதனத்தை உள்ளடக்கியதா இல்லையா என்பதும்.

(4) சாதனம் வேறுவகையில் வெளிப்படையாக ஏற்பாடு செய்தாலொழிய, பெறுநரொருவரை நியமிப்பதற்கு சாதன மொன்றினால் அளிக்கப்பட்ட தத்துவமொன்று பின்வருவோரை நியமிப்பதற்கான தத்துவத்தினை உள்ளடக்குகின்றது :–

(அ) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பெறுநர்கள்;

(ஆ) ஏற்கனவே பதவி வகிக்கின்ற பெறுநருக்கு மேலதிகமான பெறுநரொருவர்;

(இ) எப்பெறுநரின் பதவி வறிதாகியுள்ளதோ அப்பெறுநரொருவரை அடுத்துறுகின்ற பெறுநர் ஒருவர்.

(5) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஆட்கள் ஒரு சாதனத்தின் கீழ் பெறுநர்களாக நியமிக்கப்படுகின்றவிடத்து :-

(அ) சாதனம் வேறுவகையில் ஏற்பாடு செய்யப்படும் வரை தவிர, பெறுநர்களின் எவரேனும் ஒருவர் அல்லது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட எவரேனுமாளினால் நிறைவேற்றப்படக்கூடிய அல்லது பிரயோகிக்கப்படக்கூடிய பெறுநரின் பணிகள் மற்றும் தத்துவங்கள்;

(ஆ) பெறுநர்களாக உள்ள ஆட்களின் ஏதேனும் பொறுப்பு கூட்டாகவும் பலவேறாகவும் இருக்கப் படல் வேண்டும்; அத்துடன்

(இ) இச்சட்டத்தில் பெறுநரைப் பற்றிய குறிப்பு என்பது வழக்குத் தேவைப்படுகிற ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பெறுநர்களைக் குறிக்கிறது.

(6) ஐயத்தைத் தவிர்ப்பதற்காக :-

(அ) இப்பிரிவின் கீழ் பெறுநரொருவரின் நியமனம் ஒரு கருதுகோள் நடவடிக்கை அல்ல; அத்துடன்

(ஆ) (89 ஆம் அத்தியாயமான) ஈட்டுச் சட்டத்தின் 46 ஆம் பிரிவிலுள்ள எதுவும் இப்பிரிவின் கீழ் பெறுநரின் நியமனம் தொடர்பில் பாதித்தலாகாது அல்லது ஏற்புடைமையாகாது.

நீதிமன்றம் பெறுநரை நியமிக்கலாம்

**373.** (1) நீதிமன்றம் வேறு ஏதேனும் சட்டவாக்கத்தின் கீழ் பிரயோகிக்கக்கூடிய, வேறு ஏதேனும் தத்துவத்துக்குப் பங்கமின்றி, நீதிமன்றம் பின்வருமாறு திருப்பதிப்படுமிடத்து, விடயத்துக்கேற்ப, நிரந்தர பிணைப்பொறுப்பு அல்லது மிதவை அறிவிடின் விண்ணப்பத்தின் மீது, கம்பெனியினால் அளிக்கப்பட்ட நிரந்தர பிணைப்பொறுப்பு அல்லது மிதக்கும் அறவீட்டுக்கமைய, ஏதேனும் ஆதனத்தின் பெறுநரொருவரை நீதிமன்றம் நியமிக்கலாம் :–

(அ) கம்பெனி அளிப்பவருக்கு செலுத்தவேண்டிய தனிசொன்றை செலுத்துவதற்கு தவறியிருக்கின்ற விடத்து அல்லது அளிப்பவருக்கு ஏதேனும் கடப்பாட்டினை ஈடுசெய்வதற்கு வேறு வகையில் தவறியிருக்கின்றவிடத்து;

(ஆ) கம்பெனி விடயத்துக்கேற்ப, நிரந்தர பிணைப் பொறுப்பு அல்லது மிதக்கும் அறவீட்டை உருவாக்கும் ஏதேனும் சாதனத்தின் நியதிகளுக்கு முரணாக பிணைப்பொறுப்பளிக்கக்கூடிய ஆதனத்தினை விற்பதற்கு அல்லது வேறு வ்யில் கையுதிர்ப்பதற்கு பிரேரித்தல்; அல்லது

(இ) அளிப்பவரின் நன்மைக்காக பிணைப்பொறுப் பளிக்கப்பட்ட ஆதனத்தின் பேணிக்காத்தலை அவ்வாறு உறுதிப்படுத்தல் அவசியமானது.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளை மூலம் நியமிக்கப்பட்ட பெறுநர் நீதிமன்றத்தின் அலுவல ரொருவராகவிருத்தல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் கீழ் பெறுநரொருவர் பின்வரு மாறு நியமிக்கப்படலாம் :–

(அ) வேறு ஏதேனும் சட்டத்திலும் முரணாக எது எவ்வாறிருப்பினும்: அத்துடன்

(ஆ) பெறுநராண்மையில் உள்ள ஆதனம் அசையா ஆதனத்தை உள்ளடக்கியதா இல்லையா என்பதும்.

(4) ஐயத்தைத் தவிர்ப்பதற்காக :–

(அ) இப்பிரிவின் கீழ் பெறுநரின் நியமனம் ஒரு கருதுகோள் நடவடிக்கை அல்ல; அத்துடன்

(ஆ) (89 ஆம் அத்தியாயமான) ஈட்டுச் சட்டத்தின் 46 ஆம் பிரிவிலுள்ள எதுவும் இப்பிரிவின் கீழ் பெறுநர் ஒருவரின் நியமனத்தைப் பாதித்தலாகாது அல்லது அது தொடர்பாக ஏற்புடையதாதலாகாது.

பெறுநரின் நியமனம் பற்றிய அறிவித்தலும் விபரங்களும்

**374.** (1) பெறுநர் ஒருவர் செயல்முறைக்குகந்த விரைவானளவும் நியமிக்கப்பட்டதிலிருந்து ஐந்து வேலை நாட்களினுள் எனும் பட்சத்தில் :–

(அ) பெறுநரின் நியமனம் பற்றிய எழுத்துமூல அறிவித்தலை அளிப்பவருக்கு வழங்குதல் வேண்டும்;

(ஆ) பெறுநரின் நியமனம் பற்றிய பொது அறிவித்தலை பின்வருவன உள்ளடங்கலாக வழங்குதல் வேண்டும் :–

(i) பெறுநரின் முழு பெயர்;

(ii) நியமனத்தேதி;

(iii) பெறுநரை நியமிப்பவரின் அடையாளம் மற்றும், நியமிப்பாளர் நீதிமன்றமாக உள்ள விடத்து, யாருடைய விண்ணப்பத்தின் மேல் நியமனம் செய்யப்பட்டதோ அவ்வாளின் அடையாளம்;

(iv) பெறுநரின் அலுவலக முகவரி; அத்துடன்

(v) பெறுநராண்மையிலுள்ள ஆதனத்தின் சுருக்கமான விபரணம்; அத்துடன்

(இ) பொது அறிவித்தலின் பிரதியை பதிவாளர் மற்றும் அதிகாரிக்கு அனுப்புதல் வேண்டும்.

(2) பெறுநராக வறிதாக்கியவரான ஆளொருவரின் இடத்தில் அல்லது ஏற்கனவே மேலதிகமாக பெறுநரின் நியமனம் உள்ளவிடத்து, (1) ஆம் உட்பிரிவின் கீழான ஒவ்வொரு அறிவித்தலும் அந்நிகழ்வை பற்;றி கூறுதல் வேண்டும்.

(3) பெறுநரின் அலுவலக முகவரியில் ஏதேனும் மாற்றம் ஏற்படும் பட்சத்தில், பெறுநர் ஐந்து வேலை நாட்களினுள் :–

(அ) புதிய முகவரி பற்றி பொது அறிவித்தலை வழங்குதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) பொது அறிவித்தலின் பிரதியைப் பதிவாளர் மற்றும் அதிகாரசபைக்கு அனுப்புதல்வேண்டும்.

(4) இப்பிரிவுடன் இணங்கியொழுகுவதற்கான தவறுகை பெறுநராக ஆளொருவரின் நியமனமொன்றின் செல்லு படியான தன்மையினைப் பாதித்தலாகாது.

(5) இப்பிரிவுடன் இணங்கியொழுகுவதற்குத் தவறுகின்ற ஒரு பெறுநர் தவறொன்றைப்புரிகின்றார்.

பெறுநரின் நியமனத்தைக் குறிப்பீடு செய்வதற்கான ஆவணங்கள்

**375.** (1) பெறுநராக பதிவ வகிக்கின்ற வரையிலும், பெறுநர் பின்வருவனவற்றை உறுதிசெய்தல் வேண்டும் :–

(அ) வழங்கப்பட்ட அல்லது கையொப்பமிடப்பட்ட ஒவ்வொரு ஆவணமும் வழங்குபவரின் பெயர் தோன்றும் ஒவ்வொரு ஆவணத்திலும், பெயர் முதலில் தோன்றும் இடத்தில், பெறுநர் நியமிக்கப் பட்டுள்ளார் என்று குறிப்பிடுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) கம்பெனி ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வலைத்தளங்களைக் கொண்டிருப்பின், ஒவ்வொரு வலைத்தளத்தின் ஒவ்வொரு பக்கமும் ஒரு பெறுநர் நியமிக்கப்பட்டுள்ளார் என்பதை முக்கியமாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

(2) ஒரு பெறுநர் குறிப்பிட்ட சொத்து தொடர்பில் பதவி வகிக்கும் வரை, பெறுநர் -

(அ) வழங்குபவர் அல்லது பெறுநரால் வழங்குபவரின் சார்பில் அல்லது பெறுநரின் சார்பில் வழங்கப் பட்ட அல்லது கையொப்பமிடப்பட்ட ஒவ்வொரு ஆவணமும், ஆதனம்டன் தொடர்புடையது மற்றும் வழங்குபவரின் பெயர் தோன்றும், பெறுநர் நியமிக்கப்பட்டுள்ளார் என்பதைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) கம்பெனி ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வலைத்தளங்களைக் கொண்டிருந்தால், ஒவ்வொரு வலைத்தளத்தின் ஒவ்வொரு பக்கமும்,

கம்பெனியின் குறிப்பிட்ட சொத்து தொடர்பில் ஒரு பெறுநர் நியமிக்கப்பட்டுள்ளார் என்பதை முக்கியமாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் அல்லது உட்பிரிவு (2) உடன் இணங்கியொழுகத் தவறுதல் -

(அ) பெறுநராக ஒரு ஆளின் நியமனம்; அல்லது

(ஆ) ஏதேனும் ஆவணம்.

என்பவற்றின் செல்லுபடியாந்தன்மையைப் பாதித்த லாகாது.

(4) ஒவ்வொரு ஆளும் -

(அ) உட்பிரிவு (1) அல்லது உட்பிரிவு (2) உடன் இணங்கத் தவறினால்; அல்லது

(ஆ) உட்பிரிவு (1) அல்லது உட்பிரிவு (2) உடன் இணங்கியொழுகுவதற்கு தவறுவதில் தூண்டுதல் அல்லது சம்மந்தப்பட்டிருந்தால்,

தவறொன்றைப்புரிகின்றார்.

## அத்தியாயம் 3

### பெறுபவரின் தத்துவங்கள்

பெறுபவரின் தத்துவங்கள்

**376.** (1) பெறுநர் எச்சாதனத்தின் கீழ் அல்லது எந்நீதிமன்றத்தினால் அல்லது எச்சாதனத்தின் கீழ் அல்லது எந்நீதிமன்றத்தின் கீழ் நியமனம் செய்யப்பட்டதோ அச்சாதனம் அல்லது நீதிமன்றத்தின் கட்டளையினால் அளிக்கப்பட்ட வெளிப்படையான அல்லது உட்கிடையான தத்துவங்கள் மற்றும் அதிகாரங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) எச்சாதனத்தினால் அல்லது அதன்கீழ் அல்லது எந்நீதிமன்றத்தின் கட்டளையினால் அல்லது கட்டளைக் கமைய நியமனம் செய்யப்பட்டதோ அச்சாதனத்துக்கமைய அல்லது நீதிமன்றத்தின் கட்டளைக்கமைய, பெறுநர் பத்தாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டுமென்துடன் பிரயோகிக்கலாம்.

(3) நியமனமானது அந்த நீதிமன்றந் சாதனத்தின்மூலம் அல்லது அதன்கீழ் செய்யப்பட்டதோ அந்த நீதிமன்றச் சாதனத்துக்கு அல்லது கட்டளைக்கு அமைய, பெறுநரொருவர், கம்பெனிப் பணிப்பாளர்களின் தத்துவங்களுக்கு அல்லது வழங்குநரின் தத்துவங்களுக்குப் புறநீங்கலாகப் பெறுநரின் தத்துவங்களையும் அதிகாரங்களையும் பிரயோகிக்கலாம்.

பெறுநர் ஆவணங்களை நிறைவேற்றுதல்

**377.** (1) பெறுநரின் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கு அவசியமான அல்லது இடைநேர்விளைவான எல்லா ஆவணங்களையும் ஒரு பெறுநர் பெயரிலும் கம்பெனியின் சார்பாகவும் நிறைவேற்றலாம்.

(2) ஒரு கம்பெனியின் சார்பாக பெறுநரால் கையொப்பமிடப்பட்ட ஆவணம், கம்பெனிகள் சட்டத்தின் பிரிவு 19 இன் நோக்கங்களுக்காக கம்பெனியின் சார்பாக முறையாக செய்யப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) வேறேதேனும் சட்டத்தில் அல்லது ஒரு கம்பெனியின் உறுப்புரைகளில் முரணாக எது எவ்வாறிருப்பினும், எந்த நீதிமன்றச் சாதனத்தின்மூலம் அல்லது கட்டளையின்மூலம் அல்லது அதன்கீழ் பெறுநரொருவர் நியமிக்கப்படுகின்றாரோ அந்த நீதிமன்றச் சாதனம் அல்லது கட்டளை ஆவணங்களை நிறைவேற்றுவதற்கும் அந்நோக்கத்துக்காகக் கம்பெனியின் பொது இலச்சினையைப் பயன்படுத்துவதற்கும் பெறுநருக்குத் தத்துவமளிக்குமிடத்து, ஆவணங்களுக்குக் கம்பெனியின் பொது இலச்சினையைப் பொறிப்பதன் மூலமும் பொது இலச்சினை பொறிக்கப்பட்டமையை அத்தாட்சிப்படுத்துவதன் மூலமும் பெறுநரொருவர் கம்பெனியின் பெயரிலும் அதன் சார்பிலும் ஆவணங்களை நிறைவேற்றலாம்.

(4) உட்பிரிவு (3) இல் விபரிக்கப்பட்டுள்ள முறையில் நிறைவேற்றப்பட்ட ஒரு ஆவணம், கம்பெனிகள் சட்டத்தின் பிரிவு 19 இன் நோக்கங்களுக்காக கம்பெனியினால் முறையாக செய்யப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

பெறுநர்களுக்கிடையேயாள முந்துரிமை

**378.** (1) கம்பெனியின் ஆதனத்தின் எல்லா அல்லது ஏதேனும் பாகத்தின் மீது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மிதக்கும் விதிப்பனவுகள் உளதாயிருக்குமிடத்து, பெறுநரொருவர் அத்தகைய ஒவ்வொரு பயனைக் கொண்டு இப்பாகத்தின் கீழ் நியமிக்கப்படலாம்.

(2) மிதக்கும் விதிப்பனவின் அளிப்பவரின் விண்ணப்பத்தினால் அல்லது விதிப்பனவின் மீது நியமிக்கப்பட்ட பெறுநர் ஒருவர் இச்சட்டத்தினால் பெறுநர் ஒருவரின் மீது அளிக்கப்பட்ட தத்துவங்களின் நியதிகளின்படி பெறுநர் நியமிக்கப்பட்டுள்ளார் எனும் பயனைக்கொண்டு வேறு ஏதேனும் மிதக்கும் விதிப்பனவின் மீது அவ்விதிப்பனவு முன்னுரிமை கொண்டுள்ளவிடத்து, முன்னருக்கு முரணாக எது எவ்வாறிருப்பினும், வேறு எவரேனும் பெறுநரின் விலக்களிப்புக்கு முன்னுரிமை கொண்டிருத்தல் வேண்டும்.

(3) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தளம்பல் கட்டணங்கள் ஒன்றுடன் ஒன்று சமமாக இருக்கும் மற்றும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பெறுநர்கள் அத்தகைய கட்டணங்களின் அடிப்படையில் நியமிக்கப்பட்டால், அவ்வாறு நியமிக்கப்பட்ட பெறுநர்கள் கூட்டுப் பெறுநர்களாக நியமிக்கப்பட்டதாகக் கருதப்படுவார்கள்.

(4) கூட்டுப் பெறுநர்களாக நியமிக்கப்பட்டதாகக் கருதப்படும் பெறுநர்கள், நியமனச் சாதனங்களில் ஏதேனும் வேறுவிதமாக வழங்காத வரையில் கூட்டாகச் செயல்படல் வேண்டும்.

(5) உட்பிரிவு (6) இற்கு உட்பட்டு, தளம்பல் கட்டணம் வழங்குபவரால் அல்லது விண்ணப்பத்தின் பேரில் நியமிக்கப் பட்ட பெறுநரின் அதிகாரங்கள் இடைநீக்கம் செய்யப்படுகின்றன இந்தச் சட்டத்தால் வழங்கப்பட்ட அந்த பெறுநரின் அதிகாரங்களைப் பயன்படுத்துவதற்கு இரண்டாவது குறிப்பிடப்பட்ட பெறுநருக்குத் தேவையான அளவு, அந்த கட்டணத்தை விட முன்னுரிமை கொண்ட தளம்பல் கட்டணத்தை வழங்குபவர், மேலும் அவ்வாறு இடைநிறுத்தப்பட்ட எந்தவொரு அதிகாரமும் முன்னுரிமை கொண்ட தளம்பல் கட்டணம் நிறுத்தப்படும் போது மீண்டும் நடைமுறைக்கு வரும். ஆதனம்டன் இணைக்கவும், பின்னர் கட்டணத்திற்கு உட்பட்டது, அல்லது முன்னுரிமை கொண்ட தளம்பல் கட்டணத்தின் கீழ் ஒரு பெறுநரின் நியமனம் நிறுத்தப்படும் போது, எது முதலில் நிகழுமோ அது கருத்திற் கொள்ளப்படும்.

(6) உட்பிரிவு (5) இன் கீழ் பெறுநரின் அதிகாரங்களை இடைநிறுத்துவது, பெறுநரின் உடைமை, காவலில் அல்லது

கட்டுப்பாட்டில் இருந்து, பெறுநரால் பெறப்படும் வரை, கம்பெனியின் ஆதனத்தின் எந்தப் பகுதியையும் விடுவிக்க வேண்டும் என்ற விளைவைக் கொண்டிருக்காது. மறு சீரமைக்கப்பட்ட பெறுநரிடமிருந்து ஒரு செல்லுபடியாகும் இழப்பீடு (ஆதனத்தின் அத்தகைய பகுதியின் மதிப்பின் வரம்புக்கு உட்பட்டது, பெறுநர் நியமிக்கப்பட்டதன் மூலம் கட்டணம் விதிக்கப்படும்) பெறுநரின் செயல்பாடுகள், அதிகாரங்கள் மற்றும் கடமைகளின் செயல்திறன், நடைமுறை மற்றும் வெளியேற்றம் ஆகியன.

(7) உட்பிரிவு (5) இன் கீழ் பெறுநர் ஒருவரின் தத்துவங்களின் இடைநிறுத்துகையானது, பெறுநர் நியமிக்கப்பட்டாரோ அந்த மிதக்கும் பொறுப்பு, அப்பெறுநர் எந்த ஆதனம் தொடர்பில் நியமிக்கப்பட்டாரோ அந்த ஆதனத்துக்கு இணைந்ததாக இல்லாதொழிவதனை விளைவித்தலாகாது.

(8) இப்பிரிவிலுள்ள எதுவும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மிதக்கும் பொறுப்புகளின் பயனைக்கொண்டு நியமிக்கப்படுகின்றதிலிருந்து அதே பெறுநரை தடுத்தலாகாது.

பெறுநருக்கு தகவல் வழங்குவதற்கான தேவைப்பாடு

**379.** (1) பெறுநர் ஒருவர் கம்பெனியொன்றின் ஆதனம் தொடர்பில் நியமிக்கப்படுகின்றவிடத்து, கம்பெனியின் ஒவ்வொரு பணியாளரும் வேறு அலுவலரும் :-

(அ) செயல்முறைக்குகந்த விரைவானவளவு மற்றும் நியமனத்தின் பின்னரான ஐந்து வேலை நாட்களினுள் என்னும் பட்சத்தில், பெறுநருக்கு ஆளின் உடமையில் அல்லது கட்டுக்காப்பில் அல்லது ஆளின் கட்டுக்காப்பின்கீழ் பெறுநரின் ஆதனம் தொடர்பில் எல்லாப் புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஆவணங்களை பெறுநருக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும்;

(ஆ) பெறுநரினால் அவ்வாறு செய்வதற்கு தேவைப்படின், சத்தியக்கடதாசி மூலம் நியாயமான காலப்பகுதியினுள் புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஆவணங்கள் என்பன பூரணமெனவும் சரியானதெனவும் சரிபார்த்தல் வேண்டும்;

(இ) கம்பெனி பொது இலச்சினையொன்றை வைத்திருப்பின், உடனடியாக பெறுநரினால் பயன் பாட்டுக்கு பொது இலச்சினையொன்றை கிடைக்கப்பெறக்கூடியதாக செய்தல் வேண்டும்; அத்துடன்

(ஈ) பெறுநர் நியாயமானதாக கோரக்கூடியதான அத்தகைய உதவியை பெறுநருக்கு வழங்குதல் வேண்டும்.

(2) பெறுநரின் விண்ணப்பத்தின் மீது, நீதிமன்றம் (1) ஆம் உட்பிரிவுக்கிணங்க கம்பெனியின் பணிப்பாளர் ஒருவர் அல்லது வேறு அலுவலருக்கு தேவைப்படுகின்ற கட்டளையொன்றை ஆக்கலாம்.

(3) உட்பிரிவு (1)(ஆ) வின் கீழ் சரிபார்த்தலொன்றை, சரிபார்த்தலொன்றை வழங்குகின்ற ஆள் பின்வருவன வற்றை செய்யாதவிடத்து, புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஆவணங்களுடன்கையாளுகின்ற குறித்த கருமங்கள் தொடர்பில் தகைமையாக்கப்படலாம் :-

(அ) பூரணப்படுத்த வேண்டியதும் சரியானதுமான புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஆவணங்களை கவனத்துட்கொள்ளாதவிடத்து; அல்லது

(ஆ) சரிபார்த்தலொன்றை வழங்குவதற்கு அவசியமான அறிவைக் கொண்டிருக்காதவிடத்து.

ஆதனத்தை விற்பதற்கான அளிப்பவரின் சம்மதம்

**380.** (1) பெறுநராண்மையிலுள்ள ஆதனத்தின் விற்பனைக்கு அளிப்பவரின் சம்மதம் தேவைப்படுமிடத்து, மற்றும் பெறுநர் ஒருவர் சம்மதம் பெறுவதற்கு இயலாதவராக விருக்குமிடத்து, பெறுநர் ஒன்றில் தாமாக அல்லது ஏனைய ஆதனத்துடன் சேர்த்து ஆதனத்தின் விற்பனையை அதிகார மளிக்கின்ற கட்டளையொன்றுக்காக நீதிமன்றத்துக்கு விண்ணப்பிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் விண்ணப்பமொன்றின்மீது, நீதிமன்றம் பின்வருமாறு திருப்திப்படுமிடத்து, பெறுநரால் ஆதனத்தின் விற்பனையை அதிகாரமளிக்கின்ற அவசியமான அத்தகைய கட்டளையை ஆக்கலாம் :-

(அ) பெறுநர் அளிப்பவரின் சம்மதத்தினைப் பெற்றுக் கொள்வதற்கான நியாயமான முயற்சிகளை செய்துள்ளாரென; அத்துடன்

(ஆ) விற்பனையானது :-

(i) அளிப்பவரின் கடன் கொடுநர்களின் அக்கறையில்; அத்துடன்

(ii) அளிப்புபெறுநரின் அக்கறையைப் பாதகமான முறையில் முக்கியமாக பாதிக்காது.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் கட்டளையொன்றை ஆக்குவதில், நீதிமன்றம் பின்வருமாறு அவசியமானவாறாக :–

(அ) ஏதேனும் திகதி அல்லது நிபந்தனையை விதிக்கலாம்; அத்துடன்

(ஆ) வேறு ஏதேனும் துணைக்கட்டளையை ஆக்கலாம்.

ஒழித்துக்கட்டுதலின் மீது பெறுநரின் தத்துவங்கள்

**381.** (1) இரண்டாம் உட்பிரிவுக்கமைய, மற்றும் நீதி மன்றம் வேறுவகையாக கட்டளையிட்டாலொழிய, பெறுநர் ஒருவர் பெறுநராக நியமிக்கப்படலாம் மற்றும் செயலாற்றப் படலாமென்பதுடன் ஒழித்துக்கட்டுதலிலுள்ள நீதிமன்ற மொன்றின் ஆதனம் தொடர்பில் பெறுநரின் எல்லாத் தத்தவங்களையும் பிரயோகிக்கப்படலாம்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆதனம் தொடர்பில் பதவியை வகிக்கின்ற பெறுநர் ஒருவர், பின்வரு மாறு தவிர, அளிப்பவரின் முகவராக செயலாற்ற முடியாது :–

(அ) ஒழிப்போனின் முன்னரான எழுத்துமூல சம்மதத் துடன்; அல்லது

(ஆ) நீதிமன்றத்தின் அனுமதியுடன்.

(3) இரண்டாம் உட்பிரிவின் காரணத்தினர் யாருடைய அல்லது எவருடைய அக்கறையில் பெறுநர் நியமிக்கப் பட்டாரோ அவரால் நியமிக்கப்பட்டதன்மூலம் அவ்வாளின் முகவர் என்ற நிகழ்வின் காரணத்தினால் தனியேயின்றி அளிப்பவரின் முகவராக செயலாற்றுவதற்கு இயலாதவரா கின்றார்.

(4) ஒழிப்போன் (2) (அ) என்னும் உட்பிரிவின் கீழ் சம்மதம் வழங்குவதற்கு மறுப்பதற்கான சேதங்களுக்கு ஆளாகமாட்டார்.

(5) இரண்டாம் உட்பிரிவுக்கிணங்க அளிப்பவரின் முகவராக செயலாற்றுகின்ற பெறுநரின் செயல் அல்லது செய்யாமை ஒன்றினூடாக அளிப்பவரினால் உறப்பட்ட தனிசொன்று அல்லது பொறுப்பு ஒன்று ஒழித்துக்கட்டலின் ஆகுசெலவு, விதிப்பனவு அல்லது செலவினம் ஆகாது.

## அத்தியாயம் 4

### பெறுநரின் கடமைகள்

**382.** (1) பெறுநர் நல்லெண்ணத்தில் பெறுநரின் தத்துவங் களைப் பிரயோகித்தல் வேண்டும். பெறுநரின் பொதுக் கடமைகள்

(2) பெறுநர் யாருடைய அக்கறையில் பெறுநர் நியமிக்கப் பட்டாரோ அவ்வாளின் அக்கறைகளில் உள்ளதென நியாயமான ஏதுக்களின் மீது பெறுநர் நம்புகின்றதெனும் முறையொன்றில் பெறுநரின் தத்துவங்களைப் பிரயோகித்தல் வேண்டும்.

(3) ஓராம் மற்றும் (2) ஆம் உட்பிரிவுகளுக்குப் பங்கமின்றி, பெறுநர் பின்வருவோருக்குப் பங்கமின்றி, பெறுநர் பின்வருவோரின் அக்கறைகளின் நியாயத்தினைக் கருத்திற் கொண்டு, பெறுநரின் தத்துவங்களைப் பிரயோகித்தல் வேண்டும் :–

(அ) அளிப்பவர்;

(ஆ) அளிப்பவரின் கடன்கொடுநர்கள்; அத்துடன்

(இ) பெறுநராண்மையில் ஆதனத்தில் அக்கறைகள், அளிப்பவரினூடாக கோருகின்ற வேறு எவரேனும் ஆட்கள்.

(4) பிரிவு 372 (1) இன்கீழ் சாதனமொன்றின்கீழ் நியமிக்கப்பட்ட பெறுநர் ஒருவர் யாருடைய அக்கறையில் பெறுநர் நியமிக்கப்பட்டாரோ அவ்வாளின் பணிப்புகளுக் கிணங்க செயலாற்றுவதற்கான ஏதேனும் தவறுகையானது (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட கடமையின் மீறுகையொன்றாக கருத்திலெடுக்கப்படுதலாகாது.

(5) இப்பிரிவிலுள்ள எதுவும் 383 இன் ஏற்புடமையை பாதித்தலாகாது அல்லது மட்டுப்படுத்தலாகாது.

ஆதனத்தை விற்பனை செய்யும் பெறுநரின் கடமை

**383.** பெறுநராண்மையிலுள்ள ஆதனத்தினை விற்பனை செய்யும் தத்துவமொன்றினை பிரயோகிக்கின்ற பெறுந ரொருவர், விற்பனை செய்யும் நேரத்திலுள்ளவாறான பெறப்படற்பாலதான நியாயமான மிகச்சிறந்த விலை யினைப் பெற்றுக்கொள்வதற்கு 382 (3) ஆம் பிரிவினால் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆளுக்கான கடமையினைக் கொண்டிருக்கின்றார்.

பாதுகாப்பு அல்லது நட்டோத்தர வாதமில்லை

**384.** வேறு ஏதேனும் சட்டத்தில் முரணாக உள்ள எது எவ்வாறிருப்பினும் அல்லது எந்த சாதனத்தின்கீழ் பெறுநர் நியமிக்கப்பட்டாரோ அச்சாதனத்திலுள்ள எதுவும் :–

(அ) அது பெறுநர் அளிப்பவரின் முகவராக செயலாற்று கின்றாரென அல்லது அளிப்பவரிடமிருந்து அற்றோணித் தத்துவமொன்றின்கீழ் என 383 ஆம் பிரிவினால் விதிக்கப்பட்ட கடமையின் மீறுகைக்காக பெறுநர் ஒருவருக்கெதிராக வழக்கு நடவடிக்கைகளுக்கு பாதுகாப்பொன்றாக அமைத்தலாகாது;

(ஆ) 383 ஆம் பிரிவினால் விதிக்கப்பட்ட கடமையின் மீறுகையிலிருந்து எழுகின்ற பெறுநரால் உறப்பட்ட ஏதேனும் பொறுப்பு தொடர்பில் பெறுநராண்மையில் அல்லது அளிப்பவரில் ஆதனத்திடமிருந்து நட்டஈட்டுக்கு அல்லது நட்டோத்தரவாதத்துக்கு பெறுநர் உரித்துடையவ ராதலாகாது.

நிரந்தர பிணைப் பொறுப்பு பெறுநர் நியமிக்கப்படு மிடத்து முன்னுரிமைக் கட்டளை

**385.** (1) இப்பிரிவு நிரந்தர பிணைப்பொன்றின் பயனைக் கொண்டு நியமிக்கப்பட்டவரான பெறுநரொருவருக்கு ஏற்புடைமையாகின்றது.

(2) இப்பிரிவில் "ஏற்புடையற்பாலதான நிரந்தர பிணைப் பொறுப்பு" என்பது பெறுநர் நியமிக்கப்பட்டதான பயனைக் கொண்டதன் மூலமான பிணைப்பொறுப்பு எனப் பொருள் படும்.

(3) இருநூற்றிமுப்பத்தி நான்காம் மற்றும் 331 ஆம் பிரிவுகளுக்கமையவும் (4) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆட்களின் உரிமைகளுக்கமையவும் இப்பிரிவு ஏற்புடைமையாகின்ற பெறுநர் ஒருவர் ஏற்புடைமையாகின்ற

நிரந்தர பிணைப்பொறுப்பினால் பிணைப்பொறுப்பளிக்கப் பட்ட இயைபான தேதியன்றுள்ளவாறு தீர்மானிக்கப்பட்ட தனிசின் திருப்தியில் அல்லது அதனை நோக்கி பெறுநராண்மையிலுள்ள ஆதனத்தின் தேறிப்பெறுகையின் வரும்படிகளை பிரயோகித்தல் வேண்டும்.

(4) பின்வரும் ஆட்கள் ஏற்புடைமையாகும் நிரந்தர பிணைப்பொறுப்பு மற்றும் எதில் நிரற்படுத்தப்பட்டுள்ளதோ அதில் முன்னுரிமை ஒழுங்கில் அளிப்பு வழங்குநருக்கு முன்னுரிமையில் பெறுநராண்மையில் ஆதனத்தின் தேறிப் பெறுகையின் வரும்படிகளின் பகிர்ந்தளிப்புகளுக்கு உரித்துடையவர்களாதல் வேண்டும் :–

(அ) முதலாவதாக கம்பெனி ஒழித்துக்கட்டுதலில் இருப்பின், பெறுநராண்மையிலுள்ள ஆதனத்தை பேணிக்காப்பதில் மற்றும் தேறிப்பெறுகையில் ஒழிப்போனால் நியாயமாக உறப்பட்ட எவையேனும் ஆகுசெலவுகளுக்காக ஒழிப்போன்;

(ஆ) இரண்டாவதாக, இச்சட்டத்தினால் முறையாக உறப்பட்ட ஆகுசெலவுகள், விதிப்பனவுகள் மற்றும் செலவினங்கள் மற்றும் அதன்கீழ் பெறுநரின் ஊதியம்; அத்துடன்

(இ) மூன்றாவதாக, இயைபான தேதியன்றுள்ளவாறு தீர்மானிக்கப்பட்ட அவ் அளிப்பு வழங்குநருக்கு வழங்க வேண்டிய ஏதேனும் தனிசுக்காக, பின்வருவனவற்றுக்கு முன்னர் தரப்படுத்தப்படுகின்றதான ஆதனத்தின் ஏதேனும் பாகத்தின் மீது ஏதேனும் நிரந்தர பிணைப்பொறுப்பின் அளிப்பு வழங்குநர் :–

(i) ஏற்புடைமையான நிரந்தர பிணைப்பொறுப்பு; அத்துடன்

(ii) ஏதேனும் மிதக்கும் பொறுப்பு,

(ஈ) கம்பெனிகள் சட்டத்தின் பிரிவு 431(2) இன்கீழ் ஆதனத்தின் ஏதேனும் பாகத்தின் மேல் மிதக்கும் பொறுப்பொன்றுக்கு நிரந்தர பிணைப்பொறுப்பு குறைவாக தரவரிசைக்கு ஏற்புடைமையாகுமிடத்து,

மற்றும் இவ்வுட்பிரிவின் பந்திகள் (அ), (ஆ) மற்றும் (இ) என்னும் பந்திகளைப் பாதிக்காத விடத்து அல்லது மட்டுப்படுத்தப்படாதவிடத்து :–

(i) நான்காவதாக, இவ்வுட்பிரிவின் (அ) மற்றும் (ஆ) என்னும் பந்திகளில் குறிப்பீடு செய்யப் பட்டவாறான அத்தகைய ஆகுசெலவுகள், விதிப்பனவுகள் மற்றும் செலவினங்கள் தவிர, அவ்வட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட அளவுக்கும் மற்றும் முன்னுரிமை ஒழுங்குக்கும் நான்காம் அட்டவணையின் 1, 2 மற்றும் 8 ஆம் பந்திகளில் தரப்பட்டுள்ள இயைபான தேதியன் றுள்ளவாறு தீர்மானிக்கப்பட்ட அவர்களுடைய உரிமைக் கோரிக்கைகளின் திருப்தியில் அல்லது திருப்தியை நோக்கி முந்துரிமைச் கோரிக்கைகளைக் கொண்டுள்ள ஆட்கள்;

(ii) ஐந்தாவதாக, இயைபான தேதியன்றுள்ள வாறான தீர்மானிக்கப்பட்ட, அவ் அளிப்பு பெறுநரருக்கு கடனாகவுள்ள ஏதேனும் தனிசுக்காக, மிதக்கும் பொறுப்பின் அளிப்பு பெறுநர்; அத்துடன்

(iii) ஆறாவதாக, இயைபான தேதியன்றுள்ள வாறாக தீர்மானிக்கப்பட்ட, ஆனால், அவ் அளிப்பு பெறுநருக்கு கடனாகவுள்ள ஏதேனும் தனிசுக்காக, கம்பெனிகள் சட்டத்தின் 431 (2) ஆம் பிரிவின்கீழ் மிதக்கும் பொறுப்புக்கு குறைவாக, ஏற்படையற்பாலதான நிரந்தர பிணைப்பொறுப்புக்கு முளன்னர் தரவரிசைப் படுத்தப்படுகின்ற ஆதனத்தின் ஏதேனும் பாகத்தின் மீதான ஏதேனும் நிரந்தர பிணைப் பொறுப்பின் அளிப்பு வழங்குநர்.

(5) ஏற்புடையற்பாலதான நிரந்தர பிணைப்பொறுப் பினால் பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட தனிசு பூரணமாக திருப்திப்படுத்தப்பட்டுள்ளதன் பின்னர், பெறுநராண்மை யிலுள்ள ஆதனத்தின் தேறிப்பெறுகையின் வரும்படிகளின் ஏதேனும் மேலதிக விநியோகம் கம்பெனிக்கு செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன் கம்பெனி ஒழித்துக்கட்டுதலில் இருப்பின், ஒழிப்போனுக்கு செய்யப்படுதல் வேண்டும்.

மிதக்கும் பொறுப்பு பெறுநர் நியமிக்கப்படுமிடத்து, முன்னுரிமை ஒழுங்கு

**386.** (1) மிதக்கும் பொறுப்பொன்றின் பயனைக் கொண்டு நியமிக்கப்பட்டவரான பெறுநரொருவருக்கு இப்பிரிவு ஏற்புடைமையாகின்றது.

(2) இப்பிரிவில், "ஏற்புடையற்பாலதான மிதக்கும் பொறுப்பு" என்பது பெறுநர் நியமிக்கப்பட்டதான பயன் மூலமான பொறுப்பு எனப் பொருள்படும்.

(3) பிரிவுகள் 234 மற்றும் 331 மற்றும் உட்பிரிவு (4) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆட்களின் உரிமைகளுக்கமைய, இப்பிரிவு ஏற்புடைமையாகின்றவரான பெறுநர் ஒருவர் ஏற்புடையற்பாலதான மிதக்கும் பொறுப்பினால் பிணைப் பொறுப்பளிக்கப்பட்ட இயைபான தேதியன்றுள்ளவாறு தீர்மானிக்கப்பட்ட தனிசில் அல்லது தனிசின் திருப்தியை நோக்கி பெறுநராண்மையில் ஆதனத்தின் தேறிப் பெறுகையின் வரும்படிகளை பிரயோகித்தல் வேண்டும்.

(4) பின்வரும் ஆட்கள் ஏற்புடையற்பாலதான மிதக்கும் பொறுப்பின் அளிப்பு பெறுநரின் முன்னுரிமையில் மற்றும் எதில் அவர்கள் பட்டியல்படுத்தப்பட்டுள்ளார்களோ அதில் முன்னுரிமை ஒழுங்கில் பெறுராண்மையிலுள்ள ஆதனத்தின் தேறிப்பெறுகையின் வரும்படிகளின் விநியோகங்களுக்கு உரித்துடையவராக்கப்படுதல் வேண்டும் :–

(அ) முதலாவதாக, கம்பெனி ஒழித்துக்கட்டலில் இருப்பின், பெறுநராண்மையிலுள்ள ஆதனத்தை பேணிக்காப்பதிலும் தேறிப் பெறுகையிலும் ஒழிப்போனால் நியாயமாக உறப்பட்ட எவையேனும் ஆகுசெலவுகளுக்காக பெறுநர்;

(ஆ) இரண்டாவதாக, இச்சட்டத்தின்கீழ் பெறுநரினால் முறையாக பெறப்பட்ட ஆகுசெலவுகளுக்காக, விதிப்பனவுகளுக்காக மற்றும் செலவினங்களுக்காக மற்றும் இச்சட்டத்தின்கீழ் பெறுநரின் ஊதியத்துக்காக பெறுநர்;

(இ) மூன்றாவதாக, இயைபான தேதியன்றுள்ளவாறு தீர்மானிக்கப்பட்ட, அளிப்பு பெறுநருக்கு வழங்குகின்ற ஏதேனும் தனிசுக்காக ஏற்புடையற்பாலதான மிதக்கும் பொறுப்புக்கு முன்னர் திரப்படுத்துகின்ற ஆதனத்தின் ஏதேனும் பாகத்தின் மீதான ஏதேனும்

நிரந்தர பாகத்தின் மீதான ஏதேனும் நிரந்தர பிணைப்பொறுப்பின் அளிப்பு வழங்குநர்;

(ஈ) நான்காவதாக, இவ்வுட்பிரிவின் (அ) மற்றும் (ஆ) என்னும் பந்திகளில் குறிப்பீடுசெய்யப்பட்டவாறான அத்தகைய ஆகுசெலவுகள், விதிப்பனவுகள் மற்றும் செலவினங்கள் தவிர, அக்கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட அளவுக்கும் முன்னுரிமை ஒழுங்குக்கும் நான்காம் அட்டவணையின் பந்திகள் 1, 2 மற்றும் 8 ஆம் பந்திகளில் தரப்பட்டுள்ள இயைபான தேதியன்றுள்ளவாறு தீர்மானிக்கப்பட்ட அவர்களுடைய உரிமைக் கோரிக்கைகளின் திருப்தியில் அல்லது திருப்தியை நோக்கி முந்துரிமை உரிமைக் கோரிக்கைகளைக் கொண்டுள்ள ஆட்கள்; அத்துடன்

(உ) ஐந்தாவதாக, இயைபான தேதியன்றுள்ளவாறு தீர்மானிக்கப்பட்ட அவ் அளிப்பு பெறுநருக்கு அளிக்கின்ற ஏதேனும் தனிசுக்காக ஏற்புடையற் பாலதான மிதக்கும் பொறுப்புக்கு முன்னர் தரவரிசைப்படுத்துகின்றதான ஆதனத்தின் ஏதேனும் பாகத்தின்மீது ஏதேனும் மிதக்கும் விதிப்பனவின் அளிப்பு பெறுநர்; அத்துடன்

(ஊ) ஆறாவதாக, ஆனால், இயைபான தேதியன்றுள்ள வாறு, தீர்மானிக்கப்பட்ட அவ்வளிப்பு பெறு நருக்கு ஏதேனும் தனிசுக்காக, கம்பெனிகள் சட்டத்தின் 341(2) ஆம் பிரிவின்கீழ் (உ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட மிதக்கும் விதிப்பனவுக்கு குறைவாக ஏற்புடையற்பாலதான மிதக்கும் விதிப்பனவுக்கு முன்னர் தரவரிசைப் படுத்துகின்ற ஆதனத்தின் ஏதேனும் பாகத்தின் மீதான ஏதேனும் நிரந்தர பிணைப்பொறுப்பின் அளிப்பு பெறுநர்.

(5) ஏற்புடையற்பாலதான மிதக்கும் பொறுப்பினால் பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட தனிசு முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட பின்னர், பெறுநராண்மையிலுள்ள ஆதனத்தின் தேறிப்பெறுகையின் வரும்படிகளின் ஏதேனும் மேலதிக விநியோகம் கம்பெனிக்கு அல்லது கம்பெனி ஒழித்துக் கட்டலில் இருப்பின், ஒழிப்போனுக்கு செய்யப்படுதல் வேண்டும்.

பணம் பெறுநரின் கடமை

**387.** பெறுநர் பெறுநராண்மையின் காரணமாகப் பெறப் பட்ட வேறேதேனும் பணத்திலிருந்து ஆனால், பெறுராண்மை யிலுள்ள ஆதனம் தொடர்பில் மற்றும் பெறுநரினால் வைத்திருக்கப்பட்ட அல்லது பெறுநரின் கட்டுப்பாட்டின்கீழ் வேறேதேனும் பணத்திலிருந்து தனிவேறான பெறுநராண்மை யிலுள்ள ஆதனம் தொடர்பிலான பணத்தை வைத்திருத்தல் வேண்டும்.

கணக்கீட்டு பதிவேடுகள் தொடர்பில் பெறுநரின் கடமை

**388.** (1) பெறுநர் ஒருவர் பெறுநராண்மையிலுள்ள ஆதனம் தொடர்பில் எல்லாப் பெறுவனவுகள், கொடுப்பன வுகள் மற்றும் வேறெல்லாக் கொடுக்கல்வாங்கல்கள், பெறுநராண்மையின் காலப்பகுதிதொடர்பில் சரியாக பதிவுசெய்து விளக்குகின்றதான கணக்கீட்டுப் பதிவேடு களை எல்லா நேரங்களிலும் வைத்திருத்தல் வேண்டும்.

(2) அக்கறைகொண்டுள்ள ஆளொருவரினால் நீதிமன்றத் துக்கான விண்ணப்பமொன்றின் மீது, நீதிமன்றம் அவசிய மானவாறு அத்தகைய நியதி நிபந்தனைகளின் மீது (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட கணக்கீட்டுப் பதிவேடு களை விண்ணப்பகாரர் பரிசோதிக்கலாம் எனக் கட்டளை யிடலாம்.

(3) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட கணக் கீட்டுப் பதிவேடுகள் பெறுநராண்மை முடிவடைந்த பின்னர் ஆகக்குறைந்தது ஐந்து ஆண்டுகளுக்கு பெறுநரினால் தக்கவைக்கப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவுக்கு இணங்கியொழுகுவதற்கு தவறுகின்ற பெறுநர் ஒருவர் தவறொன்றைப் புரிகின்றார்.

## அத்தியாயம் 5

### பெறுநரின் ஊதியம்

பெறுநரின் ஊதியம்

**389.** (1) பிரிவு 403(1)(அ) இற்கமைய, பெறுநர் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அடிப்படைகள் மற்றும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மணிநேர மற்றும் நூற்றுவீத விகிதங்கள் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட மட்டங்களின் மீது ஊதியம் பெற்றுக்கொள்வதற்கு பின்வரும் உரித்துடையவ ராதல் வேண்டும் :–

(அ) அளிப்பு வழங்குநரினால் உடன்படக்கூடியவாறு, பெறுநர் பிரிவு 372(1) இன் கீழான ஒரு சாதனத்தின் கீழ் நியமிக்கப்படுமிடத்து; அல்லது

(ஆ) நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான பிரிவு 373(1) இன் கீழ் பெறுநர் நீதிமன்றத்தினால் நியமிக்கப்படுமிடத்து,

(2) பெறுநர், ஊதியத்துக்கு மேலதிகமாக, தக்கவைக்கப் பட வேண்டிய பிரிவு 388(3) இன் கீழ் தேவைப்படக்கூடிய வாறான அத்தகைய பதிவேடுகளை களஞ்சியப்படுத்துவ தற்கான நியாயமான ஆகுசெலவுகளுக்கும் உரித்துடை யவராக்கப்படுதல் வேண்டும்.

## அத்தியாயம் 6

### பெறுநரினால் அறிக்கையிடப்படல்

பெறுநரினால் வழங்கப்படும் முதல் அறிக்கை

**390.** (1) விடயத்துக்கேற்ப, பெறுநர் ஒருவர் அல்லது பெறுநராண்மையின் முடிவில் பெறுநராகவுள்ள ஆளொருவர் பெறுநராக ஆளொருவரின் நியமனத்தின் பின்னர் இரண்டு மாதங்களினுள் பின்வருவனவுட்பட பெறுநராண்மையிலுள்ள ஆதனம் தொடர்பில் அலுவலர்களின் நிலை பற்றி அறிக்கை யொன்றைத் தயாரித்தல் வேண்டும் :-

(அ) பெறுநராண்மையிலுள்ள ஆதனத்தை உள்ளடக்கிய ஆதனத்தின் விபரங்கள்;

(ஆ) பெறுநராண்மையிலுள்ள ஆதனத்திலிருந்து திருப்திப்படக்கூடிய தனிசுகள் மற்றும் ஏனைய பொறுப்புக்கள் பற்றிய விபரங்கள்;

(இ) பெறுநராண்மையிலுள்ள ஆதனத்திலுள்ள வட்டி யுடனான கடன்கொடுநர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள்;

(ஈ) அது உருவாக்கப்பட்ட தேதி உள்ளடங்கலாக எவரேனும் கடன்கொடுநரினால் வைத்திருக்கப் பட்ட பெறுநராண்மையிலுள்ள ஆதனத்தின் மீதான ஏதேனும் வில்லங்கம் பற்றிய விபரங்கள்;

(உ) இயைபான தகவல்களைக் கிடைக்கப்பெறச் செய்வதில் அளிப்பவரினால் ஏதேனும் தவறுகையின் விபரங்கள்; அத்துடன்

(ஊ) விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு தகவல்கள்.

(2) உட்பிரிவு (1) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட அறிக்கை யானது பின்வரும் விபரங்களை உள்ளடக்கியிருத்தல வேண்டும் :–

(அ) பெறுநர் தான் அறிந்தவரை, தன் நியமனத்திற்கு வழிவகுக்கும் நிகழ்வுகள்;

(ஆ) பெறுநராண்மையிலுள்ள ஆதனத்தின் கையுதிர்க் கப்பட்ட ஆதனம் மற்றும் கையுதிர்ப்பதற்கான எவையேனும் பிரேரணைகள்;

(இ) எவ்வாளின் அக்கறைகளில் பெறுநர் நியமிக்கப் பட்டுள்ளாரோ அவ் எவரேனும் ஆளுக்கு நியமனத் தேதியன்றுள்ளவாறான சேர்மதியாக வுள்ள தொகைகள்; அத்துடன்

(ஈ) முன்னுரிமைக் கோரல்களைக் கொண்ட வழங்கு நரின் கடனாளிகளுக்கு, நியமனம் செய்யப்பட்ட திகதியின்படி, செலுத்தவேண்டிய தொகைகள்; மற்றும்

(உ) பந்தி (இ) மற்றும் பந்தி (ஈ) என்பவற்றில் குறிப்பீடு செய்யப்பட்டவற்றை தவிர, கடன் கொடுநர்களுக்கு கொடுப்பனவுக்காக கிடைக்கப் பெறும் சாத்தியமுள்ளனவான தொகைகள்.

(3) பெறுநர் தமது சேர்க்கையானது தமது பணிகளின் நிறைவேற்றுகையை முக்கியமான முறையில் பாதிக்கும் எனக் கருதின், பெறுநர் பெறுநராண்மையிலுள்ள ஆதனத்தின் கையுதிர்ப்புக்காக எவையேனும் பிரேரணைகளின் விபரங்களை (1) ஆம் உட்பிரிவின் கீழ் தயாரிக்கப்படுவதற்கு தேவைப்படும் அறிக்கையொன்றிலிருந்து தவிர்க்கலாம்.

(4) இப்பிரிவிற்கு இணங்கியொழுகுவதற்கு தவறுகின்ற ஒவ்வொரு ஆளும் தவறொன்றைப் புரிகின்றவராகின்றார்.

பெறுநரால் மேலதிக அறிக்கைகள்

**391.** (1) விடயத்துக்கேற்ப, பெறுநர் அல்லது பெறுநராண்மையின் முடிவின் இறுதியில் பெறுநராகவுள்ள ஆளொருவர் பின்வருவனவற்றின் பின்னர் இருபது வேலை நாட்களினுள் :–

(அ) பெறுநர் நியமிக்கப்பட்டதன் பின்னர் ஆறு மாதங்களின் ஒவ்வொரு காலப்பகுதியின் முடிவில்; அத்துடன்

(ஆ) பெறுநராண்மையை முடிவடைகின்ற நாளன்று,

அந்நாள்களிலுள்ளவாறான பெறுநராண்மையிலுள்ள ஆதனம் தொடர்பில் அலுவல்களின் நிலைமையை மற்றும் அறிக்கை தொடர்பிலான காலப்பகுதியின் போது பெறப்பட்ட மற்றும் செலுத்தப்பட்ட எல்லாத் தொகைகள் உள்ளடங்கலாக பெறுநராண்மையின் நடத்தை என்பவற்றை சுருக்கி மேலதிக அறிக்கையொன்றைத் தயாரித்தல் வேண்டும்.

(2) விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய வேறு தகவல்கள் :–

(அ) ஏதேனும் முன்னைய அறிக்கைத் தேதியிலிருந்து கையுதிர்க்கப்பட்ட ஆதனம் மற்றும் பெறுநராண்மையிலுள்ள ஆதனத்தின் கையுதிர்ப்புக்கான எவையேனும் பிரேரணைகள்;

(ஆ) எவ்வாளின் அக்கறையில் பெறுநர் நியமிக்கப்பட்டுள்ளாரோ அவ் எவரேனும் ஆளுக்கு அறிக்கையின் தேதியன்றுள்ளவாறாக சேர்மதியாகவுள்ள தொகைகள்;

(இ) முந்துரிமை உரிமைக்கோரிக்கைக் கொண்டுள்ள அளிப்பவரின் கடன்கொடுநர்களுக்கு அறிக்கைத் தேதியன்றுள்ளவாறான சேர்மதியாகவுள்ள தொகைகள்;

(ஈ) பந்தி (ஆ) மற்றும் பந்தி (இ) என்பவற்றில் குறிப்பீடு செய்யப்பட்டவை தவிர்ந்த கடன் கொடுநர்களுக்கான கொடுப்பனவுக்காக அறிக்கை தேதியன்றுள்ளவாறான கிடைக்கப் பெறக்கூடிய சாத்தியமுள்ள தொகைகள்; அத்துடன்

(உ) விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு தகவல்கள்.

(3) பெறுநர் தமது சேர்க்கையானது தமது பணிகளின் நிறைவேற்றுகை முக்கியமான முறையில் பாதகமான நிலையில் பாதிக்கக்கூடியது எனக் கருதின், பெறுநர் ஒருவர் பெறுநராண்மையிலுள்ள ஆதனத்தின் கையுதிர்ப்புக்காக

எவையேனும் பிரேரணைகளின் விபரங்களை உட்பிரிவு (1)(அ) என்பதன்கீழ் தயாரிக்கப்படுவதற்கு தேவைப்படும் அறிக்கையொன்றிலிருந்து தவிர்க்கலாம்.

(4) இப்பிரிவுடன் இணங்கியொழுகுவதற்கு தவறுகின்ற ஆள் ஒவ்வொருவரும் தவறொன்றைப்புரிகின்றார்.

அறிக்கைகள் தயாரிப்பதற்கான நேர நீடிப்பு

**392.** பிரிவு 390(1) அல்லது பிரிவு 391(1) இன் கீழ் ஒரு ஆள் அறிக்கையைத் தயாரிக்கவேண்டிய காலப்பகுதியொன்று அவ்வாளின் விண்ணப்பத்தின் பின்வருவனவற்றின் மூலம் நீடிக்கப்படலாம் :–

(அ) பிரிவு 373(1) இன் கீழ் ஆளொருவர் நீதிமன்றத்தினால் பெறுநராக நியமிக்கப்படுமிடத்து, நீதிமன்றம்; அல்லது

(ஆ) பிரிவு 372(1) இன் கீழான சாதனத்தின் கீழ் ஆளொருவர் பெறுநராக நியமிக்கப்படுமிடத்து, பதிவாளர்.

அறிக்கைகளை மேற்பார்வை செய்யவும் பெற்றுக் கொள்ளவும் உரித்துடைய ஆட்கள்

**393.** (1) பிரிவு 390(1) அல்லது பிரிவு 391(1) இன் கீழ் அறிக்கையொன்று தயாரிக்கப்பட்;டுள்ளவிடத்து, அதனைத் தயாரித்த ஆள் ஐந்து வேலை நாட்களுக்குள் :–

(அ) அதனை அளிப்பவருக்கு அனுப்புதல் வேண்டும்;

(ஆ) அளிப்பவர் மற்றும் உட்பிரிவு (4) இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆட்களுக்கும் அவற்றைச் சோதனையிடுவதற்கு கிடைக்கப்பெற செய்வித்தல் வேண்டும்; அத்துடன்

(இ) அளிப்பவருக்கும்; மற்றும் உட்பிரிவு (4) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆட்களுக்கும் அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது என்பதனையும் அவை பின்வருவனவற்றைக் கொண்டுள்ளன என்பதையும் பற்றிய அறிவித்தலை வழங்கச் செய்வித்தல் வேண்டும; அத்துடன்

(i) அறிக்கையானது சோதனையிடுவதற்கு கிடைக்கப்பெறும் என்பதனையும; அத்துடன்

(ii) அத்தகைய பிரதிகளை எடுத்தல் மற்றும் அனுப்புதல் ஆகியவற்றுக்கான நியாயமான

ஆகுசெலவுகள் கொடுப்பனவு செய்தல் மீதான கோரல்கள் மீது அறிக்கையின் பிரதிகள் அனுப்பி வைக்கப்படும்.

(2) பிரிவு 390(1) அல்லது 391(1) என்பவற்றின் கீழ் அறிக்கையினைத் தயாரித்த ஆள் நீதிமன்றத்தினால் பெறுநராக நியமிக்கப்படுமிடத்து, அத்தகைய ஆள் அதனை நீதிமன்றத்தின் பதிவாளருக்குக் கோப்பிடுதல் வேண்டும்.

(3) நான்காம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆள் ஒருவர் அறிக்கையினைத் தயாரித்தவரான ஆளின் அலுவலகத்தில் வழமையான வேலை நேரத்தின் போது பிரிவு 390(1) அல்லது பிரிவு 391(ii) என்பவற்றின் கீழ் தயாரிக்கப்படும் அறிக்கையொன்றை சோதனையிடுவதற்கு உரித்துடையவராவார்.

(4) பின்வருவோரிமிடமிருந்து பிரிவு 390(1) அல்லது பிரிவு 391 (1) என்பவற்றின்கீழ் தயாரிக்கப்படும் ஏதேனும் அறிக்கையின் பிரதியொன்றுக்கான வேண்டுகோள் கிடைக்கப்பெற்ற பின்னரான பத்து வேலை நாட்களினுள் மற்றும் பிரதியை ஆக்குவதில் மற்றும் அனுப்புபுதில் நியாயமான ஆகுசெலவுகளின் கொடுப்பனவின்மீது, அறிக்கையைத் தயாரிக்கின்றவரான ஆள் அதனைக் கோரியிருக்கின்றவரான ஆளுக்கு அறிக்கையின் பிரதியொன்றை அனுப்புதல் வேண்டும்.

(5) பிரிவு 390(1) அல்லது 391(1) என்பவற்றின் கீழான அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டதன் பின்னரான பத்து வேலை நாட்களினுள், அதனைத் தயாரித்த ஆள் பதிவாளருக்கும் அதிகாரசபைக்கும் பிரதியொன்றை அனுப்புதல் வேண்டும்.

(6) இப்பிரிவுடன் இனங்கியொழுகுவதற்கு தவறுகின்ற ஆள் ஒவ்வொருவரும் தவறொன்றைப் புரிகின்றவராவார்.

புரிபப்பட்ட குற்றங்களை அறிக்கையிடுவதற்கான பெறுனரின் கடமை

**394.** (1) (அ) இச்சட்டம்;

(ஆ) கம்பெனிகள் சட்டம்; அல்லது

(இ) 2021 ஆம் ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டம்,

என்பவற்றின் கீழ் கம்பெனி அல்லது ஈடுபட்டுள்ள திறத்தவர் தவறொன்றைப் புரிந்துள்ளார் என பெறுநர் நம்புகின்ற விடத்து அல்லது நம்புவதற்கான நியாயமான ஏதுக்கள் உள்ளவிடத்து,

பெறுநர் செயல்முறைக்குகந்தளவு விரைவானதாக விடயத் தினை பதிவாளருக்கும் அதிகாரிக்கும் அறிக்கையிடுதல் வேண்டும்.

(2) பதிவாளர் மற்றும் அதிகாரி தோதான சட்ட வலுவுறுத்துகை அதிகாரசபைக்கு (1) ஆம் உட்பிரிவின்கீழ் அறிக்கையிடப்பட்ட விடயமொன்றை ஆற்றுப்படுத்துதல் வேண்டும்.

(3) பெறுநர் (2) ஆம் உட்பிரிவின் கீழான சட்டவலுவுறுத் துகை அதிகாரசபைக்கு அறிக்கையிடப்பட்டதான (1) ஆம் உட்பிரிவின் கீழான கருமமொன்றின் மீதான அறிக்கை யொன்றினை ஆக்குகின்றவிடத்தான ஏதேனும் சந்தர்ப் பத்தில், பெறுநர் பின்வரும் வழிவகை மூலம் அதிகாரசபை தேவைப்படுத்தப்படக்கூடிய அத்தகைய உதவியை அதிகார சபைக்கு வழங்குதல வேண்டும் :–

(அ) தகவல்களுக்கான ஏற்பாடுகள்;

(ஆ) ஆவணங்களுக்கான அணுக்கம்; அத்துடன்

(இ) ஆவணங்களை சோதனையிடுதல் மற்றும் பிரதி யெடுப்படுப்பதற்கான வசதிகள்.

(4) இப்பிரிவில் உள்ள எதுவும் :–

(அ) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட வகை யிலான ஏதேனும் தவறு புரியப்பட்டுள்ளதா என்பதனை புலனாய்வு செய்வதற்கு பெறுநரின் மீது ஏதேனும் கடமையினை விதிக்கவில்லை; அல்லது

(ஆ) வேறு ஏதேனும் சட்டத்திலோ அல்லது பெறுநர் மீது விதிக்கப்பட்ட ஏதேனும் கடமையை பாதித்தலோ அல்லது மட்டுப்படுத்தவோ ஆகாது.

(5) உட்பிரிவு (1) அல்லது உட்பிரிவு (3) என்பவற்றுடன் இணங்கியொழுகுவதற்கு தவறுகின்ற ஒரு பெறுநர் தவறொன்றைப் புரிகின்றார்.

## அத்தியாயம் 7

### பெறுநரின் பொறுப்பு

பெறுநரின் நட்டோத்தர வாதம்

**395.** (1) பெறுநர் ஒருவர் பிரிவுகள் 396 மற்றும் 397 இன் கீழ் பெறுநரின் பொறுப்பு தொடர்பில் பெறுநராண்மை யிலுள்ள ஆதனத்திலிருந்து நட்டோத்தரவாதத்துக்கு உரித்துடையவராவார்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் பெறுநரின் நட்டோத்தர வாதமனது பிரிவு 385(4(ஆ)) அல்லது பிரிவு 386(4)(ஆ) என்பவற்றினால் முறையாக உறப்பட்ட ஆகுசெலவுகள், விதிப்பனவுகள் மற்றும் செலவுகள் என்பவற்றின் கீழான பெறுநரின் ஊதியம் என்பவற்றுக்கு இணங்க முன்னுரிமை யைக் கொண்டுள்ளார்.

(3) இப்பிரிவிலுள்ள எதுவும் :–

(அ) பெறுநர் ஒருவர் உரித்துடையவராகக் கூடிய நட்டோத்தரவாதத்தின் வேறு ஏதேனும் உரிமையை மட்டுப்படுத்தலாகாது;

(ஆ) அதிகாரமின்றி செய்யப்பட்ட உடன்படிக்கை யொன்றின் மீது பெறுநரொருவரின் பொறுப்பை மட்டுப்படுத்தலாகாது; அல்லது

(இ) அதிகாரமின்றி செய்துகொள்ளப்பட்ட உடன் படிக்கையொன்றின் மீதான பொறுப்பு தொடர்பில் நட்டோத்தரவாதத்துக்கான உரிமையொன்றை பெறுநரின்மீது அளித்தல் வேண்டும்.

முன்னர் ஏலவேயுள்ள தொழிலர் ஒப்பந்தங்களின் கீழான பெறுநரின் பொறுப்பு

**396.** (1) பின்வருமாறு இருந்தாலொழிய பெறுநர் ஒருவர் அவரின் நியமனத்தின் முன்னர் செய்துகொள்ளப்பட்ட தொழில் ஒப்பந்தம் தொடர்பாக கொடுப்பனவொன்றுக்கு ஆளாகமாட்டார் :–

(அ) பெறுநர் எழுத்துமூலம் ஒப்பந்தத்தை வெளிப் படையாக ஏற்றுக்கொண்டால்; அல்லது

(ஆ) மூன்றாம் உட்பிரிவு ஏற்புடையதாகினால்;

(2) பெறுநர் ஒருவர் தனது நியமனத்தின் முன்னர் செய்து கொண்ட தொழில் ஒப்பந்தம் தொடர்பான கொடுப்பன

வுக்காக, அந்நியமனத்துக்குப் பின்னர் பத்து வேலை நாட்களினுள், தொழிலை முடிவுறுத்தலுக்கு ஏற்புடயற்பால தான சட்டத்துக்கிணங்க, ஒப்பந்தத்தின் முடிவுறுத்துகை பற்றிய அறிவுறுத்தலை பெறுநர் கொடுப்பின், மேற்கூறப் பட்டவற்றின் பின்வருவனவரை பெறுநரின் நியமனத் தேதியிலிருந்து திரளுகின்ற :–

(அ) வேதனம் அல்லது சம்பளம்;

(ஆ) முற்கூட்டிய தனிப்பட்ட வருமான வரி;

(இ) சகாய நியதிய வருமதிகள்;

(ஈ) நியதிச்சட்ட பணிக்கொடைகள்; அத்துடன்

(உ) ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய வருமதிகள்;

மேற்கூறப்பட்டவற்றின் கொடுப்பனவுக்காக, அதாவது:–

(ஊ) (i) பெறுநராண்மையின் முடிவு;

(ii) எத்தேதியன்று பெறுநரொருவராக இல்லா தொழிக்கின்றாரோ அத்தேதி; அத்துடன்

(iii) ஒப்பந்தத்தின் முடிவுறுத்துகை தேதி; என்ப வற்றின் முன்னயதன்; அல்லது

(எ) அந்நியமனத்துக்குப் பின்னர் பத்து வேலை நாட்களினுள், தொழிலை முடிவுறுத்தலுக்கு ஏற்புடையற்பாலதான சட்டத்துக்கிணங்க, ஒப்பந்தத்தின் முடிவுறுத்துகை பற்றிய அறிவித்தலை பெறுநர் கொடுக்காதிருப்பின் :–

(i) பெறுநராண்மையின் முடிவு; அத்துடன்

(ii) பெறுநரானவர் எத்தேதியன்று பெறுநராக இல்லாதொழிகின்றாரோ அத்தேதி, என்ப வற்றின் முன்னையதன் கொடுப்பனவுக்காக ஆளாகவுள்ளார்.

(3) நீதிமன்றம் (3) ஆம் உட்பிரிவின் பந்திகள் (ஊ) மற்றும் (ஏ) வில் குறிப்பீடு செய்யப்பட்ட பத்து வேலைநாட்கள் எனும் காலப்பகுதியின் முடிவின் முன்னர் செய்யப்பட்ட பெறுநரின் விண்ணப்பத்தின் மீது அவசியமானவாறு அத்தகைய நியதி மற்றும் நியபந்தனைகளின் மீது காலப்பகுதியை நீடிக்கலாம்.

ஏனைய உடன்படிக் கைகள்

**397.** (1) பெறுநர் ஒருவர் தமது பணிகள் மற்றும் தத்துவங்களில் எவற்றையும் நிறைவேற்வதில் மற்றும் பிரயோகிப்பதில் பெறுநரினால் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையொன்றின்மீது ஆளாகின்றார்.

(2) உட்பிரிவு (1) ஆனது ஏதேனும் உடன்படிக்கைக்கு முரணாக எது எவ்வாறிருப்பினும், ஆனால், கம்பெனி அல்லது வேறு எவரேனும் ஆளுக்கெதிரான பெறுநரின் உரிமைகளுக்குப் பங்கமின்றி பயனைக் கொண்டுள்ளது.

(3) உட்பிரிவுகள் (4) மற்றும் (5) என்பவற்றுக்கமைய, பெறுநர் ஒருவர் பெறுநராண்மையிலுள்ள ஆதனத்தின் அளிப்பவரினால் பயன்பாடு, இருப்பாட்சி அல்லது உடமை தொடர்பில் பெறுநரின் நியமனத் தேதியன்றுள்ளவாறு உளதாயிருக்கின்ற உடன்படிக்கையொன்றின்கீழ் வருமதியாக வருகின்ற வாடகை மற்றும் வேறு எவையேனும் கொடுப்பனவுகளுக்காக ஆளாகின்றார்.

(4) மூன்றாம் உட்பிரிவின்கீழ் பெறுநர் ஒருவரின் பொறுப்பு பெறுநரின் நியமனத்தின் பின்னரான பத்து வேலை நாட்களினுள் தொடங்குகின்றதும் பின்வருவன வற்றின் முன்னையதாக முடிவடைகின்ற காலப்பகுதிக்கு ஏற்றிக்கூறப்படற்பாலதான வாடகையின் பாகம் அல்லது ஏனைய கொடுப்பனவுகளுக்கென மட்டுப்படுத்தப்படு கின்றது :–

(அ) பெறுராண்மையின் முடிவு;

(ஆ) பெறுநர் பெறுநராக இல்லாதொழித்துள்ளதான நாள்; அத்துடன்

(இ) அளிப்பவர் ஆதனத்தை பயன்படுத்துவதற்கு, இருப்பாட்சிகொள்வதற்கு இல்லாதொழிந்துள்ளதான நாள்.

(5) பெறுநரின் விண்ணப்பத்தின் மீது நீதிமன்றம் :–

(அ) (4) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டதை விட பாரிய அளவுக்கு பெறுநரின் பொறுப்பை வரையறுத்தல், அல்லது

(ஆ) மூன்றாம் உட்பிரிவின்கீழான பொறுப்பிலிருந்து பெறுநரை விலக்களிக்கலாம்.

(6) உட்பிரிவு (3) அல்லது உட்பிரிவு (4) இல் உள்ள எதுவும் :–

(அ) (3) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட உடன்படிக்கையின் பெறுநர் ஒருவரினால் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு உரிமையளிப்பதாக கருத்தில் கொள்ளப்படுதல் வேண்டும்; அல்லது

(ஆ) அத்தகைய உடன்படிக்கையின் கீழான வேறு ஏதேனும் கடப்பாட்டின் செயல்நிறைவேற்ற மின்மை தொடர்பில் பெறுநரை ஆளாக்குவதற்கு ஏற்பாடு செய்தல் வேண்டும்.

குறைபாடு ஏற்படும் பட்சத்தில் பொறுப்பிலிருந்தான நிவாரணம்

**398.** (1) நீதிமன்றமானது பின்வருவனவற்றில் திருப்திப் படுமிடத்து, பெறுநராண்மையின் போது உறப்பட்ட பொறுப்பிலிருந்து பெறுநராக செயலாற்றிய ஆளை நீதிமன்றம் விடுவிக்கலாம். அதாவது :-

(அ) எச்சாதனத்தினால் அல்லது நீதிமன்றக் கட்டளை யினால் பெறுநர் நியமிக்கப்பட்டாரோ அச்சாதனத்தில் அல்லது கட்டளையில் உள்ள குறைபாடொன்றின் காரணமாக தனியே உறப்பட்டதான பொறுப்பு; அத்துடன்

(ஆ) பெறுநர் நேர்மையாகவும் நியாயமாகவும் செயலாற்றியுள்ளாரென்பதுடன் அத்தகைய சூழ்நிலைகளில் பொறுப்பிலிருந்து விலக்களிக்கப் படும்.

(2) உட்பிரிவு(1) இன் கீழ் ஏதேனும் கட்டளையை ஆக்குகையில், நீதிமன்றம், அவசியமானவாறு, ஏதேனும் நியதியை அல்லது நிபந்தனையை விதிக்கலாம்.

(3) அவசியமானவாறு நீதிமன்றம் விதிக்கக்கூடியதான அத்தகைய நியதிநிபந்தனைகளுக்கமைய (1) ஆம் உட்பிரிவின் கீழ் பெறுநர் பொறுப்பிலிருந்து விடுபடுகின்ற அளவுக்கு எவ்வாளின் அக்கறையில் பெறுநர் நியமிக்கப்படாரோ அவ்வாளின் அக்கறையில் ஆளாதல் வேண்டும்.

## அத்தியாயம் 8

### பதவி வெற்றியிடம் மற்றும் பெறுநராண்மையின் முடிவு

**399.** (1) பெறுநரின் பதவி அப்பதவியை வகிக்கின்ற அவ்வாள் பின்வருமாறு செய்யின் வெற்றிடமாக வருதல் வேண்டும் :- பெறுநரின் பதவி வெற்றிடம்

(அ) உட்பிரிவு (2) கீழ் பதவி விலகுதல்;

(ஆ) இறத்தல்;

(இ) நீதிமன்றத்தால் பதவியில் இருந்து அகற்றப்படல்;

(ஈ) கடனிறுக்கவகையற்ற தொழிலரொருவராக அதன் பதிலானது இடைநிறுத்தப்பட்டு அல்லது இரத்து செய்யப்பட்டிருத்தல்; அல்லது

(உ) பிரிவு 393 இள் கீழ் பதிவாளருக்கும் அதிகார சபைக்கும் பிரிவு 391 (1) (ஆ) வின் கீழ் தயாரிக்கப்படுவதற்கு தேவைப்படும் அறிக்கை யொன்றின் பிரதியொன்றை அனுப்புதல்.

(2) பிரிவு 372(1) இன் கீழ் ஒரு சாதனத்தின் கீழ் நியமிக்கப்பட்ட ஒரு பெறுநர், விதித்துரைக்கப்படக்கூடிய வாறான அத்தகைய முறையில் யாரால் பெறுநர் நியமிக்கப் பட்டாரோ அவ்வாளினால் ஆளுக்கு இராஜினாமாச் செய்யும் பெறுநரின் உட்கருத்துடன் எழுத்துமூலமான அறிவித்தலை ஐந்து வேலை நாட்களினுள் வழங்குவதன் மூலம் பதவியிலிருந்து இராஜினாமாச் செய்யலாம்.

(3) பிரிவு 373(1) இன் கீழ் நீதிமன்றத்தால் நியமிக்கப் பட்ட பெறுநரொருவர் நீதிமன்றத்தின் அனுமதியின்றி இராஜினாமாச் செய்தலாகாது.

(4) உட்பிரிவு 1 (உ) வின்கீழ் தவிர்ந்த பெறுநரின் பதவியில் வெற்றிடமொன்று ஏற்படுமிடத்து :–

(அ) வெற்றிடமொன்றின் எழுத்து மூலமான அறிவித்தல் பதவி வெறிதாகும் ஆளினால் அல்லது அவ்வாளின் சட்டப் பிரதிநிதித்துவம் மூலம் செயலாற்றுவதற்கு இயலாதவராகவிருப்பின் பதிவாளருக்கும் அதிகார சபைக்கும் செயல்முறைக்குகந்தளவு விரைவாக வழங்குதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) ஒன்றில் வெற்றிடம் இடம்பெற்ற பின்னரான இருபது வேலைநாட்களினுள் :–

(i) பிரிவு 372 (1) இன்கீழ் சாதனமொன்றின்கீழ் பதவி வறிதாகும் ஆள் நியமிக்கப்பட்டிருப்பின், நியமனம் பெற்றவர் அவ்வுட்பிரிவின்கீழ் பதிலீடான பெறுநரொருவரை நியமிக்கலாம்; அல்லது

(ii) பதவி வெறிதாகும் ஆள் பிரிவு 373 (1) இன் கீழ் நீதிமன்றத்தினால் நியமிக்க்பபட்டிருப்பின், விண்ணப்பகாரர் அவ்வுட்பிரிவின்கீழ் மாற்றீடான பெறுநரொருவரின் நியமனத்துக் காக நீதிமன்றத்துக்கு விண்ணப்பிக்கலாம்.

(5) பெறுநராண்மை உட்பிரிவு (1) (உ) வின்கீழ் தவிர்ந்த பெறுநரின் பதவியில் வெற்றிடமொன்று ஏற்படுகின்ற விடத்து மற்றும் :–

(அ) பதவி வெற்றிடம் இடம்பெற்ற பின்னரான இருபது வேலைநாட்களினுள், நியமனமொன்று அல்லது உட்பிரிவு 4 (ஆ) வின்கீழ் விண்ணப்ப மொன்று அல்லது செய்யப்படாதுவிடின்; அல்லது

(ஆ) விண்ணப்பமொன்று உட்பிரிவு (4) (ஆ) வின் பந்தி (ii) இன்கீழ் செய்யப்பட்டு விண்ணப்பம் மறுக்கப்பட்டுள்ளவிடத்தும்,

முடிவடைதல் வேண்டும்.

(6) பிரிவு (1) (உ) என்பதன்கீழ் தவிர்ந்த, பெறுநரின் பதவியை வறிதாக்குகின்ற ஆளொருவர், செயல்முறைக் குகந்ததாகவுள்ளவிடத்து, அத்தகைய தகவலை நியாயமான வகையில் அடுத்துறுபவர் கோரக்கூடியதான ஆளின் வழியுரிமையாளருக்கு அத்தகைய உதவியையும் வழங்குதல் வேண்டும்.

(7) பெறுநரின் பதவியுள்ள வெற்றிடமொன்றை நிரப்புவ தற்கு ஆளொருவரின் விண்ணப்பத்தின்மீது நியமிக்கப்படு மிடத்து, நீதிமன்றம் பெறுநரின் பணிகள், தத்துவங்கள் மற்றும் கடமைகளை நிறைவேற்றுவதற்கும், பிரயோகிப்ப தற்கும் புரிவதற்கும் வசதிப்படுத்துவதற்கு அது அவசிய மெனக் கருதுகின்ற ஏதேனும் கட்டளையை ஆக்கலாம்.

(8) ஒன்றில் உட்பிரிவுகள் (4)(அ) மற்றும் (6) இணங்கியொழுகுவதற்குத் தவறுகின்ற ஒவ்வொரு ஆளும் தவறொன்றைப் புரிந்தவராகின்றார் என்பதுடன் ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மீது ஆளாதலும் வேண்டும்.

(9) உட்பிரிவு (7) இன் நியதிகளின்படி செய்யப்பட்ட ஏதேனும் நீதிமன்றக் கட்டளைக்கும் இணங்கியொழுகத் தவறுகின்ற ஒவ்வொரு ஆளும் இப்பிரிவின் கீழ் தவறொன்றைப் புரிந்தவராகின்றார் என்பதுடன் ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஆளாதலும் வேண்டும்.

பெறுநராண்மையின் முடிவு

**400.** (அ) பெறுநர் பின்வருமாறு திருப்திப்படும் போது பெறுநராண்மை முடிவடைகின்றது :–

(i) பெறுநர் நியமிக்கப்பட்டதன் பயனைக் கொண்டு நிரந்தர பிணைப்பொறுப்பு அல்லது மிதக்கும் பொறுப்பினால் பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட தனிசு முழுமையாக திருப்திப்பட்டுள்ள போது; அல்லது

(ii) முன்னராயின் :–

(அ) எந்த ஆதனம் தொடர்பில் பெறுநர் நியமிக்கப்பட்டாரோ அந்த ஆதனம் எல்லாம் அல்லது பெறுநராண்மையை தேவையற்ற முறையில் நீடிக்காமல் பெறுநரின் அபிப்பிராயத்தில் தேறிப்பெறப்படமுடியுமான அத்தகைய அளவிலான ஆதனம் தேறிப்பெறப்பட்டிருத்தல்; அத்துடன்

(ஆ) தேறிப்பெறப்படுதலின் வரும்படிகள் எல்லாம் பகிர்ந்தளிக்கப்பட்டிருத்தல்;

(ஆ) பிரிவு 234 ஆம் அல்லது பிரிவு 331 இன் கீழ், பெறுநராண்மை முடிவடைவதனை தேவைப்படுத்தி, ஒரு நிர்வாகியினால் அல்லது ஒழிப்போனினால் பெறுநர் ஒருவருக்கு அறிவித்தல் கொடுக்கப்பட்ட பின்னர்; அல்லது

(இ) பிரிவு 399 (5) இன் கீழ்.

பெறுநராண்மையின் முடிவு பற்றி அறிவிப்பதற்கான பெறுநரின் கடமை

**401.** (1) பெறுநராண்மையின் முடிவில் பெறுநராக இருந்த ஒருவருக்கு இப்பிரிவு ஏற்புடையதாகும்.

(2) பெறுநராண்மையின் முடிவின் பின்னரான இரண்டு வேலை நாட்களினுள், ஆள் :–

(அ) கம்பெனிக்கு அல்லது கம்பெனி ஒழித்துக் கட்டுதலில் இருப்பின் கம்பெனிக்கு பெறுநராண் மையின் முடிவு பற்றி எழுத்திலான அறிவித்தல் வழங்குதல் வேண்டும்;

(ஆ) நீதிமன்றத்தினால் பெறுநரொருவராக ஆள் நியமிக்கப்படுமிடத்து, நீதிமன்றத்தின் பதிவாள ருக்கு அறிவித்தலை கோப்பிடுதல் வேண்டும்; அத்துடன்

(இ) பதிவாளருக்கும் அதிகாரிக்கும் அறிவித்தலின் பிரதியை அனுப்புதல் வேண்டும்.

(3) இப்பிரிவுக்கு இணங்கியொழுகுவதற்கு தவறுகின்ற ஆள் ஒவ்வொருவரும் தவறொன்றைப் புரிகின்றார்.

## அத்தியாயம் 9

### பெறுநராண்மையில் நீதிமன்றத்தின் தத்துவங்கள்

அத்தியாயம் 9 பெறுநராண்மையில் நீதிமன்றத்தின் தத்துவங்கள்

**402.** (1) பெறுநரின் அல்லது அதிகாரியின் விண்ணப் பத்தின் மீது, நீதிமன்றம் :–

(அ) பெறுநரின் எவையேனும் பணிகள். தத்துவங்கள் மற்றும் கடமைகளை நிறைவேற்றுதல், பிரயோ கித்தல் அல்லது புரிதலுடன் சம்பந்தப்பட்டு எழுகின்ற ஏதேனும் கருமம் தொடர்பில் பணிப்புரை வழங்கலாம்;

(ஆ) அத்தகைய எவையேனும் பணிப்புகளை ஒழிக்கலாம் அல்லது வேறுபடுத்தலாம்.

(2) உட்பிரிவு (1) இன் கீழ் அளிக்கப்பட்டுள்ள தத்து வங்கள் :–

(அ) நீதிமன்றம் பிரயோகிக்கக்கூடிய வேறு எவை யேனும் தத்துவங்களுக்கும் மேலதிகமானதாக உள்ளன; அத்துடன்

(ஆ) விண்ணப்பம் செய்யப்படுகின்ற போது, பெறுநர் பெறுநராக செயலாற்றுவதற்கு இல்லா தொழிந்தாலுஞ்சரி அல்லது இல்லையாயினுஞ்சரி பிரயோகிக்கப்படலாம்.

(3) இப்பிரிவுக்கு இணங்கியொழுகுவதற்கு தவறுகின்ற ஆள் ஒவ்வொருவரும் தவறொன்றைப் புரிகின்றார்.

பெறுநரின் ஊதியம் அல்லது நியமனம் தொடர்பிலான கட்டளை

**403.** (1) இரண்டாம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆளொருவரின் விண்ணப்பத்தின் மீது நீதிமன்றம் :–

(அ) பிரிவு 389(1) இன் கீழ் தீர்மானிக்கப்படாதிருக்கின்ற பெறுநரின் ஊதியத்துக்கான ஏதேனும் காலப்பகுதி அல்லது செயற்பாடு தொடர்பில் சூழ்நிலைகளில் நியாயமானதான மட்டமொன்றில் அத்தகைய ஊதியத்தினை நிர்ணயிக்கலாம்;

(ஆ) பெறுநர் ஒருவர் ஏதேனும் ஆதனம் தொடர்பில் செல்லுபடியான முறையில் நியமிக்கப்பட்டிருந்தாலுஞ்சரி அல்லது இல்லையாயினுஞ்சரி அல்லது அத்தகைய பெறுநர் ஏதேனும் ஆதனத்தின் உடமை அல்லது கட்டுக்காப்பு அல்லது ஊகிக்கப்பட்ட கட்டுப்பாட்டை செல்லுபடியான முறையில் எடுத்திருந்தாலுஞ்சரி வெளிப்படுத்தலாம்.

(2) பின்வரும் ஆட்களின் எவரேனும் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நீதிமன்றத்துக்கு விண்ணப்பமொன்றை செய்யலாம் :-

(அ) பெறுநர் அல்லது பெறுநராக நியமிக்கப்படும் ஆள்;

(ஆ) ஒரு ஒழிப்போன் அல்லது இடையேற்பாட்டு ஒழிப்போன்;

(இ) ஒரு நிர்வாகி அல்லது உறுதிப் பத்திர நிர்வாகி;

(ஈ) வழங்குநர் ஒருவர்;

(உ) வழங்குநரின் தனிசு வழங்குநர்;

(ஊ) பெறுகை தொடர்பில் அக்கறையுள்ள வேறு ஆள் எவரும்;

(எ) பதிவாளர்; உட்பிரிவு (1)(ஆ) இன் படி, அல்லது

(ஏ) அதிகாரி.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் அளிக்கப்பட்ட தத்துவங்கள் விண்ணப்பம் செய்யப்பட்ட போது பெறுநராக செயலாற்றுவதற்கு இல்லாதொழிந்துள்ளாரா என பிரயோகிக்கப்படலாம்.

நீதிமன்றம் பெறுநராண்மையை மட்டுப்படுத்தலாம் அல்லது வரையறுக்கலாம்

**404.** (1) நீதிமன்றம் (2) ஆம் உட்பிரிவுக்கமைய, அளிப்பவரின் அல்லது அளிப்பவரின் ஒழிப்போனொருவரின் விண்ணப்பத்தின் மீது :-

(அ) பெறுநர் ஒருவர் குறித்துரைக்கப்பட்ட தேதி மற்றும் நேரத்திலிருந்து செயலாற்றுவதற்கு இல்லாதொழிதல் வேண்டுமென கட்டளையிடலாமென்பதுடன் பெறுநராண்மையிலுள்ள ஆதனம் தொடர்பில் வேறு எவரேனும் பெறுநரின் நியமனத்தை தடுக்கலாம்; அல்லது

(ஆ) பெறுநர் குறித்துரைக்கப்பட்ட திகதி மற்றும் நேரத்திலிருந்து பெறுநராண்மையிலுள்ள ஆதனத்தின் குறித்துரைக்கப்பட்ட ஆதன உருவாக்கம் பகுதி தொடர்பில் மட்டும் செயலாற்றுதல் வேண்டுமெனக் கட்டளையிடலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழான கட்டளையொன்று பின்வருமாறு நீதிமன்றம் திருப்திப்படுமிடத்து செய்யப்படலாம்.

(3) நீதிமன்றம் வேறுவகையில் கட்டளையிட்டாலொழிய, இப்பிரிவின் கீழான விண்ணப்பமொன்றின் பிரதியொன்று விண்ணப்பம் விசாரிக்கப்படுவதற்கு முன்னரான ஆகக் குறைந்தது ஐந்து வேலைநாட்களில் பெறுநருக்கு அனுப்பப்படுதல் வேண்டுமென்பதுடன் பெறுநர் விசாரணையில் தோன்றலாம் என்பதுடன் விசாரிக்கவும்படலாம்.

பெறுநரின் கடமைகளை வலுவுறுத்துவதற்கான கடமைகள்

**405.** (1) இப்பிரிவில் பெறுநர் ஒருவர் தொடர்பில் “இணங்கியொழுகுவதற்கான தவறுகை” என்பது பின்வருவாறு எழுகின்ற கடமையுடன் இணங்கியொழுகுவதற்கு பெறுநரினாலான (செயல் மூலம் அல்லது செய்யாமைமூலம்) தவறுகை எனப் கொருள்படும் :–

(அ) எந்த சாதனத்தின் கீழ் அல்லது நீதிமன்றக் கட்டளைமூலம் அல்லது அதன்கீழ் பெறுநர் நியமிக்கப்பட்டாரோ அந்த சாதனத்தின் அல்லது நீதிமன்றக் கட்டளையின்கீழ்; அல்லது

(ஆ) இச்சட்டத்தின் அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ்; அல்லது

(இ) இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளைக்கு இணங்கியொழுகுதல் தவிர்ந்த நீதிமன்றத்தின் ஏதேனும் கட்டளை அல்லது பணிப்பின்கீழ் மற்றும் இணங்கியொழுகுதல் என்பது நேரொத்த பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) மூன்றாம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆளொருவரின் விண்ணப்பத்தின் மீது மற்றும் இணங்கியொழுகுவதற்கான தவறுகை ஒன்று உள்ளது அல்லது இருந்துள்ளது என நீதிமன்றம் திருப்திப்படுமிடத்து, நீதிமன்றம் :–

(அ) கடமை மீறுகை தொடர்பில் கிடைக்கப்பெறக் கூடியனவான வேறு ஏதேனும் உரிமைக்கு அல்லது நிவாரணத்துக்குப் பங்கமின்றி, கட்டளையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான வரை ஏற்புடயற்பாலதான கடமையுடன் இணங்கியொழுகுவதற்கு பெறுநரை கட்டளையிடலாம்; அல்லது

(ஆ) முழுமையாக அல்லது பகுதியளவில் ஏற்புடயற்பாலதான கடமையுடன் இணங்கியொழுகுவதற்கான கடமையின் பெறுநரைவிடுவிக்கலாம்.

(3) பின்வரும் ஆட்களின் எவரேனும் (2) ஆம் உட்பிரிவின்கீழ் நீதிமன்றத்துக்கு விண்ணப்பமொன்றை செய்யலாம் :–

(அ) அளிப்பவரின் ஆதனத்தின் வேறொரு பெறுநரினால் இணங்கியொழுவதற்கான தவறுகை தொடர்பிலான பெறுநர் ஒருவர்;

(ஆ) அளிப்பவர்;

(இ) அளிப்பவரின் கடன்கொடுநர் ஒருவர்;

(ஈ) பெறுநராண்மையிலுள்ள ஆதனத்தில் அக்கறை யுடனான வேறு எவரேனும் ஆள்;

(உ) அளிப்பவரின் ஒழிப்போன் அல்லது தற்காலிக ஒழிப்போன்;

(ஊ) அளிப்பவரின் நிருவாகி அல்லது உறுதி நிருவாகி;

(எ) பதிவாளர்; அல்லது

(ஏ) அதிகாரி.

(4) விண்ணப்பத்தின் முன்னர் ஆகக்குறைந்தது பத்து வேலை நாட்களினுள் பெறுநரின் மீது இணங்கியொழுவ தற்கு தவறியமை பற்றிய அறிவித்தல் சேர்ப்பிக்கப் பட்டிருந்தாலொழிய, மற்றும் விண்ணப்பத் தேதியன்றுள்ள வாறு, தொடர்சியான இணங்கியொழுகுவதற்கான தவறுகை யிருந்தாலொழிய, (2) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட லாகாது.

(5) உட்பிரிவு (2) (அ) வின்கீழ் செய்யப்பட்ட ஒவ்வொரு கட்டளையின் பிரதியொன்று கட்டளை ஆக்கியதன் பின்னரான ஐந்து வேலை நாட்களினுள் அதிகார சபைக்கு நீதிமன்றத்தினால் அனுப்பப்படுதல் வேண்டும்.

நீதிமன்றத் தினால் பதவியிலிருந்து பெறுநரை அகற்றுதல்

**406.** (1) உட்பிரிவு 405 (3) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆளின் விண்ணப்பத்தின்மீது மற்றும் நீதிமன்றம் பின்வரு மாறு திருப்திப்படுமிடத்து :–

(அ) உட்பிரிவு 405 (2)(அ) இன்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றுடன் இணங்கியொழுவதற்கு தவறியுள்ளார்; அல்லது

(ஆ) பெறுநராக நியமிக்கப்படுவதற்கு அல்லது செயலாற்றுவதற்கு 370 ஆம் பிரிவின் கீழ் அனுமதிக்கப்படுவதற்கு இல்லாதொழித் துள்ளமை,

நீதிமன்றம் சொல்லப்பட்ட பெறுநரை பதவியிலிருந்து அகற்றுகின்ற கட்டளையொன்றை ஆக்கலாம் என்பதுடன் அத்தகைய கட்டளையொன்றை ஆக்குகையில், அவசியமான வாறான வேறு ஏதேனும் துணைக்கட்டளையொன்றை ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளை ஒவ்வொன்றினதும் பிரதியொன்று கட்டளை ஆக்கப் பட்டதன் பின்னரான ஐந்து வேலைநாட்களினுள் பதிவாள ருக்கும் அதிகாரசபைக்கும் நீதிமன்றத்தினால் அனுப்பப் படுதல் வேண்டும்.

பெறுநராண் மையிலுள்ள ஆதனத்தை பாதுகாப்பதற் கான கட்டளைகள்

**407.** நீதிமன்றம் பதவியிலிருந்து பெறுநர் ஒருவரை அகற்றுகின்றதான அல்லது அகற்றுகின்றதான அல்லது அகற்றுகின்ற பயனைக் கொண்டுள்ளதான கட்டளை யொன்றை ஆக்குவதில் அவசியமான அத்தகைய கட்டளை களை பின்வருவனவற்றுக்காக ஆக்கலாம் :–

(அ) பெறுநராண்மையிலுள்ள ஆதனத்தைப் பாதுகாப் பதற்காக; அத்துடன்

(ஆ) பின்வருவனவற்றுக்காக பதவியிலிருந்து ஆற்றப் பட்ட ஆளை தேவைப்படுத்துகின்ற அந்நோக்கத் துக்காக :-

(i) கட்டளையில் குறித்துரைக்கப்படக் கூடியதான பெறுநரின் உடமையில் அல்லது கட்டுக்காப்பில் அல்லது கட்டுப்பாட்டின் கீழுள்ள எவையேனும் ஆவணங்களை கட்டளையில் குறித்துரைக்கப்படக்கூடிய வாறான அத்தகைய ஆளுக்கு ஒப்படைத் தலுக்கு; அத்துடன்

(ii) அவசியமானவாறு அத்தகைய வேறு நடவடிக்கையை எடுப்பதற்கு.

## பகுதி XIV

### எல்லை மீறிய கடனிறுக்கவியலாமை

**408.** (1) ஒரு வெளிநாட்டுக் கம்பெனியை ஒழித்துக் கட்டுவதற்காக நீதிமன்றத்தில் விண்ணப்பமொன்று செய்யப் படலாம். வெளிநாட்டுக் கம்பெனிகள்

(2) வெளிநாட்டு கம்பெனியாக இருந்தாலுஞ்சரி இல்லா விட்டாலுஞ்சரி (1) உட்பிரிவின் கீழ் விண்ணப்பமொன்று பின்வருமாறிருப்பின் செய்யப்படலாம் :-

(அ) ஒரு பதிவு செய்யப்பட்ட வெளிநாட்டு கம்பெனி;

(ஆ) இக்கம்பெனிக்கு இலங்கையில் தொழில் இடத்தினைக் கொண்டிருப்பதற்கு அது இல்லாதொழிக்கப்பட்டுள்ளதென கம்பெனிகள் சட்டத்தின் 496 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல் வழங்கப்பட்டிருந்தால்; அல்லது

(இ) வேறு ஏதேனும் நியாயாதிக்கத்தின் சட்டங்களின் கீழ் அல்லது பயனைக் கொண்டு கம்பெனி யொன்றாக கலைக்கப்படுகின்றதென அல்லது வேறுவகையில் இருப்பதற்கு இல்லாதொழிக் கின்றதென.

(3) பாகம் XII பின்வருவன தவிர வெளிநாட்டுக் கம்பெனி யொன்றின் ஒழித்துக்கட்டுதலுக்கு ஏற்புடையாகின்றது :-

(அ) கம்பெனியொன்றுக்கான குறிப்பீடுகள் வெளி நாட்டுக் கம்பெனியொன்றுக்கான குறிப்பீடுகளை உள்ளடக்குவதற்கு நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டுமென; அத்துடன்

(ஆ) பிரிவு 349 ஏற்புடமையாதலாகாதென.

## பகுதி XV

## கடனிறுக்கவகையிண்மை

### அத்தியாயம் 1

### தனிசுகளைச் செலுத்த இயலாமை மற்றும் பிழையான வியாபாரஞ் செய்தல்

தனிசுகளை செலுத்துவதற் கான இயலாமை

**409.** (1) ஒரு தனியாள் நிலுவையாக வருகின்றதான தனிசுகளை அத்தகைய ஆள் செலுத்துவதற்கு இல்லாதவராக வுள்ளவிடத்து, கடனிறுக்கவகையற்றவராகின்றார்.

(2) கம்பெனி தனது வழமையான தொழிலில் வருமதியாக வுள்ளதான அதன் தனிசுகளை செலுத்துவதற்கு இயலாதவ ராகவுள்ளவிடத்து, கம்பெனியொன்று வகையற்றதாகும்.

(3) உட்பிரிவு (1) அல்லது உட்பிரிவு (2) இனுள் கடனிறுக்கவகையின்மை ஏதேனும் சான்று மூலம் எண்பிக்கப்படலாம்.

(4) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, பின்வருமாறு உள்ளவிடத்து, (2) ஆம் உட்பிரிவின் கருத்தினுள் வகை யற்றவராகவிருப்பாதற்கான முரணானது எண்பிக்கப்பட்டா லொழிய, கம்பெனியொன்று ஊக்கப்படுதல் வேண்டும் :-

(அ) கடன்கொடுநர் ஒப்படைப்பின்மூலம் அல்லது வேறுவகையில் யாருக்கு கம்பெனி விதித்துரைக் கப்படக்கூடியவாறான அத்தகைய தொகையை விஞ்சுகின்றதான அப்போது வருமதியாகவுள்ள தொகையொன்றால் கடன்படுகையிலுள்ளதோ அவ்வாளுக்கு அல்லது வருமதியாகவுள்ள அல்லது பிணைப்பொறுப்பான அல்லது அதற்கு இணங்கு கின்றதான தொகையை செலுத்துவதற்கு தேவைப் படுகின்ற நியதிச்சட்டக் கோரிக்கையொன்றை கம்பெனியின் மீது வழங்கியுள்ளவிடத்தும் கம்பெனி கடன்கொடுநரின் நியாயமான திருப் திக்கு அதற்கான தொகை அல்லது பிணைப் பொறுப்பளித்தல் அல்லது இணக்குகின்றமையைச் செலுத்துவதன் மூலமான கோரிக்கையுடன் இணங்கியொழுகுவதற்கான நியாயமான காரண மின்றி சேவை தவறிய தேதியிலிருந்து இருபத்தி யொரு நாட்களைக் கொண்டிருக்கின்றவிடத்து,

(ஆ) கம்பெனியின் கடன் கொடுநரின் சார்பில் ஏதேனும் நீதிமன்றத்தின் தீர்ப்பு, தீர்வை அல்லது கட்டளையொன்றின் மீதான நிறைவேற்றம் அல்லது அறவிடப்பட்ட செயல்முறையானது முழுமையாக அல்லது பகுதியளவில் திருப்தி யற்றதாக மீளத்திரும்புமிடத்து.

நீதிமன்றம் கோரிக்கையை புறத்தொதுக் கலாம்

**410.** (1) கம்பெனியின் விண்ணப்பத்தின் மீது, பின்வரு மாறு திருப்திப்படுமிடத்து, நீதிமன்றம் ஒரு நியதிச்சட்டக் கோரிக்கையை புறத்தொதுக்கலாம் :-

(அ) தொகையானது கணிசமான அளவில் தோன்று கின்றதான ஏதுக்களின் மீது பிணக்கிலுள்ளது;

(ஆ) கம்பெனி எதிர்க்கோரிக்கை, எதிரீடு அல்லது குறுக்கு கோரிக்கையை கொண்டுள்ளது எனவும் அல்லது எதிர்கோரிக்கை, எதிரீடு அல்லது குறுக்கு கோரிக்கையின் தொகையை விட குறைவான கோரிக்கையில் குறித்துரைக்கப்பட்ட தொகையானது விதித்துரைக்கப்பட்ட தொகையை விஞ்சியிருக்காது எனவும் தோன்றுகின்றனவும்; அல்லது

(இ) கோரிக்கையானது வேறு சில காரணத்துக்காக புறத்தொதுக்கப்படுதல் வேண்டும்.

(2) உட்பிரிவு (1) இன் கீழான விண்ணப்பமொன்று :-

(அ) கம்பெனி மீதான கோரிக்கையின் சேவையின் பின்னரான பத்து வேலை நாட்களுக்குள் செய்யப் படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) இவ்வாறான படிவம் பரிந்துரைக்கப்படலாம்.

(2) உட்பிரிவு (1) இன் கீழ் ஒரு விண்ணப்பம் கோரிக்கைக்கு இணங்குவதற்கான நேரத்தைத் தாமதப் படுத்துகிறது.

(3) உட்பிரிவு (1) இன் கீழ் ஒரு விண்ணப்பத்தை நீதிமன்றம் நிராகரித்தால், கோரிக்கைக்கு இணங்கு வதற்கான நேரம் மறுக்கப்பட்ட திகதியிலிருந்து மீண்டும் செயற்படும்.

(4) உட்பிரிவு (1) இன் கீழ் நீதிமன்றம் தேவைக்கேற்ப கட்டளையொன்றைப் பிறப்பிக்கலாம் :-

(அ) ஏதேனும் நியதியை அல்லது நிபந்தனையை விதிக்கலாம்;

(ஆ) வேறு ஏதேனும் துணைக் கட்டளையைப் பிறப்பிக்கலாம்.

பிழையாக வர்த்தகம் செய்தல்

**411.** (1) வழமையான தொழிலின் போது வருமதியாக வருகின்றதான அதன் தனிசைச் செலுத்துவதற்கு அல்லது அதன் பின்னர் நியாமான நேரத்தினுள் கம்பெனி இயலாதிருக்கின்றதென நம்புகின்ற ஒரு கம்பெனியின் பணிப்பாளர், இவ்வுட்பிரிவின் கீழ் ஏற்கனவே கூட்ட மொன்று கூட்டப்படாதவிடத்து, உடனடியாக பின்வருவன வற்றை கவனத்துட் கொள்வதற்கு கம்பெனியின் பணிப் பாளர்களின் கூட்டமொன்றை கூட்டுதல் வேண்டும் :-

(அ) கம்பெனி வழமையான தொழிலின் போது அல்லது அதன் பின்னரான நியாயமான நேரத்தினுள் வருமதியாக வருகின்ற அதன் தனிசுகளைச் செலுத்துவதற்கு இயலாததாகவருக்கின்றாரா; அத்துடன்

(ஆ) கம்பெனியின் சபை -

(i) பிரிவு 186 இன் கீழ் கம்பெனிக்கு நிருவாகி ஒருவர் நியமிக்கப்பட வேண்டும் என்று தீர்மானித்ததா;

(ii) கம்பெனியின் நிர்வாகியை நியமிப்பதற்காக பிரிவு 190(1)(ஆ) இன் கீழ் நீதிமன்றத்துக்கு விண்ணப்பமொன்றைச் செய்துள்ளதா; அல்லது

(iii) கம்பெனியின் ஒழிப்போனொருவரின் நியமனத்துக்காக.

(2) (அ) ஓராம் உட்பிரிவுடன் இணங்கியொழுகுவதற்கு பணிப்பாளர் ஒருவர் தவறுகின்றவிடத்து;

(ஆ) தவறுகையின் போது, வழமையான தொழிலின் போது அல்லது அதன் பின்னரான நியாயமான நேரத்தினுள் வருமதியாக வந்தவர்களின் தனிசுகளை செலுத்துவதற்கு கம்பெனி இயலாத தாகவுள்ளவிடத்து; அத்துடன்

(இ) கம்பெனியின் ஒழித்துக்கட்டுதலொன்று அதன் பின்னர் ஐந்து ஆண்டுகளினுள் தொடங்குகின்ற விடத்து, நீதிமன்றம் ஒழிப்போனின் அல்லது கடன்கொடுநர் ஒருவரின் விண்ணப்பத்தின் மீது நீதிமன்றம் எண்ணக்கூடியவாறான தவறுகையின் நேரத்தில் நிருவாகத்தில் அல்லது ஒழித்துக்கட்டுதலில் இயம்பாத கம்பெனியின் விளைவொன்றாக கடன்கொடுநர்களினால் பாதிப்புற்ற ஏதேனும் இழப்பீடு முழுமையான அல்லது பாகத்துக்கு பணிப்பாளர் ஆளாதல் வேண்டுமென கட்டளையிடலாம்.

(3) (அ) ஒன்றில் -

(i) ஓராம் உட்பிரிவின் கீழ் கூட்டமொன்று கூட்டப்படுகின்றவிடத்து ஆனால் அதனை வைத்திருப்பதற்கு தவறுகின்றவிடத்து; அல்லது

(ii) ஓராம் உட்பிரிவின்கீழ் கூட்டப்பட்ட கூட்ட மொன்று, பணிப்பாளர்கள் (i) ஆம் உட் பிரிவின் பந்திகள் (ஆ) (i), (ஆ) (ii) மற்றும் (ஆ)(iii) என்பவற்றில் தரப்பட்டுள்ள படிகளில் ஒன்றை எடுப்பதற்கு தவறியுள்ள விடத்து;

(ஆ) அத்தவறுகையின் நேரத்தில், கம்பெனி வழமை யான தொழிலின் போது அல்லது அதன் பின்னர் நியாயமான காலத்தினுள் வருமதியாக வந்தமையான அதன் தனிசுகளை செலுத்துவதற்கு கம்பெனி இயலுமானதாக உள்ளதென நம்புவதற்கான நியாயமான ஏதுக்கள் எவையும் இல்லாதவிடத்து, அத்துடன்

(இ) கம்பெனியின் ஒழித்துக்கட்டுதலொன்று அதன் பின்னர் ஐந்து ஆண்டுகளினுள் தொடங்குகின்ற விடத்து,

நீதிமன்றம் (1) ஆம் உட்பிரிவின் (ஆ)(i), (ஆ)(ii) மற்றும் (ஆ)(iii) என்னும் பந்திகளில் தரப்பட்டுள்ள படிகளில் ஒன்றை எடுப்பதன் சார்பில் கூட்டத்துக்கு சமுமளித்து வாக்களித் தவரான அப்பணிப்பாளர்கள் தவிர்ந்த கம்பெனியின், நீதிமன்றம் பொருத்தமானது என எண்ணக்கூடியவாறான தவறுகையின் நேரத்தில் நிருவாகத்தினுள் அல்லது ஒழித்துக் கட்டுதலில் இடப்பட்டிருக்கின்ற கம்பெனியின் விளை வொன்றாக கடன்கொடுநர்களினால் பாதிப்புற்ற ஏதேனும் முழுமையான அல்லது பகுதியளவிலான இழப்புக்கு ஆளாதல் வேண்டும்.

(4) இப்பிரிவின் கீழான கட்டளையொன்றை ஆக்குவதில், நீதிமன்றம் அவசியமானவாறு :-

(அ) இழப்பின் அறவீடு தொடர்பில் ஏதேனும் நியதி அல்லது நிபந்தனையை விதிக்கலாம்; அத்துடன்

(ஆ) வேறு ஏதேனும் துணைக்கட்டளையை ஆக்கலாம்.

(5) இப்பிரிவிலுள்ள எதுவும் :-

(அ) கம்பெனிகள் சட்டத்தின் 187 ஆம் பிரிவின் விண்ணப்பத்தினை பாதித்தலாகாது அல்லது மட்டுப்படுத்தலாகாது; அல்லது

(ஆ) பின்வருவனவற்றுள் கம்பெனியின் தீர்மான மொன்றினை கருத்தில் கொள்வதற்கு பங்கு தாரர்களின் கூட்டமொன்றைக் கூட்டுவதிலிருந்து கம்பெனியொன்றின் சபையை தடுத்தலாகாது -

(i) பிரிவு 185 இன்கீழ் நிருவாகியொருவரின் நியமனத்துக்காக;

(ii) நிருவாகியொருவரின் நியமனத்துக்காக பிரிவு 190(1)(ஆ) என்பதன் கீழான நீதிமன்றத்துக் கான விண்ணப்பமொன்று; அல்லது

(iii) ஒழிப்போனின் நியமனத்துக்காக பிரிவு 298(2)(இ) என்பதன் கீழ் நீதிமன்றத்துக்கான விண்ணப்பமொன்று.

## அத்தியாயம் 2

### வறிதாக்கப்படற்பாலதான கொடுக்கல்வாங்கல்கள்

வறிதாக்கப்படற்பாலதான கொடுக்கல் வாங்கல்கள்

**412.** (1) கடனாளியினால் கொடுக்கல்வாங்கல், பதவி வகிப்பவரின் விண்ணப்பத்தின் மீது நீதிமன்றத்தால் புறத்தொதுக்கி வைக்கப்படலாம் :-

(அ) கடனாளி கடனிறுக்கவகையற்றவராகும் போதான நேரத்தில் செய்யப்பட்டுள்ளவிடத்து;

(ஆ) கடனாளியின் வங்கிமுறிவு அல்லது ஒழித்துக் கட்டுதலில் அவ்வாள் பெறக்கூடிய அல்லது பெறக்கூடிய சாத்தியமுள்ளதை விட கடனாளி யினால் தனிசின் திருப்தியில் அல்லது திருப்தியை நோக்கி கூடுதலானதைப் பெற்றுக்கொள்வதற்கு ஆளொருவர் இயலச்செய்யுமிடத்து; அத்துடன்

(இ) ஒன்றில் -

(i) நியாயமான மீளாய்வு காலப்பகுதியினுள் செய்துகொள்ளப்பட்ட கடனாளியின் சம்பந்தப் பட்ட திறத்தவர் தவிர்ந்த, ஆளொருவருடன் செய்துகொள்ளப்படின்; அல்லது

(ii) கடனாளியின் சம்பந்தப்பட்ட திறத்தவருடன் செய்துகொள்ளப்படின், சம்பந்தப்பட்ட திறத்தவர் மீளாய்வு காலப்பகுதியினுள் செய்து கொள்ளப்பட்டது.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, முரணானது எண்பித்தாலொழிய, நியம மீளாய்வுக் காலப்பகுதியினுள் பதிவு செய்யப்பட்ட கொடுக்கல்வாங்கலொன்று கடனாளி வகையற்றவராக வரும்போதான நேரத்தில் பதிவு செய்யப் பட்டதாக ஊகிக்கப்படுகின்றது.

(3) (அ) கொடுக்கல்வாங்கலொன்று வர்த்தக நோக்கங் களுக்காக உள்ளவிடத்து, ஏனைய ஆட்கள் திறத்த வர்களாகவுள்ள உறவுமுறை உள்ளடங்கலாக, கடனாளி மற்றும் கடன்கொடுநருக்கிடையில் நடப்புக்களுக்கு போன்றதான தொடர்ச்சியான தொழில்உறவு முறையின் உள்ளார்ந்த பாக மொன்று; அத்துடன்

(ஆ) உறவுமுறையின்போது, கடன்கொடுநருக்கான கடனாளியின் தேறிய கடன்படுகையின் மட்டம் கொடுக்கல் வாங்கல்களின் தொடர்கள் உறவு முறையின் பாகம் என்பதனால் காலத்துக்குக் காலம் அதிகரித்துள்ளது மற்றும் குறைந்துள்ளது.

(இ) ஓராம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை கருத்திற்கொண்டு, அவை ஒற்றைக் கொடுக்கல் வாங்கலொன்றை ஒன்றாக அமைத்துரு வாக்குமாயின், உறவுமுறையின் பாகத்தை அமைக்கின்ற எல்லாக் கொடுக்கல்வாங்கல் கள் தொடர்பிலும் ஏற்புடமையாகின்றது.

(4) மூன்றாம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட கொடுக்கல்வாங்கல் (3) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்திக்கிணங்க (1) ஆம் உட்பிரிவு ஏற்புடைமையாகின்றதன் பயன் வறிதாக்கப்படற்பாலதான முந்துரிமையாக எடுக்கப்பட்டாலொழிய, உட்பிரிவு (3) இன் (இ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட ஒற்றைக் கொடுக்கல்வாங்கலானது வறிதாக்கப்படற்பாலதான முந்துரிமையாக எடுக்கப்படுதல் வேண்டும்.

(5) ஒரு வறிதாக்கப்படற்பாலதான முன்னுரிமை என்பது உட்பிரிவு (1) இன் கீழ் புறத்தொதுக்கப்படக்கூடியவாறான வைக்கப்படும் கொடுக்கல் வாங்கல் ஒன்றாகும்.

வறிதாக்கப் படற்பாலதான வில்லங்கம்

**413.** (1) மூன்றாம் மற்றும் (5) ஆம் உட்பிரிவுகளுக் கமைய, கடனாளியின் ஏதேனும் ஆதனத்தின் மீது அல்லது பொறுப்பு முயற்சியின் மீது ஒரு சோந்தை தவிர்ந்த, வில்லங்கமொன்று பின்வருமாறுள்ளவிடத்து, இயைபான பதவிவகிப்பவரொருவரின் விண்ணபத்தின் மீது புறத் தொதுக்கப்பட்டலாம் :-

(அ) வில்லங்கமொன்று அளிக்கப்பட்டதன் பின்னர் உடனடுத்து, கடனாளி வகையற்றவராகின்ற விடத்து; அத்துடன்

(ஆ) ஒன்றில் -

(i) வில்லங்கங்கம் கடனாளியின் சம்பந்தப்பட்ட திறத்தவர் தவிர்ந்த ஆளின் சார்பில் அளிக்கப் பட்டிருப்பின் அது நியாயமான மீளாய்வு காலப்பகுதியினுள் அளிக்கப்படும்; அல்லது

(ii) வில்லங்கம் கடனாளியின் சம்பந்தப்பட்ட திறத்தவரின் மீளாய்வுக் காலப்பகுதியினுள் அளிக்கப்படும்.

(2) ஓராம் உட்பிரின் நோக்கங்களுக்காக, முரண்பாடு எண்பித்தாலொழிய, நியாயமான மீளாய்வு காலப்பகுதி

யினுள் வில்லங்கமொன்றை அளிக்கின்ற கடனாளி யொருவர், வில்லங்கமொன்று அளித்ததன் உடன் பின்னர் வகையற்றவராகவுள்ளார் என ஊகிக்கப்படும்.

(3) உட்பிரிவு 4 இற்கமைய, வில்லங்கமொன்று பின்வருமாறுள்ளவிடத்து, (1) ஆம் உட்பிரிவின்கீழ் புறத்தொதுக்கப்பட முடியாது :–

(அ) பின்வருமாறு வில்லங்கம் பிணைப் பொறுப் பளிக்கின்றவிடத்து –

(i) வில்லங்கமொன்றின் அளிப்பின் பின்னரான நேரத்தில் அல்லது ஏதேனும் அந்நேரத்தில் கடனாளிக்கு வில்லங்கமொன்றின் அளிப்பு பெறுநரினால் நல்லெண்ணத்தில் விற்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட அல்லது வேறு ஏதேனும் பெறுதியான பிரதிபயனாக வழங்கப்பட்ட ஆதனத்தின் முற்பணமாக செலுத்தப்பட்ட அல்லது செலுத்தப்பட்ட உண்மையான பயம் அல்லது உண்மையான விலை அல்லது பெறுமதி; அத்துடன்

(ii) உட்பந்தி (i) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட தொகையொன்றின் மீது செலுத்தப்படற்பால தான ஏதேனும் வட்டி; அல்லது

(ஆ) ஒன்றில் -

(i) கடனாளியின் சம்மந்தப்பட்ட திறந்தவ ரொருவர் தவிர்ந்த ஆளொருவரின் சார்பில் கொடுக்கப்படின், நியம மீளாய்வு காலப் பகுதியின் முன்னர் அளிக்கப்பட்டது; அல்லது

(ii) கடனாளியின் சம்பந்தப்பட்ட திறத்தவ ரொருவரின் சார்பில் கொடுக்கப்படின், சம்பந்தப்பட்ட திறத்தவர் மீளாய்வு காலப் பகுதியின் முன்னர் கொடுக்கப்படின், வில்லங்கமொன்றுக்கு பதிலீடாக உள்ளது.

(4) உட்பிரிவு –

(அ) பதிலீடான வில்லங்கமொன்றினால் பிணைப் பொறுப்பளிக்கப்பட்ட தொகை ஏலவேயுள்ள

வில்லங்கத்தினால் பிணைப் பொறுப்பளிக்கப் பட்டதான தொகை; அல்லது

(ஆ) பதிலீட்டுத் தேதியில் உள்ளவாறான பதிலீட்டு வில்லங்கத்துக்கான ஆதனத்தின் பெறுமதி தேதியன்றுள்ளவாறு ஏலவேயுள்ள வில்லங்கத் துக்கமைந்த ஆதனத்தின் பெறுமதியை விஞ்சு கின்றதான.

(5) வில்லங்கமொன்று அவ்வாவனத்தின் மீது கொடுக் கப்பட்டாலுஞ்சரி அல்லது இல்லையாயினுஞ்சரி, பின்வருமாறு வில்லங்கத்தை உருவாக்குகின்ற சாதனம் நிறைவேற்றப்படின், அது ஆதனத்தின் செலுத்தப்படாத கொள்ளளவு விலையை மற்றும் அத்தகைய மீது செலுத்தப்படற்பாலதான ஏதேனும் வட்டியை பிணைப் பொறுப்பளிக்கின்றவிடத்து (1) ஆம் உட்பிரிவின்கீழ் புறத்தொதுக்கப்படமுடியாது :-

(அ) ஆதனத்தின் விற்பனையின் பின்னரான இருபது வேலை நாட்களினுள்; அல்லது

(ஆ) அசையாத ஆதனத்தின் விற்பனை அல்லது அசையாத ஆதனத்திலுள்ள அக்கறை எனும் சந்தர்ப்பத்தில், விற்பனையின் இறுதி கொடுத்து தீர்த்தலின் பின்னரான இருபது வேலை நாட்களினுள்.

(6) கடனாளி உட்பிரிவு (1) (ஆ) விலுள்ள நிபந்தனை ஈடுசெய்கின்றதான வில்லங்கத்தின் அளிப்புபெறுநருக்கு கொடுப்பனவொன்றை செய்கின்றவிடத்து, உட்பிரிவுகள் (3) (அ) மற்றும் (5) என்பவற்றின் நோக்கங்களுக்காக, பந்திகள் (அ)இ (ஆ) மற்றும் (இ) என்பவற்றில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் தொகையின் மீது செலுத்தப்படற் பாலதான வட்டி உள்ளடங்கலாக, கொடுப்பனவானது பின்வருவனவற்றை நோக்கி, அவசியமான அளவுக்கு தோதானதாக கொண்டுள்ளது என கருதப்படுதல் வேண்டும் :-

(அ) வில்லங்கத்தின் வழங்குதலின் மீது அல்லது அதன் பின்னர் கடனாளிக்கு வில்லங்கத்தின் அளிப்பவ ரினால் உண்மையாக முற்பணமாக கொடுக்கப் பட்ட அல்லது செலுத்தப்பட்ட பணத்தின் மீள்கொடுப்பனவை;

(ஆ) வில்லங்கத்தின் வழங்குதலின் மீது அல்லது அதன் பின்னர் கடனாளிக்கு வில்லங்கத்தின் அளிப் பவரினால் விற்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட ஆதனத்தின் உண்மையான விலை அல்லது பெறுமதியின் கொடுப்பனவை;

(இ) வில்லங்கத்தின் வழங்குதலின்மீது அல்லது அதன் பின்னர் நல்லெண்ணத்தில் கொடுக்கப்பட்ட வேறு ஏதேனும் பெறுமதியான பிரதிபயன் தொடர்பில் வில்லங்கத்தின் அளிப்பு பெறுநருக்கு கடனாளி யின் வேறு ஏதேனும் பொறுப்பில் திருப்தியை;

(7) வறிதாக்கப்படற்பாலதான வில்லங்கமொன்று என்பது (1) ஆம் உட்பிரிவின் கீழ் புறத்தொகுக்கப்படக்கூடியதான வில்லங்கமொன்று ஆகும்.

கடன்கொடுநருக்கு மறைக்கும், தாமதப்படுத்தும் அல்லது தோற்கடிக்கும் உட்கருத்துடன் ஆதனத்தின் பராதீனப்படுத்துதல்;

**414.** (1) உட்பிரிவுகள் (2) மற்றும் (3) என்பவற்றுக் கமைய, ஆதனம் தொடர்பிலான கடன்கொடுநரின் ஆதாரத்தின் ஏதேனும் உரிமையின் பிரயோகிப்பதில் கடன்கொடுநரை மறைத்து வைப்பதற்கு, தாமதப்படுத்துவ தற்கு அல்லது தோற்கடிக்கும் உட்கருத்துடன் நீடிக்கப்பட்ட மீளாய்வுக் காலப்பகுதியில் கடனாளியொருவரினால் ஆதனத்தின் உறுதி முடிப்பு அல்லது கைமாற்றுகை ஒவ்வொன்றும் இயைபான பதவிவகிப்பவரின் விண்ணப் பத்தின்மீது நீதிமன்றத்தினால் புறத்தொதுக்கப்படலாம்.

(2) ஆதனமானது (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப் பட்ட உட்கருத்து பற்றிய அறிவின்றி நல்லெண்ணத்தில் ஆதனத்தை கொண்டவரான ஆளொருவருக்கு உறுதி முடிக்கப்பட்டு அல்லது கைமாற்றப்பட்டுள்ளவிடத்து உறுதிமுடிப்பொன்று அல்லது கைமாற்றுகையானது (1) ஆம் உட்பிரிவின்கீழ் புறத்தொதுக்கப்படமுடியாது.

(3) ஓராம் உட்பிரிவிலுள்ள எதுவும் பிணைப்பொறுப் பளிக்கப்பட்ட கடன்கொடுநருக்கு கிடைக்கப்பெறத்தக்கன வான ஏதேனும் உரிமை அல்லது நிவாரணத்தை பாதித்த லாகாது அல்லது வரையறுத்தலாகாது.

(4) உறுதிமுடிப்பு அல்லது கைமாற்றுகையின் உட்கருத் துடனான பாராதீனப்படுத்துகை (1) ஆம் உட்பிரிவின்கீழ் புறத்தொதுக்கப்படலாம்.

உட்கருத்துடன் வறிதாக்கப் படற்பாலதான முந்துரிமை, வறிதாக்கப் படற்பாலதான வில்லங்கம் அல்லது பராதீனப் படுத்துகை யொன்றை புறத்தொதுக்கு வதற்கான நடவடிக்கை முறை

**415.** (1) வறிதாக்கப்படற்பாலதான கொடுக்கல் வாங்க லொன்றின் புறத்தொதுப்படுவதற்கான நீதிமன்றத்துக்கான விண்ணப்பமொன்று, இச்சட்டத்தின், அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் ஏற்புடயற்பாலதான தேவைப்பாடுகள் எல்லாவற்றுடனும் இணங்கியொழுகுவதற்கு மேலதிகமாக, குறித்துரைத்தல் வேண்டும் :–

(அ) சவாலுக்கமைந்ததான கொடுக்கல்வாங்கல் திகதி;

(ஆ) சவாலுக்கமைந்ததான கொடுக்கல்வாங்கல் பற்றிய விவரங்கள்;

(இ) புறத்தொதுக்குவதற்கான ஏற்புடையற்பாலதான நிபந்தனைகள் ஒவ்வொன்றும் எம்முறையில் திருப்திப்பட வேண்டுமோ அம்முறை;

(ஈ) இயைபான பதவி வகிப்பவர் நாடுகின்ற கட்டளை அல்லது கட்டளைகள்; அத்துடன்

(உ) பந்தி (ஈ) வில் குறிப்பீடுசெய்யப்பட்ட கட்டளை அல்லது கட்டளைகளை நாடுவதன்மேல் தங்கியிருக்கும் எல்லா தொகைகள் மற்றும் பெறுமதிகளைக் கணக்கிடுதல்.

(2) இயைபான பதவி வகிப்பவர் விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய முறையிலும் விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய வேறு தகவலுடன் சேர்த்து ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், அத்தகைய காலப்பகுதியி னுள்ளும் பின்வருவோரின் மீது விண்ணப்பத்தின் பிரதி யொன்றை சேவையாற்றுதல் வேண்டும்.

(அ) கொடுக்கல் வாங்கலுக்கு திறத்தவரான கடனாளி தவிர்ந்த ஆள்; அத்துடன்

(ஆ) கட்டளை அல்லது கட்டளைகளை நாடுகின்ற இயைபான பதவி வகிப்பவரானவருககு எதிராக வேறு எவரேனும் ஆள்,

(3) உட்பிரிவு (2) இன் பந்திகளில் (அ) மற்றும் (ஆ)வில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆள் அல்லது ஆட்கள் புறத் தொதுக்குவதற்கான விதித்துரைக்கப்படக்கூடியவாறான

அத்தகைய முறையிலும் அத்தகைய காலப்பகுதியினுள்ளும் ஆட்சேர்ப்பிக்கலாம்.

உட்கருத்துடன் வறிதாக்கப் படற்பாலதான முந்துரிமை, வறிதாக்கப் படற்பாலதான வில்லங்கம் அல்லது பராதீனப் படுத்தல் ஒன்றை புறத்தொதுக்கு வதன் மீதான நீதிமன்றக் கட்டளைகள்

**416.** (1) வறிதாக்கப்படற்பாலதான கொடுக்கல் வாங்க லொன்றை புறத்தொதுக்குவதன் மீது, நீதிமன்றம் பின்வரும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கட்டளைகளை ஆக்கலாம் :-

(அ) வறிதாக்கப்படற்பாலதான கொடுக்கல்வாங்கலின் கீழ் கைமாற்றப்பட்டதான கடனாளியின் ஆதனம் அல்லது ஆதனமொன்றின் அக்கறைக்கு பின்வருவோருக்கு கைமாற்றுகின்ற அவ்வாளுக்கு கட்டளை யொன்று –

(i) இயைபான பதவி வகிப்பவர்; அல்லது

(ii) கடனாளியின் ஒழித்துக்கட்டுதல் பற்றி நீதிமன்றத்துக்கு விண்ணப்பம் செய்யப்பட்டதன் பின்னர், செய்யப்பட்டிருப்பின், ஒழிப்போன்;

(ஆ) அவ்வாள் வறிதாக்கப்படற்பாலதான கொடுக்கல் வாங்கலின் கீழ் செலுத்தப்பட்டதான சில அல்லது எல்லா பணங்களுக்கும் சமமான தொகையொன்று பின்வருபவருக்கு செலுத்துவதற்கான கட்டளையொன்று –

(i) இயைபான பதவி வகிப்பவர்; அல்லது

(ii) கடனாளியின் ஒழித்துக்கட்டுதல் பற்றி நீதிமன்றத்துகான விண்ணப்பம் செய்யப்பட்டிருப்பின், ஒழிப்போன்;

(இ) வறிதாக்கப்படற்பாலதான கொடுக்கல்வாங்கலின் விளைவொன்றாக பெறப்பட்ட அவ்வாள் சில அல்லது எல்லா நன்மைகளையும் நீதிமன்றத்தின் அபிப்பிராயத்தில் நியாயமானதாக பிரதிநிதித்துவப்படுத்தி இருக்கின்றதாக, தொகையொன்றுக்கு அவ்வாள் பின்வருவோருக்கு செலுத்துகின்றதான கட்டளையொன்று –

(i) இயைபான பதவிவகிப்பவர்; அல்லது

(ii) கடனாளியின் ஒழித்துக்கட்டுதல் நீதிமன்றத்துக்கு விண்ணப்பம் செய்யப்பட்டதன் பின்னர் தொடங்கப்படுமாயின், ஒழிப்போன்;

(ஈ) ஆனால் (இரட்டை கணக்கின்றி) பின்வருவனவற்றின் ஒன்றை அல்லது இரண்டையும் நீதிமன்றத்தின் அபிப்பிராயத்தில் பிரதிநிதித்துவப்படுத்துகின்றதான ஆதனத்தை அல்லது ஆதனத்தின் அக்கறையை கைமாற்றுவதற்கு அவ்வாளுக்கான கட்டளை -

(i) வறிதாக்கப்படற்பாலதான கொடுக்கல்வாங்கலின் கீழ் செலுத்தப்பட்டதான சில அல்லது எல்லாப் பணம்; அத்துடன்

(ii) வறிதாக்கப்படற்பாலதான கொடுக்கல்வாங்கலின் கீழ் கைமாற்றப்பட்டதன் கடனாளியின் ஆதனம் அல்லது ஆதனத்தின் அக்கறையின் தேறிப்பெறுகையின் சில அல்லது எல்லா வரும்படிகள்;

(உ) உறப்பட்டள்ளதான தனிசொன்று அல்லது கொடுக்கப்பட்டுள்ளதான உத்தரவாதமொன்று அல்லது வில்லங்கமொன்றின் முழுமையான அல்லது பகுதியளவிலான விடுவிப்புக் கட்டளை;

(ஊ) இவ்வுட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றின் நிறைவேற்றுகைக்காக கொடுக்கப்படுவதற்கு பிணைப்பொறுப்பை தேவைப்படுத்துகின்ற கட்டளையொன்று;

(எ) வறிதாக்கப்படற்பாலதான கொடுக்கல்வாங்கலொன்று புறத்தொதுக்கப்படுவதினால் பாதிக்கப்படுகின்ற ஆளொருவர் வங்கிமுறிவில், நிருவாகத்தில் அல்லது ஒழித்துக்கட்டுதலில் கடன்கொடுநராக பரிகரிக்கப்படுவதற்கு உரித்துடையதான அளவை குறித்துரைக்கின்ற கட்டளை;

(ஏ) வறிதாக்கப்படற்பாலதான கொடுக்கல்வாங்கலின் அல்லது அது தொடர்பில் பாகமாக அமைகின்ற அல்லது அத்தகைய உடன்படிக்கையொன்றின் குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகள் என்பவற்றை

அமைத்துருவாக்குகின்ற உடன்படிக்கை யொன்றை வெளிப்படுத்துகின்ற கட்டளை, ஒன்றில் -

(i) கட்டளையில் குறித்துரைக்கப்படக்கூடியதான உடன்படிக்கை செய்யப்பட்ட நேரத்திலிருந் தான அல்லது அத்தகைய பிந்தைய நேரத்திலி ருந்து வறிதாக்கப்படுதல்; வேண்டும்.

(ii) வலுவுறுத்துகைபடற்பாலதல்லாதவை.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் கட்டளையொன்று ஆக்குகை யில், நீதிமன்றம் அவசியமானவாறு வேறு ஏதேனும் துணைக் கட்டளையை ஆக்கலாம்.

உட்கருத்துடன் வறிதாக்கப் படற்பாலதான முந்துரிமை, வறிதாக்கப் படற்பாலதான வில்லங்கம் அல்லது பராதீனப் படுத்த லொன்றை புறத்தொதுக்கு வதன் மீதான மட்டுப்பாடுகள்

**417.** (1) உட்பிரிவுகள் (2), (3) மற்றும் (4) என்பவற்றுக் கமைய, நீதிமன்றம் எவரேனும் ஆளின் மீதான கடப்பா டொன்றை விதிக்கின்றதாயிலுஞ்சரி ஆதனத்தை பாதிக் கின்றதாயினுஞ்சரியான ஆள் வறிதாக்கப்படற்பாலதான கொடுக்கல்வாங்கலிற்கு திறத்தவராகவிருந்தாலுஞ்சரி அல்லது இல்லையாயினுஞ்சரியான அல்லது வறிதாக்கப் படற்பாலதான கொடுக்கல்வாங்கலின் கீழ் பயனுறுதியாக இருந்தாலுஞ்சரி இல்லையாயினுஞ்சரியான கட்டளை யொன்றை ஆக்கலாம்.

(2) ஆளொருவர் வறிதாக்கப்படற்பாலதான கொடுக்கல் வாங்கலொன்றுக்கு திறத்தவராகவுள்ளவிடத்து அல்லது வறிதாக்கப்படற்பாலதான கொடுகல்வாங்கலின் கீழான பயனுகரியாகவிருக்குமிடத்து, ஆள் பின்வருவனவற்றை எண்பித்திருக்குமிடத்து, நீதிமன்றம் அவ் ஆளுக்கெதிராக 416 ஆம் பிரிவின்கீழ் கட்டளையொன்றை ஆக்குதலாகாது :-

(அ) நல்லெண்ணத்தில் செயலாற்றியுள்ள ஆள்;

(ஆ) வறிதாக்கப்படற்பாலதான கொடுக்கல்வாங்கலின் நேரத்தில், ஆளின் நிலையிலுள்ள நியாயமான ஆள் ஒருவர் கடனாளி வறிதாக்கப்படற்பாலதான கொடுக்கல்வாங்கலில் அல்லது வந்ததன் உடன் பின்னர் வகையற்றவராக வரமுடியும் என நம்பவில்லை என; அத்துடன்

(இ) ஒன்றில் -

(i) ஆள் வறிதாக்கப்படற்பாலதான கொடுக்கல் வாங்கலின் கீழ் கணிசமாளனவு பெறுமதியை கொடுத்துள்ளாரென; அல்லது

(ii) (இப் பந்தியில் உள்ள (ii) நிபந்தனை தவிர) வறிதாக்கப்படற்பாலதான கொடுக்கல்வாங்கலை புறத்தொதுக்குவதற்கான நிபந்தனைகள் ஈடுசெய்யப்பட்டுள்ளது என நம்பவில்லை எனவும், ஆள் அத்தகைய நம்பிக்கையை கொண்டிருக்காமையானது நியாயமானது எனவும்.

(3) ஆளொருவர் வறிதாக்கப்படற்பாலதான கொடுக்கல் வாங்கலொன்றுக்கான திறத்தவரொருவராக அல்லது வறிதாக்கப்படற்பாலதான கொடுக்கல் வாங்கலின் கீழான பயனுகரியாகவுள்ளவிடத்து நீதிமன்றம் ஆளொருவர் பின்வருவனவற்றை கொண்டுள்ளார் என ஆதனத்தில் ஆளின் அக்கறையைப் பாதிக்கின்றதான கட்டளையொன்றை ஆக்குதலாகாது :-

(அ) நல்லெண்ணத்தில்; அத்துடன்

(ஆ) பெறுமதியான பிரதிபயனுக்காக.

(4) மூன்றாம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆளொருவர் கடனாளியின் சம்பந்தப்பட்ட திறத்தவரொருவராகவுள்ளவிடத்து, ஆள் நல்லெண்ணத்தில் தவிர வேறு வகையில் ஆதனத்தை கொள்ளப்பட்டது என முரணானது எண்பிக்கப்பட்டாலொழிய என, அது ஊகிக்கப்படுதல் வேண்டும்.

**418.** (1) இப்பிரிவில் :– குறைந்த பெறுமதியிலான கொடுக்கல் வாங்கல்

(அ) “ஏற்புடையற்பாலதான கொடுக்கல்வாங்கல்" என்பது ஒரு பெறுநருடன், கடனாளியாக அல்லது ஒரு திறத்தவராகவுள்ள பெறுநருடனான கொடுக்கல்வாங்கல்;

(ஆ) “விஞ்சியது" என்பது, கொடுக்கல்வாங்கல் ஒன்றின் கீழ் கடனாளியிடமிருந்து பெறுநர் பெற்ற தொகை (ஏதேனும் இருப்பின்) மற்றும் ஏற்புடையற்பாலதான கொடுக்கல்வாங்கலிருந்து பெறுநரிட

மிருந்து கடனாளி பெற்றதன் தொகையை விஞ்சியதான கொடுக்கல்வாங்கலொன்று எனப் பொருள்படும்; அத்துடன்

(இ) “பெறுநர்" என்பது கடனாளியிடமிருந்து பெறுமதி பெற்றவரான ஆள் எனப் பொருள்படும்.

(2) இயைபான பதவி வகிப்பவர் பின்வருமாறுள்ள விடத்து, விதித்துரைக்கப்படக்கூடியவாறான பின்வரும் அத்தகைய நடவடிக்கை முறையை பின்பற்றி, பெறுநரிட மிருந்து விஞ்சியதொகையை அறவிடலாம் :-

(அ) கடனாளியின் வங்கிமுறிவு, நிருவாகம் அல்லது ஒழித்துக்கட்டுதலின் தொடங்கும் தேதிக்கு நேர்முற்போந்த இரண்டு ஆண்டுகள் என்னும் காலப்பகுதியினுள் ஏற்புடையற்பாலதான கடன் கொடுக்கலவாங்கல்; ஏனைய கடனாளி செய்துள்ள விடத்து;

(ஆ) ஒன்றில் -

(i) அது ஏற்புடையற்பாலதான கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும்போது, கடனாளி வகையற்றவராவார்; அல்லது

(ii) அது ஏற்புடையற்பாலதான கொடுக்கல் வாங்கலைச் செய்துள்ளமையால் கடனாளி வகையற்றவராக வந்துள்ளார்;

(இ) கடனாளியின் ஆதனத்தின் பெறுமதியை கருத்திற் கொண்டு, விஞ்சியது கணிசமான தொகை யொன்றாகும்; அத்துடன்

(ஈ) மூன்றாம் உட்பிரிவிலுள்ள நிபந்தனைகளின் ஒன்றை அல்லது இரண்டையும் ஈடுசெய்ய வில்லை,

(3) உட்பிரிவு (2) (ஈ) இல் குறிப்பீடு செய்யப்பட்ட நிபந்தனைகளாவன :-

(அ) ஏற்புடையற்பாலதான கொடுக்கல்வாங்கல் முழங் கையளவு நீளத்தையுடையது ஆகும்; அத்துடன்

(ஆ) கடனாளி நல்லெண்ணத்தில் ஏற்புடையற்பால தான கொடுக்கவல்வாங்கலைச் செய்துள்ளாரென.

(4) குறைந்த பெறுமதியிலான கொடுக்கல் வாங்கலொன்று இப்பிரிவின்கீழ் எந்த விஞ்சியது அறவிடப்படுவதற்கு ஆளாகுமோ அந்த விஞ்சியதன் கீழான கொடுக்கல் வாங்கலொன்றாகும்.

முறைவழி பிரள்வு

**419.** (1) கம்பனியின் நிர்வாகம் உறுதி நிருவாகம் அல்லது ஒழித்துக்கட்டுதல் எனும் போதானவிடத்து அதிகாரசபை அல்லது நீதிமன்றம் ஈடுபட்டுள்ள திறத்தவரொருவர் கம்பெனியின் பணம் அல்லது வேறு ஆதனத்திற்காக பிழையாக விண்ணப்பித்திருக்கின்றார் என அல்லது ஆளாதவராக அல்லது பொறுப்புக்கூற வேண்டியவராக தக்கவைக்கப்பட்டிருக்கின்றார் அல்லது வந்திருக்கின்றார் என அல்லது கம்பெனி தொடர்பிலான கடமை அல்லது நம்பிக்கைப் பொறுப்பின் கவனயீனம், தவணை தவறுகை அல்லது மீறியிருக்கின்றார் என குற்றஞ்சாட்டப்பட்டிருக்கின்றார் என கருதுகின்றது, நீதிமன்றம் இயைபான பதவி வகிப்பவர், கடன்கொடுநர், உதவுதொகை செலுத்துநர், உத்தியோக பூர்வ பெறுநர், அதிகாரி; அல்லது வேறு அக்கறை கொண்டுள்ள ஆளொருவரின் விண்ணப்பத்தின் மீது :–

(அ) சம்பந்தப்பட்ட திறத்தவரின் நடத்தை பற்றி விசாரணை செய்யலாம்; அத்துடன்

(ஆ) ஒன்றில் -

(i) நீதிமன்றம் நீதி என எண்ணுகின்றதான விதத்திலான வட்டியுடன் பணத்தை அல்லது வேறு ஆதனத்தை அல்லது அதன் ஏதேனும் பாகத்தை மீளக் கொடுப்பதற்கு அல்லது மீளவைத்திருப்பதற்கு அவ்வாளுக்கு கட்டளையிடலாம்;

(ii) இழப்பீடு மூலம் கம்பெனியின் ஆதனத்துக்கு நீதிமன்றம் நியாயம் என எண்ணுகின்றதான தொகையை உதவு தொகையாக வழங்குவதற்கு அவ் ஆளுக்கு கட்டளையிடலாம்;

(iii) கடன்கொடுநரால் விண்ணப்பம் செய்யப்பட்டிருந்துமிடத்து, அவ் ஆளை கடன்கொடுநருக்கு அல்லது கடன்கொடுநர்களுக்கு நீதிமன்றம் நியாயமென எண்ணுகின்றதான வீதத்தில் வட்டியுடன் சேர்த்து பணத்தை அல்லது வேறு

ஆதனத்தை அல்லது அதன் வேறு ஏதேனும் பாகத்தை செலுத்துவதற்கு அல்லது கைமாற்றுவதற்கு கட்டளையிடலாம்; அல்லது

(iv) அவசியமான அத்தகைய வேறு கட்டளையை ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் பணத்தை செலுத்துவதற்கான கட்டளையொன்று (89) ஆம் பிரிவின் நோக்கங்களுக்காக இறுதி தீர்ப்பொன்றாக இருப்பதற்கு கருதப்படுதல் வேண்டும்.

(3) கம்பெனியின் நிருவாகியாக, உறுதி நிர்வாகியாக, ஒழிப்பாளராக அல்லது தற்காலிக ஒழிப்போனாக செயலாற்றுகின்ற ஆள் ஒருவர் தொடர்பில் (1) உட்பிரிவின் கீழான விண்ணப்பமொன்று (258) ஆம் பிரிவு அல்லது (357) ஆம் பிரிவின் கீழ் அவ் ஆள் விடுவிக்கப்பட்டதன் பின்னர் நீதிமன்றத்தின் அனுமதி தவிர செய்யப்படலாகாது.

வரைவிலக்கணங்கள்

**420.** (1) பிரிவுகள் 412, 413, 414, 415, 416, 417, 418, மற்றும் 419 எனும் பிரிவுகளின் வரையிலான நோக்கங்களுக்காக :–

(அ) “சம்பந்தப்பட்ட திறத்தவர் மீளாய்வு காலப்பகுதி" என்பது கடனாளியின் வங்கிமுறிவு, நிருவாகம் அல்லது ஒழித்துக்கட்டல் என்பன தொடங்கும் தேதிக்கு நேர்முற்போந்த இரண்டு ஆண்டுகள் காலப்பகுதி எனப் பொருள்படும்;

(ஆ) “நீடிக்கப்பட்ட மீளாய்வு காலப்பகுதி" என்பது கடனாளியின் வங்கிமுறிவு நிருவாகம் அல்லது ஒழித்துக்கட்டுதல் தொடங்கும் தேதிக்கு நேர்முற்போந்த ஐந்து ஆண்டுகள் எனும் காலப்பகுதி எனப் பொருள்படும்.

(இ) “இயைபான பதவி வகிப்பவர்" என்பது -

(i) வங்கிமுறிவில், வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாளர்;

(ii) ஒரு நிர்வாகத்தில், நிர்வாகி;

(iii) ஒரு ஒழித்துக்கட்டுதலில் ஒழிப்போன்; அத்துடன்

(iv) கம்பெனி ஒழுங்கேற்பாட்டு உறுதி வலுவிலுள்ளவிடத்தும் கடனிறுக்கவகையற்ற தொழிலராகவிருப்பின், உறுதி நிருவாகி; அத்துடன்

(ஈ) "நியம மீளாய்வு காலப்பகுதி" என்பது, கடனாளியின் வங்கிமுறிவு, நிருவாகம் அல்லது ஒழித்துக் கட்டுதல் என்பன தொடங்கும் தேதிக்கு நேர்முற்போந்த ஆறு மாதங்கள் எனும் காலப்பகுதி எனப் பொருள்படும்;

(2) பிரிவுகள் 412 மற்றும் 418 என்பவற்றின் நோக்கங்களுக்காக "கொடுக்கல்வாங்கல்" என்பது கடனாளியினால் பின்வரும் படி நிலைகளில் ஏதேனும் ஒன்று எனப் பொருள்படும் :-

(அ) கடனாளியின் ஆதனத்தினை உரிமைமாற்றுதல் அல்லது கைமாற்றுதல்;

(ஆ) கடனாளியின் ஆதனத்தின் மீதான வில்லங்கத்தினை கொடுத்தல்;

(இ) ஒரு கடப்பாட்டை உறுதல்;

(ஈ) ஒரு நிறைவேற்றுகை அல்லது வேறு சட்ட செயல்முறை அல்லது இடரினை அறவிடுதல் என்பவற்றுக்குட்படுதல்;

(உ) பணம் செலுத்துதல்; அத்துடன்

(ஊ) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பந்திகள் (அ), (ஆ), (இ), (ஈ) மற்றும் (உ) என்பவற்றின் நோக்கத்திற்காக செய்யப்பட்ட அல்லது செய்யப் படுவதற்கு தவறிய எவையேனும்.

## அத்தியாயம் 3

### பீனிக்ஸ் கம்பெனிகள்

பீனிக்ஸ் கம்பெனிகள்

**421.** (1) இவ்வத்தியாயத்தில் :-

"முறிவடைந்த கம்பெனியின் பணிப்பாளர்" என்பது, அதன் ஒழித்துக்கட்டுதல் தொடங்கும் தேதிக்கு நேர்முற்போந்த பன்னிரெண்டு காலப்பகுதி

யினுள் ஏதேனும் நேரத்தில் முறிவடைந்த கம்பெனியின் பணிப்பாளராகவுள்ள ஆளொருவர் எனப் பொருள்படும்;

"முறிவடைந்த கம்பெனி" என்பது, ஒழித்துக்கட்டுதல் தொடர்பில் பிரிவு 302 ஒன்றில் கம்பெனிக்கு ஏற்புடமையாகாதவிடத்து அல்லது ஏற்புடமை யாகுவதற்கு இல்லாதொழிந்துள்ளவிடத்து, ஒழித்துக்கட்டலுக்கு இடப்பட்டுள்ள கம்பெனி யொன்று எனப் பொருள்படும்;

"முறிவடைந்த கம்பெனி தொடர்பில் பீனிக்ஸ் கம்பெனி" என்பது,முறிவடைந்த கம்பெனியின் ஒழித்துக்கட்டுதல் தொடங்குவதற்கு முன்னரான எந்த நேரத்திலும் அல்லது தொடங்கியதன் பின்னரான ஐந்து ஆண்டுகளினுள் அல்லது விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு காலப்பகுதியினுள் முறிவடைந்த கம்பெனியின் முன்னரான ஒழித்துக்கட்டுதலுடன் அல்லது அதன் பெயர்மாற்றத்தினை அல்லது அதே பெயரினை கூட்டிணைத்துள்ள கம்பெனி யொன்று எனப் பொருள்படும்.

"ஒழித்துக்கட்டுதலுக்கு முன்னரான பெயர்" என்பது, அக்கம்பெனியின் ஒழித்துக்கட்டுதல் தொடங்கும் தேதிக்கு நேர்முற்போந்த பன்னிரெண்டு மாதங்கள் எனும் காலப்பகுதியில் (ஏதேனும் வர்த்தகப் பெயர் உள்ளடங்கலாக) முறிவடைந்த கம்பெனியொன்றின் ஏதேனும் பெயர் எனப் பொருள்படும்;

"ஒத்த பெயர்" என்பது அக்கம்பெனியுடன் நியாய மான இணைப்பை ஆலோசிப்பதற்கான முறிவடைந்த கம்பெனியொன்றின் ஒழித்துக் கட்டுதலுக்கு முன்னரான பெயருக்கு ஒத்த பெயர் எனப் பொருள்படும்.

(2) நீதிமன்றத்தின் அனுமதி தவிர தெறிவடைந்த கம்பனியின் பணிப்பாளொருவர் அல்லது பிரிவு 423, 424 அல்லது 425 இலுள்ள விதிவிலக்குகளில் ஒன்று ஏற்புடமை யாகின லொழிய, முறிவடைந்த கம்பெனியின் ஒழித்துக்

கட்டல் தொடங்கியதன் பின்னரான ஐந்து ஆண்டுகள் எனும் காலப்பகுதிக்கு பின்வருவபவராகவிருத்தலாகாது :-

(அ) பீனிக்ஸ் கம்பெனியின் பணிப்பாளராக இருத்தல்;

(ஆ) பீனிக்ஸ் கம்பெனியின் உருவாக்கம், மேம்பாடு அல்லது முகாமைத்துவம் என்பவற்றில் பங்கெடுத்தல் அல்லது சம்பந்தப்படுதல்; அல்லது

(இ) முறிவடைந்த கம்பெனியின் ஒழித்துக்கட்டலுக்கு முன்னரான பெயரைக் கொண்டுள்ள அல்லது ஒத்த பெயரைக் கொண்டுள்ள தொழிலைக் கொண்டுநடாத்துவதில் பங்கெடுத்தல் அல்லது சம்பந்தப்படுத்தல்.

(3) இரண்டாம் உட்பிரிவுடன் இணங்கியொழுகுவதற்கு தவறுகின்ற ஆளொருவர் தவறொன்றைப் புரிகின்றார்.

தனிப்பட்ட பொறுப்பு

**422.** (1) நானூற்றி இருபத்தியோராம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (அ) எனும் அல்லது (ஆ) எனும் பந்திற்கு இணங்கியொழுகத் தவறுகின்ற ஆள் ஒருவர் பீனிக்ஸ் கம்பெனியின் இயைபான எல்லா தனிசுகளிற்கும் தனிப்பட்ட ரீதியில் ஆளாவார்.

(2) பீனிக்ஸ் கம்பெனியொன்றின் முகாமைத்துவத்தில் ஈடுபடுகின்ற (இப்பிரிவில் “அ” எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஆளொருவர் பின்வருமாறு கம்பெனியின் இயைபான எல்லாத் தனிசுகளுக்கும் தனிப்பட்ட ரீதியில் ஆளாக விருத்தல் வேண்டும் :-

(அ) கம்பெனியின் முகாமைத்துவத்தில் (இப்பிரிவில் “ஆ” என குறிப்பீடு செய்யப்படும்) வேறொரு ஆளினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் மீது “அ” என்பவர் செயலாற்றுகின்றவிடத்து அல்லது செயலாற்றுவதற்கு விரும்புகின்றவிடத்து; அத்துடன்

(ஆ) அந்நேரத்தில் “ஆ” என்பர் கம்பெனி தொடர்பில் பிரிவு 421ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் அல்லது (ஆ) அறிந்திருப்பின்.

(3) இப்பிரிவில் "இயைபான தனிசு" என்பது :-

(அ) ஓராம் ஆம் உட்பிரிவில் பொறுப்பாகவுள்ள ஆள் கம்பெனியின் முகாமைத்துவத்தில் ஈடுபடுகின்ற வேளையில் பீனிக்ஸ் கம்பெனியில் உறப்பட்ட தனிசுகள் மற்றும் ஏனைய பொறுப்புகள் எனப் பொருள்படும் என்பதுடன் பீனிக்ஸ் கம்பெனி யானது முறிவடைந்த கம்பெனியின் ஒழித்துக் கட்டலுக்கு முன்னரான அல்லது ஒத்த பெயரால் அறியவும்படுகின்றது; அத்துடன்

(ஆ) இரண்டாம் ஆம் உட்பிரிவில் "அ" என்பவர் "ஆ" வின்; அறிவுறுத்தல்களின் மீது செயலாற்றி யுள்ளார் அல்லது செயலாற்றுவதற்கு விருப்பமாக விருக்கின்ற வேளையில், பீனிக்ஸ் கம்பெனியால் உறப்பட்ட தனிசுகள் மற்றும் ஏனைய பொறுப்புகள் எனப் பொருள்படும் என்பதுடன் முறிவடைந்த கம்பெனியின் ஒழித்துக்கட்டல் முன்னரான பெயர் அல்லது ஒத்தபெயரால் அறியப்படுகின்றது.

(4) ஓராம் உட்பிரிவின் அல்லது (2) ஆம் உட்பிரிவின் கீழான ஏதேனும் பொறுப்பு கூட்டானதும் பலவாறானது மாகும்.

(5) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, கம்பெனியின் (இப்பிரிவில் "கி" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) ஆள் ஒருவர் ஈ யினால் கொடுக்கப்பட்ட எவையேனும் அறிவுறுத்தல் களின் மீது ஏதேனும் பிந்திய நேரத்தில் செயலாற்றுவதற்கு விரும்பியுள்ளதற்கு முரணானது என எண்பிக்கப்பட்டா லொழிய, (2) ஆம் உட்பிரிவினை மீறவிரும்புகின்ற நேரத்தில் கி க்கு தெரியும் என ஊகிக்கப்படும் (இப்பிரிவில் "ஈ" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஆளொருவரினால் கொடுக்கப்பட்ட அறிவுறுத்தல்களின் மீது எந்த நேரத்திலும் செயலாற்றியுள்ள கம்பெனியின் முகாமைத்துவத்தில் ஈடுபட்டுள்ளவரான ஆள் ஒருவர்.

**அடுத்துறுநர் கம்பெனி அறிவித்தலில் பெயரிடப்பட்ட ஆளுக்கான விதிவிலக்கு**

**423.** (1) நூற்றி இருபத்தியொராம் பிரிவு ஆனது அடுத்துறுநர் கம்பெனி அறிவித்தலில் பெயரிடப்பட்ட ஆளுக்கு ஏற்புடயமையாதலாகாது.

(2) அடுத்துறுநர் கம்பெனி என்பது நிர்வாகி, ஒழிப்போன் அல்லது பெறுநரால் செய்துகொள்ளப்பட்ட அல்லது கம்பெனி ஒழுங்கேற்பாட்டு உறுதியின் கீழ் செய்யப்பட்ட ஒழுங்கேற்பாடுகளின் கீழ் முறிவடைந்த ஒரு கம்பெனியின் தொழிலின் முழுவதையும் அல்லது கணிசமான அளவு முழுவதையும் கொள்ளக்கூடியதான கம்பெனியொன்றாகும்.

(3) அடுத்துறுநர் அறிவித்தல் என்பது அடுத்துறுநர் கம்பெனியின் மூலமான எழுத்துமூல அறிவித்தல் ஆகும். அது :-

(அ) முறிவடைந்த கம்பெனியின் கடன்கொடுநர் என அறியப்படும் ஒவ்வொருவருக்கும் அடுத்துறுநர் கம்பெனியினால் வழங்கப்படும்.

(ஆ) இரண்டாம் உட்பிரிவில் (2) இல் குறிப்பீடு செய்யப்பட்ட தொழிலின் கொள்ளலுக்கான ஒழுங் கேற்பாடுகளின் பின்னரான ஒரு மாதத்தினுள் அக்கடன்கொடுநர்களுக்கு வழங்கப்படும்;

(இ) பின்வருவனவற்றினைக் குறித்துரைக்கின்றன -

**தற்காலிக காலப்பகுதி தொடர்பிலான விதிவிலக்கு**

**424.** (1) சம்பந்தப்பட்ட தடையில் இருந்து அந்த ஆளை விலக்களிக்கின்ற கட்டளையொன்றுக்காக, முறிவடைந்த கம்பெனியின் ஒழித்துக்கட்டுதல் தொடங்கியதன்; பின்னர் ஐந்து வேலை நாட்களினுள் அவ்வாள் நீதிமன்றத்திற்கு விண்ணப்பித்தால், உட்பிரிவு (2) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட தற்காலிக காலப்பகுதிக்கு பிரிவு 421 இல் உள்ள தடையை ஆளொருவர் மீறமாட்டார்.

(2) உட்பிரிவு (1) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட தற்காலிக காலப்பகுதி முறிவடைந்த கம்பெனியின் ஒழித்துக்கட்டுதல் தொடங்கிய தேதியின் மீது ஆரம்பிக்கின்றதும் முடிவடைகின்றதன் மீதான காலப்பகுதியாகும் :-

(அ) விலக்களிக்கப்பட்ட கட்டளையை நீதிமன்றம் ஆக்குதின்றதான தேதி; அல்லது

(ஆ) முன்னராயின் ஒழித்துக்கட்டுதல் தொடங்கியதன் பின்னரான 30 வேலை நாட்களின் நிறைவு.

செயலிழக்கப் படாத கம்பெனி தொடர்பிலான விலக்கு

**425.** (1) பிரிவு 421 (2) இன் (அ) மற்றும் (ஆ) என்னும் பந்திகளிலுள்ள தடைகள் பின்வருமாறுள்ளவிடத்து, முறிவடைந்த கம்பெனியின் ஒழித்துக்கட்டுதலுக்கு முன்னரான அதே பெயர் அல்லது ஒத்த பெயர்களை கொண்டுள்ளதான பெயரினால் அல்லது பெயர்களினால் அறியப்படுகின்றதான பீனிக்ஸ் கம்பெனியொன்று தொடர்பில் ஏற்புடையாதலாகாது :-

(அ) ஒழித்துக்கட்டுதல் தொடங்குகின்ற தேதிக்கு நேர்முற்போந்த ஆகக்குறைந்தது பன்னிரெண்டு மாத காலப்பகுதிக்கு அப்பெயரினால் அல்லது அப்பெயர்களினால் அறியப்பட்டுள்ளவிடத்து; அத்துடன்

(ஆ) அப் பன்னிரெண்டு மாதங்களின் போது ஏதேனும் நேரத்தில் செயல் இழந்திராதுள்ளவிடத்து.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, கம்பெனியொன்று அக்காலப்பகுதி முழுவதும் இடம்பெற்றிருக்கின்ற கணக்கீட்டுப் பதிவேடுகளில், பதியப்படுவதற்காக கம்பெனிகள் சட்டத்தின் பிரிவு 148(1) இனால் கொடுக்கல் வாங்கல்கள் தேவைப்படின், பன்னிரெண்டு மாத காலப் பகுதியின்போது ஏதேனும் நேரத்தில் செயலிழந்ததாக விராதிருப்பதற்கு கருதப்படுதல் வேண்டும்.

## அத்தியாயம் 4

## தனிசுகள், எதிரிகள் மற்றும் ஆவணங்களை அனுப்புவதற்கான எண்பிப்புகள்

தனிசுகள் மற்றும் தனிசுகளை நிரூபிப்பதற் கான சான்றுகள்

**426.** (1) இப்பிரிவில், "தனிசு" என்பது :–

(அ) இயைபான தேதியில் கடனாளி உட்பட்ட ஏதேனும் தனிசு;

(ஆ) அத்தேதிக்கு முன்னர் உறப்பட்ட கடப்பாடொன்று என் காரணத்தினால் இயைபான தேதிக்கு பின்னர் கடனாளி அடைந்தவராக வரக்கூடிய ஏதேனும் தனிசு; அத்துடன்

(இ) உட்பிரிவு (8) இற்கு இணங்க எண்பிக்கப்பட்டதான ஏதேனும் வட்டி.

(2) தனிசொன்று தொடர்பில் பகிர்ந்தளிப்பு ஒன்றை அல்லது விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு நோக்கங்களுக்காக வாக்களிப்பதற்கு அல்லது உரிமை கோருவதற்கு விரும்புகின்ற கடன்கொடுநர் ஒருவர் பின்வருமாறு இருந்தாலொழிய தனிசின் எண்பிப்பொன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) வேறுவகையில் இச்சட்டத்தில் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதி அல்லது வேறுவகையில் நீதிமன்றம் கட்டளைகள் ஏற்பாடு செய்தல்; அல்லது

(ஆ) ஒழிப்போன் ஒன்றை சமர்ப்பிப்பதற்கு தேவைப் படுத்தினாலொழிய கடன்கொடுநர் எண்பிப் பொன்றை சமர்ப்பிப்பதற்கு தேவைப்படுத்தாத சந்தர்ப்பத்தில் பிரிவு 302 கம்பெனிக்கு ஏற்புடைமை யாகின்றது.

(3) தனிசின் எண்பிப்பொன்று :–

(அ) விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய நேரங்களிலும் அல்லது அத்தகைய சந்தர்ப்பங்களிலும் கோரப்படுவதற்கு;

(ஆ) விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய சூழ்நிலைகளில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக சூழ்நிலைகளில் கருதப்படுவதற்கு.

(இ) விதித்துரைக்கப்படக்கூடியவாறன அத்தகைய முறையிலும் அத்தகைய காலப்பகுதியினுள்ளும் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஈ) விதித்துரைக்கப்படக்கூடியவாறு அதன் உள்ளடக்கும் உள்ளடங்கலாக, அத்தகைய வேறு தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுதல் வேண்டும்.

(4) தனிசுகளின் எண்பிப்புகள் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அனுமதி அல்லது மறுப்பு பற்றிய அறிவித்தலுக்கான அத்தகைய தேவைப்பாடுகளில் அனுமதிக்கப்படலாம் அல்லது நிராகரிக்கப்படலாம்; முழுமையளவிலும் பகுதியளவிலும் அத்தகைய முறை; அத்தகைய காலப்பகுதியினுள் மற்றும்.

(5) தனிசு தொடர்பில் (4) ஆம் உட்பிரிவின் கீழான தனிசின் எண்பிப்பொன்றை அனுமதிப்பதற்கு முடிபொன்று செய்யப்படும் போது தனிசொன்று எண்பிக்கப்படும்.

(6) (அ) பின்வருமாறு உள்ளவிடத்து தனிசு தொடர்பில் தனிசின் எண்பிப்பொன்று :-

(i) வட்டியைக் கொண்டிருத்தல்;

(ii) வியாபாரக் கழிப்பனவு அல்லது தொடர் புடைய ஏனைய கழிப்பனவு;

(iii) வெளிநாட்டு நாணயத்தில் உறப்பட்ட அல்லது செலுத்தப்படற்பாலதானவை;

(iv) எதிர்காலத்தில் செலுத்தப்படற்பாலதானவை;

(v) காலஒழுங்கு தன்மையொன்றின் வாடகை அல்லது ஏனைய கொடுப்பனவுகளுக்கு தொடர்புடையவை;

(ஆ) கம்பெனியொன்றின் உதவுதொகையாக அழைப்ப தற்கு கடனாளியின் பொறுப்பு தொடர்பில் தனிசின் எண்பிப்பொன்று;

(இ) உட்பிரிவு (3) (ஆ) வின்கீழ் தனிசின் எண்பிப் பொன்று சமர்பிக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல்;

(ஈ) தனிசின் எண்பிப்பு ஒன்று எதிர்பாராத நிலை மைக்கு அல்லது சேதங்களுக்கமைந்தது; அல்லது

(உ) தனிசின் எண்பிப்பொன்றின் தொகை வேறு சில காரணத்துக்காக நிச்சயமற்றது;

என அனுமதிக்கப்படக்கூடிய தனிசின் எண்பிப்பின் தொகை யானது விதித்துரைக்கப்படக்கூடியவாறு அத்தகைய முறையில் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(7) ஒழித்துக்கட்டுதல் :-

(அ) நிரந்தர பிணைப்பொறுப்பின் அளிப்பு பெறுநர் அப்பிணைப்பொறுப்பு தொடர்பில் எட்டாம் அட்டவணையின் பந்தி 1 இல் குறிப்பீடு செய்யப் பட்ட தெரிவுகளைக் கொண்டிருத்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) அத்தெரிவுகளின் பிரயோகம் அவ்வட்டவணையின் ஏற்பாட்டினால் ஆளப்படுதல் வேண்டும்.

(8) வட்டிவரை ஆனால் ஓராம் உட்பிரிவின் பந்தி (அ) மற்றும் (ஆ) வில் குறிப்பீடுசெய்யப்பட்ட தனிசுகளின் மீது இயைபானதேதி உள்ளடங்கலாக, எண்பிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் கணக்கீடுசெய்யப்படுதல் வேண்டும்.

(9) அக்கறையுடைய ஆள் முழுமையாக அல்லது பகுதியளவில் தனிசொன்றின் எண்பிப்பாக அனுமதிப்பதற்கு அல்லது மறுப்பதற்கான முடிபொன்றுடன் திருப்தியடையாத விடத்து, அவ்வாள் விதித்துரைக்கப்படக்கூடியவாறு மேன் முறையீட்டுக்கான உட்கருத்துப் பற்றிய அறிவித்தலுக்கான அத்தகைய முறையிலும் அத்தகைய காலப்பகுதியிலும் அத்தகைய தேவைப்பாடுகளுடன் முடிபுக்கெதிராக மேன்முறையீடு செய்யலாம்.

(10) தனிசின் எண்ணிப்பொன்று விதித்துரைக்கப்படக் கூடியவாறு அத்தகைய நிபந்தனைகள் மற்றும் அத்தகைய முறைகளுக்கமைய மீளப்பெறப்படலாம் அல்லது வேறு படுத்தப்படலாம்.

(11) கடன்கொடுநர் விதித்துரைக்கப் படக்கூடியவாறு அத்தகைய நிபந்தனைகள் மற்றும் அத்தகைய முறைக்கமைய தனிசின் எண்பிப்பொன்றை ஆதாரப்படுத்துகின்ற ஆவணங் களை முன்வைப்பதற்கு தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(12) தனிசின் எண்பிப்புகளின் சோதனை விதித்துரைக் கப்படக்கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய நேரங்களிலும் இடங்களிலும் அத்தகைய ஆட்களினால் அனுமதிக்கப்படுதல் வேண்டும்.

(13) நீதிமன்றம் வேறுவகையாக கட்டளையிட்டா லொழிய, கடன்கொடுநர் அதன் தனிசின் எண்பிப்பின் ஆகுசெலவுகளை பொறுப்பித்தல் வேண்டும்.

(14) பின்வருவனவற்றைச் செய்கின்றவரான ஆள் தவறொன்றைப் புரிகின்றார் :-

(அ) பொய்யான அல்லது பிழைவழியுய்க்கும் என அறிந்துகொண்டு குறிப்பாக பொருளில் பொய்யான தென அல்லது பிழைவழியுய்க்கின்றதென

தனிசின் எண்பிப்பொன்றைச் செய்கின்றவரான அல்லது செய்வதனை அதிகாரமளிக்கின்றவரான;

(ஆ) குறிப்பாக பொருளில் பொய்யான அல்லது பிழைவழியுய்கின்ற தனிசின் எண்பிப்பொன்றை செய்யாதுவிடுகின்றதென அறிந்துகொண்டு ஏதேனும் நிகழ்வு அல்லது விடயத்தின் தனிசின் எண்பிப்பொன்றை செய்யாதுவிடுகின்ற அல்லது செய்யாதுவிடுகின்றமையை அதிகாரமளிக் கின்றவரான.

### *ஆ - எதிரீடு*

வங்கிமுறிந்த கடனாளி மற்றும் வேறொரு திறந்தவருக்கு இடையிலான எதிரீடு

**427.** (1) உட்பிரிவுகள் (3), (4) மற்றும் (5) இற்கமைய, இப்பிரிவின் தொழிற்பாட்டை நாடுகின்ற அல்லது ஆளால் தொழிற்பாட்டுக்காக வங்கிமுறிந்த கடனாளி மற்றும் ஆளொருவருக்கிடையில் பரஸ்பர கடன்கள், பரஸ்பர தனிசுகள் அல்லது பரஸ்பர கையாளுகைகள் உள்ளவிடத்து, பின்வருமாறு தனிசின் எண்பிப்பின் மூலம், வங்கிமுறிவின் உரிமைக்கோரிக்கையொன்று அனுமதிக்கப்படுவதற்கு நாட முடியும் :-

(அ) அக்கடன்கள், தனிசுகள் அல்லது கையாளுகைகள் தொடர்பில் எது ஒரு திறத்தவரிமிருந்து மற்றொரு வருக்கு நிலுவையாக உள்ளதென கணக்கொன்று எடுக்கப்படுதல்;

(ஆ) ஒரு திறத்தவரிடமிருந்தான நிலுவைத் தொகை யொன்று மற்ற திறத்தவரிடமிருந்து நிலுவையாக வுள்ள தொகையொன்றுக்கு எதிராக எதிரீடு ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும்; அத்துடன்

(இ) கணக்கின் மீதி மாத்திரமே வங்கிமுறிவுஆதனத் தின் ஒரு பகுதியாக எண்பிக்கப்படற்பாலதான தனிசொன்றாக அல்லது வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாளருக்கு செலுத்தப்படற்பாலதாக அனுமதிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, பரஸ்பர கடன்கள், பரஸ்பர தனிசுகள் மற்றும் ஏனைய பரஸ்பர கையாளுகைகள் என்பன பின்வருவனவற்றை உள்ளடக்காது :–

(அ) வங்கிமுறிவு தொடங்கியதன் பின்னர் அல்லது பின்வருவனபற்றி ஆளுக்கு அறிவிக்கப்பட்டதன் பின்னர் எந்த நேத்திலும் உறப்பட்ட கடப்பா டொன்றிலிருந்து எழுகின்ற ஏதேனும் தனிசு -

(i) எண்பத்தோராம் பிரிவின்கீழ் வங்கிமுறிவு கடனாளிதொடர்பில் வங்கி முறிவு ஏற்புடமை யொன்றின் மீதான தொடர்ந்து கொண்டிருக் கும் நடவடிக்கை முறைகள்; அல்லது

(ii) எண்பத்தோராம் பிரிவின்கீழ் வங்கிமுறிவு கடனாளி தொடர்பில் முடிவுறாதுள்ள வங்கி முறிவு மனு.

(ஆ) வங்கிமுறிவு தொடங்கியதன் பின்னர் அல்லது பின்வருவன பற்றி ஆளுக்கு அறிவிக்கப்பட்டதன் பின்னரான எந்த நேரத்திலும் செய்துகொள்ளப் பட்ட உடன்படிக்கையொன்றின்கீழ் ஒப்படைப் பின்மூலம் அல்லது வேறு வகையில் ஆளினால் கொள்ளப்பட்ட ஏதேனும் தனிசு -

(i) எண்பத்தோராம் பிரிவின்கீழ் வங்கிமுறிவு கடனாளி தொடர்பிலான வங்கிமுறிவு ஏற்புடமையொன்றின் மீதான தொடர்ந்து கொண்டிருக்கும் நடவடிக்கை முறைகள்; அல்லது

(ii) எண்பத்தோராம் பிரிவின்கீழ் வங்கிமுறிவு கடனாளி தொடர்பில் முடிவுறாதுள்ள வங்கி முறிவு மனு.

(3) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, பிரிவு 426 இன்கீழ் விதித்துரைக்கப்படக்கூடியவாறான தொகைகளை தீர்மானிப் பதன் மீதான அத்தகைய விதிகள் ஏற்புடமையாகின்றது.

(4) முந்துரிமை உரிமைக்கோரிக்கைகள் அல்லாத மற்றும் முந்துரிமை உரிமைக்கோரிக்கைகள், கோரிக்கைகள் ஆகிய இரண்டும் உள்ளடங்கலாக, (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆளுக்கு வங்கிமுறிவு கடனாளியிடமிருந்து தொகையொன்று வருமதியாகவுள்ளவிடத்து, வங்கிமுறிவு கடனாளிக்கு அவ்வாளிடமிருந்து வருமதியான தொகை அத்தகைய உரிமைக்கோரிக்கைகளுக்கெதிராக உட்பிரிவு (1)(ஆ) என்பதன்கீழ் வீதவரிப்படி எதிரீடு செய்யப்படுதல் வேண்டும்.

கம்பெனியொன்று மற்றும் வேறொரு திறந்தவருக்கிடையிலான எதிரீடு

**428.** (1) உட்பிரிவுகள் (3), (4) மற்றும் (5) என்பவற்றுக் கமைய, தனிசின் எண்பிப்பொன்று வகையாக, ஒழித்துக் கட்டுதல் ஒன்றில் ஏற்றுக்கொள்ளப்பட்ட உரிமைக் கோரிக் கையை நாடுகின்ற பரஸ்பர கடன்கள், பரஸ்பர தனிசுகள் அல்லது வேறு பரஸ்பர கையாளுகைகள் இப்பிரிவு நடை முறையில் இல்லாதிருப்பின், நாடும் இருந்துள்ளவிடத்து -

(அ) அக்கடன்கள், தனிசுகள் அல்லது கையாளுகைகள் தொடர்பில் ஒரு திறத்தவரிடமிருந்து மற்றவருக்கு எது வருமதியாகவுள்ளது என்பது பற்றி பொறுப்பு எடுக்கப்படுதல் வேண்டும்;

(ஆ) ஒரு திறத்தவரிடமிருந்து வருமதியாகவுள்ள தொகையொன்று மற்ற திறத்தவரிடமிருந்து வருமதியாகவுள்ள தொகையொன்றுக் எதிராக எதிரீடு செய்யப்படுதல் வேண்டும்; அத்துடன்

(இ) கணக்கின் மீதி மட்டும் எண்பிக்கப்படற்பாலதான தனிசொன்றாக அல்லது கம்பெனிக்கு செலுத்தப் படற்பாலதானதொன்றாக அனுமதிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, பரஸ்பர கடன்கள், பரஸ்பர தனிசுகள் மற்றும் ஏனைய பரஸ்பர கையாளுகைகள் என்பன பின்வருவனவற்றை உள்ளடக்காது :–

(அ) ஒழித்துக்கட்டுதல் தொடங்கியதன் பின்னர் ஏதேனும் நேரத்தில் அல்லது ஆள் பின்வருவன பற்றி அறிவித்தலைப் பெற்றதன் பின்னர் உறப்பட்ட கட்டுப்பாடொன்றிலிருந்து எழுகின்ற ஏதேனும் தனிசு -

(i) பிரிவு 298 (2)(அ) என்பதன்கீழ் ஒழிப்போ னொருவரின் நியமனத்துக்காக தீர்மான மொன்றை கவனிப்பதற்கு கம்பெனியின் கூட்டமொன்றை காட்டுகின்ற;

(ii) பிரிவு 298 (2) (ஆ) என்பதன்கீழ் ஒழிப்போ னொருவரின் நியமனத்துக்காக தீர்மான மொன்றை கவனத்துட்கெடுப்பதற்கு கம்பெனி யின் சபையின் கூட்டமொன்றை கூட்டுகின்ற;

(iii) பிரிவு 298 (2) (இ) என்பதன்கீழ் விண்ணப்ப மொன்றைச் செய்கின்ற; அல்லது

(iv) பிரிவு 214 (2)(ஆ) என்பதன்கீழ் ஒழிப்போ னொருவரின் நியமனத்துக்காக கடன்கொடு நரிகளின் தீர்மானமொன்று; அல்லது

(ஆ) ஒழித்துக்கட்டுதல் தொடங்கியதன் பின்னர் அல்லது பின்வருவனபற்றி ஆளுக்கு அறிவித்தல் கிடைக்கப் பெற்றதன் பின்னர் எந்த நேரத்திலும் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கை யொன்றின்கீழ் குறித்தளிப்பின்மூலம் அல்லது வேறுவகையில், ஆளினால் கொள்ளப்பட்ட ஏதேனும் தனிசு :-

(i) பிரிவு 298 (2) (அ) என்பதன்கீழ் ஒழிப்போன் கள் நியமனத்துக்காக தீர்மானமொன்றை கவனத்துட்கொள்வதற்கு கம்பெனியின் சபையின் கூட்டமொன்றை கூட்டுகின்ற;

(ii) பிரிவு 298 (2) (இ) என்பதன்கீழ் விண்ணப்ப மொன்றைச் செய்கின்ற; அல்லது

(iii) பிரிவு 214 (2) (ஆ) என்பதன்கீழ் ஒழிப்போ னொருவரின் நியமனத்துக்காக கடன்கொடு நர்களின் தீர்மானமொன்று.

(3) ஓராம் உட்பிரிவு பின்வருமாறு உதவுதொகை யொன்றின் மூலம் செலுத்தப்பட்ட அல்லது செலுத்தப் படற்பாலதான தொகையொன்றுக்கு ஏற்புடமையாத லாகாது :–

(அ) பங்கொன்றின் வழங்குகைக்காக பிரதிபயனொன் றாக அல்லது பிரதிப்பயனை பாகமொன்றாக; அல்லது

(ஆ) கம்பெனியின் சபையினால் அல்லது ஒழிப்போ னால் ஆக்கப்பட்ட உதவுதொகையின் பொறுப்பு தொடர்பில் கோரல் ஒன்றில் திருப்தியில்.

(4) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, பிரிவு 426 (6) என்னும் பிரிவின் கீழ் விதித்துரைக்கப்படக்கூடியவாறான தொகைகளை நிர்ணயிப்பதன்மீது அத்தகைய விதிகள் ஏற்புடையதாகும்.

(5) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆளுக்கு கம்பெனியிடமிருந்து வருமதியான தொகையொன்று முந்துரிமை உரிமைக்கோரிக்கைகள் மற்றும் இல்லாத உரிமைக்கோரிக்கைகள் இரண்டும் உள்ளடக்குகின்ற விடத்து, கம்பெனிக்கு ஆளிடமிருந்து வருமதியாகவுள்ள தொகை அத்தகைய உரிமைக்கோரிக்கைகளுக்கு எதிராக உட்பிரிவு (1) (ஆ) வின் கீழ் வீதப்படியாக எதிரீடு செய்யப்படுதல் வேண்டும்.

### *இ - விநியோகித்தல்கள்*

**429.** (1) இப்பிரிவில், "விநியோகிக்கும் பதவிவகிப்பாளர்" என்பவர் :- விநியோகங்கள்

(அ) வங்கிமுறிவில், வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாளர்;

(ஆ) ஒழித்துக்கட்டுதலில் ஒழிப்போன்; அத்துடன்

(இ) பொறுநராண்மையில் பெறுநர்.

(2) விநியோகிக்கும் பதவிவகிப்பவர் விநியோகிப் பொன்றைச் செய்வதற்கு பிரேரிக்கின்றவிடத்து, விநியோ கிக்கும் பதவிவகிப்பவர் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுவதில் பிரேரிக்கப்பட்ட விநியோகிப்பு பற்றிய பின்வருவனவற்றை கொடுத்தல் வேண்டும் :-

(அ) (i) பகிரங்க அறிவித்தல்; அத்துடன்

(ii) தனிப்பட்ட கடன்கொடுநர்களுக்கான அறிவித்தல்.

(ஆ) விதித்துரைக்கப்படக்கூடிய அத்தகைய சூழ்நிலை களில் அறிவித்தல் வழங்கப்பட்ட பிரேரிக்கப்பட்ட விநியோகத்தை, பிற்போடலாம் அல்லது இரத்துச் செய்யலாம்;

(இ) விநியோகிக்கும் அலுவலர் பொருத்தமானதென பார்க்கின்றதான அத்தகைய ஏற்பாட்டை உருவாக்கலாம் -

(i) சமர்ப்பிக்கப்படாத அல்லது அதன் தொகைகள் தீர்மானிக்கப்படாத தனிசின் எண்பிப்புகள்; அத்துடன்

(ii) அத்தகைய தனிசின் எண்பிப்புகளின் அனுமதி அல்லது தொகைகள் தீர்மானிப்பதனுடன் இணைந்த செலவினங்கள்.

(3) விநியோகத்தை மேற்கொண்டதன் பின்னர் கடன் கொடுநரின் தனிசின் எண்பிப்பு சமர்ப்பிக்கப்படுமிடத்து, அல்லது அதிகரிக்கப்படுமிடத்து :-

(அ) ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டிருந்த ஏதேனும் விநியோகமும் அவ்வேதுவின்மீது இடையூறு ஏற்படுத்துதலாகாது.

(ஆ) ஆதனத்தின் தேறிப்பெறுகையின் வரும்படிகளின் போதியனவாகவிருப்பின் மற்றும் போதியனவாக விருக்கும் அளவுக்கு, எவையேனும் மேலதிக விநி யோகித்தல்களில் திருப்தி செய்யப்பட்ட கடன் கொடுநரின் தனிசினது விகிதாசாரம், சமமாக தரப்படுத்தப்பட்ட உரிமைக்கோரிக்கைகளின் மற்றெல்லாக் கடன்கொடுநர்களின் தனிசுகளின் முன்னர் திருப்பி செய்யப்பட்ட விகிதாசாரத்துக்கு சமமாகவிருக்கும் வகையில் அவ்விநியோகித்தல்.

(4) விநியோகிக்கும் பதவி வகிப்பவர் விநியோக மொன்றை செய்வதற்கு தவறுவதற்கான சேதங்களுக்கு ஆளாகமாட்டார். ஆனால், விநியோகிக்கும் பதவி வகிப்பவர் விநியோகம் செய்வதற்கு மறுக்கின்றவிடத்தும் மற்றும் அக்கறைகொண்ட ஆளொருவரினால் நீதிமன்றத்துக்கு விண்ணப்பத்தின் மீதும் நீதிமன்றம் விநியோகிக்கும் பதவிவகிப்பில் பின்வருவனவற்றைச் செய்தல் வேண்டுமென கட்டளையிடலாம் :-

(அ) விநியோகிப்பை செய்யலாம்; அத்துடன்

(ஆ) பின்வருவனவற்றை விநியோகிக்கும் பதவிவகிப் பவரின் சொந்தப் பணத்திலிருந்து செலுத்துதல் வேண்டும் -

(i) விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய வீதத்தில் விநியோகிப்பின் தொகை அல்லது பெறுமதியின் மீதானவட்டி; அத்துடன்

(ii) விண்ணப்பத்தை செய்வதில் உறப்பட்ட விண் ணப்பகாரரின் நியாயமான ஆகு செலவுகள்.

### *ஈ - கடன்கொடுநர்களுக்கு ஆவணங்களை அனுப்புதல் மற்றும் விலக்கல்*

கடன்கொடுநர் மற்றும் விலக்கப்பட்ட கடன்கொடுநர்களுக்கு ஆவணங்களை அனுப்புதல்

**430.** (1) குறிப்பிட்டவொரு வகுப்பைச் சேர்ந்த கடன் கொடுநர்களுட்பட, கடன்கொடுநர்களுக்கு ஆவணமொன்றை அனுப்புவதற்கு இச்சட்டம் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதியொன்று ஒரு பதவிவகிப்பவரைத் தேவைப் படுத்துமிடத்து :-

(அ) சட்டம் அல்லது ஒழுங்குவிதி வேறுவகையாக ஏற்பாடு செய்யுமிடத்தைத்தவிர; அல்லது

(ஆ) ஒரு நீதிமன்றம் வேறுவகையாகக் கட்டளையிடு மிடத்தைத்தவிர,

விலகிய கடன்கொடுநர்கள் தவிர்ந்த எந்தக் கடன்கொடு நர்களின் முகவரியைப் பதவிவகிப்பவர் அறிந்துள்ளாரோ அத்தகைய அந்த எல்லாக் கடன்கொடுநர்களுக்கும் ஆவணத்தை அனுப்புவதன்மூலம் அத்தேவைப்பாடு இணங்கியொழுகப்படுகின்றது.

(2) கடன்கொடுநரொருவர் பதவிவகிப்பவருக்கு விதித் துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் எழுத்துமூல அறிவித்தலை வழங்குவதன்மூலம் எந்த நேரத்திலும் ஏதேனும் காரணத்துக்காக விலக்கப்பட்ட கடன்கொடுநரொருவராகவிருப்பதற்கு தெரிவு செய்யலாம்.

(3) விலக்கப்பட்ட கடன்கொடுநரொருவர் பதவி வகிப்பவ ருக்கு விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் வழங்குவதன் மூலம் விக்கப்பட்ட கடன் கொடுநராக தொழிற்படுவதற்கு தெரிவுசெய்யலாம்.

(4) பதவி வகிப்பவரொருவர் கடன் கொடுநரொருவருட னான முதலாவது எழுத்துமூல தொடர்பாடலில் விதித் துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் பின்வருவன பற்றி அறிவித்தலை வழங்குதல் வேண்டும் :-

(அ) கடன் கொடுநர் விலக்கப்பட்ட கடன் கொடுந ரொருவராகவிருப்பதற்கு தெரிவு செய்யலாம் என; அத்துடன்

(ஆ) பதவி வகிப்பவர் ஒருவர் விலக்கப்பட்ட கடன் கொடுநரொருவராகவிருப்பதற்கான கடன்கொடுந ரொருவரை பரிகரித்தல் வேண்டும்.

(5) பதவிவகிப்பவர் ஒருவர் பின்வருவனவற்றில் எது முந்தியதோ விலக்கப்பட்ட நேரத்திலிருந்து விலக்கப்பட்ட கடன்கொடுநரொருவராக கடன் கொடுநரை பரிகரித்தல் வேண்டும் :-

(அ) பதவி வகிப்பவர் பதவி வகிக்காதொழியும் நேரத்தில்; அத்துடன்

(ஆ) விலகல் மீளப்பெறும் நேரத்தில்.

(6) இப்பிரிவில் :-

(அ) “விலகல் நேரம்” என்பது, உட்பிரிவு (2) இன் கீழ் கடன்கொடுநரால்; அறிவித்தல் வழங்கப்பட்டதன் பின்னரான, மிகவும் முற்பட்ட காலமாகும். இதில், கடன்கொடுநரை விலக்கப்பட்ட கடன் கொடுநராக பரிகரிப்பதற்கு பதவிவகிப்பவரால் நியாயமாக செயல்முறைக்குகந்ததாகும்;

(ஆ) “விலகல் மீளப்பெறும் நேரம்” என்பது, உட்பிரிவு (3) இன் கீழ் கடன்கொடுநரால் அறிவித்தல் வழங்கப்பட்டதன் பின்னரான, மிகவும் முற்பட்ட காலமாகும். இதில், கடன்கொடுநரை விலக்கப் பட்ட கடன்கொடுநரொருவராக பரிகரிப்பதற்கு இல்லாதொழிவதற்கு பதவி வகிப்பவரால் செயல் முறைக்குகந்ததாகவிருக்கும்; அத்துடன்

(இ) பதவிவகிப்பவர் தொடர்பில், “விலக்கப்பட்ட கடன்கொடுநர்” என்பது, பின்வரும் வகையில் பொருள்கொள்ளப்படும் :-

(i) கம்பெனியின் கடன்கொடுநர்;

(ii) உட்பிரிவு (2) இன் கீழ் பதவிவகிப்பவருக்கு அறிவித்தலை வழங்கியுள்ளவரான ஆள்; அத்துடன்

(iii) உட்பிரிவு (3) இன் கீழ் பதவிவகிப்பவருக்கு அறிவித்தலை வழங்கியிராதுள்ள ஒருவர்.

## பகுதி XVI

## பொது மற்றும் நானாவிதங்கள்

### அத்தியாயம் 1

### பொது

கடனிறுக்க வகையின்மையின் வைத்திருப்பு கணக்கு மற்றும் கடனிறுக்க வகையின்மை மிகைசேர் கணக்கு

**431.** (1) கடனிறுக்கவகையின்மை வைத்திருப்பு கணக்கு என அழைக்கப்படும் கணக்கொன்று அமைச்சரினால் காலத்துக்குக் காலம் அங்கீகரிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வங்கியுடன் உத்தியோகபூர்வ பெறுநரினால் வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

(2) கடனிறுக்கவகையின்மை மிகைசேர் கணக்கு என அழைக்கப்படும் கணக்கொன்று அமைச்சரினால் காலத்துக்குக் காலம் அங்கீகரிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வங்கியுடன் உத்தியோகபூர்வ பெறுநரினால் வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

உரிமை கோரப்படாத மற்றும் மிகைசேர் வரும்படிகள் பிரயோகம்

**432.** (1) இப்பிரிவில் :-

(அ) ஆதனத்தின் தேறிப்பெறுகையின் வரும்படிகளின் விநியோகிப்பு தொடர்பில் "உரித்துடைய ஆள்" என்பது அவ்வரும்படிகளுக்கு உரித்துடைய ஆளொருவர் எனப் பொருள்படும்; அத்துடன்

(ஆ) "தாபிக்கப்பட்ட உரிமைக்கோரிக்கை" என்பது உத்தியோகபூர்வ பெறுநரின் நியாயமான திருப்திக்கு தாபிக்கப்பட்ட உரிமைக்கோரிக்கையொன்று எனப் பொருள்படும்.

(2) வங்கிமுறிவொன்றில் ஆதனத்தின் தேறிப்பெறுகையின் வரும்படிகளின் விநியோகிப்பொன்று செய்யப்படுமிடத்து, பின்வருவனவற்றுக்காக ஒழித்துக்கட்டுதல் அல்லது பெறுநராண்மை மற்றும் உரிமைகோரப்படாது எஞ்சியுள்ள எவையேனும் அத்தகைய வரும்படிகள் :-

(அ) எத்தேதியிலிருந்து விநியோகிக்க செய்யப்பட்டதோ அத்தேதியிலிருந்து பன்னிரெண்டு மாதங்களுக்கு மேற்படாத; அல்லது

(ஆ) முன்னராயின், வங்கிமுறிவு தொடர்பில் அல்லது பெறுநராண்மை முடிவில் 138 ஆம் பிரிவின்கீழ்

செய்யப்பட்ட கட்டளையொன்று நிறைவேற்றப் படுகின்றதான நேரத்தில், விடயத்துக்கேற்ப, வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாளர், ஒழிப்போன் அல்லது பெறுநர் உத்தியோகபூர்வ பெறுநருக்கு அவ்வரும்படிகளை ஒப்படைத்தல் வேண்டும்.

(3) வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பான ஒழிப்போன் அல்லது பெறுநர் என்போருக்கு பயனுள்ளதான பொறுப்பு விடுவிப்பொன்றாக இருக்க வேண்டிய (2) ஆம் உட்பிரிவின் கீழான ஒப்படைப்பு தொடர்பில் உத்தியோகபூர்வ பெறுநரினால் வழங்கப்படும் சான்றிதழ் ஒன்றுக்கு வங்கி முறிவு நம்பிக்கைப் பொறுப்பாளர், ஒழிப்போன் அல்லது பெறுநர் என்போர் உரித்துடையவராதல் வேண்டும்.

(4) உத்தியோகபூர்வ பெறுநர் உரித்துடைய ஆளின் ஏதேனும் தாபிக்கப்பட்ட உரிமைக் கோரிக்கையின் ஏதேனும் திருப்தியில் அல்லது திருப்தியை நோக்கி செயல்முறைக் குகந்த விரைவானவளவு ஏற்புடமையாககூடிய “கடனிறுக்க வகையின்மை வைத்திருப்புக் கணக்கு” என அழைக்கப்படும் உத்தியோகபூர்வ பெறுநரின் கணக்கில் (2) ஆம் உட்பிரிவின் கீழ் பெறப்பட்ட எல்லா வரும்படிகளையும் இடுதல் வேண்டும்.

(5) இரண்டாம் உட்பிரிவின்கீழ் உத்தியோகபூர்வ பெறு நரினால் வரும்படிகள் பெறப்பட்டதான தேதியிலிருந்து பன்னிரெண்டு மாதங்களின் முடிவில், உத்தியோகபூர்வ பெறுநர் “கடனிறுக்க வகையின்மை மிகைசேர் கணக்கு” என அழைக்கப்படும் உத்தியோகபூர்வ பெறுநரின் கணக்கில் அத்தகைய வரும்படிகளின் ((4) ஆம் உட்பிரிவின்கீழ் ஏதேனும் விண்ணப்பத்தின் பின்னர்) மீதியை கைமாற்றுதல் வேண்டும்.

(6) கடனிறுக்க வகையின்மை மிகைசேர் கணக்கின் வரவிலுள்ள ஏதேனும் தொகையிருப்பின் மற்றும் அளவுவரை அத்தகைய தொகையானது :–

(அ) ஐந்தாம் உட்பிரிவின்கீழ் தேறிப்பெறுகையின் வரும்படிகள் கைமாற்றப்படுமிடத்து, எவரேனும் உரித்துடைய ஆளின் ஏதேனும் தாபிக்கப்பட்ட உரிமைக்கோரிக்கையின் திருப்தியில் அல்லது திருப்தியை நோக்கி செயல் முறைக்குகந்த விரைவான அளவில் ஏற்புடமையாதல் வேண்டும்;

(ஆ) கடனாளியின் மரணச் சொத்து அத்தகைய ஆகுசெலவுகளை மேவுவதற்கு போதியதற்றதான தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை நடவடிக்கை முறைகளின் நிருவாகத்தின் ஆகுசெலவுகளை ஈடுசெய்வதற்கு கிடைக்கப்பெறச் செய்தல் வேண்டும்.

(7) கடனிறுக்கவகையின்மை மிகைசேர் கணக்கில் வரவிருக்கும் ஏதேனும் தொகை விதித்துரைக்கப்படடின், விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேவைப்பாடு களுடன் இணங்கியொழுகுவதில் முதலீடுசெய்யப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய எவையேனும் முதலீடுகள் மீது பெறப்பட்ட வருமானம் கடனிறுக்க வகையின்மை மிகைசேர் கணக்கில் உடனடியாக செலுத்தப்படுதல் வேண்டும்.

(8) உட்பிரிவு 4 அல்லது (6) (அ) என்பவற்றின்கீழ் உரித்துடைய கடனிறுக்க வகையின்மை வைத்திருப்பு கணக்கு அல்லது கடனிறுக்கவகையின்மை மிகைசேர் கணக்கு என்பவற்றிலிருந்து ஏதேனும் தொகை செலுத்தப் படுமிடத்து, அத்தொகையினை அடுத்துறுகின்றவகையில் உரிமை கோருகின்றவரான வேறு எவரேனும் ஆள் அத்தொகை தொடர்பில் கடனிறுக்கவகையின்மை வைத்திருப்பு கணக்கு அல்லது கடனிறுக்கவகையின்மை மிகைசேர் கணக்கின் மறுவழியின் ஏதேனும் உரிமையை கொண்டிருத்தலாகாது.

(9) உத்தியோகபூர்வபெறுநர் விதித்துரைக்கப்படக்கூடிய வாறான அத்தகைய தகவலுடன் அத்தகைய முறையில் மற்றும் அத்தகைய நேரங்களில் அல்லது அத்தகைய நிகழ்வுகளினால் அத்தகைய ஆட்களுக்கு கடனிறுக்க வகையின்மை வைத்திருப்பு கணக்கு பற்றிய அறிக்கைகளை அனுப்புதல் வேண்டும்.

கடன் கொடுநரின் தீர்மானங்கள்

**433.** கடன்கொடுநர்களின் தீர்மானமொன்றுக்கு இச் சட்டம் குறிப்பீடு செய்கின்றவிடத்து, அத்தகைய தீர்மானமொன்றுக்கான தேவைப்பாடுகள் ஐந்தாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள 7 ஆம் விடயத்திலுள்ளவை யாதல் வேண்டும்.

உதவுதொகை தீர்மானங்கள்

**434.** உதவுதொகை செலுத்துநர்களின் தீர்மானமொன் றுக்கு இச்சட்டம் குறிப்பீடு செய்கின்றவிடத்து, அத்தகைய தீர்மானமொன்றுக்கான தேவைப்பாடுகள் ஐந்தாம் அட்ட வணையின் பந்தி 7 இலுள்ளவையாகவிருத்தல் வேண்டும்.

ஆதனத்தின் கைப்பற்றுகை அல்லது கையுதிர்ப்பு தொடர்பான பாதுகாப்பு

**435.** (1) உட்பிரிவு (2) இல் குறிப்பீசெய்யப்பட்ட ஆளொருவர் கம்பெனியின் ஆதனமல்லாத ஏதேனும் ஆதனத்தை கைப்பற்றுதல் செய்கின்றவிடத்து அல்லது கையுதிர்க்கின்றவிடத்து, ஆளின் தீயநம்பிக்கை அல்லது அசட்டையினால் ஏற்படுத்தப்பட்டிருந்தாலொழிய, அவ்வாள் கைப்பற்றுகையிலிருந்து அல்லது கையுதிர்ப்பிலிருந்து விளைகின்ற ஏதேனும் இழப்பு அல்லது தீங்கு தொடர்பில் ஆளாகமாட்டார்.

(2) உட்பிரிவு (1) ஆனது நிருவாகி, உறுதி நிருவாகி, ஒழிப்போன், கம்பெனியின் தற்காலிக ஒழிப்போன் அல்லது விசேட முகாமையாளர் என்போருக்கு ஏற்புடமையாகின்றது.

(3) உட்பிரிவு (1) இல் உள்ள எதுவும் பின்வருவன வற்றில் சிலதை அல்லது அனைத்தையும் மீட்டெடுக்க எவரேனும் ஆளின் ஏதேனும் உரிமையையோ அல்லது பரிகாரத்தையோ பாதித்தலோ அல்லது கட்டுப்படுத்தலோ ஆகாது :-

(அ) ஆதனம் அல்லது

(ஆ) ஆதனத்தின் தேறிப்பெறுகையின் எவையேனும் வரும்படிகள்.

செயல்களின் செல்லுபடியாந் தன்மை

**436.** பிரயோகிக்கப்படற்பாலதாக வரக்கூடிய தத்துவ மொன்றின்கீழ் ஆளொருவரை நிருவாகியாக, உறுதி நிருவாகியாக, ஒழிப்போனாக, தற்காலிக ஒழிப்போனாக, விசேட முகாமையாளராக அல்லது பெறுநராக நியமிப்பதற்கு நேர்மையான முயற்சியொன்று எடுத்திருப்பின், விடயத்துக் கேற்ப, நிருவாகியாக, ஒழிப்போனாக, தற்காலிக ஒழிப்போனாக, விசேட முகாமையாளராக அல்லது பெறுநராக அவ்வாளின் செயல்கள் அடுத்துறுவதாக கண்டுபிடிக்கப்பட்ட தகமைகளிலுள்ள ஏதேனும் குறைபாடு எது எவ்வாறிருப்பினும் செல்லுபடியானவையாகும்.

காலப்பகுதியை நீடித்தல்

**437.** (1) இச்சட்டத்தின்கீழ் உரிமையொன்று பிரயோகிக்குமிடத்து, அவ்வுரிமையைப் பிரயோகிப்பதற்கான ஏதேனும் நேரப்பகுதி காலப்பகுதியினால் நீடிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவிலுள்ள எதுவும், இச்சட்டத்தின்கீழ் உரிமையொன்றின் பிரயோகத்தின் மீதான ஏதேனும் மட்டுப்பாடு அல்லது வரையறையை அல்லது உரிமையொன்றின் முடிவுறுத்துகையை பாதித்தலாகாது.

குறிப்பிட்ட பதவி வகிப்பவருக்கு தேவையான ஆவணங்கள்

**438.** (1) இப்பிரிவில் :-

(அ) "கோருகின்ற திறத்தவர்" என்பது –

(i) அதிகாரி;

(ii) நிருவாகி;

(iii) ஒழிப்போன்; அல்லது

(iv) தற்காலிக ஒழிப்போன்; அத்துடன்

(ஆ) "குறித்துரைக்கப்பட்ட பதவிவகிப்பவர்" என்பவர் -

(i) வங்கிமுறிவுநிலை நம்பிக்கைப்பொறுப்பாளர்;

(ii) தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மை பிரேரிப்பாளர்;

(iii) தனிப்பட்ட வகையின்மை நிருவாகி;

(iv) நிருவாகி;

(v) உறுதி நிருவாகி;

(vi) ஒழிப்போன்;

(vii) தற்காலிக ஒழிப்போன்; அல்லது

(viii) பெறுநர்.

(2) குறித்துரைக்கப்பட்ட பதவி வகிப்பவர் அவரின் பணிகள், தத்துவங்கள் மற்றும் கடமைகள் எவற்றையும் பிரயோகிக்கும், நிறைவேற்றும் அல்லது புரியும் நோக்கத்துக்காக புத்தகம், பதிவேடு அல்லது ஆவணத்தை தேவைப்படுத்துகின்றவிடத்து, வேறுவகையில் இச்சட்டத்தின்கீழ்

கோருகின்ற திறத்தவருக்கு ஒப்படைக்காதிருப்பதற்கான உரிமையை குறித்துரைக்கப்பட்ட அலுவலர் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின் கீழ் குறித்துரைக்கப்பட்ட உரிமையை பிரயோகிக்குமிடத்து, கோருகின்ற திறத்தவர் பின்வருவனவற்றுக்காக, குறித்துரைக்கப்பட்ட பதவி வகிப்பவரைத் தேவைப்படுத்தலாம்.

(அ) விடயத்துக்கேற்ப ஏதேனும் நியாயமான நேரத்தில் கோரும் திறத்தவரினால் சோதனையிடுவதற்கு கிடைக்கப்பெறும் புத்தகம், பதிவேடு அல்லது ஆவணத்தை வழங்குவதற்கு,

(ஆ) விடயத்துக்கேற்ப புத்தகம். பதிவேடு அல்லது ஆவணம் அல்லது இயைபான பகுதி அல்லது அவற்றின் பகுதிகள் என்பவற்றின் பிரதியை கோரும் திறத்தவருக்கு வழங்குவதற்கு.

(4) கோருகின்ற திறத்தவர் (3) ஆம் உட்பிரிவின் கீழ் தேவைப்பாட்டுடன் இணங்கியொழுகுவதில் குறித்துரைக்கப் பட்ட பதவி வகிப்பவரொருவரின் நியாயமான செலவினங் களைச் செலுத்துதல் வேண்டும்.

கோரிக்கைகளும் அறிவித்தல்களும்

**439.** (1) இச்சட்டம் கோரிக்கையை விடுவிப்பதற்கு ஏற்பாடு செய்கின்றவிடத்து, ஆனால், இச்சட்டத்தின் அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதி கோரிக்கை எவ்வாறு விடுக்க வேண்டுமென்பதை குறிப்பிடவில்லை. அக்கோரிக்கை எழுத்து மூலமாகவே மேற்கொள்ளப்பட வேண்டும்.

(2) இவ்விதியானது அறிவித்தல் அல்லது எழுத்து மூல அறிவித்தல் வழங்குவதனைக் குறிப்பிட்டாலும், இவ்விதியோ அல்லது ஏதேனும் ஒழுங்கோ எம்முறையில் அக்கோரிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதைக் குறிப்பிடவில்லை. அக்கோரிக்கை எழுத்து மூலமாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

(3) இச்சட்டத்தின் ஏற்பாடொன்று பகிரங்க அறிவித்தல் கொடுப்பதற்கு தேவைப்படுமிடத்து, அத்தகைய அறிவித்தல் பின்வருவனவற்றில் வெளியிடப்படுதல் வேண்டும் :-

(அ) வர்த்தமானியில்;

(ஆ) பொதுவான புழக்கத்திலுள்ள வெளியிடப்பட்ட செய்தித்தாள்களில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் ஒவ்வொன்றிலும்;

(இ) விதித்துரைக்கப்படின், விதித்துரைக்கப்படக்கூடிய வாறான தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகு வதில் வலைத்தளமொன்றின் மீது.

அத்தியாயம் 2

**தவறுகள்**

நிருவாகம் அல்லது ஒழித்துக்கட்டடல் முன்னர் பணிப்பாளர் ஒருவரின் அல்லது ஏனைய அலுவல ரொருவரின் முறைப்பிழை

**440.** (1) கம்பெனியொன்றின் நிருவாகம் அல்லது ஒழித்துக்கட்டடல் தொடங்கும்போது நிருவாகம் அல்லது ஒழித்துக் கட்டுதல் தொடங்கும் தேதிக்கு நேர்முற்போந்த இரண்டு ஆண்டுகள் எனும் காலப்பகுதியினுள் அல்லது அதன்பின்னரான எந்நேரத்திலும் ஆளானவர் பின்வருமாறு புரிந்திருக்கின்றவிடத்து, கம்பெனியின் கடந்தாகல அல்லது தற்போதைய பணிப்பாளர் அல்லது வேறு அலுவலராகவுள்ள ஆள் ஒருவுர் தவறொன்றைப் புரிகின்றார் :-

(அ) பத்தாயிரம் ரூபா எனும் பெறுமதிக்கு அல்லது அதற்கு மேற்பட்ட கம்பெனியின் ஆனத்தின் ஏதேனும் பாகத்தை மறைத்திருந்தால் அல்லது கம்பெனிக்கு அல்லது கம்பெனியிடமிருந்து வருமதியாகவுள்ள ஏதேனும் தனிசை மறைத்து வைத்திருத்தல்;

(ஆ) பத்தாயிரம் ரூபா அல்லது அதற்கு மேற்பட்ட பெறுமதிக்கு கம்பெனியின் ஆதனத்தின் ஏதேனும் பாகத்தை மோசடியான முறையில் அகற்றி யிருத்தல்;

(இ) கம்பெனியின் அலுவல்கள், தொழில், ஆதனம் அல்லது நிதிசார் சூழ்நிலைகள் தொடர்பிலான ஏதேனும் புத்தகத்தை பதிவேட்டை அல்லது ஆவண மோசடியான முறையில் கொடுத்து விடுதல், மாற்றுதல் அல்லது அதில் ஏதேனும் விட்டுவிடுகையை செய்திருத்தல் அல்லது அதனை மோசடியானமுறையில் கொடுத்து

விடுதலில், அளிப்பதில், மாற்றுவதில் அல்லது ஏதேனும் விட்டுவிடுகையை செய்வதில் சம்பந்தப் பட்டிருத்தல் அல்லது உடந்தையாகவிருத்தல்;

(ஈ) கம்பெனி அடுத்துறுவதாக செலுத்தியிருக்காத தான கடன்மீது கம்பெனிக்காக அல்லது கம்பெனியின் சார்பில் ஏதேனும் ஆதனத்தினை ஏதேனும் மோசடியானமுறையில் கூற்றுசெய்தல் அல்லது வேறு மோசடி மூலம் பெற்றிருத்தல்;

(உ) கம்பெனியின் தொழிலின் அடகுவைத்தல், அடமானம் வைத்தல் அல்லது கையுதிர்த்தல் என்பன வழமையான நடவடிக்கைகளில் இருந்தா லொழிய, கடனுக்கு பெறப்பட்டு அதனை செலுத்தியிருக்காததான கம்பெனியின் ஏதேனும் ஆதனத்தின் அடகுவைத்தல், அடமானம் வைத்தல் அல்லது கையுதிர்த்தல் என்பவற்றுடன் சம்பந்தப் பட்டிருத்தல் அல்லது உடந்தையாகவிருத்தல்;

(ஊ) கடன்கொடுநர்களை மோசடிசெய்யும் உட்கருத் துடன், கம்பெனியின் ஏதேனும் ஆதனத்தின் கொடையை அல்லது கைமாற்றத்தை அல்லது அதன்மீதான வில்லங்கத்தைச் செய்திருத்தல் அல்லது கொடுத்திருத்தல் அல்லது செய்யப்படு வதனை அல்லது கொடுக்கப்படுவதனை விளை வித்திருத்தல் அல்லது ஏதேனும் நிறைவேற்றுகை அல்லது வேறு சட்ட நடைமுறை தொடங்கப்படு வதனை அல்லது தொடரப்படுவதனை அல்லது கம்பெனிக்கெதிராக அல்லது அதன் ஏதேனும்; ஆதனத்துக்கெதிராக அறவிடப்படுவதனை விளை வித்திருத்தல் அல்லது அதற்கு உட்கையாக விருந்திருத்தல்;

(எ) கடன் கொடுநர்களை மோசடி செய்யும் உட்கருத்துடன் கம்பெனிக்கு எதிராக பெறப்பட்ட பணத்தின் கொடுப்பனவுக்கான கட்டளை அல்லது ஏதேனும் திருப்திகரமற்ற தீர்ப்பின் தேதிக்கு பின்னர் அல்லது முன்னரான இரண்டு மாதங்களுக்கு குறைவாக கம்பெனியின் ஆதனத்தின் ஏதேனும் பாகத்தினை மறைத்து வைத்திருத்தல் அல்லது அகற்றியிருத்தல்;

(ஏ) போலியான இழப்புக்கள் அல்லது செலவினங்கள் மூலம் கம்பெனியின் ஆதனத்தின் ஏதேனும் பாகத்துக்கான கணக்கிற்கு முயற்சித்தல்.

(2) மோசடி செய்வதற்கான உட்கருத்தை அவ் ஆள் கொண்டிருக்கவில்லை என்பதை எண்பிப்பதற்கு உட்பிரிவு (1) இன் பந்தி (அ) அல்லது (உ) இன் கீழ், குற்றஞ்சாட்டுவது சிறந்த தற்காப்பாகும்.

(3) உட்பிரிவு (1) இன் கீழ் தவறொன்றைப் புரிகின்றவரான ஆளொருவர் குற்றத்தீர்ப்பளிப்பின்மேல், மூன்று மில்லியனை விஞ்சாத குற்றப் பணமொன்றுக்கும் அல்லது ஏழு ஆண்டுகளை விஞ்சாத காலப்பகுதிக்கான கடூழிய மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்.

(4) ஆளொருவர் உட்பிரிவு (1)(உ) என்பதன்கீழ் தவறொன்றக்கு இட்டுச் செய்கின்ற சூழ்நிலைகளில் ஏதேனும் ஆதனத்தை ஈடுவைத்தல், அடமானம் வைத்தலில் அல்லது கையுதிர்த்தலில் சம்பந்தப்பட்டுள்ளவிடத்து அல்லது உடந்தையாகவுள்ளவிடத்து, அச்சூழ்நிலைகளில் அவ்வாதனம் ஈடுவைக்கப்பட்டுள்ளது, அடமானம் வைக்கப்பட்டுள்ளது அல்லது கையுதிர்க்கப்பட்டுள்ளது என்பதனை அறிந்து கொண்டு அவ்வாதனத்தை ஈடுவைக்கின்ற, அடமானம் வைக்கின்ற அல்லது வேறுவகையில் பெறுகின்ற எவரேனும் ஆள் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் குற்றத் தீர்ப்பளிப்பதன் மீது மூன்று மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஏழு ஆண்டுகளை விஞ்சாத காலத்துக்கான கடூழிய மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்.

**441.** (1) ஒழித்துக்கட்டதல் அல்லது நிருவாகத்திற்கு இடப்பட்டுள்ள கம்பெனியின் ஏதேனும் தொழில் கடன் கொடுநரை அல்லது வேறொரு ஆளை மோசடி செய்யும் உட்கருத்துடன் அல்லது ஏதேனும் மோசடியான நோக்கத்துக்காக கொண்டுசெல்லப்படுகின்றவிடத்து, அம்முறையில் தொழிலில் சம்பந்தப்பட்ட அல்லது உடந்தையளிக்கின்றவரான ஆள் ஒவ்வொருவரும் தவறொன்றைப் புரிகின்றா மோசடி வர்த்தகம்

ரென்பதுடன் குற்றத்தீர்ப்பளிப்பதன்மீது மூன்று மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஏழு ஆண்டுகளை விஞ்சாத காலப்பகுதிக்கான அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்.

(2) ஒழித்துக்கட்டலில் அல்லது நிருவாகத்திற்குட் பட்டுள்ள, கம்பெனியின் ஏதேனும் தொழில் கடன் கொடுநரை அல்லது வேறொரு ஆளை மோசடி செய்யும் உட்கருத்துடன் அல்லது ஏதேனும் மோசடியான நோக்கத்துக்காக கொண்டு செல்லப்படுமிடத்து, நீதி மன்றம் விடயத்துக்கேற்ப, ஒழிப்போனின் அல்லது நிருவாகியின் விண்ணப்பத்தின் மீது, அம்முறையில் தொலை கொண்டு செல்வதில் உடந்தையளித்த அல்லது சம்பந்தப்பட்ட அவ்வாள் ஒவ்வொருவருக்கும் நீதிமன்றம் பொருத்தமானது என கருதுகின்றவாறு பின்வருமாறு கட்டளையிடலாம் :

(அ) கம்பெனியின் ஆதனத்துக்கு அத்தகைய உதவு தொகையை செய்தல்; அல்லது

(ஆ) கம்பெனியின் அத்தகைய தனிசுகள் மற்றும் ஏனைய பொறுப்புகளுக்கு தனிப்பட்ட ரீதியில் பொறுப்பாதல்.

(3) இப்பிரிவின்கீழ் கட்டளையொன்றை ஆக்குகையில், நீதிமன்றம் அவசியமானவாறு :

(அ) ஏதேனும் நியதி அல்லது நிபந்தனையை விதிக்கலாம்; அத்துடன்

(ஆ) வேறு ஏதேனும் துணைக் கட்டளையை ஆக்கலாம்.

நிருவாகம் அல்லது ஒழித்துக்கட்டுதலுடன் தொடர்புடைய தவறு

**442.** (1) நிருவாகம், அல்லது ஒழித்துக்கட்டுதல் அல்லது அடுத்துறுவதாக தொடங்கிய நிருவாகம் அல்லது ஒழித்துக் கட்டுதலில் கம்பெனியொன்று உள்ளவிடத்து மற்றும் அத்தகைய கம்பெனியின் கடந்தகால அல்லது தற்கால பணிப்பாளர் அல்லது வேறு அலுவலர் அல்லது உதவு தொகை வழங்குநர் :

(அ) நிருவாகி, ஒழிப்போன் அல்லது தற்காலிக ஒழிப்போனின் கோரிக்கைக்கு பதிலளிக்கும்

வகையில், விடயத்துக்கேற்ப, அந்த ஆளின் சிறந்த அறிவு மற்றும் நம்பிக்கையின் முழுமையாகவும் உண்மையாகவும் தெரியப்படுத்துவதில்லை, அத்துடன் நிருவாகி, ஒழிப்போன் அல்லது தற்காலிக ஒழிப்போனுக்கு கம்பெனியின் அசையும் மற்றும் அசையா ஆதனங்கள் அனைத்தும், கம்பெனியின் வழமையான வணிக போக்கில் அப்புறப்படுத்தப்பட்ட பகுதியை தவிர, எப்படி, யாருக்கு, எந்தக் கருத்தில், எந்தப் பகுதியை கம்பெனி எப்போது அப்புறப்படுத்தப் பட்டது என்பதைத் தெரியப்படுத்துவதில்லை;

(ஆ) ஆளின் உடமையில் அல்லது கட்டுக்காப்பில் அல்லது ஆளின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ளதான கமபெனியின் அசையும் மற்றும் அசையாத ஆதனத்தின் அத்தகைய எல்லா பாகத்தினையும் நிருவாகிக்கு, ஒழிப்போனுக்கு அல்லது தற்காலிக ஒழிப்போனுக்கு ஒப்படைக்காது என்பதுடன் விடயத்துக்கேற்ப, நிருவாகி, ஒழிப்போன், அல்லது தற்காலிக ஒழிப்போன், ஆளிடம் நியாயமான முறையில் ஒப்படைப்பதற்கு கோரலாம்;

(இ) நிருவாகி, ஒழிப்போன் அல்லது இடையேற்பாட்டு ஒழிப்போன் போன்றோர் விநியோகம் செய்யுமாறு ஆளொருவரை நியாயமாகக் கோரிக்கைவிடுக்கும் ஆளொருவரின் உரிமை அல்லது கட்டுப்பாட்டில் உள்ளவாறான கம்பெனியின் சகல புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஆவணங்களை நிருவாகி, ஒழிப்போன் அல்லது தற்காலிக ஒழிப்போனுக்கு விநியோகிக்கமாட்டார்;

(ஈ) நிருவாகி, ஒழிப்போன் அல்லது தற்காலிக ஒழிப்போனுக்கான கம்பெனியின் விவகாரங்கள், வணிகம், ஆதனம் அல்லது நிதியியல் நிலைமை களுடன் தொடர்புபட்ட ஏதேனும் புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஆவணங்களைத் தயாரிப் பதனைத் தடுப்பார்;

(உ) கம்பெனியின் விவகாரங்கள், வணிகம், ஆதனம் அல்லது நிதியியல் நிலைமைகளுடன் தொடர்பு

பட்ட ஏதேனும் கூற்றுக்களை மேற்கொள்வதில் உடந்தையாக இருத்தல் அல்லது தொடர்பு பட்டிருத்தல். அதாவது –

(i) ஒரு குறிப்பிட்ட விடயத்தில் போலியான அல்லது தவறாக வழிநடத்தக் கூடியதான் அல்லது

(ii) நீக்கம் செய்தலானது ஒரு குறிப்பிட்ட விடயத்தில் போலியான அல்லது தவறாக வழிநடத்தக் கூடியதான கூற்றை உருவாக்கும் வகையிலான ஏதேனும் தரவை அல்லது விடயத்தை வெளியிடுவதைத் தவிர்த்தல்;

(ஊ) நிருவாகி, ஒழிப்போன் அல்லது தற்காலிக ஒழிப்போனுக்கு அறிவிப்பதற்கு ஒருமாத காலத்திற்குத் தவறுதல், ஏதேனும் ஆளினால் ஏற்றுக்கொள்ளப்படும் போலியான தனிசு ஆகும் என அறிதல் அல்லது நம்புதல்; அல்லது

(எ) கம்பெனி அல்லது நிருவாகம் அல்லது விற்றுத்தீர்த்தலுடன் உரியவாறு உடன்படிக்கை ஒன்றிற்காக ஏதேனும் தனிசுவழங்குனரின் ஒப்புதலை பெறும் நோக்கிலான ஏதேனும் மோசடியான பிரதிநிதித்துவம் அல்லது ஏதேனும் மோசடி குற்றம் ஆகும்.

குற்றத்தை இழைப்பவராவதுடன் மூன்று மில்லியனிற்கு மேற்படாத தண்டப்பணம் அல்லது ஏழு வருடங்களுக்கு மேற்படாத காலத்தைக் கொண்ட கடுமையான சிறைத் தண்டணை அல்லது அத்தகைய தண்டப்பணம் மற்றும் சிறைத்தண்டணை இரண்டிற்குமான குற்றத்தீர்ப்பிற்கு உட்படுதல் வேண்டும்.

(2) கம்பெனியின் அலுவல்களின் நிலைமையை நிலையை மறைப்பதற்கு அல்லது சட்டத்தைத் தோற்கடிப்பதற்கான உட்கருத்தை ஆள் கொண்டிருக்கவில்லையென எண்பிப்ப தற்கு (1) ஆம் உட்பிரிவின் (அ), (ஆ), (இ), (ஈ), (உ) மற்றும் (ஊ) எனும் எவையேனும்; பந்திகளின் கீழ் குற்றம் சுமத்துவதற்கான சிறந்த தற்காப்பாகும்.

தடைசெய்யப்பட்ட நடவடிக்கை

**443.** (1) கம்பெனியொன்று ஒழித்துக்கட்டுதலில் அல்லது நிருவாகத்தில் இருப்பின் அல்லது விண்ணப்பமொன்று பிரிவு 298 (2) (இ) அல்லது பிரிவு 190 (1) என்பவற்றின்கீழ் செய்யப்பட்டிருப்பின், ஆளெவரும் பின்வரும் உட்கருத்துடன் இலங்கையை விட்டுச் செல்லலாகாது :

(அ) கம்பெனிக்குக் கடனாகவுள்ள காணப்படும் பணக் கொடுப்பனவை தவிர்த்தல்;

(ஆ) கம்பெனியின் அலுவல்களுடன் தொடர்புடைய பரிசோதனையைத் தவிர்த்தல்; அல்லது

(இ) கம்பெனியின் அலுவல்கள் தொடர்பில் நீதிமன்றத்தின் கட்டளை அல்லது இச்சட்டத்தின் அல்லது ஏதேனும் ஒழுங்குவிதியின் கீழான வேறு தேவைப்பாட்டுடன் இணங்கியொழுகுவதைத் தவிர்த்தல்.

(2) ஓராம் உட்பிரிவிற்கு இணங்கியொழுகத் தவறுகின்றவர் தவறொன்றைப் புரிபவராவார்.

முறையான கணக்குகள் வைக்கப்படாத விடத்து எழும் பொறுப்பு

**444.** (1) கம்பெனியொன்று நிருவகிக்கும் அல்லது ஒழித்துக்கட்டும் போக்கில், நிருவகித்தல் அல்லது ஒழித்துக்கட்டுதல் தொடங்கும் தேதிக்கு நேர்முன்னரான இண்டு ஆண்டுகளைக் கொண்ட காலப்பகுதி முழுவதும் அல்லது கம்பெனியின் கூட்டிணைப்புக்கும் நிருவகித்தல் அல்லது ஒழித்துக்கட்டுதல் தொடங்கும் தேதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதி முழுவதும், இவற்றுள் எது குறுகியதோ, அக்காலப்பகுதியில் கம்பெனியினால் முறையான கணக்குகள் வைக்கப்படவில்லையென்பது காட்டப்படுமிடத்து, கம்பெனியின் தவறுகையிலுள்ள பணிப்பாளர் மற்றும் அலுவலர் ஒவ்வொருவரும், பணிப்பாளர் அல்லது ஏனைய அலுவலர் :

(அ) பணிப்பாளர் அல்லது ஏனைய அலுவலர் செயலாற்றினார் எனக் காட்டினாலன்றி; அத்துடன்

(ஆ) எந்தச் சூழ்நிலையில் கம்பெனியின் அலுவல்கள் கொண்டுநடாத்தப்பட்டனவோ அந்தச் சூழ்நிலைகளில் தவறுகை இருந்ததாக தவிர்க்க முடியாததாக காட்டினாலன்றி, தவறொன்றைப் புரிந்தவராதல் வேண்டும்.

குற்றம் இழைக்கப்பட்டதாகும்.

(2) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, பெறப்பட்ட எல்லாப் பணம் பற்றியும் செலுத்தப்பட்ட பணம் பற்றியும் போதிய விபரத்தில் நாளாந்தப் பதிவேடுகளும் அத்துடன் வியாபாரம் அல்லது தொழில் பொருட்களிலான கொடுக்கல்வாங்கல் களை உட்படுத்தியிருக்குமிடத்து, பொருட்களையும் அவற்றின் வாங்குநர்களையும் விற்பனையாளர்களையும் அடையாளம் கண்டுகொள்வதை இயலச் செய்வதற்கு போதிய விவரத்தில் காட்டும் ஆண்டுக் கையிருப்புப் கொள்கலன்களினதும் (சாதாரண சில்லறை வியாபாரத்தன் வழியாக விதிக்கப்பட்ட பொருட்களின் விடயத்தில் தவிர) விற்பனை செய்யப்பட்ட வையும் கொள்வனவு செய்யப்பட்டவையுமான பொருட்களும் கூற்றுக்களும் அடங்கிய புத்தகங்கள் உட்பட, கம்பெனி யினது வியாபாரத்தின் அல்லது தொழிலின் கொடுக்கல் வாங்கல்களையும் நிதிநிலைமைகளையும் வெளிகாட்டவும் விளக்கவும் அவசியமாகவுள்ள அத்தகைய புத்தகங்கள் அல்லது கணக்குகள் வைத்திருக்கப்பட்டிராவிடில், ஏதேனும் கம்பெனியின் விடயத்தில், முறையான கணக்குப் புத்தகங்கள் வைத்திருக்கப்படவில்லையெனக் கருதப்படல் வேண்டும்.

பொய்யான அல்லது பிறழ்வழி இட்டுச் செல்வதான கூற்று

**445.** இச்சட்டத்தின் நோக்கங்களினால் அல்லது நோக்கங் களுக்காக தேவைப்படும் ஏதேனும் தகவல்களை வழங்கு கின்ற எவரேனுமாள் :

(அ) முக்கியமான விவரமொன்றில் பொய்யான அல்லது பிறழ்வழி இட்டுச் செய்வதான தகவ லொன்றாக இருக்குமிடத்து;

(ஆ) அவ்வாள், ஒன்றில் -

(i) முக்கியமான விவரமொன்றில் பொய்யான அல்லது பிறழ்வழி இட்டுச்செய்வதான தகவலென அறிந்திருக்குமிடத்து; அல்லது

(ii) முக்கிய விவரமொன்றில் விட்டுவிடுதலான அத்தகவலை பொய்யானதாக அல்லது பிறழ்வழி இட்டுச்செல்வதாக்கும் என்பதனை அறிந்து ஏதேனும் உண்மை அல்லது விடயத் தினை வெளிப்படுத்தலை விட்டுவிடுமிடத்து,

தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப் படுவதன்மேல் மூன்று மில்லியன் ரூபாவை விஞ்சாதவொரு

குற்றப்பணத்திற்கு அல்லது ஏழு ஆண்டுகளை விஞ்சாத வொரு காலப்பகுதிக்கு கடூழிய மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

நிருவாகிகள் மற்றும் ஒழிப்போன் களுக்கான ஊழியர் சகாய நிதியக் கொடுப் பனவுச்சட்டம், ஊழியர் நம்பிக்கைக் பொறுப்பு நிதியச்சட்டம் மற்றும் பணிக்கொடை கொடுப்பனவு சட்டம் என்பவற்றின் ஏற்புடையாந் தன்மை

**446.** 1958ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியக் கொடுப்பனவுச் சட்டம், 1980ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியச் சட்டம், மற்றும் 1983ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டம் உட்பட, வேறு எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளாக இருப்பினும், ஊழியர் சேமலாப நிதிய நிலுவை, ஊழியர் நம்பிக்கை நிதிய நிலுவை, மற்றும் நியாயாதிக்க பணிக்கொடை என்பவற்றைச் செலுத்தாமை யுடன் தொடர்புடைய விடயங்களுக்கு நிருவாகி அல்லது ஒழிப்போன் குற்றமிழைத்ததாகப் பொறுப்பாக இருத்தல் கூடாது.

## அத்தியாயம் 3

### நியாயாதிக்கம் மற்றும் செயன்முறை

நியாயாதிக்கம்

**447.** (1) இச்சட்டத்தின், சந்தர்ப்பம் வேறுவகையில் தேவைப்படுத்தினாலன்றி, “நீதிமன்றம்” என்பது :

(அ) தனிப்பட்ட கடனிறுக்கவகையின்மையுடன் தொடர்புடையதாக, கடனாளி வசிக்கும் மாவட்டத்தின் மாவட்ட நீதிமன்றம்;

(ஆ) கம்பெனியுடன் தொடர்பான விடயமொன்றில், கம்பெனியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் அமைந்துள்ள மாவட்டத்தின் மாவட்ட நீதிமன்றம்; அத்துடன்

(இ) வேறு எல்லா விடயங்களிலும், கொழும்பு மாவட்ட நீதிமன்றம்.

(2) நீதிமன்றத்தின் முன்னிலையில் வழக்குத் தொடர் நடவடிக்கைகளில் தோன்றிய பாதிக்கப்பட்ட தரப்பினரின் மூலம் முதலில் மேன்முறையீட்டினைப் பெறுவதன் கீழ்,

அத்தகைய கட்டளை அல்லது தீர்ப்பு நாளின் பின்னரான பதினான்கு நாட்களினுள், நீதிமன்றத்தின் ஏதேனும் கட்டளை அல்லது தீர்ப்பில் இருந்து இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மேன்முறையீட்டு நீதிமன்றில் மேன்முறையீட்டை மேற்கொள்ளல் வேண்டும்.

(3) விடுப்பு வழங்கப்படாவிட்டால், மனுதாரருக்கு நியாயமான தப்பெண்ணம் அல்லது கணிசமான அநீதி ஏற்படக்கூடும் என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் திருப்தியடைந்தால் மாத்திரமே, உட்பிரிவு (2) இன் கீழ் மேன்முறையீட்டிற்கான விடுப்பு வழங்கப்படல் வேண்டும்.

தவறுகளின் விளங்கல்களும் குற்றப்பணம் விதிப்பும்

**448.** எழுத்திலான வேறேதேனும் சட்டத்தில் முரணாக அடங்கியுள்ளவை எது எவ்வாறிருப்பினும்:-

(அ) இச்சட்டத்தின் கீழான எல்லாத் தவறுகளும் நீதிவானொருவரால் சுருக்க முறையில் விளங்கப் படலாம்; அத்துடன்

(ஆ) நீதிவான் நீதிமன்றமானது அதன் வழமையான நியாதிக்கத்தைப் பிரயோகிக்கையில் விதிக்கக் கூடிய குற்றத்தொகையை அத்தகைய குற்றப் பணம் விஞ்சுகின்றதென்பது எவ்வாறிருப்பினும், இச்சட்டத்தின் கீழ் ஏதேனும் தவறுக்காக நீதிவான நீதிமன்றத்தில் குற்றப்பணமொன்று நீதிமன்றத்தினால் விதிக்கப்படலாம்.

நடவடிக்கை முறை

**449.** (1) இச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் நீதிமன்றத் துக்குச் செய்யப்படும் விண்ணப்பம் ஒவ்வொன்றும், வேறுவகையாக விதித்துரைக்கப்பட்டாலொழிய அல்லது வேறுவகையாக நீதிமன்றம் பணித்தாலொழிய, மனு மற்றும் சத்தியக்கடதாசி என்ற வழிவகையில் இருத்தல் வேண்டு மென்பதுடன் எவ்வாளுக்கெதிராக அத்தகைய விண்ணப்பம் செய்யப்பட வேண்டுமோ அவ்வாள் ஒவ்வொருவரும் மனுவில் எதிர்வாதியாகப் பெயர் குறிப்பிடப்படுதலும் வேண்டுமென்பதுடன் அவற்றின் அறிவித்தல் வழங்கப்படுவ தற்கும் அத்தகைய விண்ணப்பத்தை ஆட்சேபிப்பதற்கும் உரித்துடையவராதலும் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் கீழான அல்லது அதற்கான இடைநேர் விளைவான ஏதேனும் வழக்கு நடவடிக்கையின்போது நீதி

மன்றத்துக்குச் செய்யப்படும் விண்ணப்பம் ஒவ்வொன்றும், எழுத்தில் பிரேரணை மூலம் செய்யப்படுதல் வேண்டும்.

(3) அதிகாரி அல்லது உத்தியோகபூர்வ பெறுநர், இச்சட்டத்தின் கீழ் ஏதேனும் விண்ணப்பத்தில் அல்லது நீதிமன்றத்தின் முன்னிலையிலான வழக்கு நடவடிக்கை முறைகளின் அத்தகைய விண்ணப்பம் அல்லது வழக்கு நடவடிக்கைமுறையின் ஏதேனும் நிலையில் கேட்கப்படுவதற்கு அல்லது பிரதிநிதித்துப்படுத்தப்படவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(4) இச்சட்டத்தின் கீழான விண்ணப்பமொன்று என்ற வகையாக நீதிமன்றத்தின் முன்னரான எல்லா வழக்கு நடவடிக்கைகளிலும், செலவுகளுக்கான கட்டளை எதுவும் அதிகாரி அல்லது உத்தியோகபூர்வ பெறுநருக்கு எதிராக ஆக்கப்படுதலாகாது.

இடைக்கால நிவாரணம்

**450.** (1) இச்சட்டத்தின்கீழ் நீதிமன்றத்திற்குச் செய்யப்படும் ஏதேனும் விண்ணப்பத்தில் இறுதிகட்டளையொன்று ஆக்கப்படுவது முடிவுறிதுள்ள நிலையில், (2) ஆம் மற்றும் (3) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய, வழக்கு நடவடிக்கைகளுக்கான திறத்தவர் ஒருவரின் விண்ணப்பத்தின் மேல் நீதிமன்றமானது அது பொருத்தமானதெனக் கருதுகின்றவாறான தடைப்படுத்தற் கட்டளையொன்று உட்பட அத்தகைய இடைக்கால கட்டளையை ஆக்கலாம். அத்தகைய கட்டளையானது, நீதிமன்றத்தின் தற்றுணிபில் மறுதிறத்தவரில்லாததாக்கப்படலாம். எதிர்வாதிக்கான அறிவித்தலின் பின்னர் எதிர்வாதி மனுதாரருக்கான அறிவித்தலுடன் மறுதிறத்தலரில்லாத கட்டளையை இல்லாதொழிப்பதற்கான அல்லது வேறுபடுத்துவதற்கான கட்டளை ஒன்றிற்காக விண்ணப்பமொன்றைச் செய்யலாம்.

(2) நீதிமன்றமானது, விண்ணப்பதாரர் நாடிய கட்டளை வழங்கப்பட்டிருப்பின், எழுத்தில் பொறுப்புமுயற்சியொன்றை நீதிமன்றத்தில் முதலில் தாக்கல் செய்திருந்தாலொழிய, விண்ணப்பமொன்று தொடர்பில் தடைப்படுத்தற் கட்டளையொன்றினை அல்லது வேறேதேனும் வடிவிலான இடைக்காலக் கட்டளையொன்றினை வழங்குதலாகாது என்பதுடன் விண்ணப்பதாரர் ஏற்பதற்கு நியாயமானது மற்றும் ஒப்புரவானது என நீதிமன்றம் கருதுகின்ற, நட்டம்

அல்லது சேதத்தினால் வேறு எவரேனும் ஆள் பாதிக்கப் பட்டிருப்பின், அவ் இழப்பு அல்லது சேதத்திற்கு எதிராக வேறு ஆளுக்கு விண்ணப்பங்கள் நட்டோத்தரவாதமளிக் கின்றார்.

(3) நீதிமன்றம், மட்டுப்படுத்தற் கட்டளை அல்லது வேறு ஏதேனும் வடிவிலான இடைக்கால கட்டளை வழங்குவதற்கு முன்னர் அல்லது வழங்கும் நேரத்தில், உட்பிரிவு (2) இன் கீழ் வழங்கப்பட்ட பொறுப்புமுயற்சிக்காக விண்ணப்பகாரர் வழங்கவேண்டிய பிணைப்பொறுப்பின் தொகையை நிர்ணயித்தல் வேண்டும். பிணைப்பொறுப்பு நீதிமன்றத்தில் நிதியை வைப்பிலிடுவதன் மூலம் அல்லது வங்கி உத்தரவாதத்தை வழங்குவதன் மூலம் அல்லது நீதிமன்றம் போதுமானதெனக் கருதக் கூடியதான அத்தகைய வேறு முறைகளில் அளிக்கப்படலாம்.

(4) நீதிமன்றமானது காலத்துக்குக் காலம் இடைக் கட்டளையொன்றின் வலுவிலிருத்தலை ஆக்குவதன் அல்லது தொடர்வதன் விளைவொன்றாக இழப்பு அல்லது சேதத்தினால் துன்புறக்கூடியதான எவரேனும் ஆளின்; விண்ணப்பத்தின்மேல், உட்பிரிவு (2) இன் கீழ் வழங்கப்படும் பொறுப்புமுயற்சிக்காக விண்ணபகாரரினால் வழங்கப்பட வேண்டிய பிணைப்பொறுப்புத் தொகையை அதிகரிக்கலாம். வழங்கப்பட வேண்டிய பிணைப்பொறுப்புத் தொகையின் அதிகரிப்புக்கான கட்டளையொன்று ஆக்கப்படுமிடத்து, அது நீதிமன்றத்தினால் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதி யினுள் அதிகரிக்கப்பட்ட பிணைப்பொறுப்பு வழங்கப் படுதல் வேண்டும் என இடைக்காலக் கட்டளையின் தொடர்ச்சியின் நிபந்தனையொனறாக இருத்தல் வேண்டும்.

(5) நீதிமன்றமானது நீதியானது நீதி மற்றும் ஒப்புர வானது என எண்ணுகின்றவாறான அத்தகைய கட்டளை களை ஆக்கலாம் :

(அ) உட்பிரிவு (2) இன் கீழ் வழங்கப்பட்ட பொறுப்பு முயற்சியொன்றின் வலுவுறுத்துகையின் மூலம்;

(ஆ) உட்பிரிவு (3) இன் கீழ் பிணைப்பொறுப்பாக வைப்பிலிடப்பட்ட நிதியின் எவரேனும் ஆளுக்குச் செலுத்துவதற்கா; அல்லது

(இ) உட்பிரிவு (3) இன் கீழ் பிணைப்பொறுப்பாக வைப்பிலிடப்பட்ட எவையேனும் நிதிகளின், வட்டியைக் கொண்ட வங்கிக்கணக்கில் முதலீடு செய்வதற்காக.

**451.** (1) நீதிமன்றமொன்று விண்ணப்பமொன்றின் அல்லது நடைமுறை தொடர்பாக நீதிமன்றம் தீர்மானம் ஒன்றை எடுக்கின்றபோது, பின்வருவன உள்ளடங்கலாக ஆகுசெலவுகளின் கொடுப்பனவுக்காக கட்டளையொன்றை செலவுகளுக்கான கொடுப்பனவிற்கான உத்தரவைப் பின்வருவன விதித்துரைக்கப்படக்கூடியவாறு ஆக்கலாம் : செலவுகள்

(அ) மற்றொரு திறத்தவரின் ஆகுசெலவுகளை ஒரு திறத்தவரினால் செலுத்துவதற்கு;

(ஆ) செலுத்தப்பட வேண்டியதான ஆகுசெலவுகளின் தொகை; அத்துடன்

(இ) கொடுப்பனவு செய்யப்படவேண்டிய காலப்பகுதி.

(2) நீதிமன்றமானது விதித்துரைக்கப்படக்கூடியதான எவையேனும் சட்ட நடவடிக்கைமுறைகள் மற்றும் அத்தகைய முறையில் சம்பந்தப்பட்ட செலவுகளுக்கான பிணைப்பொறுப்பொன்றுக்கு கட்டளையை ஆக்கலாம்.

**452.** (1) இச் சட்டத்தின் கீழ் நீதிமன்றத்தின் ஏதேனும் கட்டளை அந்த நீதிமன்றத்தில் முடிவுறாதுள்ள ஏதேனும் துடர்ச்சியில் நீதிமன்றம் ஆக்கிய தீர்வை வலியுறுத்தப் படலாம் எனும் அதே முறையில் வலியுறுத்தப்படலாம். நீதிமன்றக் கட்டளைகளை வலியுறுத்துதல்

(2) இச் சட்டத்தின் கீழ் நீதிமன்றத்தின் ஏதேனும் கட்டளை வேறு ஏதேனும் நீதிமன்றத்தால் வலியுறுத்தப்படுமிடத்து :

(அ) கட்டளையின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி, கட்டளையின் போதியளவு சான்றாக இருத்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) அச்சான்றுப்படுத்தப்பட்ட பிரதியை மேல், நீதி மன்றமானது அது வேறு நீதிமன்றத்தினால் ஆக்கப்பட்டிருக்கின்றவாறான அதே முறையில், கட்டளையை வலுவுக்கிடுவதற்கான விடயத்தில் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

குற்றங்களுக்கு பொதுவான ஏற்பாடுகள்

**453.** (1) (அ) ஆளொருவர் இச்சட்டத்தின் கீழ் நீதி மன்றத்தின் கட்டளைக்கு இணங்கியொழுகத் தவறுதின்றவிடத்து; அத்துடன்

(ஆ) இச்சட்டம் அத்தகைய தவறுகையொன்று தவறொன்றாக வேறுவகையில் ஏற்பாடு செய்யாதவிடத்து,

இவ் உட்பிரிவின் கீழ் ஆளொருவர் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன், இருநூறாயிரம் ரூபாவுக்கு குறையாத மற்றும் இரண்டு மில்லியன் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு அல்லது ஏழு ஆண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான கடூழிய மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) (அ) ஆளொருவர் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறுகின்றவிடத்து;

(ஆ) அவ்வாள் தவறுகின்ற காரணத்தினால், (1) ஆம் உட்பிரிவின் கீழ் தவறொன்றுக்கு குற்றவாளியாகாதிருக்குமிடத்து; அத்துடன்

(இ) இச்சட்டம் அத்தகைய தவறுகையொன்றை தவறொன்றாக வேறுவகையில் ஏற்பாடு செய்யாதவிடத்து,

அவ்வாள் இவ்உட்பிரிவின் கீழ் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் குற்றத்தீர்ப்பளிப்பதன் மேல் ஒரு இலட்சம் ரூபாவுக்கு குறையாத மற்றும் மூன்று மில்லியன் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

## அத்தியாயம் 4

### சட்டமாக்குவதற்கு கையளிக்கப்பட்ட தத்துவங்கள்

கட்டளைகள்

**454.** (1) அமைச்சர் இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்படுவதற்கு எக்கட்டளைகள் தேவைப்படுத்தப்படுகின்றதோ அல்லது அதிகாரமளிக்கப்படுகின்றதோ அக்கட்டளை தொடர்பில் ஏதேனும் விடயத்தின் மீது கட்டளைகளை ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட ஒவ்வொரு கட்டளையும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டு

மென்பதுடன் வெளியீட்டுத் தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளை ஒவ்வொன்றும் வர்த்தமானியில் அதன் வெளியீட்டின் பின்னர் மூன்று மாதங்களுக்கு பிந்தாமல் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதலும் வேண்டும்.

(4) இச்சட்டத்தில் ஏதேனும் நாணயத் தொகை குறித் துரைக்கப்பட்டிருக்குமிடத்து, அமைச்சர் இச்சட்டம் பயனுக்கு வருவதிலிருந்து பணவீக்கத்துக்கு பொறுப்புக் கூறுதல் தொடர்பில் காலத்துக்குக் காலம் ஏதேனும் தொகையை நிர்ணயிப்பதற்கு, வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம், தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**455.** (1) அமைச்சர் பின்வரும் ஒழுங்குவிதிகளுடன் தொடர்புடைய ஏதேனும் விடயத்தின் மீது ஒழுங்குவிதிகளை ஆக்கலாம் : ஒழுங்குவிதிகள்

(அ) இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்படுவதற்கு அதிகார மளிக்கப்பட்டவை; அல்லது

(ஆ) இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்படுவதற்கு தேவைப் படுத்தப்படுகின்ற, அவசியமான அல்லது விரும்பத்தக்கதாகவிருப்பவை.

(2) ஓராம் உட்பிரிவில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பொதுமைக்குப் பங்கமின்றி, அமைச்சர் பின்வருவன தொடர்பில் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம் :

(அ) பின்வருவன உள்ளடங்கலாக படிவம், உள்ளடக்கம், மொழி (அல்லது மொழிகள்), மற்றும் அறிவித்தல்கள், அறிக்கைள் மற்றும் ஏனைய ஆவணங்கள் மற்றும் அவ் அறிவித் தல்கள், அறிக்கைள் மற்றும் ஏனைய ஆவணங் களின் பிரதிகளின் பொய்யுறுதிப்படுத்தல் மற்றும் அனுப்புதல், மற்றும் திருத்தம் மற்றும் மீளப் பெறுதல் -

(i) அறிவித்தல்கள், அறிக்கைள் மற்றும் ஏனைய ஆவணங்கள் மற்றும் அவ் அறிவித்தல்கள், அறிக்கைள் மற்றும் ஏனைய ஆவணங்கள்

பெற்றுக்கொள்ளப்பட்டதாக கருதக்கூடிய நேரத்தில் மற்றும்

(ii) இலத்திரனியல் தொடர்பாடல்களுக்குரியதாக;

(ஆ) (பொது கோப்புகள் மற்றும் இடாப்புகள் உள்ளடங்கலாக) ஆவணங்களை வெளிப் படுத்துதல், வெளியிடுதல், திருத்துதல் மற்றும் சோதனையிடுதல் மற்றும் ஆவணங்களின் பிரதிகளுக்கான உரிமைகள்;

(இ) கடன்கொடுநர் மற்றும் உதவுதொகை செலுத்துநர் முடிபு செய்தல்;

(ஈ) கடனிறுக்கவகையின்மை பதவி வகிப்பவர்களி னால் உரிமைகோரப்படக்கூடிய கட்டணங்கள், செலவுகள், விதிப்பனவுகள் மற்றும் செலவினங்கள் என்பவற்றின் பரப்பெல்லை;

(உ) ஆகுசெலவுகளுக்கான மதிப்பீடு, அறவீடு மற்றும் பிணைப்பொறுப்பு;

(ஊ) உண்ணாட்டு அரசிறைத் திணைக்களம் உள்ளடங் கலாக, இயைபான ஆட்கள் மற்றும் குழுக்களுக்கு விடயங்கள் பற்றி அறிவித்தல்;

(எ) அதிகாரசபையின் கட்டமைப்பு மற்றும் செயற் பாடுகள்;

(3) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒவ்வொரு ஒழுங்கு விதியும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டு மென்பதுடன் அத்தகைய வெளியீட்டுத் தேதியில் அல்லது ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வெளியீட்டுத் தேதியில் அல்லது அத்தகைய பிந்திய தேதியில் பயனுக்கு வருதலும் வேண்டும்.

(4) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒவ்வொரு ஒழுங்கு விதியும், வர்த்தமானியில் அதன் வெளியீட்டின் பின்னர் மூன்று மாதங்களுக்கு பிந்தாமல் பாராளுமன்றத்தின் முன்னர் அங்கீகாரத்துக்காக கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகாரம் மறுக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதி அதன் கீழ் முன்னர் செய்யப்பட்ட எவற்றுக்கும் பங்கமின்றி அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து இல்லாதொழிக்கப் பட்டதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

(5) தனிசு பற்றிய ஒழுங்குவிதி இல்லாதொழிக்கப் படுவதாக கருதப்படும் அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

விதிகள், நியமங்கள், செயல்முறைப் பணிப்புகள், நடத்தைக் கோவைகள் மற்றும் வழிகாட்டு நெறிகள்

**456.** (1) (அ) இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்படுவதற்கு அதிகாரமளிக்கப்பட்டதான; அல்லது

(ஆ) இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்படுவதற்கு தேவைப்பட்ட, அவசியமான அல்லது விரும்பத்தக்கதான,

அதிகாரி எவ்விடயம் தொடர்பில் விதிகள், நியமங்கள், செயல்முறைப் பணிப்புகள், நடத்தைக் கோவைகள் மற்றும் வழிகாட்டுநெறிகள் தொடர்பில் ஆக்கப்பட தேவைப்படுத்தல் வேண்டுமோ அவ்விடயம் தொடர்பில் விதிகள், நியமங்கள், செயன்முறைப்பணிப்புகள், நடத்தைக் கோவைகள் மற்றும் வழிகாட்டுநெறிகள் என்பவற்றை ஆக்கலாம்.

(2) உட்பிரிவு (1) இல் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பொதுமைக்கு பங்கமின்றி, அதிகாரி தனது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடைமைகளை பிரயோகித்தல் நிறைவேற்றுதல் மற்றும் புரிதல் தொடர்பில் விதிகள், நியமங்கள், செயல்முறைப்பணிப்புகள், நடத்தைக்கோவைகள் மற்றும் வழிகாட்டுநெறிகளை ஆக்கலாம்.

(3) உத்தியோகபூர்வ பெறுநர், அதிகாரியின் கலந்தாலோசனையுடன், தனது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடைமைகளை பிரயோகித்தல் நிறைவேற்றுதல், மற்றும் புரிதல் தொடர்பில் அதிகாரி, நியமனங்கள், செயல்முறைப்பணிப்புகள், நடத்தைக் கோவைகள் மற்றும் வழிகாட்டுநெறிகளை ஆக்கலாம்.

(4) இப்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட ஒவ்வொரு விதியும், நியமமும், செயன்முறைப் பணிப்பும், நடத்தைக்கோவையும் மற்றும் வழிகாட்டுநெறிகளும் வர்த்தமானியில் வெளியிடப் படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அதன்கண் குறித்துரைக்கப்படக்கூடிய வாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

## அத்தியாயம் XVII

### இறுதியானவை

#### ஏற்புடைமை

**457.** வேறு ஏதேனும் சட்டவாகத்தின் ஏற்பாடுகள் எது எவ்வாறிருப்பினும், இச்சட்டத்தின் ஏற்பாடுகள் இதனகத்துள் ஏற்பாடு செய்யப்பட்ட கருமங்கள் தொடர்பில் மேலோங்குதல் வேண்டும். ஏற்புடைமை

#### திருத்தங்கள்

**458.** கம்பெனிகள் சட்டத்தின் 46 ஆம் பிரிவு “ஒடுக்கப் பட்டு கொண்டிருப்பது” எனும் சொற்களை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக, “நிருவாகத்தில் அல்லது ஒழித்துக் கட்டுதலில்” என்னும் சொற்களை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. கம்பெனிகள் சட்டத்தின் 46 ஆம் பிரிவு

**459.** கம்பெனிகள் சட்டத்தின் 71 ஆம் பிரிவானது (2) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில் என்னும் உட்பிரிவில் “IX ஆம் பாகத்தின்” என்னும் சொற்களையும் எண்களையும் நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக நீக்கிவிட்டு “2026 ஆம் ஆண்டின் .... ஆம் இலக்க, மீட்பு, புனர்வாழ்வு மற்றும் கடனிறுக்கவகையின்மை (கூட்டிணைத்தல் மற்றும் தனிப்பட்ட) சட்டத்தின் ...... ஆம் பாகத்தின்” என்னும் சொற்களையும் எண்களையும் உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. கம்பெனிகள் சட்டத்தின் 71 ஆம் பிரிவைத் திருத்துதல்

**460.** கம்பெனிகள் சட்டத்தின் 88 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "பிரிவு இருநூற்று அறுபத்தொன்பதாம் பிரிவுக்கு" என்னும் சொற்களை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாக “2026 ஆம் ஆண்டின் ....ஆம் இலக்க மீட்பு, புனர்வாழ்வு மற்றும் கடனிறுக்கவகையின்மை (கூட்டிணைப்பு மற்றும் தனிப்பட்ட) சட்டத்தின்; 342 ஆம் பிரிவுக்கு" என்னும் சொற்களையும் எண்களையும் உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. கம்பெனிகள் சட்டத்தின் 88 ஆம் பிரிவைத் திருத்துதல்

**461.** கம்பெனிகள் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் அதன் (1) ஆம் உட்பிரிவில் பந்தி (உ) இற்குப் பதிலாக இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது : - கம்பெனிகள் சட்டத்தின் 88 ஆம் பிரிவைத் திருத்துதல்

"(உ) 2026 ஆம் ஆண்டின் ….ஆம் இலக்க, மீட்பு, புனர்வாழ்வு மற்றும் கடனிறுக்கவகையின்மை (கூட்டிணைப்பு மற்றும் தனிப்பட்ட) சட்டத்தின் 298 ஆம் பிரிவின் (2) ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழ் கம்பெனியின் ஒழிப்போனொருவர் நியமிக்கப்படுவதனை தீர்த்துவைத்தல்";

கம்பெனிகள் சட்டத்தின் 97 ஆம் பிரிவைத் திருத்துதல்

**462.** கம்பெனிகள் சட்டத்தின் 97 ஆம் பிரிவானது அதன் (2) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில் "நீதிமன்றத்தினால் கம்பெனி ஒடுக்கப்படுதல்" என்னும் சொற்களை நீக்கிவிட்டு, "ஒழித்துக்கட்டுதலில் இடுதல்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

கம்பெனிகள் சட்டத்தின் 213 ஆம் பிரிவைத் திருத்துதல்

**463.** (1) கம்பெனிகள் சட்டத்தின் பிரிவு 213 இவ்வாறு திருத்தப்படுகின்ற :

(அ) ஓராம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில், "இச்சட்டத்தின் கீழானதுமான" என்னும் சொற்களுக்குப் பதிலாக "இச் சட்டத்தின் கீழான அல்லது 2026 ஆம் ஆண்டின் …..ஆம் இலக்க, மீட்பு, புனர்வாழ்வு மற்றும் கடனிறுக்கவகையின்மை (கூட்டிணைப்பு மற்றும் தனிப்பட்ட) சட்டத்தின்கீழ்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஆ) அதன் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் "நேர்மையற்ற அல்லது மோசடியான செயலொன்றை உட்படுத்தியுள்ள" என்னும் சொற்களை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக "நேர்மையற்ற அல்லது மோசடியான" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்:

(இ) அதன் (1) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியை நீக்கிவிடுவதன் மூலமும்;

(ஈ) ஓராம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில் அனுமதி கொடுக்கப்படலாம் என்னும் சொற்களுக்குப் பதிலாக "அனுமதிகொடுக்கப்படலாம்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(உ) அதன் (1) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியை உடனடுத்துப்பின்னர் பின்வரும் புதிய பந்தியை இடுவதன் மூலம்:-

"(உ) 2026 ஆம் ஆண்டின் .... ஆம் இலக்க மீட்பு, புனர்வாழ்வு மற்றும் கடனிறுக்க வகையின்மை (கூட்டிணைப்பு மற்றும் தனிப்பட்ட) சட்டத்தின் பிரிவு 411இன் கீழ் ஆக்கப்பட்ட நீதிமன்ற கட்டளைக்குகந்துள்ளவிடத்து.";

(ஊ) அதன் ஓராம் உட்பிரிவில் "பங்குபற்றுவோர் அல்லது என்னும் சொற்களை உடனடுத்து 2026 ஆம் ஆண்டின் ..... ஆம் இலக்க, மீட்பு, புனர்வாழ்வு மற்றும் கடனிறுக்க வகையின்மை (கூட்டிணைப்பு மற்றும் தனிப்பட்ட) சட்டத்தின் 2ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கருத்தினுள் பதவி வகிப்பவராக நியமிக்கப்படுதலோ அல்லது செயலாற்றுதலோ ஆகாது" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

"(1அ) இன் 2026 ஆம் ஆண்டின் .... ஆம் இலக்க, மீட்பு, புனர்வாழ்வு மற்றும் கடனிறுக்கவகை யின்மை (கூட்டிணைப்பு மற்றும் தனிப்பட்ட) சட்டத்தின்; 84 ஆம் பிரிவிள் அல்லது 90 ஆம் பிரிவுகளின் கீழ் ஆக்கப்படும் வங்கிமுறிவுக் கட்டளைக் ஆளொருவர் உட்படுகின்றவிடத்து, 2026 ஆம் ஆண்டின் ...... ஆம் இலக்க, மீட்பு புனர்வாழ்வு மற்றும் கடனிறுக்கவகையின்மை (கூட்டிணைப்பு மற்றும் தனிப்பட்ட சட்டத்தின் பிரிவு 138 அல்லது பிரிவு 139 என்பவற்றின் நியதிகளின்படி பொறுப்பு விடுவிக்கப்படுவதற்கு முன்பதாக அத்தகைய ஆள் நீதிமன்றத்தின் விடுப்பைப் பெற்றுக்கொள்வதற் கான விண்ணப் பத்தினை முதலில் மேற்கொண் டிருந்தாலே ஒழிய, அத்தகைய ஆள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பணிப்பாளர் ஒருவராக அல்லது ஊக்குநராக வேண்டும் அல்லது கம்பெனி யின் முகாமைத்துவத்தில் பங்கெடுத்திருத்தல் வேண்டும் அல்லது முகாமைத்துவத்தில் சம்பந்தப்பட்டி ருத்தல் வேண்டும் அல்லது 2026 ஆம் ஆண்டின் ...... ஆம் இலக்க, மீட்பு புனர்வாழ்வு கடனிறுக்க வகையின்மை (கூட்டிணைப்பு மற்றும் தனிப்பட்ட) சட்டத்தின் பிரிவு 2 இன் (1) ஆம் உட்பிரிவின் பதவி வகிப்பராக நியமிக்கப் பட்டிருத்தல் வேண்டும் அல்லது செயலாற்றுதல்

வேண்டும். விடுப்பானது நீதிமன்றம் பொருத்த மானது எனக் கருதும் நியதிகளுள் மற்றும் நிபந்தனைகளின் மீது வழங்கப்படலாம்.

கம்பெனிகள் சட்டத்தின் 214 ஆம் பிரிவினைத் திருத்துதல்

**464.** கம்பெனிகள் சட்டத்தின் 214 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :–

(அ) உட்பிரிவு (1)(இ) இல் “நேர்மையற்ற அல்லது மோசடியான செயல்களில் உட்படுத்துகின்ற தவறொன்றுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக “நேர்மையின்மை அல்லது மோசடியான தவறொன்றுக்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலம்;

(ஆ) உட்பிரிவு (1)(ஈ)இல் “கடனிறுக்கவகையற்றதாக வந்த" என்னும் சொற்களுக்குப் பதிலாக “கடனிறுக்கவகையற்ற நிலை முற்போந்த நிபந்தனையை ஈடுசெய்த அல்லது அந் நிபந்தனையை ஈடுசெய்யாமல் கலைக்கப்பட்டது (ஒன்றில் ஆள் பணிப்பாளராக இருந்தவேளையில் அல்லது அடுத்துறுவதான சந்தர்ப்பத்தில்)" இடுவதன் மூலமும்;

(இ) அதன் (1) ஆம் உட்பிரிவில் “பங்குபற்றுதலோ” என்னும் சொற்களை உடனடுத்து “2026 ஆம் ஆண்டின் ...ஆம் இலக்க, மீட்பு,புனர்வாழ்வு மற்றும் கடனிறுக்கவகையின்மை (கூட்டிணைப்பு மற்றும் தனிப்பட்ட) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கருத்தினுள் பதவி வகிப்பவராக நியமிக்கப்படுதலோ அல்லது செயலாற்றுதலோ” என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஈ) உட்பிரிவு (1) இற்கு உடனடுத்து பின்வரும் புதிய உட்பிரிவுகளை உட்புகுத்துவதன் மூலம் - “(1அ) உட்பிரிவு (1) இன் பந்தி (ஈ) இன் நோக்கங்களுக் காக, ஆள் ஒருவர் கம்பெனியின் பணிப்பாளராக இருக்க பொருத்தமற்றவரா தீர்மானிப்பதில் நீதி மன்றம் குறிப்பாக பின்வரும் விடயங்களைக் கருத்தில் கொள்ள வேண்டும் -

(அ) கம்பெனியொன்றுடன் தொடர்புடைய ஆளின் மூலம் ஏதேனும் சட்டப்பிறழ் செயல்

அல்லது ஏதேனும் கடமை அல்லது நம்பிக்கை மீறல்;

(ஆ) கம்பெனியொன்றின் பணிப்பாளரொருவராக விருக்கின்ற காரணத்தினால் ஏற்புடையதாகின்ற வேறு ஏதேனும் சட்ட அல்லது ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகளின் ஆளின் மூலமான ஏதேனும் முரண்பாடு;

(இ) கம்பெனிக்கு ஏற்புடையற்பாலதான ஏதேனும் சட்ட அல்லது ஒழுங்குபடுத்தல் தேவைப் பாடுகளில் கம்பெனியொன்றினால் ஏதேனும் முரண்பாட்டின் காரணத்துக்காக அல்லது காரணங்களுக்காக (ஏதேனுமிருப்பின்) ஆள் எந்தளவுக்கு பொறுப்புடையவராக இருந்தாரோ அந்தளவு;

(ஈ) கடனிறுக்கவகையின்மை நடவடிக்கைமுறை நிலைமையை சந்திக்கின்ற கம்பெனி யொன்றின் காரணத்துக்காக அல்லது காரணங்களுக்காக (ஏதேனுமிருப்பின்) ஆள் எந்தளவுக்கு பொறுப்புடையவராக இருந்தாரோ அந்தளவு;

(உ) (அ), (ஆ), (இ), (ஈ) என்னும் பந்திகளினுள் ஆளின் நடாத்துகை குறைவானதாக விருக்கும் தடவைகளின் எண்ணிக்கையும் அளவும்;

(ஊ) கம்பெனியொன்றுடன் தொடர்புடைய ஆளின் நடாத்துகையினால் ஏற்பட்ட ஏதேனும் இழப்பு அல்லது தீங்கின் அளவு;

(உ) (3) ஆம் உட்பிரிவில், "பதிவாளரினால்" என்னும் சொற்களை உடனடுத்துப் பின்னர், "அல்லது உத்தியோகபூர்வ பெறுநர்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஊ) (5) ஆம் உட்பிரிவில், "பதிவாளருக்கு", என்னும் சொற்களை உடனடுத்துப் பின்னர், "மற்றும் 2026 ஆம் ஆண்டின் ....ஆம் இலக்க, மீட்பு, புனர்வாழ்வு மற்றும் கடனிறுக்கவகையின்மை (கூட்டிணைப்பு மற்றும் தனிப்பட்ட) சட்டத்தின் 2 ஆம் பிரிவின்

(1) ஆம் உட்பிரிவின் “பொருளமைவினுள்ளான அதிகாரசபை” என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(எ) அதன் (7) ஆம் உட்பிரிவினை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவினை உட்புகுத்துவதன் மூலமும் -

“(8) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, பின்வருமாறாகவிருப்பின், கம்பெனியொன்று கடனிறுக்கவகையின்மை நடவடிக்கைமுறை நிலையைச் சந்திக்கும் :–

(அ) கம்பெனியின் ஒழித்துக்கட்டுதல் தொடங்குதல் மற்றும் அவ்வொழித்துக்கட்டுதல் தொடர்பில், 2026 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, மீட்பு, புனர்வாழ்வு மற்றும் கடனிறுக்கவகையின்மை (கூட்டிணைப்பு மற்றும் தனிப்பட்ட) சட்டத்தின் 302 ஆம் பிரிவு ஒன்றில் கம்பெனிக்கு ஏற்புடையற்பாலதாகாதிருப்பின் அல்லது ஏற்புடையதாகாதொழிந்திருப்பின்;

(ஆ) கம்பெனியின் நிருவாகம் தொடங்கியிருப்பின்; அல்லது

(இ) கம்பெனியின் ஆதனம் மற்றும் பொறுப்பு முயற்சியின் முழுவதும், அல்லது பொருளளவில் முழுவதும் தொடர்பில் 2026 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, மீட்பு, புனர்வாழ்வு மற்றும் கடனிறுக்கவகையின்மை (கூட்டிணைப்பு மற்றும் தனிப்பட்ட) சட்டத்தின் கீழ் நியமிக்கப்படுகின்ற பெறுநரொருவர்;

(9) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, (இடைக்கால நடவடிக்கைமுறை உள்ளடங்கலாக) கம்பெனி ஏதேனும் நியாயாதிக்கத்தில் ஏதேனும் விவரணத்தின் கடனிறுக்கவகையின்மை நடவடிக்கைமுறையை செய்துகொண்டிருப்பின், கடல்கடந்த கம்பெனியொன்று கடனிறுக்கவகையின்மை நடவடிக்கைமுறை நிலைமையை சந்திக்கின்றது.”.

கம்பெனிகள் சட்டத்தின் 220 ஆம் பிரிவினைத் திருத்துதல்

**465.** கம்பெனிகள் சட்டத்தின் 220 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :–

(அ) “அக்கம்பெனியின் பணிப்பாளரொருவருக்கு” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “பகிரங்க கம்பெனியொன்றின் பணிப்பாளரொருவருக்கு” என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஆ) “அத்தேதியிலிருந்து” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “அத்தேதியிலிருந்து” என்னும் சொற்களை இடுவதன் மூலமும்”.

கம்பெனிகள் சட்டத்தின் 228 ஆம் பிரிவினைத் திருத்துதல்

**466.** கம்பெனிகள் சட்டத்தின் 228 ஆம் பிரிவு, அதன் (உ) என்னும் பந்தியை நீக்குவதன் மூலம் இத்தாற் திருத்தப்படுகின்றது.

கம்பெனிகள் சட்டத்தின் 246 ஆம் பிரிவினைத் திருத்துதல்

**467.** கம்பெனிகள் சட்டத்தின் 246 ஆம் பிரிவு (5) ஆம் உட்பிரிவில் “கம்பெனி ஒடுக்கப்படுவதிலிருந்து” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “அல்லது கம்பெனியின் ஒடுக்குதல் தொடங்குவதிலிருந்து” என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தாற் திருத்தப்படுகின்றது.

கம்பெனிகள் சட்டத்தின் பாகம் X ஐத் திருத்துதல்

**468.** (1) கம்பெனிகள் சட்டத்தின் 255 ஆம் பிரிவு “கடன்தருநர்” என்னும் வரைவிலக்கணத்தில், “தனிசொன்று கம்பெனியிடமிருந்து வருமதியாகவுள்ளதென 357 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க உரிமைகோருவதற்கு” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “2026 ஆம் ஆண்டின் .......ஆம் இலக்க, மீட்பு, புனர்வாழ்வு மற்றும் கடனிறுக்கவகையின்மை (கூட்டிணைப்பு மற்றும் தனிப்பட்ட) சட்டத்தின் 426 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் தனிசின் எண்பிப்பொன்றைச் சமர்ப்பிப்பதற்கு” என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தாற் திருத்தப்படுகின்றது.

(2) கம்பெனிகள் சட்டத்தின் 256 ஆம் பிரிவு, (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் “பாகம் XIII இன் கீழ்” என்னும் சொற்கள் மற்றும் எண்களுக்குப் பதிலாக, “2026 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, மீட்பு, புனர்வாழ்வு மற்றும் கடனிறுக்கவகையின்மை (கூட்டிணைப்பு மற்றும் தனிப்பட்ட) சட்டத்தின் பாகம் IX இன் கீழ்” என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தாற் திருத்தப்படுகின்றது.

(3) கம்பெனிகள் சட்டத்தின் 257 ஆம் பிரிவு, (1) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியின் "ஒழித்துக்கட்டுதல்" என்னும் சொற்கள் மற்றும் எண்களுக்குப் பதிலாக, "2026 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, மீட்பு, புனர்வாழ்வு மற்றும் கடனிறுக்கவகையின்மை (கூட்டிணைப்பு மற்றும் தனிப் பட்ட) சட்டத்தின் பாகம் XII இற்கிணங்கிய ஏதேனும் கம்பெனியின் ஒழித்துக்கட்டுதல்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தாற் திருத்தப்படு கின்றது.

(4) கம்பெனிகள் சட்டத்தின் 258 ஆம் பிரிவை உடனடுத் துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படு கின்றது :–

"கடன்கொடுநர்கள் உட்பட்டிருப்பின், வெளிப்படுத்துகையானது நீதிமன்றத்துக்கு பணிப்பாளர்களினால் வழங்கப்படுதல்

258அ. (1) இப்பாகத்தின் கீழ் ஏதேனும் ஒழுங் கேற்பாடு அல்லது ஒன்றிணைப்பு அல்லது இணக்கத்தில் கடன்கொடுநர்கள் உட்படுகின்ற விடத்து, 256 ஆம் பிரிவின் கீழ் பின்வரு வோரால் ஆக்கப்படுகின்ற விண்ணப்ப மொன்று :-

(அ) கம்பெனியின் எல்லா பணிப்பாளர்கள்; அல்லது

(அ) கம்பெனியொன்று இரண்டு பணிப்பாளர் களையும் விட அதிகமானோரைக் கொண்டிருக்கும் விடயத்தில், கம்பெனி யின் பணிப்பாளர்களின் பெரும்பாண்மை யொன்று;

(2) ஆம் உட்பிரிவின் நிபந்தனைகளை ஏற்கின்ற எழுத்திலான வெளிப்படுத்துகையின் மூலம் அது இணைக்கப்பட்டிருந்தாலன்றி, நீதிமன்றத்தினால் கோரப்படுதலாகாது.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப் பட்டுள்ள நிபந்தனைகள் பின்வருவனவற்றை கூறுகின்ற வெளிப்படுத்துகையாவிருத்தல் வேண்டும் :-

(அ) (i) பணிப்பாளர்கள் செய்கின்ற வெளிப் படுத்துகை கம்பெனியின் அலுவல்

களின் முழு விசாரணையொன்றை செய்தல்;

(ii) அவ்வாறு செய்தலில், அப்பணிப் பாளர்கள், கம்பெனி விண்ணப்பம் செய்யப்பட்டதன் பின்னர் பன்னி ரெண்டு மாதங்களை விஞ்சாதவொரு காலப்பகுதியொன்றினுள் முழுவது மாக அதன் தனிசுகளை செலுத்துவ தற்கு இயலுமாகவிருப்பதற்கான அபிப்பிராயத்தை உருவாக்கலாம்;

(ஆ) பின்வருமாறு கம்பெனியின் அலுவல் கள், தொழில், ஆதனம் மற்றும் நிதிசார் அலுவல்கள் பற்றிய முழுக் கூற்றொன் றினை உள்ளக்குகின்றது -

(i) குறைந்தபட்சம் நடைமுறைக்குகந்த தேதியிலுள்ளவாறு, மற்றும் பின்வரு வனவற்றுக்கு வெளிப்படுத்துகையை செய்வதற்கு முன்னர் தொண்ணூறு நாட்களையும் விட குறையாக ஏதேனும் பட்சத்தில் காட்டுதல் -

(அ) இருப்பின் ஏதேனும் இருப்புப் பட்டியல் உள்ளடங்கலாக அதன் ஆதனத்தின் விவரங்களும் அதிலிருந்து எதிர்பார்க்கப்படும் தேறிய தொகை;

(ஆ) கம்பெனியின் தனிசு மற்றும் வேறு பொறுப்புக்கள்;

(இ) அதன் ஒவ்வொரு கடன்கொடு நர்களின் பெயர் மற்றும் முகவரி;

(ஈ) (ஏதேனுமிருப்பின்) ஒவ்வொரு கடன்கொடுனர்களின் மூலம் நடாத்தப்படும் வில்லங்கம் அல்லது வில்லங்கங்கள்;

(உ) எத்தேதியில் ஒவ்வொரு வில்லங் கமும் உருவாக்கப்பட்டதோ அத்தேதி; அத்துடன்

(ii) கூற்றின் தேதியின்றுள்ளவாறு கம்பெனியின் பணிப்பாளர்களாகவிருக்கின்ற ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவர்களினால் சத்தியக் கடதாசி மூலம் உதவியளித்தல்.

(இ) கம்பெனியின் பணிப்பாளர்கள் கூட்டமொன்றில் ஆக்கப்பட்டிருத்தல்; அத்துடன்

(ஈ) எத்தேதியில் விண்ணப்பம் செய்யப்பட்டதோ அத்தேதிக்கு உடனடுத்து நேர்முற்போந்த இருபதுநாட்களினுள் ஆக்கப்பட்டிருத்தல்.

(3) கம்பெனி வெளிப்படுத்துகையில் குறித்துரைக்கப்பட்ட காலத்தினுள் அதன் தனிசில் முழுவதுமாக செலுத்துவதற்கு இயலுமாகவிருக்கக்கூடிய தெரிவுகளுக்கான நியாயமான ஏதுக்கள் எதுவுமின்றி (1) ஆம் உட்பிரிவின் கீழ் வெளிப்படுத்துகையொன்றை ஆக்குகின்ற பணிப்பாளரொருவர் தவறொன்றைப் புரிகின்றார்.

2026 ஆம் ஆண்டின்.... ஆம் இலக்க, மீட்பு புனர்வாழ்வு மற்றும் கடனிறுக்க வகையின்மை (கூட்டிணைப்பு மற்றும் தனிப்பட்ட) சட்டத்தின் கீழான நடவடிக்கை முறைகள்

258ஆ. இப்பாகம் 2026 ஆம் ஆண்டின் .....ஆம் இலக்க, மீட்பு, புனர்வாழ்வு மற்றும் கடனிறுக்க வகையின்மை (கூட்டிணைப்பு மற்றும் தனிப்பட்ட) சட்டத்தின் கீழான ஏதேனும் நடவடிக்கை முறைகளுக்கு ஏற்புடையற்பாலதாதலாகாது".

கம்பெனிகள் சட்டத்தின் பிரிவு 394

**469.** (1) கம்பெனிகள் சட்டத்தின் பிரிவு 394 இத்தால் திருத்தப்படுகின்றது -

(அ) உட்பிரிவு (4) இல் –

(i) "கலைத்தல் தொடர்பில்" என்ற சொற்களுக்குப்பதிலாக "ஒடுக்களில்" என்ற சொற்களை இடுவதன் மூலம்;

(ii) “பூரணமாக ஒடுக்கப்பட்டு" என்ற சொற்களுக்குப்பதிலாக “2026 ஆம் ஆண்டின்... ஆம் இலக்க மீட்பு, புனர்வாழ்வு மற்றும் கடனிறுக்கவகையின்மை (கூட்டிணைப்பு மற்றும் தனிப்பட்ட) சட்டத்தின் பிரிவு 311 இன் கீழ் “கலைத்தல் முடிந்துள்ளது" என்ற சொற்களை இடுவதன் மூலமும்;

(iii) “3ஆம் உட்பிரிவில்” என்ற சொற்களுக்குப் பதிலாக “(3) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான அறிவித்தலொன்றை வர்த்தமானியில் வெளியிடுவதோடு அக்கம்பெனிக்கு அல்லது ஒழிப்போன், எவரேனுமிருந்தால், அவருக்கு அனுப்புதல் வேண்டும் என்பதுடன், இவ்வுட்பிரிவு ஏற்புடையதாகின்றதோ அதன் 2026 ஆம் ஆண்டின் ……ஆம் இலக்க, மீட்பு, புனர்வாழ்வு மற்றும் கடனிறுக்கவகையின்மை (கூட்டிணைப்பு மற்றும் தனிப்பட்ட) சட்டத்தின் பிரிவு (2) இன் கருத்தெல்லைக்குட்பட்டு அதிகாரிக்கு எழுத்துமூல அறிவித்தல் வழங்குதல் வேண்டும்” என்ற சொற்களை இடுவதன் மூலமும்.

(ஆ) உட்பிரிவு (5) இல், “படிவம்" என்ற சொல்லுக்கு பதிலாக “இருந்து" என்ற சொல்லை இடுவதன் மூலமும்; அத்துடன்

(இ) உட்பிரிவு (5)(ஆ) இல், "ஒடுக்குவதற்கு நீதிமன்றத்திக்குள்ள தத்துவத்தை பாதிக்கலாகாது" என்ற சொற்களுக்குப் பதிலாக "2026 ஆம் ஆண்டின் .... ஆம் இலக்க, மீட்பு, புனர்வாழ்வு மற்றும் கடனிறுக்கவகையின்மை (கூட்டிணைப்பு மற்றும் தனிப்பட்ட) சட்டத்தின் பாகம் XII அல்லது பிரிவு 408 இன் ஏற்புடைமையை பாதிதல் அல்லது வரையறுக்கலாகாது" என்ற சொற்களை இடுவதன் மூலம்.

கம்பெனிகள் சட்டத்தின் பிரிவு 431

**470.** (1) கம்பெனிகள் சட்டத்தின் பிரிவு 431 இத்தால் திருத்தப்படுகிறது –

(அ) உட்பிரிவு (5)(ஆ) இல், “440 ஆம் பிரிவின்" என்ற சொற்களுக்குப் பதிலாக “2026 ஆம் ஆண்டின்... ஆம் இலக்க, மீட்பு, புனர்வாழ்வு மற்றும் கடனிறுக்கவகையின்மை (கூட்டிணைப்பு மற்றும் தனிப்பட்ட) சட்டத்தின் 374 ஆம் பிரிவின் என்ற சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(ஆ) உட்பிரிவு (6) இல் –

(i) “நிலையான தாக்கீடானது" என்ற சொற்களுக்குப் பதிலாக "நிலையான பிணைப் பொறுப்பானது" என்ற சொற்களை இடுவதன் மூலமும்;

(ii) “நூற்று இருபத்தேழாம் பிரிவின்” என்ற சொற்களுக்குப் பதிலாக “நானூற்று இருபத் தெட்டாம் பிரிவின்” எனும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(iii) “மரியாதை" என்ற சொல்லுக்குப் பதிலாக “மரியாதை" என மாற்றப்படுகின்றது.

கம்பெனிகள் சட்டத்தின் பிரிவு 433

**471.** (1) கம்பெனிகள்; சட்டத்தின் 433 ஆம் பிரிவு இத்தாட்திருத்தப்படுகின்றது :–

(அ) உட்பிரிவு (1)(ஆ) இல், “ஒடுக்குதலின்" எனும் சொல்லுக்குப் பதிலாக “கலைத்தலின்” எனும் சொல்லை இடுவதன் மூலமும்;

(ஆ) உட்பிரிவு (5) (ஆ) இல் –

(i) “இணங்க" என்ற சொல்லுக்குப் பதிலாக மாற்றாக “இணங்க" என்னும் சொல்லை இடுவதன் மூலமும்; அத்துடன்

(ii) “நானூற்று நாற்பதாம் பிரிவின்” என்ற சொற்களுக்குப் பதிலாக 2026 ஆம் ஆண்டின்... ஆம் இலக்க, மீட்பு, புனர்வாழ்வு மற்றும் கடனிறுக்கவகையின்மை (கூட்டிணைப்பு மற்றும் தனிப்பட்ட) சட்டத்தின் 374 ஆம் பிரிவின்” என்ற சொற்களை இடுவதன் மூலமும்,

(இ) உட்பிரிவு (6) இல், “XV ஆம் பாகத்தின்” என்ற சொற்களுக்குப் பதிலாக, “2026 ஆம் ஆண்டின்... ஆம் இலக்க, மீட்பு, புனர்வாழ்வு மற்றும் கடனிறுக்கவகையின்மை (கூட்டிணைப்பு மற்றும் தனிப்பட்ட) சட்டத்தின் XIII ஆம் பிரிவின்” எனும் சொற்களை இடுவதன் மூலமும்.

கம்பெனிகள் சட்டத்தின் பிரிவு 529

**472.** கம்பெனிகள் சட்டத்தின் பிரிவு 529 இன் உட்பிரிவு (1) பின்வருமாறு இத்தால் திருத்தப்படுகின்றது :-

(அ) பந்தி (ஆ) இல் “பணிப்பாளர்” என்ற வரைவிலக் கணத்தில் “197 ஆம்” என்ற சொற்களுக்கு உடனடுத்துப் பின்னர், “214(1)(ஆ) மற்றும் (ஈ) (அப்பந்தியின் இறுதிக் குறிப்பீடு தவிர), 214(1அ) (ஆ) 214(3)” ஆம் என்னும் சொற்கள் மற்றும் இலக்கங்களை இடுவதன் மூலமும்;

(ஆ) “பந்தி (இ) இல் “பணிப்பாளர்” என்ற வரைவிலக் கணத்தில் “197 ஆம்” என்ற சொற்களுக்கு உடனடுத்துப் பின்னர், “214(1)(ஆ) மற்றும் (ஈ) (அப்பந்தியின் இறுதிக் குறிப்பீடு தவிர), 214(1அ) (ஆ) 214(3) ஆம்” என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(இ) “பெறுநர்" என்ற வரையறையில், XV எனும் பாகத்தின்" என்ற சொற்களுக்குப் பதிலாக “2026 ஆம் ஆண்டின்... ஆம் இலக்க, மீட்பு, புனர்வாழ்வு மற்றும் கடனிறுக்கவகையின்மை (கூட்டிணைப்பு மற்றும் தனிப்பட்ட) சட்டத்தின் XIII எனும் பாகத்தின்” எனும் சொற்களை இடுவதன் மூலமும்.

கம்பெனிகள் சட்டத்தின் முதலாம் அட்டவணை

**473.** கம்பெனிகள் சட்டத்தின் முதலாவது அட்டவணை யின் 34 ஆவது பந்தியில் “பங்குதாரர்கள் விசேட தீர்மானத்தின் மூலம் கம்பெனியைத் தன்னிச்சையாக ஒடுக்குவதற்குத் தீர்மானம் நிறைவேற்றலாம்” என்ற சொற்களுக்குப் பதிலாக “பங்குதாரர்கள் கம்பெனியின் ஒழிப்பான் ஒருவரை நியமிப்பதற்கு விசேட தீர்மானத்தின் மூலம் தீர்மானம் நிறைவேற்றலாம்” என்ற சொற்களை இடுவதன் மூலமும் இத்தால் திருத்தப்படுகிறது.

கம்பெனிகள் சட்டத்தின் ஆறாவது அட்டவணை

**474.** கம்பெனிகள் சட்டத்தின் ஆறாவது அட்டவணை யானது பின்வருமாறு சொற்களை நீக்குவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

(அ) "பிரிவு 401 (நிர்வாகியை நியமிப்பதற்கான நிர்வாக சபையின் தத்துவம்)" அத்துடன்

(ஆ) "பிரிவு 415 (நிர்வாகி பதவியில் வெற்றிடம்)"

இணக்க சபைகள் சட்டத்தின் மூன்றாவது அட்டவணை

**475.** 1988 ஆம் ஆண்டின் 72 ஆம் இலக்க, இணக்க சபைகள் சட்டத்தின் மூன்றாவது அட்டவணைக்கான, பந்தி அதன் 9 ஐ நீக்கிவிட்டு, அவற்றுக்குப் பதிலாக பின்வருவன வற்றை இடுவதன் மூலம் இத்தால் மாற்றியமைத்து திருத்தப்படுகின்றது :-

"9. 2026 ஆம் ஆண்டின் …. ஆம் இலக்க மீட்பு, புனர்வாழ்வு மற்றும் கடனிறுக்கவகையின்மை (கூட்டிணைப்பு மற்றும் தனிப்பட்ட) சட்டத்தின் பகுதிகள் III, IV, V அல்லது VI ஆம் பாகங்களின் இன் கீழான நடவடிக்கைகள்".

உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 175 ஆம் பிரிவு

**476.** (1) 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 175 ஆம் உட்பிரிவு, உட்பிரிவு (6) இல் இத்தால் திருத்தப்படுகின்றது :–

(அ) பந்தி (அ) இல் பந்தி (அ) இனை நீக்கி அதற்குப் பதிலாக "ஒரு பெருநிறுவனத்தின் ஒழிப்போன் 2026 ஆம் ஆண்டின் …... ஆம் இலக்க, மீட்பு, புனர்வாழ்வு மற்றும் கடனிறுக்கவகையின்மை (கூட்டிணைப்பு மற்றும் தனிப்பட்ட) சட்டத்தின் பகுதி XII இன் கீழ் நியமிக்கப்பட்ட ஒரு ஒழிப்போன் தவிர" என்று மாற்றப்படுகின்றது.

(ஆ) பந்தி (ஆ) இல் "நீதிமன்றத்தினால்" என்பதற்குப் பதிலாக "2026 ஆம் ஆண்டின் ….. ஆம் இலக்க, மீட்பு, புனர்வாழ்வு மற்றும் கடனிறுக்கவகை யின்மை (கூட்டிணைப்பு மற்றும் தனிப்பட்ட) சட்டத்தின் பகுதி XIII இன் கீழ் பெறுகையாளர் ஒருவரைத் தவிர நீதிமன்றத்தினால்" என்று மாற்றப்படுகின்றது.

(இ) அதற்கான பந்தி (இ) இனை நீக்குவதன் மூலமும்.

**நீக்கங்கள்**

சட்ட நீக்கங்கள்

**477.** (1) கம்பெனிகள் சட்டத்தின் பின்வரும் ஏற்பாடுகள் பின்வருமாறு நீக்கப்படுகின்றன :–

(அ) பிரிவுகள் 219 மற்றும் 227;

(ஆ) பாகம் IX;

(இ) பாகம் XII, பிரிவுகள் 393, 394 மற்றும் 395 தவிர்ந்த;

(ஈ) பாகம் XIII;

(உ) பாகம் XV;

(ஊ) பிரிவு 497 அத்துடன்

(எ) ஏழாவது அட்டவணை, எட்டாவது அட்டவணை, ஒன்பதாவது அட்டவணை, பத்தாவது அட்டவணை, பன்னிரண்டாவது அட்டவணை மற்றும் பதின் மூன்றாவது அட்டவணை.

(2) 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டர சிறைச்சட்டத்தின் பிரிவு 168 இத்தால் நீக்கப்படுகின்றது.

(3) கடனிறுக்கவகையின்மைக் கட்டளைச் சட்டம் (97 ஆம் அத்தியாயமான) இத்தால் நீக்கப்படுகின்றது.

## அத்தியாயம் 3

**நிலைபெயர்கால ஏற்பாடுகளும் பேணல்களும்**

நிலை பெயர்கால ஏற்பாடுகளும் பேணல்களும்

**478.** (1) இந்தச் சட்டத்தின் வேறு எவையேனும் ஏற்பாடுகள் எது எவ்வாறிருப்பினும் :–

(அ) முடிவுறாதுள்ள எல்லா வழக்குகள் அல்லது தொடங்கப்பட்ட வழக்கு நடவடிக்கைகள், அத்துடன்

(ஆ) அத்தகைய வழக்குகள் அல்லது வழக்கு நடவடிக்கைகள்; தொடர்பில் வகிக்கப்பட்ட எல்லாப் பதவிகளும்,

இந்தச் சட்டம் நடைமுறைக்கு வரும் திகதிக்கு முன்னர் உடனடியாக மற்றும் கடனிறுக்க வகையின்மை தொடர்பில்,

இந்தச் சட்டம் செயற்பாட்டுக்கு வராதது போல் தொடரப் பட்டு முடிவுறுத்தப்படுதல் வேண்டும். மேலும் அத்தகைய நடவடிக்கைகள் தொடங்கப்பட்ட அல்லது நடவடிக்கைகள் தொடங்கப்பட்ட எழுத்துச் சட்டம் அமுலில் இருப்பதாகவே கருதப்படுதல் வேண்டும்.

(2) இச் சட்டத்தின் ஏற்பாடுகள்; எது எவ்வாறிருப்பினும், கம்பெனிகள் சட்டத்தின் பிரிவு 396 இன் கீழ் தாபிக்கப்பட்ட கம்பெனிகள் விற்றுத்தீர்த்தல் கணக்கு, இச் சட்டம் அமுலுக்கு வராதது போல் தொடர்ச்சியாக உட்பிரிவு (1) இல் குறித் துரைக்கப்பட்ட எல்லா குற்றவழக்குகள் அல்லது வழக்கு நடவடிக்கை முறைகளும் நிறைவடைந்த தேதியின் பின்னரான ஐந்து ஆண்டு காலப்பகுதிக்கு நடைமுறைக்கு வராதிருத்தல் வேண்டும். கம்பெனிகளின் விற்றுத்தீர்த்தல் கணக்குகள் தொடர்பில் உள்ள அனைத்து நடவடிக்கை முறைகளும் கம்பெனியின் கணக்கில் வருவதாகவிருத்தல் வேண்டும்.

(அ) பதிவாளரால் கடனிறுக்க வகையின்மை மிகை சேர் கணக்கிற்கு மாற்றப்படல் வேண்டும். அத்துடன்

(ஆ) இச் சட்டத்தின் பிரிவு 432 (6)(ஆ), (7) ஆம் மற்றும் (9) ஆம் பிரிவுகளுக்கிணங்க கையாளப் படுதல் வேண்டும்.

(3) அமைச்சர் பிரிவு 8 (1) இன் கீழான நியமனம் ஒன்று அமைச்சர் முதலாவதாக ஆக்குகின்றதான அத்தகைய தேதிவரை கம்பெனிகள் சட்டத்தின் கீழ் வருகின்ற உத்தியோகபூர்வ பெறுநரின் பதவி வகிக்கின்ற சட்டம் நடைமுறைக்கு வருகின்ற தேதிக்கு நேர் முன்னரான இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக உத்தியோகபூர்வ பெறுநராக பதவி வகிப்பதற்கு தொடருதல் வேண்டும்.

(4) இச்சட்டத்துக்கான நீக்கப்பட்ட சட்டவாக்கங்களி லிருந்து இந்தச் சட்டத்திற்கு தேவைப்படும் மாற்றத்திற்கான ஏற்பாடுகளை இச்சட்டம் ஏற்பாடு செய்யாதவிடத்து, அத்தகைய மாற்றத்திற்குத் அவசியமான ஒழுங்கு விதிகளை அமைச்சர் ஆக்கலாம்.

நிலை பெயர்கால ஏற்பாடுகள்; கடனிறுக்க வகையின்மை தொழில்கள்

**479.** (1) இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதியின் பின்னரான இருபத்தி நான்கு மாதங்கள் என்னும் காலப் பகுதிக்கு அல்லது கட்டளையினால் செய்யப்படக்கூடிய வாறான அத்தகைய வேறு காலப்பகுதிக்கு, ஆளொருவர் பின்வருமாறுள்ளவிடத்து 14 ஆம் பிரிவின் கிழ் கடனிறுக்க வகையின்மையை தொழிலரொருவராக பதிவு செய்யப்படுவ தற்கு கருதப்படுதல் வேண்டும் :-

(அ) ஒரு முக்கிய பிரதான பதவி வகிப்பவராக நியமிக்கப்படுவதற்கு எழுத்து மூலம் சம்மதம் வழங்கும் வரையில்; அத்துடன்

(ஆ) உட்பிரிவு (2) இற்கமைய ஒழுங்கு விதித்துரைக் கப்பட்ட ஆட்களின் வகுதிக்குள் அடங்குபவராக இருக்கின்ற வரையில்,

(2) உட்பிரிவு (1)(ஆ) என்பதன் கீழ் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படும் வரை, ஆளொருவர் 14 ஆம் பிரவின் கீழ் கடனிறுக்க வகையின்மை தொலிலராக பதிவு செய்யப்படுவ தற்கு கருதப்படுதல் வேண்டும்

(அ) பிரதான பதவி வகிப்பவராக நியமிக்கப்படுவதற்கு எழுத்தில் சம்மதமளிப்பவர்; அத்துடன்

(ஆ) ஆட்களின் பின்வரும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வகுதிகளினுள் வருதல்.

(i) ஏழு ஆண்டுகளுக்கு குறையாத அனுப வத்தைக் கொண்ட சட்டதரணி;

(ii) பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தின் ஆராய்ச்சி படிப்பு பரிசில்கள்;

(iii) பட்டயம் பெற்ற முகாமைத்துவ கணக் காளர்களின் ஆராய்ச்சி படிப்பு பரிசில்கள்;

(iv) கம்பெனிகளின் சட்டத்தின் கீழ் உள்ளடங் கலாக, சட்ட நடைமுறைக்கு வருகின்ற தேதிக்கு முன்னர் ஒழிப்போனாக செய லாற்றுகின்றவரான எவரேனும் ஆட்கள்.

## முதலாவது அட்டவணை

[3 ஆம் மற்றும் 5 ஆம் பிரிவுகள்]

### அதிகாரசபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் தொடர்பிலான ஏற்பாடுகள்

**1.** அதிகாரசபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவரின் பதவிக்காலம், இறப்பு, பதவிவிலகல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று ஆண்டுகள் எனும் காலப்பகுதிக்கு பதவி வகித்தல் மூலம் முன்னரே அத்தகைய உறுப்பினர் வறிதாகினாலொழிய மற்றும் அத்தகைய உறுப்பினர் அகற்றப்பட்டாலொழிய தொடர்ச்சியாகவிருந்தாயினுஞ்சரி அல்லது வேறுவகையிலாயினுஞ்சரி மேலததிக ஒரு காலப் பகுதிக்கு மேற்படாது மீள் நியமனத்துக்கு தகுதியுடையவராதல் வேண்டும். தவிளாளரின் பதவிக்காலம் நியமிக்கப் பட்ட உறுப்பினராக உறுப்பான்மைக் காலப்பகுதியாக விருத்தல் வேண்டும்.

**2.** ஒரு ஆள் அதிகாரசபையின் உறுப்பினராக நியமிக்கப் படுவதிலிருந்தோ அல்லது தொடருவதிலிருந்தோ தகமை பெற்றவராதல் வேண்டும் : -

(அ) பாராளுமன்ற, ஏதேனும் ஒரு மாகாண சபையின் அல்லது ஏதேனும் உள்ளூராட்சி சபையின் உறுப்பினராக இருப்பின் அல்லது உறுப்பினராக வரின்;

(ஆ) இலங்கையின் பிரசையாகவிராதிருப்பன் அல்லது பிரசையாகவிராது இல்லாதொழியின்: அல்லது

(இ) தகுதிவாய்ந்த நியாயாதிக்க நீதிமன்றத்தினால் வகையற்றவராகவிருக்கின்ற அல்லது நட்டத் தீர்ப்பளிக்கின்ற;

(ஈ) அதிகாரசபையின் உறுப்பினராக அவரது கடமைகளுடன் முரண்பாட்டு அக்கறைகளை கொண்ருப்பின் அல்லது கொணடடிருப்பதாக கண்டுபிடிக்கப்படின்;

(உ) சுகவீனம் அல்லது ஏனைய உள மற்றும் உடல் தகமையின்மை என்னும் காரணத்தினால்

பதவியில் தொடர்வதற்கு பொருத்தமற்றதாக உள்ளமை அல்லது பொருத்தமற்றதாகவரின்;

(ஊ) தகுதிவாய்ந்த நீதிமன்ற நியாயாதிக்கத்தினால் சித்தசுயாதீனமற்றவராக இருப்பின் அல்லது வெளிப்படுத்தப்படின்; அல்லது

(எ) இலங்கையில் அல்லது வேறு ஏதேனும் நாட்டில் உள்ள ஏதேனும் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட மறியற்றண்டனையை அனுபவித்துக்கொண்டிருக்கின்ற;

**3.** (1) அதிகாரசபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினரின் பதவி பின்வரும் சந்தாப்பங்களில் வெற்றிடமாகும் :-

(அ) அத்தகைய உறுப்பினர் இறந்தவுடன்;

(ஆ) அத்தகைய உறுப்பினர்; தலைவருக்கு முகவரியிட்ட கடிதம் மூலம் அத்தகைய பதவியை பதவிநீக்கம்செய்தால், அத்தகைய பதவிநீக்கம் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும்;

(இ) அத்தகைய உறுப்பினர் பதவியில் இருந்து அகற்றப்பட்டால்;

(ஈ) எழுத்துப்பூர்வமாக முன் விடுப்பு பெறாமல், அதிகாரசபையின்; மூன்று தொடர்ச்சியான கூட்டங்களுக்கு சமுகமளிக்காது இருத்தல்;

(உ) அவரது பதவிக் காலத்தில், அவரது அலுவலகத்தின் கடமைகளுக்குப் புறம்பாக ஈடுபடுதல்;

(ஊ) அத்தகைய உறுப்பினரின் பதவிக் காலம் முடிவடைந்தவுடன்.

(2) நேர்மையின்மை அல்லது இவ் அட்டவணையின் கீழ் அதிகாரசபையின் உறுப்பினராக இருக்க தகுதியில்லாமல் இருத்தல் போன்ற காரணங்களுக்காக, அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரைகளின்; மேல், தவிசாளர் அல்லது நியமிக்கப்பட்ட உறுப்பினரை தலைவர் அத்தகைய பதவியில் இருந்து அகற்றலாம்.

(3) (அ) சுகவீனம் அல்லது வேறு உடல் நலக்குறைவு காரணமாக அல்லது இலங்கையில் இல்லாத

காரணத்தால் அல்லது வேறு ஏதேனும் காரணத்தால், தவிசாளரால்; தற்காலிகமாக தனது அலுவலக கடமைகளை நிறைவேற்ற இயலாதவராக தவிசாளர், வரி;ன், தலைவர் அவ்வாறு இல்லாத போது தவிசாளருக்கு பதிலாக அதிகாரசபையின்; வேறு எந்த உறுப்பினரையும் நியமிக்கலாம்.

(ஆ) அதிகாரசபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர், நோய் அல்லது பிற உடல்நலக்குறைவு காரணமாக அல்லது இலங்கையில் இல்லாத காரணத்தால் அல்லது வேறு ஏதேனும் காரணத்தால், அத்தகைய பதவியின் கடமை களை தற்காலிகமாக செய்ய முடியாமல் போனால், தலைவர், சட்டத்தின் 3வது பிரிவின் விதிகளுக்கு அமைவாக, அத்தகைய உறுப் பினருக்குப் பதிலாகத் தற்காலிகமாகச் செயல் படுவதற்குத் தகுதியுடைய வேறு எவரையேனும் அவ்வாறு இல்லாத போது நியமிக்கலாம்.

(4) பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்னர் நியமிக்கப் பட்ட உறுப்பினர் எவரேனும் பதவிக்கு வெற்றிடம் ஏற்படும் பட்சத்தில், தலைவர் பிரிவு 3 இன் (4) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் தரப்பட்டுள்ள அதே நடவடிக்கை முறையை பின்பற்றுதல் வேண்டும் என்பதுடன் உறுப்பினர் எவரும் அடுத்துறுகின்றாரோ அவ்வுறுப்பினரின் முடிவுறா தெஞ்சியுள்ள காலப்பகுதிக்கு அத்தகைய பதவியை வகிப்பதற்கு இன்னொரு ஆளை நியமித்தல் வேண்டும்.

(5) ஒரு உறுப்பினர் பதிலீட்டு உறுப்பினராக நியமிக்கப்படும் காலப்பகுதி இப்பந்தியின் கருத்தினுள் பதவியின் காலப்பகுதியாக கவனத்திட்கொள்ளப்படுதல் வேண்டும்.

(6) அதிகாரசபையின் செயல் எதுவும் அல்லது நடவடிக்கைமுறை எதுவுமம் அதன் உறுப்பினர்களிடையே ஏதேனும் வெற்றிடம் இருப்பதன் காரணத்தினாலோ அல்லது எவரேனும் ஒரு உறுப்பினரின் நியமனத்தில் குறைபாடு இருப்பதன் காரணத்தினாலோ மட்டும் வலிதற்றதாக கருதப்படுதல் ஆகாது.

**4.** (1) அதிகாரசபையின்; உறுப்பினர் அவசியமாக கூடியவாறு ஆகக்குறைந்தது ஒரு மாதத்தில் அல்லது எப்போதும் கூடுதல் வேண்டும். அத்தகைய கூட்டத்துக்கான கூட்ட நடப்பெண் ஐந்து உறுப்பினராதல் வேண்டும். குறைந்தபட்சம் ஒரு மாதத்திற்கு ஒருமுறை அல்லது தேவை ஏற்படின் சந்திக்க வேண்டும். அத்தகைய கூட்டத்திற்கான குறைந்தபட்ச உறுப்பினர்களாக 5 பேரை கொண்டிருத்தல் வேண்டும்.

(2) தவிசாளர் அதிகாரசபையின் எல்லாக் கூட்டங் களுக்கும் தலைமை தாங்குதல் வேண்டும். ஏதேனும் கூடடத்தில் தவிசாளர் சமுகமளிக்காதபோது அத்தகைய கூட்டத்தில் சமுகமளித்துள்ள உறுப்பனர்கள் அத்தகைய கூட்டத்தில் தலைமை தாங்குவதற்கு அதிகாரசபையின் உறுப்பினர்களில் ஒருவரைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

(3) அதிகாரசபையின் ஏதேனும் கூட்டத்தில் தலைமை தாங்குகின்ற தவிசாளர்; அல்லது உறுப்பினர், அவருடைய சொந்த வாக்குக்கு மேலதிகமாக, வாக்கொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) இச்சட்டத்தின் வேறு ஏற்பாடுகளுக்கமைய, அதிகார சபை அதன் கூட்டங்களின் நடத்தை மற்றும் அத்தகைய கூட்டங்களின் தொழில் பற்றிய கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் நடவடிக்கை முறையை ஒழுங்குபடுத்துவதற்கு விதிகளை ஆக்கலாம்.

**5.** (1) அதிகாரசபையின் இலச்சினையானது அதிகார சபை காலத்துக்கு காலம் முடிபு செய்யப்படக்கூடியதான அத்தகைய ஆளின் கட்டுகோப்பில் இருத்தல் வேண்டும்.

(2) அதிகாரசபையின் இலச்சினையானது அதிகாரசபை யினால் திர்மானிக்கப்படக்கூடியதான அத்தகைய முறையில் மாற்றப்படலாம்.

(3) அதிகாரசபையின் இலச்சினை அதிகாரசபையின் வலுவளிப்பின்றி, சாதனம் அல்லது ஆவணம் யார் முன்னிலை யிலும் கையொப்பமிடுதல் அவ் அதிகாரசபையின் தவிசாளர் மற்றும் வேறு ஒரு உறுப்பினரின் முன்னிலையில் அன்றி, ஏதேனும் சாதனம் அல்லது ஆவணத்தில் பொறிக்கப்படுத லாகாது.

ஆயின், எவ்வாறாயினும், தவிசாளர் ஏதேனும் சாதனம் அல்லது ஆவணத்துக்கு இலச்சினை பொறிக்கப்படும் பொது, அந்நேரத்தில் சமுகமளிக்கப்படுவதற்கு இயலாதவாரான விடத்து, தவிசாளரின் சார்பில் எழுத்தில் அதிகாரமளிக்கப் பட்ட அதிகாரசபையின் வேறு எவரேனும் ஏதேனும் சாதனத்தில் அல்லது ஆவணத்தில் கையொப்பமிடுவதற்கு இவ்வுட்பந்தியின் எற்பாடுகளுக்கு இணங்கியிருத்தல் வேண்டும்.

(4) அதிகாரசபையின் இலச்சினை பொறிக்கப்பட்டதான சாதனங்களின் மற்றும் ஆவணங்களின் இடாப்பினைப் பேணுதல் வேண்டும்.

(5) அதிகாரசபையின் இலச்சினையை அறிந்துகொண்டு அல்லது வேண்டுமென்று பிழையாக பயன்படுத்துகின்ற ஆளொருவர் இச்சட்டத்தின் கீழ் தவரொன்றைப் புரிகின்றார் என்பதுடன் நீதிவான் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னரான குற்றத்தீர்ப்பின் மீது இரண்டு மில்லியன் ரூபாவைவிட விஞ்சிய குற்றப்பணமொன்றுக்கு அல்லது இரண்டு ஆண்டுகளை விஞ்சாத மறியற்றண்டணைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

**6.** (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, அதிகார சபை அதன் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளின் செயற்றிறன் மிக்கதாக பிரயோகத்துக்கும் புரிவதற்கும் மற்றும் நிறைவேற்றுவதற்றும் அவசியமானவாறான அத்தகைய அலுவர்கள் மற்றும் ஊழியர்களை தொழிலுக் கமர்த்தலாம்.

(2) அதிகாரசபை பின்வரும் தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் :–

(அ) சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைக் பிரயோகித்தல் மற்றும் (1) ஆம் உட்பந்தியின் கீழ் நியமிக்கப்பட்ட அலுவலர்கள் மற்றும் ஊழியர்களை நியமித்தல்;

(ஆ) ஓராம் உட்பந்தியின் கீழ் நியமிககப்பட்ட அதிகாரசபையின் அலுவலர்கள் மற்றும் ஊழியர் களின் சேவையின் நியதிகள் மற்றும் நிபந்தனை களைத் தீர்மானிப்பதற்கும்; அத்துடன்

(இ) நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அத்தகைய அலுவலர்கள் மற்றும் ஊழியர்களின் வீதங்களை நிர்ணயிப்பதற்கு.

(3) (அ) அதிகாரசபையின் எல்லா அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் ஒன்றில் நேரடியாக அல்லது நேரடியல்லாத பொருள்சார் ரீதியான அக்கறை யுடனான அவர்களின் நெருங்கிய உறவுகள் அல்லது சம்மந்தங்களின் உள்ளடங் களாக அதிகாரசபைக்கு அலுவல்கள் மற்றும் கொடுக்கல் வாங்களில் அவர்களின் தனிப்பட்ட அக்கறையை அதிகார சபைக்கு எழுத்தில் வெளிப்படுத்துதல் வேண்டும்.

(ஆ) ஏதேனும் சூழ்நிலை, உறவுமுறை அல்லது வேறு நிகழ்வு அல்லது கருமம் என்பன பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது அதிகாரசபையின் வேறு அலுவலர் அல்லது ஊழியருக்கான முரண்பாட்டு அக்கறைக்கு எழுகின்ற அல்லது எழும் என நியாயமானளவு ஊகிக்கப்படக்கூடிய விடத்து, அத்தகைய ஆள் உடனடியாக பின்வருமாறு செய்தல் வேண்டும் –

(i) அதிகாரசபைக்கு அத்தகைய சூழ்நிலை, உறவு முறை அல்லது வேறு நிகழ்வு அல்லது கருமம் பற்றி எழுத்திலான வெளிப்படுத் துகையொன்று; அத்துடன்

(ii) (அத்தகைய ஆள் அதிகாரசபையிடமிருந்து மேலதிக பணிப்புகளை பெற்றுக்கொள்ளும் வரை, அத்தகைய கருமத்தை கையாளுதல் அல்லது கையாள்கை இல்லாதொழிவதற்கு;

(இ) பொறுப்புவிடுத்தல் ஆக்கப்படுவதன் மீது அதிகார சபை ஏதேனும் முரண்பாடு எவ்வாறு முறைமை செய்தல் வேண்டும் என்பதனை முடிபு செய்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய நோக்கத்துக்கு அவசியமாககூடியவாறான அத்தகைய பணிப்புக்களை வழங்கலாம்.

(4) அதிகாரசபை நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப் பட்ட அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அலுவலர்கள் மற்றும் ஊழியரின் மற்றும் அவர்களின் தங்கிவாழ்வோர் மற்றும் பெயர் நியமனம் பெற்றவர்கள் என்போரின் நன்மைக்கு ஓய்வூதிய நிதியம் மற்றும் சேமலாப நிதியத் திட்டங்கள் என்பவற்றை நிலைநாட்டி ஒழுங்குப்படுத்தலாம்.

(5) அதிகாரசபையின் அலுவலர்களுக்கும் மற்றும் ஊழியர்களுக்கும் ஏற்புடைமையாகக்கூடிய நடத்தைக் கோவையொன்றைத் தாபித்தல் வேண்டும்.

(6) அதிகாரசபை எவரேனும் ஆள் பின்வருமாறு உள்ளவிடத்து, அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்கு அத்தகைய ஆளை நியமித்தலாகாது.

(அ) நீதிமன்றத்தினால் அல்லது நியாயசபையொன் றினால் பாரதூரமான பிறழ்நடத்தைக்கு முன்னரே குற்றவாளியாகக் காணப்பட்டுள்ள விடத்து அல்லது ஒழுங்குபடுத்தும் குழுவினால் ஒழுக் காற்று செயல் ஒன்றுக்கு அமைந்துள்ள விடத்து;

(ஆ) பதவியிலிருந்து முன்னரே தள்ளுபடி செய்யப் பட்டுள்ளவிடத்து; அல்லது

(இ) இச்சட்டத்தின், அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகள் அல்லது விதிகளின் ஏற்பாடுகளின் மீறுகையொன்றை புரிந்துள்ளவிடத்து.

(7) அதிகாரசபையின் வேண்டுகோளின் பேரில், பொதுச் சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு அதிகாரசபையின் பணியாட்தொகுதிக்கு தற்காலிகமாக அல்லது அதிகாரசபையின் பணியாட்தொகுதிக்கு நிரந்தர மாக சம்மதத்துடன் நியமிக்கப்படலாம்.

(8) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அதிகார சபையின் பணியாட்தொகுதிக்கு தற்காலிகமாக நியமிக்கப் படுமிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழச் சட்டத்தின் 14 ஆம் பிரிவு (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அத்தகைய அலுவலருக்கும் அவர் தொடர்பிலும் எற்றமாற்றங்களுடன் ஏற்புடமையாதல் வேண்டும்.

(9) அரச சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் அதிகார சபையின் அலுவலகத்தின் பணியாட்தொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்குமிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரினின் ஏற்பாடுகள் அத்தகைய அலுவலருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடமையாதல் வேண்டும்.

(10) அதிகாரசபை குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்கு அரசாங்கத்தில் சேவையாற்றுவதற்கு உடன்படுகின்ற வாறான எவரேனும் ஆள் தொழிலுக்கமர்த்தப்படுமிடத்து, அவ்வாளினால் அதிகாரசிhக்கான ஏதேனும் காலப்பகுதி அத்தகைய உடன்படிக்கையின் கடப்பாடுகளை நிறை வேற்றும் நோக்கத்துக்காக அரசாங்க சேவையாக கருத்தில் கொள்ளப்படுதல் வேண்டும்.

(11) அதிகாரசபை அத்தகைய நிறுவனத்துக்கு அல்லது அதிகாரசபைக்கு மற்றும் அதிகாரசபைக்கும் இடையில் உடன்பட்டுக்கொள்ளப்பட்டதன் மீது குறித்தளிப்பின் மீது அதிகாரசபையினால் தீர்மானிக்கப்பட்ட காலப்பகுதிக்கு இலங்கையில் அல்லது வெளிநாட்டில் ஏனைய அரச நிறுவனங்கள் அல்லது ஒழுங்குப்படுத்தும் அதிகாரசபைகள் என்பவற்றுக்கான அதன் அலுவலர்கள் அல்லது ஊழியர் களின் அரசசேவையாக கருதப்படும் சேவையை அத்தகைய அலுவலரின் அல்லது ஊழியரின் சம்மதத்துடன் சம்மத மளிக்கலாம். அரச சேவையாக கருதப்படும் காலப்பகுதி அதிகாரசபைக்கான சேவையாக கவனத்திட்கொள்ளப்படுவ தற்கு கருதப்படுதல் வேண்டும்.

**7.** (1) (அ) அதிகாரசபையின் அல்லது எவரேனும் உறுப்பினர், அலுவலர் அல்லது ஊழியர் அல்லது எவரேனும் இயைபான தனியாள் என்போரின் கட்டளை, முடிபு, செயல் அல்லது செய்யாமை எதுவும் அரசிய லமைப்பின் 126 ஆம் அல்லது 140 ஆம் உறுப்புரையின் கீழான வழக்கு நடவடிக்கை முறைகள் தவிர, எவையேனும் வழக்கு நடவடிக்கை முறைகளில் அல்லது நீதிமன்றச் சட்டத்தில் கேள்விக்குட்படுத்தலாகாது.

(ஆ) அதிகாரசபையின் ஏதேனும் கட்டளை, முடிபு, செயல் அல்லது செய்யாமை அல்லது அதன் எவரேனும் உறுப்பினர், அலுவலர் அல்லது சேவையாளர் என்போர் தொடர்பில் அரசியலமைப்பின் 140 ஆம் உறுப்புரையினால் மேன்முறையீட்டின் மீது அளிக்கப்பட்ட எழுத்தாணை நியாயாதிக்கம் உயர்நீதிமன்றத்தினால் பிரயோகிக்கப்படுதல் வேண்டும். மேன்முறயீட்டு நிதிமன்றத்தினால் அல்ல.

(2) ஓராம் உட்பந்தியில் ஏற்பாடு செய்யப்பட்ட சூழ்நிலைகள் தவிர்ந்த :-

(அ) அத்தகைய உறுப்பினர் அல்லது அலுவலர் அல்லது ஊழியர் என நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட அல்லது செய்வதிலிருந்து விடுபட்ட அல்லது செய்யப்படுவதற்கு உட்கருதப்பட்ட ஏதேனும் செயலுக்கான அதிகாரசபையின் அதிகாரத்துக்கு எதிரான அவமதிப்பு தவிர்ந்த, அதிகாரசபைக்க உதவுவதற்கு நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பனர் அல்லது எவரேனும் அலுவலர் அல்லது ஊழியர் என்போருக்கு எதிராக குடியியல் அல்லது குற்றவியல் வழக்கு நடவடிக்கைகள் எவையும் தொடுக்கப்படலாகாது;

(ஆ) குடியியல் அல்லது குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளை எவையும் நல்லெண்ணத்தில் அதிகாரசபையின் அலுவலரினால் அல்லது அத்தகைய அறிக்கையின் உண்மையன கணக்கின் அத்தகைய ஆளின் வெளியீடு தொடர்பில் எவரேனும் ஆளுக்கெதிராக செய்யப்பட்ட ஏதேனும் அறிக்கை தொடர்பில் அதிகாரசபையின் எவரேனும் உறுப்பினருக்கு எதிராக தொடுக்கப்படுதலாகாது;

(இ) குடியியல், குற்றவியல் அல்லது நிருவாக வழக்கு நடவடிக்கைகள் எவையேனும் அதிகாரசபைக்கு சான்று அல்லது ஆவணப்படுத்துகையை நல்லெண்ணத்தில் வழங்குவதும் அத்தகைய ஆளின் மீது எவரேனும் ஆளுக்கெதிராக தொடுக்கப்படலாகாது.

(3) உட்பந்தி (2) (ஆ) மற்றும் உட்பந்தி (4) என்பவற்றின் நோக்கத்துக்காக, வேறு வரேனும் ஆள் என்பது -

(i) அதிகாரசபையின் ஊழியர் அல்லது அலுவலர் ஒருவர்;

(ii) அதிகாரசபையின் முன்னாள் ஊழியர் அல்லது முன்னாள் அலுவலர் ஒருவர்;

(iii) அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமை யதிபதி;

(iv) அதிகாரசபையின் முன்னாள் பணிப்பாளர் தலைமையதிபதி;

(v) அதிகாரசபையின் ஏதேனும் குழுவின் உறுப்பினர் ஒருவர்; அத்துடன்

(vi) அதிகாரசபையின் ஏதேனும் குழுவின் முன்னாள் உறுப்பினர்;

(4) வேறு எவரேனும் ஆளக்கெதிராக (2) ஆம் உட் பந்தியில் ஏதேனும் வழக்குதுடச்சி அல்லது குற்றவழக்கு எனும் பட்சத்தில், அதிகாரபை வழக்கு நடவடிக்கை முறைகளில் இறுதி தீர்மானத்தை ஆக்கும்வரை, வழக்கு நடவடிக்கைமுறைகள் தொடர்பில் அத்தகைய ஆளின் நியாயமான எல்லச் செலவுகளுக்கும் பொறுப்பாதல் வேண்டும்.

**8.** (1) அதிகாரசபையின் பிரத்தியேக பயன்பாட்டிற்காக ஒரு சின்னம் இருக்கப்படுதல் வேண்டும்.

(2) அதிகாரசபையின் அடையாளத்தை பேண ஒரு கொடி இருக்கப்படுதல் வேண்டும்.

(3) தெரிந்தோ அல்லது வேண்டுமென்றோ அதிகார சபையின் சின்னம் அல்லது கொடியை தவறாகப் பயன் படுத்தும் ஆள் ஒருவர் ஒரு நீதிவான் நீதிமன்றத்தின் முன்னரான தருக்க முறையான விசாரணையின் குற்றத் தீர்ப்பளிப்பின் மீது இரண்டு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கும் அல்லது இரண்டு ஆண்டகளை விஞ்சாத மறியற்றண்டணை காலத்துக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டணை ஆகிய இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்.

**9.** அதிகாரசபையின் எல்லா உறுப்பினர்கள், அலுவலர் கள் மற்றும் ஊழியர்கள் (19 ஆம் அத்தியாயமான) தண்டணைச் சட்டக்கோவையின் கருத்தினுள்ளும் நோக்கத் துக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

**10.** 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் கருத்தினுள் அதிகாரசபை ஒரு அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டு மென்பதுடன் அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்க பொருளமைத்துக் கொள்ளப்படுதலும் வேண்டும்.

## இரண்டாவது அட்டவணை

**[பிரிவு 37]**

### விலக்களிக்கப்பட்ட உருவகங்கள்

இரண்டாம் உட்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் “கம்பெனி” எனும் வரைவிலக்கணத்தின் (ஆ) என்னும் நோக்கங் களுக்காக, உருவகங்களின் வகைகள் பின்வருமாறு இருத்தல் வேண்டும் :-

(அ) 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித் தொழில் சட்டத்தின் கருத்தினுள் ஏதேனும் உரிமையளிக்கப்பட்ட வர்த்தக வங்கி;

(ஆ) 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித் தொழில் சட்டத்தின் கருத்தினுள்; உள்ள ஏதேனும் உரிமையளிக்கப்பட்ட விசேடத்துவம் பெற்ற வங்கி;

(இ) 2023 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, மத்திய வங்கிச் சட்டத்தின் கருத்தினுள் உள்ள ஏதேனும் வங்கி நிறுவனமும்;

(ஈ) 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித் தொழில் சட்டத்தின் கருத்தினுள் வருகின்ற வங்கித் தொழிலை கொண்டுநடாத்துகின்ற ஏதேனும் உருவகம்;

(உ) 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, நிதித் தொழில் சட்டத்தின் கருத்தினுள் வருகின்ற பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் நிதிக் கம்பெனி;

(ஊ) 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, நிதித் தொழில் சட்டத்தின் கருத்தினுள் வருகின்ற நிதித் தொழிலை கொண்டு நடாத்துகின்ற ஏதேனும் உருவகம்;

(எ) 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, காப்புறுதித் தொழில் ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் கருத்தினுள் வருகின்ற ஏதேனும் காப்புறுதிக் கம்பெனி;

(ஏ) 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, காப்புறுதித் தொழில் ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் கருத்தினுள் வருகின்ற காப்புறுதித் தொழிலை கொண்டு நடாத்துகின்ற ஏதேனும் உருவகம்;

(ஐ) 2016 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நுண்நிதிச் சட்டத்தின் கருத்தினுள் உள்ள நுண்நிதி அரச சார்பற்ற ஒழுங்கமைப்பு;

(ஒ) 2016 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நுண்நிதிச் சட்டத்தின் நியதிகளின்படி ஏதேனும் உரிமம் பெற்ற நுண்நிதிக் கம்பெனி; அத்துடன்;

(ஓ) 2016 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க நுண்நிதிச் சட்டத்தின் கருத்தினுள் உள்ள நுண்நிதி தொழிலை கொண்டு நடாத்துகின்ற ஏதேனும் உருவகம்.

## மூன்றாவது அட்டவணை

**[பிரிவு 2]**

### சம்பந்தப்பட்ட திறத்தவர்கள்

**1.** பிரிவு 2 இன் (1) ஆம் உட்பிரிவில் உள்ள “சம்பந்தப் பட்ட திறத்தவர்” என்னும் வாசகம் தனியாளுடன் சம்பந்தப் பட்டவரான ஆள் தொடர்பில் கீழே தரப்பட்டுள்ள முறையில் தீர்மானிக்கப்படுதல் வேண்டும் :-

(அ) ஒரு தனியாளின் மனைவி அல்லது கணவர், அல்லது உறவினர், அல்லது தனியாளின் உறவினரின் மனைவி அல்லது கணவர்;

(ஆ) கொடுத்து தீர்த்தலின் நம்பிக்கைப் பொறுப்பில் ஒருவர் பின்வருவோருடன் சம்பந்தப்பட்டவர்கள் -

(i) கொடுத்து தீர்த்தல் தொடர்பிலான எவரேனும் ஆள் கொடுத்து தீர்ப்பவர், நம்பிக்கைப் பொறுப்பாளி அல்லது பயனாளி;

(ii) இவ் அட்டவணையின் ஏனைய எற்பாடுகளின் கீழ் அத்தகைய ஆளடன் சம்பந்தப் பட்டவரான எவரேனும் ஆள்;

(iii) இவ் அட்டவணையின் ஏனைய ஏற்பாடுகளின் கீழ் அக்கொடுத்து தீர்த்தலுடன் சம்பந்தப்பட்ட ஏதேனும் கூட்டிணைக்கப் பட்ட குழு;

(இ) நல்லெண்ணத்துடனான வர்த்தக ஒழுங்கேற்பாடுகளைத் தொடர்ந்து பங்காண்மைச் சொத்துக்களின் கொள்ளல் அல்லது கையுதிர்ப்புகள் தொடர்பில் தவிர, ஒரு ஆள் பின்வருமாறு இணைக்கப்பட்டுள்ளார் -

(i) அந்த ஆள் பங்காண்மையிலுள்ளவரான எவரேனும் தனியாளுடன்;

(ii) பங்காண்மையிலுள்ள ஆளுடன் சம்பந்தப் பட்ட எவரேனும் தனியாளின் மனைவி அல்லது கணவர் அல்ல உறவினர்; அத்துடன்

(iii) பங்காண்மையிலுள்ள ஆளுடன் சம்பந்தப் பட்ட தனியாளின் உறவினரான எவரேனும் ஆள் அல்லது உறவினரின் மனைவி அல்லது கணவன்;

(ஈ) பின்வருமாறு இருப்பின் உருவகமொன்று இன்னொரு உருவகத்தடன் சம்பந்தப்பட்டுள்ளது -

(i) ஒரே ஆள் இரண்டினதும் கட்டுப்பாட்டைக் கொண்டிருப்பின்;

(ii) (ஒரு ஆள் ஒருவரின் மற்றும் அவ்வாளுடன் சம்பந்தப்பட்ட ஆட்கள் அல்லது அவ்வாளுடன் சம்பந்தப்பட்ட ஆள் அல்லது ஆட்களுடன் ஏனையோரின் கட்டுப் பாட்டைக் கொண்டிருப்பின்; அத்துடன்

(iii) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஆட்களைக் கொண்ட குழு ஒவ்வொரு உருவகத்தின் கட்டுப்பாட்டைக் கொண்டிருப் பின், மற்றும் குழுக்கள் ஒரே ஆட்களைக் கொண்டிருந்தால் அல்லது (ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சந்தர்ப்பங்களில்) ஒரு குழுவின் உறுப்பினரால் பதிலீடு செய்யப் பட்டால் அதே ஆட்களைக் கொண்டிருக்கும் உறுப்பினர் இணைக்கப்பட்டுள்ள ஆள்;

(உ) ஆள் அதன் கட்டுப்பாட்டைக் கொண்டிருப்பின் அல்லது அவ்வாளுடன் சம்பந்தப்பட்ட ஆட்கள் ஒன்று சேர்ந்து அதன் கட்டுப்பாட்டைக் கொண்டிருப்பின் வேறொரு ஆளுடன் சம்பந்தப் பட்ட வருமதியொன்று;

**1.** இவ் அட்டவணையில் -

"உருவகம் என்பது ஏதேனும் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத கழகத்தை உள்ளடக்குகின்றது. ஆனால் ஒரு பங்காண்மையை உள்ளடக்காது, இவ்வட்டவணை நம்பிக்கைப் பொறுப்புத் திட்டம் உருவகமாக இருப்பின் மற்றும் அலகு வைத்திருப்பவரின் உரிமைகள் உருவகத்தில் பங்குகளை கொண்டிருப்பின் ஏதேனும் அத்தகைய திட்டம் தொடர்பில் ஏற்புடமையால் வேண்டும்; அத்துடன்

"உறவினர்;" என்பது சகோதரர், சகோதரி, மூதாதையர் அல்லது பரம்பரை சந்ததியினர் என்று பொருள்.

## நான்காம் அட்டவணை

**[பிரிவுகள் 275]/(A) 2 மற்றும்]**

## ஒழித்துக்கட்டுதலிலுள்ள முன்னுரிமை உரிமைக் கோரிக்கைகள் - முன்னுரிமைக் கொடுப்பனவு

**1.** ஒழிப்போன் அவர்கள் பட்டியலிட்டதான முன்னுரிமை ஒழுங்கில் முதலில் செலுத்தல் வேண்டும் :-

(அ) விடயத்துக்கேற்ப, ஒழிப்போன் அல்லது தற்காலிக ஒழிப்போனின ஊதியம் மற்றும் (இ) என்னும்

பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டதான அத்தகைய நியதிகள் தவிர, விசேட முகாமையாளரின் ஊதியம், ஒழிப்போன் அல்லது தற்காலிக ஒழிப்போனின் பணிகள், தத்துவங்கள் மற்றும் கடமைகளை புரிவதற்கு, பிரயோகிப்பதற்கு மற்றும் நிறை வேற்றுவதில் ஒழிப்போனால் அல்லது தற்காலிக ஒழிப்போனால் முறையாக கூறப்பட்ட ஆகுசெல வுகள், விதிப்பனவுகள் மற்றும் செலவுகள்;

(ஆ) 247 ஆம் பிரிவுக்கிணங்க, உடன்பட்டுக் கொண்டதான அல்லது தீர்மானிக்கபப்பட்டதான கம்பெனி தொடர்பில் முன்நிருவாக ஆகுசெல வுக்கு மற்றும் (இ) என்னும் பகுதியில் குஙிப்பீடு செய்யப்பட்டவையான அத்தகைய நிதிகள் தவிர, நிருவாகியின் ஊதியம் உள்ளடங்களாக நிருவாகி யின் பணிகள், தத்துவங்கள் மற்றும் கடமைகளை நிறைவேற்றுவதில், பிரயோகிப்பதில் மற்றும் புரிவதில் நிருவாகியினால் முறையாகப் பெறப் பட்ட ஆகுசெலவுகள், விதிப்பனவுகள் மற்றும் செலவுகள்;

(இ) நிருவாகத்தின் போது அல்லது ஒழித்துக் கட்டுதலின் போது கம்பெனியின் தொடர்ந்து கொண்டிருக்கும் நிதித்தொழிற்பாடுகள் உள்ளடங் களாக, நிருவாகத்தின் அல்லது ஒழித்துக்கட்டுதல் தொடங்கிய அன்று அல்லது அதன் பின்னர் கம்பெனிக்கு வழங்கப்படுகின்ற ஏதேனும் நிதியளிப்புக்கான எவரேனும் கடன்கொடுநர், அத்தகைய நிதியளிப்பு விடயத்துக்கேற்ப, நிருவாகத்தில் அல்லது ஒழித்துக்கட்டுதலின் செலவொன்றாக நிருவாகியினால் அல்லது ஒழிப்போனால் முறையாக கூறப்பட்டுள்ளதாக கொண்டிருத்தல்;

(ஈ) யாருடைய ஆகுசெலவுகள் நீதிமன்றத்தினால் அனுமதிக்கப்படுகின்றதோ அவர்களின் விண்ணப் பத்தின் மீது தோன்றுகின்ற ஆளின் நியாயமான

ஆகுசெலவுகள் உள்ளடங்கலாக, விண்ணப் பத்தைச் செய்வதில் கூறப்பட்ட கம்பெனி ஒழித்துக்கட்டுதலில் உள்ளதான கட்டளை யொன்றுக்கான நீதிமன்றத்துக்கு ஏற்புடமையாக கூடிய ஆளொருவரின் நியாயமான ஆகுசெல வுகள்;

(உ) நிருவாக கடன்கொடுநர்களின் குழு, ஒழித்துக் கட்டுதல் கடன்கொடுநர்களின் குழு மற்றும் ஒழித்துக்கட்டுதல் உதவுதொகை செலுத்துனர் களின் குழுவினால் அவசியமென கருதப்பட்ட இருப்பிலிருந்தான செலவுகள்;

(ஊ) உறுதி நிருவாகிகளின ஊதியம்;

(எ) 325 ஆம் பிரிவின் (8) ஆம் உட்பிரிவின் காரணத்தினால் ஒழிப்போனுக்கு எதிராக உரிமைக்கோரிக்கையிலிருந்து தடைசெய்யப்பட்ட சோந்தை வைத்திருக்கின்றவரான சோந்தை யினால் பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட தனிசு அல்லது பொறுப்பு;

**2.** பந்தி 1 இல் குறிப்பீடுசெய்யப்பட்ட உரிமைக் கோரிக்கைகளை செலுத்திய பின்னர், ஒழிப்போன் பின்வரும் உரிமைக்கோரிக்கைகளை எடுத்து செலுத்துதல் வேண்டும் :-

(அ) எவரேனும் ஊழியருக்கு செலுத்தப்படற்பிதான வருமதியாகவுள்ள எலலா சேமலாப நிதியம், வருமதியாகவுள்ள ஊழியர்கள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம், மற்றும் நியதிச்சட்டம் பணிக்கொடை கொடுப்பனவுகள்;

(ஆ) 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட் டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க உண்ணாட்டரசிறை ஆணையாளர் தரைமையதி பதியினால் தெரிவுசெய்யப்படுவதற்கான அவ் வாண்டு ஒழித்துக்கட்டுதலின் தொடக்கத்துக்கு முன்னரான ஒரு பூர்த்தியான ஆண்டுக்கு அறவிடப்பட்ட அல்லது அறவிடற்படற்பாலதான வருமான வரி;

(இ) ஒழித்துக்கட்டுதல் தொடங்கிய தேதிக்கு நேர்முற்போந்த பூர்த்தியான ஆண்டுக்காக அறவிடப்பட்ட அல்லது அறவிடற்படற்பாலதான மொத்த விற்பனை வரி;

(ஈ) 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதிசேர் வரிச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதியினால் அத்தகைய வரிவிதிக்கப்படற்பாலதான காலப் பகுதிகள் தெரிவுசெய்யப்படுதல் வேண்டும். ஒழித்துக்கட்டுதல் தொடங்குவதற்கு முன்னரான நான்கு வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிகளுக்கு அறவிடப்பட்ட அல்லது அறவிடற்படற்பாலதான பெறுமதிசேர் வரி;

(உ) ஆத்தேதிக்கு முன்னரான பன்னிரெண்டு மாதங்களினுள் வருமதியாகவுள்ள மற்றும் செலுத்தப்படற்பாலதான ஒழித்துக்கட்டுதல் தொடங்குகின்றதான கம்பெனியிலிருந்து வருமதியாகவுள்ள இப்பந்தியின் முற்போந்த உட்பந்திகளில் குறிப்பீடு செய்யப்பட்டவை தவிர்ந்த, எல்லா வீதங்கள் அல்லது வரிகள்;

(ஊ) காலசிரமமாக அளிக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட எவையேனும் சேவைகளுக்கு கொடுப்பனவுகளை செலுத்துவதற்காக அரசாங்கத்துக்கான எல்லா வருமதிகள்; அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டிய அனைத்து நிலுவைகளும்;

(எ) எவரேனும் ஊழியருக்கு செலுத்தப்படற்பாலதான கைத்தொழில் நீதிமன்ற அளிப்புகள் மற்றும் நியதிச்சட்ட வருமதிகள்;

(ஏ) 4 ஆம் பந்திக்ககைய தரகு என்ற வழி மூலம் முழுமையாக அல்லது பகுதியளவில் ஈட்டப்பட்டாளுஞ்சரி அல்லது ஈட்டப்படாததாயினுஞ் சரியான மற்றும் ஒழித்துக்கட்டுதல் தொடங்கும் தேதிக்கு முற்போந்த நான்கு மாதங்களின் போது

கம்பெனிக்கு வழங்கப்பட்ட சேவைகள் தொடர்பில் நேரத்திற்கு அல்லது சேவையின் பகுதிக்கு செலுத்தப்படுதல் வேண்டுமா என்பது பற்றிய எவரேனும் ஊழியரின் எல்லா வேதனங்கள் அல்லது சம்பளம்;

(ஐ) ஒழித்துக்கட்டுதல் தொடங்குவதற்கு முன்னர் அல்லது தொடங்கிய காரணத்தினால் தொழிலின் முடிவுறுத்துகையின் மீது (ஊழியர் இருக்கு மிடத்து, ஊழியரின் உரிமையில் வேறு எவரேனும் ஆளுக்கு) ஊழியருக்கு செலுத்தப்படற்பாலதாக வருகின்ற விடுமுறை கொடுப்பனவு;

(ஒ) கம்பெனி ஒழித்துக்கட்டலின் தொடக்கத்திலுள்ள வாறு ஒழிய, ஒழித்துக்கட்டுதல் தொடங்கியதன் முன்னர் திரண்டுள்ளதான (139 ஆம் அத்தியாயம்) வேலையாட்களின் இழப்பீட்டுக்குக் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஊழியருக்கான ஏதேனும் நட்டஈடு அல்லது நட்டஈட்டுக்கான பொறுப்பு தொடர்பில் வருமதியாகவுள்ள அக்கட்டளைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட வகையின் ஒப்பந்தமொன்றுக்கு கீழ் ஊழியருக்கு கைமாற்றப்படுகின்ற அல்லது உரித்தாக்கப்படுவ தற்கு இயலுமாகவுள்ள உரிமைகள்; அத்துடன்;

(ஓ) ஆறாம் பந்திக்கமைய, மூன்றாம் திறத்தவர் களுக்கு ஊழியர்களின் கட்டுப்பாடுகளை திருப்தி செய்வதற்கென, ஒழித்துக்கட்டுதல் தொடங்கிய தேதிக்கு நேர்முற்போந்த நான்கு மாதங்களின் போது கம்பெனிக்கு அளிக்கப்பட்ட சேவைகள் தொடர்பில் ஊழியரின் வேதனங்கள் அல்லது சம்பளங்களிலிருந்து கம்பெனியினால் கழிக்கப் பட்ட தொகைகள்.

**3.** பந்தி 2 இல் பட்டியலிடப்பட்ட உரிமைக் கோரிக்கைகள் அவர்களுக்கிடையில் சமமாக தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளதுடன் ஆதனத்தின் தேறிப்பெறுகையின்

வரும்படிகள் அவ் எல்லா உரிமைக் கோரிக்கைகளுக் கிடையில் சமமான விகிதாசாரங்களில் அவை குறைக்கப் படுகின்றதான அவர்களை திருப்திபடுத்துவதற்கு போதியற்றதாக இருந்தாலொழிய, முழுமையாக திருப்திப் படுத்தப்படுதல் வேண்டும்.

**4.** பந்தி 2 இன் (ஏ) என்னும் உட்பந்தியின் கீழ் முன்னுரிமை தரப்பட்டுள்ளதான தொகை எவரேனும் ஒரு ஊழியரின் விடயத்தில், பன்னிரெண்டாயிரம் ரூபாவை அல்லது விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பெரிய தொகையை விஞ்சுதலாகாது.

**5.** (139 ஆம் அத்தியாயம்) வேலையாட்கள் நட்டஈட்டுக் கட்டளைச் சட்டத்தின் கீழான ஏதேனும் நட்டஈடு இரண்டு கிழமைக்கான கொடுப்பனவாகவுள்ளவிடத்து, அக்கொடுப் பனவு தொடர்பில் வருமதியாகவுள்ள தொகையானது 2 ஆம் பந்தியின் (ஓ) என்னும் உட்பகுதியின் நோக்கங்களுக்காக, அக்கட்டளைச் சட்டத்தின் கீழ் மாற்றப்படக்கூடியதான மொத்த பணத்தொகையின் தொகையாக இருத்தல் வேண்டும்.

**6.** பந்தி 2 இன் (ஓ) என்னும் உட்பந்தியின் கீழ் தரப்பட்டுள்ள முன்னுரிமைக்கான தொகை 2 ஆம் பந்தியின் (ஏ) என்னும் உட்பந்தியின் கீழ் முன்னுரிமை வழங்கப் படுவதனை தொகையின் பணத்தொகையினால் குறைக் கப்படும் சந்தர்ப்பத்தில், எவரேனும் ஒரு ஊழியரின் சந்தர்ப்பத்தில் பன்னிரெண்டாயிரம் ரூபாவை அல்லது விதித்துரைக்கப்படக்கூடியதான அத்தகைய கூடுதலான தொகையை விஞ்சுதலாகாது.

**7.** அந்நோக்கத்துக்காக சில ஆட்களினால் முற்பணமாக கொடுக்கப்பட்டுள்ள பணத்திலிருந்தான, கொடுப்பன வொன்று :-

(அ) வேதனம் அல்லது சம்பளத்தின் கணக்கின் மீது கம்பெனியின் ஊழியருக்கு செலுத்தப்பட்டுள்ள விடத்து; அல்லது

(ஆ) கம்பெனியின் ஊழியர் ஒருவர் இறந்துள்ள விடத்து, ஊழியரின் உரிமையில் வேறு எவரேனும் ஆளுக்கு செலுத்தப்பட்டுள்ளவிடத்து,

முற்பணமாக பணம் கொடுக்கப்பட்டவரான ஆள் ஒழித்துக் கட்டுதலில் கொடுப்பனவு செலுத்தப்படாதிருப்பின், ஊழியரின் உரிமையில் கொடுப்பனவை பெற்றுக்கொண்ட ஊழியரான அல்லது வேறு ஆளாக அல்லது முற்பணமாக கொடுக்கப்பட்ட பணம் தொடர்பில் முன்னுரிமை பற்றிய அதே உரிமையை ஒழித்துக்கட்டுதலில் கொண்டுள்ளார்.

**8.** பந்தி 2 இல் குறிப்பீடுசெய்யப்பட்ட உரிமை கோரிக்கைகளை செலுத்தியதன் பின்னர், 275 ஆம் பிரிவின் பந்தி (ஈ) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட எவையேனும் ஆகுசெலவுகள் தொகையை ஒழிப்போன்; அடுத்ததாக செலுத்துதல் வேண்டும்.

**9.** பந்திகள் 1, 2 மற்றும் 8 என்னும் பந்திகளின் ஒவ்வொன்றிலும் பட்டியலிடப்பட்ட உரிமைக்கோரிக்கை களை திருப்திசெய்வதற்கு போதியதற்றதான பொது உரிமைக் கோரிக்கைகளின் திருப்திக்காகக் கிடைக்கும் கம்பெனியின் ஆதனத்தின் தேறிப்பெறுகையின் வரும்படிகளான அளவுவரை :-

(அ) பின்வருவனவற்றுக்கு அமைய ஆதனம் தொடர்பில் எவரேனும் ஆளின் உரிமைக் கோரிக்கையின் மேல் முன்னுரிமையை கொண்டிருத்தல் வேண்டும்;

(i) மிதவை விதிப்பனவு அல்லது

(ii) கம்பெனிகள் சட்டத்தின் 431 ஆம் பிரிவின் 2 ஆம் பிரிவின் கீழ் மிதக்கும் விதிப்பனவுக்கு பின்னால் ஒரு நிலையான பிணைப்பொறுப்பு தரவரிசைப்படுத்தல் வேண்டும்.

(ஆ) அவ்வாதனத்திலிருந்து அதற்கிணங்க திருப்திப் படுத்துதல் வேண்டும்.

**10.** இவ் அட்டவணையின் நோக்கங்களுக்காக :–

(அ) நோய் அல்லது நல்லேது என்பவற்றினூடாக வேலையிலிருந்து விடுமுறை அல்லது இல்லாமைக்கான காலப்பகுதி தொடர்பிலான ஊதியம் அக்காலப்பகுதியின் போது கம்பெனிக்கு அளிக்கப்பட்ட சேவைகள் தொடர்பில் வேதனங் களாகப் பரிசளிக்கப்படுதல் வேண்டும்;

(ஆ) ஆள் தொடர்பிலான “விடுமுறை கொடுப்பனவு” என்னும் சொல்லமைப்பு தொழில் என்பது ஆள் விடுமுறைக்கு உரித்துடையவராக வரும்வரை, ஆளின் தொழில் காலப்பகுதி தொடர்ந்திருக்கின்ற தான விடுமுறைக் காலப்பகுதி தொடர்பில் ஆளுக்கு செலுத்தப்படற்பாலதாக வருகின்ற வழமையான நேரத்தில் ஊதியத்தின் கணைக்கின் மீது கம்பெனியினால் அவ்வாளுக்கு செலுத்தப் படற்பாலதான ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் ஆக்கப்படட ஏதேனும் கட்டளை அல்லது வழங்கப்பட்ட பணிப்பு உள்ளடங்கலாக தொழில் பற்றி ஆளின் ஒப்பந்தம் அல்லது ஏதேனும் சட்டவாக்கத்தின் பயனைக் கொண்டதான எல்லா தொகைகளையும் உள்ளடக்குகின்றது.

(இ) “விகிதங்கள் அல்லது வரிகள்" என்னும் சொல்லமைப்பு என்பது அரசாங்கத்தினால் அல்லது ஏதேனும் மாகாணசபையினால் அல்லது உள்ளூரதிகார சபையினால் அல்லது ஏதேனும் எழுத்திலான சபையினால் அல்லது அதன் கீழ் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் அதிகாரசபை யினால் விதிக்கப்பட்ட அல்லது ஆக்கப்பட்ட ஏதேனும் வீதம், அறவீடு, வரி அல்லது மதிப்பீடு எனப்பொருள்படும்.

## ஐந்தாம் அட்டவணை

[பிரிவுகள் 255 (4), 261 (3), 271 (5), 284 (2), 308, 310 மற்றும் 433]

## கடன்கொடுநர்கள் மற்றும் உதவுதொகை செலுத்துநர்களின் கூட்டங்களுக்கான நடவடிக்கைமுறைகள்

வரைவிலக்கணம் :

**1.** இவ்வட்டவணையில், “பங்குபற்றுநர்" என்பது :-

(அ) கடன்கொடுநர்களின்; கூட்டம் எனும் விடயத்தில், கடன்கொடுநர் ஒருவர்; அத்துடன்

(ஆ) உதவுதொகை செலுத்துநர்களின் கூட்டமொன்றின் விடயத்தில், உதவுதொகை செலுத்துநர்.

**2.** கூட்டம் நடாத்துகின்ற முறை: கூட்டமொன்று பின்வருமாறு நடாத்தப்படலாம் :–

(அ) நேரடியாக ஒரு இடத்தில் ஆட்களை ஒன்று சேர்ப்பதன் மூலம்;

(ஆ) பங்குபற்றுநர் கேட்காமல் இருப்பதற்கு, பங்கு பற்றுநர்கள் ஒரே நேரத்தில் ஒருவரையொருவர் கேட்பதற்கு தெரிவுசெய்கின்றவிடத்து தவிர;

(இ) பந்தி (அ) விலுள்ள முறைமை மற்றும் பந்தி (ஆ) விலுள்ள முறைமையின் கலப்பு.

**3.** (1) பின்வருவன பற்றிய எழுத்துமூல அறிவித்தல் கூட்டத்துக்கு சமுகமளிப்பதற்கு உரித்துடையவரான ஒவ்வொரு பங்குபற்றுநருக்கும் அனுப்பப்படுதல் வேண்டும் :-

(அ) பந்தி 2 இன் (அ) என்னும் உட்பந்தியின் கீழ் நடாத்தப்படும் ஒவ்வொரு கூட்டத்தினதும் திகதி, நேரம் மற்றும் இடம்;

(ஆ) பந்தி 2 இன் (ஆ) என்னும் உட்பந்தியின் கீழ் நடாத்தப்படும் ஒவ்வொரு கூட்டத்தினதும் திகதி, நேரம் மற்றும் இணைந்தமை பற்றிய விபரங்கள்; அல்லது

(இ) பந்தி 2 இன் (இ) என்னும் உட்பந்தியின் கீழ் நடாத்தப்படும் ஒவ்வொரு கூட்டத்தினதும் திகதி, நேரம், இடம் மற்றும் தேறினவிடத்து இணைப்பு பற்றிய விபரங்கள்;

(2) இச்சட்டத்தின் அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதி வேறுவகையில் தேவைப்படுத்தினாலொழிய அல்லது நீதிமன்றம் வேறுவகையில் கட்டளையிட்டிருந்தாலொழிய, (1) ஆம் உட்பந்தியின் கீழான அறிவித்தல் கூட்டம் நடாத்தப்படுவதற்கு முன்னரான ஆகக்குறைந்தது ஐந்து வேலை நாட்களுக்குள் அனுப்பப் படுதல் வேண்டும்.

(3) பின்வருமாறுள்ளவிடத்தது, கூட்டம் பற்றிய ஒழுங் கின்மை அல்லது அறிவித்தல் கிடைக்கப்பெறுவதற்கான

தவறுகையொன்று கூட்டமொன்றில் செய்யப்பட்ட எவற்றையும் வலிதற்றதாக்காது :-

(அ) ஒழுங்கின்மை அல்லது தவறுகை பொருள் சார்ந்ததல்ல;

(ஆ) ஒழுங்கின்மை அல்லது தவறுகை எதிர்ப்பின்றி அல்லது செய்யும் கூட்டத்தில் பங்குபற்றுவதற்கு எல்லா பங்குபற்றுநர்களும் உரித்துடையவர்கள்;

(இ) கூட்டத்துக்கு சமுகமளிப்பதற்கு உரித்துடையவரான எல்லா பங்குபற்றுநர்களும் ஒழுங்கீனம் அல்லது தவறுகை விட்டுக்கொடுப்பவருக்கு எழுத்திலான சம்மதத்தை அளித்தல்;

(ஈ) கூட்டமொன்று தொடர்பில் பொது அறிவித்தல் வழங்கப்பட்டிருக்குமிடத்து, அது கூட்டத்தின் கீழ் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேவைப்பாடுகளுடன் அது இணங்கியொழுகுதல் வேண்டும்;

**4.** பதவிகள் :

(1) கூட்டமொன்றில் சமுகமளித்து வாக்களிப்பதற்கு உரித்துடையவரான பங்குபற்றுநர் ஒருவர் ஒன்றில் நேரடியாக அல்லது பதிலிப்பத்திரம் மூலம் அவ்வாறு செய்யலாம்.

(2) பதிலிகள் பங்குபற்றுநராகவிருப்பின், கூட்டமொன்றுக்கு சமுகமளிப்பதற்கு உரித்துடையவரான பங்குபற்றுநருக்கான கூட்டத்தில் சமுகமளிப்பதற்கும் கேட்கப்படுவதற்கும் உரித்துடையவராவார்.

(3) பதிலிகளின் நியமனமானது குறிப்பிட்ட கூட்டத்துக்கோ அல்லது பன்னிரண்டு மாதங்கள் எனும் காலப் பகுதிக்கு குறித்துரைக்கப்பட்டதா என்பதனை குறிப்பிட்டு சமுகமளிப்பதற்கு உரித்துடையவரான பங்குபற்றுநரினால் கையொப்பமிடப்பட்ட எழுத்துமூல அறிவித்தலினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(4) பதிலிகளின் நியமனம் பற்றிய அறிவித்தலின் பிரதி கூட்டம் ஆரம்பிக்கும் முன்னர் கூட்டத்தைக் கூட்டுகின்ற

ஆளுக்கு வழங்கப்பட்டிருந்தாலொழிய, கூட்டமொன்று தொடர்பில் பதிலிப்பத்திரம் பயனுறுதலாகாது.

**5.** தவிசாளர் :

(1) இப்பந்திக்கமைய, கூட்டத்தைக் கூட்டுகின்ற ஆள் கூட்டத்தின் தவிசாளராக செயலாற்றுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆள் சமுகமளிக்காதவிடத்து, பங்குபற்றுநர்கள் கூட்டத்துக்கு சமுகமளிப்பதற்கும் கூட்டத்தின் தவிசாளராக செயலாற்றுவதற்கு அவர்களின் உறுப்பினர்களில் ஒருவரை நேரடியாக அல்லது பதிலிகள் மூலம் சமுகமளித்தல் பற்றிய தெரிவு செய்யப்படுதலுக்கும் உரித்துடையவர்களாவார்கள்.

**6.** கூட்ட நடப்பெண் :

(1) பின்வருமாறுள்ளவிடத்து, கூட்டத்துக்கான கூட்ட நடப்பெண் சமுகமாகவுள்ளது :-

(அ) சமுகமளிப்பதற்கு உரித்துடையவர்கள் அல்லது சமுகமளித்துள்ள அவர்களின் பதிலிகள் ஆகவுள்ள மூன்று பங்குபற்றுநரகள்; அல்லது

(ஆ) சமுகமளிப்பதற்கு உரித்துடையவரான பங்குபற்றுநர்களின் எண்ணிக்கை மூன்றை விஞ்சாதவிடத்து, சமுகமளிப்பதற்கும் அல்லது அவர்களின் பதவிகள் மூலம் சமுகமளிப்பதற்குமான எல்லா பங்குபற்றுநர்களும் சமுகமாகவுள்ளனர்.

(2) கூட்ட நடப்பெண் கூட்டத்துக்கு நியமிக்கப்பட்ட நேரத்தின் பின்னர் முப்பது நாட்களினுள் சமுகமளிக்காதவிடத்து, கூட்டம் அதே நாளின் அடுத்து வரும் கிழமைக்கு மற்றும் கூட்டத்துக்கு நியமிக்கப்பட்ட அதே நேரம் மற்றும் இடத்தில் அல்லது தவிசாளர் தீர்மானிக்கக்கூடியதான அத்தகைய வேறு திகதி, மற்றும் இடம் என்பவற்றில் பிற்போடப்படுதல் வேண்டுமென்பதுடன் பிற்போடப்பட்ட கூட்டமொன்றில் கூட்டத்துக்கு நியமிக்கப்பட்ட நேரத்தின் பின்னர் முப்பது நாட்களினுள் கூட்ட நடப்பெண் இல்லாதவிடத்து, சமுகமளித்துள்ள பங்குபற்றுவதற்கு உரித்துடையவர்களான பங்குபற்றுநர்கள் அல்லது அவர்களின் பதிலிகள் கூட்ட நடப்பெண்ணாகும்.

**7.** தீர்மானங்கள் :

(1) பாகங்கள் IX, X, IV மற்றும் XI என்பற்றின் நோக்கங் களுக்காக நடாத்தப்படும் கூட்டம் தவிர்ந்த கடன்கொடு நர்கள் அல்லது உதவுதொகை செலுத்துநர்களின் ஏதேனும் கூட்டத்தில் இரண்டும் பின்வருமாறு உள்ளவிடத்து தீர்மான மொன்று ஏற்கப்படலாம் :-

(அ) தீர்மானத்தின் சார்பில் வாக்களிக்கும் அப்பங்கு பற்றுநர்கள் தீர்மானத்தின் மீது வாக்களிக்கும் எல்லாப் பங்குபற்றுநர்களின் பெரும்பான்மை யான எண்ணிக்கையொன்றை பிரதிநிதித்துவப் படுமிடத்து; அத்துடன்

(ஆ) தீர்மானத்தின் சார்பில் வாக்களிக்கும் அப்பங்கு பற்றுநர்களின் உரிமைக் கோரிக்கைகள் தீர்மானத்தின் மீது வாக்களிக்கும் எல்லாப் பங்குபற்றுநர்களின் உரிமைக் கோரிக்கைகளின் பெறுமதியில் பெரும்பான்மையை பிரதிநிதித்துவம் செய்யுமிடத்து;

(2) பாகம் IX இன் நோக்கங்களுக்காக 2 ஏதேனும் கடன்கொடுநர்களின் ஏதேனும் கூட்டத்தில் இரண்டும் பின்வருமாறு உள்ளவிடத்து, ஏற்கப்படலாம் :-

(அ) தீர்மானத்தின் சார்பில் வாக்களிக்கும் கடன்கொடு நர்கள் தீர்மானத்தின் மீது வாக்களிக்கும் எல்லா கடன்கொடுநர்களின் எண்ணிக்கையில் பெரும் பான்மை பிரதிநிதித்துவப்படுத்துமிடத்து, அத்துடன்

(ஆ) தீர்மானத்தின் சார்பில் வாக்களிக்கும் கடன் கொடுநர்களின் உரிமைக் கோரிக்கைகள் தீர்மானத்தின் மீது வாக்களிக்கும் கடன்கொடு நர்களின் வகுப்பில் உள்ள எல்லாக் கடன்கொடு நர்கள் உரிமைக் கோரிக்கைகளின் பெறுமதியின் ஆகக்குறைந்தது 75 சதவீதத்தினை பிரதிநிதித் துவம் செய்தல் வேண்டும்.

(3) தீர்மானத்தின் மீதான வாக்களிப்பின் போது தீர்மானத்தின் மீது வாக்களிப்பதற்கு உரித்துடையவரான எவரேனும் பங்குபற்றுநரின் வாக்கு உட்பந்திகள் (அ), (ஆ) மற்றும் (இ) என்னும் உட்பந்திகளில் கணக்கீடுகளைச் செய்வதிலிருந்து விளக்கிக் காட்டுதல் வேண்டும்.

**8.** கூட்டக் குறிப்புகள் :-

(1) தவிசாளர் கூட்டமொன்றின் நடவடிக்கை முறைகள் பற்றிய கூட்டக் குறிப்புகள் வைத்திருக்கப்படுவதனை உறுதி செய்தல் வேண்டும்.

(2) தவிசாளரினால் சரியென கையொப்பமிடப்பட்டதா கூட்டக் குறிப்புகள் கூட்டத்தின் நடவடிக்கை முறைகளின் முதற்தோன்றிய சான்றாகும்.

(3) கூட்டக் குறிப்புகள் அத்தகைய ஆட்களின் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுகின்ற வகையில் ஒப்படைக்கப்பட்டு தக்கவைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

(4) அக்கறை கொண்ட ஆளினால் நீதிமன்றத்துக்குச் செய்யும் விண்ணபத்தின் மீது நீதிமன்றம் விண்ணப்பதாரி அவசியமான அத்த்கைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் மீது கூட்டமொன்றின் கூட்டக் குறிப்புகளை சோதனையிடலாம்.

**9.** பிற்போடப்பட்ட கூட்டங்கள் :

(1) ஆறாம் பந்தியின் (ஆ) என்னும் உட்பந்திக்கும் பங்கமின்றி, கூட்டங்களுக்கான பிற்போடல்கள் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய மட்டுப்பாடுகள் மற்றும் வரையறைகளுக்கமைந்ததாதல் வேண்டும்.

(2) பிற்போடப்பட்ட கூட்டமொன்றில் தீர்மானம் நிறைவேற்றப்படுமிடத்து, தீர்மானம் :-

(அ) எல்லா நோக்கங்களுக்காகவும் உண்மையில் நிறைவேற்றப்படவேண்டிய தேதியன்று நிறைவேற்றப்பட்டுள்ளதாக பரிகரிக்கப்படுதல் வேண்டும். அத்துடன்

(ஆ) ஏதேனும் முன்னரான தேதியன்று நிறைவேற்றப்பட்டுள்ளதாக கருதப்படுதலாகாது.

(3) மூன்றாம் பந்தியின் (அ) என்னும் உட்பந்தி, கூட்டம் ஆறு நாட்களை விட குறையாது பிற்போடப்பட்டிருந்தாலொழிய, பிற்போடப்பட்ட கூட்டமொன்றுக்கு ஏற்புடமையாதல் வேண்டும்.

**10.** நானாவிதமானவை :

(1) விதித்துரைக்கப்படின், கூட்டமொன்றில் வாக்களிப் பதற்கு உரித்துடையவரான ஆளொருவர், விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பின்வரும் நடவடிக்கை முறை மூலம் தபால்மூல வாக்கினால் அவ்வாறு செய்யலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக "தபால் மூல வாக்கு" என்பது விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய இலத்திரனியல் வழிமுறைகள் மூலமான வாக்கொன்றை உள்ளடக்கியுள்ளது.

(3) பங்குபற்றுநர் ஒருவர் கூட்டமொன்றில் சமுக மளிக்காதவிடத்து, இது ஏதேனும் அடுத்தக் கூட்டத்தில் சமுகமளிப்பதற்கு பங்குபற்றுநரின் உரித்துடமையொன்றையும் பங்கப்படுத்தலாகாது.

(4) இச்சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கமைய, கூட்டம் ஒன்று அதன் சொந்த நடவடிக்கை முறையை ஒழுங்குப்படுத்தலாம்.

## ஆறாம் அட்டவணை

**[பிரிவு 127]**

## கடனிறுக்கவகையற்ற நிலையில் இருக்கின்ற ஆளின் மரணச்சொத்தின் வங்கிமுறிந்தநிலையிலான நிருவாகம்

**1.** கடனிறுக்கவகையற்ற நிலையில் இருக்கின்ற ஆளின் மரணச்சொத்தின் வங்கிமுறிந்த நிலையிலான நிருவாகம்:

கடனாளிக்கு எதிரான வங்கிமுறிவு மனுவொன்றுக்கு உதவி வழங்குவதற்கு போதுமானதாக இருக்கக்கூடியதான தனிசினையுடைய இறந்த கடனாளியொருவரின் எவரேனும் கடன்கொடுநர், அவர் உயிருடன் இருந்திருப்பின்,

கடனிறுக்கவகையின்மைச் சட்டத்துக்கிணங்க, இறந்த கடனாளியின் மரணச்சொத்தின் நிருவாகத்துக்கான கட்டளையொன்றுக்காகக் கோரி விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் மனுவொன்றினை நீதிமன்றத்தில் சமர்ப்பிக் கலாம்.

**2.** இறந்த கடனாளியின் தனிப்பட்ட பிரதிநிதிக்கு வழங்கப்பட்ட விதித்துரைக்கப்பட்ட அறிவித்தலின்மேல், நீதிமன்றம் விதித்துரைக்கப்பட்ட முறையில், மனுதாரரின் தனிசின் எண்பிப்பின்மேல், மரணச்சொத்து இறந்தவரினால் பெறப்பட்ட தனிசுகளின் கொடுப்பனவுக்கு போதுமானதாக இருக்கலாமென்பதற்கு நியாயமான சாத்தியப்பாடொன்று இருப்பதாக நீதிமன்றம் திருப்தியுற்றாலன்றி நீதிமன்ற மானது கடனிறுக்கவகையற்ற நிலையில் இறந்த கடனாளியின் மரணச்சொத்தின் நிர்வாகத்துக்காக கட்டளை யொன்றை ஆக்கலாம், அல்லது காரணம் காட்டப் படுவதன்மேல், செலவுடன் அல்லது செலவின்றி மனுவை இரத்துச்செய்யலாம்.

**3.** உத்தியோகபூர்வ பெறுநரின் உரித்திலுள்ள ஆதனம் :-

(அ) இறந்த கடனாளியின் மரணச்சொத்தை நிர்வகிப் பதற்கு ஆக்கப்பட்டிருக்கின்ற கட்டளையொன்றின் மேல், கடனாளியின் ஆதனம் அதன் நம்பிக்கைப் பொறுப்பாளராக உத்தியோகபூர்வ பெறுநரின் உரித்திலிருத்தல் வேண்டுமெனன்பதுடன், அவர் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க தேறிப் பெறுவதற்கும் விநியோகிப்பதற்கும் உடனடியாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஆ) கடன்கொடுநர்கள் கடனாளியொருவரின் மரணச் சொத்து வங்கிமுறிவினுள் நிருவகிக்கப்பட்டிருக் கின்றவடத்து அல்லது கையாளப்பட்டிருக்கின்ற விடத்தான வேறு விடயங்களில் அவர்கள் இருக்கின்றவாறாக வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாளர் நியமனத்துக்கான அதே தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டு மென்பதுடன், வங்கிமுறிவு நம்பிக்கைப்பொறுப் பாளர்கள் மற்றும் கடன்கொடுநர் குழுக்களுடன் தொடர்புடைய இச்சட்டத்தின் ஏற்பாடுகள்

அவ்வாறு வழங்கப்படும் தத்துவங்களின்கீழ் நியமிக்கப்பட்ட வங்கிமுறிவு நம்பிக்கைப்பொறுப் பாளர்கள் மற்றும் கடன்கொடுநர் குழுக்களுன்னு ஏற்புடையதாதல் வேண்டும்.

(இ) கடன்கொடுநர் குழு எதுவும் நியமிக்கப்படா விடின், கடன்கொடுநர் குழுவினால் செய்யப்படக் கூடிய அல்லது வழங்கப்பட்டிருக்கூடிய ஏதேனும் செயல் அல்லது விடயம் அல்லது ஏதேனும் பணிப்புரை அல்லது அங்கீகாரம் நீதிமன்றத்தால் செய்யப்படலாம் அல்லது வழங்கப்படலாம்.

**4.** சட்டத்தின் ஏற்புடைமை :

இதனகத்துப்பின்னர் குறிப்பிடப்பட்டுள்ள திரிபுகளுடன், பிரிவு VI இன் எல்லா ஏற்பாடுகளும் விதித்துரைக்கப் பட்டவாறான திரிபுகளுக்கமைய, இச்சட்டத்தின் கீழ் வங்கிமுறிவு கட்டளையொன்றைப் போன்ற முறையினதான இவ்வட்டவணையொன்றுக்கு ஏற்புடையதாதல் வேண்டும்.

**5.** உரிமைகோரிக்கைகளின் முன்னுரிமை :-

(அ) நிருவாகக் கட்டளையொன்றின்கீழ் இறந்த கடனாளியின் ஆதனத்தின் நிருவாகத்தில் உத்தியோகபூர்வ பிரதிநிதியினாலான ஏதேனும் உரிமைகோரிக்கைகளுடன் தொடர்புடைய கடனாளியின் மரணச்சொத்துடன் தொடர்புடைய இறுதிச்சடங்கு மற்றும் மரணசாசன செலவினங் களுக்கான கொடுப்பனவைச் செய்தல் வேண்டும்.

(ஆ) பந்தி (அ) இல் குறித்துரைக்கப்பட்டுள்ள வகுதியிலான உரிமைகோரிக்கைகள் கட்டளை யின் கீழ் முன்னுரிமை தனிசொன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் வேறு தனிசுகளின் முன்னுரிமை தொடர்பிலான ஏதேனும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளில் முரணாக உள்ளது எது எவ்வாறிருப்பினும், வேறு எல்லா தனிவுகளின் முன்னுரிமையில் கடனாளியின் மரணச்சொத்திலிருந்து முழுமையாக செலுத்தப் படுதல் வேண்டும்.

**6.** மேன்மிகை :

இறந்த கடனாளியின்; வங்கிமுறிவின் விடயத்தில் இச் சட்டத்தினால் வழங்கப்பட்டவாறான நிருவாகச் செலவினம் மற்றும் வட்டியுடன் கடனாளியிடமிருந்து எல்லா தனிசு வருவாய்களின் முழுமையான செலுத்துகையின் பின்னர், உத்தியோகபூர்வ பெறுநர் அல்லது வங்கிமுறிவு நம்பிக்கைப் பொறுப்பாளரிடம் ஏதேனும் மேன்மிகை எஞ்சியிருப்பின் அத்தகைய மேன்மிகை இறந்த கடனாளியின் மரணச் சொத்தின் தனிப்பட்ட பிரதிநதிக்கு செலுத்தப்படுதல் வேண்டும் அல்லது விதித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய வேறு முறையில் கையாளப்படுதல் வேண்டும்.

**7.** மனுவை முன்வைத்தலில் தனிப்பட்ட பிரதிநிதிக்கான அறிவித்தலின் விளைவு :-

(அ) இப்பிரிவின் கீழ் மனுவொன்றின் கடன்கொடுந ரொருவரினாலான முன்வைத்தலின் இறந்த கடன்கொடுநரின் தனிப்பட்ட பிரதிநிதிக்கான அறிவித்தல், அதன்மேல் ஆக்கப்பட்டிருக்கின்ற நிருவாகத்துக்கான கட்டளையொன்றின் பட்சத்தில், வங்கிமுறிவு மனுவின் அறிவித்தலுக்கு சமமானதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(ஆ) அத்தகைய அறிவித்தலின் பின்னர், தனிப்பட்ட பிரதிநிதியால் செய்யப்படாத ஆதனத்தின் செலுத்துகை அல்லது கைமாற்றுகைகளெதுவும் அவருக்கும் உத்தியோகபூர்வ பெறுனர் அல்லது வங்கிமுறிவு நம்பிக்கைப்பொறுப்பாளருக்கும் இடையிலானதொரு விடுவித்தலொன்றாகத் தொழிற்படுதல் வேண்டும்.

(இ) மேற்சொல்லப்பட்டவாறாக, இப்பிரிவில் உள்ள எதுவும், நிருவாகத்திற்கான கட்டளையின் திகதிக்கு முன்னர் தனிப்பட்ட பிரதிநிதியால் செய்யப்பட்ட ஏதேனும் செலுத்துகையை அல்லது நல்லெண்ணத்துடன் செய்யப்படும் ஏதேனும் செயல் அல்லது விடயத்தை செல்லுபடியற்ற தாக்குதல் வேண்டும்.

**8.** தனிப்பட்ட பிரதிநிதி மனுவொன்றை முன்வைக்கலாம் :

இவ்வட்டவணையின் கீழ் இறந்த கடனாளியொருவரின் மரணச்சொத்தின் நிருவகிப்புக்கான மனுவொன்று கடனாளியின் தனிப்பட்ட பிரதிநிதியால் முன்வைக்கப் படலாம் என்பதுடன், மனுவொன்று அத்தகைய பிரதிநிதி யொருவரினால் அவ்வாறு முன்வைக்கப்படுமிடத்து, இவ்வட்டவணை விதித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய திரிபுகளுக்கமைய ஏற்புடையதாதல் வேண்டும்.

**9.** கடன்கொடுநர் :

சந்தர்ப்பம் வேறுவகையாக தேவைப்படுத்தினாலன்றி, இவ்வட்டவணையில் "கடன்கொடுநர்" என்பது, இச்சட்டத்தில் வழங்கப்படுகின்றவாறாக வங்கிமுறிவு மனுவொன்றை முன்வைப்பதற்கு தகைமைபெற்ற ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கடன்கொடுநர்கள் எனப் பொருள்படும்.

## ஏழாம் அட்டவணை

**[பிரிவு 232]**

### நிருவாகிகளின் தத்துவங்கள்

**1.** பாகம் IX இன் கீழ் நியமிக்கப்பட்ட ஒவ்வொரு நிர்வாகியும் பின்வரும் தத்துவங்களை கொண்டுள்ளனர் :-

(அ) கம்பெனியின் ஆதனத்தை உடமையில் வைத்திருத்தலும் சேகரித்தலும் பெறுதலும்;

(ஆ) பகிரங்க ஏல விற்பனை மூலம் அல்லது தனிப்பட்ட ஏல விற்பனை மூலம் அல்லது தனிப்பட்ட ஒப்பந்தம் மூலம் விற்றல் அல்லது வேறு வகையில் கையுதிர்த்தல்;

(இ) கம்பெனியின் ஆதனத்தின் வருமானத்தை வழக்குமூலம் அல்லது வேறுவகையில் கோரிக்கை செய்தலும் மீளப்பெறுதலும்;

(ஈ) அறவிடப்பட்ட வருமானத்துக்காகப் பற்றுச் சீட்டுக்களை வழங்குதல்;

(உ) கம்பெனியின் தொழில் மற்றும் ஆதனம் தொடர் பிலாக காப்புறுதியை காப்புறுதி செய்தலும் பேணுதலும்;

(ஊ) கம்பெனியின் ஆதனத்தை திருத்துதலும் பராமரித்தலும்;

(எ) கம்பெனியின்; உடைமையில் அல்லது கட்டுக் காவலில் அல்லது கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கம்பெனியின் அலுவல்கள், தொழில், ஆதனம் மற்றும் நிதிசார் நிலைமைகளுடன் தொடர்புடைய எவையேனும் புத்தகங்கள், பதிவுகள் அல்லது ஆவணங்களை பரிசோதித்தல்;

(ஏ) கம்பெனி அல்லாத ஆளொருவரின் உடைமையில் அல்லது கட்டுக்காவலில் அல்லது கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கம்பெனியின் அலுவல்கள், தொழில், ஆதனம் மற்றும் நிதிசார் நிலைமைகளுடன் தொடர்புடைய புத்தகங்கள், பதிவுகள் அல்லது ஆவணங்களை பரிசோதித்தலுக்கான உரிமையை பிரயோகித்தல்;

(ஐ) கடன்கொடுநர் அல்லது பங்குதாரரொருவரா யினுஞ்சரி அல்லது இல்லையாயினுஞ்சரி கம்பெனியின் பணத்துக்காக பிணைப்பொறுப் பளிக்கின்றதுடனாயினுஞ்சரி இல்லையாயினுஞ் சரி எவரேனும் ஆளிடமிருந்து பணம் திரட்டல் அல்லது பணம் கடனெடுத்தல்;

(ஒ) நிருவாகியின் பணிகள், தத்துவங்கள் மற்றும் கடமைகளை நிறைவேற்றுதல், பிரயோகித்தல் அல்லது புரிதலுக்கு நிருவாகிக்கு உதவுவதற்கு வழக்கறிஞரொருவரை அல்லது கணக்காய் வாளரை அல்லது வேறு தொழில்சார் தகைமை யுடைய ஆளொருவரை நியமித்தல்;

(ஓ) கம்பெனியின் பெயரிலும் கம்பெனி சார்பிலும் ஏதேனும் சட்டச் நடைமுறைகள் அல்லது வேறு சட்ட நடவடிக்கைகள் மற்றும் அறவீட்டு கைப்பற்றாணை என்பவற்றை ஆரம்பித்தல் எதிர்வாதிடல் மற்றும் தொடங்குதல் அல்லது இடைநிறுத்துதல்;

(ஔ) கம்பெனியைப் பாதிக்கின்ற ஏதேனும் விடயத்தை மத்தியஸ்த்துக்கு அல்லது நடுதீர்ப்புக்கு அல்லது எவரேனும் ஒம்புட்ஸ்மேனுக்கு ஆற்றுப்படுத்தல்;

(க) கம்பெனி அதனது இலச்சினையை வைத்திருந்தால், அதனைப் பயன்படுத்துதல்;

(ங) எல்லாச் செயல்களையும் செய்தலும் அத்துடன் கம்பெனியின் பெயரிலும் கம்பெனி சார்பிலும் ஏதேனும் உடன்படிக்கை, உறுதி அல்லது வேறு ஆவணகளை நிறைவேற்றுதலும்;

(ச) கம்பெனியின் பெயரிலும் கம்பெனி சார்பிலும் ஏதேனும் நாணய மாற்றுண்டியலை அல்லது வாக்குறுதிப்பத்திரத்தை வரைதல், ஏற்றுக் கொள்ளுதல், புறக்குறிப்பிடுதல் மற்றும் வைத்திருத்தல்;

(ஞ) எந்தத் தொழிலை நிருவாகி தாமாகவே செய்வதற்கு முடியாதிருக்கின்றதோ அல்லது எந்தத் தொழில் முகவர் ஒருவரால் கூடியளவு வசதியாகச் செய்யக்கூடியதாக இருக்கின்றதோ அந்த ஏதேனும் தொழிலைச் செய்வதற்காக எவரேனும் முகவரை நியமித்தல்;

(ட) வேலைக்கமர்த்தல், பதவி விலக்குதல் அல்லது ஊழியர்களின் பதவி விலக்கத்துக்காக தோதான அதிகாரசபையின் அங்கீகாரத்தை நாடுதல்;

(ண) கம்பெனியின் ஆதனத்தைக் காசாகத் திரட்டிக் கொள்வதற்கு அவசியமாகக்கூடியவாறான (வேலைகளை கொண்டுநடாத்துதல் உட்பட) அத்தகைய எல்லா விடயங்களையும் செய்தல்;

(த) நிருவாகியின் பணிகள், தத்துவங்கள் மற்றும் கடமைகளை நிறைவேற்றுதல், பிரயோகித்தல் அல்லது புரிதலுக்கு அவசியமானதாகவுள்ள அல்லது அதன் நேர்விளைவானதாக இருக்கின்ற ஏதேனும் கொடுப்பனவைச் செய்தல்;

(ந) கம்பெனியின் தொழிலைக் கொண்டுநடாத்துதல்;

(ப) கம்பெனியின்; துணைநிலைக் கம்பெனிகளைத் தாபித்தல்;

(ம) கம்பெனியினது தொழிலையும் ஆதனத்தினையும் முழுமையாக அல்லது அவற்றின் ஏதேனும்

பாகத்தை கம்பெனியினது துணைநிலைக் கம்பெனிகளுக்கு கைமாற்றுதல்;

(ய) கம்பெனியின்; ஏதேனும் ஆதனத்தின் குத்தகை அல்லது வாடகை ஒன்றில் ஒப்படைப்பை வழங்குதல் அல்லது ஏற்றல் அத்துடன் கம்பெனியின் தொழிலுக்குத் தேவைப்படும் அல்லது வசதியான ஏதேனும் ஆதனத்தை குத்தகைக்கு அல்லது வாடகைக்கு எடுத்தல்;

(ர) நேரொத்ததாகவுள்ள நடவடிக்கைமுறையின்கீழ் அனுமதிக்கப்பட்டிருக்கின்றவிடத்து, கம்பெனியின் சார்பில் ஏதேனும் உடன்பாட்டொழுங்குக்கு, ஒருங்கிணைத்தலுக்கு அல்லது இணக்கத்துக்கு பரிகரித்தல் அல்லது சம்மதித்தல்;

(ல) ஆளொருவர் தனிசொன்றை கொடுக்கவேண்டிய வராகவோ அல்லது வேறு வகையில் கம்பெனிக்கு பொறுப்பொன்றின்கீழ் உள்ளவராகவோ இருக்கு மிடத்து -

(i) அவ்வாளின் வங்கிமுறிவில், கடனிறுக்க வகையற்ற நிலையில் அல்லது ஒழித்துக் கட்டுதலில் தனிசை அல்லது வேறு பொறுப்பை வாக்களித்தல் எண்பித்தல் மற்றும் வரிசைப்படுத்தல் என்பதுடன் அவ் வாளின் கடன்கொடுநரொருவராக வழங்கல் களைப் பெறுதல்; அத்துடன்

(ii) நேரொத்ததாகவுள்ள நடவடிக்கைமுறையின் கீழ் அனுமதிக்கப்பட்டிருக்கின்றவிடத்து, அவ்வாளின் தனிசொன்றின் மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டில் வாக்களித்தல், வழங்கல் களைப் பெறுதல் மற்றும் வேறுவகையில் கடன்கொடுநரொருவராக பங்கேற்றல்;

(வ) கம்பெனியின் ஒழிப்போனொருவரின் நியமனத் துக்காக நீதிமன்றத்துக்கு விண்ணப்பமொன் றைச் செய்தல்;

(அஅ) கம்பெனியின் சேவைக்காக பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அல்லது முகவரியை மாற்றுதல்;

(ஆஆ) கம்பெனியின்; தொழிலுக்கு அவசியமான அல்லது வசதியான ஏதேனும் ஆதனத்தை கையகப்படுத்துதல்;

(இஇ) கம்பெனியின்; ஆதனத்தின் மீது தெரிவொன்றினை வழங்குதல்;

(ஈஈ) கம்பெனியின்; ஆதனத்தை மிளப்புதுப்பித்தல் அல்லது விஸ்தீரணப்படுத்தல்;

(உஉ) கம்பெனியின் பெயரில் மற்றும் கம்பெனியின் சார்பில் ஏதேனும் கணக்கினை செயற்படுத்துவதற்கு ஆளொருவரை அனுமதித்தல்;

(ஊஊ) ஏதேனும் வரி திரும்பலை கோப்பிடுதல், வருமதியாகவுள்ள வரிகளை செலுத்துதல்;

(எஎ) கம்பெனியின் பணிப்பாளரை நீக்குதல்;

(ஏஏ) (i) பின்வரும் நோக்கத்துக்காக பிரிவு 218 இன் கீழ் அனுமதிக்கப்படுமிடத்து அல்லது தேவைப்படுத்தப்படுமிடத்து, கடன்கொடுநர்களின், பங்குதாரர்களின் அல்லது நிருவாகக் கடன்கொடுநர்கள் குழுவொன்றின் நிருவாகக் கூட்டமொன்றினை கூட்டுதல் தொடர்பான கருமங்கள் பற்றி நிருவாகக் கடன்கொடுநர்கள் குழுவொன்றுடன் கலந்தாலோசித்தல் -

(அ) நிருவாகத்தில் முன்னேற்றத்தினை அவர்களுக்குத் அறிவித்தல்;

(ஆ) நிருவாகத்தில் எழும் ஏதேனும் கருமத்தின் மீது அவர்களின் கருத்துக்களைக் கண்டறிதல்; அல்லது

(ii) நிருவாத்துடன் தொடர்புடைய வேறேதேனும் நோக்கங்கள்;

(ஐஐ) அழைக்கப்படா மூலதனம் மற்றும் வேறு பொறுப்புகள் தொடர்பில் கம்பெனியின்; பங்களிப்பாளர்களுக்கு அழைப்புக்கல் விடுத்தல்;

(ஒஓ) இப்பந்தியில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள தத்துவங்களைப் பிரயோகிப்பதில் அவசியமான அல்லது இடைநேர்விளைவான மற்றெல்லா விடயங்களையும் செய்தல்; அத்துடன்

(ஓஓ) நிருவாகத்தின் பொருளாதார மற்றும் விரைவான நடத்தைக்கு நீதிமன்றம் அங்கீகரிக்கக்கூடியவாறான அத்தகைய வேறு விடயங்களைச் செய்தல்;

## எட்டாம் அட்டவணை

[பிரிவுகள் 333 - 426]

## பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கடன்கொடுநர்களின் தெரிவுகள்

**1.** கம்பெனியொன்றின் ஆதனத்தின் மேல் நிலையான பிணைப்பொறுப்பொன்றினை வைத்திருக்கின்ற பிணைப் பொறுப்பளிக்கப்பட்ட கடன்கொடுநரொருவர் :-

(அ) பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கடன்கொடுநர் அவ்வாறு செய்வதற்கு உரித்துடையவராகின்ற விடத்து, பிணைப்பொறுப்பினை வலுவுறுத்தலாம்; அல்லது

(ஆ) பிணைப்பொறுப்புக்கமைய ஆதனத்தை முழுமையொன்றாக கடன்கொடுநர்களின் நன்மைக்காக ஒழிப்போனுக்கு கையளிக்கலாமென்பதுடன் முழுத் தனிசுக்கும் பிணைப்பொறுப்பற்ற கடன் தருநரொருவராக உரிமைகோரலாம்.

**2.** ஓராம் பந்தியின் (அ) என்னும் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள தெரிவினைப் பிரயோகிக்கின்ற பிணைப் பொறுப்பளிக்கப்பட்ட கடன்கொடுநரொருவர் பின்வருவதன் பின்னர் பணமாகப் பெறப்பட்ட தேறிய தொகையிலிருந்து எஞ்சியிருக்கும் ஏதேனும் மிகுதொகைக்கு ஒழிப்போனுக்கு கணக்கு அளித்தல் வேண்டும் :-

(அ) இயைபான தேதியிலுள்ளவாறு தீர்மானிக்கப் பட்ட பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கடன்கொடு

நரின் நிலையான பிணைபொறுப்புக்கு முன்னர் நிரல்படுத்தப்பட்ட ஆதனத்தின் ஏதேனும் பாகத்தின் மேல் ஏதேனும் நிலையான பிணைப் பொறுப்பின் கட்டுறுத்துக்கு கொடுக்க வேண்டிய ஏதேனும் தனிசை செலுத்தித் தீர்த்தல்; அத்துடன்

(ஆ) இயைபான தேதியிலுள்ளவாறு தீர்மானிக்கப் பட்ட தனிசின் முழுத்தொகையை செலுத்தித் திர்த்தல்.

**3.** ஒழிப்போனொருவர் எழுத்திலான அறிவித்தல் மூலம், பின்வருவனவற்றுக்கு அறிவித்தலை பெற்றதன் பின்னர் இருபது வேலை நாட்களினுள் பிணைப்பொறுப்பளிக்கப் பட்ட கடன்கொடுநரொருவரை தேவைப்படுத்தலாம் :-

(அ) ஓராம் பந்தியின் (அ) என்னும் உட்பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள தெரிவு அல்லது 1 ஆம் பந்தியின் (ஆ) என்னும் உட்பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள தெரிவு பிரயோகித்தல்;

(ஆ) கடன்கொடுநர் அக்காலப்பகுதியினுள் அவ்வாறு செய்வதற்கு 1 ஆம் பந்தியின் (ஆ) என்னும் உட்பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள தெரிவினை பிரயோகிப்பதற்கு தெரிவு செய்யின்,

**4.** அறிவித்தலொன்று 3 ஆம் பந்தியின் கீழ் அறிவித்தல் சேர்ப்பிக்கப்பட்டுள்ளவரும் அறிவித்தலுக்கு இணங்கி யொழுகத் தவறுகின்றவருமான பிணைப்பொறுப்பளிக்கப் பட்ட கடன்கொடுநரொருவர் :-

(அ) முழுமையொன்றாக கடன்கொடுநரின் நலனுக்காக ஒழிப்போனுக்கு பிணைப்பொறுப்புக்கமைய, ஆதனத்தை ஒப்படைத்துள்ளதாகக் கொள்ளப்படு கின்றது; அத்துடன்

(ஆ) முழு தனிசுக்காக பிணைப்பொறுப்பற்ற கடன் கொடுநரொருவராக உரிமைகோரலாம்.

## ஒன்பதாம் அட்டவணை

**[பிரிவு 329]**

## ஒழிப்போனின் தத்துவங்கள்

**1.** பகுதி XII இன் கீழ் நியமிக்கப்பட்ட ஒவ்வொரு ஒழிப்போனும் பின்வரும் தத்துவங்களை கொண்டுள்ளனர் : -

(அ) கம்பெனியின் ஆதனத்தை உடமையில் வைத்திருத்தலும் சேகரித்தலும் பெறுதலும்;

(ஆ) பகிரங்க ஏல விற்பனை மூலம் அல்லது தனிப்பட்ட ஏல விற்பனை மூலம் அல்லது தனிப்பட்ட ஒப்பந்தம் மூலம் கம்பெனியின் ஆதனத்தை விற்றல் அல்லது வேறு வகையில் கையுதிர்த்தல்;

(இ) கம்பெனியின் ஆதனத்தின் வருமானத்தை வழக்குமூலம் அல்லது வேறுவகையில் கோரிக்கை செய்தலும் மீளப்பெறுதலும்;

(ஈ) அறவிடப்பட்ட வருமானத்துக்காகப் பற்றுச் சீட்டுக்களை வழங்குதல்;

(உ) கம்பெனியின் தொழில் மற்றும் ஆதனம் தொடர்பிலாக காப்புறுதியை காப்புறுதி செய்தலும் பேணுதலும்;

(ஊ) கம்பெனியின் ஆதனத்தை திருத்துதலும் பராமரித்தலும்;

(எ) கம்பெனியின்; உடைமையில் அல்லது கட்டுக் காவலில் அல்லது கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கம்பெனியின் அலுவல்கள், தொழில், ஆதனம் மற்றும் நிதிசார் நிலைமைகளுடன் தொடர்புடைய எவையேனும் புத்தகங்கள், பதிவுகள் அல்லது ஆவணங்களை பரிசோதித்தல்;

(ஏ) கம்பெனி அல்லாத ஆளொருவரின் உடைமையில் அல்லது கட்டுக்காவலில் அல்லது கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கம்பெனியின் அலுவல்கள், தொழில், ஆதனம் மற்றும் நிதிசார் நிலைமைகளுடன் தொடர்புடைய புத்தகங்கள், பதிவுகள் அல்லது

ஆவணங்களை பரிசோதித்தலுக்கான உரிமையை பிரயோகித்தல்;

(ஐ) கடன்கொடுநர் அல்லது பங்குதாரரொருவராயினுஞ்சரி அல்லது இல்லையாயினுஞ்சரி கம்பெனியின் ஆதனத்தின் மேல் அத்தகைய பணத்துக்காக பிணைப்பொறுப்பளிக்கின்றதுடனாயினுஞ்சரி இல்லையாயினுஞ்சரி எவரேனும் ஆளிடமிருந்து பணம் திரட்டல் அல்லது பணம் கடனெடுத்தல்;

(ஒ) ஒழிப்போனின் பணிகள், தத்துவங்கள் மற்றும் கடமைகளை நிறைவேற்றுதல், பிரயோகித்தல் அல்லது புரிதலுக்கு ஒழிப்போனுக்கு உதவுவதற்கு வழக்கறிஞரொருவரை அல்லது கணக்காய்வாளரை அல்லது வேறு தொழில்சார் தகைமையுடைய ஆளொருவரை நியமித்தல்;

(ஓ) கம்பெனியின் பெயரிலும் கம்பெனி சார்பிலும் ஏதேனும் சட்டச் நடைமுறைகள் அல்லது வேறு சட்ட நடவடிக்கைகள் மற்றும் அறவீட்டு கைப்பற்றாணை என்பவற்றை ஆரம்பித்தல் எதிர்வாதிடல் மற்றும் தொடங்குதல் அல்லது இடைநிறுத்துதல்;

(ஔ) கம்பெனியைப் பாதிக்கின்ற ஏதேனும் விடயத்தை மத்தியஸ்த்துக்கு அல்லது நடுதீர்ப்புக்கு அல்லது எவரேனும் ஒம்புட்ஸ்மேனுக்கு ஆற்றுப்படுத்தல்;

(க) கம்பெனி அதனது இலச்சினையை வைத்திருந்தால், அதனைப் பயன்படுத்துதல்;

(ங) எல்லாச் செயல்களையும் செய்தலும் அத்துடன் கம்பெனியின் பெயரிலும் கம்பெனி சார்பிலும் ஏதேனும் உடன்படிக்கை, உறுதி அல்லது வேறு ஆவணகளை நிறைவேற்றுதலும்;

(ச) கம்பெனியின் பெயரிலும் கம்பெனி சார்பிலும் ஏதேனும் நாணய மாற்றுண்டியலை அல்லது வாக்குறுதிப்பத்திரத்தை வரைதல், ஏற்றுக்கொள்ளுதல், புறக்குறிப்பிடுதல் மற்றும் வைத்திருத்தல்;

(ஞ) எந்தத் தொழிலை ஒழிப்போன் தாமாகவே செய்வதற்கு முடியாதிருக்கின்றதோ அல்லது எந்தத் தொழில் முகவர் ஒருவரால் கூடியளவு வசதியாகச் செய்யக்கூடியதாக இருக்கின்றதோ அந்த ஏதேனும் தொழிலைச் செய்வதற்காக எவரேனும் முகவரை நியமித்தல்;

(ட) வேலைக்கமர்த்தல், பதவி விலக்குதல் அல்லது ஊழியர்களின் பதவி விலக்கத்துக்காக தோதான அதிகாரசபையின் அங்கீகாரத்தை நாடுதல்;

(ண) கம்பெனியின் ஆதனத்தைக் காசாகத் திரட்டிக் கொள்வதற்கு அவசியமாகக்கூடியவாறான (வேலைகளை கொண்டுநடாத்துதல் உட்பட) அத்தகைய எல்லா விடயங்களையும் செய்தல்;

(த) ஒழிப்போனின் பணிகள், தத்துவங்கள் மற்றும் கடமைகளை நிறைவேற்றுதல், பிரயோகித்தல் அல்லது புரிதலுக்கு அவசியமானதாகவுள்ள அல்லது அதன் நேர்விளைவானதாக இருக்கின்ற ஏதேனும் கொடுப்பனவைச் செய்தல்;

(ந) ஒழித்துக்கட்டுதலுக்கு அவசியமானவாறான அத்தகை அளவுக்கு கம்பெனியின் தொழிலைக் கொண்டுநடாத்துதல்;

(ப) கம்பெனியின் துணைநிலைக் கம்பெனிகளைத் தாபித்தல்;

(ம) கம்பெனியினது தொழிலையும் ஆதனத்தினையும் முழுமையாக அல்லது அவற்றின் ஏதேனும் பாகத்தை கம்பெனியினது துணைநிலைக் கம்பெனிகளுக்கு கைமாற்றுதல்;

(ய) கம்பெனியின்; ஏதேனும் ஆதனத்தின் குத்தகை அல்லது வாடகை ஒன்றில் ஒப்படைப்பை வழங்குதல் அல்லது ஏற்றல் அத்துடன் கம்பெனியின் தொழிலுக்குத் தேவைப்படும் அல்லது வசதியான ஏதேனும் ஆதனத்தை குத்தகைக்கு அல்லது வாடகைக்கு எடுத்தல்;

(ர) நேரொத்ததாகவுள்ள நடவடிக்கைமுறையின்கீழ் அனுமதிக்கப்பட்டிருக்கின்றவிடத்து, கம்பெனியின் சார்பில் ஏதேனும் உடன்பாட்டொழுங்குக்கு, ஒருங்கிணைத்தலுக்கு அல்லது இணக்கத்துக்கு பரிகரித்தல் அல்லது சம்மதித்தல்;

(ல) ஆளொருவர் தனிசொன்றை கொடுக்கவேண்டிய வராகவோ அல்லது வேறு வகையில் கம்பெனிக்கு பொறுப்பொன்றின்கீழ் உள்ளவராகவோ இருக்கு மிடத்து -

(i) அவ்வாளின் வங்கிமுறிவில், கடனிறுக்கவகை யற்றநிலையில் அல்லது ஒழித்துக்கட்டுதலில் தனிசை அல்லது வேறு பொறுப்பை வாக்களித்தல் எண்பித்தல் மற்றும் வரிசைப் படுத்தல் என்பதுடன் அவ்வாளின் கடன் கொடுநரொருவராக வழங்கல்களைப் பெறுதல்; அத்துடன்

(ii) நேரொத்ததாகவுள்ள நடவடிக்கைமுறையின் கீழ் அனுமதிக்கப்பட்டிருக்கின்றவிடத்து, அவ்வாளின் தனிசொன்றின் மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டில் வாக்களித்தல், வழங்கல் களைப் பெறுதல் மற்றும் வேறுவகையில் கடன்கொடுநரொருவராக பங்கேற்றல்;

(வ) பாகம் IX இன் கீழ் அனுமதிக்கப்படுகின்ற விடத்து, கம்பெனியின் நிருவாகியொருவரை நியமித்தல்;

(அஅ) கம்பெனியின் சேவைக்காக பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அல்லது முகவரியை மாற்றுதல்;

(ஆஆ) கம்பெனியின் தொழிலுக்கு அவசியமான அல்லது வசதியான ஏதேனும் ஆதனத்தை கையகப்படுத்துதல்;

(இஇ) கம்பெனியின் ஆதனத்தின் மீது தெரிவொன் றினை வழங்குதல்;

(ஈஈ) கம்பெனியின் ஆதனத்தை மீளப்புதுப்பித்தல் அல்லது விஸ்தீரணப்படுத்தல்;

(உஉ) கம்பெனியின் பெயரில் மற்றும் கம்பெனியின் சார்பில் ஏதேனும் கணக்கினை செயற்படுத்துவதற்கு எவரேனுமாளை அனுமதித்தல்;

(ஊஊ) ஏதேனும் வரி திரும்பலை கோப்பிடுதல், வருமதியாகவுள்ள வரிகளை செலுத்துதல்;

(எஎ) கம்பெனியின் பணிப்பாளரை நீக்குதல்;

(ஏஏ) ஒழித்துக்கட்டுதலுடன் தொடர்புடைய கருமங்கள் பற்றி ஒழித்துக்கட்டுதல் கடன்கொடுநர்கள் குழுவொன்றுடன் கலந்தாலோசித்தல்;

(ஐஐ) ஒழித்துக்கட்டுதலுடன் தொடர்புடைய கருமங்கள் பற்றி ஒழித்துக்கட்டுதல் உதவுதொகை செலுத்துநர் குழுவொன்றுடன் கலந்தாலோசித்தல்;

(ஒஒ) (i) பின்வரும் நோக்கத்துக்காக பிரிவு 310 இன் கீழ் அனுமதிக்கப்படுமிடத்து அல்லது தேவைப்படுத்தப்படுமிடத்து, கடன்கொடுநர்களின், பங்குதாரர்களின் அல்லது உதவுதொகை வழங்குநர்களின், ஒழித்துக்கட்டுதல் கடன்கொடுநர்கள் குழுவொன்றின் அல்லது ஒழித்துக் கட்டுதல் உதவுதொகை செலுத்துநர் குழுவொன்றின் கூட்டமொன்றினை கூட்டுதல் -

(அ) ஒழித்துக்கட்டுதலில் முன்னேற்றத்தினை அவர்களுக்கு அறிவித்தல்;

(ஆ) ஒழித்துக்கட்டுதலில் எழும் ஏதேனும் கருமத்தின் மீது அவர்களின் கருத்துக்களைக் கண்டறிதல்; அல்லது

(ii) ஒழித்துக்கட்டுதலுடன் தொடர்புடைய வேறேதேனும் நோக்கங்கள்;

(ஓஓ) கடன்கொடுநர்களுடன் அல்லது கடன்கொடுநர்களென உரிமைகோருகின்ற அல்லது

தற்போதையதாயினுஞ்சரி அல்லது எதிர் காலத்தினதாயினுஞ்சரி, திட்டவட்டமான தாயினுஞ்சரி அல்லது எதிர்பாராததாயினுஞ் சரி மற்றும் நிச்சயிக்கப்பட்டதாயினுஞ்சரி அல்லது சேதவீடுகளில் உள்ளதாயினுஞ்சரி, கம்பெனிக்கெதிரான உரிமைகோரிக்கை யொன்றின் இருப்பில் உரிமைகோரிக்கை யைக் கொண்டிருக்கின்ற அல்லது உடையவராயுள்ளனரெனச் சார்த்துகின்ற ஆட்களுடன் இணக்கமொன்றை அல்லது ஒழுங்கேற்பாடொன்றைச் செய்தல் ஆனால் அத்தகைய இணக்கமொன்று அல்லது ஒழுங்கேற்பாடொன்று கடன்கொடுநரின் சட்ட உரிமைகளுடன் இணங்கியொழுகு கின்றது தவிர்ந்த வேறு வழங்கலொன்றுக்காக வழங்குதலாகாது;

(ஔஔ) அழைக்கப்படா மூலதனம் மற்றும் வேறு பொறுப்புகள் தொடர்பில் கம்பெனியின் பங்களிப்பாளர்களுக்கு அழைப்புகள் விடுத்தல்;

(கக) உடன்பட்டுக்கொள்ளக்கூடியவாறான அத் தகைய நியதிகளின்மீது தற்போதாயினுஞ்சரி அல்லது எதிர்காலத்திலாயினுஞ்சரி, நிச்சயிக் கப்பட்டதாயினுஞ்சரி அல்லது சேதவீடுகளில் உள்ளதாயினுஞ்சரி, உளதாயுள்ள அல்லது கம்பெனிக்கும் எவரேனும் ஆளுக்கும் இடையே உளதாகவுள்ளதெனவிருக்கின்ற அழைப்புகள், தனிசுகள் மற்றும் பொறுப் புக்களை இணக்குதல்;

(ஙங) இப்பந்தியில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள தத்து வங்களைப் பிரயோகிப்பதில் அவசியமான அல்லது இடைநேர்விளைவான மற்றெல்லா விடயங்களையும் செய்தல்; அத்துடன்

(சச) ஒழித்துக்கட்டுதலின் பொருளாதார மற்றும் விரைவான நடத்தைக்கு நீதிமன்றம் அங்கீகரிக்கக்கூடியவாறான அத்தகைய வேறு விடயங்களைச் செய்தல்.

## பத்தாம் அட்டவணை

[பிரிவு 376]

### பெறுநர்களின் தத்துவங்கள்

**1.** பிரிவு XIII இன் கீழ் நியமிக்கப்பட்ட பெறுநர் ஒவ்வொருவரும், நீதிமன்றத்தின் எச்சாதனத்தினால் அல்லது கட்டளையின் கீழ் அந்நியமனம் செய்யப்பட்டுள்ளதோ அச்சாதனத்தின் அல்லது கட்டளையின்கீழ் பெறுநரின் தத்துவங்களின் மேலான ஏதேனும் கட்டுப்பாடு அல்லது மட்டுப்படுத்தலுக்கமைய, பின்வருவனவற்றைச் செய்வதற்கு தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் :–

(அ) பெறுநராண்மையின் ஆதனத்தை உடமையில் வைத்திருத்தலும் சேகரித்தலும் பெறுதலும்;

(ஆ) பகிரங்க ஏல விற்பனை மூலம் அல்லது தனிப்பட்ட ஏல விற்பனை மூலம் அல்லது தனிப்பட்ட ஒப்பந்தம் மூலம் பெறுநராண்மையின் ஆதனத்தை விற்றல் அல்லது வேறு வகையில் கையுதிர்த்தல்;

(இ) பெறுநராண்மையின் ஆதனத்தின் வருமானத்தை வழக்குமூலம் அல்லது வேறுவகையில் கோரிக்கை செய்தலும் மீளப்பெறுதலும்;

(ஈ) அறவிடப்பட்ட வருமானத்துக்காகப் பற்றுச் சீட்டுக்களை வழங்குதல்;

(உ) பெறுநராண்மையிலுள்ள ஆதனத்தை முகாமை செய்தல்;

(ஊ) பெறுநராண்மையிலுள்ள ஆதனம் தொடர்பில் காப்புறுதியை காப்புறுதிசெய்தல் மற்றும் பேணுதல்;

(எ) பெறுநராண்மையிலுள்ள ஆதனத்தை திருத்து தலும் பராமரித்தலும்;

(ஏ) கொடையாளியின் உடைமையில் அல்லது கட்டுக்காவலில் அல்லது கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பெறுநராண்மையிலுள்ள ஆதனத்துடன்

தொடர்புடைய புத்தகங்கள், பதிவுகள் அல்லது ஆவணங்களை நியாயமான நேரத்தில் மற்றும் இடத்தில் பரிசோதித்தல்;

(ஐ) கொடையாளி அல்லாத வேறு ஆளொருவரின் உடைமையில் அல்லது கட்டுக்காவலில் அல்லது கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பெறுநராண்மை யிலுள்ள ஆதனத்துடன் தொடர்புடைய புத்தகங்கள், பதிவுகள் அல்லது ஆவணங்களை பரிசோதிக்கும் உரிமையொன்றை, கொடை யாளியின் சார்பில் பிரயோகித்தல்;

(ஒ) பெறுநரின் பணிகள், தத்துவங்கள் மற்றும் கடமைகளை நிறைவேற்றுதல், பிரயோகித்தல் அல்லது புரிதலுக்கு அவசியமானதாகவுள்ள அல்லது அதன் நேர்விளைவானதாக இருக்கின்ற ஏதேனும் கொடுப்பனவைச் செய்தல்;

(ஓ) இப்பந்தியில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள தத்துவங் களைப் பிரயோகிப்பதில் அவசியமான அல்லது இடைநேர்விளைவான மற்றெல்லா விடயங் களையும் செய்தல்;

**2.** ஓராம் பந்திக்கு பங்கமின்றி, கம்பெனியொன்றின் முழு, அல்லது பகுதியளவில் முழு ஆதனம் தொடர்பிலும் அத்துடன் அதன் பொறுப்புமுயற்சி தொடர்பிலும் நியமிக்கப்பட்டிருக் கின்ற பெறுநர் ஒருவர், நீதிமன்றத்தின் எச்சாதனத்தினால் அல்லது கட்டளையின் கீழ் அந்நியமனம் செய்யப் பட்டுள்ளதோ அச்சாதனத்தின் அல்லது கட்டளையின்கீழ் பெறுநரின் தத்துவங்களின் மேலான ஏதேனும் கட்டுப்பாடு அல்லது மட்டுப்படுத்தலுக்கமைய, பின்வருவனவற்றைச் செய்வதற்கு தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) கடன்கொடுநர் அல்லது பங்குதாரரொருவரா யினுஞ்சரி அல்லது இல்லையாயினுஞ்சரி கம்பெனியின் ஆதனத்தின் மேல் அத்தகைய பணத்துக்காக பிணைப்பொறுப்பளிக்கின்றதுட னாயினுஞ்சரி இல்லையாயினுஞ்சரி எவரேனும் ஆளிடமிருந்து பணம் திரட்டல் அல்லது பணம் கடனெடுத்தல்;

(ஆ) நிருவாகியின் பணிகள், தத்துவங்கள் மற்றும் கடமைகளை நிறைவேற்றுதல், பிரயோகித்தல் அல்லது புரிதலுக்கு நிருவாகிக்கு உதவுவதற்கு வழக்கறிஞரொருவரை அல்லது கணக்காய் வாளரை அல்லது வேறு தொழில்சார் தகைமையுடைய ஆளொருவரை நியமித்தல்;

(இ) கம்பெனியின் பெயரிலும் கம்பெனி சார்பிலும் ஏதேனும் சட்ட நடைமுறைகள் அல்லது வேறு சட்ட நடவடிக்கைகள் மற்றும் அறவீட்டு கைப்பற்றாணை என்பவற்றை ஆரம்பித்தல் எதிர்வாதிடல் மற்றும் தொடங்குதல் அல்லது இடைநிறுத்துதல்;

(ஈ) கம்பெனியைப் பாதிக்கின்ற ஏதேனும் விடயத்தை மத்தியஸ்த்துக்கு அல்லது நடுதீர்ப்புக்கு அல்லது எவரேனும் ஒம்புட்ஸ்மேனுக்கு ஆற்றுப்படுத்தல்;

(உ) கம்பெனி அதனது இலச்சினையை வைத்திருந் தால், அதனைப் பயன்படுத்துதல்;

(ஊ) எல்லாச் செயல்களையும் செய்தலும் அத்துடன் கம்பெனியின் பெயரிலும் கம்பெனி சார்பிலும் ஏதேனும் உடன்படிக்கை, உறுதி அல்லது வேறு ஆவணங்களை நிறைவேற்றுதலும்;

(எ) கம்பெனியின் பெயரிலும் கம்பெனி சார்பிலும் ஏதேனும் நாணய மாற்றுண்டியலை அல்லது வாக்குறுதிப்பத்திரத்தை வரைதல், ஏற்றுக் கொள்ளுதல், புறக்குறிப்பிடுதல் மற்றும் வைத்திருத்தல்;

(ஏ) எந்தத் தொழிலை பெறுநர் தாமாகவே செய்வதற்கு முடியாதிருக்கின்றதோ அல்லது எந்தத் தொழில் முகவர் ஒருவரால் கூடியளவு வசதியாகச் செய்யக்கூடியதாக இருக்கின்றதோ அந்த ஏதேனும் தொழிலைச் செய்வதற்காக எவரேனும் முகவரை நியமித்தல்;

(ஐ) வேலைக்கமர்த்தல், பதவி விலக்குதல் அல்லது ஊழியர்களின் பதவி விலக்கத்துக்காக தோதான அதிகாரசபையின் அங்கீகாரத்தை நாடுதல்;

(ஒ) கம்பெனியின் ஆதனத்தைக் காசாகத் திரட்டிக் கொள்வதற்கு அவசியமாகக்கூடியவாறான (வேலைகளை கொண்டுநடாத்துதல் உட்பட) அத்தகைய எல்லா விடயங்களையும் செய்தல்;

(ஓ) கம்பெனியின் வணிகம் தொடர்பாக காப்புறுதி செய்தல் மற்றும் காப்புறுதியை பேணுதல்;

(ஔ) கம்பெனியின் தொழிலைக் கொண்டுநடாத்துதல்;

(க) கம்பெனியின் துணைநிலைக் கம்பெனிகளைத் தாபித்தல்;

(ங) கம்பெனியினது தொழிலையும் ஆதனத்தினையும் முழுமையாக அல்லது அவற்றின் ஏதேனும் பாகத்தை கம்பெனியினது துணைநிலைக் கம்பெனிகளுக்கு கைமாற்றுதல்;

(ச) கம்பெனியின் ஏதேனும் ஆதனத்தின் குத்தகை அல்லது வாடகை ஒன்றில் ஒப்படைப்பை வழங்குதல் அல்லது ஏற்றல் அத்துடன் கம்பெனியின் தொழிலுக்குத் தேவைப்படும் அல்லது வசதியான ஏதேனும் ஆதனத்தை குத்தகைக்கு அல்லது வாடகைக்கு எடுத்தல்;

(ஞ) நேரொத்ததாகவுள்ள நடவடிக்கைமுறையின்கீழ் அனுமதிக்கப்பட்டிருக்கின்றவிடத்து, கம்பெனியின் சார்பில் ஏதேனும் உடன்பாட்டொழுங்குக்கு, ஒருங்கிணைத்தலுக்கு அல்லது இணக்கத்துக்கு பரிகரித்தல் அல்லது சம்மதித்தல்;

(ட) ஆளொருவர் தனிசொன்றை கொடுக்கவேண்டிய வராகவோ அல்லது வேறு வகையில் கம்பெனிக்கு பொறுப்பொன்றின்கீழ் உள்ளவராகவோ இருக்கு மிடத்து -

(i) அவ்வாளின் வங்கிமுறிவில், கடனிறுக்கவகை யற்றநிலையில் அல்லது ஒழித்துக்கட்டுதலில் தனிசை அல்லது வேறு பொறுப்பை வாக்களித்தல் எண்பித்தல் மற்றும் வரிசைப் படுத்தல் என்பதுடன் அவ்வாளின் கடன்கொடு நரொருவராக வழங்கல்களைப் பெறுதல்; அத்துடன்

(ii) அவ்வாளின் தனிசொன்றின் மீள்கட்டமைப்பு ஒழுங்கேற்பாட்டில் வாக்களித்தல், வழங்கல் களைப் பெறுதல் மற்றும் வேறுவகையில் கடன்கொடுநரொருவராக பங்கேற்றல்;

(ண) நேரொத்ததாகவுள்ள நடவடிக்கைமுறையின்கீழ் அனுமதிக்கப்பட்டிருக்கின்றவிடத்து, கம்பெனியின் ஒழிப்போனொருவரை நியமிப்பதற்காக நீதி மன்றத்துக்கு விண்ணப்பமொன்றைச் செய்தல்;

(த) பாகம் IX இன் கீழ் அனுமதிக்கப்படுகின்றவிடத்து, கம்பெனியின் நிருவாகியொருவரை நியமித்தல்;

(ந) கம்பெனியின் சேவைக்காக பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அல்லது முகவரியை மாற்றுதல்;

(ப) கம்பெனியின் தொழிலுக்கு அவசியமான அல்லது வசதியான ஏதேனும் ஆதனத்தை கையகப் படுத்துதல்;

(ம) கம்பெனியின் ஆதனத்தின் மீது தெரிவொன் றினை வழங்குதல்;

(ய) கம்பெனியின் ஆதனத்தை மீளப்புதுப்பித்தல் அல்லது விஸ்தீரணப்படுத்தல்;

(ர) கம்பெனியின் பெயரில் மற்றும் கம்பெனியின் சார்பில் ஏதேனும் கணக்கினை செயற்படுத்துவ தற்கு எவரேனுமாளை அனுமதித்தல்;

(ல) ஏதேனும் வரி திரும்பலை கோப்பிடுதல், வருமதி யாகவுள்ள வரிகளை செலுத்துதல்; அத்துடன்

(ன) இப்பந்தியில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள தத்துவங் களைப் பிரயோகிப்பதில் அவசியமான அல்லது இடைநேர்விளைவான மற்றெல்லா விடயங் களையும் செய்தல்.

ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**480.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கிநிற்றல் வேண்டும்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.